26:21
M93
5590

T.D.R.C. 604

R.R. 42.13-1893

# THE BOOK OF GENESIS.

WITH

*NOTES AND PRACTICAL INSTRUCTIONS.*

COMPILED FROM ELLICOTT, SPEAKER, &C.

BY

THE REV. JOSEPH DAVID,
*C. M. S. Mengnanapuram.*

# ஆதியாகம வியாக்கியானம்.

"வேதவாக்கிய[illegible]ங்கள்."

OFFICE OF THE REGISTRAR ... BOOK ...
24 JUL. 93
MADRAS.

FIRST EDITION [illegible] COPIES.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY.
S. P. C. K. PRESS, VEPERY.

1893.

604.
22.4

TAMIL NADU ARCHIVES LIBRARY
5590

# நூன்முகம்.

இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்ட பற்பல வியாக்கியானங்களைப் பார்வையிட்டு, அவைகளின் கருத்தைத் திரட்டி இதில் அச்சிட்டிருக்கிறது. கல்வி நாயகராகிய கனம் தோமாஸ் உவால்க்கர் ஐயரவர்கள் இதிலே பல குறிப்புகளையும் சேர்த்திருக்கிறார்கள். இந்த நூலை வாசித்துத் தியானிக்கிறவர்கள், பூர்வகாலத்துச் சம்பவங்களிலே தேவன் தமது திவ்விய விசாரணையில் தமது ஜனங்களுக்கு அநுகூலமாய் நடந்தேறச்செய்த அதிசயங்களைக்கண்டு, நற்போதனைகளை அடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

J. D.

# கவுரை.

வேதவாக்கியங்கள் எல்லாந் தேவஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டிருக்கின்றன. வேதாகமத்தில் அடங்கிய பல புஸ்தகங்கள் பலகாலத்தில் எழுதப்பட்டாலும் அவைகளின் வாசகக்கட்டு பலவகையுள்ளதாய் இருந்தாலும், எல்லாம் விசேஷித்த நோக்கத்துக்கும் கருத்துக்கும் இணக்கமாய்ப் பின்னபேதமின்றி கட்டப்பட்டிருக்கிறது. ஆவியானவரின் வழிப்பிரசாதங்கள் பரிசுத்த மனிதருக்கு அருளப்படவே அவர்கள் தங்களுக்குத் தெரிந்த காரியங்களைப் பிழையற எழுதினார்கள். தீர்க்கதரிசனங்களை அவர்கள் எழுதினபோது தேவனே அவைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

வேதாகமம், மனிதராகிய நமக்கும் சிருஷ்டிகராகிய கர்த்தருக்குமிருக்கிற சம்பந்தத்தைத் திட்டமானபடி நமக்குக் காட்டவும், நாம் கர்த்தரைப் பூமியில் மகிமைப்படுத்தி பின்பு என்றென்றைக்கும் அவரைத் தரிசித்து ஆனந்திக்கவுமான அறிவைக் கொடுக்கும் நோக்கமாய் அருளப்பட்டது. அது கிறிஸ்துவுக்குள் தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்குள் தேவன் உலகத்தாரைத் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்வதை அது நமக்கு விளக்குகிறது.

## பஞ்சாகமம்.

பஞ்சாகமம் (ஐஞ்சுருள் புத்தகம்) வேதாகமத்தில் முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. காலக்கிரமத்தின்படியும் அது முதலாவதாக எழுதப்பட்டது. எபிரேய கையெழுத்துப்பிரதியில் அது ஒரேசுருள் அல்லது புத்தகமாக இருக்கிறது. என்றாலும் அது பெரிய பிரிவுகளாயுஞ் சிறிய பிரிவுகளாயும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது நமக்குள் ஐந்து புஸ்தகங்களாக பிரிக்கப்பட்டு வெவ்வேறான பெயரால் வழங்கப்பட்டுவருகிறது. அந்தந்த நாமம் அதனின் பொருளைப் பற்றியதாயிருக்கிறது.

யூதர்கள் பஞ்சாகமத்தை (தோரா) நியாயப்பிரமாணம் என்று அழைத்தார்கள். வேதாகமத்திலே அது நியாயப்பிரமாணப் புஸ்தகம் என்றும் (2 இரா. 22: 8.) உடம்படிக்கையின் புஸ்தகம் என்றும் (2 இரா. 23: 2.), கர்த்தருடைய நியாயப்பிரமாணப்புஸ்தகம் என்றும் (2 நாளா. 34: 14.), மோசேயின் நியாயப்பிரமாணம், மோசேயின் புஸ்தகம், மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (2 நாளா. 25: 4; 35: 12. எஸ். 6: 18; 7: 6. நெகே. 8: 1; 13: 1.). யூதர்கள் பஞ்சாகமத்தை நியாயப்பிரமாணத்தின் ஐஞ்சுருள் என்றும் அர்த்தங்கொள்ளுங் கெமீஷீ, கெமீஷீத் என்று அழைத்தபோதிலும் அவர்கள், ஒவ்வொரு ஆகமத்துக்கும் அந்தந்த ஆகமத்தின் முதல் வாக்கியத்தில் வருகிற முக்கியமான வார்த்தையின்பேரால் அததற்கு நாமம் தரித்தார்கள். திருஷ்டாந்தமாக ஆதியாகமத்துக்கு (பரேஷீத்) என்றும், யாத்திராகமத்துக்கு (ஷமோத்) என்றும் பேரிட்டார்கள்.

## பஞ்சாகமத்தை மோசே எழுதினான் என்பதற்குரிய அத்தாட்சி.

பஞ்சாகமத்தை மோசேயே எழுதினான் என்று எக்காலத்திலுமுள்ள யூதருங் கிறிஸ்தவர்களும் ஏகமாய்ச் சாட்சி பகர்ந்திருக்கிறார்கள். அவன் அதை எழுதினான் என்பதற்கு அந்த ஆகமத்தில் அடங்கிய சங்கதிகளே சாட்சியமா

யிருக்கிறது. அமலேக்கியருடைய யுத்தத்துக்குப்பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி, இதை நினைவுகூரும்பொருட்டு நீ ஒரு புஸ்தகத்தில் எழுது என்று உத்தரவுபண்ணினார் (யாத். 17: 14.), மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எல்லாம் எழுதிவைத்தான் என்று (யாத். 24: 4.) கண்டிருப்பதோடு கர்த்தர் மோசேயை நோக்கி இந்த வார்த்தைகளை நீ எழுது என்றும் (யாத். 34: 27.), ஆசாரியனிடத்தில் இருக்கிற நியாயப்பிரமாண நூலைப்பார்த்து இராசா தனக்காக ஒரு பிரதி எழுதவேண்டும் என்றும் (உபா. 17: 18–20.), கட்டளை கொடுத்ததாக வாசிக்கிறோம். மேலும் மோசே இந்தப் பிரமாணத்தை எழுதி ஆசாரியருக்கு ஒப்புவித்து, ஏழாம்வருஷம் முடிவிலே இஸ்ரவேலர் எல்லாரும் கேட்க அவர்கள் முன்பாக அதை வாசிக்கும்படி உத்தரவு பண்ணினான் (உபா. 31: 9–11.). இப்படி நியாயப்பிரமாண ஆகமத்தைக்குறித்து அடிக்கடி சொல்லப்பட்டிருப்பதால் மோசேயே அதை எழுதினான் என்று சந்தேகமறச் சொல்லலாம். [illegible] நியாயங்களையும் பார்ப்போமாக. அந்த நியாயங்களை [illegible] பார்க்குமுன் நாம் சில காரியங்களை ஒத்துக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

(1) அந்த ஆகமம் முழுமையையும் அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் மோசே தன் சொந்தக் கையெழுத்தாய் எழுதினான் என்று சாதிக்கக்கூடாது. அவன் சொல்ல இன்னொருவன் எழுதியிருக்கலாம். உபாகமத்தின் கடைசி அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதி மோசேயால் எழுதப்படாமல் யோசுவாவால் அல்லது இன்னொருவனால் எழுதப்பட்டிருக்கலாம்.

(2) மோசேயின் ஆகமம் அவனால் எழுதப்பட்டிருந்தாலும், அதை பிந்தியகாலத்தில் எஸ்றா முதலியவர்கள் பார்வையிட்டுச் சில குறிப்புகளை கூட்டி அதில் சேர்த்துமிருக்கலாம்.

(3) மோசே தன் காலத்துக்கு முந்தின நடபடிகளை எழுதுவதற்குச் சில உண்மையான சாதனங்களை உபயோகப்படுத்தியிருக்கலாம்.

இப்போது மோசே பஞ்சாகமத்தை எழுதினான் என்பதைப்பற்றிய சில குறிப்புகளைப் பார்ப்போமாக.

பிடிவாதமுள்ள வேதவிரோதிகளும் மோசே என்ற மனுஷன் இருந்தான் என்றும், அவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டுக் கானானுக்கு வழிநடத்தினான் என்றும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் யுக்தி புத்தி சாமர்த்தியம் விடாமுயற்சியுள்ள மோசே என்பவன் இருந்தான் என்றும், அவன் தன் சனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அவர்களுக்கு [illegible] பிரமாணங்களை அருளி அவர்களைக் கானானில் குடியேறும்படி [illegible]தான் என்றும், அவன் அக்காலத்திலே உலகத்திலுள்ள தேசங்களில் நாகரீகத்தில் தேறின தேசத்தில் வளர்ந்தான் என்றும், அத்தேசத்து நாகரீகத்திலே அவனும் தேறின நிபுணனாயிருந்தான் என்றும் அறியலாகிறோம்.

ஆனால் மோசேயின்காலத்திலுள்ளவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா? என்ற கேள்வி ஒருவேளை வரலாம். எகிப்தியருக்குள்ளே அக்காலத்தில் கல்வியிருந்ததென்பதைச் சாஸ்திரிகள் பரிசோதனைசெய்து ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஞாபகக் கட்டிடங்கள், மிகப் பூர்வீகமுள்ளவைகளாயிருக்கின்றன. அவைகளில் சித்திரிக்கப்பட்டிருக்கிற பாஷிதங்கள், எகிப்தியர் ஆதிகாலந்தொடுத்துக் கல்விமுயற்சியுள்ளவர்களாயிருந்தார்கள் என்று



சாட்சி பகருகின்றன. எகிப்தியருக்குள் முக்கியமாய் பூசாரிகளுக்குள்ளும் இராசவமிசத்தாருக்குள்ளும் கல்விமுயற்சி சிறந்தவகையாய் நடந்தேறிவந்தன. மோசே பார்வோன் என்னும் இராசாவின் வீட்டில் வளர்க்கப்பட்டான் என்றும் அவன் எகிப்தின் சகல சாஸ்திரங்களிலும் வல்லவனாயிருந்தான் என்றும் வாசிக்கிறோம். அப்படிப்பட்டவன் எழுதப் படிக்கத் தெரியாதவனாயிருப்பானா?

1. இஸ்ரவேலர் சுயாதீன அரசாட்சியை ஸ்தாபித்து நடத்திவந்ததால், அவர்களைக் கட்டி ஆளுவதற்கு நீதிநெறியுள்ள நியாயப்பிரமாணம் அவர்களுக்கு அவசியம் வேண்டியதே. மோசே அவர்களை மீட்டு நடத்திவந்தால், அவர்களுக்கு அப்படிப்பட்ட பிரமாணங்களை அமைத்து எழுதிவைப்பது இயற்கையல்லவா? நாற்பது வருஷங்களாய் வனாந்தரத்தில் செய்த பிரயாணங்களில் அவனுக்கு சாவகாசங் கிடைத்திருந்தது. அப்போது அவன் தன் [illegible]ருடைய முற்பிதாக்களின் சரித்திரங்களையுந் தன்காலத்துச் சம்பவங்களையும் எழுதியிருப்பான் என்று நாம் உத்தேசிக்கலாம்.

2. மோசே தன்பேரால் அழைக்கப்பட்டிருக்கிற ஆகமங்களை எழுதினான் என்று அவனுக்குப் பின்வந்தவர்கள் தொன்றுதொட்டு சாட்சியிட்டு வந்திருக்கிறார்கள். யோசுவாவின் புஸ்தகத்தைப் பார்க்கையில் மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் கட்டளையிட்டிருக்கிறபடியே சகல காரியங்களும் நடப்பிக்கப்பட்டதாகக் காண்கிறோம் (யோசு. 1: 7, 8; 8: 30, 34; 14: 1, 3, 4; 18: 7; 22: 2.). இப்படியே பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு ஆகமத்திலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக்குறித்துக் கண்ணியமாய்ப் பேசியிருக்கிறது. நியா. 3: 4. 1 இரா. 2: 4. 2 இரா. 21: 8. 2 நாளா. 25: 4; 30: 16.

3. அக அத்தாட்சியைப் பார்க்கிறபோதும் பஞ்சாகமம் மோசேயினாலேயே எழுதப்பட்டதென்று தெரியவருகிறது.

(1) அந்த ஆகமத்தை எழுதினவன், எகிப்து தேசத்தையும் எகிப்தியருடைய கல்வியையும் பிரமாணங்களையும் மார்க்கத்தையும் நன்றாய் அறிந்தவனாகக் காணப்படுகிறான். திருஷ்டாந்தமாக, சுத்தம் அசுத்தமானமிருகம் என்பது லேவிய முறைமைக்குரியது. எகிப்தியரும் அப்படியே எண்ணிவந்தார்கள். எகிப்திய பூசாரியத்துவம் குடும்ப பாரம்பரியமாய் இறங்கிவந்தது; லேவியருடையதும் அப்படியே. எகிப்திய பூசாரிகள் சர்வாங்க சவரஞ் செய்வார்கள்; லேவியரும் அப்படியே (எண். 8: 7.). எகிப்திய பூசாரிகள் அடிக்கடி ஸ்நானஞ் செய்வார்கள்; சணல்நூல் உடை தரிப்பார்கள்; லேவியரும் அப்படியே (யாத். 30: 18–21; 28: 39–42; 39: 27, 28. லேவி. 6: 10.)

(2) பஞ்சாகமத்தில் காட்டப்பட்டிருக்கிற காரியங்களும் பிரமாணங்களும் கானான் தேசத்தை எதிர்நோக்குகிறவைகளாயிருக்கின்றன. (யாத். 12: 25–27. லேவி. 14: 34. எண். 15: 2, 18. உபா. 4: 1.)

இதினாலே, பஞ்சாகமத்தை எழுதினவனுக்குக் கானான் தேசத்தைக் குறித்துத் தெளிவான அறிவு இருந்ததாகக் காணப்படுகிறதே. மோசேக்கு அவ்வளவு தெளிவு இருப்பது கூடிய காரியமல்லவே என்று சொல்வாருண்டு. அந்த ஆட்சேபனையில் பலமில்லை. ஏனென்றால் மோசே தன் முற்பிதாக்களுடைய சரித்திரத்தையும், அவர்கள் குடியிருந்த இடங்களையும்பற்றித் தெளிவான அறிவுடையவனாயிருந்தான். எகிப்தியர் அநேககாலமாய்க் கானா

னுக்கு வியாபாரவிஷயமாய் வரத்துப்போக்காயிருந்தார்கள். மோசே, இராசாவின்வீட்டில் வளர்க்கப்பட்டுவந்ததால், அந்த வியாபாரிகள்மூலமாய்க் கானான் தேசத்தைப்பற்றிய விசேஷங்களை இலகுவாய் அறிந்துகொள்ள ஏதுவிருந்தது. மேலும் அவன் நாற்பது வருஷங்களாய்ச் சீனாய் வனாந்தரத்தில் எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அப்போது தன் முற்பிதாக்கள் குடியிருந்த தேசத்தைக்குறித்து அடிக்கடி விசாரித்து அறிந்துமிருப்பான். ஒருவேளை கானானுக்குப் போயுமிருக்கலாம். அதுவுமல்லாமல், கானானியருடைய பட்டணங்கள் முதலியவைகளைப்பற்றி தான் அனுப்பிய வேவுகாரர்மூலமாய்த் தெளிவாய் அறிந்திருக்கவேண்டும் என்று எண்ணத்தகுமானதாயிருக்கிறது.

4. பஞ்சாகமத்தின் பாஷைநடையைக் கவனிக்கையில், அது மோசேயின் காலத்துக்குரியதாயிருக்கிறது. பஞ்சாகமத்தில் வருகிற சில வார்த்தைகள் மற்ற ஆகமங்களில் வருகிறதேயில்லை. திருஷ்டாந்தமாக “அவன்” “அவள்” என்பவைகளுக்கு பஞ்சாகமத்திலுள்ள அநேக இடங்களில் ஒரே வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. “பாலியன்,” “பாலியஸ்திரீ” இவ்விருவருக்கும் அப்படியே ஒரேவார்த்தை வழங்கப்பட்டிருக்கிறது.

சிலர் ஆட்சேபனையாகப் பஞ்சாகமத்தின் நடை பிந்தியகாலத்திலுள்ள பாஷைநடைக்கு ஒத்திருப்பதால், அது மோசேயினால் எழுதப்படவில்லை என்று சொல்லுவார்கள். மோசே கல்வியில் நிபுணனாயிருந்தான். வேதாகமங்கள்மாத்திரம் யூதருக்குள் வழங்கிவந்த புஸ்தகங்களாயிருந்தன. ஆதலால் ஒரேவகைப் பொருளுள்ள ஆகமங்கள் ஒரேசாடையாயிருப்பது இயல்பே.

மேற்சொல்லிய நியாயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்பொழுது, பஞ்சாகமம் மோசேயினாலே எழுதப்பட்டது என்பதற்கு ஐயமில்லை. ஆகிலும் அப்புஸ்தகம் வேறொருவனாலும் எழுதப்படாமல் அவனாலேயே எழுதப்பட்டது என்பதற்குக் கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பலத்த அத்தாட்சி ஒன்றிருக்கிறது. என்னவெனில், நம்முடைய ரக்ஷகராகிய கிறிஸ்துவானவர்தாமே பஞ்சாகமத்தை மோசேயினுடைய ஆகமமாக அங்கீகரித்ததுமன்றி அதில் சொல்லப்பட்டிருக்கிற அநேக சங்கதிகளை மோசேயே சொன்னதாகக் காட்டியிருக்கிறார். (மத். 19: 8; 23: 2. மாற். 10: 3–9; 12: 19, 24. லூக். 16: 29–31; 20: 37; 24: 27. யோவா. 1: 17.)

சொற்றவறாத நம்முடைய ஆண்டவர் இவ்விதமாய்க் காட்டிப் பஞ்சாகமம் மோசேயினாலேயே எழுதப்பட்டதென்பதை நிச்சயப்படுத்தியிருக்க அவருடைய தொண்டர்களாகிய நாம் அதைப்பற்றி இனி சந்தேகிப்பானேன்?

# ஆதியாகமம் முகவுரை.

மோசே பஞ்சாகமத்தை எழுதினான் என்று ஒப்புக்கொள்ளுகிறதானால், அதிலடங்கிய ஆதியாகமத்தையும் அவனே எழுதினான் என்று அங்கீகரிப்பதில் விருத்தமில்லை. அவன் யாத்திராகமத்தை எழுதினால், அதற்கு முகவுரையாக இருக்கிற ஆதியாகமத்தையும் எழுதியிருப்பான் என்று சந்தேகமறச் சொல்லலாம்.

ஆதியாகமத்தில் அடங்கியிருக்கிற சரித்திரங்கள், மோசேயின் காலத்துக்குமுன் சம்பவித்தவைகளானதால், அவன் அந்தச் சரித்திரங்கள் எழுதிவைக்கப்பட்டிருந்த சாதனங்களை உபயோகித்திருப்பான் என்று சொல்வாருண்டு. அப்படி உபயோகிப்பதில் ஆதியாகமம் மோசேயினால் எழுதப்படவில்லை என்று சொல்வதற்கு ஆதாரமில்லை. அப்படிப்பட்ட சாதனங்கள் இருந்தால், அவைகளை மோசே பிரயோகிப்பதும் இயற்கையே. சிலர், தேவன் (எலோயீம்), கர்த்தர் (எகோவா) என்ற நாமங்கள், இந்த ஆகமங்களில் வழங்கப்பட்டிருப்பதைக் கவனித்து, மோசே எலோயீம் என்ற நாமத்தை ஒரு சாதனத்திலிருந்தும் யெகோவா என்ற பேரை இன்னொரு சாதனத்திலிருந்தும் எடுத்திருக்கவேண்டும் என்று சாதிக்கிறார்கள். அப்படியிருந்தாலும் மோசே ஆதியாகமத்திற்கு ஆக்கியோன் அல்லவென்று சொல்ல ஏதுவில்லையே.

ஆதியாகமத்தில் அடங்கிய சிருட்டிப்பின் சங்கதியையும் மனிதன் பாவத்தில் விழுந்த சங்கதியையுங் காட்டிய முதல் மூன்று அதிகாரங்களுங் காலங்கள்தோறும் தர்க்கங்களுக்கு ஏதுவாகவே வந்திருக்கிறது. ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் திவ்விய அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுகிறவன் மோசேயின் ஆகமங்களில் அடங்கிய சங்கதிகள் உண்மையுள்ளவைகள் என்று அங்கீகாரஞ் செய்வான். இயற்கைக்குக் காரணரே வெளிப்படுத்தலுக்குங் காரணராயிருக்கிறார். இயற்கைசாஸ்திரம் இன்னமும் சாத்திய சித்தாந்த தீர்மானமாக ஒன்றையும் ஸ்தாபிக்கிறதில்லை என்பது ஒரு விசேஷித்தகாரியம். வியாக்கியானமும் அப்படியே இருக்கிறது. காலஞ் செல்லச்செல்ல இயற்கை சாஸ்திரமும் பூரணமாய்க் கற்றுக்கொள்ளப்பட்டபின் வெளிப்படுத்தலில் அடங்கிய சங்கதிகள் யாவும் மெய்யென துலாம்பரமாகும். அதுவரையும் நாம் பொறுமையோடே காத்திருக்கவேண்டும்.

யூதர்கள் ஆதியாகமத்தை “பெரேஷீத்” என்றழைத்தார்கள். கிரேக்கு பாஷையில் அது ஜெனிசிஸ் என்று அழைக்கப்படுகிறது. அதற்கு “உற்பத்தி” என்று அர்த்தம். நம்முடைய பாஷையில் அது “ஆதியாகமம்” என்று அழைக்கப்படுகிறது. அது யூதரால் பன்னிரண்டு படலங்களாயும் நாற்பத்துமூன்று பிரிவுகளாயும் பிரிக்கப்பட்டது. நம்முடைய வேதாகமத்தில் அது ஐம்பது அதிகாரங்களாக வகுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆகமத்தை இரண்டு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## I. மனிதருடைய ஆதிசரித்திரம். (அதி. 1-11.)

1. உலக சிருஷ்டிப்பு. (அதி. 1, 2.)
2. உலகத்தில் பாவம் பிரவேசித்துப் பெருகினது. (அதி. 3-5.)
3. ஜலப்பிரளயம் உண்டானது. (அதி. 6-8.)
4. நோவாவின் குமாரர் உலகத்தில் பரவினதும் அவர்கள் வரவர மெய்மார்க்கத்தை விட்டுவிட்டதும். (அதி. 6-11.)

## II. யூதருடைய ஆதிசரித்திரம். (அதி. 12-50.)

1. மெய்மார்க்கம் காக்கப்படும்படி ஆபிரகாம் அழைக்கப்பட்டது. (அதி. 12-25.)
2. ஈசாக்கின் சரித்திரம். (அதி. 25: 19-ம் வச—அதி. 36.)
3. யாக்கோபின் சரித்திரம். (அதி. 37—50.)

மோசே இவ்வாகமத்தைச் சீனாயில் எழுதியிருக்கவேண்டும் என்பதே பொதுவான அபிப்பிராயம். இதில் காட்டப்பட்டிருக்கிற முக்கிய காரியம், தேவனுடைய ஏகத்துவம். அதற்கு அடுத்தது, மனிதஜாதியார் யாவரும் ஒரே வம்சத்திலிருந்து தோன்றினவர்கள் என்பதே. இதில் சிருஷ்டிப்பைப்பற்றியும், மனிதன் பாவத்தில் விழுந்ததைப்பற்றியும், பாவத்தினாலுண்டான தீங்கினின்று மனிதனை மீட்க வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகரைப்பற்றியுஞ் சொல்லியிருக்கிறது. இந்தப் புத்தகமின்றி மனிதர் அந்தகாரத்திலிருக்கிறவர்கள்போல காணப்படுவார்கள்.

இவ்வாகமத்திலே பாவமில்லாதகாலத்தில் விவாகநிலைமையும் ஓய்வுநாள் ஆசரிப்பும் நியமிக்கப்பட்டது என்று கற்றுக்கொள்ளுகிறோம். தேவனுடைய ஞானம் விவேகம் வல்லமை இரக்கம் நீதி நயவு என்பவைகளையும் அறிந்து கொள்ளலாம். மேலும் தேவன் செபத்தைக் கேட்கிறவர் என்றும், தம்முடைய சனங்களைக்கொண்டு மற்றவர்களை ஆசீர்வதிக்கிறவர் என்றும், பாவத்தையும் தமது திருவுள சித்தத்துக்கேற்றபடி நடத்துகிறவரென்றும், தம்முடைய திருவாக்கைத் தவறாமல் நிறைவேற்றுகிறவர் என்றும், அவருடைய ஆலோசனைகள் அளவறுக்கப்படக் கூடாதவைகள் என்றும், பற்பல முகாந்தரங்களைக் கொண்டு அவர் மனிதர்களைத் தமக்குக் கீழ்ப்படியப்பண்ணுகிறவர் என்றும் அறியலாம்.

மேலும் மனிதர் யாவரும் சோதனைக்கு ஏதுவானவர்கள் என்றும், அவர்களில் அநேகர் சோதனைக்குட்பட்டு பாவத்தில் விழ ஏதுவானவர்கள் என்றும், அவர்கள் எச்சரிக்கப்பட்டபின்பும் பாவத்தில் விழுகிறவர்கள் என்றும், அவர்கள் தங்களையே வஞ்சித்து மோசம் போக்குகிறவர்கள் என்றும், பாவத்திலே அவர்கள் மிஞ்சி நடக்கிறவர்கள் என்றும், பாவத்துக்குத் தண்டனையாக அநேக துர்ப்பலன்கள் உண்டாகிறதென்றும், மெய்ப்பாக்கியத்தைப்பற்றி அவர்கள் தப்பாய் எண்ணுகிறார்கள் என்றும் மனிதர் தங்களுக்கு வரும் என்று நிச்சயிக்கிற உலக நன்மைகள் அடிக்கடி அவர்களுக்குக் கிடையாமற்போகிறதென்றும், துன்பத்திலே அவர்களுக்குப் பலன் வருகிறது என்றும் அறிந்துகொள்ளலாம்.

இவ்வாகமத்தின் முற்பகுதியின் பகுதிகளில் இன்னும் சில காரியங்கள் தெளிவாக்கப்படக் கூடாதவைகளாயிருக்கின்றன. ஆனால் முன்னொருகாலத்தில் மயக்கமாய்க் காணப்பட்ட சில காரியங்கள் இப்போது யாவருக்கும் மனதிருப்தியுண்டாகத் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன. நீண்டகாலத்துச் சரித்திரங்கள் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் இந்த மயக்கம் காணப்படுகிறது. ஆனால் இதில் அடங்கிய சங்கதிகள் யாவும் மிகவும் உன்னதமான அதிகாரம் பெற்றிருக்கிறதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஆதாம், மெல்கிசேதேக்கு, ஈசாக்கு முதலானவர்கள் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறார்கள். ஆபிரகாமின் இரண்டு குமாரர் இரண்டு உடன்படிக்கைகளுக்கு முன்னடையாளம்.

# THE BOOK OF GENESIS.

# ஆதியாகமம்.

## வியாக்கியானம்.

## 1. அதிகாரம்.

1. வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டது. 3. ஒளியும், 6. ஆகாயவிரிவும் உண்டாக்கப்பட்டது. 9. நிலமும் நீரும் பிரிக்கப்பட்டது. 11. புல் பூண்டு முதலியவை முளைத்தது. 14. சூரிய சந்திர நட்சத்திரங்கள் தோன்றினது. 24. மிருகங்கள் ஊரும்பிராணிகள் உண்டாக்கப்பட்டது. 26. மனுஷன் தெய்வசாயலில் உண்டாக்கப்பட்டது. 29. சகல உயிர்களுக்கும் ஆகாரம் நியமிக்கப்பட்டது.

1 ஆதியிலே தேவன் [1]வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.

[1] யோ. 1. 1-3. யோபு. 38. 4. சங். 33. 6; 102. 25. ஏசா. 44. 24. எரே. 10. 12.

## 1. அதிகாரம்.

1. "ஆதியிலே." காலத்துக்குத் தேவன் குறித்த முதல் எல்லையே ஆதியென்னப்படும். இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஆதியும், யோவான் சுவிசேஷம் 1: 1ல் சொல்லப்பட்டிருக்கிற ஆதியும் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கும். இருபேரும் "ஆதியை" ஒரு காலாவதியாக வைத்துக்கொண்டு எழுதியிருக்கிறார்கள். மோசே அந்த ஆதிக்குப் பின்னுள்ளவைகளையும், யோவான் அந்த ஆதிக்கு முந்தினவைகளையும், அதாவது அனாதியிலுள்ளவைகளையும் எடுத்துரைத்திருக்கிறார்கள். சமஸ்தத்தையும் சிருஷ்டிக்க சிருஷ்டிகர்த்தாவாகிய தேவவார்த்தையானவர், சிருஷ்டிகளுக்கு முன்னமே இருந்தார் என்பதை விளக்குவதே யோவானுடைய நோக்கம். இந்த ஆதி உண்டாகி எவ்வளவுகாலம் ஆயிற்றென்பதை நாம் அறியக்கூடாத நிலைமையிலிருக்கிறோம். பூமியின் பூர்வோத்திரங்களை விபரிக்கக்கூடிய தேவன் ஒருவருக்கே அது தெரியும்.

"தேவன்." இந்தப் பதம் எபிரெயு பாஷையில் "எலோயீம்" என்ற பன்மைப் பெயராயிருக்கிறது. எபிரெயு பாஷையிலே ஒருமை, இருமை, பன்மை என மூவகை எண்களுண்டு.

"வானத்தையும் பூமியையும்." காணப்படுகிறதும் காணப்படாததுமான சமஸ்தத்தையும் குறிக்கும் (கொலோ. 1: 16.). "வானம்" என்பதற்குரிய எபிரெயுபதம் எப்போதும் "வானங்கள்" என்ற பன்மையாக வழங்கப்படுகின்றது. வேதத்தில் "வானம்" என்பது 1. ஆகாய விரிவுக்கும், 2. சூரிய சந்திராதிகள்

இருக்கிற மண்டலத்துக்கும், 3. தேவன் தமது மகிமையை விசேஷித்து விளக்கிய மோட்சலோகத்துக்கும், பெயராக வழங்கப்பட்டிருக்கிறது. (சங். 104: 2; தானி. 12: 3. 2 கொரி. 12: 2.)

“சிருஷ்டித்தார்.” இந்த வார்த்தை மூலத்தில் ஒருமையாயிருக்கிறது. இப்படி எழுவாய்ப் பன்மைப்பெயராயும் பயனிலை ஒருமை வினைமுற்றாயுமிருப்பதை நாம் கவனிக்கையில், பரிசுத்த வேதாகமத்திலே மற்றப் பாகங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற திரித்துவ உபதேசம், இங்கே குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கிறதென்றறியலாம். கிறிஸ்துநாதர் சிருஷ்டிகர் என்பதற்கு வாக்கியங்கள் (யோவா. 1: 3. கொலோ. 1: 16, 17. எபி. 1: 2, 3.). பரிசுத்த ஆவியானவர் சிருஷ்டிகர். (யோபு. 26: 13. சங். 33: 6.)

“சிருஷ்டித்தல்” என்பது துணைக்காரணமின்றி, இல்பொருளிலிருந்து படைக்குதலையும், “உண்டாக்குதல்” என்பது சிருஷ்டிக்கப்பட்டவைகளைக் கொண்டு படைக்குதலையும் குறிக்கும். ஆனால் இந்த அர்த்தங்களோடே இவ்விருபதங்களும் வேதாகமத்தில் எப்பொழுதும் வழங்கப்பட்டிருக்கிறதென்று நாம் சாதிக்க இடமில்லை. என்றாலும் ஆதி. 1. 2. இவ்விருவார்த்தைகளையும் மோசே மேற்சொல்லிய கருத்தோடே உபயோகித்திருக்கிறான் என்று சொல்லத்தகும். மோசே வேறே இரண்டு வார்த்தைகளையும், சிருஷ்டிப்புக்குரிய விஷயத்தில் வழங்கியிருக்கிறான். அவையாவன: 1. “உருவாக்குதல்,” (2. 19.) 2. கட்டுதல். (2: 22.)

I. கவனிப்பு. (2. 22.) இது தமிழ் வேதாகமத்தில் உருவாக்குதலென்பதாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும் மூலபாஷையில் கட்டுதலென்பதாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

II. கவனிப்பு. மூலபாஷையில் சிருஷ்டித்தாரென்று அர்த்தங்கொள்ளும் பாரா என்கிற பதம் 1, 21, 27-ம் வாக்கியங்களில்மாத்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது ஆதலால், அந்தப் பதம் அம்மூன்று வசனங்களில்மட்டும் வந்திருக்கிறதேயல்லாமல் மற்றெந்த விஷயத்தையுங்குறித்து அது இங்கே சொல்லப்படவில்லையென்று நாம் கவனிக்கத்தக்கது. 1-ம், 2-ம், 3-ம், 4-ம் நாட்களில் நடந்த தொழிலைப்பற்றி தேவன் சிருஷ்டித்தாரென்று சொல்லப்படாமல் உண்டாக்கினாரென்றுமாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. உண்டாக்கினாரென்று அர்த்தங்கொள்ளும் ஆசா என்கிற மூலபாஷை வார்த்தைக்குப் பலவித கருத்துண்டு.

மோசே முதல் வாக்கியத்தில், ஆதி சிருஷ்டிப்பைக்குறித்துத் தொகுப்பாய்ச் சொல்லியபின்பு, மனுஷருக்குச் சம்பந்தமான இவ்வுலகம், இப்போதிருக்கிற கிரமத்துக்குக் [illegible]ப்பட்ட விஷயத்தைக்குறித்து, இரண்டாம் வாக்கியமுதல் காட்டியிருக்கிறான்.

முதல் வாக்கியத்துக்கும் இரண்டாம் வாக்கியத்துக்கும் இடையேயுள்ள காலம் இவ்வளவென்றும், அந்தக் காலங்களில் நடந்த சம்பவங்களின்னவையென்றும், நமக்கு வெளிப்பட்டிருந்தால், பூபந்த சாஸ்திரிகள், பூமிக்குக் கீழே ஏழு, எட்டு மைல் கனதியான பாரடுக்குகளுக்குள், தாபரங்கள், சிப்பிகள், மச்சங்கள், பட்சிகள், விலங்குகள் முதலியவற்றின் சேடங்கள், நிரசவஸ்துக்களாவதற்கு எத்தனையோயுகங்கள் சென்றிருக்கவேண்டும் என்று சொல்லிய ஆட்சேபனைகளை லகுவாய் நிராகரிக்கலாம்.

பூமியினுள் பாரடுக்குகளில் நிரசவஸ்துக்களாயிருக்கிற கடற்பூண்டுகள் கடற்பிராணிகள் தரைப்பூண்டுகள் தரைப்பிராணிகளாகிய இவைகளைக்குறித்





2 பூமியானது ஒழுங்கின்மையும் [1]வெறுமையுமாய்
இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; [2]தேவ
ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டி
ருந்தார்.
3 தேவன் [3]வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்,

[1] எரே. 4. 23.
[2] சங். 33. 6: 104. 30.
[3] சங். 33. 9. 2 கொ. 4. 6.

தும் இவைகள் உண்டாக்கப்பட்ட காலக்கிரமங்களைக்குறித்தும் பூபந்தசாஸ்திரம் சாதிக்கிறதை நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து அநேக விஷயங்களில் அது மோசே எழுதின சங்கதிகளுக்கு ஒத்திருக்கிறது. காலஞ் செல்லச் செல்ல அச்சாஸ்திரம் பூரணமாகும்பொழுது அதுவும் இவ்வேதசத்தியமும் யாதொரு பேதமும் விகற்பமுமின்றி ஒன்றோடொன்று முழு ஐக்கியமாய் ஒத்திருக்கிறதாகக் காணப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

2. “பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது.” பாழும் குழப்பமுமாயிருந்தது. வெளிச்சம், ஆகாயம், ஜீவப்பிராணிகள், விருக்ஷங்கள் முதலியவைகளில்லாமல் அலங்காரமற்றதாயிருந்தது. சிலர், உலகம் முந்தின ஜீவனிலைமையிலிருந்து அழிக்கப்பட்டதால் ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது என்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

“ஆழத்தின்மேல் இருளிருந்தது.” ஒழுங்கற்ற அண்டச்சேர்க்கையான பூமியை, காரிருள் மூடிக்கொண்டிருந்தது. ஒன்றையாவது பார்த்தறிய ஏதுவில்லை. இருள் என்பது அறிவீனத்துக்கும் (யோவா. 3: 19.), நரகத்துக்கும் (மத். 22: 13.), அந்தரங்க இடத்துக்கும் (மத். 10: 27.), பெரிய ஆபத்துக்கும் (ஏசா. 8: 22.), பாவத்துக்கும் (1 யோ. 1: 5.) குறிப்பாக வேதத்தில் வழங்குவதுண்டு.

“தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்.” தேவ ஆவியானவர் என்பது, பலத்த காற்றைக் குறிக்கும் என்று, யூத வியாக்கியானிகள் சொல்வது அபத்தம். ஏனெனில் காற்று இன்னும் உண்டாக்கப்படவில்லை. இது திரித்துவத்தில் ஒருவராகிய பரிசுத்த ஆவியானவரையே குறிக்கும். அவர் ஜீவனைக் கொடுக்கிறவர். சடப்பொருட்களுக்கு ஜீவனையும் சலனத்தையும் கொடுப்பதற்கு அவர் சித்தங்கொண்டு கிரியையை நடப்பித்தார். “அசைவாடிக்கொண்டிருந்தார்” என்பதின் மூலபதம், பட்சிகள் குஞ்சுபொரிக்கும்படி, முட்டைகளின்மேல் சிறகை விரித்து, அடைகாத்தலைக் குறிக்கிறதாயிருக்கிறது (உபா. 32: 11.). புது சிருஷ்டிப்பு விஷயத்தில் பரிசுத்த ஆவியானவர், பிதாக்குமாரனோடே சம்பந்தமாயிருப்பது போல், உலக சிருஷ்டிப்பின் வகையிலும் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

3. “தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார்.” தேவனிடத்திலிருந்து கட்டளை பிறந்தவுடனே பூமியில் இருள் நீங்க வெளிச்சம் உண்டாயிற்று (2 கொ. 4: 6). சூரிய சந்திரனைக்குறித்து, நாலாம்நாள் படைப்பில் சொல்லியிருக்கிறதே; இங்கே சொல்லப்பட்டிருக்கிற வெளிச்சம் ஏது?

சூரியனில்லாமல், வெளிச்சமும் வெப்பமும் உண்டென்பதை, காஸ் என்னும் வாயுதீபத்தினாலும் மற்றநேக திருஷ்டாந்தங்களாலும் அறியலாம். மேலும், முதலாம் வாக்கியத்தில் வானங்கள் என்று சொல்லியதில், வானஜோதி

4 வெளிச்சம் உண்டாயிற்று.— வெளிச்சம் நல்லது
என்று தேவன் கண்டார்; வெளிச்சத்தையும் இரு
5 ளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்.—தேவன்
[1]வெளிச்சத்துக்குப் பகல் என்று பேரிட்டார், இரு [1] சங். 74. 16.
ளுக்கு இரவு என்று பேரிட்டார்; சாயங்காலமும்
விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று.

மண்டலங்களும் அதில் அடங்கியிருப்பதால், இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற வெளிச்சம், சூரிய வெளிச்சம் என்றும் அதற்கு ஆதாரவாக இரண்டாம் வாக்கியத்தில் காட்டிய காரிருளைத் தேவன் நீக்கி, இருளையும் வெளிச்சத்தையும் வெவ்வேறாகப் பிரித்து இரவும் பகலும் கிரமமாய் மாறிமாறி வரும்படி ஏற்படுத்தினார் என்றும் நாலாம் நாளிலே, மூடுபனி மேகம் மந்தாரமுதலிய தடைகள் நீக்கப்பட, சூரிய சந்திர நட்சத்திரங்கள் ஜோதிகளாகப் பிரத்தியட்சமாய் உலகத்துக்குக் காணப்பட்டது என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

கவனிப்பு. எப்படியும் வெளிச்சந்தரத்தக்க ஜடபதார்த்தங்களை தேவன் முந்தியே சிருஷ்டித்து நாலாம் நாளிலே முன் சிருஷ்டிக்கப்பட்டவைகளை வேறேவிதமாய் ஒழுங்குபடுத்தினாரென்றே வேதம் சாதிக்கிறது. (1-ம் வாக்கியம் கவனிப்பைக் காண்க.)

இந்தவாக்கியம், வேதம் தேவனால் அருளப்பட்டதென்பதற்கு, ஒரு பலத்த அநுமான அத்தாட்சியாயிருக்கிறது. வேதம் மனித யுக்தியினால் எழுதப்பட்டதானால், சூரிய வெளிச்சத்துக்கு முந்தி, வெளிச்சம் இருந்ததாகக் காட்டப்பட்டிருக்கமாட்டாது.

4. "வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார்." பின் உண்டாக்கப்படப்போகிற ஜீவவஸ்துகளுக்கு, வெளிச்சம் பிரயோசனமும் அநுகூலமுமாயிருந்ததால், அது நல்லதாயிருந்தது. வெளிச்சம் என்பது வேதத்தில் சந்தோஷத்துக்கும் (சங். 97: 11.), இரட்சண்ய அறிவுக்கும் (ஏசா. 8: 20.), செழுமைக்கும் (ஏசா. 58: 8.), சுவிசேஷத்துக்கும் (மத். 4: 16.), பரிசுத்தத்திற்கும் (1 யோ. 1: 5.), குறிப்பாக வரும்.

"வெளிச்சத்தையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார்." மனிதர், மிருகங்கள், விருக்ஷங்கள் முதலியவைகளுக்குப் பிரயோசனமாயிருக்கும்படி, அவைகள் மாறி, மாறி வரும்படியாக, மாறாத பிரமாணமாய் ஏற்படுத்தினார். (சங். 104: 20—24.)

5. "சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று." இருள் முதலாவது பூமியிலிருந்தது, பின்பு வெளிச்சம் உண்டாக்கப்பட்டது; ஆதலால் சாயங்காலத்தை முதலாவதாகச் சொல்லியிருக்கிறது. வேறு சிலர், யூதர்கள் சாயங்காலம் தொடங்கி நாளைக் கணித்துவந்ததால், சாயங்காலம் முதலில் போடப்பட்டிருக்கிறது என்கிறார்கள்.

சிலர்—தேவனுடைய நாளின் நீட்சி நமக்குத் தெரியாது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு யுகத்தைக் குறிக்கும். அந்தந்த யுகத்தில் அந்தந்த நாளில் சொல்லப்பட்ட பொருள் உண்டாக்கப்பட்டது. ஆகவே இந்தப் பூமி, அனந்த வருஷங்களுக்கு முந்தியே சிருஷ்டிக்கப்பட்டு, பலதரம் மாறுதலுக்குட்பட்டு, கடைசியாக அது தற்கால ஸ்திதிக்கு கிரமப்படுத்தப்பட்டதென்பார்கள்.





6 பின்பு தேவன்: [1]ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு [1] யோபு. 37. 18.
உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று
ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்.—
7 தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, ஆகாயவிரி
வுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு
மேலே இருக்கிற ஜலத்திற்கும் [2]பிரிவுண்டாக்கினார்; [2] நீதி. 8. 28.
8 அது அப்படியே ஆயிற்று.—தேவன் ஆகாயவிரிவுக்கு
வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடி
யற்காலமுமாகி இரண்டாம்நாள் ஆயிற்று. [3] யோபு. 26. 10: 38. 8—11. சங். 33. 7: 104. 9.
9 பின்பு தேவன்: [3]வானத்தின் கீழே இருக்கிற ஜலம் எரே. 5. 22.
ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் 2 பேது. 3. 5.

சிலர் ஆறுநாள் என்பது, அந்தந்த நாளில் தேவன் நடப்பித்த கிரியைகளைச் சுட்டிக்காட்டுகிறதாயிராமல், அந்தக் கிரியைகள் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட காலத்தைக் காட்டுகிறது என்பார்கள்.

வேறே சிலர் வேதத்தின் மற்றப் பாகங்களை ஆராய்ச்சி செய்கையில், ஆறுநாள் என்பது, ஒன்றின்பின்னொன்று தொடர்ச்சியாய் வந்த ஆறு யுகங்களைக் குறியாமல், சாதாரண ஆறுநாட்களைக் குறிக்கும். மேலும் ஏழாம் நாளிலே தேவன் ஓய்ந்திருந்தார் என்று சொல்லியது, அதற்கு ஒரு பலத்த நியாயமாயிருக்கிறது என்பார்கள்.

6. "ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது." வெளிச்சம் உண்டாக்கப்பட்டபின்பு, ஆகாயவிரிவு உண்டாக்கப்பட்டது. ஆகாயம் அல்லது வாயு இல்லாவிடில், பின் உண்டாக்கப்படும் புல் பூண்டு விருக்ஷங்கள் பறவைகள் விலங்குகள் மனிதர்கள் பிழைக்க ஏதுவிருக்கமாட்டாது. தேவன் பின் சிருஷ்டிக்கப்படுபவைகளுக்குப் பிரயோசனமாக, முன்பு அவைகளுக்கு வேண்டியதை ஏற்கனவே ஆயத்தப்படுத்தினார்.

மோசே வேதாகமத்தை எழுதினபோது, ஆகாயத்தைப்பற்றி அக்காலத்துக் கல்விமான்களுக்கு ஒன்றும் தெரியாது. வாயுசாஸ்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னே மோசே தேவேத்தமாய் இந்தச் சங்கதியை எழுதிவைத்திருக்கிறான். ஆகாயம் பூமிக்குமேல் 50 மைல் தூரம் பரவியிருக்கிறது என்று கணக்குண்டு. மச்சங்கள், கடல் தண்ணீரில் வைக்கப்பட்டிருப்பதுபோல மனிதரும் வாயுகடலின் அடியில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

"அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது." ஆகாய விரிவினால் உண்டாகிய ஒரு பிரயோசனம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கிறது. வாயுவின் திண்மையினால் இலகுவாயிருக்கிற நீராவிக்கானவை பூமியில் தங்காமல் உயர எழும்புகிறது. மேலே இருக்கிற மேகங்களும் வாயுவினால் தண்ணீரினின்று பிரிக்கப்பட்டிருக்கிறது. (ஏசா. 40: 22. யோபு. 23: 25—28.)

9. "வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும்." மூன்றும் நாளில் மூன்று அதிசயங்கள் உண்டாயின. முதலாவது, ஜலம் ஒன்றாகத் திரட்

கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று.—
10 தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த
ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன்
11 அது நல்லது என்று கண்டார்.—அப்பொழுது தே
வன்: பூமியானது [1]புல்லையும், விதையைப் பிறப்பிக்
கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்
கள் விதையையுடைய கனியைத் தங்கள் தங்கள்
ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும்
முளைப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே

[1] மத்.6.30. லூ.6: 44.

டிச் சேர்க்கப்பட்டது. இரண்டாவது, வெட்டாந்தரை காணப்பட்டது. மூன்றாவது, புல்பூண்டு விருக்ஷங்களுண்டாக்கப்பட்டது.

ஜலமானது சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் (சங். 69:1.), ஜனக் கூட்டத்திற்கும் (ஏசா. 8: 7. வெளி. 17: 15.), சுவிசேஷ உபதேசங்களுக்கும் (உபா. 32: 2. 1 கொ. 3:6.), சுவிசேஷ நியமங்களுக்கும் (ஏசா. 55: 1.), ஆவியானவருடைய கிருபைகளுக்கும் (யோவா. 7: 37, 38.) குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தேவன், சமுத்திரஜலம் கெட்டு நாறுதிருக்கும்படி அதில் உப்பையும் ஓயாத அசைவையும் உண்டுபண்ணியிருக்கிறார். அதில் பிரயாணஞ்செய்கிற வியாதியஸ்தரில் சிலர் சுகமடைகிறதுமுண்டு.

வெட்டாந்தரை "சிருஷ்டிக்கப்பட்டது" என்று சொல்லப்படாமல், காணப்படக்கடவது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தரை அநேக ஆயிரம் வருஷங்களாய்த் தண்ணீருக்குள்ளிருந்திருக்கலாம். தரையும் தண்ணீரும் தேவனுடைய அளவு பிரமாணத்தின்படியே உண்டாக்கப்பட்டிருக்கிறது.

**10.** "**சமுத்திரம் என்றும் பேரிட்டார்.**" ஆதாம் தன் அதிகாரத்தைச் செலுத்தக்கூடாத சிருஷ்டிகளுக்குத் தேவன் பெயர் தரித்தார். சிருஷ்டிகளுக்குக் கொடுக்கப்பட்ட ஆதிப்பெயர், அதினதின் தன்மையை விளக்குகிறதாயிருக்கிறது.

**11.** "**பூமியானது புல்லையும் விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும்.**" இதற்கு முன் பூமியிலே ஜீவவஸ்துகள் உண்டாக்கப்படவில்லை. ஆகாயம், காற்று, சமுத்திரம் தரை இவைகளுக்கு ஜீவனில்லை. தேவனுடைய சிருஷ்டிகள் வரவர முன்னிலும் அதிக சிரேஷ்டமும் மேன்மையுமுள்ளவைகளாய் உருவாக்கப்பட்டன. தேவ உத்தரவு புறப்படவே, பூமியை அலங்கரிக்கிற ஜாதிஜாதியான புல் பூண்டு விருக்ஷங்கள் உண்டாயின. அவைகளுக்குப் புத்தி சித்தம் உணர்வு இல்லாதிருந்தும் ஓர்விதமான ஜீவனுண்டு.

விதைகளைக் கவனிக்கையில் நாம் பிரமைகொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். பின்வரும் தலைமுறையாருக்குப் பிரயோசனமாக விதைக்குள் ஜீவசக்தியுள்ள வஸ்து அடங்கியிருக்கிறதாக அறிகிறோம். விதை முளைத்தெழும்புவதைக்கொண்டு, பவுல் அப்போஸ்தலன் மரித்தோர் உயிரோடெழும்பும் உபதேசத்தைத் திருஷ்டாந்தப்படுத்தியிருக்கிறார். (1 கொரி. 15:)





12 ஆயிற்று.—பூமியானது புல்லையும், தங்கள் தங்கள்
ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டு
களையும், தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில்
தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும்
விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்
13 லது என்று கண்டார்.—சாயங்காலமும் விடியற்கால
முமாகி மூன்றாம்நாள் ஆயிற்று.
14 பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியா
சம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவி
ரிவிலே [1]சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள்
அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களை
யும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்

[1] உபா.4. 19. சங். 74. 16. 136. 7—9.

தேவன் நல்லதென்று கண்ட சில புல்பூண்டுகள், நஞ்சாயிருக்கிறதே என்று சிலர் ஆட்சேபிக்கலாம். அதற்குத்தரவாக, 1. அவை மனிதர் பாவத்தினாலே அப்படி மாறியிருக்கலாம், 2. நஞ்சாக இருக்கிற பூண்டுகளே, மனிதருக்கு அதிகப் பிரயோசனமாயுமிருக்கிறது. அவைகள் சில பெரும் வியாதிகளைத் தீர்க்கும் அவிழ்தங்களாயிருக்கின்றன.

**14.** "**பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக, வானம் என்ற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது.**" நாலாம் நாளில் தேவன் சூரியனைச் சிருஷ்டித்தார் என்று சொல்லாமல், சுடர்கள் உண்டாகக்கடவது என்றும், சுடர்களை உண்டாக்கினார் என்றும் சொல்லியிருக்கிறது. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்பதில், சூரிய சந்திர நக்ஷத்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இந்த வாக்கியத்தை இருவகையாய் அர்த்தப்படுத்துவார்கள். 1. சூரியசந்திர நக்ஷத்திரங்கள் பூமிக்குத் தோன்றும்படி, நாலாம்நாளில் இடையூறுகளை அகற்றினார். 2. சூரியன் பூமிக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும்படி முன் சிருஷ்டிக்கப்பட்டவைகளை வேறேவகையாய் ஒழுங்குபடுத்தினார். (3-ம் வசனம் வியாக்கியானம் பார்க்க.)

"**அடையாளங்களுக்காகவும்.**" சூரியனும் சந்திரனும் பகலையும் இரவையும் வித்தியாசப்படுத்தும்படி அடையாளங்களாயிருப்பதோடே, தேவன் சிருஷ்டிப்புகள்பேரிலும், முக்கியமாய் மனிதர்பேரிலும், வைக்கும் கவலைக்கும் பராமரிப்புக்கும் அடையாளங்களாயுமிருக்கின்றன.

"**காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும்.**" வெளிச்சத்தைக் கொடுக்கமாத்திரம் தேவன் சூரியனை உண்டாக்காமல், மனுஷன் தன் மனோதத்துவங்களையும் சுகாநுபவங்களையும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் அதைப் படைத்தார். மேலும் அவன் காலத்தை அளவிட்டு அதைப் பிரயோசனப்படுத்திக்கொள்ளவும், அதை உண்டாக்கினார். சூரியன் தன் அயனத்தில் ஓடுகையில் நாட்களையும் வருஷங்களையும் குறிப்பிக்கிறது. சந்திரன் தன் நாலு கலைகளால் வாரங்களையும் மாதங்களையும் காட்டுகிறது.

15 கடவது என்றார்.—அவைகள் பூமியின்மேல் பிரகா
சிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாயவிரிவிலே
சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்ப
16 டியே ஆயிற்று.—தேவன், [1]பகலை ஆளப் பெரிய
சுடரும், [2]இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய
இரண்டு மகத்தான சுடர்களையும், நட்சத்திரங்களை

[1] சங். 8 3: 148. 3—5.
[2] யோபு. 38. 7.

கவனிப்பு. சூரியன் இப்பூமியைச்சுற்றி ஓர் அயனத்தில் ஓடுகிறதில்லை. பூமியும் மற்றெல்லா கிரகங்களும் சூரியனைச்சுற்றி அதது தன் தன் அயனத்தில் வட்டமாய் ஓடுகின்றன. என்றாலும் யாவரும் சாதாரணமாய்ப் பேசுகிறவண்ணமாய் இங்கே சூரியனுடைய அயனமென்று சொல்லியிருக்கிறது.

சூரியனைச்சுற்றி அநேக கிரகங்கள் ஓடுகின்றன. இந்துக்கள் நவக்கிரகங்கள்மாத்திரம் உண்டென்றும், அந்தக் கிரகங்கள் மனுஷருடைய பலாபலன்களுக்குக் காரணமாயிருக்கின்றனவென்றும் சொல்லி சாதகம் எழுதுவதுண்டு. வெகுகாலத்துக்கு முன்னே ஐரோப்பாக் கண்டத்திலுள்ளவர்களும் ஜோசியத்தை அநுசரித்துவந்தார்கள். பின்பு அவர்கள் கல்வியில் விர்த்தியடைந்துவரவே, ஜோசியம் அபத்தம் என்று தள்ளிப்போட்டார்கள். இந்துக்கள் சொல்லிய நவக்கிரகங்களுக்குள், சூரியனும் இராகும் கேதும் கிரகங்களல்ல. கிரகங்கள் நமது பூமியைப்போலவே கல்மண் உள்ளவைகள். அவைகள் எப்படி மனுஷருடைய சுகதுக்கங்களையும் பலாபலன்களையும் அறிவிக்கத்தக்கவைகள்? அவைகள் உயிரில்லாதவைகள். தானாய் ஒன்றும் செய்யக்கூடாதவைகள் (எரே. 10: 2. லேவி. 18: 3.). ஆகவே ஜோசியருடைய மொழிகளுக்கு அகப்படாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

**15.** "பூமியின்மேல் பிரகாசிக்கும்படி." சூரியனுடைய ஒளி எட்டு நிமிஷத்துக்குள் பூமிக்கு வந்து எட்டுகிறது. சந்திரன் சூரியனிடத்திலிருந்து வெளிச்சத்தைப்பெற்றுப் பிரதிவிம்பித்து பூமிக்குப் பிரகாசத்தைக் கொடுக்கிறது.

"ஆகாயவிரிவிலே." இதின் அளவைக் கணிக்க எந்த சிருஷ்டியாலும் கூடாது. அளவுக்குள் அடங்காதவர் மனித கணிதத்துக்குள் அடங்காத ஆகாய விரிவை உண்டுபண்ணியிருக்கிறார். நமது உலகத்துக்கும், அதற்குச் சமீபமாயிருக்கிற நக்ஷத்திரத்துக்கும் இடையேயுள்ள வெளியின் விட்டம் 40 லட்சங்கோடி மைல் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. சோதிமண்டலத்தில் இரண்டு நக்ஷத்திரங்கள் கிட்டிச் சேர்ந்திருப்பதாக சில தருணங்களில் பார்க்கலாம். ஆனால் அவைகள் இரண்டுக்கும் இடையேயுள்ள தூரம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லக் கணக்கில்லை.

**16.** "பெரிய சுடர்." சூரியன், ஜோதிமண்டலத்திலே நமது கண்களுக்குப் பெரிதாய்க் காணப்படுவதால், அது பெரிய சுடர் என்றும், அதைவிட சந்திரன் சிறியதாய்த் தோன்றுவதால், சந்திரன் சிறிய சுடர் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடி பார்த்தால் சூரியனைவிடப் பெரிதான சுடர்கள் ஆகாய விரிவிலே இருக்கின்றன. வீகா நக்ஷத்திரத்தின் விட்டம் நமது சூரியனுடையதைவிட 3,000 மடங்கு அதிகமாம்.

"நக்ஷத்திரங்களையும் உண்டாக்கினார்." ஜோதிமண்டலத்திலே இருக்கிற நக்ஷத்திரங்களின் தொகை எண்ணி முடியாததாயிருக்கிறது. ஆனால் அள





17 யும் உண்டாக்கினார்.—அவைகள் பூமியின்மேல் பிர
18 காசிக்கவும்,—[1]பகலையும் இரவையும் ஆளவும், வெ
ளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக்
கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய
விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று
19 கண்டார். — சாயங்காலமும் விடியற்காலமுமாகி
நாலாம் நாள் ஆயிற்று.
20 பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமி
யின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்
கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்

[1] எரே. 31. 35.

வில்லாத சர்வவல்லவர்மாத்திரம் அவைகளின் இலக்கத்தை எண்ணி அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். ஹெர்சல் என்னும் ககோள சாஸ்திரியார், பால்வீதி மண்டலத்திலே, நமது கண்ணுக்குத் தோன்றுகிறபடி சந்திர பருமனுள்ள இடத்தில்மாத்திரம் 2,000 நக்ஷத்திரங்களைத் தமது தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் கண்டறிந்திருக்கிறார். மேலும் ஒருமணி நேரத்துக்குள்ளாக 50,000 நக்ஷத்திரங்கள் கடந்துபோனதாகத் தமது ஆடியினால் பார்த்தாராம். செபுலி என்ற நக்ஷத்திரக் கணத்திலே ஓர் கூட்டத்தைப் பார்த்தால் சந்திர பருமன் அளவுக்குள் 200,000 நக்ஷத்திரங்கள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார். தேவன் நக்ஷத்திரங்களை அகண்ட வெளியிலே தூளாத்தனையாய்த் தூவியிருக்கிறார்.

ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு சூரியனும் பல உலகங்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது [illegible] ஜோதிஷர்கள் சொல்லுகிறார்கள். இதை நாம் கவனிக்கையில் மனுபுத்திரர் [illegible] தேவனுடைய சிருஷ்டிப்பில் அணுக்களாய்மாத்திரம் இருக்கிறோம் என்று சொல்லத்தகும். சிருஷ்டிப்பில் விளங்கிய தேவஞானத்தையும் வல்லமையையும் பார்க்கையில் நாம் எவ்வளவாய் நம்மைத் தாழ்த்திக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம்.

நக்ஷத்திரங்கள் இரவில் நமக்கு ஒளியைக் கொடுக்கிறது. மேலும் அவைகளினாலே திக்குத்திசை தெரிகிறது.

**18.** "தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாயவிரிவிலே வைத்தார்." மோசே இதைக்குறித்துத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறதைக் கவனிக்கையில், வான ஜோதிகள் மகிமையுள்ளவைகளாயிருந்தபோதிலும், அவைகள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டு, தேவ அமைப்பின்பேரில் நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும்படி ஆகாயத்தில் வைக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல், அவைகள் வணக்கத்திற்குரியவைகளல்ல என்று உணர்த்தும் நோக்கமாய் அவன் எழுதியிருப்பான் என்று நினைக்கத்தக்கது. பூர்வீகத்திலே விக்கிரகாராதனை விஷயத்தில் வான சேனைகள் மனிதரால் முதலாவதாக வணங்கப்பட்டதை நாம் பார்க்கையில் இந்த நோக்கம் சரி என்று விளங்கும்.

**20.** "நீந்தும் ஜீவஜந்துக்களையும்,......பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது." மச்சங்களும் பறவைகளும் ஜலத்தி

21 நக்கடவது என்றார்.—தேவன், மகா மச்சங்களையும்,
ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய்
ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர்வாழும் ஜந்துக்களை
யும், சிறகுள்ள ஜாதிஜாதியான சகலவிதப் பட்சிக
ளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று
22 கண்டார்.—தேவன் அவைகளை ஆசீர்வதித்து, [1]நீங்

[1] ஆதி. 8. 17.

விருந்து உருவாக்கப்பட்டன. இருவகைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இரண்டும் (திமிங்கிலமும் வௌவாலுந்தவிர) முட்டையினால் உண்டாகின்றன. இரண்டுக்கும் செட்டைகளுண்டு. இரண்டின் இரத்தமும் ஒன்றுபோலிருக்கிறதாக சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். நீர்வாழும் ஜந்துக்களின் ஏராளத்தைப் பார்க்கையில் நாம் பிரமைகொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். ஓர்வகை கெண்டைமீன் 20,000 முட்டைகளையும், காட்மீனானது லக்ஷக்கணக்கான முட்டைகளையும் இடுமாம். ஒரு சிவலை ஜலத்தில் 30,000 பூச்சிகள் இருக்கின்றனவாம்; அவைகள் ஒவ்வொன்றும் பிழைக்கும்படிக்கான அவயவங்களுள்ளதாக உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

"பறவைகள்." தற்காலத்தில் பூமியிலே 3,000 வகையான பறவைகளிருக்கின்றனவாம். அவைகளில் தண்ணீரில் சஞ்சரிப்பவைகளுக்குத் தோலடிப் பாதங்களையும், சகதியான இடங்களில் வசிப்பவைகளுக்கு நீண்ட கால்களையும், நீண்ட அலகுகளையும், மாம்சபட்சணி பறவைகளுக்குப் பெரிய சிறகுகளையும், பலமுள்ள நகங்களையும், பெலமுள்ள அலகுகளையும் தேவன் கொடுத்திருக்கிறார். ஆகாயமானது லக்ஷக்கணக்கான சிற்றுயிர்ப் பிராணிகளாலும் நிறைந்திருக்கிறது.

பறவைகளைக்கொண்டு நமது ஆண்டவர் நமக்கு நல்ல போதனையைக் கற்றுக்கொடுத்திருக்கிறார். [illegible]வைகள் [illegible]தைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை. என்றாலும் தேவன் அவைகளையும் பிழைப்பூட்டுகிறார். பறவைகளைப்பார்க்கிலும் நாம் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறோம். என்னத்தை உண்போம் என்று நாம் நமது ஜீவனுக்காகக் கவலைப்படவேண்டாம். இவைகள் நமக்குத் தேவையென்று நமது பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதின் நீதியையும் தேடுவோமாக. அப்பொழுது இவைகளெல்லாம் நமக்குக் கூடக் கொடுக்கப்படும்.

**21.** "மகா மச்சங்களையும்." கடலில் பிரமாண்டமான மச்சங்கள் திரளாயிருக்கின்றன. சில திமிங்கிலங்கள் 300 அடி நீளமுள்ளவைகளாயிருக்கின்றனவாம். சில சுறாமீன்கள் ஒரு மனிதனை யாதொரு சேதமின்றி முழுவதுமாய் விழுங்கிப்போடுமாம். யோனாவை ஒரு பெரியமீன் விழுங்கினதாய் வாசிக்கிறோம்.

மூலராசிகளைவிட, ஜீவராசிகளின் ஜீவசக்திகள் உயர்வுள்ளதாகையால் இங்கே "சிருஷ்டித்தார்" என்கிற வார்த்தையை விசேஷித்துப் போட்டிருக்கிறது.

**22.** "தேவன் அவைகளை ஆசீர்வதித்து." மச்சங்களும் பறவைகளும் பலுகிப் பெருகும்படியான ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். ஜலத்திலும் ஆகாயத்





கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்
கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது
23 என்றும் சொன்னார்.—சாயங்காலமும் விடியற்கால
முமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.
24 பின்பு தேவன்: பூமியானது ஜாதிஜாதியான ஜீவ
ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும்பிராணி
களையும், காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியாகப்
பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே
25 ஆயிற்று.—தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான
காட்டு மிருகங்களையும், ஜாதிஜாதியான நாட்டு மிரு
கங்களையும், பூமியில் ஊரும்பிராணிகள் எல்லாவற்
றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது
என்று கண்டார்.
26 பின்பு தேவன்: [1]நமது சாயலாகவும் நமது ரூபத்
தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக;

[1] ஆதி. 5. 1; 9. 6. சங். 100. 3.

திலும் இருக்கிற ஜந்துக்கள் எண்ணத்தொலையாததும் எட்டில் அடங்காததுமானவைகளாயிருக்கின்றன.

**24.** "நாட்டு மிருகங்களையும், ஊரும்பிராணிகளையும், காட்டு மிருகங்களையும்." பூமியிலே 600 வகை நாலுகால் ஜீவன்களும், 700 வகை ஊர்வனமும், கண்ணுக்குப் புலப்படக்கூடிய 44,000 வகைப் பூச்சிகளும், கண்ணுக்குப் புலப்படக்கூடாத எண்ணிறந்த வகைகளும் இருக்கின்றனவென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐந்தாம் நாளில் ஜலத்திலும் ஆகாயத்திலும் வாழும் ஜந்துக்களும், ஆறாம் நாள் துவக்கத்தில் தரையில் வாழும் பிராணிகளும் உண்டாக்கப்பட்டன. இவைகள் நாட்டுமிருகங்கள், ஊர்வனங்கள், காட்டுமிருகங்கள் என மூவகையாய் இங்கே பிரிக்கப்பட்டிருக்கின்றன.

தேவன், இனிமேல் உலகத்தை ஜலத்தால் அழிக்கமாட்டேன் என்று சொன்னபோது மிருகங்களோடும் என் உடம்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்று சொல்லியிருப்பதையும் (ஆதி. 9: 10.), ஓய்வுநாளில் மிருகங்களும் யாதொரு வேலையும் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டிருப்பதையும் (யாத். 20: 10.), நினிவே அழிக்கப்படாததற்கு அதிலே அநேக மிருக ஜீவன்களுமிருந்ததால், என்ற ஒரு முகாந்தரம் காட்டப்பட்டிருப்பதையும் (யோனா. 4: 11.), அவைகளுக்குக் குரூரம் செய்யக்கூடாதென்று கொடுக்கப்பட்ட உத்தரவையும் (யாத். 23: 5-19. உபா. 22: 6, 7.) பார்க்கும்போது, அவர் மிருகஜீவன்களுக்காகவும் மிகுந்த கவலையுள்ளவராயிருக்கிறார் என்று அறியலாம்.

**26.** "தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக." மனுஷனுக்குப் பிரயோசனமான எல்லா

அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்

வற்றையும் தேவன் உண்டாக்கினபின்பு அவர் மனிதனைப் படைத்தார். பூமிக்குரிய சிருஷ்டிகளில் மனிதன் மேன்மையானவன். மனித ஆத்துமாவானது சிறந்ததும் மகத்துவமானதுமாயிருக்கிறது. மூலராசிகளுக்கு ஜீவனுண்டு. மிருகராசிகளுக்கு ஜீவ சுவாசமுண்டு. அவை நடமாடியுந் திரிகின்றன. மனிதனோ புத்தி சித்தமுதலிய அந்தக்கரணங்களையுடைய ஜீவாத்துமாவாயிருக்கிறான். (9: 6. வியாக்கியானம் பார்க்க.)

“நமது” என்று சொல்லுகையில், தேவன் தூதரோடே பேசினார் என்று சொல்லுவார் சிலர். அவர்கள் சிருஷ்டிகள்; ஆகையால் சிருஷ்டிகருக்கு அவர்கள் ஆலோசனைக்காரராகமாட்டார்கள். பூலோக அதிகாரிகள் பேசும் வண்ணம் இங்கே தேவன் பேசியிருக்கிறார் என்று வியாக்கியானஞ் செய்வாருண்டு. அப்படியானால் (3: 22.) “மனிதன் நம்மில் ஒருவரைப்போலானான்” என்று சொல்லியிருப்பதற்கு அது விகற்பமாயிருக்கிறது. மேலும் இராசாக்கள் இப்படிப் பேசியிருப்பதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. “நான் பார்வோன்” நான் உன்னை எகிப்து முழுமைக்கும் அதிகாரியாக்கினேன் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். சிலர், மண்ணினால் ஆதாமின் சரீரம் உண்டாக்கப்பட்டது. அவன் ஆத்துமா தேவனால் கொடுக்கப்பட்டது. ஆதலால் தேவன் பூமியைப்பார்த்துப் பேசினார் என்பார்கள். ஆனால் உண்டாக்கும் சக்தி பூமிக்கு இல்லை. ஆகவே புதிய ஏற்பாட்டில் மிகத் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற திரித்துவ உபதேசம் இங்கே குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது என்று நிச்சயிக்கலாம்.

“சாயல்.” ஆதாம் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டிருக்கிறான்.

1. அவன் ஆத்துமா சாகாத்தன்மையுள்ளதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டது.
2. அவன் மெய்யான நீதியும் பரிசுத்தமும் குற்றமின்மையும் உடையவனாய் உருவாக்கப்பட்டான். (எபே. 4: 24. கொலோ. 3: 10.)
3. ஆத்துமாவுக்குண்டாயிருக்கிற சக்திகள் அந்தக்கரணங்கள், தேவனை அறியவும் அவரிடத்தில் அன்புகூரவும் அவருக்கு ஊழியஞ்செய்யவும் தக்கதாயிருக்கிறது.
4. பூமியிலுள்ள சர்வசிருஷ்டியின் பேரில் அவனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
5. தானாய் நிர்ணயிக்கிற சித்தம், சுயத்துவம், சன்மார்க்க குணம், ஆளுகைக்குரிய சுபாவம், உத்தரவாத கடமை, இலட்சணங்களுடையவனாய்ச் சிருஷ்டிக்கப்பட்டான். இவைகளே தேவசாயல் என்பதில் குறிக்கப்பட்ட பொருள்கள். (5: 1 வியாக்கியானம் பார்க்க.)

“உண்டாக்குவோமாக.” தேவன் மனுஷனை உருவாக்கச் சித்தங்கொண்டபோது, தமது குமாரனோடும் பரிசுத்த ஆவியோடும் ஆலோசனை பண்ணினார். தேவகுமாரனாகிய இயேசு, ஆலோசனைக்கர்த்தர் என்று அழைக்கப்படுகிறார் (ஏசா 9:6.). மனுபுத்திரரை மீட்கும்படியாக அவர் பிற்காலத்தில் மனுஷீகத்தைத்தரித்துக்கொள்ளவேண்டியதாயிருந்தது. தேவாவியானவரும் மனுஷனைப் பரிசுத்தமாக்குகிறவராயிருக்கிறார். அவர்களோடே ஆலோசனை செய்வது பிதாவுக்கு ஏற்றதாகக் கண்டது.





துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமிய
னைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணி
27 களையும் ஆளக்கடவர்கள் என்றார்.—தேவன் தம்மு
டைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், [1]அவ
னைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; [2]ஆணும்
பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.
28 பின்பு தேவன் அவர்களை நோக்கி: [3]நீங்கள் பலு
கிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி,
சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவை
களையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்
துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி,
தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.
29 பின்னும் தேவன்: இதோ, பூமியின்மேல் எங்கும்
விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும்

1 பிர. 7. 29. அப். 17. 26–29.
2 1 கொ. 11. 7. எபே. 4. 24. மத். 19. 4. மாக். 3. 9. மல்கி. 2. 15.
3 ஆதி. 8. 17. 9. 1, 7.

27. “அவனை.” மனித ஜாதியார் யாவருக்கும் தலையாகவும் தகப்பனாகவும் ஆதாமைத் தேவன் சிருஷ்டித்தார். மனிதர் ஒருவனிலிருந்து உண்டானவர்கள், ஆதலால் ஒருவருக்கொருவர் உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

“ஆணும் பெண்ணுமாக.” ஆதியிலே ஒரே ஆணும் ஒரே பெண்ணும் உண்டாக்கப்பட்டார்கள். ஸ்திரீ புருஷனிலிருந்து உண்டானவள். பல மனைவிகளை விவாகஞ்செய்தலும் மனைவியைத் தள்ளிவிடுதலும் ஆதிமுதல் இருந்ததில்லை. தேவன் மனுஷனை உருவாக்கின அன்றே ஸ்திரீயையும் உருவாக்கினார். மனிதனை மண்ணினாலும் ஸ்திரீயை மனிதனிலிருந்தும் படைத்தார்.

28. “நீங்கள் பலுகிப் பெருகி.” இந்த ஆசீர்வாதத்தைத் தேவன் மற்ற ஜீவப்பிராணிகளுக்கும் அருளினார். ஆனால் மனுப்புத்திரர் விஷயத்தில் அது விசேஷித்தவகையாய் நிறைவேறிவருகிறது.

“இஸ்ரவேலின் காற்பங்கை எண்ணுகிறவனார்?” ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரள் கூட்டமாகிய ஜனங்கள் ஆசனத்துக்கு முன்பாக நின்றார்கள் (எண். 23: 10. வெளி. 7: 9.). ஜனப்பெருக்கத்தோடே தேவன் வேறே இரண்டு காரியங்களையும் மனுபுத்திரருக்கு ஆசீர்வாதமாக அருளியிருக்கிறார். 1. உலகம் முழுமையையும் மனுஷனுக்குக் கையளித்து, அதை அவன் தனக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளும்படியான வல்லமையையும், 2. தண்ணீரிலும் ஆகாயத்திலும் தரையிலுமுள்ள யாவற்றின்மேலும் ஆளுகைசெலுத்தும் அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார்.

29. “சகலவிதப் பூண்டுகளையும்” மனுஷனுக்குப் போசனத்திற்காக துவக்கத்திலே பூண்டுகளும் விருக்ஷத்தின் கனிகளும் கொடுக்கப்பட்டன. பின்பு நோவாவின்காலத்தில் மிருகங்களை அடித்துப் புசிக்கும்படியான உத்தரவு அருளப்பட்டது. (ஆதி. 9: 3.)

கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்
களுக்குக் கொடுத்தேன், [1]அவைகள் உங்களுக்கு ஆகா
30 ரமாயிருக்கக்கடவது;—பூமியிலுள்ள [2]சகல மிருக
ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவைக
ளுக்கும், பூமியின்மேல் ஊரும்பிராணிகள் எல்லா
வற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகா
ரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே
31 ஆயிற்று.—அப்பொழுது [3]தேவன் தாம் உண்டாக்கின
எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றா
யிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம்
நாள் ஆயிற்று.

[1] ஆதி. 9. 3 சங். 104. 14. 15. அப். 14. 17.
[2] சங். 145. 15. 16: 147. 9. யோபு. 38. 41.
[3] சங். 104. 24. உபா. 32. 4. 1 தீமோ. 4. 4.

**30.** "சகல மிருக ஜீவன்களுக்கும்.......பசுமையான சகல பூண்டுகளையும்." உலக ஆரம்பத்திலே சகல மிருகங்களும் பசும் பூண்டுகளைத் தின்றன. மனுஷன் பாவத்தில் விழுந்தபின்பு, காட்டு மிருகங்கள் மாமிச பட்சணிகளாயின. இனிமேல் மேசியாவின் நாட்களில் அந்தச் சாபம் பூமியிலிருந்து நீங்கிப் போக, சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். (ஏசா. 11: 7.)

**31.** "மிகவும் நன்றாயிருந்தது." சகலமும் ஒன்றுக்கொன்று இசைவும், ஒரே சிறந்த நோக்கத்தை நிறைவேற்றுதலுமாயிருந்து, தேவஞானத்தையும் வல்லமையையும் தயவையும் விளக்குகிறவைகளாயிருந்தன.

படிப்பினை.

(1) தேவனுடைய சுயம்பு, ஞானம், மகத்துவம், வல்லமை, நித்தியத்துவம் என்றவைகள் உண்டாக்கப்பட்டவைகளால் தெளிவாய்க் காணப்பட்டிருக்க, அவரைத் தொழுதுகொள்ளாதவர்கள் போக்குச் சொல்ல ஏதுவில்லை.

(2) சராசரம் அனைத்தையும் படைத்தவர் நம்முடைய பிதாவானதால், நம்முடைய கவலைகளெல்லாவற்றையும் அவர்பேரில் போட்டுவிட்டு அவரிடத்தில் நம்பிக்கை வைப்போமாக.

(3) குணப்படாத இருதயம் பூமியின் முதல் ஸ்திதிக்கு ஒத்ததாயிருக்கிறது. அது தேவசாயலை இழந்ததால் ரூபமற்றதும்; அதில் யாதொரு நன்மையும் இல்லாமல் வாசம்பண்ணுகிறதால் வெறுமையும்; அந்தகாரப்பிரபுவால் ஆளப்படுவதால் இருளுமாயிருக்கிறது. வெளிச்சம் உண்டாக்குதல் தேவனுடைய முதற் கிரியை. அந்தகாரப் மன்னர் உள்ளத்தில் பிசாசு உண்டாக்கும் முதற் கிரியை. பரிசுத்த ஆவியானவர் நமது இருதயத்தில் செய்கிற முதற் கிரியை மெய்யறிவாகிய ஒளியைக் கொடுப்பதாம்.

(4) எந்த அற்பப்பிராணியையும் நாம் வருத்தப்படுத்தாமல் அவைகளை அன்பாய் நடத்திக்கொண்டுவரவேண்டியது. அவைகள் தேவனுடையவைகள், நாம் உண்டாக்கப்பட்ட மண்ணிலிருந்து அவைகளும் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. மிருகங்களும் பறவைகள் ஊர்வனங்களை ஆளும்படியாக மனுஷர் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதால் அவைகளை அவர்கள் வணங்குவது எத்தனையோ மதியீனம்.

(5) மண்ணால் உருவாக்கப்பட்ட மனுஷன் ஏன் பெருமை கொள்ளவேண்டும்? மூக்கிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதைவிட்டு ஓய்வோமாக.





## 2. அதிகாரம்.

1. ஏழாம் ஓய்வுநாள். 4. சிருஷ்டிப்பின் விவரம். 8. ஏதேனென்னும் தோட்டம் உண்டாக்கப்பட்டது. 10. அதிலிருந்த நதிகள். 17. நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனிமாத்திரம் விலக்கப்பட்டது. 19. ஆதாம் சகல உயிர்களுக்கும் பெயரிட்டது. 21. ஸ்திரீ உண்டாக்கப்பட்டு, விவாகம் நியமிக்கப்பட்டது.

1 இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின்
*சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. —
2 [1]தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம்
நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்மு

* சங். 33. 6.
[1] யாத். 16. 22, 23: 20. 11: 31. 17. எபி. 4. 4.

(6) தேவன் தம்முடைய கிரியைகளைப் பார்த்தபோது மிகவும் நன்றாயிருந்தது, நம்முடைய கிரியைகளைப் பார்த்தாலோ, அவைகளைக்குறித்து நாம் வெட்கப்படவேண்டியதாயிருக்கிறது.

(7) நாம் தேவனால் உண்டாக்கப்பட்டிருப்பதால் அவர் நமக்குச் செய்கிற எந்தக் காரியத்தையிட்டும் முறுமுறுக்கக்கூடாது. நாம் நம்முடையவர்களல்லவே. நாம் பூமியில் தங்குமளவும் அவருக்கென்று ஜீவனம் பண்ணுவோமாக.

(8) தேவன் திரளான நன்மைகளை நமக்குக் கட்டளையிட்டிருப்பதால் அவைகளுக்காக நாம் அவருக்குக் கணக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியதென்பதை மறவாதிருப்போமாக. அவரிடத்தில் அன்புகூர்ந்து அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவரை நன்றியறிதலோடே உண்மையாய்ச் சேவிப்பது நம்மேல் விழுந்த கடமை.

[redacted] நன்றாயிருந்த உலகம் பாவத்தினால் எவ்வளவாய்ச் சீர்கெட்டுப் போயிருக்கிறது; சிருஷ்டிகள் மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது, சர்வசிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. ஆதலால் நாம் கிறிஸ்துவின்மூலமாய் தேவனோடு ஒப்புரவாகக்கடவோம். அப்போது கிறிஸ்துவினிமித்தம் அவர் நமக்கு இரங்கி நம்மை மறுபடியும் தமது சாயலுக்கேற்க பரிசுத்தஞ்செய்து நீதிவாசமாயிருக்கிற புதிய வானங்களிலும் பூமியிலும் நாம் சுகித்துவாழும்படி செய்வார்.

(10) ஆதி மனுஷரை நோக்கிப்பார்த்து "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று கிருபையுள்ள கர்த்தர் ஆசீர்வாதம் கூறினதெப்படியோ அப்படியே கிறிஸ்துவின்மூலமாய் தமது திவ்யசாயலை மீளவும் அணிந்துகொண்டிருக்கும் விசுவாசிகளைக் கடாட்சித்து நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்களென்று ஆத்துமப்பிரகாரமாய்க் கற்பிக்கிறார். ஆதலால் சர்வலோகத்தாருக்கும் சுவிசேஷத்தைக் கூறியறிவிக்கிறதினாலே தேவனை அறிகிற அறிவினாலே இப்பூமியை நிரப்பும்படி ஜாக்கிரதை செய்வோமாக.

## 2. அதிகாரம்.

**1.** "அவைகளின் சர்வசேனை." வானத்தின் சேனை என்பதில் சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்களும், தேவதூதரும் (நெகே. 9. 6.); பூமியின் சேனை என்பதில் தண்ணீர், தரை, ஆகாயத்தில் சஞ்சரிக்கிற சகலமும் அடங்கியிருக்கிறது.

**2.** "ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்." சிலர் நியாயப்பிரமாணம்கொடுக்கப்படுமுன்னும் ஓய்வுநாள் ஆசரிக்கப்படவில்லை, முற்பிதாக்கள் அதை ஆசரித்ததாய்ச் சொல்லப்படவுமில்லை என்றும் பின் நியமிக்கப்படப்போகிற ஓய்வு

டைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம்
3 நாளிலே ஓய்ந்திருந்தார்.—தேவன் தாம் சிருஷ்டித்து
உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம்
முடித்தபின்பு [1]அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன்
ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப்பரிசுத்தமாக்கினார்.

[1] நெகே. 9; 14. எசே. 8 12. மாற். 2. 27. அப். 20. 7. 1கொ. 16. 2. வெளி. 1. 10.

நாளை எதிர்நோக்கி, இங்கே ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார் என்று காட்டியிருக்கிறதென்றும் சொல்லுவார்கள். அநேக வருஷக்காலங்களாயிருந்த முற்பிதாக்களுடைய சரித்திரங்கள் மிகவும் சங்கிரகமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் அவர்கள் ஓய்வுநாளை ஆசரித்ததைக்குறித்து ஆதியாகமத்தில் விபரம் சொல்ல இடமில்லை என்றாலும் வாரத்தைப்பற்றிய சில குறிப்புகளை அங்கே காணலாம். திருஷ்டாந்தமாக நோவா ஏழுநாள் பொறுத்து புறாவை வெளியே விட்டான் (ஆதி. 8: 10, 12.). நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது, ஓய்வுநாளை ஏற்படுத்தினதற்கு முகாந்தரமாக தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி "ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்" என்று சொல்லியிருக்கிறது (யாத். 20: 11.). மேலும் யாத். 16: 5ல் சொல்லியிருப்பதைப்பார்க்கில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுமுன்றி ஓய்வுநாள் நியமிக்கப்பட்டதென்று அறியலாம். உலகத்திலுள்ள ஜாதியாரில் மிச்சமானவர்களுக்குள் ஒருவாரம் ஏழுநாளாக கைக்கொள்ளப்பட்டு வருகிறதைக் கவனிக்கையில் அதை அவர்கள் இஸ்ரவேலரிடத்திலிருந்து கற்றுக்கொண்டதாக நினைக்க இடமில்லை. ஆகவே உலக ஆரம்பத்திலேயே ஓய்வுநாள் நியமிக்கப்பட்டதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

"ஓய்ந்திருந்தார்." தேவன் இளைப்படைந்துபோனதால் ஓய்ந்திருக்கவில்லை. அவருடைய தன்மைக்கு இளைப்பேயில்லை. ஆனால் (1) அவருடைய கிரியை முடிந்து அது பூரணப்பட்டதற்கு முத்திரையாக ஓய்ந்திருந்தார். (2) நாம் ஓய்ந்திருக்கும்படி அவர் நமக்கு முன்மாதிரியாக ஓய்ந்திருந்தார். நாம் நமது கிரியையை எல்லாம் செய்து முடித்தபின்பு நித்திய ஓய்வுக்குள் பிரவேசிக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்த ஓய்வு நமக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது (எபி. 4: 9, 10.). மேலும் நாம் ரக்ஷிப்புக்கு ஆதாரமாக நம்முடைய சொந்த கிரியைகளை நம்பாமல் அவைகளை விட்டோய்ந்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ரக்ஷணிய கிரியையைப் பற்றிக்கொண்டு விசுவாசத்தினாலே அவரிடத்தில் ஆத்தும ஆறுதலை அடையவேண்டுமென்பதற்குத் திருஷ்டாந்தமாக ஓய்வுநாளானது நியமிக்கப்பட்டது (எபி. 4: 3.). வாரத்தின் ஏழாம்நாளாகிய இந்த நாளிலே நம்முடைய கர்த்தர் மீட்பின் கிரியையை நிறைவேற்றி ஓய்ந்திருந்தார்.

**3.** "சிருஷ்டித்து உண்டுபண்ணின." மூலத்தில் "உண்டுபண்ணும்படி சிருஷ்டித்த" என்றிருக்கிறது. இது 1-ம் அதிகாரத்தின் வியாக்கியானத்தோடு சம்பந்தப்பட்டதென்றறிக.

"ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்." ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது. மனுஷன் தேவனைத் துதிக்கவும், அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும், மரணத்துக்குப் பின்வரும் நித்திய இளைப்பாறுதலை நாடித் தேடவும் அது ஏற்படுத்தப்பட்டது.





4 தேவனாகிய *கர்த்தர் பூமியையும் வானத்தையும்
உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்
5 டிக்கப்பட்ட வரலாறு இவைகளே.—[1]நிலத்தினு
டைய சகலவிதச் செடிகளும் பூமியின்மேல் இன்னும்

* யேகோவா. ஆதி. 1. 1. சங். 90. 1, 2.

[1] ஆதி. 1. 12; 3. 23.

"பரிசுத்தமாக்கினார்." மற்ற நாட்களுக்கு அதைப் பிரத்தியேகப்படுத்தி, தெய்வீக வணக்கத்தில் அதைப் பின்னிடும்நாளாக ஸ்தாபித்தார்.

ஏழாம்நாளைக்குறித்துச் சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஏழாம்நாள் ஆயிற்று என்று காட்டப்படவில்லை. ஏழாம்நாள் சாயங்காலமில்லாத நித்திய ஓய்வுக்கு அடையாளமாயிருப்பதால் இப்படி எழுதப்படாதிருக்கலாம். (வெளி. 21: 25.)

**4.** "தேவனாகிய கர்த்தர்." கர்த்தர் என்கிற வார்த்தை எபிரெயுவில் "யெகோவா" என்றிருக்கிறது, இந்தப்பெயர் இந்த இடத்திலே முதலாவதாக வழங்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய கிரியைகள் பூரணமாய்ச் சிருஷ்டிக்கப்பட்டு முடிந்ததால், கடவுளின் பூரண நாமதேயம் இங்கே வழங்கப்பட்டிருக்கிறதாக யூதர்கள் சொல்லுகிறதுண்டு. ஆனால் சிருஷ்டிப்பு, கடவுளின் கிரியை ஆனதால், முந்தின அதிகாரத்தில் அவர் சகலத்துக்கும் மேலானவர் என்று காட்டுகிற தேவன் என்கிற சாதாரண நாமத்தை மோசே அவருக்கு வழங்கி, பின்பு மனிதனுக்குரிய விஷயத்தைத் தொகுத்துப்பேசுகிறதில் அவனுக்குச் சம்பந்தப்படுகிற காரியமாய் யெகோவா என்கிற அவருடைய சுயநாமத்தை வழங்குகிறானென்றும் சொல்லலாம். அவர் முற்பிதாக்களுக்கு அவர்களுடைய தேவனாக இந்தப் பரிசுத்த நாமத்தினாலே தம்மை வெளிப்படுத்தினார். மேலும் சிருஷ்டிக்கப்பட்ட சகலத்தையும் தாங்கி அவைகளின்பேரில் ஆளுகையைச் செலுத்துகிறவரானதாலும் இந்தப் பெயரால் அழைக்கப்படுகிறார் என்றும் சொல்லலாம். கர்த்தர் என்கிற நாமத்தோடே தேவன் என்பதைச் சேர்த்திருக்கிறதை நாம் கவனிக்கையில் முந்தின அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற தேவனே பிந்திய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிற யெகோவா என்றறியலாம்.

கவனிப்பு.—யெகோவாவென்கிற பரிசுத்த நாமதேயத்தை யூதர்கள் உச்சரிப்பதேயில்லை. எழுத்திலேமாத்திரம் அந்தத் திவ்யவார்த்தை வழங்கப்பட்டுவந்தது. வேதவாசிப்பிலோ யெகோவாவென்பதை உச்சரியாதபடிக்கு அதற்குப்பதிலாக வேறொருவார்த்தையை வழங்கி அடோனாவென்றே உச்சரிப்பார்கள். அடோனாவென்பதற்கு ஆண்டவனென்றர்த்தம். வேதசாஸ்திரிகளும் வேதபாரகர்களும் வேதவாக்கியங்களை எழுதும் விஷயத்தில் யெகோவாவென்கிற பரிசுத்த பதம் வரும்பொழுதெல்லாம் தங்களுடைய எழுத்தாணியைப் பக்கத்தில் போட்டுவிட்டு புது எழுத்தாணியை எடுத்துக்கொண்டு பின்பு அடுத்த வசனத்தை எழுதிக்கொள்வது வழக்கம். இதுகாரியங்களினாலே யெகோவாவென்பதின் அர்த்தமும் உச்சரிப்பும் ஒருவருக்கும் தெரியாமற்போய்விட்டன. ஆதலால் தேவனுடைய திருநாமம் எவ்வளவு பரிசுத்தமும் ரகசியமுமானதென்று நாம் காணலாம். என்றாலும் ரகசியமான இந்த நாமத்தின் தாற்பரியம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலே வெளியரங்கம் ஆயிற்றென்று பற்பல முகாந்தரங்களினாலே நினைக்கத்தக்கது. (2 கொ. 4: 6. எபி. 1: 3. யோவா. 8: 58.)

**5.** "நிலத்தினுடைய சகலவிதச் செடிகளும்.........பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை." இது 1. 12க்கு விகற்பமாகத் தோன்றும். இங்கே வழங்

உண்டாகவில்லை, நிலத்தினுடைய சகலவிதப் பூண்டு
களும் இன்னும் முளைக்கவில்லை; ஏனெனில் தேவனு
கிய [1]கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப்
பெய்யப்பண்ணவில்லை; நிலத்தைப் பண்படுத்த மனு
6 ஷனும் இருந்ததில்லை.—அப்பொழுது மூடுபனி பூமி
யிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது.
7 தேவனாகிய கர்த்தர் [1]மனுஷனைப் [2]பூமியின் மண்
ணினாலே உருவாக்கி, [3]ஜீவசுவாசத்தை அவன் நாசி
யிலே ஊதினார், [4]மனுஷன் ஜீவாத்துமாவானான்.

[1] யோபு. 38. 26–28.
[2] ஆதி. 3. 19, 23. சங். 103. 14. பிர. 12. 7. ஏசா. 64. 8. 1 கொ. 15. 47.
[3] யோபு. 33. 4. அப். 17. 25. ஏசா. 2. 22.
[4] 1 கொ. 15. 45.

கிய செடிகள், நிலம், முளைக்குதல் என்ற பதங்கள் முதலாம் அதிகாரத்தில் வழங்கப்படவில்லை என்றும் இவைகள் சாகுபடியால் உண்டாகும் ஜீவராசிகளைக் குறிக்கும் பதங்கள் என்றும் வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

**6.** **"மூடுபனி."** தானாய் உண்டான புல் பூண்டுகளையும் விவசாயத்தாலுண்டாகும் விருக்ஷங்களையும் பிழைப்பூட்டும்படி இந்த நீர்த்தாவல் அவசியம் வேண்டியதாயிருந்தது. இக்காலத்திலும் பனித்தாவல் பயிர்வகைகளுக்குப் பிரயோசனமாயிருக்கிறதென்பதை நாம் அறிவோம்.

**7.** **"கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி."** மூலத்தில் "மனுஷன்" என்பதற்கு "ஆதாம்" என்று போட்டிருக்கிறது. மனிதனுடைய சரீரம் பிரமிக்கத்தக்க அதிசயமுள்ளதாய் மண்ணால் உண்டாக்கப்பட்டு ஆத்துமா வாசஞ்செய்வதற்குரிய கூடாரம்போலிருக்கிறது (சங். 139: 14–18. 2 கொ. 5: 1–4. யோபு. 10: 8–11.). மனிதன் "தான் தேவசாயலின்படி உண்டாக்கப்பட்டிருக்கிறேன்" என்று பெருமைபாராட்டிக் கெட்டுப்போகாமல் தன்னைக்குறித்துத் தாழ்ந்த எண்ணங்கொள்ளும்படிக்கு மண்ணால் உருவாக்கப்பட்டிருக்கிறான்.

**"ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்."** எபிரெயுவில் ஜீவன்களின் சுவாசத்தை என்று பன்மையாக வருகிறது. தேவன் மனுஷனுக்கு மிருகராசிகளுக்குரிய ஜீவனைக் கொடுத்ததோடே பகுத்தறிவுள்ள ஆத்துமாவையும் ஆவியானவருடைய கிருபைவரங்களையும் அவனுக்கு அருளினார்.

**"மனுஷன் ஜீவாத்துமாவானான்."** இது சரீரமும் ஆத்துமாவும் பொருந்திய மனித தத்துவத்தைக் குறிக்கும். மனிதன் சரீரமும் ஆத்துமாவும் ஆவியும் பொருந்தினவனாயிருக்கிறான் (1 தெச. 5: 23.). முதலாம் ஆதாம் பாவஞ்செய்து அக்கிரமத்தினாலும் பாவத்தினாலும் ஆத்தும ஜீவனை இழந்து மரித்தவனானான். கிருபையுள்ள இரண்டாம் ஆதாமோ உயிர்ப்பிக்கிற ஆவியாக திவ்விய சாயலையும் ஆத்தும ஜீவனையும் மறுபடியும் மனுஷருக்கு தேவ ஆவியானவராலே உண்டாக்குகிறார். கிறிஸ்துவானவர் சீஷர்மேல் ஊதி பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னது இதற்கு இசைவாயிருக்கிறதென்று அறியலாம். (யோவா. 20: 22.)





8 தேவனாகிய கர்த்தர் கிழக்கே *ஏதேன் என்னும் ஒரு
தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனு
9 ஷனை அதிலே வைத்தார்.—தேவனாகிய கர்த்தர், [1]பார்
வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித
விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்

* ஆதி. 13. 10. ஏசா. 37. 12. எசே. 28. 13.
[1] எசே. 31. 8, 9. ஆதி. 3. 22: 11. 31. வெளி. 2. 7: 22. 2, 14.

**8.** **"கிழக்கே."** யூதேயாவுக்குக் கிழக்கே ஐப்பிராத்து நதியின் நீர்ப்பாய்ச்சலான இடத்திலே என்று நாம் உத்தேசிக்கலாம்.

**"ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி."** ஏதேன் என்பதற்கு இன்பம் என்று அர்த்தம். அது மனதுக்கும் கண்ணுக்கும் நாவுக்கும் இன்பத்தைக் கொடுக்கும் சகலவித வஸ்துககளாலும் நிறைந்திருந்தது. அது பரதீசு என்று அழைக்கப்படுகிறது. விசுவாசிகள் மரணத்துக்குப்பின்பு இளைப்பாறும் ஸ்தலத்துக்கும் பரதீசு என்று சொல்லப்படுவதுண்டு (லூக். 23: 43.). ஆதாம், ஏதேனிலே தேவகற்பனைகளைக் கைக்கொண்டுவந்திருந்தால், மேலான பதவிக்கு அவன் ஆளாகியிருக்கலாம். ஆதாம் பரதீசில் உண்டாக்கப்படவில்லை; வேறே இடத்தில் உண்டாக்கப்பட்டபின்பு, அந்தத் தோட்டத்தில் வைக்கப்பட்டான். தேவன் அவனை அதில் வைத்தது, அவன்பேரில் அவருக்கிருந்த அன்பையும் கவலையையும் விளக்குவிக்கிறது.

ஏதேன் இருந்த இடத்தைப்பற்றி ஐந்துவகை அபிப்பிராயங்களுண்டு.

1. கீகோன், நீலநதியென்று யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் எழுதியிருக்கிறார்.

2. திகிரீஸ், ஐப்பிராத்து இந்த இரண்டுநதிகளும் ஒன்றாய்க் கலந்து, ஷாற்றல்—அரப் என்று அழைக்கப்பட்டு, பசோராவழியாய் ஓடுகிற நதிதான், ஏதேனின் நதி என்று கல்வீன்முதலியவர்கள் சாதித்திருக்கிறார்கள். நாலு கிளைகளில் திகிரிசும் ஐப்பிராத்தும் வடக்கே ஓடுகிறதென்றும், கீகோனும் பைசோனும் தெற்கே ஓடுகிறதென்றும் மேற்காட்டிய இரண்டு கிளைகளும் ஒன்றாய்க் கலந்து கடலில் விழுமுன் பசோராவுக்குத் தெற்கே மறுபடியும் இரண்டாகப் பிரிகிறதென்றும், அப்படியாகில் அரபியாவின் வடகீழ்பாகம் ஆவிலாவாகவும் கிசியா (சூசியானா) அல்லது கூர்திஸ்றான் திசையானது கூஷ் (எத்தியோப்பியா) ஆகவுமிருக்கும் என்றும் எழுதியிருக்கிறார்கள்.

3. மைக்கேலிஸ்முதலியவர்கள், அர்மீனியாவின் குன்றுகளில் ஏதேன் இருந்ததாகவும் பைசோன் என்பது பாசிஸ் அல்லது அரக்சிஸ் நதியென்றும், கீகோன் என்பது ஒக்சஸ் நதியென்றும், ஆவிலா என்பது குவாலிசி தேசம் என்றும் சொல்லுகிறார்கள்.

4. ஐடிகர், ஏதேன் பலஸ்தீனாவின் ஒரு பாகத்திலிருந்ததென்கிறார்.

5. மற்றவர்கள் அது இந்தியாவிலிருந்ததென்றும், சர்க்காஷியாவிலிருந்ததென்றும் சொல்லியிருக்கிறார்கள். இரண்டாம் அபிப்பிராயம் சரியானதென்று நவீன சில வியாக்கியானிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனாலும், சந்தேகத்திலிருக்கிறது.

**9.** **"ஜீவ விருட்சம்."** ஏதேனில் சகலவித உசிதமான விருக்ஷங்களும் இருந்தன. அதின் நடுவில் இரண்டு விசேஷித்த விருக்ஷங்களைத் தேவன்

சத்தையும், நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தை
10 யும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். — தோட்
டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு
நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுக
11 ளாயிற்று.—முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று
பேர், [1]அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்;

[1] ஆதி. 25. 18.

வைத்தார். அவைகளில் ஒன்று ஜீவவிருக்ஷம்; அதின் கனியை மனுஷன் புசித்தால் தேகத்தில் வியாதி அணுகாமல் அவன் என்றைக்கும் பிழைப்பான் (ஆதி. 3: 22.). தோட்டத்திலுள்ள பற்ற விருக்ஷத்தின் கனியினால் தேகம் வளர்க்கப்படும். ஜீவவிருக்ஷமோ ஆதாமுக்கு ஒரு சாக்கிரமெந்தாயும் ஞானௌஷதத் திரவியமாயுமிருந்தது. மனுஷன் ஜீவனைச் சுதந்தரிப்பது தன்னுடைய சுய சக்தியினாலல்ல, தம்மிலேதாமே ஜீவனையுடையவராயிருக்கிறவரிடத்தில் அதைப் பெற்றுக்கொள்வதற்கான கிருபாவரத்தினாலேதான் என்று இதினால் அவன் போதனையடையவேண்டியதாயிருக்கிறது.

ஞானமும் கிறிஸ்துவும் ஜீவவிருக்ஷத்துக்கு ஒப்பிடப்பட்டிருப்பதுண்டு (நீதி. 3: 18. யோவா. 6: 51, 53, 54, 58.). மேலும் ஜீவவிருக்ஷமானது மனுஷன் புதியவானத்திலும் புதியபூமியிலும் அடையப்போகிற சாவாமைக்கும் சுகானுபவங்களுக்கும் அடையாளமாயும் இருக்கிறது. (வெளி. 2: 7; 22: 2,)

"நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்." தோட்டத்தின் நடுவிலிருந்த மற்றொரு விருக்ஷம் "நன்மை தீமை அறியத்தக்க விருக்ஷமே." இந்த விருக்ஷம் ஆதாம் பாவத்தில் விழுந்தபின்பு இந்தப் பெயரால் அழைக்கப்பட்டதென்று சிலர் நினைக்கிறார்கள். அதின் கனியைப் புசிப்பதினால், மனிதன் நன்மையின்னதென்றும் தீமையின்னதென்றும் அறிந்துகொள்வான். அதைப் புசியாதிருந்து தேவகட்டளையைக் கைக்கொண்டு நடந்தால், நித்தியஜீவனையும், அதை மீறி நடந்தால் நித்தியமரணத்தையும் அடைவான். இதால் ஆதாம் தன் சிருஷ்டிகருடைய சித்தத்தையும் தான் நிறைவேற்றவேண்டிய கடமை முதலியவைகளையுங்குறித்து வெளிப்படுத்தலைப் பெற்றிருந்தான் என்று அறியலாம். மனுஷன் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற திவ்விய கற்பனைகளை அறிந்து, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே நன்மை. கீழ்ப்படியாமையைக் காட்டி தான் சுயாதீனனாகி மிஞ்சிய அறிவைத் தேடலாம் என்று எண்ணுவது அவனுக்குக் கேடாய் முடிகிறது.

**10.** "ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி." ஏதேன் சம்பந்தமாய் வேதத்தில் இரண்டு இடங்களின் பேர் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று திகிரீஸ் நதிக் கடுத்த மெசொப்பொத்தாமியா (2 இரா. 19: 12. எசா. 37: 12. எசே. 27: 23.). மற்றது தமஸ்குவின் பக்கத்திலிருந்த பெத் ஏதேன் (ஏதேனின் வீடு) (ஆமோ. 1: 5.). ஆனால் இந்த இரண்டு இடங்களில் ஒன்றிலே ஏதேன் இருந்ததாகச் சாதிப்பதற்குப் போந்த ஆதாரமில்லை. (8. வச. வியாக்கியானம் பார்க்க.)

**11.** "ஆவிலா." செழிப்பான அரபியாவின் தென்கிழக்கிலிருந்தது (ஆதி. 10: 29; 25. 18. 1 சாமு. 15: 7.)





12 அவ்விடத்திலே பொன்விளையும்.—அந்தத் தேசத்தின்
பொன் நல்லது; அவ்விடத்திலே பிதோலாகும், கோ
13 மேதகக் கல்லும் உண்டு.—இரண்டாம் ஆற்றுக்குக்
கீகோன் என்று பேர், அது எத்தியோப்பியா தேசம்
14 முழுவதையும் சுற்றி ஓடும்.—மூன்றும் ஆற்றுக்கு
[1]இதெக்கேல் என்று பேர், அது அசீரியாவுக்குக் கிழக்
கே ஓடும்; நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர்.

[1] தானி. 10. 4.

**12.** "பொன் நல்லது." அரபியாவின் பொன் மிகவும் பசுமையாயிருக்கும்.

"பிதோலாகு." அரபியாவில் விளையும் ஓர்வகைப் பிசின். அது ஊடுருவப் பார்க்கக்கூடியதாயிருந்தது. மூலபாஷையில் அதின் நிறம் மன்னாவின் நிறத்துக்கு ஒப்பாய் இருந்ததாக வாசிக்கிறோம் (எண். 11: 7.). சிலர் அது பிசினைக் குறியாது ஓர்வகை முத்தைக்குறிக்கும். அது பார்சியாக் குடாக்கடலில் மிகுதியாயுண்டு என்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு போஹார்ட் என்பவர் "ஆவிலா" பார்சியாக் குடாவோரமாயிருக்கிறது என்கிறார்.

"கோமேதகம்." ஓர்வித விலையுயர்ந்த கல் (யாத். 28: 9, 20.). அது நவரத்தினத்தில் ஓர்வகை.

**13.** "எத்தியோப்பியா." எபிரெயுவில் "கூஸ்." இது விஸ்தாரமான அர்த்தமுள்ளது. ஆதி. 10. 7. பார்க்கையில் கூஸ் என்பவனின் குமாரர் விஸ்தாரமான இடங்களில் குடியேறினார்கள் என்று அறிகிறோம். அவர்கள் துவக்கத்தில் அரபியாவிலே வாசஞ்செய்தார்களெனத் தோன்றுகிறது. நிம்ரோது, அசீரியா இராச்சியத்தை ஸ்தாபித்தான். பின்பு கூஸின் புத்திரர் பாபிலோனியாவில் திரளாய்க் குடியேறினார்கள். வேதாகமங்களின் பூர்வீக புஸ்தகங்களில் வருகிற எத்தியோப்பியா என்பது ஆசியாக்கண்டத்திலிருக்கிற அரபியாவையும், பிந்தின ஆகமங்களில் வருகிறது ஆப்பிரிக்காவிலுள்ள கூஸ் அல்லது எத்தியோப்பியாவையும் குறிக்கும்.

**14.** "இதெக்கேல்." திகிரிஸ் நதியைக் குறிக்கிறது.

"அசீரியாவுக்குக் கிழக்கே ஓடும்." அசூர் என்பதில் பாபிலோனியாவும் பார்சியாவும் கூடி சேர்ந்திருக்கிறது. எஸ்றா. 6: 22ல் தரியு என்பவன் அசீரியாவின் இராசா என்று சொல்லப்பட்டிருக்கிறான். ஆனால் மோசேயின் காலத்தில் அசீரியா என்பது திகிரிஸ் நதிக்கு இடதுபக்கமாயுள்ள தேசத்தைக் குறிக்கிறதாயிருந்தது. ஆகவே திகிரிஸ் அசீரியா இராச்சியத்துக்குக் கிழக்கே ஓடினது என்று சொல்வது சரியாயிருக்கமாட்டாது. சில திருப்புதல்களில் "அசீரியாவுக்கு நேராய்" அல்லது "எதிரே" என்று மொழிபெயர்த்திருப்பது சரியெனத் தோன்றுகிறது (திருஷ்டாந்தமாக,—இங்கிலீஷ் வேதாகமத்தின் புதுதிருப்புதலைக் காண்க.). அப்படியானால் திகிரிஸ் அசீரியாவுக்கு மேற்கே ஓடினது என்றறியலாம். பலஸ்தீனா அல்லது சீனாயிலிருந்தெழுதுகிறவனுக்கு "அசீரியாவுக்கு எதிரே" என்பது மேற்கே என்று ஆகும்.

"ஐபிராத்து." எபிரெயுவில் பராது.

15 தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்
தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்த
16 வும் காக்கவும் வைத்தார்.—தேவனாகிய கர்த்தர் மனு
ஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்
17 தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.—ஆனாலும்
[1]நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப்
புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் [2]சாக
வே சாவாய் என்று கட்டளையிட்டார்.

[1] ஆதி. 3. 3, 11, 17.
[2] ரோ. 5. 12: 6. 23. 1கொ. 15. 26.

**15.** "அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்." ஆதாம் பாவத்தில் விழுமுன்னும் தோட்டத்தில் வேலைசெய்துவந்தான். அப்படிச் செய்யும்படி தேவகட்டளையும் அவனுக்கு இருந்தது. வேலைசெய்தல் தன்னில்தானே சாபமுள்ளதல்ல. மனுஷர் தேறவும், சன்மார்க்கத்திலும் சுகவாழ்விலும் முன்னுக்கு வரவும், அது அநுகூலமாயிருக்கிறது; தேகபெலனுக்கும் அநுகூலமாயிருக்கிறது. பிரயாசத்தைச் செலுத்தியும் அதற்குத் தக்கபலனைப் பெறாததினால் உண்டாகும் மனவெறுப்பும் ஆவியின் ஆயாசமும் சாபமாயிருக்கிறது. மனுஷன் பாவத்தில் விழுவதற்குமுன் தான் பட்ட பிரயாசத்திற்கு ஏராளமான பலனைப் பெற்றான்.

**16.** "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கலாம்." தேவன் ஆதாமோடே செய்த உடன்படிக்கை இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஆதாம் தன் சிருஷ்டிகர்த்தாவுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டியவன் என்பதற்குரிய கற்பனையும், கீழ்ப்படிதலுக்குரிய பலனும் அடங்கியிருக்கிறது. ஆதாம் அந்த உடன்படிக்கையின்படி நடந்துவந்திருந்தால் தக்க தவணைக்குப்பின்பு மோட்சலோகம் போயிருப்பான்.

**17.** "புசிக்கவேண்டாம்." தேவன், மேலான சிருஷ்டிகர்த்தாவாக இந்தப் பிரமாணத்தை ஆதாமுக்குக் கொடுத்தார். ஆதாமுக்குப் பூமியிலுள்ள சர்வத்தின் மேலும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரத்தைப் பெற்றவனுக்கு எல்லாம் கீழடங்கியிருந்ததுபோல, தானும் தனக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்த உன்னதமானவருக்கு ஊழியக்காரனாக இருக்கவேண்டியவனாயிருந்தான். பரலோகத்திலிருக்கிற தேவதூதர்களும் தங்கள் பாத்திப இராசாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தாங்கள் அவர்பேரில் வைத்திருக்கிற அன்பையும் பயபக்தியையும் விளக்கிக்கொண்டே இருக்கிறார்கள். அந்தப்படியே ஆதாமும் செய்யவேண்டியவனாயிருந்தான். அவன் குற்றமற்ற பாக்கியமான நிலைமையில் உண்டாக்கப்பட்டிருந்தான். அவனுடைய சரீர ஐம்புலன்களிலாவது ஆத்தும அந்தக்கரணங்களிலாவது பாவத்துக்குச் சாயும்படி இயற்கையான மயக்கங்களிருந்ததில்லை. உலகத்திலே ஆதாமும் ஏவாளும் அவர்களுக்குச் சமீபமாயிருந்த அவர்கள் சிருஷ்டிகரும் தவிர வேறொருவருமிருந்ததில்லை. ஆகையால் அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யும்படி சாயத்தக்க இயல்பான ஏதுக்களில்லாதிருந்தது. சன்மார்க்கப் பிரமாணத்துக்கு மாதிரியாக பத்துக்கற்பனைகளை வைத்துக்கொள்வோம். குற்றமற்ற நிலைமையில் அவர்கள் இவைகளில் எதையாவது இயல்பாய் மீறும்படி விரும்புவார்களென்று காண்பதரிது





18 பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயி
ருப்பது நல்லதல்ல, [1]ஏற்ற துணையை அவனுக்கு
19 உண்டாக்குவேன் என்றார்.—தேவனாகிய கர்த்தர்
வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின்
சகலவிதப் பறவைகளையும் [2]மண்ணினாலே உருவா
க்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று

[1] 1 கொ. 11. 8, 9. 1 தீமோ. 2. 13.
[2] ஆதி. 1. 20, 24.

ஆனால் அவர்கள் நிலைமை சுயாதீனமுள்ளதாய் இருந்ததோடே தேவன்பேரில் சார்புள்ளதாயும் இருந்தது. அவர்கள் தேவன்பேரில் சார்பாயிருப்பதை நாடி நடவாமல் அவரை விட்டு விலகுவதே குற்றமாயிருந்தது. இப்படிப்பட்டவர்களுக்கு ஒருகனியை விலக்குவது அவர்களுடைய நிலைமைக்கேற்றதாயிருந்தது. மேலும் தேவன் மனுஷருடைய விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் பரீட்சிக்கும்படி வேளாவேளைகளில் சில விசேஷித்த அபூர்வ பரீட்சைகளைக் கட்டளையிடுவது அவருடைய சாதாரண நடத்துதலுக்கு இசைவாயுமிருக்கிறது. (ஆதி. 22: 1. மத். 4: 1–11. மத். 19. 21.)

"புசிக்கும்நாளில் சாகவே சாவாய்." விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதினால், ஆத்துமா அக்கிரமத்தினாலும் பாவத்தினாலும் மரிக்கும், சரீரமும் சாவுக்கினமாகும்; மரணம் அதில் வல்லமைகொள்ளும் (2 கொ. 4: 12.). நாளடைவிலே அது மரணத்துக்கு முன்தூதுகளாகிய வியாதிநோவுகளால் பிடிபட்டு வருத்தங்களை அனுபவித்துக் கடைசியாக பிரேதக்குழியில் இறங்கும். ஆதாம் ஏவாள் என்பவர்கள் பாவஞ்செய்த அன்றே சாகாதபடி நினிவேயருக்கு கிருபை அளிக்கப்பட்டதுபோல (யோனா, 3. 10.), கொஞ்சம் இரக்கம் காட்டப்பட்டது. சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றும்படி பிராயச்சித்த வாக்கும் அருளப்பட்டது, ஆனால் மரணத்தீர்ப்போ முழுவதுமாய் மாற்றப்படவில்லை. ஆக்கினை உடனே ஆரம்பித்தது. இந்தச் சாபத்தில் சரீரமரணம் ஆத்துமமரணம் நித்தியமரணம் ஆகிய இம்மூவகையான சாவு அடங்கியிருக்கிறது என்றறியவேண்டும்.

கவனிப்பு.—சரீரமரணம் இச்சாபத்தினாலே உண்டாகவில்லை என்றும் ஆதாம் ஏவாள் என்பவர்கள் பாவஞ்செய்திருந்தாலுஞ் சரி செய்யாதிருந்தாலுஞ் சரி உலகத்தில் சரீரமரணம் இயல்பாயிருக்கும் என்றும் சாதிப்பாருண்டு. அச்சாதனை எப்படியிருந்தாலும் நடந்தகாரியங்கள் நமக்குத் தெரியுமேயல்லாமல் நடந்திருக்கக்கூடிய காரியங்களைத் திட்டமாய் அறியமாட்டோம்.

**18.** "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல." மனுஷனுக்குரிய அந்தக்கரண சக்திகள், பேசும் திறமை இவைகளையும் அன்புமுதலிய குணங்களையும் உபயோகிப்பதற்கு இஷ்டாள் இருக்கவேண்டியது அவசியமாயிருந்தது.

**19.** "ஆதாம்." எபிரெயுவில் "மனிதன்." அதற்கு "செம்மண்" என்று அர்த்தம். உருவாக்கி ஆதாம் உண்டாக்கப்பட்டதற்குப் பின்பு மிருகங்கள் உண்டாக்கப்பட்டனவென்று இந்த வாக்கியத்தைக்கொண்டு நாம் நிதானிக்கக்கூடாது. மனிதன் மிருகங்களுக்குப் பேரிடும்படி அவைகளை ஆதாமிடத்திற்குத் தேவன் கொண்டுவந்தபோது, அவைகள் முன் படைக்கப்பட்ட விதத்தைத் திரும்பவும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறது. மேலும் அவைகள்

பார்க்கும்படி [1]அவைகளை அவனிடத்தில் கொண்டு
வந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப்
பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று.—
20 அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்
கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும், சகலவிதக் காட்
டுமிருகங்களுக்கும் பேரிட்டான்; ஆதாமுக்கோ ஏற்ற
துணை இன்னும் காணப்படவில்லை.
21 அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு
[2]அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்
திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புக
ளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையி
22 னால் அடைத்தார்.—தேவனாகிய கர்த்தர் தாம் மனு
ஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உரு
வாக்கி, [3]அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்.—

[1] சங். 8. 6.
[2] ஆதி. 15. 12. யோபு. 4. 13. தானி. 8. 18.
[3] நீதி. 18. 22. எபி. 13. 4.

ஆதாமுக்கு முன்பாக நிறுத்தப்பட்டபோது அவைகள் பூமிக்குரியவைகளிலிருந்து உருவாக்கப்பட்டவைகளேயொழிய, தேவன் அவைகள்மேல் ஜீவசுவாசத்தை ஊதாதிருந்ததிலே அவைகளில் ஒன்றுவது அவனுக்கு ஏற்றதுணையாயிருக்கமாட்டாதென்று காட்ட இப்படி இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியத்திலே "மண்ணினாலே" என்ற பதம் கர்த்தர் என்றதற்குப் பின்வருவது சரியாயிருக்கும். மற்றப்படி இது 1: 21, 22. வாக்கியங்களுக்கு விகற்பமாயிருக்கும்.

**20.** "பேரிட்டான்." பறவைகள் மிருகங்களுக்குப் பெயரிட்டதில் ஆதாமுக்கும் அவைகளுக்கும் இருந்த முதல் வித்தியாசத்தைப் பார்க்கிறோம். 1. பேசும் திறமை ஆதாமுக்கு இருந்தது. 2. அவனுக்கு அவைகளின்மேல் அதிகாரமிருந்தது. அவைகள் அவனுக்குக் கீழடங்கியிருந்தன (சங். 8: 6, 7; 147: 4. ஏசா. 40: 26.). பட்சிகள் மிருகங்களின் தோற்றம், நடை, சப்தம் முதலியவைகளுக்குத் தக்கதாக அவன் அவைகளுக்குப் பெயரிட்டிருக்கலாம்.

**21.** "அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார்." ஏவாளை உண்டாக்கும்படி இந்தக் கன நித்திரையை வரப்பண்ணினதோடே தேவதரிசனமும் அப்போது உண்டாயிற்று. ஆதலால் அவன் விழித்தெழும்பினபோது, இவள் என் மாம்சத்தில் மாம்சமும் என்றான். தேவன் ஏவாளை ஆதாமைப்போல் உண்டாக்காமல் ஆதாமுடைய விலாவெலும்பினால் உண்டாக்கினார் (1 கொ. 11: 7–9.). அவர்கள் இருவருக்கும் பேரன்பு இருக்கத்தக்கதாக அப்படிச் செய்தார். அவர்கள் ஒரே சரீரத்திலுள்ள இருபாகங்களாயிருந்தார்கள். ஏவாளுக்கு ஜீவசுவாசம் ஊதப்பட்டதென்று சொல்லப்படாவிட்டாலும் இருவரும் தேவசாயலின்படியே சிருஷ்டிக்கப்பட்டார்கள். (1: 26, 27.)

**22.** "மனுஷியாக உருவாக்கி." எபிரெயுவில் "மனுஷியாகக் கட்டினார்" என்றிருக்கிறது. எபிரெயுவில் ஆதாமுக்கு "ஈஷ்" என்றும் ஏவாளுக்கு "ஈஷாள்" என்றும் பேர். ஆதாம் அயர்ந்த நித்திரையாயிருக்கையில் ஏவாள்





23 அப்பொழுது ஆதாம்: இவள் [1]என் எலும்பில் எலும்
பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்;
இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி
24 என்னப்படுவாள் என்றான். — [2]இதினிமித்தம் புரு
ஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன்
மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே
மாம்சமாயிருப்பார்கள்.

[1] ஆதி. 29. 14. எபே. 5. 30. 1கொ. 11. 8.
[2] சங். 45. 10. மத். 19. 4–6. 1கொ. 6. 16. எபே. 5. 23, 31.

உருவாக்கப்பட்டாள். கிறிஸ்துவின் மரணத்தில் அவருடைய திருவிலாவினின்று திருச்சபை உற்பத்தியானது. (எபே. 5: 25–27.)

**23.** "ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும்." தெய்வீக வெளிப்படுத்தலால் இப்படி உரைத்தான். மற்றப்படி இந்த அறிவு அவனுக்கு இருப்பதற்கு ஏதுவில்லை. ஏவாள் ஆதாமிலிருந்து உருவாக்கப்பட்டு அவன்பேரில் சார்புள்ளவளாயிருந்தாள். அவள் பெலவீன பாண்டமாயிருந்தபோதிலும், மனைவியாகவும் (1 பே. 3: 7.), தாயாகவும் (யாத். 20: 12.), அவளுக்குக் கனமுண்டு. ஸ்திரீயானவள் புருஷனிலிருந்து தோன்றுகிறதுபோல, புருஷனும் ஸ்திரீயிலிருந்து தோன்றுகிறான் என்று பவுல் சொல்லியிருக்கிறான். (1 கொரி. 11: 12.)

"இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி." எபிரெயுவில் "இவள் ஈஷிலிருந்து எடுக்கப்பட்டபடியினாலே ஈஷாள் என்னப்படுவாள்" என்று இருக்கிறது. அப்படியே ஏவாள் காயீன் ஆபேல் முதலிய பேர்களுக்கும் எபிரெயு பாஷையில்தான் அததற்கேற்ற சரியான அர்த்தமிருக்கிறது என்று சொல்லி, எபிரெயுவே ஆதிபாஷை என்று சிலர் சாதிக்கிறார்கள். சிலர் இந்த நியாயத்தில் பலமில்லை, ஏனென்றால் பேர்களை ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷையில் திருப்பும்போது அந்தப் பேர்களுக்கு மூலபாஷையில் இருந்த அர்த்தத்தையும் தாராளமாய் வைத்துக்கொள்ளலாமே என்று மறுக்கிறார்கள்.

**24.** "புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு." ஆதாமுக்குத் தகப்பனும் தாயுமில்லை. ஆதலால் இந்த வாக்கியத்தை அவன் சொல்லவில்லை. இதைத் தேவன் சொன்னார் என்று நம்முடைய ரக்ஷகர் அறிவித்திருக்கிறார் (மத். 19: 5.). விவாகத்தினால் புருஷனானவன் தன் தாய்தகப்பனைவிடத் தன் மனைவியினிடத்தில்நெருங்கியசம்பந்த ஐக்கியமுள்ளவனாய் இருக்கிறான். "இது பெரிய இரகசியம்" (எபே. 5: 31, 32.). தேவகுமாரன் திருச்சபைக்கு மணவாளனாய் இருந்து, தமது கிருபையை அதற்கு அருளி, தமது வல்லமையினால் அதைத் தாங்கி அரவணைத்துவருகிறார். திருச்சபை விசுவாசத்தினால் அவருடன் ஐக்கியமாயிருந்து, அவருடைய பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து, அவரைக் கனப்படுத்திவருகிறது.

"அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்." இது ஆதி விவாக ஏற்பாடு. புருஷனுக்கும் மனைவிக்கும் இருக்கிற ஐக்கியம் மரணத்தினால் ஒழிய மற்றெந்தக்காரியத்தினாலும் பிரிக்கப்படமாட்டாது. ஆகவே மனைவியைத் தள்ளுதலும், பல ஸ்திரீகளை வைத்துக்கொள்ளுதலும், இயற்கைப்பிரமாணத்துக்கும்

25 ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் [1]நிர்வாணிகளாயிருந்தும், [2]வெட்கப்படாதிருந்தார்கள்.

[1] ஆதி. 3.7,10,11.
[2] யாத். 32. 25. ஏசா. 47. 3.

சிருஷ்டிகர்த்தாவினுடைய நோக்கத்துக்கும் நேரே விரோதமாயிருக்கிறது. வேசித்தன முகாந்தரத்தினால் ஒழிய ஒருவனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாதென்று லோகரக்ஷகர் கற்பித்திருக்கிறார். (மத். 19: )

**25.** "வெட்கப்படாதிருந்தார்கள்." ஆதாமும் ஏவாளும் பரிசுத்தரும் கறையற்றவர்களுமாய் இருந்ததால் வெட்கம் இன்னதென்று உணராதிருந்தார்கள். பாவ இச்சைகள் இல்லாதிருக்கையில் வெட்கம், அவமானம் இருக்க வேண்டியதில்லையே. மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணம் அவர்கள் அவயவங்களில் இல்லாதிருந்தது. 1 [illegible] 13.

### படிப்பினை.

#### வச. 1—15.

(1) தேவன் ஆறுநாள் கிரியைசெய்து, ஏழாம்நாளில் ஓய்ந்திருந்து, மனுப்புத்திரருக்குப் பிரயோசனமாக ஓய்வுநாளை ஸ்தாபித்தார். பாவமில்லாத காலத்தில் பரதீசிலே ஓய்வுநாள் மனுஷனுக்கு அவசியமானால், பாவம் நிறைந்திருக்கிற இக்காலத்தில் அது நமக்கு அதிக அவசியமே. ஆதலால் நாமும் நம்முடைய பிள்ளைகளும் வீட்டாரும் வேலைக்காரரும் அதைப் பரிசுத்தமாய் ஆசரிக்கக் கடவோமாக. ஓய்வுநாளைப் பக்தியோடே கைக்கொள்வதற்குத் தக்கதாக மனப்பாக்கியம் பெருகும்.

(2) நம்முடைய தேகம் மண்ணினால் உருவாக்கப்பட்டிருப்பதால், அழகு, பலம் முதலியவைகளைக்குறித்துப் பெருமைபாராட்டுவது புத்தியீனமான செய்கை. வீண் பெருமை பாராட்டுவதைவிட மண்ணுக்குத் திரும்பிப்போக ஆயத்தப்படுவதே உத்தமம்.

(3) மனிதனுக்கு ஜீவனைத் தந்தவர் அவனுக்கு வேலையையும் நியமித்திருப்பதால், சோம்பலைத் தவிர்த்துக் கையினால் நல்ல வேலைசெய்து மரியாதையாய் ஜீவனம் செய்வோமாக.

#### வச. 16—25.

(4) மேன்மேலும் நாம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகையில் அதிகமதிகமான நன்றியறிதலை தேவனுக்குச் செலுத்துவது நியாயமே. தேவன் நம்முடைய நன்மைக்காக விதிகளையும் விலக்குகளையும் ஏற்படுத்தினால் நாம் அவைகளை நன்றியறிதலோடே அங்கீகரித்து அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே பாக்கியம். கிரியை உடன்படிக்கை நீதியும் நியாயமும் பரிசுத்தமுமுள்ளது; அது நன்மைச்சொரூபியும் உயர்ந்த ஞானமும் தெளிந்த நீதியுமுள்ள தேவனால் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆதாமுக்குள் நாம் அதை மீறித் துரோகிகளானோம். இப்போது மேலான வாக்குத்தத்தங்களால் விசேஷித்த மகத்தான உடன்படிக்கை நமக்காக கிறிஸ்துவுக்குள் செய்யப்பட்டிருக்கின்றது. பாவம், மரணம், அவமானம் இவைகளினின்று விடுவிக்கப்படும்படி நாம் அவரிடத்தில் அடைக்கலம் தேடுவோமாக.

(5) குணசாலியான நல்ல மனைவி முத்துகளைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றவள். தேவபக்தியுடைய மனைவியோவென்றால் கர்த்தரால் அருளப்படும் ஈவு. ஆதலால் தேவன் உனக்கு மனைவியைத் தெரிந்துகொள்ளும்படி அவரை வேண்டிக்கொள்; அப்போது உனக்குப் பாக்கியமும் நன்மையுமுண்டாகும்.

(6) உலகத்திலே நாம் எவ்வளவு உறவும் ஐக்கியமும் உள்ளவர்களாயிருந்தாலும் எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுநாதரோடே நெருங்கின அந்நியோந்நியமும் பாசமும் உடையவர்களாய் இருக்கக்கடவோம். அப்போது மரணமானது நம்மை இம்மையின் ஐக்கியத்தைவிட்டுப் பிரிக்கையில் நித்தியகாலமாய் நிற்கும் ஆனந்த ஐக்கியத்தில் அது நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்.





## 3. அதிகாரம்.

1. சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது. 6. ஆதாமும் ஏவாளுமாகிய ஆதி மனுஷர் பாவஞ்செய்தது. 9. அதைக்குறித்து தேவன் அவர்களை விசாரித்தது. 14. சர்ப்பம் சபிக்கப்பட்டது. 15. இரட்சகர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. 16. மனுஷர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 21. அவர்கள் நிர்வாணம் மூடப்பட்டது. 22. அவர்கள் பரதீசைவிட்டுத் துரத்தப்பட்டது.

1 தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப்பார்க்கிலும் [1]சர்ப்பமானது தந்திரமுள்ள

[1] வெளி. 12.9:20. 2. மத். 10. 16. 2 கொ. 11. 3.

## 3. அதிகாரம்.

ஆதாம் தேவசாயலின்படி சிருஷ்டிக்கப்பட்டு ஏதேனில் பரீட்சை நிலையில் வைக்கப்பட்டான். அங்கே அவன் தேவனுடைய உடம்படிக்கையைக் கைக்கொண்டிருந்தால் மேலான பாக்கியத்துக்கும் சாவாமைக்கும் பங்குள்ளவனாயிருந்திருப்பான். ஆனால் பிசாசின் சோதனையினால் அந்த உடம்படிக்கையை மீறவே, அவன் பரதீசைவிட்டு வெளியே துரத்தப்பட்டு, நிர்ப்பாக்கியத்துக்கும், உபத்திரவத்துக்கும், மரணத்துக்கும் பங்குள்ளவனானான். ஆதாம் தண்டிக்கப்பட்டதில் தேவநீதியும் பரிசுத்தமும் வெளிப்பட்டதுமன்றி அவருடைய அளவற்ற கிருபையும் இரக்கமும் துலங்கிப் பிரகாசித்தது.

தேவன் மனிதனுடைய நிர்ப்பந்தநிலைமையைக் கண்டு பரிதபித்து, அவனுக்கு ஆறுதலாக அருமையான ஒரு வாக்குத்தத்தஞ் செய்தருளினார். ஸ்திரீயானவளைப் பிசாசு வஞ்சித்துக் கெடுத்துப்போட்டதால், ஸ்திரீயின் வித்திலே புருஷ சம்பந்தம் (பரிசம்) இல்லாமல், ஒருவர் எழும்பிப் பிசாசை ஜெயித்து அவன் தலையை உடைப்பார் என்பதே அந்த வாக்குத்தத்தத்தின் தாற்பரியம்.

**1.** "சர்ப்பமானது." சிலர் சர்ப்பமானது உள்ளபடி ஏவாளுக்குத் தென்படவில்லை. சர்ப்பம் என்றழைக்கப்படுகிற பிசாசானவன் சர்ப்பரூபமாகக் காணப்பட்டது என்கிறார்கள். அப்படியானால் "சகல காட்டுமிருகங்களைப் பார்க்கிலும் அது தந்திரமுள்ளதாயிருந்தது" என்று பிசாசைக்குறித்துச் சொல்லவேண்டியதில்லையே. சாத்தான் தன் சோதனையை, ஏவாள் இலகுவாய் அறிந்துகொள்ளாதபடிக்குத் தந்திரத்தில் பேர்போன சர்ப்பத்தைத் தனக்குக் கருவியாகக் கையாடினான் என்று நினைக்கத்தக்கது; ஏவாள் மற்ற எல்லாச் சிருஷ்டிகளோடும் பழகி வாடிக்கைப்படாத புது மனுஷியாயிருந்தால் ஓர் அஃறிணைப்பிராணி பேசுவதைக் கேட்டு ஆச்சரியப்பட்டிருக்கமாட்டாள்.

"தந்திரமுள்ளதாயிருந்தது." ஸ்திரீயானவள் பேதமை சுபாவமுள்ளவளானதால் தந்திரமும் கூர்மையுமுள்ள சர்ப்பத்தைச் சாத்தான் தனக்குக் கருவியாகத் தெரிந்துகொண்டான். அவளோடே பேசின சத்தம் சர்ப்பத்தினின்று புறப்பட்டதுபோலக் காணப்பட்டது. உள்ளபடி சொன்னாலோ அந்தச் சத்தம் சர்ப்பத்தைப் பிடித்திருந்த பிசாசினுடையதேயல்லாது வேறல்ல. பிசாசாகிய சாத்தான் பழைய பாம்பு என்றும் (வெளி. 12: 9; 20: 2. 2 கொ. 11: 3.), "ஆதிமுதல் மனித கொலைபாதகன்" என்றும் (யோ. 8: 44.), பொய்யன் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறான்.

தாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்
டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்
கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ
2 என்றது.—ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து: நாங்கள்
தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்
3 கலாம்;—ஆனாலும், [1]தோட்டத்தின் நடுவில் இருக்கிற
விருட்சத்தின் கனியைக்குறித்து, தேவன்: நீங்கள்
சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும்
4 வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.—அப்பொ
ழுது [2]சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே
5 சாவதில்லை;—நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே [3]உங்
கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை

[1] ஆதி. 2. 17.
[2] யோ. 8. 44. 2 கொ. 11. 3.
[3] அப். 26. 18.

"அது ஸ்திரீயை நோக்கி." சாத்தான் ஏவாள் பெலவீனமுள்ளவள் என்பதை நன்றாய்க் கவனித்திருப்பான்.

"தேவன் சொன்னது உண்டோ." இதிலே சாத்தான் தேவனுடைய தயவைக்குறித்துச் சந்தேகிக்கும்படியாகச் செய்து, தேவன் கொடுத்த கட்டளை நீதியுள்ளதல்ல என்று ஏவாள் எண்ணும்படி ஏவினான்.

ஏவாள் இந்தச் சோதனைக்குத் தப்பிக்கொள்ள இரண்டுவழி இருந்தது. 1. விலக்கப்பட்ட கனியைக்குறித்துப் பேச்சுவந்த அந்நிமிஷத்திலேதன் புருஷனிடத்தில் ஓடிப்போய்விடவேண்டும். அப்படிச் செய்யாமல் சம்பாஷணை செய்யப் பிசாசுக்கு இடம்கொடுத்தாள். 2. தேவன் இந்தக் கனியைப் புசிக்கவேண்டாம் என்று விலக்கினது நிச்சயம், ஆதலால் நாங்கள் புசிக்கவேமாட்டோம் என்று அவனோடே எதிர்த்து நிற்கவேண்டியதாயிருந்தது. அப்படியும் செய்யாமல் அவனுக்கு இணங்கினாள்.

**2.** "ஸ்திரீ சர்ப்பத்தைப் பார்த்து." ஏவாள் சொன்ன உத்தரவைக் கவனிக்கையில், அவள் பாவஞ் செய்ததற்குப் போக்குச்சொல்ல இடமில்லை என்றும், தேவகட்டளையை அவள் நன்றாய் அறிந்திருந்தாள் என்றும் காண்கிறோம். சாத்தான், தோட்டத்தின் சகல விருக்ஷங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னதுண்டோ என்று கேட்டதற்கு, ஏவாள் "சகல" என்ற வார்த்தையை விட்டதிலும், அவள் சொன்ன மாறுத்தரவிலும், இதை அறியலாம்.

**4.** "நீங்கள் சாகவே சாவதில்லை." இங்கே சாத்தான் தேவனுடைய நீதியைக்குறித்து சந்தேகிக்கும்படி செய்தான். ஒரு மரத்தின் கனியைப் புசிக்கிறதினால் தேவன் தண்டிக்கவேமாட்டார். அவர் பரிபூரண இரக்கமுள்ளவராயிருக்கிறார் என்று சிந்திக்கும்படி ஏவினானென்றும் இருக்கலாம்.

**5.** "உங்கள் கண்கள் திறக்கப்படும்." இங்கே பாவத்தினாலுண்டாகும் பிரயோசனங்களை எடுத்துக் காட்டுகிறான். அவையாவன: கண்கள் திறக்கப்படுதல், நன்மை தீமைகளை அறிதல், தேவர்களைப்போலாகுதல் என்பவைகளே, "நன்மை தீமையை அறியலாம்" என்பது எபிரெயு வாசகப்போக்கின்படி சவிஸ்தாரமான அறிவைக் குறிக்கும். (2 சாமு. 14: 17, 20.)





தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்
றும் தேவன் அறிவார் என்றது.
6. அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம்
புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தி
யைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்
சமுமாயிருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப்

"தேவர்களைப்போல் இருப்பீர்கள்." தேவர்கள் என்பது தேவ தூதர்களுக்கும் அதிகாரிகளுக்கும் பெயராக வேதாகமத்தில் வழங்கப்படுவதுண்டு (சங். 82: 6; 138: 1; 82: 1.). இங்கே சாத்தான் ஏவாளைப் பெருமைக்குள் அகப்படுத்தத் தந்திரம்பண்ணினான். மனக்கண்கள் திறக்கப்பட்டு அறிவு விர்த்தியடைந்து நன்மைக்கும் தீமைக்கும் வித்தியாசம் இன்னதென்று அறிந்து சுய அதிகாரமுள்ளவர்களாகித் தேவனுக்கொப்பாயிருப்பீர்கள் என்று உணர்த்தும் பார்த்தான். பெருமையினாலே தேவதூதர்கள் பிசாசுக்களானார்கள். பெருமையினாலே பாவமில்லா மனுஷன் பாவியானான். பெருமையினாலே மனுஷன் மாடுபோலப் புல்மேய நேரிட்டது (தானி. 4: 33.). நாம் மண் என்பதை மறவாதிருப்போமாக.

"தேவன் அறிவார்" என்பதில் சிருஷ்டிகள் நன்றாயிருப்பதைப் பார்த்துத் தேவன் பிரியமில்லாதவராயிருக்கிறாரென்று ஏவாள் எண்ணும்படி சாத்தான் இப்படி வஞ்சகமாய்ப் பேசினான். இதுவே பொய்மதங்களும் அவிசுவாச கொள்கைகளும் எடுத்துக்காட்டும் போதனையாயிருக்கிறது. அப்பால் சாத்தான், ஏவாள் இதுவரையும் தேவனைச் சார்ந்திருந்ததுபோல இனிமேல் சார்ந்திராமல் சுயபெலனை நம்பித் தானாய் நிற்கும்படி ஆசிக்க ஆலோசனை சொன்னான். மனுஷன் தேவனைச் சார்ந்துநிற்பதை விட்டுவிட்டு, அதிகாரம் ஞானம் பாக்கியம் இவைகளைத் தன்னில்தானே தேடுவது, சகல பாவங்களுக்கும் மூலமாயிருக்கிறது.

உலகத்திலே முதலாவதாகக் குற்றச்சாட்டுச் செய்த பிசாசு பொய்யான குற்றஞ் சாட்டினான். அவன் உன்னதமானவர்பேரில் பொய் குரூரம் பொறாமைமுதலிய குற்றங்களைச் சாட்டினான்.

விசுவாசம் நம்மிடத்தில் பெலனாயிருக்கையில் பிசாசு நம்மைத் தாக்காமல் பயங்காளியாய் ஓடிப்போவான். அவன் விசுவாசத்தைப் பலவீனப்படுத்தும்படி வகைதேடி அப்புறம் மனுஷனை மயக்கிக் கெடுக்கப் பார்க்கிறான்.

சாத்தான் ஏவாளிடத்தில் சம்பாஷணை செய்தபோது துவக்கமுதல் அவள் புருஷனாகிய ஆதாமையும் சேர்த்து இருவருக்கும் பொதுவாக நன்மையை வருவிக்கிறவன்போல் பேசினான். ஆதாமைப் பிரித்து அவன் பேசவில்லை. அப்படிப் பேசியிருந்தால் ஏவாள் உடனே சமுசயப்பட்டு ஆதாமிடத்தில் போய்க் காரியங்களை அறிவித்துச் சோதனைக்காரனை ஜெயித்திருக்கலாம்.

**6.** "ஸ்திரீயானவள்...............கண்டு." கண்காணாததை மனம் இச்சியாது என்பது மெய்யாயிற்று; ஏவாளுடைய கண் அவள் பாவத்துக்கு ஏதுவாயிருந்தது. அவள் போய் விருக்ஷத்தைப் பார்த்தாள். இதுதான் அவள் கீழ்ப்படியாமைக்கு முதற்படி. அப்பால் கண்களின் இச்சை அவளைப் பிடித்

பறித்து, [1]புசித்து, தன் புருஷனுக்குங் கொடுத்தாள்;
7 அவனும் புசித்தான்.—அப்பொழுது அவர்கள் இருவ
ருடைய கண்களும் திறக்கப்பட்டது; [2]அவர்கள் தாங்
கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத்
தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்
ணினார்கள்.

[1] 1 தீமோ. 2. 14.
[2] ஆதி. 2. 25.

று (1 யோ. 2: 16.). கனியின் அழகைக் கண்டு மயங்கினாள், பின்பு இச்சை உண்டாயிற்று. தான் கண்டதை இச்சித்தாள்; இது மாம்சத்தின் இச்சை எனப்படும் (ரோ. 7: 7, 8. யாக். 1: 13-15.). புத்தியைத் தெளிவிக்கிற விருக்ஷமாயிருக்கிறது என்று ஏவாள் எண்ணினபோது ஜீவனத்தின் பெருமை அவளை ஆண்டுகொண்டது (1 யோ. 2: 16.). இவ்வண்ணமாய் மூவகைப் பாவங்களுக்கும் அவள் படிப்படியாய் இடங்கொடுத்து விலக்கப்பட்ட கனியைப் பறித்துச் சாப்பிட்டாள். இந்த மூவகைப் பரீட்சைகளையும் நம்முடைய இரட்சகர் வனாந்தரத்தில் ஜெயித்து வெற்றிசிறந்தார். அவர் உபவாசித்து நாற்பது நாட்களாய் ஒன்றும் புசியாதிருந்தபோது மாம்சத்தின் இச்சையையும் உலக இராச்சியங்களின் மகிமையை அவர் வெறுத்துத் தள்ளினபோது கண்களின் இச்சையையும், சனக்கூட்டத்துக்குமுன்பாகத் தம்முடைய வல்லமையைக் காண்பிக்கத் தேவாலய உப்பரிகையிலிருந்து தாழக் குதியாமல் பிசாசின் சோதனையை நிராகரித்தபோது ஜீவனத்தின் பெருமையையும் மேற்கொண்டார். மாம்ச தேகமுடைய மனுஷர் யாவருக்கும் இம்மூவகைச் சோதனைகளும் சாதாரணமாய் வருவதை நாம் காணலாம்.

"தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்." ஆதாம் ஸ்திரீயைப்போல வஞ்சிக்கப்படவில்லை. மனைவியின் பாசத்தினால் இழுப்புண்டு விலக்கப்பட்ட கனியை அவளிடத்தில் வாங்கிப் புசித்தான் (1 தீமோ. 2: 14.). ஏவாள் தான் பாவஞ் செய்ததுடன் தன் புருஷனையும் அதற்கு இழுத்துக் கொண்டாள்.

**7.** "இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது." சர்ப்பத்தின் வாக்குப்படி அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன. ஆதாமும் ஏவாளும் தேவனைவிட்டு நீங்கின அச்சணத்திலே தாங்கள் மாம்சத்துக்கு அடிமைகளானதையும், தாங்கள் நாடின சுயாதீனசித்தம், சுயாதிபத்தியம், நன்மைதீமையை அறியும் ஞானம் இவைகள் எல்லாம் கூடி பாவத்தின் வல்லமைக்குத் தங்களைக் கீழாக்கிப்போட்டதையும் அறிந்தார்கள். தேவனையே அறிந்து அவரை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதால் உலகத்தில் சுயாதீன கர்த்தாக்களாயிருப்பதைக் கீழ்ப்படியாமையினால் இழந்துவிட்டார்கள். நன்மையைமாத்திரம் நாடின அவர்களுடைய உள்ளம், பாவத்தையே நாடும்படி சீர்கெட்டுப்போயிற்று. வெட்கத்துக்கும் அவமானத்துக்கும் வியாகுலத்துக்கும் இரையானார்கள்.

"நிர்வாணிகள் என்று அறிந்து." பாவமானது வெட்கத்தோடே பயத்தையும் இயற்கையாய் உண்டுபண்ணிற்று. தேவதூதர்கள்போலிருந்தவர்கள் இப்போது அத்தி இலைகளைத் தைத்துத் தங்கள் அரைகளை மூடும்படியாயிற்று.





8 பகலின் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில்
உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய [1]சத்தத்தை அவர்
கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன்
மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு வில
கி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்

[1] யோபு 31. 33. எரே. 23. 24. ஆமோ. 9. 3.

**8.** "பகலின் குளிர்ச்சியான வேளையிலே." சுகமான இளங்காற்று வீசும் சாயங்காலவேளையிலே பாவஞ் செய்யுமுன்னே பிரதிச மனிதனுக்கு மனப்பாக்கியத்தையும் தெய்வீக ஆதரவையும் கொடுத்தது. ஆனால் இப்போது தேவசமுகப்பார்வை அவர்களுக்கு வேற்றுமையாகக் காணப்பட வெட்கமும் பயமும் அவர்களை மேற்கொண்டன.

"கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள்." பாவஞ் செய்யுமுன் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டவுடனே அவருடன் இனிய சம்பாஷணைசெய்ய ஆதாம் ஏவாள் என்பவர்கள் ஓடிவருவார்கள். இப்போது அவரைவிட்டு ஓடி ஒளித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். எவ்வளவு சீக்கிரத்திற்குள்ளாகத் தேவனைப்பற்றிய அறிவும் அன்பும் அவர்களுக்குள் சீர்கெட்டுப்போயிற்று. ஆதாம், வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவருடைய கண்களுக்கு மறைந்துகொள்ளலாம் என்று புத்தியீனமாய் எண்ணும்படியாகவும் ஆயிற்று.

சிருஷ்டிப்பு, பாவத்தில் விழுதல் ஆகிய இந்தச் சரித்திரங்களிலே தேவன் மனுஷனைப்போலக் காரியங்களை நடப்பித்ததாகச் சொல்லியிருப்பதைப் பார்க்கலாம். திருஷ்டாந்தமாகச் சிருஷ்டிகர் மனுஷனை உண்டாக்குவோமாக என்று ஆலோசனைபண்ணினார். (1: 26.)

தாம் சிருஷ்டித்தவைகளின் பயனை அவதானிக்கிறவராய் எல்லாம் மிகவும் நன்றாயிருந்ததென்று கூறினார். (1: 31 )

தமது கிரியைகளை முடித்தவராய் ஓய்ந்திருந்தார். (2: 2.)

ஆதாமுக்கு ஒரு தோட்டத்தை உண்டாக்கினார். (2: 8.)

ஆதாம் மிருகங்கள் பறவைகளுக்குப் பேரிடும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார். (2: 19.)

ஆதாமின் விலாவெலும்பினால் ஏவாளை உருவாக்கி அவளை அவனுக்கு மணவாட்டியாகக் கொண்டுவந்தார். (2. 22.)

மேலும் ஆதா[illegible]ன் கு[illegible]ர்ச்சியான வேளையிலே உலாவுகிற தேவனுடைய சத்தத்தைக் [illegible]டான்.

இவைகள் எல்[illegible]காலத்தின் இளங்கைத ஸ்திதிக்கு இசைவாயிருந்ததென்று நினைக்கவேண்டும்.

ஆதாமுக்கும் பூர்வ பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் தரிசனமான தேவன் நித்திய குமாரன் என்று யோவான் 1: 18 வசனத்தை வைத்துக்கொண்டு கிறிஸ்தமதீன் பிதாக்கள் எல்லாரும் ஏகவாசகமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

"கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி.................ஒளித்துக்கொண்டார்கள்." குற்றமுள்ள மனச்சாட்சி பயமில்லாத இடத்திலே பயத்தை உண்டுபண்ணும் (லேவி. 26: 17, 36. சங். 53: 5. நீதி. 28: 1.). சாத்தான் நீங்கள் சாகமாட்டீர்கள் என்றான். இப்போது ஆதித்தாய் தந்தைகள் தங்கள் ஜீவனைக்

9 கொண்டார்கள்.—அப்பொழுது தேவனாகிய கர்த்தர்
ஆதாமைக் கூப்பிட்டு: நீ எங்கே இருக்கிறாய் என்
10 றார்.—அதற்கு அவன்: நான் தேவரீருடைய சத்தத்
தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிர்வாணியாயி
ருப்பதினால் [1]பயந்து, ஒளித்துக்கொண்டேன் என்
11 றான்.—அப்பொழுது அவர்: நீ நிர்வாணி என்று உன
க்கு அறிவித்தவன் யார்? புசிக்கவேண்டாம் என்று
நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப்
12 புசித்தாயோ என்றார்.—அதற்கு ஆதாம்: [2]என்னுடனே
இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்வி
ருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான்

[1] ஆதி. 2.25. யாத். 3. 6. யோ. 3.20.
[2] ஆதி. 2. 18. நீதி. 28. 13.

சாக்கும்படி ஓடி ஒளித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். தேவர்களைப்போலிருப்பீர்கள் என்றான்; ஆனால் இப்போது இழிகுலத்தாரானார்கள். அறிவாளிகளாயிருப்பீர்கள் என்றான். தேவனுக்குமுன்பாக ஒளித்துக்கொள்வது கூடாத காரியம் என்பதை அறியாத அறிவீனரானார்கள். (எரே. 23: 24. ஆமோ. 9: 3. எபி. 4: 13.)

**9.** "நீ எங்கே இருக்கிறாய்." இது அறியாமையினாலே கேட்ட கேள்வியல்ல. ஆதாமுக்கு அவன் பாவத்தை உணர்த்தும்படி கேட்கப்பட்ட கேள்வியாயிருக்கிறது (4: 9.). மேலும் அவனுக்கு உருக்க இரக்கங்களைக் காட்டும் பாவனையாகக் கேட்கப்பட்ட கேள்வியாயுமிருக்கிறது.

**10.** "நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக்கொண்டேன்." ஆதாம் தனக்குண்டாயிருந்த பயத்தையும் வெட்கத்தையும் அறிக்கையிட்டானேயன்றி தன் பாவத்தை உணர்ந்து அறிக்கையிடவில்லை (யோபு. 31: 33.). நாம் கிறிஸ்துவின் நீதியால் உடுத்தப்பட்டாலொழிய தேவசமுகத்துக்குமுன்பாகத் திகிலடைந்து பயந்திருப்போமேயல்லாமல் அவரை நல்ல நம்பிக்கையோடு கிட்டிச் சேரக்கூடாதவர்களாயிருக்கிறோம்.

**11.** "நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்?" ஆதாம் தன்னுடைய தற்கால நிலைமையைக்குறித்துத் தேவனிடத்தில் அறிவித்தானேயல்லாமல் அந்த நிலைமையில் தன்னை உட்படுத்தின ஏகாந்தரத்தைத் தெரியப்படுத்தவில்லை. ஆதாம் தன் பாவத்தை அறிக்கையிடச்செய்யும் நோக்கமாய்க் கர்த்தர் நீ நிர்வாணியென்று உனக்கு அறிவித்தவன் யார். உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

**12.** "தேவரீர் தந்த ஸ்திரீயானவள்." ஆதாம் தன் பாவத்தை நேராய் அறிக்கையிடுவதற்குப் பதிலாகப் போக்குச்சொல்லத் தொடங்கி, குற்றத்தை முதலாவது தன் மனைவியின்பேரிலும் பின்பு தேவன்பேரிலும் சாட்டினான் (1 கொ. 10: 13. யாக். 1: 13, 14.). இப்படியாமையோடே ஆதாம் இரண்டு பாவத்தையுங் கூட்டினான். முதலாவது தன் பாவத்தைத் தேவனுக்குமுன்பாக மறைத்தான் (சங். 32: 5.). இரண்டாவது அவன் பாவத்தில் கண்டுபிடிக்





13 புசித்தேன் என்றான்.—அப்பொழுது தேவனாகிய கர்த்
தர் ஸ்திரீயை நோக்கி: நீ இப்படிச் செய்தது என்ன
என்றார். ஸ்திரீயானவள்: [1]சர்ப்பம் என்னை வஞ்சித்
தது, நான் புசித்தேன் என்றாள்.
14 அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப்
பார்த்து: [2]நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டுமிரு

[1] 2 கொ. 11. 3.
[2] ஏசா. 65.25 மீகா. 7. 17.

கப்பட்டபோது அதை மற்றவர்கள்பேரில் சாட்டினான். இதைக் கவனிக்கையில் ஆதாமுக்குக் குற்றத்தை உணர்த்தும் மனச்சாட்சி இருந்ததென்று அறியலாம். ஆகவே ஆதிமுதல் மனிதருள்ளத்தில் தேவனுடைய பிரமாணம் வரையப்பட்டிருந்ததென்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. இந்நாட்களிலும் மனிதர் தங்கள் குற்றத்தை நேராய் ஒப்புக்கொள்ளாமல், தற்செயலாய் அது நேரிட்டதென்றும் என் பெலவீனத்தினாலே அப்படியாயிற்றென்றும் போக்குச் சொல்வது வழக்கமாயிருக்கிறது. அப்படியே ஏவாள் சர்ப்பத்தின்பேரிலும், ஆரோன் பொன் கன்றுக்குட்டிவிஷயத்தில் சனங்கள்பேரிலும் (யாத். 32: 21–24.), சவுல் அமலேக்கியருடைய கொள்ளைவிஷயத்தில் யுத்தசன்னதர் பேரிலும் (1 சாமு. 15: 14, 15, 20, 21.), குற்றஞ் சாட்டினதை அறிவோம்.

**13.** "சர்ப்பம் என்னை வஞ்சித்தது." ஏவாள் முதலாவது தன்னை வஞ்சியாதிருந்தால் சர்ப்பம் அவளை வஞ்சிக்க அதற்குத் திராணியிருக்கமாட்டாது (யாக். 1: 14, 22, 26.). சாத்தான் மனிதரை வஞ்சிக்கையில் அவர்களுடைய பெலவீனத்தைக்கொண்டு கேடுண்டாக்கப் பார்க்கிறான். விசுவாசம் பெலனாயிருக்கையில் அவன் சமீபமாய் வரத்துணியான். ஏவாளுடைய விழுதல் நமக்கு எச்சரிப்பாயிருப்பதாக. சாத்தான் இப்போது சர்ப்பத்தைக்கொண்டு வஞ்சியாதேபோனாலும், சர்ப்பத்தைப்போன்ற நாவுள்ள மனிதரைக் கருவியாகக் கொண்டு நம்மைக் கெடுக்கும்படியாக வகைபார்ப்பதுண்டு. (ரோ. 3: 13.)

**14.** "தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து." தேவன் ஆதாமிடத்திலும் ஏவாளிடத்திலும் பாவத்தைக்குறித்து விசாரணை செய்தார்; சாத்தானிடத்தில் அப்படிச் செய்யவில்லை. அவன் ஆக்கினைத்தீர்ப்புப்பெற்ற குற்றவாளியாயிருந்தான் (2 பேது. 2: 4. யூதா. 6.வச.). மனிதரிடத்தில் தமது இரக்கத்தை விளக்கவும் வல்லசர்ப்பத்தினிடத்தில் தமது நீதியைச் செலுத்தவும் சித்தங்கொண்டார். சாத்தான் பாவத்துக்குக் காரணனாயிருந்ததால், தேவன் முதலாவதாக அவனைச் சபித்தார். அவன் கருவியாகக்கொண்ட சர்ப்பமும் சபிக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தின்படி, மனுஷனை முட்டிக்கொன்ற மாடு ஒரு குற்றவாளியைப்போலக் கொல்லப்பட்டபடியே சர்ப்பமும் சாபத்துக்குள்ளானது (யாத். 21: 28.). சர்ப்பமானது, 1. வயிற்றினால் நகரவும், 2. மண்ணைத் தின்னவும், 3. ஸ்திரீயின் வித்துக்கும் அதின் வித்துக்கும் ஓயாத பகை இருக்கவுமாகச் சபிக்கப்பட்டது.

சர்ப்பத்தின் வித்தார், தங்கள் தேகஇச்சைகளை நிறைவேற்றி, இப்பூமிக்குரியவைகளையே நாடித் தேடுகிறவர்களாயிருக்கிறார்கள்.

ங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்
டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடி
15 ருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்; — [1]உனக்
கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் [2]வித்துக்கும்
பகை உண்டாக்குவேன்; [3]அவர் உன் தலையை நசுக்கு
வார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

[1]மத். 3. 7: 13. 38: 23. 33. யோ. 8. 44. அப். 13. 10. 1 யோ. 3. 8. [2]ஏசா. 7. 14. மத். 1. 23, 25. லூக். 1. 34, 35. கலா. 4. 5. [3]ரோ. 16. 20. எபி. 2. 14. வெளி. 12. 7, 17.

**15.** "உனக்கும் ஸ்திரீக்கும்." இந்த வாக்கியம் விஸ்தாரமான கருத்துள்ளது. இதிலடங்கிய தீர்க்கதரிசனம் உலக முடிவுபரியந்தம் நிறைவேறிக்கொண்டேவரும். தேவன் இங்கே கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்தில் ஆதாமுக்கு விசேஷித்த தயவைப் பாராட்டினார். ஆதாம் தனக்கு நேரிட்ட சோதனையினாலே தன் மனைவியின் ஐக்கியத்தைவிட்டுப் பிரிந்துபோகாதபடிக்கு, மீட்பின் வாக்குத்தத்தத்தை ஸ்திரீயின் வித்தின்மூலமாய் அருளினார். விழுதலுக்கு ஏதுவாயிருந்த விவாகமானது, இப்போது இரட்சிப்புக்கு ஏதுவாயிற்று. இங்கே சொல்லப்பட்டிருக்கிற பகையானது, நன்மைக்கும் தீமைக்கும், ஒளிக்கும் இருளுக்கும், பரிசுத்தத்துக்கும் பாவத்துக்கும் உள்ள போராட்டத்தைக் குறிக்கும்.

"உன் வித்துக்கும்."—என்பது 1. மருளவிழுந்த ஆவிகளையும் (வெளி. 12: 7, 9.), 2. பொல்லாதவர்களையும் குறிக்கும். (மத். 3: 7; 12: 34; 23: 33. யோவா. 8: 44. அப். 13: 10.)

"அவள் வித்துக்கும்." இது முதலாவது பிசாசின் கிரியைகளை அழிக்க வந்த இயேசுவைக் குறிக்கும் (1 யோ. 3: 8.). இந்த வாக்கியத்தில் காட்டப்பட்டிருக்கிற செய்கை ஒரு ஆளுக்குரிய செயலை விளக்குகிறது. எப்படியெனில் முதற்பக்கில் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன் என்று சொன்னபின்பு அவர் உன் தலையை நசுக்குவார் என்று ஒருமையாகச் சொல்லியிருக்கிறது. உன் தலை என்றதற்கு ஸ்திரீயின் வித்தானது நசுக்கப்போகிற ஒரு விசேஷித்த சர்ப்பத்தின் தலை என்றர்த்தம். மேலும் வாக்கியத்தின் சாடை ஒரு ஆள் இன்னொரு ஆளோடே நேருக்குநேர் மல்லயுத்தம் பண்ணி ஜெயமடைகிற காட்சியைக் காட்டுகிறது. இந்த ஜெய வாக்குத்தத்தம் ஸ்திரீயின் வித்துக்கு அருளப்பட்டது; அந்த வித்து கிறிஸ்துவே. அவர் கன்னிகையாகிய ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். மனிததன்மையில் தகப்பனில்லாத பிள்ளையாய் உலகத்தில் உதித்தார். அவர் வனாந்தர சோதனையில் சாத்தானை மேற்கொண்டார். அநேகரைப் பிடித்திருந்த பிசாசுக்களைத் துரத்தினார். கடைசியாக அவர் சிலுவையில் மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழித்து அவன் தலையை நசுக்கினார்.

"அவர்....நசுக்குவார்." லத்தீன் பாஷை திருப்புதலில் "அவர்" என்பதற்குப் பதிலாக "அவள்" என்று போட்டிருக்கிறதை வைத்துக்கொண்டு ரோமான் மார்க்கத்தார் இந்த வாக்கியத்தில் காட்டப்பட்டிருக்கிற ஜெயத்தைக் கன்னிமரியாள் அடைவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் இதைப்பற்றி எபிரெயு பாஷையில் கிஞ்சித்தேனும் சமுசயமில்லை. எப்படியென்றால் எபிரெய பிரதிப் பெயர்ச்சொல்லும் எபிரெய வினைச்சொல்லும் ஆண்பாலாகவே இருக்கின்





16 அவர் ஸ்திரீயை நோக்கி: நீ கர்ப்பவதியாயிருக்கும்
போது உன் [1]வேதனையை மிகவும் பெருகப்பண்ணு

[1]ஏசா. 13. 8: 21. 3.

றன. மேலும் கிரேக்கு திருப்புதலில் அந்தப் பாஷை நடையின்படி வித்து என்பது ஒன்றன்பாலாயிருக்கிறது. ஆனால் அதைச்சேர்ந்த கிரேக்கப் பிரதிப் பெயர்ச்சொல் அவர் என்று ஆண்பாலாயிருக்கிறது. இந்த ஆண்பால் ஸ்திரீயின் குமாரன் ஒருவனைக் குறிக்கிறதாயிருக்கிறது. சீரியாப் பாஷைத் திருப்புதலிலும் பிரதிப் பெயர்ச்சொல் ஆண்பாலாயிருக்கிறது.

"அவர் குதிங்காலை நசுக்குவாய்." என்பது கிறிஸ்துவானவருடைய மரணத்தைக் குறிக்கும். அவர் உயிரோடே எழுந்தபோது அந்தக் காயம் முழுவதும் நீங்க அவர் சாவாமையைத் தரித்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரானார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற 4000 வருஷங்களாவது சென்றபோதிலும் அதின் நன்மை அந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட காலமுதல் தொடங்கினது. தேவன் காயீனைத் தள்ளிச் சேத்தைத் தெரிந்துகொள்ளும் முன்னும் சேமின் குடும்பத்தில் ஆபிரகாமைத் தெரிந்துகொள்ளும் முன்னும் மீட்பைப் பற்றிய குறிப்பான இந்த வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டது. எல்லா மனிதரும் ஆதாமின் சந்ததியாராக ஸ்திரீயின் வித்தானவரால் உண்டாகும் நன்மையை எதிர்நோக்கும்படியான முகாந்தரமாய் அப்படிச் செய்யப்பட்டது.

இரண்டாவது: ஸ்திரீயின் வித்து என்பது திருச்சபையைக் குறிக்கும் (வெளி. 12: 17.). கிறிஸ்துவானவரால் துவக்கப்பட்ட போராட்டம் அவருடைய சபையிலே இந்நாள்பரியந்தம் நடந்தேறிக்கொண்டேவருகிறது. கிறிஸ்தவர்களுக்குண்டான துன்பங்கள், மரணங்கள் சாத்தான் அவர்களுடைய குதிங்காலை நசுக்குவதைக் குறிக்கும் என்றாலும், சபையோ தேவனுடைய ஏற்பாட்டினாலே ஆவிக்குரிய சத்துருக்களை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொண்டு கடைசியாக ஜெயகெம்பீரமுள்ளதாய் விளங்கும். (வெளி. 12: 9-11.)

மூன்றாவது: ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனையும் குறிக்கும். அவன் சாத்தானுடைய வஞ்சனையான வகைப்பாட்டுக்கு எச்சரிக்கையாயும் விழிப்புள்ளவனாயுமிருக்கவேண்டும். ஆகாத எண்ணங்கள் செய்கைகளால் அவனைக் கெடுத்துப்போடப் பிசாசானவன் பார்ப்பான். அவனோ ஜெபத்தில் தரித்திருந்து பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை அவிக்கும்படி விழிப்புள்ளவனாயிருக்கவேண்டும்.

**16.** "அவர் ஸ்திரீயை நோக்கி." சர்ப்பத்துக்குச் சாபம் போடப்பட்டது (வச. 14.). ஆதாமும் ஏவாளும் சபிக்கப்பட்டதாக நாம் வாசியாதிருந்தாலும் அவர்கள்மேல் கூறப்பட்ட தண்டனை ஓர்வகையாய்ச் சாபமாயிருக்கிறதென்று சொல்லலாம். அவர்கள் மாம்சதேகிகளாய் மாமிசத்தில் பாவஞ்செய்தபோதிலும் தேவன் அவர்களைத் தயாபாத்திரங்களாகத் தெரிந்துகொள்ளச் சித்தங்கொண்டதினாலே அவர்கள் மனந்திரும்பித் தேவதயவைத் திரும்பவும் பெற்றுக்கொள்ள ஏதுவானவர்களானார்கள்.

"உன் வேதனையை மிகவும் பெருகப்பண்ணுவேன்." பாவம் துக்கத்தைப் பிறப்பித்தது. ஆனால் துக்கத்தின் நடுவிலும் ஆறுதல்களும் ஸ்திரீக்குக் கிருபையாய்க் கிடைத்திருக்கின்றன. ஸ்திரீயானவள் பேறுகாலத்தில் மிகுந்த

வேன்; [1]வேதனையோடே பிள்ளை பெறுவாய்; உன்
ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், [2]அவன்
உன்னை ஆண்டுகொள்ளுவான் என்றார்.
17 பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின்
வார்த்தைக்குச் செவிகொடுத்து, புசிக்கவேண்டாம்
என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனி
யைப் புசித்தபடியினாலே, [3]பூமி உன் நிமித்தம் சபிக்
கப்பட்டிருக்கும்; [4]நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம்

[1] சங். 48. 6. யோ. 16. 21. 1 தீமோ. 2. 15.
[2] 1கொ. 11.3:14. 34. எபே. 5.22–24.
[3] பிர. 1.2,3. ரோ. 8. 20.
[4] யோபு. 5. 7.

வேதனையை அனுபவித்தாலும் ஒரு குமாரன் பிறந்தான் என்ற சந்தோஷத்தினாலே அந்தத் துக்கத்தை மறந்து ஆறுதல் அடைகிறாள் (யோவா. 16: 21. சங். 113: 9. ஏசா. 54: 1.). பிள்ளைகளை வளர்க்கிறதில் அவளுக்கு வருத்தங்களும் துக்கங்களும் நேரிடுவதுண்டு. வியாதிகள் பலத்தோடே பிள்ளைகளைப் பிடிக்கையில் அவள் உள்ளம் குழம்புகிறதுமுண்டு. ஆனால் துன்பங்கள் நீங்கி அவர்கள் பெலனடைந்து க்ஷேமமாய் வாழ்கையில் அவள் நிறைந்த ஆறுதலுள்ளவளாயிருக்கிறாள்.

“உன் ஆசை உன் புருஷனைப்பற்றியிருக்கும்.” ஏவாள் தேவனைப் போல் இருக்கவேண்டும் என்று அபேட்சை கொண்டதற்கு எதிரிடையாய் இப்போது அவள் தன் புருஷனால் ஆளப்படவும் அவனுக்குக் கீழடங்கியிருக்கவும் தீர்ப்புப்பெற்றாள். தேவ ஏற்பாட்டின்படி புருஷன் ஸ்திரீக்குத் தலையாயிருக்கிறான். (1 கொ. 11: 3; 14: 34. எபே. 5: 22–24. 1 தீமோ. 2: 11, 12. தீத். 2: 5. 1 பே. 3: 1, 5, 6.)

மனைவியானவள் தன் புருஷனுக்குக் கீழடங்கியிருப்பது, திருச்சபையானது தன் ஞானமணவாளனாகிய கிறிஸ்துவுக்குக் கீழடங்குவதற்கு அடையாளமாயிருக்கிறது. (எபே. 5: 22–24.)

“அவன் உன்னை ஆண்டுகொள்ளுவான்.” தண்டனையைக் கூறும் காலத்திலும் தேவன் இரக்கத்தை நினைவுகூருகிறவராயிருக்கிறார். மனைவியானவள் அந்நியனுக்கல்ல தன் சொந்தப்புருஷனுடைய ஆளுகைக்குட்பட்டிருக்கும்படியான சலாக்கியத்தைப் பெற்றிருக்கிறாள்.

**17.** “அவர் ஆதாமை நோக்கி.” ஆதாம் என்ற பேர் இந்த இடத்தில் சுட்டுச்சொல்லாகச் சேர்க்கப்படாமல் முதலாவதாகச் சிறப்புப்பெயராய் வழங்கப்பட்டிருக்கிறது.

“பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்.” பாவத்தினிமித்தம் (1) பூமி சபிக்கப்பட்டது. (2) மனுஷன் தன் தேகத்தைப் போஷிக்கும் போசனத்துக்காகப் பிரயாசத்தைச் செலுத்தி உழைக்கும்படியான ஆக்கினைத்தீர்ப்பைப் பெற்றான்.

“நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.” ஏதேனிலிருந்தபோது ஆதாமின் வேலை அவனுக்கு இன்பமாயிருந்தது. பூமி தன் பலனை அவனுக்கு ரம்மியமாய்க் கொடுத்தது. இப்போதோ





18 வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். — அது
உனக்கு [1]முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளி
19 யின் பயிர்வகைகளைப் புசிப்பாய். — நீ பூமியிலிருந்து
எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும்
[2]உன் முகத்தின்வேர்வையால் ஆகாரம் புசிப்பாய், [3]நீ

[1] யோபு. 31. 40.
[2] பிர. 1.13.2தெச. 3. 10.
[3] ஆதி. 2. 7: 19. 27. யோபு. 21. 26. சங். 104. 29. பிர. 3. 20.

பூமியின் பலனைப் புசிக்கும்படி அவன் நேரப்பட எழுந்து வருத்தத்தோடே தன் பெலனைச் செலவிடவேண்டியதாயிருந்தது. சில தருணத்தில் பிரயாசத்துக்குத் தக்கதாகப் பலன் அவனுக்குக் கிடையாமற்போவதுண்டு. சில தருணத்தில் அவன் பிரயாசத்தின் பலனை இன்னொருவன் அறுப்பதுமுண்டு (பிர. 2: 21. யோவா. 4: 37.). பிரயாசமும் விடாய்ப்பும் மனுஷனுக்கு மரணபரியந்தமுண்டு. இந்த ஜீவகாலத்தில் அவன் பிரயாசையில்லாமல் ஜீவனஞ் செய்ய முடியாது.

**18.** “அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்.” ஆதாம் தரிசு நிலத்தில் கைப்பாடுபடும்படி தீர்ப்புப்பெற்றான். அப்படிப்பட்ட இடத்தில் களைகள் மிகுதியாய் எழும்பி அவன் பிரயாசத்துக்குத்தக்க பலனைப் பெறாதபடி தடுக்கும். மனிதருடைய இருதயமும் ஆவியானவருடைய முயற்சியின்றி பொல்லாங்கில் பெருகிக்கொண்டேயிருக்கும்.

“முள்ளு” என்பது இச்சீவனின் உபத்திரவங்களுக்குக் குறிப்பு (மத். 13: 22.). கிறிஸ்துரட்சகர் ஆதிசாபத்தைத் தாமே சுமந்து அது ஆசீர்வாதமாக மாறும்படி முண்முடியைச் சூடி உபத்திரவத்தின் பாதையை மோட்சமகிமைக்குப் போகிற பாதையாக்கினார்.

“வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.” பரதீசின் இன்பமும் ருசிகரமுமான கனிகளைப் புசிப்பதற்குப் பதிலாக நிலத்தில் விளையும் சாதாரண ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். மனுஷன் பூலோகத்தைவிட்டு, சீக்கிரத்துக்குள்ளாக மறையவேண்டியவனானபடியால் அவன் பூமியின்மேல் நாட்டம் வையாதிருக்கவும் வேறேயிடத்தில் தனக்கு இளைப்பாறுதலைத் தேடிக்கொள்ளவுமாக இப்படிப்பட்ட தீர்ப்பைப் பெற்றான்.

**19.** “உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்.” மனிதன் சோம்பலுக்கு இடங்கொடாமல் சாக்கிரதையாயிருக்கத்தக்கதாக வேலைசெய்யும்படியான கட்டளையைப் பெற்றான். சோம்பேறிக்குச் சாத்தான் தன் வேலையைச் செய்யக்கொடுப்பதால் அவன் மாயத்தில் அகப்படாதபடி நாம் எப்போதும் நல்லவேலையில் சுறுசுறுப்புள்ளவர்களாயிருப்போமாக.

தேவ சாபங்களில் சிலவை வாக்குத்தத்தங்களாயிருக்கின்றன. திருஷ். ஸ்திரீயின் வித்துக்கும் சர்ப்பத்தின் வித்துக்குமுள்ள பகையில் வாக்குத்தத்தம் அடங்கியிருக்கிறது.

தேவ சாபங்களில் சிலவை கட்டளைகளாயிருக்கிறது. திருஷ். ஸ்திரீ புருஷனுக்குக் கீழடங்கி இருக்கவேண்டியதென்பதில் இதைப் பார்க்கிறோம்.

தேவ சாபங்களில் சிலவை சாபமும் வாக்குத்தத்தமும் கட்டளையும் அடங்கியிருக்கின்றன. திருஷ். மனுஷன் வேர்வை சிந்தாமல் பூமி தன் பலனைக்

[1]மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்
றார்.
20 ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்
டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம்
21 தாயானவள். — தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும்
அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி
அவர்களுக்கு உடுத்தினார்.
22 பின்பு தேவனாகிய கர்த்தர்: [2]இதோ, மனுஷன் நன்
மைதீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்
போல் ஆனான்; இப்பொழுதும் அவன் தன் கையை

[1] யோபு. 33. 6: 34. 15.
[2] 5. வசனம். ஆதி. 2. 9. வெளி. 2. 7.

கொடாமலிருப்பதில் சாபமும்; வேர்வை சிந்துவதிலே அப்பம் புசிக்கிறதில் வாக்குத்தத்தமும்; ஆகாரத்தைப் புசிக்கவேண்டுமானால் வேர்வை சிந்தவேண்டும் என்பதில் கட்டளையும் அடங்கியிருக்கிறது.

"மண்ணாயிருக்கிறாய்." மனுஷன் மண்ணால் உருவாக்கப்பட்டவன். பூமிக்குரிய கூடாரத்தில் தங்குகிறவன். குயகலத்தைப்போலிருக்கிறவன். (யோபு. 4: 19; 10: 9. 2 கொ. 4: 7; 5: 1. எரே. 18: 6.)

"மண்ணுக்குத் திரும்புவாய்." இதில் மரணத்தீர்ப்பு அடங்கியிருக்கிறது. அவன் தேவகட்டளையை மீறினதால் அவர் உரைத்தபடி (2: 17.), அவன் தேகம் அழிந்து மண்ணோடே மண்ணாய்ப்போகும்படி, தான் எடுக்கப்பட்ட பூமியில் புதைக்கப்படவேண்டியவனாயிருக்கிறான். (சங். 90: 3, 5, 6; 104: 29; 146: 4. யோபு. 34: 14, 15.)

**20.** "ஏவாள் என்று பேரிட்டான்." ஏவாள் என்பதற்கு "ஜீவனுள்ளவள்" என்றர்த்தம். ஏவாளாலே மரணம் உலகத்தில் பிரவேசித்திருக்க, அவளுக்கு இந்தப் பெயரை ஆதாம் கொடுத்தது ஆச்சரியமாயிருக்கும். அவளிடத்திலிருந்து ஜீவனோடே பிறக்கும் யாவருக்கும் அவள் தாயாயிருந்தாலும், அவள் வித்தானவரால் உலகத்துக்குக் கிருபையும் நித்தியஜீவனும் உண்டாகப்போவதால், இது காரணப்பேராக அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

**21.** "தோல் உடைகள்." தேவன் நமது ஆதித் தாய்தந்தைகளோடே செய்த கிருபையுள்ள உடம்படிக்கையை உறுதிப்படுத்தும்படி முதலாவதாகப் பலியிடப்பட்ட மிருகத்தின் தோலால் இவைகள் செய்யப்பட்டிருக்கும்.

இதிலே மாறுபாடுபண்ணின தமது சிருஷ்டிகளைத் தேவன் தள்ளிவிடாமல் அவர்களுக்குக் கிருபைசெய்தார் என்று பார்க்கிறோம். மானத்துக்கு மூடலாகக் கொடுக்கப்பட்ட இத்தோலுடைகளைக் கவனிக்கையில், நாம் டம்பமும் பிரகாசமுமுள்ள உடைகளைத் தரித்துக்கொள்ளவேண்டாம், நமது தேகத்தை மூடும்படி சாதாரண உடைகள் இருந்தால் போதும் என்று கற்றுக்கொள்ளுகிறோம்.

**22.** "நம்மில் ஒருவரைப்போல் ஆனான்." இந்த வார்த்தைகளைப் பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனோடும் பரிசுத்தாவியாகிய தேவனோடும் சொன்னார். மனுஷன் நன்மைதீமை இன்னதென்று பகுத்தறியும் விஷயத்தில் தேவனைப்போலானான்.





நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து,
என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்யவேண்
23 டும் என்று,—அவன் எடுக்கப்பட்ட [1]மண்ணைப் பண்
படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத
24 திலிருந்து அனுப்பிவிட்டார்.—அவர் மனுஷனைத் துரத்
திவிட்டு, ஜீவவிருட்சத்துக்குப் போம் வழியைக் கா
வல்செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் [2]கிழக்கே [3]கே
ருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்
டயத்தையும் வைத்தார்.

[1] 19. வசனம். ஆதி. 4. 2: 9. 20.
[2] ஆதி. 2. 8.
[3] சங். 80. 1: 104. 4. எபி. 1. 7.

"என்றைக்கும் உயிரோடிராதபடிக்கு." ஆதாம் பாவஞ் செய்தபின்பு, ஜீவவிருக்ஷத்தின் கனியைப் புசிக்கிறதாயிருந்தால், அவன் என்றைக்கும் உயிரோடிருந்து, பாவத்தில் வளர்ந்து, தேவகோபத்தையும் நித்திய நாசத்தையும் அனுபவித்து, சாகாமல் செத்து, உயிர்ப்பிணமாய், அனவரத கவலைக்கும் நோவுக்கும் ஆளாயிருந்து வருந்துவான் என்றும், ஆதலால் அவன் அக்கிரமத்தில் மிஞ்சிப்போய்க் குரூரமான தண்டனையை அனுபவியாதபடி தயவுள்ள தேவன் அவன் நாட்களைக் குறுக்கச் சித்தங்கொண்டு ஜீவவிருக்ஷத்துக்கு அவனை அப்புறப்படுத்தினார் என்றும் வியாக்கியானஞ் சொல்லுவாருண்டு. இவ்வாக்கியம் மறைப்பொருளுள்ளது; இது மனுஷபுத்திக் கெட்டாத விஷயங்களில் ஒன்று. ஆதலால் இந்த ரகசியம் வெளிப்பட நாம் பொறுமையோடே காத்திருக்கவேண்டுமென்று சொல்வாருமுண்டு.

**23.** "தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்." ஆதாம்மேல் கூறப்பட்ட தண்டனையை அவன் அநுபவிக்கவும் வருத்தத்தோடே உழைத்துச் சாப்பிடவும் அவன் பெருமையை அடக்கவும் இது அவனுக்குண்டாயிற்று.

**24.** "மனுஷனைத் துரத்திவிட்டு." பாவம் செய்த தூதர்கள் பரலோகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டார்கள். பாவஞ் செய்த மனுஷன் பரதீசின் பாக்கியத்தை அநுபவியாதபடி அதிலிருந்து அவன் துரத்திவிடப்பட்டான். பாவம் எவ்வளவு நன்மையைக்கெடுத்து இழிவை உண்டாக்குகிறதாயிருக்கிறது.

"கேருபீன்கள்." இவர்கள் தேவனுடைய உன்னத ஊழியக்காரரில் ஒரு வகுப்பார். அவர்கள் வல்லவர்களும் பராக்கிரமமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். தேவன் மோசேக்குக் கிருபாசன மூடியைச் செய்யும்படி கட்டளையிட்டபோது, பொன்னினால் இரண்டு கேருபீன்களை உண்டாக்கி, அவைகள் தங்கள் செட்டைகளை விரித்துக் கிருபாசனத்தை மூடவும், ஒன்றுக்கொன்று எதிர்முகமாயிருக்கவும், கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயிருக்கவுந் தக்கதாக, அக்கிருபாசனத்தின் இரண்டு கடைகளிலும் வைக்கச்சொன்னார். தேவன் அந்த இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்து சன்னதம் அருளினார் (யாத். 25: 17-22.). சாலொமோன் செய்த கேருபீன்கள் பத்துமுழ உயரமாயும் அவைகளின் செட்டைகள் பக்கத்துச் சுவர்களைத் தொட்டுக்கொண்டதாயுமிருந்தன (1 இரா. 6: 23, 27). திரைச்சீலையிலே விசித்திரவேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள் வைக்கப்பட்டிருந்தன (யாத். 26: 31; 36: 35.). தேவா

லயத்தின் சுவர்களிலும் கதவுகளிலும் கேருபீன்கள் சித்திரவேலைப்பாடாய்ச் செய்யப்பட்டிருந்தன (1 இரா. 6: 29, 32, 35.). வெண்கல ஆதாரங்களின் சட்டங்களுக்கு நடுவேயுள்ள சவுக்கைகளிலும் அவைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன. (1 இரா. 7: 29, 36.)

கேருபீன்களுடைய பணிவிடைகள் என்னவென்றால், 1. பரதீசின் வாசலையும் இரண்டு கற்பலகைகள் வைக்கப்பட்டிருந்த உடம்படிக்கைப் பெட்டியையும் காவல்செய்கிறதும்,

2. தேவனுடைய ஆசனத்தைச் சூழ அவர் சமுகத்தில் நிற்கிறதும்,

3. தேவன் தமது மகிமைக் காட்சி அருளும்போது அவருடைய ஆசனத்தைச் சுமக்கிறதும் அவர்கள் வேலைகளாயிருந்தன. (எசே. 28: 14–16. எசா. 37: 16. சங். 18: 10.)

கவனிப்பு. கேருபீன்களுக்கும் மற்றுமுள்ள தேவதூதர்களுக்கும் பற்பல வித்தியாசங்கள் உண்டு. வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்தால் அவைகளை அறியலாம். இது எப்படியிருந்தாலும் கேருபீன்களின் மகத்துவத்தை நாம் கவனிக்கத்தக்கது. கர்த்தருடைய மகிமை என்னப்பட்ட ஷகீனா எங்கே அருளப்பட்டதோ அங்கே கேருபீன்களுமிருந்தனவென்பதையும்,—தேவனுடைய சந்நிதானத்தில் போகிறவர்கள் கேருபீன்கள் வைக்கப்பட்ட இடத்தின்வழியாய்ப் போகவேண்டுமென்பதையும் (ஆதி. 3: 24. வெளி. 2: 7. யாத். 26: 31–33.), மோட்சத்தில் கேருபீன்கள் மனுபுத்திரரை மீட்டுக்கொண்ட தேவனுடைய கிருபையைப் புகழ்ந்து பாடுகின்றனவென்பதையும் (வெளி. 5: 8–10.), நாம் கவனித்துப்பார்த்தால் இக்கேருபீன்கள் தேவனுடைய சந்நிதானத்தில் நின்று அவருடைய மகிமையையும் நீதியையும் காக்கும் ஊழியக்காரரென்று நாம் நினைக்கத்தக்கது. தகுந்த பிராயச்சித்தத்தினாலே அந்த நீதிக்குத் திருப்தியாக்குமட்டும் தேவ சமுகத்தில் போய் நிற்கும்படி கேருபீன்கள் நம்மை விடமாட்டாவென்று சொல்லலாம்.

கேருபீன்கள் ஜீவவிருக்ஷத்துக்குப் போகிற வழியைக் காவல்செய்ததில், பரதீசை நாம் பாவத்தினாலே இழந்துவிட்டாலும், அதை என்றைக்கும் இழந்துவிடவில்லை என்றும், ஜீவவிருக்ஷமும் அது வளர்ந்த தோட்டமும் பூரண மகிமையிலே தேவனாலும் அவருடைய பரிசுத்த தூதர்களாலும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்றும், நாம் இழந்துபோன ஜீவனைத் திரும்பப் பெற்றுக்கொள்வது மீளக்கூடாத காரியமல்ல என்றும், போராட்டத்தினாலும் ஜெயத்தினாலும், பாடுகளினாலும் மரணத்தினாலும்மாத்திரம் அதை மறுபடியும் பெற்றுக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது என்றும் அறியலாம். ஜீவவிருக்ஷத்துக்கும் மனிதனுக்கும் நடுவே நீதியான பழிவாங்குதலைச் செலுத்தும் ஊழியக்காரரும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயமும் வைக்கப்பட்டிருந்தும், கர்த்தராகிய கிறிஸ்து ரட்சகர் தமது மரணத்தால் அவ்வழியாய்ச் சென்று தம்மை விசுவாசிக்கிற யாவருக்கும் மோட்சவாசலைத் திறந்திருக்கிறார்.

## படிப்பினை.

### வச. 1—6.

(1) நம்முடைய கெடுதலை விரும்புகிற சத்துருக்களால் நாம் சூழப்பட்டிருப்பதால் எவ்வளவு எச்சரிக்கையோடும் விழிப்போடும் இச்சீவியகாலத்தைப் பின்னிடவேண்டியவர்களாயிருக்கிறோம்,—நாம் நன்றாயிருப்பது அச்சத்துருக்களுக்கு எவ்வளவேனும் பிரியமில்லை. அவர்கள் நம்மைக் கெடுக்கும்படி செய்கிற இரகசியமான தந்திர உபாயங்கள் நமக்கு மறைவாயிருக்கும். என்றாலும் அவர்கள் தேவனைப்பற்றி சிலவேளைகளில் அவர்





கடினமானவர் என்றும், சில வேளைகளில் அவர் மகா இரக்கமுள்ளவராதலால் தண்டிக்கமாட்டார் என்றும் நாம் எண்ணும்படி செய்து விசுவாசத்தின் கண்களைக் குருடாக்கி, சயபுத்தியில் சாயும்படி செய்து, ஆசை இச்சைகளை நிறைவேற்றும்படி தூண்டிவிடுவார்கள். இவைபோன்ற ஆகாத எண்ணங்கள் நமக்குள் உண்டாகும்போது அவை சாத்தானுடைய சோதனை என்று உணர்ந்து அவைகளை நிராகரித்துத் தள்ளுவோமாக.

(2) சத்துருக்களைக்கொண்டுமாத்திரமல்ல மித்துருக்களைக்கொண்டும் சாத்தான் நம்மைச் சோதனைக்குட்பட இழுப்பான். (மத். 16: 21–23.)

(3) பாவத்திற்கு விலகியிருக்க விரும்பினால் சோதனையான இடத்திற்குப் போகாதே. சோதனை நேரிடும்போது விசுவாசத்தோடே அதற்கு எதிர்த்து நில். அல்லது சோதனையான இடத்தைவிட்டு ஓடிப்போ; பின்னிட்டுப் பாராதே. ஏவாள் விலக்கப்பட்ட கனியைப் பார்த்தாள், இச்சித்தாள், பறித்தாள், புசித்தாள், பாவியானாள். கண்களினால் உண்டாகும் பாவத்துக்கு எச்சரிக்கையாயிருந்தால், பாவத்துக்கு அகப்படாதபடி தப்பிக்கொள்ள ஏதுவுண்டு. (யோபு. 31. 1.)

### வச. 7—13.

(4) இவ்வுலகஞானம் தேவனுக்குமுன்பாக பைத்தியமாயிருக்கிறது. மனிதர் தங்களை ஞானிகள் என்று சொல்லிப் பைத்தியகாரராகி, தேவன் இல்லை என்று எண்ணித் தங்கள் இஷ்டப்படி நடக்கலாம் என்று பிதற்றுகிறார்கள்.

(5) ஆகாதவர்களுடைய ஜெயகெம்பீரம் சொற்பகாலம் நிலைநின்று, பின்பு மனவியாகுலத்துக்கும் அவமானத்துக்கும் ஏதுவாய் முடிகிறது.

(6) பாவிகளோடே பாவத்தில் சேர்ந்துகொள்வது நிர்ப்பந்தமாக முடிவதும் உண்டு.

(7) தேவன் பாவிகளை நியாயந்தீர்க்க ஆசனத்தில் உட்காரும்போது அந்தச் சமையம் எவ்வளவு பயங்கரமாயிருக்கும். அப்போது வாய்கள் யாவும் அடைக்கப்படும். உலகத்தார் யாவரும் தேவனுக்கு முன்பாகக் குற்றவாளிகளாகக் காணப்படுவார்கள். பாவத்துக்காக என்னென்ன போக்குகளைச் சொன்னாலும், அவைகள் அங்கிகரிக்கப்படமாட்டாது. அந்தப் போக்குகளே பாவிகளுக்கு விரோதமானவைகளாய் விளங்குவதோடு, அதிகமான குற்றத்திற்குள் அவர்களை அகப்படுத்தி, அவர்களுக்கு அதிக ஆக்கினையை வருவிக்கும்.

(8) நீ எங்கேயிருக்கிறாய் என்ற கேள்வியை நாம் ஒவ்வொருவரும் கேட்டு, நாசவழியிலிருக்கிறேனா, ஜீவவழியில் இருக்கிறேனா என்று உற்றாராய்வது உத்தமம்.

(9) குழந்தைகள்முதல் முதியோர்வரையும் தாங்கள் குற்றவாளிகளல்லவென்று சொல்வதே சாதாரணமாய்ப் போயிற்று. கள்ளரும், வேசிகளும், குடிவெறியருங்கூட அப்படியே சாதிக்கிறார்கள்.

### வச. 14—19.

(10) இச்சீவகாலத்தில் உண்டாகிய துக்கங்கள் வருத்தங்கள் முதலியவைகள் பாவத்துக்காக மனுஷசாதியார்பேரில் நீதியுள்ள நியாயாதிபதியால் சுமத்தப்பட்ட தண்டனை என்று உணர்வது நன்று. மரணத்தைப்பற்றியும் அப்படியே எண்ணி உணர வேண்டும்.

(11) நாம் அனுபவிக்கிற நன்மைகள் எல்லாம் நமக்குக் கிருபையாய்க் கொடுக்கப்படுகிறவைகளாயிருக்கின்றன. அவைகளுக்காக நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருப்போமாக. அவைகளெல்லாம் இரட்சகரைப்பற்றிய வாக்குத்தத்தத்திலும் நித்தியஜீவனைப்பற்றிய நம்பிக்கையிலும் சார்பாயிருக்கின்றன.

(12) நமக்குண்டாகிய வருத்தங்கள், நாம் அதிகமான தீமைகளில் விழாதபடிக்கு நம்மைக் காப்பாற்றுகிற கருவிகளாயிருக்கின்றன என்பதை மறந்துவிடவேண்டாம்.



5590

## 4. அதிகாரம்.

1. காயீன் ஆபேல் என்பவர்களுடைய பிறப்பு தொழில் கொள்கை முதலியவற்றைச் சொல்லியது. 8. ஆபேல் கொலைசெய்யப்பட்டது. 11. காயீன் சபிக்கப்பட்டது. 17. ஏனோக்கென்கிற முதற்பட்டணமுண்டானது. 19. லாமேக்கையும், அவன் இரண்டு மனைவிகளையும் குறித்தது. 25. சேத். என்பவனும், 29. ஏனோஸ் என்பவனும் பிறந்தது.

1 ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை அறிந்தான்;
அவள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால்

### வச. 20—24.

(13) தேவனுடைய வெளிப்படுத்தல் அருளப்பட்டிருந்தும் பாவமுண்டான காலமுதல் இவ்வுலகம் அந்தகாரத்தினாலும், நிர்ப்பந்தத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்துகொண்டு வருகிறது. கர்த்தர் மருளவிழுந்த பாவிகளைவிட்டு நீங்குகையில் எவ்வளவு நிர்ப்பந்தமுண்டாயிருக்கும். சரீர வருத்தங்கள் சங்கடமாயிருந்தால் இரண்டாம் மரணம் என்னமாயிராது?

(14) விசுவாசிகள் தங்களுக்கு நேரிடும் உபத்திரவங்கள் பிதாவின் கரத்திலிருந்து வருகின்றவைகள் என்றும் அவைகள் அற்பமானவைகள் என்றும் எண்ணி, மரணம் வந்தாலும் அதையும் பொறுமையோடே சகித்து நித்திய கனமகிமைக்கு யோக்கியராகிறார்கள்.

(15) நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தைக்கொண்டு நமக்குப் பிணையாளியாயிருக்கிற இயேசுவின் புண்ணியத்தின்பேரில் நாம் நம்பிக்கைவைத்து, பாவத்துக்காக நம்மைத் தாழ்த்தி, இரட்சணியத்துக்காக நன்றியறிதலைக் காட்டி, சோதனைக்கு எதிர்த்து, மன உற்சாகத்தோடே அவரது கட்டளைகளை நிறைவேற்றிவந்தால், அவர் சாத்தானை நம்முடைய கால்களின் கீழாய் நசுக்குவதோடே பூமியை நீதியினாலும் சத்தியத்தினாலும் நிரப்புவார்.

### 4. அதிகாரம்.

முந்தின அதிகாரத்தில் பாவம் உலகத்தில் பிரவேசித்ததைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. இந்த அதிகாரத்தில் பாவம் விர்த்தியடைந்ததையும் மனுகுலத்தார் பெருகினதையும் குறித்துக் காட்டியிருக்கிறது. காயீன், தீமையின் பெருக்கத்துக்கும்; ஆபேல், விசுவாசத்தின் ஜெயத்துக்கும் அடையாளமாயிருக்கிறார்கள்.

**1.** "காயீன்." என்பதற்குச் "சம்பாத்தியம்" என்றர்த்தம். ஸ்திரீயின் வித்து, சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை, ஏவாள் நினைவுகூர்ந்து, தான் பெற்ற முதல் குமாரனாகிய காயீனால் தனக்கு மீட்பைச் சம்பாதிக்கும் கிருபாவரம் உண்டாகும் என்று நம்பி, இந்தப் பெயரை அவனுக்கு இட்டிருக்கலாம்.

"கர்த்தரால்." தேவ ஒத்தாசையினால் என்பதாம். சிலர் "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்பதை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ரக்ஷகரென்று அர்த்தங்கொள்ளும் "கர்த்தராகிய மனுஷனைப் பெற்றேன்" என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.





2 ஒரு மனுஷனைப் பெற்றேன் என்றாள்.—பின்பு அவ
னுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல்
[1]ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் [2]நிலத்தைப் — [1] ஆதி. 46. 34. [2] 3. 23; 9. 20.
பயிரிடுகிறவனானான்.
3 சிலநாள் சென்றபின்பு, காயீன் [3]நிலத்தின் கனிக — [3] எண். 18. 12.
ளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந் — [4] எண். 18. 17.
4 தான்.—ஆபேலும் [4]தன் மந்தையின் தலையீற்றுகளி — எபி. 11. 4.

**2.** "ஆபேல்" என்பதற்கு "மாய்கை" என்று அர்த்தம். ஆபேலுக்கு யார் பேர்கொடுத்ததென்று சொல்லப்படவில்லை. தான் இழந்த நன்மையைத் தன் மூத்தமகனாகிய காயீனால் பெற்றுக்கொள்ளலாம் என்று ஏவாள் கொண்ட எண்ணம் வியர்த்தமாய்ப் போய்விட்டதாலும்; காயீனுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருந்ததாலும் (1 யோ. 3: 12.); அவள் தன் இளைய குமாரனைப் பற்றி நல்லெண்ணமில்லாமல் "வீண்" அல்லது "மாய்கை" என்று அர்த்தம் கொள்ளும் பெயரை அவனுக்கு இட்டிருக்கலாம். சிலர், ஆபேல் என்கிற பேர், அவனுடைய அகால மரணத்தைக் குறிப்பிக்கும் தீர்க்கதரிசன நாமமாயிருக்கிறது என்று சொல்லுவார்கள். வேறு சிலர், அவனுடைய மரணத்துக்குப் பின்பு, இந்தப் பேர் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள். ஆனால் இதற்கு ஆதாரமில்லை.

"ஆடுகளை மேய்க்கிறவனானான்." நாஸ்திகர், மனிதர் முதலாவது மிலேச்சராயிருந்து, பின்பு மேய்ப்பராகி, அப்பால் பயிரிடும் குடிகளாகி, பிற்பாடு படிப்படியாக நாகரீகத்தில் தேறிக்கொண்டே வந்திருக்கிறார்கள் என்று சாதிக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வது அபத்தம் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிற சங்கதியினால் அறிகிறோம். ஆதாம், ஏதேனைப் பண்படுத்த அதில் வைக்கப்பட்டான். காயீன் தன் தகப்பன்வேலையைக் கற்றுப் பயிரிடும் குடியானான். ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான்.

ஆபேலுடைய ஆடுகள் உடைக்கும், காயீனுடைய தோட்டம் போஜனத்துக்கும் உரியவைகளைத் தந்தன. உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக்கடவோம். (1 தீமோ. 6: 8.)

**3.** "சிலநாள் சென்றபின்பு." "நாட்களின் முடிவிலே" என்றிருக்க வேண்டும். பூர்வீகத்தார் பூமியின் பலன்களைச் சேர்த்தபின்பு நல்ல சாவகாசம் பார்த்து பலிசெலுத்துவார்கள். இங்கே வருஷக்கடைசியிலே அல்லது தேவாராதனைக்காகக் குறிக்கப்பட்ட காலத்திலே என்று அர்த்தமாகும்.

"காணிக்கை." இதின் மூலவார்த்தை, எபிரெயு வேதத்திலுள்ள எல்லா இடங்களிலும் இரத்தமில்லாப் படைப்பைக் குறிக்கும். அந்தப் பதம் அடிக்கடி "போஜனபலி" என்று திருப்பப்பட்டுமிருக்கிறது. அந்தப் பலியின் தன்மையைக்குறித்து லேவியராகமம் இரண்டாம் அதிகாரத்தில் பார்க்க. ஆதிமுதல் மனிதர் தேவனைப் பலியின்மூலமாய் வணங்குவதே தேவசித்தமாயிருக்கிறது.

**4.** "மந்தையின் தலையீற்றுகளிலும்." ஆபேலுடைய பலி, காயீனுடையதைவிட நிறைவும் பிரியமும் மேன்மையுமுள்ளது (எபி. 11: 4.). அது

லும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சில
வற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன்
5 காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்.—காயீனை
யும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்க
வில்லை. அப்பொழுது காயீனுக்கு மிகவும் எரிச்சல்
உண்டாகி, [1]அவன் முகநாடி வேறுபட்டது.—

[1] ஆதி. 31. 2.

தேவஆட்டுக்குட்டியின் பலிக்கு அடையாளமாயிருந்தது. மேலும் மூலத்தில் வருகிற "மின்கா" என்கிற வார்த்தையைக்கொண்டும், "காணிக்கைகள்" என்று அப்போஸ்தலன் சொல்லுகிற பன்மைச் சொல்லைக்கொண்டும் (எபி. 11: 4.), ஆபேல் நிலத்தின் கனிகளையும் மந்தையின் தலையீற்றுகளையும் கொண்டுவந்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகிலும் அவன் தன் பாவநிலைமையை உணர்ந்து தேவன் கற்பித்திருந்த பிராயச்சித்த பலியைக் கொண்டுவந்து ரத்தஞ் சிந்துதலினாலே தன் விசுவாசத்தைக் காட்டினதினிமித்தம் அவன் அங்கீகரிக்கப்பட்டானேயன்றி மற்றப்படியல்ல.

"ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்." ஆபேலுடைய விசுவாசத்தைக் கண்டு, தேவன் முதலாவது ஆபேலையும், பின்பு அவன் விசுவாசத்தினாலே உற்சாகமாய் நன்றியறிதலோடே செலுத்தின பலியையும் ஏற்றுக்கொண்டார். இந்த விசுவாசத்தினாலே அவன் நீதிமான் என்று சாட்சிபெற்றான். அவன் கிரியைகளும் நீதியுள்ளவைகளாயிருந்தன. (1 யோ. 3: 12.)

5. "காயீனையும் அவன் காணிக்கையையும் அவர் அங்கிகரிக்கவில்லை." காயீனுடைய நடக்கை, கிரியைகள் பொல்லாப்பும் பொல்லாங்கினால் உண்டானவைகளுமாயிருந்தது (1 யோ. 3: 12.). ஆதலால் தேவன் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் தன் பாவத்தை உணர்ந்தவனாகத் தேவனண்டைக்கு வராமல், பேருக்குக் காணிக்கை செலுத்த இறுமாப்பாய் வந்ததால், அவன் காணிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. துன்மார்க்கனுடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது. அதைத் துர்ச்சிந்தையோடே செலுத்தினாலோ, எத்தனை அதிகமாய் அருவருக்கப்படும். (நீதி. 15: 8; 21: 27.)

"காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாகி." தன் காணிக்கை அங்கீகரிக்கப்படாமல், தன் சகோதரன் காணிக்கை அங்கீகரிக்கப்பட்டதற்காக, காயீனுக்குக் கோபமுண்டாதுடன் துக்கமும் அவனைப் பிடித்தது. அவன் துக்கம் மனந்திரும்புதலுக்கேற்ற தேவேத்தனமான துக்கமல்ல. பொறாமையினால் நிறைந்த துக்கமாயிருந்தது. சாத்தான் பொறாமையினாலே உலகத்தில் மரணத்தைப் பிரவேசிப்பித்தான். பொறாமையினாலே அவன் சகோதரருக்குள்ளான சமாதானத்தைக் கெடுத்துச் சகோதரனைக் கொலைசெய்யும்படி பண்ணினான்.

"அவன் முகநாடி வேறுபட்டது." அடுத்தது காட்டும் பளிங்குபோல, நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம் என்பதின்படி காயீனுடைய உள்ளத்தில் உண்டான தீமையான எண்ணத்தை அவன் முகம் காட்டிற்று. [illegible] நேரிட்ட குறைவை நிவிர்த்திசெய்வதற்குத் தன் குற்றத்தை உணர்ந்து [illegible] திரும்ப வேண்டியதற்குப் பதிலாகப் பாவத்தின்மேல் பாவத்தைக் கூட்டி இருதயக் கடினத்துக்கு அவன் தன்னை ஒப்புக்கொடுத்தான்.





6 அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி: உனக்கு ஏன்
எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்
7 டது?— நீ நன்மைசெய்தால் [1]மேன்மை இல்லையோ?
நீ நன்மைசெய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில்

[1] எபி. 11. 4.

6. "அப்பொழுது கர்த்தர் காயீனை நோக்கி." கர்த்தர் காயீனுடைய பொல்லாத சிந்தையை அறிந்து, அவன் மனந்திரும்பும்படி சாந்தமாய் எச்சரித்தார். இவ்வண்ணமாகவே ஆதாம் பாவத்தில் விழுந்தபிற்பாடும் அவனை எச்சரித்தார் (ஆதி. 3: 9.). அப்படியே தம்மைவிட்டு வழுவிப்போன தமது ஜனங்களையும் தமது தீர்க்கதரிசிகளைக்கொண்டு எக்காலும் எச்சரித்துவருகிறார். (எசே. 18: 23.)

7. "நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ." முதலாவது இந்த வசனம் காயீனுக்கு நேரிட்ட நிர்ப்பாக்கியத்துக்குச் சரியான முகாந்தரமின்னதென்று காட்டுகிறது. எப்படியெனில் காயீன் தன் சகோதரன்பேரில் எரிச்சலடைவதற்கு நியாயமேயில்லை. அவன் தன் கடமையைச் சரியானபடி செய்திருந்தால் தன் சகோதரனாகிய ஆபேல் அங்கீகரிக்கப்பட்டதுபோல தானும் அங்கீகரிக்கப்பட்டுத் தேவாசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடும் என்பது கருத்தாயிருக்கலாம்.

இரண்டாவது இந்த வசனம் காயீனுக்கு நேரிட்ட நிர்ப்பாக்கியத்தினாலே அவன் சீரடைந்து பிரயோசனத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வருகிற ஒரு வாக்குத்தத்தமாக அர்த்தப்படுத்தலாம். எப்படியென்றால் காயீன் இனிமேல் குணப்பட்டுச் சீராய் நடக்கும் பட்சத்தில், அவன் முன்செய்த பாவங்கள் மன்னிக்கப்பட்டுத் தெய்வீக நன்மைகளைப் பெறுவான் என்பதே.

"மேன்மையில்லையோ." சரியானபடி "ஏறெடுக்கப்படுவதில்லையோ" என்றிருக்கிறது. காயீனுடைய முகநாடி வேறுபட்டதாக வாசிக்கிறோம். அவன் நல்மனச்சாட்சியுடன் நடந்தால் தலை கவிழாமல் தலை நிமிர்ந்து சந்தோஷமாயிருக்கலாம். (யோபு. 10: 15; 11: 15.)

"நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்." இதற்குப் பலவித வியாக்கியானம் உண்டு. (1) பாவக்குற்றமாவது பட்சிக்கிற மிருகங்களைப்போல உன் ஆத்துமாவை விழுங்கும்படி அதின் வாசலண்டையிலே பதுங்கியிருக்கும் என்பது சாதாரண வியாக்கியானம்.

(2) சிலர் பாவம் என்பது பாவக்குணத்தைமாத்திரம் அல்ல; பாவத்திற்கு வரும் தண்டனையையும் குறிக்கும் என்று சொல்லி (சகரி. 14: 19. 2 கொ 5: 21.), காயீன் தன் பொல்லாத எண்ணங்களையும் நோக்கங்களையும் விட்டுவிட்டு, மனந்திரும்பாவிடில் தண்டனை அடைவான் என்று வியாக்கியானஞ்செய்வார்கள். ஆனால் ஒருபாஷையில், ஒருவார்த்தை ஆகுபெயராவதற்கு நீடித்த வழக்கம் வேண்டியிருந்தால், இந்த வியாக்கியானம் சரியல்ல என்று நிதானிக்கலாம்.

(3) [illegible]பாஷையில் பாவமென்று அர்த்தங்கொள்ளும் சட்டாத் என்பது பாவ நிவிர்த்தியச்சித்த பலியையும் குறிக்கும் (லேவி. 4: 3–ம் வசனம் முதலிய வாக்கியங்களையும் காண்க.). ஆதலால் எபிரெயவார்த்தையைக் கவனித்துப்

படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்
கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய் என்றார்.
8 காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசி

பார்த்தால் பாவக் குற்றத்தையாவது பாவ பிராயச்சித்த பலியையாவது குறிக்கிறதாயிருக்கும். வேதசாஸ்திரிகளில் பேர்போன வியாக்கியானிகள் அநேகர் இவ்வசனத்தில் பாவ பிராயச்சித்தபலி என்றர்த்தம் ஆகுமென்று அபிப்பிராயப்பட்டு,—அதற்கிசைவாக வியாக்கியானஞ் சொல்லுகிறார்கள். அதாவது நீ குற்றவாளியானாலும் பாவநிவாரணபலிக்கேற்ற ஆட்டுக்குட்டியானது கிட்டத்திலிருக்கிறது. அதைக் கொண்டுவந்து செலுத்தினால் உன் குற்றம் நீங்கி நீ தேவனுக்குகந்தவனாய் அங்கீகரிக்கப்படமாட்டாயாவென்பதாக அர்த்தப்படுத்துவார்கள். இவ்வியாக்கியானத்தை யோசனையின்றி நிராகரிக்காமல் அதை நன்றாய்க் கவனித்துக்கொள்வது உசிதம்.

"அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும்." வியாக்கியானிகள் இதை இரண்டுவகையாக அர்த்தப்படுத்துவார்கள். எபிரெய பாஷையின் நடையைக் கவனிக்கையில் "அவன் ஆசை"என்ற வாக்கியத்தில் அவனென்பது ஆபேலைக் குறிக்கும் என்று சிலரும், பாவத்தைக்குறிக்கும் என்று வேறு சிலரும் சொல்லுகிறார்கள். ஆபேலைக் குறிக்கும் என்றால், தேவன் ஆபேலை அங்கீகரித்துக் கொண்டதற்காகக் காயீன் பொறாமைகொண்டானே. அவன் அப்படி எரிச்சலடையாமல் உத்தமனாய் நடந்துகொண்டால் அவன் மூத்தவனானதால் மூத்தவனுக்குரிய சுதந்தரமும் ஆதிக்கமும் அவனுக்கே உரித்தாயிருக்கும். ஆபேல் இளையவனாகக் காயீனுக்குக் கனத்தைச் செலுத்தி, அவன்பேரில் சார்ந்திருப்பான் என்பதே. அது பாவத்தைக் குறிக்கும் என்றால் பாவமானது பட்சிக்கிற மிருகம்போல உன் ஆத்துமாவின் வாசலண்டையில் படுத்திருக்கும்; அதின் ஆசாபாசங்கள் உன்னை நோக்கிக்கொண்டிருக்கும் என்றாலும் நீ அதின் அதிகாரத்துக்கு ஒப்புக்கொடுக்கப்படவில்லை. உனக்கு மனமானால் நீ அதை மேற்கொண்டு கீழடக்கிக்கொள்ளலாம் என்பதே. முந்தின தாற்பரியமே பொதுப்பட ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஆபேல் கர்த்தருக்குப் பிரியமுண்டாக நடந்ததில் காயீனுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யவில்லை.

**8.** "**காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான்.**" பேசினான் என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு சிலர் காயீன் சிறிதுகாலம் தன் கோபதாபங்களை அடக்கி ஆபேலோடே பாசமாயிருந்துவந்தான் என்று நினைக்கிறார்கள். ஆனால் முன்பின் சம்பந்தத்தைப் பார்க்கையில் காயீன் ஆதி முதல் கொலைபாதகனாகிய பொல்லாங்கனால் உண்டாயிருந்தபடியால், ஏரோதியர் முதலியவர்கள் இரட்சகரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கத்தக்க வகையாய்ப் பேசினதுபோல் காயீனும் ஆபேலோடே பேசியிருக்கலாம் என்று நினைக்கத்தகும்.

சில கையெழுத்துப் பிரதிகளிலும் சமாரிய பஞ்சாகமத்திலும், கிரேக்குத் திருப்புதலாகிய செப்துவஜெந்திலும் "காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே நாம் வயலுக்குப் போவோம் வா என்று சொன்னான்" என்றிருக்கிறது.





னான்; அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்
தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோத
9 மாய் எழும்பி, [1]அவனைக் கொலைசெய்தான்.—கர்த்தர்
காயீனை நோக்கி: [2]உன் சகோதரனாகிய ஆபேல் எங்
கே என்றார்; அதற்கு அவன்: [3]நான் அறியேன்; என்
சகோதரனுக்கு நான் காவலாளியோ என்றான்:—
10 அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதர

1 மத். 23.35. 1 யோ. 3. 12. யூதா. 11.
2 சங். 9. 12.
3 யோ. 8. 44.

"அவர்கள் வயல் வெளியில் இருக்கும் சமயத்தில்..........கொலை செய்தான்." காயீன் இதற்குமுன் மனித கொலைபாதகத்தைக்குறித்து ஒன்றும் அறியாதவனாயிருந்தான். ஆதலால் இந்தக் கொலை முன்யோசனையினாலே செய்யப்பட்டதென்று சாதிக்கக்கூடாது. விவசாயக்காரருக்கும் மேய்ப்பருக்கும் ஓயாத மனஸ்தாபங்கள் நேரிடுவதுண்டு. ஒருவேளை ஆபேலுடைய ஆடுகள் தவறிப்போய்க் காயீனுடைய வயலில் விழுந்து மேய்ந்திருக்கலாம். காயீன் அதைக்குறித்து வாக்குவாதஞ் செய்கையில் எரிச்சல் மூண்டு அவனை அடிக்கவே அவன் உயிர் அவனைவிட்டுப் பிரிந்துபோயிருக்கலாம். காயீன் முதலாவது அவபக்தியுள்ளவனாயிருந்து பின்பு படிப்படியாய்ப் பொல்லாங்கில் வளர்ந்து ஏறிக் கடைசியாகக் கொலைபாதகனானான். ஆதித்தாய் தந்தைகள் தங்கள் பாவத்தினால் விளைந்த பலனை இப்போது கண்டு பிரலாபத்தோடு துக்கப்பட்டிருப்பார்கள். முதலாவது மரித்த மனிதன் அகாலமரணமாய் வன்கொலையுண்டவனாக மரித்தான். அவன் நீதிமான்; நீதிமான்களுடைய மரணம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் அருமையாயிருக்கிறது. ஆபேல் கொலை செய்யப்பட்டதைக் கவனிக்கையில் நீதிமான்கள் சுகமடையும் இடம் இவ்வுலகமல்லவென்று அறியலாம்.

**9.** "**கர்த்தர் காயீனை நோக்கி: உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்றார்.**" அறியாமையினாலே தேவன் இந்தக் கேள்வியைக் காயீனிடத்தில் கேளாமல், அவன் தன் குற்றத்தை உணர்ந்து இன்னமும் சீர்ப்படட்டும் என்ற அன்பான எண்ணத்தோடே கேட்டார்.

"நான் அறியேன்." ஆபேல் பிரேதமாய்க் கிடக்கிற இடம் காயீனுக்கு நன்றாய்த் தெரிந்திருக்க, இங்கே தான் அறியாதவனாகச் சர்வஞானமும் சர்வ அதிகாரமும் சர்வ வியாபகமுமுள்ள தேவனிடத்தில் பொய்சொன்னான். தன் தகப்பனைப்போலத் தன் குற்றத்தையும் மறைத்தான்.

"என் சகோதரனுக்கு நான் காவலாளியோ." எதிர்மறைப்பொருளில் விடைகொடுத்தான். நான் காவற்காரனல்ல நீரல்லவா காவலாளி என்பதுபோல இறுமாப்பாயும் பேசினான். காயீனிடத்தில் அவபக்தியும், பொறாமையும், கொலைபாதகமும், பொய்யும், கர்வமும், இருதயகடினமும் ஒன்றின் மேலொன்றாய்ப் பிறந்ததாகப் பார்க்கிறோம்.

**10.** "**நீ என்ன செய்தாய்?**" காயீன் ஆபேலைக் கொலைசெய்தபோது, வேறேமனிதர் சமீபமாயிருந்து பாராதிருந்தாலும், சர்வலோக நியாயாதிபதியானவர் பார்த்துக்கொண்டிருந்தார். கர்த்தர் கேட்ட கேள்விக்குக் காயீன் "நான்

னுடைய [1]இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை
11 நோக்கிக் கூப்பிடுகிறது.—இப்பொழுது உன் சகோத
ரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்
கொள்ள தன் வாயைத் திறந்த இந்தப் பூமியில் நீ
12 சபிக்கப்பட்டிருப்பாய். — நீ நிலத்தைப் பயிரிடும்
போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது;
நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய் என்

[1] எபி. 12. 24. வெளி. 6. 10.

அறியேன்" என்றானே. இப்போது கர்த்தர் காயீன் தன் சகோதரனுக்குச் செய்ததை அறிந்தவராக என்ன செய்தாய் என்றதில், அவன் தன் பாதகத்தை அறிக்கையிடட்டும் என்ற நோக்கமாய்க் கேட்டார்.

"உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது." மனிதன் கேட்பதுபோல, தேவன் கேட்கிறவரல்ல. மனிதனுக்கு மறைக்கப்பட்ட பாதகங்கள் பழிவாங்குதலுக்காகத் தேவனை நோக்கிக் கூப்பிடுகிறவைகளாயிருக்கின்றன. காயீனே ஆபேல் உன்பேரில் குற்றஞ் சாட்டுகிறதில்லை. நீ சிந்தின அவன் இரத்தமே உன்பேரில் குற்றஞ் சாட்டுகிறது. உன் பாவம் உன்னைக் காட்டிக்கொடுத்திருக்கிறது என்று சர்வவல்லவர் அப்பாதகத்தை எடுத்துக் காட்டினார். ஆபேலுடைய இரத்தம் நீதியையும் பழிவாங்குதலையும் நடப்பிக்கும்படி கூப்பிட்டது. கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தமோ ஒப்புரவாகுதலையும் சமாதானத்தையும் நடப்பிக்கக் கூப்பிட்டது. (எபி. 12: 24.)

**11.** "பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்." காயீன் பூமியில் முதலாவதாகச் சாபம்பெற்ற மனிதனாயிருந்தான். ஆதாம் விஷயத்தில் பூமி சபிக்கப்பட்டது. அது முள்ளும் குருக்கும் அவனுக்கு முளைப்பித்தது. காயீன் காரியத்திலோவென்றால் அவன் பிரயாசத்துக்குரிய பலன் கிடையாமல் துக்கமும் நிர்ப்பாக்கியமுமுள்ளவனானான். அவன் ஜீவன் பாதுகாக்கப்பட்டது. ஆனால் அது அவனுக்குப் பாரமாயிருந்தது. அவன் அநுபோகத்தால் மரணத்தின் தன்மையை அறியாதவனானதால் ஜீவனுக்கு ஜீவன் அவனிடத்திலிருந்து வாங்கப்படவில்லை. காயீன் குற்றமில்லாத இரத்தத்தைத் தான் பயிரிடும் பூமியில் சிந்தினதால், அவன் பயிரிட்ட நிலத்தை இழந்ததும் அன்றி, தன் தாய் தகப்பன் குடியிருப்பையும் இழந்து நிலையற்று அலைகிறவனானான்.

**12.** "நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன்பலனை இனி உனக்குக் கொடாது." காயீன் பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருந்தானே; அவன் எப்படிப் பயிரிட்டிருப்பான் என்று சிலர் கேட்கலாம். காயீன்பேரில் போடப்பட்ட இந்தச் சாபம் அவன் சந்ததியாரையும் தழுவினது. அவர்கள் கைத்தொழிலில் முந்தினதைக் கவனிக்கையில், தங்கள் முன்னோரின் தொழிலாகிய விவசாயத்தில் தங்கள் பிரயாசத்துக்குத் தக்கபலன் கிடையாததே முகாந்தரமாயிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

"நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்." காயீன் ஓர் இடத்தில் சஞ்சரிக்கவும் தாபரிக்கவும் ஏதுவற்றவனும் மனவியாகுலங் கொண்டவனும் நாடோடியாய் அலையும்படியான தீர்ப்பைப் பெற்றான். தன்னைக் காண்கிறவர்கள்





13 னார். — அப்பொழுது காயீன் கர்த்தரை நோக்கி:
எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடி
14 யாது.—இன்று என்னை [1]இந்தத் தேசத்திலிருந்து துரத்
திவிடுகிறீர்; [2]நான் உமது சமுகத்துக்கு விலகி மறை
ந்து, பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பேன்;

[1] யோபு. 15. 20–24 நீதி 28. 1.
[2] சங். 51. 11.

தன்னிடத்தில் பழிவாங்குவார்கள் என்ற திகிலும் அவனைப் பிடித்திருந்தது. ஆபேலுடைய மரணகாட்சிகள் அவன் மனதின் கண்களுக்குமுன்பாகப் பயங்கரத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. அவனுடைய பொல்லாத மனச்சாட்சி அவனை வேதனைப்படுத்தினது. ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள் (நீதி. 28: 1.). அவர்கள் பயமில்லாத இடத்தில் பயப்படுகிறார்கள். காயீன்பேரில் கூறப்பட்ட ஆக்கினை, யூதஜனங்கள் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலரையும் கொலைசெய்ததற்காக அவர்களுக்கு நேரிட்ட தண்டனைக்கு முன்னடையாளமாயிருக்கிறது. அவர்கள் பிரத்தியேகமாய்க் காப்பாற்றப்பட்டிருந்தாலும் நிர்ப்பந்தத்துக்கும் நிர்ப்பாக்கியத்துக்கும் உரிய ஜீவசாட்சியாய் விளங்கிவருகிறார்கள். காயீன் தேவகோபத்திற்கு ஜீவஸ்தம்பத்தைப்போலானான். மற்றவர்கள் காயீனுடைய பாதகத்தில் அகப்பட்டுக் காயீன் அநுபவித்த தண்டனையை அநுபவியாதபடிக்கு அவன் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறான்.

**13.** "எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்க முடியாது." சில திருப்புதல்களில் "என் பாவம் மன்னிக்கப்படுவதற்கு மிகவும் பெரிதாயிருக்கிறது" என்றிருக்கிறது. அப்படியானால் என் பாவம் மன்னிக்கப்படக் கூடாததாயிருக்கிறது. அதினால் உண்டான பயன் என்னால் சகிக்க முடியாததுமாயிருக்கிறது" என்று அர்த்தப்படுத்தலாம். காயீனிடத்தில் காணப்பட்ட இந்தத் துக்கம் தேவேத்தனமானதல்ல. அது ஏசா, சவுல், யூதாஸ், என்பவர்களுடைய துக்கத்தைப்போலிருந்தது.

**14.** "இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்." எபிரெயுவில் இன்று "என்னைப் பூமியிலிருந்து துரத்திவிடுகிறீர்" என்றிருக்கிறது. காயீன் பூமியில் நிலையற்றவனும் அலைகிறவனுமாயிருக்கும்படி தண்டிக்கப்பட்டான். ஆதலால் அவன் வாசம்பண்ணிவந்த தேசத்திலிருந்தும், அவன் சகோதரருடைய ஐக்கியத்திலிருந்தும், இச்சீவனுக்குரிய சுகாநுபவங்களை அநுபவியாதபடி துரத்திவிடப்பட்டான். (சங். 1: 4. ஓசி. 13: 3.)

"உமது சமுகத்துக்கு விலகி மறைந்து." (i) தேவன் ஏதேனில் அடிக்கடி காட்சி அருளினார். பின்பு வேளாவேளைகளில் தரிசனமாகியும் இருக்கலாம் (4. வச.). (ii) அல்லது "சமுகம்" என்பது தெய்வீக வணக்கத்துக்காகப் பிரதிஷ்டையாக்கப்பட்டிருந்த ஒரு விசேஷித்த இடத்தை இங்கே குறிக்கலாம். அந்த இடத்தில் தேவன் சில விசேஷித்த தருணங்களில் தமது திருவுளசித்தத்தை வெளிப்படுத்தியிருக்கலாம். அந்த இடத்துச் சலாக்கியத்தைக் காயீன் இழந்துபோவதை இங்கே குறிக்கலாம். (iii) ஆத்தும பிரகாரமாய் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக வரத்தக்க பாக்கியத்தை இழந்துவிட்டான் என்றும் அர்த்தப்படுத்தலாம் (ஏசா. 59: 2.). பாவமானது அவனுக்கும் தேவ

[1]என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக்கொன் | 1 ஆதி. 9. 6. எண். 35. 19, 21, 27.
15 றுபோடுவானே என்றான். — அப்பொழுது கர்த்தர்
அவனை நோக்கி: காயீனைக் கொல்லுகிற எவன்மேலும்
[2]ஏழுபழி சுமரும் என்று சொல்லி; காயீனைக் கண்டு | 2 சங். 79. 12.
பிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதப

னுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கிற்று. இனி தேவனுடைய இரக்கத்துக்கு அன்னியனும் அவருடைய கிருபாகடாட்சத்தை அனுபவியாதவனும் தனது ஆயுசுகாலத்தைக் கழிக்கவேண்டியதிருந்தது.

"என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே." காயீன் தன் முந்தினபாவங்களோடே அவநம்பிக்கையினாலே நடுக்கம்பிடித்தவனாய் ஆறாக்கவலைக் குட்பட்டான் என்று இங்கே பார்க்கிறோம். ஆதாமுக்கு வேறே பிள்ளைகளும் இருந்ததாய் (ஆதி. 5: 4.) அறிகிறோம். ஆதாமுக்கு 33 குமாரரும் 27 குமாரத்திகளும் இருந்ததாகப் பாரம்பரியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் காயீன் உயிரோடே சபிக்கப்பட்டவனாய் அலைந்து திரியும்படி தேவன் தீர்ப்புச்செய்தார். அவர் அவனைக் கொலைக்கு நியமிக்கவில்லை. அப்படியிருக்கக் காயீன் வீண் எண்ணங்கொண்டு பயத்தினால் என்னைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்றுபோடுவானே என்று சொன்னான் என்றறிகிறோம்.

**15.** "அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி." அநேக திருப்புதல்களில் "கர்த்தர் காயீனை நோக்கி அப்படியல்ல" என்று போட்டிருக்கிறது. காயீனுடைய எண்ணம் தப்புள்ளதென்று உணர்த்தும்படியாக அப்படிச் சொன்னார்.

"ஏழுபழி சுமரும்." தேவன் பழிவாங்குகிறவர் என்று மற்றவர்களுக்கு விளக்கிக் காட்டுவதற்குத் திருஷ்டாந்தமாகக் காயீனுடைய ஜீவன் நிர்ப்பந்த நிலைமையில் வைக்கப்பட்டிருக்க, அவனை யாராவது தேவதீர்மானத்துக்கு விரோதமாய்க் கொலைசெய்கிறதாயிருந்தால் அப்பேர்ப்பட்டவன் அநேக அல்லது பூரண தண்டனைகளை அடைவான். ஏழு என்பது பூரணத்தைக் குறிக்கும். மரணத்தின் பயன் இன்னபடி இருக்கும் என்று தெரியாமல் காயீன் தன் கொடுமையான குணத்தினாலே ஆபேலை அடிக்க அவன் இறந்துபோனான். ஆனதால் காயீன் ஜீவனை மாய்க்கவேண்டுமென்று மனதாரப் பழிசெய்கிறவன் அதிகமான தண்டனையை அநுபவிப்பான். காயீனுடைய திகிலை நீக்கும்படியாகத் தேவன் இவ்வகையாய் அவனிடத்தில் சொன்னார். சிலர் ஏழு என்ற இலக்கம் சிருஷ்டிப்பைப்பற்றிய வைதீக எண்ணானதால் காயீனுடைய ஜீவன் கர்த்தருடைய காவலுக்குட்பட்டதென்று தாற்பரியஞ் சொல்லுகிறார்கள். அப்படியானால் கைப்பிசகாய்க் கொலைசெய்தவனுக்கு ஏற்படுத்தப்பட்ட அடைக்கலப் பட்டணங்களுக்கு மூலத்தை இங்கே கவனிக்கலாம்.

பூர்வீக நூலாசிரியன் ஒருவன் காயீனுடைய பாவம் ஏழுமடங்கு அதிகரித்ததாயும் அதற்கு ஏழுவகைத் தண்டனை வந்ததாயும் எழுதியிருக்கிறான்.

அவையாவன: I. "காயீன் செய்த பாவங்கள்." (1) நீதிமானைப் பகைத்தல். (2) சகோதரன்பேரில் பொறாமைகொள்ளுதல். (3) சகோதரனிடத்தில்





டிக்குக் கர்த்தர் அவன்மேல் [1]ஒரு அடையாளத் | 1 எசே. 9. 4, 6.
தைப் போட்டார்.
16 அப்படியே காயீன் கர்த்தருடைய [2]சந்நிதியைவிட் | 2 2 இரா. 13. 23.
டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்
னும் தேசத்தில் குடியிருந்தான்.
17 காயீன் தன் மனைவியை அறிந்தான்; அவள் கர்ப்ப
வதியாகி, ஏனோக்கைப் பெற்றாள்; அப்பொழுது

வஞ்சனை காண்பித்தல். (4) கொல்லுதல். (5) சகோதரனைக் கொலைசெய்தல். (6) உலகத்தில் நடந்த கைமோசக் கொலைக்கு முதல் திருஷ்டாந்தங் காட்டுதல். (7) தேவனிடத்தில் பொய்சொல்லுதல் என்பவைகளே.

II. "தண்டனைகள்." (1) பூமி சபிக்கப்படுதல். (2) அலைகிறவனும் நிலையற்றவனுமாகுதல் (3) தேவசமுகத்தைவிட்டுத் துரத்தப்படுதல். (4) மனிதருடைய பகை உறுதல். (5) பலனில்லா உழைப்பு. (6) குற்றமுள்ள பயங்கரங்களால் திகிலடைதல். (7) அவமானமாய்ப் பங்கபபடுதல் என்பவைகளாம்.

"கர்த்தர் அவன்மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார்." எபிரெயுவில் காயீனைக் கண்டுபிடிக்கிறவன் எவனும் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் "கர்த்தர் அவனுக்கு ஒரு அடையாளத்தை ஏற்படுத்தினார்" என்றிருக்கிறது. இந்தப்படியே இனிமேல் உலகத்தை ஜலப்பிரளயத்தால் அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் நோவாவுக்கு வானவில்லை அடையாளமாக ஏற்படுத்தினார். தேவன் இப்பத்தையிலே ஒரு அதிசயகாரியத்தைக் காயீனுக்கு அடையாளமாக ஏற்படுத்தியிருக்கலாம். அது திரும்பத் திரும்பச் சம்பவிக்கையில், அது காயீனுடைய மனதிலுண்டான திகிலுக்கு அமைதலைக் கொடுக்கிறதாயிருக்கும். அதால் தன்னை ஒருவரும் கொலைபுரியமாட்டார்கள் என்ற நம்பிக்கையுள்ளவனாய் இருந்திருப்பான்.

**16.** "காயீன் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு." தேவன் தம்மைக் காட்சிஅருளும் இடத்தைவிட்டு அல்லது ஆதாமும் அவன் குடும்பத்தாரும் தேவனை வணங்கும் பரிசுத்த ஸ்தலத்தைவிட்டுப் புறப்பட்டுப்போனான் (14-ம் வச. வியாக்கியானத்தைக் காண்க.). அவன் சபையைவிட்டு நீக்கப்பட்டவன்போலானான். இதற்கப்பால் காயீன் தேவனுடைய கிருபையுள்ள சமுகத்தைக் கண்டதாக நாம் வாசிக்கிறதில்லை. அந்தச் சிலாக்கியத்தை அவன் முற்றும் இழந்துபோனதாகத் தோன்றுகிறது. "நோத் என்னும்." நோத் என்பதற்குத் திரிதல் அல்லது ஓடிப்போகுதல் என்று அர்த்தம்; அது ஏதேனுக்குக் கிழக்கே இருந்தது.

**17.** "ஏனோக்கைப் பெற்றாள்." இந்த அதிகாரத்திலும் அடுத்த அதிகாரத்திலும் வருகிற அட்டவணைகளை ஒத்துப்பார்க்கிறவர்களில் சிலர் ஆதாம், ஏனோசுக்கு (மனிதன்) ச்சரி; ஏனோக்கு, ஏனோசுக்குச் சரி; காயீன் கேனானுக்குச் சரி; ஈராத்து யாரேத்துக்குச் சரி; மெகுயவேல் மகலாலெயேலுக்குச் சரி; மெத்தூசவேல், மெத்தூசலாவுக்குச் சரி என்று சொல்லுவார்கள். ஆனால் முதலாவது இந்தப் பெயர்கள் ஒன்றுக்கொன்று இசைவாயிருந்தாலும் அவைகளின்

அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்ட
ணத்துக்குத் தன் குமாரனுகிய ஏனேக்குடைய பே
18 ரை இட்டான்.—ஏனேக்குக்கு ஈராத் பிறந்தான்;
ஈராத் மெகுயவேலைப் பெற்ருன்; மெகுயவேல் மெத்
தூசவேலைப் பெற்ருன்; மேத்தூசவேல் லாமேக்கைப்
பெற்ருன்.
19 லாமேக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகம்பண்ணி
ஞன்; ஒருத்திக்கு ஆதாள் என்று பேர், மற்ருருத்
20 திக்குச் சில்லாள் என்று பேர்.—ஆதாள் யாபாலைப்
பெற்ருள்; அவன் கூடாரங்களில் வாசம்பண்ணுகிற

பதமூலம் வெவ்வேருயிருக்கிறது. இரண்டாவது சொற்பமான நாமங்கள்மா, திரம் ஆதிகாலத்தில் வழங்கப்பட்டுவந்ததால் பற்பல குடும்பங்களில் அதே பேர்கள் அல்லது அவைகளுக்கொப்பான நாமங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கலாம். மூன்ருவது சேத்து, காயீன் என்பவர்களுடைய குடும்பத்தாருக்கு இருந்த இனப்பொருத்தம் வேளாவேளையில் உண்டான சம்பந்தப்பொருத்தம், இவைகளினுல் ஒரு குடும்பத்திலுள்ள நாமம் இன்னொரு குடும்பப்பிள்ளைகளுக்கு இடப்பட்டிருக்கலாம். காயீன் வம்சத்திலுள்ள ஏனேக்கு லாமேக்கு என்பவர்களுடைய சரித்திரங்கள், சேத்தின் குடும்பத்தில் அதேபேர்களுடைய சரித்திரங்களைப்பார்க்கிலும் அதிக விவரமாய்ச் சொல்லியிருப்பதால் இரண்டு வம்சவரிசைகளும் வெவ்வேறேயென்று சொல்லத்தக்கது. ஏனேக் என்பதற்குக் கல்வி பயிற்றப்பட்டவன் அல்லது பிரதிஷ்டை செய்யப்பட்டவன் என்றர்த்தம்.

"அவன் ஒரு பட்டணத்தைக் கட்டி." "கட்டத் துவக்கினுன்" அல்லது "கட்டிக்கொண்டிருந்தான்" என்றிருக்கவேண்டியது. ஒரு பட்டணத்தில் வாசம்பண்ணத்தக்கதாய்ப் போதுமான குடிகள் அப்போது இருந்ததென்பது சந்தேகம்; ஆனுலும்காயீன் தனக்கும் தன் பின்சந்ததியாருக்கும்உபயோகமாயிருக்கவும், அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் பலத்த கூட்டமாக வாசமாயிருக்கவும், அதைக் கட்டிப் பிரதிஷ்டை செய்தான். காயீன் பட்டணத்தைக் கட்டி அதில் குடியிருந்ததைப் பார்க்கையில் அவனுக்குண்டாயிருந்த பயங்கரங்கள் நீங்கி இருந்ததாகக் காணப்படுகிறது.

**18.** "ஈராத்" என்பதற்குப் பட்டணத்தான் என்றும் மெகுயவேல் என்பதற்கு தேவனுல் அடியுண்டவன் என்றும் மெத்தூசவேல் என்பதற்கு தேவனுடைய வீரன் என்றும் லாமேக்கு என்பதற்குப பெலமான வாலிபன் என்றும் அர்த்தமாம்.

**19.** "லாமேக்கு இரண்டு ஸ்திரீகளை விவாகம் பண்ணினுன்." லாமேக்கு முதலாவதாக ஆதிவிவாக ஏற்பாட்டைக் குலைத்தவன். ஆனுல் ஆதிமுதல் ஒரு புருஷனுக்கு ஒரேமனைவி இருந்தாள். ஆதாள் என்பதற்கு "ஆபரணம்" என்றும், சில்லாள் என்பதற்கு "நிழல்" என்றும் அர்த்தமாம்.

**20.** "யாபால்............தகப்பனுனுன்." யாபால் என்பதற்கு "அலைகிறவன்" அல்லது ஓடை என்றர்த்தம். அவன் முதலாவது கூடாரத்தொழிலைக்





வர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்ப
21 னுனுன்.—அவன் சகோதரனுடைய பேர் யூபால்;
அவன் கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும்
22 தகப்பனுனுன்.—சில்லாளும் தூபால் காயீனைப் பெற்
ருள்; அவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழி
லாளர் யாவருக்கும் ஆசாரியனுனுன்; தூபால் காயீனு
23 டைய சகோதரி நாமாள்.—லாமேக்கு தன் மனைவிக
ளைப்பார்த்து: ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக்

கண்டுபிடித்தான். அவன் வம்சத்தார் கூடாரங்களில் வாசம்பண்ணி, மேய்ச்சலுள்ள இடங்களில் சென்று, ஆடுமாடுகளை மேய்க்கிறவர்களானுர்கள். மூற்பிதாக்களுடைய ஜீவனுர்த்தம் அத்தன்மையுள்ளதாயிருந்தது (எபி. 11: 9, 10.). இங்கே சொல்லப்பட்டிருக்கிற மந்தையானது இரண்டாம் வசனத்தில் சொல்லியதைவிட பெரியவைகளான மாடுகளையும் குறிக்கும். ஆபேல் ஆடுகளை மேய்த்தபோது தன்தகப்பன் வாசம்பண்ணின இடத்தைவிட்டுத் தூரமாய்ப் போகவில்லை. யாபாலின் புத்திரரோ தொலைதூரமான இடங்களிற் சென்று தங்களுடைய தொழிலை நடப்பித்தார்கள்.

**21.** "யூபால்." இவன் சங்கீத வாத்தியங்களை முதலாவது உண்டுபண்ணினவன். இங்கே கின்னரம் என்ற வார்த்தை எபிரெயுவில் கின்னேர் என்று வருகிறது.

**22.** "தூபால் காயீன்." என்பதற்குக் "கன்னுன்" என்றர்த்தமாம். விவசாயத்துக்கும், சண்டைக்கும், வேட்டைக்கும், பிரயோசனமான ஆயுதங்களை முதலாவதாகக் கண்டுபிடித்தவன் இவன்தான்; இந்த வித்தைகளைக் கெட்டதூதரிடத்திலிருந்து கற்றுக்கொண்டதாய் ஏனேக்குடைய புஸ்தகமென்னப்பட்ட கதைபுஸ்தகத்தில் சொல்லியிருப்பது அபத்தம். அது தெய்வீகவரமாய்க் கொடுக்கப்பட்டது. பெசலெயேலுக்குக் கைத்தொழிலைச் செய்ய விசேஷித்த வரம் அருளப்பட்டதாக வாசிக்கிறேரும் (யாத். 31: 1-5.). இவ்வகை வரம் நல்லோர் பொல்லோர் யாவருக்கும் வித்தியாசமின்றி அருளப்படுவதுண்டு.

காயீனுடைய வித்தார் கைத்தொழில் முதலியவைகளில் தேறி ஐசுவரியத்தில் பெருகி, மாமிசசிந்தைக்கு இடங்கொடுத்து, அவபக்தியுள்ளவர்களாய் வளர்ந்துவருகையில், சேத்தின் புத்திரர் தங்கள் மனச்சாட்சியின்படி நடந்து தேவகிருபையின்பேரிலும் அவருடைய பராமரிப்பின்பேரிலும் விசுவாசமுள்ளவர்களாய் ஜீவனம் பண்ணிவந்தார்கள்.

"ஆசாரியனுனுன்." அத்தொழில்களைக் கற்றுக்கொடுக்கிறவனுயிருந்தான். நாமாள் என்பதற்குச் "சௌந்தரி" என்றர்த்தம். இவள் இராட்டினவேலையைக் கண்டுபிடித்தவளாயிருக்கலாம். பூர்வீகத்தார் கைத்தொழிலில் தேறிவந்ததுபோல இல்லறவாழ்க்கையிலும் முன்னுக்குவந்ததாக இந்தச் சங்கதியினுல் தோன்றுகிறது என்று சிலர் அபிப்பிராயப்படுகிறுர்கள்.

**23.** "லாமேக்கு தன் மனைவிகளைப் பார்த்து." இந்த வாக்கியத்தின் கருத்து இதுதானென்று நிர்மாணமாய் வியாக்கியானம்பண்ண ஏதுவில்லை, லாமேக்கு இரண்டு மனைவிகளை விவாகம் பண்ணினதில், உலகவழக்கத்துக்கும்

கேளுங்கள்; லாமேக்கின் மனைவிகளே, என்சத்தத்துக்
குச் செவிகொடுங்கள்; எனக்குக் காயமுண்டாக ஒரு
மனுஷனைக் கொன்றேன்; எனக்குத் தழும்புண்டாக
24 ஒரு வாலிபனைக் கொலைசெய்தேன்;—காயீனுக்காக
ஏழுபழிசுமருமானால், லாமேக்குக்காக எழுபத்தேழு
பழி சுமரும் என்றான்.

25 பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான்;
அவள் ஒரு குமாரனைப் பெற்று: காயீன் கொலைசெய்த
ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு
புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச்
26 சேத் என்று பேரிட்டாள்.—சேத்துக்கும் ஒரு குமா

ஆதிகட்டளைக்கும் விரோதமாய் நடந்துகொண்டதால், அவனைத் தண்டிக்கச் சிலர் ஏற்பட்டார்கள் என்றும், இதையிட்டு அவன் மனைவிகள் அவன் ஜீவனுக்காகப் பயந்தமையால் அவன் அவர்களை ஆறுதல் படுத்தும்படி, "நான் யாரையாவது கொலைசெய்தேனோ அப்படிச் செய்திருப்பதில்லையே, பின்னை யேன் நீங்கள் என் ஜீவன் அபாயத்துக்குள்ளாகும் என்று பயப்படவேண்டும்" என்று தேற்றினான் என்றும் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வேறு சிலர் லாமேக்குத் தன் ஜீவனைப் பாதுகாக்கும்படியாகத்தன்னைக் கொலைசெய்யும்படி காயப்படுத்தின ஒரு வாலிபனைக் கொன்றதால் தான் பழிக்கு நீங்கலானவன். அதையிட்டு எவனாவது தன்னைக் கொலைசெய்கிறதாயிருந்தால் அப்பேர்ப்பட்டவன் குற்றமில்லாத என் ரத்தத்தைச் சிந்துகிறவனாயிருப்பான்; அவன்பேரில் 77 பழி சுமரும். ஆதலால் ஒருவனும் தன்னைக் கொலைசெய்யமாட்டான் என்று தன் மனைவிகளைத் தேற்றினான் என்கிறார்கள்.

கவனிப்பு. இவ்வசனம் செய்யுட்போக்குள்ளது. ஆதலால், அக்காலத்தோருக்கு அதின் பொருள் வெகு இலேசாய் விளங்கியிருந்தாலும் இக்காலத்தில் அதின் கருத்துத் தென்படுவது அரிது.

25. "சேத்." இதற்கு "வைக்கப்பட்டவன் அல்லது ஆசனம்" என அர்த்தமுண்டு. மூலபாஷையில்,—தேவன் எனக்கு வேறொரு புத்திரனை வைத்தார், (ஷாத்) என்று சொல்லி, அவனுக்கு ஷேத் (வைக்கப்பட்டவன்) என்று பேரிட்டாளென்றிருக்கிறது. ஆபேலுக்குப் பதிலாக அருளப்பட்ட சேத் என்பவனிலிருந்து, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியார் எழும்பினார்கள். ஆதாமுடைய பிள்ளைகளில் மூவருடைய பேர்கள்மாத்திரம் வேதத்தில் கண்டிருக்கிறது. ஆபேல் தேவபக்தியுள்ளவனாயிருந்து அகாலமரணமாய் மரித்ததால் அவன் பேர் எழுதப்பட்டிருக்கிறது; காயீன் மூத்தவனாயும், பொல்லாதவனாயும், அவன் சந்ததியார் லோகஞானத்தில் தேறினவர்களாயும் இருந்ததால் அவன் பேர் சொல்லப்பட்டிருக்கிறது. சேத் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட வித்தானவருக்கு முற்பிதாவாயிருந்ததால் இவனுடைய பேரையும் காட்டியிருக்கிறது.





ரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்
டான்; அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்
தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்.

26. "ஏனோஸ்" என்பதற்கு "மனுஷன்" என்றர்த்தம். கிறிஸ்து இரட்சகர், தானி. 7. 13-ம் வசனத்தில் பர்-ஏனோஸ் அதாவது மனிதகுமாரன் என்றழைக்கப் பட்டிருக்கிறார்.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்." சிலர், மனுஷர் கர்த்தருடைய நாமந் தரிக்கப்பட ஆரம்பமாயிற்று என்று திருப்புவார்கள். இந்தக் கருத்தின்படி புதிய உடம்படிக்கையின் விசுவாசிகள் கிறிஸ்தவர்கள் என்றழைக்கப்பட்டதுபோல, பழைய உடம்படிக்கையின் விசுவாசிகள் தேவநாமத்தினால் அதாவது பின்வருகிற அதிகாரங்களில் சொல்லியபடி தேவபுத்திரர் என்று அழைக்கப்பட்டார்கள் என்று சொல்லலாம்.

சிலர் யெகோவா என்கிற பெயர் தேவநாமமாக அதுமுதல் வழங்கப்பட்டது என்றும், அதற்கு முந்திவருகிற அந்தப் பதம் நூலாசிரியனால் உபயோகிக்கப்பட்டதென்றும், பிற்பாடு யூதருடைய உடம்படிக்கையின் தேவனைத் தம்மை அந்தப்பெயரால் வெளிப்படுத்தினார் என்றும் சொல்லுகிறார்கள்.

சமாரிய பஞ்சாகமத்தில் "அவன் (ஏனோஸ்) தேவனைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தான்" என்று போட்டிருக்கிறதையும் அவன் (சேத்) அப்படிச் செய்ய ஆரம்பித்தான் என்று சிலர் சொல்லுகிறதையும் நாம் கவனிக்கலாம். கிரேக்குத் திருப்புதலில் இவன் (ஏனோஸ்) கர்த்தராகிய தேவனுடைய நாமத்தைத் தொழுதுகொள்ள நம்பிக்கையுள்ளவனானென்று இருக்கிறது.

சிலர், மனிதர் வெளியரங்கமாய்க் கூட்டங்கூடி தேவனுக்கு ஆராதனை செய்யத் துவக்கினார்கள் என்கிறார்கள். இது சரியான அர்த்தமென்று காணப்படுகிறது.

யூதர் நீதியைப் பிரசங்கித்தவர்களில் ஏனோஸ் முதல்வனாயிருந்தான் என்கிறார்கள்.

## படிப்பினை.

### வச. 1—7.

(1) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் குறிக்கப்பட்டகாலத்தில் எவ்விதத்திலும் நிறைவேறும். அவைகள் சம்பவிக்கும் காலத்துக்காகக் காத்திருப்பதே நலம். காலத்துக்கு முந்தி ஆத்திரப்பட்டால் நமது நம்பிக்கை அவமாய் முடியும்.

(2) தேவ நியமிப்பின்படி செய்வதினாலேமாத்திரம் நாம் தேவனாலே அங்கீகரிக்கப்படலாம்.

(3) அகந்தை, அவிசுவாசம், மாயம் இவைகளெல்லாம் மனிதருக்குப் பெரும் நஷ்டத்தை உண்டுபண்ணும். நாம் செய்யும் காரியங்களிலே சித்திபெறாதிருந்தால் சஞ்சலத்துக்கும் குரோதத்துக்கும் இடங்கொடாமல் அதற்குக் காரணமான பாவங்கள் இன்னின்னவைகள் என்று கண்டுபிடித்து அவைகளை வெறுத்துத் தள்ளவேண்டும். அப்போது பின்னுக்கு நம்முடைய காரியங்களில் சித்திபெறலாம்.

(4) பிசாசுக்கு இடங்கொடுத்துப் பகைகளையும் விரோதங்களையும் மனதில் பேணி வளர்த்துவந்தால், என்னமோசத்துக் குள்ளாவோமோ யாருக்குத் தெரியும்? கொலைபாதகத்துக்கும் அதால் ஆளாகலாமே.

வச. 8—26.

(5) இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் நம்முடைய ஆதித் தாய்தந்தை களுக்கு எவ்வளவு மனவியாகுலத்தை உண்டுபண்ணியிருக்கும்.

(6) ஆபேல் மரித்தும் இன்னும் பேசுகிறான். கொலைபாதகத்தின் தோஷத்தை எடுத்துக்காட்டி, கோபத்துக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்றும், விசுவாசிகளுக்கு பூரணபாக்கியம் இம்மையில் கிடையாது என்றும், நீதிமான்கள் இம்மையில் துன்பங்களை எதிர்நோக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள் என்றும், அவர்கள் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே அவர் பிராயச்சித்தத்தின்மூலமாய் நித்தியஜீவனை அநுபவிக்கலாம் என்றும் அவன் பிரசங்கிக்கிறவனாயிருக்கிறான்.

(7) காயீன் பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் கிரியைகள் பொல்லாதவைகளும் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தம் ஆபேலைக் கொலைசெய்தான். சர்ப்பத்தின் வித்துக்கும் ஸ்திரீயின் வித்துக்கும் அதுமுதல் போராட்டமுண்டாகி, இந்நாள்பரியந்தம் நடந்துகொண்டுவருகிறது. காயீன் எக்காலத்திலும் எந்தச் சாதியாருக்குள்ளுமுள்ள வேதவிரோதிகள், பரிசேயர், வெளி ஆசாரக்காரர், துன்பப்படுத்துகிறவர்கள் முதலியவர்களுக்குப் பிதாவாயிருக்கிறான். இந்தப் போராட்டத்தில் நாம் எல்லாரும் சம்பந்தப்பட்டிருக்கிறோம். நம்முடைய தளகர்த்தர் "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" என்று சொல்லியிருக்கிறார். நாம் அவருடைய சேனையோடே சேர்ந்துகொண்டு, அவர் கொடியின்கிழ் அடங்கி, பயப்படாமலும், அவிசுவாசங்கொள்ளாமலும் நம்முடைய சிலுவை எடுத்து அவருக்குப் பின்சென்று, சாத்தானுடைய பொய்மதங்களுக்கு விரோதமாய்ச் சத்தியத்தை நிலைநிறுத்தப் பிரயாசப்படக்கடவோம். துன்பங்கள் பிரளயம்போல வந்து நம்மைச் சூழ்ந்துகொண்டாலும், மரணபரியந்தம் உண்மையாயிருந்தால் ஜீவகிரீடத்தைப் பெறலாம்.

(8) ஆபேலின் இரத்தம் பழிவாங்கும்படி சப்பிட்டது. கிறிஸ்துவின் இரத்தமோ, கிறிஸ்துவைக் கொலைசெய்தவர்களுக்கும் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் கிருபையையும் கொடுக்கும்படி கிருபாசனத்துக்கு முன்பாகப் பரிந்துபேசுகிறது.

(9) பாவியானவன் தன் குற்றத்தை மறைப்பதிலே அவனுக்குப் பிரயோசனமுண்டோ? வானமும் வையகமும் நரகமும் ஒன்றுகூடி அவனுக்கு விரோதமாய்த் தீர்ப்புச் செய்யும்.

(10) முதல்பட்டணம் பொல்லாத காயீனால் கட்டப்பட்டது. அவன் வித்தார் அநேக நூதனங்களைக் கண்டுபிடித்தார்கள். ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இருளின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள்.

(11) லௌகிக சிந்தையுடையோருக்கும் வைதிக சிந்தையுடையோருக்குமுள்ள வித்தியாசங்கள் இச்சரித்திரத்தில் திருஷ்டாந்தப்பட்டிருக்கின்றன. மாம்ச சிந்தையுள்ளவர்கள் லோகமேன்மை முக்கியமென்றெண்ணி சாஸ்திரங்களைக் கற்றுக் கைத்தொழில்களில் தேறித் திரவியங்களைச் சம்பாதித்து இப்பூலோகத்தில் தங்கள் கீர்த்திப்பிரதாபத்தை ஸ்தாபிக்கிறார்கள். பரமசிந்தையுள்ளவர்களோ லோகவாழ்வு அற்பமென்றறிந்து மேலானவைகளை நாடி, ரக்ஷகராகிய தேவனுடைய நாமத்தைத் தொழுதுகொண்டுவருவதால், நல்ல பங்கைத் தெரிந்துகொண்டவர்களாய்க் காணப்படுகிறார்கள்.





## 5. அதிகாரம்.

1. ஆதாம்முதல் நோவாவரைக்கும் இருந்த ஆதி பிதாக்களின் வம்சவரலாற்றையும், ஆயுள் மரணம் முதலியவற்றையும், 24. ஏனோக்குடைய தேவபக்தியையும், அவன் பரகதி சேர்ந்த வழியையும் சொல்லியது.

1 ஆதாமின் வம்சவரலாறு: தேவன் மனுஷனைச்
சிருஷ்டித்த நாளிலே அவனைத் [2]தேவசாயலாக உண்
டாக்கினார். – அவர்களை ஆணும் பெண்ணுமாகச்
சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களைச்
சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று
பேரிட்டார்.

ஆதாம் நூற்று முப்பது வயதானபோது, தன்
சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப்
பெற்று, [3]அவனுக்குச் சேத் என்று பேரிட்டான்.—

[1] 1நாளா. 1.1. லூக். 3. 38.
[2] ஆதி.1.27.1கொ. 11. 7. எபே. 4. 24.
[3] ஆதி 4.25. யோபு. 25.4. யோ. 3. 6. 1கொ.15.39,40.

## 5. அதிகாரம்.

**1.** "ஆதாமின் வம்சவரலாறு." இந்த அதிகாரத்திலே ஆதாம்முதல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாருடைய பேர் அட்டவணை காட்டப்படுகிறது. மெய்த்தேவனைப்பற்றிய அறிவு தொன்றுதொட்டு இறங்கிவந்ததையும் இதினால் அநுமானிக்கலாம்.

"தேவசாயலாக உண்டாக்கினார்." ஆளுகைசெய்யும் விஷயத்தில் மனிதன் சரீரப்பிரகாரமாகத் தேவசாயலின்படி உண்டாக்கப்பட்டான். மேலும் அவன் சுயாதீனசித்தமும் சன்மார்க்கநெறியும் உள்ளவனாகவும் பரிசுத்தத்தில் தேறத்தக்கவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருந்தான். இவைகளை அவன் பாவத்தினால் கறைப்படுத்திப்போட்டிருக்கிறானேயல்லாமல் அவைகளை முழுவதுமாய் இழந்துபோகவில்லை (ஆதி. 9: 6. 1 கொரி. 11: 7. யாக். 3: 9. ஒத்துப்பார்க்க). மனிதனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் அவன் மறுபடியும் சிருஷ்டிக்கப்பட்டு இருவகையிலும் பூரணப்படும்படி வளர்ந்துகொண்டு போகிறான். (1. 26. வியாக்கியானம் பார்க்க.)

**2.** "அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார்." சரீரசம்பந்தமாய் மனுஷன் என்ற பேர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அவர்கள் சந்ததியாருக்கும் பொதுவாய்க் கொடுக்கப்பட்டது. இருவரும் ஒரேமாம்சமாயிருப்பார்கள் என்ற கருத்தின்படியேயும் இந்தப் பேர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இடப்பட்டது என்றும் சொல்லலாம். ஏனெனில் எபிரெயுவில் அது பன்மைச்சொல்லாயிராமல் ஒருமைச்சொல்லாயிருக்கிறது.

**3.** "தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்றான்." முதல்வாக்கியத்தில் ஆதாம் தேவசாயலின்படி உண்டாக்கப்பட்டான் என்றும் இங்கே சேத்தை, ஆதாம் தன் சாயலாகப் பெற்றான் என்றும் சொல்லியிருக்கிறது. தன் சாயலாக என்பது, கறைப்பட்ட தனது சாயலாக என்று அர்த்தப்படும்.

4 ஆதாம் சேத்தைப் பெற்றபின், எண்ணூறு வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும்
5 பெற்றான். — ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம்
தொளாயிரத்து முப்பது வருஷம்; [1]அவன் மரித்
தான்.

6 சேத் நூற்றைந்து வயதானபோது, [2]ஏனோசைப்
7 பெற்றான். – சேத் ஏனோசைப் பெற்றபின், எண்ணூற்
றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமா
8 ரத்திகளையும் பெற்றான். — சேத்துடைய நாளெல்லாம்
தொளாயிரத்துப் பன்னிரண்டு வருஷம்; அவன் மரித்
தான்.

9 ஏனோஸ் தொண்ணூறு வயதானபோது, கேனா
10 னைப் பெற்றான். — ஏனோஸ் கேனானைப் பெற்றபின்,
எண்ணூற்றுப் பதினைந்து வருஷம் உயிரோடிருந்து,

[1] ஆதி. 3 19. எபி. 9. 27.
[2] ஆதி. 4. 26.

5. "ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம்." ஆயுள் வேதியரில் சிலர் மனிதன் இவ்வளவு நீண்ட ஆயுசுக்கு இருப்பது கூடாத காரியம் என்று சாதித்து, வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஆயுளுக்குரிய விஷயம் கிரேக்கர், பாபிலோனியர், எகிப்தியர் இந்துக்களுடைய கட்டுக்கதைகளுக்கு ஒப்பாயிருக்கிறது என்று ஆட்சேபிப்பார்கள்: அதற்கு மாறுத்தரவாக.

1. ஆயுள்வேதக்காரரில் சிலர், மனுஷர் பூர்வீகத்தில் நீண்ட ஆயுசுக்கு இருப்பது கூடாததல்ல என்று சொல்லுகிறார்கள்.

2. நீண்ட ஆயுளைப்பற்றி வேதத்தில் சொல்லியது சத்தியம் என்பதை மற்றச் சாதியாருடைய பாரம்பரியம் உறுதிப்படுத்துகிறது.

3. பூர்வீகத்தார் முதலிலே சாகாவரம் பெற்றவர்களாகிய ஆதாம் ஏவாளிலிருந்து தோன்றினபடியாலும் அவர்கள் வாசம்பண்ணிவந்த தேச சுவாஸ்தியம், போசித்த போஜனம் முதலியவைகள் தேகபெலனுக்கு மெத்தவும் அநுகூலமானபடியினாலும் அவர்கள் நீடியவயதுக்கு ஜீவிக்கக்கூடியதாயிருந்தது. பூர்வத்தார் நீடிய ஆயுசுக்கு இருந்ததால் தெய்வீக சத்தியத்தைக் கலப்பில்லாமல் துப்பரவாய்த் தங்கள் பிள்ளைகளுக்கும் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் படிப்பிப்பதற்கு அநுகூலமாயிருந்தது.

"அவன் மரித்தான்." இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறவர்கள் நீண்ட ஆயுசுக்கு இருந்தபோதிலும், ஒருவராவது 1000 வயதுக்கு வந்தெட்டவில்லை. கடைசியாக எல்லாரும் மரித்தார்கள் என்று சொல்லியிருக்கிறது. நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்ற சாபம் ஒவ்வொருவரிலும் நிறைவேறினது.

9. "கேனான்" என்பதற்கு சுதந்தரம் என்றர்த்தம்.





11 குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். — ஏனோ
சுடைய நாளெல்லாம் தொளாயிரத்து ஐந்து வருஷம்;
அவன் மரித்தான்.

12 கேனான் எழுபது வயதானபோது மகலாலெயே
13 லைப் பெற்றான். — கேனான் மகலாலெயேலைப் பெற்ற
பின் எண்ணூற்று நாற்பது வருஷம் உயிரோடிருந்து,
14 குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். — கேனா
னுடைய நாளெல்லாம் தொளாயிரத்துப் பத்து வரு
ஷம்; அவன் மரித்தான்.

15 மகலாலெயேல் அறுபத்தைந்து வயதானபோது,
16 யாரேதைப் பெற்றான். — மகலாலெயேல் யாரேதைப்
பெற்றபின், எண்ணூற்று முப்பது வருஷம் உயிரோ
டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்
17 றான். — மகலாலெயேலுடைய நாளெல்லாம் எண்
ணூற்றுத் தொண்ணூற்று ஐந்து வருஷம்; அவன்
மரித்தான்.

18 யாரேத் நூற்று அறுபத்திரண்டு வயதானபோது,
19 [1]ஏனோக்கைப் பெற்றான். — யாரேத் ஏனோக்கைப்
பெற்றபின், எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து,
20 குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். — யாரே
துடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்திரண்டு
வருஷம்; அவன் மரித்தான்.

21 ஏனோக்கு அறுபத்தைந்து வயதானபோது, மெத்
22 தூசலாவைப் பெற்றான். – ஏனோக்கு மெத்தூசலா
வைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே
சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும் குமா

[1] யூதா. 14, 15.

12. "மகலாலெயேல்" என்பதற்குத் தேவஸ்துதி என்றர்த்தம்.

15. "யாரேத்" என்பதற்கு இறங்குதல் என்றர்த்தம்.

18. "ஏனோக்கு" என்பதற்குப் பிரதிஷ்டையாக்கப்பட்டவன் என்றர்த்தம். (4: 17. காண்க.)

21. "மெத்தூசலா" என்பதற்கு அம்பினால் மரணம் என்றர்த்தமாம். அவன் மரித்துப்போன வருஷத்தில் ஜலப்பிரளயம் உண்டானது.

22. "தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து." விசுவாசியாய் நடந்து வந்தான். விசுவாசமில்லாமல் ஒருவனும் தேவனுக்குப் பிரியமாயிருக்கக் கூடாது. அவன் நீதியின் பிரசங்கிகளில் ஒருவனாயிருந்து அவன் காலத்

23 ரத்திகளையும் பெற்றான்.—ஏனோக்குடைய நாளெல்
24 லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம்.-[1]ஏனோக்கு [1] 2இரா.2.11.எபி 11. 5.
தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், கா
ணப்படாமற் போனான்; தேவன் அவனை எடுத்துக்
கொண்டார்.

25 மெத்தூசலா நூற்றெண்பத்தேழு வயதானபோது,
26 லாமேக்கைப் பெற்றான்.—மெத்தூசலா லாமேக்கைப்
பெற்றபின், எழுநூற்று எண்பத்திரண்டு வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும்
27 பெற்றான்.-மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொ
ளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம்; அவன் மரித்
தான்.

தினுள்ள அக்கிரமங்களைக் கண்டித்து நீதிநெறியைப் பிரசங்கித்துத் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைக்குறித்து முன்னறிவித்தான்.

கவனிப்பு.—ஏனோக்குத்திருப்புதலில் தேவனுக்குப் பிரியமானவனாயிருந்தானென்றிருக்கிறது. ஞான ஆகமமென்னப்பட்ட புஸ்தகத்தில் இவனைக்குறித்து,—பின் சந்ததியாரெல்லாருக்கும் தனது மெய்மனஸ்தாபத்தினாலே நல்ல முன்மாதிரியைக் காட்டினானென்று சொல்லியிருக்கிறது. தேவனோடே சஞ்சரித்துக்கொண்டானென்பதிலே ஸ்திரமான அவனுடைய விசுவாசமும் ஜெபத்தினாலும் தியானத்தினாலும் அவன் கர்த்தரோடே ஐக்கியப்படுதலும் அவனுடைய பரிசுத்தஜீவியமும் அடங்கியிருக்கின்றன. ஒரு நல்லவனோடே சஞ்சரித்துக்கொள்வதினாலே, அநேக நல்ல பலன்களை நாம் அடையலாம். அவையாவன:—(1) அவன் சித்தத்தை அறிதல். (2) அவனோடு ஐக்கியமும் பிரியமுமாய் நடக்குதல். (3) அவனைப்போலாகுதல். (4) அவனோடே இனியசம்பாஷணை செய்தல். (5) அவனுக்குச் சகலவருத்தங்களையும் தெரிவிக்குதல். (6) அவன் சகாயத்தைப் பெற்றுக்கொள்ளுதல் முதலியவைகளே.

**24.** "காணப்படாமற்போனான்." ஜீவனுள்ளோர் தேசத்திலே அதாவது இந்த உலகத்திலே இராமற்போனான்.

"தேவன் அவனை எடுத்துக்கொண்டார்." ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்குத் தேவன் பரலோகத்துக்கு அவனை எடுத்துக்கொண்டார். சரீர மரணதண்டனைக்கு அவன் நீங்கலாக்கப்பட்டான். உயிரோடே மோட்சலோகஞ் சென்றான். நியாயப்பிரமாணகாலத்தில் எலியா என்பவன் ஜீவனோடே வானத்துக் கெடுத்துக்கொள்ளப்பட்டான். சுவிசேஷப் பிரயாணகாலத்திலே கர்த்தராகிய இயேசு திரும்பவும் இவ்வுலகத்துக்கு வருகையில் உயிரோடே இருக்கிற விசுவாசிகள் மரணத்தைக் காணாமல் மறுரூபமாக்கப்பட்டுத் தேவனோடே எப்போதும் இருப்பார்கள். (1 தெச. 4: 17.)

ஆதாம் பாவத்தில் விழாதிருந்தால், சிலகாலத்துக்குப் பின்பு, ஏனோக்கைப்போல, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம். ஏனோக்கு வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதைக் கவனிக்கையில் விசுவாசிகளுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிற இன்னொரு உலகம் உண்டென்பதை அறியலாம்.





28 லாமேக்கு நூற்றெண்பத்திரண்டு வயதானபோது,
29 ஒரு குமாரனைப் பெற்று,—கர்த்தர் சபித்த பூமியிலே
நமக்கு உண்டான வேலையிலும் நம்முடைய கைக
ளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான்
என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்
30 டான்.—லாமேக்கு நோவாவைப் பெற்றபின், ஐந்
நூற்றுத் தொண்ணூற்று ஐந்து வருஷம் உயிரோடி
ருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.—
31 லாமேக்குடைய நாளெல்லாம் எழுநூற்று எழுபத்
தேழு வருஷம்; அவன் மரித்தான்.

32 நோவா ஐந்நூறு வயதானபோது, [1]சேம் காம் [1] ஆதி. 6. 10.
[2]யாப்பேத் என்பவர்களைப் பெற்றான். [2] ஆதி. 10. 21.

அவன் ஆதாம் மரித்த 57 வருஷத்துக்குப் பின்னும் நோவாவின் பிறப்புக்கு 69 வருஷத்துக்கு முன்னும் எடுத்துக்கொள்ளப்பட்டான்.

**29.** "நோவா." என்பதற்கு இளைப்பாறுதல் அல்லது ஆறுதல் என்றர்த்தம். இவன் நாட்களில் ஜலப்பிரளயம் உண்டாகி உலகத்தை அழிக்க அது பொல்லாங்கு கொடுமைகளிலிருந்து இளைப்பாறினது. மேலும் விசுவாசத்தினாலே அவன் ஜலப்பிரளயத்துக்குப்பின்பு செலுத்தின பலியை அங்கீகரித்து இனி மனுஷனிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை என்று வாக்குத்தத்தஞ் செய்து பூமியிலே பலுகிப் பெருகவும் பூமியிலுள்ளவைகளை ஆண்டுகொள்ளவுந் தக்கதான ஆசீர்வாதத்தையும் அருளினார். (8: 20-22.)

உலகத்தாருடைய அக்கிரமங்களைக் கண்டு வருத்தமடைந்த தேவனுடைய திருமனசுக்கு நோவாவினுடைய பக்தியும் விசுவாசமும் ஆறுதலைக் கொடுத்ததென்றும் சொல்லலாம். இதற்கு இசைவாக,—ஜலப்பிரளயத்துக்குப்பின்பு நோவா பீடத்தைக்கட்டித் தகனபலிகளைச் செலுத்தினபொழுது,—தேவன் அப்பலிகளைச் சுகந்தவாசனையாக முகர்ந்தாரென்று வாசிக்கிறோம். மூலபாஷையில் ஆறுதலைக் கொடுக்கத்தக்க வாசனை என்றிருக்கிறது (8: 21.). அவ்வசனத்தில் வழங்கப்பட்டிருக்கிற வார்த்தைக்கும் நோவா என்பதற்கும் ஒரே பதமூலமுண்டு.

அதுவுமல்லாமல்,—அக்கிரமமும் அவபக்தியும் எங்கும் நிறைந்த இவ்வுலகத்தில் நோவாவென்பவன் நீதியைப் பிரசங்கிக்கிறவனாய் விளங்கினான் (2 பேது. 2: 5.). இருள்நிறைந்த இடத்தில் வெளிச்சம் உதிக்கிறது மனுஷனுக்கு ஆறுதலும் பிரியமுமாயிருப்பது எப்படியோ அப்படியே அந்தகாரம் மூடிக்கொண்ட உலகத்தில் இப்பக்திமானுடைய பரிசுத்த ஜீவியம் கர்த்தருடைய திருவுளத்திற்கு ஆறுதலும் பிரியமுமாயிருக்கும்.

**32.** "சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றான்." நோவாவுக்கு 500 வயதுவரையும் பிள்ளைகளில்லை. ஜலப்பிரளயத்தில் அவன் மூன்று குமாரருக்கும் பிள்ளைகள் இல்லாதிருந்தது (11: 10.). இந்த மூவரிலிருந்து

மனிதஜாதிகள் பிரிந்தார்கள். சேம் என்பதற்கு நாமம் அல்லது கீர்த்தி என்றர்த்தம். அவன் முதற்பிறப்புச் சுதந்தரத்தைப் பெற்றவனும் நம்முடைய ரக்ஷகருக்கு முற்பிதாவாயும் இருந்தான்.—இதுவே அவனுக்குக் கீர்த்திப்பிரதாபம். காம் என்பதற்குக் கறுப்பன் அல்லது தாபம் என்றர்த்தம். அவன் எகிப்தியர், கூஸ்ஜாதியார், அரபியர், ஆப்பிரிக்கர் முதலியவர்களுக்கு முற்பிதாவாயிருந்தான். யாப்பேத்து என்பதற்கு விசாலமாக்குகிறவன் அல்லது அழகன் என்றர்த்தம். அவன் ஐரோப்பாவிலுள்ள அநேக ஜாதியாருக்கும் ஆசியாவிலுள்ள முக்கியமான தேசத்தாருக்கும் முற்பிதாவாயிருந்தான்.

### படிப்பினை.

### வச. 1—20.

(1) சிருஷ்டிப்புமுதல் ஜலப்பிரளயம் வரையுமுள்ள சரித்திரங்களில தேவன் நமக்கு அறிவிக்கச் சித்தமானது இந்த அதிகாரத்திலடங்கினதுமட்டுந்தான். இதையல்லாமல் வேறே சரித்திரம் உலகத்தில் எங்கும் கிடையாது. பழைய உலகத்தில் பேர்போன ராச்சியங்கள் இருந்திருக்கலாம். பேர்போன ராசாக்கள் தலைவர்கள் அவைகளை ஆண்டிருக்கலாம். அங்கங்கே பெரிய மாறுதல்கள் சம்பவித்திருக்கலாம். விசித்திரமான பலதரக் கிரியைகள் நடந்துமிருக்கும். ஆனால் அவைகள் எல்லாம் விட்டுவிடப்பட்டு மனிதரால் அவமதிக்கப்பட்ட தேவபக்தருடைய சரித்திரங்கள்மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய பார்வையில் பரிசுத்தவான்கள் பேர்போன ராசாக்களைவிடப் பெரியோர்களாயிருக்கிறார்கள். மெய்மார்க்கமே எல்லாவற்றிலும் பெரிய காரியம். மற்றவைகள் எல்லாம் எழுதப்படத் தகுந்தவைகளல்ல.

(2) தேவனுடைய வல்லமையினால் நமது சரீரமானது நமக்குக் குறிக்கப்பட்ட சொற்பகாலம்வரைக்கும் தாங்கப்பட்டுவருகிறது.—அந்த வல்லமையே நாம் மெத்தூசலாவின் வயதுக்கு அல்லது என்றைக்கும் பிழைத்திருப்பதற்கு நம்மைத் தாங்கப் போதுமானதாயிருக்கிறது. சிருஷ்டிகர் குறித்த காலம்வரைக்கும் நாம் இவ்வுலகத்திலிருப்போம். அப்பாலிதைவிட்டுப் போகவேண்டியவர்களாயிருப்பதால், அவருடைய அழைப்புக்கு ஆயத்தமாயிருப்பது நன்மை. நீண்ட ஆயுசும் நித்தியத்தோடே ஒப்பிடப்படுகையில் அது ஒன்றுமில்லை என்றே சொல்லத்தக்கது. குறுகின ஆயுசு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று நாம் துக்கப்படலாகாது. ஆபேல் ஏனோக்கு என்பவர்கள் குறுகின ஆயுசிலே இம்மையைவிட்டுப் போனாலும் பரதிசின் இன்பங்களை அனுபவிக்கவே போனார்கள்.

### வச. 21—32.

(3) எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். அவன் உலகத்தில் பிறந்து, வளர்ந்து, பிள்ளைகளைப் பெற்று மரித்துப்போகிறான். இதுதான் அவன் சரித்திரச்சுருக்கம். அவன் தேவனோடே சஞ்சரித்தாலொழிய மற்றதெல்லாம் வியர்த்தம். தேவனோடே சஞ்சரிப்பது நமக்கு விசேஷித்த கடமையாயிருக்கிறது. அப்படிச் செய்வதில் சிறந்த கனமும் ஆசீர்வாதமுமுண்டு.

(4) பெற்றோர் பிள்ளைகளால் ஆறுதலடையலாம் என்று அடிக்கடி எண்ணுவதுண்டு. பிள்ளைகள் பக்தியுள்ளவர்களாயும் இரட்சண்ய பிரசங்கிகளாயிருந்து அநேகரை மோட்சகரை சேர்ப்பதற்குக் கருவிகளாயுமிருந்தால், தாய்தந்தைகள் அவர்களைவிட்டு அதிகமான சந்தோஷமடைய முகாந்தரமுண்டு. அதுவுமன்றி, தேவனும் அவர்களுடைய நன்னடக்கையைக் கண்டு ஆறுதலடையத்தக்கதாயிருக்கிறது.





## 6. அதிகாரம்.

தேவகோபத்தை எழுப்பி ஜலப்பிரளயத்தை உண்டுபண்ணுவித்த உலகத்தாருடைய அக்கிரமங்களைக்குறித்தும், 8. நோவா கிருபை பெற்று, 14. பேழையை உண்டுபண்ணும்படி கட்டளைபெற்றதைக் குறித்தும் சொல்லியது.

1 மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி, அவர் 1. ஆதி. 1. 28.
களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது:—தேவகுமா
ரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ள
வர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக் 2 உபா. 7. 3, 4.
கு 2 பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். 2 கொ. 6. 14.

### 6. அதிகாரம்.

1. "மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி." நீங்கள் பலுகிப்பெருகிப் பூமியை நிரப்புங்கள் என்று சொன்ன ஆசீர்வாதம் இங்கே நிறைவேறத் துவக்கினது. (1. 28.)

"மனுஷர்" என்பதைச் சிலர் காயீன் சந்ததியார் என்று சொல்லுவார்கள். பொதுப்படச் சொல்லவேண்டுமானால் தேவனை ஆராதிக்கும் கூட்டத்தைச் சேராதவர்களென்று அறியவேண்டியது.

2. "தேவகுமாரர்." இந்தத் தேவகுமாரர் யார், மனுஷ குமாரத்திகள் யார் என்பதைக் குறித்துப் பற்பல அபிப்பிராயங்களுண்டு. அவையாவன:

(1) தேவகுமாரன் என்பது உயர்ந்த ஸ்திதிமான்களான வாலிபரைக் குறிக்கும் (உபா. 14: 2. சங். 82: 6.). மனுஷ குமாரத்திகள் என்பது தாழ்ந்த ஸ்திதியுள்ள கன்னிகைகளைக் குறிக்கும். இந்த அர்த்தப்படி உயர்குலத்தோர் விரகதாபங்கொண்டு தங்கள் வேலைக்காரருடைய குமாரத்திகளைத் தீட்டுப்படுத்தினார்கள் என்று சொல்லவேண்டியது. பூர்வ யூதர் இப்படியே அர்த்தப்படுத்தினார்கள். ஆனால் அக்காலத்தில் உயர்குலத்தோருக்குத் தேவகுமாரர் என்றும் தாழ்குலத்தோருக்கு மனுஷகுமாரர் என்றும் பேர் தரிக்கப்பட்டதாகத் தோன்றுகிறதில்லை.

(2) தேவகுமாரர் என்பது தேவதூதர்களைக் குறிக்கும், அவர்கள் மனிதஜாதியாருடைய இல்லறபாக்கியத்தைக் கண்டு, மனித சரீரத்தை எடுத்து மனுஷகுமாரத்திகளைக் கலியாணம் பண்ணினார்கள். இதுவும் பூர்வீக வியாக்கியானங்களில் ஒன்று (யூதா. 6, 7.). அவர்களைப்போல விபசாரம்பண்ணி அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து என்ற வாசகம் அதற்கிசைவாயிருக்கிறது என்பார்கள் (2 பேது. 2: 4.). ஆனால் தேவதூதர்கள் ஆவிகள்; அவர்களுக்கு மாமிச இரத்தமில்லை. அவர்கள் விவாகம் பண்ணுகிறதில்லை என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (லூக். 20: 35, 36.).

(3) தேவகுமாரர் என்பது சேத்தின் புத்திரரைக் குறிக்கும்; அவர்கள் ஏனோசின் காலமுதல் தேவநாமத்தால் அழைக்கப்பட்டு அவரை ஆராதித்து வந்தார்கள். அவர்கள் அவபக்தியுள்ள காயீனுடைய சந்ததியாரான ஸ்திரீ

3 அப்பொழுது கர்த்தர்: [1]என் ஆவி என்றைக்கும்
மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தா
னே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது
வருஷம் என்றார்.

[1] எசா. 6. 3—10. அப். 7. 51. கலா. 5. 16, 17. 1பே. 3. 19, 20.

களின் சௌந்தரிய ரூபத்தினால் மயங்கி அவர்களை விவாகம் பண்ணினார்கள். (இது கிறிஸ்துமார்க்க ஆதிபிதாக்களின் அபிப்பிராயம்.)

(4) தேவகுமாரர் என்பது சாதாரணமாகத் தேவனுக்கு ஊழியஞ்செய்து வந்த திருச்சபையிலுள்ளவர்களைக் குறிக்கும். அவர்களில் சிலர், மோவாபிய ஸ்திரீகளின்பேரில் மோகங்கொண்டு மயங்கின இஸ்ரவேலரைப்போல, கண்களின் இச்சையினால் மருட்டுண்டு சோகமாகி, தேவனைவிட்டு விலகிப்போனவர்களை விவாகஞ் செய்துகொண்டார்கள். இவர்களே நோவாவின் காலத்தில் பெண்கொண்டும் கொடுத்தும் வந்தார்கள் என்று நம்முடைய ஆண்டவரால் சொல்லப்பட்டவர்கள் (மத். 24: 38, 39.). மூன்றாம் வியாக்கியானமே சரியென்று நினைக்கத்தக்கது.

**3. "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை."** போராடுவதில்லை என்பதை வாசம்பண்ணுவதில்லை என்றும் ஆளுவதில்லை என்றும் தாழ்மைப்படுவதில்லை என்றும் திருப்பலாம் என்று சொல்லுவாருண்டு. கிரேக்குத் திருப்புதலிலும் லத்தீன் திருப்புதலிலும் வாசம்பண்ணுவதில்லையென்றிருக்கிறது. ஆவியானவர் பாவத்தைக்குறித்துக் கண்டித்து உணர்த்துகிறவர் (யோ. 16: 8–11.). மனுஷன் அக்கிரமத்தின்மேல் அக்கிரமத்தைச் செய்கையில் அவரைத் துக்கப்படுத்துகிறவனாயும் (எபே. 4: 30.), விசனப்படுத்துகிறவனாயுமிருக்கிறான் (எசா. 63: 10.). அவர் மனச்சாட்சியினாலும் நீதியைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டும் பாவத்தை உணர்த்திக் குணப்படுவார்கள் என்று நீடிய பொறுமையாயிருந்ததில் அவர்கள் கீழ்ப்படியாமையைக் காட்டிவந்தார். அவர்களோ மனக்கடினத்துக்குள்ளானதால் ஆவியானவர் தமது கிரியையை அவர்களிடத்தில் நடப்பியாதபடிக்கு அவர்களைவிட்டு நீங்கினார். பூர்வத்தாருடைய அழிவு தேவனால் தீர்மானிக்கப்பட்டுப்போயிற்றென்பதற்கு இது ஒரு விசேஷித்த குறிப்பு.

**"அவன் மாம்சந்தானே."** மாமிச சிந்தையுள்ளவன். மாமிசத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள் (ரோ. 8: 6–8.). ஓர்வகையான முரட்டாட்டத்துக்குத் தேவ கிருபையானது செல்லாமல் மட்டுப்பட்டுப் போவதுண்டு (1 சாமு. 16: 14. சங். 51: 11.). சிலர் இந்த வாக்கியத்தை "அவன் குற்றஞ் செய்ததால் முழுவதும் மாமிசமானான்" என்றும் வேறு சிலர் "அவர்களுடைய மாமிசம் குற்றஞ் செய்யப்பண்ணுகிறது" என்றும் வியார்த்தி பண்ணுவார்கள்.

இன்னும் சிலர் மனுஷன் விசேஷித்த வரங்களையும் மேன்மையையும் பெற்றவனானாலும் அவன் சரீரம் மிருகங்களுக்கு ஒப்பாயிருப்பதினாலே அவைகளுக்கு விதிக்கப்பட்டபடியே அவனும் பூலோகத்தில் ஒரு மட்டான காலத்துக்குமாத்திரம் உயிரோடே இருப்பான் என்று அர்த்தப்படுத்துகிறார்கள். அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம். பேழையைச் செய்துமுடிக்க 120 வருஷம் சென்றது. அது முடிந்தவுடனே ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.





4 அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்
கள்; பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே
கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைக
ளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்
பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்.
5 மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது
என்றும், அவன் [1]இருதயத்து நினைவுகளின் தோற்ற
மெல்லாம் [2]நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர்

[1] ஆதி. 8. 21. உபா. 29. 19. மத். 15. 19.
[2] சங். 14. 2.

**4. "அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்."** இராட்சதர் என்பதற்கு எபிரெயுவில் நெபிலீம் என்று பேர். எண்ணாகமம், 13: 33 லும் இந்த நாமம் வருகிறது; இதின் மூலபதம் "விழுதல்" என்று அர்த்தங்கொள்ளும் வார்த்தையிலிருந்து வந்ததென்று சிலர் சொல்லி மற்றவர்கள்மேல் விழுந்து தாக்கும் கொள்ளைக்காரர் என்று வியாக்கியானஞ் செய்கிறார்கள். சிலர் "அதிசயம்" என்றர்த்தங்கொள்ளும் வார்த்தையிலிருந்து உண்டானதென்று அறிவித்து இராட்சதர் அல்லது மென்னம் பெரியவர்கள் என்று வியாக்கியானஞ் செய்திருக்கிறார்கள். இந்த இராட்சதர் தேவகுமாரர் மனித குமாரத்திகளை விவாகஞ்செய்யும் முன்னிருந்ததாக வாக்கியத்தினால் அறிகிறோம். இவர்களைப்போல ரெப்பாயீமியர், ஏனாக்கியர், சூசிமியர், எமியர், ஓரியர் இராட்சதராயிருந்தார்கள்.

**"தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே ................ பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள்."** பலவான்கள் என்பதற்கு எபிரெயுவில் "கிபொரீம்" எனப் பெயர். இங்கே அவர்களுடைய வளர்த்தியைக் குறித்துச் சொல்லாமல் அவர்களின் பராக்கிரமத்தைக்குறித்துக் காட்டியிருக்கிறது. இவர்கள் விவாக சம்பந்தத்தினால் பிறந்த பிள்ளைகள் போர்ப்பிரியராய்ச் சகலவித அக்கிரமத்தையும் நடப்பிக்கிறவர்களானார்கள்.

**5. "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது."** நம்முடைய ஆண்டவர் ஜலப்பிரளயத்துக்கு முன்னானவர்களுடைய பாவங்களை எடுத்துக்காட்டினபோது புசித்துக் குடித்தார்கள் என்றும் பெண்கொண்டும் பெண்கொடுத்துமிருந்தார்கள் என்றும் சொல்லியதைக் கவனிக்கையில், பெருண்டியும், காமவிகாரமும், குரூரமும் தேவனை மதியாமையும் ஆகிய பாதகங்களில் உழன்றிருந்தார்கள் என்றறியலாம்.

**"அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே."** மனிதனுடைய செய்கைகள்மாத்திரமல்ல அவன் சிந்தனைகளும் இரவும் பகலும் இருக்குள்ளதும் கபடம் நிறைந்ததுமாயிருந்தது. (மத். 15: 19. எரே. 17: 9.)

அவர்கள் மனச்சாட்சி சூடுண்டுபோயிற்று. தேவநீதியைக்குறித்து எண்ணமற்றவர்களாய் அவபக்தியில் மூழ்கியிருந்தார்கள். (2 பே. 2: 5.)

**"கர்த்தர் கண்டார்."** இருதயத்தை உண்டுபண்ணினவர் அதின் சிந்தைகளை வகையறுத்தார். அவருடைய சர்வவியாபகத்தில் அவருடைய கண் மனித சிந்தனைகளை ஊடுருவிப்பார்த்தது. (சங். 14: 2, 3; 33: 13–15. நீதி. 5: 21; 15: 3.)

6 கண்டு,—தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கின
தற்காகக் கர்த்தர் [1]மனஸ்தாபப்பட்டார்; அது அவர்
7 இருதயத்துக்கு [2]விசனமாயிருந்தது.—அப்பொழுது
கர்த்தர்: நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல்
வைக்காமல், மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள்
ஊரும்பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்த
மும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணு
வேன்; நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு
மனஸ்தாபமாயிருக்கிறது என்றார்.
8 நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் [3]கிருபை
கிடைத்தது.
9 நோவாவின் வம்சவரலாறு: நோவா தன் காலத்தில்
இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயி

[1] எண். 23. 19. 1 சாமு. 15. 11, 29. 2 சாமு. 24. 16. யாக். 1. 17.
[2] ஏசா. 63. 10.
[3] லூ. 1. 30. எபி. 11. 7.

**6. "கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்."** மனஸ்தாபப்படுதல் விசனப்படுதல் ஆகிய இவைகள் தேவசுபாவத்துக்குரியதல்ல, மனமாற அவர் ஒரு மனுபுத்திரனல்ல (எண். 23: 19.). இவைபோன்றவை உவமான வார்த்தைகள். அவருடைய செய்கைகள் மனிதனுக்கு விளங்கத்தக்கதாக மனுஷர் உபயோகிக்கிற வார்த்தைகளைக்கொண்டு தமது திருவுளச்செயலை வெளிப்படுத்துகிறார். மேலும் மனிதன் தன் கிரியைகளுக்கு உத்தரவாதியானதால் தேவதீர்மானத்தைவிட மனிதனுடைய சுயாதீன சித்தம் வேதத்தில் எங்கும் முக்கியமாய் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். மனிதரை ஜலப்பிரளயத்தால் அழிப்பதும் அவர்கள் நாட்களைக் குறுகப்பண்ணுவதும் அவருடைய தயவுள்ள சித்தத்துக்குப் பிரியமில்லை என்று விளக்கிக்காட்டி மனிதருடைய கொடிய பொல்லாங்குகளினிமித்தம் நீதியின்படி அவர் அவர்களைத் தண்டிக்க அவசியம் நேரிட்டது என்பதை இது உணர்த்துகிறது.

**7. "மனுஷன்முதற்கொண்டு, மிருகங்கள்."** மனிதனுடைய அக்கிரமத்தினிமித்தம் சிருஷ்டிகளும் மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன (ரோ. 8: 19–22.). தேவன் மிருகங்களை விசேஷமாய்த் துஷ்டமிருகங்களை அழித்ததில் அவர் மனிதன்மேல் இன்னமும் தயவுள்ளவராயிருக்கிறார் என்பதை விளங்கக் காட்டினார்.

**8. "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது."** கிருபை என்ற பதம் முதலாவதாக வேதத்திலே இந்த இடத்தில் வருகிறது. தேவ தீர்மானங்கள் நிக்கிரகம் பண்ணவேண்டும் என்றல்ல அநுக்கிரகம் பண்ணிப் புதுப்பிக்கவேண்டும் என்பதேயாம். அந்தப் புதுப்பித்தல் நோவாவோடே தொடங்கினது. உலகத்திலுள்ள மற்றெல்லாரையும் அழிக்கத் தேவன் சித்தங்கொண்டபோது இவனிடத்தில் தமது தயவை விளங்கச்செய்தார்.

**9. "நோவா........நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்."** இயற்கையிலே தேவனுக்கு முன்பாக நீதிமான் ஒருவனுமில்லை. நியாயப்பிரமாணத்தை நிறை





ருந்தான்; நோவா தேவனோடே [1]சஞ்சரித்துக்கொண்டி
10 ருந்தான்.—நோவா சேம் காம் யாப்பேத் என்னும்
11 மூன்று குமாரரைப் பெற்றான்.—[2]பூமியானது தேவ
னுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடு
12 மையினால் நிறைந்திருந்தது.–தேவன் பூமியைப் பார்த்
தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்ச
மான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெ
டுத்துக்கொண்டிருந்தார்கள்.
13 அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி: [3]மாம்ச
மான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது;

[1] ஆதி. 5. 22.
[2] ரோ. 2. 13; 3. 19.
[3] 1பே. 4. 7.

வேற்றி நீதியைச் சம்பாதிப்பதும் மனுபுத்திரரால் கூடாது. நோவா, எபி. 11. 7ல் சொல்லியிருக்கிறபடி விசுவாசத்தினால் நீதிக்குச் சுதந்தரவாளியானான். அவபக்திநிறைந்த உலகத்தார் நடுவிலே அவன் தன் ஜீவகாலமெல்லாம் பயமில்லாமல் பரிசுத்தத்தோடும் நீதியோடும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்து நீதியைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தான். இப்படிச் செய்துவந்ததில் அவன் தன் நடக்கையினாலும் போதனையினாலும் அக்காலத்திலுள்ளோர் நடுவில் சத்தியவந்தனும் உத்தமனுமாய் விளங்கினான்.

**"நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்."** தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவனாயும், தேவபக்தியுள்ளவனாயும், அவர் சித்தத்துக்கு இசைய நடக்கிறவனாயும், செபத்தில் அவருடன் சம்பாஷிக்கிறவனாயும், அவருடைய கட்டளையின்படி செய்கிறவனாயும், அவருடைய பிரியத்தைத் தேடிக்கொள்ளுகிறவனாயும், விசுவாசியாயும் இருந்தான். (5: 22. பார்க்க.)

**11. "பூமியானது .................. சீர்கெட்டதாயிருந்தது."** பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. மனுஷர் பொல்லாதவழியில் நடந்து, கீழ்ப்படியாதவர்களாயும், அநியாயக்காரராயும், விரகதாபமுள்ளவர்களாயும், அவபக்தியுள்ளவர்களாயும் இருந்தார்கள். (2 பேது. 2: 5. 1 பேது. 3: 20.)

பூமி என்பது விஸ்தாரமான கருத்தைக் கொடுக்கும் மூன்று வாக்கியங்களில் அந்த வார்த்தை ஆறுதரம் வருகிறது.

**12. "தேவன் பூமியைப் பார்த்தார்."** கிருபையுள்ள தேவன் பூர்வ உலகத்தாருக்குத் தவணைகொடுத்துத், தீர்க்கதரிசிகளைக்கொண்டு பிரசங்கித்து நீடிய பொறுமையோடே காத்திருந்தும் பின்பு அதைப் பார்க்கும்போது அது அக்கிரமத்தில் வளர்ந்துபோனதைக் கண்டார். தேவன் திடீரெனத் தண்டியாமல் தண்டனையைச் செலுத்துமுன் காரியங்களை நன்றாய்ச் சீர்தூக்கிப் பார்த்தார்.

**13. "மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது."** மனிதனுடைய அக்கிரமத்தின் அளவு நிறைவேறினது. பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக். 1: 15.). நீதியானது நியாயத்தை

அவர்களாலே பூமி கொடுமையினால் நிறைந்தது;
நான் அவர்களைப் பூமியோடேகூட அழித்துப்போடு
வேன்.
14 நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை
உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளை உண்டு
பண்ணி, அதை உள்ளும் புறம்புமாகக் கீல் பூசு.—
15 நீ அதைப் பண்ணவேண்டிய விதம் என்னவென்றால்,
பேழையின் நீளம் முந்நூறு முழமும், அதின் அகலம்
ஐம்பது முழமும், அதின் உயரம் முப்பது முழமு
16 மாய் இருக்கவேண்டும்.—நீ பேழைக்கு ஓர் ஜன்னலை
உண்டுபண்ணி, மேல்தட்டுக்கு ஒருமுழத் தாழ்த்தி
யிலே அதைச் செய்து முடித்து, பேழையின் கதவை
அதின் பக்கத்தில் வைத்து, கீழ் அறைகளையும், இரண்
டாம் தட்டின் அறைகளையும், மூன்றும் தட்டின்

நடப்பிக்கத் தேவஉத்தரவுக்காக அவர் சமுகத்தை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிற பாவனையாகக் காட்டப்பட்டிருக்கிறது. பழைய உலகத்தாருக்குக் கிருபையின் பகல் சென்றுபோயிற்று; கிருபை கிடையா இரவு சமீபமாயிற்று. இது நோவாவுக்கு வெளிப்படுத்தலாக அருளப்பட்டது.

**14.** "கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு." பேழையானது நீர்க்க சதுரமாய் உண்டுபண்ணப்பட்டது. அது யாத்திரை செய்யவல்ல தண்ணீரில் மிதக்கத்தக்கதாய்ச் செய்யப்பட்டிருந்தது. பேழை உருவாக்கப்பட்டதில் (1) நோவாவுடைய விசுவாசத்தையும் பொறுமையையும் பரீட்சிக்கவும், (2) மனிதருக்குத் தங்கள்மேல்வரும் கோபாக்கினைக்குப் பிரத்தியட்சமான எச்சரிப்பாயிருக்கவும் ஏதுவாயிருந்தது. அது லோகரக்ஷகராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது.

"கொப்பேர்" என்பதற்குக் கீல் என்றர்த்தமாம். அந்த மரத்தில் கீல் ஓடுகிறதாயிருக்கும். பூர்வீகத்தார் அதைக்கொண்டு கப்பல் செய்தார்கள். அந்த விருக்ஷம் பாபிலோனியாவிலே திரளாயிருந்ததென்றும், இன்னும் அத்தேசத்தில் மிகுதியாய் உண்டாயிருந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே நோவா ஜலப்பிரளயத்துக்குமுன்பு பாபிலோனியாவில் குடியிருந்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். கொப்பேர் சீப்பிரதேசத்திலுமிருந்ததாம். நோவா இந்தப் பேழையை உண்டுபண்ணினபோது, சேத்தின் புத்திரரும் காயீன்புத்திரரும் அதில் வேலைசெய்திருப்பார்கள்.

**16.** "ஓர் ஜன்னல்." நோவா திறக்கவும் பூட்டவுமாக ஒரே ஒரு ஜன்னல்மாத்திரம் பேழையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் காற்று உலாவ அந்தத் தட்டுச் சுவரின் நான்குபக்கங்களிலும் சிறு கிராதிகள் செய்யப்பட்டிருக்கலாம்.





17 அறைகளையும் பண்ணவேண்டும்.—[1]வானத்தின் கீழே
ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க
நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணு
18 வேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்.—ஆனா
லும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்து
வேன்; நீயும், உன்னோடேகூட உன் குமாரரும், உன்
மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்
19 குள் பிரவேசியுங்கள்.—சகலவித மாம்சமான ஜீவன்
களிலும் ஆணும் பெண்ணுமாக வகை ஒன்றுக்கு
ஒவ்வொரு ஜோடு உன்னுடன் உயிரோடே காக்கப்
படுவதற்கு, பேழைக்குள்ளே சேர்த்துக்கொள்.—
20 ஜாதிஜாதியான பறவைகளிலும், ஜாதிஜாதியான மிரு
கங்களிலும், பூமியிலுள்ள சகல ஜாதிஜாதியான ஊரும்
பிராணிகளிலும், வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு
உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னிடத்திலே வரக்

[1] 2பே. 2. 5.

**17.** "பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம்." மனிதருடன் மிருகங்கள் ஊர்வனங்கள் பறவைகள்முதலிய ஜீவப்பிராணிகள் அழிந்துபோம். மனிதன் அக்கிரமத்தில் வளர்ந்து மற்றவர்களையும் கெடுத்துப்போடாதபடி அவன் அழிவுக்குள்ளாவது நலம். ஆதலால் தேவன் உலர்ந்த தரையைச் சமுத்திரஜலத்தால் நிரப்பி அவபக்தியுள்ளவர்களை அதம்பண்ணினார்.

**18.** "உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்." உடன்படிக்கை என்ற வார்த்தை முதலாவதாய் இந்த இடத்தில் வருகிறது. தேவன் நோவாவோடே ஒரு உடன்படிக்கையை உன்னுடன் ஏற்படுத்துகிறேன் என்று சொல்லாமல் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்று சொல்லியதைக் கவனிக்கையில், ஆதாமுடன் பண்ணப்பட்ட உடன்படிக்கையை அவன் மீறியும் ஸ்திரீயின் வித்தின்மூலமாய் கிருபையின் உடன்படிக்கையை ஸ்தாபித்து, இப்பொழுது நோவாவுக்கும் அவன் பின்சந்ததியாருக்கும் அதையே உறுதிப்படுத்தினார் என்று நினைக்கத்தகும். ஆகவே ஸ்திரீயின் வித்தின்மூலமாய்ச் சர்ப்பத்தின் தலை நசுக்கப்பட்டு மரணத்தின்மேல் ஜெயமுண்டாகும் என்று செய்யப்பட்ட வாக்குத்தத்தம் நோவாவுக்கு இங்கே உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**19.** "வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடு." பூமியிலே வித்தை உயிரோடே காக்கும்பொருட்டு சுத்தமான மிருகங்கள் பறவைகளில் ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும், சுத்தமில்லாத மிருகங்கள் பறவைகள் முதலியவற்றில் ஒவ்வொரு ஜோடும் பேழைக்குள் பிரவேசிக்கும்படி கர்த்தர் கற்பித்தார். பேழைக்குள்ளிருந்த சுத்தமும் அசுத்தமுமானவைகள் திருச்சபையிலேயிருக்கிற பரிசுத்தவான்களுக்கும் துன்மார்க்கருக்கும் குறிப்பாயிருந்தன.

21 கடவது. — உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாகச்
சகலவித போசனபதார்த்தங்களையும் சேர்த்து, உன்
22 னிடத்தில் வைத்துக்கொள் என்றார்.—[1]நோவா அப்ப [1] எபி. 11. 7.
டியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்ட
படியெல்லாம் அவன் செய்து முடித்தான்.

**21.** "சகலவித போசனபதார்த்தங்களையும் சேர்த்து உன்னிடத்தில் வைத்துக்கொள்." நோவா தன் குடும்பத்தையும் தன்னோடே காக்கப்படும் ஜீவன்களையும் சம்ரக்ஷணைசெய்யும்படி, தான் செய்யக்கூடியதை இயற்கையானவிதமாய்ச் செய்யத் தேவன் உத்தரவுபண்ணினார். தேவன் அனுவசியமாய் அற்புதங்களைச் செய்கிறவரல்லவென்று காட்டும்படி இப்படிக் கட்டளையிட்டார்.

**22.** "தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்." விசுவாசத்தினால் நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரி[illegible]ப் பெற்று பயபக்தியுள்ளவனாகி எவ்வளவு வருத்தம் செலவு நேரிட்டாலும் அதைப் பாராமல் தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணி, தேவன் ஆக்கியாபித்த சகல விஷயங்களையும் இஷ்டமாய் நிறைவேற்றிவிட்டான்.

படிப்பினை.

வச. 1—7.

(1) மெய்மார்க்க அனுசாரிகளும் அந்த மார்க்கத்துக்கு விரோதிகளும் விவாகசம்பந்தஞ் செய்யும்போது மெய்தேவபக்தி தப்பாமல் குன்றிப்போகும். தேவனுடைய சாபம் அப்படிப்பட்டவர்கள்மேல் விழுகிறது. ஆகாதவர்களுடைய துன்மாதிரி சுற்றத்தார் சிநேகிதர்களைக் கெடுதலடையப்பண்ணிப்போடுகிறது. அது குடும்பபக்தி அற்றுப்போகவும் பிள்ளைகள் அவபக்தியுள்ள தாய்தகப்பனைப்போல வளரவும் ஏதுவாயிருக்கிறது. நாம் சருவவல்லவருடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருந்தால் அவருடைய தயவுள்ள சித்தத்துக்கு விரோதமாய் விவாகஞ் செய்யலாகாது. அழகு, ஐசுவரியம், கனம் இப்படிப்பட்டவைகளைமாத்திரம் உடையவர்களோடே விவாகத்தில் நாம் சம்பந்தப்பட அவர் பிரியங்கொள்ளாமல் தேவபக்தியுள்ளவர்களோடே நாம் சம்பந்தப்படப் பிரிய சித்தமுடையவராயிருக்கிறார்.

(2) கர்த்தர் பொறுமையும் நீடியசாந்தமும் மிகுந்த தயவுமுள்ளவராயிருந்தாலும், தேவ ஆவியானவர் எப்போதும் நம்மோடே போராடமாட்டார். மனிதர் பாவத்தில் நிலைநின்று அவருடைய வசனத்தை எண்ணாமல் மனச்சாட்சிக்கு விரோதமாய் நடந்துகொண்டால், அவர் அவர்களுடைய இருதயக்கடினத்துக்கு அவர்களை விட்டுவிடுகிறார்; அப்பொழுது அவர்கள் கெட்டுப்போவார்கள். தேவன் பாவத்தின்மேல் வெறுப்புள்ளவராய் இருந்து அநீதியித்தம் சொந்த கைகளின் கிரியைகளை அழிக்கிறவரானால் நாம் பாவத்துக்காகத் துக்கப்பட்டுத் துணைப்பட்டு, அது நமக்கு மரிக்கும்படியாகவும், நாம் அதற்கு மரிக்கும்படியாகவும் பிரயாசப்படுவோமாக.

(3) மனிதரால் "பேர்பெற்றவர்கள்" என்றெண்ணப்படுகிறவர்கள் பொறுப்படுகுறாராயும் உபத்திரவப்படுத்து[illegible]றவர்களாயும் விளங்குகிறதுண்டு. நாம் நன்மையானவைகளைச் செய்து தேவனால் வரும் கனத்தைத் தேடுவோமாக.

(4) தேவனுடைய சாயலாக உண்டாக்கப்பட்ட மனுஷன் இப்போது எவ்வளவாய் ஈனனானான். மறுதலித்த தூதன் அவனை எவ்வளவாய்க் கெடுத்துப்போட்டான்.





# 7. அதிகாரம்.

1. நோவா தன் குடும்பத்தோடும், மற்ற ஜீவஜந்துக்களோடும் பேழைக்குள் பிரவேசித்தது. 17. ஜலப்பிரளயம் உண்டானது.

1 கர்த்தர் நோவாவை நோக்கி: [1]நீயும் உன் வீட்டார் [1] மத். 24. 38. எபி.
அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் 11. 7. 1 பே. 3.
சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் 20. 2பே. 2.5,9.

வச. 8—22.

(5) மிகவும் சீர்கெட்டகாலத்திலும், கிருபையினால் தெரிந்துகொள்ளப்பட்ட சிலரைத் தேவன் மீதியாகத் தெரிந்து பிரத்தியேகப்படுத்திவைக்கிறதுண்டு.

(6) அவருடைய பிரியத்தைத் தேட விரும்புகிறவர்கள், உலகத்தாருடைய சுபாவத்தின்படி நடவாமல், உலகத்தில் அந்நியர்போல நடந்துகொள்ளவேண்டும். தேவனுக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்கள், அவருடைய [illegible]த்தியவசனத்தை விசுவாசிப்பார்கள். அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவார்கள். அவருடைய எச்சரிப்புகளைக் கேட்டுக் கவனித்து அவருக்கு அஞ்சுவார்கள். அவருடைய வாக்குத்தத்தங்களை அணைத்துக்கொள்வார்கள். பாரமான எந்தக்கடமையையும் உற்சாகத்தோடே நிறைவேற்றுவார்கள்.

(7) நோவாவுக்குக் கொடுக்கப்பட்ட எச்சரிப்பினாலே நாம் வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ளும்படி போதனையைக் கற்றுக்கொள்வோமாக. நமக்கு அருளப்பட்டிருக்கிற கிருபையின் காலத்திலே, நாம் தேவனுடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து மெய்யான பேழையாகிய இயேசு இரட்சகரிடத்தில் அடைக்கலம் புகும்படி தேடிக்கொள்வோமாக.

(8) நோவாவின் பேழையிலே அநேக அறைகள் (அல்லது கூடுகள்) இருந்தன (14-ம் வச.). அவைகள் ஆகாயத்துப் பறவைகளுக்காகவும் மற்றுமுள்ள ஜீவன்களுக்காகவும் ஆயத்தப்பட்டிருந்தனவென்று நினைக்கத்தகும். அவ்விதமாய், ரக்ஷகருக்குள்ளே ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் ஒரு இடம் ஆயத்தமாயிருக்கிறதென்று சொல்லலாம். பறவையானது பேழைக்குட்புகுந்து ஜலப்பிரளயம் வந்தாலும் ஓர் கூட்டிலே சுகமாயிருந்ததுபோல, நாம் ரக்ஷகருக்குட் புகுந்து நியாயத்தீர்ப்புக்காலத்திலும் சுகமும் ஆறுதலும் அடைந்திருக்கலாம்.

## 7. அதிகாரம்.

**1.** "கர்த்தர் நோவாவை நோக்கி." முந்தின அதிகாரத்திலே 120 வருஷக்காலச் சரித்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் நோவா ஒரு பேழையை உண்டுபண்ணி, நீதியைப் பிரசங்கித்துவந்தான். இந்த அதிகாரத்தில் பேழை முடிந்ததையும், நோவாவும் அவன் குடும்பத்தாரும் மற்ற ஜீவசெந்துக்களும் அதற்குள் பிரவேசித்ததையும் ஜலப்பிரளயம் உண்டானதையும் குறித்துக் காட்டியிருக்கிறது.

"இந்தச் சந்ததியில் உன்னை எனக்குமுன்பாக நீதிமானாகக்கண்டேன்." கொடுமையும் மாறுபாடும் கோணலும் காமக்குரோதமுமுள்ள சந்ததியாரின் நடுவிலே நோவா கறைப்படாத உத்தமனும் குற்றமற்றவனும் தேவனுக்குகந்த பிள்ளையுமாக நடந்துவந்தான். (பிலி. 2: 15. மாற். 8: 38.)

2 கண்டேன்.—பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோ
டே காக்கும்பொருட்டு, நீ [1]சுத்தமான சகல மிருகங்
களிலும், ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும்,
சுத்தமல்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக
3 ஒவ்வொரு ஜோடும்,—ஆகாயத்துப் பறவைகளிலும்,

[1] லேவி. 11. அதி. லேவி. 10. 10.

**2.** "சுத்தமான சகல மிருகங்களிலும்." மிருகங்களும் பறவைகளும் சுத்தமுள்ளவை எனவும் சுத்தமில்லாதவை எனவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. பலி செலுத்தப்பட்ட மிருகங்கள் பக்ஷிகள் சுத்தமுள்ளவைகளாக ஆதிமுதல் எண்ணப்பட்டுவந்தன. மோசேயின் பிரமாணத்தின்படி, புசிப்புக்குரியவைகளைப்பற்றி இந்த இடத்தில் சொல்லப்பட்டிருப்பதாக நாம் எண்ணலாகாது. ஏனென்றால் ஜலப்பிரளயத்துக்குப் பின்புதான் மாம்சபக்ஷணஞ் செய்யலாகும் என்று தேவ உத்தரவு மனிதனுக்கு அருளப்பட்டது. ஆதலால் சுத்தமான மிருகங்கள் என்பது பலிகளுக்குபயோகமான ஆடுமாடு முதலானவைகளையும் சுத்தமான பக்ஷிகள் என்பது புறா முதலியவைகளையும் குறிக்கும். அப்படியானால் சுத்தமான மிருகங்கள் பறவைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறவைகளில் சொற்பஜாதிகள்மாத்திரம் பேழைக்குள் காப்பாற்றப்பட்டிருக்கவேண்டும் என்று எண்ணத்தகும்.

"எவ்வேழு ஜோடும்." பலியிடுவதற்காகவும், ஜலப்பிரளயத்துக்குப் பின்பு மனிதனுடைய போஜனத்துக்காகவும் சுத்தமான மிருகங்கள் பறவைகளில் எவ்வேழு ஜோடு பாதுகாக்கப்பட்டன. சிலர் எவ்வேழு ஜோடு என்பதற்குப் பதிலாக எவ்வேழு, பேழைக்குள் பாதுகாக்கப்பட்டன என்பார்கள். ஆனால் இது, 9–ம் வாக்கியத்துக்கு விரோதமாயிருக்கிறது. பேழைக்குள் சுத்தமும், சுத்தமல்லாததுமானவைகள் கலந்து பாதுகாக்கப்பட்டிருப்பதிலே, திருச்சபையில் யூதர் புறச்சாதியாரும், விசுவாசிகள் அவிசுவாசிகளும் கலந்திருப்பதையும், கோதுமை களைகளும், மணிபதரும், செம்மறிஆடு வெள்ளாடுகளும் ஆகிய இவைகளுக்கொப்பானவர்கள் ஒன்றாகக் கலந்திருப்பதையும் குறிக்கும் (அப். 10: 10. மத். 13: 47, 48; 13: 24, 25; 25: 32, 33.). இந்த வாக்கியம் 6: 19க்கு விகற்பமானதல்ல. சகலவிதமான மாம்சஜீவன்களிலும் என்பதில் மிருகங்கள் பறவைகளைப்பற்றி பொதுவான விதியாகவும், இவ்வசனத்திலோ விசேஷித்த விதியாகவும் தேவன் கட்டளை கொடுத்தார். மோசேயின் நியாயப்பிரமாணத்தில் ஸ்தாபித்திருக்கிற அநேக காரியங்கள் அவன் காலத்துக்கு முந்தியே முற்பிதாக்கள் காலத்திற் செய்யப்பட்டுவந்தன. திருஷ்டாந்தமாக பலிகள் செலுத்தப்பட்டன (4: 3, 4; 8: 20; 12: 8.). தசமபாகம் கொடுக்கப்பட்டது (14: 20.). விருத்தசேதனம் ஏற்படுத்தப்பட்டது (17: 11.). பொருத்தனைகள் பண்ணப்பட்டன (28: 20; 31: 13.). ஒருவன் இறந்துபோன தன் சகோதரனுடைய மனைவியை விவாகஞ்செய்கிற வழக்கமிருந்தது (38: 8.). மோசே நியாயப்பிரமாணத்தில் விலக்கியிருக்கிற சில காரியங்களும் அவன் காலத்துக்கு முந்தியே விலக்கப்பட்டிருந்தன. எவையெனில் இரத்தத்தைச் சாப்பிடல், கொலைபாதகம் (9: 4, 6.). இவைகளைக் கவனிக்கையில் பலிசெலுத்துவதில் சுத்தமும் சுத்தமில்லாததுமான மிருகங்களைக்குறித்தும் முற்பிதாக்கள்காலத்தில் வகையறுக்கப்பட்டிருந்ததென்றறியலாம்.





சேவலும் பேடுமாக எவ்வேழு ஜோடும் உன்னிடத்தில்
4 சேர்த்துக்கொள்.—இன்னும் ஏழுநாள் சென்றபின்பு,
நாற்பதுநாள் இரவும்பகலும் பூமியின்மேல் மழையை
வருஷிக்கப்பண்ணி, நான் உண்டாக்கின ஜீவஜந்துக்
கள் அனைத்தையும் பூமியின்மேல் இராதபடிக்கு நிக்
கிரகம்பண்ணுவேன் என்றார்.

5 நோவா தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியெல்
லாம் செய்தான்.

6 ஜலப்பிரளயம் பூமியின்மேல் உண்டானபோது,
7 நோவா அறுநூறு வயதாயிருந்தான்.—ஜலப்பிரளயத்
துக்குத் தப்பும்படி நோவாவும் அவனுடனேகூட அ
வன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமார
ரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசித்தார்கள்.—
8 தேவன் நோவாவுக்குக் கட்டளையிட்டபடியே, சுத்த
மான மிருகங்களிலும் சுத்தமல்லாத மிருகங்களிலும்,
பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிலும்,—
9 ஆணும்பெண்ணும் ஜோடுஜோடாக நோவாவிடத்தில்
10 பேழைக்குட்பட்டன.—ஏழுநாள் சென்றபின்பு பூமி
யின்மேல் ஜலப்பிரளயம் உண்டாயிற்று.

**4.** "ஏழுநாள்." அந்த வாரத்தில் மிருகங்கள் பறவைகளை நோவா பேழைக்குள் கிரமப்படுத்தியிருக்கலாம். இந்த வாக்கியத்தையும், 8: 12–ம் வசனத்தையும் பார்க்கையில் முற்பிதாக்கள்காலத்தில் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டுவந்ததென்று அநுமானிக்கலாம்.

**7.** "பேழைக்குள் பிரவேசித்தார்கள்." நோவா இதுவரையும் விசுவாசித்து நடப்பித்த காரியங்களடியாய் அநுபவிக்க இப்பொழுது தேவ உத்தரவின்படி பேழைக்குட் பிரவேசித்து இரட்சிக்கப்பட்டான்.

**9.** "ஜோடுஜோடாய்ப் பேழைக்குட்பட்டன." விலங்கினங்கள், பக்ஷிஜாதிகள் தானாய் தேவகட்டளையின்படியே பேழைக்குட் பிரவேசித்துப் பூர்வமனிதருக்குக் கடைசியான போதனையைத் தந்தது. ஆனால் அக்கிரமத்தில் உழன்ற புருஷர் ஸ்திரீகள் தங்களுக்கு வரும் மோசத்தைப்பற்றி நிர்விசாரிகளாயிருந்தார்கள்.

**10.** "ஏழுநாள் சென்றபின்பு." நோவா பேழைக்குட் பிரவேசித்து ஏழுநாளானபின்பு ஜலப்பிரவாகமுண்டாயிற்று.

11 நோவாவுக்கு அறுநூறும் வயதாகும் வருஷம் இ
ரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளி
லே, [1]மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் *பிளந் [1] ஆதி. 8. 2. ஏசே 26. 19.
12 தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன.—நாற் * பொங்கின.
பதுநாள் இரவும்பகலும் பூமியின்மேல் பெருமழை
13 பெய்தது.—அன்றைத்தினமே [2]நோவாவும், நோவாவின் [2] ஆதி. 6. 18. எபி. 11. 7.
குமாரராகிய சேமும் காமும் யாப்பேத்தும், அவர்க
ளுடனேகூட நோவாவின் மனைவியும், அவன் குமார

**11.** "இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய." யூதருடைய வைதீகவருஷம் அவர்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது முதலாவதாக வழங்கப்பட்டது. அது ஆபிப்மாதத்தில் தொடங்கினது. ஆதலால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற இரண்டாம் மாதமானது அவர்களுடைய லௌகிக கணக்குக்குரிய மாதத்தைக் குறிக்கும்; அந்த மாதத்துக்கு மார்க்கிசவான் அல்லது பூல் என்று பேர். இவ்வபிப்பிராயம் சரியென்றால் ஜலப்பிரளயம் துலாயனத்தில் நவம்பர்மாதத்திலே மாரிகாலத்தில் தொடங்கியிருக்கவேண்டும்.

இங்கே காட்டப்பட்டிருக்கிற மாதம் ஆனது சௌரமாதமோ அல்லது சந்திரமாதமோ என்ற இன்னொரு கேள்வியும் வரும். 7: 11ஐ 7: 24; 8: 4 ஓடே ஒத்துப்பார்க்கையில் ஜலப்பிரவாகம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியில் துவக்கி ஏழாம் மாதம் பதினேழாம் தேதிவரையும் ஆக 150 நாட்களாய் நிலைநின்றதென்று அறிகிறோம். இடையிலே ஐந்துமாதங்களிருக்கின்றன. மாதம் ஒன்றுக்கு முப்பதுநாளாக ஐந்துமாதங்களுக்கு 150 நாள் சரிப்படுகையில் இது சௌரமாதக் கணக்காயிருக்கிறது. அப்படியாகில் நோவாவின் வருஷம் எகிப்தியருடைய வருஷத்துக்கொத்ததாய் 360 நாளடங்கியது. இவ்விஷயத்தில் சிலர் யூதர் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பினபின்பு சௌரமாதக் கணக்கைப்பற்றி அறிந்திருக்கவேண்டும். ஆதலால் ஜலப்பிரளயத்தைப்பற்றிய சரித்திரம் மோசேயின் காலத்துக்குப்பின்பு எழுதப்பட்டிருக்கவேண்டும் அல்லவா என்று சொல்லுவார்கள். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படுவதற்கு வெகுகாலத்துக்குமுன்னே சௌரமாதக்கணக்கை உபயோகித்ததால் அப்பேர்ப்பட்ட ஆட்சேபனை செல்லாது என்றறிவோம்.

"மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன." தேவன் தமது கோபத்திலே ஜலப்பிரளயத்தை உலகத்தில் [illegible]போது பூமியின் கீழுள்ள தண்ணீர் எல்லாம் பூமியின்மேல் வரும்ப[illegible] உண்டுபண்ணினார்; மேகங்களும் ஜலங்களைப் பொழிந்தன.

**12.** "நாற்பது." நாற்பது என்ற எண்ணானது பாவத்தோடும் பாவத்தின் தண்டனையோடும் பச்சாத்தாபத்தோடும் சேர்ந்துவருகிறதுண்டு. ஜலப்பிரளயத்தில் உண்டான மழை நாற்பதுநாள் பெய்ததுபோல, மோசே, எலியா, நினிவேயர் நாற்பதுநாள் உபவாசம் பண்ணினார்கள். சோதனைக்காரனை ஜெயிக்க நமது ஆண்டவரும் நாற்பதுநாள் உபவாசஞ் செய்தார்.

அந்த நாற்பதுநாளும் ஜலம் பிரவாகித்துக்கொண்டிருந்த 150 நாட்களுக்குள் அடக்கம்.





ரின் மூன்று மனைவிகளும், பேழைக்குள் பிரவேசித்
14 தார்கள்.—அவர்களோடு ஜாதிஜாதியான சகலவிதக்
காட்டு மிருகங்களும், ஜாதிஜாதியான சகலவித நாட்டு
மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற ஜாதிஜாதியான
சகலவித ஊரும் பிராணிகளும், ஜாதிஜாதியான சகல
விதப் பறவைகளும், பலவிதமான சிறகுகளுள்ள
15 சகலவிதப் பட்சிகளும் பிரவேசித்தன.—இப்படியே ஜீவ
சுவாசமுள்ள மாம்ச ஜந்துக்களெல்லாம் ஜோடுஜோ
டாக நோவாவிடத்தில் பேழைக்குள் பிரவேசித்
16 தன.—தேவன் அவனுக்குக் கட்டளையிட்டபடியே,
[1]ஆணும் பெண்ணுமாக சகலவித மாம்ச ஜந்துக்களும் [1] 2, 3. வச.
உள்ளே பிரவேசித்தன; அப்பொழுது கர்த்தர் அவனை
உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்.

17 ஜலப்பிரளயம் நாற்பதுநாள் பூமியின்மேல் உண்
டானபோது, ஜலம் பெருகி, பேழையைக் கிளம்பப்
18 பண்ணிற்று; அது பூமிக்குமேல் மிதந்தது.—ஜலம்
பெருவெள்ளமாகி, பூமியின்மேல் மிகவும் பெருகிற்று;
பேழையானது ஜலத்தின்மேல் மிதந்துகொண்டிருந்
19 தது.—ஜலம் பூமியின்மேல் மிகவும் அதிகமாய்ப் பெரு
கினதினால், [2]வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த [2] சங். 104. 6. எரே. 3. 23.
20 மலைகளெல்லாம் மூடப்பட்டன.—மூடப்பட்ட மலை

**16.** "கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்." நோவா சுகமாய்ப் பாதுகாக்கப்பட்டான். மேலும் அழிவுக்கு நியமிக்கப்பட்டவர்களின் அங்கலாய்ப்பை அவன் கேட்டு மனதுருகி அவர்களைப் பேழைக்குள்ளே வரவொட்டாதிருக்கும்படி தேவன் அதை அடைத்திருக்கலாம். தேவன் ஆதாமை ஏதேனில் வைத்தபோது அவனை அடைக்கவில்லை. ஆனால் அவன் வெளியே துரத்தப்படும்படியாயிற்று. நோவாவைப் பேழைக்குள் அடைத்தார், அதினால் உலகத்தில் இரட்சிக்கப்பட்டான்.

**19.** "வானத்தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம் மூடப்பட்டன." இந்த வாக்கியத்தையும், இருபத்தோராம் வாக்கியத்தில் பறவைகள் முதலிய ஜீவன்கள் "யாவும் மாண்டன" என்று சொல்லியிருப்பதையும், கவனிக்கையில் ஜலப்பிரளயம் பூமி எங்கும் உண்டாயிருக்கவேண்டுமென்று சொல்வாருண்டு. ஆனால் வேறே சிலர் ஜலப்பிரளயம் மனிதர் அக்காலத்தில் குடியிருந்த இடத்தில்மாத்திரமிருந்தது என்பார்கள். இதைக்குறித்து எட்டாம் அதிகாரம் கடைசியில் பார்க்க.

களுக்கு மேலாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்கு ஜலம்
பெருகிற்று.

21 [1]அப்பொழுது மாம்சஜந்துக்களாகிய பறவைகளும், [1] யோபு. 22. 16. லூ. 17. 27. 2பே. 3. 6.
நாட்டு மிருகங்களும், காட்டு மிருகங்களும், பூமியின்
மேல் ஊரும் பிராணிகள் யாவும், எல்லா நரஜீவன்
களும், பூமியின்மேல் சஞ்சரிக்கிறவைகள் யாவும்
22 மாண்டன.—வெட்டாந்தரையில் உண்டான எல்லா
வற்றிலும் [2]நாசியிலே ஜீவசுவாசமுள்ளவைகள் எல் [2] ஆதி. 2. 7.
23 லாம் மாண்டுபோயின.— [3]மனுஷர் முதல், மிருகங் [3] எசே. 14. 20. 1பே. 3. 20. 2பே. 2. 5; 3. 6.
கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள்
பரியந்தமும், பூமியின்மேல் இருந்த உயிருள்ள வஸ்
துக்கள் யாவும் அழிந்து, அவைகள் பூமியில் இராத
படிக்கு நிக்கிரகமாயின; நோவாவும் அவனோடே
பேழையிலிருந்த உயிர்களும் மாத்திரம் காக்கப்பட்
24 டன.—ஜலம் பூமியின்மேல் நூற்றைம்பதுநாள் மிக
வும் பிரவாகித்துக்கொண்டிருந்தது.

23. "நோவாமாத்திரம் காக்கப்பட்டான்." கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவும் அறிவார் (2 பேது. 2: 9.). உலகநாசத்தின் மத்தியில் நோவாவுக்கு இரட்சிப்புக் கிடைத்தது.

படிப்பினை.

வச. 1—16.

(1) தேவனுடைய தயவு குணப்படும்படி நம்மை ஏவுகிறதென்று அறியாமல் அவருடைய தயவு, பொறுமை, நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணி, மனக்கடினத்துக்கு இடங்கொடுத்தால், தேவகோபாக்கினையைத் தமமேல் குவித்துக்கொள்ளுகிறதாயிருக்கிறது.—குறுகின மனிதருடைய வாழ்நாள் சீக்கிரமாய் முடிவடையும்; அப்போது சஞ்சலமும், தீராத வியாகுலமும் துன்மார்க்கரைப் பிடிக்கும்.

(2) வீட்டெஜமான் எழுந்து கதவைப் பூட்டினபின்பு அதைத் தட்டி உட்பிரவேசிக்க இடங் கேட்பது விருதா.

(3) தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறதுபோலவே, தாம் கூறிய எச்சரிப்புகளையும், கண்டிதங்களையும் நிறைவேற்றுவார். அவர் தண்டிக்க ஏற்படும்போது தப்ப இடம் கிடையாது.

வச. 17—24.

(4) ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் மரணம் எவ்வளவாய்க் கொள்ளைகொண்டுபோனது.





## 8. அதிகாரம்.

1. ஜலப்பிரவாகம் அமர்ந்தது. 4. பேழை அராத்மலையின்மேல் தங்கினது. 7. காகமும், புறாவும் பேழையிலிருந்து விடப்பட்டது. 18. நோவா கற்பனைப்படி, 19. பேழையைவிட்டுப் புறப்பட்டு, 20. ஒரு பலிபீடத்தை உண்டுபண்ணிப் பலியிட்டது. 21. தேவன் அந்தப் பலியை அங்கிகரித்து, பூமியை இனிச் சபிக்கமாட்டேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினது.

1 தேவன் [1]நோவாவையும், அவனுடனே பேழையி [1] ஆதி. 19. 29. யாத். 2. 24. 1சாமு. 1. 19. சங். 106. 4, 5.
லிருந்த சகல காட்டு மிருகங்களையும், சகல நாட்டு
மிருகங்களையும் நினைத்தருளினார்; தேவன் பூமியின்
மேல் [2]காற்றை வீசப்பண்ணினார், அப்பொழுது ஜலம் [2] யாத். 14. 21.
2 அமர்ந்தது.—[3]ஆழத்தின் ஊற்றுக்கண்களும், வானத் [3] ஆதி. 7. 11.
தின் மதகுகளும் அடைபட்டன; வானத்து மழையும்

(5) சிருஷ்டிகள் யாவும் எவ்வளவாய் வேதனையை அனுபவித்தது. பாவம் நிர்ப்பந்த நாசத்தை வருவித்ததே, நியாயத்தீர்ப்புநாளில் துன்மார்க்கருடைய முடிவு எவ்வளவு பயங்கரமாயிருக்கும்.

(6) கிறிஸ்துவாகிய பேழைக்குள் அடைக்கலம் புகுந்தவர்கள் உலகம் அக்கினியால் அழிவுண்கையிலும் அஞ்சாமல் சுகமேயிருப்பார்கள்.

(7) உலகத்தில் அவபக்தி மிகுதியாவதையிட்டு நாம் ஆச்சரியப்படவேண்டாம். உண்மையுள்ள தேவபணிவிடைக்காரர் தங்களுடைய வேலைக்குத்தக்க பலன்கிடையாததினால் சோர்புக்கு இடங்கொடுக்கவும்வேண்டாம்.

(8) அவபக்தரான பிள்ளைகளும் தேவபக்தியுள்ள பெற்றோரின்நிமித்தம் உலக நன்மைகளை அனுபவிப்பதுண்டு. அவர்கள் பெற்றோரைப்போல விசுவாசமார்க்கத்தாராய் நடவாதிருந்தால், நித்திய நாசமோசத்துக் கேதுவாய்ப்போவார்கள்.

(9) பேழைக்குள் துஷ்டமிருகங்கள் நோவாவுக்குக் கீழடங்கியிருந்தது; இது மாயக்காரர் சபையிலே சேர்ந்து, புறம்பான நோக்கத்துக்காகச் சபையின் கட்டுப்பாட்டுக்கு அமைந்திருப்பதற்குச் சரியாயிருக்கிறது.

(10) பேழையில் வேலைசெய்த கம்மாளர் பேழைக்குள் பிரவேசிக்கவில்லை. அவர்கள் அழிந்துபோனார்கள் என்று எண்ணத்தகும். பிழைப்புக்காகமாத்திரம் கிறிஸ்து சபையில் ஊழியஞ்செய்கிறவர்கள் அதிகமான கேடுதலை அடைவார்கள்.

### 8. அதிகாரம்.

1. "தேவன் நோவாவையும் ............ நினைத்தருளினார்." கர்த்தர் நோவாவின் விசுவாசத்தையும், பொறுமையையும் அவர் கொடுத்த சாட்சியையும், தாம் அவனுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தையும் நினைவுகூர்ந்தார். கர்த்தர் தமது ஊழியக்காரரை நினைக்கிறார் என்பது ஆபத்திலின்று அவர்களை விடுவிப்பதையும், அவர்களுக்கு உருக்க இரக்கங்களைப் பாராட்டுவதையும் குறிக்கும். (ஆதி. 19: 29. யாத். 2: 24; 32: 13. சங். 132: 1; 136: 23. லூ. 6: 10.)

"காற்றை வீசப்பண்ணினார்." ஆவிக்கடுத்த விஷயங்களில் காற்றானது ஆவியானவர் உயிர்ப்பிக்கும்படி செலுத்துகிற வல்லமைக்கு அடையாளமாயிருக்கிறது. (யோவா. 3: 8. எசே. 37: 9, 10.)

3 நின்றுபோயிற்று. — ஜலம் பூமியிலிருந்து நாளுக்கு
நாள் வற்றிக்கொண்டே வந்தது; நூற்றைம்பது நா
ளுக்குப்பின்பு ஜலம் வடிந்தது.

4 ஏழாம்மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அரா
5 ராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று.—பத்தாம்
மாதம்மட்டும் ஜலம் வடிந்துகொண்டே வந்தது; பத்
தாம்மாதம் முதல்தேதியிலே மலைச்சிகரங்கள் காணப்
பட்டன.

6 நாற்பதுநாள் சென்றபின், நோவா தான் பேழை
7 யில் செய்திருந்த ஜன்னலைத் திறந்து,—ஒரு காகத்தை
வெளியே விட்டான்; அது புறப்பட்டுப் பூமியின்

**4.** "ஏழாம்மாதம் பதினேழாம் தேதியிலே." ஏழாம் அதிகாரம் பதினோராம் வாக்கியத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிற வியாக்கியானம் சரியெனில் சௌர வருஷத்தின் ஏழாம்மாதம், ஆபிப்மாதமாயிருக்கிறது. அப்படியாகில் ஆபிப் 17-ம் தேதியிலே பேழை அராராத்து மலையில் தங்கினது. அந்தத் தேதியிலேயே இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தார்கள். நம்முடைய கர்த்தர் உயிரோடெழுந்ததும் அந்தத் தேதியில்தான்.

"அராராத்." இது அர்மீனியாவின் வடகிழக்கில் இருக்கிறது. தற்காலத்தில் அராராத்து என்று அழைக்கப்படுகிற மலைக்கு இரண்டு சிகரங்களுண்டு. அவைகள் ஒன்றுக்கொன்று ஏழுமைல் தூரத்திலிருக்கிறது. அந்தக் கொடுமுடிகளுக்கு இடையில் பேழை தங்கினதாய்ப் பெரும்பான்மையோர் நினைக்கிறார்கள்.

சிலர் ஆதி. 11: 2. கிழக்கேயிருந்து பிரயாணம்பண்ணிச் சிநேயார் தேசத்தில் குடியிருந்தார்கள் என்பதை வைத்துக்கொண்டு, இங்கே அராராத்து என்று சொல்லப்படும் மலை அர்மீனியாவிலுள்ளதல்ல; மேலும் அராராத்து என்ற வார்த்தை அசீரியாப் பாஷையில் "பீடபூமி" என்றர்த்தங்கொள்ளும், ஆதலால் அது எந்த மலைநாட்டை[illegible]யும் குறிக்கும் என்று ஆட்சேபிக்கிறார்கள். கிழக்கு என்று அர்த்தங்[illegible]ொள்ளும் மிகெடெம் என்னும் எபிரெயபதம் ஆதி. 13: 11. கிழக்கேயிரு[illegible] என்றல்ல கிழக்கே என்று திருப்பப்பட்டிருக்கிறது. அப்படியே இந்த [illegible]டத்திலும் கிழக்கே என்றிருந்தால் ஆட்சேபனை நின்றுபோம்; அப்படியே இ[illegible]கிலீஷ் வேதாகமத்தின் புதுத்திருப்புதலில் கிழக்கே என்றிருக்கிறது.

**6.** "ஜன்னலை." 6: 16-ம் வசனத்தில் வழங்கப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை வேறே, இங்கே வழங்கப்பட்டிருக்கிற வார்த்தை வேறே. மழை, தூவல் முதலியது உள்ளே வராதபடிக்கு இது அடைக்கப்பட்ட வேறொரு ஜன்னலாயிருக்கலாம், அல்லது முன்சொன்ன ஜன்னலில் இது திறக்கத்தக்கதான ஒரு பாகமாயிருக்கலாம். இப்போது பூமியின் நிலைமையை அறிய இந்த ஜன்னலை நோவா திறந்தான்.

**7.** "காகத்தை வெளியே விட்டான்." பறவைகளுக்குள்ளே காகமானது அபாயத்தை இலகுவாய் அறியத்தக்க பட்சியாயிருக்கிறது. காக்கை





மேல் இருந்த ஜலம் வற்றிப்போகும்வரைக்கும் போ
8 கிறதும் வருகிறதுமாய் இருந்தது.—பின்பு பூமியின்
மேல் ஜலம் *குறைந்துபோயிற்றோ என்று அறியும்
படி, ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியே
9 விட்டான்.-பூமியின்மீதெங்கும் ஜலம் இருந்தபடியால்,
அந்தப் புறா தன் உள்ளங்கால் வைத்து இளைப்பாற
இடம் காணாமல், திரும்பிப் பேழையிலே அவனிடத்
தில் வந்தது; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடித்
துத் தன்னிடமாகப் பேழைக்குள் சேர்த்துக்கொண்
10 டான்.—பின்னும் ஏழுநாள் பொறுத்து, மறுபடியும்
புறாவைப் பேழையிலிருந்து வெளியே விட்டான்.—
11 அந்தப் புறா சாயங்காலத்தில் அவனிடத்தில் வந்து
சேர்ந்தது; இதோ அது கொத்திக்கொண்டுவந்த ஒரு
ஒலிவமரத்தின் இலை அதின் வாயில் இருந்தது; அதி
னாலே நோவா பூமியின்மேல் ஜலம் குறைந்துபோ

* வடிந்த.

நோக்கறியும் என்பது நமக்குள் வழங்கிய முதுமொழி. அது திரும்பித் தன் அண்டைக்கு வராமல் பறந்துகொண்டு அபாயத்துக்குத் தப்பி மலைக்குப் போவதும், பேழைக்குத் திரும்புவதுமாய் இருந்ததைக் கண்டபோது, நோவா ஜலம் குறைந்துபோனதை அறிய ஏதுவாயிற்று. இது பத்தாம்மாதம் பதினோராம் தேதியில் சம்பவித்தது. சிலர் காகம், பிரேதங்களைப் புசித்திருக்கலாம் என்கிறார்கள். இது சரியெனத் தோன்றுகிறதில்லை. பிரேதங்கள் இதற்குள்ளாக உருவழிந்துபோய் இருக்கவேண்டும். ஜலப்பிரளயம் துவக்கி ஏறக்குறைய ஒன்பது மாதமாகிவிட்டது. ஆகையால் அக்காகமானது தவளைமுதலிய நீர்வாழும் ஜெந்துகளைப் பிடித்துச் சாப்பிட்டிருக்கலாம். மேலும் நோவா அதற்கு ஆகாரம் போட்டிருக்கலாம். நம்முடைய தேசத்தில் சில அஞ்[illegible]ானிகள் தட்டையான மாடிவீட்டின்மேலும், அப்படிப்பட்ட வீடில்லாவிட்[illegible]ல் தரையிலேயும் காகபலி யென்று சொல்லி காகங்களுக்கு ஆகாரம் போடு[illegible]ண்டு.

**8.** "ஒரு புறாவை..........விட்டான்." காகம் திரும்பி தன் அண்டைக்கு வராததைக் கண்டு, ஜலம் குறைந்துபோயிற்றோ [illegible]ன்[illegible] அறியும்படி ஒரு புறாவை அனுப்பினான். புறாவானது தரையில் நட[illegible] விதைவித்துக்களைப் பொறுக்கிச் சாப்பிடும். அது தனக்குத் தாபரிக்க [illegible]மில்லாததைக் கண்டு திரும்பிவந்தது. நோவா அதை உள்ளுக்கு எடுத்துக்கொண்டான்.

**10.** "மறுபடியும் புறாவை............விட்டான்." புறா சாயங்காலம் வரைக்கும் இருந்ததைக் கவனிக்கையில் தண்ணீர் வற்றிப்போய்த் தரை காணப்பட்டிருக்கவேண்டும் என்று அறியலாம். மாலையில் அது ஒரு ஒலிவ இலையைக் கொத்திக்கொண்டுவந்தது. தண்ணீர் வற்றிக்கொண்டுவருகையில் ஒலிவமரம் துளிர்விட்டு வளர்ந்திருக்கலாம். ஒலிவமரம் அர்மீனியாவில் மிகுதியாயுண்டு. அம்மரமானது சமாதானத்துக்கு அடையாளமென்று சொல்லப்படும்.

12 யிற்று என்று அறிந்தான்.—பின்னும் ஏழுநாள் பொ
றுத்து, அவன் புறாவை வெளியே விட்டான்; அது
அவனிடத்திற்குத் திரும்பி வரவில்லை.

13 அவனுக்கு அறுநூற்றொரு வயதாகும் வருஷத்தில்,
முதல்மாதம் முதல்தேதியிலே பூமியின்மேல் இருந்த
ஜலம் வற்றிப்போயிற்று; நோவா பேழையின் மேல்
தட்டை எடுத்துப் பார்த்தான்; பூமியின்மேல் ஜலம்
14 இல்லாதிருந்தது.—இரண்டாம்மாதம் இருபத்தேழாம்
தேதியிலே பூமி காய்ந்திருந்தது.

15,16 அப்பொழுது தேவன் நோவாவை நோக்கி:—நீயும்,
[1]உன்னோடேகூட உன் மனைவியும், உன் குமாரரும், [1] ஆதி. 7. 13.
உன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டுப்
17 புறப்படுங்கள்.—உன்னிடத்தில் இருக்கிற [2]சகலவித [2] ஆதி. 7. 15.
மாம்ச ஜந்துக்களாகிய பறவைகளையும், மிருகங்களை
யும், பூமியின்மேல் ஊருகிற சகல பிராணிகளையும்
உன்னோடே வெளியே வரவிடு; அவைகள் பூமியிலே
திரளாய் வர்த்தித்து, [3]பூமியின்மேல் பலுகிப் பெருகக் [3] ஆதி. 1. 22.
18 கடவது என்றார்.—அப்பொழுது நோவாவும், அவன்
குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின்
19 மனைவிகளும் புறப்பட்டு வந்தார்கள். — பூமியின்
மேல் நடமாடுகிற சகல மிருகங்களும், ஊருகிற சகல

**12.** "பின்னும் புறாவை விட்டான்." அது தரை காய்ந்து தனக்கு வசதியான இடம் இருப்பதைக்கண்டு நோவாவண்டைக்குத் திரும்பிவரவில்லை. எவ்வேழுநாள் பொறுத்துப் பறவைகளை விட்டதைப்பார்க்கையில் வாரக்கணக்கு அப்போதே கணிக்கப்பட்டுவந்ததென்று அறியலாம்.

**14.** "இருபத்தேழாம் தேதி." ஜலப்பிரளயமுண்டாகி ஒருவருஷமும் பத்துநாளும் ஆனபின்பு பூமி மறுபடியும் குடியிருப்புக்கு வசதியாயிற்று.

**16.** "பேழையை விட்டுப் புறப்படுங்கள்." குடியிருப்பதற்குப் பூமி வசதியாயிருக்கிறதென்று நோவா கண்டபோதிலும் பேழைக்குள்ளே பிரவேசிக்க உத்தரவு கொடுத்த தன் தேவன் அதிலிருந்து வெளியேவரும்படி கொடுக்கும் கட்டளைக்காகக் காத்திருந்து, உத்தரவானதின்பேரில் வெளியே வந்தான்.

**17.** "பலுகிப் பெருகக்கடவது." 1: 28ல் சொல்லப்பட்ட ஆசீர்வாதம் இங்கே திரும்பப் புதுப்பிக்கப்பட்டது.





பிராணிகளும், சகல பறவைகளும் ஜாதி ஜாதியாய்ப்
பேழையிலிருந்து புறப்பட்டுவந்தன.

20 அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம்
கட்டி, [1]சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான [1] லேவி. 11. அதி.
சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு,
அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப்
21 பலியிட்டான். — [2]சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர் [2] லேவி. 1. 9. எசே. 20. 41. 2 கொ. 2. 15. எபே. 5. 2.
ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன்
நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய
[3]இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொ [3] யோபு. 14. 4. எரே. 17. 9. மத். 15. 19. ரோ. 1. 21.
டங்கி பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது
செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்ப

**20.** "ஒரு பலிபீடம் கட்டி." பலிபீடம் என்ற வார்த்தை இந்த இடத்தில் முதலாவதாக வருகிறது. இதற்கு முன்னே பலிபீடம் இருந்திருக்கவேண்டும். காயீன் ஆபேல் பலிசெலுத்தினார்கள்.

"தகனபலிகளாகப் பலியிட்டான்." தேவன் தனக்குச் செய்த உபகாரங்களை நினைத்து நன்றியறிதலுக்கு அடையாளமாகச் சுத்தமான மிருகங்களிலும் பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து அவருக்குத் தகனபலிகளாகச் செலுத்தினான்.

**21.** "சுகந்தவாசனையைக் கர்த்தர் முகர்ந்தார்." பலியின் வாசனை கர்த்தருக்கு இன்பத்தைக் கொடுத்ததாக நாம் எண்ணாமல், நோவாவுடைய கீழ்ப்படிதல், விசுவாசம், நன்றி இவைகளைக் கர்த்தா கண்டு பிரியங்கொண்டு திருப்தியுள்ளவராய் அவன் செலுத்தின பலியை அங்கீகரித்துக்கொண்டார் என்றறிய வேண்டும். (5: 29. வியாக்கியானத்தைக் காண்க.)

நம்முடைய ஆண்டவர் செலுத்தின பாவப்பிராயச்சித்த பலியும் சுகந்த வாசனையானதென்றும் (எபே. 5: 2.), அப்படியே அப்பிராயச்சித்தத்தை முன்னிலையாய்ச் செய்யப்படும் விசுவாசிகளுடைய ஜெபங்களும், தர்மங்களும், சுகந்தவாசனையும் உகந்த பலியுமானவைகளென்று சொல்லப்பட்டிருக்கின்றன. (பிலி. 4: 18. வெளி. 5: 8.)

"மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் .......... பொல்லாததாயிருக்கிறது." இந்த வசனம் 6: 5க்கு விசற்பமாகத் தோன்றும். அங்கே தேவன் ஜலப்பிரளயத்தினால் மனிதரைத் தண்டிப்பதற்கு நியாயமாயும், இந்த இடத்தில் மனிதருக்கு இரக்கம் காட்டுவதற்கு நியாயமாயும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

வேதாகமமானது ஒரு காரியத்தின் இருபுறங்களையும் சுத்தக்கருத்தோடே காட்டுகிறதன்றி. ஒரு புறத்தைப் பார்த்து மறுபுறத்தைப் பாராததால் அநேக தப்பறையான கோட்பாடுகள் பூமியில் உண்டாகி இருக்கின்றன. மனிதனுடைய நினைவுகள் நித்தமும் பொல்லாதவைகளாயிருக்கின்றன (மத். 15: 19.)

22 இல்லை. —[1]பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.

[1] ஏசா. 54. எசே. 33.20,25.

என்பது நிச்சயம். பழைய உலகத்தார் அக்கிரமங்களை அடக்காமல் அவைகளிலே உழன்று மிஞ்சிப்போனார்கள். ஆதலால் தேவன் தமது நீதியின்படி அவர்களைத் தண்டிக்கவேண்டியதாயிற்று. ஆனால் மனிதன் பாவத்துக்கு விரோதமாய்ப் போராடுகையிலும் அவன் பெலவீனனாயிருப்பதால் தேவ இரக்கமானது அவனுக்கு மன்னிப்பை அருள, கிருபையானது மனந்திரும்புகிற அவனைப் பலப்படுத்துகிறது. ஆதலால் மனுஷன் புதிதாக்கப்பட்டவனாய்ப் பரிசுத்த ஜீவியஞ்செய்யப் பிரயாசப்படுவதைத் தேவன் கவனித்து உலகம் இனிமேல் முழுமையுமாய் அவனைக் கெடுத்துக்கொள்ளமாட்டாதென்று அறிந்துகொள்ளுகிறார். இவ்வகை மாறுதலினால் மனித பெலவீனமானது எல்லாவற்றையும் செய்யத்தக்க தேவனுடைய சர்வவல்லமையில் சார்ந்திருக்கும்படி அவனை ஏவுகிறதென்று சொல்லலாம். (2 கொ. 12: 9, 10. பிலி. 4: 13.)

22. "பூமியுள்ள நாளளவும் ...... ஒழிவதில்லை." மனிதன் நிமித்தம் பூமி இதற்குமுன் இரண்டுதரம் சபிக்கப்பட்டது (ஆதி. 3: 17; 4: 11, 12.). அந்தச் சாபம் நோவாவுக்கு இப்போது கட்டளையிடப்பட்ட ஆசீர்வாதத்தில் ஒருவாறு மாறிப்போயிற்று. இந்த ஆசீர்வாதம் பொதுவானது; அதினாலுண்டான நன்மைகள் நீதிமான்களுக்கும், அநீதிமான்களுக்கும் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் அருளப்பட்டுவருகிறது. (மத். 5: 45. லூக். 6: 35.)

"ஜலப்பிரளயத்தைப்பற்றிய விர்த்தாந்தமும் தர்க்கமும்."

1. ஜலப்பிரளய சங்கதி உண்மையுள்ளதா? அல்லது கட்டுக்கதையா?

2. அது பூமியின்மீதெங்கும் சென்றதா? அல்லது ஒருபாகத்தில்மாத்திரம் சம்பவித்ததா? என்ற இரண்டு காரியங்களைக்குறித்துப் பார்ப்போம்.

(i) முதலாம் காரியத்தைக்குறித்து சில நட்பசாஸ்திரிகள் அது பாவத்துக்காகச் செலுத்தப்படும் நீதியான தண்டனையைக் குறிக்கும்படி யூதர் எடுத்துக்காட்டின உவமை என்கிறார்கள். அப்படியானால் பூமி எங்குமுள்ள மனிதஜாதியார் எல்லாருக்குள்ளும் ஜலப்பிரளயத்தைப்பற்றி தொன்றுதொட்டு வந்திருக்கிற பாரம்பரியத்தைக்குறித்து என்ன சொல்லலாம்? கல்தேயர், கிரேக்கர், பார்சியர், பிரிகியர், சீனர், பாலிநேசியத்தீவார், அமெரிக்காவின் பூர்வகுடிகள், இந்துக்கள் இன்னமும் பலஜாதியாருக்குள் ஜலப்பிரளயத்தைப் பற்றிச் சொல்லிக்கொள்ளப்படுவதைப் பார்க்கையில் இவையெல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற சங்கதி சத்தியமென்று மெய்ப்பிக்கிற புறச்சாட்சிகளாயிருக்கின்றன என்று அறியலாம்.

மேலும் இந்தச் சங்கதியைப்பற்றி பின்னுள்ள தீர்க்கதரிசிகள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் (ஏசா. 54: 9. எசே. 14: 14, 20.)

நம்முடைய ஆண்டவரும் தமது போதனையினால் அதின் நிச்சயத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆகையால் அது கட்டுக்கதையல்ல (மத். 24: 37. லூக். 17: 26.). இதுவே பலத்த அத்தாட்சி.





(ii) இரண்டாவது ஜலப்பிரளயம் உலகமெங்கும் பரவினதா? என்ற கேள்வியைக் கவனித்துப்பார்ப்போம். ஜலப்பிரளயம் சம்பவித்தது உண்மை என்றும், மோசே எழுதியிருக்கிறதெல்லாம் சத்தியமென்றும் ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்குள்ளும் இது காரியத்தைப்பற்றி விகற்பமான அபிப்பிராயங்களுண்டு. இவைகளில் முதலாவது அபிப்பிராயம் என்னவெனில், 7: 19. வானத்தின்கீழ் "எங்குமுள்ள உயர்ந்த மலைகளெல்லாம், மூடப்பட்டன" என்றும் 7: 21. "பூமியில் சஞ்சரிக்கிறவைகள் யாவும் மாண்டன" என்றும் 7: 23. "பறவைகள்..................உயிருள்ள வஸ்துக்கள் யாவும் அழிந்தது" என்றும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கையில் ஜலப்பிரளயம் எங்கும் சென்றது என்று சொல்லத்தகும். 7:2. "பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும்பொருட்டு................சகல மிருகங்களிலும்................பறவைகளிலும்.................நீ சேர்த்துக்கொள்" என்று கர்த்தர் நோவாவுக்குச் சொல்லியதைக் கவனிக்கையில் ஜலப்பிரளயம் செல்லாத இடமில்லையென்று சொல்லத்தகும். அதுவுமல்லாமல் பூமியின் நானுதேசங்களிலும், விருக்ஷங்கள், மனிதர், மரங்கள் சிதறப்பட்டிருந்தனவே. பறவைகள், பக்ஷிகள் அங்கே இருக்கமாட்டாதா? அநேக வருஷங்களாய்ப் பெருகின காட்டுமிருகங்கள் அங்கங்கே போய்ச் சேர்ந்திராதா? ஊர்வனங்கள், வண்டுகள் அந்தந்த இடங்களில் இராதா? அங்கங்கே ஜலப்பிரளயம் செல்லாதிருந்தால் உலகத்தில் அழிக்கப்படாத வஸ்துக்கள் சம அளவுக்கு மிஞ்சியிருக்கும், அப்படியும் காணோமே.

மேலும் உலகத்திலுள்ள உயர்ந்த பர்வதங்களைப் பரிசோதிக்கையில் அவைகளின் கொடுமுடிவரைக்கும் கடல் பரவியிருந்ததாகவும் சிப்பிகள் கடல்பிராணிகளின் கங்காளங்கள் அங்கங்கே சேமிக்கப்பட்டிருக்கிறதாகவும் காணலாம். தரையைக் கவனித்தால் அமெரிக்காவிலுள்ள ஓர்வகை மானானது அர்லாந்திலும், ஆசியா ஆப்பிரிக்காவிலுள்ள யானைகள் இங்கிலாந்திலும், நீல் நதியிலுள்ள முதலைகள் ஜர்மனியிலும் புதைபட்டிருப்பதையும் பார்க்கலாம். ஆகவே மோசே சொல்லிய ஜலப்பிரவாகம் உலகம் எங்கும் நடந்ததென்று அறியலாம்.

ஜலப்பிரளயத்தைப்பற்றிய இரண்டாவது அபிப்பிராயம் என்னவெனில். அது பூமியின்மீதெங்கும் நடவாமல் ஓர் பாகத்தில்மாத்திரம் நடந்ததென்பதே. இவ்வபிப்பிராயங்கொள்ளுகிறவர்கள்—மேற்சொல்லிய வேதவசனங்களில் பூமியின்மீதெங்கும் சர்வ பிராணிகளும் மாண்டனவென்பதாகச் சொல்லியிருக்கிறது நிசம் என்றாலும் வேதாகமத்தின் நடையைக் கவனிக்குமிடத்து அடிக்கடி ஒரு பாகத்தை முழுமையுமென்று பாவித்து வர்ணிக்கிறது உண்டென்று காணலாம் (சங். 88: 7. யோனா. 2: 3. சங். 9: 5, 6. தானி. 2: 38; 3: 7, 29. மாற். 1: 33. முதலிய வசனங்களைக் காண்க.). ஆகையால் முந்திய அபிப்பிராயத்தை யோசனையின்றி ஒப்புக்கொள்ளலாகாதென்றும்,—நோவாவின் பேழையானது உலகமெங்குமுள்ள சகலவித பட்சிகள் பிராணிகளிலும் வகை ஒன்றுக்கு ஒவ்வொரு ஜோடுகளையும் கொள்ளாது, ஆதலால் ஜலப்பிரளயம் பூமியின் ஒரு பாகத்தில்மட்டும் பிரவாகித்திருக்கவேண்டுமென்றும்,— உயர்ந்த பர்வதங்களில் சிப்பிகள் கடற்பிராணிகளின் கங்காளங்கள் அங்கங்கே சேமிக்கப்பட்டிருக்கின்றதைப்பற்றி மேற்சொல்லிய நியாயம் செல்லாது; ஏனெனில் அதற்குப் பலத்த சில ஆட்சேபங்களைச் சொல்லலாம் என்றும்,—

பூமியின் ஓர் பாகம் சமுத்திரத்தில் அமிழ்ந்து பின்பு கடற்றண்ணீர் வற்றின்பின் மறுபடியும் தோன்றும்படி செய்ததிலே பூபந்த சாஸ்திரத்துக்கு விரோதமானது யாதொன்றுமில்லை; ஆனதால் ஜலப்பிரளயமானது பூமியின் ஓர் பாகத்தில் மாத்திரம் நடந்ததென்று தீர்மானிக்கிறது உத்தமமென்றும் சாதிக்கிறார்கள்.

இந்தத் தர்க்கத்தில் ஓர் சித்தாந்த தீர்மானம் பண்ணுகிறது எளிதல்ல. மனுஷருடைய அபிப்பிராயம் என்னமாயிருந்தாலும் வேத சரித்திரங்களெல்லாம் சத்தியமே சத்தியமென்பதற்குச் சந்தேகமில்லை. என்றாலும் இப்படிப்பட்ட சந்தேகவிஷயங்களில் வேதம் சொல்லுகிறது ஒன்று. மனிதன் வேதவசனங்களுக்குச் சொல்லுகிற வியாக்கியானம் வேறொன்று என்பதை நாம் மறந்துவிடலாகாது.

## படிப்பினை.

(1) அக்கிரமக்காரரை ஆக்கினைக்குட்படுத்தும்படி அவர்களை நியாயத்தீர்ப்புநாளுக்கென்று வைக்க தேவன் அறிந்திருக்கிறார். அவர்கள் பெருங்கூட்டமாயிருந்தாலும் அகந்தையுள்ளவர்களாயிருந்தாலும் அழிவை அடைந்தேதீரும்.

(2) தேவபக்தியுள்ளவர்கள் சொற்பப்பேராயும், அவமதிக்கப்பட்டவர்களாயும், சகாயமற்றவர்களாயுமிருந்தாலும், அவர்களைச் சோதனையினின்று இரட்சிக்க தேவன் அறிந்திருக்கிறார். உபத்திரவப்படுகிற தேவபக்தர் தேவன் தங்களை மறந்துவிட்டார் என்று புறம்பான தோற்றத்தின்படி எண்ணினாலும், தங்களை அவர் கைவிடவில்லை, அன்பின் பெருக்கத்தால் தங்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார் என்று ஏற்றகாலத்தில் உணர்ந்துகொள்வார்கள்.

(3) கர்த்தருக்குத் தங்களை முழுதுமாய் ஒப்புவித்தவர்கள் அவருடைய கட்டளைகளை மதித்து அவைகளுக்குக் கீழ்ப்படிந்துநடந்து அவருடைய சமயத்துக்காகக் காத்திருப்பார்கள்.

(4) தேவனுடைய உண்மையானது உத்தமனுக்கு அடைக்கலமாயிருக்கிறது. அவரை அண்டிக்கொள்ளுகிற யாவருக்கும் இது கிடைக்கும்.

(5) வெளியரங்கமான சபையிலே எத்தனைபேரோ நோவாவின் புறாவைப்போலிராமல் காகத்தைப்போல் இருக்கிறார்கள். அவர்கள் மார்க்கத்தை உலக ஆதாயத்துக்காக மதித்து, சோதனைகளில் தவறிப்போய்விடுகிறார்கள். மெய்க்கிறிஸ்தவன் சோதனைகாலத்தில் சற்று விலகினாலும், கிறிஸ்துவின் ஆவியை உடையவனாய் மறுபடியும் கர்த்தரண்டைக்குத் திரும்புகிறான்.

(6) அழிவினின்று இரட்சிக்கப்படுகிறவர்கள் கண்ணீரோடே பாவத்தினாலுண்டாகும் நாசமோசத்தை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுகிறவர்களாய் இருக்கவேண்டும்.

(7) தெய்வீக இரக்கங்களும், கிறிஸ்துவின் பிராயச்சித்தமும், பரிசுத்த ஆவியானவரின் கிருபையும் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கும் கெட்டுப்போகிறவர்களுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் தெரியக்காட்டுகிறது. ஆபத்தினின்று நாம் விலக்கிக் காக்கப்படுகையில் தேவனுடைய இரக்கங்களுக்காக நாம் நன்றியறிதலை உத்தமத்தோடே காட்டி, நம்மையும் நம்முடைய கிரியைகளையும் தேவநாமத்தின் பிரபலத்துக்காகச் செலவிட்டு, இன்னமும் தேவ ஆதரவைத் தேடிக்கொள்ளவேண்டும்.

(8) தேவனுடைய உண்மையும், அதிகாரமும், உலகமுறைமையிலும் செல்லுவதைக் கவனிக்கையில், அவருடைய தயவுகளை எண்ணி, அவருடைய பராமரிப்பை நம்பிப் பற்றிக்கொண்டு, அவருடைய கரத்திலிருந்து நாம் பெறும் நன்மைகளை அவருடைய மகிமைக்காகச் செலவிடுவோமாக.





# 9. அதிகாரம்.

தேவன் நோவாவை ஆசீர்வதித்தது. 4. மனுஷ இரத்தம் சிந்துதலும் கொலையும் விலக்கப்பட்டது. 8. தேவன் நோவாவோடே உடன்படிக்கைபண்ணினது. 13. அதற்கு அடையாளமாக வானவில்லை வைத்தது. 18. நோவாவின் சந்ததி. 20. நோவா திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, 21. மதுமயக்கத்தில் இருக்கும்போது, அவனுடைய குமாரர்களில் ஒருவனால் பழிக்கப்பட்டது. 25. அவன் காநானைச் சபித்து, 26. சேமை ஆசீர்வதித்து, 27. யாப்பேத்துக்காக வேண்டிக்கொண்டு, 29. மரணமடைந்தது.

1 பின்பு தேவன் நோவாவையும், அவன் குமாரரை
யும் ஆசீர்வதித்து: [1]நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை
2 நிரப்புங்கள்.—[2]உங்களைப்பற்றிய பயமும் அச்சமும்
பூமியிலுள்ள சகல மிருகங்களுக்கும், ஆகாயத்தி
லுள்ள சகல பறவைகளுக்கும் உண்டாயிருக்கும்;
பூமியிலே நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்
சங்கள் யாவும், உங்களுக்குக் கையளிக்கப்பட்டன.—
3 [3]நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு

[1] ஆதி. 1. 28; 8. 17: 10. 32.
[2] சங். 8. 6. ஓசி. 2. 18. யாக். 3. 7.
[3] உபா. 12. 15; 14. 4. ஓ. அப். 10. 12, 14.

## 9. அதிகாரம்.

**1.** "தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் ஆசீர்வதித்து." நோவா மனிதஜாதியாருக்கு இரண்டாவது தலைவன் அல்லது தகப்பனாயிருந்தான். ஆதித் தகப்பனாகிய ஆதாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் திரும்பவும் இவனுக்கு அளிக்கப்பட்டது (ஆதி. 1: 28, 29; 2: 16, 17.). 1. இவன் பலுகிப் பெருகவும், 2. சிருஷ்டிகள்மேல் அதிகாரஞ் செலுத்தவும், 3. மிருகங்களை ஆகாரத்துக்காக உபயோகிக்கவும், 4. அவனை விசேஷித்த வகையாய்ப் பாதுகாக்கவும், 5. இனிமேல் ஜலப்பிரளயத்தினால் பூமியை அழிக்காதிருக்கவுந் தக்கதான வாக்குத்தத்தங்கள் இப்போது கொடுக்கப்பட்டன. முந்தின ஆசீர்வாதத்தோடே இங்கே கொஞ்சம் கூட்டப்பட்டிருக்கின்றது.

**2.** "உங்களைப்பற்றிய பயமும் அச்சமும்." நோவா ஜலப்பிரளயத்துக்குத் தப்பிப் பேழைக்குவெளியே வந்தபின்பு அவன் ஜீவனுக்கு துஷ்டமிருகங்களால் அபாயம் நேரிடாதென்று அவனுக்கு ஆறுதல் அளிக்கும்படி இந்த வாக்குக் கொடுக்கப்பட்டது. மனிதன், போசனத்துக்காக மிருகங்களை வேட்டையாடவும், துஷ்டமிருகங்களைக் கொல்லவும், மீன்களைப் பிடிக்கவும், மிருகங்களைத் தன் வேலைக்காக உபயோகப்படுத்தவும் (ஓசி. 2: 18.) அதிகாரம் பெற்றான். ஆனால் அவன் அவைகளை குரூரமாய் வதைக்கக்கூடாது. கிறிஸ்து தமது சீஷர்களுக்கு அவைகளின்மேல் அதிகாரமும் வல்லமையும் கொடுத்திருக்கிறார். (லூக். 10: 19.)

**3.** "நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும்." ஜலப்பிரளயத்துக்கு முன்னடி மனிதர்கள் கனிவர்க்கங்கள், தானியம், கீரைமுதலியவற்றைப் புசித்து

ஆகாரமாய் இருப்பதாக; [1]பசும் பூண்டுகளை உங்க
ளுக்குத் தந்ததுபோல, அவைகள் எல்லாவற்றையும்
4 உங்களுக்குத் தந்தேன்.—[2]மாம்சத்தை அதின் உயி
5 ராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்.—உங்க
ளுக்கு உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்திற்காகப்
பழிவாங்குவேன்; [3]சகல ஜீவஜந்துக்களிடத்திலும்

[1] ரோ. 14. 14, 20. 1கொ. 10. 23, 26. 1தீமோ. 4. 3, 4.
[2] லேவி. 17. 10–14; 19. 26. உபா. 12. 23. 1 சாமு. 14. 33. அப். 15. 20, 29.
[3] யாத். 21. 18. சங். 9. 12.

வந்தார்கள். நம்முடைய தேசத்திலுள்ள சைவர் என்னப்பட்டவர்கள் இந்நாளிலும் அப்படியே செய்துவருகிறார்கள். ஜலப்பிரளயத்திற்குப் பிந்தி மனிதர் எல்லாமிருகங்களையும் புசிக்கும்படியான உத்தரவைப் பெற்றார்கள். இந்த உத்தரவு பிந்தியகாலத்தில் இஸ்ரவேலருக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அப்போஸ்தலருடைய காலத்திலோ பழையபடிக்கு யாவற்றையும் புசிக்கும்படியான உத்தரவுண்டாயிற்று. தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. (1 தீமோ. 4: 4.)

கவனிப்பு. இந்த விஷயத்தில் கட்டாயமில்லை. மாம்சத்தைப் புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாய் எண்ணாது இருப்பானாக. புசியாதிருக்கிறவன் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக. தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோ. 14: 17.)

**4. "உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம்."** நோவாவுக்குக் கொடுக்கப்பட்ட இந்தக் கட்டளை சகல ஜாதியாரையும் கட்டுகிறதாயிருக்கிறது. மாம்சத்தின் உயிர் இரத்தத்திலிருப்பதால் இரத்தத்தைக் கீழே சிந்தவிட்டு மாம்சத்தைச் சாப்பிடும்படி உத்தரவு கொடுக்கப்பட்டது.

மேலும் பாவப்பிராயச்சித்தத்திற்காக இரத்தம் சிந்தப்பட கட்டளைகொடுக்க தேவன் சித்தங்கொண்டதால் அந்தக் கட்டளைக்கு மனிதர் அமையவும் அதின் முகாந்தரத்தை உணரவுந்தக்கதாக இரத்தத்தைச் சாப்பிடக்கூடாதென்று கற்பித்தார்.

இதுவுமல்லாமல் மிருகத்தின் இரத்தத்தை முதலாய்ச் சாப்பிடுவது நியாயமல்லவென்றால், மனித இரத்தத்தைச் சிந்துவது எவ்வளவோ பயங்கரப்படத்தக்கதென்று உலகத்திலுள்ளவர்களுக்கு உணர்த்தும்படிக்கு இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது.

**5. "உங்கள் இரத்தத்திற்காக......சகல ஜீவ ஜந்துக்களிடத்திலும், ௸."** மனிதரைக் கொல்லுகிற மிருகம் கொல்லப்படவேண்டும். மிருகங்களுக்குச் சன்மார்க்கம் துன்மார்க்கம் இல்லாதிருந்தும் மனித சம்பந்தமாய் இந்தப் பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

1. மிருகங்களுக்குச் சொந்தக்காரர், தங்கள் மிருகங்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

2. அவைகளைக் கொல்லுகையில் மற்றவர்கள் எச்சரிப்படைவார்கள்.

3. கொல்லும் மிருகங்கள் கொல்லப்படுவதிலே கொலைபாதகம் கொடிய துரோகம் என்று தேவன் விளங்கச்செய்தார்.





[1]மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்; மனுஷனு
டைய உயிருக்காக அவனவன் சகோதரனிடத்தில்
6 பழிவாங்குவேன். — மனுஷன் தேவசாயலில் உண்
டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை
எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனு
7 ஷனாலே சிந்தப்படக்கடவது.—நீங்கள் பலுகிப் பெ
ருகி, பூமியிலே திரளாய் வர்த்தித்து விர்த்தியாகுங்
கள் என்றார்.
8 பின்னும் தேவன் நோவாவையும், அவன் குமார
9 ரையும் நோக்கி:—நான் [2]உங்களோடும், உங்களுக்

[1] யாத். 21. 12. லேவி. 24. 17. மத். 26. 52. வெளி. 13. 10.
[2] ஆதி. 6. 18.

4. இப்படி மனிதனுக்குத் துன்பஞ்செய்யும் மிருகங்கள் கொலைசெய்யப்படுகையில் மனித உயிர் சுகமாய்க் காக்கப்படுவதற்கு இடமாகும்.

"மனுஷனிடத்திலும் பழிவாங்குவேன்." கொலைபாதகத்துக்கு இரக்கங் காட்டாமல் கொலைசெய்தவனுடைய உயிரை வாங்கிப்போடவேண்டும் (யாத். 21: 12, 14.). இதற்கு இரண்டு முகாந்தரம் சொல்லப்பட்டிருக்கின்றன. (1.) மனிதர் ஒருவருக்கொருவர் சகோதரர் (அப். 17: 26.). (2.) மனிதன் தேவசாயலின்படி உண்டாக்கப்பட்டிருக்கிறான். [illegible]மிருக இரத்தத்தைவிட மனித இரத்தம் மிகவும் மேன்மைபொருந்தியதும், அருமையானதுமாயிருக்கிறது.

**6. "மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால்."** மனுஷன் சன்மார்க்கநெறியும், சுயத்துவமும், சுயாதீன சித்தமுமுடையவன். பாவத்தினால் பரிசுத்தத்தை இழந்துபோனாலும், சன்மார்க்கமும் சுயத்துவமும் அவனைவிட்டு நீங்கவில்லை. அப்படிப்பட்டவனைக் கொலைசெய்வதில், அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஜீவகாலத்தைக் குறைக்கிறதாயும், கிருபையின் நாட்களைக் குறுக்குகிறதாயும், அவன் ஆத்துமாவுக்கு தேவன் காட்டவேண்டிய அன்பு இரக்கம் இவைகளை விருதாவாக்குகிறதாயுமிருக்கிறது. ஆகவே கொலைபாதகமானது சகோதரனுக்குச் செய்யும் பெருந் துரோகமாயும், மனிதருக்கு அன்பு பாராட்டுகிற பிதாவுக்கு அவமானமாயுமிருக்கிறது. யூதர் நோவாவுக்கு தேவன் ஏழு பிரமாணங்களை விதித்தார் என்றும், அவைகள் சர்வஜனத்தாரையும் கட்டுகிறதென்றும் சொன்னார்கள். அவையாவன: 1. கொலைசெய்யாமை, 2. ஜீவனோடே இருக்கிற மிருகங்களின் மாம்சத்தைப் புசியாமை, 3. தேவதூஷணம் பேசாமை, 4. விக்கிரகாராதனை செய்யாமை, 5. முறைகேடான கலப்புப்பண்ணாமை, 6. களவு செய்யாமை, 7. அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதலுமே. முந்தின இரண்டும், கடைசியானதும், வாக்கியத்திலடங்கியிருக்கிறது; மற்ற நாலும் இயற்கைப் பிரமாணத்தின் அமைப்பாயிருக்கிறது.

"அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது." நியாயாதிபதியினால் கொலைத்தீர்ப்புப் பெறுவான்.

**9. "நான் உங்களோடும்.......என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்."** இனிமேல் உலகம் ஜலப்பிரளயத்தினால் அழிக்கப்படமாட்டா

10 குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், — உங்க
ளோடே [1]பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவ [1] ஏசா. 54. 9.
ஜந்துக்கள்முதல் இனிப் பூமியில் உண்டாகப்போகிற
சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும்,
நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற
பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என்
11 உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்.—இனி மாம்
சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத்தினால் சங்க
ரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி
ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்க
ளோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன்
என்றார்.
12 அன்றியும் தேவன்: [2]எனக்கும் உங்களுக்கும், உங்க [2] ஆதி. 17. 11.
ளிடத்திலே இருக்கும் சகல ஜீவஜந்துக்களுக்கும், நித்
திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்
13 படிக்கையின் அடையாளமாக:—நான் [3]என் வில்லை [3] வெளி. 4. 3.
மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும்
உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்

தென்று ஜலப்பிரளயத்துக்குத் தப்பின மனிதருக்கு இது புதிய உடன்படிக்கை யாக ஏற்படுத்தப்பட்டது. அவர்கள்மூலமாய் மிருகஜீவன்களோடும் ஸ்தாபிக்கப்பட்டது.

**10.** "பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவ ஜந்துக்கள்முதல், ஃ" இந்தப் பாகத்தைப் "பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் பூமியின் சகல மிருகம்வரைக்கும்" என்று திருப்பி, இதிலே பேழையில் காக்கப்பட்ட மிருகங்கள் வேறே என்றும் பூமியில் அழிக்கப்படாமலிருந்த மிருகங்கள் வேறே என்றும் கண்டிருக்கிறதினாலே ஜலப்பிரளயம் பூமி எங்கும் உண்டாகவில்லை என்று சொல்வார் உண்டு. ஆனால் எபிரெய பாஷையின் நடையைக் கவனித்தால், 9–ம் வாக்கியத்தில் நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும் என்று சொல்லியதற்கு இசைவாக இவ்வசனத்துக்குப் பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவஜந்துக்கள் முதல் அவைகளின் வழியாய் இனி பூமியில் உண்டாகப்போகிற சகல ஜீவஜந்துக்கள் பரியந்தம் என்று திருப்புவதும் அர்த்தப்படுத்துவதும் நியாயம்.

**13.** "என் வில்லை மேகத்தில் வைத்தேன்." நோவாவோடே தேவன் செய்த உடன்படிக்கையானது யாவருக்கும் உரிய பொதுவான உடன்படிக்கையாயிருக்கிறது. அந்த உடன்படிக்கையின் அடையாளம் எல்லாத் தேசத்தாருக்கும் தெரியத்தக்கதாயிருக்கவேண்டும். ஞானஸ்நானத்தில் தண்ணீரும்,





14 கும். — நான் பூமிக்குமேலாய் மேகத்தை வருவிக்
கும்போது, அந்த வில் மேகத்தில் தோன்றும். —
15 அப்பொழுது எல்லா மாம்சஜீவன்களையும் அழிக்க
இனி ஜலமானது பிரளயமாய்ப் பெருகாதபடிக்கு
எனக்கும் உங்களுக்கும் மாம்சமான சகல ஜீவஜந்
துக்களுக்கும் உண்டான [1]என் உடன்படிக்கையை [1] யாத். 28. 12. லேவி. 26. 42, 45. எசே. 16. 60.
16 நினைவுகூருவேன்.—அந்த வில் மேகத்தில் தோன்றும்
போது, தேவனுக்கும் பூமியின்மேலுள்ள சகலவித
மாம்சஜீவன்களுக்கும் உண்டான [2]நித்திய உடன்ப [2] ஆதி. 17. 13, 19.
டிக்கையை நான் நினைவுகூரும்படிக்கு அதை நோக்
17 கிப் பார்ப்பேன்.—இது எனக்கும், பூமியின்மேலுள்ள
மாம்சமான யாவுக்கும், நான் ஏற்படுத்தின உடன்ப
டிக்கையின் அடையாளம் என்று நோவாவோடே
சொன்னார்.
18 பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர்,
[3]சேம் காம் யாப்பேத் என்பவர்களே. காம் கானா [3] ஆதி. 10. 6.
19 னுக்குத் தகப்பன்.—இம்மூவரும் [4]நோவாவின் குமா [4] ஆதி. 5. 32: 10. 32.
ரர்; இவர்களாலே பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்
கள்.

இராப்போசனத்தில் அப்பமும் இரசமும், அடையாளமாய்க் கொடுக்கப்பட்டது போல, இங்கே முன்னிருந்த வானவில்லானது இனிமேல் பூமி ஜலப்பிரளயத்தால் அழியப்படாது என்பதற்கு அடையாளமாக ஏற்படுத்தப்பட்டது. மனிதர் இந்த வில்லைக் காணும்போது தேவனுடைய கிருபையுள்ள வாக்குத்தத்தத்தை நினைத்து பூமி இனிமேல் ஜலப்பிரளயத்தால் அழிக்கப்படமாட்டாதென்று ஆறுதலடைவார்கள். வானவில் தேவனுடைய உண்மைக்கும் இரக்கத்துக்கும் மகத்துவத்துக்கும் குறிப்பாயிருக்கிறது. (வெளி. 4: 3; 10: 1.)

**16.** "நித்திய உடன்படிக்கை." தேவனுடைய ஆணையினால் உறுதிப்படுத்தப்பட்ட மாறாத உடன்படிக்கை.

**18.** "கானான்." இவனும் இவனில் இவன் சந்ததியாரும் சபிக்கப்பட்டவர்கள். அவர்கள் வியாபாரத்தில் விர்த்தியடைந்த காயீனியரைப்போலப் பொல்லாதவர்களாய்த் தலையெடுத்ததால் அவர்கள் அக்கிரமத்தினிமித்தம் அழிவுக்கு நியமிக்கப்பட்டார்கள்.

**19.** "பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள்." காமின் சந்ததியார் ஆப்பிரிக்காக்கண்டத்திலும், சேமின் சந்ததியார் அர்மீனியா, சீரியா, அராபியாவிலும், யாப்பேத்தின் சந்ததியார் ஆசியாவின் வடபாகத்திலும் மாதே தேசத்திலும் ஐரோப்பாக்கண்டத்திலும் பரம்பினார்கள். அமெரிக்காக் கண்டம் பூர்

20 நோவா [1]பயிரிடுகிறவனுகி, திராட்சத்தோட்டத்தை [1] ஆதி.3. 19. நீதி. 12. 11.
21 நாட்டினுன்.—அவன் திராட்சரசத்தைக் குடித்து,
[2]வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப் [2] நீதி. 20.1.1கொ. 10. 12.
22 படுத்திருந்தான்.—அப்பொழுது கானுனுக்குத் தகப்ப
னுகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக்
கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்
23 கும் அறிவித்தான்.—அப்பொழுது [3]சேமும் யாப் [3] யாத். 20. 12. கலா. 6. 1.
பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவரு
டைய தோள்மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டு
வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடி
னுர்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியி
னுல், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணு

வீகத்தில் நோவாவின் மக்களில் எவனுடைய சந்ததியால் குடியேற்றப்பட்ட தென்பதை நாம் அறியோம்.

**20.** "நோவா பயிரிடுகிறவனுகி." ஜலப்பிரளயத்துக்கு முந்தி வேளாண்மைத்தொழில் அதிகமாய் நடந்திருந்தது. நோவா தான் முன்னே முயற்சித்த தொழிலை, மறுபடியும் தொடங்கித் திராட்சத்தோட்டம் போட்டான். தற்காலத்திலும் அர்மீனியாவில் திராட்சப்பயிர் மிகுதியாய் வளருகின்றது.

**21.** "குடித்து வெறிகொண்டு, &c." சிலர் நோவா திராட்சரசம் செய்யும் வகையை முதலாவது கண்டுபிடித்தவனென்று சொல்வார்கள். ஆனுல் காயீனியர் அதைக் கண்டுபிடித்தார்கள் என்பதே பொதுவான அபிப்பிராயம். திராட்சரசத்தின் சத்தை அறியாததினுலேயோ அல்லது முதுமையயின் பெலவீனத்தினுலேயோ நோவா பானம்பண்ணின மதுரசமானது அவன் வஸ்திரம் விலகத்தக்கதான வெறியை உண்டுபண்ணிற்று. மோசே நோவாவின் நற்குணம், நடக்கைகளை எழுதியிருப்பதுபோல, அவனுடைய பெலவீனத்தையும் உண்மையாய் எழுதிவைத்திருக்கிறுன். நோவாவின் பெலவீனத்தினுல் அவனுக்குண்டான வெட்கத்தைக் கண்டு நாம் எச்சரிப்படையும்படியாக இது நமக்குப் பிரயோஜனமாய் எழுதப்பட்டிருக்கிறது. நோவாவின் பாவத்தினுல் அவனுக்கு அவமானம் நேரிட்டதோடு, காம் பாவஞ்செய்யவும், கானுன் பாவத்திற் பிரவேசிக்கவும் அவர்கள் சந்ததியார்கள் பாவத்தினுலுண்டான நிர்ப்பாக்கியத்தை அநுபவிக்கவும் ஏதுவாயிற்று.

**22.** "கானுனுக்குத் தகப்பனுகிய காம்." காம் என்பவன் தற்செயலாய்ப் பார்த்ததில் பாவமில்லை. அப்படித் தற்செயலாய்த் தூர்நோக்கமில்லாமல் பார்க்க நேரிட்டும், அவன் தன் தகப்பன்பேரில் அன்புடையவனுயிருந்து அவன் நிர்வாணத்தை மூடும்படி அவனுக்குச் செய்யவேண்டிய ஆசாரத்தைச் செய்யாமல் அவன் அவமானத்தைக்குறித்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டிப் பேசினதே குற்றமாயிருக்கிறது. சேமும், யாப்பேத்தும் இதுவிஷயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனே காலதாமதம் பண்ணுமல் மரியாதையைப் பேணி தங்கள் தகப்பனுக்கு கனஞ் செய்தார்கள்.





24 வில்லை.—நோவா திராட்சரசத்தின் வெறி தெளிந்து
விழித்தபோது, தன் இளைய குமாரன் தனக்குச் செய்
25 ததை அறிந்து:—[1]கானுன் சபிக்கப்பட்டவன், தன் [1] உபா. 27. 16. யோசு. 9. 23.
சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்
26 பான் என்றுன்.—சேமுடைய தேவனுகிய கர்த்தருக்கு
[2]ஸ்தோத்திரம் உண்டாவதாக; கானுன் அவனுக்கு [2] சங்.144.15.எபி. 11.16.

**24.** "இளைய குமாரன்." எபிரெயுவில் "சின்னவன்" என்றிருக்கிறது. குடும்பத்தில் கடைசிப்பிள்ளைக்கு இந்த வார்த்தை உபயோகப்படும்; பென்யமீனைப்பற்றி, 42: 34; 43: 29-லும் தாவீதைப்பற்றி 1. சாமு. 16: 11-லும் சொல்லியிருக்கிறது. நோவாவின் குடும்பத்தில் காம், கடைசிப் பிள்ளையல்ல. நோவா கூறின சாபத்தில் காமின் பேர் சொல்லப்படாமல் கானுன் பேர் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் எபிரெயர் பேரப்பிள்ளையைக் குமாரன் என்றும் சொல்வது வழக்கம். இதையிட்டு இங்கே சொல்லப்பட்டிருக்கிற (சின்னவன்) இளைய குமாரன் கானுன் என்று வியாக்கியானஞ் செய்வாருண்டு. இதற்கு இசைவாய் ஒரிஜன் என்பவன் கானுன் தன் பாட்டனுடைய அவமானத்தைக் கண்டு தன் தகப்பனுக்கு அறிவித்தானென்று யூதருக்குள் ஒரு பாரம்பரியமுண்டு என்று எழுதியிருக்கிறுன். ஆனுலும் இது உத்தேசமாகச் சொல்லியிருக்கிறதேயல்லாமல் நிச்சயமானதல்ல.

**25.** "கானுன் சபிக்கப்பட்டவன்." சிலர் காம் சபிக்கப்பட்டவன் என்றிருக்கவேண்டும் என்பார்கள். ஆனுல் இதற்கு ஆதாரமில்லை. கானுனுடைய பேர் மூன்றுதரம் வருகிறதே, விபட்சத்தார் சொல்லியதற்கு முற்றும் எதிரிடையாயிருக்கிறது. மேலும் காமுடைய மற்றச் சந்ததியார் எகிப்திலுள்ள தேபே, நினிவே, பாபிலோன்முதலான பட்டணங்களில் சிறந்த அரமனைகளைக் கட்டி, இராச்சியபாரங்களைக் கிரமப்படுத்தி, தேசங்களை ஆண்டுவந்தார்கள் என்றும், காமின் புத்திரர் எகிப்திலே சேமின் புத்திரராகிய இஸ்ரவேலரைச் சில நூற்றுண்டுகளாய்ச் சிறைகளாக வைத்து நடத்தினுர்கள் என்றும் வாசிக்கிறேம். ஆதலால் காம் என்பவனைக் குறியாமல் கானுனையே குறிக்கும் என்று சொல்லவேண்டும்.

"தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான்." என்பது இழிவான அடிமைத்தனத்தைக் குறிக்கும். இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட 800 வருஷங்களுக்குப்பின்பு யோசுவா கானுனுடைய சந்ததியாரில் முப்பத்தொரு இராஜாக்களைக் கீழ்ப்படுத்தி அவர்கள் தேசத்தைக் கட்டிக்கொண்டான். மேலும் தன்னேடே தந்திரமாய் சமாதானஞ்செய்த கிபியோனியரையும் யோசுவா இஸ்ரவேலருக்கு அடிமைகளாக்கினுன். இதுதவிர கானுனின் வம்சத்தார் யாவரும் விக்கிரகத்துக்கு அடிமைகளாகிக் குரூரமானவிதமாய்த் தங்கள் பிள்ளைகளையுங்கூட விக்கிரகங்களுக்குப் பலியாகச் செலுத்திவந்தார்கள்.

**26.** "சேமுடைய தேவனுகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக." சேமாகிய தன் மகனுடைய பக்தியைக் காட்டும்படி அவன்மனதிலே நல்லெண்ணத்தைக் கொடுத்த கர்த்தரை நோவா முதலாவதாகத் தோத்திரித்தான்.

27 அடிமையாயிருப்பான்.—யாப்பேத்தை தேவன் விர்த்
தியாக்குவார்; [1]அவன் சேமுடைய கூடாரங்களில் [1] எபே. 2.13, 14; 3.6.
குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையா
யிருப்பான் என்றான்.
28 ஜலப்பிரளயத்துக்குப்பின்பு நோவா முந்நூற்றைம்
29 பது வருஷம் உயிரோடிருந்தான்.—நோவாவின் நாட்
களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம்; அவன்
மரித்தான்.

கர்த்தர் இங்கே சேமுடைய தேவனாகச் சொல்லப்படுகிறார். அவன் வம்சத்தில் அவர் தொழுது தோத்திரிக்கப்பட்டதாலும், தேவனுடைய இரகசியமான பரமஞானத்தை வெளிப்படுத்தும் தேவனுடைய தீர்க்கதரிசிகள் அவ்வம்சத்திலே எழும்பப்போவதாலும் உலகத்துக்கு இரட்சிப்பை உண்டுபண்ணின கர்த்தராகிய கிறிஸ்து இரட்சகர் மாம்சப்பிரகாரமாய் அவன் வம்சத்தில் வந்து உதிக்கப்போவதாலும் கர்த்தர் சேமின் தேவன் என்று சொல்லப்பட்டிருக்கிறார்.

**27.** "யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்." யாப்பேத்து என்பதற்கு "விஸ்தாரமாய் விர்த்தியாகுதல்" என்றர்த்தம். அவன் சந்ததியார் கல்தேயர், மேதியர், பார்சியர், கிரேக்கர், ரோமர், இந்துக்களே. தற்காலத்தில் உலகத்தைக் கட்டி ஆளுகிறவர்கள் யாப்பேத்தின் சந்ததியாயிருக்கிறார்கள். அவர்கள் ஆசியாவின் மிச்சமான பாகத்திலும், ஐரோப்பா முழுமையிலும், அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் குடியேறி வாழ்ந்திருக்கிறார்கள்.

"அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்." இதை "அவர் அதாவது தேவன் சேமின் கூடாரங்களில் குடியிருப்பார்" என்று திருப்புவாருண்டு. ஆனால் இது தேவனைக் குறிக்கிறதானால் கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான் என்பதில் வரும் அவனுக்கு என்கிற வார்த்தையும், தேவனைக்குறிக்க வேண்டும். ஆனால் கானானியர் ஒரு ஜாதியாராக மெய்த்தேவனை வணங்காமல் விக்கிரகாராதனைக்காரராயிருந்தார்கள். ஆதலால் அவன் என்பது இங்கே தேவனைக் குறிக்கமாட்டாது. யாப்பேத்து சேமின் கூடாரங்களில் குடியிருப்பான் என்று வைத்துக்கொண்டால் ரோமர் யூதேயாவையும் ஆசியாவிலுள்ள மற்ற தேசங்களையும் கட்டிக்கொண்டபோது இத்தீர்க்கதரிசனம் ஒருவாறு நிறைவேறுதலடைந்தது என்று சொல்லலாம்.

நோவாவின் தீர்க்கதரிசனம், உலக முடிவுபரியந்தம் [illegible] சம்பவங்களைத் தொகுத்துக்காட்டும் தீர்க்கதரிசனமாயிருக்கிறது; காலம் செல்லச்செல்ல அதன் நிறைவேறுதல் பூரணமாகும்.

**29.** "நோவாவின் நாட்களெல்லாம்." ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்த யாரேத்து (5: 20.), மெத்தூசலா (5: 27.), இவ்விரண்டுபேருக்கும் பின்பு நோவா அதிககாலம் உயிரோடிருந்தவன் என்றறியலாம்.

படிப்பினை.

வச. 1—23.

(1) ஒரு மனுஷனுக்கும், அவன் குடும்பத்துக்கும், ஒரு சாதியாருக்கும் சேமமும் வாழ்வும் தேவாசீர்வாதத்தினால்மாத்திரம் உண்டாகிறது.



103



# 10. அதிகாரம்.

1. நோவாவின் சந்ததி. 2. யாப்பேத்தின் சந்ததி. 6. காமின் சந்ததி. 8. நிம்ரோது உலகத்தில் முதல்முதல் அரசனானது. 21. சேமின் சந்ததி.

1 நோவாவின் [1]குமாரராகிய சேம் காம் யாப்பேத் [1] ஆதி. 5.32.
என்பவர்களின் வம்சவரலாறு: ஜலப்பிரளயத்துக்குப்

(2) தேவன் காட்டுமிருகங்களினால் நமக்குக் கொடுக்கிற நன்மைகளை நன்றியறிதலோடே அங்கீகரிப்போமாக. மனுஷன் அவைகளுக்கு எசமானாக வைக்கப்பட்டிருந்தாலும், அவைகளைக் குரூரமாய் நடத்தினால், அப்படிப்பட்டவன் தேவனுக்குக் கணக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியவனாக இருக்கிறான்.

(3) கொலைபாதகத்துக்கு அஞ்சுவோமாக. கொலைக்கு இனமான கோபம், பொறாமை முதலிய தீயகுணங்களை நமது இருதயத்தைவிட்டு அகற்றுவது எவ்வளவு நன்று. கொலைபாதகன் பரிதானம்முதலியவற்றால் இம்மையில் தப்பிக்கொண்டாலும், அவன் குணப்படாவிட்டால், தேவதண்டனைக்கு ஒருக்காலும் தப்பமாட்டான்.

(4) தேவன் தம்முடைய சனங்களின் பயத்தை நீக்குகிறதுபோலவே நாமும் நம்முடைய சகோதரருடைய பயங்களை நீக்கும்படி நன்மைசெய்யக்கடவோம்.

(5) நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக்கடவன். பெரும் சோதனைகளில் தப்பிக்கொண்டவன் சிறிய சோதனைகளில் விழாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவன்.—பொல்லாதவர்கள் கூட்டத்தில் யோக்கியமாய் நடந்துகொள்ளுகிறவன் தனிமையாயிருக்கையில் பாவத்தில் விழுவதுண்டு. ஆதலால் எவ்வளவு விழிப்போடே நாம் இம்மையில் ஜீவனம் பண்ணவேண்டியதாயிருக்கிறது. மேட்டிமை சிந்தையாயிராமல் பயத்துடன் விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக.

(6) குடிவெறி வெட்கத்தையும் அவமானத்தையும் உண்டுபண்ணுவதால் அதற்கு விலகியிருப்பதே உத்தமம்.

(7) நீதிமான் தவறினாலும் முற்றிலும் கைவிடப்படான்.

(8) தாய்தந்தைகள், பெரியோர், அதிகாரிகளைக் கனம்பண்ணுவதில் மேன்மை உண்டு. கனஞ்செய்கிறவன் கனத்துக்குப் பாத்திரனாவான்.

(9) மற்றவர்கள் தற்செயலாய்ப் பெலவீனங்களில் விழுகையில் அவைகளை மறைக்கிறவர்கள் விசேஷித்தவகையாய் மதிக்கப்படுவார்கள். கனம்பண்ணவேண்டியவர்களைக் கனவீனம் பண்ணுகிறவர்களோ தங்களுக்குச் சாபத்தை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.

வச. 24—29.

(10) [illegible]ல் காட்டப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் பூரணமாய் எக்காலத்திலுமுள்ள எத்தேசத்தாருக்குள்ளும் நிறைவேறிவருவதைப் பார்க்கையில், அந்தப் பரிசுத்த புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறவைகளை விசுவாசித்து அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது சிறந்த நன்மையை வருவிக்கும். பாவத்தையும் அதினால் விளையும் நாசத்தையும் அறிந்து சுவிசேஷ அழைப்புக்குச் செவிகொடுத்து, விசுவாசிகளுக்கு அருளப்படும் ஆசீர்வாதங்களுக்காகப் பொறுமையோடே காத்திருந்தால், உலகத்தில் உண்டாகும் சீர்கேடுகளில் நாம் விலக்கிக் காக்கப்பட்டுப் பரமசுகம்பெற்று வாழலாம். "சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான்."

## 10. அதிகாரம்.

**1.** "வம்ச வரலாறு." பூமியின் விசாலத்தில் குடியேறின ஜாதியாரின் வரலாற்றைக்குறித்து வேதாகமமின்றி, வேறே வகையாய் நாம் அறியக்கூடாத

பின்பு அவர்களுக்குக் குமாரர் பிறந்தார்கள்.—
2 யாப்பேத்தின் குமாரர், [1]கோமர், மாகோகு, மாதாய்,
யாவான், தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள்.—

[1] 1 நாளா. 1.5. மு.

வர்களாயிருக்கிறோம். சகல மனிதரும் ஒரே மனிதனிலிருந்து உண்டானவர்கள் என்பதை, கபாலம், மூளை, அந்தகரணங்கள், ஆயுள், வியாதிகள், சம்பந்தக் கலப்பினால் உண்டாகும் பெருக்கம் முதலியவைகள் எக்குலத்தாருக்கும் ஒரே வகையாயிருப்பதாலே அறியலாம்.

**2.** "யாப்பேத்தின் குமாரர்." யாப்பேத்து இத்தனையாம் குமாரன் என்பது திட்டமாய் விளங்கவில்லை. சிலர் அவன் மூத்தவன் என்றும், சிலர் நடுவுள்ளவன் என்றும், சிலர் இளையவன் என்றும் சொல்வார்கள். 10: 21ஐ "சேம், ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், யாப்பேத்துக்கு மூத்த சகோதரனுமாயிருந்தான்" என்று திருப்பவும் செய்யலாம். சேமின் சந்ததியாரின் வம்சவரலாற்றை நீடித்துக் காட்டிக்கொண்டு போகவேண்டியதாயிருந்ததாலும், காமின் சந்ததியார், சேமின் சந்ததியாரோடே அதிகமாய்ச் சம்பந்தப்பட்டிருந்ததாலும், யாப்பேத்தின் சந்ததியாரைக்குறித்து, இங்கே முதலில் காட்டியிருக்கிறது. யாப்பேத் என்ற பேர், "விர்த்தியாக்குதல்" என்றர்த்தங்கொள்ளும் பதத்திலிருந்து உண்டானதென்று சிலரும், "அழகு" என்றர்த்தங்கொள்ளும் வார்த்தையிலிருந்து உண்டானதென்று வேறு சிலரும் சொல்லுகிறார்கள்.

"கோமர்." இவன் சந்ததியாரான கிம்மரியர், பூர்வீகத்திலே மாகோகு, மாதாய் ஜாதியாருக்கு அதாவது சிதியருக்கும் மேதியருக்கும் இடையில் குடியிருந்தார்கள். பின்பு கஸ்பியன் கடலோரத்திலும், கறுப்புக் கடலோரத்திலும் வாசஞ்செய்தார்கள். பிரித்தானியா, கால், ஐரோப்பாவின் மேல்பாகம் இவர்களால் குடியேறப்பட்டது என்று நினைக்கத்தக்கது.

"மாகோகு." இவன் சந்ததியார் காக்கேசஸ் மலைக்கு வடக்கும், தெற்குமாய்க் குடியிருந்த சிதியரே. தற்காலத்திலிருக்கிற ருஷியரும், அவன் சந்ததியில் தோன்றினவர்கள்.

"மாதாய்." கஸ்பியன் கடலுக்குத் தெற்கும், தென்மேற்குமாய்க் குடியிருந்த ஜாதியார் இவனுடைய சந்ததியார். இவர்கள் சிறு சிறு கூட்டத்தாராய் ஐரோப்பாவுக்கு வலசைபோனபோது சிதியரோடே கலந்து, சார்மேசியர் என்றழைக்கப்பட்டார்கள்.

"யாவான்." இவனிலிருந்து ஐயோனியரும், எல்லினிக் ஜாதியாரும் உண்டானார்கள். அலெக்சந்தர் யாவானின் ராஜாவென்று சொல்லப்பட்டிருக்கிறான். எகிப்தியருடைய சித்திர பாஷைத்தில் கிரேக்குத்தேசத்தை ஐயோனியா என்று காட்டியிருக்கிறது.

"தூபால்." இந்தப் பேர், மேசேக் என்றதோடே அடிக்கடி சேர்ந்துவருவதுண்டு (எசே. 27: 13; 32: 26; 38: 2, 3; 39: 1.). இவன் சந்ததியார் கறுப்புக்கடலுக்குத் தென்கிழக்காய்க் குடியிருந்த திபேரினி ஜாதியாரே.

"மேசேக்கு." அர்மீனியாவிலும், கொல்கிசிலும், குடியிருக்கிற மஸ்கி ஜாதியார் இவன் வமிசத்தார்.





3 கோமரின் குமாரர், அஸ்கினாஸ், ரீப்பாத்து, தொகர்
4 மா என்பவர்கள்.—யாவானின் குமாரர், எலீசா, தர்
5 ஷீஸ், கித்தீம், தொதானீம் என்பவர்கள்.— இவர்க
ளால் [1]ஜாதிகளுடைய தீவுகள், அவனவன் பாஷை
யின்படியேயும், அவரவர்கள் கோத்திரத்தின்படியே
யும், ஜாதியின்படியேயும், வேறுவேறு தேசங்களாய்ப்
பகுக்கப்பட்டன.
6 காமுடைய குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத், கா

[1] சங். 72.10. எரே. 2.10. செப். 2.11.

"தீராஸ்." திரேஷியர் இவனிலிருந்து வந்தவர்கள் என்று சொல்வாருண்டு; அப்படியானால் இப்போதிருக்கிற ஸ்கண்டிநேவியரும் இவனுடைய வமிசத்தார்.

யாப்பேத்தின் சந்ததியார் சின்ன ஆசியாவிலும், அர்மீனியாவிலும், மேற்கே கஸ்பியன் கடல்வரையும், அங்கிருந்து வடக்காகக் கறுப்புக்கடல்வரைக்கும் குடியேறினார்கள். பின்பு மெதித்திரானியாவின் வடகரையோரங்களிலும், ஐரோப்பாவெங்கும், கிழக்கே பார்தியா, பாக்திரியா, பஞ்சாப், இந்தியாவிலும், ஜர்மனி, கிரேக்கை, ரோமையிலும் பரவினார்கள்.

**3.** "கோமரின் குமாரர், அஸ்கினாஸ்." இவன் சந்ததியார் அர்மீனியாவுக்கு வடக்கே குடியிருந்தார்கள். (எரே. 51: 27.)

"ரீப்பாத்து." சிலர் பாவிலக்கோனியாவிலுள்ள ரீப்பாத்தியரைக் குறிக்கும் என்றும், சிலர் ஜியார்ஜியாவிலிருக்கிற ரீப்பாத்து மலைக்குடிகளைக் குறிக்கும் என்றும் சொல்லுகிறார்கள்.

"தொகர்மா." அர்மீனியர் இவன் சந்ததியார்.

**4.** "யாவானின் குமாரர், எலீசா." கிரேக்குத்தேசத்தில் கடலோரமாய்க் குடியிருந்த ஜனங்கள். (எசே. 27: 7.)

"தர்ஷீஸ்." இத்தாலியாவிலும், கார்சிக்காவிலும்; சார்டினியாவிலும், கடைசியாக ஸ்பானியாவிலும் குடியேறின தொர்னி ஜாதியாரே என்று நினைப்பாருண்டு.

"கித்தீம்." சீப்புருதீவில் குடியேறினவர்கள். அவர்கள் பிரதான பட்டணத்துக்குக் கித்தியம் என்று பேர். மக்கெதோனியாவிலும் கித்தியம் என்ற பேரால் ஒரு பட்டணமுண்டு. அலெக்சந்தர் கித்திம் ராஜன் என்று சொல்லப்பட்டிருக்கிறான்.

"தொதானீம்." ரோதுதீவார், இவன் வமிசத்தார் என்றெண்ணப்படுகிறார்கள். சிலர் இவர்கள் இல்லிரிகம் தேசத்தில் குடியிருந்த தார்தனியரென்று நினைக்கிறார்கள்.

**6.** "காமுடைய குமாரர், கூஷ்." கூஷ் என்பது எத்தியோப்பியா தேசத்தைக் குறிக்கும். இது ஆப்பிரிக்காவிலுள்ள தேசத்தைக் குறியாமல், ஆசியாவிலுள்ளதைக் குறிக்கும். கூஷ் ஜாதியார் ஐப்பிராத்து, திகிரிஸ்நதிகளின் ஓரங்களிலே குடியிருந்தார்கள். அங்கே அவர்கள் நிம்ரோதின் காலத்தில் மிகவும்

7 னான் என்பவர்கள்.—கூஷினுடைய குமாரர், சேபா,
ஆவிலா, சப்தா, ராமா, சப்திகா என்பவர்கள். ராமா
வின் குமாரர், சேபா, திதான் என்பவர்கள்.
8 கூஷ் நிம்ரோதைப் பெற்றான்; இவன் பூமியிலே
9 பராக்கிரமசாலியானான்.—இவன் [1]கர்த்தருக்கு முன்பா
கப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்; ஆகையால்
கர்த்தருக்கு முன்பாகப் பலத்த வேட்டைக்காரனான
நிம்ரோதைப்போல என்னும் வழக்கச்சொல் உண்

[1] எரே. 16. 16. மீகா. 7. 2.

வல்லவர்களாகி, அப்பால் அரபியாவுக்கு வலசைவாங்கிப் பிந்தியகாலத்தில் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து நியுபியாவிலும், அபிசீனியாவிலும் குடியேறினார்கள். கூஷ், கீகோனால் தண்ணீர் பாய்ச்சப்பட்டதாக வாசிக்கிறோம் (ஆதி. 2: 13.). மோசேயின் மனைவி கூஷ் ஜாதியானவள் என்றழைக்கப்பட்டாள். (எண். 12: 1.)

"மிஸ்ராயீம்." எகிப்து.

"பூத்." வட ஆப்பிரிக்காவிலுள்ள லீபியா.

"கானான்." 15–19-ம் வசனங்களின் வியாக்கியானம் பார்க்க.

**7.** "கூஷினுடைய குமாரர், சேபா." அரபியருக்குள் ஒரு கோத்திரத்தார் என்று சிலர் சொல்லுவார்கள். அவர்கள் ஆப்பிரிக்காவுக்குப் போய் அங்கே குடியேறி மெரோயீ என்னப்பட்ட தீவிலே வாசம்பண்ணினார்கள்.

"ஆவிலா." பைசோன் ஆற்றோரமாயிருந்தது (2: 11.). அது அரபியாவில் ஒரு நாடு. அது பார்சியக் குடாக்கடல் ஓரமாயிருந்தது. 29-ம் வசனத்திலும் ஆவிலா என்பது வருகிறது.

"சப்தா." பாக்கிய அரபியா என்னப்பட்ட நாட்டிலுள்ள ஆதரமன்றாயிருக்கலாம்.

"ராமா." பார்சியக்குடா ஓரமாயிருந்தது. அது தேதான், சேபா, ஆவிலா எனப் பிரிக்கப்பட்டிருந்தது.

"சப்திகா." இது தேதானுக்குத் தெற்கே இருந்ததாம்.

**8.** "கூஷ் நிம்ரோதைப் பெற்றான்." கூஷ் என்பவன் நிம்ரோதைப் பெற்ற தகப்பனோ, அவனுடைய முன்னோனாய்மாத்திரம் இருந்தானோ திட்டமாய்த் தெரியாது. நிம்ரோது வீரியமான கிரியைகளைச் செய்து பல கோத்திரத்தாரை அடக்கிப் பட்டணங்களைக் கட்டி அவைகளில் வாசஞ்செய்து ஆண்டுவந்தான்.

**9.** "பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்." மற்ற மனிதர் பசும் குடிகளாய் ஜீவனம் பண்ணிவருகையில் இவன் ஜனங்களுக்கு நன்மையுண்டாகத் துஷ்டமிருகங்களை வேட்டையாடித் துரத்திக் கொன்றான்.

"கர்த்தருக்கு முன்பாக." அதாவது மிகவும் விசேஷித்த வேட்டைக்காரனாயிருந்தான்.





10 டாயிற்று.—சிநெயார் தேசத்திலுள்ள *பாபேல்,
ஏரேக், அக்காத், கல்னே என்னும் இடங்கள் அவன்
11 ஆண்ட ராஜ்யத்திற்கு [1]ஆதி ஸ்தானங்கள்.—அந்தத்
தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய், நினிவே
யையும், ரெகொபோத் பட்டணத்தையும், காலாகை
12 யும்,—நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக ரெசேனை
யும் கட்டினான்; இது பெரிய பட்டணம்.
13 மிஸ்ராயீம், லூதீமையும், அனாமீமையும், லெகாபீ

* பாபிலோன்.
[1] மீகா. 5. 6.

**10.** "பாபேல்." நிம்ரோது ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானம் என்று சொல்லத்தகும். பாபேல் என்பதற்குக் கலக்கம் என்றர்த்தம்.

"அவன் ஆண்ட ராஜ்யத்திற்கு ஆதிஸ்தானங்கள்." நிம்ரோதின் ராஜ்யம் இங்கே சொல்லப்பட்டிருக்கிற நாலு பட்டணங்களில் தொடங்கி, 11-ம் வசனத்தில் சொல்லியபடி அசீரியாவரைக்கும் பரம்பினது. அப்படியானால், அவன் தன் ராஜ்யபாரத்தைச் சிநெயார் அதாவது மெசொப்பொத்தாமியாவின் தென்புறமாயிருந்த பாபிலோனியாவிலே தொடங்கினான். வடபுறத்தில் அசீரியா இருந்தது. மீகா. 5: 6ல் பாபிலோனியா நிம்ரோதின் தேசம் என்று அழைக்கப்படுகிறது.

**11.** "அந்தத் தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய்." தற்காலத்திலுள்ள கல்விமான்கள் அநேகர் "அந்தத் தேசத்திலிருந்து அவன் அசீரியாவுக்குப் புறப்பட்டுப்போய்" என்று திருப்புகிறார்கள். இது சரியெனத் தோன்றுகிறது. ஏனென்றால், இங்கே காமின் சந்ததியாராகிய நிம்ரோதைக்குறித்துச் சொல்லுகிறதேயல்லாமல், சேமின் சந்ததியாரைக்குறித்து வரலாறு சொல்லப்படவில்லை. சேமின் குமாரனாகிய அசூர் (வச. 22.) நிம்ரோதுக்கு ஒரு தலைமுறைக்கு முந்தினவன். இந்த அசூர் தன் பேரால் அழைக்கப்படுகிற அசீரியாவைக் குடியேற்றியிருக்கலாம். பின்பு நிம்ரோது அல்லது அவன் பின் சந்ததியாரில் ஒருவன் தன் ராஜ்யத்தைக் கிழக்கே விஸ்தாரமாக்கக் கருதி அசீரியாவுக்கு வந்து, சேமியரைத் துரத்தி, அத்தேசத்தைக் கட்டிக்கொண்டிருக்கவேண்டும். பின்பு சேமின் புத்திரர் தைரியங்கொண்டு காமின் புத்திரரைத் துரத்திவிட்டார்கள். திகிரிஸ் நதி இத்தேசத்தை ஊடுருவிச் செல்லுகிறது.

**12.** "நினிவே." இது திகிரிஸ் நதியின் கீழ்க்கரையோரமாய்க் கட்டப்பட்டிருந்தது. இது பூர்வ அசீரிய ராஜ்யத்துக்குத் தலைப்பட்டணம். இது மகாநகரி என்று சொல்லப்பட்டிருக்கிறதுமுண்டு.

**13.** "லூதீம்." இந்தப் பேரால் இரண்டு ஜாதியார் அழைக்கப்படுகிறார்கள். ஒருஜாதியார் சேமின் புத்திரர். அவர்களைக்குறித்து (வச. 22. ஏசா. 66: 19.) சொல்லியிருக்கிறது. மற்றஜாதியார் காமின் புத்திரர் (எரே. 46: 9. எசே. 30: 5.); இவர்கள் நீல்நதியின் பள்ளத்தாக்கில் குடியிருந்தார்கள்.

"அனாமீம்." இவர்கள் நீல்நதியின் டெல்ற்றாவில் குடியிருந்தார்கள்.

"லெகாபீம்." இவர்கள் லூபியராயிருக்கலாம் (2 நாளா. 12: 3; 16: 8. தானி. 11: 43. நாகூ. 3: 9.). இவர்கள் டெல்ற்றாவின் மேல்பாகத்தில் வாசஞ்செய்தார்கள்.

14 மையும், நப்தூகீமையும்,—பத்ருசீமையும், [1]பெலிஸ்
தரின் சந்ததிக்குத் தலைவனாகிய கஸ்லூகீமையும், கப்
தொரீமையும் பெற்றான்.
15 கானான் தன் மூத்தமகனாகிய சீதோனையும், கேத்

[1] 1 நாளா. 1. 12.

“நப்தூகீம்.” இவர்கள் மெம்பிஸ் பட்டணத்தில் வணங்கப்பட்ட ப்தா என்ற விக்கிரகத்தின் பேரால் அழைக்கப்பட்ட ஜனங்களாம். அப்படியானால் அவர்களை சரியான எகிப்தியர் என்று சொல்லவேண்டும். ஏனென்றால் எகிப்து, கா–ப்தா அல்லது ஆய்–காப் என்றழைக்கப்படுவதுண்டு.

**14.** “பத்ருசீம்.” பத்ரோசிலுள்ள ஜனங்கள்; இது வட எகிப்திலிருக்கிறது. (ஏசா 11: 11. எரே. 44: 1. எசே. 29: 14; 30: 14.)

“பெலிஸ்தர்.” கஸ்லூகீமிலிருந்து, பெலிஸ்தியர், பலஸ்தீனாவுக்குக் குடிபோனதாக நாம் இங்கே வாசிக்கிறோம். ஆனால், எரே. 47: 4. ஆமோ. 9: 7. வசனங்களில் அவர்கள் கப்தோரிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறது. கோராரில் முதலாவது குடியேறினவர்களும் (ஆதி. 20: 1.) யூதாக் கோத்திரத்தார் ஜெயித்த பட்டணத்தாரும் (நியா. 1: 18.) கஸ்லூகீமிலிருந்து வந்திருக்கலாம். சிம்சோன், ஏலி, சாமுவேல், சவுல் இவர்கள் காலங்களில் அவர்கள் கிரேத்தாவிலிருந்து மிகுதியாய் வலசைவந்திருக்கலாம். அவர்கள் விருத்தசேதனத்தைக் கையாடாமல் இருந்ததைவிட்டு அவர்கள் எகிப்திலிருந்து வந்திருக்கமாட்டார்கள் என்று ஆட்சேபிக்கப்படும். இஸ்ரவேலரும் அப்படியே அந்தச் சடங்கைக் கைவிட்டிருந்ததாகப் பார்க்கிறோம். மேலும் பெலிஸ்தியர் குடிபோனபின்பு எகிப்தில் விருத்தசேதன முறைமை உண்டாயிருக்கலாம்.

“கஸ்லூகீம்.” பெலூசியத்துக்குக் கிழக்கேயிருக்கிற மலைநாடாகிய காசியோத்தாஸ் குடிகளாயிருக்கலாம்.

“கப்தோரீம்.” இந்தப் பேர் பொதுப்பட கிரேத்தாவோடே சம்பந்தப்பட்டது. சிலர் கா–ப்தா (ப்–தாவின் தேசம்) என்றதிலிருந்து இந்தப் பேர் வந்திருக்கவேண்டும் என்பார்கள். அப்படியாகில் இவர்களும் நப்தூகீமியரைப்போலச் சரியான எகிப்தியர் என்று சொல்லவேண்டும். அவர்கள் நீல்நதியின் வடகூற்றில் குடியிருந்து, மெம்பிஸ் பட்டணத்தைத் தங்களுக்குத் தலைநகரியாக்கியிருக்கவேண்டும். அவர்கள் தண்ணீர் யாத்திரையில் வழுக்கப்பட்டு, இலகுவாய்க் கிரேத்தாவுக்குப் போய்க் குடியிறங்கியிருக்கலாம். மற்றப் பேர் பலஸ்தீனாவுக்குப் போயிருக்கலாம். யாவானின் புத்திரருக்குச் சிப்புருதீவும், ரோதுதீவும் கொடுக்கப்பட்டதில் கிரேத்தாவைப்பற்றி அங்கே ஒன்றும் சொல்லப்படவில்லை. (வச. 4.)

**15.** “கானான் தன் மூத்தமகனாகிய சீதோனை.” சீதோன் மெதித்திரானியாக்கடலின் கீழ்க்கரையில் தீருப்பட்டணத்துக்கு முப்பதுமைலுக்கு வடக்கேயிருந்தது. இது பூர்வகாலத்தில் மிகவும் விசேஷித்த பட்டணமாயிருந்ததால், பெனிக்கேயர் எல்லாரும் சீதோனியர் என்றழைக்கப்பட்டதுண்டு (யோசு. 13: 6. நியா. 18: 7.). அது வியாபாரத்துக்குப் பேர்போன பட்டணம்.

“கேத்து.” ஏத்தியர் யூதேயாவின் மலைநாட்டிலும், முக்கியமாய் எப்ரோனிலும் வாசஞ்செய்தார்கள். சாலொமோன், யோராம் என்பவர்கள் காலத்தில்







16 தையும், — எபூசியரையும், எமோரியரையும், கிர்
17 காசியரையும், — ஈவியரையும், அர்கீரியரையும்,
18 சீநியரையும், — அர்வாதியரையும், செமாரியரை
யும், காமாத்தியரையும் பெற்றான்; பின்பு கானா
19 னியரின் வம்சத்தார் எங்கும் பரவினார்கள். — கானா
னியரின் எல்லை, [1]சீதோன் முதல் கேரார் வழியாய்க்
காசாமட்டுக்கும், அதுமுதல் சோதோம், கொமோரா,
அத்மா, செபோயிம் வழியாய் லாசாமட்டுக்கும்

[1] ஆதி. 13. 12. ம: 15. 18–21 எண். 34. 2–12 யோசு. 12. 7, 8.

அவர்கள் சுய ராஜாக்களால் ஆளப்பட்டுவந்தார்கள் (1 இரா. 10: 29. 2 இரா. 7: 6.). ஏத்தியர் பேர்போன ஜாதியார் என்பதற்கு அத்தாட்சியாக அநேக காரியங்கள் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

**16.** “எபூசியர்.” இவர்கள் எபூசின் குடிகள். எபூஸ் என்பது எருசலேமுக்குப் பழைய பேர் (நியா. 19: 10, 11. 1 நாளா. 11: 4, 5.). இவர்கள் பென்யமீன் கோத்திரத்தார் சுதந்தரித்த இடத்தில் குடியிருந்தவர்கள். அவர்கள் தாவீதின் காலம்வரைக்கும், எருசலேமைத் தங்கள்வசம் வைத்திருந்தார்கள்.

“எமோரியர்.” கானானியருக்குள் இவர்கள் ஒரு பலத்த ஜாதியார்; யூதேயாவின் மலைநாட்டில் எமோரியரின் ஐந்து ராஜாக்கள் ஆண்டுவந்தார்கள் (யோசு. 10: 5.). அவர்கள் யோர்தானுக்குக் கிழக்கே அர்னோன் நதிக்கு வடக்கேயும் (எண். 21: 13.), யாப்போக் ஆறுவரைக்கும் பரவியிருந்தார்கள். (எண். 21: 24.)

“கிர்காசியர்.” இவர்களைக்குறித்து யோசு. 24: 11ல் சொல்லியிருக்கிறது.

**17.** “ஈவியர்.” இவர்கள் எர்மோன், லீபனோன் மலைகளுக்குச் சமீபமாயும் (யோசு. 11: 3.), சீகேமிலும் (ஆதி. 34: 2.), கிபியோனிலும் (யோசு. 9: 1, 7.) குடியிருந்தார்கள்.

“அர்கீரியர்.” லீபனோனுக்குச் சமீபமாய்க் குடியிருந்தார்கள்.

“சீநியர்.” மேற்படி இடத்தில் குடியிருந்த ஒரு சிறிய கோத்திரத்தார்.

**18.** “அர்வாதியர்.” பெனிக்கேயா நாட்டோரமாய் அரோது தீவிலுள்ளவர்கள்.

“செமாரியர்.” பெனிக்கேயாவிலுள்ள செமாரியாவில் வாசஞ்செய்தவர்கள்.

“காமாத்தியர்.” ஆமோஸ். 6: 2ல் சொல்லிய ஆமாத்தியர்; ஆமாத்து வட சீரியாவுக்குப் பிரதான நகரி. அது ஓரான்றஸ் நதியோரமாயிருந்தது. மக்கெதோனியர் அதை எப்பிப்பானியா என்றழைத்தாலும், அது தற்காலத்தில் பழையபேரால் வழங்கப்படுகிறது. (நியா. 3: 3. எரே. 49: 2. சகரி. 9: 2.)

**19.** “லாசா.” சிவந்த சமுத்திரத்திற்குக் கிழக்கேயிருந்தது. அதில் வெந்நீர் ஊற்று இருந்தது என்று சிலர் நினைக்கிறார்கள்.

20 இருந்தது.—இவர்கள் தங்கள் தேசங்களிலும், தங்கள்
ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்சங்களின்படியேயும்,
தங்கள் பாஷைகளின்படியேயும் (ாமுடைய சந்ததி
யார்.
21 சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவன் ஏபே
ருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், மூத்
தவனாகிய யாப்பேத்துக்குத் தம்பியுமாய் இருந்தான்.-
22 சேமுடைய குமாரர், [1]ஏலாம், அசூர், அர்பக்சாத்,
23 லூத், ஆராம் என்பவர்கள்.—ஆராமுடைய குமாரர்,
ஊத்ஸ், கூல், கேத்தெர், மாஸ் என்பவர்கள்.—
24 அர்பக்சாத் சாலாவைப் பெற்றான்; [2]சாலா ஏபேரைப்
25 பெற்றான்.-ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்;
ஒருவனுக்குப் பேலேகு என்றுபேர்; ஏனெனில் அவனு
டைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது; அவனு

[1] 1நாளா. 1.17-ஆ.
[2] ஆதி. 11.12.

**21.** "சேம்..........ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், மூத்தவனாகிய யாப்பேத்துக்குத் தம்பியுமாய் இருந்தான்." எபிரெய இலக்கணவிதிப்படி திருப்பினால் "சேம் ஏபேருடைய சந்ததியார் எல்லாருக்கும் தகப்பனும், யாப்பேத்துக்கு மூத்த சகோதரனுமாயிருந்தான்" என்றிருக்க வேண்டும்.

**22.** "ஏலாம்." சூசியனாவுக்கும் மேதியாவுக்கும் அடுத்திருந்த நாடு. தானியேலின் ஆகமத்தில் (8: 2.), சூசான் ஏலாமிலிருந்ததாகக் காண்கிறோம். ஏலாம் இப்போது கூஜிஸ்தான் என்றழைக்கப்படுகிறது. பார்சியர் எலாமீத்தரென்னப்படுவோர்கள். (அப்: 2: 9.)

"அசூர்." திகிரிஸ் நதியோரத்தில் குடியிருந்த ஜாதியார்.

"அர்பக்சாத்." இது வட அசிரியாவில் அர்மீனியாவின் ஓரத்திலிருந்ததாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

"லூத்." அவன் சந்ததியார் வீரியர். இவர்கள் பல இடங்களிலும் அலைந்து திரிந்து கடைசியாகச் சின்ன ஆசியாவில் குடியேறினார்கள்.

"ஆராம்." கானான்தேசத்துக்கு வடகிழக்காயிருந்தது. அது கலிலேயாக் கடலோரம் தாண் நதிமுதல் ஐப்பிராத்து நதிவரையும் விஸ்தீரணமுள்ளதாயிருந்தது. ஆராம் என்பதற்கு மேடானபூமி என்றர்த்தம்.

**23.** "ஊத்ஸ்." இது யோபு இருந்த இடம். அது வனாந்தர அரபியாவில் வடபாகத்திலிருந்திருக்கலாம்.

**24.** "சாலா." இந்த அதிகாரத்தின் மீதியானபங்கு யொக்தானுடைய வம்சவரலாற்றைக் காட்டுகிறது. இந்த அட்டவணையில் எபிரெயருடையது துலக்கப்படவில்லை. சேஷ்டபுத்திரபாகம் ஏபேருக்குரியதானதால் அவன் பேர்மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது.

**25.** "பேலேகு..........அவனுடைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது." சிலர் பேலேகு என்பவன் பாஷை தாறுமாறுக்கப்பட்டகாலத்திலிருந்தான்





26 டைய சகோதரன்பேர் யொக்தான்.—யொக்தான் அல்
மோதாதையும், சாலேப்பையும், அசர்மாவேத்தையும்,
27 யோராகையும், — அதோராமையும், ஊசாலையும், திக்
28 லாவையும், — ஓபாலையும், அபிமாவேலையும், சேபா
29 வையும், — ஓப்பீரையும், ஆவிலாவையும், யோபா

என்று எண்ணுவதுண்டு. இங்கே சொல்லப்பட்டிருக்கிற பூமி பகுத்தல், ஜனங்கள் கோத்திரம் கோத்திரமாய்ப் பிரிந்து, தங்கள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட திசையில் குடியேறினதைக் குறிக்கும் என்று நினைக்கத்தகும். சேமின் சந்ததியாருக்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட வித்தானவருடைய வம்சவரலாறு இங்கே பேலேகில் முடிந்து அடுத்த அதிகாரம் 18-ம் வாக்கியமுதல் தொடங்கிப் போகிறது. ஏபேருக்குப் பிறந்த இரண்டு குமாரரும், ஒருவருக்கொருவர் தொலை தூரமான இடங்களில் குடியேறினார்கள். ஏபேர், பேலேகோடே வடமேற்காய்ச் சென்று, மெசொப்பொத்தாமியா, சீரியா என்ற தேசங்களில் சஞ்சரித்தான். யொக்தான் தெற்கே அரபியாவுக்குச் சென்றான். 31, 32-ம் வசனங்களில் நோவாவின் புத்திரர் பற்பல திசைகளிலும், குடி இறங்கினதைக்குறித்து விசேஷித்துச் சொல்லியிருக்கிறது: 11. அதி. 1-9வரை. பாஷை தாறுமாறானதைக் குறித்துக் காட்டியிருக்கிறது. இவைகளைக் கவனிக்கையில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற பூமிபாகப் பிரிசலானது, சேமின் புத்திரர் பிரத்தியேகமாய்ப் பிரிந்துபோனதைக் குறிக்கும் என்கலாம்.

"யொக்தான்." தென் அரபியாவில் யொக்தானியர் குடியேறி அங்கிருந்த காமின் புத்திரரைத் தேசத்தைவிட்டுத் துரத்திவிட்டார்கள். யொக்தான் வம்சத்தில் பதின்மூன்று கோத்திரத்தார் எழும்பினார்கள். அவர்களில் மிச்சமானவர்கள் பட்டணங்களைக் கட்டாமல் மந்தைமேய்க்கும் தொழில் செய்து, அலைந்து திரிந்துவந்தார்கள். அவர்களில் சில கோத்திரத்தார்மாத்திரம் பேர்ப்பிரஸ்தாபமுள்ளவர்களானார்கள்.

**28.** "சேபா." இது பாக்கிய அரபியா என்னப்பட்ட நாட்டிலிருந்தது. பொன், இரத்தினக்கற்கள், தூபவர்க்கம், வெள்ளைப்போளம், கருவாய்ப்பட்டை முதலியவைகளுக்கும், வியாபாரத்திற்கும் பேர்போனதாயிருந்தது (1 இரா. 10: 10. யோபு. 6: 19. சங். 72: 10, 15. ஏசா. 60: 6. எரே. 6: 20. எசே. 27: 22. யோவே. 3: 8.)

**29.** "ஓப்பீர்." இது இன்னவிடத்தில் இருந்ததென்பதைக்குறித்துப் பற்பல அபிப்பிராயங்களுண்டு. ஆனால் ஓப்பீர், யொக்தானின் மகனானதினாலும், யொக்தான் அரபியாவில் குடியேறினதினாலும் ஓப்பீர் பட்டணம் அரபியாவிலே இருந்திருக்கவேண்டியது என்று சொல்லலாம். இராசாக்களின் ஆகமங்களிலும் நாளாகமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற சரித்திர சங்கதிகளைக் கொண்டு சிலர், ஓப்பீர் என்பது இந்தியாவில் அல்லது ஆப்பிரிக்காவில் இருந்திருக்கும் என்பார்கள். வேறு சிலர் ஓப்பீர் என்ற பெயரால் இரண்டுபட்டணங்களுண்டு. ஒன்று அரபியாவிலும், மற்றது இந்தியா அல்லது இலங்கையிலும் இருந்திருக்கலாம் என்கிறார்கள்.

"ஆவிலா." இது பாக்கிய அரபியா என்னப்பட்ட நாட்டிலிருந்த காலனைக் குறிக்கும். சிலர் இரண்டாவலன் உண்டு என்றும், ஒன்று காமியனா



ADU ARCH

பையும் பெற்றான்; இவர்கள் அனைவரும் யொக்தானு
30 டைய குமாரர்.—இவர்களுடைய குடியிருப்பு மேசா
துவக்கி, கிழக்கேயுள்ள மலையாகிய செப்பாருக்குப்
31 போகிற வழிமட்டும் இருந்தது.—இவர்களே தங்கள்
தேசங்களிலும், தங்கள் ஜாதிகளிலுமுள்ள தங்கள் வம்
சங்களின்படியேயும், தங்கள் பாஷைகளின்படியே
32 யும் சேமுடைய சந்ததியார்.—தங்கள் ஜாதிகளிலுள்ள
[1]தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய
குமாரரின் வம்சங்கள் இவைகளே; ஜலப்பிரளயத்துக்
குப்பின்பு இவர்களால் பூமியிலே ஜாதிகள் பிரிந்தன.

[1] ஆதி. 9. 19.

## 11. அதிகாரம்.

*1. உலகத்தில் ஒரே பாஷை இருந்தது. 3. பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. 5. பாஷை வேறுபட்டது. 10. சேமின் சந்ததி. 27. ஆபிராமின் தகப்பனாகிய தேராகின் சந்ததி. 31. தேராகு ஊர் என்கிற இடத்தைவிட்டுக் காரானுக்குப் போனது.*

1 பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவிதமான

யும், மற்றது யொக்தானியரையும் சேர்ந்தது என்றும், மற்றவர்கள் இந்த இரண்டு சந்ததியாரும் கலந்துபோனார்கள் என்றும் சொல்லுவார்கள். யொக்தானியருக்கு முந்திக் காமியர் அரபியாவில் குடியேறியிருந்தார்கள்.

### படிப்பினை.

(1) மனித ஜாதியார் எல்லாரும் ஒரேகுடும்பத்திலிருந்து தோன்றினவர்களானதால், ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து, ஒருவருக்கொருவர் நன்மைசெய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறார்கள். நாம் ஒரு மனுஷனைப் பார்க்கையில், அவன் எந்தப் பாஷைக்காரனாயாவது, எப்படிப்பட்ட உடையைத் தரித்தவனாயாவது, அவன் எங்கே பிறந்தவனாயாவது, எந்த வருணத்தானாயாவது இருந்தாலும் அவனைச் சகோதரனாகப் பாவித்து, அதற்குத் தக்கதாய் அவனை நடத்தவேண்டும். இதால் அந்நியனை விபரீதமாய்ப் பார்ப்பதும் எண்ணுவதும் மதியீனம் என்றறியவேண்டியது. நமது மாமிசத்தின் மாமிசமும் எலும்பின் எலும்புமானவர்களை அடிமைகளாகக்கொண்டு நடத்துவது, பிறனிடத்தில் அன்புகூருவாயாக என்ற கட்டளைக்கு விரோதமாயிருக்கிறது.

(2) யுத்தங்களும் சண்டைகளும் நமக்குள்ளே எதினால் உண்டாகிறது? பேராசை, பொருளாசை, குரூரம், பழிவாங்கும் குணம் என்ற இச்சைகளினாலே அவைகள் உண்டாயிருக்கின்றன. யுத்தங்கள் மனிதருடைய சீர்கெட்ட நிலைமையையும், சாத்தானுடைய அதிகாரத்தையும் காட்டுகின்றன. ஆனால் ஒரு நல்லகாலம் வரப்போகிறது, அப்போது ஜாதிகள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். அக்காலத்திலே பேராசையுள்ள ஜெயவீரர், மகிமையாயல்ல, அவகீர்த்தியாய் எண்ணப்படுவார்கள்.

### 11. அதிகாரம்.

1. **"பூமியெங்கும்."** பூமியிலே அக்காலத்தில் குடியிருந்த எல்லா மனிதருக்குள்ளும்.

**"ஒரேபாஷையும்."** ஒரேபாஷை வழங்கப்பட்டுவந்தது. சில வருஷங்களுக்கு முன்வரையும் சமஸ்கிருதத்துக்கும் சேமியபாஷைக்கும் எவ்வளவும்





2 பேச்சும் இருந்தது.—ஜனங்கள் கிழக்கேயிருந்து பிர
யாணம் பண்ணுகையில், சிநெயார் தேசத்திலே சம
பூமியைக் கண்டு, அங்கே குடியிருந்தார்கள்.
3 அப்பொழுது அவர்கள்: நாம் செங்கல் அறுத்து,
அதை நன்றாய்ச் சுடுவோம் வாருங்கள் என்று ஒருவ
ரோடொருவர் பேசிக்கொண்டார்கள்; கல்லுக்குப்
பதிலாக செங்கலும், சாந்துக்குப் பதிலாக நிலக்கீ
4 லும் அவர்களுக்கு இருந்தது.—பின்னும் அவர்கள்:
நாம் பூமியின்மீதெங்கும் சிதறிப்போகாதபடிக்கு,

சம்பந்தமேயில்லை என்று கிரந்தகர்த்தாக்கள் சொன்னார்கள். ஆனால் பாஷைகளை ஒன்றோடொன்று ஒத்துப்பார்க்கும்விஷயத்தில் மனுஷனுடைய அறிவு விர்த்தியடையவே, ஆரியபாஷைகளுக்கும் சேமியபாஷைகளுக்கும் கிட்ட சம்பந்தமுண்டென்று ரூபிக்கப்பட்டிருக்கிறது.

2. **"ஜனங்கள் கிழக்கேயிருந்து."** ஜலப்பிரளயத்துக்குப்பின்பு, ஜனங்கள் முதலாவதாக அர்மீனியாவில் குடியிருந்ததாகத் தோன்றுகிறது. அர்மீனியா, சிநெயாருக்கு வடமேற்காயிருந்தது. அப்படியானால் ஜனங்கள் முந்தி, தென்கிழக்காய்ப் பிரயாணஞ்செய்து, அப்பால் கிழக்கேயிருந்து சிநெயாருக்குச் சென்றிருக்கவேண்டும். அப்படியல்லவென்றால், **கிழக்கேயிருந்து** என்ற வார்த்தையைக் "கிழக்கே" என்று திருப்பினால் பூமிசாஸ்திர திசைக்கு ஒத்திருக்கும். ஆதி. 13: 11ல் இதேவார்த்தை கிழக்கே என்றுதான் திருப்பியிருக்கிறது.

**"பிரயாணம் பண்ணுகையில்."** மூலத்தில், கூடாரமுளையைப் பிடுங்கி இடம் பெயர்வதைக் குறிக்கும். ஆடுமாடுகளின் மேய்ச்சல் வசதிக்குத்தக்கதாய்க் கூடாரங்களைப் பிடுங்கிப் பற்பல இடம் சென்றிருக்கலாம்.

**"சிநெயார்."** பாபிலோனைச்சுற்றிய இடங்களைக் குறிக்கும். இதைச் சேர்ந்ததாய் நாலு பட்டணங்களுண்டு. பாபிலோன், ஏரேகு, அக்காது, கல்னே என்பவைகளே. (ஆதி. 10: 10.)

3. **"நாம் செங்கல் அறுத்து, அதை நன்றாய்ச் சுடுவோம்."** சுடு செங்கலுக்கேற்ற மண் சிநெயாரில் மிகுதியாயுண்டு. சுடு செங்கல், நீடியகாலத்துக்கு அழிவில்லாதிருக்கும் என்று கண்டுபிடித்து அதை உபயோகப்படுத்தியிருப்பதைப் பார்க்கையில் ஜனங்கள் நாகரீகத்தில் தேர்ச்சியடைந்திருக்கவேண்டும்.

**"நிலக்கீல்."** பாபிலோனுக்கு எட்டுநாட் பிரயாணத்துக்கு அப்பால் "ஐஸ்" என்ற ஒரு பட்டணமுண்டு. அதிலே நிலக்கீல் திரளாய் உண்டாம். அங்கேயிருந்து பாபிலோனைக் கட்டும்படி கீல் கொண்டுபோகப்பட்டதென்று ஹெரோதோத்து என்னும் வித்துவான் சொல்லியிருக்கிறான். நிலக்கீலைச் சேர்த்துக் கட்டியிருக்கிற செங்கல்களை ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிப்பது, ஏறக்குறையக் கூடாதகாரியமாயிருக்கிறதென்று லேயாட் துரை சொல்லுகிறார்.

நமக்கு ஒரு நகரத்தையும், [1]வானத்தை அளாவும் சிக 1 உபா. 1. 28.
ரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர்
உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று சொல்

**4. "வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும்."** *மிகவும் உன்னதமான கோபுரத்தைக் குறிக்கும். கானானியருடைய கோட்டைகளின் மதில்களைக்குறித்தும் இப்படியே சொல்லப்பட்டிருக்கிறது (உபா. 1: 28.). அநேகர் இந்தக் கோபுரம் பேலுவின் ஆலயம் என்று சொல்லுகிறார்கள்; அதற்கு எட்டுத் தட்டுண்டு. அதின் அடி ஒரு பர்லாங்வழி சம சதுரமுள்ளது. பர்ஸ நிம்ரோது என்று சொல்லப்படுகிற அழிமேடு, பேலுவின் ஆலயம் என்று சொல்வாருண்டு. ஆனால் பேலுவின் ஆலயம் பிந்தியகாலத்தில் கட்டப்பட்டதென்று எண்ணத்தக்கதாயிருக்கிறது.*

**"நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம்."** *இன்னொரு ஜலப்பிரளயம் வரும் என்று பயந்து, அதற்குத் தப்பும்படியாய் இந்தக் கோபுரத்தைக் கட்டினதாக யோசேப்புஸ் என்னும் யூத வித்துவான் சொல்லுகிறது வியர்த்தமென்று வசனத்தில் காட்டிய முகாந்தரத்தினால் தெரியவருகிறது. சிலர், நோவா தன் சந்ததியாருக்கு உலகத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான் என்றும் சனங்கள் அந்தந்த இடத்தைச் சுதந்தரிக்கச் சிதறிப்போகும்படி நிம்ரோதுக்கும் அவன் வகையராக்களுக்கும் பிரியமில்லை என்றும், எல்லாரும் ஒரே இடத்தில் குடியிருக்கவேண்டும் என்று விரும்பித் தங்களைவிட்டுச் சிதறிப்போகிறவர்கள் கோபுரத்தைப்பார்த்துத் திசையறிந்து மறுபடியும் திரும்பத்தக்கதாகக் கட்டினார்கள் என்றும் எண்ணுகிறார்கள். யூதர்கள் "பேர்" (சேம்) என்கிற வார்த்தை "தேவனை"க் குறிக்கும் (ஏனென்றால் தேவநாமம் தேவனுக்குப் பதிலாக வேதத்தில் வழங்கப்படுவதுண்டு) என்று சொல்லி, பாபேலைக் கட்டினவர்கள் ஒரு விக்கிரகாலயத்தைக் கட்டும்படி எத்தனப்பட்டார்கள் என்கிறார்கள். வேறுசிலர் அது சேம் என்பவனைக் குறிக்கும். சேமுக்கு ஆசீர்வாதம் கூறப்பட்டதே; நாம் நமக்கு ஒரு சேமை உண்டாக்குவோமாக என்று காமின் புத்திரர் சொன்னதாக அர்த்தப்படுத்துகிறார்கள். லெ கிளார்க் என்பவர் இங்கே வழங்குகிற சேம் என்கிற பதம் ஞாபக சின்னத்தைக் குறிக்கும் என்கிறார். இந்த வாக்கியத்தின் இயற்கையான கருத்து இன்னதென்று (ஆதி. 10: 10.) நிம்ரோது சிநெயாரில் ஒரு ராஜியத்தை ஸ்தாபித்தான் என்றதில் காண்கிறோம். நிம்ரோதும் அவனைச் சேர்ந்தவர்களும் பேராசையினால் ஏவப்பட்டு, நோவாவின் சந்ததியார் வலசைவாங்கிப்போகாமல் ஒரு பலத்த ராஜியத்தாராய் ஒரே இடத்தில் வாசஞ்செய்து, தலை நகரியையும் மற்றும் பட்டணங்களையும், அரணான கோபுரத்தையும் கட்டி, தங்களுக்குப் பேர்ப் பிரஸ்தாபத்தையும் கீர்த்தியையும் உண்டுபண்ணி, அதற்குமுன் சிதறிப்போயிருக்கிறவர்களையும் அதால் தங்களிடமாய் இழுத்துக்கொள்வதற்கு வழிவகையையும் பார்த்தார்கள் என்றறியவேண்டியது. இதைச் சுட்டினதாய் (ஏசா. 14: 22.) ஒரு தீர்க்கதரிசனம் வருகிறது. அதில் "பாபிலோனுடைய* **பேரையும்,......** *சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." நிம்ரோது பாபிலோன் கோபுரத்தைக் கட்டினான் என்பது பூர்வ பாரம்பரியம்.*





5 லிக்கொண்டார்கள்.—மனுபுத்திரர் [1]கட்டுகிற நகரத் 1 ஆதி. 18. 21.
தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்குக் கர்த்தர்
6 இறங்கினார்.—அப்பொழுது கர்த்தர்: இதோ, [2]ஜனங் 2 ஆதி. 9. 19. அப். 17. 26. சங். 2. 1.
கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனை
வருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள்
இதைச் செய்யத் தொடங்கினார்கள்; இப்பொழுதும்
தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்
7 டாது என்று இருக்கிறார்கள்.—நாம் இறங்கிப்போய்,
[3]ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, 3 ஆதி. 42. 23. சங். 55. 9. எரே. 5. 15. அப். 2. 4-6. 1கொ. 14. 2, 11.
அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்
8 என்றார்.—அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்தி
லிருந்து பூமியின்மீதெங்கும் [4]சிதறிப்போகப்பண்ணி 4 லூ. 1. 51.

**5. "மனுபுத்திரர்"** *என்பது ஆதி. 6: 2ல் சொல்லியபடி தேவபக்தியில்லாத ஜனங்களை, அதாவது துர்க்குணமுள்ள காமின் சந்ததியாரைக் குறிக்கும்.*

**"பார்க்கிறதற்குக் கர்த்தர் இறங்கினார்."** *துணிகரமும் அவபக்தியுமுள்ள செய்கையை தேவன் ஆராய்கிறவர் என்று உணர்த்தும்படிக்கும், தேவன் இடுகிற தண்டனை ஆராய்ச்சியின்மேல் நீதியாய் வருகிறதென்று விளங்கச் செய்வதற்குமாகப் பார்க்கிறதற்கு இறங்கினார் என்று சொல்லியிருக்கிறது. (மல். 3: 16.)*

**6. "ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்."** *நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் என்று தேவன் சொல்லியிருக்க, நோவாவும் தன் புத்திரருக்கு உலகத்தைப் பங்கிட்டுக்கொடுத்திருக்க ஜனங்கள் தேவ உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல், ஏக கூட்டமாய், ஒரே தேசத்திலே வாசம்பண்ணினதோடு, அவபக்தியான காரியங்களையும் செய்யத் தலைப்பட்டார்கள். மனுப்புத்திரர் அக்கிரமத்தில் மிஞ்சி, தேவபுத்திரரையும் கெடுத்துப்போடாதபடிக்கு அவர்களுடைய நன்மையைக் கருதி, அவர்களைப் பூமியெங்கும் சிதறடித்தார்.*

**"தாங்கள்....நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள்."** *தங்களுக்கு மேலாகச் சர்வவல்லமையுள்ள தேவன் இருக்கிறார் என்பதை உணராமல் தங்கள் இஷ்டப்படி செய்யத் துணிகரங் கொண்டார்கள். மல். 1. 4ல் இருக்கிறபடி "அவர்கள் கட்டுவார்கள் நான் இடிப்பேன்" என்று கர்த்தர் சொன்னார்.*

**7. "அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம்."** *சகோதர சிநேகத்தையும் ஐக்கியத்தையும் உண்டாக்கும்படி தேவன் ஒரேபாஷையை அருளியிருக்க, மனுபுத்திரர் அதைத் தீமையான காரியத்துக்காக உபயோகித்தபடியால், அவர்களுக்குத் தண்டனையாக ஒரு கூட்டத்தார் பேசுவது இன்னொரு கூட்டத்தாருக்கு விளங்காதபடி செய்தார்.*

**8. "பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார்."** *இதினால் அவர்கள் பட்டணத்தையும் கோபுரத்தையும் கட்டி முடிப்பது நின்றுபோன*

ஞர்; அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்
9 டார்கள்.—பூமியெங்கும் வழங்கின பாஷையைக்
கர்த்தர் அவ்விடத்தில் [1]தாறுமாறாக்கினபடியால், [1] 1 கொ. 14. 2, 3.
அதின் பேர் *பாபேல் என்னப்பட்டது; கர்த்தர் அவர் * தாறுமாறு.
களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்
போகப்பண்ணினார்.
10 சேமுடைய [2]வம்சவரலாறு: சலப்பிரளயம் உண் [2] ஆதி. 10. 22. 1 நா. 1. 17.
டாய் இரண்டுவருஷத்திற்குப்பின்பு, சேம் நூறுவயதா
11 னபோது, அர்பக்சாத்தைப் பெற்றான்.—சேம் அர்பக்

நோடு உலகம் எங்கும் தேவவாக்குப்படி ஜனங்கள் பரம்ப நேவுமுண்டாயிற்று. அர்மீனியா, அசிரியா, மெசொப்பொத்தாமியா என்ற இடங்களிலிருந்து பற்பல இடங்களுக்கும், சேம் காம் யாப்பேத்தின் சந்ததியார் வலசை வாங்கிப்போனார்கள். பெனிக்கேயர், எகிப்தியர், எத்தியோப்பியர், லீபியர், தெற்கேயும்; பார்சியர், இந்தியர், சீனர், கிழக்கேயும்; கிரேக்கர், லத்தீனர் முதலியவர்கள் மேற்கேயும்; சிதியர், செல்ற்றிக் ஜாதியார், தார்த்தர் வடக்கேயும் சென்றார்கள். முந்தின அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற தேசங்களில் அந்தந்த ஜாதியார் போய்க் குடியேறினார்கள் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.

**9. "பாபேல்."** அரமீயப் பாஷையில் பாப்—எல் என்றிருக்கிறது. அதின் அர்த்தம் "தேவனுடைய வாசல்" என்பதாம். எபிரெய வார்த்தையாகிய பால்பேல் என்பதற்கு "கலக்கம்" என்றர்த்தம். இந்த எபிரெய பதத்திலிருந்துதான் இங்கே சொல்லப்பட்ட பாபேல் என்பது வந்திருக்கவேண்டும் என்று நினைக்கத்தகும். சிலர் பாபேல் (தேவனுடைய வாசல்) என்ற பேர் அதற்கு ஆதியில் இருந்தபோதிலும் பிந்தியகாலத்தில் "கலக்கம்" என்ற அர்த்தம், இழிவுக்குக் குறிப்பாக அதற்குக் கொடுக்கப்பட்டது. திருஷ்டாந்தமாக நாபால் என்பதற்கு "வீணே" என்றர்த்தம். ஆனால் அவன் மனைவி அந்தப் பேருக்கு "வீணன்" என்ற அர்த்தமாகச் சொன்னபடியே இதுவும் வழங்கப்பட்டுப்போயிற்றென்கிறார்கள்.

**10. "சேமுடைய வம்சவரலாறு."** இது மூன்றும் வம்சவரலாறாயிருக்கிறது. முதலாம் வம்சவரலாறு ஐந்தாம் அதிகாரத்தில் ஆதாம்முதல் நோவாவரைக்கும், இரண்டாவது பத்தாம் அதிகாரத்தில் நோவாவும் அவன் மூன்று குமாரரும் முதற்கொண்டு சேமுடைய சந்ததியில் பேலேகுவரைக்கும், இங்கே சேமுடைய சந்ததியில் வாக்குத்தத்தத்தின் வித்தானவருக்கு முற்பிதாவாகிய ஆபிரகாம்வரைக்கும் காட்டியிருக்கிறது. பத்தாம் அதிகாரத்தில் அந்தந்த முற்பிதாவின் வயது சொல்லப்படவில்லை. இங்கேயோ ஐந்தாம் அதிகாரத்தில் காட்டப்பட்டிருப்பதுபோல வம்சவரலாறும் வயது விவரமும் காட்டப்பட்டிருக்கிறது. ஜலப்பிரளயத்துக்குப் பின்னானவர்களுடைய வயது குறுகியிருப்பதை இங்கே சொல்லப்பட்டிருக்கிற அட்டவணையில் காணலாம்.

**11. "அர்பக்சாத்."** இவனுக்கும், சாலாவுக்கும் இடையில் காயினான் வருகிறான் (லூக். 3: 35, 36.). கிரேக்குத் திருப்புதலிலும் அப்படியே இருக்கிறது





சாத்தைப் பெற்றபின் ஐந்நூறு வருஷம் உயிரோடி
ருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.—
12 அர்பக்சாத் முப்பத்தைந்து வயதானபோது சாலா
13 வைப் பெற்றான்.—சாலாவைப் பெற்றபின் அர்பக்
சாத் நானூற்று மூன்று வருஷம் உயிரோடிருந்து,
14 குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.—சாலா
முப்பது வயதானபோது, ஏபேரைப் பெற்றான்.—
15 ஏபேரைப் பெற்றபின் சாலா நானூற்று மூன்று வரு
ஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளை
16 யும் பெற்றான்.—ஏபேர் முப்பத்துநாலு வயதான
17 போது, [1]பேலேகைப் பெற்றான்.—பேலேகைப் பெற் [1] 1 நா. 1. 19.
றபின் ஏபேர் நானூற்று முப்பது வருஷம் உயிரோடி
ருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.—
18 பேலேகு முப்பது வயதானபோது, ரெகூவைப் பெற்
19 றான்.—ரெகூவைப் பெற்றபின் பேலேகு இருநூற்
றொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும்
20 குமாரத்திகளையும் பெற்றான்.—ரெகூ முப்பத்திரண்டு
21 வயதானபோது, செரூகைப் பெற்றான்.—செரூகைப்
பெற்றபின் ரெகூ இருநூற்றேழு வருஷம் உயிரோ

**12. "சாலா"** என்பதற்கு "அனுப்புதல்" என்றர்த்தம். ஜனங்கள் மற்றத்தேசங்களுக்கு வலசைவாங்கிப்போனதைக் காட்ட இந்தப் பேர் அவனுக்கு இடப்பட்டிருக்கலாம்.

**14. "ஏபேர்"** என்பதற்கு அப்புறத்து இடம் அல்லது கடந்துபோகுதல் என்றர்த்தம். குடிபோனவர்கள் நதிகளையாவது நாடுகளையாவது தாண்டிப்போனதை ஞாபகப்படுத்த இந்தப் பேர் ஏபேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

**17. "பேலேகு"** என்பதற்குப் "பிரிவு" என்றர்த்தம். யொக்தானியர் சேமின் சந்ததியாரை விட்டுப் பிரிந்ததைக் காட்டும்படி, பேலேகுக்கு அந்தப் பேரைக் கொடுத்திருக்கலாம். அவன் மூலமாய் முதற்பிறப்புச் சுதந்தரம் எபிரெயருக்கு வந்தது.

**18. "ரெகூ"** என்பதற்குச் "சிநேகன்" என்றர்த்தம். யொக்தானியர் குடிபோனபின்பு சேமின் புத்திரருக்குள் உண்டாயிருந்த ஐக்கியத்தைக் காட்ட நோக்கமாய் ரெகூவுக்கு அந்தப் பேர் தரிக்கப்பட்டிருக்கலாம்.

**20. "செரூகு"** என்பதற்குப் "பின்னல்" என்றர்த்தம். "பற்பல பிரிவாய்"ப் பிரிந்த சேமின் புத்திரர் விவாக சம்பந்தத்தால் கலந்ததை இந்தப் பேர் குறிக்கும்.

டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.–
22 செரூகு முப்பது வயதானபோது, நாகோரைப் பெற்
23 றான்.—நாகோரைப் பெற்றபின் செரூகு இருநூறுவ
ருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளை
24 யும் பெற்றான்.–நாகோர் இருபத்தொன்பது வயதான
25 போது, தேராகைப் பெற்றான்.—தேராகைப் பெற்ற
பின் நாகோர் நூற்றுப்பத்தொன்பது வருஷம் உயி
ரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்
26 றான்.—தேராகு எழுபது வயதானபோது, ஆபிராம்,
நகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்.

27 தேராகுடைய வம்சவரலாறு: தேராகு *ஆபிராம்,
நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான்; ஆரான்
28 லோத்தைப் பெற்றான். — ஆரான் தன் ஜன்மபூமியா
கிய ஊர் என்கிற கல்தேயர் தேசத்துப் பட்டணத்தி
லே தன் தகப்பனாகிய தேராகு மரிக்குமுன்னே மரித்

* மகாபிதா = பெரிய தகப்பன்.

**22.** "**நாகோர்**" என்பதற்கு "ஆவல்" அல்லது "ஊக்கமான போராட்டம்" என்றர்த்தமாம். மற்றவர்களை விட்டுப் பிரிந்து தெய்வீக வணக்கத்தைத் தொடங்கும்படி அக்காலத்தார் அவாவுகொண்டதை இந்தப் பேர் விளக்குவிக்கிறது என்று சொல்லுவார் சிலர். வேறே சிலர்: இந்த வார்த்தை பெருமூச்சு என்று அர்த்தங்கொள்ளும் எபிரெயபத மூலத்திலிருந்து வந்ததென்று அபிப்பிராயப்பட்டு அதற்குத் தக்கதாய் அர்த்தப்படுத்துவார்கள்.

**24.** "**தேராகு**" என்பதற்கு "அலைதல்" என்றர்த்தமாம். வேதமார்க்கத்துக்காகப் பிரிந்த துவக்கத்தைக் காட்டுகிறதாயிருக்கலாம். (யோசு. 24: 2. அப். 7: 4.)

**26.** "**ஆபிராம்**" என்பதற்கு "உன்னத பிதா" என்றர்த்தம். இதை விசுவாசிகளின் தகப்பன் தெரிந்துகொள்ளப்பட்ட முகாந்தரத்தைக் காட்டிய தீர்க்கதரிசனப்பேராக எண்ணலாம்.

**27.** "**தேராகுடைய வம்சவரலாறு.**" இந்த வம்ச வரலாறு 25-ம் அதிகாரம் 11–ம் வாக்கியம்வரையும் சொல்லப்பட்ட சங்கதிகளுக்கு முகவுரையாயிருக்கிறது. அதிலே ஆபிராமின் சரித்திரம் அடங்கியிருக்கிறது. தேவன், ஆபிராமில் யூதச்சபைக்கு அஸ்திபாரம்போட்டு மேசியாவின் வருகைக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டுவந்தார்.

**28.** "**ஆரான்.........தன் தகப்பனாகிய தேராகு மரிக்குமுன்னே மரித்தான்.**" வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற இயற்கையாய் நேரிட்ட முதலாவது அகாலமரணம் இதுவே.

"**ஊர் என்கிற கல்தேயர் தேசம்.**" இது மெசொப்பொத்தாமியாவிலிருந்தது. அது பிந்தியகாலத்தில் மொகர் என்று அழைக்கப்பட்டது. அது ஆபிராமின் காலத்தில் கல்விக்குப் பேர்போன இடமாயிருந்தது.





29 தான். — ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண்
கொண்டார்கள்; ஆபிராமுடைய மனைவிக்குச் *சாராய்
என்று பேர்; நாகோருடைய மனைவிக்கு மில்க்காள்
என்று பேர்; இவள் ஆரானுடைய குமாரத்தி; அந்த
ஆரான் மில்க்காளுக்கும் இஸ்காளுக்கும் தகப்பன்.—
30 சாராய்க்குப் [1]பிள்ளையில்லை; மலடியாயிருந்தாள்.—
31 தேராகு [2]தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானு
டைய குமாரனும் தன் பேரனுமாயிருந்த லோத்தை
யும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய
தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு,
அவர்களுடனே [3]ஊர் என்கிற கல்தேயருடைய பட்
டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப்
புறப்பட்டான்; அவர்கள் †ஆரான்மட்டும் வந்த
32 போது, அங்கே இருந்துவிட்டார்கள்.—தேராகுடைய
ஆயுசுநாட்கள் இருநூற்றைந்து வருஷம்; தேராகு
ஆரானிலே மரித்தான்.

* [illegible], ஆதி. 17. 15: 20. 12: 22. 20.
1 ஆதி. 16. 1, 2: 18. 11, 12.
2 ஆதி. 12. 1: 15. 7.
3 அப். 7. 4.
† காரான். அப். 7. 3, 4.

**29.** "**இஸ்காள்.**" சிலர், இது சாராளுக்கு வேறே பேர் என்பார்கள். ஆனால் (ஆதி. 20: 12.), சாராள் ஆபிராமின் சகோதரி என்று சொல்லப்படுகிறாள். அதாவது தேராகுடைய இன்னொரு மனைவியின் பிள்ளையாயிருக்கலாம். அல்லது தேராகின் சகோதரனுடைய மகளாயிருக்கலாம். 4: 22ல் காட்டப்பட்டிருக்கிற நாமாளைப்போல இவளும் ஏதோவிஷயத்தில் பேர்போனவளாயிருந்ததால் அவள் பேர் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

**31.** "**ஆரான்.**" இது அப். 7: 4ல் காரான் என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இது எட்சாவுக்கு இருபது மைலுக்குத் தென்கிழக்காயிருந்தது.

**32.** "**தேராகுடைய ஆயுசுநாட்கள் இருநூற்றைந்து வருஷம்.**" இருபத்தாறும் வாக்கியத்தில் தேராகு எழுபது வயதானபோது, ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களைப் பெற்றான் என்று சொல்லியிருக்கிறது. இந்த வாக்கியத்தில் தேராகு இருநூற்றைந்து வருஷம் உயிரோடிருந்தான் என்று காட்டியிருக்கிறது. ஸ்தேவான் அப். 7: 4ல் தேராகு மரித்தபின்பு ஆபிராம் காரானைவிட்டுப் புறப்பட்டதாக அறிவித்திருக்கிறான் (ஆதி. 12: 4.). ஆபிராம், ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது எழுபத்தைந்து வயசாயிருந்தான் என்று போட்டிருக்கிறது. அப்படியாகில் ஆபிராம் பிறந்தபோது தேராகு நூற்றுமுப்பது வயசா யிருந்திருக்கவேண்டும். அப்போது ஆபிராம் மூத்தவனாயிராமல், எல்லாருக்கும் இளையவனாயிருக்கவேண்டியது. அல்லவென்றால் சமாரிய பஞ்சாகமத்தில் சொல்லியபடி தேராகு நூற்று நாற்பத்தைந்து வயதுள்ளவனாய் மரித்திருக்கவேண்டும். ஜலப்பிரளயத்துக்குப் பின்பு மனிதருடைய ஆயுசு அதிகமாய்க் குறைந்துபோயிற்று. நாகோர் நூற்று நாற்பத்

தெட்டு வயசில் மறுமைக்குட்பட்டான் என்று வாசிக்கிறோம் (ஆதி. 11: 24, 25.). மேலும் தேராகு நூற்று முப்பது வயசுள்ளவனாயிருக்கையில் ஆபிராம் பிறந்திருந்தால் (ஆதி. 17: 17.) காட்டியபடி, ஆபிராம் தான் நூறுவயசாயிருக்கையில் தனக்கு ஒரு குமாரன் பிறப்பானோ என்ற சமுசயத்தோடே பேசியிருக்கவேமாட்டான். ஆகவே சமாரிய பஞ்சாகமத்தில் காட்டியபடி தேராகின் வயது 145 வயசென்றறியவேண்டும் என்று சிலர் சொல்லுவார்கள். வேறே சிலரோ அப்படி நினைக்கவேண்டியதில்லை. தேராகுடைய குமாரரில் ஆரானென்பவன் மூத்தவனாயிருந்திருக்கவேண்டும். ஆபிராம் பிற்பாடு சிரேஷ்ட கனவானானபடியினாலே அம்மூன்றில் அவனுடைய பேர் முதலாவதாகச் சொல்லப்பட்டதேயல்லாமல் பிறப்பிலே அவன் மூத்தவனல்ல. மேலும் அவன் ஆரானுக்கு இளையவனென்று வைத்துக்கொண்டால் அவனுக்கும் ஆரானுடைய மகனாகிய லோத்துக்கும் உண்டான அந்நியோந்நியத்துக்கும் ஏதுவாகும். ஏனென்றால் அவன் வயசுக்கும் இவன் வயசுக்கும் அத்தனை வித்தியாசமிருந்திருக்கமாட்டாதென்று சாதிக்கிறார்கள்.

### படிப்பினை.

(1) மனிதர் எவ்வளவு சீக்கிரத்துக்குள்ளாகத் தங்களுக்கு நேரிட்ட பயங்கரமான தண்டனைகளை மறந்து மறுபடியும் முன்செய்த பாவத்தில் விழுகிறார்கள். ஜலப்பிரளயத்தின் பயங்கரங்கள் தங்கள் கண்களுக்கு முன்னிருந்தும் பக்தியுள்ள நோவா உயிரோடே இருக்கையிலே அவன் வழியாய் உண்டான மனிதர் அக்கிரமத்தில் துணிந்து பெருகிவந்தார்கள். தேவஆவியானவர் மாத்திரமே மனிதருடைய சீர்கெட்ட தன்மையை மாற்றி அவர்கள் இருதயத்தைச் சுத்திகரிக்கத்தக்கவர்.

(2) அரிதான பெருங்காரியங்கள், ஆலோசனை சேர்க்கை முதலியவற்றால் நடத்தப்படும். ஆனால் கர்த்தருக்கு விரோதமாய்ச் செய்யப்படும் எந்த ஆலோசனையும் பலிக்கமாட்டாது. மனிதர் அவருடைய நோக்கத்தைச் சிதறடிக்கவேண்டும் என்று அபத்தமானவைகளில் தலையிட்டு அவைகளைச் செய்கையில் அவர் பரலோகத்திலிருந்து அவர்களைப் பார்த்து நகைக்கிறார். தங்களுக்கு மகிமையாகப் பாவிகள் செய்யும் எந்தக் காரியமும் கடைசியாக அவர்களுக்குக் கலக்கத்தையும் வெட்கத்தையும் அவமானத்தையும் உண்டுபண்ணும்.

(3) மனிதர் தாங்கள் சிதறிப்போகாதபடி பாபேலைக் கட்டினார்கள். அதினாலேயே அவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் பாஷைகளும் தாறுமாறாக்கப்பட்டன. பாபேலால் உண்டான வருத்தத்தை மனிதர் இந்நாள்பரியந்தம் அனுபவித்து வருகிறார்கள். நம்முடைய பின் சந்ததியார் நன்றாய் இருக்க விரும்பினால் கலகக்காரராகாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(4) பாஷைகளை தாறுமாறாக்கின தேவன் பற்பல பாஷைகளைப் பேசும்படியான வரங்களையும் தமது தாசருக்குக் கொடுத்து, தமது திருவுளசித்தத்தைப் பிரபலியப்படுத்தினார்.





## 12. அதிகாரம்.

1. தேவன் ஆபிராமை அழைத்து ஆசீர்வதித்து, கிறிஸ்துவைக்குறித்து வாக்குத்தத்தம் பண்ணினது. 4. ஆபிராம் லோத்துடன் ஆரானைவிட்டு, 6, 7. தேவகாட்சியால் தனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான் தேசத்தை அடைந்தது. 10. ஆபிராம் பஞ்சத்தினிமித்தம் எகிப்துக்குப் போய், 11. அங்கே பயத்தினால் தன் மனைவியைத் தன் சகோதரியென்று சொன்னது. 14. அவளை அவனிடத்திலிருந்து அழைத்திருந்த பார்வோன் வாதைகளினால் வாதிக்கப்பட்டபோது, அவளை மறுபடியும் அவனிடத்தில் ஒப்புவித்தது.

1 கர்த்தர் ஆபிராமை நோக்கி: [1]நீ உன் தேசத்தை
யும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்
டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்
2 பிக்கும் தேசத்துக்குப் போ.—நான் உன்னைப் [2]பெ
ரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப்

[1] ஆதி. 15. 7. நெகே. 9. 7. ஏசா. 41. 2. அப். 7. 3. எபி. 11. 8.
[2] ஆதி. 17. 6: 18. 18: 24. 35: 28. 4.

### 12. அதிகாரம்.

1. "கர்த்தர் ஆபிராமை நோக்கி." அப். 7: 2, 3ல் ஆபிராம் காரானில் குடியிருக்கிறதற்குமுன்னே மெசொப்பொத்தாமியாவிலிருக்கும்போது, தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமானார் என்று ஸ்தேவான் சொல்லியிருப்பதைக் கவனிக்கையில், இங்கே காட்டப்பட்டிருக்கிற அழைப்பு ஊர் என்ற கல்தேய தேசத்தில் சம்பவித்ததாக அறியலாம். அல்லவென்றால், இது இரண்டாவது அழைப்பு என்று வைத்துக்கொள்ளலாகும்.

"நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ." ஆதி. 11: 31ல் அந்தத் தேசம் கானான் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் ஆபிராமுக்கு அந்த அழைப்புண்டானபோது அது இன்ன தேசம் என்பது அவனுக்குத் தெரியாதிருந்தது. (எபி. 11: 8.)

2. "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி." இதின் நிறைவேறுதலை 1 இரா. 3: 8ல் இஸ்ரவேலருக்குள் காணலாம். ஆவியின் பிரகாரமாய், ஆபிராமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிற மெய்க்கிறிஸ்தவர்களிடத்தில் நிறைவேறிவருகிறது. (கலா. 3: 29. வெளி. 7: 9. ரோ. 4: 11, 12, 16, 17.)

"உன்னை ஆசீர்வதித்து." ஆபிராமின் வித்தைப் பெருகப்பண்ணினதிலும், அவனுக்கு உலகப்பொருளை ஏராளமாய்க் கொடுத்ததிலும் தேவன் அவனை ஆசீர்வதித்தார்.

"உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்." அவன் திரள் ஜனங்களுக்கு அதாவது இஸ்ரவேலர், இஸ்மவேலர், மீதியானியர், ஏதோமியருக்குப் பிதாவாயிருந்ததினாலும், விசுவாசிகள் எல்லாருக்கும் தகப்பனாயிருக்கிறதினாலும், தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டதினாலும் அவன் பேர்ப்பிரஸ்தாபமுள்ளவனானான்.

பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்
3 பாய். — உன்னை [1]ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப் [1] அப். 3.25. கலா. 3. 8-16,
பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியி
லுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்
படும் என்றார்.
4 கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன்
புறப்பட்டுப்போனான்; லோத்தும் அவனோடேகூடப்
போனான். ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்ட
போது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான். —

"நீ ஆசீர்வாதமாயிருப்பாய்." ஆபிராமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் அவனுக்குரியதாயும், சகல உலகத்தாருக்கும் பொதுவானதாயுமிருக்கிறது; அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருந்ததுடன், மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் வருவதற்குக் கருவி காரணமாயுமிருந்தான்.

**3. "உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்."** தேவாசீர்வாதமானது ஆபிராமின் சிநேகிதருக்கும், அவன் விசுவாசத்தின் அடிச்சுவடுகளைப் பின்தொடருகிற எவர்களுக்கும் கிடைக்கும்; ஆபிராமின் சிநேகிதனைத் தேவன் சிநேகிக்கிறவராயிருந்தார்.

**"உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்."** எபிரெயுவில் உன்னைத் தூஷிக்கிறவர்களைச் சபிப்பேன் என்றிருக்கிறது. இந்த வார்த்தைகள் யாத். 22: 28ல் வருகின்றன. அங்கே சரியானபடி திருப்பியிருக்கிறது; தேவன் ஆபிராமின் சத்துருக்களுக்கு விரோதியாயிருக்கிறவர்போலச் சொல்லப்படுகிறார்.

**"உனக்குள்."** ஆபிராமின் சந்ததியாகிய கிறிஸ்துஇயேசுவின்மூலமாய் பூமியின் கோத்திரத்தார் யாவரும் தாங்கள் ஆதாமுக்குள் இழந்த நன்மைகளைவிட (மத். 1: 1.) ஆபிராமின் குமாரனுக்குள் மேலான நன்மைகளைப் பெற்றுக்கொள்வார்கள். பாவமன்னிப்பு, நீதி, தேவனோடே ஒப்புரவாகுதல், சமாதானம், நித்தியஜீவன் ஆகிய ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவினால்மாத்திரம் கிடைக்கக்கூடிய நன்மைகளாயிருக்கின்றன.

**"பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்."** ஆபிராமின் சந்ததியார் கிறிஸ்துவின் காலம்வரைக்கும் ஒன்றான மெய்த்தேவனை ஆராதித்தவர்களாயும் அவரைக்குறித்து மற்ற ஜாதியாருக்குப் போதித்தவர்களாயுமிருந்தார்கள். கிறிஸ்துவுக்குப் பின்பு அவர்கள் ஏகேசுரவாதிகளானார்கள். என்றாலும் அவன் சந்ததியாராகிய அப்போஸ்தலர் பூமியிலுள்ள பற்பல தேசங்களுக்கும் சென்று மெய்மார்க்கத்தைப் பிரசங்கித்துத் திரளானபேரை மோட்சலோக பிரயுக்களாகும்படி செய்தார்கள். பூமி, கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையப்படும்போது இந்த வாக்குத்தத்தமான தீர்க்கதரிசனம் பூரண நிறைவேறுதலடையும்.

**4. "ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது."** ஊர் என்ற கல்தேயதேசத்தில் கர்த்தர் ஆபிராமுக்குக் கொடுத்த கட்டளையை ஆரானிலும்





5 ஆபிராம் தன் மனைவியாகிய சாராயையும், தன் சகோ
தரனுடைய குமாரனாகிய லோத்தையும், தாங்கள்
சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும்,
[1]ஆரானிலே சவதரித்த ஜனங்களையும் கூட்டிக்கொ [1] ஆதி. 11. 31.
ண்டு, அவர்கள் கானான் தேசத்துக்குப் புறப்பட்டுப்
போய், கானான் தேசத்தில் சேர்ந்தார்கள்.
6 ஆபிராம் அந்தத் தேசத்தில் சுற்றித்திரிந்து [2]சீகேம் [2] எபி. 11. 8, 9.

திரும்பக் கொடுத்திருக்கலாம். அப்படியல்லவென்றால் ஆபிராம் ஆரானில் தன் தகப்பனிமித்தம் சஞ்சரித்து, அவன் மரணத்துக்குப்பின்பு தேவகட்டளையின்படி தன் பிரயாணத்தைத் தொடர்ச்சியாய் நடப்பித்துக்கொண்டு போயிருக்கவேண்டும்.

**5. "தங்கள் சம்பத்தெல்லாவற்றையும்."** ஆடு,மாடுகள்,வெள்ளி,பொன் முதலியவைகள்.

**"சவதரித்த ஜனங்கள்."** வேலைக்காரர். யூதர்கள் இந்த வேலைக்காரர் புரோசலைத்துக்களாயிருந்தார்கள் (யூதமார்க்கத் தமைந்தவர்கள்) என்று சொல்லுகிறார்கள். ஆதி. 18: 19ல் ஆபிராம் அவர்களுக்குப் போதனை செய்ததாகவும் வாசிக்கிறோம்.

**"அவர்கள்...கானான்தேசத்தில் சேர்ந்தார்கள்."** ஆபிராம், ஆரானிலிருந்து 300 மயில் பிரயாணஞ்செய்து கானான்தேசத்துக்கு வரவேண்டியதாயிருந்தது. இடையில் அவன் ஐப்பிராத்து நதியைப் பூர்வீகத்தில் கர்கிமிஸ் என்றழைக்கப்பட்ட ஜெராப்போலிஸ் என்ற துறையில் கடந்திருக்கவேண்டும். அவன் முன்னோனாகிய ஏபேர் திகிரிஸ் நதியைக் கடந்து அந்தப் பேரைப் பெற்றுக்கொண்டதில் ஆபிராமுக்கு அந்தப் பேர் சுதந்தர முறையாய் வந்திருந்தாலும் ஆபிராம் இப்போது தானே ஐப்பிராத்து நதியைக் கடந்துவந்ததால் எபிரெயன் என்ற பேரைப் பெற்றுக்கொண்டான் என்று நினைக்கத்தகும். நதியைக்கடந்தபின் ஆபிராம் தென்மேற்காய்த் தத்மோர் வழியாய்த் தமஸ்குவுக்கு வந்திருப்பான். ஆபிராம் பாபிலோனுக்கு அப்புறத்தில் கல்தேயாவிலிருந்து ஒரு சேனையோடு வந்து தமஸ்குவை ஜெயித்துச் சிறிதுகாலம் அங்கே ஆண்டு பின்பு கானானுக்கு வந்தான் என்று யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் சொல்லுகிறான். ஆரானைவிட்டுப் புறப்பட்ட ஒருவருஷத்திற்குள்ளாக ஆபிராம் கானானுக்கு வந்ததாகத் தெரியவருவதால் அவன் அதிக்காலம் தமஸ்குவிலிருந்திருக்கமாட்டான். தமஸ்குப் பட்டணத்தானாகிய எலியேசர் ஆபிராமுக்கு உக்கிராணக்காரனாயிருந்ததைக் கவனிக்கையில் ஆபிராம் தமஸ்குவுக்குப் போனான் என்று தோன்றுகிறது. ஆனால் மூலபாஷை வார்த்தையைத் திட்டமாய்க் கவனித்தால் எலியேசர் தமஸ்குப்பட்டணத்தானாகச் சொல்லப்படவில்லை என்று சாதிப்பாருண்டு.

**6. "சீகேம்."** இதற்குத் தோள் என்று அர்த்தம். இது ஏபாலுக்கும், கெர்சோம் மலைக்கும் இடையிலிருந்தது. தற்காலத்தில் இது நெப்லஸ் என்றழைக்கப்படுகிறது. வெஸ்பாசியன் இராயனுடைய காலத்தில் அது பிளேவியா நெயாப்போலிஸ் என்று அழைக்கப்பட்டது. ஆபிராம் கானானில் முதலாவது சஞ்சரித்த இடம் இதுவே. அதைவிட்டு மோரேக்குப் போனான்.

என்னும் இடத்துக்குச் சமீபமான [1]மோரே என்னும் | [1] உபா. 11. 30. நியா. 7. 1.
சமபூமிமட்டும் வந்தான்; அக்காலத்திலே [2]கானானியர் | [2] ஆதி. 10. 18, 19: 13. 15.
7 அத்தேசத்தில் இருந்தார்கள். — கர்த்தர் [3]ஆபிராமுக் | [3] ஆதி. 17. 1, 8. சங். 105. 9, 11.
குத் தரிசனமாகி: உன் சந்ததிக்கு இந்தத் தேசத்

**"மோரே என்னும் சமபூமி."** எபிரெயுவில் மோரேயின் கர்வாலி மரமட்டும் வந்தான் என்றிருக்கிறது. அங்கே யாக்கோபு, தன் வீட்டாரிடத்திலிருந்த அந்நிய தெய்வங்களைப் புதைத்தான் (ஆதி. 35: 4.). யோசுவா சாட்சியின் கல்லை நிறுத்தினான் (யோசு. 24: 26.). அபிமெலேக்கு ராஜாவாக்கப்பட்டான் (நியா. 9: 6.). ஒருவேளை மோரே என்ற கர்வாலிமரத்தோப்பில் ஆபிராம் தன் கூடாரங்களை அடித்திருக்கலாம். உபா. 11: 30லும், இந்த வார்த்தை தப்பிதமாய்ச் சமபூமி என்று திருப்பப்பட்டிருக்கிறது. **மோரே** என்பதற்கு "போதகன்" என்றர்த்தமாம். ஏசா. 9: 15ல் இந்த வார்த்தை வருகிறது. அங்கே போதகம் பண்ணுகிறவன் என்று திருப்பியிருக்கிறது. ஒருவேளை அந்தக் குளிர்ந்த தோப்பில் யாராவது ஜனங்களுக்குப் போதகஞ் செய்திருக்கலாம். நியா. 7: 1ல் மோரே என்ற (அதாவது போதகனின்) மேடு இருந்ததாக வாசிக்கிறோம். சேமின் புத்திரரில் காலாகாலங்களில் சிலர் எழும்பி உத்தம போதனைகளைப் போதிக்கிறவர்களாய் விளங்கியிருக்கலாம். அப்படியானால் மெல்கிசேதேக் அவர்களில் ஒருவனாயிருந்திருக்கலாம்.

**"அக்காலத்திலே கானானியர் அத்தேசத்தில் இருந்தார்கள்."** சிலர் இந்த வாக்கியத்தைக்கொண்டு கானானியர் பலஸ்தீனாவைவிட்டுத் துரத்தப்பட்டபின்பு இவ்வாகமம் எழுதப்பட்டதென்றும், சிலர் இவ்வாக்கியம் பிந்தியகாலத்தில் ஒருவனால் வரிநுழைந்து எழுதப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் இருவகையாரும் சொல்வது அபத்தமாயிருக்கிறது. ஏனென்றால் பலஸ்தீனாவிலும், பெனிக்கேயாவிலும் முதலாவது சேமின் புத்திரர் வாசம்பண்ணிவந்தார்கள். சிவந்த சமுத்திரத்திற்குச் சமீபமாய்க் குடியிருந்த கானானியர் வடக்கே சென்று கானான்தேசத்தின் பூர்வ குடிகளாகிய சேமின் புத்திரரைத் துரத்தியும், அவர்களோடே சம்பந்தங் கலந்தும் அவர்கள் பாஷையை உபயோகித்தும் தேசமெங்கும் பரம்பியிருந்தார்கள். ஆபிராம் கானானுக்கு வருவதற்குச் சற்று முந்தி இது சம்பவித்ததாக எகிப்தியருடைய சாதனங்களினால் அறியலாம். ஆகவே ஆபிராம் கானானிற் பிரவேசித்தபோது கானானியர் அதை முழுவதுமாய்ச் சுதந்தரித்துக்கொண்டிருந்ததைக் காட்டும் நோக்கமாய் இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது.

**7. "கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி."** தேவன் தரிசனமானதாகச் சொல்லப்பட்டிருக்கிற முதல் இடம் இதுவே. இதற்கு முந்தி அவர் ஆதாமுக்குக் கட்டளையிட்டார் (ஆதி. 2: 17.). அவர் சத்தத்தை ஆதாமும் ஏவாளும் கேட்டார்கள் (ஆதி. 3: 8.). அவர் அவர்களைக் கூப்பிட்டார் (ஆதி. 3: 9.). அவர் காயீனை நோக்கிப் பேசினார் (ஆதி. 4: 6–9.). அவர் நோவாவை நோக்கிப் புறப்படுங்கள் (ஆதி. 8: 16.) என்றார். என்றாலும் தரிசனமென்கிற வார்த்தை இதற்குமுன் சொல்லப்படவில்லை. இதற்குப் பின்பு அடிக்கடி அவர் தரிசனமானார் என்று வாசிக்கிறோம். தரிசனம் என்பது அசரீரவாக்கைக் குறியாமல் ரூபமாய்க் காணப்பட்டுப் பேசுவதைக் குறிக்கலாம்.





தைக் கொடுப்பேன் என்றார். அப்பொழுது அவன்
தனக்குத் தரிசனமான கர்த்தருக்கு அங்கே ஒரு பலி
பீடத்தைக் கட்டினான்.
8 பின்பு அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து, பெத்
தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குப் போய்,
பெத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயி கிழக்காகவும்
இருக்கக் கூடாரம் போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு
பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய [1]நாமத்தைத் தொ | [1] ஆதி. 13. 4: 21. 33.

**"உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்."** ஆபிராமின் சந்ததியார் கானான்தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதற்கு இதுவே முதலாவதாகச் சொல்லப்பட்ட நேரான வாக்குத்தத்தம்; அந்த வாக்குத்தத்தத்தை ஆபிராம் நன்றியறிதலோடே விசுவாசித்து ஒரு பலிபீடத்தைக் கட்டி அத்தேசத்தைப் பரிசுத்த பூமியாகக் கர்த்தருக்குள் பிரதிஷ்டை செய்தான். இந்தப் பலிபீடம் பலிசெலுத்துவதற்கும் தொழுதுகொள்வதற்குமாக வழங்கப்பட்டது. நோவாவும் ஒரு பலிபீடத்தைக் கட்டி (ஆதி. 8: 20.), புதுப்பிக்கப்பட்ட உலகத்தைச் சுதந்தரித்துக்கொண்டான். பிந்தியகாலத்தில் யாக்கோபு அந்த இடத்தைக் கிரயத்துக்கு வாங்கி ஒரு பலிபீடத்தைக் கட்டினான். (ஆதி. 33: 18–20.)

**8. "அவன் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து."** ஆபிராம் திரளான ஆடுமாடுகளை உடையவனாயிருந்ததால், ஒரு இடத்தில் மேய்ச்சல் அற்றுப்போனவுடனே வேறொரு இடத்துக்குச் செல்ல அவசியம் நேரிட்டபடியே அவன் தன் கூடாரங்களைப் பிடுங்கிப்போவது வழக்கமாயிருந்தது. அந்தப்படியே பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவான மலையடிவாரத்திற்குப் போய்ச் சிறிதுகாலம் தங்கினான்.

**"பெத்தேல்."** இதற்குப் பூர்வபேர் லூஸ், பிந்தியகாலத்தில் யாக்கோபு பதான் அராமுக்குப் போனபோது பெத்தேல் என்ற பேரை அதற்குக் கொடுத்தான். பெத்தேல் என்றால் தேவனுடைய வீடு என்றர்த்தம். அது தற்காலத்தில் பேய்தீன் என்று அழைக்கப்படுகிறது. அது எருசலேமுக்குச் சமீபமாய் வடக்கேயிருக்கிறது.

**"ஆயி."** இது பெத்தேலுக்கு ஐந்துமைலுக்குக் கிழக்கேயிருக்கிறது. பிந்தியகாலத்தில் யோசுவாவால் பிடிக்கப்பட்டு மண்மேடாக்கப்பட்டது. (யோசு. 8: 28.)

**"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்."** ஆபிராம் அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி வெளியரங்கமாய்க் கர்த்தரைத் தொழுதுகொண்டு தன் விசுவாசத்தை அறிக்கையிட்டான். இந்தச் சரித்திரத்தைக்கொண்டு ஸ்தேவான், தேவன் எங்கும் இருக்கிறவராதலால் அவர் எருசலேமில் மாத்திரமல்ல, சீகேம், எகிப்து, கல்தேயா, மீதியான் என்ற இடங்களில் தொழுதுகொள்ளப்பட்டார் என்று ரூபித்திருக்கிறான். (அப். 7: 49. யோவா. 4: 21)

9 மூதுகொண்டான்.—அதின்பின் ஆபிராம் புறப்பட்டு,
தெற்கே பிரயாணம்பண்ணிக்கொண்டு போனான்.
10 அத்தேசத்திலே [1]பஞ்சம் உண்டாயிற்று; தேசத்தி [1] ஆதி.26.1:43.1.
லே பஞ்சம் கொடிதாயிருந்தபடியால், ஆபிராம் எகி
ப்து தேசத்திலே தங்கும்படி அவ்விடத்துக்குப் போ
11 னான்.—அவன் எகிப்துக்குச் சமீபமாய் வந்தபோது,
தன் மனைவி சாராயைப் பார்த்து: [2]நீ பார்வைக்கு [2] ஆதி.26.7.
12 அழகுள்ள ஸ்திரீ என்று அறிவேன். — எகிப்தியர்

**9.** **"தெற்கே பிரயாணம்பண்ணிக்கொண்டுபோனான்."** இசற்கு நெகெப் அதாவது உலர்ந்ததரை என்று பேர்; அந்த இடம் மிருதுவான சுண்ணாம்பு இருந்த பூமி; பெய்யும் மழை உடனே கீழே இறங்கிவிடும். பள்ளத்தாக்குகளிலுங்கூடத் தண்ணீர் தரைக்குக் கீழ் ஊடறுத்துச் செல்லுகிறது. தற்காலத்தில் அங்கே விருக்ஷங்களில்லாதிருந்தும் ஆடுமாடுகள் திரளாயிருக்கிறதுண்டு.

**10.** **"அத்தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று."** இந்தப் பஞ்சம் ஆபிராம் கானான்தேசத்துக்கு வந்த சில வருஷங்களுக்குப்பின்பு சம்பவித்திருக்க வேண்டும். அவன் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, அவனுக்கு 75 வயது. அவன் 99 வயசாயிருக்கையில் எகிப்திய ஸ்திரீயாகிய ஆகார் என்ற அடிமைப் பெண்ணால் அவனுக்குப் பிறந்த இஸ்மவேல் 13 பிராயமாயிருந்தான். ஆகவே 12-ம் அதிகாரமுதல் 16-ம் அதிகாரம்வரையும் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள் பதினொரு வருஷங்களுக்குள் நடந்திருக்கவேண்டியது. பலஸ்தீனாவில் வருஷத்திலே இரண்டுதரம் மழைபெய்வதுண்டு, அது ஒருதரம் தவறினால் உடனே வருத்தமுண்டாகும். முக்கியமாய் உலர்ந்த பூமியாகிய நெகெப் பைப்போன்ற இடங்களில் அது அதிகமாய்த் தோன்றும். அக்காலத்திலே தூரத்திலிருந்து ஆகாரம் கொண்டுவருவதற்கு வழிவகையுமில்லாதிருந்தது. ஜனங்கள் தங்கள் தேசத்தின் விளைவுகளினால் பிழைக்கவேண்டியவர்களாயிருந்தார்கள்.

**"எகிப்து."** அபிசினியாமலையிற் பெய்யும் பெருமழையினால் நீல்நதி பெருக்கெடுத்து எகிப்துதேசத்தைச் செழிப்பாக்கிக்கொண்டுவந்தது. எகிப்தியர் வெள்ளாண்மையில் தேறினவர்களாயுமிருந்தார்கள். ஆபிராம் எகிப்துக்குச் செல்லுகிற பாதையிலிருந்ததால், பஞ்சத்தைத் தாங்கமாட்டாமல் பிழைக்கும்படியாக அத்தேசத்துக்குப் போனான். ஆனால் அங்கே குடியிருக்கப் போகாமல் தற்காலத்திற்கென்று சஞ்சரிக்கப்போனான்.

**11.** **"நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரீ."** சாராய் இப்போது கொஞ்சங் குறைய எழுபது வயசாயிருக்கலாம். அவள் 127 வருஷம் உயிரோடே இருந்தாள். அவள் பிள்ளைபெறாதவளாயுமிருந்தாள். அக்காலத்தோருக்குள் அவள் நடுப்பிராயமுள்ளவளாக எண்ணப்பட்டிருப்பாள். ஆபிராம் இப்போது சயசித்த அர்ச்சனி; கொடுங்கோல் செலுத்தும் ராஜியத்துக்கும் காமகுரோதமுள்ள ஜாதியாண்டைக்கும் போனதால் தன் ஜீவனுக்கு மோசம் நேரிடும் என்று பயந்து, பொய்சொல்லும்படி சாராயை வகினான். இருபத்து





உன்னைக் காணும்போது, இவள் அவனுடைய மனைவி
என்று சொல்லி, என்னைக் கொன்றுபோட்டு, உன்னை
13 உயிரோடே வைப்பார்கள்.—ஆகையால், உன் நிமித்
தம் எனக்கு நன்மை உண்டாகும்படிக்கும், உன்னா
லே என் உயிர் பிழைக்கும்படிக்கும், [1]நீ உன்னை என் [1] ஆதி.11.29:20.2, 5.13:26.7.
சகோதரி என்று சொல் என்றான்
14 ஆபிராம் எகிப்திலே வந்தபோது, எகிப்தியர் அந்த
ஸ்திரீயை [2]மிகுந்த அழகுள்ளவளென்று கண்டார் [2] மத். 5. 28.
15 கள்.—பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக் கண்டு,

மூன்று வருஷத்துக்குப்பின்பு இன்னொரு இடத்தில் இந்தப் பாவத்திலே மறுபடியும் விழுந்தான். ஆதி. 20: 13 பார்க்கையில் ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்படும்முன்னே, இது காரியத்தைக்குறித்துத் திட்டம்பண்ணியிருந்தான் என்றறியலாம். ஆபிராம் தேவனைப்பற்றிய விசுவாசத்தில் பேர்போனவனாயிருந்தாலும், தன் மனைவியின் கற்பு நிலைமைக்குரிய விஷயத்தில் சிறந்த சன்மார்க்க ஒழுக்கத்தை அவன் காட்டவில்லை. பேர்போன இந்த மகாத்துமாவினிடத்தில் இவ்வளவு பெலவீனத்தைப் பார்க்கையில் நாம் எவ்வளவு ஜாக்கிரதையோடே ஜீவனம்பண்ணவேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவேளை அவன் சாராய் தன்னைக் காத்துக்கொள்ளத்தக்கதான யுத்தி புத்தி சாமர்த்தியமுடையவள் என்று எண்ணி, இப்படித் தவறியிருக்கலாம்.

காமின் புத்திரர் அழகுள்ளவர்களல்ல. தட்டை நெற்றியும், உயர்ந்த கன்னத்தெலும்பும், சட்டிவாயும், பருத்த உதடுகளுமுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் சாராயுடைய சௌந்தர மேனியைக்கண்டு இலகுவில் மயங்கிப்போனார்கள் என்று இங்கே பார்க்கிறோம். அவர்கள் மாம்சத்தின்படி நடக்கிறவர்களாயிருந்தார்கள்.

**13.** **"என் சகோதரி."** சாராய், ஆபிராமின் தகப்பனுடைய வழியில் அவனுக்குச் சகோதரியாயிருந்தாலும், இப்போது அவனுடைய மனைவியாயிருந்தாள். ஆபிராமின் சகோதரி என்று தன்னைக்குறித்துச் சாராய் சொன்னதில் சத்தியத்தை மறைத்தாள். தான் ஆபிராமுக்கு மனைவியல்ல என்று மற்றவர்கள் எண்ண இடமுண்டாக்கினது பெரிய தப்பிதம். தெய்வீக பராமரிப்பைக்குறித்துத் திடமான விசுவாசமற்றவளாயிருந்தாள் என்று இதினால் காட்டினாள்.

**15.** **"பார்வோன்."** இது எகிப்து ராஜாக்களுடைய பட்டப்பேராயிருந்தது. பார்வோன் என்பது எகிப்தியருக்குள்ளே ராஜா என்கிற அர்த்தமாக உபயோகிக்கப்பட்டதென்று யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான். எகிப்தியருடைய சித்திரப்பாஷைகளில் கண்டிருக்கிறபடி பார்வோன் என்பது அவர்களுடைய ராஜாக்களின் பட்டப்பேர். அதின் அர்த்தம் என்னவெனில் மனைவீடு, அல்லது இராஜஸ்தலம் என்பதே. அது நமக்குள் "ஆஸ்தானம்" என்று வழங்குவதற்குச் சரிசமானம். யோசேப்பு பன்னிரண்டாம் ராஜவம்சத்தைச் சேர்ந்த ஒரு ராஜாவின் காலத்திலிருந்தான்.

பார்வோனுக்கு முன்பாக அவளைப் புகழ்ந்தார்கள்.
அப்பொழுது அந்த ஸ்திரீ பார்வோனுடைய [1]அர [1] ஆதி. 20.2. சங். 105.14. நீதி. 6. 29.
16 மனைக்குக் கொண்டுபோகப்பட்டாள்.—அவள் நிமித்
தம் அவன் ஆபிராமுக்குத் [2]தயைபாராட்டினான்; [2] ஆதி. 20. 14.
அவனுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்
காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைக

அப்படியானால் ஆபிராமும் அந்த வம்சத்தைச் சேர்ந்த ஒரு பார்வோன் ஆளுகையில் அல்லது அதற்கு முந்தின வம்சத்தைச் சேர்ந்த ஒருவன் காலத்தில் எகிப்துக்குப் போயிருக்கவேண்டும்.

**"பிரபுக்களும் அவளைக் கண்டு, பார்வோனுக்கு முன்பாக அவளைப் புகழ்ந்தார்கள்."** ஆபிராமின் நாட்களில் கானான்தேசம் எகிப்துக்குப் போகிற பெரும்பாதையாயிருந்தது. சேமின் புத்திரரில் அநேகர் எகிப்துக்கு வலசைவாங்கி டெல்ற்றாவில் குடியேறினார்கள். அவர்கள் பிந்தியகாலத்தில் ஹைக்சாஸ் (மேய்ப்ப ராஜாக்கள்) என்ற பெயரால் பார்வோன் ராஜாங்கத்தைக் கவிழ்த்துப் பல நூற்றாண்டுகளாக எகிப்தில் அரசாண்டார்கள். இந்தக் கூட்டத்தைத் தடுக்கும்படி அமினம்மாய் என்ற ராஜன் அரண்களையும், மதில் தொடர்ச்சிகளையும் கட்டினான். இந்த அரண்களைக் காத்துக்கொண்டிருந்த பிரபு சாராயைக்கண்டு பார்வோனுக்குத் தெரியப்படுத்தியிருக்கலாம்.

**"அந்த ஸ்திரீ பார்வோனுடைய அரமனைக்குக் கொண்டுபோகப்பட்டாள்."** எகிப்தியர் அந்தப் பூர்வகாலத்திலும், சீர்கெட்டுப்போயிருந்தார்கள். ராஜா அந்தப்புரம் வைத்திருந்தான் இந்தச் சந்ததியிலேலே தோன்றுகிறது.

**16. "அவள் நிமித்தம் அவன் ஆபிராமுக்குத் தயைபாராட்டினான்."** பார்வோன் ஆபிராமைப் பட்சமாய் நடத்தினதோடு நம்முடைய நாட்டுவழக்கப்படியே திரண்ட பரிசம் கொடுத்தான். பார்வோன் கொடுத்த நால்கடைகளுக்குள் கழுதையைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. சிலர் கழுதையானது அக்காலத்தில் எகிப்தில் அறியப்படாத ஜெந்து என்று அறிவித்து இவ்வாகம ஆக்கியோன் பிழையாக எழுதியிருக்கிறான் என்று சொல்வார்கள். இந்தச் சாதனை தப்பிதம் என்று பெனிகேசனிலிருக்கிற கல்லறைகளில் கழுதைகளின் வடிவம் தீட்டப்பட்டிருப்பதினால் அறியலாம். மேலும் இதற்கு முந்திக் கட்டப்பட்டிருந்த கைஷாவின் பிரமித் கோபுரங்களிலும் கழுதையின் ரூபங்கள் திரளாய் சித்திரிக்கப்பட்டிருந்தன.

ஒட்டகங்கள், எகிப்தின் சின்னங்களில் சித்திரிக்கப்பட்டிருந்தாலும், டெல்ற்றாவில் குடியிருந்த சேமியர் அவைகளைக் கொண்டுவந்திருப்பார்கள் என்று எண்ணத்தகுமானதாயிருக்கிறது. எகிப்தின் ராஜாக்கள் எப்படியும் பன்னிரண்டாவது ராஜவம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள் சீனாயைச்சேர்ந்த தேசத்தைக் கட்டி ஆண்டார்கள். ஒட்டகங்கள் வனாந்தரத்திற் பிரயாணஞ் செய்யப் பிரயோஜனமுள்ளவைகள் என்றும் ஆபிராமுக்கு அவைகள் மிகவும் உபயோகமாயிருக்கும் என்றும் அவர்கள் அறிந்திருப்பார்களே.





17 ளும், ஒட்டகங்களும் கிடைத்தது.—ஆபிராமுடைய
மனைவியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்
வோனையும், அவன் வீட்டாரையும் [1]மகா வாதை [1] ஆதி. 20. 18. எஸ். 13. 14.
18 களால் வாதித்தார்.—அப்பொழுது பார்வோன் ஆபி
ராமை அழைத்து: [2]நீ எனக்கு ஏன் இப்படிச் செய் [2] ஆதி. 20. 9; 26. 10.
தாய்? இவள் உன் மனைவி என்று நீ எனக்கு அறிவியா
19 மற்போனதென்ன?—இவளை உன் சகோதரி என்று நீ
சொல்லவேண்டியது என்ன? இவளை நான் எனக்கு
மனைவியாகக் கொண்டிருப்பேனே; இதோ உன்
மனைவி; இவளை அழைத்துக்கொண்டுபோ என்று சொன்

**17. "கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார்."** சாராய் தன்னை ஆபிராமின் சகோதரி என்று சொன்னதின்பேரில் பார்வோன் அரமனைக்குக் கொண்டுபோகப்பட்டாள். அப்படியானால் கர்த்தர் பார்வோனை மகா வாதைகளால் வாதித்தது சரியாவென ஒரு கேள்வி வரலாம். ஆபிராமுக்கு அக்காலத்தில் எண்பது வயதுபோலிருக்கலாம். அவனுக்கு வேறே மனைவியில்லை. சாராய் எழுபது வயதுள்ளவளாயிருக்கலாம். அவள் விவாகமனைவியோ அல்லவோ, ஆபிராம் விதுரனோ, விவாகம் பண்ணினவனோ, அவன் மனைவி யார்? சாராயைப்போன்றவள் அவன் மனைவியாயிருக்கலாமே என்பவைகளைக்குறித்துப் பார்வோன் நீதியுள்ள ராஜனாகத் திட்டமாய் விசாரித்தறியவேண்டியதாயிருந்தது. அவன் அப்படிச் செய்யாமல் தன் சிற்றின்பத்தை நிறைவேற்றும் நோக்கமுள்ளவனாய்ச் சாராயை அந்தப்புரத்துக்குக் கொண்டுபோனான். ஆதலால் அவன் சாராயைத் தொடாதபடி அவனுடைய நன்மைக்காகத் தேவன் அவனை வாதித்தார். அறிந்து செய்யும் பாவத்தைவிட அறியாமல் செய்யும் பாவம், தாராளத்தில் செய்யப்படுவதால் அது பெரும் மோசத்தை வருவிக்கக்கூடும்.

**18. "பார்வோன் ஆபிராமை அழைத்து."** சாராய் ஆபிராமின் மனைவி என்றும், தான் அவளைத் தனக்கு மனைவியாக வைத்துக்கொள்ள யோசித்தது தப்பிதம் என்றும் பார்வோன் அறிந்து, ஆபிராம் சத்தியத்தைத் தெரியப்படுத்தாததற்காக அவனைக் கண்டித்தான். ஒரு அஞ்ஞானி விசுவாசிகளின் தகப்பனைக் கண்டிக்கும்படியானது எவ்வளவு துக்கப்படத்தக்க காரியம்!

**19. "இவளை நான் எனக்கு மனைவியாகக் கொண்டிருப்பேனே."** எஸ்தர் (எஸ்தர். 2: 12.) விஷயத்தில் கலியாணம் பண்ணுமுன் பன்னிரண்டுமாதம் சுத்திகரிப்பு நடந்தது. அப்படியே பார்வோன் சாராயை விவாகம்பண்ணும்படி ஒருகாலம் குறிக்கப்பட்டிருக்கலாம். அது வியர்த்தமாகும்படி தேவன் இடையிலே மகா வாதையைப் பார்வோன் வீட்டில் அனுப்பினார். பார்வோன் சாராயை மனைவியாகப் படைக்கும் எண்ணத்தை முற்றும் விட்டுவிட்டான்.

20 ஞன்.—பார்வோன் [1]அவனைக்குறித்துத் தன் மனுஷருக்
குக் கட்டளை கொடுத்தான்; அவர்கள் அவனையும்,
அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லா
வற்றையும் அனுப்பிவிட்டார்கள்.

[1] நீதி. 21. 3.

**20.** "அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பிவிட்டார்கள்." ஆபிராம் பயத்தோடே எகிப்துக்கு வந்தான். இப்போது விசேஷித்த ஆதரவு பெற்று ஜெயமாகத் திரும்பினான். அவன் சந்ததியாரும் பிற்பிற்காலத்தில் எகிப்தின் ஐசுவரியத்தோடே அத்தேசத்தைவிட்டு ஜெயகோலமாய்ப் புறப்பட்டார்கள்.

### படிப்பினை.

#### வச. 1—9.

(1) விசுவாசத்துக்கும் தேவனோடே சஞ்சரிப்பதற்கும் இங்கே நல்லமாதிரியைக் காணலாம். விசுவாசம் தேவனுடைய ஈவாயிருக்கிறது. அது தேவவாக்கை நம்பி அதற்குக் கீழ்ப்படிகிறது. தன்னைத்தான் வெறுத்துத் தன்னை முழுவதுமாய்த் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவர்பேரில் சார்ந்துகொள்ளும். விசுவாசிகள் விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆக்கப்படுவதால், அவர்கள் தேவனுடன் சமாதானமாயிருக்கிறார்கள். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பதோடே தங்கள் மாதிரியினாலும், ஜெபத்தினாலும், செல்வாக்கினாலும், தங்கள் சிநேகிதர், உறவோர், தேசத்தார் முதலியவர்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பார்கள். அவர்கள் வார்த்தைகளும் செய்கைகளும் அவர்கள் ஜீவித்துப்போன பின்பும் அநேக காலங்களாய் நன்மைக்கென்று பேசப்படுவதுண்டு. அவர்களுடைய சிநேகிதர் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் சத்துருக்களோ தண்டிக்கப்படுவார்கள். அவர்கள் பேர் உலகத்தில் கீர்த்திப்பிரதாபமாக விளங்காவிட்டாலும் பரலோகத்தில் மகிமையுள்ளதாய் விளங்குகிறது.

(2) தேவன் நம்மை அழைக்கையில், நமது இனத்தார்நிமித்தம் அந்த அழைப்பைத் தட்டிக்கழிக்கக் கூடாது. அவர்கள் நம்மோடே சேரும்படியாக வழிவகையைப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(3) நாம் எங்கே போனாலும் கர்த்தர் அங்கேயிருக்கிறார். நாம் அவருடைய சந்நிதியத்தை அறிக்கைசெய்து, அவரை வணங்கி அவரோடே ஐக்கியமாயிருந்தால் சுகபத்திரமாயிருப்போம் என்பதற்குச் சந்தேகமில்லை.

#### வச. 10—20.

(4) பூமியில் நாம் எந்த ஸ்திதியிலிருந்தாலும் சோதனைக்கு நீங்கலாக இருப்பது கூடாதகாரியம். குறைப்படாத மனுஷன் இல்லவேயில்லை. பூமிக்கு எல்லாம் சிரேஷ்டமான தேசமாகிய கானானிலும் பஞ்சமுண்டாயிற்று. விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிராமிடத்திலும் அவிசுவாசம் பிரத்தியட்சமாய்க் காணப்பட்டது. மோட்சத்தில் மாத்திரம் பூரண பரிசுத்தமும் பாக்கியமும் உண்டு.

(5) முகத்தழகு அழகல்ல குணத்தழகே அழகு. புறம்பான நன்மைகளை விரும்பி அதையே நாடுகிறவர்கள் மோசத்துக்கும் சோதனைக்கும் உள்ளாவார்கள்.

(6) மனுஷருக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்.

(7) நெருக்கங்கள் சோதனைகள் உண்டாகும் காலத்தில் ஊக்கமான விசுவாசம் இருந்தால்மாத்திரம் செம்மையாய் நடக்கலாம்.





## 13. அதிகாரம்.

1. ஆபிராமும் லோத்தும் எகிப்தைவிட்டுத் திரும்பினது. 7. அவர்களுடைய மேய்ப்பர்களுடைய வாக்குவாதத்தினால் அவர்கள் இருவரும் பிரிந்தது. 10. லோத்து அக்கிரமிகளுள்ள சோதோமுக்குப் போனது. 14. தேவன் ஆபிராமுக்கு மறுபடியும் காட்சிகொடுத்தது. 18. அவன் எபிரோனுக்குப் போய் அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினது.

1 ஆபிராமும், அவன் மனைவியும், அவனுக்கு உண்
டான யாவும், அவனுடனே லோத்தும், எகிப்தை
2 விட்டு, [1]தென்திசையில் வந்தார்கள்.—ஆபிராம் [2]மிருக
ஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்திகளை
3 உடைய சீமானாயிருந்தான்.—அவன் தன் பிரயாணங்

[1] ஆதி. 12. 9. ஆ.
[2] ஆதி. 24.35. சங். 112. 3. நீதி. 10. 22.

(8) நெருங்கின இனத்தார்பேரிலும் அளவுக்கு மிஞ்சிப் பாசம் காட்டினால் விக்கினகாரணமாகும்.

(9) பொய்யானது ஒரு நிமிஷம்மாத்திரம் நிலைக்கும், அதின்பின்னே அவமானம் வந்து சம்பவிப்பது நிச்சயம்.

(10) அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்குப் பயங்கரமாயிருக்கவேண்டியது. ஆனால் அவர்களில் எத்தனைபேர் தங்கள் தேக இச்சைகளுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் கிரியைகளுக்காகத் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டியவர்கள். தங்களுக்கு மேலானவர்கள் என்றாலும் சிற்றின்பத்தை நிறைவேற்றத் துணைசெய்யும் பிரபுக்கள், மேன்மக்கள் என்று சொல்லத்தக்க யோக்கியரல்ல.

(11) சீர்கெட்ட காலங்களிலும் இடங்களிலும் மனச்சாட்சியைப் பேணி வளர்க்கிறவர்களையும் பார்க்கலாம். அப்படிப்பட்ட சமயங்களில் நமக்குண்டாகும் பயம், அவிசுவாசத்தினால் உண்டானதென்று உணரவேண்டியது. தேவனுடைய சனங்களிடத்தில் பெலவீனங்கள் காணப்பட்டபோதிலும், அவர் அவர்களைத் தற்காக்கிறார். அவர்கள் தங்களைக் காக்கிறதைவிட, அவர் அவர்களை விசேஷித்தவிதமாய்ப் பாதுகாக்கிறார் என்று அறியலாம். என்றாலும் அவர்கள் தங்கள் மார்க்கத்துக்குத் தக்கதாய் நடவாதிருக்கில் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களாலும் கண்டிக்கப்படுவார்கள்.

### 13. அதிகாரம்.

**1.** "லோத்தும்." லோத்து எகிப்துக்குப்போனதாகச் சொல்லப்படாதிருந்தும் இந்த வாக்கியத்தினால் அவனும் ஆபிராமோடே கூடப்போனான் என்றறிகிறோம்.

"தென்திசையில் வந்தார்கள்." கானான்தேசம் எகிப்துக்கு வடக்கேயிருந்தது. தென்திசையில் வந்தார் என்பது கானான்தேசத்தின் தென்பாகத்தில் அதாவது நெகெப் என்னும் நாட்டுக்கு வந்தான்.

**2.** "சீமானாயிருந்தான்." ஆபிராமுக்கு முன்னிருந்த ஆஸ்தியோடே எகிப்தில் பார்வோனால் கொடுக்கப்பட்டதும் சேர்க்கப்பட்டது.

**3.** "தன் பிரயாணங்களிலே." ஆபிராம் தான் எகிப்துக்குப் போனவழியாகவே திரும்பினான். எகிப்திலிருந்து நெகெபுக்கும் அதிலிருந்து பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவான இடத்துக்கும் வந்தான்.

களிலே [1]தெற்கேயிருந்து பெத்தேல்மட்டும், பெத்தே — [1] ஆதி. 12. 8, 9
லுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தான் முன்பு கூடாரம்
4 போட்டதும்,—தான் முதல்முதல் ஒரு [2]பலிபீடத்தை — [2] ஆதி. 12. 7, 8. சங். 116. 17.
உண்டாக்கினதுமான ஸ்தலமட்டும் போனான்; அங்
கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்
டான்.
5 ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுக
6 ளும் கூடாரங்களும் இருந்தன. — அவர்கள் ஒருமித்
துக் குடியிருக்க [3]அந்தப் பூமி அவர்களைத் தாங்கக் — [3] ஆதி. 36. 7.
கூடாதிருந்தது; அவர்களுடைய ஆஸ்தி மிகுதியா
யிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண
7 ஏதுவில்லாமற்போயிற்று. — ஆபிராமுடைய மந்தை
மேய்ப்பருக்கும் லோத்துடைய மந்தை மேய்ப்ப
ருக்கும் [4]வாக்குவாதம் உண்டாயிற்று. அக்காலத்தி — [4] ஆதி. 26. 20; 12. 6.
லே கானானியரும் பெரிசியரும் அத்தேசத்தில் குடி

**4.** "**முதல்முதல்.**" ஆபிராம் முதலாவது சீகேமில் பலிபீடத்தைக் கட்டி அங்கே கொஞ்சக்காலம்மாத்திரம் இருந்ததாகவும் பின்பு தேசத்தில் இருந்த கானானியர் அந்தப் பாகத்தைச் சுதந்தரித்துக்கொண்டதாகவும் தோன்றுகிறது. ஆபிராம் சீகேமைவிட்டுப் பெத்தேலுக்குச் சென்று அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கிக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான். இந்த இடத்துக்கு அவன் மீளவும் வந்து, கர்த்தர் எகிப்திலுண்டான சகல மோசங்களினின்றும் விலக்கிக் காப்பாற்றினதற்காக நன்றியறிதலான தோத்திரஞ் செலுத்தினான்.

**5.** "**லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன.**" ஆபிராமுக்கு அடுத்தபடியில் லோத்தும் திரள் சம்பத்துடையவனாயிருந்தான். கூடாரங்கள் என்று பன்மையாகச் சொல்லியிருப்பதில் அவனுக்கு வேலைக்காரரும் அநேகர் இருந்திருக்கவேண்டும் என்றறியலாம்.

**6.** "**அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க.**" சிறிதுகாலத்துக்கு முன்புதான் பஞ்சம் கானானில் நீங்கிவிட்டது. ஆபிராமுக்கும் லோத்துக்கும் திரளான ஆடுமாடுகள் இருந்ததால், மேய்ச்சல் நிமித்தம் மேய்ப்பருக்குள் மனஸ்தாபம் நேரிட்டிருக்கும். அப்பால் லோத்தும் தனக்கு அநியாயம் நேரிட்டதென்று நினைத்திருப்பான்.

**7.** "**பெரிசியர்.**" வேதாகமத்தில் பெரிசீ என்பதும் பெராசீ என்பதுமாக இரண்டுவார்த்தைகள் உண்டு. பெராசீ என்கிற பதத்தை (உபா. 3: 5. 1 சாமு. 6: 18. எஸ்தர். 9: 19.), ஊர்கள் என்று திருப்பியிருக்கிறது. பெரிசீ என்பதைப் பெரிசியரென்று திருப்பியிருக்கிறது. பெரிசியர் இங்கேயும் 34: 30லும் கானானியருக்கு அன்னியர்களாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். சில இடங்





8 யிருந்தார்கள்.—ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்
கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்
பருக்கும் [1]வாக்குவாதம் வேண்டாம்; [2]நாம் சகோத — [1] 1 கொ. 6. 7. [2] யாத். 2. 13. அப். 7. 26.
9 ரர்.—இந்தத் தேசமெல்லாம் [3]உனக்கு முன் இருக் — [3] ஆதி. 20. 15.
கிறது அல்லவா? நீ என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்;
நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகி
றேன்; [4]நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் — [4] ரோ. 12. 18. யாக். 3. 17.
போகிறேன் என்றான்.
10 அப்பொழுது லோத்து தன் கண்களை ஏறெடுத்துப்

களில் கானானில் குடியிருந்த ஜாதியார்களில் ஒரு ஜாதியாராகக் காட்டப்பட்டிருக்கிறார்கள் (யாத். 3: 8, 17. யோசு. 17: 15. நியா. 3: 5.). அவர்கள் கானானுடைய சந்ததியின் அட்டவணையில் சேர்க்கப்படாததைப் பார்க்கையில், அவர்கள் கானான்தேசத்தின் பூர்வீகக் குடிகளாயிருக்கலாம். அவர்கள் மேய்ப்பர்களாயிருந்து பட்டணங்களில் குடியிராமல், பள்ளத்தாக்கில் சஞ்சரித்து வந்தார்கள். பெராசீ என்றாலும் பெரிசீ என்றாலும் ஒரு ஜாதியாரைக் குறிக்கலாம். அவை இரண்டுக்கும் அர்த்தம் "பள்ளத்தாக்கின் குடிகள்." ஆனால் அவர்கள் பிந்தியகாலத்தில் மலைக்குத் துரத்தப்பட்டதாகத் தோன்றுகிறது (யோசு. 11: 3.). கானானியர் வியாபாரிகளாயிருந்ததால், அவர்கள் பூர்வீகக் குடிகளை உள்நாட்டுக்குத் துரத்தி, கடல்துறைப் பட்டணங்களில் குடியிருந்து வந்தார்கள். ஆகவே கானானியரும் பூர்வகுடிகளும் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டிருந்ததால், ஆபிராமும் லோத்தும் ஒன்றாக வசித்து, மேய்ச்சலுக்கு வசதியான பூமியைக் கண்டுபிடிப்பது வருத்தமாயிருந்தது. என்றாலும் தேசத்தில் குடிகள் நெருங்கி வசியாததால், அவர்களிருவரும் பிரிந்து வெவ்வேறே இடங்களில் குடியிருக்க ஏதுவுண்டானது.

"**அத்தேசத்தில் குடியிருந்தார்கள்.**" 12: 6. வியாக்கியானம் பார்க்க.

**8.** "**வாக்குவாதம் வேண்டாம்.**" லோத்து தன் மேய்ப்பர்களுடன் சேர்ந்து தனக்கு நஷ்டம் உண்டாக்கப்பட்டதாக எண்ணினான். ஆபிராம் மிகுந்த உதாரமாய் அன்பான எண்ணத்தோடே சமாதானத்தைக் கருதி, லோத்தைப் பார்த்துத் தங்களிருவருக்கும் சம்பத்து மிகத் திரளாயிருந்ததால் தாங்கள் பிரிந்திருப்பது உத்தமமென்று காட்டி, லோத்து முதலாவதாக ஒரு இடத்தைத் தெரிந்துகொள்ளச் சொன்னான்.

"**நாம் சகோதரர்.**" நெருங்கின இனத்தார். சகோதர சிநேகமாயிருக்க வேண்டியவர்கள்.

**10.** "**லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து, ௸.**" லோத்து பெத்தேலுக்குக் கிழக்கேயிருக்கிற மலையில் குடியிருந்ததால், அவன் அந்த மலைச்சாரலிலிருந்து, யோர்தானுக்கருகே சமீபமாகிய கிக்கார் என்ற இடம் நீர்வளம் பொருந்தியதென்று கண்டு, அதைத் தெரிந்துகொண்டான். லோத்து கொஞ்சக்காலத்துக்குமுன் எகிப்துக்குப் போய் நீல்நதியினால் அத்தேசம் வளம் பொருந்தியதென்றும், பஞ்சம் காக்கத்தக்க தேசம் என்றும், அறிந்ததினால்,

பார்த்து: யோர்தான் நதிக்கு [1]அருகான சமபூமி முழு — [1] ஆதி. 19. 17, 29; 25: 2. 10. ஏசா. 51. 3.
வதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான்.
கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்
குமுன்னே, சோவாருக்குப் போம் வழிமட்டும் அது
கர்த்தருடைய *தோட்டத்தைப்போலவும் எகிப்துதே — * ஏதேன்.
11 சத்தைப்போலவும் இருந்தது.—அப்பொழுது லோத்
து யோர்தானுக்கு அருகான சமபூமி முழுவதையும்

யோர்தான் நதிக்கடுத்த திசையிலுள்ள ஜனங்களின் குணத்தைப்பற்றி எண்ணமில்லாமல் தன்னையுமுள்ளவனாய்ப் பொருளாசையினால் ஏவப்பட்டு, அதைத் தெரிந்துகொண்டான். தன் சிறிய தகப்பனாகிய ஆபிராமை முந்தித் தெரிந்து கொள்ளும்படி அவன் இடங்கொடுக்கவேண்டியதாயிருக்க, அப்படிச் செய்யாமல் தனது சுயப்பிரயோஜனத்தைமாத்திரம் கருதினான்; பொருளாசை கேடாய் முடியும் என்பதை லோத்து சிந்தித்தும் உணராதிருந்தான்.

**"யோர்தான் நதி."** யோர், ஊற்று; தாண், அதின் உற்பத்திக்குச் சமீபமான ஒரு பட்டணம். இந்த வார்த்தைகளிலிருந்து யோர்தான் என்ற பேரைப் பெற்றதென்று சிலரும், யோர் என்றும், தாண் என்றும் பேருள்ள இரண்டு சிற்றாறுகளின் நாமத்தினால் அது அப்படி அழைக்கப்பட்டது என்று சிலரும்; யாரட் இறங்குதல், அதாவது அது அருவியில் விழுந்து விரைவாய் ஓடுவதால் யார் என்ற வார்த்தையிலிருந்து யோர்தான் என்று பேர்வந்ததென்றும் வேறு சிலரும் சொல்லுவார்கள். எபிரெய வார்த்தை யாரடேன் அதாவது யோர்தான் யாரட் என்ற பதத்தினின்று வந்ததென்று நினைக்கிறது இயல்பு.

**"சோவார்."** சிலர் இந்தப் பாகத்தைக் "கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்குமுன்னே, அது கர்த்தருடைய தோட்டம்போலவும், எகிப்துக்குப் போம் வழியில் சோவார்மட்டுமுள்ள எகிப்தைப்போலவும் இருந்தது" என்று திருப்புவார்கள். இந்தத் திருப்புதல் சரியென்றில், சோவார் எகிப்துக்குப் போகிறவழியில் இல்லை என்றும், சமபூமியாகிய சிக்காரின் ஐந்து பட்டணங்களில் சோவார் பரதீசைப்போலிருந்ததில்லை என்றும் ஆட்சேபித்து, சிரிய திருப்புதலில் காட்டியிருக்கிறபடி "சோவான்" என்றிருக்கவேண்டும் என்றும் சாதிப்பார்கள். சோவான், எகிப்தியரால் சோர் என்றழைக்கப்பட்டதுமுண்டு; அது செழிப்புள்ள பூமி. சோவான்வெளி என்று சங்கீதத்தில் சொல்லப்பட்டிருப்பது அதுவே (சங். 78: 12.). லோத்து எகிப்துக்குப் போனபோது அதைக் கண்டிருக்கவேண்டும்.

சிலர் இவ்வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியே சோவார்வரைக்கும் சமபூமி செழிப்புள்ளதாயிருந்தது என்பார்கள். சோவார் பூர்வத்தில் பேலாவென்று அழைக்கப்பட்டது.

**"கர்த்தருடைய தோட்டம்."** அதாவது ஏதேன் தோட்டம். அது ஒரு நதியால் நீர்ப்பாய்ச்சப்பட்டது.

**"எகிப்து தேசத்தைப்போலவும்."** எகிப்து நீல்நதியினால் செழிப்பாக்கப்பட்டது. நீல்நதியிலிருந்து கால்வாய்கள் வெட்டப்பட்டுத், தண்ணீர் குளங்களுக்குக் கொண்டுபோகப்பட்டு, நன்செய்ப்பயிர் செய்யப்பட்டுவந்தது.





தெரிந்துகொண்டு, கிழக்கே [1]பிரயாணப்பட்டுப்போ
னான்; இப்படி அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் — [1] நீதி. 27. 10.
12 பிரிந்தார்கள்.—ஆபிராம் கானான் தேசத்தில் குடியிருந்
தான்; லோத்து [2]அந்த யோர்தானுக்கு அருகான சம — [2] ஆதி. 19. 29; 14. 2. 2பே. 2. 7, 8.
பூமியிலுள்ள பட்டணங்களில் வாசம்பண்ணி, சோ
13 தோமுக்கு நேரே கூடாரம் போட்டான்.—சோதோ
மின் [3]ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன் — [3] ஆதி. 18. 20. எசே. 16. 49.
பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்.
14 லோத்து ஆபிராமைவிட்டுப் [4]பிரிந்தபின்பு, கர்த்தர் — [4] தப. 7. 5.
ஆபிராமை நோக்கி: உன் கண்களை ஏறெடுத்து, நீ இரு
க்கிற இடத்திலிருந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்
15 கேயும், மேற்கேயும் நோக்கிப்பார்.—நீ பார்க்கிற இந்
தப் பூமி முழுவதையும் நான் [5]உனக்கும் உன் சந்த — [5] ஆதி. 12. 7.

**12. "சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான்."** லோத்து திடீரெனப் பட்டணத்துக்குட் பிரவேசியாமல், காலஞ்செல்லச் சோதோமியரோடே பழகிக், கடைசியில் அவர்கள் நடுவில் குடியேறினான். சாத்தான் தேவனுடைய பிள்ளைகளை ஒருமிக்கக் கெடுப்பது கூடாதெனக் கண்டு, மெதுவாய் அவர்களுக்குத் தோன்றாத பிரகாரமாய் அவர்களைக் கெடுக்கும்படி பார்ப்பது அவனுடைய தந்திரமான வழிவகையாயிருக்கிறது. (13: 10, 12; 14: 12; 19: 3.)

**13. "கர்த்தருக்குமுன்பாக மகா பாவிகளாயிருந்தார்கள்."** கானானியர் முதலாவது, சோதோம், கொமோரா, அத்மா, செபோயீம் என்ற இடங்களில் குடியேறினதாக வாசிக்கிறோம் (ஆதி. 10: 19.). அந்த இடங்களின் செழுமையினாலும், ஆகாயத்தன்மையினாலும் அவர்கள் சாங்கோபாங்கமாயிருந்து, தங்களுக்குக் காமநோய் பற்றும்படி ஏதாரம் பண்ணிக்கொண்டார்கள். இதோடே தீர்க்கதரிசி பிற்காலத்தில் எழுதினபடி கர்வமும் நிர்விசாரமுமாய் இருந்தார்கள். (எசே. 16: 49.)

**14. "கர்த்தர் ஆபிராமைநோக்கி."** ஆபிராம் தன் இனத்தானாகிய லோத்துவைவிட்டுப் பிரிந்ததினால், அதிகத் துக்கமாயிருந்திருக்கவேண்டும். ஒருவேளை அவனை தன் ஆஸ்தி முழுமைக்கும் சுதந்தரனாக்கும்படியான யோசனையும் இருக்கலாம். ஆறுதலற்ற இந்தத் தருணத்தில், தேவன் அவனுக்குத் தரிசனமாகி, லோத்து தெரிந்துகொள்ளும்படி தான் இடங்கொடுத்த தேசத்தை எல்லாம் தனக்கும் தன் சந்ததிக்கும் கொடுப்பதாய் வாக்குத்தத்தம் அருளினதைக் கேட்டுத் தேறுதலுள்ளவனானான். லோத்து பின்வாங்கித் தளர்ந்துபோகையில், ஆபிராம் மேன்மேலும் கர்த்தரண்டை நெருங்கினான். கர்த்தரும் தம்முடைய வாக்குத்தத்தங்களை அவனுக்குப் புதுப்பித்துவந்தார்.

**15. "உனக்கும்."** ஆபிரகாமுக்குச் சொந்தமாக ஒரு அடி நிலமாகிலும் கானானில் இல்லாதிருந்தும், அதைச் சொந்தம்போல அநுபோகம் பண்ணிவந்தான். சிலர், முதலாம் உயிர்த்தெழுதலில் கிறிஸ்து இராட்சரின் ஜகஸ்திராண்டாகில், இது பூரணமாய் நிறைவேறும் என்று சொல்லுவார்கள்.

16 திக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து,—உன்
[1]சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்
ணுவேன்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமா
17 ஞல், உன் சந்ததியும் எண்ணப்படும்.—நீ எழுந்து
தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்
டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன் என்ருர்.
18 அப்பொழுது ஆபிராம் [2]கூடாரத்தைப் பெயர்த்
துக்கொண்டுபோய், எபிரோனிலிருக்கும் மம்ரேயின்
சமபூமியில் சேர்ந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்கு
ஒரு பலிபீடத்தைக் கட்டிஞன்.

[1] ஆதி. 15. 5. [illegible]. 1. 16–18. [illegible]. 11. 12.
[2] ஆதி. 14. 13: 35. 27: 37. 14.

"என்றைக்கும்." ஆபிராமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் கிறிஸ்துவில் நிறைவேறியிருப்பதைப் பார்த்தால், அவருக்கு பூமியின் எல்லைகள் பரியந்தம் சொந்தமாக அளிக்கப்பட்டிருப்பதில், அது என்றைக்கும் நிலைபெறுவதாயிருக்கிறது.

**17.** "நடந்து திரி." மேய்ப்பர்கள், கால்நடைகளின் மேய்ச்சலுக்காகத் திரும்பத் திரும்பப் பற்பல இடங்களுக்குப் போவது அவசியமாயும் இன்பமாயுமிருக்கும். ஆபிராம் செழிப்பான இடங்களைப் பார்க்கும்போதெல்லாம், தன் சந்ததியார் அவைகளைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்ற திர்ப்தியுள்ளவனுயிருந்திருப்பான். (எபி. 11: 13.)

**18.** "எபிரோன்." அது உலகத்திலுள்ள மிகப் பூர்வீக பட்டணங்களில் ஒன்று; அது எருசலேமுக்கு 20 மைலுக்குத் தெற்கும், பெயெர்செபாவுக்கு 20 மைலுக்கு வடக்குமாயிருக்கிறது. ஆபிரகாம், ஈசாக்கு, சாராள் அதற்குச் சமீபமான மக்பேலா என்ற கெபியில் அடக்கம்பண்ணப்பட்டார்கள். எபிரோன் என்பதற்குச் சம்பந்தம் அல்லது உறவு என்றர்த்தம். எமோரியருக்கும் ஆபிராமுக்கும் உண்டான உடம்படிக்கைச் சம்பந்தத்தின்பேரில் இந்தப் பேர் அதற்கு இடப்பட்டிருக்கலாம். அது பிந்தியகாலத்தில் இஸ்ரவேலர் எகிப்தில் சஞ்சரித்தபோது கீரியாத் அர்பா என்று அழைக்கப்பட்டது. காலேப் அதைக் கட்டிக்கொண்டு, அதின் பழைய பேரை அதற்குத் தரித்தான். (23: 2. வியாக்கியானம் பார்க்க.)

"மம்ரேயின் சமபூமி." மம்ரேயின் கர்வாலிமரம் (அதி. 12: 6. வியாக்கியானம் பார்க்க.). மம்ரே எமோரியனுயிருந்தான். இவனுக்கும் ஆபிரகாமுக்கும் இருந்த உடம்படிக்கையின் சம்பந்தத்தினுல், ஆபிராம் மம்ரேயின் கர்வாலிமரத்தோப்பில் கூடாரம் அடித்துச் சஞ்சரித்துவந்தான். அங்கேயும் அவன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி அவரை ஆராதித்துவந்தான்.

### படிப்பினை.

(1) நாம் வேளாவேளைகளில் சோதனையான இடத்துக்கு அவசியத்தினுலே போகும்படி நேரிடும்; அவசியம் தீர்ந்தவுடனே அப்படிப்பட்ட இடத்தை விட்டு நீங்கியிருப்பது உத்தமம்.





## 14. அதிகாரம்.

1. நாலு அரசர்கள் ஐந்தரசர்களோடே யுத்தம்பண்ணினது. 12. லோத்து சிறையாக்கக் கொண்டுபோகப்பட்டது. 14. ஆபிராம அவனை இரட்சித்தது. 18. மெல்கிசேதேக்கு ஆபிராமை ஆசீர்வதித்தது. 20. ஆபிராம் அவருக்குப் பத்திலொருபாகங்கொடுத்து, 22. தன் பங்காளிகள் எடுத்துக்கொண்டதுதவிர; கொள்ளையில் அகப்பட்ட மற்றப் பொருட்களைச் சோதோமின் ராஜாவுக்கு மறுபடியும் கொடுத்துவிட்டது.

1 சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலும், ஏலா

(2) திரண்ட ஐசுவரியத்தினுல் சோதனை விளையும் என்ருலும், தேவனேடே சஞ்சரிப்பதற்கு அது தடுக்கலாயிராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்; பணத்தின்பேரில் இச்சைவைத்துத் தகாத வண்ணமாய் அதைக் குவியாமல், நியாயமானபடி தேவாசீர்வாதத்தின்பேரில் அதை திரட்டித், தகுதியானபடி அதை அனுபவித்துச் சத்பாத்திரத்தில் அதை உபயோகிக்கிறதானுல், அதிகப் பிரயோசனமாயிருக்கும். பொதுப்பட ஐசுவரியம் அதிகக் கவலையையுந் தொல்லையையும் வருவிக்கிறதுண்டு.

(3) இனத்தாருக்குள் பிரிவினையை உண்டுபண்ணுவதுமுண்டு; ஆவிக்குரிய சலாக்கியங்களை எண்ணுதபடி செய்வதுமுண்டு.

(4) ஐசுவரியம் பெருகும்போது, சாப்பிடுகிறவர்களும் பெருகுவார்கள்; அப்போது சமாதானக்குறைவு நேரிடுவதைக் காணலாம். தரித்திரர் தாங்கள் வைக்கப்பட்டிருக்கிற ஸ்திதியிலே மனரம்மியமுடையவர்களாயும், ஐசுவரியவான்கள் நிதானமும் சாவதானமுள்ளவர்களாயுமிருக்கும்படி கற்றுக்கொள்ளக்கடவர்கள்.

(5) கிறிஸ்துவுக்குள் சகோதரராயிருக்கிற நாம் சத்துருக்களால் சூழப்பட்டிருப்பதால், அந்நியோந்நியத்தை நாடிப் பொல்லாங்காய்த் தோன்றுகிற யாவுக்கும் விலகியிருப்போமாக. நமக்கு விரோதமாய் அவதூறுகள் பேசப்படாதபடிக்கு, சமாதானத்தை வேண்டி இணக்கத்துக்காக நம்முடையதை விட்டுக்கொடுப்பதும் நல்லது.

(6) தேவனுடைய உத்தமர் லௌகிக நன்மையை நாடி, விசுவாசிகளின் ஐக்கிய கூட்டத்தை விட்டுப்பிரிந்து, பொல்லாதவர்கள் குடியிருக்கும் இடங்களுக்குப் போனுல், தப்பாமல் தண்டனைக்குள்ளாவார்கள்.

(7) புறம்பாக உண்டாகும் வருத்தங்களிலே தேவன், மேலுலகத்தில் நமக்காக வைத்திருக்கும் சந்தோஷங்களை அடிக்கடி தியானிப்பது ஆறுதலாயிருக்கும்.

### 14. அதிகாரம்.

ஆபிராமின் ஜீவியத்தில் ஒரு புது விஷயம், இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. லோத்து தெரிந்துகொண்ட இடம், அவன் குடும்பவாழ்வுக்கு ஏற்றதல்ல. சோதோமைப்போன்ற ஐசுவரிய வரத்துள்ள இடங்கள் பூர்வகாலத்தில் சண்டைச் சச்சரவுள்ளவைகளாயிருந்தன. இங்கே சொல்லப்பட்டிருக்கிற யுத்தம் மிகப் பூர்வீகமாயுள்ளது. ஆபிராமின் பராக்கிரமமும் வல்லமையும் அவனுடைய உதாரகுணமும் எமோரியரோடே அவனுக்கிருந்த ஐக்கிய சம்பந்தமும், உன்னதமான தேவனை வணங்கின சேமின் புத்திரருடைய ராஜா அவனை ஆசீர்வதித்ததும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

**1.** "சிநேயார்." 10: 10. வியாக்கியானம் பார்க்க.

"அம்ராப்பேல்." இதற்கு "வருஷவட்டம்" என்றர்த்தமாம். இது கல்தேயப் பேர்.

சாரின் ராஜாவாகிய அரியோகும், ஏலாமின் ராஜாவா
கிய கெதர்லாகோமேரும், ஜாதிகளின் ராஜாவாகிய
2 திதியாலும் இருந்த நாட்களில்;—அவர்கள் சோதோ
மின் ராஜாவாகிய பேராவோடும், கொமோராவின் ரா
ஜாவாகிய பிர்சாவோடும், [1]அத்மாவின் ராஜாவாகிய [1] உபா. 29. 23.
சிநெயாவோடும், செபோயீமின் ராஜாவாகிய செமே
பரோடும், சோவார் என்னும் பேலாவின் ராஜா
3 வோடும் யுத்தம்பண்ணினார்கள்.—இவர்களெல்லாரும்
[2]உப்புக்கடலாகிய சித்தீம் பள்ளத்தாக்கிலே கூடினார் [2] உபா. 3. 17. யோசு. 3. 16.
4 கள்.—இவர்கள் பன்னிரண்டு வருஷம் கெதர்லாகோ
மேரைச் சேவித்து, பதின்மூன்றாம் வருஷத்திலே
5 கலகம்பண்ணினார்கள். — பதினாலாம் வருஷத்திலே
கெதர்லாகோமேரும், அவனோடே கூடியிருந்த ரா

“அரியோகு.” கல்தேயப்பாஷையில் இதற்குச் “சந்திர தேவதாசன்” என்றர்த்தமாம். அவன் ஏலாசாரின் ராஜன்; ஏலாசா இப்போது செங்கரெய் என்றழைக்கப்படுகிறது. அது தென் பாபிலோனியாவிலே ஐப்பிராத்து நதியின் இடதுகரையோரமாயிருக்கிறது.

“ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேர்.” ஏலாமானது, அசீரியாவுக்கும் பார்சியாவுக்கும் தெற்கிலும் கிழக்கிலுமாயிருந்தது. ஏலாமின் ராஜாக்கள் ஆசியாவிலே அநேககாலம் சிரேஷ்ட அதிகாரஞ் செலுத்திவந்தார்கள்.

“திதியால்.” இதினர்த்தம் “மகாபுத்திரன்” என்பதாம். அவன் ஜாதிகளின் ராஜா என்று சொல்லப்படுகிறான். “ஜாதிகள்” என்பது சிறப்புப்பெயராயிருக்கிறது. கல்தேயர் திகிரிஸ் நதிமுதல் மேதியாவின் கீழ் எல்லைவரைக்கும் உள்ள தேசத்தையும், பிந்தியகாலத்தில் அசீரியாநாடு என்று சொல்லப்பட்டதையும்கூடச் சேர்த்து, இந்த நாமத்தினால் அழைத்தார்கள்.

**2. “சோதோமின் ராஜாவாகிய பேராவோடும்.”** இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஐந்து ராஜாக்களும் காமனுடைய வமிசத்தார்.

**3. “உப்புக்கடல்.”** இதில் முன்னாலே ஒரு ஏரி இருந்திருக்கவேண்டும் என்பதும், சோதோம் அழிக்கப்பட்டபோது, அந்த ஏரி விரிந்து விசாலமானதென்பதும் பெரும்பான்மையோர் அபிப்பிராயம். இது கானானுக்குத் தெற்கிலிருக்கிறது; யோர்தான் நதி இதில் விழுகிறது.

**“சித்தீம் பள்ளத்தாக்கு.”** அரபியர், தற்காலத்திலும் எரிகோவின் சமபூமிக்குத் தென்புறமாயிருக்கிற செங்குத்தான குன்றை, சித் என்று அழைக்கிறார்கள்.

**4. “கெதர்லாகோமேரைச் சேவித்து.”** வருஷந்தோறும் அவனுக்குக் கப்பங் கட்டி வந்தார்கள்.





ஜாக்களும் வந்து, அஸ்தரோத்கர்னாயீமிலே இருந்த
ரெப்பாயீமியரையும், காமிலே இருந்த சூசிமியரை
யும், [1]சாவேகீரியத்தாயீமிலே இருந்த ஏமியரையும்,— [1] யோசு. 12. 4.
6 சேயீர் மலைகளில் இருந்த [2]ஓரியரையும், வனாந்தரத் [2] உபா. 2. 12, 22.
துக்கு அருகான எல்பாரான்மட்டும் முறியடித்து, —
7 திரும்பிக் காதேஸ் என்னும் என்மிஸ்பாத்துக்கு வந்து,

**5. “அஸ்தரோத் கர்னாயீம்”** என்பதற்கு இரண்டு கொம்புகளையுடைய அஸ்தரோத் என்றர்த்தம். அது ஓக் என்பவனுடைய பிரதான பட்டணம் (உபா: 1: 3.). அது யோர்தானுக்குக் கிழக்கேயிருக்கிற மனாசே பாதிக் கோத்திரத்திலிருந்தது.

**“ரெப்பாயீமியர்.”** அவர்கள் இராட்சதர் (ஆமோ. 2: 9.). அவர்கள் பாஷானில் குடியிருந்தார்கள். மோசே அவர்களை ஜெயித்து அவர்கள் தேசத்தைக் கட்டிக்கொண்டான் (யோசு. 13: 12.). அவர்கள் எருசலேமுக்கு மேல் பக்கத்தில் (யோசு. 15: 8; 18: 16.), எப்பிராயீம் மலையிலும் (யோசு. 17: 15.), பெலிஸ்தியர் நடுவிலும் (2 சாமு. 21: 16, 18.) குடியிருந்தார்கள். அவர்கள் கானானின் பூர்வகுடிகளெனத் தோன்றுகிறது. அவர்கள் அஸ்தரோத் என்ற விக்கிரகத்தை வணங்கிவந்தார்கள்.

**“காம்.”** சவக்கடலின் தென்பாகத்துக்குக் கிழக்கே ஏழு மைலுக்கப்பாலிருக்கிற ஹமிதாத் இந்த இடம் என்று சொல்லப்படுகிறது.

**“சூசிமியர்.”** இவர்கள் உபா. 2: 20ல் சம்சூமியர் என்றழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ரெப்பாவியரில் ஒரு தாழ்ந்த வகுப்பாராயிருக்கலாம்.

**“சாவே கீரியத்தாயீம்.”** கீரியத்தாயீம் சமபூமியிலிருந்திருக்கலாம் (எண். 32: 37.). அது ரூபேனியருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டது. இஸ்ரவேலர் சிறைகளாக்கப்பட்ட பின்பு மோவாபியர் அதைத் திரும்பவும் கட்டிக்கொண்டார்கள் (எரே. 48: 1.). மோவாபியர் அதைப் பூர்வீகத்தில் ஏமியரிடத்திலிருந்து பிடுங்கியிருந்தார்கள்.

**“ஏமியர்.”** பிற்காலத்தில் மோவாபியர் கட்டிக்கொண்ட இடத்தில் குடியிருந்தார்கள். அவர்கள் மிகவும் நெட்டையராயிருந்தார்கள். (உபா. 2: 10, 11.)

**6. “சேயீர் மலைகள்.”** சவக்கடலுக்கும் சிவந்த சமுத்திரத்தின் கிழக்குடாவுக்கும் இடையிலிருந்தது.

**“ஓரியர்.”** சேயீர்மலை பூர்வ குடிகளாம். அவர்கள் பிற்காலத்தில் ஏதோமியரால் ஜெயிக்கப்பட்டார்கள். (உபா. 2: 12, 22.)

**“வனாந்தரம்.”** பலஸ்தீனாவுக்குத் தெற்கும் இதுமேயாவுக்குத் தென்மேற்குமாயிருந்தது. அதிலிருந்து சீனாய்க்குப் போய்ச் சேர மூன்றுநாள் செல்லும், அதற்குப் பாரான் வனாந்தரம் எனப் பெயர்.

**“எல்பாரான்”** என்பதற்குக் “கருவாலி மரக்காடு” என்றர்த்தமாம்.

**7. “என்மிஸ்பாத்து.”** “நீதியின் ஊற்று.” அத்தேசத்துப் பூர்வ குடிகள் அந்த இடத்தில் கூடித் தங்கள் தகராறுகள் மனஸ்தாபங்களைத் தீர்த்துக்கொண்டதால் அந்தப் பேருண்டாயிருக்கலாம்; அதற்கு மறுபேர் காதேஸ்.

அமலேக்கியருடைய நாடனைத்தையும், அத்சாத்
சோன் தாமாரிலே குடியிருந்த எமோரியரையும்
கூடச் சங்கரித்தார்கள்.
8 அப்பொழுது சோதோமின் ராஜாவும், கொமோரா
வின் ராஜாவும், அத்மாவின் ராஜாவும், செபோயீமின்
ராஜாவும், சோவார் என்னும் பேலாவின் ராஜாவும்
9 புறப்பட்டுச் சித்தீம் பள்ளத்தாக்கிலே,—ஏலாமின்
ராஜாவாகிய கெதர்லாகோமேரோடும், ஜாதிகளின் ரா
ஜாவாகிய திதியாலோடும், சிநெயாரின் ராஜாவாகிய
அம்ராப்பேலோடும், ஏலாசாரின் ராஜாவாகிய அரி
யோகோடும் யுத்தம்பண்ணப் புறப்பட்டு, அந்த ஐந்து
ராஜாக்களோடும் இந்த நாலு ராஜாக்களும் யுத்தம்பண்
10 ணினார்கள்.—அந்தச் சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும்
[1]நிலக்கீல் உண்டாகும் கேணிகள் இருந்தது. சோ
தோம் கொமோராவின் ராஜாக்கள் முறிந்தோடி அங்
கே விழுந்தார்கள்; மீந்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்

[1] ஆதி. 11. 3: 19. 17, 30.

"அமலேக்கியர்." இங்கே காட்டப்பட்டிருக்கிற அமலேக்கியர் ஏசாவின் மறுமனையாட்டியால் பிறந்த அமலேக்கின் சந்ததியாருக்கு 200 வருஷங்களுக்கு முன்னிருந்ததாலும், பிலேயாம் அமலேக்கு ஜாதிகளில் முந்தி எழும்பினவனென்று சொல்லியிருப்பதாலும், அரபியருக்குள்ளே பாரம்பரியமாய்ச் சொல்லப்பட்டிருந்தபடியே அவர்கள் காமின் சந்ததியார் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வேறே பேர் ஐந்தாம் ஆறும் வாக்கியங்களில் கெதர்லாகோமேர் அழித்த சில ஜாதியாரின் பேர்களைக் காட்டி இந்த வாக்கியத்தில் அமலேக்கியரை அழித்தான் என்று சொல்லாமல், அமலேக்கின் நாடனைத்தையும் அழித்தான் என்று சொல்லியிருக்கிறது. ஆதலால் பிந்தியகாலத்தில் அமலேக்கு நாடென்று அழைக்கப்பட்ட இடத்தில் குடியிருந்த சாதியாரை அழித்தான் என்று அறியவேண்டியது என்றும், வேதத்தில் அமலேக்கியரின் உற்பத்தியைப்பற்றி வேறே யாதொன்றும் சொல்லாததால் அவர்கள் ஏசாவின் சந்ததியாராயிருக்க வேண்டும் என்றும் பிலேயாம் சொன்ன வசனத்தை "இஸ்ரவேலருக்கு விரோதமாயெழும்பின ஜாதிகளில் அமலேக்கியரே முந்தினவர்கள்" என்றும் வியாக்கியானப்படுத்துகிறார்கள்.

"அத்சாத்சோன் தாமார்." "பனையை விழுத்துதல்." அதற்கு வேறே பேர் என்கேதி (2 நாளா. 20: 2.). அது யூதேயாவின் வனாந்தரத்தில் சவக்கடலுக்கு மேற்கேயிருந்தது.

**10.** **"சித்தீம் பள்ளத்தாக்கு எங்கும் நிலக்கீல் உண்டாகும் கேணிகள் இருந்தது."** தோல்வியடையும் பாகத்துக்கு இது மிகவும் மோசமாயிருக்கும்.





11 போனார்கள்.—அப்பொழுது அவர்கள் சோதோமிலும்
கொமோராவிலுமுள்ள பொருள்கள் எல்லாவற்றை
யும், போசனபதார்த்தங்கள் எல்லாவற்றையும் எடுத்
12 துக்கொண்டு போய்விட்டார்கள்.—ஆபிராமின் [1]சகோ
தரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடி
யிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும்
கொண்டுபோய்விட்டார்கள்.
13 தப்பியோடின ஒருவன் எபிரெயனாகிய ஆபிராமிடத்
தில் வந்து அதை அறிவித்தான்; ஆபிராம் தன்னோடே
உடன்படிக்கை செய்திருந்த மனிதராகிய எஸ்கோ
லுக்கும் ஆநேருக்கும் சகோதரனாகிய [2]மம்ரே என்
னும் எமோரியனுடைய சமபூமியிலே அப்பொழுது
14 குடியிருந்தான்.—தன் [3]சகோதரன் சிறையாகக் கொ
ண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேள்விப்பட்டபோ

[1] ஆதி. 12. 5: 13. 12.
[2] ஆதி. 13. 18.
[3] ஆதி. 15. 3. பா. 2. 7.

ஐந்து அரசர்களும் தங்கள் சத்துருக்களான நாலு அரசர்களின் சேனைகளை நிலக்கீல் கேணிகளில் விழத்தட்டலாம் என்று எண்ணங்கொண்டு அந்த இடத்தைப் போருக்குத் தெரிந்துகொண்டார்கள். நிலக்கீல் இப்போதும் சவக்கடலுக்கு மேல்பக்கத்தில் இருக்கிறது. நிலக்கீலால் உப்புக்கடலுக்கு நிலக்கீல் கடல் என்றும் பேருண்டாயிற்று.

**12.** **"லோத்து."** அவன் ஐசுவரியத்தைப் பெருகப்பண்ணலாம் என்று யோசித்த இடத்தில் தரித்திரத்தையும் சிறையிருப்பையும் காணும்படி நேரிட்டது.

**13.** **"தப்பியோடின ஒருவன்."** சோதோம் உப்புக்கடலின் வடமேற்கிலிருந்ததால் ஆபிராம் குடியிருந்த இடத்தில் இயற்கையாய் அடைக்கலம் தேடக்கூடியது. தப்பியோடினவர்களில் சோதோமின் ராஜாவும் ஒருவன்: (17 வாக்கியம் பார்க்க.)

**"எபிரெயனாகிய ஆபிராம்."** ஆபிராம் ஏபேருடைய சந்ததியானனதாலும் அவன் ஐப்பிராத்து நதிக்கு அப்பாலிருந்து வந்ததாலும் எபிரெயன் என்கிற பேர் அவனுக்கு வந்திருக்கவேண்டியது. மேலும் லோத்து சிறைப்பட்டுப்போன செய்தியை ஆபிராமிடத்தில் கொண்டுவந்தவன் சுதேசியாயிருக்கலாம். அப்படியானால் அவன் பார்வையில் ஆபிராம் அந்நியனாக எண்ணப்படுவான். அதோடே ஆபிராம் எபிரெயன் என்றபேரால் கானான் குடிகளுக்குள் வழங்கப்பட்டிருக்கலாம். யோசேப்பு எகிப்தில் அந்நியனாயிருந்ததால் எபிரெயன் என்று அழைக்கப்பட்டான். (ஆதி. 39: 14.)

**"மம்ரே என்னும்.........சமபூமி."** (13: 18. வியாக்கியானம் பார்க்க.) சமபூமி என்பது கர்வாலி மரத்தோப்பைக் குறிக்கும்.

து, அவன் தன் வீட்டிலே பிறந்த கைபடிந்தவர்களா
கிய முந்நூற்றுப் பதினெட்டு ஆட்களுக்கும் ஆயுதம்
தரிப்பித்து, தாண் என்னும் ஊர்மட்டும் அவர்களைத்
15 தொடர்ந்து,— இராக்காலத்திலே அவனும் அவன்
வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்
மேல் விழுந்து, அவர்களை [1]முறியடித்து, தமஸ்கு
16 வுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தி,—சகல
பொருள்களையும் [2]திருப்பிக்கொண்டு வந்தான்; தன்
சகோதரனாகிய லோத்தையும், அவனுடைய பொருள்
களையும், ஸ்திரீகளையும், ஜனங்களையும் திருப்பிக்
கொண்டுவந்தான்.

[1] சங். 41. 2, 3.

[2] 11, 12 வசனங்கள்.

**14. "கைபடிந்தவர்களாகிய......ஆட்களுக்கும் ஆயுதம் தரிப்பித்து."** மனிதருடைய தீமையான குணத்தினால் பொதுப்பட யுத்தங்கள் உண்டாகிறது. பழிவாங்கும் எண்ணம், பொருளாசை, பேராசை முதலியவற்றால் வசப்பட்டு மனிதர் போர் புரிவதுண்டு. ஆனால் ஆபிராம் செய்த யுத்தம் நியாயமானது. அநியாயமாய் ஒடுக்கப்பட்ட பெலவீனருக்குச் சகாயமுண்டாக அதை நடப்பித்தான்.

அமலேக்கியர் சூறையாடும் ஜாதியாராயிருந்ததால் அவர்களால் தன் ஆடுமாடுகள் கொள்ளை போகாதபடிக்கு ஆபிராம் தன் வேலைக்காரரை அக்காலத்துக்குரிய யுத்தாப்பியாசத்தில் பழக்கியிருந்தான்.

**"தாண்."** இஸ்ரவேலில் தாண் என்ற பெயரால் ஒரு பட்டணமுண்டு. இவ்வசனம் அதைக்குறிக்கும் என்று சிலர் சொல்லுவார்கள் (உபா. 34: 1.). ஆனால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற தாண், யோர்தான் உற்பத்தியாகிற இடத்திலுள்ள லாகீசாகிய தாணைக்குறிக்கும் என்பது பெரும்பான்மையோர் அபிப்பிராயம்.

மேலும் யோர்தானின் ஊற்றுக்குத் தாண் என்று பேர் இருந்திருக்கவேண்டும் என்றும், அதற்குச் சமீபமான ஊருக்கு லாகீசு என்ற பெயரிருந்ததென்றும் தாண் புத்திரர் லாகீசைப் பிடித்தபின்பு அந்த ஊற்றின் பேரையே அந்தப் பட்டணத்துக்குத் தரித்தார்கள் என்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரனும் தாண் என்பது யோர்தானின் உற்பத்தியிலிருக்கிற பட்டணத்தைக் குறிக்கும் என்று எழுதியிருக்கிறான்.

**15. "பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து."** நாலு ராஜாக்களும் ஜெயசம்பீரமாய் மோசமில்லை என்று எண்ணிக்கொண்டிருக்கையில் ஆபிராம் இராக்காலத்திலே திடீரென அவர்கள்மேல் தன் சேனையோடு பாய்ந்து அவர்களை முறியடித்து அவர்கள் பாளயங்களைக் கவிழ்த்துக் கொள்ளைப் பொருளையும் சிறைகளையும் திரும்ப மீட்டுக்கொண்டான்.

**"ஓபா."** தமஸ்குவுக்கு வடக்கேயிருந்தது. மலைச்சார்பு ஓபாவில் முடிந்து அதிலிருந்து தமஸ்குவின் சமபூமி தொடங்கினதால் சத்துருக்களை அதற்கப்பால் துரத்துவதில் பிரயோசனமில்லை.





17 அவன் கெதர்லாகோமேரையும், அவனோடிருந்த
ராஜாக்களையும் முறியடித்துத் திரும்பிவருகிறபோது,
சோதோமின் ராஜா புறப்பட்டு, ராஜாவின் பள்ளத்
தாக்கு என்னும் சாவே பள்ளத்தாக்குமட்டும் அவ
18 னுக்கு [1]எதிர்கொண்டுபோனான்.— அன்றியும், உன்
னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலே

[1] 1 சாமு. 18. 6, 18.

**17. "சாவே பள்ளத்தாக்கு."** இதற்கு வேறே பேர் என்னவென்றால் ராஜாவின் பள்ளத்தாக்கு என்பதே. பிற்காலத்தில் அப்சலோம் தன் ஜீவகாலத்தில் தன் பேரை நிலைநிறுத்தும் நோக்கமாய் அதில் ஒரு ஸ்தம்பத்தை நிறுத்தினான் (2 சாமு. 18: 18.). அது எருசலேமுக்கு வடக்கே இரண்டு ஸ்தாதி வழி தூரத்தில் கீதரோன் பள்ளத்தாக்கிலிருந்தது. சாலேமின் ராஜாவும், சோதோமின் ராஜாவும் வெற்றி சிறந்து திரும்பின ஆபிராமை அந்த இடத்தில் சந்தித்தபடியினால் ஒருவேளை ராஜாவின் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஒன்கலாஸ் என்ற யூதன் பிந்தியகாலத்தில் யூதராஜாக்கள் அந்த இடத்தில் தங்கள் சேனைகளுக்கு யுத்தாப்பியாசஞ் செய்து படிப்பித்ததால் அந்தப் பேர் உண்டானது என்று சொல்லியிருக்கிறான்.

**18. "உன்னதமான தேவன்."** எபிரெயுவில் "எல் எலியோன்" என்றிருக்கிறது. சிரேஷ்ட அதிகாரமுள்ளவராய்ச் சகலத்தையும் ஆண்டு, சகலரையும் அடக்கி நடத்துகிறவர். அவர் வாசஸ்தலம் உன்னதமானது. அவர் ஆசனம் பரலோகத்திலிருக்கிறது என்பதே அந்நாமத்தின் தாற்பரியம் (ஏசா. 57: 15. சங். 83: 17. எபி. 1: 3.). புறஜாதியாரின் ராஜாக்களும் தேவனைப் பரலோகத்தின் தேவன் என்று அழைத்தார்கள். (எஸ்ரா. 1: 2.)

**"ஆசாரியன்."** ஆசாரியன் என்ற பதம் இந்த இடத்தில்தான் முதலாவதாக வருகிறது. இந்தப் பேர் லேவியருடைய ஆசாரிய முறைமைக்கும், புறமதஸ்தருடைய ஆசாரிய முறைமைக்கும் வழங்கப்பட்டது. முற்பிதாக்களுக்குள் குடும்பத்தலைவன் ஆசாரிய ஊழியத்தைச் செய்துவந்தான் (ஆதி. 8: 20; 12. 8; 26: 25; 33: 20. யோபு. 1: 5.). மெல்கிசேதேக்கோ விசேஷித்த வகையாய் அந்தப் பணிவிடையை நடத்திவந்தான். அவன் ஆசாரியனாய் ஆசீர்வதித்தும் தசமபாகம் முதலியவைகளை வாங்கியுமிருக்கிறான்.

**"சாலேமின் ராஜா."** எப்பிராயீம் கோத்திரத்தில் சிதாப்போலிக்குச் சமீபமாய்ச் சாலேம் என்ற ஒரு பட்டணமுண்டு. அதற்குச் சமீபமாய் யோவான் ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்தான் (யோவா. 3: 23.). அதற்குச் சாலீம் என்று பேரிடப்பட்டிருக்கிறது. அங்கே மெல்கிசேதேக்கின் அரமனை அழிந்துகிடந்ததாக எரோம் என்பவன் சொல்லியிருக்கிறான். ஆனால் அதை நம்ப ஏதுவில்லை. சாலேம் என்பது எருசலேமையே குறிக்கும் (சங். 76: 2.). அது ஆபிராம் யுத்தத்திலிருந்து தன் கூடாரத்துக்குத் திரும்பும் பாதையில் இருந்தது. எபூசியர் அந்தப் பட்டணத்தைப் பிடித்து அதற்கு எபூசு என்று பேர் கொடுத்துத் தாவீதுராஜாவின் காலம்வரைக்கும் அதில் ஆண்டுவந்தார்கள். தாவீது அதைக் கட்டிக்கொண்டு அதின் பழையபேரோடே உபசர்க்கம் சேர்த்து எருசலேம் என்று அழைத்தான்.

மின் ராஜாவாகிய *மெல்கிசேதேக்கு அப்பமும்
19 திராட்சரசமும் கொண்டுவந்து, — அவனை ஆசீர்
வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவரா

* நீதியின் ராஜா. சங். 110. 4. எபி. 5. 6. 7. 1. 3, 11. மீக. 6. 6. அப். 16. 17.

"மெல்கிசேதேக்கு" என்பது பார்வோன் என்பதைப்போலப் பட்டப் பேர் என்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் எபிரெயப் பெயரின் தன்மையைக் கவனிக்கையில் அது சிறப்புப் பெயராயிருக்கிறது. அபிமெலேக், அதோனிசேதேக் என்ற பெயர்களுக்கு அது ஒத்திருக்கிறது.

எருசலேம் தர்கூம் என்னப்பட்ட ஆகமத்தில் மெல்கிசேதேக்கைச் சேம் என்று சொல்லியிருக்கிறது. சேமின் வயதைக் கவனிக்கையில், அவன் ஈசாக்கின் காலம்வரையும் இருந்ததாக யூதர் சொல்லுகிறதுண்டு. ஆனால் அவர்கள் சொல்லுகிறது எபி. 7: 3க்கு விரோதமாயிருக்கிறது.

மெல்கிசேதேக் என்பவன் சேமின் சந்ததியான் என்று அவன்பேரினாலும், பட்டத்தினாலும் தெரிகிறது. சேமின் புத்திரர் கானானியருக்கு முந்திப் பலஸ்தீனாவில் குடியிருந்தார்கள். மெல்கிசேதேக் யோபு என்பவனைப் போல உன்னதமான மெய்த்தேவனை ஆராதித்துவந்தான். அவன் பேர் பழைய ஏற்பாட்டில் (சங். 110: 4.) வருகிறது. அப்போஸ்தலன் அவன் தேவகுமாரனுக்கு முன்னடையாளமானவன் என்று சொல்லியிருக்கிறான் (எபி. 5–7. அதி.). எப்படியும் மெல்கிசேதேக் என்பது உவமான உருவகப் பெயர் என்று நாம் எண்ணாமல், அக்காலத்தில் உள்ளபடி இருந்த ஓர் ஆள் என்று எண்ணவேண்டும். அவன் இன்னானென்று நாம் அறிய அவசியமில்லாமையால் தேவன் அதைப்பற்றி நமக்கு அறிவிக்கவில்லையென்று நம்பி ஆக்ஷேபனைகளை ஒழித்துத் தேவ சத்தியங்களை ஒப்புக்கொள்வோமாக.

மெல்கிசேதேக்கிற்கும் கிறிஸ்துவுக்கும் உரிய விசேஷித்த சம்பந்தம். 1. அவன் லேவியரின் ஆசாரிய முறைமையைச் சேர்ந்தவனல்ல. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கு முந்திப் பொதுவான ஆசாரியனாயிருந்தான். 2. அவன் ஆபிரகாமுக்கு மேற்பட்டவனாயிருந்து அவனை ஆசீர்வதித்து அவனிடத்தில் தசமபாகம் வாங்கினான். 3. அவன் ஆசாரியனும் ராஜாவுமாயிருந்தான். 4. அவன் ஆசாரியத்துவத்துக்காவது, அவன் ஜீவனுக்காவது துவக்கமும், முடிவும் சொல்லப்படவில்லை. 5. நீதியின் ராஜா சமாதானத்தின் ராஜா என்ற நாமங்களில் விசேஷித்த வகையாய் அவன் தேவகுமாரனுக்கு முன்னடையாளமானவன். அவன் அப்பமும், திராட்சரசமும் கொண்டுவந்ததைக்குறித்து அப்போஸ்தலன் எடுத்துக் காட்டுகிறதில்லை. என்றாலும் பூர்வ சபைப் பிதாக்கள் அவைகளைக் கிறிஸ்து இரட்சகர் ஏற்படுத்தின நற்கருணைப் பொருள்களுக்குச் சம்பந்தப்படுத்தி எழுதியிருக்கிறார்கள்.

"அப்பமும் திராட்சரசமும்." இளைத்துப்போன ஆபிராமின் யுத்தவீரரை இளைப்பாற்றும்படி கொண்டுவரப்பட்டது.

**19.** "அவனை ஆசீர்வதித்து." ஆபிராம் இதற்கு முன்னமே ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருந்தான் (ஆதி. 12: 2, 3.). அந்த ஆசீர்வாதம் திரும்பவும் தேவனுடைய மனுஷனால் உறுதிப்படுத்தப்பட்டது. பிந்தியகாலத்தில் தேவனுடைய நாமத்தினால் ஜனங்களை ஆசீர்வதிக்க லேவியர் ஏற்படுத்தப்பட்டார்கள் (உபா. 10: 8.). கிறிஸ்துவானவர் உன்னதமான தேவனும், மகா ஆசாரியரா





...கிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரா
20 முக்கு உண்டாவதாக. — உன் சத்துருக்களை உன்
கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு
ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபி
ராம் எல்லாவற்றிலும் *தசமபாகம் கொடுத்தான்.
21 சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை
எனக்குத் தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்
22 ளும் என்றான். — அதற்கு, ஆபிராம் சோதோமின்
ராஜாவைப் பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கி
னேன் [1]என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்
டையாகிலும் பாதரட்சையின் வாராயாகிலும், உம
க்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்
23 துக்கொள்ளேன் என்று,—வானத்தையும் பூமியையும்
உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு

*பத்திலொருபாகம்.

[1] எஸ்தர். 9. 15, 16.

யும், மத்தியஸ்தராயும் தமது ஜனங்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கிறார். பரம சுதந்தரத்தை அவர் அருளுகையில் அந்த ஆசீர்வாதம் பூரணமாய் நிறைவேறலடையும்.

"வானத்தையும் பூமியையும் உடையவர்." சரியானபடி வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். உடையவர் என்றும் அர்த்தம் கொள்ளும்.

**20.** "உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம்." ஆசாரியன் தேவநாமத்தினால் ஜனங்களை ஆசீர்வதிப்பதும், ஜனங்கள் நாமத்தினால் தேவனை ஸ்துதிப்பதும் அவனுடைய கடமை. ஸ்தோத்திரிப்பதில் தேவனுடைய உபகாரங்களை எடுத்துக்காட்டி அவர் மகிமையைப் பிரஸ்தாபித்தல் அடங்கியிருக்கிறது.

"எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்." யுத்தத்தில் அகப்பட்ட கொள்ளைப்பொருளில் ஆபிராம் மெல்கிசேதேக்குக்குப் பத்திலொருபாகம் கொடுத்து, மெல்கிசேதேக்கின் ஆசாரிய முறைமையை அங்கீகரித்துக் கனம்பண்ணி அதால் மெல்கிசேதேக் வணங்கின தேவன் மெய்யான தேவன் என்பதை விளங்கக் காட்டினான். (எபி. 7: 4–11.)

**21.** "ஜனங்களை எனக்குத் தாரும்." மீட்டுக்கொள்ளப்பட்டவர்களில் தன்னைச் சேர்ந்தவர்களைத் தனக்குக் கொடுக்கும்படியாகவும்,

"பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும்." கொள்ளைப் பொருளான ஆடுமாடுகள் வெள்ளி பொன் முதலியவைகளை எடுத்துக்கொள்ளும்படியாகவும் ஆபிராமைச் சோதோமின் ராஜா கேட்டுக்கொண்டான்.

**23.** "கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்." பூர்வத்திலே ஆணைக்கு உறுதிச் சடங்காகக் கையை உயர்த்தும் வழக்கமுண்டு. ஆபிராம் எவ்வளவு மன உதாரத்தை இங்கே காட்டுகிறான். நியாயப்படி யுத்தத்தில் அகப்பட்ட கொள்ளைப்பொருள் யாவும் தன்னைச் சேரவேண்டியதாயிருந்தும்,

24 நேராக என் கையை *உயர்த்துகிறேன். — வாலிபர் சாப்பிட்டதுபோக, [1]என்னுடனே வந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்னும் புருஷருடைய பங்குமாத்திரமே வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுத்துக்கொள்ளட்டும் என்றான்.

* ஆணையிடுகிறேன். யாத். 6. 8. தானி. 12. 7. வெளி. 10. 5, 6, 7.
[1] 13. வசனம். 1 தீமோ. 5. 18.

சோதோமின் ராஜா தன்னைக்குறித்து ஆகாத எண்ணங் கொள்ளாதபடிக்கு அவனுடைய ஆட்கள், உடைமைகள் எல்லாவற்றையும் அவனுக்குத் திரும்பக் கொடுத்துவிட்டான். ஆனால் மெல்கிசேதேக்கு ராஜாவோடே அவன் நெருங்கிய ஐக்கியத்தைக் காட்டி அவனைக் கண்ணியப்படுத்தினான்.

**24.** **"வாலிபர்."** ஆபிராமின் வேலைக்காரரான 318 பேரைக் குறிக்கும். **"ஆநேர், எஸ்கோல், மம்ரே."** எமோரியரான இந்த மூவரும் அவர்களுடைய படையாட்களும் ஆபிராமுக்கு உதவியாக நாலு ராஜாக்களுடன் யுத்தஞ்செய்து ஜெயித்ததால் கொள்ளை யுடைமைகளில் நியமப்படி அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தை எடுத்துக்கொள்ளும்படியாக ஆபிராம் உத்தரவுபண்ணினான். வேலைக்காரன் கூலிக்குப் பாத்திரன். (1 சாமு. 30: 24, 25.)

### படிப்பினை.

#### வச. 1—16.

(1) பாவிகள்பேரில் தேவகோபம் நிலைகின்றாலும் அவர்கள் கொஞ்சக்காலம் செழிப்பாயிருப்பதுண்டு. விட்டாற்றியானது விமோசனமல்ல. செழுமையானது பொதுப்பட இருதயத்தைக் கடினப்படுத்தி, அழிவுக்கு மனிதரை முதிர்ந்தவர்களாக்குகிறது. கானான்பேரில் போடப்பட்ட சாபம் நானூறு வருஷங்களுக்குப் பின்பு நிறைவேறினது. வருங்கோபத்துக்குத் தப்பிக்கொள்ளும்படி பயத்துடனே நடக்கக்கடவோம்.

(2) பேராசை, பொருளாசை, இராச்சியத்தின்பேரிலுள்ள அவாவு மனிதர் குருரங்களை நடப்பிக்கும்படி ஏவுகின்றன. பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைவிட்டு விலகிப்போகிறதானால் ஆபத்து வந்து லபிக்கும். குற்றஞ்செய்யும் தம்முடைய பிள்ளைகளைத் தேவன் கண்டித்தாலும் அவர்களை அவர் கைவிட்டுவிடுகிறதில்லை. நாமும் நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிற சகோதரருக்கு மன்னித்து அவர்களுடைய ஆபத்தில் அவர்களுக்குச் சகாயஞ் செய்வோமாக.

(3) யுத்தங்கள் விரும்பப்படத்தக்கவைவல்ல என்றாலும் இவ்வுலகம் இருக்கிற ஸ்திதியில் ஒடுக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கு அதை நியாயமானவிதமாய் நடத்துவது அவசியம். தேவனுக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் மாம்ச புயத்தின்பேரில் நம்பிக்கை வையாமல் கர்த்தர்பேரில் சார்ந்துகொண்டு நியாயமான காரியங்களில் தங்கள் கடமையை நிறைவேற்றுவதில் சிங்கத்தைப்போல் தைரியசாலிகளாயிருக்கிறார்கள்.

(4) தேவபக்தியுள்ளவர்களுக்கு இனபந்துக்களாயிருப்பதில் பெரிய நன்மையுண்டு. அவர்களுடைய செபத்தினாலும் அவர்கள் உபயோகிக்கும் கருவியினாலும் பந்துக்களானவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள்.

#### வச. 17—24.

(5) உன்னதமானவர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார். நமக்கு இருக்கிறவைகளெல்லாம் அவருடையவைகள். ஆதலால் அவைகளில் ஒரு பாகத்தை





## 15. அதிகாரம்.

1. தேவன் ஆபிராமுக்குக் காட்சியாகித் தைரியஞ்சொன்னது. 2. ஆபிராம் புத்திரசந்தானமில்லாததினிமித்தம் அங்கலாய்த்தது. 4. தேவன் அவனுக்கு ஒரு புத்திரனையும் ஒரு பெரிய சந்ததியையும் வாக்குத்தத்தம்பண்ணினது. 6. ஆபிராம் விசுவாசத்தினால் நீதிமானாக எண்ணப்பட்டு, 7. கானான் தேசத்தைப் பெற்றுக்கொள்ள அடையாளத்துடன் வாக்குத்தத்தத்தையும், 12. தேவதரிசனையையும் அடைந்தது.

1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் [1]தரிசனத்திலே உண்டாகி,

[1] தானி. 10. 1, 12. அப். 10. 10, 11.

அவருக்கென்று பிரதிஷ்டையாக்குவது நியாயம். தசமபாகம் கொடுப்பது நியாயப்பிரமாணத்துக்கு முந்திய வழக்கம். கிறிஸ்து இரட்சகரும் அதைக் கொடுக்கும்படி கட்டளையிட்டிருக்கிறார். (மத். 23: 23.)

(6) விசேஷித்த காரியங்களில் ஆணையிடுவது குற்றமன்று; ஆனால் அதைப் பயபக்தியோடே செய்து அதின்படி நிறைவேற்றவேண்டும்.

(7) தேவபக்தியுள்ளவர்கள் தன்னயங் கருதாமல் பரோபகார சிந்தையுள்ளவர்களாயிருப்பதுடன் பொல்லாங்காய்த் தோன்றுகிறவைகளுக்கும் விலகியிருக்கவேண்டும். பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையவைகள். ஆதலால் தம்முடையவர்களுக்கு ஐசுவரியம் நன்மையாயிருக்கும் என்று கண்டால் அவைகளைக் கொடாமலிருக்கமாட்டார்.

(8) லோத்து மறுபடியும் சோதோமுக்குச் சென்றான். அவனிடத்திலிருந்த சீர்கேடு நீங்கப் பிந்தியகாலத்தில் மிகவும் கண்டிப்பான சிட்சைக்குட்பட்டான்.

(9) நம்முடைய நீதியின் ராஜாவும் சமாதானத்தின் ராஜாவுமாகிய இயேசுவை நோக்கிப் பார்ப்போமாக. அவர் ஆசாரியராய் ஆசனத்தில் வீற்றிருக்கிறார். நாம் அவருடைய சமாதான ஆளுகைக்குள் அமைந்து சத்துருக்களாகிய பாவத்துக்கும் உலகத்துக்கும் சாத்தானுக்கும் விரோதமாகப் போர் செய்வோமாக. அவர் அதரிசனமாய் நாம் செய்யும் ஒவ்வொரு போராட்டத்திலும் நமக்கு உதவிசெய்து, நாம் செயம்பெற்ற பின்பு நமக்குத் தம்மை வெளிப்படுத்தி, கிருபைகளால் ஆதரித்து அன்பின் அச்சாரத்தால் ஆசீர்வதிப்பார். கடைசியான ஜெயத்தை நாம் பெற்றபின்பு நம்மை எல்லாவற்றிலும் வெற்றி சிறந்தோராக்கி, நம்மைத் தம்மோடே ஆசனத்தில் உட்காரும்படியான கனத்தைத் தந்து, அவருடைய அன்பில் களிகூர்ந்து என்றும் அவருடன் மகிமையாகத் தங்கும்படி செய்வார்.

### 15. அதிகாரம்.

**1.** **"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு."** கெதர்லாகோமேருடைய யுத்தத்துக்குப்பின்பு.

**"கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி."** தேவன் ஆபிராமை அழைத்தபோது கொடுத்த வாக்குத்தத்தங்களையும் (ஆதி. 12: 1.), அவன் கானான்தேசத்துக்குட் பிரவேசித்தபோது கொடுத்த வாக்குத்தத்தங்களையும் (ஆதி. 12: 7.), அவர் இங்கே மறுபடியும் புதுப்பித்து அவைகளோடே கூட ஒரு குமாரனையும் கொடுப்பேன் என்று வாக்கு அருளியிருக்கிறார். "கர்த்தருடைய வார்த்தை உண்டாகி" என்ற வாசகம் இந்த இடத்தில்தான் முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ஆபிராமுக்கு அருளப்பட்ட

அவர்: ஆபிராமே, [1]நீ பயப்படாதே; நான் [2]உனக்குக்
கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கி
2 றேன் என்றார்.-அதற்கு ஆபிராம்: கர்த்தராகிய *ஆண்
டவரே, அடியேனுக்கு என்ன தருவீர்? நான் [3]பிள்
ளையில்லாமல் இருக்கிறேனே; தமஸ்கு ஊரானாகிய

1 ஆதி. 26. 24. யா. 1. ... 2 சங். 3. 3: 16. 5: 58. 11. நீதி. 11. 18. * அதோனி. 3 ஆதி. 30. 1. 1 சாமு. 1. 6. அப். 7. 5.

தரிசனம் சொப்பனத்தில் அல்ல, அவன் விழிப்புள்ளவனாயிருக்கையில் சம்பவித்தது. நட்சத்திரங்களைப் பார்க்கும்படியாக அவனை வெளியே அழைத்துக்கொண்டுபோனதையும் பின்பு அவன் பலிசெலுத்தினதையும் பார்க்கையிலும் பன்னிரண்டாம் வசனத்தில் அவனுக்கு அயர்ந்த நித்திரை உண்டானது என்று காட்டியிருப்பதைப் பார்க்கையிலும் அவன் விழிப்புள்ளவனாயிருக்கையில் இந்தத் தரிசனமுண்டானது என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. இங்கே சொல்லப்பட்ட தரிசனம் என்ற வார்த்தை (எண் 24: 4, 16.), பிலேயாமின் விஷயத்திலும் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே "சர்வவல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழ விழும்போது கண் திறக்கப்பட்டவன்" என்று சொல்லியிருக்கிறது.

"**பயப்படாதே.**" ஆபிராமுக்குத் திரண்ட ஐசுவரியமிருந்தது. அவன் அபக்தியுள்ளவர்கள் நடுவில் சஞ்சரித்துவந்தான். அதுவுமல்லாமல் ஏலாமின் இராசாவோடே யுத்தஞ்செய்தவிஷயத்தில் அவன் தனக்குச் சத்துருக்களையும் உண்டுபண்ணிக்கொண்டான். மேலும் வயதுசென்றகாலத்தில் அவனுக்கு உதவியாயிருக்கத்தக்கதாய்ப் பிள்ளையில்லாதவனுமிருந்தான். ஆதலால் தனிமையாயும், பிள்ளையில்லாதவனாயும் மோசங்களால் சூழப்பட்டவனாயுமிருந்த அவனுக்கு இயற்கையாயுண்டாகும் சோர்புக்கு இடம் நேரிடாதபடிக்குத் தேவன் ஆறுதலான வாக்கு அருளினார்.

"**உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்.**" நியாயப்படி கெதர்லாகோமேருடன் ஆபிராம் செய்த யுத்தத்தில் கிடைத்த கொள்ளைப்பொருள் ஆபிராமுக்கு உரித்தானது. ஆனால் சோதோமின் இராசாவின் நிலைமையையும் குணத்தையும் அறிந்து ஆபிராம் அந்தப் பொருள்களை மிகுந்த உதாரத்தோடே அந்த இராசனுக்குக் கொடுத்துவிட்டான். அவன் அப்படிச் செய்ததற்கான பிரதி பலனைத் தேவனால் இப்போது பெற்றுக்கொள்ளுகிறான். கர்த்தர் பரிசுத்தவான்களின் சுதந்தரமாயிருக்கிறார். (சங். 16: 5. நீதி. 11: 18.)

2. "**கர்த்தராகிய ஆண்டவரே.**" எபிரெயுவில் அதோனாய் யேகோவாவே என்றிருக்கிறது.

"**அடியேனுக்கு என்ன தருவீர்.**" கர்த்தர் நானுனக்கு மகா பலனுமாயிருக்கிறேன் என்று ஆபிராமுக்கு வாக்குரைத்தார். அந்த வாக்கு இன்னதென்பதை அறிய விருப்பமுள்ளவனாய் என்ன தருவீர் என்று கேட்டான்.

"**நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே.**" ஆபிராமுக்கு மேன்மையும் ஐசுவரியமும் இருந்தது. என்றாலும் தனக்குச் சுதந்தர பாத்தியஸ்தனான பிள்ளையில்லாததைப் பெரிய குறைவாக எண்ணி தான் இறந்தபின்பு தமஸ்கு ஊரான் தன் ஆஸ்திக்குச் சுதந்தரவாளியாயிருப்பானே என்று கவலையோடே கேட்டான்.





இந்த எலியேசர் என் வீட்டு விசாரணைக்கர்த்தனாய்
3 இருக்கிறானே என்றான்.—பின்னும் ஆபிராம்: தேவரீர்
எனக்குப் புத்திரசந்தானம் அருளவில்லை; இதோ
[1]என் வீட்டிலே பிறந்த பிள்ளை எனக்குச் சுதந்தரவா
4 ளியாய் இருக்கிறான் என்றான்.—அப்பொழுது கர்த்
தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி: இவன்
உனக்குச் சுதந்தரவாளியல்ல, [2]உன் கர்ப்பப்பிறப்பா
யிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவான் என்று
5 சொல்லி,—அவர் அவனை வெளியே அழைத்து: நீ
வானத்தை அண்ணாந்துபார், [3]நட்சத்திரங்களை எண்ண
உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று
சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்
6 வண்ணமாய் இருக்கும் என்றார்.—அவன் கர்த்தரை
[4]விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக
எண்ணினார்.

1 நீதி. 29. 21. 2 ஆதி. 17. 16. 3 உபா. 1. 10. எபி. 11. 12. எரே. 33. 22. 4 ரோ. 4. 3. ஞ. கலா. 3. 6. யாக். 2. 23. சங். 106. 31.

3. "**என் வீட்டிலே பிறந்த பிள்ளை.**" எபிரெயுவில் "என் வீட்டின் பிள்ளை" என்றிருக்கிறது. ஆபிராமின் வீட்டில் பிறந்தவர்கள் அவனுடைய வேலைக்காரராயிருந்தார்கள் (ஆதி. 14: 14.). எலியேசர் ஆபிராமின் வீட்டில் பிள்ளைபோல் மதிக்கப்பட்டுக் குடும்பத்தில் ஆபிராமுக்கு அடுத்தபடியிலிருந்தான்.

4. "**இவன் உனக்குச் சுதந்தரவாளியல்ல.**" கானான்தேசத்துக்குரிய வாக்குத்தத்தம் ஆபிராமின் கர்ப்பப்பிறப்பான சந்ததிக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் ஆவிக்குரிய வாக்குத்தத்தம் ஆபிராமின் வித்தாருக்கும் விசுவாசமார்க்கத்தில் அவன் அடிச்சுவடுகளில் நடக்கிற யாவருக்கும் கொடுக்கப்பட்டது.

5. "**உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்.**" நக்ஷத்திரங்களின் இலக்கத்தை எண்ண ஒருவனாலும் கூடாததுபோல ஆபிராமின் சந்ததியாரும் எண்ணத்தொலையாதவர்களாயிருப்பார்கள். ஆவிக்குரிய விஷயப்படி பார்த்தால் அவன் வித்தாரை எண்ணுவது மனித கணிதத்துக்கு மிஞ்சினதாயிருக்கிறது. (வெளி. 7: 9.)

6. "**அவன் கர்த்தரை விசுவாசித்தான்.**" விருத்தசேதனமுறைமை ஏற்படுத்தப்படுமுன் இங்கே சொல்லப்பட்டிருக்கிற வாக்குத்தத்தம் ஆபிராமுக்குக் கொடுக்கப்பட்டது. கிறிஸ்துவைக்குறித்த வாக்குத்தத்தமும் அதிலடங்கியிருந்தது. ஆபிராமின் விசுவாசம் சுவிசேஷ பிரமாணத்துக்குரியதாயிருந்தது. தேவன் நம்பிக்கைக்கு ஏதுவில்லாத வாக்குத்தத்தத்தைச் செய்தபோதிலும் ஆபிராம் அதை விசுவாசித்து முற்றிலும் தேவசித்தத்துக்கு அடங்கி வாக்குத்தத்தத்துக்குச் சுதந்தரவாளியானான். அவனுடைய விசுவாசம் அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. தேவனுடைய வல்லமை உண்மை

7 பின்னும் அவர் அவனை நோக்கி: [1]இந்தத் தேசத்
தை உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் பொருட்டு,
உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தி
லிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே என்றார்.—
8 அதற்கு அவன்: கர்த்தராகிய ஆண்டவரே, [2]நான் அ
தைச் சுதந்தரித்துக்கொள்வேன் என்று எதினால் அறி
9 வேன் என்றான்.—அதற்கு அவர்: மூன்று வயதுக்
கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும்,
மூன்று வயது ஆட்டுக்கிடாவையும், ஒரு காட்டுப்
புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும், என்னிடத்தில்

[1] ஆதி. 12. 1. 11. 28, 31. சங். 105. 42. ரோ. 4. 13.
[2] ஆதி. 24. 13, 14. லூ. 1. 18.

அன்பு என்பவைகளில் முழுவதுமாய்ச் சார்ந்து அவர் உண்டாக்கியிருக்கிற ரக்ஷிப்பின் வழியை நம்பிப் பற்றிக்கொள்வதிலே பாவியானவன் நீதிமானாகிறான். ஆபிராமுக்குத் தரிசனம் அருளினது கிறிஸ்துவாகிய தேவனே. எப்படியெனில் இங்கே தரிசனமான தேவனில் விசுவாசம் வைத்தது கிறிஸ்துவை விசுவாசிப்பதாம்.

**7. "உன்னை ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நானே."** அப். 7: 2ல் இதைக்குறித்துச் சொல்லியிருக்கிறது.

**8. "எதினால் அறிவேன்."** ஆபிராம் தான் கண்ட தரிசனையின் நிச்சயத்தையும் விவரத்தையும் அறியும்பொருட்டு இப்படிக் கேட்டான். விசுவாசக் குறைவினால் இந்தக் கேள்வியைக் கேட்டதாக நாம் எண்ணக்கூடாது. சிலர் பேதுரு (அப். 12: 9.), கிதியோன் (நியா. 6: 17.), எசேக்கியா (2 இரா. 20: 8.), மரியாள் (லூக். 1: 34.), என்பவர்களைப்போல சந்தேகப்பட்டு ஆபிராம் வினாவினதாக எண்ணுவதுண்டு.

**9. "மூன்றுவயதுக் கிடாரியையும், மூன்றுவயது வெள்ளாட்டையும், மூன்றுவயது ஆட்டுக்கிடாவையும், ஆ."** உடம்படிக்கை செய்வதில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற சடங்கு பாபிலோனியாவில் வழக்கமாயிருந்திருக்கலாம். பூர்வ பாஷைகளில் உடம்படிக்கை செய்வதைக் காட்டும்படி உடம்படிக்கை துண்டித்தல் அல்லது வெட்டுதல் என்று வழங்கப்பட்டதுண்டு. துண்டிக்கப்பட்ட இருகூறுகளும் உடம்படிக்கை செய்யும் இருபட்சத்தாரைக் குறிக்கும் என்பாருண்டு. இது சரியெனத் தோன்றுகிறதில்லை. எரே. 14: 18–20ல் விஸ்தரித்திருக்கிறபடி, அது உடம்படிக்கையை மீறுகிறவர்களுக்கு உண்டாகும் மரண தண்டனையைக் குறிக்கும். இங்கே துண்டிக்கப்பட்ட மிருகங்களைப்போன்றவைகள் பிந்தியகாலத்தில் பலிகளாகச் செலுத்தப்பட்டன. ஆனால் இங்கே அவைகள் பலியாகச் செலுத்தப்படவில்லை. மூன்றுவயதுள்ள மிருகங்கள் என்று குறிக்கப்பட்டிருப்பது அவைகள் தகுதியான பக்குவமுள்ளவைகள் என்பதைக் காட்டுகின்றது.





10 கொண்டுவா என்றார்.—அவன் அவைகள் எல்லாவற்
றையும் அவரிடத்தில் கொண்டுவந்து, [1]அவைகளை
நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று
எதிராக வைத்தான்; பட்சிகளை அவன் துண்டிக்கவில்
11 லை.—பறவைகள் அந்த உடல்களின்மேல் இறங்கின;
12 அவைகளை ஆபிராம் துரத்தினான்.—சூரியன் அஸ்த
மிக்கும்போது, ஆபிராமுக்கு [2]அயர்ந்த நித்திரை வந்
தது; திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது.—

[1] எரே. 31. 18, 19. லேவி 1. 17.
[2] ஆதி. 2. 21. யோபு. 4. 13.

**10. "அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்."** உடம்படிக்கை செய்கிறவர்கள் அவைகளுக்கு ஊடாக நடந்துபோவார்கள். (வச. 17. எரே. 34: 19.)

**"பட்சிகளை அவன் துண்டிக்கவில்லை."** நியாயப்பிரமாணகாலத்தில் புறாக்கள் தகனபலியாகச் செலுத்தப்பட்டபோது இரண்டாகத் துண்டிக்கப்படவில்லை. (லேவி. 1: 17.)

**11. "பறவைகள் அந்த உடல்களின்மேலிறங்கின."** மிருகங்கள் பலியாகச் செலுத்தப்பட்டிருக்குமானால் நெருப்பு இருக்குமாதலால் உராய்ஞ்சுகிற பறவைகள் சமீபிக்கமாட்டாது.

**"அவைகளை ஆபிராம் துரத்தினான்."** உடம்படிக்கையின் வெளியரங்கமான அடையாளங்களுக்கு மகிமையை அல்லது கண்ணியக்குறைவு நேரிடாதபடிக்கு ஆபிராம் அப்பட்சிகளைத் துரத்தினான். உடம்படிக்கை முத்திரிக்கப்படுமுன் பட்சிகள் அந்த மிருகங்களின் உடலைப் பட்சிக்கும்படியாக வந்தது. இஸ்ரவேலருக்கு எகிப்தில் எழும்பின சத்துருக்களையும் விசுவாசிகளுக்கு விரோதமான ஆத்தும சத்துருக்களையும் குறிக்கும் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

**12. "சூரியன் அஸ்தமிக்கும்போது."** முந்தினநாள் இரவில் தேவன் ஆபிராமுக்குத் தரிசனமாகி அவனுக்கு வானத்தின் நக்ஷத்திரங்களைச் சுட்டிக்காட்டி அவன் வித்தார் வெகு திரளாயிருப்பார்களென்று விளங்கச்செய்திருக்கும்போது அவன் தான் கானான்தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வதை எதினால் அறிவேன் என்று கேட்டான். அதற்குக் கர்த்தர் மேலே காட்டிய சடங்கைச் செய்யும்படி உத்தரவு அருளினார். அடுத்தநாள் காலையில் அந்த உத்தரவை நிறைவேற்றி என்ன சம்பவிக்கும் என்பதை அறிய அவன் காத்துக்கொண்டிருந்தான். சூரியன் அஸ்தமிக்கையில் அவனுக்குத் திவ்விய வெளிப்படுத்தல் அருளப்பட்டது. முந்தின இரவிலோ அவன் விழிப்புள்ளவனாயிருந்தபோது அது அருளப்பட்டது. இப்போது அயர்ந்த நித்திரையாயிருக்கையில் அது உண்டாயிற்று.

**"அயர்ந்த நித்திரை."** இதைக்குறித்து, யோபு. 4: 13–16ல் விபரமாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. (தானி. 10: 8.)

**"திகிலும் காரிருளும் அவனை மூடிக்கொண்டது."** இந்தத் திகில் மனதையும் சரீரத்தையும் பற்றினது. தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய விசேஷித்த சமுகத்தண்டையில் வரும்போது அடிக்கடி திடுக்கிடுவதுண்டு. ஆபிராமின் வித்

13 அப்பொழுது அவர் ஆபிராமை நோக்கி: [1]உன் சந்
ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே
பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்
கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திர
வப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கட
14 வாய்.—இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை [2]நான் நியா
யந்தீர்ப்பேன்; பின்பு மிகுந்த பொருள்களுடனே
15 புறப்பட்டு வருவார்கள்.—நீ சமாதானத்தோடே [3]உன்
பிதாக்களிடத்தில் சேருவாய்; நல்ல முதிர்வயதிலே

[1] யாத். 12 40. அப். 7. 6. சங். 105. 25.
[2] யாத். 6. 6: 12. 36.
[3] ஆதி. 25. 8. யோபு. 5. 26. அப். 13. 36.

தார் எகிப்தில் அடையும் கொடிய உபத்திரவத்துக்கு இது நிழலாட்டமாயிருந்ததென்று சிலர் சொல்வதுமுண்டு.

**13. "நானூறு வருஷம்."** இஸ்ரவேலர் எகிப்தில் 430 வருஷகாலமாய்ச் சஞ்சரித்தார்கள் (யாத். 12: 40, 41.). இதற்கு இசைவாக யோசுவாவின் தலைமுறை அட்டவணையுமிருக்கிறது என்று சிலர் சொல்வதுண்டு (1 நாளா. 7: 23–27.). இங்கே நானூறு என்று பேரெண்ணால் குறிக்கப்பட்டிருக்கிறது.

சிலர் ஆபிரகாம் அழைக்கப்பட்டதுமுதல் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதுவரையும் 430 வருஷம் என்று வியாக்கியானம்பண்ணுகிறார்கள்.

சிலர் கலா. 3: 16, 17ஐ வைத்துக்கொண்டு ஆபிராமுக்குச் சந்ததியைப்பற்றிச் சொல்லிய வாக்குத்தத்தம்முதல் இந்த 430 வருஷக்காலக் கணக்கு சரியாயிருக்கிறதென்று சொல்வார்கள்.

இஸ்ரவேலர் காம் தேசத்திலே அந்நியராய்த் தற்காலத்துக்கென்று சஞ்சரித்தபோதிலும் எகிப்தியரால் கொடியவிதமாய் உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். (யாத். 1: 13, 14.)

**14. "இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயந்தீர்ப்பேன்."** எகிப்தியர் வாதைகளினாலும், அவர்களின் இராசாவும் சேனைகளும் சமுத்திரத்தில் மாண்டதினாலும் தண்டனையடைந்தார்கள்.

**"மிகுந்த பொருள்களுடனே புறப்பட்டு வருவார்கள்."** இஸ்ரவேலர் செய்த வேலைக்குத்தக்க கூலியை எகிப்தியர் கொடுக்கவில்லை. பூமிக்கெல்லாம் நியாயாதிபதி அந்தக் கூலியையெல்லாம் திரட்டி அதற்கு ஈடாக எகிப்தியர் தங்கள் நகைகளையும் உடைமைகளையும் கொடுக்கும்படி பண்ணினார். (யாத். 12: 36.)

**15. "நீ சமாதானத்தோடே உன் பிதாக்களிடத்தில் சேருவாய்."** இப்படிப்பட்ட வாசகம் அடிக்கடி (ஆதி. 25: 8; 35: 29; 49: 33.) வருகிறது. அது பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணுவதையாவது, பிதாக்களின் ஆவிபோயிருக்கிற இடத்துக்குச் செல்வதையாவது குறிக்கும். ஆபிராமின் பிதாக்களின் சரீரம் பாபிலோனியாவிலும் ஆபிராமின் சரீரம் கானானிலும் அடக்கம்பண்ணப்பட்டதால் ஆபிராம் மரணத்துக்குப்பின்பு அவன் ஆத்துமா ஆபேல் நோவாமுதலிய புருஷோத்தமர்களுடைய ஆவிபோயிருக்கும் இடத்துக்குச் செல்





16 அடக்கம்பண்ணப்படுவாய். — [1]நாலாம் தலைமுறை
யிலே அவர்கள் இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்
கள்; ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்
17 னும் நிறைவாகவில்லை என்றார்.—சூரியன் அஸ்தமித்து
காரிருள் உண்டானபின்பு, இதோ, புகைகிற சூளை
யும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற
[2]அக்கினிஜுவாலையும் தோன்றின.
18 அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே [3]உடன்படிக்
கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி

[1] யாத். 12.40. மத். 23. 32. 1 தெச. 2. 16.
[2] யாத். 3. 2.
[3] ஆதி. 24. 7.

லும் என்பதைக் குறிக்கும் (பிர. 12: 7. லூக். 16: 22, 23.). ஆத்துமா சாகாமையுள்ளதென்பதை இது குறிக்கிறது.

**16. "நாலாம் தலைமுறையிலே."** தலைமுறை என்பதற்கு எபிரெயு வார்த்தை "டோர்." அது நூற்றாண்டைக் குறிக்கும் என்று சிலர் வியாக்கியானஞ் செய்வார்கள். அப்படியானால் 13-ம் வசனத்தில் சொல்லியதற்கு இது இசைவாயிருக்கிறது. எகிப்துக்கு இறங்கிப்போன யூதாமுதல் எகிப்திலிருந்து புறப்பட்டுக் கானானுக்குள் பிரவேசித்த காலேப்வரைக்கும் நாலு தலைமுறையாயிருக்கிறது. (யாத். 6: 16–23. 1 நாளா. 2: 1–18.)

**"எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை."** கானானியருக்குள் எமோரியர் ஒரு பலத்த சாதியாராயும் திரள்கூட்டத்தாராயுமிருந்தார்கள். அதனால் கானானியரெல்லாரும் இந்தப்பெயரால் பொதுப்பட சொல்லப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலருக்கு இடம் கொடுக்கும்படி கானானியர் அழிக்கப்படவில்லை. கானானியர் அக்கிரமத்தில் மிஞ்சிப்போனதினிமித்தம் பூமிக்கெல்லாம் இராசாவானவர் நீதியின்படி அவர்களைத் தண்டித்து அவர்களைப்பார்க்கிலும் செம்மைமார்க்கத்தாரான இஸ்ரவேலருக்கு அத்தேசத்தைக் கொடுத்தார். இஸ்ரவேலர் பாவத்தில் புரண்டு கர்த்தருக்குத் துரோகம்பண்ணினபோது அவர்களும் அத்தேசத்தைவிட்டு அகற்றப்பட்டார்கள்.

**17. "இதோ, புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினி ஜுவாலையும் தோன்றின."** ஆபிராம் அந்தத் துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தபோது அவைகளின் நடுவே கடந்துபோனான். இப்போதோ கர்த்தர் கடந்துபோனார். அக்கினி அவருடைய தெய்வீகத்துக்குக் குறிப்பு. அப்படியே அவர் எரிகிற முட்செடியிலும் அக்கினிஸ்தம்பத்திலும் சீனாயிலும் காணப்பட்டார்.

**18. "கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி."** எபிரெயுவில் "எகோவா உடம்படிக்கையைத் துண்டித்தார்" என்றிருக்கிறது. ஆபிராம் மிருகங்களைத் துண்டித்தான். கர்த்தர் துண்டங்களின் நடுவே கடந்து அந்தச் செய்கையையெல்லாம் தம்முடையதாக அங்கீகரித்துக்கொண்டார்.

**"எகிப்தின் நதிதுவக்கி."** இது எகிப்திலுள்ள நீல்நதியைக் குறிக்கும். சிலர் அது சிமியோன் கோத்திரத்தின் தென் எல்லையிலிருக்கிற சீயோர் நதி

19 என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்,—கேனியரும்,
20 கெனிசியரும், கத்மோனியரும்,—ஏத்தியரும், பெரி
21 சியரும், ரெப்பாயீமியரும்,—எமோரியரும், கானானி
யரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்
கிறதுமான இந்தத் தேசத்தை [1]உன் சந்ததிக்குக் கொ
டுத்தேன் என்றார்.

[1] ஆதி. 12. 7.

யைக் குறிக்கும் என்பார்கள். அது சரியெனத் தோன்றுகிறதில்லை. இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தின் எல்லை ஐப்பிராத்து பள்ளத்தாக்கு முதல் நீல்நதி பள்ளத்தாக்குவரையும் குறிக்கப்பட்டிருக்கிறது. 2 நாளா. 9: 26ல் "நதி (ஐப்பிராத்து) துவக்கிப் பெலிஸ்தரின் தேசம்மட்டுக்கும் எகிப்தின் எல்லைவரைக்கும் இருக்கிற சகல இராசாக்களையும் சாலொமோன் ஆண்டான்" என்று பார்க்கிறோம். (2 சாமு. 8: 3. ஒத்துப்பார்க்க.)

**19.** **"கேனியர்."** மீதியானியரில் ஒரு வகுப்பாரென்று எண்ணத்தகும். அவர்கள் தெற்கே அமலேக்கியர் நடுவிலும் (1 சாமு. 15: 6.), வடக்கே நப்தலி, செபுலோன் கோத்திரத்தார் நடுவிலும் (நியா. 4: 11.), மோசேயின் மாமன் கேனியனாகிய எத்திரோ மீதியானியர் நடுவிலும் (நியா. 1: 16.) குடியிருந்தார்கள். பிலேயாம் அவர்களைப் பலத்த ஒருசாதி என்று சொல்லியிருக்கிறான் (எண். 24: 21). அவர்கள் பூர்வத்தில் கானானில் குடியேறியிருந்தாலும் பின்பு வலசைவந்த சனங்களால் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் எக்காலத்திலும் இஸ்ரவேலரோடே சமாதானமாயிருந்துவந்தார்கள்.

**"கெனிசியர்."** இந்த இடத்தில்மாத்திரம் அவர்கள் சொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆபிராமுக்கும் மோசேக்கும் இடையேயுள்ளகாலத்தில் மங்கிப்போனதாகச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**"கத்மோனியர்."** அதாவது கிழக்கத்து அல்லது பூர்வ சாதியார்; அவர்களைக்குறித்து நமக்கொன்றும் தெரியாது.

**20.** **"ஏத்தியர்."** ஆதி. 10: 15. வியாக்கியானம் பார்க்க.

**"பெரிசியர்."** ஆதி. 13: 7. வியாக்கியானம் பார்க்க.

**"ரெப்பாயீமியர்."** ஆதி. 14: 5. வியாக்கியானம் பார்க்க.

**21.** **"எமோரியர்."** ஆதி. 10: 16. வியாக்கியானம் பார்க்க.

**"கானானியர்."** ஆதி. 9: 25. வியாக்கியானம் பார்க்க. (ஆதி. 10: 19. பார்க்க.)

**"கிர்காசியர்."** ஆதி. 10: 16. வியாக்கியானம் பார்க்க.

**"எபூசியர்."** ஆதி. 10: 16. வியாக்கியானம் பார்க்க.

**"இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்."** பத்து சாதியார் வாசம்பண்ணின நாடுகள் அனைத்தும் இஸ்ரவேலருக்கு வாக்கு அருளப்பட்டது. அவர்கள் ஐப்பிராத்துக்கும் நீல்நதிக்கும் இடையேயுள்ள தேசத்தில் குடியிருந்தார்கள்.





## படிப்பினை.

### வச. 1—11.

(1) தேவன் பேரில் நம்பிக்கையாயிருந்து அவருக்கு ஊழியஞ் செய்கிறவர்கள், சத்துருக்களுக்குப் பயப்பட நிமித்தமில்லை. சர்வவியாபகமும் சர்வவல்லமையுமுள்ளவர் அவர்களுக்கு ஆதரவாயிருக்கிறார். அவர்கள் அவர் நிமித்தம் அருமையான லௌகிக நன்மைகளை விட்டுவிடத் தாமதிக்கவேண்டாம். ஏனென்றால் அவர் அவர்களுக்குச் சுதந்தரமும் கேடகமுமாயிருந்து ஆசீர்வாதங்களால் அவர்களை நிரப்புகிறவராயிருக்கிறார்.

(2) நெடுங்காலமாகக் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப்பண்ணும். பலத்த விசுவாசிகளும் வேளாவேளைகளில் விசுவாச பெலவீனத்துக்கு இடங்கொடுப்பதுண்டு.

(3) மனித புத்திக்கு அரிதும் விபரீதமும் ஆகத்தோன்றுகிற காரியங்களைப்பற்றித் தேவன் ஒரு தருணத்தில் ஒரு வாக்கு உரைக்க அது நடக்கும் என்று உண்மையாய் நம்பிப் பற்றிக்கொள்ளுகிறவன் அவர் வெளிப்படுத்தும் மற்றெல்லா வாக்குத்தத்தங்களும் அப்படியே தவறாமல் நடக்கும் என்று விசுவாசிப்பான். அப்படிப்பட்ட விசுவாசம் அவன் நீதிமான் என்று எண்ணப்படுவதற்கு உதவுகிறதாயிருக்கிறது.

(4) மனிதரோடே தேவன் செய்யும் உடன்படிக்கையானது எப்போதும் பலியினாலும் இரத்தஞ் சிந்துதலினாலும் உறுதிபண்ணப்படும். அவருடைய எத்தனங்களைக் கையாடுவதில், நம்முடைய விசுவாசம் ஸ்திரப்படும்படி அவருக்காகக் காத்திருக்கவேண்டும்.

### வச. 12—21.

(5) வரப்போகிற வருத்தங்களைப்பற்றிய அறிவு நமக்குக் கிடைக்குமானால், அதால் [illegible] அதிக நன்மையடைவது அரிது. ஆதலால் இரக்கமுள்ள ஆண்டவர் நமக்கும் நம்முடைய குடும்பத்துக்கும் நேரிடும் அநேக ஆபத்துக்கள் நமக்குத் தெரியாதபடி மறைத்திருக்கிறார். வரப்போகிற ஆபத்துக்கள் இன்னவைகள் என்று நமக்குத் தெரிந்தால், நம்முடைய நிலைமை நாம் சகப்பாக்கிக்கொள்வோம்.

(6) [illegible] அளவு நிறைவேறுமுன் தேவன் தண்டிக்கிறதில்லை. அதற்கு இடையில் [illegible] அவர் சமயந்தருகிறார்.

(7) விசுவாசிகள் தங்களுக்குக் கிடைக்கும் நன்மைகளுக்காக ஏற்ற சமயம் வருமளவும் காத்திருக்கவேண்டும்.

கவனிப்பு. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் பக்தியுள்ளவர்கள் இரட்சிப்பையடைந்த விதம் வேறே என்றும் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பக்தர்கள் இரட்சிப்பையடையும் விதம் வேறே என்றும் நினைப்பவர் அநேகர். எப்படியெனில் இரட்சகர் வந்ததற்கு முந்திய காலத்தில் கிரியை மார்க்கத்துக்கமைந்த பலி பொருத்தனை உபவாசம் முதலியவற்றால் தேவனுக்குப் பிரியுண்டாகப் பிரயாசப்பட்டதினிமித்தம் மனிதர் நீதிமான்களாக்கப்பட்டார்களென்றும் இக்காலத்திலோ கிருபை மார்க்கத்துக்கமைந்து தேவனுடைய கிருபையினாலே இரட்சகருடைய புண்ணியத்தைப்பற்றும் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிப்பையடையவேண்டுமென்றும் நினைப்பார்கள். அப்படி நினைப்பது முற்றிலும் பிசகு என்பதை இந்த அதிகாரத்திலே அறியலாம். நியாயப்பிரமாணம் அருளப்படுமுன்னமே ஆபிராமென்பவன் நற்கிரியைகளினிமித்தமல்ல விசுவாசத்தினிமித்தமே தேவனால் நீதிமானாக எண்ணப்பட்டான். அவன் இரட்சிக்கப்பட்ட விதத்துக்கும் நாம் இரட்சிப்படையும் வகைக்கும் யாதொரு வித்தியாசமுமில்லை. அவன் இரட்சகரை விசுவாசத்தால் கண்டு பற்றிக்கொண்டான் (யோ. 8: 56.). நாமும் இரட்சகரை விசுவாசத்தினால் கண்டு இரட்சிப்பையடைகிறோம். அவனுடைய அறிவுக்கும் நம்முடைய அறிவுக்கும் வித்தியாசமிருக்கிறதேயன்றி அவனது விசுவாசத்துக்கும் நமது விசுவாசத்துக்கும் வித்தியாசம் யாதொன்றுமில்லை. இந்தச் சத்தியத்தை நாம் நன்கறிவது மெத்த அவசியம். பாவிகளை இரட்சிக்கும் மார்க்கம் ஆதிமுதல் கடைசிபரியந்தமும் ஒன்றே ஒன்று. அக்காலத்தில் கண்ணாடியி

# 16. அதிகாரம்.

1. சாராய் தனக்குப் பிள்ளையில்லாதநிமித்தம் ஆகாரை ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தது. 4. ஆகார் தன் நாச்சியாரை அற்பமாய் எண்ணினதற்காகத் தண்டிக்கப்பட்டு ஓடிப்போனது. 7. தேவதூதன் அவளைச் சந்தித்துத் திரும்பிப்போய் அடங்கியிருக்கும்படி அவளுக்குப் புத்திசொல்லி, 11. அவள் பெறப்போகிற பிள்ளையைக்குறித்துச் சொன்னது. 15. இஸ்மவேல் பிறந்தது.

1 ஆபிராமுடைய மனைவியாகிய [1]சாராய்க்குப் பிள் [1] ஆதி. 15.2,3 21.9.
ளையில்லாதிருந்தது. [2]எகிப்துதேசத்தாளாகிய ஆகார் [2] கலா. 4.24.

லே நிழலாட்டமாய்ப் பார்த்தாற்போல கண்டறிந்தார்கள். இப்பொழுதோ முகமுகமாய்ப் பார்க்கத்தக்க சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். அவர்களுக்கும் நமக்குமிருக்கிற வித்தியாசத்தை ஒரு திருஷ்டாந்தத்தினாலே நன்றாய் அறியலாம். கானான்தேசத்தைச் சுற்றிப்பார்க்கும்படி மோசே அனுப்பின வேவுகாரர் திரும்பினபொழுது அத்தேசத்தின் செழுமைக்கு அத்தாட்சியாக எஸ்கோல் பள்ளத்தாக்கில் ஒரே குலையுள்ள ஒரு திராட்சக்கொடியை அறுத்து ஒரு தடியிலே அதைக் கட்டித் தூக்கித் தோளின்மேல் சுமந்து கொண்டுவந்தார்கள். அதைத் தூக்கிக்கொண்டுவர, முன்னாலே ஒரு ஆளும் பின்னாலே ஒரு ஆளுமாக இரண்டுபேருமிருந்தார்கள். அவ்விருவரில் முன்னாலே நடந்த மனுஷன் மெதுவாய்த் திரும்பிப் பின்னாலே எட்டிப்பார்த்து அந்தத் திராட்சக்கொடியைக் காண இடமிருந்ததேயல்லாமல் அதை நன்றாய்க் கண்டுகொள்ளுவதற்கு ஏதுவில்லை. என்றாலும் அந்தப் பழத்தைத் தூக்கிக்கொண்டுவந்த சிலாக்கியத்துக்குள் அவன் பங்குபெற்றான். பின்னாலே நடந்த மனுஷனோ முன்சென்ற மனிதனையும் அருமையான அத்திராட்சக் குலையையும் நன்றாய்ப் பார்த்துக்கொண்டே வந்தான். அவர்களைக் கவனிக்கையில் இருவருக்கும் சரியாக அப்பழத்தைக் கொண்டுவரும் சிலாக்கியம் கிடைத்தது. ஆனால் கண் காண்கிறநிலைமாத்திரம் வித்தியாசமிருந்தது. அப்படியே கிறிஸ்துவையும் அவருடைய ரக்ஷணியத்தையும் அந்தத் திராட்சக்கொடிக்கு ஒப்பிட்டுப் பேசலாம். அருமையான அப்பரம கனியை எடுத்துக்கொள்வதற்கான சிலாக்கியத்தை முற்பிதாக்களும் கிறிஸ்தவர்களாகிய நாமும் பெற்றிருக்கிறோம். அவர்களோ தாங்கள் எடுத்துக்கொண்ட திரவியத்தைப் பூரணமாய் அறிந்துகொள்ளக் கூடாதவர்களாய்ப்போனார்கள். நாமோ அதைப் பூரணமாய்க் காண்கிறதோடுகூட நமக்கு முந்தினோரையும் கண்டு களிகூருகிறவர்களாயிருக்கிறோம். இந்தத் திருஷ்டாந்தத்தை நன்றாய்க் கவனித்துக்கொண்டால் ஆதிமுதல் கடைசிபரியந்தமும் கிருபை மார்க்கத்தினாலே பாவிகள் ரக்ஷிக்கப்பட்டுவந்தார்களே தவிரக் கிரியைமார்க்கத்தினாலே ஒரு ஆத்துமாவும் இரட்சிக்கப்பட்டதில்லை என்பதைச் சந்தேகமற அறிந்துகொள்ளலாம்.

## 16. அதிகாரம்.

**1. "சாராய்க்குப் பிள்ளையில்லாதிருந்தது."** ஆபிராமுக்குப் புத்திர சந்தானம் வாக்குக்கொடுக்கப்பட்டபோது, அவன் அதை நம்பினான். ஆனால் சாராயின்மூலமாய்ப் புத்திரசந்தானமுண்டாகும் என்று தெளிவாய்ச் சொல்லப்படாததால், சாராய் அக்காலத்திலே அத்தேசத்தாருடைய வழக்கப்படி ஒரு வகையை யூகித்து, அதின்படி செய்தாள். ஆபிராம் இந்தவிஷயத்தில் சாராய்க்கு இணங்கினது, அவனுடைய விசுவாசப் பெலவீனத்தைக் காட்டுகிறது.





என்னும் பேர்கொண்ட ஒரு *அடிமைப்பெண் அவ
2 ளுக்கு இருந்தாள்.—சாராய் [1]ஆபிராமை நோக்கி: [1] ஆதி. 20.18; 30.2,3.
நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை
அடைத்திருக்கிறார்; என் அடிமைப் பெண்ணோடே
சேரும், ஒருவேளை அவளால் என் *வீடு கட்டப்ப * குடும்பம் வர்த்திக்கும்.
டும் என்றாள். சாராயின் வார்த்தைக்கு ஆபிராம்
3 செவிகொடுத்தான்.—ஆபிராம் கானான் தேசத்தில்
[2]பத்து வருஷம் குடியிருந்தபின்பு, ஆபிராமின் மனைவி [2] ஆதி. 12.5.
யாகிய சாராய் எகிப்து தேசத்தாளான தன் அடி
மைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத்
தன் புருஷனாகிய ஆபிராமுக்கு மறுமனையாட்டியாகக்

**"ஆகார் என்னும் பேர்கொண்ட ஒரு அடிமைப்பெண் அவளுக்கு இருந்தாள்."** ஆகார் என்பதற்கு "ஓட்டம்" என்றர்த்தம். ஆகார் எகிப்திலிருந்து சாராயோடே வந்திருக்கவேண்டும். பார்வோன் ஆபிராமுக்கு "வேலைக்காரிகளையும்" கொடுத்ததாக வாசிக்கிறோம் (ஆதி. 12: 16.). ஆகார் என்பது அரபிய அல்லது எபிரெய வார்த்தையாயிருப்பதால், அவளுடைய தாய்தகப்பன்மார் இந்தப் பெயரை அவளுக்குக் கொடுத்திருக்கமாட்டார்கள். பிந்தியகாலத்தில் அவள் நடபடிக்கையினாலுண்டான சம்பவத்தைக்கொண்டு, இந்தப் பெயர் அவளுக்கு இடப்பட்டிருக்கலாம். ஆகார் மோசேயின் நியாயப்பிரமாணத்துக்கும், தன் பிள்ளைகளோடேகூட அடிமைப்பட்டிருக்கிற பூமிக்குரிய எருசலேமுக்கும் அடையாளமாயிருக்கிறாள். (கலா. 4: 24 25.)

**2. "அவளால் என் வீடு கட்டப்படும்."** புத்திரசந்தானமுண்டாகிப் பேர் நிலைநிற்கும். ஆதியில் மனிதர் பொதுப்பட கூடாரங்களில் வாசஞ்செய்துவந்ததால், குடியிருப்பு ஸ்தலத்துக்குக் கூடாரம் என்றும் குடும்பத்துக்கு "வீடு" என்றும் வழங்கப்பட்டுவந்தது (ஆதி. 7: 1.). சாராய்க்கு இப்போது எழுபத்தைந்து வயதாயிருந்ததால், தனக்கு இனிமேல் பிள்ளையிராது என்று தீர்மானித்து, ஆகாரின்மூலமாய்ப் பிறக்கும் பிள்ளையைத் தனக்குச் சுதந்தர புத்திரனாக்கிக்கொள்ளலாம் என்று எண்ணி, அவளை ஆபிராமுக்குக் கொடுத்தாள். அடிமைப்பெண்ணினால் பிறக்கும் பிள்ளை நாச்சியாருடையதாக எண்ணப்படும். (ஆதி. 30: 3.)

**"சாராயின் வார்த்தைக்கு ஆபிராம் செவிகொடுத்தான்."** ஆபிராம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து இரண்டாவதாகத் தப்பிதமான எண்ணங்கொண்டான். முதலாவது எலியேசரைத் தன் ஆஸ்திக்குச் சுதந்தரனாக்கும்படியாகவும்; இப்போது சாராயின் கர்ப்பத்திலல்ல, தகாதவிதமாய்த் தன்னால் பிறக்கும் பிள்ளையைச் சுதந்தரனாக்கும்படியாகவும் சித்தங்கொண்டான்.

**3. "ஆபிராம் கானான் தேசத்தில் பத்துவருஷம் குடியிருந்தபின்பு."** இப்போது ஆபிராமுக்கு எண்பத்தைந்துவயதும், சாராய்க்கு எழுபத்தைந்து வயதுமாயிருந்தது (ஆதி. 12: 4; 16: 16; 17: 24, 25. ஒத்துப்பார்க்க.). இந்த

4 கொடுத்தாள்.—அவன் ஆகாரோடே சேர்ந்தபோது,
அவள் கர்ப்பந்தரித்தாள், [1]அவள் தான் கர்ப்பவதி
யானதைக் கண்டபோது, தன் நாச்சியாரை அற்ப
5 மாக எண்ணினாள்.—அப்பொழுது சாராய் ஆபிராமை
நோக்கி: [2]எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல்
சுமரும்; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடி
யிலே கொடுத்தேன்; அவள் தான் கர்ப்பவதியான
தைக் கண்டு என்னை அற்பமாக எண்ணுகிறாள்;
கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுநின்று நியாயந்தீர்ப்
6 பாராக என்றாள். — அதற்கு ஆபிராம் சாராயை நோ
க்கி: [3]இதோ, உன் அடிமைப்பெண் உன் கைக்
குள் இருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி
அவளுக்குச் செய் என்றான். அப்பொழுது சாராய்
அவளைக் கடினமாய் நடத்தினபடியால் அவள் அவளை
விட்டு ஓடிப்போனாள்.

[1] ஆதி. 30. 23.
[2] ஆதி. 31. 53. 1 சாமு. 24. 12, 15.
[3] ஆதி. 15.1, 1பே. 3. 7.

நீண்டகாலத்தில் ஆபிராமின் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டது. சாராயோ, வேறேவகையாய்ச் சுதந்தரனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானித்தாள்.

**4. "தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள்."** ஆபிராமின் குடும்பத்திலே ஆகார் சாராய்க்கு இரண்டாவதாக எண்ணப்பட்டபோதிலும், அவள் இன்னும் சாராயின் அடிமைப்பெண்ணாய்த்தானிருந்தாள் (வச. 6.). ஆனால் அவள் கர்ப்பவதியானபோது, குடும்பத்திலுள்ள ஒழுங்குக்கு வேறுபாடாகத் தானே ஆபிராமின் ஆஸ்திக்குச் சுதந்தரவாட்டி என்றும் வாக்குத்தத்தங்களெல்லாம் அவளுக்கே உரித்தானது என்றும் நினைத்துச் சாராயை அற்பமாக எண்ணினாள். நமது தேசத்தாரைப்போல எபிரெயரும் மலடியை அற்பமாயும் (ஆதி. 19: 31; 30: 1, 23. லேவி. 20: 20.), புத்திரசந்தானமுள்ள ஸ்திரீயை பெரிய பாக்கியவதியாகவும் எண்ணினதுண்டு (ஆதி. 21: 6; 24: 60. யாத் 23: 26. உபா. 7: 14.). ஆகார் என்பவள் ஆபிராம் இப்போது சாராயைவிடத் தன்னை அதிகமாய் நேசிப்பான் என்று எண்ணியுமிருக்கலாம். (ஆதி. 29: 33.)

**5. "எனக்கு நேரிட்ட அநியாயம் உமதுமேல் சுமரும்."** சாராய் ஆபிராமினிமித்தம் தன்னை ஒறுத்ததால், ஆகார் தன்னை அற்பமாய் எண்ணின குற்றத்துக்கு ஆபிராமை உத்தரவாதியாக்கினாள்.

**6. "சாராய் அவளைக் கடினமாய் நடத்தினபடியால் அவள் அவளை விட்டு ஓடிப்போனாள்."** சாராய் ஆகாரைப் பழையபடி அடிமைப்பெண்ணின் வேலையைச் செய்யும்படி கண்டிப்பாய் நடத்திச், சிறுமைப்படுத்தியிருக்கவேண்டும் (வச. 9.). ஆகவே ஆகார் சாராயைவிட்டு ஓடிப்போனாள். இதால் அவள் அடங்காத சுபாவத்தைக் காட்டினாள். அவள் குமாரன் இஸ்மவேலும்





7 கர்த்தருடைய தூதனானவர் அவளை வனாந்தரத்தி
லே [1]சூருக்குப் போகிற வழியருகே இருக்கிற நீரூற்
8 றண்டையில் கண்டு:—சாராயின் அடிமைப் பெண்
ணாகிய ஆகாரே, எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே
போகிறாய்? என்று கேட்டார்; அவள்: நான் என்
நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போகிறேன்
9 என்றாள்.—அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர்:
நீ உன் நாச்சியாரிடத்துக்குத் திரும்பிப் போய்,
10 அவள் கையின்கீழ் [2]அடங்கியிரு என்றார்.—பின்னும்
கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி: [3]உன்
சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்; அது
பெருகி, எண்ணிமுடியாததாயிருக்கும் என்றார். —

[1] ஆதி. 25.18. யாத். 15. 22.
[2] தீத். 2. 9, 10. 1 பே. 2. 18.
[3] ஆதி. 17. 20.

அவன் சந்ததியாரும் அவனைப்போலவே அடங்காச் சுபாவமுடையவர்களாயிருக்கிறார்கள். அவன்பேரின் அர்த்தத்துக்கு இசைவாக அவன் செய்கையும் இருக்கிறது.

**7. "கர்த்தருடைய தூதனானவர்."** கர்த்தருடைய தூதனானவர் காணப்பட்டதாக முதலாவது சொல்லியிருக்கிற இடம் இதுவே; பதின்மூன்றும் வாக்கியத்தினால், காணப்பட்ட தூதன், கர்த்தர் என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. அவர் நித்திய வார்த்தையானவரே.

**"வனாந்தரத்திலே."** பாரான் வனாந்தரம். அங்கே காதேஸ் இருந்தது. இப்போது அந்த வனாந்தரம் ஆல்ஜிபார் அல்லது ஜேவார் என்று அழைக்கப்படுகிறது.

**"சூருக்குப் போகிற வழியருகே."** ஆகார் எபிரோனிலிருந்து பெயர்செபா வழியாய் எகிப்துக்குப் போகும் பாதையே சென்றாள்.

**8. "சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே."** ஆகார் சாராயை அற்பமாக எண்ணினாளே. இப்போது அவள் பெருமையை அடக்கவும், சாராய்க்கு அவள் கீழ்ப்படியவுந்தக்கதாகச் சாராயின் அடிமைப்பெண் என்று அழைக்கப்பட்டிருக்கிறாள்.

**9. "அவள் கையின்கீழ் அடங்கியிரு."** சாராய் சொல்லும் உத்தரவுக்கு அமைந்து நடக்கும்படி, ஆகாருக்கு உத்தரவு அருளப்பட்டது.

**10. "உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்."** கர்த்தர் ஆகாருக்குத் தரிசனமான நோக்கமின்னதென்று இங்கே பார்க்கிறோம். ஆபிராமின் குமாரன் எகிப்தியரோடே கலந்துபோகக்கூடாது. அவன் சுயாதீனமான சனக்கூட்டத்துக்குத் தகப்பனாயிருக்கவேண்டும். அவனுக்குச் சுயாதீனமுண்டாகும்படி, அவள் தற்காலத்தில் அடிமையாகக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியதாயிருந்தது. அவனுடைய வித்தார் பன்னிரண்டு சாதியாராகப் பெருகி, ஆகாரியர் அல்லது சரசேனர் என்றழைக்கப்பட்டார்கள்.

11 பின்னும் கர்த்தருடைய தூதனானவர் அவளை நோக்கி:
நீ கர்ப்பவதியாயிருக்கிறாய், ஒரு குமாரனைப் பெறு
வாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியி
னால், அவனுக்கு *இஸ்மவேல் என்று பேரிடுவா
12 யாக.—அவன் [1]துஷ்ட மனுஷனாயிருப்பான்; அவனு
டைய கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லா
ருடைய கையும் அவனுக்கு விரோதமாகவும் இருக்
கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடி

* தேவன்கேட்பார். ஆதி. 17. 19; நியா. 1. 21. ஊ. 1. 13, 31.
[1] ஆதி. 21. 20; 25. 18.

**11.** **"இஸ்மவேல்."** "தேவன் கேட்கிறார்." இஸ்மவேல் என்ற பேர், சாமுவேலின் பேரைப்போல, அவன் தாயின் சம்பவத்தைக் குறித்துண்டு கொடுக்கப்பட்டது.

**12.** **"அவன் துஷ்ட மனுஷனாயிருப்பான்."** எபிரெயுவில் "காட்டுக் கழுதை மனுஷனாயிருப்பான்" என்றிருக்கிறது. அரபியாவின் வனாந்தரத்திலுள்ள காட்டுக்கழுதையானது மகத்தான ஜெந்துவாயிருக்கிறது. வேதாகமத்தில் தேவனுடைய மேன்மைச் சிறப்பை விளக்குவதற்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கிற மிருகங்களில், இதுவும் ஒன்றாயிருக்கிறது (யோபு. 39: 5–8.). அது மிகவும் விரைவுள்ளது. தனிமையாய்ச் சஞ்சரிக்கப் பிரியமுள்ளது, அடங்காத் தன்மையுள்ளது, சுயாதீன நாட்டமுள்ளது; பெடௌவின் அரபியரும் இத்தன்மையுடையவர்கள், அவர்கள் வனாந்தரவாசிகள்; சுகமுள்ள குடியிருப்பை அவர்கள் விரும்புகிறதில்லை. காட்டு மனுஷராக அலைந்து திரிந்து, கொள்ளையாடுகிறவர்களாயிருக்கிறார்கள். (யோபு. 11: 12; 24: 5. சங். 104: 11. எசா. 3: 14. எரே. 2: 24. தானி. 5: 21. ஓசி. 8: 9.)

**"அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாக இருக்கும்."** கொடுமை, நாசம், மோசம்முதலிய குரூரங்களைச் செய்வதைக் குறிக்கும் (ஆதி. 37: 27. யாத். 9: 3. உபா. 2: 16. யோசு. 2: 19. 1 சாமு. 18: 17, 21; 24: 13, 14.). பெடௌவின் சாதியார் எந்தப் பிரமாணத்துக்கும் கட்டுப்படுவதுமில்லை, எந்த உடம்படிக்கைக்கும் உடன்படுவதுமில்லை. சூறையாடுவதே தங்களுக்கு ஏற்ற தொழில் என்று எண்ணிவருகிறார்கள் என்றாலும்,

**"தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராகக் குடியிருப்பான்."** இஸ்மவேலின் சந்ததியார் சுயாதீனத்தைப் பாதுகாத்து, ஆபிராமின் மற்றச் சாதியாருக்கு முன்பாகப் பிரத்தியேகமான சாதியாராயிருப்பார்கள். பெடௌவின் சாதியார் அப்படியே இந்நாள்பரியந்தமும், சுயாதீனப் பிரியராயும் பிரத்தியேகமான சனங்களாயும் குடியிருந்துவருகிறார்கள். "எதிராக" என்பதற்குரிய எபிரெய வார்த்தையை "கிழக்கே" என்று சில வியாக்கியானிகள் திருப்புவதுண்டு. அப்படியானால் அவன் தன் சகோதரரெல்லாருக்கும் கிழக்கே வாசம் பண்ணுவான் என்றிருக்கவேண்டும். ஆதி. 25: 6ல் இந்தக் கருத்தாக வருகிறதானாலும், ஆதி. 25: 18க்கு அது ஒவ்வாது; அங்கே எதிராக என்று வருவதே சரியாயிருக்கிறது.





யிருப்பான் என்றார்.—அப்பொழுது அவள்: [1]என்
னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன்
அல்லவா என்று சொல்லி, தன்னோடே பேசின
கர்த்தருக்கு நீர் என்னைக் காண்கிற தேவன் என்று
14 பேரிட்டாள்.—ஆகையால், அந்தத் துரவு *பெயர்ல
காய்ரோயீ என்னப்பட்டது; அது காதேசுக்கும் பா
15 ரேத்துக்கும் நடுவே இருக்கிறது.—[2]ஆகார் ஆபிரா
முக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; ஆபிராம் ஆகார்
பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேல் என்று பேரிட்
16 டான்.—ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெற்ற
போது, ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருந்தான்.

[1] ஆதி. 31. 42. நியா. 5. 21.
* என்னைக் காண்கிற ஜீவனாயவரின் துரவு. ஆதி. 24. 62; 25. 11.
[2] கலா. 4. 22.

**13.** **"நீர் என்னைக் காண்கிற தேவன்."** ஆகார் தேவனுக்கு இந்தப் பேரை இட்டபோது சொல்லிய அர்த்தத்தைக் கவனிக்கையில், அவர் எல்லாக் காரியங்களையும் காண்கிற தேவன் என்பதைக் குறியாமல் "தம்மைக் காணும்படி இடங்கொடுத்த தேவன்" என்பதைக் குறிக்கும்; தேவனைக் கண்டபின்பு, தனக்குக் குருட்டாட்டம் பிடியாமலும் தன் புத்தி சித்தம்முதலியவற்றில் மாறுதல் இல்லாமலும் தான் பிழைத்திருந்து பார்க்கிறதாக விளம்புகிறாள். (நியா. 13: 21, 22. யாத். 24: 11; 32: 20.)

**14.** **"பெயர்லகாய்ரோயீ."** "பார்க்கிற ஜீவனுடையவரின் துரவு." அல்லது துரவில் தேவனைப்பார்த்தும், பார்த்தவள் இன்னமும் பிழைத்திருக்கிறாள் என்பதே அதின் கருத்து.

**"காதேசு."** ஆதி. 14: 7. வியாக்கியானம் பார்க்க.

**"பாரேத்து."** இன்ன இடத்திலிருந்ததென்பது திட்டமாய்த் தெரியாது.

### படிப்பினை.

### வச. 1—6.

(1) எந்த நிலைமையிலிருந்தாலும், நமக்குத் துன்பம் வருவதுண்டு. அத்தருணத்தில் விசுவாசத்தைக்கொண்டு முயற்சிசெய்தால், அதைப் பொறுமையோடே சகிக்கவும் கர்த்தர் நமக்கு நன்மைசெய்யும் காலத்துக்காகக் காத்திருக்கவும் ஏதுவுண்டு. நாம் ஆசிக்கிற காரியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, பொருந்தியற்ற வண்ணமாய் ஆகாத எத்தனங்களைக் கையாடுவது அவிசுவாசத்துக்கு ஓர் குறிப்பு.

(2) பெரிய பக்திமான்களும், அருவருப்பான தப்பிதங்களுக்குள் அகப்படுவதுண்டு. அவர்களுடைய இரத்தமாதிரியை முகாந்தரமாக வைத்து, நமது நெருங்கின இனத்தார் நம்மைத் தப்பிதமான காரியத்திற்கு ஏவுகிறதாயிருந்தால், சாத்தான் ஒளியின் தூதன் வேஷம் தரித்து நம்மண்டைக்கு வந்திருக்கிறான் என்று எண்ணி, அப்பேர்ப்பட்ட விஷயங்களுக்கு நாம் முற்றிலும் சம்பந்தப்படாதபடி விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(3) ஆகாருடைய மேட்டிமை; சாராளுடைய பொறுதியின்மை, ஆபிரகாமுடைய மனத்தாங்கல், சாராளுடைய கண்டிப்பு, ஆகார் வீட்டைவிட்டு ஓடி அடைந்த சங்கடங்கள் இவைகள் எல்லாம், மாம்சத்துக்குரிய சிந்தையினாலும் உபாயங்களினாலும் உண்டான துர்ப்பலன்களாயிருக்கின்றன. பாவத்தில் உடன்பட ஒன்று சேருகிறவர்கள் ஏகமாய்ச் சிட்சிக்கப்படுவார்கள்.

## 17. அதிகாரம்.

1. தேவன் உடன்படிக்கையைப் புதுப்பித்தது. 5. ஆபிராம் என்கிற பேர் அதிக ஆசீர்வாதத்துக்குக் குறிப்பாக, ஆபிரகாம் என்று மாற்றப்பட்டது. 10. சுன்னத்துக் கட்டளையிடப்பட்டது. 15. சாராய்க்குச் சாராள் என்கிற பேர் இடப்பட்டு அவள் ஆசீர்வதிக்கப்பட்டது. 17. ஈசாக்கின் பிறப்பு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது. 23. ஆபிரகாமும் இஸ்மவேலும் சுன்னத்தடைந்தது.

1 ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது,

(4) கோபத்தையும் பிரிவினைகளையும் முற்றுமாய் வெறுத்துத் தள்ளவேண்டும். நம்மிடத்தில் தஞ்சம் என்று ஒதுங்கினவர்களுக்கு அநியாயமாய் இடுக்கண் உண்டாகாதபடி பார்த்துக்கொள்வது, இரக்கத்துக்குரிய செய்கை.

(5) பெருமை, பொறுமையின்மை, பழிவாங்குங்குணம், இவைகளால் ஏவப்பட்டு, நாம் இருக்கிற நிலைமையை விட்டுவிடுவது விவேகமன்று; அது க்ஷேமமாயிருக்கவுமாட்டாது. சகிக்கிற குணம் நம்மிடத்தில் மேலிடும்படி அப்பியாசிக்கவேண்டும்.

### வச. 7—16.

(6) எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்ற கேள்விகள் நம்முடைய பாவத்தையும், நம்முடைய மோசத்தையும் எடுத்துக்காட்டுகிறவைகளாயிருக்கின்றன. ஆதலால் தேவனுடைய ஆலோசனையை நாம் கேட்டு, அதின்படி நடந்து மோசத்துக்கு விலகும்படி பார்க்கவேண்டும்.

(7) நம்முடைய தேவன் ஆபத்துக்கு உதவுகிற தேவனாக இருக்கிறார். மிகவும் அற்பமாய் எண்ணப்படுகிறவைகளையும், அவர் கவனிக்கிறவராயிருக்கிறார்.

(8) கர்த்தர் நம்முடைய சுபகாரியங்களைக் கவனிக்கிறவரல்ல என்று எண்ணவேண்டாம். அவருக்குத் தெரியாமல் நாம் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை. சாராளின் அடிமைப்பெண் தாகமாயிருக்க மனம் பொறுக்காதவர், சாராள் வருத்தமடையப் பார்ப்பாரா? தம்முடைய பிள்ளைகளை அவர் ஒருபோதும் கைவிடார். அவர் நமக்கு அநுக்கிரகம்பண்ணுகிற சகல நன்மைகளையும் நாம் உணர்ந்து, அவருக்கு நன்றியறிதலைச் செலுத்துவோமாக.

கவனிப்பு. வேதசரித்திரங்களை வாசிக்கையில், பக்திமான்கள் எந்தச் சுத்விஷயத்துக்காகப் புகழ்ச்சி பெற்றார்களோ, அந்த விஷயத்தையே இட்டுச் சாத்தான் அவர்களைச் சோதித்து, அவர்களை மேற்கொண்டானென்பதை நாம் கவனித்து அறியலாம். திருஷ்டாந்தமாக, ஆபிராம் விசுவாசத்துக்காகப் புகழப்பட்டான். என்றாலும் இந்த அதிகாரத்தில் பார்க்கிறபடி அவிசுவாசத்தில் அவன் அகப்பட்டான். மோசே என்பவன் சாந்தகுணமுள்ளவனென்று மெச்சிக்கொள்ளப்பட்டான். ஆகிலும் கற்பலகைகளை உடைத்துப்போடும் சமயத்திலும், கற்பாறையை எரிச்சலோடு அடித்தபொழுதும், கோபமுள்ளவனாகக் காணப்பட்டான். பேதுரு அப்போஸ்தலன் தைரியசாலியென்று பேர்பெற்றான்; ஆனாலும் ஒரு பெண் பரிகாசமாய்ப் பேசும்பொழுது அவன் அதைரியப்பட்டுப் பயந்தான்.

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்."

## 17. அதிகாரம்.

**1. "ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது."** முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதி நடந்த பதின்மூன்று வருஷங்க





கர்த்தர் ஆபிராமுக்குத் [1]தரிசனமாகி: [2]நான் சர்வவல்
லமையுள்ள தேவன்; [3]நீ எனக்கு முன்பாக நடந்து
2 கொண்டு [4]உத்தமனாயிரு.— நான் உனக்கும் எனக்
கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி,
[5]உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன்
3 என்றார். — அப்பொழுது ஆபிராம் [6]முகங்குப்புற
விழுந்து வணங்கினான். தேவன் அவனோடே பேசி:—
4 நான் உன்னோடே பண்ணுகிற என் உடன்படிக்கை
என்னவென்றால், [7]நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்

[1] ஆதி. 12. 1: 18. 1.
[2] ஆதி. 28. 3. யாத். 6. 3.
[3] ஆதி. 6. 9.
[4] மத். 5. 48.
[5] ஆதி. 9. 9. கலா. 3. 17, 18.
[6] 17. வசனம்.
[7] ரோ. 4. 11. கலா. 3. 29.

ளுக்குப்பின்பு இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்ட காரியம் நடந்தது. இவ்வளவுகாலமாய் ஆபிராமுக்குத் தேவனுடைய விசேஷித்த வெளிப்படுத்தல் கிடைக்கவில்லை.

**"நான் சர்வவல்லமையுள்ள தேவன்."** எபிரெயுவில் "எல்சாடாய்." சாடாய் என்கிற பெயரைப் பிலேயாமும் (எண். 24: 4, 16.), நகோமியும் (ரூத். 1: 20.), தேவனுக்கு வழங்கியிருக்கிறார்கள். யோபின் ஆகமத்தில் அந்த நாமம் முப்பத்தொருதரம் வருகிறது. அது உன்னதமானவரின் சாதாரண பெயராயிருக்கிறது. யாத். 6: 3ல் தேவன் முற்பிதாக்களுக்குச் சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் தரிசனமானார் என்றும் எகோவா என்ற நாமத்தினால் அவர்களுக்கு அவர் அறியப்படவில்லை என்றும் சொல்லியிருக்கிறது. எகோவா என்ற நாமம் உடன்படிக்கைச் சம்பந்தமாய் விசேஷித்தவிதமாக இஸ்ரவேலரின் தேவனாக எண்ணப்பட்டபோதிலும் அந்தப் பேர் (எகோவா) ஆதிகாலம் தொடுத்து அவருக்கே வழங்கும் பெயராயுமிருந்தது (ஆதி. 4: 26.). இங்கே நம்பிக்கைக்கு ஏதுவில்லாத காரியத்தை ஆபிராமுக்குத் தேவன் வாக்குத்தத்தஞ் செய்ததால் தம்மால் செய்யக்கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்று ஆபிராம் நம்பத்தக்கதாக அவர் தம்மைச் சர்வவல்லமையுள்ளவர் என்று சொல்லுகிறார். அவர் தமது சர்வவல்லபத்தை வார்த்தையினாலும் செய்கையினாலும் இங்கே விளங்கச்செய்தார்.

**"எனக்கு முன்பாக நடந்துகொண்டு."** தேவனுக்குப் பிரியமுண்டாக நடப்பதையும் அவர் சித்தத்தின்படி செய்வதையும் குறிக்கும்.

**"உத்தமனாயிரு."** நோவா தன் தலைமுறையிலே உத்தமனாயிருந்தான் (ஆதி. 6: 9.). ஆபிராம் உத்தமனாயிருக்கப் பிரயாசத்தை எடுக்கும்படி கர்த்தர் கட்டளையிடுகிறார்.

**2. "என் உடன்படிக்கையை ஏற்படுத்தி."** ஆதி. 15: 18ல் உடன்படிக்கையைத் துண்டித்ததென்று சொல்லியிருக்கிறது. இங்கேயே "உடன்படிக்கையை அருளுவேன்" என்றிருக்கிறது. சரிசமானமான இருவரால் செய்யப்படுவதாக அல்ல, பெரியோரால் கொடுக்கப்படுவதாகக் காட்டியிருக்கிறது; அது விருத்தசேதனத்தால் முத்திரிக்கப்பட்டது. இது கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துவின்மூலமாய்ச் செய்யப்பட்டதும் ஞானஸ்நானத்தின்மூலமாய் முத்திரிக்கப்பட்டதுமான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருந்தது.

**4. "நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாய்."** ரோ. 4: 16ல் ஆபிரகாம் நம்மெல்லாருக்கும் தகப்பன் என்று காட்டியிருக்கிறது. அவன்

5 பனாவாய். — இனி உன் பேர் ஆபிராம் என்னப்படா
மல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்
பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் *ஆபிரகாம்
6 என்னப்படும்.—உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப்
பண்ணி, உன்னிலே [1]ஜாதிகளை உண்டாக்குவேன்;
உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்.—
7 உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும்
நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும்,
உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன்
சந்ததிக்கும் நடுவே, [2]என் உடன்படிக்கையை நித்
8 திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்.—நீ [3]பரதே
சியாய்த் தங்கிவருகிற கானான் தேசமுழுவதையும்,
உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும்

* பலஜனபிதா. நெகே 9. 7. ரோ. 4. 17.
[1] ஆதி. 35. 11. மத். 1. 6. ஐ.
[2] கலா. 3. 17. எபி. 11. 16. ரோ. 9. 10.
[3] ஆதி. 12. 7: 48. 4.

இஸ்மவேலர், ஏதோமியர், மீதியானியர், ஆகாரியர் முதலியவர்களுக்குப் பிதாவாயிருந்தாலும் அவன் விசுவாசமார்க்கத்தில் நடக்கும் யாவருக்கும் தகப்பனாயிருக்கிறான்.

**5. "ஆபிராம்."** "உன்னத பிதா." ஆபிராம் என்ற வார்த்தைக்கு இன்னொரு அர்த்தம் சொல்லப்படுவதுமுண்டு. அது என்னவெனில் ஆபி—அராம் அதாவது ஆராம் அல்லது சீரியாவின் தகப்பன் என்பது.

**"ஆபிரகாம்."** "திரள்ஜன பிதா." எந்தக் கோத்திரத்திலும் பாஷைக்காரரிலுமுள்ள விசுவாசிகளான கூட்டத்தாருக்கும் அதன் அரையிலிருந்து பிறந்த பற்பல ஜாதியாருக்கும் அவன் மூற்பிதாவாயிருந்தான். புதிய ஏற்பாட்டில் புதிய பேர் கொடுக்கப்படுவது புத்திர சுவிகாரத்துக்கும் அப்படிப் பேர்தரிக்கப்பட்டவன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதற்கும் அவன் பேர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதற்கும் குறிப்பாயிருக்கிறது.

**6. "உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்."** தாவீது சாலொமோன்முதலிய ராஜாக்கள் எழும்பினார்கள்.

**7. "உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி."** ஒரு சாதியாருக்குத் தேவனாயிருப்பேன் என்று கர்த்தர் அருளிய முதல் வாக்குத்தத்தம் இதுவே. ஆபிரகாமையும் அவன் வித்தாரையும் தமது விசேஷித்த ஆதரவுக்குள்வைத்துக் காப்பாற்றுவது உடன்படிக்கையில் தேவன் நிறைவேற்றவேண்டிய பங்கு. ஆபிரகாமின் வித்தாரோ தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவரிடத்தில் அன்புகூர்ந்து அவருக்கு நன்றியறிதலைக் காட்டவேண்டியவர்களாயிருந்தார்கள். இந்த உடன்படிக்கை சீனாயிலும் பின்பு தீர்க்கதரிசிகளாலும் புதுப்பிக்கப்பட்டது. தேவனுக்கும் அவருடைய சனங்களுக்கும் இருக்கிற சம்பந்தம் பரலோகத்தில் பூரணப்படும்.





நித்திய சுதந்தரமாகக் கொடுத்து, [1]நான் அவர்களுக்
குத் தேவனாயிருப்பேன் என்றார்.
9 பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: இப்பொழுது
நீயும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாகவ
ரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்
10 கொள்ளுங்கள்.—எனக்கும் உங்களுக்கும், உனக்குப்
பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும்,
நீங்கள் கைக்கொள்ளவேண்டியதுமான என் உடன்
படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும்
சகல ஆண்பிள்ளைகளும் *விருத்தசேதனம்பண்ணப்
11 படவேண்டும்; — உங்கள் நுனித்தோலின் மாம்சத்
தை விருத்தசேதனம்பண்ணக்கடவீர்கள்; அது எனக்

[1] யாத். 6. 7. வெளி. 21. 3.
* சுன்னத்து. அப். 7. 8.

**8. "நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன்."** தற்காலத்தில் யூதசனங்கள் செய்த கொடிய பாதகத்தினிமித்தம் தண்டனையாக உலகம் எங்கும் சிதறடிக்கப்பட்டிருந்தாலும் மீட்கிறவர் சீயோனுக்கு வந்து அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்கிவிடும் காலத்தில் அவர்கள் மீளவும் கானான்தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். தேவனுடைய பார்வையில் கானான் யூதருடைய தேசமாயிருக்கிறது. அது அவரால் அவர்களுக்குச் சுயசுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**10. "விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்."** எகிப்தியர் விருத்தசேதனம் பண்ணிவந்தார்கள் என்றும் பலஸ்தீனாவிலுள்ள சீரியர் அந்தச் சடங்கை எகிப்தியரிடத்திலிருந்து கற்றுக்கொண்டார்கள் என்றும் எரோதோத்து என்னும் சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான். ஓரிஜன் என்பவனும் விருத்தசேதனம் எகிப்திய பூசாரிகளுக்குள் வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறான். எகிப்தின் சின்னங்களைப் பார்க்கையில் அந்தச் சடங்கு பூர்வீகத்தியகாலங்களில் எகிப்தில் பொதுவாக அநுசரிக்கப்பட்டுவந்ததாக அறியலாம். ஆபிரகாம் எகிப்துக்குப் போனபோது அங்கே இந்தச் சடங்கு நிறைவேற்றப்பட்டுச் சன்மார்க்கச் சுத்தாங்கத்துக்குச் சம்பந்தப்பட்டதாய் எண்ணப்பட்டதைக் கண்டிருக்கலாம் என்று வைத்துக்கொண்டாலும் அப்படிச் சுத்தாங்கமாய் மதிக்கப்பட்டதைக் கர்த்தர் ஆபிரகாமுக்குக் கொடுத்த சாக்கிரமெந்துக்குப் புறம்பான அடையாளமாக ஏற்படுத்துவதில் நியாய விரோதமில்லையே.

விருத்தசேதனமானது, மனிதருடைய இருதயம் பாவத்தின் இச்சைகளால் நிறையப்பட்டிருக்கிறதென்றும், மனிதன் தேவதயவைப்பெற உடம்படிக்கைக்குள்ளாகவேண்டுமானால் பாவ இச்சைகள் யாவையும் அழித்துப்போடவேண்டும் என்றும் போதிக்கிறது: மேலும் அது பழைய மனிதனைக் களைந்து புதுப்பிறப்படைவதையும் புதிய மனிதன் பரிசுத்தத்துக்குத் தன்னைப் பிரதிஷ்டை செய்வதையும் குறிக்கும். ஆபிரகாம் சாராய் என்பவர்களுடைய பேர்கள் மாற்றப்பட்டது. அவர்கள் நிலைமை மாறுதலடைந்ததற்கு அடையாளமாயிருந்தது.

கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு [1]அடை — [1] ரோ. 4. 11.
12 யாளமாயிருக்கும்.—உங்களில் தலைமுறை தலைமுறை
யாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்
நாளிலே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்;
வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நி
யனிடத்தில் பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப்
பிள்ளையும், அப்படியே [2]விருத்தசேதனம் பண்ணப் — [2] லேவி. 12. 3. லூக். 2. 21. யோ. 7. 22. பிலி. 3. 5.
13 படவேண்டும்.—உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும்,
உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும், விருத்த
சேதனம் பண்ணப்படவேண்டியது அவசியம்; இப்
படி என் உடன்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்
14 திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது.—நுனித்
தோலின் மாம்சம் விருத்தசேதனம்பண்ணப்படா
திருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால்,
*அந்த ஆத்துமா என் உடன்படிக்கையை மீறினபடி — * ஆள்.
யால், தன் ஜனத்தில் இராதபடிக்கு [3]அறுப்புண்டு — [3] யாத். 4. 24-26
போவான் என்றார்.

**12.** "**எட்டாம் நாளிலே.**" *குழந்தைபிறந்த எட்டாம் நாளிலே அது விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்பது பிரமாணம். எட்டாம் நாள் ஓய்வுநாளாயிருந்தாலும் அந்த நாளிலும் அந்தச் சடங்கை யூதர் திட்டமாய் நிறைவேற்றிவந்தார்கள்.* (யோவா. 7: 22, 23.)

**13.** "**உன் வீட்டிலே பிறந்த பிள்ளையும், உன் பணத்திற்குக் கொள்ளப்பட்டவனும், ௸.**" *அந்நியரில் யாவனானாலும் பஸ்காவைப் புசிக்க விரும்பினால் அவன் விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்று மோசே கட்டளையிட்டிருக்கிறான். எவன் விருத்தசேதனம் பெறுகிறானோ அவன் இஸ்ரவேலனாக எண்ணப்பட்டு உடன்படிக்கையின் நன்மைகளுக்குப் பங்குள்ளவனாவான். விருத்தசேதனம் ஒரு சாதியாருக்குமாத்திரம் கட்டினது. ஞானஸ்நானமோ இரட்சிக்கப்படவேண்டுமென்று விரும்புகிற யாவரையும் கட்டுகிறதாயிருக்கிறது. "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்."*

*ஆபிரகாம் குடும்பத்தில் பிறந்தவர்களும் அவன் அடிமைகளும் அவர்கள் பிள்ளைகளும் விருத்தசேதனம் பெறும்படியாகக் கர்த்தர் கட்டளையிட்டார். பிற்றியகாலத்தில் இஸ்ரவேலருக்குள் அடிமைகள் எந்தெந்தக் கோத்திரத்தலைவனைச் சேர்ந்தார்களோ அந்தக் கோத்திரத்தாரோடே அவர்கள் எண்ணப்பட்டதாகத் தோன்றுகிறது.*

**14.** "**தன் ஜனத்திலிராதபடிக்கு அறுப்புண்டுபோவான்.**" *யூத வியாக்கியானிகள், விருத்தசேதனத்தை அசட்டைசெய்து அதைப் பெறாதவன் எவனும் தேவகரத்தால் மரணதண்டனை அடைவான் என்று தாற்பரியம் சொல்லியிருக்கிறார்கள். கிறிஸ்தவ வியாக்கியானிகளில் சிலர் அப்படிப்பட்டவன்*





15 பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி: உன்
மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்
பாயாக; *சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக் — * நாயகி.
16 கும்.—நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே
உனக்கு [1]ஒரு குமாரனையும் தருவேன்; [2]அவள் ஜாதி — [1] ஆதி. 18. 10: 35. 11.
களுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ரா — [2] கலா. 4. 31. 1பே. 3, 6.
ஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன்
என்றார்.
17 அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து
[3]நகைத்து: நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்கு — [3] ஆதி. 18. 12: 21. 6.
மோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளைபெறு
வாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக்கொண்

*அதிகாரிகளால் மரணதண்டனையைப் பெறுவான் என்று அர்த்தஞ்சொல்லுகிறார்கள்; இது சரியெனக் காணப்படுகிறதில்லை. "மரணதண்டனையையும்," "ஜனத்திலிராதபடி அறுப்புண்டுபோவான்" என்பதையும் வேதத்திலே அடிக்கடி வித்தியாசப்படுத்திப் பேசியிருப்பதைக் காணலாம்* (லேவி. 20: அதி.). *சுத்தமான மிருகங்களை ஆசரிப்புக் கூடாரவாசல்களில் அன்றி மற்ற இடங்களில் அவைகளைக் கொன்றாலும்* (லேவி. 17: 4, 5.) *இரத்தத்தைச் சாப்பிட்டாலும்* (லேவி. 17: 9, 14.) *அப்படிச் செய்கிறவன் அறுப்புண்டுபோவான் என்று சொல்லியிருக்கிறது. ஆனால் தேவதூஷணம், கொலை இவைகளைச் செய்கிறவன் கொல்லப்படவேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. இந்தக் காரியங்களைக் கவனிக்கையில் சனத்திலிருந்து அறுப்புண்டுபோவான் என்பது சபையைவிட்டு நீக்கப்படுதலைக் குறிக்கும் என்று எண்ணத்தகும். அப்படிப் புறம்பாக்கப்பட்டவன் யூதருடைய சலாக்கியத்துக்கும் நீங்கலாவான்.*

**15.** "**சாராள் என்பது அவளுக்குப் பேராயிருக்கும்.**" *சாராய் என்பதற்கு "என் பிரபு ஸ்திரீ" என்று சிலரும் பிரபுத்தனமானவள் அல்லது ராசரீகமானவள் என்று வேறு சிலரும் அர்த்தஞ் சொல்வதுண்டு. சாராள் என்பதற்குப் "பிரபு ஸ்திரீ" என்றர்த்தம். ஒரு சாதியாருக்குத் தாயாயிராமல் திரள் சாதியாருக்குத் தாயாயிருப்பாள் என்பதே அந்தப் பேரின் கருத்தாயிருக்கிறது.* (வச. 16.). *அவள் பேர் மாற்றப்பட்டதைப்பார்க்கில் அவளும் உடம்படிக்கைக்குள் சேர்க்கப்பட்டவள் என்று அறியலாம்.*

**16.** "**அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்.**" *ஆபிரகாமுக்குச் சாராளால் ஒரு குமாரன் பிறப்பான் என்று இங்கே முதலாவதாக நேராய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.*

**17.** "**ஆபிரகாம் முகங்குப்புறவிழுந்து நகைத்து.**" *யூத வியாக்கியானிகளும் கிறிஸ்தவ வியாக்கியானிகளும் ஆபிரகாமின் நகைப்புப் பிரமிப்பினாலும் சாராளின் நகைப்பு* (ஆதி. 18: 12.), *அவிசுவாசத்தினாலும் உண்டானதென்று*

18 டு,—இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக!
என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம்பண்
19 ணினான்.—அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய
[1]சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறு [1] ஆதி.18.10:21. 2. கலா. 4. 28.
வாள், அவனுக்கு *ஈசாக்கு என்று பேரிடுவாயாக; * நகைப்பு.
என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப்
பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்

சொல்லுகிறார்கள். ஆனால் வாக்கியத்திலே நூறுவயதானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ என்று ஆபிரகாம் தன்னிருதயத்தில் சொல்லி இஸ்மவேலுக்காக விண்ணப்பம்பண்ணினதையும் கர்த்தர் அவனுக்கு மறுமொழியாய் நிச்சயமாகச் சாராள் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள். அவள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடம்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று சொன்னதையும் கவனிக்கையில் ஆபிரகாமுக்கு விசுவாச பெலவீனமிருந்ததென்றும் அந்தப் பெலவீனத்தை நீக்கும்படி தேவன் இப்படி அவனை ஸ்திரப்படுத்தினார் என்றும் அதின்பேரில் அவன் தன் சரீரம் செத்துப்போனதாயிருந்தும் அதை எண்ணாமல் தேவவாக்குத் தப்பாமல் நிறைவேறும் என்று விசுவாசித்தான் (ரோ. 4: 19–21.) என்றும் அறியவேண்டியதாயிருக்கிறது. இருபேரும் நகைத்ததைப் பார்க்கில் ஈசாக்கின் பிறப்பு இயற்கைக்கு விரோதமாயிருந்ததென்றறியலாம்.

**18. "இஸ்மவேல் உமக்குமுன்பாகப் பிழைப்பானாக."** பதின்மூன்று வருஷங்களாய் இஸ்மவேல் வீட்டுப்பிள்ளையாக வளர்ந்துவந்தான் (ஆதி. 15: 3.). அவனே சுதந்தரவாளி என்று எண்ணப்பட்டுமிருந்திருப்பான். இந்த வாக்கியத்தை இரண்டுவகையாய் வியாக்கியானிகள் விஸ்தரித்திருக்கிறார்கள். (1) வயது கடந்தபின்பு எனக்குச் சாராள்மூலமாய் ஒரு குமாரன் அருளப்படும் பெரிய ஈவு நம்பிக்கைக்கு வியர்த்தமாயிருப்பதினால், இஸ்மவேல் உமக்குமுன்பாக வாக்குத்தத்தத்தின் சுதந்தரனாயிருப்பானாக. (2) இன்னொரு சுதந்தரன் பிறக்கப்போகிறதால் இஸ்மவேல் சகல சுதந்தரத்துக்கும் நீங்கலாகிப்போவானே அவனும் உமக்குமுன்பாக ஆசீர்வதிக்கப்படுவானாக என்பதே. இவைகளில் முதல் வியாக்கியானம் சரியென்றுதோன்றுகிறது.

**19. "நிச்சயமாய்."** தேவன் ஆபிரகாமுக்குப் பண்ணின வாக்குத்தத்தத்தை உறுதியாய் நம்பும்படியாக அவர் உறுதிமொழியாக இந்த வார்த்தையைச் சொன்னார்.

**"அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக."** "நகைக்கிறவன்." அவன் பிறப்பு இயல்புக்கு மிஞ்சினதாயிருந்ததால் அதற்கு என்றுமுள்ள ஞாபகமாயிருக்கும்படி ஈசாக்கு என்ற பெயர் கொடுக்கும்படி கர்த்தர் உத்தரவருளினார்.

**"என் உடன்படிக்கையை, அவனுக்கும், ௸"** ஆபிரகாமின் சந்ததியார் யாவரும் விருத்தசேதனம் பெற்றாலும் வாக்குத்தத்தமானது வாக்குத்தத்த புத்திரனுக்கும் அவன் வித்தாருக்குமாத்திரம் உறுதிப்படுத்தப்பட்டது.





20 கையாக ஸ்தாபிப்பேன். — இஸ்மவேலுக்காகவும் நீ
செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்; நான் அவனை
ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் [1]பலுகவும் [1] ஆதி. 16. 10.
பெருகவும் பண்ணுவேன்; [2]அவன் பன்னிரண்டு பிர [2] ஆதி.25.12.16.
புக்களைப் பெறுவான்; [3]அவனைப் பெரிய ஜாதியாக்கு [3] ஆதி. 21. 18.
21 வேன். — வருகிற வருஷத்தில் குறித்தகாலத்திலே,
[4]சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே [4] ஆதி. 21. 2.
நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்
றார்.
22 தேவன் ஆபிரகாமோடே பேசி முடிந்தபின்பு, அவர்
அவனைவிட்டு எழுந்தருளினார்.
23 அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்ம
வேலையும், தன் வீட்டிலே பிறந்த யாவரையும், தான்
பணத்திற்குக் கொண்ட அனைவருமாகிய தன் வீட்டி
லுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் சேர்த்து, தே
வன் தனக்குச் சொன்னபடி, அவர்கள் நுனித்தோலின்
மாம்சத்தை அந்நாளிலேதானே விருத்தசேதனம் பண்
24 ணினான்.—ஆபிரகாமுடைய நுனித்தோலின் மாம்சம்
விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் தொண்
25 ணூற்றொன்பது வயதாயிருந்தான். — அவனுடைய

**20. "இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்."** இஸ்மவேலுக்காக ஆபிரகாம் செய்த செபத்தைக் கர்த்தர் கேட்டு அனுகூலமான உத்தரவு அருளினார். அவன் வாக்குத்தத்தத்தின் புத்திரனாயிராவிட்டாலும் உலக ஆசீர்வாதங்கள் அவனுக்கு வாக்குக்கொடுக்கப்பட்டது. இஸ்ரவேலில் பன்னிரண்டு கோத்திரத்தார் இருந்ததுபோல இஸ்மவேலிலும் பன்னிரண்டுகோத்திரத்தார் எழும்பினார்கள் (ஆதி. 25: 12–16.). இந்த வாக்குத்தத்தம் பிற்பாடு ஆகாருக்குப் புதுப்பிக்கப்பட்டது. (ஆதி. 21: 17, 18, 21.)

**21. "ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்."** உடன்படிக்கையானது ஈசாக்கோடே முன்னடையாளமாயும் ஆபிரகாமின் வித்தானவரோடே உள்ளபடியாயும் ஏற்படுத்தப்பட்டது. ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய புத்திரரோடே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையானது, ஆபிரகாமின் வித்தானவரும் தாவீதின் குமாரனானவருமாகிய கிறிஸ்து இயேசுவின்மூலமாய் உண்டான பாவமன்னிப்பு, சமாதானம், நித்தியஜீவன் முதலியவைகளைக்குறித்த உடன்படிக்கையே. (ரோ. 9: 4–7. எபி. 2: 16.)

குமாரன் இஸ்மவேலுடைய நுனித்தோலின் மாம்சம்
விருத்தசேதனம் பண்ணப்படும்போது, அவன் பதின்
26 மூன்று வயதாயிருந்தான். — ஒரேநாளில் ஆபிரகா
மும் அவன் குமாரன் இஸ்மவேலும் விருத்தசேதனம்
27 பண்ணப்பட்டார்கள். — வீட்டிலே [1]பிறந்தவர்களும்
அந்நியரிடத்திலே பணத்திற்குக் கொள்ளப்பட்டவர்
களுமாகிய அவன் வீட்டு மனுஷர்கள் எல்லாரும்
அவனோடேகூட விருத்தசேதனம் பண்ணப்பட்டார்
கள்.

[1] ஆதி. 13. 19.

**25.** **"இஸ்மவேல்.........பதின்மூன்று வயதாயிருந்தான்."** *மகமது மார்க்கத்தார் பதின்மூன்று வயதுவரைக்கும் விருத்தசேதனத்தை நிறுத்திவைக்கிற வழக்கம் அவர்களுக்குள் இந்நாள்பரியந்தம் இருந்துவருகிறது.*

**26.** **"ஆபிரகாமும்....விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்."** *ஆபிரகாம் கர்த்தருடைய கட்டளைக்குத் திட்டமாய்க் கீழ்ப்படிந்ததில் தன் விசுவாச உண்மை விளங்கக் காட்டினான்* (*யாக்.* 2: 22–24.). *அவன் விருத்தசேதனத்தை விசுவாசத்துக்கு முத்திரையாகப் பெற்றான். விசுவாசியாகி நீதிமானாக எண்ணப்பட்டபின்பு அவன் இந்தச் சடங்கைச் செய்யும்படி கர்த்தர் கட்டளையிட்டார்.*

படிப்பினை.

வச. 1—8.

(1) *கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குக் காலத்துக்குக்காலம் தமது விசேஷித்த தயவுகளையும், ஆறுதல்களையும் செய்வதுண்டு. நெடுநாட்களாய்ப் பக்திமான்களுடைய விசுவாசம் பரீட்சிக்கப்பட்டாலும், கர்த்தர் அவர்களில் அதைப் பலப்படுத்திவருகிறவராயிருக்கிறார். கர்த்தரை நம்பி, அவருக்குக் காத்திருக்கிறவர்கள் கடைசியாக வெட்கத்துக்குட்படமாட்டார்கள்.*

(2) *நமக்குண்டாகிய வருத்தத்திலே சகல தாழ்ச்சியும் அற்றுப்போகும்வரையும் சர்வ சம்பூரணரும் சர்வ வல்லமையுமுள்ளவர் தமது மகிமையான நோக்கம் நிறைவேற ஆசீர்வாதங்களை நிறுத்திவைப்பதுண்டு.*

வச. 9—27.

(3) *திவ்விய வெளிப்படுத்தலில் காட்டப்பட்டிருக்கிற உபதேசங்கள்மாத்திரமல்ல, புதிய உடன்படிக்கையின் முத்திரைகளும், நாம் குற்றமுள்ளவர்களும் கறைபட்டவர்களுமாயிருக்கிறோம் என்று விளக்கி, பிராயச்சித்த இரத்தம் நமக்கு அவசியம் என்பதைக் காட்டி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சகரை நோக்கும்படி செய்கின்றன.*

(4) *மாம்சத்தின்பேரில் நம்பிக்கை வையாமல், ஆவியினால் இருதயத்தில் விருத்தசேதனம் பெறுகிறவர்கள், உடன்படிக்கைக்குச் சுதந்தரராவார்கள். புறம்பாகமார்க்கத்தை அநுசரிக்கிறவர்கள் ஆவியானவரால் முத்திரை போடப்பட்டவர்களல்ல.*

(5) *விசுவாசத்தில் வல்லவர்களாகி வருத்தமான காரியங்களிலும் பூரண கீழ்ப்படிதலைக் காட்டினால், தேவன் நம்முடைய தேவனும், நம்முடைய நித்தியபங்காயும் இருப்பார்.*





## 18. அதிகாரம்.

*1. ஆபிரகாம் மூன்று தேவதூதர்களுக்கு உபசாரஞ்செய்தது. சாராள் ஒரு குமாரனைப் பெறுவாளென்கிற ஆச்சரியமான காரியத்தைக் குறித்துச் சந்தேகித்து நகைத்ததற்காகக் கடிந்துகொள்ளப்பட்டது. 17. சோதோமின் அழிவு ஆபிரகாமுக்கு முன்னதாய் அறிவிக்கப்பட்டது. 23. ஆபிரகாம் அந்த ஊராருக்காக விண்ணப்பம் பண்ணினது.*

1 பின்பு கர்த்தர் [1]மம்ரேயின் சமபூமியிலே அவனுக்
குத் தரிசனமானார். அவன் பகலின் உஷ்ணவேளை
2 யில் கூடாரவாசலிலே உட்கார்ந்திருந்து, — [2]தன்
கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ,
மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்; அவர்
களைக் கண்டவுடனே, அவன் கூடாரவாசலிலிருந்து
அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும்

[1] ஆதி. 13. 18. 14. 13.
[2] ஆதி. 19. 1. எபி. 13. 2. 1 பே. 4. 9.

18. அதிகாரம்.

**1.** **"மம்ரேயின் சமபூமியிலே."** *மம்ரேயின் கர்வாலிமரத்தோப்பிலே.* (*அதி.* 13: 8; 14: 13. *வியாக்கியானம் பார்க்க.*)

**"கர்த்தர் அவனுக்குத் தரிசனமானார்."** *ஆபிரகாம் விருத்தசேதனம் பெற்ற மூன்றாம்நாளிலே அவனைச் சுகப்படுத்தும்படியாகக் கர்த்தர் தரிசனமானார் என்றும் நோவினிமித்தம் ஆபிரகாம் வெளியிலிருந்த தன் ஆடுமாடுகளைப் பார்க்கப்போகாதபடிக்குக் கூடாரத்தில் தரித்திருந்தான் என்றும் யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது.*

**"பகலின் உஷ்ணவேளையில்."** *ஆபிரகாம் தோப்பிலே கூடாரம் அடித்திருந்தான். பகல் உஷ்ணவேளையில் காற்றுக்காகக் கூடாரவாசலில் உட்கார்ந்திருந்தான். நமது தேசத்தில் வேலைசெய்பவர்கள் பொதுப்பட மரநிழலில் மத்தியானத்திலே வெயிலுக்கு ஒதுங்கியிருக்கிறதுண்டே; அந்த வழக்கம் யூதருக்குள்ளும் இருந்ததாகத் தோன்றுகிறது.*

**2.** **"மூன்று புருஷர்."** *முதலாம் வசனத்தில் கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமானார் என்றும்; இருபத்திரண்டாம் வசனத்தில் அந்தப் புருஷர் சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்குமுன்பாக நின்றுகொண்டிருந்தான் என்றும் அதி.* 19: 1*ல் இரண்டு தூதரும் சோதோமுக்கு வந்தார்கள் என்றும் சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் மூன்று புருஷரில் இருவர் தேவதூதர்கள் என்றும் ஒருவர் கர்த்தர் என்றும் அறியலாம். ஆபிரகாமுக்குத் தரிசனமான கர்த்தர் நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே; ஏனென்றால், தேவனை ஒருக்காலும் ஒருவனும் கண்டதில்லை.*

**"தரைமட்டும் குனிந்து."** *சிறியோர் பெரியோருக்குச் செய்யும் வந்தனக்குறிப்பு* (*அதி.* 23: 7, 12; 33: 6, 7.). *ஆபிரகாம், தான் அப்போது தேவதூதரை உபசரித்ததாக நினைக்கவில்லை.* (*எபி.* 13: 2.)

3 குனிந்து:— ஆண்டவரே, உம்முடைய கண்களில்
எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடி
4 யேனை விட்டுக் கடந்துபோகவேண்டாம்.—[1]கொஞ் [1] ஆதி. 19. 2; 43. 24.
சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக்
5 கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள்.—நீங்
கள் உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக் [2]கொஞ் [2] நியா. 6. 18; 19. 5 சங். 104. 15.
சம் அப்பம் கொண்டுவருகிறேன்; அப்புறம் நீங்கள்
உங்கள் வழியே போகலாம்; இதற்காகவே அடியேன்
இடம்வரைக்கும் வந்தீர்கள் என்றான். அதற்கு அவர்
6 கள்: நீ சொன்னபடி செய் என்றார்கள்.—அப்பொழுது
ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்தில் சாராளிடத்திற்
குப் போய்: நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவு
7 எடுத்துப் பிசைந்து, அப்பம் சுடு என்றான்.—ஆபிர
காம் மாட்டுமந்தைக்கு ஓடி, ஒரு நல்ல இளங்கன்

**3.** "ஆண்டவரே." ஆபிரகாம் மூன்றுபேரில் முக்கியமானவரைப் பார்த்து இப்படிப் பேசினான். கனம்பண்ணுகிறதில் நாம் முந்திக்கொள்ளவேண்டும். (1 பேது. 2: 17. ரோ. 12: 10.)

"அடியேன்." பிரயாணியைப் பார்த்து இப்படி ஆபிரகாம் சொன்னபோது, அது அத்தேசத்து வழக்கமாயிருந்தபோதிலும் ஆபிரகாமின் மனத்தாழ்மையும் அது விளக்குகிறதாயிருக்கிறது. ஆபிரகாம் மூவரில் விசேஷித்தவரோடே பேசினாலும் மரியாதையாக மற்ற இருவரையும் சேர்த்து உபசரித்தான்.

**4.** "உங்கள் கால்களைக் கழுவி." இது நம்முடைய தேச வழக்கப்படி பிரயாணத்திலிருந்து வந்தவர்களுக்குச் செய்யும் முதல் மரியாதையாயிருக்கிறது.

**5.** "உங்கள் இருதயங்களைத் திடப்படுத்த." எபிரெயுவில் "இருதயம்" என்பது முழுமனிதனையும் குறிக்கும்.

"அப்புறம் நீங்கள் உங்கள் வழியே போகலாம்." ஆபிரகாம் இன்னம் அந்த மூவரையும் வழிப்பிரயாணிகள் என்றே எண்ணியிருந்தான்.

"இதற்காகவே அடியேன் இடம்வரைக்கும் வந்தீர்கள்." நமது தேசத்திலும் உதாரமான பிரபுக்கள் வீட்டுக்கு அநேகர் பிரயாணங்களில் தங்களை இளைப்பாற்றிக்கொள்ளும்படி வருவதுண்டு.

**6.** "மூன்றுபடி மெல்லியமாவு எடுத்து." எபிரெயுவில் மூன்று செயா. ஒரு செயா மூன்றே முக்கால்படி அளவாயிருக்கும்.

"அப்பம் சுடு." அவசரத்துக்கு இப்படிப்பட்ட உணவு செய்வது அத்தேசத்தாரின் வழக்கம். (1 இரா. 19: 6.)

**7.** "மாட்டுமந்தைக்கு ஓடி." ஆபிரகாமுக்கு 318 வேலைக்காரர் இருந்தாலும் பிரயாணிகளைக் கனஞ்செய்ய அவன்தானே மந்தைக்குத் துரிதமாய்ப்





றைப் பிடித்து, வேலைக்காரன் கையிலே கொடுத்தான்;
8 அவன் அதைச் சீக்கிரத்தில் சமைத்தான்.—ஆபிரகாம்
வெண்ணெயையும் பாலையும் சமைப்பித்த கன்றையும்
எடுத்துவந்து, அவர்கள் முன்பாக வைத்து, அவர்கள்
அருகே மரத்தடியில் நின்றுகொண்டிருந்தான்; அவர்
கள் புசித்தார்கள்.
9 அவர்கள் அவனை நோக்கி: உன் மனைவி சாராள்
எங்கே என்றார்கள்? அதோ கூடாரத்தில் இருக்கிறாள்
10 என்றான்.—அப்பொழுது அவர்: [1]ஒரு உற்பவகாலத் [1] 2 இரா. 4. 16.
திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப

போய் வாய்க்கு மிருதுவாயிருக்கும் ஒரு இளங்கன்றைக் கொண்டுவந்து சமைத்தான்.

**8.** "வெண்ணெய்." எபிரெயர், கிரேக்கர், ரோமர்முதலிய சாதியாருக்கு வெண்ணெய் எடுக்கவேண்டிய விதம் தெரியாது. இங்கே வெண்ணெய் என்கிற வார்த்தை தயிர் அல்லது பால்க்கட்டியைக் குறிக்கலாம்.

"அவர்கள் புசித்தார்கள்." ஆவிகளான இந்தப் பிரயாணிகள் மனுஷரூபத்தைத் தரித்து ஆகாரத்தைப் புசித்ததைப்பற்றி யுண்டாகிய சிக்குகளை வியாக்கியானிகள் அறுக்கக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். தேவதூதர்கள் புசிக்கும் பாவனையைக் காட்டினார்களேயன்றி உள்ளபடி சாப்பிடவில்லை என்று யூதர்கள் சொல்வதுண்டு (நியா. 13: 16.). போஜனம் அற்புதமாயாவது மற்றவிதமாயாவது பட்சிக்கப்பட்டது என்பதைமாத்திரம் அறிவோம். நம்முடைய இரட்சகரும் உயிர்த்தெழுந்தபின்பு புசித்தார் (லூக். 24: 42, 43.). ஆதாம் ஏவாள் என்பவர்கள் பாவம் செய்யும்முன் கனிகளைப் புசித்துவந்தார்கள். இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சாப்பிட்ட மன்னா தூதர்களின் அப்பம் என்று சொல்லியிருக்கிற பாவனையாயிருக்கலாம். புதிய பூமியில் பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவவிருக்ஷம் இருந்தென்பதையும் வாசிக்கிறோம்.

**9.** "அவர்கள் அவனை நோக்கி." 10–ம் வசனத்தில் அவர் பேசினார் என்றும், 13, 17, 20–ம் வசனங்களில் கர்த்தர் பேசினார் என்றும் பார்க்கிறோம். சாராள் எங்கே என்று மூவரும் கேட்டார்கள். ஆனால் அவனுக்குக் கொடுக்கப்போகிற ஆசீர்வாதத்தைக்குறித்து அதைக் கொடுக்கத்தக்க வல்லவராகிய கர்த்தர்மாத்திரம் பேசினார்.

"உன் மனைவி சாராள் எங்கே." வழிப்போக்கரான அந்நியர் வீட்டுக்காரரின் மனைவியைக்குறித்து விசாரிப்பது வழக்கமல்ல. அந்த அந்நியர் சாராளை அறிந்தவர்கள்போல ஆபிரகாமோடே பேசினபோது ஆபிரகாம் பிரயாணிகளைக்குறித்து மேலான எண்ணங்கொள்ள ஏதுவாயிற்று.

**10.** "ஒரு உற்பவகாலத் திட்டத்தில்." அடுத்த வருஷம் இந்தக் காலத்தில் அல்லது பிள்ளை தாயின்வயிற்றில் உருவாகி முதிர்ந்து பிறக்கும் திட்டமானகாலத்தில் என்றர்த்தப்படுத்தலாம். (2 இரா. 4: 16, 17.)

வருவேன்; அப்பொழுது உன் *மனைவியாகிய [1]சாரா
ளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்றார். சாராள்
அவருக்குப் பின்புறமாய்க் கூடாரவாசலில் இதைக்
11 கேட்டுக்கொண்டிருந்தாள்.— ஆபிரகாமும் [2]சாராளும்
வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்; [3]ஸ்திரீ
களுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று.-
12 ஆகையால், [4]சாராள் தன் உள்ளத்திலே நகைத்து:
நான் [5]கிழவியும், என் *ஆண்டவன் முதிர்ந்தவயதுள்ள
வருமானபின்பு, எனக்கு இன்பம் உண்டாயிருக்கு
13 மோ என்றாள்.—அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமை
நோக்கி: சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப்
பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்?—
14 கர்த்தரால் [6]ஆகாத காரியம் *உண்டோ? உற்பவகாலத்
திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்;

[1] ஆதி. 17. 19.21: 21. 2. ரோ. 9. 9. கலா. 4. 23.
[2] ஆதி. 17.17. ரோ. 4. 19. எபி. 11. 11. ம
[3] ஆதி. 31. 35.
[4] ஆதி. 21. 6.
[5] லூ. 1. 18.
* மனுஷனை. 1 பே. 3. 6.
[6] எரே. 11. 23. எசே. 32.17. மத். 3. 9: 19. 26.

**11. "வயதுசென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்."** சரீரம் முதுமையினால் பெலவீனப்பட்டுப்போயிருந்தது. ஆனால் கர்த்தர் ஆபிரகாம் சாராளுடைய பெலவீனத்தில் பெலனை அருள வல்லவராயிருந்தார். பெலவீனத்தில் பெலன் அவர்களுக்கு அருளப்பட்டது. (2 கொ. 12: 9.)

**12. "சாராள் தன் உள்ளத்திலே நகைத்து."** சாராள் அவிசுவாசத்தினாலே நகைத்தாள் என்று யூத வியாக்கியானிகள் சொல்வதுண்டு. சாராள் அந்தப் பிரயாணிகள் இன்னாரென்று அறியாதிருந்தாள். அவள் பின்புறமாய்க் கூடாரவாசலில் நின்று தனக்குப் பிள்ளை பிறக்கப்போவதைக்குறித்து அவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டிருந்துதான் இத்தனை வயதுள்ளவளென்பதை அவர்கள் அறியாமல் சம்பாஷிக்கிறார்கள் என்று எண்ணி நகைத்தாள்.

**"நான் கிழவியும்."** பழைய வஸ்திரம்போல என் சரீரம் கட்டுவிட்டுப் போயிற்றே. என் ஆண்டவனோ வயது சென்றுபோயிருக்கிறாரே. இவர்கள் சம்பாஷிப்பது மெய்யாயிருக்கக்கூடியதா என்று சாராள் இயற்கையாய் எண்ணியிருப்பாள். சாராள் தன் புருஷனை ஆண்டவன் என்று கண்ணியமாய்ப் பேசியிருப்பதைக்குறித்துப் புதிய ஏற்பாட்டில் புகழ்ச்சியாய்ச் சொல்லியிருக்கிறது. (1 பேது. 3: 6.)

**13. "சாராள் நகைத்து, நான் கிழவியாயிருக்கப் பிள்ளை பெறுவது மெய்யோ என்று சொல்வானேன்."** சாராள் தன் உள்ளத்திலே நகைத்தாள் (வச. 12.). ஆபிரகாமோடே பேசினவர் உள்ளிந்திரியங்களை அறிகிறவர் என்று அவளுக்கு விளங்கச்செய்தார்.

**14. "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ."** கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. (லூக். 1: 37.)





அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்
15 என்றார். — சாராள் பயந்து, நான் நகைக்கவில்லை
என்று மறுத்தாள். அதற்கு அவர்: இல்லை, நீ நகைத்
தாய் என்றார்.
16 பின்பு அந்தப் புருஷர் எழுந்து அவ்விடம்விட்டு,
சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமும்
அவர்களோடே கூடப்போய் வழிவிட்டனுப்பினான்.-
17 அப்பொழுது கர்த்தர்: [1]ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதி
யாவதினாலும், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதி
18 களும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும், — [2]நான் செய்
யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?—

[1] ஆதி. 12. 3: 22. 18. அப். 3. 25. கலா. 3. 8.
[2] சங். 25. 14. ஆமோ 3. 7. யோ 15. 15.

**15. "நான் நகைக்கவில்லை என்று மறுத்தாள்."** கர்த்தர் அவளைச் சாந்தமாய்க் கண்டித்துத் தேவனுடைய சர்வவல்லமையைக்குறித்துப் போதனை செய்து அவள் விசுவாசத்தைப் பலப்படுத்தினார். அவள் அவர்பேரில் விசுவாசம் வைத்து வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்று எண்ணிக் கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள். (எபி. 11: 11.)

**16. "அந்தப் புருஷர்...........சோதோமை நோக்கிப் போனார்கள்."** ஆபிரகாம் மரியாதையாய் அவர்களை வழிவிட்டனுப்பும்படி கொஞ்சத்தூரம் அவர்களோடேகூடப் போனான் (அப். 20: 38; 21: 5. ரோ. 15: 24. 1 கொரி. 16: 6, 11. தீத்து. 3: 13.). அவன் காபார்—பருக்கா ஊர்வரைக்கும் போனதாகப் பாரம்பரியம் சொல்லுகிறது. அங்கேயிருந்து சவக்கடலைப் பார்க்கலாம். ஆபிரகாமுக்குத் தேவன் வெளிப்படுத்தலை இந்தச் சமயத்தில் அருளியிருந்தும் அவரை மற்ற இரண்டுபேரோடே சேர்த்து மூன்று புருஷர் என்று சொல்லியிருக்கிறது.

**17. "பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவதினாலும்."** ஆபிரகாம் தேவனை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்துகாட்டின மாதிரியிலும் மற்றச் சாதியார் மெய்யானதேவனை மறந்து அவரை ஏற்றவிதமாய்க் கனஞ்செய்யாதிருக்கையில் ஆபிரகாமின் வித்தார் அவரைப்பற்றிய அறிவைப் பாதுகாத்து மற்றவர்களுக்கு அதைத் தெரியக்காட்டினதிலும், கிறிஸ்துவின் மூலமாய் தேவசத்தியம் உலகம் அனைத்திலும் விளம்பப்பட்டுவருவதிலும் சகல சாதியாரும் அவனுக்குள் ஆசீர்வாதம் பெறுகிறவர்களாயிருக்கிறார்கள்.

**18. "ஆபிரகாமுக்கு மறைப்பேனோ."** ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதனாயிருந்ததற்கு இது ஒரு திருஷ்டாந்தமாயிருக்கிறது. நம்முடைய ஆண்டவர் தமது சீஷர்களுக்கு ஒன்றையும் மறையாமல் வெளிப்படுத்தி, அவர்களைத் தமது சிநேகிதர் என்று அழைத்தார். (யோவா. 15: 5. ஏசா. 41: 8. 1 நாளா. 20: 7. யாக். 2: 23.)

19 கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்
படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்
வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியா
யத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து
நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்
திருக்கிறேன் என்றார்.
20 பின்பு கர்த்தர்: [1]சோதோம் கொமோராவின் கூக்
குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம்
21 மிகவும் கொடிதாயிருப்பதினாலும்,—நான் [2]இறங்கிப்
போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குர
லின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லை

[1] ஆதி. 4.10. 13: 19. 13. யாக். 5. 4.
[2] ஆதி. 11. 5. யாத். 3. 8.

**19.** **"நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து."** ஒடுக்கப்படுகிறவர்களுக்கு விடுவிப்பையும் பெலவீனருக்கு உதவியையும் அந்நியருக்கு உபசரணையையும் செய்வதும் எல்லாருக்கும் முன்பாக மரியாதையும் உண்மையும் யோக்கியமுமாய் நடப்பதும் இங்கே குறிக்கப்பட்டிருக்கிற காரியங்களாம்.

**"கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள்."** ஆபிரகாம் தேவபக்தியுள்ள தகப்பனாயும் எஜமானாயும் தன் வீட்டாரைத் தேவன்பிலும் விசுவாசத்திலும் பயபக்தியிலும் வளர்க்க முயற்சிசெய்துவந்தான். யோபு இவ்வித கவலையோடே தன் பிள்ளைகளை வளர்த்துவந்தான். பரிசுத்த பவுல் கிறிஸ்தவப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இவ்விதமாய் நடத்தும்படி கட்டளையிட்டிருக்கிறான். (எபே. 6: 4.)

**"அறிந்திருக்கிறேன்."** இந்த வார்த்தை சில தருணங்களில் தேவனுடைய அனுதி முன்னறிவையும் முன்குறித்தலையும் காட்டுகிறதாயிருக்கிறது (ஆமோ. 3: 2.). "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களைமாத்திரம் அறிந்துகொண்டேன்." (யாத். 33: 12. யோபு. 22: 13. சங். 73: 11; 144: 3. ஏசா. 58: 3. நாகூ. 1: 7.)

**20.** **"கூக்குரல்."** ஐசுவரியவான்கள் பலவான்கள் தரித்திரருக்கும் பெலவீனருக்கும் செய்யும் நிஷ்டூரங்கள் பழிவாங்கும்படி தேவனை நோக்கிக் கூப்பிடுகிற பாவனையாகச் சொல்லப்படுகிறது. ஏழைகளை ஒடுக்குதல் முறையிடும் பாவமாகக் காட்டப்பட்டிருக்கிறது. (உபா. 24: 14, 15. யாக். 5: 4.)

**21.** **"நான் இறங்கிப்போய்."** திட்டமான பரிசோதனையின்பேரில் தேவன் தண்டனையைச் செலுத்துகிறவர் என்று இது காட்டுகிறது. மேலும் ஆபிரகாமிடத்தில் இதைச் சொன்னதைப் பார்க்கையில், ஆபிரகாம் வாக்குத்தத்தத்தின் சுதந்தரனாகையால் அவன் வித்தார் கானானைச் சுதந்தரிக்கும்போது, தேவன் இரக்கமுள்ளவர்மாத்திரமல்ல நீதியுள்ளவர் என்று உணர்ந்தும் பயபக்தியோடே அவர்கள் நடக்கும்படி எவ்விடும் நோக்கமிருந்ததென்று அறிய வேண்டியது. (ஆதி. 11: 5, 7. யாத். 3: 8.)





22 யோ என்று பார்த்து [1]அறிவேன் என்றார்.—அப்பொ
ழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோ
மை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும்
கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.
23 அப்பொழுது ஆபிரகாம் [2]சமீபமாய்ச் சேர்ந்து:
[3]துன்மார்க்கரோடே நீதிமானையும் அழிப்பீரோ?—
[4]பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்
கள் இருப்பார்கள், அதற்குள் இருக்கும் அந்த ஐம்
பது நீதிமான்கள் நிமித்தம் இரட்சியாமல் அந்த
25 ஸ்தலத்தை அழிப்பீரோ?—துன்மார்க்கரோடே நீதி
மானையும் சங்கரிப்பது உமக்குத் தூரமாயிருப்பதாக;
[5]நீதிமானையும் துன்மார்க்கனையும் சமமாய் நடப்பிப்
பது உமக்குத் தூரமாயிருப்பதாக; [6]சர்வலோக நியா
26 யாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ என்றான்.— அதற்
குக் கர்த்தர்: [7]நான் சோதோமில் ஐம்பது நீதிமான்
களைக் கண்டால், அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழு

[1] யோசு. 22. 22. சங். 139.1. எரே. 17. 10. லூக். 16. 15. 2கொரி. 11. 11.
[2] எபி. 10. 22.
[3] எண். 16. 22. 2 சாமு. 24. 17.
[4] எரே. 5. 1.
[5] யோபு. 8. 3, 20: 34. 17.
[6] சங். 58. 11: 94. 2. அப். 17. 31. ரோ. 3. 6.
[7] எசே. 22. 30.

**22.** **"ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்."** தேவதூதர் இருபேரும் சோதோமுக்குப் போனார்கள் (ஆதி. 19: 1.). ஆபிரகாம், அழிவுக்கு நியமிக்கப்பட்ட பட்டணத்தாருக்காக விண்ணப்பஞ்செய்யக் கர்த்தருக்கு முன்பாக நின்றான். மோசேயும் சாமுவேலும் சனங்களுக்கு விரோதமாய் எழும்பின தேவகோபத்தை மாற்றும்படி கர்த்தருக்கு முன்பாக நின்று விண்ணப்பஞ் செய்தார்கள். (எரே. 15: 1.)

**23.** **"ஆபிரகாம் சமீபமாய்ச் சேர்ந்து."** செபஞ் செய்து, பரிந்து பேசுவது அல்லது பலி செலுத்துவது தேவனுக்குச் சமீபமாய்ச் சேருதல் என்பதைக் குறிக்கும். (எபி. 10: 22. யாக். 4: 8.)

**25.** **"உமக்குத் தூரமாயிருப்பதாக."** தேவன் சுயாதிபதியாயிருந்தாலும் அவர் நியாயமின்றி தண்டிக்கிறவராயிராமல், வழுவற்ற நித்திய நீதியின்படி தண்டனையைச் செலுத்துகிறவராயிருக்கிறார்.

**"சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ."** தேவன் சிட்சை, இரட்சையினால் பூலோகத்தை நீதியாய் ஆண்டு நடத்துகிறவரானதால் அவர் செய்வது சமூலமும் நியாயமாயிருக்கிறது. அவருடைய வழிகள் நம்மால் அளவறுக்கப்படக் கூடாதவைகள்.

**26.** **"அவர்கள் நிமித்தம் அந்த ஸ்தலமுழுதையும் இரட்சிப்பேன்."** சோதோம்முதலிய பட்டணத்தார் கொஞ்சக்காலத்துக்குமுன்னே தண்டனை அடைந்திருந்தார்கள். லோத்தும் அவர்கள் நடுவேயிருந்து பிரசங்கித்துக்கொண்டிருந்தான். ஆதலால் அவர்கள் சீர்ப்பட்டிருப்பார்கள் என்று

27 தையும் இரட்சிப்பேன் என்றார். — அப்பொழுது
ஆபிரகாம் பிரதியுத்தரமாக: [1]இதோ, தூளும் சாம்ப
லுமாயிருக்கிற அடியேன் ஆண்டவரோடே பேசத்
28 துணிந்தேன்.—ஒருவேளை ஐம்பது நீதிமான்களுக்கு
ஐந்துபேர் குறைந்திருப்பார்கள்; அந்த ஐந்துபேர்
நிமித்தம் பட்டணமுழுதையும் அழிப்பீரோ என்
றான். அதற்கு அவர்: நான் நாற்பத்தைந்து நீதிமான்
களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லை என்
29 றார்.—அவன் பின்னும் அவரோடே பேசி: நாற்பது
நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான்.
அதற்கு அவர்: நாற்பது நீதிமான்கள் நிமித்தம் அதை
30 அழிப்பதில்லை என்றார்.—அப்பொழுது அவன்: நான்
இன்னும் பேசுகிறேன், ஆண்டவருக்குக் கோபம்
வராமலிருப்பதாக; முப்பது நீதிமான்கள் அங்கே
காணப்பட்டாலோ என்றான். அதற்கு அவர்: நான்

[1] ஆதி. 3. 19. யோபு. 4. 19. பிர. 12. 7. யா. 18. 1.

எண்ணி அந்தப் பட்டணங்களிலே ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள் என்று நினைத்து ஆபிரகாம் விண்ணப்பஞ் செய்தான்; அந்தனைபேர் அங்கே இல்லை என்பது கர்த்தருக்கு நன்றாய்த் தெரியும். தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தம் உபத்திரவத்தின் நாட்கள் குறைக்கப்படும் (மத். 24: 22.). எலியாவின் வைராக்கியம் ஆகாபின்காலத்தில் இஸ்ரவேலரைக் காப்பாற்றினது.

**27.** "**தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன்.**" ஆபிரகாமின் தாழ்மை இங்கே விளங்குகிறது. அவன் தேவனோடே பேசுவதற்குத் தகுதிமானல்ல என்று தன்னைத் தாழ்த்தி, பாவிகளுக்காக அவன் விண்ணப்பஞ் செய்ததில், ஊக்கத்தையும் தாராளமையையும் காட்டினான்.

**28.** "**ஒருவேளை, ௨.**" தன் முந்தின விண்ணப்பத்துக்குக் கர்த்தர் அருளின உத்தரவில் அந்தப் பட்டணங்களில் ஐம்பது நீதிமான்கள் இல்லை என்று கண்டபோதிலும் ஆபிரகாம் சோர்புக்கு இடங்கொடாமல் பின்னும் பரிந்து பேசத் தைரியங் கொள்ளுகிறான். யாக்கோபு தனக்காக விடியும்காலம்வரைக்கும் செபத்தில் போராடினான். பவுல் தனக்காக மூன்றுதரம் விண்ணப்பம் பண்ணினான் (2 கொ. 12: 8.). ஆபிரகாமோ சோதோமியருக்காக ஆறுதரம் பரிந்துபேசியிருக்கிறான்.

**30.** "**ஆண்டவருக்குக் கோபம் வராமலிருப்பதாக.**" சோதோம் அழியாதபடி ஆபிரகாம் எவ்வளவாய்க் கர்த்தரோடே பேசுகிறான், போராடுகிறான், நியாயஞ் சொல்லுகிறான். கர்த்தர் அவன் செபத்தின்பேரில் பிரியப்பட்டாலும் அவன் மன்றாட்டுப்படி சோதோமை அழியாதிருக்கவில்லை. என்றாலும் அவனுடைய விசேஷித்த விருப்பத்தின்படி லோத்துக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார். (ஆதி. 19: 29.)





முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழி
31 ப்பதில்லை என்றார். — அப்பொழுது அவன்: இதோ,
ஆண்டவரோடே பேசத் துணிந்தேன்; இருபது
நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்றான்.
அதற்கு அவர்: இருபது நீதிமான்கள் நிமித்தம் அதை
32 அழிப்பதில்லை என்றார். — அப்பொழுது அவன்:
[1]ஆண்டவருக்குக் கோபம் வராதிருப்பதாக; நான்
இன்னும் இந்த ஒரு விசைமாத்திரம் பேசுகிறேன்;
பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டாலோ என்
றான். அதற்கு அவர்: பத்து நீதிமான்கள் நிமித்தம்
33 அதை அழிப்பதில்லை என்றார். — கர்த்தர் ஆபிரகா
மோடே பேசி முடிந்தபின்பு போய்விட்டார்; ஆபிர
காமும் தன்னுடைய இடத்துக்குத் திரும்பினான்.

[1] நியா. 6. 39. யாக். 5. 16.

**32.** "**பத்து நீதிமான்கள் நிமித்தம்.**" அந்தப் பட்டணங்களிலே லோத்து என்ற ஒரே நீதிமான் இருந்தான். அவன் மனைவியும் அவன் மருமக்கள்மாரும் அழிவிலே அகப்பட்டார்கள். அவனோடே அவனுடைய இரண்டு பெண்மக்களும்மாத்திரம் பாதுகாக்கப்பட்டார்கள்.

"**அதை அழிப்பதில்லை.**" சிலராவது பக்திமான்களாய் இருந்தால் அவர்கள் நிமித்தம் பட்டணம் கவிழ்க்கப்படாதிருக்கும். அப்படிப்பட்டவர்களில்லாததால் அக்கிரமத்தில் இன்னமும் பெருகிப்போகாதபடிக்குத் தேவன் அந்த நகரத்தாரை அழிக்கத் தீர்மானித்தார்.

**33.** "**கர்த்தர்...............போய்விட்டார்.**" தேவன் தமது சித்தத்தை ஆபிரகாமுக்கு வெளிப்படுத்தினபின்பு அவர் சோதோமுக்குச் சென்றார். (வச. 26. ஆதி. 19: 17.)

படிப்பினை.

வச. 1—15.

(1) அந்நியரை உபசரிக்க நாம் மறக்கக்கூடாது. ஏனென்றால் சிலர் தெரியாதபடி தேவதூதரையும் தேவதூதரின் ஆண்டவரையும் உபசரித்திருக்கிறார்கள். நாம் மிகவும் எளியவரான சகோதரரை உபசரிக்கும்போது, நமது கர்த்தரை உபசரிக்கிறதற்குச் சரியாக எண்ணப்படும்.

(2) உதாரகுணத்தை நன்றியறிதலோடே காட்டுகையில் அது மெய்யான தேவபக்திக்குக் குறிப்பாம். சற்பாத்திரத்தில் நமது ஆஸ்தியைச் செலவழிப்பது மற்றவர்களுக்கு நன்மையையும் நமக்கு ஆசீர்வாதத்தையும் உண்டுபண்ணுகிறது.

(3) நம்முடைய அன்புள்ள கர்த்தர் இப்போது நம்மை மனுஷரூபமாய்ச் சந்திக்காதிருந்தாலும், தமது ஆவியினாலும் வார்த்தையினாலும் கதவருகே நின்று தட்டுகிறார். நாம் அதைத் திறந்தால் அவர் உள்ளே பிரவேசித்து நம்மோடே போசனபானம் பண்ணுவார். நாம் அவரோடே போசனபானஞ் செய்வோம்.

(4) பலத்த விசுவாசிகளும் அடிக்கடி பலப்படுத்தப்படவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அவர்களும் சோதனையான வேளைகளாகிய சில தருணங்களில் சந்தேகத்துக்கு இடங்கொடுப்பதுண்டு.

(5) ஒருபாவம் இன்னொருபாவத்துக்கு வழியை உண்டுபண்ணுகிறது. தேவனுடைய உண்மையைப்பற்றிச் சந்தேகிக்கையில் சத்தியத்தைப் பிடித்து நடப்பது வருத்தம்.

(6) கர்த்தர் யாரிடத்தில் அன்புகூருகிறாரோ அவர்களை அவர் கண்டித்து அவர்கள் பாவத்தில் விழும்போது மறுபடியும் மனந்திரும்பும்படி செய்கிறார்.

(7) உள்ளான குணத்தினாலே நற்காரியத்தையாகிலும் துற்காரியத்தையாகிலும் திரும்பத்திரும்ப மனிதர் செய்வதுமுண்டு.

(8) வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் தேவன் வல்லவர் என்பதை நாம் உணர்ந்தால், நாம் பயத்துக்கு நீங்கலாயிருப்போம்.

வச. 16—22.

(9) நீதியுள்ள ஆண்டவர், ஒரு மனுஷனிடத்திலாவது குடும்பத்திடத்திலாவது சாதியிடத்திலாவது கண்டுபிடிக்கும் குற்றத்துக்குத் தக்கதாய்த் தண்டனைகளைச் சுமத்துகிறார்.

(10) தேவனுடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்திலுண்டு. தாம் செய்யப்போகிறவைகளை அவர் தம்முடைய ஊழியக்காரருக்கு அறிவியாதேபோனாலும், துன்மார்க்கர்பேரில் அவர் செலுத்தும் ஆக்கினை நீதியுள்ளதென்று அவர்களுக்கு விளங்கச்செய்வார்.

(11) குடும்ப பக்திக்கேற்றவைகளை நாம் செய்கையில், தேவன் அப்படிப்பட்ட விஷயத்தைக் கவனிக்கிறார். நம்முடைய குடும்பத்தார் நற்போதனைகளை அடையும்படி நம்முடைய அதிகாரத்தையும் திறமையையும் செலுத்துகையில், அது பிரியமான பலியாக அங்கிகரிக்கப்படும்.

வச. 23—33.

(12) நீதிமான்களுடைய ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. துன்மார்க்கர் தாங்கள் அற்பமாயெண்ணித் துன்பப்படுத்துகிற தேவபக்தருடைய வேண்டுதல்களினால் உலக நன்மைகளை அநுபவிக்கிறார்கள் என்பதை உணராதிருக்கிறார்கள். ஒரு பட்டணத்தில் அல்லது ஒரு சாதியாரில் சிலர் திறப்பின்வாயிலே நின்று மன்றாடி விண்ணப்பஞ்செய்கையில் அவர்கள் சேனை தளங்கள் அரண்களைப்பார்க்கிலும் பலமாயிருக்கிறார்கள்.

(13) நமக்காகவும், நமது வீட்டாருக்காகவும், சாதியாருக்காகவும், தேசத்தாருக்காகவும்மாத்திரமல்ல, தேவகோபம் ஊற்றப்படப்போகிறவர்களுக்காகவும் மன்றாடுவது நமது கடமையும், சலாக்கியமுமாயிருக்கிறது.

(14) நாம் நம்முடைய தேவனுக்குச் சமீபிக்கும்போதெல்லாம் மிகுந்த மனத்தாழ்மையோடே, பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வந்து பயமில்லாமல் அன்புள்ள மனதோடே ஆவிக்குரிய பலிகளைச் செலுத்துவோமாக.

(15) தேவன் நீதிமான்களைப் பொல்லாதவர்களுக்கு ஒப்பந்தமாய் நடத்தமாட்டார். அது அவருக்குத் தூரமாயிருக்கிறது.

(16) மனிதரில் முக்கியஸ்தரானவர்களும் பாவிகளானதால் அவர்களும் உலகத்தில் பொதுவாய்ச் சம்பவிக்கும் ஆபத்துகளுக்கு நீங்கலாயிருக்கமாட்டார்கள்.

(17) கர்த்தர் இரக்கத்தில் பிரியப்படுகிறவர்; ஆதலால் அவர் தம்மைச் சேவிக்கிறசிலர் நிமித்தம் ஒரு கனக்கூட்டத்தாருடைய ஜீவனைப் பாதுகாத்து, நீடித்திருக்கச் செய்கிறார். தயவுள்ள கர்த்தாவே, உம்மைச் சேவிக்கிறவர்களின் தொகை இந்தத் தேசத்திலும், உலகத்தின் எப்பக்கத்திலும் பெருகப்பண்ணியருளும் என்று பிரார்த்திப்போமாக.





## 19. அதிகாரம்.

லோத்து இரண்டு தூதர்களுக்கு உபசாரம் செய்தது. 4. சோதோம் தேசத்து அக்கிரமக்காரர் கபோதிகளானது. 12. லோத்து தப்பித்துக்கொள்ளப் பர்வதங்களுக்கு அனுப்பப்பட்டது. 18. அவன் சோவாருக்குப் போக உத்தரவுபெற்றது. 24. சோதோம் கொமோரா அழிக்கப்பட்டது. 26. லோத்தின் பெண்சாதி உப்புத்தூணானது. 30. லோத்து ஒரு கெபியில் வாசம்பண்ணினது. 31. அவன் குமாரத்திகள் செய்த முறைகேட்டினாலுண்டான மோவாபியர் அம்மோனியர் என்பவர்களுடைய உற்பத்தியைக்குறித்துச் சொல்லியது.

அந்த இரண்டு [1]தூதரும் சாயங்காலத்திலே சோ [1] ஆதி. 18.1, 22.
தோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாச
லிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோ
த்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து:—
ஆண்டவன்மார்களே, அடியேனுடைய [2]வீட்டுமுக [2] எபி. 13. 2.
மாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி,
இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப்
போகலாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்படி
யல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள்.—

## 19. அதிகாரம்.

**1. "லோத்து..............வாசலிலே உட்கார்ந்திருந்தான்."** கெதொர்லாகோமேருடைய யுத்தத்திற்குப்பின்பு, சோதோமியர், ஆபிரகாமினிமித்தம் லோத்தைக் கனம்பண்ணியவர்களாக எண்ணிவந்தார்கள். அவன் பட்டணத்தின் நியாயாதிபதிகளில் ஒருவனாக நியமிக்கப்பட்டதாய்த் தோன்றுகிறது (9ம்வச.). முற்காலத்திலே அதிகாரிகள் பட்டணத்தின் ஒலிமுகவாசலிலிருந்து நியாயஞ்செய்கிற வழக்கமிருந்தது. அந்த வழக்கத்தின்படியே லோத்தும் அங்கே இருந்தான். (ஆதி. 34: 20. உபா. 21: 19; 22: 15. ரூத். 4: 1.)

**"தரைமட்டும் குனிந்து."** ஆபிரகாமைப்போல லோத்து இரண்டு தேவதூதருக்கும் வந்தனம் செலுத்தினான். (ஆதி. 18: 2.)

**2. "வீதியிலே இராத்தங்குவோம்."** அந்தக் காலத்திலே தங்குவதற்கு வசதியான சத்திரம் சாவடிகள் இருந்ததில்லை. நமது தேசத்திலிருக்கிறபடி பிரயாணிகள் வீதியில் படுத்து நித்திரை செய்வதுபோல அக்காலத்திலும் வழக்கமிருந்தது. தேவதூதர்கள் சோதோமுக்கு அனுப்பப்பட்டது அந்தப் பட்டணத்தாருக்குக் கடைசியான பரீட்சையாயிருந்தது. சனங்கள் கெட்டின்பேல் கேட்டை உண்டுபண்ணிக்கொண்டார்கள். லோத்தினிடத்தில் அனேக பலவீனங்கள் இருந்தபோதிலும் இந்தத் தருணத்தில் அவன் தேவதூதரை இன்னார் என்று அறியாதிருந்தும் உபசரித்து கனம்பண்ணினான். தூதர் சொன்ன

3 அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்
டான்; அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி,
அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்
பில்லா அப்பங்களைச் சுட்டு, [1]அவர்களுக்கு விருந்து  [1] ஆதி. 18. 8.
பண்ணினுன், அவர்கள் புசித்தார்கள்.

4 அவர்கள் படுக்கும்முன்னே, சோதோம் பட்ட
ணத்து மனிதராகிய வாலிபர்முதல் கிழவர்மட்டு
முள்ள ஜனங்கள் அனைவரும் நாலுதிசைகளிலுமிரு
5 ந்துவந்து, வீட்டைச் சூழ்ந்துகொண்டு,—லோத்தைக்
[2]கூப்பிட்டு: இந்த இராத்திரி உன்னிடத்தில் வந்த மனு  [2] எசா. 3. 9.
ஷர் எங்கே? [3]நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்  [3] நியா. 19. 22. ரோ. 1. 24, 27. யூதா. 7.
களை எங்களிடத்தில் வெளியே கொண்டுவா என்றூர்

வார்த்தைக்கு இசைவாக நம்முடைய ஆண்டவரும் தாம் அப்புறம் போகிறவ
ராகக் காண்பித்தார் என்று வாசிக்கிறோம். (லூக். 24: 28.)

**3. "அவன் அவர்களை..............வருந்திக் கேட்டுக்கொண்டான்."** சனங்களுடைய பொல்லாத குணத்தை லோத்து அறிந்து தன் வீட்டில் தங்கும்படி அதனை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான். லோத்தின் நடக்கை பழுதுபட்டுப்போயிருந்ததால், ஆபிரகாமின் கேட்டுக்கொள்ளுதலுக்கு உடனே சம்மதித்ததுபோல, லோத்தின் விருப்பத்துக்கு அவர்கள் உடனே இசையாதிருந்தும் பின்பு அவன் மனதுக்கு இணங்கினுர்கள்.

**"அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு.....விருந்துபண்ணினுன்."** யூதர் பஸ்காபண்டிகையில் சாப்பிட்ட போஜனம்போலுள்ளது. எந்தோரின் குளியக்காரியும் சவுலுக்கு இவ்வித விருந்துசெய்தாள் (1 சாமு. 28: 24. யாத். 12: 34.) அவசரத்துக்காக இப்பேர்ப்பட்ட போஜனத்தைப் படைப்பார்கள்.

**4. "பட்டணத்து ............ஜனங்கள் அனைவரும்........... வீட்டைச் சூழ்ந்து."** சோதோமியருடைய பாவம் அடிக்கடி வேதத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் காமவிகாரமுள்ளவர்களும் (2 பேது. 2: 6–8.), அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்தவர்களும் (யூதா. 7.வச.), பெருந்தீனிக்காரரும் குடிவெறியரும் (லூக். 17: 28.), கர்வமுள்ளவர்களும் நிர்விசாரமான சாங்கோபாங்கமுள்ளவர்களும் சிறுமையும் எளிமையுமானவர்களை ஒடுக்கினவர்களுமாயிருந்தார்கள் (எசே. 16: 49, 50.). ஆகிலும் அவர்கள் மனந்திரும்பியிருப்பார்களானுல் அவர்கள் அழிக்கப்படாமலும் அவர்கள் பட்டணம் நிர்மூலமாகாமலும் இருந்திருக்கும். (மத். 11: 23.)

**5. "நாங்கள் அவர்களை அறியும்படிக்கு."** காமவிகாரத்தில் மூழ்கிப்போயிருந்த சோதோமியரும் சன்மார்க்கர்போலப் பேசியிருக்கிறுர்கள். ஆனுலும், அவர்களுடைய நோக்கம் தகாத நோக்கமாயிருந்தது.





6 கள்.—அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே
வந்து, தனக்குப் பின்னுலே கதவைப் பூட்டி, அவர்களி
டத்தில்போய்:—சகோதரரே, [1]இந்த அக்கிரமம் செய்ய  [1] நீதி. 1. 10. ஷ.
8 வேண்டாம்.—இதோ, [2]புருஷனை அறியாத இரண்டு  [2] நியா. 19. 24.
குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்
திற்கு வெளியே கொண்டுவருகிறேன், அவர்களுக்கு
உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; [3]இந்தப் புருஷர்  [3] ஆதி. 18. 5.
என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு
மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம் என்றுன்.—
9 அதற்கு அவர்கள்: அப்பாலே போ; [4]பரதேசியாய்  [4] யாத். 2. 14. 2பே. 2. 7, 8.
வந்த இவனு நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்
களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக
பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து
என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்

**6. "தனக்குப் பின்னுலே கதவைப் பூட்டி."** லோத்து தன்னிடத்தில் அடைக்கலமாக வந்தவர்களுக்கு யாதொரு தீங்கு நேரிடாதபடி வகைபார்த்தான்.

**7. "சகோதரரே."** பொறுமையோடும் சாந்தத்தோடும் லோத்து சோதோமியரிடத்தில் பேசி அவர்களைச் சீர்ப்படுத்தப் பார்த்தான்.

**8. "இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு."** பெரும்பாதகத்தைத் தடுக்கும்படி சிறிய பாவத்துக்கு இடங்கொடுப்பது எவ்வளவும் சரியல்ல. லோத்து உபசார கடமையை நிறைவேற்றும்படி தன் பிள்ளைகளின் கற்பைக் குலைக்க இடம்பண்ணப்பார்த்தது பெரிய தப்பிதம் என்றாலும், நியா. 19: 24ஐ பார்க்கையில் இவ்விதமான பாவம் அக்காலத்தோருக்குள் அவ்வளவு இழிவாய் எண்ணப்பட்டதாகத் தோன்றுகிறதில்லை. சரித்திரக்காரன் இந்தச் சங்கதியை வியாக்கியின்றி நடந்தபடி எழுதிவைத்திருப்பதை நாம் கவனிக்கையில் லோத்து மிகுந்த பெலவீனங்களோடே சன்மார்க்கனுயிருந்தான் என்று நினைக்கவேண்டும். அவன் தான் தெரிந்துகொண்ட இடத்தினுல் தனக்கு வருத்தத்தை வருவித்துக்கொண்டான் என்றறியலாம்.

**9. "பரதேசியாய் வந்த."** லோத்து சோதோம் பட்டணத்தில் வாசம்பண்ண இடம் கொடுக்கப்பட்டதைக்குறித்துப் பெரிய காரியமாய் எண்ணி இப்படிப் பேசினுர்கள். முற்காலத்திலே பட்டணத்துக்குரிய சுயாதீனத்தையும் சுதந்தரத்தையும் குறித்துச் சனங்கள் எப்போதும் அபிமானம் பாராட்டுவார்கள்.

**"இவனு நியாயம் பேசுகிறது."** எபிரெயுவில் "இவனு (நியாயாதிபதியாக) நியாயம் விசாரித்துவருகிறுன்." இது 2 பேது. 2: 8க்கு இசைவாயிருக்கிறது. லோத்து சோதோமியருடைய பாவத்துக்காக அவர்களை அடிக்கடி கண்டித்திருக்கவேண்டும்.

10 டினார்கள்.—அப்பொழுது அந்தப் புருஷர்கள் தங்கள்
கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்கள் அண்
டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப்
11 பூட்டி,—தெருவாசலிலிருந்த [1]சிறியோரும் பெரியோ | [1] 2இரா.6.18.அப். 13.11.
ருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்
ணினார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடித்
தேடி அலுத்துப்போனார்கள்.
12 பின்பு அந்தப் புருஷர் லோத்தை நோக்கி: இவ்வி
டத்தில் இன்னும் உனக்கு யார் இருக்கிறார்கள்? மரு
மகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளா
வது, பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்
தால், அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே
13 அழைத்துக்கொண்டுபோ.—நாங்கள் இந்த ஸ்தலத்தை
அழிக்கப்போகிறோம்; இவர்கள் [2]கூக்குரல் கர்த்தரு | [2] ஆதி. 18. 20.
டைய சமுகத்தில் பெரிதாயிருக்கிறது; இதை அழிக்

11. "குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள்." இந்த வார்த்தைக்குரிய எபிரெய பதம் 2 இரா. 6: 18லும் வருகிறது. அங்கே "கண் மயக்கம் உண்டாகுதல்" என்று திருப்பியிருக்கிறது. இரண்டு விஷயங்களிலும் சனங்களின் கண் குருடாய்ப்போகாமல் கண்மயக்கமுண்டானதென்று அறியவேண்டும். ஏனென்றால், சோதோமியர் கண் குருடாக்கப்பட்டிருந்தால் லோத்து கவீட்டின் கதவைத் தேடாமல் திகிலோடே திரும்பியிருப்பார்கள். சீரியருடைய சேனை அப்படி குருடாக்கப்பட்டிருந்தால் தோத்தானிலிருந்து சமாரியாவுக்கு அவர்களை நடத்திக்கொண்டுபோவது கூடாததாயிருக்கும். இரண்டு காரியங்களிலும் தங்களுக்கு நேரிட்டது இன்னதென்பதை சனங்கள் அறியாதிருந்தார்கள். சோதோமியர் கண்களின் இச்சையால் பெருந்துரோகிகளாயிருந்தார்கள். ஆதலால் அவர்கள் கண்ணுக்குத் தண்டனை வரவேண்டியதும் நியாயமே. மெய்யான ஒளியைத் தள்ளுகிறவர்கள் கண்டும் காணாதவர்களாயிருப்பார்கள்.

12. "பட்டணத்தில் உனக்குரிய எவர்களாவது இருந்தால் அவர்களை ..........அழைத்துக்கொண்டுபோ." தேவனுடைய பிள்ளைகள் அக்கினியினின்று பறிக்கப்பட்ட கொள்ளியைப்போல அவபக்தியுள்ள உலகத்தாரினின்று பிரிந்துபோகவேண்டும் (ஆமோ. 4: 11.). நோவாவின் குடும்பத்தார் ஜலப்பிரளயத்தில் உலகத்தாருடன் அழிக்கப்படாதபடி காக்கப்பட்டார்கள். எருசலேம் அழிக்கப்படும்போது கிறிஸ்தவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகும்படி உத்தரவு அருளப்பட்டது (மத். 24: 16.). தேவபுத்திரர் இவ்வுலகில் அழிவினின்று விலக்கிக் காக்கப்படுவது நியாயத்தீர்ப்புநாளில் அவர்கள் உலகத்தாரிலிருந்து பிரத்தியேகமாக்கப்பட்டு நித்திய இரட்சிப்பைச் சுதந்தரிப்பதற்கு அடையாளமாயிருக்கிறது.





14 கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள்.—அப்
பொழுது லோத்து புறப்பட்டு, தன் குமாரத்திகளை
விவாகம்பண்ணப்போகிற தன் மருமக்கள்மாரோடே
பேசி: [1]நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப் | [1] எண். 16. 26.
படுங்கள்; கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிக்கப்
போகிறார் என்றான்; அவனுடைய மருமக்கள்மாரின்
பார்வைக்கு [2]அவன் பரியாசம் பண்ணுகிறதாகக் கண் | [2] யாத். 9. 21. எரே. 51.6 லூக்.17.28: 24.11.
டது.
15 கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை
நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ அழி
யாதபடிக்கு [3]எழுந்து, உன் மனைவியையும், இங்கே | [3] வெளி. 18. 4.
இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்
துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்
16 படுத்தினார்கள்.—அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்
போது, [4]கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, | [4] ரோ.9. 15, 16.
அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவி

14. "தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப்போகிற தன் மருமக்கள்மார்." இங்கிலீஷில், "தன் குமாரத்திகளை விவாகம் பண்ணின மருமக்கள்மார்" என்று திருப்பியிருக்கிறது. எபிரெயுவில் "தன் குமாரத்திகளை விவாகம் பண்ணுகிறவர்களுக்கு" என்றிருக்கிறது. கலியாணப் பொருத்தம் பண்ணப்பட்டதேயல்லாமல் கலியாணம் இன்னும் நடக்காதிருந்ததென்று அறியவேண்டும். ஒருவேளை அக்கலியாணத்தைத் தடுக்கும்படியாகப் பரிசுத்த கர்த்தர் ஏற்ற சமயத்தில் வந்து முன் தீர்மானித்தபடி சோதோமை நாசம்பண்ணினார்.

"அவன் பரியாசம் பண்ணுகிறதாகக் கண்டது." கர்த்தர் பட்டணத்தை அழிக்கப்போகிறார் என்று லோத்து சொன்னது அவன் மருமக்களுக்குக் கட்டுக்கதைபோலக் காணப்பட்டது. நேற்று இருந்தபடி இன்று எல்லாம் இருக்கிறதே, பூமியிலாவது வானத்திலாவது விகாரமில்லையே. அக்கினி மழை இதற்குமுன் பெய்ததுண்டா? கிழவனுக்கு அறுபதுக்குமேல் கிறுகிறுப்பு என்று சொல்வது நிச்சயமே என்று எண்ணினார்கள்.

15. "அவனைத் துரிதப்படுத்தினார்கள்." அழிவுக்குக் குறிக்கப்பட்ட நேரத்துக்குமுன்னே லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்டுப் போய்விடும்படியாக தேவதூதர் அவனை அவசரமாய் ஏவினார்கள்.

16. "அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது." லோத்தைப் பொருளாசை பிடித்திருந்தது. தன் சம்பத்தை விட்டுப்போக மனம் வரவில்லை. ஆதலால் தேவதூதர் அவனையும் அவன் மனைவியையும் இரண்டு குமாரத்திகளையும் கட்டாயமாய் வெளியே கொண்டுபோய்விட்டார்கள்.

யின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின்
கையையும் பிடித்து, அவனைப் [1]பட்டணத்திற்கு வெ
17 ளியே கொண்டுபோய் விட்டார்கள்.—அவர்களை வெ
ளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: [2]உன் ஜீவன்
தப்ப ஓடிப்போ, [3]பின்னிட்டுப் பாராதே; இந்தச் சம
பூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலை
18 க்கு ஓடிப்போ என்றார்.—அதற்கு லோத்து: [4]அப்படி
19 யல்ல ஆண்டவரே,—உமது கண்களில் உமது அடியே
னுக்குக் கிருபை கிடைத்ததே; என் பிராணனைக் காக்
கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரிதாக
விளங்கப்பண்ணினீர்; மலைக்கு ஓடிப்போக என்றால்
முடியாது, தீங்கு என்னைத் தொடரும், நான் மரித்துப்
20 போவேன்.—அதோ, அந்த ஊர் இருக்கிறதே, நான்
அதற்கு ஓடிப்போகத்தக்கதாய் அது கிட்ட இருக்கி
றது, சின்னதுமாய் இருக்கிறது; என் பிராணன் பிழை
க்க நான் அங்கே ஓடிப்போகட்டும், அது சின்ன ஊர்
21 தானே என்றான்.—அதற்கு அவர்: நீ கேட்டுக்கொ
ண்ட ஊரை நான் கவிழ்த்துப்போடாதபடிக்கு, [5]இந்த
விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம்பண்ணினேன்.—

[1] சங். 34. 22.
[2] 1 சாமு. 19. 11. 1 இரா. 19. 3.
[3] மத். 24. 16. லூக். 9. 62. பிலி. 3. 13, 14.
[4] அப். 10. 14.
[5] யோபு 24. 8, 9. சங். 145. 19.

**17.** "**அவர்.**" கர்த்தர்.

"**பின்னிட்டுப் பாராதே.**" அவன் தாமதியாமல் ஓடி அடைக்கலம் ஒதுங்கவும், அழிவுக்கு நியமிக்கப்பட்ட பட்டணத்தின்மேல் இருதயத்தையும் சிந்தையையும் வைக்காதிருக்கவும் இந்த உத்தரவைத் தேவன் அருளினார்.

"**இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே.**" ஐசுவரியத்தைப் பெருகப் பண்ணும் நோக்கமாய் லோத்து முன் தெரிந்துகொண்ட சமபூமியில் எந்த இடத்திலாவது நிற்காமல் ஜீவன் தப்ப ஓடிப்போகவேண்டியது.

"**மலைக்கு ஓடிப்போ.**" தன்னை அழிவினின்று மீட்ட தேவனுடைய உத்தரவின்படி அவர்பேரில் விசுவாசமுள்ளவனாய் லோத்து மலைக்கு உடனே போகவேண்டியதாயிருந்தது. அப்படிப் போகாமல் அவன் அதைரியத்தையும் அவிசுவாசத்தையும் காட்டி மலைக்கு ஓடிப்போகத் தன்னால் முடியாது என்றான். தேவனைவிட காரியம் தனக்கு நன்றாய்த் தெரிந்ததுபோலப் பேசுகிறான். பின்பு தன் மதியீனத்தை அறிந்து மலையில் அடைக்கலம் தேடினான்.

**20.** "**அது சின்ன ஊர்தானே.**" அந்த ஊரில் கொஞ்சம்பேர்மாத்திரம் குடியிருந்தார்கள். ஆதலால் அப்படிப்பட்ட ஊராரின் பாவம் பெரும் பட்டணத்தாரின் பாவத்துக்கு ஒப்பிடுகையில் அது கொஞ்சமாயிருக்கும் என்று லோத்து எண்ணினான்.

**21.** "**இந்த விஷயத்திலும் உனக்கு அநுக்கிரகம் பண்ணினேன்.**" சரியானபடி "இந்த விஷயத்திலும் நான் உன் முகத்தை ஏறெடுத்தேன்." சாஷ்டாங்கமாய் விழுந்து தொழுதுகொள்வது சில தேசத்தாருடைய வழக்கம்





22 தீவிரமாய் அங்கே ஓடித் தப்பித்துக்கொள்; [1]நீ அங்கே
போய்ச் சேருமட்டும் நான் ஒன்றும் செய்யக்கூடாது
என்றார்; ஆகையால் அந்த ஊர் சோவார் என்னப்பட்
23 டது.—லோத்து *சோவாருக்குள் வரும்போது பூமி
யின்மேல் சூரியன் உதித்தது.
24 அப்பொழுது கர்த்தர் சோதோமின்மேலும் கொ
மோராவின் மேலும், [2]கர்த்தராலே வானத்திலிருந்து
கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி,-

[1] ஆதி. 32. 25, 26. யாத். 32. 10. மாற். 6. 6.
* சிறியது.
[2] உபா. 29. 23. சங். 11. 6. ஏசா. 13. 19. எரே. 20. 16; 50. 40. ஆமோ. 4. 11. செப். 2. 9. 2 பே. 2. 6. யூதா. 7.

யிருந்தது. செய்தும் கேட்கப்படும்போது முகம் ஏறெடுக்கப்பட்டது என்று சொல்லப்படுகிறதுண்டு.

**22.** "**நான் ஒன்றும் செய்யக்கூடாது.**" லோத்தை அழிவினின்று தப்புவிப்பேன் என்று ஆபிரகாமுக்குத் தேவன் வாக்குக் கொடுத்திருந்தார் (வச. 29.). அந்த வாக்குப்படி லோத்து ஒரு இடத்தில் சுகமாய்ப் போய்ச் சேருமுன் தேவன் சோதோமின்மேல் அக்கினியை வருவிக்க ஏதுவில்லாதிருந்தது. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுமட்டும் இவ்வுலகம் அழிக்கப்படமாட்டாது. (மத். 24; 31.)

"**சோவார்**" என்பதற்குச் "சின்னது" என்றர்த்தம். சவக்கடலின் வடகடையில் இருக்கிற "சையரா" அது என்று ஒருவர் சொல்லுகிறார். அது மோவாபில் இருந்தது (ஏசா. 15: 5. எரே. 48: 34.). அதின் பழையபேர் "பேலா." (ஆதி. 14: 2.)

**24.** "**கர்த்தர்..................கர்த்தராலே.**" இந்த வாக்கியத்தைக்குறித்து வியாக்கியானிகள் பலவிதமாய் எழுதியிருக்கிறார்கள். யூத ரபீமார்களில் சிலர் முதலாவது வருகிற கர்த்தர் என்பது கர்த்தரின் தூதனாகிய காபிரியேலைக் குறிக்கும் என்கிறார்கள். ஆனால் சிருஷ்டிக்கப்பட்ட தேவதூதனுக்கு யெகோவா அல்லது கர்த்தர் என்ற நாமம் கொடுக்கப்பட்டிருக்கிறதாக வேதத்தில் நாம் வாசிக்கிறதில்லை. கிறிஸ்தவ வியாக்கியானிகள் முதலாவது வருகிற கர்த்தர் என்பது "வார்த்தையானவரைக்" குறிக்கும் என்றும் பிந்திவருகிற கர்த்தர் என்பது பிதாவாகிய தேவனைக் குறிக்கும் என்றும் சொல்லுகிறார்கள். வேறே பேர் கர்த்தர்..................கர்த்தராலே என்பது பாஷை நடைச் சிறப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது. எபிரெயுவில் பிரதிப் பெயருக்குப் பதிலாகப் பெயர்ச்சொல்லையே வழங்குவது சாதாரண போக்காயிருக்கிறது. ஆதலால் "கர்த்தர் தம்மிடத்திலிருந்து" அக்கினியையும் ஃ. வருஷிக்கச் செய்தார் என்று சொல்வதற்குப் பதிலாக கர்த்தர்..................கர்த்தராலே என்று சிறப்பு நடையாகப் போட்டிருக்கிறது என்கிறார்கள்.

"**வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப் பண்ணி.**" இதைக்குறித்தும் பற்பலவகையாய் வியாக்கியானஞ் செய்வதுண்டு. சிலர் மின்னல் அந்த இடங்களிலுள்ள நிலக்கீலில் விழுந்து சமபூமியின் பட்டணங்களை நாசம் பண்ணினது என்றும், சிலர் மலையிலிருந்து அக்கினி கக்கி பட்டணங்களை நிர்மூலமாக்கினதென்றும், சிலர் அற்புத

25 அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தை
யும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும்,
26 [1]பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்.—அவன் [1] சங். 107. 34.
மனைவியோ பின்னிட்டுப் பார்த்து, [2]உப்புத்தூண் [2] லூ. 17. 32.
ஆனாள்.
27 விடியற்காலத்தில் ஆபிரகாம் எழுந்து, தான் [3]கர்த் [3] ஆதி. 18. 22.
28 தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்,—சோ
தோம் கொமோரா பட்டணங்களின் திசையையும்,
சமபூமியாகிய தேசம் முழுவதையும் நோக்கிப் பார்த்

செயலாய் அக்கினி உண்டாகி அந்த நகரங்களை அழித்தது என்றும் சொல்லுகிறார்கள். சர்வவல்லவர் தண்டனையைச் செலுத்துகையில் நாடோடியவைகளைக் கருவியாக உபயோகிப்பதுண்டு. திருஷ்டாந்தமாக எகிப்தின்மேல் கீழ்காற்றை வீசச்செய்து வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்து பின்பு மேல்காற்றை வீசச்செய்து அவைகளை அகற்றினார் (யாத். 10: 13, 19.). இந்த விஷயத்திலும் தேவன் சாதாரண காரியங்களை உபயோகித்திருக்கலாம். என்றாலும் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் வருஷிக்கச் செய்தார் என்று சொல்லியிருப்பதைக் கவனிக்கையிலும், ஆபிரகாமுக்கு உண்டான வெளிப்படுத்தல், தேவதூதர்கள் அவனுக்குத் தரிசனம் அளித்தல், லோத்து விடுவிக்கப்படுதலாகிய இவைகள் அற்புதசெயலாயிருப்பதாலும் சோதோமை அழித்த அக்கினியும் அப்படியே அற்புதசெயலாயிருக்கவேண்டியது என்று சொல்லத்தகும்.

**26. "உப்புத்தூண் ஆனாள்."** லோத்தின் மனைவி தேவனுடைய தெளிவான கட்டளைக்கு விரோதமாய்ச் சோதோமைத் திரும்பிப் பார்த்தாள். இதிலே கீழ்ப்படியாமை, பெருமை, அவிசுவாசம் என்ற பாவங்கள் அடங்கியிருக்கின்றன. தேவன் அற்புதம் செய்து அவளுக்குத் தண்டனை வருவித்தார். அவள் உயிரை வாங்கி உடனே அவள் தேகம் உப்புத்தூணாய் மாறிப்போகும்படி செய்தார். கர்த்தராகிய இயேசு அவளைத் தமது சபைக்கு எச்சரிப்பின் ஸ்தம்பமாகக் காண்பித்து லோத்தின் மனைவியை நினையுங்கள் என்று சொல்லியிருக்கிறார் (லூக். 17: 32.). சவக்கடலுக்குச் சமீபமாய் ஒரு உப்புத்தூண் நின்றதென்றும் அதுதான் லோத்தின் மனைவியின் தூண் என்றும் பாரம்பரியம் சொன்னதாக யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் எழுதியிருக்கிறான். யூஸ்டம் என்ற இடத்துக்குக் கிழக்கே 40 அடி உயரமான ஒரு தூண் நின்றதாக லின்ச் என்ற பிரயாணி சொல்லியிருக்கிறான். ஒருவேளை யோசேப்புஸ் இதைத்தான் குறிப்பித்துக் காட்டியிருக்கலாம்.

**27. "விடியற்காலத்தில்."** முந்தின சாயங்காலத்தில் ஆபிரகாம் தேவனோடே பேசின இடம் சற்று தூரமாயிருந்ததால் அங்கே போவதற்கு விடியற்காலத்தில் எழும்பவேண்டியதாயிருந்தது. தன் சகோதரன் மகனுக்கு என்ன சம்பவித்ததோ என்பதை அறியும்பொருட்டு ஆபிரகாம் அவ்வளவாய் ஆத்திரப்பட்டுச் சென்றிருக்கவேண்டும்.





தான்; அந்தப் பூமியின் [1]புகைக்குழியின் புகையைப் [1] வெளி. 18. 9.
போல எழும்பிற்று.
29 தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்
கும்போது, தேவன் [2]ஆபிரகாமை நினைத்து, லோத்து [2] ஆதி. 8. 1; 18. 23.
குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடு
கையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து
தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்.
30 பின்பு லோத்து சோவாரிலே குடியிருக்கப் பயந்து,
சோவாரை விட்டுப் போய், அவனும் அவனோடேகூட
அவனுடைய இரண்டு குமாரத்திகளும் மலையிலே
[3]வாசம்பண்ணினார்கள்; அங்கே அவனும் அவனு [3] 17, 19. வசனம்.
டைய இரண்டு குமாரத்திகளும் ஒரு கெபியிலே குடி
யிருந்தார்கள்.
31 அப்பொழுது மூத்தவள் இளையவளைப் பார்த்து:
நம்முடைய தகப்பன் முதிர்வயதானார், [4]பூமியெங் [4] ஆதி. 38. 8, 9. உபா. 25. 5.
கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோடே சேரப்
32 பூமியிலே ஒரு புருஷனும் இல்லை.—நம்முடைய தகப்

**29. "தேவன் ஆபிரகாமை நினைத்து."** பதினெட்டாம் அதிகாரத்தில் சொல்லியபடி தேவன் ஆபிரகாமின் விண்ணப்பத்தை நினைவுகூர்ந்து, லோத்தை அழிவினின்று தப்பிப்போகும்படி செய்தார்.

**30. "லோத்து சோவாரிலே குடியிருக்கப் பயந்து."** அக்கினி கந்தகத்தால் அழிந்துகொண்டிருந்த பட்டணங்களுக்குச் சோவார் சமீபமாயிருந்ததாலும், அந்தப் பட்டணத்தாரின் நடக்கை லோத்துக்குப் பிரியமாயிராததாலும் முதலில் தேவன் அவனை மலைக்குப் போகச் சொன்னதாலும் அவன் அவ்வூரில் குடியிருக்கப் பயந்தான். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பாமல் இந்தத் தருணத்திலே விசுவாசத்தில் மிகுந்த பெலவீனத்தைக் காட்டினான்.

**"ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்."** முன்னாலே ஐசுவரியப் பெருக்கத்தினால் ஆபிரகாமோடே ஒருமித்துக் குடியிருக்க ஏதுவில்லாத லோத்து இப்போது ஒரு கெபியில் குடியிருக்க ஏதுவாயிற்று. பலஸ்தீனாவின் மலைகளில் இப்படிப்பட்ட கெபிகள் அதிகமாயுண்டு. அவைகளிலே பூர்வீகக் குடிகள் வாசஞ்செய்து வந்ததுண்டு.

**31. "பூமியிலே ஒரு புருஷனும் இல்லை."** லோத்தின் பிள்ளைகள் பூலோகத்திலுள்ள மனுஷர் எல்லாரும் அழிக்கப்பட்டுப்போனதாயும் தாங்களும் தங்களுடைய தகப்பனும்மாத்திரம் மீதியாக இருந்ததாயும் எண்ணி வித்தைப் பெருகச்செய்யும்படி முறைகேடு செய்தார்கள். ஆனால் அவர்கள் முறைகேடான

பனால் [1]சந்ததி உண்டாகும்படிக்கு, அவருக்கு மது [1] மத். 12. 19.
வைக் குடிக்கக்கொடுத்து, அவரோடே சயனிப்போம்
33 வா என்றாள்.—அப்படியே அன்று இராவிலே, தங்கள்
தகப்பனுக்கு மதுவைக் குடிக்கக் கொடுத்தார்கள். மூத்
தவள் போய், தன் தகப்பனோடே சயனித்தாள்; அவள்
சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன் உணரா
34 திருந்தான்.—மறுநாளிலே மூத்தவள் இளையவளைப்
பார்த்து: நேற்று ராத்திரி நான் தகப்பனோடே சயனித்
தேன்; இன்று ராத்திரியும் மதுவைக் குடிக்கக் கொடுப்
போம்; நம்முடைய தகப்பனால் சந்ததி உண்டாகும்
35 படி நீ போய் அவரோடே சயனி என்றாள்.—அப்படி
யே அன்று ராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு மது
வைக் குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது இளை
யவள் எழுந்துபோய், அவனோடே சயனித்தாள்;
அவள் சயனித்ததையும் எழுந்திருந்ததையும் அவன்
36 உணராதிருந்தான்.—இவ்விதமாய் லோத்தின் குமாரத்
திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே கர்ப்பவதி

பாவத்தைச் செய்ததைவிட, பிள்ளையற்றவர்களாயிருப்பதே சிறந்ததாயிருந்திருக்கும். அவர்கள் சோதோமில் வாசம்பண்ணினதே இந்த முறைகேட்டுக்குக் காரணமாயிருந்தது.

32. "அவருக்கு மதுவைக் குடிக்கக்கொடுத்து." வேதாகமம் முற்பிதாக்களுடைய தப்பிதங்களைப் பட்சபாதமின்றி எடுத்துக் காட்டுகிறது. லோத்தின் சரித்திரத்தில் தெய்வீக இரக்கங்களையும் நியாயத்தீர்ப்புகளையும் காணலாம். அவன் யோர்தானின் சமபூமியைத் தெரிந்துகொண்டதில் தன்னயத்தையும் பொருளாசையையும் காட்டினான். அதால் அவனுக்குச் சோதனைகளும் மோசங்களும் நேரிட்டன. சோதோமியருடைய அக்கிரமமான நடக்கைகளின் மத்தியிலும் அவன் கூடியவாறு சுத்தனாகப் பாதுகாக்கப்பட்டான். தேவன் சோதோமைக் கவிழ்த்தபோது அவனை இரட்சித்தார். அவனிடத்தில் அப்போது விசுவாச பெலவீனம் காணப்பட்டுத் தாமதித்ததாகவும், மலைகளுக்கு ஓடிப்போகப் பயப்பட்டதாகவும் கடைசியாக தேவன் அடைக்கலமாகக்கொடுத்த இடத்தில் வாசம்பண்ண சந்தேகங்கொண்டதாகவும் பார்க்கிறோம். இப்போது அவன் தன் மக்களால் ஏமாற்றப்பட்டுப் பயங்கரப்படத்தக்க பாவத்தில் விழுந்தான். இதற்கு அப்பால் அவனைக்குறித்து நாம் ஒன்றும் கேள்விப்படுகிறதில்லை. சோதோமின் அழிவினின்று தப்புவிக்கப்பட்டபோதிலும், மனைவியை இழந்து வீடற்று வெட்கத்துக்கும் நிந்தைக்கும் உள்ளானான். அவன் விஷயத்தில் (1 கொரி. 3: 15.), "அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்" என்பது திருஷ்டாந்தமாயிற்று.





37 யானார்கள்.—மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று,
அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள்; அவன் இந்
நாள்வரைக்கும் இருக்கிற [1]மோவாபியருக்குத் தகப் [1] உபா. 2. 9.
38 பன்.—இளையவளும் ஒரு குமாரனைப் பெற்று, அவ
னுக்குப் பென்னம்மி என்று பேரிட்டாள்; அவன் இந்
நாள்வரைக்கும் இருக்கிற [2]அம்மோன் புத்திரருக்குத் [2] உபா. 2.19.
தகப்பன்.

37. "மோவாப்" என்பதற்கு "தகப்பனிலிருந்து" என்றர்த்தமாம். மோவாபியர் பூர்வீகத்திலே சவக்கடலுக்குக் கீழ்ப்பக்கத்தில் குடியிருந்த எமியரைத் துரத்தி (உபா. 2: 11.), அங்கே குடியிருந்தார்கள். பிந்தியகாலத்தில் எமோரியர் அவர்களை அர்னோன் நதிக்குத் தென்புறமாகத் துரத்திவிட்டார்கள். அந்த நதி அவர்களுடைய நாட்டிற்கு வட எல்லையாயிருந்தது.

38. "பென்னம்மி" என்பதற்கு "என் சனத்தின் குமாரன்" என்றர்த்தம். சொந்த இரத்தக்கலப்பில் பிறந்ததால் இந்தப் பேர் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அம்மோனியர் ரெப்பாவியரைச்சேர்ந்த ஒரு வகுப்பாராகிய சூசிமியரைத் துரத்தி (உபா. 2: 22.), அவர்கள் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் மோளோகை வணங்கிவந்தார்கள் (1 இரா. 11: 7.). மோவாபியரும் அம்மோனியரும் கடைசியாக அரபியருடன் கலந்துபோனார்கள்.

படிப்பினை.

வச. 1—15.

(1) தேவதூதர் சோதோமுக்கு வந்தபோது, ஒரே ஒரு நீதிமானைக் கண்டார்கள். தேவதூதர்கள் கர்த்தருக்குப் பயந்தவர்களை, அதரிசனமாய்ச் சூழப் பாளையம் போடுகிறவர்களாயிருக்கிறார்கள். நீதிமான்கள் இன்னாரென்று அவர்கள் கிரியைகளினாலே அறியலாம்.

(2) பட்டணத்தார் தேசத்தாருடைய பாவங்களைத் தேவன் நிமிஷந்தோறும் கவனித்துக்கொண்டுவருகிறார். அவர் நியாயத்தீர்ப்புநாளிலே இருதயத்தின் அந்தரங்கங்களை வெளியரங்கமாக்கி, இருதய சிந்தனைகளை எல்லாம் வெளிப்படுத்துவார்.

(3) தீமையை விலக்குவாவது நன்மையைச் செய்வாவது நாம் செய்கிற காரியங்கள் நியாயமானதாயிருக்கவேண்டும். மற்றவர்கள் பெரும்பாதகத்தை நடப்பியாதபடிக்கு நாம் சிறிய பாவங்களிலே விழவேகூடாது.

(4) துன்மார்க்கர் தங்கள் தேக இச்சைகளை நிறைவேற்றப் பித்தங்கொண்டிருக்கையில், அதற்குத் தடையாயிருக்கிறவர்களிடத்தில் பழிவாங்கும்படி பார்ப்பார்கள்.

(5) அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் கழுத்தைக் கடினப்படுத்துகிறவர்கள் சகாயமின்றி சடுதியில் நாசமடைவார்கள். தேவனுடைய ஊழியக்காரர் அன்பாய்க் கடிந்துகொள்கையில் அதை அலட்சியஞ் செய்கிறவர்களும் பயங்கரமான தண்டனைக்குட்படுவார்கள்.

வச. 16—38.

(6) நீதிமான்கள் இரட்சிக்கப்படுவது தேவனாலேயாம். அவர் அவர்களுக்கு இரங்கி, அவர்களை எச்சரித்து ஆத்தும இரட்சிப்புக்காகச் சகலத்தையும் விட்டுவிடும்படி செய்கிறார்.

(7) தேவன் தம்மை விட்டு மருள விழுகிறவர்கள் பேரில் மிகுந்த கண்டிப்பை விளக்குகிறார். லோத்தின் மனைவியை நினைப்போமாக. அவள் விலக்கப்பட்ட பொருளின் பேரில் ஆசைகொண்டு கற்பனையை மீறி, எக்காலத்தோருக்கும் எச்சரிக்கையின் ஸ்தம்பமானாள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய அறிவினால் இவ்வுலகத்தின் சீர்கேட்டுக்குத் தப்பினவர்கள், மறுபடியும் அதில் சிக்கிக்கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தேவன் தம்முடைய பிள்ளைகளை மரணபரியந்தம் சிட்சிக்கிறதானால், பாவிகளுடைய முடிவு என்னமாயிருக்கும்.

(8) தேவகண்டிப்பை மனிதர் எத்தனை சீக்கிரமாய் மறந்துபோய் மறுபடியும் பாவத்தில் விழுகிறார்கள்.

(9) பொல்லாதவர்கள் நடுவிலே யிருக்கையில் அவர்களுடைய துன்மார்க்கத்துக்குத் தப்பிக்கொள்ளுகிறவர்கள், தனிமையாயிருக்கையில் சோதனையால் மேற்கொள்ளப்படுவதுண்டு.

(10) அப்படிப்பட்டவர்கள் அவமானத்துக் குட்படுவார்கள்.

(11) பெற்றோருடைய பாவங்களினிமித்தம் பிள்ளைகள் பாடுகளை அநுபவிப்பதுண்டு.

(12) நாம் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணக்கடவோம். அநேக தீமைகளை வருவிக்கிற பொருளாசைக்கும், குடிவெறிக்கும் எச்சரிக்கையாயிருப்போமாக.

கவனிப்பு. சங். 11. 1-ல் பாவத்திற் பிரவேசிக்கிறதற்கான மூன்று படிகளுண்டென்று காண்கிறோம். அவைகள் என்னவெனில்,—பாவிகளுடைய வழியில், (1) நடக்குதல், (2) நிற்குதல், (3) உட்காருதல் என்பவைகளே. இவைகள் லோத்தின் சரித்திரத்தில் திருஷ்டாந்தமாயிற்று. எப்படியென்றால்,—அவன் ஒரே தாண்டாய்த் தாண்டி அக்கிரமக்காரருடைய நடுவில் வசிக்கப்போகாமல் வரவரப் படிப்படியாகமாத்திரம் போய் வசித்தான்.

முதலாவது: சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான் (ஆதி. 13: 12.). ஆனால் அப்பொழுது பட்டணத்துக்குள் அவன் பிரவேசிக்கவில்லை. இரண்டாவது: அப்பட்டணத்தாரோடு பழகிவரவர அவர்களோடு உறவாடிக்கொண்டு பின்பு மோசம் வராதென்று கருதி ஊருக்குட் புகுந்து அங்கே வாசம்பண்ணினான் (ஆதி.14: 12.). மூன்றாவது: அங்கே இருக்க இருக்க ஜனங்களோடே அதிகம் அதிகமாய்ப் பழக்கமாகிக் கடைசியாக அந்தச் சண்டாளரோடு கலியாண சம்பந்தஞ்செய்யவும் அவர்களுக்கு ஒரு அதிகாரியாகவும் இடமுண்டாயிற்று. (ஆதி. 19: 1, 14.)

இப்படியாக லோத்து (1)சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டானென்பதையும், (2) அவன் சோதோமில் குடியிருந்தானென்பதையும், (3) அவன் சோதோமின் வாசலில் ஊரதிகாரியாக உட்கார்ந்திருந்தானென்பதையும் நாம் கவனிக்குமிடத்தில் பாவக்கேட்டிலும் மோசநாசத்திலும் வரவர அகப்படாதபடிக்கு எச்சரிப்படையவேண்டியவர்களாயிருக்கிறோம்.





# 20. அதிகாரம்.

ஆபிரகாம் கேராரிலே சஞ்சரித்து, 2. தன் மனைவியைத் தன் சகோதரியென்றதினால் அபிமெலேக்கு அவளைத் தன் மனைவியாக்கிக்கொள்ள எத்தனித்தது. 3. அவன் நிமித்தம் அபிமேலேக்கு சொப்பனத்திலே கடிந்துகொள்ளப்பட்டது. 9. அவன் ஆபிரகாமைக் கடிந்துகொண்டு, 14. சாராளை அவனிடத்தில் ஒப்புவித்து, 16. அவளும் கடிந்து கொள்ளப்பட்டது. 17. அவன் ஆபிரகாமுடைய செபத்தால் சீரடைந்தது.

ஆபிரகாம் [1]அவ்விடம் விட்டு, தென்தேசத்திற்குப்
பிரயாணப்பட்டணி, [2]காதேசுக்கும் சூருக்கும் நடுவா
கக் குடியேறி, கேராரிலே [3]தங்கினான்.—அங்கே ஆபிர
காம் தன் மனைவியாகிய சாராளைத் [4]தன் சகோதரி
என்று சொன்னதினாலே, கேராரின் ராஜாவாகிய

[1] ஆதி.18.1.
[2] ஆதி. 16.7, 14.
[3] ஆதி.26.6.
[4] ஆதி.12.13:26.7.

## 20. அதிகாரம்.

**1. "ஆபிரகாம் அவ்விடம் விட்டு."** ஆபிரகாம் வெகுகாலமாய்க் குடியிருந்த மம்ரேயை விட்டுத் தென்தேசத்துக்கு அதாவது நெகப்புக்குச் சென்றான். இப்படி அவன் பிரயாணஞ் செய்ததில் அவனுடைய கால்நடைகளின் மேய்ச்சலுக்கு அது அநுகூலமாயிருந்தது.

"காதேஸ்." எபிரோனுக்குத் தெற்கே யிருந்தது.

"சூர்." எகிப்தையும் சிவந்த சமுத்திரத்தையும் இணைக்கிறதும் கல் அரபியாவிலுள்ள காடுமாயிருந்தது.

"கேரார்." காசாவுக்கும் பெயெர்செபாவுக்கும் சமீபமாயிருந்தது. அது இப்போது கெர்பத்—எல்—கேரார் என்றழைக்கப்படுகிறது.

**2. "சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே."** இருபத்துமூன்று வருஷங்களுக்குமுன்னே ஆபிரகாம் எகிப்திலே பார்வோனுக்கு முன்பாக இந்தப் பிரகாரமாகச் சொன்னதையிட்டுப் பார்வோனால் கடிந்துகொள்ளப்பட்டு வெட்கத்தோடே எகிப்தைவிட்டுப் புறப்பட்டான். மறுபடியும் அந்தப் பாவத்தில் இப்போது விழுந்தான். தன் உயிரைப் பாதுகாக்கும்படியாக அவன் சத்தியத்தை மறைத்ததில் தன் மனைவியின் கனத்தையும் கற்பையும் பேணாதவனாகக் காணப்படுகிறான். அநேக வெளிப்படுத்தல்களை அடைந்தவனும் யுத்தத்துக்குக் கைபடிந்த அநேக வேலைக்காரரை உடையவனுமான அவன் அவிசுவாசத்துக்கு இடங்கொடுத்துத் தந்திரத்தைக் கையாடினது பயங்காளித்தனத்தைக் காட்டுகிறது.

அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்
தான்.
3 தேவன் இராவிலே [1]அபிமெலேக்குக் குச் சொப்பனத்
திலே தோன்றி: நீ அழைப்பித்த ஸ்திரீயின்நிமித்தம்
நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்
4 கிறுளே என்ருர்.—அபிமெலேக்கு அவளைச் சேரா
திருந்தான். ஆகையால் அவன்: ஆண்டவரே, [2]நீதி
5 யுள்ள ஜனங்களை அழிப்பீரோ? — இவள் தன் சகோ
தரி என்று அவன் என்னோடே சொல்லவில்லையா?

[1] யோபு. 33. 15. சங். 105. 14.
[2] ஆதி. 18. 23.

"அபிமெலேக்கு." என்பதற்கு "பிதா இராசன்" என்றர்த்தம். பார்வோன் என்பது எகிப்தின் இராசாக்களுக்குப் பொதுப்பெயரா யிருந்ததுபோல அபிமெலேக் என்பதும் பெலிஸ்தரின் இராசாக்களுக்குப் பொதுப்பெயரா யிருந்தது.

"சாராளை அழைப்பித்தான்." சாராள் இப்போது தொண்ணூறுவயதாயி ருந்தாள். தேவதூதர் அவளைச் சந்தித்து ஒரு குமாரனைப் பெறுவாள் என்று சொன்னதின்பேரில் அவள் புதுப்பெலன் அடைந்தாள் என்று சிலர் அபிப்பி ராயப்படுகிருர்கள். வேறு சிலர் அபிமெலேக் தன் இராச்சியத்துக்கு அநுகூ லமாயிருக்கும்படி பராக்கிரம பிரபுவான ஆபிரகாமோடே சிநேகமாயிருக்கச் சித்தங்கொண்டு சாராளை அழைப்பித்தான் என்று எண்ணுகிருர்கள்.

**3. "அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி."** பூர்வகாலத் தில் தேவன் தமது திருவுள சித்தத்தைப் பலவகையாய்ப் பலருக்கு வெளிப்ப டுத்தியிருக்கிருர். அவர் நல்லவர்களுக்கும் விசுவாசிகளுக்குமாத்திரமல்ல, சவு லைப்போன்ற மாயக்காரருக்கும் அஞ்ஞானிகளான பார்வோன் பிலேயாம் நே புகாத்நேச்சார் அபிமெலேக்கு முதலியவர்களுக்கும் தமது சித்தத்தைத் தெரி யக்காட்டியிருக்கிருர். தீர்க்கதரிசிகள் அப்போஸ்தலர் எழுதின ஆகமங்கள் முற்றுபெற்றபின்பு தேவன் மேற்படி முறைமையை விட்டுவிட்டார்.

**"நீ செத்தாய்."** "நீ சாகிருய்" அல்லது "நீ செத்து வருகிருய்." சாராள் நிமித்தம் தேவன் அபிமெலேக்கின்பேரில் வியாதியை அனுப்பினுர். அந்த வியாதி மரணத்துக்கேதுவானதாயிருந்தது. விபசாரகுற்றம் மரணதண்ட னைக்குரியது என்று தேவபார்வையில் காணப்பட்டதாக இங்கே துலங்கு கிறது.

**4. "நீதியுள்ள ஜனங்களை."** அபிமெலேக்கு மெய்மார்க்கமறியாதவன்; பரலோகத்தின் தேவனைப்பற்றிய அறிவு அவனுக்குச் சரியானபடி இருந்தது மில்லை. மேலும் அவன் இராசாவாயுமிருந்தான். அவன் குற்றஞ்செய்தால் அவனை மேல்விசாரிக்க ஆளுமில்லை. அப்படியிருந்தும் அவன் இயற்கைப்பிர மாணத்துக்கு இசைவாக மனச்சாட்சியின்படி நடந்துகொண்டவனுக விளங் கினுன். மேலும் சோதோமியர் கானானியரைவிட பெலிஸ்தியர் கூடியவரை யோக்கியராக நடந்துகொண்டதாகவும் தோன்றுகிறது.





அவன் தன் சகோதரன் என்று இவளும் சொன்னுளே;
[1]உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும்
6 இதைச் செய்தேன் என்று சொன்னுன்.—அப்பொ
ழுது தேவன்: உத்தம இருதயத்தோடே நீ இதைச்
செய்தாய் என்று நான் அறிந்திருக்கிறேன்; நீ [2]எனக்கு
விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்
தேன்; ஆகையால், நீ அவளைத்தொட நான் உனக்கு
7 இடங்கொடுக்கவில்லை.—அந்த மனுஷனுடைய மனை
வியை அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு

[1] 2 இரா. 20. 3. 2 கொ. 1. 12. 1 தீமோ. 1. 13.
[2] ஆதி. 31. 7; 35. 5. சங். 51. 4.

**5. "உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச் செய் தேன்."** சாராளை அவமானம் பண்ணவேண்டும் என்ற எண்ணத்தோடும் பல வந்தம் பண்ணவேண்டும் என்ற சிந்தையோடும் செய்யாமல் சாராள் ஆபிரகா மின் சகோதரி என்றே அபிமெலேக் அவளை மனைவியாகப் படைக்க இருந் தான். அறியாமல் பாவத்தில் விழுவதும் தேவதண்டனையை வருவிக்கிறதாயி ருக்கிறது என்று இந்தச் சரித்திரத்தினுல் அறியலாம்.

**6. "நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்."** தீங்கு நேரிடாதபடி தேவன் ஆபிரகாம், சாராள், அபிமெலேக்கு என்றவர்கள்பேரில் வைத்த இரக்கத்தினுலே பாவம் நடக்காதபடி தடுத்தார்.

**7. "அவன் ஒரு தீர்க்கதரிசி."** தீர்க்கதரிசி என்ற பதம் இந்த இடத்தில் தான் முதலாவதாக வருகிறது. தேவனுடைய ஆவியால் ஏவப்பட்டுப் பேசுகி றவனுக்கு அல்லது தெய்வீக வெளிப்படுத்தலை மனிதருக்குத் தெரியப்படுத் துகிறவனுக்குத் தீர்க்கதரிசி என்று பேர். யாத். 7: 1ல் ஆரோன் மோசே கட் டளையிட்ட செய்திகளைப் பார்வோனுக்கு அறிவித்ததால் மோசேயின் தீர்க்கத ரிசி யென்று சொல்லப்பட்டிருக்கிருன். 1 சாமு. 9: 9ல் "இந்நாளிலே தீர்க் கதரிசி யென்னப்படுகிறவன், முற்காலத்தில் ஞானதிருஷ்டிக்காரன் என்னப்ப டுவான்" என்பதை வைத்துக்கொண்டு தீர்க்கதரிசி யென்ற வார்த்தை பஞ்சாக மத்தில் அடிக்கடி வழங்கப்பட்டிருப்பதால் அந்த ஆகமம் பிந்தியகாலத்தில் எழுதப்பட்டதென்று சிலர் ஆட்சேபிப்பதுண்டு. "தீர்க்கதரிசி" என்ற பேர் தேவனுடைய சித்தத்தைத் தெரியப்படுத்தினவர்களுக்கும் வரும் காரியங்களை முன் அறிவித்தவர்களுக்கும் வேதத்தைப் போதித்த பேர்போன தேசிகர்களுக் கும் பொதுவான பெயராக வழங்கப்பட்டுவந்தது. "ஞானதிருஷ்டிக்காரன்" என்பது தேவதரிசனை அடைகிறவனைமாத்திரம் குறிக்கிற பெயராயிருக்கிறது. இந்தக் கருத்து யாத். 7: 1; 15: 20. எண். 11: 29; 12: 6. முதலிய இடங்க ளில் ஒத்துவராது. சாமுவேலின் காலத்திலே கர்த்தருடைய தரிசனம் அபூர்வ மாயிருந்ததால் தேவதரிசனை அடிக்கடி அவனுக்குண்டானதினிமித்தம் ஞா னதிருஷ்டிக்காரன் என்ற பேர் அவனுக்குத் தகுந்ததாயிருந்தது. ஆனால் பிந் தியகாலத்தில் தீர்க்கதரிசி யென்ற பேர் தேவனுடைய விசேஷித்த ஊழியக்கா ரருக்கு வழங்கப்பட்டது.

*தீர்க்கதரிசி; நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக
வேண்டுதல் செய்வான்; நீ அவளை அனுப்பிவிடாதிருந்
தால், நீயும் உன்னைச்சேர்ந்த யாவரும் சாகவே சாவீர்
கள் என்று அறிவாயாக என்று சொப்பனத்திலே அவ
னுக்குச் சொன்னார்.
8 அபிமெலேக்கு அதிகாலையில் எழுந்து, தன் ஊழி
யக்காரரையெல்லாம் அழைப்பித்து, இந்தச் சங்கதி
களையெல்லாம் அவர்கள் கேட்கும்படி சொன்னான்;
9 அந்த மனுஷர் மிகவும் பயந்தார்கள்.—அப்பொழுது
அபிமெலேக்கு ஆபிரகாமை அழைப்பித்து: நீ எங்க
ளுக்கு என்ன காரியஞ் செய்தாய், [1]நீ என்மேலும்,
என் ராஜியத்தின்மேலும் கொடிய பாவம் சுமரப்பண்
ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?
[2]செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தா
10 யே என்றான்.—பின்னும் அபிமெலேக்கு ஆபிரகாமை
நோக்கி: என்னத்தைக் கண்டு நீ இந்தக் காரியத்தைச்
11 செய்தாய் என்றான்.—அதற்கு ஆபிரகாம்: இவ்விடத்
தில் [3]தெய்வபயம் இல்லையென்றும், என் மனைவியினி

* 1 சாமு. 7. 5. யோபு 42. 8. யாக. 5. 14, 15.
1 யாத். 32. 21. யோசு. 7. 25.
2 ஆதி. 34. 7.
3 ஆதி. 42. 18. நெகே. 5. 15. சங். 36. 1. நீதி. 16. 6.

"**உனக்காக வேண்டுதல் செய்வான்!**" ஆபிரகாமை அபிமெலேக்கின் முன்பாக மேன்மைப்படுத்தும்படி தேவன் இப்படிச் சொன்னார்.

**8. "அந்த மனுஷர் மிகவும் பயந்தார்கள்."** அபிமெலேக்கு இரவில் கண்ட சொப்பனத்தைத் தன் ஊழியக்காரருக்குத் தெரியப்படுத்தினபோது, அவர்கள் தங்கள் இராசாவின்பேரில் பட்சமுள்ளவர்களாயிருந்ததால் அவனுக்கு அகாலமரணம் நேரிடுமென்று பயந்தார்கள்.

**9. "நீ எங்களுக்கு என்ன காரியஞ் செய்தாய்."** சொப்பனத்தின் பயன் இப்போது வெளியரங்கமாய் அபிமெலேக்கிடத்தில் கிரியை செய்தது. அவன் ஆபிரகாமை அழைத்து அவனுக்கு வாய் சிட்சை செய்து அவன் மனைவியைத் திரும்பவும் ஒப்புவித்தான்.

**10. "என்னத்தைக் கண்டு."** அபிமெலேக்கு தன் இராச்சியத்தில் தனக்குத் தெரியாமல் ஏதோ ஒரு பெரிய கொடுமை நடந்திருப்பதை ஆபிரகாம் கண்டு அசத்தியம் சொல்லியிருப்பானோ என்று பயந்து அதை அறிய இப்படிக் கேட்டிருக்கலாம்.

**11. "இவ்விடத்தில் தெய்வபயம் இல்லை."** ஆபிரகாம் கானானியர் நடுவில் அநேகவருஷம் குடியிருந்து அவர்களுடைய பாவங்களைக் கண்டிருந்தான். மேலும் சோதோமியரின் பாவங்களைக்குறித்துக் கர்த்தரும் அவனுக்





மித்தம் என்னைக் கொன்று போடுவார்கள் என்றும்
12 நான் நினைத்தேன்.—அவள் [1]என் சகோதரி என்பதும்
மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி,
என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனை
13 வியானாள்.—என் தகப்பன் வீட்டைவிட்டுத் தேவன்
[2]என்னைத் தேசாந்தரியாய்த் திரியும்படி செய்தபோது,
நான் அவளை நோக்கி: நாம் போகும் இடமெங்கும்,
நீ என்னைச் சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச்
செய்யவேண்டிய தயை என்று அவளிடத்தில் சொல்லி
யிருந்தேன் என்றான்.
14 அப்பொழுது அபிமெலேக்கு ஆடுமாடுகளையும்,
வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்
குக் கொடுத்து, அவன் மனைவியாகிய சாராளையும் அவ

1 ஆதி. 11. 29.
2 ஆதி. 12. 1. எபி. 11. 8.

குத் தெரியக் காட்டியிருந்தார். ஆதலால் அந்தக் கானானியரைப்போலவே பெலிஸ்தியரும் இருக்கலாம் என்றெண்ணியிருந்தான். ஆனாலும் அவன் நினைத்தபடி எகிப்திலும் கேராரிலும் சனங்கள் கெட்டுப்போயிருந்தார்கள் என்று சொல்ல ஏதுவில்லை. ஆபிரகாம் தன் ஜீவனைக் காப்பாற்றும்படி இழிவான வகையை உபயோகித்தது துக்கப்படத்தக்க காரியமாயிருக்கிறது.

**12. "என் தாய்க்குக் குமாரத்தியல்ல."** சாராள் (ஆதி. 11: 29.) சொல்லப்படுகிற இஸ்காள் என்பவள் என்று சாதிக்கிறது இதற்கு விரோதமாய்க் காணப்படுகிறது. இஸ்காள் தேராகின் பேரப்பிள்ளையாயிருந்தாள். அப்படியாகில் அவள் காரியத்தில் தகப்பனைப்பற்றிய ஒற்றுமையும் தாயைப்பற்றிய வித்தியாசமும் அர்த்தமில்லாதிருக்கிறது. சாராள் முறையில் ஆபிரகாமின் சகோதரியாயிருந்தாள். அவள் தேராகின் இரண்டாம்தாரத்து மகளாயிருக்கலாம் அல்லது தேராகின் சகோதரன் மகளாயிருக்கலாம்.

**13. "தேவன் என்னைத் தேசாந்தரியாய்."** கர்த்தருக்கு வழங்கப்படும்போது தேவன் என்கிற வார்த்தை பன்மையாயும் அதைச்சேர்ந்த வினைமுற்று ஒருமையாயும் வருவது வழக்கம். இந்த இடத்தில் மூலத்திலே பன்மைப் பெயருக்கு இசைவாய் வினைமுற்றும் பன்மையாகவே இருக்கிறது. இந்தப் பிரகாரமாக ஆதி. 35: 7. 2 சாமு. 7: 22ல் வருகிறது.

**14. "அபிமெலேக்கு ஆடுமாடுகளையும்..........ஆபிரகாமுக்குக் கொடுத்து."** பார்வோன் சாராளை தன் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோனபோது ஆபிரகாமுக்கு பரிசுகளைக் கொடுத்தான். ஆனால் அவன் அவைகளைத் திரும்ப வாங்கிக்கொள்ளாதிருந்தாலும் மனவெறுப்போடே ஆபிரகாமை அனுப்பினான். அபிமெலேக்கோ சாராளை ஆபிரகாம் வசம் திரும்ப ஒப்புவித்தபோது மன உற்சாகமாய் வெகுமதிகளைக் கொடுத்ததுடன் தன் தேசத்தில் குடியிருக்கும்படியான சலாக்கியத்தையும் அருளினான்.

15 விடத்தில் திரும்ப ஒப்புவித்தான்.—பின்னும் அபி
மெலேக்கு: இதோ, என் தேசம் உனக்குமுன்பாக
இருக்கிறது; உன் பார்வைக்குச் சம்மதியான இடத்
திலே குடியிரு என்று சொன்னான்.
16 பின்பு சாராளை நோக்கி: உன் சகோதரனுக்கு ஆயி
ரம் வெள்ளிக்காசு கொடுத்தேன்; இதோ, உன்னோடி
ருக்கிற எல்லார் முன்பாகவும், மற்ற யாவர் முன்பாக
வும், இது உன் [1]முகத்து முக்காட்டுக்காவதாக என்
றான்; இப்படி அவள் கடிந்துகொள்ளப்பட்டாள்.
17 ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின்நிமித்தம்
கர்த்தர் அபிமெலேக்குடைய [2]வீட்டாரின் கர்ப்பங்
18 களையெல்லாம் அடைத்திருந்தபடியால், — ஆபிரகாம்
தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொ
ழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியை
யும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளை
பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்.

[1] ஆதி. 26. 11. சங். 12. 1: 25. 12. வெளி. 3. 19.
[2] ஆதி. 12. 17.
[3] யேசு. 42. 9, 10.

**16.** "உன் சகோதரனுக்கு." அபிமெலேக்குச் சாராளுக்கு அவள் தப்பி தத்தை உணர்த்தும்படியாக இப்படிச் சொன்னான்.

"ஆயிரம் வெள்ளிக்காசு." இது ஏறக்குறைய 1250 ருபாய்க்குச் சமமா யிருக்கலாம்.

"இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக." பூர்வகாலத்திலே விவாகம் செய்த ஸ்திரீகள் முக்காடிட்டுக்கொண்டுபோவது வழக்கமாயிருந்தது. சாராளைப் பார்த்து ஒருவரும் தகாத இச்சைகொள்ளாதபடிக்கு, அவளுடைய உயர்ந்த ஸ்திதிக்குத் தக்கதாக அபிமெலேக்கு தன் இராச தயாளத்தின்படியே முக்காட்டுக்காக ஆயிரம் வெள்ளிக்காசைக் கொடுத்தான். அவள் அவமானப்படுத்தப்படாமல் கனமாக விட்டுவிடப்பட்டாள்.

"கடிந்துகொள்ளப்பட்டாள்." சரிக்கட்டப்பட்டாள் என்று இருப்பினுல் ஒக்கும். சாராளை அவள் புருஷனிடத்திலிருந்து பிரித்ததற்கு எவ்வளவும் குறைவு நேரிடாதபடி சரிக்கட்டப்பட்டது.

**17.** "சாராளின் நிமித்தம்." கர்த்தர் சாராள் நிமித்தம் அபிமெலேக்கு பாவத்தில் விழாதபடி தடுத்தார். யாக்கோபினிமித்தம் லாபானையும் ஏசாவையும், இஸ்ரவேலர் நிமித்தம் பிலேயாமையும் அப்படியே தடுத்தார். கர்த்தர் ஆபிரகாமினிமித்தம் இராசாவைக் கடிந்துகொண்டு தமது தீர்க்கதரிசிக்கு ஒருவரும் தீங்குசெய்யாதபடி பண்ணினார்.

**18.** "ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்." அபிமெலேக்கு மிகுந்த உத்தமமாய்ச் சரிக்கட்டினபடியால் ஆபிரகாம் அவனுக்காக விண்ணப்பஞ்செய்தான். கர்த்தர் அவனுடைய செபத்துக்கு உத்தரவு அருளி அபிமெலேக்கின் வீட்டாருக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீக்கினார்.





## 21. அதிகாரம்.

1. ஈசாக்கு பிறந்தது. 4. அவன் சுன்னத்துப் பண்ணப்பட்டது. 6. சாராள் சந்தோஷமடைந்தது. 9. ஆகாரும் இஸ்மவேலும் அனுப்பி விடப்பட்டது. 15. வனாந்தரத்திலே ஆகாருக்கு வந்த ஆபத்தில், 17. தூதன் அவளுக்கு ஆறுதல் அளித்தது. 22. பெயெர்செபாவிலே அபிமெலேக்கும் ஆபிரகாமும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டது.

1 கர்த்தர் தாம் சொல்லியிருந்தபடி சாராள்பேரில்
[1]கடாட்சமானார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாரா

[1] 1 சாமு 2. 21. லூக். 4. 23.

### படிப்பினை.

(1) விசுவாசிகளின் தகப்பன் அவநம்பிக்கைக்கு இடங்கொடுத்துச் சீவனைப் பாதுகாக்கும் நோக்கமாய் வஞ்சனைசெய்து மூன்றுதரம் செய்த பாவத்தில் விழுந்து, சாராளையும் குற்றஞ்செய்யும்படி பண்ணினான். அபிமெலேக்கு உத்தமனாக சோதனையை நிறுத்தி, அவனும் அவன் குடும்பத்தாரும் உபத்திரவங்களுக்குள் அகப்படும்படி செய்து, சாராள் கண்டிக்கப்படவும், தான் வீண்போக்குகளைச் சொல்லவும் ஏற்பட்டது எவ்வளவு துக்கப்படத்தக்க காரியமாயிருக்கிறது. இதுவிஷயங்களில் ஆபிரகாமைப் பின்பற்றலாமோ? கூடாது. இவைகள் நமக்கு எச்சரிப்புகளாக எழுதப்பட்டிருக்கின்றன,—நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்குப் பார்க்கக்கடவன்.

(2) பாவத்தில் விழுகிற எல்லாரும் மாயக்காரர் என்று நாம் தீர்த்துப்போடக் கூடாது. பாவத்தில் நிலைநில்லாமல் அவர்கள் மறுபடியும் குணப்பட்டால் திரும்பவும் மன்னிப்படைவார்கள். ஆனால் கிருபை பெருகும்படி பாவஞ் செய்யலாம் என்று எந்த மனுஷனும் துணிகரங்கொள்ளவேண்டாம்.

(3) கபடுள்ள வஞ்சனைகள் சீக்கிரத்துக்குள்ளாகக் கண்டுபிடிக்கப்படும். அப்போது வெட்கம் மேலிடும்.

(4) தீமைக்கு நன்மை செய்வது பெருந்தன்மையைக் காட்டுகிறது.

(5) விபசாரம் தேவனுக்கு விரோதமான பெரும்பாவமாயிருக்கிறது.

(6) சில விசேஷித்த காரியங்களில் நமது உத்தமத்தைப்பற்றித் தேவனிடத்தில் அறிவிப்பது சரியாயிருக்கும்; தேவன் அதை அங்கீகரிக்கிறவராயுமிருக்கிறார்.

(7) பிரதானமான தோற்றத்தினாலே நாம் பயத்துக்கு இடங்கொடுப்பதுண்டு. தெய்வபயம் அரிதாயிருக்கும் என்று நாம் எண்ணும் இடத்தில் அது அதிகமாக இருக்கலாம்.

(8) பாவஞ் செய்யாதபடி தடுக்கப்படுவதற்காக நன்றியறிதலைக் காண்பிக்கவேண்டும்.

(9) தேவன் தம்முடைய பிள்ளைகளைக் கண்டித்தாலும், அவர்கள் பாவங்களை அவர்களுக்கு மன்னித்து அவர்களை இரட்சித்து அவர்கள் செபத்துக்குச் செவிகொடுத்து அவர்களைக் கனப்படுத்துகிறவராயிருக்கிறார்.

## 21. அதிகாரம்.

**1.** "கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தருளினார்." ஆதி. 17. 16ல் தேவன் ஆபிரகாமுக்குச் சாராள்மூலமாய் ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்று வாக்கு அருளினார். அந்த வாக்கு இப்போது நிறைவேறினதை இங்கே பார்க்கிறோம்.

2 ளுக்குச் செய்தருளினர்.—ஆபிரகாம் முதிர்வயதாயி
ருக்கையில், சாராள் [1]கர்ப்பவதியாகி, தேவன் குறித் [1] அப்.7.8.எபி.11. 11.
திருந்த காலத்திலே அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்
3 றுள்.— அப்பொழுது ஆபிரகாம் தனக்குச் சாராள்
பெற்ற குமாரனுக்கு [2]ஈசாக்கு என்று பேரிட்டான். [2] ஆதி. 17: 19.
4 தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளி
லே, ஆபிரகாம் தனக்குத் [3]தேவன் கட்டளையிட்டிருந்த [3] ஆதி. 17. 1,10, 12.
5 படி [4]அவனுக்கு விருத்தசேதனம்பண்ணினன்.—தன் [4] லூக் 12.48.அப். 7.8.
குமாரனாகிய ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் நூறு
6 வயதாயிருந்தான்.—அப்பொழுது சாராள்: தேவன்
[5]என்னை நகைக்கப்பண்ணினர்; இதைக் கேட்கிற யாவ [5] சங். 126.2. ஏசா. 54.1.கலா.4.27. லூக் 1. 58.
7 ரும் என்னோடேகூட நகைப்பார்கள்.—சாராள் பிள்
ளைகளுக்குப் பால் கொடுப்பாள் என்று ஆபிரகாமுக்கு
எவன் சொல்லுவான்? அவருடைய முதிர்வயதிலே

**2.** **"ஒரு குமாரனைப் பெற்றுள்."** ஈசாக்கின் பிறப்பு அற்புதசெயலுள்ளது. சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனபின்பாடு அவன் பிறந்தான் (ரோம. 4: 19.). கிறிஸ்துவின் பிறப்பும் அதிசயமுள்ளது. புருஷனை அறியாத ஒரு கன்னிகை அவரைப் பெற்றுள்.

**3.** **"ஈசாக்கு என்று பேரிட்டான்."** ஆதி. 17: 19ல் கர்த்தர் ஈசாக்குக்குப் பேரைக் கொடுத்தார், ஆபிரகாம் அந்தப் பேரை ஈசாக்குக்கு இட்டதில் அவனே வாக்குத்தத்தத்தின் புத்திரன் என்று அங்கீகரித்தான் என்று அறியலாம்.

**4.** **"ஈசாக்கு பிறந்த எட்டாம் நாளிலே............அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினன்."** இந்த வழக்கத்தின்படியே யூதர்கள் குழந்தை பிறந்த எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ணிவருகிறார்கள்.

**5.** **"ஆபிரகாம் நூறு வயதாயிருந்தான்."** ஆபிரகாம் அழைக்கப்பட்ட இருபத்தைந்து வருஷத்துக்குப்பின்பு ஈசாக்கு பிறந்தான். ஆபிரகாம் நூறு வயதாயிருந்து தன் சரீரம் செத்துப்போனதை அறிந்தும் தன் விசுவாசத்தின் பலனைக் கண்டடைந்தான்.

**6.** **"தேவன் என்னை நகைக்கப்பண்ணினர்."** பிரயாணிகள் ஒரு குமாரன் பிறப்பான் என்று சாராளுக்கு வாக்குத்தத்தஞ் செய்தபோது நகைத்தாள். அந்த வாக்குச் செய்தவர் கர்த்தர் என்பதை அவள் உணர்ந்து இப்போது வெளியரங்கமாய் அதை அறிக்கைசெய்தாள்.

**7.** **"எவன் சொல்லுவான்."** சாராள் ஈசாக்கைப் பெற்றது இயல்புக்கு விரோதமாயிருந்ததால் மனிதர் பார்வைக்கு அது கூடாதகாரியமாகக் காணப்படும். ஆனால் தேவனுக்குக் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. அவர் இல்பொருளிலிருந்து சகலத்தையும் உருவாக்க வல்லவர்.





[1]அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றுள்.— [1] ஆதி.18.11.12. எபே. 3. 20.
8 பிள்ளை வளர்ந்து, பால் மறந்தது; ஈசாக்கு பால் மறந்த
நாளிலே ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினன்.
9 பின்பு [2]எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகா [2] ஆதி. 16.1,15.
முக்குப் பெற்ற குமாரன் [3]பரியாசம்பண்ணுகிறதைச் [3] கலா. 4. 29.
10 சாராள் கண்டு,—ஆபிரகாமை நோக்கி: [4]இந்த அடி [4] ஆதி. 25.6 கலா. 4. 30.
மைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்
ளும்; இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமா
ரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை
11 என்றுள்.—[5]தன் மகனைக்குறித்துச் சொல்லப்பட்ட [5] ஆதி. 17. 18.
இந்தக் காரியம் ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்
12 தது.—அப்பொழுது தேவன் ஆபிரகாமை நோக்கி:
அந்தப் பிள்ளையையும், உன் அடிமைப்பெண்ணையும்
குறித்துச் சொல்லப்பட்டது உனக்குத் துக்கமாயிருக்
கவேண்டாம்; [6]ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங் [6] ரோ. 9.7,8.எபி. 11. 18.

**8.** **"பால் மறந்தது."** எபிரெயருக்குள்ளே பிள்ளை மூன்று வருஷம் பால் குடிக்குமாம். அதற்கு அப்பால் அது தாய்ப்பாலை மறக்கச்செய்வார்கள். நமது தேசத்தில் சிலர் மூன்றுவருஷம்வரைக்கும் குழந்தைக்குப் பால் கொடுப்பதுண்டு.

**ஈசாக்கு பால்மறந்த நாளிலே ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினன்.** சாமு. 1: 24, 25ஐ கவனிக்கையில் ஆபிரகாம் செய்த விருந்து வைதீகத்துக்குரியதாயிருந்ததென்று அறியலாம்.

**9.** **"பரியாசம்பண்ணுகிறதை."** இந்த வார்த்தை மூலத்தில் "நகைக்கிறதை" என்றிருக்கிறது. இஸ்மவேல் இப்போது பதினறு வயசாயிருந்தான். தனக்குச் சுதந்தரபாத்தியம் அற்றுப்போனதைக் கண்டு ஈசாக்கைக் கேலியாக நகைத்ததோடு அடித்தும் இருக்கலாம் (கலா. 4: 29.). இதைச் சாராள் கண்டு மனமடிவாகி இஸ்மவேலைச் சுதந்தரத்துக்குப் புறம்பாக்கும்படி வகை செய்தாள்.

**10.** **"புறம்பே தள்ளும்."** இந்த வார்த்தையைப் பவுல் எடுத்துக்காட்டி வேதம் சொல்லுகிறது என்கிறான். இது சாராளுடைய வார்த்தையாயிருந்தாலும் சர்வவல்லவரால் அது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

**11.** **"ஆபிரகாமுக்கு மிகவும் துக்கமாயிருந்தது."** இஸ்மவேலின்பேரில் ஆபிரகாம் மிகவும் பிரியமுள்ளவனுயிருந்தான் (ஆதி. 17: 18.). பதினறு வருஷம் தன்னோடே இருந்த மகனை வெளியே தள்ளுவது தகப்பனுடைய மனதுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. சாராள் வற்புறுத்திப் பேசின காரியம் நீதியுள்ளதல்ல என்றும் அவன் எண்ணினன். ஆனால் கர்த்தர் சாராளுடைய செய்கைக்கு ஆபிரகாம் இசையும்படியாக உத்தரவு அருளினர்.

**12.** **"ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்."** மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தம் ஈசாக்கினிடத்தில் விளங்கும் என்பதே கருத்து. அந்த வாக்குத்தத்தம் முதலாவது ஆதாமுக்கும் பின்பு ஆபிரகாமுக்கும் ஆபிரகாம் வழி

கும்; ஆதலால் சாராள் உனக்குச் சொல்வதெல்லாவற்
13 றையும் கேள்.—அடிமைப் பெண்ணின் மகனும் உன்
வித்தாயிருக்கிறபடியால், அவனையும் ஒரு [1]ஜாதியாக் [1] ஆதி. 16. 10.
14 குவேன் என்றார்.—ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து,
அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையும் எடுத்து,
ஆகாருடைய தோளின்மேல் வைத்து, பிள்ளையையும்
ஒப்புக்கொடுத்து, அவளை [2]அனுப்பிவிட்டான்; அவள் [2] யோ. 8. 35.
புறப்பட்டுப் போய், பெயெர்செபாவின் வனாந்தரத்தி
லே அலைந்து திரிந்தாள்.
15 துருத்தியிலிருந்த தண்ணீர் செலவழிந்தபின்பு, அ
16 வள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டு,—பிள்ளை

யில் ஈசாக்குக்கும் ஈசாக்கு வழியில் யாக்கோபுக்கும் யாக்கோபு வழியில் யூதாவுக்கும் யூதா வழியில் தாவீதுக்கும் செய்யப்பட்டது.

**13.** **"அவனையும் ஒரு ஜாதியாக்குவேன்."** ஆகார் ஆபிரகாமின் மனைவியாக எண்ணப்படாதிருந்தாலும் ஆகாரிடத்தில் பிறந்த இஸ்மவேல் ஆபிரகாமின் மகனாக எண்ணப்பட்டான். தகப்பனிமித்தம் இஸ்மவேல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டதைப் பார்க்கிறோம். இந்த ஆசீர்வாதம் உலகத்துக்குரியதாயிருந்தது.

**14.** **"பிள்ளையையும் ஒப்புக்கொடுத்து."** இவ்விடத்தில் பிள்ளையென்பது குழந்தைப்பருவத்தைக் குறியாது. அதற்குரிய எபிரெயவார்த்தையாகிய "யெலெட்" என்றதை ஆதி. 4: 23ல் வாலிபன் என்றும் ஆதி. 42: 22ல் இளைஞன் என்றும் திருப்பியிருக்கிறது. யோசேப்பைக்குறித்து இளைஞன் என்று சொல்லியகாலத்தில் அவன் பதினேழு வயசாயிருந்தான். இஸ்மவேலும் ஏறக்குறைய அந்த வயதுள்ளவனாயிருந்தான்.

தேவன் இஸ்மவேலை ஒரு சாதியாக்குவேன் என்று சொன்னதை ஆபிரகாம் கவனித்து, கர்த்தர் அவனையும் அவன் தாயையும் ஆதரித்து வளர்ப்பார் என்று நம்பி அவசரத்துக்குப் போதுமான ஆகாரத்தையும் தண்ணீரையும் கொடுத்ததாகத் தோன்றுகிறது.

**"பெயெர்செபாவின் வனாந்தரத்திலே."** ஆபிரகாம் ஏறக்குறைய ஒரு வருஷம் கேராரில் குடியிருந்தான். அப்புறம் அவன் பெயெர்செபாவுக்கு வந்திருக்கவேண்டும் (வச. 33, 34.). பெயெர்செபா வனாந்தரம் பலஸ்தீனாவுக்குத் தெற்குக் கடைசியிலிருந்தது.

**"அலைந்து திரிந்தாள்."** கானலால் மருட்டப்பட்டுத் தண்ணீருக்காக அலைந்து திரிந்திருக்கலாம்.

**15.** **"அவள் பிள்ளையை ஒரு செடியின்கீழே விட்டு."** இஸ்மவேல் 16 அல்லது 17 வயதுள்ளவனாயிருந்தாலும் பிரயாணத்தினால் களைத்துத் தண்ணீர் தவனத்தினால் சோர்ந்து மயங்கிப்போனான். பிள்ளையின் உபத்திரவத்தைப்பார்க்கத் தாயின் மனதுக்குக் கொடிய வருத்தமாயிருந்ததால் விலகிப்போயிருந்து சத்தமிட்டு அழுதாள்.





சாகிறதை நான் பார்க்கமாட்டேன் என்று, எதிராக
அம்புபாயும் தூரத்திலே போய் உட்கார்ந்து சத்த
17 மிட்டு அழுதாள்.—தேவன் பிள்ளையின் [15]சத்தத்தைக் [15] யாத். 3. 7.
கேட்டார்; தேவதூதன் வானத்திலிருந்து ஆகாரைக்
கூப்பிட்டு: ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது,
பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன்
18 அவன் சத்தத்தைக் கேட்டார்.—நீ எழுந்து பிள்ளையை
எடுத்து அவனை உன் கையினால் பிடித்துக்கொண்டு
போ, அவனைப் [16]பெரிய ஜாதியாக்குவேன் என்றார்.— [16] ஆதி. 17. 20.
19 தேவன் [17]அவளுடைய கண்களைத் திறந்தார்; அப் [17] எண். 22. 31.
பொழுது அவள் ஒரு தண்ணீர்த்துரவைக் கண்டு, 2இரா. 6. 17–20. லூ. 24. 16, 31.
போய், துருத்தியிலே தண்ணீர் நிரப்பி, பிள்ளைக்குக்
20 குடிக்கக் கொடுத்தாள்.—தேவன் பிள்ளையுடனே இரு
ந்தார்; அவன் வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து,

**17.** **"தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்."** தேவன் ஆகாருடைய உரத்த சத்தத்தைக் கேளாமல் இஸ்மவேலுடைய மெல்லிய சத்தத்தைக் கேட்டார். இஸ்மவேல் தன்னைப்பற்றி ஆபிரகாமுக்குத் தேவன் அருளின வாக்குத்தத்தத்தை எடுத்துக்காட்டி ஜெபம்பண்ணியிருக்கலாம். அந்த ஜெபதொனியை தேவன் அங்கீகரித்தார்.

**"தேவதூதன்."** ஆதி. 16: 7ல். ஆகாருக்குக் காணப்பட்டவர் கர்த்தருடைய தூதன் என்று சொல்லப்பட்டிருக்கிறார். அவள் அப்போது ஆபிரகாமின் குடும்பத்தைச் சேர்ந்தவளாயிருந்தாள். இப்போதோ ஆபிரகாமோடே பண்ணப்பட்ட உடம்படிக்கைக்கு அப்புறப்பட்டவளானாள். ஆதலால் இங்கே உடம்படிக்கையின் கர்த்தராக அல்ல சர்வஜீவாத்துமாக்களுக்கும் தேவனாக அவர் அவளுக்குத் தரிசனம் அளித்து அவளைக் காப்பாற்றினார். யாத். 14: 19. தேவதூதனானவர் விலகி அவர்களுக்குப் பின்னாக நடந்தார் என்று வாசிப்பதில் அவர் இஸ்ரவேலருக்கும் எகிப்தியருக்கும் தேவனாக நியாயஞ்செய்ய விளங்கினார் என்று அறியலாம்.

**"ஆகாரே."** சனசஞ்சாரம் இல்லாத இடத்தில் ஒரு சத்தத்தைக் கேட்டதும் தன் பேரைச்சொல்லி அழைத்ததும் ஆபத்து நீங்க வகையைக் காட்டினதும் மரித்துப்போவான் என்று தான் எண்ணின பிள்ளை பெரிய சாதியாவான் என்ற ஆசீர்வாதமான வசனத்தைக் கேட்டதும் ஆகாருக்குப் பெரிய நம்பிக்கையை உண்டாக்கிற்று. இஸ்மவேலைப்பற்றி ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு இங்கே சிறந்தவகையாய் ஆகாருக்குப் புதுப்பிக்கப்பட்டது.

**19.** **"தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார்."** தண்ணீர்த் துரவு அவளுக்குச் சமீபமாயிருந்தபோதிலும் அது அவளுக்கு மறைவாயிருந்தது இப்போது அவள் அதைக் காணும்படி அநுக்கிரகஞ் செய்தார்.

21 [1]வில்வித்தையிலே வல்லவனானான்.—அவன் பாரான் | [1] ஆதி. 16. 12.
வனாந்தரத்திலே குடியிருக்கையில், அவனுடைய தாய்
எகிப்துதேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு
விவாகம் பண்ணுவித்தாள்.

22 அக்காலத்தில் அபிமெலேக்கும் அவன் சேனாபதி
யாகிய பிகோலும் ஆபிரகாமை நோக்கி: நீ செய்கிற
காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் [2]உன்னுடனே | [2] ஆதி. 26. 28.
23 இருக்கிறார்.—ஆகையால், நீ எனக்காவது, என் குமா

**21. "பாரான் வனாந்தரம்."** இப்போது அது எல்–தீ என்று அழைக்கப்படுகிறது. அது கிழக்கே உவாடி—எல்—அரபாவிலிருந்து மேற்கே குலெஸ் குடாவரைக்கும், தெற்கே சீனாய்தொடர் மலைகளிலிருந்து வடக்கே பலெஸ்தீனாவின் எல்லைவரைக்கும் எட்டுகிறதாயிருக்கிறது. இஸ்மவேல் தன் தாயின் தேசமாகிய எகிப்தில் குடியிருக்கவாவது தன் தகப்பன் சஞ்சரித்துவந்த கானானில் வாசஞ்செய்யவாவது விருப்பங் கொள்ளாமல் தற்காலத்திலிருக்கிற அரபியரைப்போல வனசஞ்சாரியாயிருந்தான்.

**"அவனுடைய தாய் எகிப்துதேசத்தாளாகிய ஒரு பெண்ணை."** நமுடைய தேசத்தில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குப் பெண் தெரிந்து கொள்ளுகிற வழக்கப்படியே ஆகார் தன் மகனுக்குப் பெண்ணைத் தெரிந்து கொண்டாள். (அதி. 24: 4, 55. யாத். 21: 9.)

**22. "அபிமெலேக்கும் அவன் சேனாபதியாகிய பிகோலும்."** அபிமெலேக்கு என்பது பெலிஸ்தியருடைய இராசாக்களுக்குரிய பட்டப்பேர். (அதி. 26: 1. 1 சாமு. 21: 10. ஒத்தவாக்கிய அருகில் பார்க்க; சங். 34: முகவுரையில் பார்க்க.)

"பிகோல்." என்பதற்கு "எல்லாருக்கும் வாய்" என்றர்த்தமாம். இந்தப் பேர் அதி. 26: 26ல் வருகிறது. இந்தப் பேரும் பட்டப்பெயரெனத் தோன்றுகிறது. எல்லாருக்கும் வாயாக இருந்து இராசாவுக்குச் சங்கதிகளை அறிவிக்கிற பிரதம மந்திரிக்கு இந்தப் பேர் வழங்கப்பட்டிருக்கலாம். அபிமெலேக்கும் பிகோலும் ஆபிரகாம் அண்டைக்கு வந்த சாடையைக் கவனிக்கையில் இருபட்சத்தாருக்குள்ளும் இருந்த சிநேகம் தணிந்துவந்திருந்ததாகக் காணப்படுகிறது. அது வேலைக்காரருக்குள் உண்டான மனஸ்தாபத்தினால் சம்பவித்திருக்கலாம். இந்தச் சங்கதியினால் ஒரு இராசன் சிநேகம்பண்ணிக்கொள்ளத்தக்கதாய் ஆபிரகாம் ஒரு பெரிய பிரபுவாயிருந்தான் என்றறியலாம். அபிமெலேக்கு என்பவனும் ஆபிரகாம் எல்லமையில் சிறந்து வளர்வதைக் கண்டாலும் அதற்காகப் பொறாமைப்படாமல் முன்போல நற்குணத்தைக் காட்டினவனாக விளங்குகிறான்.

**"நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார்."** அபிமெலேக்கு ஆபிரகாமுடைய காரியங்களை எல்லாம் நன்றாய்க் கவனித்து அவன் தேவனால் மேன்மேலும் ஆசீர்வாதம் பெற்றுவந்ததை அறிந்து சாராள்நிமித்தம் தனக்காவது தன் பின்சந்ததிக்காவது யாதொரு வருத்தத்தை உண்டுபண்ணாதபடி ஆணையிட்டுத் தரும்படி கேட்கவந்தான்.





ரனுக்காவது, என் பேரனுக்காவது வஞ்சனை செய்யா
மல், நான் உனக்குச் செய்த தயவின்படியே, நீ எனக்
கும், நீ தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும், தயவு
செய்வேன் என்று இங்கே தேவன்பேரில் எனக்கு
24 [1]ஆணையிட்டுக் கொடு என்றான்.—அதற்கு ஆபிரகாம்: | [1] யோசு. 2. 12. 1 சாமு. 24. 21.
25 நான் ஆணையிட்டுக் கொடுக்கிறேன் என்றான்.—ஆனா
லும், [2]அபிமெலேக்குடைய வேலைக்காரர் கைவசப் | [2] ஆதி. 26. 15, 22.
படுத்திக்கொண்ட துரவின்நிமித்தம் ஆபிரகாம் அபி
26 மெலேக்கைக் கடிந்துகொண்டான்.—அதற்கு அபிமெ
லேக்கு: இந்தக் காரியத்தைச் செய்தவன் இன்னான்
என்று எனக்குத் தெரியாது, நீயும் எனக்கு அறிவிக்க
வில்லை; இன்று நான் அதைக் கேட்டதேயன்றி, இதற்
குமுன் அதை நான் கேள்விப்பட்டதே இல்லை என்
27 றான்.—அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக் கொண்
டுவந்து அபிமெலேக்குக்குக் கொடுத்தான்; அவர்கள்
இருவரும் [3]உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.— | [3] ஆதி 26. 31.

**24. "ஆணையிட்டுக் கொடுக்கிறேன்."** சமாதானத்தை நாடி அபிமெலேக்கு ஆபிரகாம் இடத்துக்கு வந்ததால், ஆபிரகாம் அவனைப் புறக்கணியாமல் அவன் மனதுக்கு இசைந்து இடங் கொடுத்தான்.

**25. "அபிமெலேக்கைக் கடிந்துகொண்டான்."** சமாதானத்துக்கான உறுதியைச் செய்யுமுன், சமாதானத்துக்கு இடையூறாயிருந்த காரியத்தை நிவிர்த்திசெய்யும் நோக்கமாய் ஆபிரகாம் தன் வேலைக்காரர் வெட்டின துரவை அபிமெலேக்கின் வேலைக்காரர் அநியாயமாய்ப் பிடுங்கிக்கொண்டதையிட்டு அபிமெலேக்கோடே பேசி ஒழுங்குசெய்தான்.

**26. "எனக்குத் தெரியாது."** ஆபிரகாமின் துரவை அபிமெலேக்கின் வேலைக்காரர் நியாயமின்றிப் பிடுங்கிக்கொண்டது அபிமெலேக்குக்குத் தெரியாதிருந்தது. இப்போதுதான் தனக்கும் ஆபிரகாமுக்கும் இருந்த சிநேகம் குறைந்துவந்ததற்கு முகாந்தரத்தைக் கண்டுபிடித்தான். அதின்பேரில் துரவை ஆபிரகாமுக்குக் கொடுத்துவிட்டு இருவருக்கும் உறவைப் பலப்படுத்திக் கொண்டான்.

**27. "இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்."** ஆபிரகாம் சமாதானத்துக்கு அடையாளமாக அபிமெலேக்குக்கு ஆடுமாடுகளைக் கொடுத்ததுடன் இருவரும் ஒருவருக்கொருவர் பட்சமாயிருக்கும்படியாக உடம்படிக்கை செய்தார்கள். இந்த உடம்படிக்கை ஈசாக்கால் திரும்பவும் புதுப்பிக்கப்பட்டது. (அதி. 26: 31.)

28 ஆபிரகாம் ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளைத் தனியே
29 நிறுத்தினான்.—அப்பொழுது அபிமெலேக்கு ஆபிர
காமை நோக்கி: நீ தனியே நிறுத்தின இந்த [1]ஏழு பெண் — [1] ஆதி. 33. 8.
ணாட்டுக்குட்டிகள் என்னத்திற்கு என்று கேட்டான்.—
30 அதற்கு அவன்: நான் இந்தத் துரவு தோண்டினதைக்
குறித்து, நீர் [2]சாட்சியாக இந்த ஏழு பெண்ணாட்டுக் — [2] ஆதி.31.48, 52.
குட்டிகளை என் கையில் வாங்கிக்கொள்ளவேண்டும்
31 என்றான்.—அவர்கள் இருவரும் அவ்விடத்தில் ஆணை
யிட்டுக்கொண்டபடியால், அந்த இடம் *பெயர்செபா — * ஆணையின் கிணறு.
32 என்னப்பட்டது.—அவர்கள் பெயர்செபாவிலே உட — ஆதி. 26.28,33.
ன்படிக்கை பண்ணிக்கொண்டபின் அபிமெலேக்கும்,
அவன் சேனாபதியாகிய பிகோலும் எழுந்து பெலிஸ்
தருடைய தேசத்திற்குத் திரும்பிப்போனார்கள்.
33 ஆபிரகாம் பெயர்செபாவிலே ஒரு தோப்பை உண்

**28.** "ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளை." எபிரெயுவில் ஆணையிடுவதற்குரிய வார்த்தையின் நேர் கருத்து "ஏழாக்குகிறது" என்பதைக் குறிக்கும். அதாவது ஏழுவரால் உறுதிப்படுத்தப்படுகிறதாம். ஏழு பெண்ணாட்டுக்குட்டிகளையும் அபிமெலேக்கு அங்கிகரித்துக்கொள்வதில் ஆபிரகாம் வியாச்சியப்பட்ட துரவுக்குப் பாத்தியஸ்தன் என்று காட்டும்.

**29.** "இந்த ஏழு பெண்ணாட்டுக்குட்டிகள் என்னத்திற்கு." இந்த ஆட்டுக்குட்டிகள் தனியே நிறுத்தப்பட்ட முகாந்தரம் அபிமெலேக்குக்குத் தெரியவில்லை. ஆகவே அதின் முகாந்தரத்தை அவன் ஆபிரகாமிடத்தில் கேட்டான். ஆபிரகாம் காரியங்களை விவரித்துச் சொன்னதின்பேரில் அபிமெலேக்கு பொருளை அறிந்து அந்த ஆட்டுக்குட்டிகளை எடுத்துக்கொண்டு ஆபிரகாமைத் துரவுக்குச் சுதந்தரனாக்கினான்.

**31.** "பெயர்செபா." என்பதற்கு "ஆணையின் துரவு" அல்லது "ஏழின் துரவு" என்றர்த்தம். அது உவாடி—எஸ்—சேபாவிலிருக்கிறது. இப்போது அது பேர்—எஸ்—சேபா என்றழைக்கப்படுகிறது. அங்கே இரண்டு துரவுகள் இருக்கின்றன. ஒன்று பன்னிரண்டரை ஜாதி அடிவிட்ட அளவுள்ளது. மற்றது அதற்கு இருநூறு ஜாதி அடிக்குத் தெற்கேயிருக்கிறது. அதின் விட்ட அளவு ஐந்து ஜாதி அடி.

**33.** "ஒரு தோப்பை உண்டாக்கி." எபிரெயுவில் "தாமரிஸ்க் என்ற விருட்சத்தை நாட்டினான்" என்றிருக்கிறது. அது உஷ்ணதேசங்களிலே உன்னதமாய் வளர்ந்து படரும். இவ்வகை மரத்தின்கீழே சவுல் கிபியாவிலே விசாரணைசெய்தான் (1 சாமு. 22: 6.). அவனுடைய எலும்புகளும் இவ்வகையான ஒரு மரத்தின்கீழே அடக்கம் செய்யப்பட்டது. (1 சாமு. 31: 13.)





டாக்கி, [4]சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய — [4] உபா.33.27.ஏசா. 40. 28. ரோ.16. 25. 1 தீமோ. 1. 17.
நாமத்தை அவ்விடத்தில் தொழுதுகொண்டான்.—
ஆபிரகாம் பெலிஸ்தருடைய தேசத்தில் அநேக நாள்
தங்கியிருந்தான்.

"சதாகாலமுமுள்ள தேவன்." சதாகாலம் என்று திருப்பியிருக்கிற எபிரெய வார்த்தை "மறைவான காலம்" என்று அர்த்தங்கொள்ளும். அதாவது தேவனுடைய ஆதியும் அந்தமும் ஒருவராலும் அறியப்படக்கூடாததாயிருக்கிறது. ஆதி. 14: 23ல் ஆபிரகாம் தேவனை உன்னதமானவர் என்று சொல்லுகிறான். ஆதி. 17: 1ல் தேவன் தம்மைச் சர்வவல்லமையுள்ளவர் என்று ஆபிரகாமுக்குத் தெரியக்காட்டினார். இங்கே ஆபிரகாம் தேவனுக்கு நித்தியர் என்கிற பெயரைத் தரிக்கிறான். அவன் பரிசுத்தத்தில் வளரவளர தேவனைப் பற்றிய அறிவிலும் வளர்ந்துவந்ததாகப் பார்க்கிறோம்.

**34.** "பெலிஸ்தருடைய தேசத்தில் அநேக நாள் தங்கியிருந்தான்." அபிமெலேக்குக்கும் ஆபிரகாமுக்கும் சமாதான உடம்படிக்கை ஏற்படுத்தப்பட்டபடியினால் பெயர்செபாவில் ஆபிரகாம் நெடுங்காலம் தங்கியிருந்தான். மேலும் அந்த இடம் ஆடுமாடுகளுக்கு நல்ல மேய்ச்சலுள்ள இடமாயுமிருந்தது.

## படிப்பினை.

### வச. 1—21.

(1) கர்த்தரிடத்தில் நம்பிக்கைவைத்து அவருக்காகப் பொறுமையுடன் காத்திருக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் எதிர் நோக்கினவைகளைத் தப்பாமல் கண்டடைவார்கள்.

(2) அவர் நமக்கு ஆசீர்வாதங்களை அனுக்கிரகஞ் செய்கையில் நாம் அவர் ஏற்படுத்திய நியமங்களை அனுசரிப்பது நமதுமேல் விழுந்த கடமை.

(3) சந்தோஷகாரியங்களுக்கு அடுத்தபடியில் துக்ககாரியங்கள் நேரிடுவதுமுண்டு. பிள்ளைகளால் குடும்பத்தில் வருத்தங்கள் நேரிடுவதுண்டு. அத்தருணங்களில் விவேகமாய் நடந்துகொள்வது தகப்பனுடைய ஞானத்தை விளக்கும்.

(4) நம்முடைய நெருக்கங்களில் கர்த்தர்பேரில் நமது பாரத்தைப்போட்டு, அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி செய்வதே உத்தமம்.

(5) ஆபத்துக் கிட்டியிருக்கிறது;—சகாயரில்லை; கைவிடப்பட்டேன் என்று அங்கலாய்க்கிற சமயந்தான், தேவன் பூரணசகாயம் செய்வதற்கு ஏற்ற சமயம். விசுவாசிகளுடைய ஜெபத்துக்கும் ஆபத்திலிருந்து அலறுகிறவர்களுக்கும் கர்த்தர் ஆச்சரியமாய்ச் செவிகொடுக்கிறார். தேவபக்தருடைய சந்ததியாருக்கு அநேக புறம்பான சலாக்கியங்கள் கொடுக்கப்படுவதுமுண்டு.

### வச. 22—34.

(6) விசுவாசிகளுடைய நடக்கைகள் நல்லொழுக்கமுள்ளவைகளாயும் அவர்களுக்குக் காட்டப்படும் தேவதயவுகளைப் பிரத்தியட்சமாய் விளக்குவதாயும் இருக்கும்போது சுற்றத்தார் காண்கையில் தேவன் அவர்களோடேகூட இருக்கிறார் என்று அறிந்துகொள்வார்கள். அப்படியானால் புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக நாம் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்வது எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது.

## 22. அதிகாரம்.

1. ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடக் கட்டளைபெற்று, சோதிக்கப்பட்டது. 3. அவன் விசுவாசமும் கீழ்ப்படிதலுமுள்ளவனென்று விளங்கினது. 11. ஈசாக்கைப் பலியிடாதபடிக்குக் கர்த்தருடைய தூதன் ஆபிரகாமைத் தடுத்தது. 13. ஈசாக்குக்குப் பதிலாக ஒரு ஆட்டுக்கடா பலியிடப்பட்டது. 14. அந்த இடத்துக்கு யெகோவாயீரே என்று பெயரிடப்பட்டது. 15. ஆபிரகாம் மறுபடியும் ஆசீர்வதிக்கப்பட்டது. 20. நாகோருடைய சந்ததி.

1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகா

(7) தேவன் ஆசீர்வதிக்கிறவர்களோடே சிநேகமாயிருப்பது உத்தமம் என்பதை உலகத்தார் சாதாரணமாய் அறிந்துகொள்வார்கள்.

(8) எல்லாரோடும் சமாதானமாயிருக்கவேண்டும் என்று விரும்புகிறவர்கள் தங்கள் வேலைக்காரரை ஏற்றவகையாய்க் கண்காணித்துவருவதுடன், தங்கள் நடக்கையைக்குறித்தும் விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.—மற்றப்படி முதலாளியானவன் தான் சம்பந்தப்படாத அநேக காரியங்களை அவன் செய்ததாக மற்றவர்கள் எண்ணும்படி ஏதுவாகும்.

(9) தேவனைச் சேவிக்கிறவர்கள் எல்லாக்காரியங்களிலும் உண்மையாய் நடந்துகொள்ளவேண்டும்.

(10) விசேஷித்த தருணங்களில் ஒழிய மற்ற வேளைகளில் ஆணை பிரமாணம் செய்யக்கூடாது. ஆணை பிரமாணம் செய்கையில் தேவ நாமத்துக்குக் கனமும் நம்முடைய மார்க்கத்துக்கு மகிமையுமாக பயபக்தியோடே அதைச் செய்யவேண்டும்.

(11) கொடுக்கல் வாங்கல்முதலிய காரியங்களில் நேர்மையாயும் நிதானமாயும் நடப்பது உத்தமகுணத்தை விளங்கச்செய்கிறது.

(12) புறம்பான விஷயங்களை நாம் நல்ல ஜாக்கிரதையோடு செய்தாலும், நாம் பூமியில் அந்நியரும் பரதேசிகளுமாயிருக்கிறோம் என்பதை உணர்ந்து, நம்முடைய தேவனை வணங்குவதில் நாம் வெட்கப்படக்கூடாது. அவரே நம்முடைய நித்திய அடைக்கலமும் சுதந்தரமுமாயிருக்கிறார்.

## 22. அதிகாரம்.

**1. "இந்தக் காரியங்கள் நடந்தபின்பு."** ஆபிரகாம் அநேகமான அலைச்சல்களுக்குள்ளாகி மிகுதியான சோதனைகளைத் தாங்கி, கடைசியாகச் சமாதானமாய் வாழ்ந்துகொண்டிருந்தான் என்று முந்தின அதிகாரத்தின் கடைசிப்பாகத்தால் அறிகிறோம். வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட குமாரன் பிறந்து வாலிபனாக வளர்ந்துவந்தான். இஸ்மவேல் ஆபிரகாமோடே இராதிருந்தாலும் செழித்தோங்கிவந்தான். பெலிஸ்திய இராசாவோடே சமாதானமிருந்தது. ஆனால் செழிப்பானகாலம் சோதனையின் காலமாக மாறினது. இந்தக்காலத்தில் ஈசாக்கு 25 வயதாயிருந்தான் என்று யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரனும், 13 வயதாயிருந்தான் என்று ஆவன்–எஸ்ரு என்பவனும், 37 வயசாயிருந்தான் என்று வேறே சில ரபிமாரும் சொல்லியிருக்கிறார்கள்.

**"தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்."** ஆபிரகாமின் விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் நிரூபிக்க அவனைப் பரீட்சித்தார். அவன் அநேகவரு





மைச் [1]சோதித்தார்; எப்படியெனில், அவர் அவனை
நோக்கி: ஆபிரகாமே என்றார்; அவன்: இதோ அடி
யேன் என்றான்.—அப்பொழுது அவர்: [2]உன் புத்திர
னும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்
கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா
தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்

[1] உபா 8. 2. எபி. 11. 17. யாக். 1. 12. 1 பே. 1. 7.
[2] 2 நாளா. 3. 1.

ஷங்களாய்ப் பரிசுத்த ஆவியானவருடைய பள்ளிக்கூடத்தில் படித்துவந்தான். இப்போது அவன் எவ்வளவுதூரம் பரிசுத்தமார்க்கத்தில் தேறிவந்திருக்கிறான் என்பதை விளங்கக்காட்டும் நோக்கமாய்ச் சோதிக்கப்பட்டான். பாவத்தில் விழும்படி தேவன் ஒருவரையும் சோதிக்கிறவரல்ல. (யாக். 1: 13.)

**"ஆபிரகாமே."** தேவன் இதற்கு முன்னொருதரம் (ஆதி. 15: 1.), ஆபிரகாமைப் பேர்சொல்லிக் கூப்பிட்டார். இப்போது இரண்டாம்தரமாக அப்படிக் கூப்பிட்டார். இது அவர் அவன்பேரில் வைத்த மிகுந்த பட்சத்துக்கு அடையாளமாயிருந்தது.

**"இதோ அடியேன்."** தன்னை அழைத்தவர் தேவன் என்பதை ஆபிரகாம் ஒளிவாய் யாதொரு சமுசயமின்றி அறிந்துகொண்டான். முந்தினகாலங்களில் அவர் அவனுக்குத் தரிசனமாகி அவனோடே பேசின சப்தத்தொனிக்கு ஒத்திருந்ததால் அவன் தேவவாக்கைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறதாகக் காட்டும்படி இதோ அடியேன் என்றான்.

**2. "உன் புத்திரனும்."** எலியேசரல்ல அல்லது ஒரு வேலைக்காரனல்ல அல்லது ஆடுமாடுகளல்ல. தன் மைந்தனாகிய ஈசாக்கை மீட்கும்பொருட்டு ஆபிரகாம் தன் ஆஸ்திமுழுமையும் கொடுக்கச் சித்தமாயிருப்பான்.

**"உன் ஏகசுதனும்."** உன் மனைவி சாராள் பெற்ற ஒரே குமாரன். வாக்குத்தத்தத்துக்குரிய ஒரே மகன். வீட்டிலிருக்கிற ஏக புதல்வன்.

**"உன் நேசகுமாரன்."** முதிர்வயதின் கனியாகக் குடும்பத்தில் அன்புகூரப்பட்டவன்.

**"ஈசாக்கை."** இஸ்மவேலையல்ல, ஈசாக்கு என்று நான் பேரிடச்சொன்னவனை, நீ ஈசாக்கு என்று பிரியத்தோடு அழைக்கிறவனை என்றார். ஆபிரகாமுடைய மனதிலே வேறே அபிப்பிராயமுண்டாகாதபடிக்கு இவ்வளவு திட்பநுட்பமாய் தேவ உத்தரவு கொடுக்கப்பட்டது.

**"நீ."** உன் வேலைக்காரனைக்கொண்டல்ல, நீ சுதாவாய்ச் செய்யவேண்டும்.

**"இப்பொழுது."** காலதாமதம் செய்யாமல் உடனே செய்யத் துவக்கவேண்டும்.

**"மோரியா தேசத்துக்குப் போய்."** மோரியா என்பதற்கு "யெகோவா தேசிகர்" அல்லது "எகோவா சவதரிக்கிறவர்" என்றர்த்தமாம். முதல் அர்த்தம் ஏசா. 2: 3க்கு இசைவாயும் இரண்டாவது அர்த்தம் 14–15 வசனத்துக்கு இசைவாயுமிருக்கிறது. மோரியா, சீகேமிலுள்ள மோரேயைக் குறிக்கும் என்று சில வியாக்கியானிகள் சொல்வதுண்டு. ஆபிரகாம் பலிசெலுத்தின இடம் கெரிசீம் மலையிலிருந்தென்று சமாரியர் சாதிப்பதுமுண்டு. ஆனால்

கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப்
பலியிடு என்றார்.

3 ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின்
மேல் சேணங்கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபே
ரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு,
தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்துகொண்டு, தே
வன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப்
4 போனான்.—மூன்றும் நாளில் ஆபிரகாம் தன் கண்
களை ஏறெடுத்துப்பார்த்து, தூரத்திலே அந்த இடத்

அது மூன்றும் நாளில் போய்ச் சேருவதற்குப் பெயெர்செபாவிலிருந்து தூரமா யிருந்தது. மேலும் (2 நாளா. 3: 1.), சாலொமோன் மோரியா மலையிலே தேவாலயத்தைக் கட்டினான் என்று சொல்லியிருப்பதைக் கவனிக்கையில் அது எருசலேமிலிருந்ததென்று அறியவேண்டியதிருக்கிறது.

"தகனபலியாகப் பலியிடு." தகனபலியிடுவதில் ஈசாக்கைக் கட்டி பலிபீடத்தில் அடுக்கிய கட்டையில் கிடத்தி, அவன் குரல்வளையை அறுத்து இரத்தத்தைச் சிந்திவிட்டு, அவன் சரீரம் சாம்பலாகும்படி சுட்டெரிக்கவேண்டியதாயிருந்தது. இவ்வளவையும் ஆபிரகாம் தன் கையினால் செய்து நிறைவேற்றும்படி உத்தரவு அருளப்பட்டது (லேவி. 1: 5–9.). இந்த உத்தரவை செய்துமுடிக்க ஆபிரகாம் மாமிசத்தோடும் இரத்தத்தோடும் யோசனைபண்ணவில்லை.

**3. "ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து."** ஆபிரகாம் எவ்வளவு துட்பமாய்த் தனக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றத் துணிகிறான். விசுவாசிகளின் தகப்பனுக்கேற்றவண்ணமாய், எவ்வளவும் மன ஆயாசமின்றி உற்சாகமனதோடே அதைச் செய்ய எற்பட்டான். தேவனுடைய அளவற்ற ஞானம், நீதி, பரிசுத்தம், உண்மை, தயாளம், சர்வவல்லமை இவைகளின் பேரில் ஆபிரகாம் தன் நம்பிக்கையை நிலைநிறுத்தி, ஈசாக்கு சாம்பலாக்கப்பட்டாலும், சாம்பலிலிருந்தும் அவனை உயிரோடே எழுப்பி அவர் தாம் வாக்கு உரைத்தபடி அவன் வித்தை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணுவார் என்று உறுதியாய் விசுவாசித்துப் புறப்பட்டான். தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த கட்டளை அவருடைய பிரமாணத்துக்கு விபரீதமாய்த் தோன்றியபோதிலும் ஆபிரகாம் மனதில் ஆட்சேபனை உண்டாகவில்லை. உத்தமனான ஒரே மகனைத் தன் கையினால் கொலை செய்வது தகப்பனுடைய சுபாவத்துக்கு எவ்வளவோ விரோதமாயிருக்கும். அஞ்ஞானிகளான எகிப்தியர், பெலிஸ்தியர், கானானியர், எமோரியர்முதலிய சாதியாருக்கு அது நல்லமாதிரியாயிராது என்றும் சாராளுக்கு அது அகாலமரணத்தை உண்டுபண்ணும் என்றும் நினையாமல் தான் தேவனுக்குக் கீழ்ப்படிவதே மேன்மை என்றெண்ணி கடமையை நிறைவேற்றும்படி போனான்.

**4. "அந்த இடத்தைக் கண்டான்."** இரண்டாம் வசனத்தில் கர்த்தர் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் ஈசாக்கைத் தகனபலியாக இடும்படி ஆபிரகா





5 தைக் கண்டான்.—அப்பொழுது ஆபிரகாம் தன் வே
லைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்
கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்
விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்
6 துக்குத் திரும்பிவருவோம் என்றான். — ஆபிரகாம்
தகனபலிக்குக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனா
கிய ஈசாக்கின்மேல் [1]வைத்து, தன் கையிலே நெருப் [1] யோ. 19. 17.
பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டான்; இருவ
7 ரும் கூடிப் போனார்கள்.—அப்பொழுது ஈசாக்கு தன்
தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: என் தகப்பனே
என்றான்; அதற்கு அவன்: என் மகனே, இதோ, இருக்
கிறேன் என்றான்; அப்பொழுது அவன்: இதோ,
நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு
8 ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.—அதற்கு ஆபிரகாம்:
என் மகனே, [2]தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட் [2] யோ. 1. 29. வெளி. 5. 6.

க்கு உத்தரவு கொடுக்கப்பட்டது. தேவன் குறித்த இடம் இன்னதென்று வியானவரின் உள்ளான ஏவுதலினால் ஆபிரகாம் அறிந்திருக்கவேண்டும். 1 சாமு. 16: 12. 2 இரா. 5: 25.)

**5. "இங்கே காத்திருங்கள்."** வேலைக்காரர் ஆபிரகாமோடேகூடப் போனால் அவன் தேவகட்டளையை நிறைவேற்றுவதற்குத் தடையாயிருக்கலாம்.

"உங்களிடத்துக்குத் திரும்பிவருவோம்." எபி. 11: 19ல் சொல்லியிருக்கிறபடி ஆபிரகாம் நம்பிக்கையினாலே சொன்னான். சரீரம் உயிரோடெழும்பும் என்ற உபதேசத்தை ஆபிரகாம் விசுவாசித்திருந்தான். கல்தேயர், எகிப்தியர் இவர்களுக்குள் அந்த உபதேசம் விசுவாசிக்கப்பட்டுவந்தது.

**6. "கட்டைகளை..........................ஈசாக்கின்மேல் வைத்து."** கிறிஸ்து இரட்சகர் சிலுவையைச் சுமந்துகொண்டு போனதற்கு இது முன்னடையாளம். (யோவா. 19: 17.)

**8. [1]"தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார்."** எபி. 11: 17–19. கவனிக்கையில் ஆபிரகாம் ஈசாக்கை பலிசெலுத்தும்படி தீர்மானித்திருந்ததாகவும் ஈசாக்கு மரித்தாலும் உயிரோடே எழுப்பப்படுவான் என்று விசுவாசித்திருந்ததாகவும் அறியலாம். ஆதலால் 'ஆட்டுக்குட்டி" என்பது ஈசாக்கைக் குறிக்கலாம். கர்த்தரே ஈசாக்கை பலியாகக் குறித்திருந்தார். தகப்பனுக்கும் மகனுக்கும் நடந்த சம்பாஷணை மனதை உடைக்கத்தக்கதான பிரலாபமுள்ளதாயிருந்தது.

[1] சிலர் ஆபிரகாம் இந்த வார்த்தைகளைப் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டுப் பேசினான் என்பார்கள்.

26



5590

டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான்; அப்
புறம் இருவரும் கூடிப்போய்,

9 தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு
வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை
உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய
ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய
10 கட்டைகளின்மேல் அவனைக் [1]கிடத்தினான்.—பின்பு [1] சங். 118. 27. பேர். 10. 17, 18. எபி. 11. 17. யாக். 2. 21.
ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கை
11 யை நீட்டிக் கத்தியை எடுத்தான்.— அப்பொழுது
கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிர
காமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன்:
12 இதோ, அடியேன் என்றான்.—அப்பொழுது அவர்:
[2]பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே, [2] 1 சாமு. 15. 22. மீகா. 6. 6, 7.

**9.** **“ஈசாக்கைக் கட்டி.”** ஈசாக்கின் சம்மதியின்பேரில் ஆபிரகாம் அவனைக் கட்டி அடுக்கிய கட்டைகளின்மேல் அவனைக் கிடத்தினான் என்று யூத வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். இதுவிஷயத்தில் ஈசாக்கு கிறிஸ்து இரட்சகருக்கு முன்னடையாளமாயிருந்தான். அவர் மனதார தம்மைத்தாமே பலியாகச் சிலுவையிலே ஒப்புக்கொடுத்தார். (1 பேது. 2: 23.)

**10.** **“தன் குமாரனை வெட்டும்படிக்கு..........கத்தியை எடுத்தான்.”** முழு இருதயத்தோடு ஆபிரகாம் தேவனில் அன்புகூர்ந்தான் என்பதற்கு இதை விடப் பெரிய திருஷ்டாந்தம் வேண்டியதில்லை. தகப்பனின் சுபாவ அன்புக்கு விரோதமாய்த் தன்னுடைய ஒன்றான நேசகுமாரன் என்று பாராமல் அவனைப் பலியாகச் செலுத்த மனத்தைரியத்தோடு கத்தியை எடுத்தான்.

**11.** **“கர்த்தருடைய தூதனானவர்.”** உடம்படிக்கையின் தூதனானவர் (மல். 3: 1.). பிதாவின் நித்திய குமாரனானவர். 18–ம் வசனத்தில் சொல்லப்படுகிற கர்த்தர்.

**12.** **“பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே.”** ஆபிரகாம் தன் இருதயத்திலே ஈசாக்கைப் பலி செலுத்தியாயிற்று. இருதயத் தீர்மானம் செய்கையாக ஒப்புக்கொள்ளப்பட்டது. நரபலியின்பேரில் தேவன் விருப்பமுள்ளவரல்ல என்று காட்டவும் தமது கிருபையை ஆபிரகாமிடத்தில் அதிசயமாய் விளங்கப்பண்ணினதைப் பின் சந்ததியாருக்குத் தெரியப்படுத்தவும் ஆபிரகாமுக்கு மிகுந்த ஆறுதலை உண்டுபண்ணவும் தாம் ஆபிரகாமின்பேரில் அன்பு பாராட்டினதற்குரிய நியாயத்தை விளங்கச்செய்யும் கர்த்தர் சித்தங்கொண்டு பிள்ளையாண்டான்மேல் உன் கையைப் போடாதே என்று கட்டளை கொடுத்தார்.

**“உன் ஏகசுதன் என்றும் பாராமல்.”** அப்போஸ்தலன் (ரோம. 8: 32.) இந்த வார்த்தைகளை எடுத்துக் காட்டியிருப்பதைக் கவனிக்கையில் ஈசாக்கைப்





அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்
திரன் என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல்
எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் [1]நீ தேவனுக் [1] ஆதி. 26. 4, 5. யாக். 2. 22. சங். 25. 12. மல்கி. 2. 5.
குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்
13 கிறேன் என்றார்.—ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்
துப் பார்க்கும்போது, இதோ, பின்னாகப் புதரிலே
தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்
கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய்,

பலிசெலுத்துவது கிறிஸ்துநாதருடைய பலிக்கு முன்னடையாள தீர்க்கதரிசனமாக எண்ணினான் என்று அறியலாம்.

**“நீ தேவனுக்குப் பயப்படுகிறவன்.”** அதாவது தேவபக்தியுள்ளவன். தேவபக்திக்கு ஆதாரம் தேவபயம்.

**13.** **“புதரிலே தன் கொம்புகள் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவை.”** ஈசாக்குக்குப் பதிலாய்ப் பலியிடும்படியாகக் கர்த்தர் எற்கனவே அந்த ஆட்டுக்கடாவை ஆயத்தப்படுத்திவைத்தார். அது மற்ற ஆடுகளைவிட்டுப் பிரிக்கப்பட்டிருந்தது. கிறிஸ்துவும் அப்படியே பாவிகளை விட்டுப் பிரிந்தவராயிருந்தார் (எபி. 7: 26.). அது எந்தப்பக்கத்துக்குத் திரும்பினாலும் தன் ஜீவனைத் தப்புவிக்க ஏதுவில்லாதிருந்தது. கிறிஸ்துவும் அப்படியே தேவநீதியும் மனிதர்பேரில் வைத்த அன்பும் அவர் தமது ஜீவனைத் தப்புவிக்கும்படி இடம் கொடுக்கவில்லை (ஏசா. 53: 7.). அது ஈசாக்குக்குப் பதிலாக பலி செலுத்தப்பட்டது. கிறிஸ்துவும் பாவிகளுக்காகத் தம்மைத்தாமே பலியாகச் செலுத்தினார். (மத். 20: 28. 1 தீமோ. 2: 6.)

**“அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.”** தன் குமாரனைத் தனக்குத் திரும்பக் கையளித்த தயவை ஆபிரகாம் நன்றியறிதலோடே எண்ணி கர்த்தருக்குத் தோத்திரமாக ஆட்டுக்கடாவைத் தகனபலியாக இட்டான். ஆட்டுக்கடா ஈசாக்குக்குப் பதிலாகச் செலுத்தப்பட்டது. இந்தச் சங்கதியைச் சிலர் ஞான அர்த்தம் செய்வதுண்டு. ஈசாக்கு கிறிஸ்துவின் தேவதன்மைக்கும் ஆட்டுக்கடா அவருடைய மனிததன்மைக்கும் அடையாளமாயிருக்கிறது. பலிபீடத்தில் தகனிக்கப்படக்கூடாதபடிக்கு ஈசாக்கு மிகவும் அரும்பொருளாயிருந்தான். தேவன் அப்படிப்பட்ட நரபலியை வெறுக்கிறவராயுமிருந்தார். ஆகவே உன்னதமானவர் பலிக்கான ஒரு ஆட்டுக்கடாவைச் சவதரித்துவைத்து அது ஈசாக்குக்குப்பதிலாக பலியிடப்படச் சித்தங்கொண்டருளினார். அவ்வண்ணமே கிறிஸ்துவானவர் தமது தெய்வீக தன்மையின்படி பாடுபடக் கூடாதவராயிருந்தார். ஆதலால் நித்திய பிதா அவருக்கு ஒரு சரீரத்தை ஆயத்தம்பண்ணி அதில் பாடுகளையும் மரணத்தையும் அவர் அநுபவிக்கச் சித்தங்கொண்டார். இப்படியாக ஈசாக்கும் ஆட்டுக்கடாவும் கிறிஸ்து இயேசுவின் பாடுகளுக்கும் மரணத்துக்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளமாயிருப்பதைப் பார்க்கிறோம். ஆபிரகாம் பரிசுத்தமுள்ள தேவனும் பிதாவுமானவருக்கு அடையாளமாயிருக்கிறான். அவர் தமது சொந்

கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதி
14 லாகத் தகனபலியிட்டான்.—ஆபிரகாம் அந்த இடத்
துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; [1]அதினாலே
லே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்
படும் என்று இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டு
வருகிறது.

15 கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்
16 திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு:—நீ உன் புத்திரன்
என்றும், உன் ஏக சுதன் என்றும் பாராமல் அவனை
ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடி
17 யால்;—நான் உன்னை [2]ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து,
உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போல
வும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெரு
கப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள்
சத்துருக்களின் *வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளு
18 வார்கள் என்றும்,—நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த

[1] சக். 22. 4, 5. தானி. 3. 17. ழ.
[2] உபா. 1.10. எபே. 33. 22.
* பிரதான ஸ்தலங்களை.

தக்குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை (கிறிஸ்துவை) ஒப்புக்கொடுத்தார். (ரோம. 8: 32.)

**14.** "யேகோவாயீரே" என்பதற்குக் "கர்த்தர் பார்ப்பார்" அல்லது "கர்த்தர் சவதரிப்பார்" என்றர்த்தம். துன்பகாலத்தில் கர்த்தர் தமது சனங்களுக்காகக் கவலையைப் பாராட்டி அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களைக் கொடுப்பதை இது குறிப்பதோடு ஒரு தீர்க்கதரிசனமாயுமிருக்கிறது.

1. எருசலேம் தேவாலயத்தில் அவர் கேருபீன்கள் நடுவிலே செக்கினா என்ற மேகத்தில் தரிசனம் அருளி தமது ஊழியத்துக்குப் பலிகளை ஏற்படுத்திச் சனங்கள் தம்மண்டை வரும்படியாக வகையை ஏற்படுத்திவைத்ததும்,

2. கர்த்தர் தம்முடைய ஆலயத்துக்கு வந்து முந்தின ஆலயத்தைவிடப் பிந்தினதை தமது சமுகத்தால் மகிமைப்படுத்தி, உலகத்தார் எல்லாருடைய பாவங்களையும் நீக்குவதற்குப் பிராயச்சித்தம் செய்ய ஆட்டுக்குட்டியைத் தெரிந்து ஏற்படுத்தினதும் இந்தத் தீர்க்கதரிசனத்தால் குறிக்கப்படும் பொருளாயிருக்கிறது.

"**இந்நாள்வரைக்கும் சொல்லப்பட்டுவருகிறது.**" ஆபிரகாமின் காலமுதல் மோசேயின் காலம்வரையும் "இந்தப் பருவதத்தில் பார்த்துக்கொள்ள" என்பது பழமொழியாக வழங்கப்பட்டு வந்ததோடே பின் சந்ததியாருக்குள்ளும் அது அப்படியே சொல்லப்பட்டுவந்ததென எண்ணவேண்டியதாயிருக்கிறது.





படியினால், [1]உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதி
களும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் [2]ஆணை
யிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.
19 ஆபிரகாம் தன் வேலைக்காரரிடத்துக்குத் திரும்பி
வந்தான்; அவர்கள் எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப்
பெயெர்செபாவுக்குப் போனார்கள்; ஆபிரகாம் பெயெர்
செபாவிலே குடியிருந்தான்.
20 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, ஒருவன் ஆபிர
காமிடத்தில் வந்து: [3]மில்காளும் உன் சகோதரனா
21 கிய நாகோருக்குப் பிள்ளைகளைப் பெற்றாள்;— அவர்
கள் யாரென்றால், [4]மூதற்பேறான ஊத்ஸ், அவன் தம்

[1] ஆதி. 12. 3: 18. 17. அப். 3. 25. கலா. 3. 8. ழ.
[2] லூ. 1. 72. எபி. 6. 13, 14.
[3] ஆதி. 11. 29.
[4] யோபு. 1. 1: 32. 2.

**18.** "**என்பேரில் ஆணையிட்டேன்.**" ஆபிரகாமுக்கு இதற்குமுன் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களெல்லாம் இப்போது ஆணையினாலே அவனுக்கு உறுதிப்படுத்தப்பட்டது. தம்மைவிடப் பெரியவர் இல்லாததால் கர்த்தர் ஆபிரகாமுக்குத் தம்முடையபேரில் ஆணையிட்டுக் கொடுத்தார் (எபி. 6: 13.). இங்கே காட்டப்பட்டிருக்கிற வெளிப்படுத்தல் மிகவும் விசேஷித்தது என்பதை உன்னதமானவர் தமது செய்கையினாலே ரூபித்திருக்கிறார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைக் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய் தேவன் ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் (அதாவது தமது வசனமும் ஆணையும்) நிறைவான ஆறுதல் உண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யையுரையாத தேவன் அப்படிச் செய்தார் (எபி. 6: 17, 18.). ஆபிரகாம் தேவகிருபையினாலே விசுவாசத்தில் இதற்குமுன் உலக சரித்திரத்தில் கேள்விப்படாத ஜெயம் பெற்றான். ஆதலால் ஒரு மகத்தான உடம்படிக்கை ஆணையினால் அவனுக்கு உறுதிப்படுத்தப்பட்டது. அதிலே அவனுக்கும் அவனுடைய வித்துக்கும் வாழ்வும் கனமும் விர்த்தியும் இடவிசாலமும் பூமிக்கெல்லாம் ஆசீர்வாதமும் உண்டாகும் என்று காட்டப்பட்டிருக்கிறது.

**20.** "**உன் சகோதரனாகிய நாகோர்.**" ஆபிரகாமும் அவன் சகோதரனும் வெகுதூரத்திலிருந்தார்கள். அந்தக் காலத்தில் செய்திகள் வந்து எட்டுவது வருத்தமாயிருந்தது. ஆபிரகாம் தன் இனத்தாருக்குள் தன் மகனுக்கு ஒரு மனைவியைப் பார்க்கவேண்டும் என்று தீர்மானித்திருந்தான். அதற்கு இசைவாக இந்தச் சரித்திரம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. நாகோருக்கு தன் சொந்த மனைவியால் எட்டு குமாரரும் மறுமனையாட்டியால் நாலு குமாரரும் பிறந்தார்கள். அப்படியே யாக்கோபுக்கும் தன் சொந்த மனைவிகளால் எட்டு குமாரரும் மறுமனையாட்டிகளால் நாலு குமாரரும் பிறந்தார்கள். இஸ்மவேலுக்கும் பன்னிரண்டு குமாரர் பிறந்தார்கள். இப்படிப்பட்ட ஒற்றுமைகளை இயல்பாய் உலகத்திலே நாம் பார்க்கிறதுண்டு.

**21.** "**ஊத்ஸ்.**" சேமின் பேரப்பிள்ளைக்கும் இந்தப் பெயரிருந்தது (அதி. 10: 23.). சேமின் சந்ததியிலே ஒரு பேர் பலருக்கும் வழங்கப்பட்டு

பியாகிய பூஸ், ஆராமுக்குத் தகப்பனாகிய கேமு
22 வேல்,—கேசேத், ஆசோ, பில்தாஸ், இத்லாப், பெத்
துவேல் என்பவர்கள்; [1]பெத்துவேல் ரெபெக்காளைப் [1] ஆதி. 24. 15.
23 பெற்றான் என்று அறிவித்தான்.—அந்த எட்டுப்பேரை
மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோ
24 ருக்குப் பெற்றாள்.—ரேயுமாள் என்று பேர்கொண்ட
அவனுடைய மறுமனையாட்டியும், தேபா, ககாம், தா
காஸ், மாகா என்பவர்களைப் பெற்றாள்.

வந்திருப்பதைப் பார்க்கலாம். ஊத்ஸ், ஆராம் என்ற நாமங்கள் ஏசாவின் சந்ததியாருக்குள்ளும் வழங்கப்பட்டுவந்தன (அதி. 36: 28.). ஆகவே இதுமேயா ஊத்ஸ் தேசம் என்றழைக்கப்பட்டிருக்கிறது (புல. 4: 21.). யோபு ஊத்ஸ் தேசத்தான் (யோபு. 1: 1.). அவன் ஊத்ஸ் என்பவனுடைய வமிசத்தானாயிருக்கவேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். யோபின் சிநேகிதனாகிய எலிபு ராமின் வமிசத்தானான பூசியன்; ராம் என்பவன் ஆராமாயிருந்தால் யோபின் ஆகமத்தில் காட்டப்பட்டிருக்கிற ஊத்ஸ், பூசு, ஆராம் என்ற மூன்றுபேர்களும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறவைகளுக்கு ஒத்திருக்கின்றன. எரே. 25: 23ல் பூசு சாதியார் தேதான், தேமான் என்பவர்களோடே சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தேசம் கல்அரபியாவிலிருந்தது.

"கேமுவேல்." இவன் அராமிய சாதியாருக்கு முற்பிதாவல்ல; ஆனால் எலியு என்பவனுடைய குடும்பத்துக்கு (யோபு. 32: 2.) தலைவனாயிருந்தான்.

**22.** "**கேசேத்.**" இவன் பூர்வ கல்தேயருக்கு முற்பிதாவாயிராமல் சூறையாடிகளான ஒரு குடும்பத்தாருக்கு முன்னோனாயிருக்கவேண்டும். இவன் வமிசத்தார் யோபைக் கொள்ளையிட்டிருக்கலாம். (யோபு. 1: 17.)

"**பெத்துவேல் ரெபெக்காளைப் பெற்றான்.**" இந்த ரெபெக்காள் ஈசாக்குக்கு மனைவியானாள். இந்தச் சம்பந்தத்தைக் காட்டும் நோக்கமாய் நாகோரின் தலைமுறை அட்டவணை இங்ஙனம் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

படிப்பினை.

(1) தேவனுடைய பிள்ளைகள் இவ்வுலகத்தில் தங்குகையில் சோதனைக்கு நீங்கலாயிருக்கலாம் என்று எண்ணக்கூடாது. கண்டிப்பான பெரிய சோதனைகள் கடைசியாக நேரிடலாம். அப்போது திவ்விய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டு விழிப்புள்ளவர்களாயிருக்கவேண்டும்.

(2) கிருபை யாருக்கு அதிகமாய் அளிக்கப்படுகிறதோ அவன் சோதனையினால் புடமிடப்படுவான்.

(3) சோதனை பெரிதாயிருப்பதற்குத் தக்கதாய் முடிவு மகிமையாய் விளங்கும்.

(4) வருத்தமான பெரிய காரியங்களை செய்யும்படி ஏவப்பட்டால் அதற்குத் தக்கதான கிருபையும் கொடுக்கப்படும். உயிருள்ள பலத்த விசுவாசம் மாட்சிமையான கிரியைகளைச் செய்யும். ஆபிரகாம் தன் நேசகுமாரனைத் தேவனுக்குப் பலியாகச் செலுத்த இருந்ததைவிடப் பெரிய கிரியையை நாம் காண்பது அரிது.





## 23. அதிகாரம்.

1. சாராளுடைய ஆயுசையும் மரணத்தையும் குறித்துச் சொல்லியது. 2. மக்பேலா என்னுமிடம் வாங்கப்பட்டு, 19. சாராள் அதிலே அடக்கம்பண்ணப்பட்டது.

1 சாராள் நூற்றிருபத்தேழு வருஷம் உயிரோடி
2 ருந்தாள்; இவ்வளவே சாராளுடைய வயது.—கானான் [1] ஆதி. 13. 18.
தேசத்திலுள்ள [1]எபிரோன் என்னும் [2]கீரியாத்அர்பா [2] யோசு. 14. 15. நியா. 1. 10.

(5) மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான் என்றுரைத்த கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் குப்பையாக எண்ணவேண்டும்.

(6) கிறிஸ்தவர்களாயிருப்பதினாலே வியாதிகள் துன்பங்கள். சோதனைகள் சம்பவிக்கக்கூடாது, ஐசுவரியம் பெருகவேண்டும், புத்திரபாக்கியம் குறையக்கூடாது, செல்வாக்கும் கனமும் தங்களைச் சூழவேண்டும் என்று எண்ணுவது எவ்வளவு தப்பிதமான எண்ணம். நாம் மிகுந்த உபத்திரவத்தின்வழியாய் தேவனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். சிலுவையில்லாமல் கிரீடமில்லை. நம்முடைய இரட்சிப்பின் அதிபதி உபத்திரவத்தின் வழியாய்ச் சர்வத்துக்கும் கர்த்தரானார்.

(7) ஆபிரகாமின் அன்பு புகழப்படத்தக்கதாயிருந்தாலும் அது தேவனுடைய அன்புக்கு ஒப்பிட எவ்வளவேனும் பாத்திரமுள்ளதல்ல. தேவன் தமது நேசமைந்தனைப் பாவிகளும் துரோகிகளுமானவர்களுக்காகச் சிலுவையில் பிராணத்தியாகம் செய்யும்படி ஒப்புக்கொடுத்தார்.

(8) கிறிஸ்து பாவிகளுக்காக மரித்து உயிர்த்துப் பரலோகத்துக்குப்போய் அவர்களுக்காக விண்ணப்பஞ்செய்து தமது இரத்தத்தால் சம்பாதித்த நன்மைகளைப் பெறும்படி அவர்களைத் தம்மண்டைக்கு அழைக்கிறார்.

(9) நாம் நமக்கென்று பிழையாமல் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்தவருக்காகப் பிழைப்போமாக. சோதனைகாலத்தில் கர்த்தருக்குக் கீழமைந்து அவருடைய சித்தத்துக்கு இசைந்து நடப்பதினால் மேன்மேலும் ஆசீர்வாதம் பெறலாம்.

### 23. அதிகாரம்.

**1.** "**சாராள் நூற்றிருபத்தேழு வருஷம் உயிரோடிருந்தாள்.**" ஸ்திரீகளுக்குள்ளே சாராளுடைய ஆயுள்காலம்மாத்திரம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவள் எபிரெயசாதியாருக்குத் தாயாயிருக்கிற கனத்தையிட்டு அது காட்டப்பட்டிருக்கலாம் (ஏசா. 51: 2.). ஈசாக்கு முப்பத்தேழு வயசாயிருக்கையில் அவள் மரணமடைந்தாள்.

**2.** "**எபிரோன் என்னும் கீரியாத்அர்பா.**" இது மிகவும் பூர்வீகபட்டணம். எகிப்திலுள்ள சோவானுக்கு ஏழுவருஷத்துக்குமுன்னே அது கட்டப்பட்டது (எண். 13: 22.). டெல்றாவுக்குப் போகும் வழியிலே சேமியரில் ஒரு வகுப்பார் அதைக் கட்டியிருக்கலாம். அது யூதாக்கோத்திரத்தில் நெகெப் என்ற தென்திசையில் எருசலேமுக்குத் தெற்கே 22 மைலுக்கு அப்பாலிருந்தது. அதற்குப் பூர்வீகப் பேர் கீரியாத்அர்பா. அது அர்பாவின் பட்ட

விலே சாராள் மரித்தாள்; அப்பொழுது ஆபிரகாம்
வந்து, சாராளுக்காகப் புலம்பி அழுதான்.

3 பின்பு ஆபிரகாம் பிரேதம் இருந்த இடத்திலிருந்து
4 எழுந்துபோய், ஏத்தின் புத்திரரோடே பேசி:—நான்
உங்களிடத்தில் [1]அந்நியனும் பரதேசியுமாய் இருக்கி

[1] ஆதி. 17. 8. 1 நாளா. 29. 15. சங். 39. 12. எபி. 11. 9, 13.

ணம் என்றர்த்தங்கொள்ளும். அர்பா ஏனாக்கின் தகப்பன் என்று சொல்லப் பட்டிருக்கிறான் (யோசு. 15: 13.). அர்பா என்பதின் சரியான அர்த்தம், "நாலு." எபிரோன் என்பதற்கு "ஐக்கியம்" என்றர்த்தம் (ஆதி. 13: 18.). இது காரியத்தைக் கவனிக்கையில் அந்தப் பட்டணம் நாலு குடும்பத்தார் ஒன்று சேர்ந்து கட்டினதாயிருக்கலாம்; அர்பா என்று பட்டணத்துக்கு வழங்கப் பட்ட பேர் பிந்தியகாலத்தில், ஆட்களுக்கும் இடப்பட்டதாகத் தோன்றுகிறது. இஸ்ரவேலர் கானானைக் கட்டிக்கொண்டபோது ஏனாக்கின் புத்திரர் அங்கே யிருந்தார்கள். காலேப் அவர்களைத் துரத்தி (யோசு. 15: 14.), அந்தப் பட்ட ணத்தை வசப்படுத்திக்கொண்டு அந்தச் சங்கதிக்கு ஞாபகக்குறியாகத் தன் பேரப்பிள்ளைக்கு எபிரோன் என்று பேர் தரித்தான் (I நாளா. 2: 42.). அது தற்காலத்திலும் விசேஷித்த ஒரு பட்டணமாயிருக்கிறது. அதிலே 17,000 மகமது மார்க்கத்தாரும் 600 யூதரும் இருக்கிறார்கள்.

"**ஆபிரகாம் வந்து.**" ஆபிரகாம் இந்தக் காலத்தில் பெயெர்செபாவில் இருந்ததாகத் தோன்றுகிறது. ஈசாக்கும் சாராளும் எபிரோனில் ஆடுமாடுக ளுடன் இருந்திருக்கலாம்.

"**சாராளுக்காகப் புலம்பி அழுதான்.**" சாராள் ஆபிரகாமோடே கானான் தேசத்தில் அறுபத்திரண்டுவருஷம் சஞ்சரித்தாள். இவ்வளவு நீடியகாலம் தன் துணைவியாயிருந்தவள் தன் முதிர்வயதில் தன்னைவிட்டு எடுபட்டது அவனுக்கு மிகுந்த கிலேசத்தை உண்டுபண்ணிற்று.

**3. ஏத்தின் புத்திரரோடே.**" எபிரோனில் இதுவரையும் மம்ரேயும் எமோரியரும்மாத்திரம் இருந்ததாக வாசிக்கிறோம். ஆனால் இப்போது பார்க் கையில் அது ஏத்தியருடைய சொத்தாயிருந்தது. இஸ்ரவேல் எகிப்தில் இருந்தபோது இந்த ஏத்தியர், இராச்சியத்துக்காக எகிப்தியரோடே போரா டத்தக்க பராக்கிரமர்களாயிருந்தார்கள். அவர்களுடைய பிரதான பட்டணம் வடசீரியாவிலிருந்தது. அதற்கு எமிசா என்று பேர். இந்த வர்த்தமானங் களை நாம் எகிப்தியருடைய சாதனங்களினாலும் ஏத்தியருடைய சித்திரங்களி னாலும் அறியலாகிறோம்.

**4. "நான் உங்களிடத்தில் அந்நியனும் பரதேசியுமாய் இருக்கிறேன்."** கர்த்தர் ஆபிரகாமோடே நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட் டோ அம்மட்டும் நடந்துதிரி என்று சொல்லியிருந்தார். அந்தப்படியே ஆபிர காம் தன் கால்நடைகளின் மேய்ச்சலுக்காகவேண்டிப் பற்பல இடங்களில் தாபரித்துவந்தான். மற்றக் கானானியரோ பட்டணங்களைக் கட்டி நிலத்தைச் சீர்குடி செய்துவந்தார்கள். இதை வைத்துக்கொண்டு அப்போஸ்தலன், ஆபிரகாம் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப்போலச் சஞ்சரித்தான் என்று சொல்லியிருக்கிறான் (எபி. 11: 9.). கானானில் முதலா வது ஆபிரகாமுக்குச் சொந்தமாக அடக்கம்பண்ணும் இடம் கிடைத்தது.





றேன்; என்னிடத்திலிருக்கிற இந்தப் பிரேதம் என்
கண்முன் இராதபடிக்கு நான் அதை அடக்கம்பண்
ணுவதற்கு, உங்களிடத்தில் எனக்குச் [1]சொந்தமாக
ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும் என்றான்.

5 அதற்கு ஏத்தின் புத்திரர் ஆபிரகாமுக்குப் பிரதி
6 யுத்தரமாக:—எங்கள் ஆண்டவனே, நாங்கள் சொல்
லுகிறதைக் கேளும்; எங்களுக்குள்ளே நீர் [2]மகா
பிரபு; எங்கள் கல்லறைகளில் முக்கியமானதிலே பிரே
தத்தை அடக்கம்பண்ணும்; நீர் பிரேதத்தை அடக்கம்
பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்லறையை உமக்
குத் தடைசெய்வதில்லை என்றார்கள்.

அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து, ஏத்தின்
புத்திரராகிய அத்தேசத்தாருக்கு வந்தனம் செய்து;—

[1] அப். 7. 5.
[2] ஆதி. 13. 2: 14. 14.

"**அடக்கம் பண்ணுவதற்கு, உங்களிடத்தில் எனக்குச் சொந்தமாக ஒரு கல்லறைப் பூமியைத் தரவேண்டும்.**" இதுதான் வேதத்தில் காட்டப்பட் டிருக்கிற முதல் அடக்கம். அந்நியர் தேசத்திலே தங்கள் ஆடுமாடுகளை மேய்க் கும்படியான சலாக்கியம் பெற்றாலும், சொந்தமாக ஒரு நிலம் தங்களுக்கு வாங்கவேண்டுமானால் சுதேசிகளுடைய சம்மதம் அதற்குத் தேவையாயிருந் தது. ஆபிரகாம் தனக்கு ஒரு நிலத்தைக் கொள்ளப்போனதில் நிலத்துக்குடை யவன் சாதனம் கொடுப்பதுடன் சாட்சியாக பட்டணத்தாரும் சம்மதி கொடுக்க வேண்டியதாயிருந்தது.

**6. "நீர் மகா பிரபு."** மூலத்தில் "தெய்வ பிரபு." ஒரு காரியத்தை மிகவும் முக்கியப்படுத்திப் பேசவேண்டுமானால் அதோடே தேவநாமத்தைச் சேர்த்துச் சொல்லியிருப்பதை வேதத்தில் காணலாம். திருஷ்டாந்தமாக, தேவ பர்வதம் (சங். 36: 6.), தேவனுடைய கேதுருக்கள் (சங். 80: 10.). ஆபிரகாம் அநு சரித்த மெய்மார்க்கமும் பக்தியுள்ள அவன் நடக்கையும் அவனைக் கண்ணியப் படுத்தினது.

"**எங்கள் கல்லறைகளில் முக்கியமானதிலே.**" கொள்வினைக்குரிய விஷயத்தில் இருபட்சத்தாரும் மெத்த மரியாதையாய் நடந்துகொள்ளுகிறார் கள். ஏத்தியர் தங்கள் கல்லறைப் பூமியிலே முக்கியமான இடத்தில் சாராளை அடக்கம் செய்யும்படியாக ஆசாரமாய்க் கேட்டாலும் ஏத்தியருடைய மார்க்கத் துக்கும் ஆபிரகாமுடைய விசுவாசமார்க்கத்துக்கும் வித்தியாசம் இருந்ததினா லே ஆபிரகாம் அதற்கு இணங்கப் பிரியங்கொள்ளவில்லை. மேலும் அந்தக் காலத்தில் கானானியர் பிரேதச்சடங்கு எப்படியிருந்ததோ நாம் அறியோம். ஒருவேளை அதில் அஞ்ஞான சவக்கிரியைகளும் கலந்திருக்கும். அது ஆபிர காமின் மனதுக்குப் பிடியாதிருந்தது.

8 அவர்களோடே பேசி: என்னிடத்திலிருக்கிற பிரேதம்
என் கண்முன் இராதபடிக்கு, நான் அதை அடக்கம்
பண்ண உங்களுக்குச் சம்மதியானால், நீங்கள் என்
வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய குமாரனாகிய
9 எப்பெரோன்,—தன் நிலத்தின் கடைசியிலே இருக்கிற
மக்பேலா என்னப்பட்ட குகையை எனக்குச் சொந்
தமான கல்லறைப் பூமியாயிருக்கும்படி தரவேண்டும்
என்று, அவரிடத்தில் எனக்காக வேண்டிக்கொள்ளுங்
கள்; அது பெறுமான விலைக்கு அவர் அதைத் தருவா
ராக என்றான்.

10 எப்பெரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே உட்கார்ந்
திருந்தான்; அப்பொழுது ஏத்தியனாகிய எப்பெரோன்
[1]தன் ஊர்வாசலுக்குள் பிரவேசிக்கிற ஏத்தின் புத்தி [1] ஆதி. 34. 20, 24. ரூத். 4. 4.
ரர் அனைவரும் கேட்க ஆபிரகாமுக்குப் பிரதியுத்தர
11 மாக:—அப்படியல்ல, [2]என் ஆண்டவனே, என் வார்த் [2] 2 சாமு. 24. 21–24.
தையைக் கேளும்; அந்த நிலத்தை உமக்குத் தரு
கிறேன், அதிலிருக்கும் குகையையும் உமக்குத்
தருகிறேன், என் ஜனப்புத்திரருடைய கண்களுக்கு

9. "மக்பேலா என்னப்பட்ட குகை." என்பதற்கு "இரட்டைக் குகை" என்றர்த்தம். மேல்தட்டுக் கீழ்தட்டாக இரண்டு அறைகளிருக்கலாம். ஆபிரகாமும் அவன் சந்ததியாரும் தங்கள் கல்லறைகளின்மேல் ஞாபகச் சின்னங்களைக் கட்டினதாக யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் சொல்லுகிறான். அந்தக் கல்லறை இருந்த இடத்தில் இப்போது ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டிருக்கிறதாம்.

10. "எப்பெரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே உட்கார்ந்திருந்தான்." பகிரங்கமான கூட்டங்கள் பட்டணவாசலில் கூடப்படுமாகையால் பட்டணத்தில் பிறந்த சுதேசிகள் எல்லாரும் அதில் வந்திருக்கத்தக்கதான சலாக்கியமுடையவர்களாயிருந்தார்கள். அப்போது சங்கதி பொதுவான சம்மதியின்பேரில் முடிக்கப்படும். எப்பெரோன் அக்குகைக்குடைய சொந்தக்காரன்; அவன் சம்மதி வேண்டியது அவசியம். அவனைச் சம்மதிக்கச்செய்யும்படி ஆபிரகாம் பட்டணத்தாரை விரும்பிக் கேட்டுக்கொண்டான்.

11. "அந்த நிலத்தை உமக்குத் தருகிறேன்." ஆபிரகாம் குகைக்காக மாத்திரம் கேட்டான். ஆனால் அதைச் சுதானமாய்ச் சுதந்தரிப்பதற்கு அதைச் சூழ்ந்த நிலமும் வேண்டியதாயிருந்தது. ஆபிரகாமுக்கும், எப்பெரோனுக்கும், தாவீதுக்கும் அர்வினாவுக்கும் உண்டான சம்பாஷணைகள் எவ்வளவு மரியாதையுள்ளவைகளாயிருந்தன. (2 சாமு. 24: 20, 24.)





முன்பாக அதை உமக்குத் தருகிறேன், உம்மிடத்
திலிருக்கிற பிரேதத்தை அடக்கம்பண்ணும் என்றான்.
12 அப்பொழுது ஆபிரகாம் அத்தேசத்தாருக்கு வந்
13 தனம் செய்து,—தேசத்து ஜனங்கள் கேட்க, எப்பெ
ரோனை நோக்கி: கொடுக்க உமக்கு மனதானால் என்
வார்த்தையைக் கேளும்; நிலத்தின் விலையைத் தருகி
றேன்; என் கையில் அதை வாங்கிக்கொள்ளும்; அப்
பொழுது என்னிடத்திலிருக்கிற பிரேதத்தை அவ்வி
டத்தில் அடக்கம்பண்ணுவேன் என்றான்.
14 அதற்கு எப்பெரோன் ஆபிரகாமுக்குப் பிரதியுத்
15 தரமாக:—என் ஆண்டவனே, நான் சொல்லுகிற
தைக் கேளும்; அந்த நிலம் [1]நானூறு சேக்கல் நிறை [1] யாத். 30.13. மத். 26. 15.
வெள்ளி பெறும்; எனக்கும் உமக்கும் அது எவ்வ
ளவு காரியம்; நீர் உம்மிடத்திலிருக்கிற பிரேதத்தை
அடக்கம்பண்ணும் என்றான்.
16 அப்பொழுது ஆபிரகாம் எப்பெரோனின் சொல்
லைக் கேட்டு, ஏத்தின் புத்திரருக்கு முன்பாக எப்
பெரோன் சொன்னபடியே, வர்த்தகரிடத்தில் செல்
லும்படியான நானூறு சேக்கல் நிறை வெள்ளியை

13. "நிலத்தின் விலையைத் தருகிறேன்." ஆபிரகாம், நன்கொடையாக அந்த நிலத்தை வாங்க மனதில்லாமல் தகுந்த கிரயத்துக்கு வாங்கும்படி தீர்மானம் செய்திருந்தான். அவன் சுபாவம் தன்னயத்துக்கும் பொருளாசைக்கும் எதிரிடையாயிருந்தது. (ஆதி. 14: 22.)

15. "அந்த நிலம் நானூறு சேக்கல் நிறை வெள்ளி பெறும்." சேக்கல் என்பது நிறை என்கிற பதத்திலிருந்து வந்தது. சேக்கல் என்பது தற்காலத்தில் வழங்கப்படுகிறதுபோலுள்ள நாணயமல்ல. அது ஓர் நிறையுள்ள வெள்ளித் துண்டாயிருந்தது. பாபிலோன் சிறையிருப்புக்கு முந்தி நாணயங்களைக் குறித்து வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் மோசேயின் காலத்துக்கு முன்னே எகிப்தியர் அளவு நிறையுள்ள பொன் வெள்ளியை உபயோகப்படுத்திவந்தார்கள் என்று எகிப்திய சித்திரங்களினால் அறிகிறோம். ஆபிரகாம் காலத்தில் ஒரு சேக்கல் வெள்ளி எவ்வளவு கிரயமாயிருந்ததென்பதைத் திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. புதிய ஏற்பாட்டிலே (மத். 17: 24.), வரிப்பணம் (திராகுமா) ஏறக்குறைய ஒன்றேகால் ரூபாயாயிருக்கும். இப்படி பார்த்தால் மக்பேலா நிலத்தின் கிரயம் 525 ரூபாயாகும்.

16. "வர்த்தகரிடத்தில் செல்லும்படியான." கானானியர் வியாபாரிகளாயிருந்தார்கள். ஆகவே கானானியன் என்கிற பதம் வர்த்தகனுக்கு ஒப்பான கருத்துள்ள பதமாக வழங்கப்படுவதுண்டு. (யோபு. 41: 6. நீதி. 31: 24.)

17 அவனுக்கு [1]நிறுத்துக் கொடுத்தான்.—இந்தப்பிரகா | [1] எரே. 32. 9.
ரம் [2]மம்ரேக்கு எதிரே மக்பேலாவிலுள்ள எப்பெ | [2] ஆதி. 25. 9: 49. 30. அப். 7. 16.
ரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும், அதிலுள்ள
குகையும், நிலத்தின் எல்லையெங்கும் சூழ்ந்திருக்கிற
18 மரங்கள் அடங்கலும்,—அவனுடைய ஊர் வாசலுக்
குள் பிரவேசிக்கும் ஏத்தின் புத்திரர் எல்லாரும்
அறிய ஆபிரகாமுக்குச் சொந்தமாக உறுதிப்படுத்தப்
பட்டது.

19 அதற்குப்பின் ஆபிரகாம் தன் மனைவியாகிய சா
ராளைக் கானான்தேசத்தில் எப்பெரோன் ஊர் பூமி
யான மம்ரேக்கு எதிரே இருக்கிற மக்பேலா என்
னும் நிலத்தின் குகையிலே அடக்கம்பண்ணினான்.—
20 இப்படி ஏத்தின் புத்திரர் கையில் கொள்ளப்பட்ட
அந்த நிலமும், அதிலுள்ள குகையும், [3]ஆபிரகாமுக்குச் | [3] ரூத். 4. 7. எரே. 32. 10.
சொந்த கல்லறைப் பூமியாக உறுதிப்படுத்தப்பட்டது.

---

**17.** "எப்பெரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும்." குகைமாத்திரமல்ல மக்பேலா நிலமும் அதைச்சேர்ந்த விருக்ஷங்களும் ஆபிரகாமுக்குக் கொள்கிரயப் பூமியாயிற்று. பிந்தியகாலத்தில் கிரயத்துக்கு வாங்கும் சடங்குகளைப்பற்றி ரூத். 4. அதி. எரே. 32: 6–15ல் காணலாம்.

### படிப்பினை.

(1) நீடிய ஆயுசுக்கு இருப்பவர்களும் மரணத்துக்கு இரையாகவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அருமையான சிநேகிதர் நம்மைவிட்டுப் பிரிந்துபோவது நிச்சயம். இனிமேல் அவர்களை இப்பூமியில் காண்பது கூடாதகாரியமே. அநேகவருஷங்களாய் விவாகசம்பந்தமாய் வாழ்ந்தவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிகையில் எவ்வளவு மனவியாகுலம் உண்டாகிறது.

(2) பூமியிலே சகலமும் மாயமும் விபரீதமுமாயிருக்கிறதென்று ஞானி சொன்னது சத்தியம். ஆனாலும் பாவம், மரணம், துக்கம் பிரவேசியாத ஒரு உலகமுண்டு. அந்த இடத்தில் தேவகுமாரனைப்பற்றிய விசுவாசத்தால் பிரவேசிக்கும் சலாக்கியம் பெற்றால் எவ்வளவு நன்று.

(3) அழகான சரீரம் மரித்தபின் நமது முகத்தைவிட்டு அப்புறமாய்ப் புதைக்கப்படவேண்டியது.

(4) சரீரத்தை அலங்கரிக்கப் பிரயாசப்படாமல் ஆத்துமா தேவனுடைய கிருபையால் அலங்கரிக்கப்படும்படியாக முயற்சி செய்யவேண்டியது.

(5) கல்லறைப்பூமி பாவத்தை ஞாபகப்படுத்தும் இடம். பாவத்தை அருவருத்துத் தள்ளி, உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறவர்பேரில் நம்பிக்கை வைப்போமாக.

(6) கர்த்தருக்குள் ஜீவித்துப்போனவர்களுக்காக நம்பிக்கையற்றவர்களைப்போலத் துக்கப்படாதிருப்போமாக. நாமும் சீக்கிரத்துக்குள்ளாக அவர்களைக் கண்டு அவர்களோடே வாழுவோம்.





## 24. அதிகாரம்.

*ஆபிரகாம் தன் ஊழியக்காரனை ஆணையிடுவித்தது, 10. அந்த ஊழியக்காரன் பயணம்பண்ணி, 12. ஜெபித்து, 14. ஒரு குறிப்பைத் தன் மனதில் ஏற்படுத்திக்கொண்டது. 15. ரெபெக்காள் அவனைச் சந்தித்து, 18. அதினால் அவன் குறிப்பு நிறைவேறினபோது, 22. அவளிடத்தில் அவள் உடைமைகளைப் பெற்றுக்கொண்டு, 23. தன்னை இன்னானென்று அறிவித்து, 25. அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துப்போனது. 26. ஊழியக்காரன் தேவனைத் தொழுதுகொண்டது. 28. லாபான் அவனுக்கு உபசாரஞ்செய்தது. 34. ஊழியக்காரன் தான் வந்த காரியத்தை எடுத்துச்சொன்னது. 50. லாபானும் பெத்துவேலும் அதை அங்கீகாரம்பண்ணினது. 58. ரெபெக்காள் போகச் சம்மதித்தது. 62. ஈசாக்கு அவளை விவாகம்பண்ணினது.*

ஆபிரகாம் [1]வயதுசென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் | [1] ஆதி. 18. 11.
ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் [2]ஆசீர்வதித்து | [2] சங். 112. 1, 3. நீதி. 10. 22.
வந்தார்.—அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலுள்
ளவர்களில் வயதில் மூத்தவனும், தனக்கு உண்
டான எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய தன் | [3] ஆதி. 15. 2: 39. 4, 5.
[3]ஊழியக்காரனை நோக்கி:—நான் குடியிருக்கிற [4]கானா
னியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் | [4] ஆதி. 6. 2. உபா. 7. 3.

---

(7) நாம் உலகத்தாருடன் சகவாசம் செய்கையில் தேவனுடைய புத்திரராக, மரியாதையும் உண்மையுமுள்ளவர்களாய் விளங்கக்காட்டுவோமாக.

(8) பிந்தி மனஸ்தாபங்கள் வீண்செலவுகள் நேரிடாதபடி நம்முடைய காரியங்களைத் திட்டமாயும் செம்மையாயும் செய்து முடிக்கவேண்டியது நமது கடமை.

### 24. அதிகாரம்.

**1.** "ஆபிரகாம் வயதுசென்று." சாராள் மரித்தபோது ஆபிரகாமுக்கு வயது 137. இப்போது அவன் 140 வயசாயிருந்தான். இதற்குப்பின்பு அவன் 35 வருஷம் உயிரோடிருந்து தன் பேரப்பிள்ளைகளான ஏசா, யாக்கோபு என்பவர்கள் பாலியராக வளர்ந்துவந்ததைக் கண்டான்.

**2.** "தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவனும்." எபிரெயுவில் "தன் ஊழியக்காரனும் தனக்குண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியான தன் வீட்டின் மூப்பனுமானவனை" என்றிருக்கிறது. மூப்பன் என்பது ஒரு உத்தியோகப்பேர். அவ்வளவு நம்பிக்கைக்குரிய உத்தியோகத்தைத் தாங்குகிறவன் முதிர்வயதுள்ளவனாயிருப்பான். ஐம்பத்தைந்து வருஷங்களுக்குமுன்னே எலியேசர் என்பவன் ஆபிரகாமின்வீட்டில் இவ்வித உத்தியோகஸ்தனாயிருந்தான் (ஆதி. 15: 2.). இங்கே சொல்லப்பட்டிருக்கிற மூப்பன் அவன் என்று நிச்சயிக்கலாம்.

**3.** "கானானியருடைய குமாரத்திகளில்." கானானியர் சபிக்கப்பட்ட சாதியாராயும் சகலவிதமான துன்மார்க்கங்களைச் செய்துவருகிறவர்களாயும்

4 பெண் கொள்ளாமல்; — நீ [1]என் தேசத்துக்கும் என்
இனத்தாரிடத்திற்கும் போய், என் குமாரனுகிய
ஈசாக்குக்குப் பெண் கொள்வேன் என்று, [2]வானத்துக்
குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில்
எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன்
கையை என் தொடையின்கீழ் வை என்றுன்.

5 அதற்கு அந்த ஊழியக்காரன்: அவ்விடத்துப்
பெண் என் பின்னே இந்தத் தேசத்துக்கு வர மனதில்
லாதிருந்தால், நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே
உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துப்போக
வேண்டுமோ என்று கேட்டான்.

6 அதற்கு ஆபிரகாம்: நீ என் குமாரனை மறுபடியும்
அங்கே அழைத்துக்கொண்டு போகாதபடிக்கு எச்ச

[1] ஆதி. 28. 2: 12. 1.
[2] ஆதி. 14. 22. உபா. 6. 13.

இருந்தார்கள். அவர்கள் தங்கள் அக்கிரம அளவை நிரப்பிக்கொண்டுவந்தார்கள். தேவன் அவர்களுடன் சம்பந்தங் கலக்கக்கூடாதென்று பிந்தியகாலத்தில் இஸ்ரவேலருக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். சேமின் சந்ததியார் விக்கிரகாராதனைக்காரராயிருந்தபோதிலும் அவ்வளவாய் அவர்கள் சீர்கெட்டுப்போகவில்லை. ஆபிரகாம் தேவன் தனக்கருளின வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் நினைத்து, கானானியருக்கு இடப்பட்ட சாபம் தன் சந்ததியைப் பிடியாமல் அவர்களுக்குப் பிரத்தியேகமாயிருக்கவேண்டும் என்று கருதி தன் இனத்தில் தன் மகனுக்குப் பெண்கொள்ள விரும்பினுன்.

**4. "உன் கையை என் தொடையின்கீழ் வை."** இவ்வித முறைமை ஆணையை உறுதிப்படுத்தும் ஓர்விதச் சடங்காயிருந்தது. யோசேப்பு, யாக்கோபின் எலும்புகளை கானானில் அடக்கம்பண்ணுவேன் என்று அவனுக்கு இந்தப்படியான ஆணையிட்டுக்கொடுத்தான் (ஆதி. 47: 29–31.). இது சிறியோர் பெரியோருக்கு ஆணையிடும் சடங்கு என்று சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

**6. "என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு."** கர்த்தர் ஆபிரகாமை அவன் தேசத்திலிருந்து அழைத்துக் கானானுக்குக் கொண்டுபோய், அங்கே சஞ்சரிக்கும்படி உத்தரவு அருளி, அதை அவர்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று வாக்குக் கொடுத்து, ஈசாக்கோடே தமது உடம்படிக்கையைச் செய்வேன் என்று தன்னேடே சொன்னதை ஆபிரகாம் நினைவுகூர்ந்து, ஈசாக்கை மெசொப்பொத்தாமியாவுக்குக் கொண்டுபோகக்கூடாதென்று உத்தரவுபண்ணினுன். மெசொப்பொத்தாமியாவுக்கு ஈசாக்கு போகிறதாயிருந்தால் அஞ்ஞானிகளோடே அவன் கலந்து போகவேண்டியதாயும் நேரிடலாம்.





7 ரிக்கையாயிரு.—என்னை [1]என் தகப்பனுடைய வீட்
டிலும் என் இனத்தார் இருக்கிற தேசத்திலுமிருந்து
அழைத்து வந்தவரும், உன் சந்ததிக்கு இந்தத் தேசத்
தைத் தருவேன் என்று எனக்குச் சொல்லி ஆணையிட்
டவருமான வானத்துக்குத் தேவனுகிய கர்த்தர், நீ
அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக்
கொண்டுவரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு
முன்பாக அனுப்புவார்.—பெண் உன் பின்னே வர
மனதில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ இந்த
என் [2]ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அங்கேமாத்தி
ரம் என் குமாரனை மறுபடியும் அழைத்துக்கொண்டு
போகவேண்டாம் என்றுன். — அப்பொழுது அந்த
ஊழியக்காரன் தன் கையைத் தன் எஜமானுகிய
ஆபிரகாமுடைய தொடையின்கீழ் வைத்து, இந்தக்
காரியத்தைக்குறித்து அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்
தான்.

10 பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய
ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே
கொண்டுபோனுன்; தன் எஜமானுடைய சகலவித உச்

[1] ஆதி. 12. 1: 13. 15.
[2] யோசு. 2. 17, 20.

**7. "என் இனத்தார் இருக்கிற தேசம்."** தகப்பன் வீடு என்பது காரானையும், இனத்தார் இருக்கிற தேசம் என்பது ஊர் என்ற கல்தேய தேசத்தையும் குறிக்கும் என்று யூத வியாக்கியானிகள் சொல்லுகிருர்கள். அப்படியாகில் காரானில் பெண்கிடையாதபட்சத்தில் வேலைக்காரன் ஊர் என்ற பட்டணத்துக்குப் போகவேண்டியதாயிருந்தது. அங்கே ஆபிரகாமுக்கு அநேக இனபந்துக்கள் இருந்தார்கள்.

**10. "அந்த ஊழியக்காரன்..................எழுந்து புறப்பட்டு."** ஆபிரகாம் மிகவும் வயதுசென்றவனுயிருந்ததால் தொலைதூரத்துக்குப் பிரயாணம் செய்யக்கூடாத நிலைமையிலிருந்தான். வேறே இனபந்துக்களும் ஆபிரகாமோடேகூட இருக்கவில்லை. ஆதலால் நம்பிக்கையுள்ள உத்தியோகஸ்தனைத் தன் குமாரனுக்குப் பெண்கொள்ளும்படி அனுப்பினுன்.

**"பத்து ஒட்டகங்களை."** தூரத்துப் பிரயாணத்துக்கு ஒட்டகங்கள் மிகுந்த உதவியாயிருக்கும். வனாந்தரமார்க்கமாய்ப் பிரயாணஞ் செய்கிறவர்கள் ஒட்டகங்களையே மிகவும் உபயோகிப்பது வழக்கம்.

**"சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன."** பெண்ணுக்குப் பரிசம் கொடுப்பதிலே ரொக்கம் செலுத்துவதற்குப் பதிலாக ஆபரணங்களைப் போடவும், பெண்ணின் இனத்தாருக்கு ஏதாவது பரிசு கொடுக்கவுந் தக்கதாக விலையுயர்ந்த அருமையான பொருள்களை ஆபிரகாமின் ஊழியக்காரன் கூடவே கொண்டுபோனுன்.

சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன;
அவன் எழுந்து புறப்பட்டுப் போய், மெசொப்பொத்
தாமியாவிலே நாகோருடைய ஊரில் சேர்ந்து,—
11 [1]ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த்துரவண்டை
யிலே, தண்ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற
சாயங்கால வேளையிலே, ஒட்டகங்களை மடக்கி, தனக்
குள்ளே சொல்லிக்கொண்டது என்னவென்றால்:
12 என் [2]எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தேவனாயிருக்
கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் [3]காரியம்

[1] யாத். 2. 16. 1 சாமு. 9. 11.
[2] ஆதி. 26. 24. யாத். 3. 6, 15.
[3] நெகே. 1. 11. சங். 37. 5. 86. 17. [illegible]. 3. 4.

"மெசொப்பொத்தாமியாவிலே." எபிரெயுவில் "அராம்—நகராயீம்." அதற்கு இரண்டு நதிகளுக்கு இடையேயுள்ள "அராம்" என்றர்த்தம். நமக்குள்ளே அப்படிப்பட்ட இடத்துக்கு "அரங்கம்" என்று சொல்லப்படும். அராம் என்பதற்கு "மேடான பூமி" என்றர்த்தம். மெசொப்பொத்தாமியா அல்லது அராம்—நகராயீம் என்பது இகிரிஸ் ஐப்பிராத்து நதிகளுக்கு இடையே இருந்தது.

"நாகோருடைய ஊரில் சேர்ந்து." ஆதி. 27. 43. கவனிக்கையில் நாகோரின் ஊர் ஆரான் என அறியலாம். தேராகு கல்தேயதேசத்தை விட்டுப் புறப்பட்டபோது நாகோரும் அவனோடேகூட வந்திருக்கவேண்டும். (ஆதி. 11: 31. அப். 7: 2.)

**11.** "தண்ணீர்த் துரவண்டையிலே." ஆபிரகாமின் ஊழியக்காரன் தனக்கு அந்நியமான இடத்துக்கு வந்ததால், கால்நடைகளுக்குத் தண்ணீர் காட்டும்படியாகத் துரவண்டைக்குப் போவது இயற்கையே. அதோடே அந்நாட்டு வழக்கப்படி ஸ்திரீகள் சாயங்காலத்தில் தண்ணீர் மொண்டுகொள்ளும்படி வருவதில், கன்னிகைகளுக்குள்ளே தன் ஆண்டவனுடைய மகனுக்கு ஏற்ற பெண்பார்த்து அந்தப் பெண்ணின் இனத்தாரிடத்தில் விசாரிக்கலாம் என்ற நோக்கத்தோடும் துரவண்டையில் இறங்கியிருக்கலாம்.

**12–14.** "என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தேவனாயிருக்கிற, ம்." இந்தச் செபத்தில் ஆபிரகாமின் ஊழியக்காரனின் மனத்தாழ்மையையும் மரியாதையையும் பார்க்கிறோம். ஆபிரகாமினிமித்தம் தன் விண்ணப்பத்தைக் கேட்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறான். தேவனிடத்தில் ஒரு அடையாளம் கேட்கிறது சில வேளைகளில் துணிகரத்தையும் (ஏசா. 7: 13.), சில வேளைகளில் விசுவாச பெலவீனத்தையும் (நியா. 6: 17.) காட்டுகிறதாயிருக்கும். ஆனால் இங்கே அது வருத்தமுள்ள காரியத்திலே தன்னை நடத்தும்படிக்கான செபமாயிருக்கிறது. அவன் ஒரு அடையாளத்தைக் கேட்டதில் விவேகத்தையும் காண்பித்தான். ஈசாக்குக்கு மனைவியாயிருப்பவள் தன் எஜமானைப்போல் அந்நியரை உபசரிக்கிறவளாயிருக்கவேண்டியது. தனக்கும் தன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்க்கிறவள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் என்று அறிந்துகொள்ளலாம் என்றெண்ணி அடையாளத்தைக் கேட்டான். ஆபிரகாமும் (ஆதி. 18: 2–4.), லோத்தும் (ஆதி. 19: 1.), யோபும் (யோபு. 31: 32.) இவ்வித உபசார நடக்கையுள்ளவர்களாயிருந்தார்கள்.





சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்
13 குத் தயவுசெய்தருளும்.—இதோ, நான் இந்தத் தண்
ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராரு
டைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு
14 வருவார்களே,—நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்
கவேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி, என்
று, உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன்
என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்
முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவ
ளாயிருக்கவும், என் எஜமானுக்கு [1]அநுக்கிரகம் செய்
தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும்
என்றான்.
15 அவன் [2]இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே,
இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின்
மனைவி [3]மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்து
வேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்
16 மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்தாள்.—அந்
தப் பெண் [4]மகா ரூபவதியும், புருஷனை அறியாத
கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி,
17 தன் குடத்தை நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள்.—அப்
பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்
கொண்டோடி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில்
18 கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான்.—அதற்கு
அவள்: [5]குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிர

[1] நியா. 6. 17. 37; 2 இரா. 20. 9.
[2] ஏசா. 65. 24. தானி. 9. 21.
[3] ஆதி. 11. 29. 22. 23.
[4] ஆதி. 26. 7.
[5] 1 பே[illegible].

**14.** "பெண்." இந்த வார்த்தை மூலத்தில் [illegible]பாலாக வருகிறது. பஞ்சாகமத்தில் (உபா. 22: 19. தவிர) இந்தப் பதம் எப்போதும் ஆண்பெண் [illegible] பொதுவாக வழங்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஆபிரகாமுடைய [illegible]ரைப்பற்றியும் (ஆதி. 14: 24; 18: 7. ம.) பெண்பிள்ளைகளைக்குறித்து 22 [illegible] உபயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் போக்கு பஞ்சாகமத்துக்கு மாத்திரம் உரியதாயிருக்கிறது. மற்ற ஆகமங்களில் அந்த வார்த்தை ஆண், பெ[illegible]குறிகளைச் சேர்த்து வழங்கப்படுகிறது. இதைக் கவனிக்கையில் பஞ்சாகமம் மிகப் பூர்வீகமுள்ளதென்பதற்கு ஒரு அத்தாட்சியாயிருக்கிறது என்றறியலாம்.

**15.** "இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே." ஆபிரகாமின் ஊழியக்காரனுடைய ஜெபம் உடனே கேட்கப்பட்டு மறு உத்தரவும் அருளப்பட்டது. ஆபிரகாமின் சகோதரன் நாகோருடைய பேத்தி ரெபெக்காள் அச்சமயத்தில் துரவண்டைக்கு வந்து சேர்ந்தாள். அந்த ஊழியக்காரன் முன் தேவனிடத்தில் கேட்டிருந்த அடையாளத்தின்படி எல்லாம் அவள் [illegible] செய்தாள்.

மாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு,
19 அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள்.—கொடுத்தபின்,
உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும்
அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்
20 லி;—சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்
டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துர
வண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்
21 கெல்லாம் மொண்டு வார்த்தாள்.—அந்த மனிதன் அவ
ளைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கர்த்தர் தன் பிரயா
ணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று
அறியும்பொருட்டு மவுனமாயிருந்தான்.
22 ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின், அந்த மனி
தன் அரைச்சேக்கல் எடையுள்ள [1]பொற்காதணியை [1] யாத். 32. 2. 3. ஏசா. 3. 19. 21. எசே. 16. 11, 12.
யும், அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கல் எடைப்
பொன்னுள்ள இரண்டு கடகங்களையும் எடுத்துக் கொ
23 டுத்து,—நீ யாருடைய மகள், எனக்குச் சொல்லவேண்
டும்; நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க
24 இடம் உண்டோ என்றான்.—அதற்கு அவள்: [2]நான் [2] ஆதி. 22. 23.
நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்து
25 வேலின் மகள் என்று சொன்னதுமன்றி,—எங்களிடத்

**21.** "அந்த மனிதன் அவளைக்குறித்து ஆச்சரியப்பட்டு." தேவன் அவன் செபத்தின்படியே இவ்வளவு சீக்கிரமாய் உத்தரவு அருளினது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தபோதிலும் சற்று பெலவீனம் அவனிடத்தில் தோன்றியிருந்தது. இப்படிப்பட்ட பெலவீனம் அநேக விசுவாசிகளிடத்தில் காணப்பட்டதுண்டு. (லூக். 1: 12, 18.)

**22.** "பொற்காதணி." யாழ்ப்பாண திருப்புதலில் "தொங்கணி" என்று போட்டிருக்கிறது. 47-ம் வசனத்திலே முகத்தில் என்ற வார்த்தையைப் புதுத் திருப்புதலில் விட்டிருக்கிறது. யாழ்ப்பாண திருப்புதலிலோ "முகத்தில் தொங்கணி" என்று சரியாய் மொழிபெயர்த்திருக்கிறது. ஆதலால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற "பொற்காதணி" என்பது "மூக்குத்தி"யாயிருக்க வேண்டும் என்று சொல்லத்தகும். இந்த வார்த்தை நீதி. 11: 22ல் மூக்குத்தி என்றே திருப்பியிருக்கிறது.

**24.** "நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள்." ரெபெக்காள் தன் தகப்பனுடைய தாயின் பெயரைச் சொன்னதில், தான் தகப்பன் வழியாய்மாத்திரமல்ல தாயின் வழியாயும் உயர்ந்த ஸ்திதியுள்ள குடும்பத்தைச்சேர்ந்தவள் என்று விளங்கச்செய்தாள். மேலும் இவ்வளவு விபரத்தை ஆபிரகாமின் ஊழியக்காரன் கேட்டபோது கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கச்செய்தார் என்று அறிந்துகொள்ளவும் ஏதுவாயிற்று. அதி. 24: 26, 27. வாக்கியங்களில் இதற்காக அவன் கர்த்தரை ஸ்தோத்திரித்தான் என்று வாசிக்கிறோம்.





தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும்
இருக்கிறது; இராத்தங்க இடமும் உண்டு என்றாள்.—
அப்பொழுது அந்த மனிதன் [1]தலை குனிந்து, கர்த்த [1] யாத். 4. 31.
ரைப் பணிந்துகொண்டு,— என் எஜமானாகிய ஆபிர
காமின் தேவனாயிருக்கிற [2]கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; [2] யாத். 18.10. ரூத். 4. 14. லூக். 1. 68.
அவர் தம்முடைய [3]கிருபையையும், தம்முடைய உண் [3] சங். 98. 3.
மையையும் என் எஜமானைவிட்டு நீக்கவில்லை; நான்
பிரயாணம்பண்ணி வருகையில், கர்த்தர் என் எஜ
மானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்
துக்கொண்டு வந்தார் என்றான்.

அந்தப் பெண் ஓடி, இந்தக் காரியங்களைத் தன் தா
யின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள்.—ரெபெக்
காளுக்கு ஒரு சகோதரன் இருந்தான்; அவனுக்கு
[4]லாபான் என்று பேர்; அந்த லாபான் வெளியே துர [4] ஆதி. 29. 5.
வண்டையில் இருந்த அந்த மனிதனிடத்துக்கு ஓடி
னான்.—அவன் தன் சகோதரி தரித்திருந்த அந்தக்
காதணியையும், அவள் கைகளில் போட்டிருந்த கட
கங்களையும் பார்த்து, இன்ன இன்னபடி அந்த மனி
தன் என்னோடே பேசினான் என்று தன் சகோதரி ரெ
பெக்காள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்
தில், அந்த மனிதனிடத்தில் வந்தான்; அவன் துரவின்
அருகே ஒட்டகங்கள் அண்டையில் நின்றுகொண்டி

**28.** "தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள்." அவள் தகப்பன் பெத்துவேல் இன்னமும் உயிரோடே இருந்தான் (வச. 50.). பல மனைவிகளை விவாகஞ் செய்வது அந்தக் காலத்தாருக்குள் வழக்கமிருந்ததாக வாசிக்கிறோம். அப்படிப்பட்ட மனைவிகள் வெவ்வேறே அறைகளில் குடியிருப்பார்கள். சாராளுக்கு வேறே கூடாரமிருந்ததாக 67-ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆதலால் ரெபெக்காள் தனக்குக் கிடைத்த பரிசுகளைக்குறித்து முதலாவது தன் தாயினிடத்திலும் சகோதரனிடத்திலும் அறிவிப்பது இயற்கையே.

**29.** "லாபான் வெளியே துரவண்டையில் இருந்த அந்த மனிதனிடத்துக்கு ஓடினான்." தண்ணீர் கொடுத்ததற்காகத் தன் சகோதரிக்கு ஆபரணங்களைக் கொடுத்த உதாரகுணமுள்ள மனுஷனுக்கு உபசாரஞ்செய்வது உத்தமம் என்று கண்டு, அவனைத் தன் தகப்பன் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டுவரும்படி தீவிரமாய்ப் போனான்.

31 ருந்தான்.—அப்பொழுது அவன்: [1]கர்த்தரால் ஆசீர்
வதிக்கப்பட்டவரே, உள்ளே வாரும்; நீர் வெளியே
நிற்பானேன்? உமக்கு வீடும், ஒட்டகங்களுக்கு இட
32 மும் ஆயத்தம்பண்ணியிருக்கிறேன் என்றான்.—அப்
பொழுது அந்த மனிதன் வீட்டுக்குப் போனான். லா
பான் ஒட்டகங்களின் கட்டவிழ்த்து, [2]ஒட்டகங்க
ளுக்கு வைக்கோலும் தீவனமும் போட்டு, அவனும்,
அவனோடே வந்தவர்களும் தங்கள் கால்களைக் கழு
33 விக்கொள்ள தண்ணீர் கொடுத்தான்.—பின்பு, அவ
னுக்கு முன்பாகப் போசனம் வைக்கப்பட்டது. அப்
பொழுது அவன்: [3]நான் வந்த காரியத்தைச் சொல்
லுமுன்னே புசிக்கமாட்டேன் என்றான். அதற்கு
அவன், சொல்லும் என்றான்.

34 அப்பொழுது அவன்: நான் ஆபிரகாமுடைய ஊழி
35 யக்காரன்.—கர்த்தர் [4]என் எஜமானை மிகவும் ஆசீர்
வதித்திருக்கிறார், அவர் சீமானாயிருக்கிறார்; கர்த்தர்
அவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்
னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்
டகங்களையும், கழுதைகளையும் கொடுத்திருக்கிறார்.—
36 என் எஜமானுடைய மனைவியாகிய [5]சாராள் முதிர்
வயதானபோது, என் எஜமானுக்கு ஒரு குமாரனைப்
பெற்றாள்; அவர் தமக்கு உண்டான யாவையும் அவ
37 னுக்குக் கொடுத்திருக்கிறார்.—என் எஜமான் என்னை
நோக்கி: நான் குடியிருக்கிற கானான் தேசத்தாரு
டைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்
38 கொள்ளாமல்,—நீ என் தகப்பன் வீட்டுக்கும், என்
இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனுக்குப்
பெண் கொள்ளவேண்டும் என்று ஆணையிட்டுக் கொ
39 டுக்கும்படி சொன்னார்.—அப்பொழுது நான் என்
எஜமானை நோக்கி: ஒருவேளை அந்தப் பெண் என்

[1] ஆதி. 26. 29. நியா. 17. 2. ரூத். 3. 10. சங். 115. 15.
[2] ஆதி. 43. 24. நியா. 19. 21.
[3] யோபு. 23. 12. யோ. 4. 34. எபே. 6. 5-7.
[4] ஆதி. 13. 2.
[5] ஆதி. 21. 2; 25. 5.

**31.** "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே." நாகோரின் குடும்பத்தில் ஏகேசுரவாத உபதேசம் அவ்வளவு சுத்தமாய் விசுவாசிக்கப்பட்டு வந்ததில்லை என்று யோசு. 24: 2ல் வாசிக்கிறோம். ஆனாலும் அவர்கள் விக்கிரகாராதனைக் காரரல்ல. வேறே தேவர்களைச் சேவித்தார்கள் என்பது ஆதி. 31: 30ல் சொல்லியபடி லாபான் வழிபட்டுவந்த தேராபீமைப்போலிருக்கலாம்.

**33.** "வந்த காரியத்தைச் சொல்லுமுன்னே புசிக்கமாட்டேன்." இரண்டு காரியத்தை இங்கே கவனிக்கலாம். 1. அந்தக்காலத்தில் சத்திரங்கள் சாவடிகள் இல்லாததால் ஒரு குடும்பத்தில் அந்நியனை உபசரிக்கும் தன்மை அவசியமாயிருந்துவந்தது.



னென்னே வாராதேபோனாலோ என்று கேட்டதற்கு,—
40 அவர்: நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்மு
டைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்
கப்பண்ணுவார்; என் இனத்தாரிடத்திலும், என் தகப்
பன் வீட்டிலும் நீ என் குமாரனுக்குப் பெண்கொள்
41 வாய்.—நீ என் இனத்தாரிடத்துக்குப் போனால், என்
ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குப்
பெண் கொடாமற்போனாலும், நீ என் ஆணைக்கு நீங்
42 கலாயிருப்பாய் என்றார்.—அப்படியே நான் இன்று
துரவண்டையிலே வந்து: [1]என் எஜமானாகிய ஆபிரகா
மின் தேவனாகிய கர்த்தரே, என் பிரயாணத்தை நீர்
43 இப்பொழுது வாய்க்கப்பண்ணுவீரானால்,—இதோ,
நான் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன், தண்
ணீர் மொள்ள வரப்போகிற கன்னிகையை நான்
நோக்கி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்
சம் எனக்குக் குடிக்கத் தரவேண்டும் என்று கேட்கும்
44 போது:—நீ குடி என்றும், [2]உன் ஒட்டகங்களுக்கும்
மொண்டு வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண்ணே
கர்த்தர் என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த
45 ஸ்திரீயாகவேண்டும் என்றேன்.—நான் இதை என்
இருதயத்தில் சொல்லி [3]முடிக்குமுன்னே, இதோ,
ரெபெக்காள் தன் குடத்தைத் தோள்மேல் வைத்துக்
கொண்டு புறப்பட்டுவந்து, துரவில் இறங்கிப்போய்த்
தண்ணீர் மொண்டாள். அப்பொழுது நான்: எனக்
46 குக் குடிக்கத் தரவேண்டும் என்றேன்.—அவள் தீவி
ரமாய்த் தன் தோள்மேலிருந்த குடத்தை இறக்கி.
குடியும், உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்
பேன் என்றாள். நான் குடித்தேன்; ஒட்டகங்களுக்
47 கும் வார்த்தாள்.—அப்பொழுது: நீ யாருடைய மகள்
என்று அவளைக் கேட்டேன்; அதற்கு அவள், நான்
மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனாகிய பெத்
துவேலின் மகள் என்றாள்; அப்பொழுது [4]அவளுக்
குக் காதணியையும், அவள் கைகளிலே கடகங்களை
48 யும் போட்டு;—தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்து

[1] நெகே. 1. 5. சங். 90. 17.
[2] சக. 19. 14.
[3] 1சாமு. 1. 13. நெகே. 2. 4.
[4] எசே. 16. 11, 12.

**2.** உபசரிக்கிறவர்கள் தங்கள் உபசாரம் அங்கிகரிக்கப்படும்படி உபசாரம் பெறுகிறவர்கள் கேட்கும் காரியங்களுக்கு மனதிணங்கவேண்டியதாயிருந்தது. இதை ஆபிரகாமின் ஊழியக்காரன் அறிந்துதான் வந்த காரியத்தைத் தெரியப்படுத்துமுன் லாபானுடைய விருந்தை உட்கொள்ளமாட்டேன் என்றான்.

கொண்டு, நான் என் எஜமானுடைய [1]சகோதரன்
குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை
நேர்வழியாய் நடத்திவந்த என் எஜமானாகிய ஆபிர
காமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்
49 தேன்.—இப்பொழுதும் நீங்களும் என் எஜமானுக்குத்
[2]தயையும் உண்மையும் உடையவர்களாய் நடக்க
மனதுள்ளவர்களானால், எனக்குச் சொல்லுங்கள்;
இல்லையென்றால் அதையும் எனக்குச் சொல்லுங்கள்,
அப்பொழுது நான் வலதுபுறத்தையாகிலும் இடது
புறத்தையாகிலும் நோக்கிப் போவேன் என்றான்.

50 அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்
தரமாக: [3]இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, [4]உம
க்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்
51 கூடாது.—இதோ, ரெபெக்காள் உமக்கு முன்பாக
இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உமது
எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு,
அவளை அழைத்துக்கொண்டு போம் என்றார்கள்.—
52 ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைக
ளைக் கேட்டபோது, தரைமட்டும் குனிந்து, கர்த்த
53 ரைப் பணிந்துகொண்டான்.—பின்பு அந்த ஊழியக்
காரன் [5]வெள்ளியுடைமைகளையும், பொன்னுடை
மைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபெக்கா
ளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதர

[1] ஆதி. 22. 23.
[2] ஆதி. 47. 29. யோசு. 2. 14.
[3] சங். 118. 23.
[4] ஆதி. 31. 24.
[5] யாத். 3. 22; 11. 2; 12: 35.

50. "லாபானும் பெத்துவேலும்." இங்கே மகன் முதலாவதும், தகப்பன் இரண்டாவதுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பல மனைவிகளை விவாகம் பண்ணும் விஷயத்திலே ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் ஒருவருக்கொருவர் நெருங்கிய ஐக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களே ஒருவருக்கொருவருடைய நன்மைக்காகச் சம்பந்தப்பட்டுக் காரியங்களை நடப்பிப்பார்கள். ரெபெக்காளுடைய விஷயத்திலே கலியாணத்துக்குரிய காரியங்களில் லாபான் அதிகமாய்ச் சம்பந்தப்பட்டு ஒழுங்குசெய்திருந்ததால் அவன் பேர் முதலாவதாகப் போட்டிருக்கிறது. கடைசியாகப் பெத்துவேலுடைய சம்மதம்மாத்திரம் கேட்கவேண்டியதாயிருந்தது (28-ம் வசனம் வியாக்கியானம் பார்க்க.). அவன் சம்மதம் கொடுக்கப்பட்டவுடனே கலியாணகாரியத்தை லாபானும் அவன் தாயும் சுறுசுறுப்பாய்ப் பார்த்தார்கள். பெத்துவேலுடைய பேர் அப்புறம் சொல்லப்படவில்லை.

53. "வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும்." நம்முடைய தேசவழக்கப்படி பெண்ணுக்கு மாப்பிள்ளைவீட்டார் [illegible]வேண்டிய நகைகளும் பரிசச்சேலையும் ரெபெக்காளுக்குக் கொடுக்கப்பட்டது.





னுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்
தான்.

54 பின்பு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்
துக் குடித்து, இராத்தங்கினார்கள்; காலையிலே எழுந்
திருந்து, அவன்: என் எஜமானிடத்துக்கு என்னை
55 அனுப்பிவிடுங்கள் என்றான்.—அப்பொழுது அவள்
சகோதரனும் அவள் தாயும், பத்து நாளாகிலும் பெண்
எங்களோடிருக்கட்டும், பிற்பாடு போகலாம் என்றார்
56 கள்.—அதற்கு அவன்: [1]கர்த்தர் என் பிரயாணத்தை
வாய்க்கப்பண்ணியிருக்க, நீங்கள் எனக்குத் தடை
செய்யாதிருங்கள்; நான் என் எஜமானிடத்துக்குப்
போக என்னை அனுப்பிவிடவேண்டும் என்றான்.—
57 அப்பொழுது அவர்கள்: பெண்ணை அழைத்து, அவள்
58 வாய்ப்பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி;—ரெ
பெக்காளை அழைத்து: [2]நீ இந்த மனிதனோடே கூடப்
போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன்
59 என்றாள்.—அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியா
கிய ரெபெக்காளையும், [3]அவள் தாதியையும், ஆபிர
காமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும்

[1] ஏசா. 48. 15.
[2] சங். 45. 10.
[3] ஆதி. 35. 8.

55. "அவள் சகோதரனும் அவள் தாயும்." பெத்துவேல் ஆபிரகாமின் ஊழியக்காரன் வந்து சேர்ந்த அன்றே மரித்துப்போனதாக யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது. இந்தப் பாரம்பரியம் இந்த வாக்கியத்துக்கும் 59-ம் வாக்கியத்துக்கும் இசைவாகத் தோன்றினாலும் அது ஆதி. 28: 2ல் ஈசாக்கு சொல்லுவதற்கு விரோதமாக இருக்கிறது. ரெபெக்காளும் லாபானும் ஒரு தாய்பெற்ற பிள்ளைகளாயிருந்தார்கள்; அதினாலே லாபான் தன் சகோதரி கலியாணவிஷயத்தில் காரியங்களை முன்னுக்கு நின்று நடத்தினான். அப்படியே சிமியோனும் லேவியும் தங்கள் சகோதரி தீனாள்விஷயத்திலும் அப்சலோம் தாமார் காரியத்திலும் மானம்பாராட்டினதாக வாசிக்கிறோம். (ஆதி. 34: 13–31, 2 சாமு. 13: 22.)

59. "அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளை." பெத்துவேலுக்கு லாபானைத்தவிர வேறே குமாரரும் இருந்திருக்கலாம். அல்லவென்றால் அது ரெபெக்காளின் நெருங்கிய இனபந்துக்களைக் குறிக்கலாம்.

"அவள் தாதியையும்." தெபோராள் ரெபெக்காளுக்கும் யாக்கோபுக்கும் மிகவும் பிரயோசனமாயிருந்தாள் என்பதை அவள் அடக்கம்பண்ணப்பட்ட இடத்துக்குக் கொடுக்கப்பட்ட பெயரினால் அறியலாம். (ஆதி. 35: 8)

60 அநுப்புவித்து,—ரெபெக்காளை வாழ்த்தி: [1]எங்கள்
சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவா
யாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்க
ளைச் சுதந்தரித்துக்கொள்வார்களாக என்று ஆசீர்வதித்
தார்கள்.

61 அப்பொழுது ரெபெக்காளும் அவள் வேலைக்காரி
களும் எழுந்து ஒட்டகங்கள்மேல் ஏறி, அந்த மனித
னோடேகூடப் போனார்கள். ஊழியக்காரன் ரெபெக்
காளை அழைத்துக்கொண்டுபோனான்.

62 ஈசாக்கு தென்தேசத்தில் குடியிருந்தான். அப்
பொழுது அவன்: [2]லகாய்ரோயி என்னப்பட்ட துரவின்
63 வழியாய்ப் புறப்பட்டுவந்தான்.—ஈசாக்கு சாயங்கால
வேளையிலே [3]தியானம்பண்ண வெளியிலே போயி
ருந்து, தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது,
64 ஒட்டகங்கள் வரக்கண்டான்.—ரெபெக்காளும் தன்
65 கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது,—ஊழி
யக்காரனை நோக்கி: அங்கே வெளியிலே நமக்கு எதி
ராக நடந்துவருகிற அந்த மனிதன் யார் என்று கேட்
டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்கா
ரன் சொன்னான். [4]அப்பொழுது அவள் ஒட்டகத்
66 தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள்.—ஊழி

[1] ஆதி. 17. 16; 22. 17. ரூ. 4. 11. 12.
[2] ஆதி. 16. 14; 25. 11.
[3] யோசு. 1. 8. சங். 1. 2; 77. 12; 119. 15; 143. 5.
[4] யோசு. 15. 18.

**60.** "நீ கோடாகோடியாய்." எபிரெயுவில் ஆயிரம் பதினாயிரமாய் என்றிருக்கிறது. ரெபெக்காளுக்குக் கூறப்பட்ட ஆசீர்வாதத்தில் இரண்டு காரியங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது புத்திரசந்தானப் பெருக்கம், இரண்டாவது யுத்தத்தில் ஜெயம்.

**62.** "லகாய்ரோயி." இது ஆகாரின் துரவு (ஆதி. 16: 14.). அது தென்தேசம், அதாவது நெகெப்பில் (ஆதி. 12: 9. பார்க்க.), பெயெர்செபாவுக்குச் சமீபமாயிருந்தது.

**63.** "தியானம்பண்ண." இது ஈசாக்கின் அமைதலான குணத்துக்கு எவ்வளவு இசைவாயிருக்கிறது. அவன் ஜெபத்தியானம் பண்ணும்படியாகத் தனிமையான இடத்துக்குப் போனான். தன் அருமையான தாயின் மரணத்தில் தனக்கு ஆறுதல் கிடைக்கவும், தன் ஊழியக்காரனின் பிரயாணத்தை ஆசீர்வதிக்கவுமாகச் ஜெபம்பண்ணியிருக்கலாம்.

**65.** "அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி." பெரியோர் வரும்போது சிறியோர் வாகனத்திலிருந்து இறங்கி நடப்பது வழக்கம். ரெபெக்காள் தன் எஜமானைக் கனம்பண்ணும்படி ஒட்டகத்திலிருந்து இறங்கி முக்காடிட்டுக் கொண்டாள். அவள் அழகுள்ளவளாயும், உபசாரம் சுறுசுறுப்பு தைரியமுள்ளவளாயும் இருந்ததோடே ஆசாரமும் மரியாதையும் உள்ளவளாயும் விளங்கினாள்.





யக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்
67 குக்கு விவரித்துச் சொன்னான்,—அப்பொழுது ஈசா
க்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடா
ரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு
மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். [1]ஈசா
க்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறு
தல் அடைந்தான்.

[1] ஆதி. 38. 12. 1 தெச. 4. 13.

**67.** "சாராளுடைய கூடாரத்துக்கு." 28-ம் வசனம் வியாக்கியானம் பார்க்க. லேயாளுக்கும் ராகேலுக்கும் வெவ்வேறான கூடாரங்களிருந்தன. (ஆதி 31: 33.)

படிப்பினை.

வச. 1—9.

(1) குடும்பத்தில் காட்டப்படும் நன்மாதிரி போதனை தேவபக்தி, அந்தக் குடும்பத்தைச்சேர்ந்த வேலைக்காரரிடத்திலும் பொதுப்படக் காணப்படும். தேவபக்தியுள்ள குடும்பத்தைச் சேர்ந்திருப்பதும், தேவபக்தியுள்ள வேலைக்காரரை வைத்திருப்பதும் மேலான ஆசீர்வாதம்.

(2) விவாகமானது பின் சந்ததியாருக்கும், மற்றவர்களுக்கும், சபைக்கும் பிரயோசனமாயிருக்கும்படி, அதைத் தேவசித்தத்தின்படியேயும், தேவவிருப்பப்படியேயும் விசாரத்தோடும், ஜெபிக்கையோடும் செய்யவேண்டும்.

(3) விவாகவிஷயத்தில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு சகாயமானதைச் செய்ய, முக்கிய கடமைப்பட்டிருக்கிறார்கள். பெற்றோர் சரியானபடி தங்கள் பிள்ளைகளுக்குப் பெண் தெரிந்துகொள்வதில் தங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதத்தைக் கூட்டுகிறவர்களாயிருக்கிறார்கள்.

(4) தேவன்பேரில் நம்பிக்கை வைக்கிறவர்கள் கிரமமான யத்தனங்களைக் கையாடி அவருடைய நடத்துதலுக்குக் காத்திருக்கையில் நன்மையானதைப் பெற்றுக் கொள்ளலாம்.

வச. 10—36.

(5) தங்களுடைய எல்லாவழிகளிலும் தேவனைப் பற்றிக்கொள்ளுகிறவர்கள் செம்மையான பாதையில் நடத்தப்படுவார்கள். விசுவாசமுள்ள ஜெபம் அதிசயமான வகையாய்க் கேட்கப்படுகையில் விசேஷித்த துதிகளும் ஸ்தோத்திரங்களும் செலுத்தப்படவேண்டும்.

(6) சுறுசுறுப்பும் தயைதாட்சணியமும் தாழ்மையுமுள்ள மனைவியைத் தேடுகிறவன் தன் குடும்பத்தில் பாக்கியவானாயிருப்பான்.

(7) மனிதரிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளும், நம்முடைய பிரயாணத்திலும் வரும் சித்தியும் தேவனிடத்திலிருந்து வருகிறவைகளாக நாம் எண்ண வேண்டும்.

வச. 37—67.

(8) நமக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கும் வேலையில், நம்முடைய சொகுசை நாடாமல் நம்முடைய கடமையை முதலாவதாக நிறைவேற்றுவதே உத்தமம்.

(9) விவாகநிலைமை சமாதானமும் பாக்கியமுமாயிருக்கும்படி இருதரத்தாருடைய சம்[illegible]து நன்மை.

(10) புருஷன் தன் மனைவியில் அன்புகூர்வதுபோலக் கிறிஸ்துவும் தமது சபையில் அன்புகூர்ந்து அதற்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்து, தமது கிரியையாகிய ஆவியினாலும் ஆவியின் வரங்களாலும் அதைச் சிறப்பிக்கிறார்.

(11) கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடந்து அவர்பேரில் நிர்மலமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

கவனிப்பு.—ஆவியின் பிரகாரம் இந்தச் சரித்திரத்தை வாசித்துப்பார்த்தால்,—கிறிஸ்தவ போதகன்மார் தங்களுடைய எஜமானாகிய கிறிஸ்துவுக்காக ஞான மணவாட்டியாகிய திருச்சபையைத் தேடிக் கூட்டிக்கொண்டுவரும் விஷயத்தில் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னின்னவையென்று நாம் கண்டறியலாம். எலியேசரென்பவன் அவர்களுக்கு நல்ல முன்மாதிரியைக் காட்டியிருக்கிறான்.

(1) தன் சொந்த நாமத்தையும் விஷயத்தையும் சொல்லாமலிருந்தான். தன்னை 'ஆபிரகாமுடைய ஊழியக்காரன்' (34. வச.) என்று அழைத்தானேயல்லாமல் தன் சுயகனத்தையும் அந்தஸ்தையுங்குறித்து ஒன்றும் சொல்லவில்லை.

(2) தன் எஜமானுடைய சித்தத்தை நிறைவேற்ற ஆணையிட்டு பின்பு அதைச் செய்யுமட்டும் இளைப்பாறாமலிருந்தான் (9: 33. வச.). எஜமானின் கட்டளை முக்கியமென்று எண்ணி அவ்வுத்தரவு நிறைவேறுமட்டும் உபசாரத்தையும் ஆகாரத்தையும் அற்பமாய் எண்ணிவந்தான்.

(3) எடுத்தகாரியத்தை ஜெபசிந்தையோடு நடப்பித்துவந்தான் (12: 26.). தன்னுடைய சொந்த ஞானத்தினாலாவது உபாயத்தினாலாவது காரியம் வாய்க்கமாட்டாதென்றுணர்ந்து கர்த்தருடைய சகாயத்தில் முற்றிலும் சார்ந்துவந்தான்.

(4) எஜமானுடைய மகிமைப்பிரதாபத்தைப் பிரசித்தம்பண்ணினான் (35: 53. வச.). தன்னை அனுப்பினவருடைய ஐசுவரியத்தையும் மேன்மையையும் விளம்பபண்ணினதுமல்லாமல் அதற்குத் திருஷ்டாந்தமாக விலையேறப்பெற்ற ஆபரணங்களைக் காட்டிக்கொடுத்தான். அத்துடனேகூட என் எஜமான்—என் எஜமான் என்பதைத் திரும்பத்திரும்ப (பத்தொன்பதுதரம்) உச்சரித்தான். அவனுக்கு அது மெத்த அருமையான வார்த்தையாயிருந்தது.

(5) எஜமானிடத்திற்கு அம்மணவாட்டியைக் கூட்டிக்கொண்டுவந்து விடுமட்டும் அவன் எவ்வளவேனும் தாமசம்பண்ண மனதில்லாதவனாயிருந்தான் (54–59. வச.). தன் சுகத்துக்காகவல்ல எஜமானுடைய பிரியத்துக்காகத் தான் வந்ததை அறிந்து, கடமையை நிறைவேற்றுமட்டும் ஆத்திரப்பட்டான்.

---

அவன் பெயரும் கிறிஸ்தவ போதகர்களுக்குப் படிப்பினையாயிருக்கிறது; எலியேசர் என்பதற்கு,—தேவனே சகாயர் அல்லது தேவசகாயமென்றர்த்தம்.

---

அவன் ஆபிரகாமுடைய வீட்டில் உக்கிராணக்காரனாயிருந்தான்.

"உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியம்" (1 கொ. 4: 2.). அப்படியே எலியேசர் உண்மையுள்ளவனென்று காணப்பட்டான். அப்படியே கிறிஸ்தவ போதகன்மாரெல்லாரும் உண்மையுள்ளவர்களென்று காணப்படுவார்களாக.





## 25. அதிகாரம்.

கேத்தூராள் என்பவளால் ஆபிரகாமுக்குப் பிறந்த குமாரர்கள். 5. ஆபிரகாம் தன் ஆஸ்திகளைப் பங்கிட்டது. 7. அவன் ஆயுளையும், மரணத்தையும், 9. அடக்கம்பண்ணப்பட்டதையும் குறித்துச் சொல்லியது. 12. இஸ்மவேலின் சந்ததி. 17. அவனுடைய ஆயுளையும், மரணத்தையும் குறித்துச் சொல்லியது. 21. மலடியாயிருந்த ரெபெக்காளுக்காக ஈசாக்கு வேண்டிக்கொண்டது. 22. அவள் கர்ப்பத்தில் பிள்ளைகள் மோதிக்கொண்டது. 24. ஏசாவும் யாக்கோபும் பிறந்தது. 27. அவர்களுக்கிருந்த வேற்றுமை. 29. ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டது.

1 ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட
ஒரு ஸ்திரீயையும் விவாகம்பண்ணியிருந்தான்.—
2 அவள் அவனுக்குச் [1]சிம்ரானையும், யக்ஷானையும், [1] 1 நாளா. 1. 32.

---

## 25. அதிகாரம்.

**1. "ஆபிரகாம் கேத்தூராள் என்னும்.............விவாகம்பண்ணியிருந்தான்."** இந்தச் சங்கதி சாராளின் மரணத்துக்குப்பின் சொல்லப்பட்டிருந்தாலும் அவள் சென்றுபோனபின்பும் ஆபிரகாம் முப்பத்தெட்டுவருஷம் உயிரோடே இருந்ததாலும் அந்த நாட்களை அவன் தனிமையாகக் கழிக்கவேண்டியதாயிருந்ததாலும் சாராள் மரணம் அடைந்தபின் ஆபிரகாம் கேத்தூராளை விவாகம்பண்ணினான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். வேறுசிலர் ஆதி. 17:17ல் நூறுவயசானவனுக்குப் பிள்ளை பிறக்குமோ என்று ஆபிரகாம் தன்னைக்குறித்துச் சொல்லியதையும், இந்த இடத்தில் விவாகம் பண்ணியிருந்தான் என்று எழுதியிருப்பதையும் யோசேப்பு பாலியனாயிருக்கையில் மீதியானியர் வர்த்தகக்கூட்டத்தாராயிருந்தார்கள் என்பதையும் (ஆதி. 37: 28.) மூன்றும் நாலாம் வாக்கியங்களில் ஆபிரகாமுடைய பேரப்பிள்ளைகளைக்குறித்துக் காட்டியிருப்பதையும் வைத்துக்கொண்டு இந்த விவாகம் சாராளின் ஜீவகாலத்தில் நடந்திருக்குமென்று சொல்லுகிறார்கள்.

யூத வியாக்கியானிகள் கேத்தூராள் என்பது ஆகாரைக் குறிக்கும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் ஆறும் வாக்கியத்தில் "மறுமனையாட்டிகள்" என்று பன்மையில் போட்டிருப்பதையும், 1 நாளா. 1: 29–33ல் ஆகார், கேத்தூராள் என்பவர்களுடைய பிள்ளைகளை வெவ்வேறாகக் காட்டியிருப்பதையும் கவனிக்கையில் யூத வியாக்கியானிகளின் அபிப்பிராயம் போலியென்றாகும். மேலும் இஸ்மவேல் இப்போது ஐம்பத்தாறு வயதுள்ளவனாயிருந்ததால் அவன் தாய், ஆறு குமாரரைப் பெறும்படியான காலம் கடந்துபோயிருக்கும்.

**2.** "சிம்ரான்." கேத்தூராளின் வம்சத்தார் பாக்கிய அரபியா என்னப்பட்ட நாட்டில் குடியிருந்ததாக யோசேப்புஸ் என்னும் சரித்திரக்காரன் சொல்லுகிறான்.

"மேதான்." முப்பத்தேழாம் அதிகாரம் முப்பத்தாறும் வாக்கியத்தில் எபிரெயபாஷையிலே மெதானியர் என்று வருகிறது. இதைப் பார்க்கையில்

மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவா
3 கையும் பெற்றாள்.—யக்ஷான் சேபாவையும், தேதா
னையும் பெற்றான்; தேதானுடைய குமாரர் அசூரீம்,
4 லெத்தூசீம், லெயூமீம் என்பவர்கள்.—மீதியானுடைய
குமாரர் எப்பா, எப்பேர், ஆனோக்கு, அபீதா, எல்தா
கா என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் கேத்தூரா
ளின் பிள்ளைகள்.

5 ஆபிரகாம் [1]தனக்கு உண்டான யாவையும் ஈசாக்
6 குக்குக் கொடுத்தான்.—ஆபிரகாமுக்கு இருந்த மறு
மனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன்
கொடைகளைக் கொடுத்து, தான் உயிரோடிருக்கும்

[1] ஆதி. 24. 36.

மீதியானியரும் மேதானியரும் ஒன்றாய்க் கலந்துபோனார்கள் என்று சொல்லத்தக்கதாயிருக்கிறது.

"மீதியான்." மீதியானியர் யோர்தானுக்கு அப்பால் மோவாபியருக்குச் சமீபமாய்க் குடியிருந்தார்கள். அவர்கள் எகிப்துக்கு வியாபாரவிஷயமாய்ப் போக்குவரத்தாயிருந்தார்கள். யோசேப்பு அவர்களிடத்தில் விற்கப்பட்டான் (ஆதி. 37: 28.). மோசே எகிப்திலிருந்து அவர்கள் தேசத்துக்கு ஓடிப்போய் அங்கே எத்திரோவின் மகளை விவாகம்பண்ணினான் (யாத். 2: 15, 16, 21.). மீதியானியர் பிந்தியகாலத்தில் இஸ்ரவேலருக்குப் பலத்த சத்துருக்களாயிருந்தார்கள். (நியா. 6–8 அதி.)

"சூவாகு." யோபின் சிநேகிதனான சூகியனாகிய பில்தாத்து இவனுடைய சந்ததியானாயிருக்கலாம். இந்த சூவாகு ஆதி. 38: 2ல் சொல்லப்பட்டிருக்கிற சூவா அல்ல. இரண்டுபேரும் எபிரெயுவில் வெவ்வேறாக எழுத்துக் கூட்டப்பட்டிருக்கிறது.

**3. "சேபா, தேதான்."** ஆதி. 10: 7ல் சேபா, திதான் என்பவர்கள் கூஷுடைய குமாரர் என்றழைக்கப்பட்டிருக்கிறார்கள். சேமின் சந்ததியாரும் காமின் சந்ததியாரும் சம்பந்தம் கலந்துகொண்டதினாலே ஒரு வம்சத்தில் வழங்கப்பட்ட பேர் இன்னொரு வம்சத்திலும் வழங்கப்பட்டிருக்கலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம். வேறுசிலர் காமின் சந்ததியார் குடியேறியிருந்த தேசங்களைச் சேமின் புத்திரர் கட்டிக்கொண்டு அந்தத் தேசங்களுக்கு இடப்பட்ட பேர்களைத் தங்களுக்குத் தரித்துக்கொண்டார்கள் என்றும் அந்தப்படிக்கு சேபா தேதான் என்ற பேர்கள் (எரே. 6: 20; 49: 8. எசே. 25: 13; 27: 15, 22; 38: 13.), வேதத்தில் தேசப்பேர்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். அசூரீம், லெத்தூசீம், லெயூமீம் என்பவர்கள் தேதானின் வம்சத்தைச்சேர்ந்த கோத்திரங்களாயிருந்தார்கள்.

**4. "எப்பா."** இவர்கள் மீதியானியரைச்சேர்ந்த ஒரு கோத்திரத்தார்; அவர்கள் பொன்னிலும், தூபவர்க்கங்களிலும் ஒட்டகங்களிலும் பெருத்த திரவிய சம்பன்னராயிருந்தார்கள். (ஏசா. 60: 6.)





போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்
டுக் கிழக்கே போகக் [1]கீழ்தேசத்துக்கு [2]அனுப்பிவிட்
டான்.

7 ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசுநாட்கள் நூற்று
8 எழுபத்தைந்து வருஷம்.—பிற்பாடு [3]ஆபிரகாம் நல்ல
நரைவயதிலும், முதிர்ந்த பூரண ஆயுசிலும் பிராணன்
போய் மரித்து, தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்
9 டான்.—[4]அவன் குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவே
லும் மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின் குமா
ரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா
என்னப்பட்ட குகையிலே அவனை அடக்கம்பண்ணி

[1] நியா. 6. 3.
[2] ஆதி. 21. 14. நியா. 6. 3. ஏசா. 17. 14.
[3] ஆதி. 15. 15: 49. 29. யோபு. 5. 26.
[4] ஆதி. 35. 29: 50. 13.

**6. "கீழ்தேசம்."** இது அரபியாவையும் மெசொப்பொத்தாமியாவின் தென்பாகத்தையும் குறிக்கும். இவர்கள் "கிழக்கத்துப் புத்திரர்" என்று அழைக்கப்படுகிறார்கள் (நியா. 6: 3. 1 இரா. 4: 30. யோபு. 1: 3. ஏசா. 11: 14.). பிந்தியகாலத்தில் அவர்கள் சரசேனர் என்றழைக்கப்பட்டார்கள். பெதுயீன் சாதியார் இக்காலங்களிலும் ஆபிரகாமின் வழக்கத்தைக் கையாடி வருகிறார்கள். பிள்ளைகள் வளர்ந்தபின்பு இளையவர்கள் பிதாவின் ஆஸ்திகளில் ஒருபாகம் வாங்கிக்கொண்டு தூரஇடத்துக்குப் போய்விடுகிறார்கள். மூத்தமகன் மற்ற ஆஸ்திகளை வைத்துக் கையாடுவான்.

**8. "ஆபிரகாம் நல்ல நரைவயதிலும்...... பிராணன் போய் மரித்து."** ஈசாக்கின் குடும்பசரித்திரம் சொல்லப்படுமுன் ஆபிரகாமின் சரித்திரம் இங்கே முடிகிறது. அவன் மரித்தபோது அவன் பேரப்பிள்ளைகளான ஏசாவும் யாக்கோபும் 17 வயசாயிருந்தார்கள்.

**"தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்."** அவன் தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்படாமல் மக்பேலாவில் அடக்கம்பண்ணப்பட்டான். "தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டான்" என்பது தன் முற்பிதாக்களைப்போல மரண நிலைமைக்குட்பட்டான் என்றாவது அல்லது மரித்துப் போன தன் பிதாக்களின் ஆத்துமா போயிருக்கிற இடத்துக்கு அவன் ஆத்துமாவும் சென்றதைக்குறிக்காவது அர்த்தம் கொள்ளும். அகுஸ்தின் என்பவர் எபி. 11: 16ல் விசுவாசிகளான பிதாக்களுக்கு தேவன் ஆயத்தப்படுத்தியிருக்கிற தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமுக்கு ஆபிரகாம் சென்றான் என்று எழுதியிருக்கிறார்.

**9. "அவன் குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவேலும்."** ஈசாக்கு ஆபிரகாமின் ஆஸ்திக்கும் வாக்குத்தத்தத்துக்கும் சுதந்தரனாயிருந்ததால் அவன் பேர் முதலில் போட்டிருக்கிறது. ஆபிரகாம் மரித்தபோது ஈசாக்குக்கு 75 வயசும் இஸ்மவேலுக்கு 89 வயசுமாயிருந்தது. இந்த இரண்டு மூதியோருக்குள்ளும் இருந்த பகை நீங்கிப்போய்த் தங்கள் தகப்பனுடைய அடக்கத்துக்கு ஒன்று சேர்ந்துகொண்டார்கள். ஆபிரகாமின் மற்றப் பிள்ளைகள் அங்கே தூரமான

10 ஞர்கள்.—அந்த நிலத்தை [1]ஏத்தின் புத்திரர் கையிலே [1] ஆதி. 23. 16 19. 31.
ஆபிரகாம் வாங்கியிருந்தான்; அங்கே ஆபிரகாமும்
அவன் மனைவியாகிய சாராளும் அடக்கம்பண்ணப்
பட்டார்கள்.
11 ஆபிரகாம் மரித்தபின் தேவன் அவன் குமாரனாகிய
ஈசாக்கை ஆசீர்வதித்தார். [2]லகாய்ரோயீ என்னும் [2] ஆதி. 16. 14.
துரவுக்குச் சமீபமாய் ஈசாக்கு குடியிருந்தான்.
12 சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்து
தேசத்தாளான [3]ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமார [3] ஆதி. 16. 15.
13 னாகிய இஸ்மவேலின் வம்சவரலாறு:—பற்பல [4]சந்ததி [4] 1 நாளா. 1. 29.
களாய்ப் பிரிந்த இஸ்மவேலின் புத்திரருடைய நாமங்
களாவன; இஸ்மவேலுடைய மூத்தமகன் நெபாயோத்;
14 பின்பு கேதார், அத்பியேல், மிப்சாம்,—மிஷ்மா,
15 தூமா, மாசா,—ஆதார், தேமா, யெத்தூர், நாபீஸ்,
16 கேத்மா என்பவைகளே.—தங்கள் கிராமங்களிலும்
அரண்களிலும் குடியிருந்த தங்கள் ஜனத்தாருக்குப்

இடத்துக்கு (அரபியாவுக்கு) போய்விட்டார்கள். இஸ்மவேல் பாரானில் குடியிருந்ததால் (ஆதி. 21: 21.) அது லகாய்ரோயீக்கு அதிகத் தூரத்திலிருக்கவில்லை.

**11 "ஈசாக்கை ஆசீர்வதித்தார்."** இதோடே தேராவின் வம்ச வரலாறு முடிகிறது. அதின் சரித்திரச்சுருக்கம் மெத்த அருமையானது; ஆதி. 3: 15ல் காட்டிய ஆதி வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்குத் திடமான அஸ்திபாரம் போடப்பட்டிருப்பதையும் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாரின் மூப்பிதர் மற்றக் கூட்டத்தாரினின்று பிரித்தெடுக்கப்பட்டதையும், அவன் தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நடந்ததில் நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாமும் அருளப்படுவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டதையும் இந்த சரித்திரச் சுருக்கத்தில் காணலாம்.

**12–15. "இஸ்மவேலின் வம்சவரலாறு."** இஸ்மவேலிலிருந்து தோன்றினவர்களுக்குள் நெபாயோத்தியரும், கேதாரியரும், ஆடுமாடுகளையுடைய திரண்ட ஐசுவரியவான்களாயிருந்தார்கள் (ஏசா. 60: 7.). தூமாவைப்பற்றி ஒரு விசேஷித்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருக்கிறது (ஏசா. 21: 11.). தேமாவின் குடிகள் உதாரமும் உபசாரமுமுள்ளவர்களாயிருந்தார்கள் (ஏசா 21: 14.). யோபின் ஆகமத்தில் அவர்கள் வியாபாரிகளாயிருந்தார்கள் என்று வாசிக்கிறோம் (யோபு. 6: 19.). யெத்தூர், நாபீஸ்முதலிய கோத்திரத்தார் ஒரு யுத்தத்தில் ரூபனியர் முதலியவர்களால் ஜெயிக்கப்பட்டார்கள். (1 நாளா. 5: 19–22.)

**16. "தங்கள் கிராமங்களிலும் அரண்களிலும்."** பாரான் வனாந்தரத்தில் அரண்கள் இருந்ததில்லை. கிராமங்கள் என்பது மதில் சூழப்படாத குடியிருப்பைக் குறிக்கும் (லேவி. 25: 31.). சனங்கள் நிலையாய் அடைப்





[1]பன்னிரண்டு பிரபுக்களாகிய இஸ்மவேலின் குமாரர் [1] ஆதி. 17. 20.
கள் இவர்களே, இவர்களுடைய நாமங்களும் இவை
களே.—இஸ்மவேலின் வயது நூற்று முப்பத்தேழு.
பின்பு அவன் பிராணன் போய் மரித்து, தன் ஜனத்
18 தாரோடே சேர்க்கப்பட்டான்.—அவர்கள் [2]ஆவிலா [2] 1 சாமு. 15. 7.
துவக்கி எகிப்துக்கு எதிராக அசீரியாவுக்குப் போகிற
வழியிலிருக்கும் சூர்மட்டும் வாசம்பண்ணினார்கள்.
இது அவன் [3]சகோதரர் எல்லாருக்கும் முன்பாக [3] ஆதி. 16. 12.
அவன் குடியேறின பூமி.
19 ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குடைய வம்ச
20 வரலாறு: [4]ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்.—ஈசாக்கு [4] மத். 1. 2,
[5]ரெபெக்காளை விவாகம்பண்ணுகிறபோது நாற்பது [5] ஆதி. 22. 22: 24. 29.
வயதாயிருந்தான்; இவள் பதான்அராம் என்னும் சீரி
யாதேசத்தானாகிய பெத்துவேலுக்குக் குமாரத்தியும்,

டைப்பட்ட கிராமங்களில் குடியிருந்துவந்தார்கள். "அரண்கள்" என்பது எபிரேயுவில் கூடாரத்துக்கு எதுகையான பதமாகச் சங்கீதம், 69: 25ல் வருகிறது. அவைகள் கூடாரக்கூட்டத்தைக் குறிக்கும். அரபியர் இரண்டு வகுப்பாராய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு வகுப்பார் கூடாரத்தில் வாசம் செய்கிறவர்கள்; அவர்கள் ஒரு காட்டுக்குள்ளாகமாத்திரம் குடிபெயர்ந்துபோவது வழக்கமாயிருந்தது. இன்னொரு வகுப்பார் விவசாயம் செய்கிறவர்கள்; அவர்கள் ஒரே இடத்தில் குடியிருந்துவந்தார்கள். அவர்கள் தாழ்குலத்தார் என்று எண்ணப்பட்டார்கள். அவர்கள் இந்நாட்களிலும் உயர்குலத்தோரான அரபியருக்கு வரிகொடுத்துவருகிறார்கள். இஸ்மவேலும் அவன் குடிகளும் கூடாரங்களில் வாசம்செய்து சாதாரண சனங்களுக்கு மேற்பட்டவர்களாய் அவர்களை ஆண்டு அவர்களுக்கு அரண்கள்போலிருந்தார்கள் என்பதே இவ்வாக்கியத்தின் கருத்தாயிருக்கிறது.

**18. "ஆவிலா."** தெற்கே பார்சியா குடாக்கடலோரமாயிருக்கிறது.

**"சூர்."** இது எகிப்து திசையில் இஸ்மவேலருடைய மேல் எல்லை. இந்தத் திசை அமலேக்கியருக்குக் கொடுக்கப்பட்டிருந்ததாக, 1 சாமு. 15: 7ல் சொல்லியிருக்கிறது.

**19. "ஈசாக்குடைய வம்சவரலாறு."** இந்த வரலாறு முப்பத்தைந்தாம் அதிகாரம் கடைசி பரியந்தம் எட்டுகிறது.

**20. "பதான்அராம் என்னும் சீரியா தேசத்தானாகிய."** எபிரேயுவில் பதான்அராமின் அராமியனாகிய என்றிருக்கிறது. முந்தின அதிகாரத்தில் ரெபெக்காளின் தேசம் (அராம்–நகராயீம்.) மெசொப்பொத்தாமியா என்று அழைக்கப்படுகிறது (ஆதி. 24: 10.). சிலர் பதான்–அராம் என்பது (அராம்–நகராயீம்), மெசொப்பொத்தாமியாவின் பழையபேர் என்று சொல்லுகிறார்கள்.

சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சகோதரியுமான
21 வள்.—மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு
[1]கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் [1] 1 சாமு. 1. 11, ஞா. 1. 13, லூக். 8. 23.
அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; [2]அவன்
22 மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள்.—அவள் கர்ப் [2] ரோ. 9. 10.
பத்திலே பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்
டிருந்தன; அப்பொழுது அவள்: இப்படியானால்
எனக்கு எப்படியோ என்று சொல்லி, [3]கர்த்தரிடத்தில் [3] 1 சாமு. 9. 10, 21.
23 விசாரிக்கும்படி போனாள்.—அதற்குக் கர்த்தர்: [4]இர [4] ஆதி. 24. 60: 27. 29.
ண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது;

ஆனால் பதான்அராம் என்பது மெசொப்பொத்தாமியாவிலுள்ள ஒரு நாட்டுக்குப் பெயராயிருந்தது என்றறியவேண்டும். யாக்கோபு அங்கே வெகு காலம் பின்னிட்டான். அது லாபான் குடியிருந்த தேசமாயிருந்தது.

**21. "ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்."** ரெபெக்காளுக்கு இருபது வருஷம் பிள்ளையில்லாதிருந்தது (21. வச.) அப்போது ஈசாக்கு பிள்ளைக்காக வேண்டுதல் செய்ய கர்த்தர் அவன் விண்ணப்பத்தைக் கேட்டு அநுக்கிரகம் செய்தார்.

**22. "பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்தன."** ஆபிரகாமிலிருந்து வெவ்வேறு குணமுள்ள இரண்டு ஜாதியார் இரண்டு தாய்மார் மூலமாய்த் தோன்றினார்கள். ஈசாக்கிலிருந்து ஒரே தாயின்மூலமாய் இரண்டு ஜாதியார் எழும்பினார்கள். இந்தச் சாதிகளின் ஆதி பிதாக்கள் இருவரும் பிறக்குமுன்னே மோதிக்கொண்டிருந்தார்கள். இரட்டைப்பிள்ளைகள் தன் கெர்ப்பத்திலிருப்பதை ரெபெக்காள் அறியாமல் கெர்ப்பத்தில் உண்டான மோதுதலினால் அவள் தளர்ச்சியடைந்தாள்.

**"இப்படியானால் எனக்கு எப்படியோ."** பிள்ளைகளுடைய மோதுதல் மிகவும் பலமாயும் ரெபெக்காள் அதைத் தாங்குவதற்கு வருத்தமாயுமிருந்ததால் தான் பிழைக்கமாட்டாள் என்று எண்ணினாள். சிலர் இந்த வாசகத்தை "எனக்கு இப்படியானால் நான் என் கர்ப்பந்தரித்தேன்" என்றும் சிலர் "இப்படியிருக்கும் என்று நான் அறிந்தால் சந்தானத்துக்காக நான் விரும்பியிருக்கமாட்டேன்" என்றும்; சிலர் சூலியாயிருப்பதில் இவ்வளவு உபத்திரவங்களிருந்தால் நான் ஏன் அதை விரும்பினேன்" என்றும் சிலர் "இப்படியானால் நான் ஏன் பிழைக்கவேண்டும்" என்றும் திருப்புகிறார்கள்.

**"கர்த்தரிடத்தில் விசாரிக்கும்படி போனாள்."** சிலர் நினைக்கிறபடி ரெபெக்காள் சேமிடத்துக்காவது மெல்கிசேதேக்கிடத்துக்காவது அல்லது ஆபிரகாம் இடத்துக்காவது போகவில்லை. தன் குடும்பத்தார் ஆராதித்துவந்த பீடத்தண்டைக்குப் போய்க் கர்த்தருக்குப் பலி செலுத்தி ஜெபத்தின்மூலமாய் விசாரித்தாள் என்று எண்ணவேண்டியது. அவள் மனுஷன்மூலமாய்க் கர்த்தரிடத்தில் விசாரித்தால் மனுஷன்மூலமாய் அவளுக்கு உத்தரவு சொல்லப்பட்டிருக்கும். அடுத்த வாக்கியத்தில் கர்த்தர் அவளுக்கு நேரே உத்தரவு அருளினதாக வாசிக்கிறோம்.

**23. "இரண்டு ஜாதிகள்."** எதோமியர் இஸ்ரவேலர்.





இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும்,
அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்
கிலும் பலத்திருப்பார்கள், [1]மூத்தவன் இளையவனைச் [1] மல். 1. 2-4. ரோ. 9. 10-12.
24 சேவிப்பான் என்றார்.—பிரசவகாலம் பூரணமான
போது, அவள் கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள்
25 இருந்தது.—மூத்தவன் சிவந்த நிறமுள்ளவனும் சர்
வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன்போலவும்
வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசா என்று பேரிட்
26 டார்கள். — பின்பு, அவன் சகோதரன் தன் கையி
னாலே [2]ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு [2] ஓசி. 12. 3.
வெளிப்பட்டான்; அவனுக்கு [3]யாக்கோபு என்று பே [3] ஆதி. 27. 36.
ரிட்டார்கள்; இவர்களை அவள் பெற்றபோது ஈசாக்கு
அறுபது வயதாயிருந்தான்.
27 இந்தப் பிள்ளைகள் பெரியவர்களானபோது, [4]ஏசா [4] ஆதி. 27. 3—5.
வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாய் இருந்
தான்; யாக்கோபு குணசாலியும் [5]கூடாரவாசியுமாய் [5] எபி. 11. 9.

**"மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்."** எதோமியர் தாவீதின் காலமுதல் யோராம் காலம்வரைக்கும் இஸ்ரவேலருக்குக் கப்பம் கட்டிவந்தார்கள். (2 இரா. 8: 20.)

**25. "சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன்போலவும்."** ஏசாவின் மேனியெல்லாம் ரோமமுள்ளதாயிருந்தது. அவன் பலமும் சுறுசுறுப்பும் சிற்றின்பத் தன்மையுள்ளவனுமாயிருந்ததற்கு அது குறிப்பாயிருக்கிறது.

"ஏசா" என்பதற்கு "ரோமமுள்ளவன்" என்றர்த்தம்.

**26. ஏசாவின் குதிங்காலைப் பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்."** இரட்டைப்பிள்ளைகள் கெர்ப்பத்திலிருக்கில் மூத்தபிள்ளை வெளிப்பட்ட பின்பு இரண்டாம் பிள்ளை வெளியேறச் சாதாரணமாய் ஒருமணிநேரமாவது செல்லும்; இங்கே இளையவனாகிய யாக்கோபு தன் தமையன்காலைப் பிடித்துக்கொண்டு காலதாமதமின்றி தமையனைக் கீழேவிழத் தட்டி முன்னுக்கு நடக்கிறவன் பாவனையாக வெளியேறினான்.

**"யாக்கோபு என்று பேரிட்டார்கள்."** யாக்கோபு என்பதற்கு "குதிங்காலைப் பிடிக்கிறவன் அல்லது வஞ்சகன்" என்றர்த்தம். அந்தப் பெயருக்கு முதலாவதாக இழிவான அர்த்த வியாக்கியானஞ்செய்தது ஏசா என்பவனே. (ஆதி. 27: 36.)

**27. "பிள்ளைகள் பெரியவர்களானபோது."** பிள்ளைகள் வயது செல்லச்செல்ல அவர்கள் குணங்களும் அதோடே வெளியாகிப் பலப்பட்டுக்கொண்டது. ஏசா வேட்டைப்பிரியனாயிருந்து சன்சஞ்சாரத்தைவிட வனசஞ்சார

28 இருந்தான்.—ஏசா வேட்டையாடிக்கொண்டுவருகிறது
¹ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமாயிருந்ததினாலே
ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்; ரெபெக்காளோ
29 யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள்.—ஒருநாள்
ஏசா வெளியிலிருந்து களைத்து வந்தபோது, யாக்கோபு
30 கூழ் சமைத்துக்கொண்டிருந்தான். — அப்பொழுது
ஏசா யாக்கோபை நோக்கி: அந்தச் சிவப்பான
கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா, இளைத்திருக்
கிறேன் என்றான்; இதனாலே அவனுக்கு ஏதோம்

[1] ஆதி. 27. 6, 19.

ரத்தை விரும்பினான். யாக்கோபோ நேர்மையும் நற்குணசாலியுமாயிருந்து சனசஞ்சாரத்தை விரும்பி, மேய்ப்பனின் தொழிலைச் செய்து கூடாரவாசியாயிருந்தான்.

**28. "ஈசாக்கு.........ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்."** ஈசாக்கு அமைதலான சுபாவமுள்ளவனாயிருந்தான். தன் மகன் ஏசா மிக தைரியசாலியாயும் அஞ்சா வீரத்துவமுடையவனாயும் இருந்தது அவனுக்கு வெகு பிரியம். அதோடே ஈசாக்கு சுயநயமுள்ளவனாய் வேட்டை இறைச்சியினால் இழுப்புண்டு ஏசாவின்மேல் பாசமுங்கொண்டான். இதற்காகத் தண்டனையும் நேரிட்டது. ரெபெக்காள் நற்குணசாலியும் வீட்டுக்கு உதவியுமாயிருந்த யாக்கோபின்பேரில் பட்சமாயிருந்தாள். அவளுடைய அன்பு உன்னதமான கோட்பாட்டுக்கு விபரீதமான போக்காயிருந்ததால் தானும் தான் நேசித்த மகனும் நீதி கிரியைக்கு விரோதமாய்ப் பாவஞ் செய்யும்படி பண்ணிற்று. அதற்காக அவர்கள் இருவரும் சோதனைகளுக்கும் துக்கங்களுக்கும் உள்ளானார்கள்.

**30. "அந்தச் சிவப்பான கூழிலே நான் சாப்பிடக் கொஞ்சம் தா."** ஏசா, யாக்கோபு என்பவர்கள் வெவ்வேறான தொழிலை நடப்பித்தது ஏசாவின் வாழ்வுக்குப் பிரதிகூலமாயிருந்தது. ஒருநாள் அவன் வேட்டையாடி இளைத்தவனாய் வீட்டுக்கு வந்தபோது, யாக்கோபு கூழ்சமைத்துக்கொண்டிருந்ததைக் கண்டு அதில் கொஞ்சத்தைத் தனக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டான். யாக்கோபு தமையனுடைய அவாவைக் கண்டு, ஏசா தன் சேஷ்டபுத்திர பாகத்தை அவனுக்கு விற்றுப்போடும்படியாகக் கேட்டான். ஏசா பசியினால் தான் சாகப்போகிறதாக எண்ணி தன் ஜீவனைப் பிழைப்பூட்டும்படி வைதீக லௌகிகவிஷயத்தில் தனக்குரித்தான நன்மைகளை அவனுக்கு அன்றைக்கு உடனே விற்றுப்போட்டான்.

**"ஏதோம்."** காரணத்தினால் அடிக்கடி பேர் கொடுக்கப்படுவதுண்டு. ஏசா இயற்கையாய்ச் சிவந்தமேனி யுள்ளவனாயிருந்தாலும் சிவப்பான கூழின் பேரில் பிரியப்பட்டதால் "சிவப்பன்" என்றர்த்தங்கொள்ளும் ஏதோம் என்கிறபேரால் அவன் சாதாரணமாய் அழைக்கப்பட்டான்.





என்கிற பேர் உண்டாயிற்று. — அப்பொழுது யாக்
கோபு: உன் சேஷ்ட புத்திரபாகத்தை இன்று எனக்கு
32 விற்றுப்போடு என்றான். — அதற்கு ஏசா: இதோ,
¹நான் சாகப்போகிறேனே, இந்தச் சேஷ்ட புத்திர
33 பாகம் எனக்கு என்னத்திற்கு என்றான். — அப்
பொழுது யாக்கோபு: இன்று எனக்கு ஆணையிட்டுக்
கொடு என்றான்; அவன் யாக்கோபுக்கு ஆணையிட்டு,
தன் ²சேஷ்ட புத்திரபாகத்தை அவனுக்கு விற்றுப்
34 போட்டான். — அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு
அப்பத்தையும் பயற்றங்கூழையும் கொடுத்தான்;
³அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போய்விட்
டான். இப்படி ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை
அலட்சியம்பண்ணினான்.

[1] யோபு. 21 15. மல. 3. 14.
[2] எபி. 12. 16.
[3] ஏசா. 12. 13. 1 கொ. 15. 32.

**31. "சேஷ்டபுத்திர பாகம்."** பூர்வீகத்தில் மூத்தகுமாரனுக்குக் குடும்பத்திலே கண்ணியமிருந்தது. ஒரு குடும்பத்தார் பெருகிக் கோத்திரத்தாராகும்போது குடும்பப்பிதா அவர்களுக்குத் தலைவனாயிருப்பான். மேலும் அவன் அவர்களுக்குள் ஆசாரிய ஊழியத்தையும் செய்துவருவான். பிதாவின் ஆசீர்வாதமும் மூத்தவனுக்குக் கொடுக்கப்படும். ஆபிரகாமுடைய வம்சத்தில் வாக்குத்தத்தங்களையுடைய ஆவிக்குரிய விசேஷித்த சலாக்கியங்கள் மூத்தவனைச் சேர்ந்ததாயிருந்தது. சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமென்றால், இந்த சேஷ்டபுத்திர பாகத்தில் மூன்று விசேஷித்த சிலாக்கியங்கள் அடங்கியிருக்கின்றன. அவையாவன:—

(i) **சுதந்தரம்.** (மூன்றில் இருபங்கு. உபா. 21: 17. ரோ. 8: 17.)
(ii) **ஆசீர்வாதம்.** (ஆதி. 48: 17, 18.)
(iii) **வாக்குத்தத்தம்.** (ஆதி. 3: 15; 12: 3. ரோ. 9: 13.)

இந்த நன்மைகளையெல்லாம் ஏசா அற்பமாக எண்ணினான். அடுத்த அதிகாரத் துவக்கத்திலிருந்து சொல்லப்பட்டிருக்கிற பஞ்சமானது ஈசாக்கின் வீட்டிலும் வருத்தத்தை உண்டுபண்ணியிருக்கலாம். ஏசா வனத்திலிருந்து வீட்டுக்கு வந்தபோது போசனம் ஆயத்தமாயிராததைக் கண்டு யாக்கோபின் கூழை இச்சித்து, மேற்சொல்லிய சலாக்கியங்களையெல்லாம், லேசாக எண்ணி, தன் சேஷ்டபுத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்றுப்போட்டான். இவ்விரண்டுபேருடைய குணகுணங்களுக்கு ஏற்றபடி இந்தச் சம்பவங்களும் நடந்திருக்கின்றன. ஏசா வனசஞ்சாரியும் அஞ்சாவீரத்துவமுள்ளவனுமாய்த் தன் காலத்தைக் கழித்துவந்தான். ஆனால் அவன் அந்தியநாட்களில் பழிவாங்கும் குணத்தை வெறுத்து யாக்கோபோடே சமாதானமாயிருந்தான். அவன் பிள்ளைகள் வாக்குத்தத்தமான சுதந்தரத்துக்கு அப்புறம்பட்டவர்களானார்கள். யாக்கோபு தன் சகோதரனுக்குப் பயந்து ஓடிப்போன இடத்தில் அதிகமாய் வஞ்சிக்கப்பட்டு, தான் அடைந்த பாடுகளினால் போதனைகளைக் கற்றுக்கொண்டு,

# 26. அதிகாரம்.

1. ஈசாக்கு பஞ்சத்தினிமித்தம் கேராருக்குப் போனது. 2. தேவன் அவனைப் போதித்து ஆசீர்வதித்தது. 7. அவன் தன் மனைவியைக்குறித்துச் சொன்ன அபத்தத்தினிமித்தம் அபிமெலேக்கினால் கடிந்துகொள்ளப்பட்டது. 12. அவன் ஐசுவரியவானானது. 18. அவன் மூன்று கிணறுகளை வெட்டினது. 26. பெயர்செபாவில் அபிமெலேக்கு அவனோடே உடன்படிக்கைபண்ணினது. 34. ஏசாவின் மனைவிகளைக்குறித்துச் சொல்லியது.

1 ஆபிரகாமின் நாட்களில் உண்டான பஞ்சத்தை
அல்லாமல், பின்னும் ஒரு [1]பஞ்சம் தேசத்தில் உண்டா
யிற்று; அப்பொழுது ஈசாக்கு பெலிஸ்தருக்கு ராஜா

[1] ஆதி. 12. 10.

உலக சிந்தையை முழுவதுமாய் வெறுத்துத்தள்ளி முதிர்வயதில் தேவனைப் பற்றிய நம்பிக்கையிலும் விசுவாசத்திலும் வல்லவனாகி, சுத்திகரிக்கப்பட்டவனுப் பிரபு என்று அர்த்தங்கொள்ளும் இஸ்ரவேலானான்.

## படிப்பினை.

### வச. 1—18.

(1) தேவன் [illegible]மாய் விசுவாசத்தைப் பரீட்சிக்கிறவர் என்பதை அநேக திருஷ்டாந்தங்களினாலே அறியலாம்.

(2) தேவனுடைய பிள்ளைகள் விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாயிருப்பதைக் கர்த்தர் காண்கையில் அவர்கள் எதிர்நோக்கியிருந்ததற்கும் அதிகமான ஆசீர்வாதங்களை அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்கிறார்.

(3) குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது. முடிவிலே அது விளங்கும். அது பொய்சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய்வரும்; அது தாமதிப்பதில்லை. (ஆப. 2: 3.)

(4) நாம் இவ்வுலகில் எவ்வளவுகாலம் தங்கினாலும் கடைசியாக அதை விட்டுப் போகவேண்டியவர்களாயிருப்பதால், மற்றவர்களுக்குப் பிரயோஜனமுண்டாக ஜீவனம்பண்ணி நமது குடும்பத்துக்குத் தேவாசீர்வாதத்தைப் பின்வைக்கும்படி முயற்சிசெய்வோமாக.

(5) இவ்வுலக நன்மைகளின்பேரில்மாத்திரம் ஆசைவைத்து மேலான இன்பத்தை இழந்துவிடாதபடி எச்சரிக்கையாயிருப்பது நமது கடமை.

### வச. 19—34.

(6) வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஆசீர்வாதம் வரப் பிந்தினால் அதற்காகச் ஜெபம்பண்ணக்கடவோம். கேட்கிறவனுக்குக் கொடுக்கப்படும். சந்தேகங்கள் பயங்கரங்கள் நேரிடுகையில் ஜெபத்தின்மூலமாய்க் கர்த்தரிடத்தில் உதவியைக் கேட்போமாக.

(7) மனுபுத்திரரில் முதற்தரமானவர்களிடத்திலும் பக்தியுள்ள தாய்தந்தைகளிடத்திலும் பிள்ளைகளைப்பற்றியவிஷயத்தில் பட்சபாதம் காணலாம். தேவனால் அன்புகூரப்பட்ட பிள்ளைகள் பெற்றோரால் மதிக்கப்படவேண்டியது நியாயமே.

(8) வயிற்றையே நோக்கி, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை இழந்துவிடுகிறது பெரிய பாவம்.

## 26. அதிகாரம்.

**1. "ஈசாக்கு.....கோராருக்குப் போனான்."** பஞ்சத்தில் பிழைக்க ஈசாக்கு எகிப்துக்குப் போகவேண்டுமென்றிருந்தான். ஆனால் அவன் கானா





வாகிய அபிமெலேக்கினிடத்தில் கேராருக்குப் போ
னான்.
2 கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி: நீ எகிப்துக்குப்
போகாமல், நான் [1]உனக்குச் சொல்லும் தேசத்திலே
3 குடியிரு.—இந்தத் [2]தேசத்திலே வாசம்பண்ணு; நான்
உன்னோடேகூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்;
நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள்
யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு
4 நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன்.—ஆபிர
காம் என் சொல்லுக்குக் [3]கீழ்ப்படிந்து, என் விதிகளை
யும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என்
5 பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால்,—நான்
[4]உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போ
லப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்
கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியி
லுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்.

[1] ஆதி. 12. 1.
[2] ஆதி. 20. 1; 22. 16. எபி. 11. 9.
[3] ஆதி. 22. 18.
[4] ஆதி. 15. 5.

னிலே குடியிருக்கும்படி தேவ உத்தரவு பெற்று, பெலிஸ்தியர் நாட்டில் பஞ்சம் இல்லாதவாயிருந்ததால் அவர்களுடைய பிரதான நகரியாகிய கேராருக்குப் போனான். அது தற்காலத்தில் கெர்பட்-எல்-கேரார் என்றழைக்கப்படுகிறது.

"அபிமெலேக்கு." இந்த அபிமெலேக்கு ஆபிரகாமின் காலத்திலிருந்தவனோ அல்லவோ என்பதைக்குறித்துச் சமுசயமிருக்கிறது. இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள் இருபதாம் அதிகாரத்தில் காட்டப்பட்டிருப்பவைகளுக்கு எண்பது வருஷங்களுக்குப் பிந்தி நடந்தன. அக்காலத்திலே ஜனங்கள் 180 வருஷம் உயிரோடே இருந்ததால் ஒருவேளை ஆபிரகாம் காலத்திலிருந்த அபிமெலேக்கே ஈசாக்கின் காலத்திலும் இருந்திருக்கலாம். இரண்டு இடத்திலும் சொல்லப்பட்டிருக்கிற இராசாவின் குணம் மிகவும் ஒத்திருக்கிறது. சிலர் இந்த அபிமெலேக்கு ஆபிரகாம் காலத்திலுள்ளவனல்ல. அவன் மகனாவது பேரனாவது இருக்கலாம் என்பார்கள் (ஆதி. 20: 2. வியாக்கியானம் பார்க்க.)

**2. "கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி."** அறுபது வருஷங்களுக்கு முன்னே கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனம் அருளியிருந்தார். (22. ஆதி.) இப்போது ஈசாக்குக்கு மறுபடியும் தமது சித்தத்தை வெளிப்படுத்தினார். இதற்குப்பின்பு அவர் இன்னொருதரம் அவனுக்குத் தரிசனமானார். (24. வச.) கர்த்தர் ஆபிரகாமுக்குத்தவிர முற்பிதாக்களுக்கு வேளாவேளைகளில் மாத்திரம் அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தும்பொருட்டு வெளிப்படுத்தலை அருளியிருக்கிறார்.

**3. "இந்தத் தேசங்கள்."** கானான் தேசத்தையும் அதைச் சூழ்ந்த தேசங்களையும் குறிக்கும்.

6,7 ஈசாக்கு கேராரிலே குடியிருந்தான்.—அவ்விடத்து
மனிதர்கள் அவன் மனைவியைக்குறித்து விசாரித்த
போது: [1]இவள் என் சகோதரி என்றான். ரெபெக்
காள் பார்வைக்கு அழகுள்ளவளானபடியால், அவ்வி
டத்து மனிதர்கள் அவள்நிமித்தம் தன்னைக் கொல்லு
வார்கள் என்று எண்ணி, அவளைத் தன் மனைவி என்று
8 சொல்லப் பயந்தான்.—அவன் அங்கே நெடுநாள்
தங்கியிருக்கையில், பெலிஸ்தருக்கு ராஜாவாகிய அபி
மெலேக்கு ஜன்னல் வழியாய்ப் பார்க்கும்போது,
ஈசாக்குதன் மனைவியாகிய ரெபெக்காளோடே விளை
9 யாடிக்கொண்டிருக்கிறதைக் கண்டான்.—அபிமெ
லேக்கு ஈசாக்கை அழைத்து: அவள் உன் மனைவியா
யிருக்கிறாளே! பின்னை ஏன் அவளை உன் சகோதரி
என்று சொன்னாய் என்றான். அதற்கு ஈசாக்கு:
அவள்நிமித்தம் நான் சாகாதபடிக்கு, இப்படிச் சொன்
10 னேன் என்றான்.—அதற்கு அபிமெலேக்கு: எங்களி
டத்தில் ஏன் இப்படிச் செய்தாய்? ஜனங்களுக்குள்
யாராகிலும் உன் மனைவியோடே சயனிக்கவும், எங்
கள்மேல் [2]பழி சுமரவும் நீ இடமுண்டாக்கிறாயே என்
11 றான்.—பின்பு, அபிமெலேக்கு: இந்தப் புருஷனையா
கிலும் இவன் [3]மனைவியையாகிலும் தொடுகிறவன் நிச்
சயமாய்க் கொலைசெய்யப்படுவான் என்று எல்லா
ஜனங்களும் அறியச் சொன்னான்.

12 ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதைவிதைத்தான்; கர்த்
தர் அவனை ஆசீர்வதித்ததினால் [4]அந்த வருஷத்தில் நூறு

[1] ஆதி. 12. 13: 20. 2, 3: 24. 16. நீதி. 29. 25.
[2] ஆதி. 20. 9.
[3] சங். 105. 15. நீதி. 6. 29.
[4] மத். 13. 8.

7. "இவள் என் சகோதரி." ஆபிரகாமின் பாவத்தில் ஈசாக்கும் விழுந்தான். ஆபிரகாமின் விஷயத்தில், சாராள் அபிமெலேக்கின் அந்தப்புரத்துக்குக் கொண்டுபோகப்பட்டாள். ஆனால் அவளுக்கு யாதொரு பொல்லாப்பும் நேரிடாதபடி கர்த்தர் அவளைக் காப்பாற்றினார். இங்கே ஈசாக்கிடத்தில் அந்த இடத்து மனுஷர் அவன் மனைவியைக்குறித்து விசாரிக்கமாத்திரம் செய்தார்கள். ரெபெக்காளைத் தொடும்படியான எண்ணம் அபிமெலேக்கினிடத்தில் இருந்ததாகத் தோன்றுகிறதில்லை. (10. வச.) நெடுநாளுக்குப்பின்பு இராசா தற்செயலாய் ரெபெக்காள் ஈசாக்கின் மனைவியென்று கண்டுபிடித்து, ஈசாக்கைக் கடிந்துகொண்டான். சாராளுக்குக் கொடுக்கப்பட்டதுபோல ரெபெக்காளுக்குப் பரிசு கொடுக்கப்படவில்லை.

12. "ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்." ஆபிரகாம் (ஆதி. 21: 33.) பெயெர்செபாவில் ஒரு தோப்பை உண்டாக்கினான். ஈசாக்கு இப்போது நிலத்தைச் சாகுபடி செய்தான். பஞ்சம் அவனை இந்த வேலையைச் செய்யும்படி நெருக்கினது. கர்த்தர் அவன் விவசாயத்தொழிலை ஆசீர்





13 மடங்கு பலன் அடைந்தான்;—அவன் [1]ஐசுவரியவா
னாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனா
14 னான்.—அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும்,
அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெ
15 லிஸ்தர் அவன் பேரில் [2]பொறாமைகொண்டு,—அவன்
தகப்பனாகிய [3]ஆபிரகாமின் நாட்களில் அவனுடைய
வேலைக்காரர் வெட்டின துரவுகளையெல்லாம் தூர்த்து
16 மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்.—அபிமெ
லேக்கு ஈசாக்கை நோக்கி: நீ எங்களை விட்டுப் போய்
விடு; [4]எங்களைப்பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாய்
என்றான்.

17 அப்பொழுது ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்
பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம்போட்டு,
18 அங்கே குடியிருந்து,—தன் தகப்பனாகிய ஆபிரகா
மின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்
தபின் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டவைகளுமான

[1] ஆதி. 21. 35. சங். 22. 3. நீதி. 10. 22.
[2] ஆதி. 37. 11. பிர. 4. 4.
[3] ஆதி. 21. 30.
[4] யாத். 1. 9.

வதித்தார். நம்முடைய இரட்சகர் கானான்தேசத்தில் நூறுமேனியை மேற்கரமென்று சொல்லியிருக்கிறார். (மத். 13: 8.)

13. "விருத்தியடைந்தான்." ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட உலக ஆசீர்வாதங்கள், விசுவாசமார்க்கத்தில் அவன் அடிச்சுவடுகளில் நடந்த அவன் குமாரன் ஈசாக்குக்கும் அருளப்பட்டது.

15. "துரவுகளை." ஈசாக்கு ஐசுவரியத்தில் பெருகிவந்ததைப் பெலிஸ்தியர் கண்டு பொறாமையினால் நிறைந்து, அவனைத் துரத்திவிடும் நோக்கமாய் அவன் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் கிடையாதபடிக்கு உபாயஞ் செய்தார்கள். அதென்னவென்றால் ஆபிரகாம் வெட்டினவைகளும் அவனுக்குப் பாத்தியமானவைகளும் அபிமெலேக்கினால் ஆணையினாலே ஆபிரகாமுக்கு உறுதிப்பட்டவைகளுமான துரவுகளை அவர்கள் தூர்த்துப்போட்டதே. அதோடே ஈசாக்குப் பட்டணத்தைவிட்டுப் போகும்படி இராசகட்டளையும் பிறந்தது. அதற்கு அவன் உடனே கீழ்ப்படிந்து கேராரைவிட்டு நீங்கினான்.

17. "கேராரின் பள்ளத்தாக்கு." இது பெயெர்செபாவுக்குத் தெற்கேயிருந்தது. அந்தப் பள்ளத்தாக்கில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டித் தண்ணீரைக் கண்டார்கள். அப்போது அவன் சமாதானமாய்க் குடியிருக்கலாம் என்று எண்ணினான். ஆனால் அங்கே வாக்குவாதங்கள் உண்டாயின.

துரவுகளை மறுபடியும் தோண்டி, [1]தன் தகப்பன் அவை ¹ ஆதி. 21. 31.
களுக்கு இட்டிருந்தபேர்களின்படியே அவைகளுக்
குப் பேரிட்டான்.
19 ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே
வெட்டி, அங்கே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள்.—
20 கேராரூர் மேய்ப்பர் [2]இந்தத் தண்ணீர் தங்களுடையது ² ஆதி. 21. 15.
என்று சொல்லி, ஈசாக்குடைய மேய்ப்பருடனே வாக்
குவாதம் பண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே வாக்
குவாதம் பண்ணினபடியால், அந்தத் துரவுக்கு ஏசே
21 க்கு என்று பேரிட்டான். — வேறொரு துரவை வெட்
டினார்கள்; அதைக்குறித்தும் வாக்குவாதம்பண்ணி
னார்கள்; ஆகையால் அதற்கு சித்னா என்று பேரிட்
டான்.
22 பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்துபோய், வேறொரு
துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்
குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன்: நாம்
தேசத்தில் [3]பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் ³ ஆதி. 17. 6; 28. 3.
நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி, அதற்கு
ரெகொபோத் என்று பேரிட்டான்.
23 அங்கேயிருந்து பெயர்செபாவுக்குப் போனான்.—

**18—22.** “துரவுகளை மறுபடியும் தோண்டி.” ஈசாக்கின் சுறுசுறுப்பு மறுபடியும் பெலிஸ்தியருக்கு மனவெறுப்பை உண்டுபண்ணினது. அவன் ஒரு துரவை வெட்டினபோது, அது தங்களுடையதென்று வாக்குவாதஞ் செய்தார்கள். அதால் அந்தத் துரவுக்கு ஏசேக்கு என்று பேரிட்டான். ஏசேக்கு என்பதற்கு “வாக்குவாதம்” என்றர்த்தம். அவன் வெட்டின இன்னொரு துரவுக்காகவும் விவாதம் நேரிட்டபோது அதற்குச் சித்னா என்று பேர் தரித்தான். சித்னா என்பதற்குப் “பகை” என்றர்த்தம். அப்புறம் ஈசாக்கு இடம் பெயர்ந்து கேராருக்கு நாற்பதுமைல் தூரத்துக்கப்பால் போய் வேறொரு துரவை வெட்டினான். அதைப்பற்றி வியாச்சியம் நேரிடாததால் அதற்கு ரெகொபோத்து என்ற நாமத்தைக் கொடுத்தான். ரெகொபோத்து என்பதற்கு “விஸ்தாரமான வெளிகள்” என்றர்த்தம். ரெகொபோத்து என்ற ஒரு பட்டணமும் இருந்ததாக வாசிக்கிறோம். (ஆதி. 10: 11.)

**23.** “அங்கேயிருந்து பெயர்செபாவுக்குப் போனான்.” பெலிஸ்தியரின் குரோதத்திற்குத் தப்பும்படியாகப் போயிருந்த இடத்தைவிட்டு, ஈசாக்கு இப்போது பெயர்செபாவுக்குப் போனான். அது கேராருக்கு வெகு சமீபமாயிருந்தது. அவன் அங்கே வந்த இரவில் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி அவன் பயமில்லாமல் அங்கே தங்கும்படி அவனைப் பலப்படுத்தி ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களை அவனுக்கு உறுதிப்படுத்தினார்.





24 அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசன
மாகி: [1]நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய தே ¹ ஆதி. 17. 7; 24. 12; 15. 1. யாத். 3. 6. அப். 7. 32.
வன், பயப்படாதே, நான் உன்னோடேகூட இருந்து,
என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை
ஆசீர்வதித்து, உன் சந்ததியைப் பெருகப்பண்ணு
25 வேன் என்றார். — அங்கே அவன் [2]ஒரு பலிபீடத் ² ஆதி. 12. 7; 13. 18.
தைக் கட்டி, [3]கர்த்தருடைய நாமத்தைத் தொழுது ³ சங். 116. 17.
கொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போட்டான்.
அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை
வெட்டினார்கள்.
26 அபிமெலேக்கும் அவன் சிநேகிதனாகிய அகுசாத்
தும் அவன் சேனாபதியாகிய [4]பிகோலும், கோரிலி ⁴ ஆதி. 21. 22.

**24.** “என் ஊழியக்காரனாகிய ஆபிரகாம்.” இது விசேஷித்த கனமான பட்டம். அது மோசேக்கும் யோசுவாவுக்கும் (யோசு. 24: 29.), இஸ்ரவேலுக்கும் (ஏசா. 41: 8.), மேசியாவுக்கும் (ஏசா. 52: 13.) கொடுக்கப்பட்டிருக்கிறது.

**25.** “ஒரு பலிபீடத்தைக் கட்டி.” கர்த்தர் ஈசாக்குக்குத் தம்முடைய வாக்குத்தத்தங்களை உறுதிப்படுத்தினபோது, ஆபிரகாம் ஏற்படுத்தின தெய்வீக வணக்கத்தை (ஆதி. 21: 33.) அவன் திரும்பவும் ஸ்தாபித்தான்.

“ஒரு துரவை வெட்டினார்கள்.” வெட்டினார்கள் என்பதற்குரிய மூலவார்த்தை இந்த இடத்தில் வேறே பதமாக வருகிறது. அதற்குத் திரும்பத் தோண்டினார்கள் என்றர்த்தம்.

**26.** “அபிமெலேக்கு..........அவனிடத்துக்கு வந்தான்.” ஈசாக்கு பெயர்செபாவுக்குப் போனது, அபிமெலேக்குக்குப் பாரமான கவலையை உண்டுபண்ணினது. பெலிஸ்தியர் அந்நிய இடத்திலிருந்து கானானுக்கு வந்தவர்கள். ஈசாக்கும் இஸ்மவேலும் மற்றும் சேமின் புத்திரரும் ஒன்றுசேர்ந்தால் பெலிஸ்தியரைத் தேசத்தைவிட்டுத் துரத்திவிடக்கூடும். ஆபிரகாம் எமோரியருடன் பொருத்தமாயும் ஏத்தியரோடே சிநேகபந்தமாயுமிருந்தான். இவ்விரண்டு பலத்த ஜாதியாரும் அவன் குமாரனுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயும் இருப்பார்கள். ஈசாக்கு பெயர்செபாவுக்கு வந்த நோக்கத்தை அபிமெலேக்கு அறியக்கூடாமையாயிருந்ததால், அவன் வினயமாய் முன்னாளில் ஆபிரகாமுக்கும் கேரார் பட்டணத்தாருக்கும் உண்டான உடன்படிக்கையை ஈசாக்கோடே புதுப்பிக்கும்படியாக வந்தான்.

“அகுசாத்து.” அபிமெலேக்கினுடைய அந்தரங்க சிநேகிதனும் இரகசிய ஆலோசனைக்காரனுமிருந்தான்.

“பிகோல்.” ஆதி. 21: 22. வியாக்கியானம் பார்க்க.

27 ருந்து அவனிடத்துக்கு வந்தார்கள்.— அப்பொழுது
ஈசாக்கு அவர்களை நோக்கி: ஏன் என்னிடத்தில வந்
தீர்கள்? நீங்கள் [1]என்னைப் பகைத்து, என்னை உங்க [1] நியா. 11. 7.
ளிடத்தில் இராதபடிக்குத் துரத்திவிட்டீர்களே என்
28 றான்.—அதற்கு அவர்கள்: நிச்சயமாய் [2]கர்த்தர் உம் [2] ஆதி. 21. 22, 23.
மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகை
யால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு
உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம்பண்ணி
29 னோம்.—நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையை
யே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே
அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குத் தீங்கு
செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்
ணிக்கொள்ள வந்தோம்; நீர் கர்த்தரால் [3]ஆசீர்வதிக்கப் [3] ஆதி. 24 31. சங் 115. 15.
30 பட்டவராமே என்றார்கள்.—அவன் [4]அவர்களுக்கு [4] ஆதி. 19. 3: 31. 54.
விருந்துபண்ணினான், அவர்கள் புசித்துக் குடித்தார்
31 கள்.—அதிகாலையில் எழுந்து ஒருவருக்கொருவர்
[5]ஆணையிட்டுக்கொண்டார்கள். பின்பு ஈசாக்கு அவர் [5] ஆதி. 21. 31.
களை அனுப்பிவிட்டான்; அவர்கள் அவனிடத்தி
லிருந்து சமாதானத்தோடே போய்விட்டார்கள்.

**27.** "ஏன் என்னிடத்தில் வந்தீர்கள்." ஈசாக்குப் பெயெர்செபாவுக்கு வந்தது ஒரு ஏற்ற தருவாயாயிருந்தது. இராசன் இப்போது ஈசாக்கோடே யுத்தஞ் செய்யவாவது சமாதானம் பண்ணவாவது ஏதுகரமாயிருந்தது.

**28.** "ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும்." ஆணை என்ற பதம் உள்ளபடி சாபம் என அர்த்தங் கொள்ளும். உடம்படிக்கையின் சங்கேதங்களை மீறுகிற பட்சத்தாரின்பேரில் சாபம் இறங்குவதாக என்பதே அதின் கருத்து.

**29.** "உடன்படிக்கை பண்ணிக்கொள்ள." ஆதி. 15: 10, 18. வியாக்கியானம் பார்க்க.

"கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்." அபிமெலேக்கு தன் தேவனுடைய நாமத்தைச் சொல்லாமல் யெகோவாவின் நாமத்தை இங்கே எடுத்துச் சொல்லுகிறான். ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களோடே அவன் பழகினதால் மெய்த்தேவனைப்பற்றிய அறிவை அவர்களிடத்தில் கற்றிருக்கலாம் என்று எண்ணத்தக்கதாயிருக்கிறது.





32 அந்நாளில்தானே ஈசாக்கின் வேலைக்காரர் வந்து,
தாங்கள் துரவு வெட்டின செய்தியை அவனுக்கு அறி
33 வித்து, தண்ணீர் கண்டோம் என்றார்கள்.—அதற்கு
சேபா என்று பேரிட்டான்; ஆகையால் அந்த ஊரின்
பேர் இந்நாள்வரைக்கும் பெயெர்செபா என்னப்படு
கிறது.
34 ஏசா [1]நாற்பது வயதானபோது, ஏத்தியனான பெ [1] ஆதி. 36. 2.
யேரியினுடைய குமாரத்தியாகிய யூதீத்தையும், ஏத்தி

**32.** "தண்ணீர் கண்டோம்." பெயெர்செபாவில் இப்போது இரண்டு கிணறுகள் இருப்பதால் திரும்பத் தோண்டப்பட்ட ஆபிரகாமின் துரவையோ ஈசாக்கு வெட்டின புதுத்துரவையோ எதைக் குறிக்கும் என்பது சந்தேகமாயிருக்கிறது.

**33.** "சேபா." இந்த வார்த்தை மூலத்தில் சற்று வித்தியாசமாய் வருகிறது. அதற்கு "ஏழு" என்றர்த்தம். (ஆதி. 21: 28. பார்க்க.)

"இந்நாள்வரைக்கும்." இது எஸ்றாவால் கூட்டப்பட்டிருக்கலாம்.

"பெயெர்செபா." இந்தப் பெயரை ஆபிரகாம் இட்டதாக (ஆதி. 21: 28–31.) வாசிக்கிறோம். ஆபிரகாம் அங்கே வெட்டின துரவு ஆணையினால் அவனுக்கு உறுதிபண்ணப்பட்டது. அது பின்பு பெலிஸ்தியரால் மூடப்பட்டுப் போயிற்று. ஈசாக்கின் வேலைக்காரர், அபிமெலேக்கு உடன்படிக்கை செய்துகொண்டபின்பு அதில் தண்ணீர் கண்டிருக்கலாம். முன் நடந்த காரியங்களெல்லாம் ஈசாக்கின் ஞாபகத்துக்குத் திரும்பவரவே அவன் தன் தகப்பன் இட்ட பழைய பேரை அந்த இடத்துக்குத் தரிப்பித்தான். ஈசாக்கின் காலத்தில் அங்கே ஒரு பட்டணம் இருந்ததாகத் தோன்றவில்லை. யோசுவா கானானை ஜெயித்தபோது அந்தப் பெயரால் ஒரு பட்டணமிருந்தது. (யோசு. 15: 28).

**34.** "ஏசா நாற்பது வயதானபோது." ஈசாக்கு நாற்பது வயதில் விவாகம் பண்ணினான். அவனுக்கு இப்போது நூறுவயதாயிருந்தது. ஏசா கானானிய ஸ்திரீகளை விவாகஞ் செய்ததில் ஆபிரகாம் ஏற்படுத்தின சட்டத்தை மீறினவனானான் (ஆதி. 24: 3.). அவனுடைய நடத்தை அவன் தாய்தகப்பன்மார்களுக்கு மிகுந்த மனநோவைக் கொடுத்தது. பின்பு அவன் கானானிய ஸ்திரீகளை விவாகஞ் செய்ததற்காகத் துக்கப்பட்டு இஸ்மவேலின் குமாரத்தியை விவாகம் பண்ணினதாக வாசிக்கிறோம். (ஆதி. 28: 9.)

"பெயேரி" என்பதற்கு "கூவ சாஸ்திரி" என்றர்த்தமாம். தண்ணீர் இன்ன இடத்தில் உண்டு என்று கண்டுபிடிக்கும் முகாந்தரத்தால் இந்தப் பெயர் பிந்தியகாலத்தில் அவனுக்கு இடப்பட்டிருக்கலாம்.

"யூதீத்து." இது யூதா என்ற பேருக்குப் பெண்பால். அதின் அர்த்தம் "துதி."

யனுன ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்தை
35 யும் விவாகம்பண்ணினுன்.—அவர்கள் ஈசாக்குக்கும்
ரெபெக்காளுக்கும் [1]மனநோவாயிருந்தார்கள்.

[1] ஆதி. 27. 46. 28. 1, 8.

"ஏலோன்" என்பதற்குக் "கர்வாலிமரத் தோப்பு" என்றர்த்தம். இந்தப் பெயரால் ஒரு நியாயாதிபதியுமிருந்தான். (நியா. 12: 11.)

"பஸ்மாத்து." என்பதற்கு "பரிமளம்" என்றர்த்தம். சாலொமோனை குமாரத்திகளில் ஒருத்தி இந்தப் பெயரால் அழைக்கப்பட்டதுண்டு. (1 இரா. 4: 15.)

## படிப்பினை.

### வச. 1—11.

(1) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் அடிக்கடி நேரிட்ட பஞ்சம் முற்பிதாக்களுக்கு நல்ல போதனையைக் கற்றுக்கொடுத்தது. சிறந்த உத்தியோகங்கள் உயர்ந்த ஸ்திதிகளிலும் நமக்கு மனச்சங்கடங்கள் நேரிடலாம். கர்த்தருடைய ஆலோசனையின்படி நடக்கிறவர்கள் உலகத்திலும் சுகமாய் வாழலாம்.

(2) நீதியுள்ள கர்த்தர் நீதிநியாயங்களில் பிரியப்படுகிறார். அவர் விசுவாசமுள்ள தமது பிள்ளைகளுடைய கிரியைகளுக்குத் தக்க பலனை அருளுகிறவராயிருக்கிறார்.

(3) நல்லவர்களுடைய விசுவாசம் பரிசுத்தம் இவைகளைப் பின்பற்றுவதைவிட அவர்களுடைய பெலவீனங்களைப் பின்பற்றுவது மனிதருடைய குணமாயிருக்கிறது.

(4) நல்லவர்கள் நியக்காரியங்களில் விழுவதைப்பார்க்கையில், நீதியானது நியாயப்பிரமாணத்தினுலல்ல கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினுல் வருகிறது என்றறிய வேண்டும்.

(5) ஈசாக்குத் தவறினதற்காக அபிமெலேக்கு அவனைக் கடிந்துகொண்டு இமைக்கு நன்மை செய்தான். அவன் விபசாரப்படுக்கையை வெறுத்ததில், எத்தனை ஐசுவரியவான்களான பேர்களிதிஸ்தவர்களுக்கு நன்மாதிரியைக் காட்டியிருக்கிறுன்.

### வச. 12—35.

(6) தேவபுத்திரர் குற்றத்தில் அகப்படும்போது அவர்களை தேவன் கண்டிக்கிறவராயிருக்கிறார். ஆனாலும் அவர்கள் மனந்திரும்புகையில் அவர் அவர்களுக்கு மன்னிப்பை அருளி அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

(7) அவருடைய ஆசீர்வாதம் ஐசுவரியத்தை உண்டுபண்ணும். பூமியின் பலன் அவருடைய ஈவாயிருக்கிறது. ஐசுவரியம் பொதுப்பட பொருமை பகைமுதலிய குணங்களை வருவிக்கிறதாயிருக்கிறது.

(8) ஈசாக்குத் கூடாரவண்டையில் குடியிருக்க விரும்பினதுபோல நாமும் இரட்சண்ய ஊற்றண்டையிலே வாசம்பண்ணப் பிரியப்படுவோமாக.

(9) உன்னதத்திலிருந்துவரும் ஞானமானது வாக்குவாதங்களுக்கு விலகிக்கொள்ளும்படி நடத்தும்.

(10) நாம் அநியாயமாய் ஓரிடத்திலிருந்து துரத்தப்பட்டால் கர்த்தர் நமக்கு வேறே இடத்தை ஆயத்தம்பண்ணி, தமது அன்பினுல் நம்மை ஆறுதல் செய்கிறார். அப்போது நமது சத்துருக்களும் நம்மோடே சிநேகமாயிருக்கும்படி அநுக்கிரகஞ்செய்வார்.

(11) பிள்ளைகள் பெற்றோருக்கு மனநோவுண்டாக நடப்பதில் குற்றவாளிகளாகிறார்கள். அவிசுவாசிகளுடன் சம்பந்தம் கலப்பதிலே குடும்பத்திற்குச் சமாதானக்குறைவு நேரிடும்.





## 27. அதிகாரம்.

1. ஈசாக்கு ஏசாவை வேட்டைக்கு அனுப்பினது. 6. அந்தச் சமயத்தில் யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெறுக்கொள்ளும்படி ரெபெக்காள் அவனை ஏவினது. 15. யாக்கோபு தன்னை ஏசா என்று சொல்லி, ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டது. 30. ஏசா வேட்டையாடினதைச் சமைத்துக் கொண்டுவந்தது. 33. ஈசாக்கு கலங்கினது. 34. ஏசா மிகுந்த துக்கமடைந்து கெஞ்சி ஆசீர்வாதத்தைப் பெற்றது. 41. ஏசா யாக்கோபைப் பயமுறுத்தினது. 42. ரெபெக்காள் ஏசாவின் எத்தனத்தைத் தடுத்தது.

ஈசாக்கு முதிர்வயதானதினுல் அவன் [1]கண்கள்
இருளடைந்து பார்வையற்றுப்போனபோது, அவன்
தன் மூத்த குமாரனுகிய ஏசாவை அழைத்து, என்
மகனே என்றுன்; அவன், இதோ, இருக்கிறேன்
2 என்றுன்.—அப்பொழுது அவன்: நான் முதிர்வயதா
னேன், [2]என் மரணம் இன்ன நாளில என்று அறி
3 யேன்.—ஆகையால், நீ [3]உன் ஆயுதங்களாகிய உன்
அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்
கொண்டு வனத்துக்குப் போய், எனக்காக வேட்டை
4 யாடி,—அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள
பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான்
மரணமடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்
வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றுன்.—

[1] ஆதி. 48. 10. 1 சாமு. 3. 2.
[2] ஆதி. 27. 1. யாக். 4. 14.
[3] ஆதி. 48. 9; 49. 28. உபா. 33. 1.

## 27. அதிகாரம்.

1. "ஈசாக்கு முதிர்வயதானதினுல்." ஈசாக்கு இப்போது 117 வயதுள்ளவனுயிருந்தான். அவன் உயிரோடிருந்த வருஷங்கள் 180 (ஆதி. 35: 28.). இவ்விரண்டுக்கும் இடையில் 63 வருஷங்கள் இருந்தபோதிலும் தன் மரணநாள் சமீபித்திருக்கிறதாக எண்ணினுன். அவன்மாத்திரமல்ல அவன் மகன் ஏசாவும் அப்படியே எண்ணினுன் (41. வச.). இஸ்மவேல் 137 வயதில் மரித்ததால் தன்னுடைய மரணமும் சமீபித்திருக்கிறது என்று ஈசாக்கு இப்படி எண்ணங்கொண்டிருக்கலாம்.

4. "என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்க." ஆபிரகாமின் இரண்டு பிள்ளைகளுக்குள் வாக்குத்தத்தத்துக்குச் சுதந்தரன் இன்னுனென்று தீர்மானிக்கவேண்டியதாயிருந்ததுபோல ஈசாக்கின் மக்கள் இருவருக்குள்ளும் தீர்மானிக்கவேண்டியதாயிருந்தது. இஸ்மவேல் நீக்கப்பட்டது ஆபிரகாமுக்கு மிகுந்த துக்கமாயிருந்தபோதிலும் அவன் தேவசித்தத்துக்குக் கீழ்ப்படிதலைக் காட்டினுன். ஈசாக்கோ, மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று அறிந்தும் தேவசித்தத்துக்கு விரோதமாய்ப் போராடினவனுகக் காணப்பட்டான்.

5 ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில்,
ரெபெக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏசா வேட்
டையாடிக்கொண்டுவரும்படி வனத்துக்குப்போனான்.
6 அப்பொழுது ரெபெக்காள் தன் குமாரனாகிய யாக்
கோபை நோக்கி: உன் தகப்பன் உன் சகோதரனாகிய
7 ஏசாவை அழைத்து: — நான் புசித்து, எனக்கு மா
ணம் வருமுன்னே, கர்த்தரை முன்னிட்டு உன்னை
ஆசீர்வதிக்கும்படி, நீ எனக்காக வேட்டையாடி, அதை
எனக்கு ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக்
8 கொண்டுவா என்று சொல்லக்கேட்டேன். — ஆகை
யால், என் மகனே, [1]என் சொல்லைக் கேட்டு, நான் [1] 13. வசனம்.

ஏசா இஸ்மவேலைப்போல இவ்வுலகத்துக்குரியவைகளில் மனதைச் செலுத்துகிறவனாயிருந்தான். யாக்கோபு ஈசாக்கைப்போல சாந்தமும் அமைதலுமுள்ளவனும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கருதினவனும் விளங்கினான். மேலும் ஏசா ஒருவேளைப் போசனத்துக்காகத் தன் முதற்பிறப்புச் சுதந்தரத்தையும் விற்றுப்போட்டான்; அந்நிய ஸ்திரீகளையும் விவாகம் பண்ணியிருந்தான். இப்படியிருந்தும் தேவசித்தத்துக்கும் தீர்மானத்துக்கும் விகற்பமாய் ஈசாக்கு ருசிகரமான வேட்டை இறைச்சியின்பேரில் பிரியப்பட்டு ஏசாவை ஆசீர்வதிக்கக் கருதினான். அவனுடைய எண்ணம் விருத்தமாகும்படி ரெபெக்காள் தந்திரமான வகைப்பாடு செய்ய நேரிட்டது. அவள் அப்படிச் செய்யாமல் ஈசாக்கினிடத்தில் காரியங்களை எடுத்துக்காட்டி நியாயஞ் சொல்லவேண்டியதாயிருந்தது. அல்லவென்றால் கர்த்தர் ஈசாக்கை நேராய் நடத்தும்படி ஜெபஞ்செய்து பொறுமையோடே காத்திருக்கவேண்டியதாயிருந்தது.

**5. "ரெபெக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள்."** ஈசாக்கு ஏசாவுக்கு உத்தரவு கொடுத்தபோது ரெபெக்காள் கூடவே யிருந்திருக்கலாம். அல்லவென்றால் ஈசாக்கு தேசமுள்ள தன் மூத்தகுமாரனை ஆசீர்வதிக்கத் தீர்மானித்திருப்பதை அவளுக்குச் சொல்லியிருக்கலாம். மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்ற தீர்க்கதரிசனத்தை ஈசாக்கு மாற்றப்போவதாய் எண்ணி ரெபெக்காள் கலக்கமுள்ளவளானாள். அவள் விசுவாசம் சுத்தாங்கமுள்ளதாயிருந்தால் தன் உதவியின்றி தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றுவார் என்ற நிச்சயத்தோடே இருக்கலாம். ஆனால் எல்லாரும் ஆகாத நோக்கத்தோடே காரியங்களைச் செய்தார்கள். முதலில் தப்பிதம் ஈசாக்கில் ஆரம்பித்தது. அதை உபாயமாய்த் தடுப்பது சரியென ரெபெக்காள் நினைத்திருக்கலாம்.

**7. "கர்த்தரை முன்னிட்டு."** ஈசாக்கு உபயோகியாத வார்த்தைகளை ரெபெக்காள் உபயோகித்ததாகச் சிலர் அவள்பேரில் குற்றஞ் சாட்டுவார்கள். ஆனால் ஈசாக்கு ஏசாவோடே பேசினதெல்லாம் இங்கே சொல்லப்பட்டிருப்பதாக நாம் எண்ணலாகாது. மேலும் "கர்த்தரை முன்னிட்டு" என்ற வாசகம் ஏசாவுக்கு அருமையாயிருப்பதைவிட யாக்கோபுக்கு அருமையாயிருந்தது.





9 உனக்குக் கற்பிக்கிறபடி செய். — நீ ஆட்டுமந்தைக்
குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளைக்
கொண்டுவா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப்
பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைப்
பேன். — உன் தகப்பன் தாம் மரணமடையுமுன்னே
உன்னை ஆசீர்வதிக்கும்படி அவர் புசிப்பதற்கு நீ அதை
அவரிடத்தில் கொண்டுபோகவேண்டுமே என்றாள்.
11 அதற்கு யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளை
நோக்கி: — [1]என் சகோதரனாகிய ஏசா ரோமம் மிகுந்த [1] ஆதி. 25. 25.
12 வன், நான் ரோமமில்லாதவன். — ஒருவேளை என்
தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது
நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல்
[2]ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக் [2] ஆதி. 9.25. உபா. 27. 18.
13 கொள்வேனே என்றான். — அதற்கு அவன் தாய்: என்
மகனே, உன்மேல் வரும் சாபம் [3]என்மேல் வரட்டும்; [3] ஆதி. 43. 9. 1 சாமு. 25. 24. 2 சாமு. 14. 9. மத். 27. 25.
என் சொல்லைமாத்திரம் கேட்டு, நீ போய், அவைகளை
14 என்னிடத்தில் கொண்டுவா என்றாள். — அவன் போய்
அவைகளைப் பிடித்து, தன் தாயினிடத்தில் கொண்டு
வந்தான்; அவனுடைய தாய் அவன் தகப்பனுக்குப்
பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்
தாள்.

ஏசா உலகநன்மையை நாடித் தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற விரும்பினான். யாக்கோபோ கர்த்தருக்கும் ஆபிரகாமின் குடும்பத்துக்கும் இருந்த உடம்படிக்கையை முன்னிட்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பினான்.

**9. "இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளை."** இவைகள் ஒரு பெரிய மானுக்குச் சமமாயிருக்கலாம். ஈசாக்குப் போசனபானஞ் செய்தபின்பு, இப்படிப்பட்ட திவ்வியமான சமயத்தில் வீட்டாருக்குள்ளேயும் விருந்து கொண்டாடப்படும்.

**13. "சாபம் என்மேல் வரட்டும்."** ரெபெக்காள் யாக்கோபுக்கு மேலான சிறந்த ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதைத் திட்டமாய் அறிந்திருந்ததால் சாபம் போடப்படமாட்டாதென்பதை உறுதியாய் நம்பி யாக்கோபைத் தைரியப்படுத்தும்படி இப்படிச் சொன்னாள். யாக்கோபும் ரெபெக்காளும் தாங்கள் செய்தகாரியம் முடிவில் சரியாய் வந்துவிட்டதென்ற எண்ணத்தினாலே தாங்கள் நடப்பித்த ஆசாமியங்களைக்குறித்து எவ்வளவும் அப்போது உணர்ந்ததாகத் தோன்றவில்லை.

15 பின்பு, ரெபெக்காள் வீட்டிலே தன்னிடத்தில்
இருந்த தன் மூத்த மகனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்
களை எடுத்து, தன் இளைய மகனாகிய யாக்கோபுக்கு
16 உடுத்தி,— வெள்ளாட்டுக் குட்டிகளின் தோலை அவன்
கைகளிலேயும் ரோமமில்லாத அவன் கழுத்திலேயும்
17 போட்டு;— தான் சமைத்த ருசியுள்ள பதார்த்தங்க
ளையும் அப்பங்களையும் தன் குமாரனாகிய யாக்கோ
பின் கையிலே கொடுத்தாள்.

18 அவன் தன் தகப்பனிடத்தில் வந்து, என் தகப்ப
னே என்றான்; அதற்கு அவன்: இதோ, இருக்கிறேன்;
19 நீ யார், என் மகனே என்றான்.— அப்பொழுது யாக்
கோபு தன் தகப்பனை நோக்கி: [1]நான் உமது மூத்த மக
னாகிய ஏசா; நீர் எனக்குச் சொன்னபடியே செய்
தேன்; உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்
படி, நீர் எழுந்து உட்கார்ந்து, நான் வேட்டையாடிக்
20 கொண்டுவந்ததைப் புசியும் என்றான்.— அப்பொ
ழுது ஈசாக்குத் தன் குமாரனை நோக்கி: [2]என் மகனே,
இது உனக்கு இத்தனை சீக்கிரமாய் எப்படி அகப்பட்
டது என்றான். அவன்: உம்முடைய தேவனாகிய
கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார் என்றான்.—

[1] 1இரா. 13. 18: 14. 2. எரே. 28. 15. சகரி. 13. 4.
[2] யாத். 20. 7. லேவி. 13. 7.

**15. "நல்ல வஸ்திரங்களை."** இது ஆசாரிய உடையாயிருக்கலாம். ஈசாக்கின் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்போனபடியால் குடும்பத்துக்கு மூத்தவனாகிய ஏசா ஆசாரியத்தொழிலைத் தகப்பனுக்காக நடப்பித்திருக்கலாம். எப்படியும் அந்த வஸ்திரம் விசேஷித்ததாயும் ஏசாவுக்கே உரித்தானதாயுமிருந்தது. சாதாரணவஸ்திரம் எவ்வளவு நல்லதாயிருந்தாலும் அது ஏசாவின் கூடாரத்தில் அல்லது அவன் மனைவிகளில் ஒருத்தியின் கூடாரத்திலிருந்திருக்கும்.

**18. "நீ யார், என் மகனே."** யாக்கோபின் சத்தமும் ஏசாவின் சத்தமும் கொஞ்சங்குறைய ஒன்றுபோலவே யிருந்திருக்கலாம். கவனித்தால்மாத்திரம் வித்தியாசத்தை அறியத்தக்கதாயிருக்கும். யாக்கோபு திடீரென ஈசாக்கைக் கூப்பிட்டதால் இரண்டுபேரில் யாரென்று அறியும்படி இப்படிக் கேட்டான்.

**20. "உம்முடைய தேவனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினார்."** ஏசா தனக்குச் சித்திபுண்டாகுங்காலத்தில் அது தெய்வசெயலாய் உண்டானதாகச் சொல்வது அவன் சுபாவமல்ல. யாக்கோபு இங்கே தேவ நாமத்தைச் சொன்னபோது ஈசாக்குக்கு அதிக சமுசயம் உண்டாக ஏதுவாயிற்று. ஆகவே, அதை உடனே சோதிக்கும்படி முயன்றான் என்று சொல்லுவாருண்டு.





21 அப்பொழுது ஈசாக்கு யாக்கோபை நோக்கி: என்
மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ
என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்டவா
22 என்றான்.—யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்
டையில் கிட்டப் போனான்; அவன் இவனைத் தடவிப்
பார்த்து: சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசா
23 வின் கைகள் என்று சொல்லி,—அவனுடைய கைகள்
அவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப்போல
ரோமமுள்ளவைகளாயிருந்தபடியினாலே, இன்னான்
24 என்று அறியாமல், அவனை ஆசீர்வதித்து,—நீ என்
குமாரனாகிய ஏசாதானோ என்றான்; அவன்: [1]நான்
25 தான் என்றான்.—அப்பொழுது அவன்: என் குமார
னே, நீ வேட்டையாடிக் கொண்டுவந்ததை நான்
புசித்து, என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படி
அதை என் கிட்டக் கொண்டுவா என்றான்; அவன்
அதைக் கிட்டக் கொண்டுபோனான்; அப்பொழுது
அவன் புசித்தான்; பிறபாடு, திராட்சரசம் அவனுக்
குக் கொண்டுவந்து கொடுத்தான், அவன் குடித்
26 தான்.—அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு
அவனை நோக்கி: என் மகனே, நீ கிட்ட வந்து என்னை
27 முத்தஞ்செய் என்றான்.—அவன் கிட்டப் போய்,
அவனை முத்தஞ்செய்தான்; அப்பொழுது அவனு
டைய வஸ்திரங்களின் வாசனையை மோந்து: இதோ,
என் குமாரனுடைய [2]வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த
வயல்வெளியின் வாசனையைப்போல் இருக்கிறது.—

[1] நீதி. 12. 19, 22. எபே. 4. 25.
[2] ஓசி. 14. 6.

**21. "உன்னைத் தடவிப்பார்க்கும்படி கிட்ட வா."** யாக்கோபுடைய பேச்சின் சாடை வார்த்தைகளின் நடை இவைகள் ஈசாக்கின் மனதுக்குச் சந்தேகத்தைக் கொடுத்ததால் அவனைத் தடவிப்பார்க்கும்படி சமீபத்தில் வரச் சொன்னான். ஆனால் ரெபெக்காள் செய்திருந்த உபாயத்தினாலே ஈசாக்குக்கு இருந்த சந்தேகம் நிவிர்த்தியாகிப்போயிற்று.

**26. "என்னை முத்தஞ்செய்."** ஈசாக்கின் சமுசயமெல்லாம் நீங்கின பின்பு அவன் போசனபானம் பண்ணிப் பிள்ளையின் பாசத்தை விசேஷித்துக் காட்டும்படி முத்தஞ் செய் என்றான். சிலர், வேடனுடைய மணத்துக்கும் மேய்ப்பனுடைய மணத்துக்கும் வித்தியாசம் அறியும்படியாக முத்தஞ் செய்யச்சொன்னான் என்பார்கள்.

**27. "வயல்வெளியின் வாசனை."** பலஸ்தீனாவில் நற்கந்தப்பூண்டுகள் மிகுதியாயுண்டு. அவைகளை ஆடுமாடுகள் மேயும். அதால் சுகந்தவாசனை எழும்புவதுண்டு. ஈசாக்கு கந்தம் ஏற்றப்பட்ட ஏசாவின் வஸ்திரத்தால் ஏமாற்றப்பட்டான்.

28 தேவன் [1]உனக்கு வானத்துப் பனியையும் பூமியின்
கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தை
29 யும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக.—ஜனங்கள்
[2]உன்னைச் சேவிக்கவும் ஜாதிகள் உன்னை வணங்கவும்
கடவர்கள்; உன் சகோதரருக்கு எஜமானாயிருப்பாய்;
உன் தாயின் பிள்ளைகள் உன்னை வணங்குவார்கள்;
உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும்,
உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்
களுமாய் இருப்பார்கள் என்று சொல்லி அவனை [3]ஆசீர்
வதித்தான்.

30 ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து முடிந்தபோது,
யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் சமுகத்தை
விட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய
31 ஏசா வேட்டையாடி வந்து சேர்ந்தான். — அவனும்
ருசியுள்ள பதார்த்தங்களைச் சமைத்து, தன் தகப்பனண்
டைக்குக் கொண்டுவந்து, தகப்பனை நோக்கி: உம்மு
டைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படி, என்

[1] உபா. 33. 13. 28: 33. 28. 2சாமு. 1. 21. சங். 133. 3. சக. 5. 7.
[2] ஆதி. 9. 25. 49. 8. ஏசா. 21. 9.
[3] எபி. 11. 20.

**28. "பூமியின் கொழுமையையும்."** செழிப்பான பூமியையாவது அல்லது பூமியின் பலனையாவது குறிக்கும்.

**29. "ஜனங்கள் உன்னைச் சேவிக்கவும்."** இது ஒருவாறு தாவீது சாலொமோன் என்ற இராசாக்களின் காலத்தில் நிறைவேறினது. ஆனால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உதித்து அவர் மகிமை அவன்மேல் காணப்படும் போது அவன் வெளிச்சத்தினிடத்துக்குச் சாதிகளும் உதிக்கிற அவன் ஒளியினிடத்திற்கு இராசாக்களும் நடந்து, சமுத்திரத்தின் திரளான கூட்டம் அவன் வசம் திரும்பிச் சாதிகளின் பலத்த சேனை அவனிடத்துக்கு வருகையிலே இது பூரணமாய் நிறைவேறும். (ஏசா. 60: 3, 5. ரோ. 11: 25, 26.)

**"உன்னைச் சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள்."** ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் இங்கே தொடர்ச்சியாய் அவன் சந்ததியாருக்குக் கொடுக்கப்பட்டது (ஆதி. 12: 3.). ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்தை ஈசாக்கு பின்பு பொதுவாக யாக்கோபுக்கு உரித்தாக்கினான் (ஆதி. 28: 4.) அப்பால் கர்த்தரும் அதை யாக்கோபுக்கு உறுதிப்படுத்தினார் (ஆதி. 28: 14.).

**30. "ஏசா வேட்டையாடி வந்து சேர்ந்தான்."** யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டபின்பு ஏசா வந்து சேர்ந்தான். ஏசா ஆசீர்வாதத்தைப் பெறுவது கர்த்தருக்குச் சித்தமாயிருந்தால் வேட்டை சீக்கிரமாய் அகப்படும்படி செய்திருப்பார்.





தகப்பனார் எழுந்திருந்து, உம்முடைய குமாரனாகிய
நான் வேட்டையாடிக் கொண்டுவந்ததைப் புசிப்பா
32 ராக என்றான்.—அப்பொழுது அவன் தகப்பனாகிய
ஈசாக்கு: நீ யார் என்றான்; அதற்கு அவன்: நான்
33 உமது மூத்த மகனாகிய ஏசா என்றான்.—அப்பொழுது
ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி: வேட்டையாடி
எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வரு
முன்னே அவையெல்லாவற்றிலும் நான் புசித்து
அவனை ஆசீர்வதித்தேனே. [1]அவன் ஆசீர்வதிக்கப்
34 பட்டவனாகவும் இருப்பான் என்றான்.—ஏசா தன்
தகப்பனுடைய வார்த்தைகளைக் கேட்டவுடனே, [2]மிக
வும் மனங்கசந்து உரத்த சத்தமிட்டு அலறி, தன் தகப்
பனை நோக்கி: என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதி
35 யும் என்றான்.—அதற்கு அவன்: உன் சகோதரன் தந்
திரமாய் வந்து, உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்
36 றுக்கொண்டான் என்றான்.—அப்பொழுது அவன்:
அவன் பெயர் [3]யாக்கோபு என்னப்படுவது சரியல்ல
வா? இதோடே இரண்டுதரம் என்னை மோசம்போக்
கினான்; என் சேஷ்டபுத்திரபாகத்தை எடுத்துக்கொண்
டான்; இதோ, இப்பொழுது என் ஆசீர்வாதத்தையும்
வாங்கிக்கொண்டான் என்று சொல்லி; நீர் எனக்கு
ஒரு ஆசீர்வாதத்தையாகிலும் வைத்துவைக்கவில்லை
37 யா என்றான்.—ஈசாக்கு ஏசாவுக்குப் பிரதியுத்தரமாக:

[1] ஆதி. 28. 3, ரோ. 11. 29.
[2] எபி. 12. 17.
[3] ஆதி. 25. 26, 33.

**33. "ஈசாக்கு மிகவும் பிரமித்து நடுங்கி."** தான் வஞ்சிக்கப்பட்டுப் போனதற்காகவுமல்ல, தன் விருப்பத்துக்கு எதிரிடையாய் இளையமகனை ஆசீர்வதித்ததற்காகவுமல்ல, தான் தேவனை எதிர்த்ததாக எண்ணி ஈசாக்கு நடுங்கியிருக்கலாம். கர்த்தர் ரெபெக்காளுக்குத் தீர்க்கதரிசனமாக உரைத்தபடி தம்முடைய தீர்மானத்தை நிறைவேற்றினதற்காக பிரமித்திருக்கலாம். தான் செய்த தப்பிதத்தில் அவன் நிலைகொண்டிராமல் தேவதீர்மானத்தை ஒப்புக்கொண்டு யாக்கோபுக்கு ஆசீர்வாதத்தை உறுதிப்படுத்தினான்.

**34. "மனங் கசந்து உரத்த சத்தமிட்டு அலறி."** ஏசா கண்ணீர்விட்டுக் கவலையோடே ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று தேடினான். ஆனால் கர்த்தரிடத்தில் மனமாறுதலைக் காணாமல்போனான். அவனுடைய சீர்கெட்ட நடத்தை அவனை ஆவிக்குரிய ஆசீர்வாதத்துக்கு விலக்கிப் போட்டது. எபி. 12: 16, 17.

**36. "அவன் பெயர் யாக்கோபு என்னப்படுவது சரியல்லவா?"** யாக்கோபு என்பதற்கு "குதிங்காலைப் பிடிக்கிறவன்" என்றர்த்தம். ஆனால் அந்தப் பேருக்கு ஏசா கொடுத்த கேவலமான அர்த்தமுமுண்டு; அது யாக்கோபின் நடக்கைக்கு இசைவாக இருந்தது.

இதோ, [1]நான் அவனை உனக்கு எஜமானாக வைத் [1] 2 சாமு. 8. 14.
தேன்; அவன் சகோதரர் எல்லாரையும் அவனுக்கு
ஊழியக்காரராகக் கொடுத்து, அவனைத் தானியத்தி
னாலும் திராட்சரசத்தினாலும் ஆதரித்தேன்; இப்பொ
ழுதும் என் மகனே, நான் உனக்கு என்ன செய்வேன்
38 என்றான்.—ஏசா தன் தகப்பனை நோக்கி: என் தகப்
பனே, இந்த ஒரே ஆசீர்வாதம்மாத்திரமா உம்மிடத்
தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதி
யும் என்று சொல்லி, [2]ஏசா சத்தமிட்டு அழுதான்.— [2] எபி. 12. 17.
39 அப்பொழுது அவன் தகப்பனாகிய ஈசாக்கு அவனுக்
குப் பிரதியுத்தரமாக: [3]உன் வாசஸ்தலம் பூமியின் [3] எபி. 11. 20.
சாரத்தோடும் உயர வானத்திலிருந்து இறங்கும் பனி
40 யோடும் இருக்கும். — உன் பட்டயத்தினாலே நீ [4] ஆதி. 25. 23. 2 சாமு. 8. 14. ஒபதி. 18-20. வச.
பிழைத்து, [4]உன் சகோதரனைச் சேவிப்பாய்; [5]நீ மேற் [5] 2 இரா. 8. 20.

**38. "ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு?"** ஈசாக்குக்கு விசேஷித்த ஆசீர்வாதம் அருளப்பட்டபோதிலும் இஸ்மவேலுக்கும் ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. இஸ்மவேலுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்துக்கொப்பான ஆசீர்வாதமாவது தனக்கு அருளப்படும்படி கருதியிருக்கலாம்.

**39. "உன் வாசஸ்தலம் பூமியின் சாரத்தோடும்."** ஏசாவுக்கு ஆடுமாடுகள் திரளாயிருந்தன. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்கு வந்தபோது ஏதோமியருக்கு வயல்களும் திராட்சத்தோட்டங்களும் இருந்தன. ஆனால் யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்டதுபோல "மிகுந்த தானியத்தின் ஆசீர்வாதம்" ஏசாவுக்குக் கொடுக்கப்படவில்லை.

**40. "உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து, உன் சகோதரனைச் சேவிப்பாய்."** துவக்கத்தில் ஏசாவின் காரியம் சேமமாயிருந்தது; இஸ்ரவேலில் இராசாக்கள் எழும்புமுன்னே ஏதோமில் பிரபுக்கள் இருந்தார்கள் (ஆதி. 36: 31.). இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாயிருந்தபோது ஏதோமியர் சுயாதீன ஜனங்களாயிருந்தார்கள். ஆனால் பின்பு காரியம் மாறிப்போயிற்று. சவுல் முதலாவதாக அவர்களை முறியடித்தான் (1 சாமு. 14: 47.). பின்பு தாவீது அவர்களை ஜெயித்துக் கீழ்ப்படுத்தினான் (2 சாமு. 8: 14.). தங்கள் நுகத்தை எடுத்தெறியும்படி அடிக்கடி அவர்கள் கலகம்பண்ணினதுண்டு. சாலொமோன் காலத்தில் ஏதோமியனாகிய ஆதாத் எழும்பினான் (1 இரா. 11: 14–16.). யோசபாத்துக்கு விரோதமாய் அவர்கள் மோவாபியர் அம்மோனியர் அமலேக்கியர் என்பவர்களோடே சேர்ந்து ஒப்பந்தம்பண்ணினார்கள் (சங். 83: 5.). யோராமின் காலத்தில் அவர்கள் கலகம்பண்ணி ஒரு இராசாவை ஏற்படுத்தினார்கள் (2 இரா. 8: 20–22.). அமத்சியா அவர்களை மடங்கடித்





கொள்ளும் காலம் வரும்போதோ, உன் கழுத்தில்
இருக்கிற அவனுடைய நுகத்தடியை முறித்துப்போடு
வாய் என்றான்.

41 யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்தநிமித்
தம் ஏசா யாக்கோபைப் [1]பகைத்து, என் தகப்பனுக் [1] ஆதி. 4. 5; 37. 4, 8.
காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், [2]அப் [2] ஒபதி. 10. வச.
பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்று
போடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்
42 லிக்கொண்டான்.—மூத்த மகனாகிய ஏசாவின் வார்த்
தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டது; அப்
பொழுது அவள் தன் இளைய மகனாகிய யாக்கோபை
அழைத்து: உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்
றுபோட நினைத்து, [3]தன்னைத் தேற்றிக்கொள்ளுகி [3] யோபு. 20. 12. சங். 64. 5.
43 றான்.—ஆகையால், என் மகனே, நான் சொல்வதைக்
கேட்டு, எழுந்து புறப்பட்டு, [4]ஆரானில் இருக்கிற [4] ஆதி. 11. 31.
என் சகோதரனாகிய லாபானிடத்துக்கு ஓடிப்போய்,—

தான் (2 இரா. 14: 7.). ஆகாசின் காலத்தில் அவர்கள் யூதசனங்களை ஜெயித்து அவர்களில் சிலரைச் சிறைகளாக்கினார்கள் (2 நாளா. 28: 17.). யூதா மக்கப்பேர் என்னப்பட்ட ராஜவம்சத்தார் அவர்களை அடிக்கடி முறியடித்தார்கள். பின்பு இர்க்கானு என்பவன் அவர்களை முழுவதுமாய் ஜெயித்து, விருத்தசேதனஞ் செய்யும்படி கட்டாயம்பண்ணி யூதரோடே கலந்துபோகும்படி செய்தான்.

**41. "ஏசா யாக்கோபைப் பகைத்து."** கர்த்தரால் வெறுக்கப்பட்டவன் கர்த்தரால் அன்புகூரப்பட்டவனைப் பகைக்கிறான்.

**"யாக்கோபைக் கொன்றுபோடுவேன்."** ஈசாக்கின் மரணத்துக்குப் பின்பு யாக்கோபைக் கொன்று ஆசீர்வாதத்தை அவமாக்கிப்போடலாம் என்றெண்ணினான். ஈசாக்கு பின்னும் 63 வருஷம் உயிரோடிருந்தான்.

**42. "ஏசாவின் வார்த்தைகள் ரெபெக்காளுக்கு அறிவிக்கப்பட்டது."** ஏசா தான் நிர்ணயித்திருந்ததை இரகசியமாய் மறைத்துக்கொள்ளாமல் வெளியே விட்டிருக்கலாம். ரெபெக்காள் அதைக் கேட்டு யாக்கோபு சுகபத்திரமாயிருக்கவும் பெண்கொள்ளவும் தக்கதாகத் தன் தகப்பன் வீட்டுக்கு அவனை அனுப்பத் தீர்மானஞ்செய்தாள்.

44 உன் சகோதரனுடைய கோபம் தணியுமட்டும் சில
45 நாள் அவனிடத்திலே இரு.—உன் சகோதரன் உன்
மேல் வைத்த கோபம் தணிந்து, நீ அவனுக்குச் செய்
ததை அவன் மறந்தபின், நான் ஆள் அனுப்பி, அவ்
விடத்திலிருந்து உன்னை அழைப்பிப்பேன்; நான்
ஒரே நாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்து
போகவேண்டும் என்றாள்.

46 பின்பு, ரெபெக்காள் ஈசாக்கை நோக்கி: ஏத்தின்
குமாரத்திகளினிமித்தம் [1]என் உயிர் எனக்கு வெறுப் — [1] ஆதி. 26. 35; 28. 8.
பாயிருக்கிறது; இந்தத் தேசத்துப் பெண்களாகிய ஏத்
தின் குமாரத்திகளில் [2]யாக்கோபு ஒரு பெண்ணைக் — [2] ஆதி. 24. 3.
கொள்வானானால் என் உயிர் இருந்து ஆவதென்ன
என்றாள்.

**44.** "சிலநாள்." ரெபெக்காள் ஏசாவைப்போல ஈசாக்கின் மரணம் [illegible] கிட்டிவருவதாக எண்ணினாள். சிலர் யாக்கோபு இருபது வருஷமல்ல நாற்பதுவருஷம் பதான் அராமிலிருந்ததாக அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்கு [illegible] ரெபெக்காள் மரித்துப்போனாள். ஈசாக்கு யாக்கோபு திரும்பிவந்த பின்பு 23 வருஷம் உயிரோடே இருந்தான்.

**45.** "நான் ஒரேநாளில் உங்கள் இருவரையும் ஏன் இழந்துபோக வேண்டும்." ஏசா, யாக்கோபைக் கொன்றுபோட்டால் ஏசாவை அதிகாரிகள் கொன்றுபோடுவார்கள். பரிசுத்த வேதாகமம் ஈசாக்கின் குடும்பத்தாருடைய பாவங்களையும் தப்பிதங்களையும் நமக்கு எடுத்துக்காட்டுகிறதுடன் அவைகளினால் அவர்களுக்கு விளைந்த நிர்ப்பாக்கியங்களையும் சஞ்சலங்களையும் விளக்குகிறது. ஈசாக்கும் ரெபெக்காளும் தங்கள் முதிர்வயதிலே தங்களுடைய இரண்டு பிள்ளைகளாலும் கைவிடப்பட்டார்கள். ஏசா சுதந்தரத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டான். யாக்கோபு வீட்டைவிட்டு ஓடிப்போனான். போன இடத்திலும் அவன் மன ஆறுதலோடு இருக்க ஏதுவில்லாமல் மனவருத்தத்தோடு காலங்கழிக்கவேண்டியதாய் நேரிட்டது. தேவனால் தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள் பாவஞ் செய்யும்போது இவ்வுலகத்தில் அவர் அவர்களைக் கண்டியாமல் விடுகிறதில்லை.

**46.** "ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு ஒரு பெண்ணைக் கொள்வானானால்." ஏசாவின் மனைவிகள் கானானிய ஸ்திரீகளாயிருந்தார்கள். அவர்களாலே ரெபெக்காளுக்கு மிகுந்த மனவருத்தமிருந்தது. யாக்கோபும் கானானிய ஸ்திரீகளுக்குள் பெண் எடுத்தால் வீட்டுச் சமாதானத்துக்கு அது மிகுந்த குந்தகமாயிருக்கும். இதுவிஷயம்மாத்திரம் ரெபெக்காளுடைய மனதிலிருந்ததாக நாம் எண்ணக்கூடாது. யாக்கோபின் உயிரையும் பாதுகாக்கும்பொருட்டு விவாககாரியத்தை ஒரு விசேஷித்த முகாந்தரமாகத் தன் புருஷனிடத்தில் சொன்னாள்.





## 28. அதிகாரம்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்துப் பதான் அராமுக்கு அனுப்பினது. 9. ஏசா இஸ்மவேலின் குமாரத்தியாகிய மகலாத் என்கிற பெண்ணை விவாகம்பண்ணினது. 10. யாக்கோபு சொப்பனத்தில் ஒரு ஏணியைக் கண்டது. 18. பெத்தேலில் ஒரு கல்லை நாட்டினது. 20. யாக்கோபு பிரதிக்கினைபண்ணினது.

1 ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்
வதித்து, [1]நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண் — [1] ஆதி. 24. 3.

### படிப்பினை.

#### வச. 1—29.

(1) வயதுசெல்ல நாம் தளர்ந்து பெலவீனப்படுகையில் நாம் இங்கே தங்குகிறவர்களல்ல என்றறிந்து செய்யவேண்டியதை முழுப்பலத்தோடே செய்யக்கடவோம்.

(2) பெற்றோர் பாவஞ் செய்யும்படி பிள்ளைகளை ஏவுகையில் பிழுந்த பவிக்கும் துக்கத்துக்கும் அஸ்திபாரம் போடுகிறவர்களாயிருக்கிறார்கள்.

(3) நல்லவர்கள் தேவனுடைய கற்பனைக்கு இசைவாய் நடந்துகாட்டிய மாதிரிமாத்திரம் பின்பற்றவேண்டும். அவர்களுடைய ஆகாமியக் கிரியைகளைப் பின்பற்றிருல் சங்கடங்களை அநுபவிக்கவேண்டியதாய் நேரிடும்.

(4) ஒரு பொய்சொல்லைத் [illegible] அதை நிலைநிறுத்த இன்னும் தொடர்ச்சியாய் அநேக பொய்களைப் பிணைக்கும்படி [illegible] மனிதர் நன்மைசெய்தாலும் [illegible] செய்தாலும் தேவன் தம்முடைய சிறந்த நோக்கம் [illegible]யிருக்கிறார்.

#### வச. 30—46.

(5) மனிதர் தாங்கள் செய்யவேண்டுமென்று நினையாத காரியத்தைத் தாங்களே நிறைவேற்றுகிறவர்களாயிருக்கிறார்கள். மனிதன் எண்ணுகிறது வேறே, தேவன் நினைக்கிறது வேறே. பொல்லாதவர்கள் தங்களுக்கு நேரிடும் ஆபத்துகள் தங்கள் பாவத்தினால் வந்தது என்பதை நினையாமல், மற்றவர்களுடைய பாவத்தினால் வந்தது என்று எண்ணுகிறார்கள்.

(6) தாங்கள் விரும்பின காரியம் கைகூடிவராதபோது பொல்லாதவர்கள் குறைப்பட்டுச் சீர்கெடுவதற்குப் பதிலாக மனமடிவாகி பழிவாங்கும் குணத்துக்கு இடங்கொடுக்கிறார்கள்.

(7) பகைக்கும் கொலைபாதகத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு; பகையைப் பேணிக்கொண்டுவந்தால் கொலைபாதகமாய் முடியும்.

(8) நாள்செல்லப் பகை தீருமாகையால் சமாதான பட்சமுள்ளவர்கள் விலகியிருப்பது உத்தமம்.

## 28. அதிகாரம்.

**1.** "ஈசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து." யாக்கோபுடைய உயிரைப் பாதுகாக்கவேண்டும் என்பது ரெபெக்காளுடைய முதல் நோக்கமாயிருந்தபோதிலும், அவனுடைய விவாகவிஷயமும் அவள் மனதில் மேலிட்டிருந்ததாக நாம் எண்ணவேண்டியதாயிருக்கிறது. யாக்கோபு இப்போது தன் தாய்தகப்பன்மாரால் முதல் பிறப்புச் சுதந்தரத்துக்கு உரித்தானவனென்று வெளியரங்கமாய் ஸ்தாபிக்கப்பட்டான். தேவன் அவனை வாக்

2 கொள்ளாமல்,–எழுந்து [1]புறப்பட்டு, [2]பதான் அரா | [1] ஓசி. 12. 12.
மிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய [3]பெத்து | [2] ஆதி. 24. 29:25. 20.
வேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் | [3] ஆதி. 22. 23.
தாயின் சகோதரனாகிய [4]லாபானின் குமாரத்திகளுக் | [4] ஆதி. 24. 29.
குள் பெண்கொள் என்று அவனுக்குக் கட்டளையிட்
3 டான். — சர்வவல்லமையுள்ள தேவன் [5]உன்னை ஆசீர் | [5] ஆதி. 17. 4, 6.
வதித்து, நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னைப்
4 பலுகவும் பெருகவும்பண்ணி; — தேவன் [6]ஆபிரகா | [6] ஆதி. 12. 2: 17. 8.
முக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறது
மான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிர
காமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன்
5 சந்ததிக்கும் அருளுவாராக என்று சொல்லி; — ஈசாக்கு
யாக்கோபை அனுப்பிவிட்டான். அப்பொழுது
அவன் பதான் அராமிலிருக்கும் சீரியாதேசத்தானாகிய
பெத்துவேலுடைய குமாரனும், தனக்கும் ஏசாவுக்கும்

குத்தத்தத்துக்குச் சுதந்தரனுக்கினுர் என்பதை ஈசாக்கு தெளிவாக அறிந்து, ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கும் அவன் சந்ததிக்கும் உறுதிப்படுத்தினுன். இதினுல் ஈசாக்கின் உத்தமகுணத்தைப் பார்க்கி[illegible] கர்த்தருடைய சித்தம் இ[illegible]தென்பதை அவன் பிரத்தியட்சமாய் அறிந்த[illegible]ரயின் குணத்தை முழுவதுமாய் விட்டுவிட்டு கர்த்தர் தெரிந்துகொண்டவனை ஆசீர்வாதத்துக்குச் சுதந்தரனுக்கினுன்.

**2. "பதான் அராம்."** (ஆதி. 25: 20. வியாக்கியானம் பார்க்க.) அராமிலிருந்த இனத்தாரைப்பற்றி ஆபிரகாமுக்கு இருந்த அறிவைவிட (ஆதி. 24: 4.) ஈசாக்குக்கு அதிகமான அறிவு இருந்தது. அதினுல் அவன் தன் குமாரன் யாக்கோபைத் தனிமையாக அனுப்பினுன்.

**3. "சர்வவல்லமையுள்ள தேவன்."** எபிரெயுவில் எல்—சாடாய் என்றிருக்கிறது. ஆபிரகாமின் ஆசீர்வாதத்தை யாக்கோபுக்கு உறுதிப்படுத்துவது ஈசாக்கின் நோக்கமாயிருந்ததால், உடம்படிக்கையில் சொல்லப்பட்ட தேவநாமத்தை இங்கேயும் எடுத்துரைத்திருக்கிறுன்.

**"பல ஜனக்கூட்டமாகும்படி."** எபிரெயுவில் "பலஜன சபையாகும்படி" என்றிருக்கிறது. மூலத்தில் இந்தவார்த்தை ஆதி. 17: 4–ல் சொல்லப்பட்டதற்கு வித்தியாசமானது. இங்கே இது வைதீகவிஷயமாய்க் கூட்டிச் சேர்க்கப்படும் சபையைக் குறிக்கும். அதுவோ "கூட்டுதல்" என்றர்த்தங்கொள்ளும் மூலவார்த்தையிலிருந்து பிறந்த பதம். பிந்திய காலத்தில் இஸ்ரவேலின் சபைக்கு இந்தப் பெயர் வழங்கப்பட்டு வந்திருக்கிறது (லேவி. 16: 17.). யாக்கோபின் சந்ததியார் வைதீகசபையாராயிருப்பார்கள் என்பதே இதினுடைய தாற்பரியம்.

**5. "தனக்கும் ஏசாவுக்கும் தாயாகிய."** யாக்கோபு முதற்பிறப்புச் சுதந்தரனுக்கப்பட்டதால் அவன் பேர் இங்கே முதலில் போடப்பட்டிருக்கிறது.





தாயாகிய ரெபெக்காளின் சகோதரனுமான லாபானி
டத்துக்குப் போகப் புறப்பட்டான்.
6 ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, ஒரு பெ
ண்ணைக் கொள்ளும்படி அவனைப் பதான் அராமுக்கு
அனுப்பினதையும், அவனை ஆசீர்வதிக்கையில்: நீ
கானானியருடைய குமாரத்திகளில் பெண் கொள்ள
வேண்டாம் என்று அவனுக்குக் கட்டளையிட்டதை
7 யும், — யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும்
கீழ்ப்படிந்து, பதான் அராமுக்குப் புறப்பட்டுப்
8 போனதையும் ஏசா கண்டதினுலும், — கானானியரு
டைய [1]குமாரத்திகள் தன் தகப்பனாகிய ஈசாக்கின் | [1] ஆதி. 21. 2: 26. 35.
பார்வைக்கு ஆகாதவர்கள் என்பதை ஏசா அறிந்த
9 தினுலும், — ஏசா இஸ்மவேலிடத்துக்குப் போய்,
தனக்கு முன்னிருந்த மனைவிகளுமன்றி, ஆபிரகா
முடைய குமாரனாகிய இஸ்மவேலின் குமாரத்தியும்
நெபாயோத்தின் சகோதரியுமாகிய [2]மகலாத்தையும் | [2] ஆதி. 36. 3.
விவாகம் பண்ணினுன்.
10 யாக்கோபு பெயெர்செபாவை விட்டுப் [3]புறப்பட்டு | [3] அப். 7. 2.
11 ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி, — ஒரு
இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தபடியினுல்,

**6. 9. "ஏசா..........மகலாத்தையும் விவாகம் பண்ணினுன்."** ஆபிரகாமின் ஆசீர்வாதம் பகிரங்கமாய் ஈசாக்கின் சம்மதியின்பேரில் யாக்கோபுக்கு அருளப்பட்டதை ஏசா கண்டு, மனஸ்தாபப்பட்டு தனக்கு நேரிட்ட குறைவுகள் அஞ்ஞானஸ்திரீகளை விவாகஞ் செய்ததினுலுண்டானதென்று உணர்ந்து, ஆபிரகாம் ஏற்படுத்தின சட்டத்துக்குச் சற்றே இணங்கி இஸ்மவேலின் மகளை விவாகஞ்செய்து தன் தகப்பனுக்குப் பிரியமுண்டாக்கப் பார்த்தான். மகலாத்து 36: 3–ல் பஸ்மாத்து என்று அழைக்கப்பட்டிருக்கிறுள். அந்த இடத்து வியாக்கியானம் பார்க்க.

**10. "யாக்கோபு.........ஆரானுக்குப் போகப் பிரயாணம்பண்ணி."** யாக்கோபு இப்போது 57 வயதுள்ளவனுயிருந்தான். இதுமுதல் (36 அதிகாரம் நீங்கலாக) யாக்கோபின் சரித்திரவரலாறு விபரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

**11. "ஒரு இடத்திலே வந்து."** யாக்கோபு பிரயாணம் செய்துகொண்டுபோகையில் ஒருநாள் சூரியன் அஸ்தமித்த இடத்திலே இராத்தங்கினுன். அந்த இடம் எப்பிராயீம் மலைகளில் எருசலேமுக்கு 12 மைலுக்கு வடக்கேயிருந்தது. அன்றையதினம் அவன் பிரயாணத்தின் நாலாம் நாளாயிருக்கலாம்

அங்கே ராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை
எடுத்து, தன் தலையின்கீழ் வைத்து, அங்கே நித்திரை
12 செய்யும்படி படுத்துக்கொண்டான்.—அங்கே அவன்
[1]ஒரு சொப்பனங்கண்டான்; இதோ, ஒரு ஏணி
பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வான
த்தை எட்டியிருந்தது, அதிலே [2]தேவதூதர் ஏறுகிற

[1] ஆதி. 11. 15. எண். 12. 6. யோ. 4. 13: 33. 16.
[2] யோ. 1. 51. எபி. 1. 14.

(ஆதி. 22: 4. வியாக்கியானம் பார்க்க.). அவன் தகப்பன் வீட்டைவிட்டு ஒன்றியாய்ப் பிரயாணம் செய்துகொண்டுபோகையில் தான் தந்திரமாய்ப் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தை தேவன் தனக்குப் பலிக்கச்செய்வாரோ, எதிர்கால சம்பவங்கள் தனக்கு எப்படி நேரிடுமோ என்ற எண்ணங்கள் அவன் மனதில் உண்டாக அதிகமாய் ஜெபத்திலும் தியானத்திலும் தன் காலத்தைப் பின்னிட்டிருப்பான்.

**"கற்களில் ஒன்றை எடுத்து."** யூத வியாக்கியானிகள் இந்த இடம் மோரியாமலை என்றும், யாக்கோபு தனக்குத் தலையணையாக வைத்த கல் ஈசாக்கைப் பலிசெலுத்தும்படி கட்டப்பட்ட பலிபீடத்தைச் சேர்ந்தவைகளில் ஒன்று என்றும் "பெத்தேல்" என்றால் ஆலயம் என்றும் இந்த வசனத்தில் (...) இடம் என்ற வார்த்தை மூன்றுதரம் வருவதால் இந்த இடத்திலே ... சாலொமோன், செருபாபேல், ஏரோது என்பவர்களுடைய மூன்று ஆலயங்களையும் குறிக்கும் என்றும் எண்ணியிருக்கிறார்கள். ஆனால் இந்த வியாக்கியானம் ஒட்டலங்காரமென்று அறியவேண்டும். பெத்தேல் என்பது ஒரு ஊர்ப் பெயராயிருக்கிறது.

**12. "ஓர் ஏணி."** தேவன் இந்தச் சமையத்தில் தமது சமுக சந்நிதியையும் பாதுகாப்பையும் யாக்கோபுக்குத் தெரியக்காட்டி தமது உருக்க இரக்கங்களையும் அன்பையும் வெளியரங்கமாக்கி அவனைத் தைரியப்படுத்தி ஆறுதல் செய்ய இந்தத் தரிசனையை அவனுக்கு அருளிச்செய்தார். ஏணியானது தேவனுக்கும் மனிதனுக்கும் போக்குவரத்தான வழியுண்டு என்பதையும் மனிதன் தேவ உதவியினால் மோட்சலோகத்துக்குச் செல்லலாம் என்பதையும் தேவன் விசேஷித்தவகையாய்த் தம்முடைய ஊழியக்காரரைப் பாதுகாக்கிறவர் என்பதையும் விளக்குகிறது. நம்முடைய ஆண்டவர் ஏணியானது மனிதகுமாரனாகிய தம்மைக் குறிக்கும் என்றும் (யோவா. 1: 51.), தமதுமூலமாய் மாத்திரம் மனிதர் தேவன் அண்டைக்கு வரலாம் என்றும் தாமே வழியாயிருக்கிறார் என்றும் (யோவா. 14: 6.) வெளிப்படுத்தியிருக்கிறார்.

**"தேவதூதர்."** தேவதூதர் இரட்சிப்பைச் சுதந்தரிப்பவர்களுக்கு ஊழியக்காரராயிருக்கிறார்கள். 1. அவர்கள் தேவபுத்திரருடைய விஷயத்தில் பிரீதியைக் காட்டுகிறார்கள் (லூக். 15: 10. மத். 18: 10.). 2. அவர்கள் மனிதருடைய இரட்சணியத்துக்கு அடுத்தகாரியத்தில் விசேஷித்த உரிமையைப் பாராட்டுகிறார்கள். இதினிமித்தம் அவர்கள் "உற்றுப் பார்க்கிறார்கள்" (1 பேது. 1: 12.). இரட்சகர் பிறந்தபோது பெத்லகேமின் வெளிகளில் பாடினார்கள் (லூக். 2: 13.); அவர் மரியாளிடத்தில் பிறப்பார் என்று அவளுக்கு அறிவித்தார்கள் (லூக். 1: 26.). அவர் பிறந்தார் என்று மேய்ப்பருக்குத் தெரியப்படுத்





வர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள். —
13 அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: [1]நான் உன் தகப்
பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனு
மாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும்
14 உன் சந்ததிக்கும் தருவேன்.—உன் சந்ததி [2]பூமியின்
தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும்,
வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்
ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்
15 லாம் ஆசீர்வதிக்கப்படும். — [3]நான் உன்னோடே
இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்

[1] ஆதி. 26. 24. யாத். 3. 6. மத். 22. 32.
[2] ஆதி. 13. 14, 16.
[3] ஆதி. 26. 24: 48. 16.

தினார்கள் (லூக். 2: 10.). இரட்சகர் சோதிக்கப்பட்டபின் அவருக்குப் பணிவிடை செய்தார்கள் (மத். 4: 11.). கெத்செமனேயில் ஒரு தூதன் அவரைப் பலப்படுத்தினான் (லூக். 22: 43.). அவர் உயிர்த்தெழுந்ததை அறிவித்தார்கள் (யோவா. 20: 12.). அவர் பரலோகத்துக்குப் போனபோது திரும்ப வருவார் என்று சீஷர்களுக்குச் சொன்னார்கள் என்று பார்க்கிறோம். (அப். 1: 10, 11.)

3. அவர்கள் தேவனுடைய ஜனங்களுக்கு ஆதரவாயிருக்கிறார்கள் (சங். 34: 7. ஆதி. 19: 1, 15. அப். 5: 19; 12: 8. 4. சோதனைக்காலத்தில் பக்திமான்களைப் பலப்படுத்துகிறார்கள் (லூக். 22: 43.). 5. மரணகாலத்தில் அவர்களைத் தாங்குகிறவர்களாயிருக்கிறார்கள் (திருஷ். தானி. 9: 20, 22.). 6. மரணத்தில் அவர்கள் ஆத்துமாவைப் பரலோகத்துக்குக் கொண்டுபோகிறார்களாம். (திருஷ். லாசரு. லூக். 16: 22.)

**13. "அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று."** அவர் தேவதூதன் என்றும் பெத்தேலின் தேவன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறார். (ஆதி. 31: 11, 13.)

**"நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும், ௸."** யாக்கோபு பரதேசியாய்த் தங்கின இடத்தில் தேவன் கானான்தேசத்தை அவனுக்கும் அவன் வித்தாருக்கும் சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று வாக்கு அருளினார். இஸ்ரவேலர் 300 வருஷங்களுக்குப்பின்பு அதைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். யாக்கோபு உயிர்த்தெழுதலில் அதைச் சுதந்தரிப்பான். (மத். 22: 31, 32. எபி. 11: 13–16.)

**14. "உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும்."** இஸ்ரவேலர் மூலமாய் இரட்சணிய அறிவு மற்ற ஜாதியாருக்குத் தெரிவிக்கப்பட்டது. விசேஷமாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாகிய கிறிஸ்துவின் மூலமாய் எல்லா ஜாதியாரும் இரட்சிப்பை அடைவார்கள் என்பதை [illegible]கிறது. இந்த வாக்குத்தத்தம் முதலாவது ஆபிரகாமுக்கும் பின்பு ஈசாக்குக்கும் அப்பால் யாக்கோபுக்கும் தேவனால் நேருக்குநேரே அருளப்பட்டது.

**15. "நான் உன்னோடே இருந்து."** கர்த்தர் ஆதி. 26: 24ல் ஈசாக்குக்கு அருளின வாக்குத்தத்தத்தை இங்கே யாக்கோபுக்குப் புதுப்பிக்கிறார். அவன் போகும் வழியிலும் தங்கும் இடத்திலும் திரும்பவரும் தேசத்திலும் தேவசமுக பாதுகாப்பு அவனுக்கு வாக்கு அருளப்பட்டது.

காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்
பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்
யுமளவும் உன்னைக் [1]கைவிடுவதில்லை என்றார். [1] சங். 121. 5–8. எபி. 13. 5.
16 யாக்கோபு நித்திரைதெளிந்து விழித்தபோது:
[2]மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; [2] யாத். 3. 5. யோசு. 5. 15.
17 இதை நான் அறியாதிருந்தேன் என்றான்.— அவன்
பயந்து, இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்
கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல,
இது வானத்தின் வாசல் என்றான்.
18 அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்
கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, [3]அதைத் தூணாக [3] லேவி. 7. 1.

"உன்னைக் கைவிடுவதில்லை." இந்த வாக்குத்தத்தம் பிந்தியகாலத்தில் தீர்க்கதரிசிகளால் இஸ்ரவேலருக்கு அடிக்கடி உரைக்கப்பட்டதுண்டு. யூதசனங்கள் எவ்வகையான பாடுகளையும், உபத்திரவங்களையும் அநுபவித்தபோதிலும் அவர்கள் தேவனால் கைவிடப்படாமல் கடைசியாக அவர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டுக் கானானைச் சுதந்தரிப்பார்கள்.

16. "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்." கிறிஸ்தவர்களுக்கு தேவனுடைய சர்வவியாபகத்தைப்பற்றி இருக்கிற அறிவு யாக்கோபுக்கு இருந்ததாக நாம் எண்ண ஏதுவில்லை. தான் இளமையில் அடிக்கடி தேவனை வணங்கின இடத்துக்குத் தொலைதூரத்தில் அவர் அவனுக்குக் காணப்பட்டபோது அவன் அதிசயப்படவேண்டியதாயிருந்தது. முற்பிதாக்களுடைய சரித்திரத்தைப் பார்க்கையில் அவர்கள் சில இடங்களை விசேஷித்த பரிசுத்த ஸ்தலங்களாக மதித்துவந்தார்கள் என்று பார்க்கிறோம். இங்கே விளங்கிய காரியங்களினால் யாக்கோபு தான் ஒன்றியாய் அங்கே விடப்படாமல் தேவ பாதுகாப்புக்குள்ளிருக்கிறதாக அறிந்து அந்த இடத்தில் தேவன் தம்மை வெளிப்படுத்தினதால் அந்த ஸ்தலத்தை பரிசுத்த பூமியாகப் பிரதிஷ்டைசெய்து தான் திரும்பிவருகையில் அங்கே தெய்வீகவணக்கத்தை வெளியரங்கமாய் ஸ்தாபிக்கத் தீர்மானித்தான்.

17. "எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது!" சனபத்தியானஸ்தலம். அப்படியே ஆகார் (ஆதி. 16: 13). மோசே (யாத். 3: 6.). கிதியோன் (நியா. 6: 22–24.). மனோவா (நியா. 13: 22.) என்பவர்கள் தேவன் தங்களுக்குக் காட்சியான இடங்களைப்பற்றி எண்ணங்கொண்டார்கள்.

"வானத்தின் வாசல்." ஜெபத்தினாலும், பலியினாலும் தேவனுக்குச் சமீபித்து அவருடைய வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளத்தக்க இடம்.

18. "கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெயை வார்த்து." யாக்கோபு தேவன் தம்மை வெளிப்படுத்தின இடத்தைக் குறிப்





19 நிறுத்தி, அதின்மேல் எண்ணெயை வார்த்து,—அந்த
ஸ்தலத்திற்குப் *பெத்தேல் என்று பேரிட்டான்; அதற் * தேவவீடு.
குமுன்னே அவ்வூருக்கு [1]லூஸ் என்னும் பேர் இருந் [1] நியா. 1. 23, 26. ஓசி. 12. 4.
20 தது.—அப்பொழுது யாக்கோபு: [2]தேவன் என்னோ [2] 2 சாமு. 15. 8.
டே இருந்து, நான்போகிற இந்த வழியிலே என்னைக்
காப்பாற்றி, [3]உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திர [3] 1 தீமோ. 6. 8.
21 மும் எனக்குத் தந்து,—என்னை என் தகப்பன் வீட்டுக்
குச் சமாதானத்தோடே [4]திரும்பி வரப்பண்ணுவாரா [4] உபா. 26. 17.
22 னால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்;— நான்
தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு [5]வீடாகும்; [5] ஆதி. 35. 7, 14.
தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத்

பிக்கும் பொருட்டுப் பிந்தியகாலத்தில் அந்த இடத்தில் அவருக்கு ஆராதனை செய்யும் நோக்கமாய் தான் தலையணைக்காக வைத்திருந்த கல்லை எடுத்துத் தூணாக நிறுத்தினான். அதின்மேல் அவன் எண்ணெயை வார்த்து அதை தேவ வணக்கத்துக்கான இடமாகப் பிரதிஷ்டை பண்ணினான். ஆனால் அதை அவன் வணங்கவில்லை.

19. "பெத்தேல்.........லூஸ்." யோசு. 16: 1, 2–ல் பெத்தேலும் லூஸும் வெவ்வேறு இடங்கள் என்று சொல்லியிருக்கிறது. அவைகள் இரண்டும் ஒன்றுக்கொன்று இரண்டொருமைல் தூரத்துக்கப்பால்தானிருந்தது. ஒருவேளை பெத்தேல் யோசுவாவின்காலத்தில் பரிசுத்த இடமாய்மாத்திரம் எண்ணப்பட்டிருக்கலாம். பின்பு எப்பிராயீமியர் லூசைப்பிடித்து அவ்விடத்து ஜனங்களைக் கொன்றுபோட்டபோது (நியா. 1: 23–25.), அவர்கள் அந்த ஊருக்குப் பெத்தேல் என்று பேரிட்டிருக்கலாம். லூஸ் என்பது வாதுமை மரத்தின்மூலமாய் உண்டான காரணப்பேராயிருக்கிறது. ஆதி. 35: 6–ல் அது இந்த அர்த்தமாய் வருகிறது.

20. "உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும்." யாக்கோபுடைய ஆசை விருப்பங்கள் மிதமிஞ்சினவைகளல்ல. அவன் அன்றன்றுள்ள ஆகாரத்தையும் உடையையும் கேட்கிறான். நம்முடைய இரட்சகர் இதற்காகவே நாம் விண்ணப்பஞ் செய்யப் போதித்திருக்கிறார் (மத். 6: 11.). பவுல் அது போதும் என்று புத்திசொல்லுகிறார் (1 தீமோ. 6: 8.). ஆகூர் இந்த நன்மைக்காக விண்ணப்பஞ் செய்திருக்கிறான். (நீதி. 30: 8.)

21. "கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்." அதாவது எனக்கு உடம்படிக்கையை நிறைவேற்றுகிற தேவனாயிருக்கிறார் என்று அறிந்து வழிப்படுவேன் என்பதாம். யாக்கோபு இந்தப் பொருத்தனையை நிறைவேற்றினதைக் குறித்து ஆதி. 35: 15–ல் சொல்லியிருக்கிறது.

[1]தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனைபண்ணிக்கொண்டான்.

[1] லேவி. 27. 30.

22. "தசமபாகம்." ஆபிரகாம் மெல்கிசேதேக் என்பவனுக்குக் கொள்ளைப்பொருளில் பத்திலொருபாகம் கொடுத்தான். இங்கே யாக்கோபு தெய்வீக வணக்கத்துக்காகத் தனக்குண்டான ஆஸ்திகளில் பத்திலொன்றைக் கொடுப்பேன் என்று தீர்மானிக்கிறான். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படு முன்னும் தசமபாகமானது தேவனால் அங்கீகரிக்கப்பட்ட காணிக்கையாயிருந்ததென்று அறியலாம்.

## படிப்பினை.

### வச. 1—11.

(1) பெற்றோர் விவேகத்தோடும், அநுபவ சிந்தையோடும் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஊக்கமான ஜெபத்தோடே தங்கள் பிள்ளைகளிடத்தில் செலுத்தினால், அது பிள்ளைகளுடைய மனதில் பெலனாய்ப் பதியும்.

(2) தேவனுக்கும் பெற்றோருக்கும் கீழ்ப்படிந்து நன்மாதிரியைக் காட்டுவது நன்மார்க்கருடைய மனதிலும் சில நற்பலன்களை உண்டுபண்ணாமல் போகாது.

(3) இன்னவிதமான வருத்தங்களுக் குட்படுவோம் என்பதை அறியாததால், நாம் சோம்பலுக்கு மெத்தையைச் சேர்க்காமல் கைவேலைசெய்யப் பழகிக்கொள்வது உத்தமம்.

### வச. 12—22.

(4) விசுவாசிகள் அக்கிரமங்களைச் செய்து, பின்பு மனஸ்தாபப்பட்டுத் தங்களைத் தாழ்த்தித் [illegible] கட்டளையை தேவகிருபையை முன்னிட்டுச் சீர்திருத்திக்கொள்ளுகையில் [illegible] அவர்களைத் தளரவிடாமல் இன்பங்களால் ஆறுதல் படுத்துகிறார்.

(5) விசுவாசமானது மெய்யான ஏணியாகிய இயேசுவைப்பார்க்கையில், அவர் தேவனை மனிதரோடே ஒப்புரவாக்குகிறதையும், தெய்வீக பராமரிப்பில் அநாதைகளை அளிப்பதையும் அறிந்து எந்த இடத்திலும் எந்த நிலைமையிலும் களிப்பான சந்தோஷம் அடைகிறது.

(6) தேவன் நமக்குத் துணையும் வழிகாட்டியுமாயிருக்கையில் எந்தவருத்தங்களுக்கும் நாம் அஞ்சவேண்டியதில்லை.

(7) தேவனுடைய விசேஷித்த பிரசன்னம் இருக்கிற இடங்களையும் எத்தனங்களையும் பயபக்திக் குரியவைகளாக எண்ணவேண்டும்.

(8) நாம் செய்யும் பொருத்தனைகளைக் கர்த்தருக்குமுன்பாக நிறைவேற்றுவதில் முந்திக்கொள்வது அதிக பாக்கியத்தை வருவிக்கும்.

(9) யாக்கோபின் ஸ்திதியைக் கவனிக்கையில் கேவலமாய்த் தோன்றும். அவன் படுக்கை, பூமி; அவன் தலையணை பெருங்கல்; ஆதரிப்பாருமில்லை ஆற்றுவாருமில்லை. என்றாலும் பரம ஏணி காணப்பட்டதோடு சகலமும் மாறிவிட்டது. பரதேசியான அவன் தேவனுடைய புத்திரனாய்க் காணப்பட்டான். கேவலமான அவன் ஸ்திதி பரமகோலமாயிற்று. ஆலயமில்லாத அந்த ஸ்தலம் வானத்தின் வாசலாயிற்று. மனிதரால் கைவிடப்பட்டவன் மோட்சவாசிகளால் ஆதரிக்கப்பட்டான். அப்படிப்போல, நீசகோலமாயிருக்கிற மனிதருக்குப் பரம ஏணியாகிய ரட்சகர் பிரசன்னமாகிறதோடு மோட்சத்திற்குரிய சுகாநுபவங்கள் கிட்டிற்றென்று சொல்லலாம். தேவனுடைய புத்திரராகிறோம், அவருடைய சமுகத்தை அடைகிறோம்; அவரோடு ஒப்புரவாகி ஜெபத்தினாலும் தியானத்தினாலும் திவ்ய சம்பாஷணை செய்கிறோம். சுருக்கமாய்ச் சொல்லவேண்டுமென்றால் பூலோகம் பரலோகமாகிவிடுகிறது.





# 29. அதிகாரம்.

1. யாக்கோபு ஆரானிலுள்ள கிணற்றண்டையில் சேர்ந்தது. 9. அவன் ராகேலைக் கண்டது. 13. லாபான் அவனை ஏற்றுக்கொண்டது. 18. யாக்கோபு ராகேலுக்காக உடன்படிக்கை பண்ணினது. 23. வஞ்சகமாய் லேயாள் அவனுக்கு விவாகம்பண்ணப்பட்டது. 28. பின்னும் ஏழுவருஷம் சேவகம்பண்ணி, ராகேலையும் விவாகம்பண்ணினது. 32. லேயாள், ரூபன், 33. சிமியோன், லேவி, யூதா என்பவர்களைப் பெற்றது.

1 யாக்கோபு பிரயாணம் பண்ணி, [1]கீழ்த்திசையாரின்
2 தேசத்தில் போய்ச் சேர்ந்தான்.— அங்கே வயல்
வெளியிலே ஒரு கிணற்றையும், அதின் அருகே
மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் கண்
டான்; அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர்
காட்டுவார்கள்; அந்தக் கிணற்றின் வாய் ஒரு பெரிய
3 கல்லினால் அடைக்கப்பட்டிருந்தது.— அவ்விடத்தில்
மந்தைகள் எல்லாம் சேர்ந்தபின் கிணற்றின் வாயி
லிருக்கும் கல்லை மேய்ப்பர் புரட்டி, ஆடுகளுக்குத்
தண்ணீர் காட்டி, மறுபடியும் கல்லை முன்னிருந்தபடி
4 கிணற்றின் வாயில் வைப்பார்கள்.—யாக்கோபு அவர்
களைப் பார்த்து: சகோதரரே, நீங்கள் எவ்விடத்தார்

[1] எண். 23 7. ஓசி. 12. 12.

## 29. அதிகாரம்.

1. "யாக்கோபு பிரயாணம் பண்ணி." முதற்பிறப்புச் சுதந்தரத்திலே தேவனாலும் மனிதராலும் உறுதிப்படுத்தப்பட்ட யாக்கோபு உற்சாகத்தோடே பதான்அராமுக்கு நடந்துபோனான்.

"கீழ்த்திசையாரின் தேசம்." இந்த வாசகம் வழக்கமாய் அரபியாவைக் குறிக்கும். ஆனால் இந்த இடத்தில் வட மெசொப்பொத்தாமியாவில் குடியிருந்த கோத்திரத்தாரைக் குறிக்கும்.

2. "வயல்வெளியிலே ஒரு கிணற்றையும்." இது ரெபெக்காள் தண்ணீர் மொண்ட கிணறல்ல (அதி. 24: 11.). அது பட்டணத்தை அடுத்திருந்தது. அதில் அவள் படிவழியாய் இறங்கினாள் (அதி. 24: 16.). இது வெளியிலே மேய்ச்சலுள்ள இடத்திலிருந்தது.

"அந்தக் கிணற்றின் வாய் ஒரு பெரிய கல்லினால் அடைக்கப்பட்டிருந்தது." ஆரான், சுற்றிலும் செழிப்புள்ளதாயிருந்தாலும் அது வறட்சியான பூமியாயிருந்தது. கிணறு மணலால் தூர்க்கப்பட்டுப் போகாதபடிக்கு அதின் வாய் ஒரு கல்லினால் மூடப்பட்டிருந்தது. அந்தக் கல்லைப் புரட்டித் தள்ளுவது வருத்தமான காரியம். யாக்கோபு எப்படியும் அதை நீக்கி ...

என்றான்; அவர்கள், நாங்கள் ஆரான் ஊரார் என்றார்
5 கள்.— அப்பொழுது அவன்: நாகோரின் குமாரனா
கிய லாபானை அறிவீர்களா என்று கேட்டான்; அறி
6 வோம் என்றார்கள். — அவன் [1]சுகமாயிருக்கிறானா 1 ஆதி. 43. 27.
என்று விசாரித்தான்; அதற்கு அவர்கள்: சுகமாயிருக்
கிறான்; அவன் குமாரத்தியாகிய ராகேல், அதோ,
ஆடுகளை ஓட்டிக்கொண்டு வருகிறாள் என்று சொன்
7 னார்கள். — அப்பொழுது அவன்: இன்னும் வெகு
பொழுதிருக்கிறதே; இது மந்தைகளைச் சேர்க்கிற
வேளை அல்லவே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி,
8 இன்னும் மேயவிடலாம் என்றான். — அதற்கு அவர்
கள்: எல்லா மந்தைகளும் சேருமுன்னே அப்படிச்
செய்யக்கூடாது: சேர்ந்தபின் கிணற்றின் வாயிலுள்ள
கல்லைப் புரட்டுவார்கள்; அப்பொழுது ஆடுகளுக்குத்
தண்ணீர் காட்டுவோம் என்றார்கள்.

அவர்களோடே அவன் பேசிக் கொண்டிருக்கும்
போது; [2]தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் 2 யாத். 2. 16.
கொண்டிருந்த ராகேல் அந்த ஆடுகளை ஓட்டிக்கொண்டு
10 வந்தாள்.—யாக்கோபு தன் தாயின் சகோதரனான லா
பானுடைய குமாரத்தியாகிய ராகேலையும், தன் தாயின்
சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் கண்ட
போது, யாக்கோபு போய், [3]கிணற்றின் வாயிலிருந்த 3 யாத். 2. 17.
கல்லைப் புரட்டி, தன் தாயின் சகோதரனாகிய லாபா

னுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். லாபானுடைய ஆடுகள் வருகிறவரைக்கும் மேய்ப்பர் காத்திருந்ததையும் அவனுடைய ஆடுகளுக்கு முதலில் தண்ணீர் காட்டப்பட்டதையும் கவனிக்கையில் அந்த ஊரார் லாபானுடைய சொத்தாயிருக்கவேண்டும் என்று எண்ணத்தக்கதாயிருக்கிறது. எத்திரோவின் குமாரத்திகளுக்கு இந்தச் சலாக்கியம் கிடைக்கவில்லை. (யாத். 2: 17.)

**5. "நாகோரின் குமாரனாகிய லாபான்."** லாபான் பெத்துவேலின் மகனும் நாகோரின் பேரப்பிள்ளையுமாயிருந்தான். நாகோர் அந்தக் குடும்பத்துக்கு விசேஷித்தவனாயிருந்ததால் அவன் பேர் விசேஷித்து வழங்கப்பட்டது.

**9. "ராகேல் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தாள்."** இக்காலிலும் அந்த இடத்தில் பிரபுக்களுடைய பெண்மக்கள் ஆடுகளை மேய்க்கிற வழக்கமிருக்கிறது.





11 னின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.—பின்பு
யாக்கோபு [1]ராகேலை முத்தஞ்செய்து, சத்தமிட்டு 1 ஆதி. 33. 4: 45. 14.
12 அழுது, — தான் அவள் [2]தகப்பனுடைய மருமக 2 ஆதி. 13. 8: 14. 14, 16.
னென்றும், ரெபெக்காளின் குமாரனென்றும் ராகே
லுக்கு அறிவித்தான். அவள் ஓடிப்போய்த் தன் தகப்
13 பனுக்கு அறிவித்தாள்.— லாபான் தன் சகோதரியின்
குமாரனாகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்ட
போது, அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்
டிக்கொண்டு முத்தஞ்செய்து, தன் வீட்டுக்கு அழைத்
துக்கொண்டுபோனான்; அவன் தன் காரியங்களையெல்
14 லாம் விவரமாய் லாபானுக்குச் சொன்னான். — அப்
பொழுது லாபான்: நீ [3]என் எலும்பும் என் மாம்ச 3 நியா. 9. 2. 2 சமு. 5. 1: 19. 12.
முமானவன் என்றான். ஒரு மாதம்வரைக்கும் யாக்
கோபு அவனிடத்தில் தங்கினான்.

15 பின்பு லாபான் யாக்கோபை நோக்கி: நீ என் மரு
மகனாயிருப்பதினால், சும்மா எனக்கு வேலை செய்ய
லாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல் என்
16 றான். — லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்
தார்கள்; மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர்

**11. "யாக்கோபு ராகேலை முத்தஞ்செய்து, சத்தமிட்டு அழுதான்."** யாக்கோபு தன்னை இன்னான் என்று முதலாவது ராகேலுக்குத் தெரியக்காட்டி, அவளை முத்தஞ்செய்து தன் நீண்ட பிரயாணத்தைச் சுகமாய் முடிக்கவும், இனத்தார் நடுவில்வந்து சேரவும்செய்த தேவதயவை நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். இவ்விரண்டுபேருக்கும் இப்போதுண்டான பாசம் ஜீவகாலபரியந்தம் நிலைநின்றது.

**13. "லாபான்.....அவனைக் கட்டி முத்தஞ்செய்து, ௸"** இதற்கு 77 வருஷங்களுக்குமுன்னே தன் சகோதரி ரெபெக்காள் அறிவித்ததைப்போல் இந்த செய்தியைத் தன் மகள் ராகேல் கொண்டுபோகாதிருந்தாலும் தன் சகோதரி மகன் வந்தசெய்தி லாபானுக்கு மிகுந்த பிரியத்தை உண்டுபண்ணிற்று.

**15. "சம்பளம் எவ்வளவு கேட்கிறாய்?"** யாக்கோபு தான் வந்த நோக்கத்தை லாபானுக்கு விவரித்துச் சொல்லியிருந்தான். (வச. 13.) அந்த நோக்கம் லாபானுடைய எண்ணத்துக்கும் இசைவாயிருந்தது. மேலும் யாக்கோபுடைய வேலை உதவியும் லாபானுக்கு அவசியமாயும் பிரயோசனமாயும் இருந்தது.

17 ராகேல்.—லேயாளுடைய கண்கள் கூச்சப் பார்வையா
யிருந்தது; ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழ
18 கானவளுமாயிருந்தாள்.—யாக்கோபு ராகேல்பேரில்
பிரியப்பட்டு: [1]உம்முடைய இளைய குமாரத்தியாகிய | [1] ஆதி. 31. 41.
ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருஷம் வேலை | 2 சாமு. 3. 14.
19 செய்கிறேன் என்றான். — அதற்கு லாபான்: நான்
அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப்பார்க்
கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம்,
20 என்னிடத்தில் தரித்திரு என்றான். — அந்தப்படியே
யாக்கோபு ராகேலுக்காக [2]ஏழு வருஷம் வேலை செய் | [2] ஆதி. 30. 26. ஓசி. 12. 12.
தான்; அவள்பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த
வருஷங்கள் அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றி
னது.

21 பின்பு யாக்கோபு லாபானை நோக்கி: என் நாட்கள்
நிறைவேறின படியால், என் மனைவியிடத்தில் நான் | [3] நியா. 15. 1.

---

**17.** "லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது." லேயாள் என்பதற்குச் "சோர்பு" அல்லது "இளைப்பு" என்றர்த்தம். அவளுக்கு இருந்த பார்வைக்கூச்சமானது ஒரு விசேஷித்த குறைவாக எண்ணப்பட்டது. தெளிந்த கண் வியந்துகொள்ளப்படுவது அந்நாட்டு வழக்கமாயிருந்தது (1 சாமு. 16: 12.). ராகேல் ரூபவதியும் அழகுள்ளவளுமாயிருந்தாள். யாக்கோபும் அவளை அதிகமாய் நேசித்தான். அப்படியிருந்தும் ராகேல் மேசியாவின் முப்பாட்டியாகத் தெரிந்துகொள்ளப்படாமல் லேயாளே தெரிந்துகொள்ளப்பட்டாள்.

**18.** "ராகேலுக்காக........வேலை செய்கிறேன்." ஆபிரகாமின் வேலைக்காரன் ஈசாக்குக்குப் பெண்கொள்ள வந்தபோது அநேகவிதமான பரிசுகளைக் கொடுத்தான். யாக்கோபு அப்படிப்பட்டவைகளைக் கொண்டுவரவில்லை. ஆதலால் பரிசத்துக்காக ஏழுவருஷம் கைப்பாடு படவேண்டியதாயிருந்தது.

**19.** "அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம்." யாக்கோபு முறைமாப்பிள்ளையாயிருந்ததால் லாபான் இப்படிச் சொன்னான். கால் கெட்டுப் போகாதபடிக்கு இப்படிப்பட்ட சம்பந்தம் கலப்பது நம்முடைய தேசத்திலும் வழக்கமாயிருக்கிறது.

**20.** "அவனுக்குக் கொஞ்சநாளாகத் தோன்றினது." யாக்கோபுக்கு இப்போது 64 வயது குறையாதபடிக்கு இருக்கும். அவன் ராகேல்பேரில் வைத்த அன்பு ஆயுள்பரியந்தம் ஒரேசீரா யிருந்துவந்தது. அவன் குமாரரோ மிக இளமையில் விவாகஞ் செய்தார்கள்.

**21.** "என் நாட்கள் நிறைவேறினபடியால்." குறிக்கப்பட்ட ஏழுவருஷம் நிறைவேறினபடியால் லாபானிடத்தில் தனக்கு ராகேலை விவாகம்பண்ணிக்கொடுக்கும்படி யாக்கோபு கேட்டான்.





சேரும்படி அவளை எனக்குத் தரவேண்டும் என்
22 றான்.—அப்பொழுது லாபான் அவ்விடத்து மனிதர்
எல்லாரையும் கூடிவரச்செய்து [1]விருந்துபண்ணி | [1] நியா. 11. 10. யோ. 2. 1, 2.
23 னான்.—அன்று இராவிலே அவன் தன் குமாரத்தியாகிய
லேயாளை அழைத்துக்கொண்டுபோய், அவனிடத்தில்
24 விட்டான்; அவளை அவன் சேர்ந்தான். — லாபான்
தன் வேலைக்காரியாகிய சில்பாளை தன் குமாரத்தியா
கிய லேயாளுக்கு வேலைக்காரியாகக் கொடுத்தான்.—
25 காலையிலே, இதோ, அவள் லேயாள் என்று யாக்
கோபு கண்டு, லாபானை நோக்கி: ஏன் எனக்கு இப்
படிச் செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில்
வேலை செய்தேன். பின்னை ஏன் எனக்கு வஞ்சகம்
26 பண்ணினீர் என்றான்.—அதற்கு லாபான்: மூத்தவள்
இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்
27 கம் அல்ல.—இவளுடைய [2]ஏழு நாளை நிறைவேற்று; | [2]
அவளையும் உனக்குத் தருவேன்; அவளுக்காகவும்
நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலைசெய்
என்றான்.

---

**23.** "லேயாளை அழைத்து." சகோதரிகள் இருவருடைய சத்தமும், ரூபமும் ஒருவாறு ஒத்திருக்கலாம். மேலும் பெண் முக்காடிடப்பட்டவளாய்ப் புருஷன்வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டதால் இவ்வஞ்சகம் இலகுவாய்க் கண்டுபிடிக்கப்படமாட்டாது. லேயாளும் மனதார இந்த வஞ்சனைக்கு உடன்பட்டாள். ஆதலால் யாக்கோபு அவள்பேரில் வெறுப்பைக் காட்ட நிமித்தமாயிற்று.

**24.** "சில்பாளை..........வேலைக்காரியாகக் கொடுத்தான்." பெத்துவேல் ரெபெக்காளுக்கு தெபொராளையும், வேலைக்காரிகளையும் கொடுத்தான் (ஆதி. 24: 61.). லாபான் அவ்வளவு உதாரத்தைக் காட்டவில்லை. ஆதலால் அவன் குமாரத்திகளும் அவன்பேரில் அதிகப்பாசம் காட்டவில்லை. (ஆதி. 31: 15.)

**26.** "இவ்விடத்து வழக்கம் அல்ல." நம்முடைய தேசத்தில் மூத்தமகளை வைத்துவிட்டு இளையவளை விவாகம்பண்ணிக்கொடுப்பது வழக்கமேயில்லை. அப்படியே ஆரானிலும் இருந்தது. ஆனால் இந்த வழக்கம் யாக்கோபுக்குத் தெரியாததாகக் காணப்படுகிறது. லாபான் இன்னமும் யாக்கோபிடத்தில் வேலைவாங்கும்படியான உபாயத்தையும் அதோடே தேடிக்கொண்டான்.

**27.** "இவளுடைய ஏழு நாளை நிறைவேற்று." விவாக விருந்து ஏழுநாள் வரையும் நடக்கும் (நியா. 14: 12.). ராகேலுக்கு முந்தி லே[illegible]

28 அந்தப்படியே யாக்கோபு, இவளுடைய ஏழுநாளை
நிறைவேற்றினான். அப்பொழுது தன் குமாரத்தியா
கிய ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்
29 தான். — மேலும் லாபான் தன் வேலைக்காரியாகிய
பில்காளைத் தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு வேலைக்
30 காரியாகக் கொடுத்தான். — யாக்கோபு ராகேலையும்
சேர்ந்தான்; லேயாளைப்பார்க்கிலும் [1]ராகேலை அவன் [1] உபா. 21. 15.
அதிகமாய் நேசித்து, பின்னும் ஏழு வருஷம் அவ
னிடத்தில் சேவித்தான்.

31 லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று
கர்த்தர் கண்டு, [2]அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்; [2] சங். 127. 3.
32 ராகேலோ மலடியாயிருந்தாள். — லேயாள் கர்ப்பவ
தியாகி ஒரு குமாரனைப் பெற்று: கர்த்தர் என் சிறு
மையைப் பார்த்தருளினார்; இப்பொழுது என் புரு
ஷன் என்னை நேசிப்பார் என்று சொல்லி, அவனுக்கு
33 *ரூபன் என்று பேரிட்டாள். — மறுபடியும் அவள் * பார்த்தல்.

செய்துகொடாதிருந்தால் அது அவளை அவமானப்படுத்துகிறதாயிருக்கும். லாபான் தன் இளையமகள் ராகேலையும் யாக்கோபுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாய் வாக்குக் கொடுத்தபடியால் குடும்பத்தில் தன்னால் சமாதானப் பேதம் நேரிடாதபடி யாக்கோபு இணங்கிப்போனான்.

**28.** "ராகேலையும் மனைவியாகக் கொடுத்தான்." லேயாளை விவாகஞ் செய்த ஏழுநாட்களுக்குப் பின்போ (ஆதி. 29: 27.) ஏழுவருஷத்துக்குப் பின்போ (ஆதி. 31: 41.) யாக்கோபு ராகேலையும் விவாகஞ் செய்தான். பல மனைவிகளை விவாகஞ் செய்யும் முறைமை விலக்கப்படாதிருந்ததாலும், ஏசா இரண்டு மனைவிகளை விவாகஞ் செய்ததற்காகக் குற்றஞ் சாட்டப்படாமல், ஏத்தின் புத்திரர் நடுவில் பெண் கொண்டதற்காகப் பெற்றோரின் பிரியத்தை இழந்ததாலும் யாக்கோபு ராகேலின்பேரில் மிகுந்த பட்சமுள்ளவனாயிருந்ததாலும் அவளையும் மனைவியாகப் படைத்துக்கொண்டான். மனைவியைத் தள்ளிவிடுதல் அக்காலத்தில் ஏற்பாடாயிராததால் அவன் லேயாளைத் தள்ளாமல் வைத்துக்கொண்டான்.

**31.** "லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று." யாக்கோபு லேயாளின்மேல் பட்சம் வைக்கவில்லை. ஆனால் தேவன் அவளுக்குப் புத்திர சந்தானத்தைக் கட்டளையிட்டார். அதினிமித்தம் அவள் யாக்கோபால் ஒருவாறு மதிக்கப்பட்டாள். பேறு நின்றபோது அவன் அவளை அசட்டைசெய்தான்.

**32.** "ரூபன்" என்பதற்கு "ஒரு குமாரனைப் பார்" என்றர்த்தம். ஒரு குமாரனைக் கண்டால் தன் புருஷன் தன்னை நேசிப்பான் என்றெண்ணினாள். [illegible] தான் எண்ணினபடி முடியவில்லை.





கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: நான் அற்ப
மாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளி, இவ
னையும் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்குச்
34 *சிமியோன் என்று பேரிட்டாள். — பின்னும் அவள் * கேட்குதல்.
கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று: என் புருஷ
னுக்கு மூன்று குமாரரைப் பெற்றபடியால் அவர்
இப்பொழுது என்னோடே சேர்ந்திருப்பார் என்று
35 சொல்லி, அவனுக்கு †லேவி என்று பேரிட்டாள். — † சேருதல். எண். 18. 2. 4.
மறுபடியும் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்
பெற்று: இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று
சொல்லி, அவனுக்கு ‡யூதா என்று பேரிட்டாள்; ‡ துதி. மத். 1. 2.
பிற்பாடு அவளுக்குப் பிள்ளைப்பேறு நின்றுபோயி
ற்று.

**33.** "சிமியோன்." இதற்கு "கேட்குதல்" என்றர்த்தம். தன் புருஷனைப்பற்றிய நம்பிக்கை அற்றுப்போனதையே தேவன் அதற்கு ஈடாக ஒரு குமாரனை ஈவாகக் கொடுத்தார் என்று இந்தப் பேரை யிட்டாள்.

**34.** "லேவி" என்பதற்குப் "பொருந்துதல்" என்றர்த்தம். லேயாளுடைய கூடாரத்தில்மாத்திரம் பிள்ளைகள் ஓடி விளையாடுவார்களானபடியால் தன் புருஷன் தன்னுடன் பொருந்திப்போவார் என்று எண்ணினாள்.

**35.** "யூதா" என்பதற்குத் "துதி" என்றர்த்தம். லேயாள் தனக்குண்டான மனச்சஞ்சலத்தில் அனலான பக்திவைராக்கியத்தைக் காண்பிக்கிறாள். அவள் உடன்படிக்கையின் கர்த்தரிடத்தில் ஆறுதலைக் கண்டடைந்து அவருக்குத் துதியாகத் தன் குமாரனுக்குப் பேரிட்டாள். அசட்டையாக எண்ணப்பட்ட இந்த ஸ்திரீயின் புத்திரன் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வித்தானவருக்கு முற்பிதாவாயிருந்தான்.

## படிப்பினை.

### வச. 1—15.

(1) நாம் பாரமான கடமையை நிறைவேற்றுகையில் சோர்ந்துபோகாதபடிக்கு விசேஷித்த ஆறுதல் நமக்கு அளிக்கப்படுவதுண்டு. அப்போது தேவன் தாம் செய்திருக்கிற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவர் என்பதை அநுபோகத்தால் அறியலாம்.

(2) நல்ல சம்பாஷணை செய்து மற்றவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறதால் அவர்களுடைய பிரியம் இயல்பாய் நமக்குண்டாகும்.

(3) தம்மிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு அநுகூலஞ் செய்யும்படி சுயநயமுள்ளவர்களின் இருதயத்தையும் தேவன் திருப்புகிறவராயிருக்கிறார்.

(4) மற்றவர்களுக்குப் பிரயோசனமுண்டாக வேலையில் சுறுசுறுப்பாயிருக்கிறவர்கள் நன்கு மதிக்கப்படுவார்கள்.

(5) இனத்தார் வேலைசெய்கையில் அவர்கள் கூலியில் குறையாமல் அவர்களுக்கு ஆதரிப்பும், உற்சாகமுமுண்டாக நடப்பது நன்மை.

## 30. அதிகாரம்.

1. ராகேல் மலடியாயிருந்ததினிமித்தம் துக்கப்பட்டு, தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்குப் பெண்டாளாகக் கொடுத்தது. 5. அவள் தாண், நப்தலி என்பவர்களைப் பெற்றது. 9. லேயாள் தன் வேலைக்காரி சில்பாளை யாக்கோபுக்குக் கொடுக்க, அவள் வழியாய், காத், ஆசேர் என்பவர்கள் பிறந்தது. 15. ரூபன் கண்டெடுத்த தூதாயீகளை ராகேல் இச்சித்ததினால், லேயாள் யாக்கோபை ஒரு இராத்திரிக்குத் தன் வசப்படுத்திக்கொண்டது. 17. லேயாள், இசக்கார், செபுலோன், தீனாள் என்பவர்களைப் பெற்றது. 22. ராகேல் யோசேப்பைப் பெற்றது. 25. யாக்கோபு லாபானை விட்டுப் போக மனதாயிருந்தது. 27. அவன் லாபானிடத்திலே பின்னும் சேவகம்பண்ணப் புது உடன்படிக்கைபண்ணினது. 37. யாக்கோபு தன் உபாயத்தினால் ஐசுவரியவானானது.

ராகேல் தான் யாக்கோபுக்குப் [1]பிள்ளைகளைப் பெறாததைக் கண்டு, தன் சகோதரியின்மேல் பொறாமைகொண்டு, யாக்கோபை நோக்கி: [2]எனக்குப் பிள்ளை

[1] ஆதி. 29.31:37. 1 சாமு. 3. 3.
[2] யோபு. 5. 2.

வச. 16—35.

(6) அன்பினால் ஏவப்பட்டுச் செய்யப்படும் கிரியை இலேசும் சந்தோஷமுமாய்க் காணப்படும். தேவனைப்பற்றிய அன்பு நம்மிடத்தில் விளங்கினால் அவருடைய கற்பனைகளைப் பிரியத்தோடே கைக்கொண்டு அதின்வழியாய் நடப்போம்.

(7) மற்றவர்களை வஞ்சிக்கிறவர்கள் தாங்களும் வஞ்சனைக்குட்பட்டுத் தங்கள் ஜீவகாலமெல்லாம் அதின் வருத்தத்தை அநுபவிப்பார்கள்.

(8) மனிதரால் புறக்கணிக்கப்படுகிறவர்களுக்கு அடிக்கடி தேவன் நன்மைகளை அநுக்கிரகித்து அவர்களுடைய வாயைத் துதியினால் நிரப்புகிறார்.

(9) பிள்ளைகள் கர்த்தர் தரும் சுதந்தரம். அவர்களை அவருக்கென்று வளர்ப்பது பெற்றோர் கடமை.

## 30. அதிகாரம்.

**1. "ராகேல்.........தன் சகோதரியின்மேல் பொறாமைகொண்டு."** லேயாள் ராகேலுக்கு யாதொரு பொல்லாப்பும் செய்யவில்லை. தேவன் அவளைப் புத்திரசந்தானத்தால் ஆசீர்வதித்ததையிட்டு ராகேல் தன் சகோதரியிடத்தில் மனமடிவைக் காட்டினாள். யாக்கோபின் குடும்பத்தில் மனஸ்தாபங்கள் நேரிடத் துவக்கினது, அவனுக்கு மனச்சங்கடத்தை உண்டுபண்ணிற்று.

**"எனக்குப் பிள்ளை கொடும்."** "பிள்ளைகளை"க் கொடும் என்றிருக்க வேண்டும். ராகேல், லேயாள்பேரில் கொண்ட பொறாமையை யாக்கோபிடத்திலும் காட்டினாள். பிள்ளையில்லாத வீடு வீடல்ல என்பது நமது தேசத்தின் முதியோர் மொழியாயிருக்கிறது. ராகேல் தனக்குக் குழந்தையில்லாததைக் கண்டபோது, தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாய்க் கேட்கவேண்டியதாயிருந்தது. அதற்குப் பதிலாக அவள் தன் புருஷனை மனம் நொந்தாள். சாமுவேலின் தாயாகிய அன்னாளுக்கும் இவளுக்கும் குணத்தில் எவ்வளவு





ளைகளைக் கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள்.—
2 அப்பொழுது யாக்கோபு ராகேலின்மேல் கோபங்
கொண்டு: [1]தேவனல்லலோ உன் கர்ப்பத்தை அடைத்
3 திருக்கிறார், நான் தேவனா? என்றான்.—அப்பொழுது
அவள்: இதோ, [2]என் வேலைக்காரியாகிய பில்காள்
இருக்கிறாளே; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப்
பெறவும், அவளாலாகிலும் என் வீடு கட்டப்படவும்
4 அவளிடத்தில் சேரும் என்று சொல்லி,—அவனுக்
குத் தன் வேலைக்காரியாகிய பில்காளை மனைவியாகக்
கொடுத்தாள்; அப்படியே யாக்கோபு அவளைச் சேர்ந்
தான்.

[1] ஆதி. 16. 2. 1 சாமு. 1. 5.
[2] ஆதி. 16. 2.

வித்தியாசத்தைப் பார்க்கிறோம். ராகேல் தன் சகோதரியால் விசனப்படுத்தப்படவில்லை. அன்னாள் தன் சக்களத்தியால் மிகவும் விசனப்படுத்தப்பட்டாள். ராகேல் பொறாமைகொண்டாள்; அன்னாள் அழுதாள்; ராகேல் பிள்ளைகள் வேண்டும் என்று விரும்பினாள். இரண்டாம் பிள்ளை பெறுவதில் மரித்தாள். அன்னாள் ஒரு குழந்தைக்காக விண்ணப்பஞ் செய்தாள். பல குழந்தைகளைப் பெற்றுக்கொண்டாள். ராகேல் பிடிவாதமுள்ளவள், அன்னாள் அமைதலும் பயபக்தியுமுள்ளவள். அன்னாள் மாதிரி பின்பற்றப்படுகிறது. ராகேல் மாதிரி எண்ணிக்கைக்குரியதாய் மதிக்கப்படுகிறதில்லை.

**"இல்லாவிட்டால் நான் சாகிறேன்."** எபிரெய ஸ்திரீயானவள் தான் மலடியாயிருப்பதைப் பெரிய இலச்சையாகவும் இடராகவும் எண்ணுகிறதுண்டு (1 சாமு. 1. 10.). ராகேல் தன்னுடைய மனநோவினாலே இப்படிச் சொன்னபோதிலும் பொறுமையற்றவளாய் மொறுமொறுப்பைக் காட்டினாள். இவள் சொன்ன வார்த்தை, பிள்ளையில்லாதவன் பிணம் என்று நமது தேசத்தார் சொல்வதற்குச் சரி.

**2. "யாக்கோபு ராகேலின்மேல் கோபங்கொண்டு."** ராகேல், லேயாள் பேரில் காட்டின பொறாமையையும், தேவன்பேரில் அவளுக்குண்டாயிருந்த அவநம்பிக்கையையும் யாக்கோபு கண்டு அவளைக் கடிந்துகொண்டான்.

**"நான் தேவனா?"** பிள்ளைகள் கர்த்தரால் கிடைக்கும் பலன். உனக்குப் பிள்ளைகளைக் கட்டளையிட நான் தேவனல்லவே. என் தேவனுக்கு விரோதமாய் மொறுமொறுக்கிறாய். நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள் என்று ஆசீர்வாதம் அருளின அவரை நோக்கி விண்ணப்பஞ் செய்யும்போது அவர் உன் கர்ப்பத்தைத் திறப்பார் என்பதுபோலப் பேசினான்.

**3. "இதோ என் வேலைக்காரியாகிய பில்காள் இருக்கிறாள்."** ராகேல் இப்படிச் செய்தது சரியல்ல. தான் மலடியாயிருந்ததினாலும், தன் சகோதரியின்மேல் வைத்த பொறாமையினாலும் இப்படிச் செய்தாள். சாராளும் இவளும் கர்த்தருடைய காலத்திற்குக் காத்திருக்கவேண்டியதற்குப் பதிலாகப் பொறுதியற்ற குணத்தைக் காட்டினார்கள்.

5 பில்காள் கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு ஒரு
6 குமாரனைப் பெற்றாள். — அப்பொழுது ராகேல்:
[1]தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும்
கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று
சொல்லி, அவனுக்குத் *தாண் என்று பேரிட்டாள். —
7 மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள்
கர்ப்பவதியாகி, யாக்கோபுக்கு இரண்டாம் குமா
8 ரனைப் பெற்றாள். — அப்பொழுது ராகேல்: நான்
மகாபோராட்டமாய் என் சகோதரியோடே போராடி
மேற்கொண்டேன் என்று சொல்லி, அவனுக்கு †நப்
தலி என்று பேரிட்டாள்.

9 லேயாள் தான் பிள்ளைபெறுகிறது நின்றுபோன
தைக் கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்பாளை
அழைத்து, அவளை யாக்கோபுக்கு மனைவியாகக்
10 கொடுத்தாள். — லேயாளின் வேலைக்காரியாகிய சில்

[1] சங். 35: 24; 43. 1. புலம்பல். 3. 59.
* நியாயத்தீர்த்தல்.
† போராட்டம்.

6. "தேவன் என் வழக்கைத் தீர்த்து." ராகேல் தன் அடிமைப்பெண் பெற்ற பிள்ளையைத் தன்னுடையதாக எண்ணி மலடியாகத் தான் எண்ணப்பட்ட நிந்தை நீங்கிப்போக தேவன் நியாயஞ்செய்தார் என்று இப்படிச் சொன்னாள்.

"என் சத்தத்தையும் கேட்டு." ராகேல் முறுமுறுப்பை யாக்கோபு கவனித்து அவன் அவளுக்கு நல்ல போதனையைச் சற்றுக்கொடுத்திருக்கவேண்டும். அதின்பேரில் அவள் கர்த்தரை நோக்கிக் கெஞ்சினாள். அவர் அவளுடைய ஜெபத்தைக் கேட்டு அவள் மனவிருப்பப்படி அவளுக்கு பில்காள் மூலமாய் ஒரு குமாரனை அருளினார்.

"தாண்" என்பதற்கு "நியாயந்தீர்க்குதல்" என்றர்த்தம்.

8. "நான் மகா போராட்டமாய்." எபிரெயுவில் "தேவபோராட்டமாய்" என்றிருக்கிறது. ஒன்றைப் பெருத்துக் காட்டுவதற்கு யூதர் தேவநாமத்தைச் சேர்ப்பது வழக்கம். வாக்கியத்தின் இருப்புதல் சரியான கருத்தைக் காட்டுகிறது. சிலர் "போராட்டம்" என்பது ஊக்கமான ஜெபத்தைக் குறிக்கும் என்று வியாக்கியானப்படுத்துவார்கள். ஆனால் அது சரியெனத் தோன்றுகிறதில்லை. ஏனெனில் இந்த அர்த்தம் என் சகோதரியோடே "போராடினேன்" என்பதற்கு ஒத்துவராது (ஆதி. 32: 24.). யாக்கோபு போராடினான் என்பதில் ஜெபத்தைக் குறிக்கும். ஆனால் அங்கே மூலத்தில் முற்றிலும் வேறே வினைச்சொல் வழங்கப்பட்டிருக்கிறது. ராகேல் ஆகாதவழக்கத்தை நடப்பித்து மேற்கொண்டேன் என்று சொன்னது இழிவுக்குரியது. மேலும் அவளுடைய இந்தச் செய்கையானது யாக்கோபு லேயாளை மறக்கப்பண்ணுவதற்கேதுவாயிருந்தது.

"நப்தலி" என்பதற்கு "என் போராட்டம்" என்றர்த்தம்.

9–13. "லேயாள்........சில்பாளை அழைத்து." லேயாளின் பேறுநின்றதில் யாக்கோபு அவள்பேரில் வைத்த பாசம் ஒருவாறு நின்றுபோக ஏதுவா





பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள். —
11 அப்பொழுது லேயாள்: ஏராளமாகிறதென்று சொல்லி,
12 அவனுக்குக் *காத் என்று பேரிட்டாள். — பின்பு
லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோ
13 புக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள். — அப்பொ
ழுது லேயாள்: நான் [1]பாக்கியவதி, ஸ்திரீகள் என்னைப்
பாக்கியவதி என்பார்கள் என்று சொல்லி, அவனுக்கு
†ஆசேர் என்று பேரிட்டாள்.

14 கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்
வெளியிலே போய், தூதாயீம் கனிகளைக் கண்டெடு
த்து, அவைகளைக் கொண்டுவந்து தன் தாயாகிய லே
யாளிடத்தில் கொடுத்தான். அப்பொழுது ராகேல்
லேயாளை நோக்கி: உன் குமாரனுடைய [2]தூதாயீம்
கனியில் எனக்குக் கொஞ்சம் தா என்றாள். —
15 அதற்கு அவள்: நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது
[3]அற்பகாரியமா? என் குமாரனுடைய தூதாயீம் கனி

* ஏராளம்.
[1] நீதி. 31. 28. லூ. 1. 48.
† ஆசீ = பாக்கியம்.
[2] உன்னத. 7. 13.
[3] எண். 16. 9, 13. ஏசா. 7. 13.

யிருந்தது. அந்தப் பாசம் அற்றுப்போகாதபடிக்கு அவள் ராகேலுடைய மாதிரியைப் பின்பற்றினாள். இந்த ஸ்திரீகளுடைய நடக்கைகளை நம்முடைய சன்மார்க்க ஒழுக்கங்களைக்கொண்டு நாம் மதிக்கக்கூடாது. லேயாள் தன் வேலைக்காரியை யாக்கோபுக்குக் கொடுத்ததை ஒரு புகழ்ச்சியாகப் பேசியிருக்கிறாள் (வச. 18.). காத் என்பதற்கு "அதிஷ்டம்" என்றர்த்தம். யூதர் தங்கள் ஜெபஆலயத்தில் அதிஷ்டம் வருகிறது என்று வாசிக்கிறார்கள். காத் என்பது ஒரு விக்கிரகத்துக்கும் பேர் (ஏசா. 65: 11.). சில்பாளுடைய இரண்டாம் குமாரனுக்கு ஆசேர் என்று பேர். அதற்கு "பாக்கியம்" என்றர்த்தம்.

14. "ரூபன் வயல்வெளியிலே போய்." வயல்வெளி என்பது சாகுபடியான இடத்தைக் குறியாமல் வனவெளியைக் குறிக்கும். ரூபனுக்கு இப்போது பதினைந்து இருபது வயசிருக்கலாம். லேயாள் பேறு மறிபட்டுப் போனாள் என்று எண்ணுவதற்கு சில வருஷங்களாவது கடந்திருக்கவேண்டும். அப்புறம் சில்பாள் இரண்டு பிள்ளைகளைப் பெற மூன்று நாலு வருஷங்கள் செல்லும். மேலும் யாக்கோபுக்குத் தீனாளைத்தவிர வேறே குமாரத்திகளும் இருந்தார்கள் (ஆதி. 37: 37; 46: 7.). அந்தக் குமாரத்திகள் மறுமனையாட்டிகளால் பிறந்திருக்கலாம். ஆகவே ரூபன் நல்ல பிராயமுள்ள வாலிபனாயிருந்திருக்கவேண்டும்.

"தூதாயீம் கனிகள்." "காமக்கனி." "வசியக்கனி." அது நாவுக்கு ருசியும் நாசிக்கு வாசனையும் பார்வைக்குப் பகட்டுமான ஓர்வகைப் பழம். அது சிவந்தநிறமும் மிருதுவான தசையுமுள்ளது. அத்தேசத்தில் அது அநேக

களையும் *எடுத்துக்கொள்ளவேண்டுமோ என்றாள்;
அதற்கு ராகேல்: உன் குமாரனுடைய தூதாயீம் கனி
களுக்கு ஈடாக இன்று இரவு அவர் உன்னோடே
16 சயனிக்கட்டும் என்றாள்.—சாயங்காலத்தில் யாக்
கோபு வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப்
பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய்: என் குமா
ரனுடைய தூதாயீம் கனிகளால் உம்மைக் கொண்
டேன்; ஆகையால், நீர் என்னிடத்தில் வரவேண்டும்
என்றாள்; அவன் அன்று இரவு அவளோடே சயனித்
தான்.
17 தேவன் லேயாளுக்குச் செவிகொடுத்தார். அவள்
கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப்
18 பெற்றாள்.—அப்பொழுது லேயாள்: நான் என்
வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைத்
தேவன் எனக்குத் தந்தார் என்று சொல்லி, அவனுக்கு
19 *இசக்கார் என்று பேரிட்டாள்.—அப்புறம் லேயாள்
கர்ப்பவதியாகி யாக்கோபுக்கு ஆறும் குமாரனைப்

* பலன் = கூலி.

விண்பத்திக்குரிய பதார்த்தமாயிருந்தது. கர்ப்பமுண்டாவதற்கு அது கைகண்ட மருந்தாகச் சாதாரணமாய் எண்ணப்பட்ட முகாந்தரமாய் எபிரெயுவில் அந்த வர்க்கத்துக்குப் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ராகேலுக்கும் அந்த எண்ணம் இருந்ததால் தன் கர்ப்பப்பிறப்பாய்ப் பிள்ளை கிடைக்கவேண்டும் என்ற அவாவுள்ளவளாய் அந்தக் கனியைக் கேட்டிருக்கலாம்.

**18.** "இசக்கார்" என்பதற்குக் "கூலி" என்றர்த்தம். லேயாள் யாக்கோபை ராகேலிடத்திலிருந்து தூதாயீம் கனியால் கொண்டதினிமித்தம் இந்தப் பேரைத் தன் ஐந்தாம் மகனுக்கு இட்டாள். அதோடே உயர்ந்த கருத்தோடும் அந்தப் பேர் கொடுத்தாள் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது. அவள் தேவன் எனக்குப் பலனைத் தந்தார் என்கிறாள். அவள் தன்னை ஒறுத்து தன் புருஷனைத் தன் வேலைக்காரிக்குக் கொடுத்ததற்காகத் தனக்குக் கையின் மேல் பலன்கிடைத்ததாக எண்ணினாள். தேவன் லேயாளுக்குச் செவிகொடுத்தார் என்று சொல்லியதைக் கவனிக்கையில் லேயாள் தன் புருஷனோடே சேர்ந்ததில் ஆசீர்வாதம் கிடைக்கும்படி ஜெபம் பண்ணினாள் என்று நினைக்கத்தக்கது. அருவருப்பான காரியத்தோடே சம்பந்தப்பட்ட ஜெபம் விசேஷித்ததென்று சொல்லத்தக்கதல்ல என்று சொல்வாருண்டு. அது நிசம் என்கிலும் லேயாள் ராகேல் என்பவர்கள் கல்லாதவர்கள், பயிற்சிக் குறைவுள்ளவர்கள். அவர்களுடைய அவாவு சந்தானப் பெருக்கத்தைப்பற்றியேயிருந்தது. அவ்விரண்டுபேரில் லேயாள் அதிகப் பக்திமுயற்சியுள்ளவளாயிருந்தாள். அவள் தன் புருஷனைக் கொள்ளும்படி நேரிட்டதுதான் குறைவான காரியம்.





20 பெற்றாள்.—அப்பொழுது லேயாள்: தேவன் எனக்கு
நல்ல ஈவைத் தந்தார்; என் புருஷனுக்கு நான் ஆறு
குமாரரைப் பெற்றபடியால், இப்பொழுது அவர்
என்னுடனே வாசம்பண்ணுவார் என்று சொல்லி,
அவனுக்குச் *செபுலோன் என்று பேரிட்டாள்.—
21 பின்பு அவள் ஒரு குமாரத்தியையும் பெற்று, அவளு
க்குத் †தீனாள் என்று பேரிட்டாள்.

* வாசஸ்தலம். 4. 13.

† நியாயத்தீர்ப்பு.

22 தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத்
தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி
23 செய்தார்.—அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்
பெற்று: தேவன் *என் நிந்தையை நீக்கிவிட்டார் என்
24 றும்,—இன்னும் ஒரு குமாரனைக் கர்த்தர் எனக்குத்
தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு ‡யோசேப்பு
என்று பேரிட்டாள்.

* 1 சாமு. 1. 6. லூக். 4. 1.

‡ கூட்டுதல்.

**20.** "செபுலோன்" என்பதற்கு "வாசஸ்தலம்" என்றர்த்தம். ஆண்மக்களாலே தாய்மாருக்கு மேம்பாடுண்டாவதால், லேயாள், தன் புருஷன் தனது பேரில் அதிகமான பாசம் கொள்வான் என்று நினைத்தாள். இந்த எண்ணம் அவமாய்ப் போகவுமில்லை.

**21.** "தீனாள்" என்பதற்கு "நியாயத்தீர்ப்பு" என்றர்த்தம். யாக்கோபுக்கு வேறே பெண்மக்களுமிருந்தார்கள் (ஆதி. 37: 35; 46. 7.). சிமியோனும் லேவியும் தீனாள் விஷயத்தில் பிந்தியகாலத்தில் சம்பந்தப்பட்டு முதற்பிறப்புச் சுதந்தரத்தை இழந்ததினால் அவள் பிறப்பும் பேரும் இங்கே காட்டப்பட்டிருக்கிறது.

**22-24.** "தேவன் ராகேலை நினைத்தருளினார்." ராகேல் நீண்டகாலமாய் மலடியாயிருந்தது அவள் தன்னைத் தாழ்த்தவும் சீர்ப்படவும் ஏதுவாயிருந்தது. அவள் தூதாயீம் கனியின்பேரில் நம்பிக்கை வையாமல் பிள்ளைகளை ஈவாக அருளுகிற தேவனை நோக்கிப் பார்த்தாள். கர்த்தர் அவள் ஜெபத்தைக் கேட்டதில் அவளை நினைத்தருளினார் என்று சொல்லலாம். அவள் தன் மகனுக்கு யோசேப்பு என்று பேரிட்டதில் ஈரர்த்தமிருக்கிறது. ஒன்று "நீக்கிவிடுதல்," மற்றது "கூட்டுதல்;" பிந்தின அர்த்தம் ராகேலுடைய கருத்தாயிருந்தது. தேவன் அவளுக்கு இன்னொரு குமாரனையுங் கொடுத்தார். ஆனால் அவள் ஜீவனுக்கு அதோடே முடிவு நேரிட்டது. யாக்கோபு பதானாராமைவிட்டுப் புறப்படுவதற்கு ஆறு ஏழு வருஷங்களுக்கு முந்தி யோசேப்பு பிறந்திருக்கவேண்டுமாதலால், ராகேல் 26 வருஷம் பிள்ளையில்லாதிருந்திருக்கவேண்டும். யோசேப்பு பிறந்ததையிட்டு ராகேலுக்குச் சந்தோஷமிருந்தாலும் அவள் லேயாள்மேல் முன்போல அதர்மமாய் இப்போது வெற்றிகூறவில்லை.

25 ராகேல் யோசேப்பைப் பெற்றபின், யாக்கோபு
லாபானை நோக்கி: [1]நான் என் ஸ்தானத்திற்கும் என் — [1] ஆதி. 24. 54: 56.
26 தேசத்திற்கும் போக என்னை அனுப்பிவிடும்.—நான்
உமக்கு ஊழியஞ்செய்து சம்பாதித்த என் மனைவி
களையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தாரும்; நான்
போவேன், [2]நான் உம்மிடத்தில் சேவித்த சேவகத்தை — [2] ஆதி. 29. 20, 30.
நீர் அறிந்திருக்கிறீர் என்றான்.

27 அப்பொழுது லாபான்: உன் கண்களில் எனக்குத்
தயவு கிடைத்ததேயானால் நீ இரு; [3]உன் நிமித்தம் — [3] ஆதி. 39. 3, 5. சங். 1. 3. ஏசா. 61. 9.
கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால்
28 அறிந்தேன்.—உன் சம்பளம் இன்னதென்று எனக்குச்
சொல், [4]நான் அதைத் தருவேன் என்றான். — [4] ஆதி. 29. 15.

29 அதற்கு அவன்: நான் உம்மைச் சேவித்த விதமும்,
[5]உம்முடைய மந்தை என்னிடத்தில் இருந்த விதமும் — [5] மத். 24. 45. தீத். 2. 10.
30 அறிந்திருக்கிறீர்.—நான் வருமுன்னே உமக்கு இருந்
தது கொஞ்சம்; நான் வந்தபின் கர்த்தர் உம்மை ஆசீர்

**25.** "யாக்கோபு லாபானை நோக்கி.........என்னை அனுப்பிவிடும்." யாக்கோபு லாபானுடைய இரண்டு குமாரத்திகளுக்காகப் பதினாலுவருஷம் வேலைசெய்தபின்பு தன் குடும்ப சம்ரக்ஷணையைப் பெற்று பின்னும் இருபது வருஷம் அவனுக்கு ஊழியஞ்செய்தான் என்று சாஸ்திரிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். இந்தக் காலத்தில் அவனுடைய பிள்ளைகள் சிறுவர்களாயிருந் தார்கள். (இதைக்குறித்து யாக்கோபின் ஜீவிய அட்டவணையில் இந்தப் புஸ்த கத்தின் அநுபந்தத்தில் பார்க்க.) இந்த 34 வருடங்களுக்குள் 30ம் வாக்கியத்தில் காட்டியபடி லாபானுடைய ஐசுவரியம் திரண்ட சம்பத்தாய் வளர்ந்திருக்கும். கடைசியாக யோசேப்பு பிறந்தான். யாக்கோபின் குமாரரில் சிலர் புருஷத் துவமுடையவர்களாய் வளர்ந்திருந்தார்கள். ராகேல் பிரயாணம் செய்வதற்குத் தகுதியுண்டானபோது யாக்கோபு தன் பிள்ளைகளுக்காகச் சம்பாத்தியம் பண் ணும்படி தன் தகப்பன் வீட்டுக்குப் போக விரும்பினான்.

**27.** "குறிப்பினால் அறிந்தேன்." யாக்கோபினுடைய சுறுசுறுப்பினாலும் உண்மையினாலும் தேவாசீர்வாதம் கூட இருந்தபடியால் லாபானுடைய சம் பத்து மிகவும் பெருகினதை அவன் அநுபோகத்தினாலே பிரத்தியட்சமாய் அறிந்திருந்தான். சிலர் குறிப்பினால் அறிந்தேன் என்பது சகுனதக்குறியினால் அறிந்தேன் என்று லாபான் கருதிக்கொண்டதாக அர்த்தப்படுத்துவார்கள்.

**30.** "நான் வருமுன்னே உமக்கு இருந்தது கொஞ்சம்." சிறுபிராய மான ராகேல்மாத்திரம் லாபானுடைய ஆடுகளை (ஆதி. 29: 9.) மேய்த்ததைப் பார்க்கையில் இதின் நிச்சயம் உறுதிப்படுகிறது. "வருமுன்னே" எபிரெயு வில் "கால்வைக்குமுன்."





வதித்தினால் அது மிகவும் பெருகியிருக்கிறது; இனி
நான் என் [1]குடும்பத்துக்குச் சம்பாத்தியம்பண்ணு — [1] 1 தீமோ. 5. 8.
வது எப்பொழுது என்றான்.

31 அதற்கு அவன்: நான் உனக்கு என்ன தரவேண்டும்
என்றான்; யாக்கோபு: நீர் எனக்கு ஒன்றும் தரவேண்டி
யதில்லை; நான் சொல்லுகிறபடி நீர் எனக்குச் செய்
தால், உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக்
32 காப்பேன்.—நான் இன்றைக்குப் போய், உம்முடைய
மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளில்
புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளை
யும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்
துவிடுகிறேன்; [2]அப்படிப்பட்டவை இனி எனக்குச் — [2] ஆதி. 31. 8.
33 சம்பளமாயிருக்கட்டும்.—அப்படியே இனிமேல் என்
சம்பளமாகிய இவற்றை நீர் பார்வையிடும்போது,
[3]என் நீதி விளங்கும்; புள்ளியும் வரியுமில்லாத வெள் — [3] சங். 18. 24; 37. 6.
ளாடுகளும், கறுப்பான செம்மறியாடுகளும் என்
வசத்தில் இருந்தால், அவையெல்லாம் என்னால் திருடி
க்கொள்ளப்பட்டவைகளாய் எண்ணப்படட்டும் என்
றான்.

34 அதற்கு லாபான்: நீ சொன்னபடியே ஆகட்டும்
35 என்று சொல்லி,—அந்நாளிலே கலப்பு நிறமும் வரியு
முள்ள வெள்ளாட்டுக் கடாக்களையும், புள்ளியும்
வரியுமுள்ள வெள்ளாடுகள் யாவையும், சற்று வெண்
மையும் கருமையுமுள்ள செம்மறியாடுகள் யாவையும்
36 பிரித்து, தன் குமாரரிடத்தில் ஒப்புவித்து,—தனக்கும்

**35.** "தன் குமாரரிடத்தில் ஒப்புவித்து." யாக்கோபுக்குச் சம்பளமாகப் புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளும் லாபானின் மந்தையிலிருந்து பிரித்துக் கொடுக்கப்பட்டது. அவைகளை யாக்கோபு தன் குமாரர் வசமாய் மூன்றுநாள் பயணத்துக்கப்பால் அனுப்பி மேய்க்கும்படி திட்டஞ் செய்தான். யாக்கோபின் குமாரர் இப் போது நல்ல பிராயமுள்ளவர்களாயிருந்தார்கள். சிலர் "தன் குமாரரிடத்தில்" என்பதை லாபானின் குமாரரிடத்தில் என்று அர்த்தப்படுத்துவார்கள். யாக் கோபின் ஆடுகள் லாபானுடைய குமாரரால் மேய்க்கப்படுமானால் அவைகள் சேவலஸ்திதியில் வந்துவிடும். மேலும் ஆறுவருஷங்களுக்கு அப்பால் யாக் கோபு அவைகளை லாபான் அறியாதபடி ஓட்டிக்கொண்டு தன் தேசத்துக்குத் திரும்பு வரும் வருத்தமானகாரியமாயிருக்கும்.

யாக்கோபுக்கும் இடையிலே மூன்றுநாள் பிரயாண
தூரத்தில் இருக்கும்படி வைத்தான். லாபானுடைய
மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான்.
37 பின்பு யாக்கோபு [1]பச்சையாயிருக்கிற புன்னை,
வாதுமை, அர்மோன் என்னும் மரங்களின் கொப்பு
களை வெட்டி, இடையிடையே வெண்மை தோன்றும்
38 படி, பட்டையை உரித்து,—தான் உரித்த கொப்புகளை
ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும் கால்வாய்களிலும்
தொட்டிகளிலும் ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைப்
பான்; ஆடுகள் தண்ணீர் குடிக்க வரும்போது பொலிவ
39 தண்டு.—ஆடுகள் அந்தக் கொப்புகளுக்கு முன்பாகப்
பொலிந்தபடியால், அவைகள் கலப்புநிறமுள்ளதும்
புள்ளியுள்ளதும் வரியுள்ளதுமான குட்டிகளைப் போட்
40 டது.—அந்த ஆட்டுக்குட்டிகளை யாக்கோபு பிரித்துக்
கொண்டு, ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும்
கலப்புநிறமானவைகளுக்கும் கறுப்பானவைகளெல்
லாவற்றிற்கும் எதிராக நிறுத்தி, தன் ஆடுகளை லாபா
னுடைய மந்தையோடே சேர்க்காமல், தனிப்புறமாக
41 வைத்துக்கொள்வான்.—பலத்த ஆடுகள் பொலியும்
போது, அந்தக் கொப்புகளுக்கு எதிரே பொலியும்படி
யாக்கோபு அவைகளை அந்த ஆடுகளின் கண்களுக்கு
முன்பாகக் கால்வாய்களிலே போட்டுவைப்பான்.—
42 பலவீனமான ஆடுகள் பொலியும்போது, அவைகளைப்
போடாமலிருப்பான்; இதனால் பலவீனமானவைகள்
லாபானையும், பலமுள்ளவைகள் யாக்கோபையும்

[1] ஆதி. 31. 9-12.

**37.** "யாக்கோபு......மரங்களின் கொப்புகளை வெட்டி, டி." ஆடுகள் தண்ணீர் குடிக்கும் தொட்டியண்டை வருகையில் யாக்கோபு இடையில் வெண்மை தோன்றும்படி உரித்த மரக்கொப்புகளைப் போடுவான். ஆடுகள் அவைகளை உற்றுப்பார்க்கவே இயற்கைமுறையாய்ப் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டன. யாக்கோபு அந்தப் புள்ளிக் குட்டிகளை அலாதாக்கி தன் மந்தைக்கு அனுப்பிவிடுவான். அவன் மெத்த உபாயமாய் சுயநயங்கொண்டு காரியங்களை நடத்தினான்.

**38.** "கால்வாய்களிலும்." எபிரெயுவில் "தண்ணீர் குடிக்கிற இடத்தி லுள்ள தொட்டிகளில்" என்றிருக்கிறது. இங்கே "கால்வாய்" என்று திருப் பியிருக்கிற எபிரெயவார்த்தை யாத். 2: 16ல் தொட்டி என்று திருப்பியிருக் கிறது. முற்காலத்தில் தொட்டிகளுக்குத் தண்ணீர்போகிற கால்வாய்களிருந்த தாகத் தோன்றுகிறதில்லை.





43 சேர்ந்தன.—இவ்விதமாய் [1]அந்தப் புருஷன் மிகவும்
விருத்தியடைந்து, திரளான ஆடுகளும், வேலைக்காரி
களும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைக
ளும் உடையவனானான்.

[1] ஆதி. 13. 2: 24. 35: 26. 13, 14.

**43.** "அந்தப் புருஷன் மிகவும் விருத்தியடைந்து." ஈசாக்கு யாக்கோபுக்குக் கொடுத்த ஆசீர்வாதமும் (ஆதி. 27: 28.), பெத்தேலில் தேவன் அவனுக்கு அருளின வாக்குத்தத்தமும் இங்கே நிறைவேறினதைப் பார்க்கிறோம். ஆட்டுரோமம் அதிகமான வருமானத்தை யாக்கோபுக்குக் கொடுத்தது. அவன் அதை விற்று வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் ஒட்டகங்களையும் கொண்டிருப்பான்.

படிப்பினை.

வச. 1—24.

(1) மற்றவர்களுடைய நல்வாழ்வினிமித்தம் எரிச்சலடைவது பெரும்பாவம்.

(2) நாம் அன்புகூருகிறவர்கள் பாவஞ் செய்வதைக் காண்கையில் அவர்களைக் கண்டித்து உணர்த்துவது அவர்களுக்குச் செய்கிற பெரிய தயை.

(3) தங்களுடைய ஸ்திதியைப்பற்றி மனரம்மியமில்லாதவர்கள் தங்கள் நிலைமையை மாற்றும்படி பொல்லாங்கான காரியத்தைச் செய்வதுண்டு. அது சித்திபெறுகையில் மென்மேலும் ஆகாததைச் செய்யத் துணிகரங் கொள்ளுவார்கள்.

(4) பொறாமையும் எரிச்சலும் யாருடைய மனதில் இருக்கிறதோ அவைகள் அதிகமான சமாதான பேதத்தை உண்டுபண்ணும்; அவைகளுக்கு நாம் விலகும்படி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(5) அழகிய மேனியை உடையவர்கள், தேவனும் புத்திமான்களும் விரும்புகிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியை உடையவர்களாய் இராததை அடிக்கடி பார்க்கலாம்.

(6) ஜெபத்தோடே நீடியகாலமாய்க் காத்திருந்து பெறும் ஆசீர்வாதம் மிகவும் விசேஷித்ததாயிருப்பதுண்டு.

வச. 25—43.

(7) தேவன் ஊழியக்காரரின் ஜெபத்தைக் கேட்டு, அவர்களுடைய அக்கிரமங்களை அவர்களுக்கு மன்னித்து, அவர்கள் உண்மைக்கும் சுறுசுறுப்புக்கும் தகுந்ததாக அவர்களை ஆசீர்வதிக்கிறார். தாம் அவர்களிடத்தில் அன்புகூர்வதை அவர்களுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்கிறார்.

(8) இவ்வுலகத்தார் மெய்யான தேவபக்தியுள்ளவர்கள் பிரயோஜனமுள்ளவர்கள் என்று அறிந்து அவர்களைத் தங்களுடைய சுயபிரயோசனத்துக்காக வேலையில் வைத்துக்கொள்ளுகிறார்கள். கிறிஸ்துவின் நாமத்தால் அழைக்கப்படுகிறவர்கள் இவ்விதமாய் நல்லதுக்காகப் பிரயாசப்படவேண்டும்.

(9) குடும்பத்தை உடையவர்கள் அவர்களுக்குச் சம்பாத்தியம் பண்ணிவைக்க வேண்டியது நியாயம். ஆனால் அவர்கள் நியாயமான முறைமையாய் அப்படிச் செய்யவேண்டும்.

(10) இவ்வுலக நன்மைகள் தேவனால் அளிக்கப்படும் ஆசீர்வாதங்களாம். பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையவைகள். அவர் தமது சித்தத்தின்படி அவைகளை அநுக்கிரகிக்கிறார்.

# 31. அதிகாரம்.

1. யாக்கோபு வெறுப்படைந்து இரகசியமாய் லாபானை விட்டோடிப் போனது. 19. ராகேல் தன் தகப்பனுடைய விக்கிரகங்களைத் திருடிக்கொண்டது. 22. லாபான் யாக்கோபைப் பின்தொடர்ந்து, 26. அவன் செய்த குற்றத்தைக் குறித்து அவனிடத்தில் பேசினது. 34. ராகேல் விக்கிரகங்களை மறைக்கச்செய்த உபாயத்தைச் சொல்லியது. 36. யாக்கோபு தனக்கு லாபான் செய்த தீங்குகளைக் குறித்துச் சொன்னது. 43. காலெயேத்திலே லாபானும் யாக்கோபும் உடன்படிக்கைபண்ணினது.

1 பின்பு, லாபானுடைய குமாரர்: எங்கள் தகப்பனுக்கு
உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக்
கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொரு
ளினாலே இந்த [1]செல்வத்தையெல்லாம் அடைந்தான் [1] சங். 19.16. பிர. 4. 4. 1தீமோ. 6. 1.
என்றும் சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்
2 டான்.—லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்த
போது, [2]அது நேற்று முந்தநாள் இருந்ததுபோல் [2] ஆதி. 4. 5. உபா. 28. 51.
இராமல் வேறுபட்டிருக்கக் கண்டான்.
3 கர்த்தர் யாக்கோபை நோக்கி: [3]உன் பிதாக்களு [3] ஆதி. 28. 15.
டைய தேசத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ
திரும்பிப்போ; நான் உன்னோடேகூட இருப்பேன்
என்றார்.

## 31. அதிகாரம்.

**1. "லாபானுடைய குமாரர்."** இவர்களைக்குறித்து இதற்குமுன் சொல்லப்படவில்லை. இவர்கள் ராகேல் லேயாள் என்பவர்களுடைய உடன்பிறந்த சகோதரராயிருந்தார்கள். இப்போது ஐம்பது ஐம்பத்தைந்து வயதுள்ளவர்களாயிருக்கவேண்டும். எங்கள் தகப்பனுக்குண்டான யாவையும் யாக்கோபு எடுத்துக்கொண்டான் என்று அவர்கள் சொன்னது உண்மையல்ல. அது வீண் பாராட்டாயிருக்கிறது. ஏனென்றால் லாபான் பின்னும் ஐசுவரிய சம்பன்னனாயிருந்தான்.

**2 "லாபானுடைய முகம்......வேறுபட்டிருக்கக் கண்டான்."** "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங் கடுத்தது காட்டு முகம்" என்கிற பழமொழியின்படியே இருதயத்திலிருப்பதை முகம் காண்பிக்கிறது இயற்கை. யாக்கோபு திரண்ட ஐசுவரியவானாகிறது லாபானுக்கு வெறுப்பாகக் காணப்பட்டது.

**3. "கர்த்தர் யாக்கோபை நோக்கி."** லாபானும் அவன் பிள்ளைகளும் யாக்கோபின்பேரில் வெறுப்புடையவர்களாயிருந்தார்கள். யாக்கோபுக்கு





4 அப்பொழுது யாக்கோபு, ராகேலையும் லேயாளையும்
வெளியிலே தன் மந்தையிடத்தில் அழைப்பித்து,—
5 அவர்களை நோக்கி: உங்கள் தகப்பனுடைய முகம்
நேற்று முந்தநாள் இருந்ததுபோல இருக்கவில்லை
என்று எனக்குத் தோன்றுகிறது; ஆனாலும் என் தகப்
பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார்.—
6 என்னால் இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு
ஊழியஞ்செய்தேன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்
7 கள்.—உங்கள் தகப்பனோ, [1]என்னை வஞ்சித்து, என் சம் [1] எண். 14. 22. யோபு. 19. 3. சகரி. 8. 23.
பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனாலும் அவன்
எனக்குத் தீங்குசெய்ய தேவன் [2]அவனுக்கு இடங் [2] ஆதி. 20. 6. யோபு. 1. 10. சங். 37. 28; 105. 14.
8 கொடுக்கவில்லை.—புள்ளியுள்ளவைகள் உன் சம்பள
மாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுக
ளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது;
[3]கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்கும் [3] ஆதி. 30. 32.
என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் கலப்
9 புநிறக் குட்டிகளைப்போட்டது.—இவ்விதமாய் தேவன்
உங்கள் தகப்பனுடைய ஆடுகளை எடுத்து, எனக்

அவர்களைத்தவிர நெருங்கின பந்துக்களுமில்லை. அதால் யாக்கோபுக்கு மனவிசாரங்கள் உண்டாயின. அந்தவேளையில் அவனைக் கர்த்தர் தைரியப்படுத்திக் கானான் தேசத்துக்குப் போகும்படி உத்தரவு அருளினார்.

**4. "யாக்கோபு ராகேலையும் லேயாளையும்......அழைப்பித்து."** யாக்கோபு மந்தைகளை மேய்த்த இடத்துக்குத் தன் மனைவிகளை வரவழைத்து அவர்கள் தகப்பனுடைய முகம் தனக்கு விரோதமாய் வேறுபட்டிருப்பதையும், தான் அவனுக்கு உண்மையாய் நடந்துகொண்டுவந்தும் அவன் தனக்குச் செய்த அநியாயங்கள் எத்தனையென்பதையும், கர்த்தர் கானான் தேசத்துக்குப் போகும்படி உத்தரவு கொடுத்திருக்கிறதையுங் குறித்து விவரித்துச் சொன்னான்.

**5. "என் தகப்பனுடைய தேவன் என்னோடேகூட இருக்கிறார்."** லாபான் யாக்கோபுக்குச் செய்த அநியாயங்களைத் தேவன் அவமாக்கி அவனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமற் காத்து அவனை விருத்தியாக்கினார். யாக்கோபு உன்னதமானவரை "தன் தகப்பனுடைய தேவன்" என்கிறான். லாபான் வீட்டாருக்குள் சரியானபடி மெய்த்தேவ வணக்கமில்லாதபடியால், இப்படிச் சொல்லும்படி நேரிட்டது.

**7. "பத்துமுறை."** அதாவது அடிக்கடி. (எண் 14: 22. யோபு. 19; 3.)

**9. "தேவன்.........எனக்குத் தந்தார்."** லாபான் யாக்கோபுடைய சம்பளத்துக்கடுத்தவிஷயத்தில் அடிக்கடி வஞ்சனை செய்தான். ஆடுகள் புள்ளிநிற

10 குத் தந்தார்.—ஆடுகள் பொலியுங் காலத்திலே நான்
கண்ட சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுத்துப்
பார்க்கும்போது, ஆடுகளோடே பொலியுங் கடாக்கள்
கலப்புநிறமும் புள்ளியும் வரியும் உள்ளவைகளா
11 யிருக்கக் கண்டேன்.—அன்றியும் தேவதூதன் [1]ஒரு
வர் சொப்பனத்தில்: யாக்கோபே என்றார்: இதோ,
12 இருக்கிறேன் என்றேன்.—அப்பொழுது அவர்: உன்
கண்களை ஏறெடுத்துப்பார்; ஆடுகளோடே பொலியும்
கடாக்களெல்லாம் கலப்புநிறமும் புள்ளியும் வரியு
முள்ளவைகளாய் இருக்கிறது; [2]லாபான் உனக்குச்
13 செய்கிற யாவையும் கண்டேன்.—நீ தூணுக்கு அபி
ஷேகஞ்செய்து, [3]எனக்கு ஒரு பொருத்தனையைப்
பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தே
வன் நானே; இப்பொழுது நீ எழுந்து, இந்தத் தே
சத்தை விட்டுப் புறப்பட்டு, உன் இனத்தாரிருக்கிற
தேசத்திற்குத் திரும்பிப்போ என்று சொன்னார் என்
றான்.

[1] ஆதி. 48. 16.
[2] யாத். 3. 7.
[3] ஆதி. 28. 18, 22.

மான குட்டிகளை மிகுதியாய் ஈன்றபோது, சாதாரண ஆடுகளை யாக்கோபுக்குச் சம்பளமாகக் கொடுப்பேன் என்றான். சாதாரண நிறத்தில் ஆடுகள் அதிகமாய்ப் பெருகினதைக் கண்டபோது புள்ளிநிறமானவைகளைச் சம்பளமாகக் கொடுப்பேன் என்றான். இப்படியாக அவனை திரும்பத்திரும்ப ஏமாற்றினான். இவைகளையெல்லாம் யாக்கோபு பொறுமையாய்ச் சகித்து, கர்த்தரிடத்தில் தன் காரியங்களை அறிவித்துவந்தான். அவர் அவனை மிகுதியும் பலத்த ஆஸ்திமானாக்கினார்.

**10-12. "நான் கண்ட சொப்பனத்தில்."** இந்தச் சொப்பனஞ் சம்பள விஷயந் தீர்மானிக்கப்பட்ட துவக்கத்தில் காணப்பட்டிருக்கவேண்டியது. யாக்கோபின் ஐசுவரியம் அவனுடைய உபாயத்தினாலல்ல தேவனுடைய ஆசீர்வாதத்தினாலேயே பலுகிப் பெருகினது.

**"லாபான் உனக்குச் செய்கிற யாவையும் கண்டேன்."** இதைக் கவனிக்கையில் லாபான் யாக்கோபுக்கு மிகுதியான அநியாயங்களைச் செய்தான் என்று நினைக்கத்தக்கது.

**13. "பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே."** 11-ம் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற தேவதூதனானவர் இங்கே பெத்தேலில் தரிசனமான தேவன் என்று அழைக்கப்படுகிறார். யூத வியாக்கியானிகள், தேவதூதன், யாக்கோபிடத்தில் தேவன் கட்டளையிட்ட வார்த்தைகளைச் சொன்னான். ஆதலால் அந்த வார்த்தைகள் தேவனுடையவைகள் என்று சொல்லப்பட்டிருக்





14 அதற்கு ராகேலும் லேயாளும்: எங்கள் தகப்பன்
வீட்டிலே [1]இனி எங்களுக்குப் பங்கும் சுதந்தரமும்
15 உண்டோ?—அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்
படவில்லையா? [2]அவர் எங்களை விற்று, எங்கள் *பணத்
16 தையும் வாயிலே போட்டுக்கொண்டார்.—ஆகையால்
தேவன் எங்கள் தகப்பனிடத்திலிருந்து எடுத்த ஐசு
வரியம் எல்லாம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்
கும் உரியது; இப்படியிருக்கத் தேவன் உமக்குச் சொ
ன்னபடியெல்லாம் செய்யும் என்றார்கள்.

17 அப்பொழுது யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளை
யும் தன் மனைவிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றி,—
18 தான் பதான்அராமிலே சம்பாதித்த மிருகஜீவன்களா
கிய மந்தைகள் அனைத்தையும் தன் பொருள்கள் எல்

[1] ஆதி 2. 24.
[2] ஆதி. 29.15,27.
* பெறுமதியை

கின்றன என்கிறார்கள். சபையின் பிதாக்கள் இந்தத் தேவதூதனானவர் தேவனாகிய குமாரனைக் குறிக்கும் என்று அர்த்தப்படுத்துகிறார்கள்.

யாக்கோபு தன் மனைவிகளிடத்தில் இரண்டு வெவ்வேறே காலத்தில் நடந்த சம்பவங்களை ஒன்றாகச் சேர்த்து இங்கே சொல்லுகிறான் என்று நாம் தீர்மானிக்கத்தக்கது.

**15. "எங்களை விற்று."** யாக்கோபு செய்த வேலையின் சம்பளத்துக்காக ராகேலும் லேயாளும் விவாகம் செய்துகொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது.

**"எங்கள் பணத்தையும் வாயிலே போட்டுக்கொண்டார்."** யாக்கோபின் வேலையினால் பெருகின ஆஸ்தியில் ஒரு பாகத்தையாவது லாபான் தன் குமாரத்திகளுக்குக் கொடாமல் முழுவதையும் அபகரித்துத் தன்வசத்தில் வைத்துக்கொண்டான் என்றறியலாம்.

**16. "தேவன் உமக்குச் சொன்னபடியெல்லாம் செய்யும்."** லேயாளும் ராகேலும் தேவனுடைய கட்டளைக்கு அமையும்படியாக அவர்களுடைய தகப்பன் செய்த கொடுமை அவர்களை ஏவிவிட்டது.

**17-18. "யாக்கோபு எழுந்திருந்து."** யாக்கோபுக்குத் திரளான ஆடுமாடுகளும் ஒட்டகங்களும் வேலைக்காரரும் வேலைக்காரிகளும் இருந்தார்கள். தன் சம்பத்தையெல்லாங் கூடக் கொண்டுபோவதற்கு மிகுந்த ஆயத்தம் வேண்டியது. அவனுடைய ஆடுமாடுகள் மூன்றுநாள் பயணத்துக்கு அப்பாலிருந்ததால் அவைகளை அவன் இலகுவாய்த் தனக்கு முந்தி கானானுக்குச் செல்லும்படி அனுப்பிவிடலாம். பிற்பாடு தன் மனைவிகள் முதலானவர்களுடன் லாபான் ஆடுகளை மயிர் கத்தரிக்கப்போன காலம் பார்த்துத் தானும் புறப்படத் தீர்மானித்தான்.

லாவற்றையும் எடுத்துக்கொண்டு, கானான்தேசத்தில்
இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்குப்
19 போகப் புறப்பட்டான். — லாபான், தன் ஆடுகளை
மயிர் கத்தரிக்கப் போயிருந்தான்; அந்தச் சமயத்
திலே ராகேல் தன் தகப்பனுடைய *சுருபங்களைத்

* தேராபீன்கள். நியா. 17. 5. 1 சா மு. 19. 13. ஓசி. 3. 4.

**19. "லாபான், தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கப் போயிருந்தான்."** மயிர் கத்தரிக்குங் காலம் மிகுந்த வேலையுள்ள சமயம். அந்த வேலைமுடிந்தவுடனே விருந்துசெய்து சந்தோஷம் கொண்டாடுவார்கள் (ஆதி. 38: 12. 1 சாமு. 25: 2, 8.). லாபானுடைய ஆடுகள் ஆரானுக்குச் சற்று தொலையிலிருந்தது; அங்கே அவைகளை மயிர் கத்தரிக்கும்படியாகப் போனான். அவனுக்குத் திரளான ஆஸ்தி இருந்தது. அவன் அடிக்கடி செய்த வஞ்சனையினால் அது குறையாதபடிக்குப் பார்த்துக்கொண்டான். யாக்கோபு மயிர் கத்தரிக்கிற காலத்தில் லாபானோடேகூடப் போகாமல் ஒரு போக்கைச் சொல்லி பின்னுக்கு நின்றிருக்கலாம். அல்லவென்றால் லாபானுக்கும் அவன் மக்களுக்கும் யாக்கோபைப்பற்றி மனம் வேறுபட்டிருந்ததால் தங்கள் ஆடுகளைத் தாங்களே இப்போது மேற்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.

"சுருபங்களை." எபிரெயுவில் "தெராபீன்கள்" என்றிருக்கிறது. அவைகள் 30–ம் வசனத்தில் லாபானுடைய தேவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றன. பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்தில் நாம் பார்க்கிறபடி அவைகள் அடிக்கடி வணங்கப்பட்டு வந்திருக்கின்றன. மீகா வெட்டப்பட்ட விக்கிரகத்தை (தெராபீம்) வைத்திருந்தான் (நியா. 18: 17.). மீகாள் தாவீதின் கட்டிலில் ஒரு சுருபத்தை (தெராபீமை) எடுத்துக் கிடத்திவைத்தாள். மேலும் 1 சாமு. 15: 23ல் விக்கிரகாராதனை என்று திருப்பியிருக்கிற வார்த்தை தெராபீமைக் குறிக்கும். யோசியாவின் சீர்திருத்தலில் அவ்வரசன் நரகலான விக்கிரகங்களையும் (தெராபீன்களையும்) நிர்மூலமாக்கினான். [illegible]ந்தியகாலத்தில் குறி கேட்கும்படியாக அவைகள் உபயோகிக்கப்பட்டன (சகரி. 10: 2.). பத்துக் கோத்திரத்தார் அவைகளை வணங்கிவந்தார்கள் (ஓசி. 3: 4.). நேபுகாத்நேச்சார் நிமித்தம் பார்க்கிறதற்காக அவைகளை உபயோகித்தான் (எசே. 21: 21.). தெராபீன்கள் கல்தேயாவிலே ஆரம்பத்தில் உண்டாக்கப்பட்டிருக்கலாம். அவைகள் மனித முகச்சாயலாய்ச் செய்யப்பட்டிருந்தாலும் உயரங் கட்டையாயிருந்தன.

"திருடிக்கொண்டாள்." அந்தச் சுருபங்களை வணங்கவோ அல்லது அவைகளிலுள்ள லோகங்களின்பேரில் இச்சைப்பட்டோ அல்லது தாங்கள் போகும் வழிவகையை இவைகளிடத்தில் தன் தகப்பன் கேட்டறிந்து சீக்கிரந் தொடர்ந்து பிடித்துக்கொள்வானென்ற பயத்தினாலேயோ அல்லது அவைகளால் தனக்குந் தன் புருஷனுக்கும் நன்மை உண்டாகும் என்ற சிந்தையினாலோ அவைகளைத் திருடிக்கொண்டாள். எந்த நோக்கமாய் அவள் அதைச் செய்திருந்தாலும் அது பெரிய தப்பிதம்.





20 திருடிக்கொண்டாள்.—யாக்கோபு தான் ஓடிப்போகிற
தைச் சீரியனாகிய லாபானுக்கு அறிவியாமல், திருட்
21 டளவாய்ப் போய்விட்டான்.—இப்படியே அவன்
தனக்கு உண்டானவைகளையெல்லாம் எடுத்துக்
கொண்டு, ஆற்றைக் கடந்து, கீலேயாத்து மலையை
நோக்கி ஓடிப்போனான்.

22 யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம் நாளிலே லா
23 பானுக்கு அறிவிக்கப்பட்டது.–அப்பொழுது அவன்,
தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு, ஏழுநாள் பிரயா
ணபரியந்தம் அவனைத் தொடர்ந்துபோய், கீலேயாத்
24 மலையிலே அவனைக் கண்டுபிடித்தான்.—அன்று ராத்
திரி தேவன் [1]சீரியாதேசத்தானாகிய லாபானுக்குச்
சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மை
யே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்
25 கையாயிரு என்றார்.—லாபான் யாக்கோபினிடத்தில்
வந்தான்; யாக்கோபு மலையிலே தன் கூடாரத்தைப்

[1] ஆதி. 20. 3. யோபு. 33. 15. மத். 1. 20.

**20. "திருட்டளவாய்."** அதாவது தெரிவிக்காமல், இரகசியமாய், வஞ்சனையாய்.

**21. "ஆற்றை."** ஐப்பிராத்து நதியை.

"கீலேயாத்து" என்பதற்குக் "கன்மலைத் திசை" என்றர்த்தமாம். இது அராமிய ஜாதியாருடைய குடியிருப்புக்குங் கானானியருடைய குடியிருப்புக்கும் இடையிலிருந்தது. அது அந்த இடத்தின் பூர்வபேரா யிருக்கவேண்டியது. யாக்கோபு அந்தப் பேரின் சொல்லை வைத்துக்கொண்டு அதற்கு கலயெத் என்று நாமம் தரிப்பித்தான். (வச. 47.)

**23. "ஏழுநாள் பிரயாணபரியந்தம்."** ஆரானுக்கும் கீலேயாத்து நாட்டின் வட எல்லைக்கும் இடையே 30 காதவழி தூரமிருக்கிறது. யாக்கோபு தன் ஆடுமாடுகள் முதலியவைகளைத் தான் புறப்படுமுன்னே தன் குமாரர் மேல்விசாரணையில் உண்மையுள்ள வேலைக்காரர் மூலமாய் ஐப்பிராத்து நதியைக் கடந்துபோகும்படி அனுப்பியிருக்கவேண்டும். [illegible] தானுந் தன் மனைவிகளும் இளம்பிராயமான பிள்ளைகளும் ஒட்டகங்களின்மேல் [illegible] விரைவாய்ச் சென்று கால்நடைகளைக் கண்டுபிடித்து கானான் எல்லைக்குள் வந்து சேர்ந்தார்கள். லாபான் தீவிர பிரயாணத்தின்பேரில் அவர்களைச் சந்தித்தான்.

**24. "நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடி எச்சரிக்கையாயிரு."** லாபான் யாக்கோபை நயத்தினாலாவது பயத்தினாலாவது மறுபடியும் திருப்பிக்கொண்டு போகாதபடிக்குத் தேவன் அவனை எச்சரித்தார்.

போட்டிருந்தான்; லாபானும் தன் சகோதரரோடே
கூடக் கிலேயாத் மலையிலே கூடாரம் போட்டான்.
26 அப்பொழுது லாபான் யாக்கோபை நோக்கி: நீ
திருட்டளவாய்ப் புறப்பட்டு, என் குமாரத்திகளை யுத்
தத்தில் பிடித்த [1]சிறைகளைப்போலக் கொண்டுவந்தது [1] 1 சாமு. 30. 2.
27 என்னசெய்கை?— நீ ஓடிப்போவதை மறைத்து, என
க்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிரு
ந்து வந்துவிட்டது என்ன? நான் உன்னைச் சந்தோஷ
மாய், சங்கீதம் மேளதாளம் கின்னர முழக்கத்துடனே
28 அனுப்புவேனே.—என் பிள்ளைகளையும் என் குமாரத்
திகளையும் நான் [2]முத்தஞ்செய்ய விடாமல் போன [2] ரூத். 1. 9, 14. 1 இரா. 19. 20. அப். 20. 38.
தென்ன? இந்தச் செய்கையை நீ மதியில்லாமல் செய்
29 தாய்.— உங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய எனக்கு
வல்லமை உண்டு; ஆகிலும், [3]உங்கள் தகப்பனுடைய [3] ஆதி. 28. 13.
தேவன்: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை
ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று
30 நேற்றுராத்திரி என்னோடே சொன்னார்.—இப்பொழு
தும் உன் தகப்பனுடைய வீட்டின்மேலுள்ள வாஞ்சை
யினால் நீ புறப்பட்டுப் போகிறதானால் போகலாம்,
[4]என் தெய்வங்களை ஏன் திருடிக்கொண்டுபோனாய் [4] நியா. 18. 24.
என்று கேட்டான்.

**26-30.** “லாபான் யாக்கோபை நோக்கி.” இதிலே 1. லாபான் தனக்கு அறிவியாதபடிக்குத் தன் குமாரத்திகளை யாக்கோபு கூட்டிக்கொண்டு வந்துவிட்டது தனக்கும் அவர்களுக்குஞ் செய்த பெரிய அவமானம் என்றும், 2. அதற்காக அவன் யாக்கோபுக்குப் பொல்லாப்புச்செய்ய நினைத்துந் தேவ எச்சரிப்பினால் அப்படிச் செய்யாதபடி தடுக்கப்பட்டான் என்றும், 3. தன்னுடைய தேராபீன்களைத் திருடிக்கொண்டு வந்துவிட்டதாக யாக்கோபின்பேரில் குற்றஞ் சாட்டினான் என்றும் அறியலாம்.

லாபானுடைய சம்பாஷணையில் பாதி மெய்யும், பாதி பொய்யுமாயிருந்தது. அவனுக்கு யாக்கோபை விட்டுவிட எவ்வளவும் பிரியமிருக்கமாட்டாது. விட்டாலும் அவனிடத்திலிருந்து எவ்வளவு பிடுங்கக்கூடுமோ அவ்வளவையும் பிடுங்கியிருப்பான். அவன் குமாரத்திகள்பேரிலும் அவர்கள் பிள்ளைகள்பேரிலும் அன்பு இருந்தாலுஞ் சுயநயம் அவனிடத்தில் மிஞ்சி வல்லமை கொண்டிருந்தது.





31 யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்தரமாக: உம்மு
டைய குமாரத்திகளைப் பலாத்காரமாய்ப் பிடித்து
வைத்துக்கொள்வீர் என்று நான் அஞ்சினதினாலே
32 இப்படி வந்துவிட்டேன்.—ஆனாலும் யாரிடத்தில் உம்
முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, [1]அவனை [1] ஆதி. 14. 9.
உயிரோடே விடவேண்டாம்; உம்முடைய பொருள்
கள் ஏதாவது என் வசத்தில் உண்டானால் நீர் அதை
நம்முடைய சகோதரருக்கு முன்பாகப் பரிசோதித்த
றிந்து, அதை எடுத்துக்கொள்ளும் என்றான். ராகேல்
அவைகளைத் திருடிக்கொண்டுவந்ததை யாக்கோபு
அறியாதிருந்தான்.
33 அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்தி
லும், லேயாளின் கூடாரத்திலும், இரண்டு வேலைக்காரி
களின் கூடாரத்திலும் பிரவேசித்துப் பார்த்தும் ஒன்
றும் கண்டுபிடிக்கவில்லை; பின்பு, லேயாளின் கூடாரத்
தை விட்டு ராகேலின் கூடாரத்துக்குப் போனான்.—
34 ராகேல் அந்தச் சுரூபங்களை எடுத்து, ஒட்டகச் சே
ணத்தின்கீழ் வைத்து, அதின்மேல் உட்கார்ந்திருந்
தாள். லாபான் கூடாரம் எங்கும் தடவிப்பார்த்தும்,
35 அவைகளைக் கண்டுபிடிக்கவில்லை.—அவள் தன் தகப்
பனை நோக்கி: என் ஆண்டவனாகிய உமக்கு முன்பாக
நான் [2]எழுந்திராததைக் குறித்துக் கோபங்கொள்ள [2] யாத். 20. 12. லேவி. 19. 32.
வேண்டாம்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு

**31,32.** “யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்தரமாக.” யாக்கோபு தான் ஓடிவந்ததற்குச் சரியான முகாந்தரஞ் சொல்லி தன்பேரில் களவுகாரியஞ் சுமத்தப்பட்டபோது அவன் கோபங்கொண்டு, யோசேப்பின் சகோதரர் களவுபோன பாத்திரவிஷயத்தில் சொன்னதுபோல, யோசனையின்றி மனதில் வந்தபடி உத்தரவு சொன்னான்.

“அவனை உயிரோடே விடவேண்டாம்.” யூத ரபிமார் இதை ஒரு தீர்க்கதரிசனமாக எண்ணி, ராகேலுடைய அகால மரணத்தில் அது நிறைவேறினது என்கிறார்கள்.

**34.** “ஒட்டகச் சேணத்தின்கீழ் வைத்து.” ராகேல் தன் தகப்பனுடைய தேராபீன்களை ஒளித்துவைத்ததுடன் பொய்யுஞ் சொன்னாள்.

உண்டாயிருக்கிறது என்றாள்; அப்படியே அவன்
அந்தச் சுரூபங்களைத் தேடியும் கண்டுபிடிக்கவில்லை.

36 அப்பொழுது யாக்கோபுக்குக் கோபம் எழும்பி,
லாபானோடே வாக்குவாதம் பண்ணி: நீர் என்னை இவ்
வளவு உக்கிரமாய்த் தொடர்ந்து வரும்படிக்கு நான்
செய்த தப்பிதம் என்ன? நான் செய்த துரோகம்
37 என்ன? — என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்
பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளில்
என்னத்தைக் கண்டுபிடித்தீர்? அதை என்னுடைய
சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்
பாக இங்கே வையும்; [1]அவர்கள் எனக்கும் உமக்கும் [1] 1 சாமு. 6. 5.
38 நடுத்தீர்க்கட்டும். — இந்த இருபது வருஷகாலமாய்
நான் உம்மிடத்தில் இருந்தேன்; உம்முடைய செம்மறி
யாடுகளும் வெள்ளாடுகளும் சினையழியவில்லை; உம்
முடைய மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை.-
39 பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவரா
மல், [2]அதற்காக நான் உத்தரவாதம்பண்ணினேன்; [2] யாத். 22. 10, 12.
பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதை
40 யும் என் கையில் கேட்டு வாங்கினீர். — பகலிலே வெ
யிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது; நித்
திரை என் கண்களுக்குத் தூரமாயிருந்தது; இவ்வித
41 மாய்ப் பாடுபட்டேன். — இந்த இருபது வருஷகாலம்
உம்முடைய வீட்டிலே இருந்தேன்; [3]பதினாலு வரு [3] ஆதி. 29. 27, 28.
ஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும்,
ஆறுவருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மி
டத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை
42 மாற்றினீர். — [4]என் பிதாவின் தேவனாகிய ஆபிரகா [4] சங். 121. 1, 2.
மின் தேவனும் [5]ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என் [5] 53. வசனம், ஏசா. 8. 13.

**36. "யாக்கோபுக்குக் கோபம் எழும்பி."** லாபான், தெராபீன்களின் போக்கை வைத்துக்கொண்டு தன் சாமான்களில் ஏதாவது திருட்டுத்தனமாய் வந்திருக்கிறதா என்று பார்க்க வகைதேடினான் என்று யாக்கோபு அபிப்பிராயப்பட்டு, லாபானின் சாமான் ஒன்றுங் கண்டுபிடிக்கப்படாததைப் பார்த்து அவன்பேரில் தன் விசனத்தைக் காட்டினான்.

**40. "இரவிலே குளிரும்."** அத்தேசத்தில் செப்டெம்பர் மாசமுதல் மேமாசம் வரையும் இராக்காலம் மிகவும் குளிர்ச்சியாயிருக்கும்.

**42. "ஈசாக்கின் பயபக்திக்குரியவர்."** ஈசாக்கு அன்போடுங் கீழ்ப்படிதலோடும் பயபக்தியாய் ஆராதித்த தேவன். (ஏசா. 8: 13.)





னொடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறு
மையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் [1]சிறு [1] யாத். 3. 7.
மையையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து, [2]நே [2] 1 நாளா. 12. 17. யூதா. 9.
ற்று ராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார் என்று
சொன்னான்.

43 அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்த
ரமாக: இந்தக் குமாரத்திகள் என் குமாரத்திகள், இந்
தப் பிள்ளைகள் என் பிள்ளைகள், இந்த மந்தை என்
மந்தை; நீ காண்கிற யாவும் என்னுடையவைகள்;
என் குமாரத்திகளாகிய *இவர்களையும், இவர்கள் * இவர்களுக்கும் பிள்ளைகளுக்கும்.
பெற்ற பிள்ளைகளையும் இன்று நான் என்னசெய்யக்கூ
44 டும்? — இப்பொழுது எனக்கும் [3]உனக்கும் சாட்சியா [3] யோசு. 24. 27.
யிருக்கும்பொருட்டு, நீயும் நானும் [4]உடன்படிக்கை [4] ஆதி. 26. 28.
பண்ணிக்கொள்ளக்கடவோம் என்றான்.

45 அப்பொழுது யாக்கோபு ஒரு [5]கல்லை எடுத்து, அ [5] ஆதி. 28. 18.
46 தைத் தூணாக நிறுத்தினான். — பின்னும் யாக்கோபு தன்
சகோதரரைப் பார்த்து, கற்களைக் குவியலாகச் சேருங்
கள் என்றான்; அவர்கள் கற்களை எடுத்துக்கொண்டு
வந்து, ஒரு குவியலாக்கி, அந்தக் குவியலின்மேல்
47 போஜனம்பண்ணினார்கள். — லாபான் அதற்கு ஜெகர்
சகதூதா என்று பேரிட்டான்; யாக்கோபு அதற்குக்
கலயெத் என்று பேரிட்டான்.

**43. "லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தரமாக."** லாபான் யாக்கோபுடைய கடுஞ்சொல்லுக்கு உத்தரவு சொல்லாமல், அவனுக்கு அன்பான மறுமொழி சொல்லி தன் குமாரத்திகளைப் பட்சமாய் நடத்தவும் வேறே ஸ்திரீகளை விவாகம் பண்ணாதிருக்கவுமாக ஒரு உடம்படிக்கை பண்ணும்படி அவனைக் கேட்டான். இருவரும் உடம்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். யாக்கோபு தான் இறங்கின இடத்தில் ஞாபகச்சின்னமாக ஒரு கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தினான். லாபானும் அப்படியே தான் இறங்கின இடத்திலுஞ் செய்தான். (வச. 52.) பின்பு ஒப்புரவானதற்கு அடையாளமாக விருந்துண்டு அவரவர்வழியே போனார்கள்.

**47. "ஜெகர் சகதூதா"** என்பது இரண்டு சீரியபதங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட வார்த்தை. அது கலயெத் என்ற பதத்துக்குச் சமமான அர்த்தமுள்ளது. "சாட்சியின் குவியல்" என்பது அதின் அர்த்தம். மெசொப்பொத்தாமியாவின் ஜனங்கள் சீரியபாஷையைப் பேசிவந்தார்கள். லாபான் குடும்

48 [1]இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் சாட்சி [1] யோசு. 21. 27.
என்று லாபான் சொன்னபடியினாலே, அதின் பேர்
49 கலயெத் என்னப்பட்டது. — அல்லாமலும் அவன்:
நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், நீ என்
குமாரத்திகளைத் துயரப்படுத்தி, அவர்களையல்லாமல்
வேறே ஸ்திரீகளை விவாகம்பண்ணினாயானால், கர்த்
தர் எனக்கும் உனக்கும் நடு நின்று கண்காணிக்கக்
50 கடவர்;—நம்முடனே ஒருவரும் இல்லை; பார், தேவ
னே எனக்கும் உனக்கும் சாட்சி என்று சொன்னபடி
51 யால், அது [2]மிஸ்பா என்னும் பேர்பெற்றது. — பின் [2] நியா. 11. 29. 1 சாமு. 7. 5.
னும் லாபான் யாக்கோபை நோக்கி: இதோ, இந்தக்
குவியலையும், எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்
52 தின தூணையும் பார்.—தீங்குசெய்ய நான் இந்தக் குவி
யலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ
இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்
னிடத்துக்கு வராதபடிக்கும் இந்தக் குவியலும் சாட்சி,
53 இந்தத் தூணும் சாட்சி.—ஆபிரகாமின் தேவனும் நாகோ
ரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமாயி
ருக்கிறவர் [3]நமக்குள்ளே நடுநின்று நியாயந்தீர்ப்பா [3] ஆதி. 16. 5; 21. 23.
ராக என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்

பனாகிய ஈசாக்கின் [1]பயபக்திக்குரியவர்மேல் ஆணை [1] 42. வசனம்.
யிட்டான்.
54 பின்பு, யாக்கோபு மலையின்மேல் பலியிட்டு, போ
ஜனம்பண்ணும்படி தன் சகோதரரை அழைத்தான்;
அப்படியே அவர்கள் போஜனம்பண்ணி மலையிலே
55 இராத்தங்கினார்கள்.—லாபான் அதிகாலமே எழுந்தி
ருந்து, தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் முத்
தஞ்செய்து, அவர்களை [2]ஆசீர்வதித்தான். பின்பு [2] ஆதி. 28. 1; 16. 1, 6.
லாபான் புறப்பட்டு, [3]தன் இடத்துக்குத் திரும்பிப் [3] ஆதி. 30. 25. எண். 24. 25.
போனான்.

பத்தார் அதோடே எபிரெய பாஷையும் பேசினார்கள் என்று தெரிகிறது. அவன் மிஸ்பாவுக்குப் பேர்கொடுத்திருப்பதையும் அவன் குமாரத்திகள் தங்கள் பிள்ளைகளுக்குப் பேரிட்டிருப்பதையுங் கவனிக்கையில் அது துலங்குகிறது.

**50.** "மிஸ்பா" என்பதற்குச் "சாமக்கோபுரம்" என்றர்த்தம். லாபான் நிறுத்தின தூணுக்கு எபிரெயுவில் "மாசேபா" என்று பேர். இந்த வார்த்தை மருவி அந்த இடத்துக்கு மிஸ்பா என்று பேர் வந்திருக்கலாம். லாபான் கர்த்தர் (யேகோவா) என்று சொல்லியதைக் கவனிக்கையில் அவனுக்கு எபிரெய பாஷை தெரிந்திருக்கவேண்டுவதோடு வைதீகத்துக்குரிய விஷயத்தில் யாக்கோபோடே சம்பாஷணை செய்திருக்கவேண்டும் என்றும் அறியலாம்.

**53.** "நியாயந்தீர்ப்பாராக." எபிரெயுவில் நமக்கு நடுவே நியாயாதிபதிகளாயிருப்பார்களாக என்றிருக்கிறது. லாபான் ஏலோயீமோடே பன்மை வினைமுற்றைச் சேர்த்திருக்கிறான். அவன் எண்ணத்தில் ஆபிரகாமுடைய ஏலோயீம் வேறே. நாகோருடைய ஏலோயீம் வேறே என்றிருந்திருக்கலாம். காரியத்தைப் பார்க்கையில் அவன் நேகேசுரவாதியாயிருந்தான். இது யோசுவா, 24: 2ல் சொல்லியிருக்கிறபடி உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலே குடியிருந்தபோது வேறே தேவர்களைச் சேவித்தார்கள் என்பதற்கு ஒத்திருக்கிறது. பூர்வீகத்திலுள்ளவர்கள் அநேகர் அப்படியே அந்தந்த இடத்து தெய்வங்கள் அந்தந்த இடத்தில்மாத்திரம் வல்லமையான அதிகாரத்தைச் செலுத்திவந்தார்கள் என்று எண்ணினார்கள். லாபான், நாகோர் ஆபிரகாம் என்பவர்களுடைய ஏலோயீமை நியாயாதிபதிகளாகக் கோரினான். யாக்கோபு ஈசாக்கின் பயபக்திக்குரிய ஒன்றான தேவன்பேரில் ஆணையிட்டான்.

**54.** "யாக்கோபு மலையின்மேல் பலியிட்டு." யாக்கோபின் பயத்தை நிவிர்த்திபாக்கி சமாதானத்தை தேவன் கட்டளையிட்டதற்காக நன்றியறிதலோடே அவருக்குப் பலி செலுத்தினான். சிலர் யாக்கோபு மிருகஜெந்துக்களை அடித்து விருந்துபண்ணினதைமாத்திரம் இங்கே குறிக்கும் என்பார்கள். அதற்கு முகாந்தரமாக அவர்கள் இந்த இடத்தில் "கர்த்தருக்கு என்ற வார்த்தை விடப்பட்டிருப்பதினாலும் பூர்வீகத்தில் பலியாகமாத்திரம் ஆடுமாடுகள் அடிக்கப்பட்டதினாலும், அதே வார்த்தைகள் புசிப்புக்காக ஜெந்துக்கள் அடிக்கப்படுவதையுங் குறிப்பிக்கிறதால் இரண்டையும் பிரித்துக்காட்ட எபிரெயுவில் வகையில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

படிப்பினை.

வச. 1—21.

(1) உலகத்திலுள்ள பெரிய இராச்சியங்களின் சரித்திரங்கள் எழுதப்படாமல் மறக்கப்பட்டுப்போயிருக்க குடும்ப சரித்திரங்கள் நுட்பமாய் எழுதப்பட்டு நமக்குப் போதனையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

(2) பொருளாசையானது ஆத்துமாவை ஈனப்படுத்தி இயற்கையான அன்பையும் குறையப்பண்ணுகிறது.

(3) உத்தமர் தங்கள் கைகளின் கிரியைகள் ஆசீர்வதிக்கப்படுவதைப் பார்க்கையில் அந்த ஆசீர்வாதம் தேவனால் தங்களுக்கு அருளப்பட்டதாக நன்றியறிதலைக் காட்டுவார்கள்.

(4) தேவகட்டளையின்படி நடப்பதில் நமக்குக் குறைவு நேரிடமாட்டாது.

வச. 22—55.

(5) தேவன் பொல்லாதவர்களுடைய மனதை மாற்றுகிறதினாலும், அவர்கள் தமது பிள்ளைகளுக்கு விரோதமாய்க் குரோதம் செய்யாதபடி அவர்களைத் தடுத்துப்போடு கிறார். அப்போது அவர்கள் நம்மிடத்தில் அன்புவைக்கிறவர்களாயும் விளங்குவார்கள்.

## 32. அதிகாரம்.

1. யாக்கோபு மக்னாயீமிலே தரிசனம் கண்டது. 3. அவன் ஏசாவுக்குச் செய்தி அனுப்பினது. 6. ஏசா வருகிறதைக் கேள்விப்பட்டுப் பயந்தது. 9. இரட்சிக்கப்படும்படி கர்த்தரை வேண்டிக்கொண்டது. 13. அவன் ஏசாவுக்கு வெகுமானம் அனுப்பினது. 24. அவன் பெனியேலிலே தேவதூதனோடே போராடி, இஸ்ரவேலென்கிற பேர் பெற்றது.

1 யாக்கோபு பிரயாணம்பண்ணுகையில், [1]தேவதூதர்

[1] சங். 91.11. எபி. 1.14.

(6) சத்துருக்களின் வாய்களை அடைக்க நாம் மிகவுந் தப்புரவுள்ளவர்களாய் நடக்கவேண்டியது நமதுமேல் விழுந்த கடமை.

(7) நல்லவர்கள் மற்றவர்களிடத்தில் கோபங் காட்டுகையில் காரியங்களை எல்லாந் தெளிவாய் அறிந்திருந்தால், அவர்கள் விசனங் கொள்வதற்குப் பதிலாக மன்னிப்புக் கேட்கும்படியாகவும் நேரிடும்.

(8) நம்முடைய பிதாக்கள் வணங்கின ஜீவனுள்ள தேவனை நம்முடைய தேவனாக வழிபடுவது எத்தனை இன்பமாயிருக்கிறது.

(9) இக்கட்டானகாலத்தில் அவர் நமதுபேரில் கிருபை வைத்து சத்துருவுக்குப் பயத்வைத்கொடுத்து நமக்குச் சமாதானத்தை அருளுகையில் அவருக்குத் துதி தோத்திரப்பலியைச் செலுத்துவோமாக.

## 32. அதிகாரம்.

**1. "யாக்கோபு பிரயாணம்பண்ணுகையில்."** லாபானால் யாக்கோபுக்கு இருந்த பயம் நீங்க, அவன் தன் பிதாவுக்கு அருளப்பட்ட தேசத்தில் பிரயாணஞ் செய்துகொண்டுபோகையில், லாபானைவிட தன் சகோதரன் ஏசா பலத்த சத்துருவாக இருப்பான் என்ற எண்ணம் அவனிடத்தில் பிறவிட்டது. இப்படிப்பட்ட சமையத்தில் தேவன் அவனைத் தைரியப்படுத்தும்படியாக ஒரு காட்சியைக் காணும்படி அநுக்கிரகம்பண்ணினார்.

**"தேவ தூதர்கள்."** எலோயீமுடைய இந்தத் தூதர்கள் யார் என்பதைப் பற்றிப் பற்பல விபரீதமான வியாக்கியானங்கள் செய்யப்பட்டிருக்கிறதுண்டு. சிலர் அது தீர்க்கதரிசிகளைக் குறிக்கும் என்றுஞ், சிலர் ஏசாவைப்பற்றி யாக்கோபுக்குச் செய்திகளைத் தெரியப்படுத்தின பிரயாணிகளின் கூட்டம் என்றுஞ், சிலர் ஏசாவைத் துரத்திவிடும்படி, ரெபெக்காள் யாக்கோபுக்கு உதவியாக அனுப்பின துணையாட்கள் என்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனால் மேற்சொல்லிய அபிப்பிராயங்கள் சரியென தோன்றுகிறதில்லை. யாக்கோபு பதான் அராமுக்குத் தன் தகப்பன் வீட்டிலிருந்து புறப்பட்டுப்போகையில் ஒரு ஏணிவழியாய்த் தேவதூதர் ஏறுகிறவர்களாயும் இறங்குகிறவர்களாயும் கண்டானே. அதால்தான் தெய்வீக ஆதரவுக்குள் சுகபத்திரமாயிருப்பதை அறிந்துகொண்டான். இப்போது அவன் ஏசாவின் கையில் விழ ஏதுவாயிருந்ததாக எண்ணின பயத்தை நீக்கும்படி இரண்டு சேனைகளான தூதர் சேனையைத் தரிசிக்கும்படியான தயவு அவனுக்குக் கிடைத்தது. பிந்தியகாலத்தில் எலிசாவின் வேலைக்காரனுக்குப் போதனையைக் கொடுக்கும்படியாகக் காணப்





2 கள் அவனைச் சந்தித்தார்கள்.—யாக்கோபு அவர்களைக்
கண்டபோது: இது தேவனுடைய [1]சேனை என்று
சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு *மக்னாயீம் என்று பே
ரிட்டான்.

3 பின்பு, யாக்கோபு ஏதோம் சீமையாகிய [2]சேயீர்
தேசத்திலிருக்கிற தன் சகோதரனாகிய [3]ஏசாவினிடத்
4 துக்குப் போகும்படி ஆட்களை அழைப்பித்து:—நீங்கள்
என் [4]ஆண்டவனாகிய ஏசாவினிடத்தில் போய்,

[1] யோசு. 5.14. சங். 34.7; 103.21; 148.2. லூக். 2.13.
* இரண்டு சேனை. யோசு. 21.38.
[2] உபா. 2.5.
[3] ஆதி. 14.31, 32.
[4] நீதி. 15.1.

பட்ட பிரகாரம் (2 இரா. 6: 16, 17.) இங்கே யாக்கோபுக்கும் தரிசனை அருளப்பட்டது. யாக்கோபு மோசங்களால் சூழப்பட்டிருந்தாலுந் தனக்கு விரோதமாயிருப்பவர்களைவிட தன் பட்சத்திலிருக்கிறவர்கள் அதிகம் என்பதை அந்தக் காட்சியால் உணர்ந்து தன்னைத் தேற்றிக்கொள்ள ஏதுவாயிற்று. கர்த்தருடைய தூதன் தமக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயம்போட்டு அவர்களை விடுவிக்கிறார். (சங். 34: 7.)

**2. "மக்னாயீம்."** என்பதற்கு "இரண்டு சேனை" என்றர்த்தம். சிலர் இது யாக்கோபின் சேனையையுந் தேவதூதர் சேனையையுங் குறிக்கும் என்பார்கள். ஆனால் அது யாக்கோபைச் சூழ்ந்து பாதுகாக்கும்படி அவன் வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலுமுள்ள தேவதூதரின் சேனைகளைக் குறிக்கும். மக்னாயீம் காத் கோத்திரத்திலிருந்தது, அது லேவியருக்குக் கொடுக்கப்பட்டது (யோசு. 21: 38.). பிந்தியகாலத்தில் அது ஒரு விசேஷித்த பட்டணமாயிருந்தது. (2 சாமு. 2: 8; 17: 24. 1 இரா. 4: 14.)

**3. "யாக்கோபு ஏதோம் சீமையாகிய சேயீர், ஷ."** யாக்கோபு தன் தகப்பன் வீட்டுக்கு போகும் எபிரோனுக்குப் பிரயாணஞ் செய்துகொண்டு போகையில் ஏசா என்பவன் ஓரியருக்கு விரோதமாய் யுத்தம் செய்ய ஒரு பெருஞ் சேனையோடே ஆயத்தமாய் இருந்ததைக்குறித்துக் கேள்விப்பட்டான். இந்த ஓரியர் ஏசாவின் போர்வீரரோடே எதிர்நிற்க சக்தியற்றவர்களாயிருந்தார்கள் (36: 6.). நாம் பார்க்கிறபடி ஏசா என்பவன் எபிரோனில் ஈசாக்கோடே குடியிருந்துவந்தான். ஆனால் இந்தச் சமையத்தில் ஏசா சூறையாடும் நோக்கமாய் சேயீருக்குப் போயிருக்கலாம். அப்போது அந்தத் தேசத்துக் குடிகள் மிகப் பலவீனர் என்றும் அந்த இடம் வேட்டைக்கு வசதியுள்ள பூமியென்றும் அறிந்துகொண்டான். அவன் ஓரியச்சாதியான ஒரு பெண்ணை விவாகம் பண்ணினதாயும் தோன்றுகிறது (36: 1.). இப்படி அவன் அந்தந்த தேசத்தோடே சம்பந்தப்பட்டிருந்ததால் ஈசாக்கு மரித்தபின்பு அவன் ஏதோம் தேசத்துக்குப் போய்க் குடியேறினான். ஏதோமுக்கு வேறேபேர் சேயீர் என்பதே. அதற்கு கரடுமுரடானது அல்லது ரோமமுள்ளது என்று அர்த்தம். இதால் அது சோலைவளமுள்ளதாயிருந்ததென்று அறியலாம். சேயீர் நாட்டுக்கும் மக்னாயீமுக்கும் இடையில் பத்துக்காதவழி தூரமிருந்தது. ஏசா சமீபித்து வரும் பரியந்தம் யாக்கோபு மக்னாயீமிலிருந்தான்.

**4. "என் ஆண்டவனாகிய."** முதற் பிறப்புக்குரிய ஆசீர்வாதங்களை யாக்கோபு பெற்றுக்கொண்டபோதிலும் அவன் பெருமைக்கு இடங்கொடாமல்

நான் இதுவரைக்கும் லாபானிடத்தில் தங்கியிருந்
5 தேன் என்றும்,—எனக்கு [1]எருதுகளும், கழுதைக — [1] ஆதி. 30. 43.
ளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும்
உண்டென்றும், உம்முடைய கண்களில் எனக்குத்
[2]தயவு கிடைக்கத்தக்கதாக ஆண்டவனாகிய உமக்கு — [2] ஆதி. 33. 8, 15.
இதை அறிவிக்கும்படி ஆட்களை அனுப்பினேன் என்
றும் உம்முடைய தாசனாகிய யாக்கோபு சொல்லச்
சொன்னான் என்று சொல்லும்படிக் கட்டளை கொடுத்
துத் தனக்கு முன்னாக அவர்களை அனுப்பினான்.

6 அந்த ஆட்கள் யாக்கோபினிடத்துக்குத் திரும்பி
வந்து: நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவி
னிடத்துக்குப் போய்வந்தோம்; அவரும் நானூறு
பேரோடே உம்மை [3]எதிர்கொள்ள வருகிறார் என் — [3] ஆதி. 33. 1.
றார்கள்.

7 அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, [4]வியா — [4] ஆதி. 35. 3.
குலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும் ஆடு
மாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாகப்
8 பிரித்து:—ஏசா ஒரு பகுதியின்மேல் விழுந்து அதை

---

தன் மூத்த சகோதரனைக் கனத்துக்குப் பாத்திரவானாக மதித்து அவனை ஆண்டவன் என்றுந் தன்னை அவனுடைய தாசன் என்றும் பேசினான்.

5. **"எனக்கு எருதுகளும், மு."** தனக்குப் போதுமான சம்பத்து இருக்கிறதென்று யாக்கோபு ஏசாவுக்குச் செய்தி அனுப்பினபடியால், தன் தகப்பனுடைய ஆஸ்தியில் தனக்குப் பங்குபாகம் வேண்டியதில்லை என்பதாய் ஏசாவின் மனதில் படட்டும் என்ற நோக்கமிருந்ததாகத் தோன்றுகிறது.

**6. "நானூறுபேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார்."** ஏசா சமாதானத்தோடே யாக்கோபைச் சந்திக்க வந்தால் சொற்பப்பேரோடே வரலாமே. யுத்தபுருஷர் 400 பேரோடே அவன் வருகிறான் என்று யாக்கோபு கேள்விப்பட்டபோது ஏசாவின் கோபம் இன்னமுந் தணியாமல் பழிவாங்கும் நோக்கமாய் வருகிறான் என்று எண்ணினான். ஏசா ஓரியருக்கு விரோதமாய்ப் போய் அவர்களைக் கொள்ளையிட்டதில் தன் சேனைகளில் அநேகரைக் கொள்ளையுடைமைகளோடே வைத்துவிட்டு மீதியான 400 பேரைக் கூட்டிக்கொண்டுவந்தான்.

**7. "யாக்கோபு மிகவும் பயந்து."** யாக்கோபுக்கு யாதொரு மோசமும் நேரிடாதென்று தேவன் அடிக்கடி தைரியப்படுத்தியிருந்தும், அவன் மிகுந்த பயத்துக்கு இடங்கொடுத்ததைக் கவனிக்கையில் அவன் விசுவாசம் மிகப் பெலவீனமாயிருந்ததென்று அறியலாம். ஆனால் அவன் தேவபக்தியுள்ளவனாயிருந்ததால் ஜெபத்தின் மூலமாய்த் தேவனிடத்தில் ஒதுக்கிடந் தேடி தன் குடும்பத்தில் சிலரையாவது தப்புவிக்கும்படிக்கேற்ற வகைப்பாடு செய்தான்.





முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்
கொள்ள இடம் உண்டு என்றான்.

9 பின்பு யாக்கோபு: [1]என் தகப்பனாகிய ஆபிரகாமின் — [1] ஆதி. 28. 13.
தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய்
இருக்கிறவரே: [2]உன் தேசத்துக்கும் உன் இனத்தா — [2] ஆதி. 31. 3, 13.
ரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்
வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்
10 தாவே,—அடியேனுக்குத் தேவரீர் காண்பித்த எல்லா
தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் [3]நான் எவ்வள — [3] ஆதி. 24. 27. சங். 86. 5.
வேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய்
இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; [4]இப்பொழுது — [4] யோபு. 8. 7. சங். 18. 35.
இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.—
11 என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு [5]என்னைத் தப் — [5] சங். 59. 1, 2.
புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும்
[6]தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவ — [6] ஓசி. 10. 14.
12 னுக்கு நான் பயந்திருக்கிறேன்.—தேவரீரோ: நான்
உனக்கு [7]மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்த — [7] ஆதி. 28. 13, 15.
தியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல
மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே
என்றான்.

13 அன்று ராத்திரி அவன் அங்கே தங்கி, தன்
கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனாகிய ஏசா

---

**9. "என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், மு."** இது ஊக்கமான ஜெபம். தேவனைத் தன் பிதாக்களின் எலோயீம் என்று ஜெபித்து அப்பால் உடம்படிக்கையின் தேவனாக அவரிடத்தில் நெருங்கித் தன்னுடைய அபாத்திரத்தன்மையை அறிக்கையிட்டுத் தனக்குக் காட்டப்பட்ட தேவதயவை நினைப்பூட்டித் தன்னையும் தாய்மாரோடே பிள்ளைகளையும் ஏசா முறிய அடிக்காதபடிக்கு இரட்சிப்பைக் கட்டளையிட பிரார்த்தித்தான். அப்பால் விசுவாசத்தில் தைரியமடைந்து தெய்வீக வாக்குத்தத்தங்களை எடுத்துக்காட்டி இப்படிப்பட்ட துக்கமான காரியங்கள் சம்பவிப்பது கூடாதவைகள் என்று தன் விண்ணப்பத்திலே தன்னைத் தேற்றிக்கொண்டான்.

**13. "அவன் அங்கே தங்கி."** ஏசா ஆகாத எண்ணத்தோடே வருகிறான் என்று யாக்கோபு முதலாவதாகக் கேள்விப்பட்டபோது, அவன் தன் சம்பத்துக்களை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஏசா ஒரு பகுதியில் விழுந்து முறிய அடித்தால் மற்றப்பகுதி தப்பிக்கொள்ளலாம் என்று எண்ணினான். இப்போது

14 வுக்கு [1]வெகுமானமாக,—இருநூறு வெள்ளாடுகளை
யும், இருபது வெள்ளாட்டுக்கடாக்களையும், இருநூறு
செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களை
15 யும்,—பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும்,
அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும்,
பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக்கழுதை
களையும், பத்துக் கழுதைக் குட்டிகளையும் பிரித்தெ
16 டுத்து,—வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையை
தனித்தனியாக ஒப்புவித்து, நீங்கள் மந்தை மந்தைக்கு
முன்னும் பின்னுமாக இடம் விட்டு எனக்கு முன்
னாக ஓட்டிக்கொண்டுபோங்கள் என்று தன் வேலைக்கா
17 ரருக்குச் சொல்லி;—முன்னே போகிறவனை நோக்கி:
என் சகோதரனாகிய ஏசா உனக்கு எதிர்ப்பட்டு: நீ
யாருடையவன்? எங்கே போகிறாய்? உனக்குமுன்
போகிற மந்தை யாருடையது? என்று உன்னைக் கேட்

[1] நீதி. 18. 16.

ஜெபம் செய்ததின்பேரில் மனதில் அமைதலடைந்து, 550 கால்நடைகளைப் பிரித்தெடுத்து ஏசாவின் கோபத்தைத் தணிக்கும்படி அவனுக்கு வெகுமதியாக அனுப்பினான். அப்பால் தன்னுடையவர்கள் எல்லாரையும் யாப்போக் ஆற்றைச் சுகமாய்க் கடத்தித் தான் செபம்பண்ணும்படியாக அவ்விடத்தில் தங்கினான். அப்போது அவனுடைய விசுவாசம் அவன் பயத்தை மேற்கொண்டதாகப் பார்க்கிறோம்.

**14, 15.** "**வெள்ளாடுகள்—செம்மறியாடுகள்—ஒட்டகங்கள்—மாடுகள்—கழுதைகள்.**" இங்கே இந்தக் கால்நடைகள் அவைகளின் அருமைக்குத் தக்கதாக வரிசையாகப் போடப்பட்டிருக்கின்றன. ஒட்டகங்களுக்குப் பிந்தி மாடுகளைப் போட்டிருக்கிறது. பசுவின்பால் அவ்வளவாய் அக்காலத்தில் மதிக்கப்படவில்லை. என்றாலும் மாடுகள் உழவுக்காக உபயோகிக்கப்பட்டதால் அவைகளை மிகப் பிரயோசனமானவைகளாக எண்ணி அப்படிப் போட்டிருக்கிறது. கழுதைகளைக் கடைசியாகப் போட்டிருக்கிறது. பெரியோர்கள் அவைகளைச் சவாரிக்காக உபயோகப்படுத்தினதால் அதை அதிகமாக மேன்மைப்படுத்தும்படி அப்படிப் போட்டிருக்கிறது. ஒட்டகப்பால் நாடோடிய புசிப்பாயிருந்ததால் யாக்கோபு பால்கொடுக்கிற ஒட்டகங்களைத் தெரிந்து அனுப்பினான்.

**16.** "**முன்னும் பின்னுமாக இடம் விட்டு.**" அந்தந்தவகை கால்நடைகள் சேர்ந்துபோனால் சமாதானமாய்ப்போகும். மேலும் மந்தைக்குமந்தை இடம்விட்டுப்போகையில் அந்தந்தவகை மிருகங்களை ஓட்டிக்கொண்டு போகும் வேலைக்காரர் அவைகள் அனுப்பப்பட்ட நோக்கத்தை ஏசாவுக்குச் சொல்லுகையில் அவன் கோபஞ் சாந்தப்பட்டுவர ஏதுவாயுமிருந்தது.





18 டால்,—நீ: இது உமது அடியானாகிய யாக்கோபுடை
யது; இது என் ஆண்டவனாகிய ஏசாவுக்கு அனுப்பப்
படுகிற வெகுமதி; இதோ, அவனும் எங்கள் பின்னே
19 வருகிறான் என்று சொல் என்றான்.—இரண்டாம்
மூன்றாம் வேலைக்காரனையும், மந்தைகளின் பின்னாலே
போகிற அனைவரையும் நோக்கி: நீங்களும் ஏசாவைக்
காணும்போது, இந்தப்பிரகாரமாக அவனோடே
20 சொல்லி,—இதோ, உமது அடியானாகிய யாக்கோபு
எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்
கள் என்று கட்டளையிட்டான்; முன்னே வெகுமதி
யை அனுப்பி, அவனை [1]சாந்தப்படுத்திக்கொண்டு,
பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன், அப்பொழுது
ஒருவேளை என்மேரில் தயவாயிருப்பான் என்றான்.
21 அந்தப்படியே வெகுமதி அவனுக்குமுன் போயிற்று;
22 அவனோ அன்று ராத்திரி பாளயத்திலே தங்கி,—இராத்
திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும்,
தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய
பதினொரு குமாரரையும் கூட்டிக்கொண்டு, [2]யாப்
போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான்.—
23 அவர்களையும் சேர்த்து ஆற்றைக் கடக்கப்பண்ணி,
தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தி
னான்.

[1] நீதி. 21. 14. யோபு. 42. 8, 9.
[2] உபா. 3. 16.

**20.** "**அவனை சாந்தப்படுத்தி.**" எபிரெயுவில் என் முகத்துக்கு முன்பாகப்போகிற காணிக்கைகளால் நான் அவன் முகத்தை மூடி அப்புறம் அவன் முகத்தைப் பார்ப்பேன். ஒருவேளை அவன் என் முகத்தை எடுப்பான் என்றிருக்கிறது. விசனப்படுத்தப்பட்ட மனுஷன் தனக்குச் செய்யப்பட்ட குற்றத்தை இனிமேல் பாராதபடிக்கு அவன் முகத்தை மூடுவது பாவநிவிர்த்தியைக் குறிக்கும் வார்த்தை (லேவி. 9: 7.). "முகத்தை மூடுதல்" என்பது குற்றத்தை எண்ணாததையும் "முகத்தை எடுத்தல்" என்பது ஒருவனைத் தயவாய் அங்கீகரித்துக்கொள்வதையுங் குறிக்கும்.

**22.** "**யாப்போக்.**" இந்த நதி மனாசே, காத் கோத்திரங்களுக்கு இடையே இருக்கிறது. அது இப்போது "சீலம்" என்றர்த்தங்கொள்ளுஞ் செர்காநதி என்றழைக்கப்படுகிறது.

**23.** "**ஆற்றை.**" இதற்குரிய எபிரெய பதம் 26: 17ல் "பள்ளத்தாக்கு" என்று திருப்பப்பட்டிருக்கிறது. யாக்கோபைச் சேர்ந்தவர்கள் யாப்போக் நதியின் துறையைக் கடந்தபின்பு அந்த நதியைச்சேர்ந்த நாலைந்துமைல் அகலமுள்ள பள்ளத்தாக்கைக் கடக்கவேண்டியதாயிருந்தது. இதை அவர்கள் கடந்த

24 யாக்கோபு பின்தித் தனித்திருந்தான்; அப்பொழுது
ஒரு [1]புருஷன் பொழுது விடியுமளவும் அவனுட
25 னே போராடி,—அவனை மேற்கொள்ளாததைக் கண்டு,
அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதி
னால் அவருடனே போராடுகையில் யாக்கோபின்
26 [2]தொடைச்சந்து சுளுக்கிற்று.—அவர்: நான் போகட்
டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்:

[1] ஓசி. 12. 3. எபே. 6. 12.
[2] மத். 26. 41. 2 கொ. 12. 7.

பின்பு யாக்கோபு அந்தப் பள்ளத்தாக்கிலே செபம்பண்ணும்படியாக இருந்துவிட்டான்.

**24. "ஒரு புருஷன்."** புருஷனாக யாக்கோபுக்குக் காணப்பட்டவர் (ஓசி. 12: 4, 5.) "தூதன்" என்றும் "கர்த்தர்" என்றும் "தேவன்" என்றும் "யெகோவா" என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார். இந்த அதிகாரம் 30-ம் வசனத்தில் யாக்கோபு "தேவனை முகமுகமாய்க் கண்டேன்" என்கிறான். பூர்வகாலத்திலிருந்த பிதாக்கள் தங்களுடைய மீட்பரானவர் ஸ்திரீயின் வித்தானவரே என்ற அறிவையுடையவர்களாயிருந்தார்கள். பின்பு அவர்கள் வரவர அவரை யெகோவாவின் நாமத்தோடே ஐக்கியப்படுத்திவந்தார்கள். தேவனும் மனிதனும் பொருந்திய ஒருவராய் இம்மானுவேலாக இருக்கிறார் என்று தீர்க்கதரிசிகள் போதிப்பதற்கு நல்ல திட அஸ்திபாரம் இங்கே போடப்பட்டது. பொன் விளக்குத்தண்டின் நடுவே இப்போது உலாவுகிறவர் பூர்வகாலத்துப் பரிசுத்தவான்களுக்கு அடிக்கடித் தம்மை வெளிப்படுத்தவுஞ் சித்தம்கொண்டு அப்படிச் செய்தார்.

**25. "அவனை மேற்கொள்ளாததைக் கண்டு."** யாக்கோபுக்கும் அந்தப் புருஷனுக்கும் இரவில் வெகுநேரம் உண்டான மல்லயுத்தத்தில் அவன் அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான் (ஓசி. 12: 4.). யாக்கோபு ஏசாவின் மூர்க்கத்துக்கு அஞ்சாமல் தைரியங்கொண்டு தேவன்பேரில் பற்றுதலாய் நம்பிக்கையோடே இருக்கும்படியாக அந்தப் புருஷன் தாம் மேற்கொள்ளப்படும்படி இடங்கொடுத்தார். கானானிய ஸ்திரீயானவள் மனத்தாழ்மையோடே நியாயஞ் சொல்லி அந்தப் புருஷனை மேற்கொண்டாள் (மத். 15: 21–28.). இரண்டு குருடர் இரக்கத்துக்காகக் கெஞ்சி அந்தப் புருஷனுடைய பிரயாணத்தை நிறுத்தினார்கள் (மத். 20: 32.). ஊக்கமான ஜெபம், போராட்ட ஜெபம் செய்கிறவர்களுடைய விண்ணப்பத்தைத் தேவன் கேட்டு அவர்களுக்கு நற்பலனை அருளுகிறவராயிருக்கிறார். (யோவே. 2: 14. லூக். 11: 8, 9; 18: 6, 7. யாக். 5: 17, 18.)

**"தொடைச்சந்து சுளுக்கிற்று."** தூதனானவர் யாக்கோபால் ஜெயிக்கப்படக்கூடியவரல்ல என்பது இதால் பிரத்தியட்சமாய் விளங்குகிறது. என்றாலும் அவர்தாமே அவனுக்குக் கிருபையாய் இரங்கி அவன் மன்றாட்டுக்கு இடங்கொடுத்ததினாலே அவன் மேற்கொண்டான்.

**26. "நான் போகட்டும், பொழுது விடிகிறது."** தூதனானவர் தமது நிமித்தம் போகவேண்டும் என்று விரும்பவில்லை. ஏசா சீக்கிரத்துக்குள்ளாக





நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போக
27 விடேன் என்றான்.—அவர்: உன் பேர் என்ன என்று
28 கேட்டார்; யாக்கோபு என்றான்.—அப்பொழுது அவர்:
உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் *இஸ்ர
வேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போ
29 ராடி மேற்கொண்டாயே என்றார்.—அப்பொழுது
யாக்கோபு: உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்க
வேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: [3]நீ என்
நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே
30 அவனை ஆசீர்வதித்தார்.—அப்பொழுது யாக்கோபு:
நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர்தப்பிப்

[1] லூ. 24. 28. ஓசி. 12. 3, 4.
[2] ஆதி. 35. 10, 2. இரா. 17. 34.
* தேவப்பிரபு.
[3] நியா. 13. 18.

பிழைத்தேன் — (continuation not printed)

வந்துவிடுவான்; அதற்குள்ளாக யாக்கோபு தன் குடும்பத்தைக் கிரமப்படுத்த வேண்டியதாயிருந்ததால் அவன் நிமித்தமே அப்படிச் சொன்னார்.

**"நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய."** தன்னோடே போராடினவர் பரமஸ்தலத்திலுள்ளவர் என்பதை யாக்கோபு அறிந்துகொண்டு தன்னை ஆசீர்வதிக்கும்படிக் கேட்டுக்கொண்டான். இந்தக் கொடிய ஆபத்தானவேளையில் அவர் தனக்கு நன்மை செய்யக்கூடியவர் என்பதைக் கண்டு அவரிடத்தில் ஆசீர்வாதந் தேடினான்.

**28. "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல்."** தன் எதிராளியைத் தந்திர உபாயங்களினால் ஜெயிக்கிறவனாக விளங்காமல் ஊக்கமான ஜெபத்தினால் ஆசீர்வாதத்தைப் பெறுகிறவனாக விளங்குவாய்.

**"இஸ்ரவேல் என்னப்படும்."** இஸ்ரவேல் என்பதற்குத் "தெய்வ பிரபு" அல்லது "தேவனோடு வல்லபன்" என்றர்த்தம். இந்தப்பேர் வல்லமைக்குஞ், செயத்துக்குங், கனத்துக்கும் உரித்தான நாமமாயிருக்கிறது.

**"தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே."** யாக்கோபு விசுவாசத்தில் வல்லவனாய்த் தேவனோடே போராடி அவ்விடத்தில் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளும்பரியந்தம் அவரை விடாமல் பிடித்திருந்தான். மனிதரோடு போராடி மேற்கொண்டாயே என்பதில் யாக்கோபு லாபானை மேற்கொண்டதைமாத்திரங் குறியாமல், இனிமேல் அவனுக்கு விரோதிகளாய் வரும் சத்துருக்களை மேற்கொள்வதையும் நிச்சயப்பொருளாகக் காட்டுகிறது.

**29. "நீ என் நாமத்தைக் கேட்பானேன்."** தூதனானவருடைய பேர் இங்கே வெளிப்படுத்தப்படவில்லை என்றாலும் அவர் யாக்கோபுக்கு ஆசீர்வாதங் கொடுத்ததினால் தெய்வீகமுடையவரெனக் காட்டுகிறது.

**30. "தேவனை முகமுகமாய்க் கண்டேன்."** இந்தத் தேகத்தில் தேவனைத் தரிசிக்கக்கூடிய அளவாய் யாக்கோபு தேவனைக் கண்டான். ஆதி. 48: 16ல் அவர் தன்னை எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி மீட்ட தூதனானவர் என்று அவரைக் குறித்துச் சொல்லுகிறான்.

பிழைத்தேன் என்று சொல்லி, அந்த ஸ்தலத்துக்கு
*பெனியேல் என்று பேரிட்டான்.
31 அவன் பெனியேலைக் கடந்துபோகையில், சூரியன்
உதயமாயிற்று; அவன் தொடைச்சுளுக்கினாலே
32 நொண்டி நொண்டி நடந்தான்.—அவர் யாக்கோபு
டைய தொடைச்சந்து நரம்பைத் தொட்டபடியால்,
இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச்
சந்து நரம்பைப் புசிக்கிறதில்லை.

* தேவமுகம், யாத்.33.20. உபா. 5. 24. நியா. 6. 22. ஏசா. 6. 5. யோ. 1. 18. கொலோ. 1. 15. எபி. 11. 27.

"உயிர் தப்பிப் பிழைத்தேன்." தேவதரிசனத்தினாலுண்டாகும் மோசங்களினின்று யாக்கோபு விடுவிக்கப்பட்டான்.

"பெனியேல்." என்பதற்குத் "தேவசமுகம்" என்றர்த்தம்.

**31.** "சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான்." மேற்காட்டிய சங்கதி சொப்பனமாயாவது தரிசனமாயாவது நடவாமல் பிரத்தியட்சமாய் நடந்த மெய்யான சங்கதி என்பதற்கு அத்தாட்சியாகவும், யாக்கோபின் செபங் கேட்கப்பட்டதற்கு உறுதியாகவுந், தனக்கு அடிக்கடி கிடைத்த பரம தரிசனங்களை யிட்டு அவன் மேன்மைபாராட்டாதபடி அவன் மாமிசத்திலே கொடுக்கப்பட்ட ஒரு முள்ளுப்போலவும், அவனுடைய சிறந்த போராட்டத்தை அவனுக்கு எப்போதும் நினைப்பூட்டும் ஞாபகச் சின்னமாகவும் இருந்தது.

## படிப்பினை

### வச. 1—12.

(1) இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்கள் நிமித்தமாக ஊழியஞ் செய்யும்படிக்கு தேவதூதர்கள் எல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள். இதால் மனுஷன் எவ்வளவோ விசேஷமானவன் என்றுந், தேவன் தம்முடைய பிள்ளைகளைக்குறித்து எவ்வளவோ கவலைப்படுகிறார் என்றும் அறியலாம்.

(2) இப்படிப்பட்ட மகத்தான சம்மனசுக்கள் நம்மைச் சூழப் பார்த்துக்கொண்டிருக்கையில் நாம் பாவம் செய்வது எவ்வளவு நாணக்கேடாயிருக்கிறது.

(3) ஒரு போராட்டத்தில் நமக்குக் கிடைக்கும் ஜெயமானது இன்னொரு போராட்டத்துக்கு ஆயுதந் தரிக்கும்படி நமக்கு நினைப்பூட்டுகிறது. ஒரு துன்பத்திலிருந்து விடுவிக்கப்படுகையில் இன்னொரு துன்பத்தைச் சகிக்க ஆயத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது.

(4) கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்கிறவர்கள் விவேகமாய்த் தங்கள் காரியத்தையும் நடத்தவேண்டும். மற்றப்படி அவரைப் பரீட்சிக்கிறதாயிருக்கும்.

(5) மேட்டிமை சிந்தையுள்ள உலகத்தாரை ஜெயிக்கவேண்டுமானால் மனத்தாழ்மையோடேகூடிய சாந்தமான வார்த்தைகளை உபயோகிக்கவேண்டும்.

(6) கொடிய ஆபத்தான வேளைகளில் பலத்த விசுவாசியுங் திகிலுக்கு இடங்கொடுப்பதுண்டு; என்றாலும் அப்பேர்ப்பட்டவன் செபத்தை ஆயுதமாகத் தரித்துக்கொண்டு கர்த்தர்பேரில் சார்ந்துகொள்வான்.





# 33. அதிகாரம்.

யாக்கோபும் ஏசாவும் அன்பாய்ச் சந்தித்தது. 17. யாக்கோபு சுக்கோத்துக்கு வந்தது. 18. சாலேமில் ஒரு வயல்வெளியை வாங்கி, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினது.

1 யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, [1]ஏசா
வும் அவனோடேகூட நானூறு மனிதரும் வருகிற
தைக் கண்டு, பிள்ளைகளை லேயாளிடத்திலும் ராகேலி
டத்திலும் இரண்டு பணிவிடைக்காரிகளிடத்திலும்
2 வெவ்வேறாகப் பிரித்துவைத்து,—பணிவிடைக்காரிக
ளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலிலும், லேயா
ளையும் அவள் பிள்ளைகளையும் இடையிலும், ராகேலை
3 யும் யோசேப்பையும் கடையிலும் நிறுத்தி:—தான்
அவர்களுக்கு முன்னாக நடந்துபோய், [2]ஏழுவிசை

[1] ஆதி. 32. 6.
[2] ஆதி. 18. 2: 42. 6: 43. 26.

### வச. 13—32.

(7) ஒவ்வொரு கடமைக்கும் அதினதின் வேளையுண்டு; நமக்கு எப்பேர்ப்பட்ட பாரமான வேலையுஞ் சமுசார கவலையும் இருந்தாலுந் தனித்தியானமும் ஜெபமுஞ் செய்யும்படி இடமுஞ் சமையமுந் தேடிக்கொள்ளவேண்டும்.

(8) நம்முடைய நன்மைக்காக நாம் செய்யவேண்டிய பிரயத்தனங்களைச் செய்தபின் அவைகளை ஆசீர்வதிக்கத் தேவனை நோக்கி ஜெபம்பண்ணவேண்டும்.

(9) இராக்காலங்களில் தேவனோடு போராடும்படியான ஆபத்துக்களும் அவசரங்களும் நமக்கு உண்டு.

(10) ஜெபமானது மறுஜென்மமடைந்த ஆத்துமாவின் மன்றாட்டும் விசுவாசத்தின் சுவாசமுமாயிருக்கிறது; ஜெபமானது மகா வல்லமையுள்ளது. அதுவாறாய் அது சராசரம் அனைத்தையும் நடத்துகிறவருடைய கரத்தை நடத்துகிறது.

(11) தேவனோடே ஜெபத்தில் போராடுகையில் மனத்தாழ்மையையுந் தேவ வாக்குத்தத்தங்களையும் நமக்கு ஆயுதங்களாக உபயோகிக்கவேண்டும்.

(12) துன்பமானது நம்மைத் தேவனண்டைக்கு ஓடிப்போகப்பண்ணுவதற்கு நல்ல ஏதுவாயிருக்கிறது.

(13) துன்பநாட்களில் நீதிசூரியன் நமதுபேரில் உதையமாகும்பரியந்தம் ஊக்கத்தோடே மன்றாடினால் நாம் மெய்யான இஸ்ரவேலராக அங்கீகரிக்கப்பட்டு தெய்வ பிரபுக்களாக முடிசூட்டப்படுவோம்.

## 33. அதிகாரம்.

**3. தான் அவர்களுக்கு முன்னாக நடந்துபோய்."** தன் மனைவிகள் பிள்ளைகள் தப்பிக்கொள்ளும்படியான வழிவகையைச் செய்து, யாக்கோபு அவர்களுக்கு முன்னாகப்போய் ஏசாவுக்கு முன்பாக ஏழுதரங் குனிந்து வணங்கி அதால் ஏசா தன்னைவிட மேம்பாடுள்ளவன் என்று அறிக்கையிட்டு அவனைச் சாந்தப்படுத்தவும் அவனுடன் ஒப்புரவாகவும் பார்த்தான்.



5590

தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்
4 டச் சேர்ந்தான்.—அப்பொழுது ஏசா எதிர்கொண்டு
ஓடிவந்து, [1]அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட் — [1] ஆதி.
டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும்
5 அழுதார்கள்.—அவன் தன் கண்களை ஏறெடுத்து, ஸ்தி
ரீகளையும் பிள்ளைகளையும் கண்டு: உன்னோடிருக்கிற
இவர்கள் யார் என்றான்? அதற்கு அவன்: தேவன்
[2]உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள் என் — [2] ஆதி. 48. 9. சங். 127. 4. ஏசா. 8. 18.
6 றான்.—அப்பொழுது பணிவிடைக்காரிகளும் அவர்
கள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்கினார்கள்.—
7 லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர்ந்துவந்து வணங்
கினார்கள்; பின்பு யோசேப்பும் ராகேலும் சேர்ந்து
8 வந்து வணங்கினார்கள்.—அப்பொழுது அவன்:
எனக்கு எதிர்கொண்டுவந்த அந்த மந்தையெல்லாம்
என்னத்துக்கு என்றான். அதற்கு அவன்: [3]என் ஆண் — [3] ஆதி. 32. 5, 20.
டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்கிற
9 தற்கு என்றான்.—அதற்கு ஏசா: என் சகோதரனே,
எனக்குப் போதுமானது உண்டு; உன்னுடையது
10 உனக்கு இருக்கட்டும் என்றான்.—அதற்கு யாக்கோபு:
அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத்
தயவு கிடைத்ததேயானால், என் வெகுமதியை என்
கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும்; நீர் என்மேல் பிரிய
மானீர், [4]நான் உம்முடைய முகத்தைக் கண்டது தே — [4] ஆதி. 43. 3. 2 சாமு. 3. 13. மத். 18. 10.
வனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது.—

**4. "ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து......அவனை முத்தஞ்செய்தான்."** ஏசா தன் இடத்தைவிட்டுப் புறப்பட்டபோது அவனுடைய நோக்கம் என்னமாயிருந்தாலும் அவன் தன் சகோதரனைக் கண்டபோது இளம்பிராய பழக்கங்கள் தன் ஞாபகத்துக்கு வரவே சகோதர அன்பு அவனை மேற்கொள்ள தன் சகோதரன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனோடு அவனை முத்தஞ் செய்தான்; இருவரும் ஒப்புரவானதற்காக ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள்.

**5. "தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள்."** இந்த வாக்கியத்திலும் பதினோராம் வாக்கியத்திலும் யாக்கோபு உன்னதமானவரின் பேரை உடம்படிக்கையின் ஆண்டவராகிய யேகோவா என்று சொல்லாமல் அவருடைய சாதாரண நாமமாகிய தேவன் என்று சொல்லுகிறான். இங்கே யேகோவாவின் நாமத்தைச் சொன்னால் உடம்படிக்கையின் சுதந்தர பாத்திபத்தை எடுத்துக்காட்டுவதுபோலிருக்கும்; அதால் தன் சகோதரனுக்கு மனவருத்தமுண்டாகாதபடிக்கு யாக்கோபு விவேகத்தோடே பேசினான்.

**10. "தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது."** முந்தின இரவில் யாக்கோபு தேவசமுகத்தைக் கண்டு தேவதயவைப் பெற்றுக்கொண்





11 தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்
டியதெல்லாம் எனக்கு உண்டு; ஆகையால் உமக்குக்
கொண்டுவரப்பட்ட [1]என் காணிக்கையை ஏற்றுக் — [1] 1 சாமு. 25. 27. 2 இரா. 5. 15.
கொள்ளும் என்று சொல்லி, [2]அவனை வருந்திக் கேட் — [2] 2 இரா. 5. 5, 23.
டுக்கொண்டான்; அப்பொழுது அவன் அதை ஏற்றுக்
12 கொண்டான்.—பின்பு அவன்: நாம் புறப்பட்டுப் போ
வோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்
13 றான்.—அதற்கு அவன்: பிள்ளைகள் இளம்பிள்ளைகள்
என்றும், கறவையான ஆடுமாடுகள் என்னிடத்தில்
இருக்கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும்;
அவைகளை ஒருநாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்
14 தையெல்லாம் மாண்டுபோம்.—என் ஆண்டவனாகிய
நீர் உமது அடியானுக்கு முன்னே போம்; [3]நான் சேயீ — [3] ஆதி. 32. 3.
ருக்கு என் ஆண்டவனிடத்தில் வருமளவும், எனக்
குமுன் நடக்கிற மந்தைகளின் கால்நடைக்கும் பிள்

டான். இப்போது ஏசாவின் தயவு அவனுக்குக் கிடைத்ததைப் பெரிதாகப் பாராட்டும்படி ஏசாவைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதற்கு ஒப்பனையாகப் பாவித்துச் சொன்னான்.

ஏசா இத்தருணத்தில் மிகுந்த உதாரகுணத்தைக் காட்டினான். தனக்குப் போதுமான சம்பத்து இருக்கிறதென்றும் யாக்கோபு தனக்கு நன்கொடையாக அனுப்பின வெகுமதிகளை அவன்தானே திரும்ப வைத்துக்கொள்ளவேண்டும் என்றுந் தன் சகோதரனைக் கேட்டுக்கொண்டான். ஆனால் யாக்கோபு அவனை நெருக்கிக் கேட்டுக்கொண்டதின்பேரில் பட்சத்துக்கு அடையாளமாக ஏசா அவைகளை அங்கீகரித்துக்கொண்டான்.

**13. "பிள்ளைகள் இளம்பிள்ளைகள் என்றும், கறவையான ஆடுமாடுகள்,ஐ."** யாக்கோபு சுக்கோத்தில் தன் கால்நடைகளுக்குக் கொட்டாரங்களைக் கட்டினதால் அது சீதளகாலமாயிருந்ததென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படியானால் யாக்கோபு ஆரானைவிட்டுப் புறப்பட்டு ஆறுமாசங்களாகியிருக்கவேண்டும். ஆனால் இதை உறுதியாய்ச் சாதிக்க ஏதுவில்லை. ஒருவேளை யாக்கோபு தன் கால் சுளுக்கினதினிமித்தஞ் சுக்கோத்தில் தாமதித்திருப்பான் என்று சொல்லலாம்.

**14. "சேயீருக்கு."** யாக்கோபு சேயீருக்குப்போய் அங்கே ஏசாவைக் கண்டு சந்திப்பதாய்ச் சொல்லுகிறான். அவன் அப்படிப் போனதைக்குறித்து நாம் வாசிக்கிறதில்லை. தேவ உத்தரவினால் அல்லது வேறே முகாந்தரங்களினால் அவன் தடுக்கப்பட்டிருக்கலாம். அல்லவென்றால் யாக்கோபு ஏசாவை எபிரோனிலே தன் தகப்பன்வீட்டில் சந்தித்ததால் சேயீருக்குப் போகாதபடி நிறுத்தியிருக்கலாம். (ஆதி. 35: 27–29.)

ளைகளின் கால்நடைக்கும் தக்கதாக, மெதுவாய்
அவைகளை நடத்திக்கொண்டு வருகிறேன் என்றான்.—
15 அப்பொழுது ஏசா: என்னிடத்திலிருக்கிற ஜனங்களில்
சிலரை நான் உன்னிடத்தில் நிறுத்திவிட்டுப்போகட்
டுமா என்றான். அதற்கு அவன்: அது என்னத்திற்கு,
என் [1]ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகி
டைத்தால்மாத்திரம் போதும் என்றான்.
16 அன்றைத்தினம் ஏசா திரும்பித் தான் வந்தவழியே
17 சேயீருக்குப் போனான். — யாக்கோபு [2]சுக்கோத்திற்
குப் பிரயாணம்பண்ணி, தனக்கு ஒரு வீடு கட்டி,
தன் மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களைப் போட்
டான்; அதினாலே அந்த ஸ்தலத்திற்கு சுக்கோத்
என்று பேரிட்டான்.
18 யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்தபின் கா
னான்தேசத்திலிருக்கிற [3]சாலேம் என்னும் [4]சீகேமு

[3] யோ. 3. 23.
[4] அப். 7. 16. யோசு. 24. 1. நியா. 9. 1.

**17.** "சுக்கோத்து." என்பதற்குக் "கொட்டாரங்கள்" என்றர்த்தம். சுக்கோத்து என்ற பேரால் இரண்டு பட்டணங்களுண்டு. ஒன்று காத் கோத்திரத்தில் இருந்தது. இதுதான் இங்கே சொல்லப்படுகிற பட்டணமாயிருக்கவேண்டும் (யோசு. 13: 27. நியா. 8: 4, 5.). மற்றது யோர்தானுக்கு மேற்கே, யோர்தானும் யாப்போக்கும் ஒன்றுசேருகிற இடத்துக்கு பத்து மைலுக்கு வடக்காக இருந்தது. யாக்கோபு தன் நேர்வழியை விட்டு அவ்வளவுதூரம் விலகிப்போயிருக்கமாட்டான்.

**"தனக்கு ஒரு வீடு கட்டி தன் மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களைப் போட்டான்."** நம்முடைய நாட்டிலிருக்கிறதுபோல கானான் தேசத்திலும் ஆடுகள் வருஷம் முழுவதும் வெளியில் தங்குவதுண்டு. இந்த இடத்தில் கொட்டாரங்கள் போடப்பட்டன என்று கவனிப்பாய்ச் சொல்லியதைப் பார்க்கில் அதிலே ஒரு விசேஷம் இருக்கவேண்டும். யாக்கோபுக்குப் பின்னே லாபான் கோபத்தோடே வந்து சமாதானமாய்த் திரும்பினான். முன்னே ஏசா மூர்க்கவெறியோடே வருகிறான் என்று கேள்விப்பட்டுத் தன் குடும்ப க்ஷேமத்தை நாடி அதற்கு வேண்டிய வழிவகைகளை எல்லாஞ் செய்து இராமுழுவதும் பலமாகப் போராடினான். அந்தப் போராட்டத்தில் அவனுக்குச் சுளுக்கு நேரிட்டு நொண்டி நடந்தான். ஏசாவைச் சந்திக்கையில் தன் வருத்தங்களை எல்லாஞ் சகித்து அவனைச் சமாதானத்தோடே அனுப்பின பின்பு சுளுக்கினாலுண்டான உபத்திரவத்தை அனுபவித்தான். அந்தச் சுளுக்கு நீங்க சில மாதங்கள் செல்லுமாகையால் அவன் சுகப்படும்மட்டுஞ் சுக்கோத்தில் ஒரு வீட்டைக் கட்டினதோடே கால்நடைகளுக்குங் கொட்டாரங்களைப் போட்டான் என்று உத்தேசிக்கலாம். அடுத்த வாக்கியம் வியாக்கியானம் பார்க்க.

**18.** "சாலேம் என்னும் சீகேமுடைய பட்டணத்துக்கு." சாலேம் என்பதற்குச் சுகமாய் அல்லது ஆரோக்கியமாய் என்றர்த்தம். சிலர் அதற்குச் சமா





டைய பட்டணத்திற்கு அருகே சென்று பட்டணத்
19 திற்கு எதிரே கூடாரம் போட்டான்.—தான் கூடாரம்
போட்ட வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனா
கிய ஏமோரின் புத்திரர் [1]கையிலே நூறு வெள்ளிக்கா
20 சுக்குக் கொண்டு,—அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி,
அதற்கு *ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்
டான்.

[1] யோசு. 24. 32. யோ. 4. 5.
* தேவனாகிய இஸ்ரவேலின் தேவன்.

னம் என்றர்த்தஞ் சொல்லி யாக்கோபு சீகேம் பட்டணத்துக்குச் சமாதானத்தோடே வந்து சேர்ந்தான் என்பார்கள். ஆனால் சரியானபடி யாக்கோபு சுளுக்கு வியாதி சுகப்பட்டு ஆரோக்கியம் அடைந்தவனாகச் சீகேமுக்கு வந்தான் என்று சொல்லத்தகும். அதிலிருந்து அவன் தன் தகப்பனைப் பார்க்கப் போயிருக்கவேண்டும். அவன் எபிரோனில் குடியிருக்க ஏதுவில்லாமற்போயிற்று. ஏனென்றால் ஈசாக்கு, ஏசா என்பவர்களுக்குத் திரளான ஆடுமாடுகள் இருந்ததால் அவைகளோடே தன்னுடைய ஆடுமாடுகளும் மேய்கிறதற்குப் போதுமான இடம் அங்கே இல்லாதிருந்தது. ஆதலால் அவன் தாதி தெபொராளைக் கூட்டிக்கொண்டு திரும்பிவிட்டான். சீகேமில் தேவன் முதலாவதாக ஆபிரகாமுக்குத் தரிசனமானார். யாக்கோபும் யோர்தானுக்கு மேல்பக்கமாயிருந்த அந்த இடத்துக்கு முதலாவதாக வந்து சேர்ந்தான்.

**19.** "நூறு வெள்ளிக்காசுக்கு." எபிரெயுவில் நூறு கசீத்தாவுக்கு என்றிருக்கிறது. யோபினாகமம். 42: 11ல் யோபின் சிநேகிதர் ஒவ்வொருவரும் அவனுக்கு ஒவ்வொரு தங்கக்காசையும் (கசீத்தாவையும்) பொன் ஆபரணத்தையும் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறதைக் கவனிக்கையில் கசீத்தா என்பது ஓர் நிறையுள்ள லோகக்கட்டியாயும் அதிக விலையுள்ளதாயும் இருந்ததென்று காணப்படுகிறது. சில திருப்புதல்களில் நூறு ஆட்டுக்குட்டிக்கு வாங்கினான் என்றுஞ் சொல்லியிருக்கிறது. அதைக் கவனிக்கையில் கசீத்தா என்பது ஆட்டுக்குட்டி அடையாளம் போட்ட ஓர்வகை நாணயமாயிருக்கலாம் என்று நினைக்கத்தக்கது.

**"கொண்டு."** ஆபிரகாம் நூறுவருஷங்களுக்கு முன்னே இந்த இடத்திலே கல்லறை பூமியை வாங்கினான் (அப். 7: 16.). யாக்கோபு இப்போது குடியிருப்பதற்கு நிலத்தை வாங்கினான். இந்த நிலத்தில் கோத்திரப் பிதாக்களுடைய எலும்புகள் அடக்கஞ் செய்யப்பட்டன. (யோசு. 24: 32. அப். 7: 15, 16.)

**20.** "ஒரு பலிபீடத்தைக் கட்டி." ஆபிரகாம் இந்த இடத்துக்குச் சமீபமாய் ஒரு பலிபீடத்தைக் கட்டியிருந்தான் (ஆதி. 12: 7.). யாக்கோபு அவனுடைய மாதிரியைப் பின்பற்றி தான் சுகமே திரும்பிவந்ததற்காக நன்றியறிதலைக் காட்டவுந் தேவன்பேரில் தனக்கு இருந்த விசுவாசத்தைக் கிரியையினால் வெளிப்படுத்தவுந் தனக்குந் தேவனுக்கும் இருந்த புதுச்சம்பந்தத்தை விளக்குவிக்கவும் பலிபீடத்தைக் கட்டினான்.

**"ஏல்எல்லோகே இஸ்ரவேல்."** யாக்கோபு இதுவரையும் யேகோவாவை ஆபிரகாமின் தேவன் என்றும் ஈசாக்கின் பயபக்திக்குரியவர் என்றும் சொன்னான். இப்போது அவன் அவரால் அங்கீகரிக்கப்பட்டதற்கு அடையாளமா

## 34. அதிகாரம்.

1. தீனாள் சீகேமினால் கற்பழிக்கப்பட்டது. 4. அவன் அவளை விவாகம் செய்யக் கோரினது. 13. அதினிமித்தம் யாக்கோபின் புத்திரர் சீகேமூரார் சுன்னத்தைப் பண்ணிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தது. 20. ஏமோரும் சீகேமும் அதற்கு ஜனங்களைச் சம்மதிக்கப் பண்ணினது. 25. யாக்கோபின் புத்திரர் இந்தச் சமயம்பார்த்து அவர்களைச் சங்காரம்பண்ணி, 27. அவர்கள் பட்டணத்தை அழித்தது. 30. இப்படிச் செய்ததற்காக யாக்கோபு சிமியோனையும் லேவியையும் கடிந்துகொண்டது.

1 லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தியாகிய
[1]தீனாள் [2]தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட் | [1] ஆதி. 30. 21. [2] தீத். 2. 5.

கப் பேர் மாற்றப்பட்டதால் அவரைத் தன்னுடைய தேவன் என்று சொல்லுகிறான். எல்எல்லோகே இஸ்ரவேல் என்பதற்கு "தேவனாகிய இஸ்ரவேலின் தேவன்" என்றர்த்தம்.

பயிற்சி வசனம்.

(1) ஊக்கமான செபத்தினால் நாம் நம்முடைய இருதயத்தைக் கர்த்தருக்கு முன்பாக ஊற்றிவிட்டபின்பு நமக்கு நேரிடும் வருத்தங்கள் மோசங்களைத் தைரியத்தோடும் நம்பிக்கையோடும் தாங்கும்படி ஆயத்தமாயிருப்போமாக.

(2) சிக்ஷித்தலுக்குள்ளாக நாம் அவருடைய இரக்கங்களையுந் தயவுகளையும் அநுபோகத்தால் அறிந்துகொள்ளலாம். நம்முடைய சத்துருக்கள் நம்மோடே சிநேகமாயிருக்கும்படி பற்பலவகைகளை அவர் நடப்பிக்கிறதுண்டு. சத்துருக்களின் கைகளைக் கட்டிப்போடுகிறார். அல்லது அவர்களுடைய மனதில் பயங்கரத்தை உண்டுபண்ணுகிறார். அல்லது அவர்களுக்குள்ளே இயற்கையான அன்பைப் பிறப்பிக்கிறார், அல்லது அவர்கள் இருதயத்தைக் கிருபையால் மாற்றுகிறார்.

(3) மிருதுவான பிரதியுத்தரங் கோபத்தைத் தணிக்கும்; இணங்குதல் பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடும்.

(4) சமாதானத்தோடே நம்முடைய சீவனைக் கழிப்பதற்குப் போதுமானது இருந்தால் அதையே அருமையாக மதிக்கவேண்டும். வாங்குகிறதிலுங் கொடுக்கிறதே பாக்கியம்.

(5) தேவனுக்குப் பயப்படாதவர்களின் கூட்டத்தில் நாம் இருக்கையிலும் நாம் அவருடையவர்கள் என்பதை மறைத்துவைக்கக்கூடாது, அவரை அவர்கள் நடுவிலும் ஞானமாய் அறிக்கை செய்யவேண்டும்.

(6) தேவபக்தியில்லாத இனத்தாரோடு கலந்து உறவாடுவது எவ்விதமும் மோசமாய் முடியும். நாம் கிறிஸ்துவை இழந்துவிடாதபடிக்கு அவர்களை விட்டுப் பிரிந்திருப்பதே உத்தமம்.

(7) யாக்கோபு தன் குடும்பத்துக்காகவும் மந்தைக்காகவும் கவலைப்பட்டதுபோல நமது ஆத்துமமேய்ப்பரும் ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தில் சேர்த்து கறவலாடுகளை, மெதுவாய் நடத்திக்கொண்டுவருகிறார்.

(8) தேவனிடத்தில் நாம் நன்மைகளைப் பெற்றுக்கொள்கையில் நமது கிரியைகளினால் அவரை மேன்மைப்படுத்தி அவருக்கு நன்றியறிதலைக் காட்டுவோமாக.

### 34. அதிகாரம்.

1. "தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள்." யாக்கோபு ஆரானில் இருபது வருஷமுஞ் சஞ்சரித்தான் என்று எண்ணுகிறவர்





2 டாள்.—அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் [1]அத் | [1] நியா. 11. 1. 2 சாமு. 11. 2.
தேசத்தின் பிரபுவுமாகிய சீகேம் என்பவன் கண்டு,
அவளைக் கொண்டுபோய், அவளோடே சயனித்து,
3 *அவளைத் தீட்டுப்படுத்தினான்.—அவனுடைய மனம் | * கற்பழித்தான். உபா. 22. 29.
யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள்மேல் பற்றுத
லாயிருந்தது; அவன் அந்தப் பெண்ணை நேசித்து,
அந்தப் பெண்ணின் மனதுக்கு இன்பமாய்ப் பேசி
4 னான்.—சீகேம் தன் தகப்பனாகிய ஏமோரை நோக்கி:
[illegible] பெண்ணை எனக்குக் கொள்ளவேண்டுமென்று | [2] நியா. 14. 2.

கள் அவன் கானானுக்குத் திரும்பிவந்தபின்பு சுக்கோத்தில் ஏறக்குறைய இரண்டு வருஷங்களுஞ் சீகேமில் இந்தச் சங்கதி சம்பவித்ததற்குமுன் ஏழு அல்லது எட்டு வருஷங்களும் பின்னிட்டான் என்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியானால் இந்தச் சம்பவத்துக்கும், யோசேப்பு இஸ்மவேலருக்கு விற்கப்பட்டதற்கும் இடையில் ஒருவருஷமாத்திரம் இருக்கிறது. தீனாளுக்கு இப்போது 14 வயதாவது இருக்கவேண்டும். யாக்கோபு ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது அவளுக்கு நாலு வயதிருக்கலாம். அப்படியாகில் லேயாள் ஒன்றின்பின்னொன்றாய் முதலாவது நாலு பிள்ளைகளையும் பின்பு சிலவருஷம் அவள் பேறு நின்றுபோக அவள் அடிமைப்பெண் இரண்டு பிள்ளைகளையும் அப்பால் லேயாள் இரண்டு குமாரரையும் ஒரு குமாரத்தியையும் பெறவும் ஒன்பது வருஷமிருந்தது. இந்தக் காலத்துக்குள் இவ்வித சங்கதிகள் எல்லாம் நடப்பது கூடாத காரியமே. மேலும் யாக்கோபு சுக்கோத்தில் சுளுக்குக் காலமட்டும் இருந்து சீகேமுக்குப் போனான். தீனாள் சீகேமில் இரண்டு மூன்று வருஷங்களிருந்தபிற்பாடு தேசத்துப் பெண்பிள்ளைகளின் காரியம் அவளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்குமாதலால் அவர்களைப் பார்க்கப் புறப்பட்டிருக்கவும்மாட்டாள். ஆதலால் தேசத்துப் பெண்பிள்ளைகளின் உடைநடை ஆபரணங்களைப் பார்க்கவுந் தன்னுடையவைகளை அவளுக்குக் காட்டவுஞ் சீகேமுக்கு வந்த துவக்கத்தில் போயிருக்கவேண்டும். ஆதலால் யாக்கோபு சீகேமில் எட்டுவருஷம் இருந்தான் என்று சொல்வது வியர்த்தமாயிருக்கிறது.

யோசேப்பின் பிறப்புக்கு முந்தி தீனாளுடைய பிறப்பைக்குறித்து, ஆதி. 30: 21ல் சொல்லியிருக்கிறதால் அவள் அவனுக்கு மூத்தவளாயிருந்திருக்க வேண்டும்; தீனாளுக்கு நடந்த அவமானத்துக்கு இரண்டொரு வருஷங்களுக்குப்பின் யோசேப்பு 17 வயதாயிருந்தான் என்று 37: 2ல் சொல்லியிருக்கிறது. ஆதலால் தீனாள் இந்தச் சமையத்தில் எப்படியும் 14 அல்லது 15 வயசாவது குறையாமலிருக்கலாம். ஆதலால் அவள் அப்போது 5 அல்லது 6 வயசாயிருக்கவேண்டும் என்று சிலர் சொல்வது தப்பிதமாயிருக்கிறது.

2. "சீகேம்......அவளைத் தீட்டுப்படுத்தினான்." தீனாள் பெற்றோர் உத்தரவின்றி வீட்டைவிட்டு வெளியேறி விநோதம் பார்க்கும்படி அன்னியர்களுடைய கூட்டத்தில் வந்தாள். சீகேம் என்பவன் அவள் ரூபத்தைக் கண்டு மயங்கி இனிய சொற்களால் அவளைத் தன் வசப்படுத்திக்கொண்டான்.

5 சொன்னான்.—தன் குமாரத்தியாகிய தீனாளை அவன்
தீட்டுப்படுத்தினதை யாக்கோபு கேள்விப்பட்ட
போது, அவன் குமாரர் அவனுடைய மந்தையினிடத்
தில் வெளியிலே இருந்தார்கள்; அவர்கள் வருமளவும்
யாக்கோபு [1]பேசாமலிருந்தான். [1] 1 சாமு. 10. 27. 2 சாமு. 13. 22.
6 அத்தருணத்தில், சீகேமின் தகப்பனாகிய ஏமோர்
புறப்பட்டு, யாக்கோபோடே பேசும்படி அவனிடத்
7 தில் வந்தான்.—யாக்கோபின் குமாரர் இந்தச் செய்தி
யைக் கேட்டவுடனே, வெளியிலிருந்து வந்தார்கள்.
அவன் யாக்கோபின் குமாரத்தியோடே சயனித்து,
[2]செய்யத்தகாத [3]மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலில் [2] உபா. 23. 17. 2 சாமு. 13. 21.
செய்ததினாலே அந்த மனிதர் மனங்கொதித்து [4]மிக [3] யோசு. 7. 15. நியா. 20. 6.
8 வும் கோபங்கொண்டார்கள்.—ஏமோர் அவர்களோ [4] ஆதி. 49. 7. 2 சாமு. 13. 12.
டே பேசி: என் குமாரனாகிய சீகேமின் மனது உங்கள்
குமாரத்தியின்மேல் பற்றுதலாயிருக்கிறது; அவளை
9 அவனுக்கு மனைவியாகக் கொடுங்கள்.—நீங்கள் எங்க
ளோடே சம்பந்தங் கலந்து, உங்கள் குமாரத்திகளை
எங்களுக்குக் கொடுத்து, எங்கள் குமாரத்திகளை உங்
10 களுக்குக் கொண்டு,—எங்களோடே வாசம்பண்ணுங்
கள்; தேசம் உங்கள் முன்பாக இருக்கிறது; [5]இதிலே [5] ஆதி. 13. 9.

**5. "யாக்கோபு பேசாமலிருந்தான்."** தீனாள் வீட்டுக்கு வரவில்லை. சீகேமின் வீட்டிலே வைக்கப்பட்டிருந்ததை யாக்கோபு வேலைக்காரிகள் மூலமாய்க் கேள்விப்பட்டு எவியர் தன்னிலும் பலத்தவர்கள் என்று அறிந்து தன் பிள்ளைகள் மந்தைமேய்க்கும் இடங்களிலிருந்து திரும்பிவருமட்டும் நலம் பொலம் பேசாமல் துக்கத்தோடே இருந்தான்.

**7. "மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலில்."** இந்த வார்த்தைகள் யாக்கோபின் குமாரருடையதாயிராமல் மோசேயின் வார்த்தைகளாயிருக்கின்றன. இஸ்ரவேல் என்கிற பதம் அவன் சந்ததியாருக்கு அவன் காலத்திலே வழங்கப்படவில்லை.

**"மிகவும் கோபங்கொண்டார்கள்."** தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் நடப்பிக்கப்பட்டதினால் யாக்கோபின் குமாரர் கோபங் கொண்டதாகத் தோன்றவில்லை. குடும்பத்தில் அவமான முண்டானதற்காக விசனப்பட்டார்கள் என்று தோன்றுகிறது.

**10. "எங்களோடே வாசம்பண்ணுங்கள்."** யாக்கோபு தன் மகளைச் சீகேமுக்கு விவாகம் செய்துகொடுக்கும்படியாக ஏமோர் பேசினதிலே இரு





குடியிருந்து, வியாபாரம்பண்ணி, பொருள் சம்பா
தித்து, அதைக் கையாண்டுகொண்டிருங்கள் என்
11 றான்.—சீகேமும் அவள் தகப்பனையும் அவள் சகோத
ரரையும் நோக்கி: உங்கள் கண்களில் எனக்குத் தயவு
கிடைக்கவேண்டும்; நீங்கள் என்னிடத்தில் எதைக்
12 கேட்டாலும் தருகிறேன்;—பரிசமும் [1]வெகுமதியும் [1] யாத். 22. 16, 17. 1 சாமு. 18. 25.
நீங்கள் எவ்வளவு கேட்டாலும், உங்கள் சொற்படி
தருகிறேன்; அந்தப் பெண்ணைமாத்திரம் எனக்கு மனை
வியாகக் கொடுக்கவேண்டும் என்றான்.
13 அப்பொழுது யாக்கோபின் குமாரர் தங்கள் சகோ
தரியாகிய தீனாளைச் சீகேம் என்பவன் தீட்டுப்படுத்
தினபடியால், அவனுக்கும் அவன் தகப்பனாகிய
14 ஏமோருக்கும் [2]வஞ்சகமான மறுமொழியாக:—விருத் [2] நீதி. 26. 25.
தசேதனமில்லாத புருஷனுக்கு நாங்கள் எங்கள் சகோ
தரியைக் கொடுக்கலாகாது; அது எங்களுக்கு [3]நிந் [3] யோசு. 5. 9.
15 தையாயிருக்கும்.—நீங்களும், உங்களுக்குள்ளிருக்கும்
ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டு
எங்களைப்போலானீர்களானால், நாங்கள் சம்மதித்து,—
16 உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து,
உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு, உங்க

பட்சத்தாரும் ஒன்றாய்க் கலந்துபோகவேண்டும் என்ற எண்ணமுமிருந்தது. (நீதி. 16: 22.)

**12. "பரிசமும் வெகுமதியும்."** பரிசம் பெண்ணுக்கும், வெகுமதி பெண்ணின் பந்துக்களுக்கும் கொடுக்கப்படும்.

**13. "வஞ்சகமான மறுமொழியாக."** ஏமோரும் சீகேமும் கபடமற்ற மனதோடே பேசினார்கள். யாக்கோபின் குமாரரோ பழிவாங்கவேண்டும் என்ற எண்ணத்தோடே மனதில் ஒன்றை வைத்து வாயினால் வேறொன்றைப் பேசினார்கள்.

**14. "விருத்தசேதன மில்லாதவர்களுக்கு எங்கள் சகோதரியைக் கொடுக்கலாகாது."** ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் குமாரத்திகளில்லை. ஈசாக்கும் யாக்கோபும் விருத்தசேதன மில்லாதவர்களுடைய குமாரத்திகளை விவாகஞ் செய்தார்கள். அப்படியே யாக்கோபின் குமாரரில் மிகுதியான பேர்களுஞ் செய்தார்கள். விருத்தசேதனம் இல்லாதவர்களோடு சம்பந்தங் கலக்கக்கூடாதென்ற சட்டம் அப்போது இருந்ததாகத் தோன்றுகிறதுமில்லை. ஆத

17 ளோடே குடியிருந்து, ஏகஜனமாயிருப்போம்.—விருத்
தசேதனம் பண்ணிக்கொள்வதற்கு எங்கள் சொல்
கேளாமற்போவீர்களானால், நாங்கள் எங்கள் குமாரத்
தியை அழைத்துக்கொண்டு போய்விடுவோம் என்று
சொன்னார்கள்.

18 அவர்களுடைய வார்த்தைகள் ஏமோருக்கும் ஏமோ
ரின் குமாரனாகிய சீகேமுக்கும் நலமாய்த் தோன்றி
19 னது.—அந்த வாலிபன் யாக்கோபுடைய குமாரத்தி
யின்மேல் பிரியம் வைத்திருந்தபடியால், அந்தக் காரி
யத்தைச் செய்ய அவன் தாமதம் பண்ணவில்லை.
அவன் தன் தகப்பன் வீட்டார் [1]அனைவருக்குள்ளும் [1] 2 இரா. 9. 1.
மேன்மையுள்ளவனாயிருந்தான்.

20 ஏமோரும் அவன் குமாரன் சீகேமும் தங்கள் பட்ட
ணத்து வாசலில் வந்து, தங்கள் பட்டணத்து மனித
21 ரோடே பேசி:—இந்த மனிதர் நம்மோடே சமாதான
மாயிருக்கிறார்கள்; ஆகையால், அவர்கள் இந்தத்
தேசத்தில் வாசம் பண்ணி, இதிலே வியாபாரம் பண்
ணட்டும்; அவர்களும் வாசம்பண்ணுகிறதற்குத் தேசம்
விஸ்தாரமாயிருக்கிறது; அவர்களுடைய குமாரத்தி

லால் யாக்கோபின் குமாரர் நீங்களும் உங்களிலிருக்கும் ஆண்மக்கள் எல்லாரும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும் என்று தந்திரமாய்க் குரூர நோக்கத்தோடே சொன்னார்கள்.

**18. "அவர்களுடைய வார்த்தைகள் ஏமோருக்கும்........நலமாய்த் தோன்றினது."** இதைப் பார்க்கையில் விருத்தசேதனமுறைமை ஏவியரால் மேன்மையாக எண்ணப்பட்டதென்று அறியலாம். அந்த முறைமை இஸ்மவேலராலும் ஏசாவின் சந்ததியாராலுங் கைக்கொள்ளப்பட்டுவந்ததால் அதைப் பற்றிய மேலான எண்ணம் வரவர வளர்ந்துகொண்டேயிருந்தது.

**21. "இந்த மனிதர், ம."** ஏவியர் விருத்தசேதன முறைமைக் குட்படும்படி ஏமோர் சில நியாயங்களை அவர்களுக்குச் சொல்லி அவர்களை இணங்கச் செய்தான். அவை யென்னவெனில், 1. யாக்கோபு சமாதானத்தை நாடுகிறவன். அவன் அவர்கள் நடுவில் குடியிருப்பதில் யாதொரு மோசமுஞ் சம்பவியாது'என்பதும், 2. சீகேமில் யாக்கோபு குடியிருப்பதற்கு விஸ்தாரமான இடம் இருக்கிறது என்பதும், 3. அவன் வம்சத்தாரோடே சம்பந்தங் கலக்கலாம் என்பதும், 4. யாக்கோபின் ஐசுவரியம் பட்டணத்தின் ஐசுவரியத்தைப் பெருகச்செய்யும் என்பதுமே.





களை நமக்கு மனைவிகளாகக் கொண்டு, நம்முடைய
குமாரத்திகளை அவர்களுக்குக் கொடுப்போம்.—
22 அந்த மனிதர் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களா
யிருக்கிறதுபோல, நம்மிலுள்ள ஆண்மக்கள் யாவரும்
விருத்தசேதனம் பண்ணப்பட்டால், அவர்கள் ஏகஜன
மாக நம்மோடே வாசம்பண்ணச் சம்மதிப்பார்கள்.—
23 அவர்களுடைய [1]ஆடுமாடுகள் ஆஸ்திகள் மிருகஜீவன்
கள் எல்லாம் நம்மைச் சேருமல்லவா? அவர்களுக்குச்
சம்மதிப்போமானால், அவர்கள் நம்முடனே வாசம்
24 பண்ணுவார்கள் என்று சொன்னார்கள்.—அப்பொ
ழுது ஏமோரின் பட்டணத்து வாசலில் புறப்பட்டுவ
ரும் அனைவரும் அவன் சொல்லையும் அவன் குமாரனா
கிய சீகேமின் சொல்லையும் கேட்டு, அவனுடைய [1]பட் [1] ஆதி. 23. 18.
டணத்து வாசலில் புறப்பட்டுவரும் ஆண்மக்கள் யாவ
ரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்.

25 மூன்றும்நாளில் அவர்களுக்கு நோவெடுத்துக்
கொண்டபோது, யாக்கோபின் குமாரரும் தீனாளின்
சகோதரருமான [2]சிமியோன் லேவி என்னும் இவ் [2] ஆதி. 49. 5, 7.
விரண்டுபேரும் தந்தன் பட்டயத்தை எடுத்துக்
கொண்டு, துணிகரமாய்ப் பட்டணத்தின்மேல் பாய்
ந்து, ஆண்மக்கள் யாவரையும் கொன்றுபோட்டார்
26 கள்.—ஏமோரையும் அவன் குமாரன் சீகேமையும்
பட்டயக்கருக்காலே கொன்று, சீகேமின் வீட்டிலிரு
ந்து தீனாளை அழைத்துக்கொண்டு போய்விட்டார்

**24. "ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள்."** சீகேமின் மனுஷர் விருத்தசேதனத்தின் தன்மை தாற்பரியங்களை எவ்வளவும் அறியாமலும் எண்ணாமலும் முழுவதும் லௌகீக நோக்கத்தோடே அதற்கு உடன்பட்டார்கள். அதற்காக அவர்கள் தண்டனையை அடைந்தார்கள். அவர்களை அதற்கு ஏவினவர்களும் முதற்பிறப்பு சுதந்தரத்துக்கு விலக்கப்பட்டார்கள்.

**25. "தீனாளின் சகோதரருமான சிமியோனும் லேவியும்."** ரூபன், சிமியோன், லேவி, யூதா என்பவர்கள் தீனாளோடே கூடப்பிறந்த ஒரு தாயின் பிள்ளைகள். ரூபன் இரத்தஞ் சிந்தப் பிரியப்படாத இளந்தைச் சித்தமுடையவன் (37: 22.). யூதா இப்படிப்பட்ட துரோகங்களில் சம்பந்தப்பட விருப்பமில்லாத பெருந் தன்மையுள்ள குணசீலன். ஆதலால் சிமியோனும்

27 கள்.—மேலும், யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்
களிடத்தில் வந்து, தங்கள் சகோதரியை அவர்கள்
தீட்டுப்படுத்தினதற்காகப் பட்டணத்தைக் கொள்ளை
28 யிட்டு, — அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதை
களையும், பட்டணத்திலும் வயல்வெளியிலும் இருந்த
29 வைகள் யாவையும், — அவர்களுடைய எல்லாத்
தட்டுமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு, அவர்களு
டைய எல்லாக் குழந்தைகளையும் ஸ்திரீகளையும் சிறை
பிடித்து, வீட்டிலிருந்த எல்லாவற்றையும் கொள்ளை
யிட்டார்கள்.

30 அப்பொழுது யாக்கோபு சிமியோனையும் லேவியை
யும் பார்த்து: இந்தத் தேசத்தில் குடியிருக்கிற கானா
னியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் [1]என் வாசனையை
நீங்கள் கெடுத்ததினாலே [2]என்னைக் கலங்கப்பண்ணி

[1] மத். 5. 21. 1 சாமு. 13. 4. [2] யோசு. 7. 25.

லேவியும் அவர்கள் இருவரையும் நீக்கிவைத்துவிட்டு சீகேமியர் மோசப் வரும் என்று எண்ணாமல் மகா வேதனையோடே இருக்கிற தருணம்பார்த்துத் தங்கள் பட்டயத்தை எடுத்துக்கொண்டு தங்கள் குரூர செய்கையை நடப்பித்தார்கள். சகோதரிக்காக மானம் பாராட்டுவது நமது தேசத்தாருடைய வழக்கமாயுமிருக்கிறது.

**27. "யாக்கோபின் குமாரர்."** யாக்கோபின் மற்றக் குமாரர் பதின்மூன்றாம் வசனத்தில் காட்டியிருக்கிறபடி வஞ்சனையாகக் காரியங்களை நடப்பித்தாலுங் கொலைபாதகஞ் செய்ததாக நாம் வாசிக்கிறதில்லை. ஆனால் அவர்கள் பட்டணத்தைக் கொள்ளையிட்டதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

**29. "எல்லாக் குழந்தைகளையும்."** குழந்தைகள் என்ற வார்த்தைக்குரிய எபிரெய பதம் நம்முடைய வேதாகமத்தில் குழந்தைகள் என்றே திருப்பப்பட்டிருக்கிறது (ஆதி. 50: 21. எண். 31: 17. 2 நாளா. 31: 18; 20: 13.). பிந்திய இரண்டு வாக்கியங்களிலும் பிள்ளைகளையும் குழந்தைகளையும் வித்தியாசப்படுத்திப்போட்டிருக்கின்றது. கிரேக்கை திருப்புதலில் அந்த வார்த்தையை 'ஆட்கள்' என்று போட்டிருக்கிறது. அது சீகேமியருடைய வேலைக்காரர் வேலைக்காரிகளைக் குறிக்கும் (எண். 31: 17, 18.). குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளையுங் கொலைசெய்யும்படியான உத்தரவிருந்தது என்று பார்க்கிறோம்.

**30. "என் வாசனையை நீங்கள் கெடுத்ததினாலே."** யாக்கோபு இரத்தஞ் சிந்தும் குணத்தை அருவருத்துச் சமாதானத்தை நாடிவந்தான். சிமியோனும் லேவியும் அவனுக்கு அந்த விஷயத்திலிருந்தபேரைக் கெடுத்துப் புறத்தியார் எல்லாரும் பகைக்கும்படியாக இடம்பண்ணினார்கள்.





னீர்கள்; [1]நான் கொஞ்ச ஜனமுள்ளவன்; அவர்கள்
எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, நானும் என்
குடும்பமும் அழியும்படி என்னை வெட்டிப்போடுவார்
31 களே என்றான். — அதற்கு அவர்கள்: எங்கள் சகோ
தரியை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்தலா
மோ என்றார்கள்.

[1] உபா. 4. 27. சங். 105. 12.

## படிப்பினை.

### வச. 1—12.

(1) தேவபயத்துக்குப்பின்பு பெற்றோர் தங்கள் பிள்ளைகளை விசாரித்துவருதல் அவர்களின் க்ஷேமத்துக்கு மிகவும் அநுகூலமாயிருக்கிறது. இளக்காரமாய் வளர்க்கப்படுகிற பிள்ளைகள் தாய்தந்தைகளுக்கு மனவியாகுலத்தை வருவிப்பார்கள். பிள்ளைகளை விசேஷமாய்ப் பெண்பிள்ளைகளைத் தங்கள் இஷ்டப்படி நடக்கும்படி இடங்கொடுக்கக்கூடாது. அவர்கள் வீட்டைவிட்டு வெளியேறி ஆகாதவர்களோடே பழகும்படி இடங்கொடுத்தால் நிர்மூலத்தை வருவிப்பார்கள். பெருத்த குடும்பத்தில் பிள்ளைகள் பக்திக்கடுத்த விஷயங்களில் வளர்க்கப்பட்டாலுஞ் சிலவேளைகளில் மனவிசாரத்துக்குந் துக்கத்துக்கும் ஏதுவான காரியங்கள் அவர்களால் சம்பவிக்கலாம்.

(2) வேடிக்கை பார்க்கப்போவதினால் பெரும் மோசங்கள் நேரிடலாம். சின்ன ப்பாவம் என்று மனுஷர் சொல்வதைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சிறிய நெருப்பு பெரிய காட்டைக் கொளுத்திவிடும். நாடகம்முதலிய ஆகாத விளையாட்டுகளைப் பார்க்கப்போவது உத்தம கிறிஸ்தவனுக்கு அடுத்ததல்ல.

(3) வாலிபபெண்கள் இன்பமான வாக்குத்தத்தங்களைக் கேட்கையில் விழித்துக்கொண்டு சோதனைக்குட்படாதபடி எச்சரிக்கையாயிருந்து சோதனையை நிராகரித்துத் தள்ளவேண்டும். காமவிகாரம் அநேக சனங்களால் அற்பமாய் எண்ணப்படுகிறது. ஆனால் அது ஆத்துமாவுக்குஞ் சரீரத்துக்கும் மிகுந்த கேடுதியை வருவிக்கிறது.

### வச. 13—31.

(4) கிறிஸ்தமார்க்கத்தைப் புறம்பாகமாத்திரம் அநுசரிப்பது கேடுதியேயல்லாது லாபமில்லை. லௌகீக நோக்காந்தரங்களையிட்டு கர்த்தருடைய சாக்கிரமெந்துகளைப் பெறுவது அதிக ஆக்கினையைக் கூட்டுகிறதாயிருக்கிறது. பெரியோருடைய தாக்ஷணியத்துக்காகக் கிருபையின் எத்தனங்களைக் கையாடுவது நாசத்தை உண்டுபண்ணும்.

(5) தேசத்துக்குப் பிரபு சிற்றின்பத்துக்கும் அடிமையாயிருப்பதுமுண்டு.

(6) கிருபையின் எத்தனங்களை அவமதிக்கிறவர்கள் அப்படி அவமதிக்கும்படி ஏவினவர்களைக்கொண்டு தேவன் தண்டித்தாலும் அவமதிக்கும்படி ஏவினவர்கள் அதிக ஆக்கினையை அநுபவிப்பார்கள்.

(7) கிருபையுள்ள கர்த்தாவே எங்கள் குடும்பமும் உமது சபையும் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சீர்கேட்டுக்குள் அகப்படாதபடிக் காத்தருளும் என்று பிரார்த்திப்போமாக.

# 35. அதிகாரம்.

1. தேவன் யாக்கோபைப் பெத்தேலுக்கு அனுப்பினது. 2. அவன் தன் வீட்டிலிருந்த விக்கிரகங்களை விலக்கினது. 6. பெத்தேலில் ஒரு பலிபீடத்தைக் கட்டினது. 8. தெபொராள் மரித்தது. 9. தேவன் பெத்தேலில் யாக்கோபை ஆசீர்வதித்தது. 16. ராகேல் பென்யமீனுக்காகக் கர்ப்பவேதனைப்பட்டு எதேருக்குப் போகிற வழியிலே மரித்தது. 22. ரூபன் பில்காளோடே முறைகேடு செய்தது. 23. யாக்கோபின் புத்திரர் இன்னாரென்பது. 27. யாக்கோபு தன் தகப்பன் ஈசாக்கினிடத்தில் எபிரோனுக்கு வந்தது. 28. ஈசாக்குடைய ஆயுசு மரணம் அடக்கம் என்பவைகளைச் சொல்லியது.

1 தேவன் யாக்கோபை நோக்கி: நீ எழுந்து [1]பெத் [1] ஆதி. 28. 19.
தேலுக்குப் போய், அங்கே குடியிருந்து, நீ உன் சகோ
தரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிற
போது, உனக்குத் தரிசனமான தேவனுக்கு அங்கே
2 ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார்.—அப்பொ
ழுது யாக்கோபு தன் [2]வீட்டாரையும் தன்னோடே [2] ஆதி. 18. 19. யோசு. 24. 15.
கூட இருந்த மற்ற அனைவரையும் நோக்கி: உங்களி சங். 101. 2, 7.
டத்தில் இருக்கிற [3]அந்நிய தெய்வங்களை விலக்கிப் [3] ஆதி. 31. 19. யோசு. 24. 23.
போட்டு, உங்களைச் [4]சுத்தம்பண்ணிக்கொண்டு, உங் 1 சாமு. 7. 3. [4] யாத். 19. 10.

## 35. அதிகாரம்.

**1. "நீ எழுந்து பெத்தேலுக்குப் போய்."** சீகேமில் யாக்கோபின் நிலைமை மோசத்துக்கு ஏதுவாயிருந்தது. துவக்கத்தில் சிமியோன், லேவி என்பவர்களுடைய வீரியமானது சுதேசிகளுக்குப் பயங்கரத்தை உண்டுபண்ணினபோதிலும் நாள்செல்லவே அந்தச் சுதேசிகள் யாக்கோபுடைய சனம் சுருக்கமாயிருப்பதைக்கண்டு பழிவாங்க ஏற்படுவார்கள். ஆதலால் யாக்கோபு சீகேமை விடவேண்டியது அவசியமாயிற்று. மேலும் இந்த உபத்திரவம் அவன் தான் செய்த பொருத்தனையை நிறைவேற்றும்படி பெத்தேலுக்குப் போக அவனை ஏவியும்விட்டது. தேவன் அப்படிச் செய்யும்படி இப்போது அவனுக்கு உத்தரவு கொடுத்தார். (ஆதி. 28: 19. வியாக்கியானம் பார்க்க.)

**2. "அந்நிய தெய்வங்களை."** ராகேலிடத்தில் விக்கிரகம் இருந்ததாக வாசிக்கிறோம். ஆரானிலிருந்து யாக்கோபோடே வந்தவர்களிடத்திலும் சீகேமில் சிறைபிடிக்கப்பட்ட வேலைக்காரர் வேலைக்காரிகளிடத்திலும் அவைகள் இருந்திருக்கலாம். யாக்கோபு இந்தச் சீர்திருத்தத்தை உண்டாக்கினது தன் குடும்பத்தார் தேவபக்திக்குரிய மார்க்கத்தில் வளர்ந்தேறும்படி அவன் விரும்பினதோடுகூட தன் வேலைக்காரர் முதலானவர்களும் மெய்மார்க்கத்துக்கு அமைந்து மெய்த்தேவனை ஆராதிக்கவேண்டுமென்றும் அவன் வகைதேடினானென்பதைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட விசேஷித்த தருணங்களில் புறம்





3 கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்.—நாம் எழுந்து பெத்
தேலுக்குப் போவோம் வாருங்கள்; எனக்கு ஆபத்து
நேரிட்ட நாளில் [1]என் விண்ணப்பத்துக்கு உத்தரவு [1] ஆதி. 32. 7, 24.
அருளிச்செய்து, [2]நான் நடந்த வழியிலே என்னோடே சங். 107. 6. [2] ஆதி. 28. 20:
கூட இருந்த தேவனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை 31. 3, 12.
4 உண்டாக்குவேன் என்றான்.—அப்பொழுது அவர்கள்
தங்கள் கையில் இருந்த எல்லா அந்நிய தெய்வங்களை
யும், [3]தங்கள் காதணிகளையும் யாக்கோபிடத்தில் [3] யாத். 32. 3, 4.
கொடுத்தார்கள்; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் ஓசி. 2. 13.
அருகே இருந்த ஒரு கர்வாலி [4]மரத்தின்கீழே புதைத் [4] நியா. 9. 6.
5 துப்போட்டான்.—பின்பு பிரயாணம் புறப்பட்டார்
கள்; அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணத்தாருக் [5] யாத். 15. 16: 23.
குத் [5]தேவனாலே பயங்கரம் உண்டானதினால், அவர் 27. உபா. 11: 25. யோசு. 2. 9.

பான சுத்திகரிப்பு யூதருக்குள் பிந்தியகாலத்தில் நடந்துவந்தது (யாத். 19: 10–14). சடங்காசாரமான இவ்வித ஸ்நானங்கள் ஆவிக்குரிய சுத்தாங்கத்துக்கு அடையாளமாயிருக்கின்றன.

**3. "உத்தரவு அருளிச்செய்து......"** யாக்கோபுடைய ஜீவிய விருத்தாந்தத்தில் தேவன் அவனைப் பாதுகாத்துவந்த காரியங்கள் அவனைச் சேர்ந்தவர்களுடைய மனதில் நன்றாய்த் தைக்கவே அவர்கள் தங்கள் விக்கிரகங்களைத் தள்ளி இஸ்ரவேலின் தேவனை ஆராதிக்கும்படிச் சம்மதித்தார்கள்.

**4. "காதணிகள்."** இந்தக் காதணிகள் அலங்காரத்துக்காகமாத்திரம் காதில் போடப்பட்ட நகைகளாயிராமல் தாங்கள் வணங்கும் தெய்வங்களின் சாயலாக இரட்சாபந்தனங்களாய் உபயோகிக்கப்பட்டிருக்கவேண்டும். இவ்வித காதணிகளால் ஆரோன் கன்றுக்குட்டியைப் பண்ணியிருக்கிறான். முற்காலத்திலே நம்முடைய தேசத்தார் சில தெய்வங்களை வணங்கினபோது அவர்களால் தங்களுக்குத் தீங்குகள் நேரிடாதபடி அவைகளின் சாயலாக நகைகளைச் செய்து தங்கள் காதுகளில் அணிந்துகொண்டார்கள். திருஷ்டாந்தமாக: சனீசுரனை வழிபட்டவர்கள் சனிவளையத்தையும், நாகதேவனை வழிபட்டவர்கள் நாகபடம் அல்லது பாம்புபடத்தையும் காதுகளில் அணிந்திருப்பதைப் பார்க்கலாம். கிறிஸ்தவர்கள் அப்பேர்ப்பட்ட அஞ்ஞான சின்னங்களையெல்லாம் நிராகரித்துப்போடுவது உசிதம்.

**"கர்வாலி."** இது நியா. 9: 6, 37ல் சொல்லப்பட்டிருக்கிற ஆபிரகாமின் கர்வாலிமரத்தோப்பை (ஆதி. 12: 6.) குறிக்கமாட்டாது. அந்த மூன்று இடத்திலும் "ஏலோன்" என்ற பதம் மூலத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த இடத்திலும், யோசு. 24: 26லும் "ஏலா" என்ற வார்த்தை வழங்கப்பட்டிருப்பதால், யோசுவா சாட்சியின் தூணாக நிறுத்தின மரத்தை இங்கே குறிக்கும் என்று சொல்லலாம்.

**5. "தேவனாலே பயங்கரம்."** சத்துருக்கள் சீகேமியருக்காகப் பழிவாங்க யாக்கோபைப் பின்தொடராதபடிக்கு மகா பயங்கரம் அவர்களுக்கு உண்டாயிற்று.

கள் யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருந்தார்
கள்.
6 யாக்கோபும் அவனோடேகூட இருந்த எல்லா ஜனங்
களும் கானான்தேசத்திலுள்ள பெத்தேல் என்னும்
7 [1]லூசுக்கு வந்தார்கள்.— அங்கே அவன் ஒரு [2]பலி | [1] ஆதி. 28. 19, 22.
பீடத்தைக் கட்டி, தன் சகோதரனுடைய முகத்துக் | [2] பிர. 5. 4.
குத் தப்பி ஓடினபோது, அங்கே தனக்குத் தேவன்
தரிசனமானபடியால், அந்த ஸ்தலத்திற்கு *ஏல்பெத் | * பெத்தேலின் தேவன். ஆதி. 28. 13.
தேல் என்று பேரிட்டான்.
8 ரெபெக்காளின் தாதியாகிய [3]தெபோராள் மரித்து, | [3] ஆதி. 24. 59.
பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்
தின் கீழ் அடக்கம்பண்ணப்பட்டாள்; அதற்கு †அல் | † புலம்பலின் கர்வாலிமரம்.
லோன்பாகூத் என்னும் பேர் உண்டாயிற்று.
9 யாக்கோபு பதான் அராமிலிருந்து வந்தபின்பு
தேவன் [4]அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி, அவனை | [4] ஓசி. 12. 4.

**6.** "லூசு." 28: 19 வியாக்கியானம் பார்க்க.

**7.** "தனக்குத் தேவன் தரிசனமானபடியால்." இங்கே தேவன் என்பதற்கு மூலவார்த்தை ஏலோயீம் இது எப்போதும் பன்மையாக வழங்கப்படும். அதைச்சேர்ந்த வினைச்சொல்லும் உரிச்சொல்லும் ஒருமையாக வழங்கப்படுவது வழக்கம். ஆனால் இந்த இடத்தில் வினைச்சொல்லானது பன்மையாக வழங்கப்பட்டிருக்கிறது. சமாரிய பஞ்சாகமத்திலோ வினைமுற்று ஒருமையாக இருக்கிறது.

"ஏல்பெத்தேல்." என்பதற்குப் "பெத்தேலின் தேவன்" அதாவது "தேவனுடைய வீட்டின் தேவன்" என்றர்த்தம். தேவனுடைய வீட்டிலே சேர்க்கப்பட்டு அங்கே தேவ பராமரிப்பின் அதிசயங்களைக் கண்டதால் இப்படிப் பேரிட்டான்.

**8.** "தெபோராள்." யாக்கோபு ஆரானுக்குப் போனபோது தெபொராள் ரெபெக்காள் அண்டையிலிருந்தாள். யாக்கோபு கானானுக்குத் திரும்பி வந்தபின்பு இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிக்கு முன்னதாகத் தன் தகப்பனிடத்துக்குப் போய்த் தன் காரியங்களையெல்லாந் தெரியப்படுத்தியிருக்கவேண்டும். அப்போது தன் தாய் மரித்துப்போனதைக் கண்டு தெபொராளைத் தன்னோடே கூட்டிக்கொண்டு வந்திருப்பான் (அதி. 33: 18. வியாக்கியானம் பார்க்க.). அவள் யாக்கோபால் அதிகமாய் நேசிக்கப்பட்டாள் என்பதை அவளை அடக்கஞ்செய்த இடத்துக்கு "புலம்பலின் கர்வாலிமரம்" என்றர்த்தங்கொள்ளும் அல்லோன் பாகூத் என்ற பேரைக் கொடுத்ததால்அறியலாம். தெபொராள் மிகுந்த வயதுசென்றவளாயிருந்தாள்; அவள் ரெபெக்காளுக்குத் தாதியாயிருந்தாள்.

**9** "பதான் அராமிலிருந்து வந்தபின்பு தேவன் அவனுக்கு மறுபடியும் தரிசனமாகி." யாக்கோபு பெத்தேலைத் தேவனுக்கு வீடாக்குவேன் என்று





10 ஆசீர்வதித்து:— இப்பொழுது உன் பேர் யாக்கோபு,
இனி உன்பேர் யாக்கோபு என்னப்படாமல், இஸ்ர
வேல் என்று உனக்குப் பேர் வழங்கும் என்று
சொல்லி, [1]அவனுக்கு இஸ்ரவேல் என்று பேரிட்டார்.— | [1] ஆதி. 32. 28.
11 பின்னும் தேவன் அவனை நோக்கி: [2]நான் சர்வவல்ல | [2] ஆதி. 17. 1: 48. 3, 4. யாத். 6. 3.
மையுள்ள தேவன், நீ பலுகிப் பெருகுவாயாக; ஒரு
ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலி
ருந்து உண்டாகும்; ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்
12 பார்கள்.—நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொ
டுத்த [3]தேசத்தை உனக்குக் கொடுப்பேன்; உனக்குப் | [3] ஆதி. 12. 7: 13. [illegible] 28. 13.
பின் உன் சந்ததிக்கும் இந்தத் தேசத்தைக் கொடுப்
13 பேன் என்று சொல்லி,— தேவன் அவனோடே
[4]பேசின ஸ்தலத்திலிருந்து அவனை விட்டு எழுந்தரு | [4] ஆதி. 17. 22.

சொல்லியிருந்த பிரகாரம் அதைப் பிரதிஷ்டையாக்கினான். அதின்பேரில் தேவன் அவனுக்குத் தரிசனமாகி அவனை ஆதரித்து ஆசீர்வதித்து கானானைச் சுதந்தரமாகக் கொடுத்து இஸ்ரவேல் என்ற பேரை அவனுக்கு உறுதிப்படுத்தி அவன் சந்ததியார் மிகுதியாய்ப் பெருகிப்போவார்கள் என்று விசேஷித்தவகையாய் அவனுக்கு வாக்குத்தத்தத்தை அருளினார். ஆபிரகாமோடே செய்யப்பட்ட உடம்படிக்கை இங்கே யாக்கோபுக்கு உறுதிப்படுத்தப்பட்டதாகப் பார்க்கிறோம்.

**11.** "நான் சர்வவல்லமையுள்ள தேவன்." மூலத்தில் "எல்சாடாய்" என்றிருக்கிறது. இந்தப் பெயரால் தேவன் ஆபிராமின் பேரை ஆபிரகாம் என்று மாற்றி அவனுக்குக் கானான் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று வாக்கு அருளினபோது தம்மை வெளிப்படுத்தினார். இப்போது அந்தப் பெயரால் அவர் தம்மை வெளிப்படுத்தினதும் ஏற்ற சமையமாயிருந்தது. யாக்கோபு தன் அந்தியகாலத்தில் இதை மனதிர்ப்தியோடும் ஆறுதலோடுஞ் சுட்டிக்காட்டியிருக்கிறான். (அதி. 48: 3.)

"கூட்டங்கள்." சாதிகளின் சபைகள் உண்டாகும். (அதி. 28: 3. வியாக்கியானம் பார்க்க.)

**13.** "அவனைவிட்டு எழுந்தருளிப்போனார்." இப்படிப்பட்ட வாசகம் 17: 22; 18: 33ல் வருகிறது. மற்றத் தருணங்களில் தேவன் யாக்கோபுக்குத் தரிசனமானவிதத்திலும் இந்தத் தருணத்தில் விசேஷித்தவகையாய் அவனுக்குத் தம்மை வெளிப்படுத்தினதை அது குறிக்கிறது. ஆபிரகாமோடே செய்த உடம்படிக்கைக்கு யாக்கோபைச் சுதந்தரனாக அங்கீகரித்துக்கொள்ளும்படியாக அப்படி தரிசனம் அருளினார்.

14 ளிப்போனர்.—அப்பொழுது யாக்கோபு தன்னோடே
அவர் பேசின ஸ்தலத்திலே ஒரு [1]கற்றூணை நிறுத்தி, [1] ஆதி. 28. 18, 19.
அதின்மேல் பானபலியை ஊற்றி, எண்ணெயையும்
15 வார்த்தான்.—தேவன் தன்னோடே பேசின அந்த ஸ்த
லத்திற்கு யாக்கோபு பெத்தேல் என்று பேரிட்டான்.

16 பின்பு, பெத்தேலை விட்டுப் பிரயாணம் புறப்பட்
டார்கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும் கொஞ்சம்
தூரமிருக்கும்போது, ராகேல் பிள்ளை பெற்றாள்; பிர
சவத்தில் அவளுக்குக் கடும்வேதனை உண்டாயிற்று.—
17 பிரசவிக்கும்போது, அவளுக்குக் கடும் வேதனையாயி
ருக்கையில், [2]மருத்துவச்சி அவளைப் பார்த்து: பயப் [2] ஆதி. 30. 21. 1 சாமு. 4. 20.
படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்

**14.** "ஒரு கற்றூணை நிறுத்தி." தேவன் தனக்குத் தரிசனமான இடத்தை ஞாபகப்படுத்தும்படி முன் யாக்கோபு பதான் அராமுக்குப் போனபோது செய்த முறைமையின்படியே ஒரு கற்றூணை நிறுத்தி அதற்கு எண்ணெய் வார்த்தான். எண்ணெய் வார்ப்பது வைதீகவிஷயத்துக்கு அடையாளம். பிந்தியகாலத்தில் ஞாபகச்சின்னத்துக்காக நிறுத்தப்பட்டவைகள். வணக்கத்துக்குரியவைகளாகப் பாவிக்கப்பட்டபோது அவைகளை நிறுத்தக்கூடாதென்று கட்டளையிடப்பட்டது. இங்கே தூண் என்பது சரியாகத் திருப்பப்பட்டிருக்கிற மூல வார்த்தையை (லேவி. 26: 1. உபா. 16: 22.) சிலை என்று திருப்பியிருக்கிறது.

**15.** **"பெத்தேல் என்று பேரிட்டான்."** ஆதி. 28: 19. பார்க்க. யாக்கோபு பதான் அராமுக்குப் போனபோது தேவன் தனக்குத் தரிசனமான இடத்துக்குப் பெத்தேல் என்று பேர் தரித்தாலும் அது வழங்கப்படாதிருந்தது. இப்போது அந்தப் பேரை உபயோகிக்கும்படி தன் குடும்பத்துக்கு அதைப் படிப்பித்துத்தான் துவக்கத்தில் அந்தப்பேரைக் கொடுத்ததற்கு முகாந்தரங்களைத் தெரியக்காட்டினன். தேவனுடைய வீடாகிய இது பிந்தியகாலத்தில் அக்கிரமத்தின் வீடாக மாறினது எவ்வளவோ துக்கமானகாரியம். (ஓசி. 10: 5.)

**16.** **"எப்பிராத்தா"** என்பதற்கு "செழிப்பு" என்றர்த்தமாம். இதற்கு வேறே பேர் பெத்லகேம். அதற்கு "அப்பத்தின் வீடு" என்றர்த்தம்.

**"இன்னும் கொஞ்சந்தூரம் இருக்கையில்."** கொஞ்சத்தூரம் என்று திருப்பியிருக்கிற மூலவார்த்தையானது: ஆதியிலே ஓர் நீட்டல் அளவைக் குறித்ததாயிருக்கும். எப்பிராத்தாவிலிருந்து ராகேலின் கல்லறைக்கு ஏறக்குறைய ஒரு மைலிருப்பதால் யூதர்கள் அந்த வார்த்தை ஒரு மைலைக் குறிக்கும் என்கிறார்கள். பழைய ஏற்பாட்டிலே இந்த வார்த்தை இன்னம் மூன்று இடத்தில் வருகிறது (ஆதி. 48: 7. 2 இரா. 5: 19. ஆமோ. 9: 9.). ஆனால் ஆமோசில் அந்த வார்த்தையை சல்லடை என்று திருப்பியிருக்கிறார்கள்.

**17.** **"பயப்படாதே"** (ஆதி. 30: 24.). ராகேல் காட்டின நம்பிக்கை இப்போது அற்றுப்போயிருப்பதை மருத்துவச்சி கண்டு அதை அவளுக்கு நினைப்பூட்டினாள்.





18 றாள்.—மரணகாலத்தில் அவள் ஆத்துமா பிரியும்போது,
அவள் அவனுக்கு *பெனோனி என்று பேரிட்டாள்; * விசாரபுத்திரன்.
அவன் தகப்பனோ, அவனுக்கு †பென்யமீன் என்று † வலதுகரபுத்திரன்.
19 பேரிட்டான்.—ராகேல் [1]மரித்து, பெத்லகேம் என் [1] ஆதி. 48. 7.
னும் [2]எப்பிராத்தா ஊருக்குப் போகிற வழியிலே [2] ரூத். 1. 2: 4. 11.
20 அடக்கம்பண்ணப்பட்டாள்.—அவள் கல்லறையின் மீகா. 5. 2. மத். 2: 6.
மேல் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான்; அதுவே
[3]இந்நாள்வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்ல [3] 1 சாமு. 10. 2.
றையின் தூண்.

21 இஸ்ரவேல் பிரயாணம்பண்ணி, [4]ஏதேர் என்கிற [4] மீகா. 4. 8.
கோபுரத்திற்கு அப்புறத்தில் கூடாரம் போட்டான்.—
22 இஸ்ரவேல் அந்தத் தேசத்திலே தங்கிக் குடியிருக்கும்
போது, ரூபன் போய், தன் தகப்பனுடைய மறுமனை
யாட்டியாகிய [5]பில்காளோடே சயனித்தான்; அதை [5] ஆதி. 49. 4. 1 நாளா. 5. 1. 1 கொ. 5. 1.
இஸ்ரவேல் கேள்விப்பட்டான்.

**18.** **"பெனோனி"** என்பதற்கு என் விசாரத்தின் புத்திரனென்றர்த்தம். பென்யமீன் என்பதற்கு "வலதுகர புத்திரன்" என்றர்த்தம். கடைசிக் குமாரனுடைய அருமையை விளக்கிக் காட்டும்படியாக யாக்கோபு இந்தப் பேரைக் கொடுத்தான். இடதுகை தாழ்வுக்கும் வலதுகை வாழ்வுக்குங் குறிப்பு. யாக்கோபு தனக்குக் கிடைத்திருக்கிற தெய்வ தயவுகளை நினைத்துப் பென்யமீனுக்கு அந்த நாமத்தை இட்டிருக்கலாம். எபிரோனுக்கு இரண்டுநாள் பிரயாணத்துக்குச் சமீபமாயிருக்கையில் தன் நேசமனைவியை இழந்தான்.

**20.** **"அதுவே இந்நாள்வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்லறையின் தூண்."** இதை மோசே எழுதினானோ அல்லது எஸ்றா பின்காலத்தில் அதைச் சேர்த்து எழுதினானோ என்பதைத் திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. அந்தக் கல்லறை சாமுவேலின் காலத்தில் தெளிவாய் யாவருக்கும் தெரிந்திருந்தது. (1 சாமு. 10: 2.)

**21.** **"ஏதேர் என்கிற கோபுரத்திற்கு."** "ஏதேர்" என்பதற்கு மந்தை என்றர்த்தம் (மீகா. 4: 8.). "சீயோன் குமாரத்தியின் அரணே" என்று வாசிக்கிறோம். அங்கே "அரணே" என்று திருப்பியிருப்பது சரியல்ல, குன்றே என்றிருக்கவேண்டும்; அந்தக் குன்றின்பேரில் ஏதேர் என்ற கோபுரம் கட்டப்பட்டிருக்கவேண்டும். அது ஆடுமாடுகளைக் கள்ளருக்குந் துஷ்டமிருகங்களுக்கும் விலக்கிக் காக்கும்படியாகத் திருஷ்டி கோபுரமாக உபயோகிக்கப்பட்டது. அந்த இடத்தில் யாக்கோபு தன் மந்தைகளை வைத்திருந்தான்.

**22.** **"ரூபன்."** ரூபன் தன் முறைகேடான பாவத்தினால் முதற் பிறப்பு சுதந்தரத்தை இழந்துபோனான். (ஆதி. 49: 3, 4. 1 நாளா. 5: 1.)

**"அதை இஸ்ரவேல் கேள்விப்பட்டான்."** கிரேக்கைத் திருப்புதலில் "அது அவன் பார்வைக்குத் தீமையாகக் காணப்பட்டது" என்ற வார்த்தைகள் கூட்டப்பட்டிருக்கின்றன.

23 யாக்கோபின் குமாரர் பன்னிரண்டுபேர். யாக்கோ
பின் [1]மூத்தமகனாகிய ரூபன், சிமியோன், லேவி,
யூதா, இசக்கார், செபுலோன் என்பவர்கள் லேயாள்
24 பெற்ற குமாரர். — யோசேப்பு, பென்யமீன் என்ப
25 வர்கள் ராகேல் பெற்ற குமாரர்.—தாண், நப்தலி என்
பவர்கள் ராகேலுடைய பணிவிடைக்காரியாகிய பில்
26 காள் பெற்ற குமாரர். — காத், ஆசேர் என்பவர்கள்
லேயாளின் பணிவிடைக்காரியாகிய சில்பாள் பெற்ற
குமாரர்; இவர்களே யாக்கோபுக்குப் பதான் அரா
மிலே பிறந்த குமாரர்.

27 பின்பு, யாக்கோபு [2]அர்பாவின் ஊராகிய [3]மம்ரேக்கு
தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் வந்தான்; அது
ஆபிரகாமும் ஈசாக்கும் தங்கியிருந்த எபிரோன் என்
28 னும் ஊர். — ஈசாக்கு விருத்தாப்பியமும் பூரண ஆயு
சுமுள்ளவனாகி, நூற்றெண்பது வருஷம் ஜீவித்தி

[1] ஆதி. 46. 8. யா. 1. 2.
[2] யோசு. 14. 15.
[3] ஆதி. 13. 18.

**26.** **"பதான் அராமிலே பிறந்த குமாரர்."** பென்யமீன் கானானில் பிறந்தான் (வச. 18.). யாக்கோபின் மற்றக் குமாரர் பதான் அராமில் பிறந்தார்கள். இங்கே சாதாரணப் போங்காய் எல்லாக் குமாரரையுங்குறித்துச் சொல்லியிருக்கிறது.

**27.** **"யாக்கோபு....தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்தில் வந்தான்."** யாக்கோபு பதான் அராமைவிட்டு வந்தபின்பு இப்பொழுது முதல்விசையாக தன் தகப்பனைப் பார்க்கவந்தான் என்று நாம் எண்ணக்கூடாது. இதற்குமுன் அவனடிக்கடி போய் அவனைப் பார்த்திருக்கவேண்டும். இப்போது ஈசாக்கு மரணாவஸ்தையில் இருப்பதை அறிந்து கடைசியாக செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றும்படி வந்து சேர்ந்தான்.

**28.** **"நூற்றெண்பது வருஷம் ஜீவித்திருந்து."** ஈசாக்குக்குக் குமாரர் பிறந்தபோது வயது 60. அவன் மரித்தபோது யாக்கோபுக்கு வயது 120. யாக்கோபு பார்வோனுக்கு முன்பாக நின்றபோது வயது 130 (ஆதி. 47: 9.). யோசேப்பு விற்கப்பட்டபோது அவன் வயது 17. அவன் அதிகாரம் பெற்றுக்கொண்டபோது வயது 30 (ஆதி. 41: 46.). யாக்கோபு செழிப்பான ஏழு வருஷத்துக்கும் பஞ்சமுண்டான இரண்டு வருஷத்துக்கும் பின்பு எகிப்துக்குப் போனான். அப்படியாகில் யோசேப்பு சிறையாக விற்கப்பட்டபின்பும் ஈசாக்கு 12 வருஷம் உயிரோடே இருந்தான் என்றறியலாம்.





29 ருந்து, — பிராணன் போய் மரித்து, [1]தன் ஜனத்தா
ரோடே சேர்க்கப்பட்டான். [2]அவன் குமாரராகிய
ஏசாவும் யாக்கோபும் அவனை அடக்கம்பண்ணினார்
கள்.

[1] ஆதி. 15. 15: 25. 8.
[2] ஆதி. 25. 9: 49. 31. யோபு. 5. 26.

**29.** **"ஏசாவும் யாக்கோபும் அவனை அடக்கம்பண்ணினார்கள்."** சகோதரர் இருவருடைய பகை நீங்கி சமாதானமாயிருந்ததற்கு இது ஒரு விசேஷித்த குறிப்பு. ஈசாக்கின் மரணபரியந்தம் ஏசா எபிரோனிலிருந்தான். அப்புறம் தன் திரள் சம்பத்தோடே சேயீர் நாட்டுக்குப்போய் அங்கே குடியேறினான்.

## படிப்பினை.

### வசு 1—15.

(1) எப்பேர்ப்பட்ட பரிசுத்தவான்களிலுந் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளில் அஜாக்கிரதையைக் காணலாம். தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால் அதைச் செலுத்தத் தாமதிக்கக்கூடாது. தாமதித்தால் கண்டிப்புகளும் தண்டனைகளும் நேரிடாதிராது.

(2) தேவன் தம்முடைய சனங்களை அவர்களுடைய செய்கைக்குத் தக்கதாக எப்போதும் நடத்துகிறதில்லை. அவர் அவர்களுடைய சத்துருக்களில் பயங்கரங்களின் ஆவியை உண்டுபண்ணுகையில், அவர்கள் எங்கேபோனாலும் அங்கே சுகமாய்த் தங்குகிறார்கள்.

(3) தேவனுடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு நம்மை நாமே சீர்திருத்தி நம்முடைய பொருத்தனைகளைச் செலுத்தினால் அப்போது அவருடைய உடம்படிக்கையின் ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்கலாம்.

(4) இவ்வுலகில் நமக்குண்டாகிய ஆறுதல்கள் எல்லாம், வரும் உபத்திரவங்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவைகளாயிருக்கின்றன. புருஷன் மனைவி பிள்ளைகள் நெருங்கின பந்துக்களை நாம் இழக்கிறதில் நமக்கு மிகுந்த துக்கம் நேரிட்டாலும் நாமும் மரணத்துக்கு ஆயத்தமாயிருக்கவும் மேலானவைகளில் நம்முடைய இருதயத்தைச் செலுத்தவும் போதனை அடைகிறோம்.

### வச. 16—29.

(5) பூமிக்குரிய நன்மைகள் வேண்டும் என்று மிகுந்த ஆவலோடே விரும்பவும் கூடாது. அவைகளுக்காகப் பொறுதியற்ற வண்ணமாய் முறுமுறுக்கவும் கூடாது. நாம் மதியீனமாய்ச் சொன்ன வார்த்தைகளையும் வெகு நாட்களுக்குப்பின்பு கர்த்தர் நினைவுகூர்ந்து நமது மனவிருப்பப்படி தந்தாலும் அவைகளுக்காக அவர் கண்டிக்கிறவராய் விளங்குவார்.

(6) கர்த்தரால் விசேஷித்த அன்புகூரப்பட்ட பரிசுத்தவான்களும் அடிக்கடி ஒன்றின்மேலொன்றாய் உபத்திரவங்களை அநுபவிக்கிறார்கள். ஆனால் சகலமும் அவர்களுடைய நன்மைக்கேதுவாக நடந்தேறுகிறது. அவருடைய சித்தமே நமது பாக்கியம் என்றிருக்கக்கடவோம்.

(7) நீதிமான் வீட்டிலும் தாறுமாறுகள் நடப்பதுண்டு.

(8) மெய்விசுவாசிக்கு அவன் பிறந்த நாளைப்பார்க்கிலும் அவன் மரணநாள் அதிக உத்தமமானது. இவ்வுலகில் மிகுந்த ஆறுதலோடுஞ் சமாதானத்தோடும் வாழ்ந்த மகாத்துமாக்களின் சரித்திரம் மெத்தக் கொஞ்சமாய் எழுதப்பட்டிருந்தாலுந் தேவனுடைய கணக்கில் அது விபரமாயும் விஸ்தாரமாயுமிருக்கும்.

## 36. அதிகாரம்.

1. ஏசாவின் மூன்று மனைவிகளைக் குறித்தது. 6. அவன் சேயீர் பர்வதத்துக்குக் குடிபோனது. 9. அவன் புத்திரர்களைக் குறித்துச் சொல்லியது. 15. அவன் புத்திரர்களில் உண்டான பிரபுக்கள் இன்னாரென்பது 20. சேயீரின் புத்திரரையும் பிரபுக்களையும் குறித்துச் சொல்லியது. 24. ஆனாகு கோவேறு கழுதைகள் பிறக்கும் விதம் அறிந்தது. 31. ஏதோமின் ராஜாக்கள் இன்னாரென்பது. 40. ஏசாவின் சந்ததியில் உண்டான பிரபுக்களைக்குறித்துச் சொல்லியது.

1 [1]ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவின் வம்சவர  [1] ஆதி. 25. 30.
2 லாறு: — [2]ஏசா கானான்தேசத்துப் பெண்களில் ஏத்தி  [2] ஆதி. 26. 34.
யனான ஏலோனின் குமாரத்தியாகிய ஆதாளையும்,

### 36. அதிகாரம்.

**1. "ஏசாவின் வம்சவாலாறு."** ஆபிரகாமின் மரணத்துக்குப்பின்பு இஸ்மவேலின் வம்சவரலாறு. (25: 12–18.) சொல்லப்பட்டிருப்பதுபோல ஈசாக்கின் மரணத்துக்குப்பின்பு ஏசாவின் வம்சவரலாறும் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடே இந்த அதிகாரம் 20–30 வாக்கியங்களில் சேயீரின் குடிகளான ஓரியரின் வம்சவரலாறும் காட்டப்பட்டிருக்கிறது. இந்த ஓரியர் நடுவிலே ஏசா சிரேஷ்ட அதிகாரமுடையவனாய்க் குடியிருந்தான். "இஸ்ரவேல் புத்திரரை இராசாக்கள் ஆளுகிறதற்குமுன்னே ஏதோமில் ஆண்ட இராசாக்கள்" என்ற இந்த வார்த்தைகளைக்கொண்டு இஸ்ரவேலில் இராசாக்கள் அரசாண்டபோது இங்கே காட்டப்பட்டிருக்கிற அட்டவணை எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று சிலர் எண்ணுவது அபத்தமாயிருக்கிறது. இந்த ஏதோம் இராசாக்கள் ஒருவர்பின்னொருவராய் அரசாட்சி செய்யவுமில்லை, அவர்கள் எல்லாருக்கும் ஒரே தலைநகரியிருந்ததுமில்லை. இஸ்ரவேலின் நியாயாதிபதிகளின் காலத்திலிருந்த வண்ணமாய் ஏதோமியருக்குள்ளும் அதிகாரிகள் எழும்பினதாகத் தோன்றுகிறது. இந்தக் காலத்திலே ஏதோமியரும் ஓரியரும் கலந்துபோனார்கள் (உபா. 2: 12, 21.). நாற்பத்துமூன்றும் வாக்கியத்தில் காட்டியிருக்கிறபடி இங்கே சொல்லப்பட்டிருக்கிற பிரபுக்கள் அந்தந்தக் கோத்திரத்தைப் பிரித்துக்காட்டுகிற தலைவர்களாய்மாத்திரம் இருந்தார்கள்.

31–43 வாக்கியங்களில் அடங்கியிருக்கிற இரண்டு சாதனங்கள் சாமுவேலின் புஸ்தகங்கள் எழுதப்பட்டபோது இங்கே சேர்க்கப்பட்டிருக்கலாம். அல்லவென்றால் 1 நாளா. 1: 43–50ல் காட்டப்பட்டிருக்கிற அட்டவணைகள் இங்கே சொல்லப்பட்டிருக்கிறவைகளுக்கு ஒத்திருப்பதால் அந்தக்காலத்திலே வேதாகம சஞ்சிகை முடிக்கும்படி அதிகமான பிரயத்தனங்கள் செய்யப்பட்டதால் அப்போது இந்த அட்டவணைகள் இரண்டு இடங்களிலும் ஒரே மனுஷனால் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

**2. "ஆதாள்."** அதி. 26: 34. ஏத்தியனான ஏலோனுடைய குமாரத்தியாகிய பஸ்மாத்து என்று சொல்லியிருக்கிறது. அங்கே அவளை இரண்டாவதாகச் சொல்லியிருக்கிறது. இங்கே முதலாவதாகப் போட்டிருக்கிறது. ஸ்திரீக





ஏவியனாகிய சிபியோனின் *குமாரத்தியும் ஆனாகின்  * பேத்தி.
3 குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும்,— இஸ்மவே
லின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமா
கிய [1]பஸ்மாத்தையும் விவாகம் பண்ணியிருந்தான்.—  [1] ஆதி. 28. 9.
4 ஆதாள் [2]ஏசாவுக்கு எலீப்பாசைப் பெற்றாள்; பஸ்  [2] 1 நாளா. 1. 35.
5 மாத்து ரெகுவேலைப் பெற்றாள். — அகோலிபாமாள்
எயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்;

ளுக்கு இரண்டுபேர்களிருந்ததாக நாம் அடிக்கடி வாசிக்கிறதில்லை. அவள் ஏத்திய ஸ்திரீயாயிருந்தாள். அவள் பாஷையில் அவள் பேர் ஆதாள் என்று அல்லது பஸ்மாத்து என்றிருக்கலாம். ஆதாள் என்பதற்கு "ஆபரணம்" என்றர்த்தம். பஸ்மாத்து என்பதற்கு "இன்பவாசனை" என்றர்த்தம்.

**"ஏவியனாகிய சிபியோனின் குமாரத்தியும் ஆனாகின் குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும்."** இந்த அகோலிபாமாள் அதி. 26: 34ல் ஏத்தியனான பெயேரியினுடைய குமாரத்தியாகிய யூதித்து என்று எண்ணப்படுகிறாள். 24, 25 வாக்கியங்களில் அகோலிபாமாள் ஓரியனான சிபியோனின் குமாரன் ஆனாகின் குமாரத்தி என்று சொல்லியிருக்கிறது. ஏவி, ஓரி என்ற வார்த்தைகளுக்குரிய மூலபதங்களுடைய எழுத்துக்களில் மிகச் சொற்ப வித்தியாசமிருக்கிறது. ஆகவே ஆகமங்களை நகல் பண்ணினபோது இலேசாய்த் தப்பிதங்கள் விழலாம். காரியத்தைப் பார்க்கையில் அகோலிபாமாள் ஓரியவம்சத்தைச் சேர்ந்தவளாயிருந்தாள் என்று சொல்லத்தகும். ஆனால் அவளை யூதித்து என்று சொல்லக்கூடாது. யூதித்து ஏசாவுடைய முதல் மனைவியாயிருந்தாள். அவளுக்குப் பிள்ளைகளில்லை. ஆதலால் ஏசா வேறே பெண்ணை விவாகம் செய்ய ஏற்பட்டான். ஆதாளை இங்கே முதலில் போட்டிருக்கிறதற்கு முகாந்தரம் என்னவென்றால், அவளாலே முதலாவது ஏசாவுக்குக் குமாரர் பிறந்ததினாலேதான். அகோலிபாமாள் நாலாவது மனைவியாயிருந்தாலும் அவளை மூன்றாவதாகப் போட்டிருக்கிறது. அவள் பிள்ளைகளும் பஸ்மாத்தின் பிள்ளைகளுக்குப்பின்பு காட்டப்பட்டிருக்கிறார்கள். ஏசா யுத்தம் செய்யும்படி சேயீருக்குப் போனதில் அங்கே ஒரு பிரபுவின் மகளை விவாகம்செய்து அவளையிட்ட முகாந்தரமாய் அவனும் பிரபுவாக எண்ணப்பட்டு தன் மனைவியைச் சேர்ந்த கோத்திரத்தாரோடே அவன் சிநேகசம்பந்தமா யிருந்துவந்தான். ஓரியருக்கும் ஏத்தியருக்கும் சம்பந்தமேயில்லை. இருவரும் வெவ்வேறே சாதியார். ரெபெக்காள் யூதித்தும், ஆதாள் பஸ்மாத்தும் ஏத்தின் புத்திரிகள் என்பதைத் தெளிவாய்ச் சொல்லுகிறாள். இந்த ஏத்தியர் கானானில் பராக்கிரமமும் நாகரீகமுமுள்ள சாதியாராயிருந்தார்கள். ஓரியரோ தாழ்ந்த ஸ்திதியுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவேளை அவர்களுடைய அதிகாரிகள் உயர்ந்த ஸ்திதியுள்ளவர்களாயிருக்கலாம்.

**3. "இஸ்மவேலின் குமாரத்தியும் நெபாயோத்தின் சகோதரியுமாகிய பஸ்மாத்து."** சமாரிய ஆகமத்தில் இந்த இடத்திலும், 4, 10, 17 வாக்கியங்களிலும் மகலாத்து என்று போட்டிருக்கிறது. அதி. 28: 9ல் இந்தப்படியே சொல்லியிருக்கிறது. மகலாத்து என்ற பேரே சரியென்று தோன்றுகிறது.

இவர்களே ஏசாவுக்குக் கானான்தேசத்திலே பிறந்த
குமாரர்.

6 ஏசா தன் மனைவிகளையும், தன் குமாரரையும், தன்
குமாரத்திகளையும், தன் வீட்டிலுள்ள யாவரையும்,
தன் ஆடுமாடுகளையும், மற்ற ஜீவஜந்துக்கள் யாவை
யும், தான் கானான்தேசத்திலே சம்பாதித்த ஆஸ்தி
முழுவதையும் சேர்த்துக்கொண்டு, தன் சகோதரனா
கிய யாக்கோபை விட்டுப் பிரிந்து வேறே தேசத்துக்
7 குப் போனான். — அவர்களுடைய [1]சம்பத்து மிகுதி
யாயிருந்தபடியினால் அவர்கள் ஒருமித்துக் குடியி
ருக்கக் கூடாமற்போயிற்று; அவர்களுடைய மந்தை
களினிமித்தமாய் அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்
8 களைத் தாங்கக் கூடாததாயிருந்தது. — ஆதலால் [2]ஏசா
சேயீர்மலையில் குடியேறினான்; ஏசாவுக்கு ஏதோம்
என்றும் பேர்.

[1] ஆதி. 13. 6, 11: 17. 8.

[2] உபா. 2. 5.

6. "வேறே தேசத்துக்குப் போனான்." ஆதி. 32: 3ல் ஏசா சேயீரிலிருந்ததாக வாசிக்கிறோம். ஆனால் அவன் அங்கே சூறையாடும் நோக்கமாய்ப் போய் மறுபடியும் எபிரோனுக்கு வந்து இருபத்திரண்டு வருஷம் தன் தகப்பன் ஈசாக்கோடே குடியிருந்து அவன் மரணத்துக்குப்பின்பு சேயீருக்குப் போய் அங்கே குடியிருந்தான். (ஆதி. 32: 3. வியாக்கியானம் பார்க்க.)

7. "அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்களைத் தாங்கக்கூடாததாயிருந்தது." சம்பத்தப்பெருக்கு சகோதரரான ஏசாவையும் யாக்கோபையும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோகும்படி பண்ணினது. ஆபிரகாமும் லோத்தும் பிரிந்ததற்கு முகாந்தரமும் இதுவே. ஒரு நாடு தாங்கக்கூடியதற்குத் தக்கதாக மேய்ப்பர் விருத்தியடைவதுண்டு. விருத்தியடைந்தபின்பு அவர்களில் ஒரு பாகத்தார் வேறே இடங்களுக்குப் போகும்படி நேரிடும். ஏசாவும் யாக்கோபும் தங்கியிருந்த பூமி வேறே சாதியாருடையது. ஆதலால் ஏசா தனக்குச் சொந்தமாக ஒரு தேசமிருக்கவேண்டும் என்று நாடி தன் மனைவி அகோலிபாமாள் தேசத்துக்குப் போய் அதைக் கட்டிக்கொண்டான். ஈசாக்கின் மரணத்துக்குப்பின்பு ஏசாவுக்கு ஆட்களும் அதிகப்பட்டார்கள். அவர்களுடைய உதவியைக்கொண்டு அவன் சேயீரை லேசாய் ஜெயிக்கும்படி ஏதுவுண்டாயிற்று.

8. "சேயீர்மலை." அதற்கு வேறே பேர் இதுமேயா. அது சவக்கடல் தென்கடைகோடிமுதல் எலாத்க் குடாவரையும் எட்டுகிறது. அது மலைநாடு. அந்த மலைகள் சுண்ணாம்புக்கல்லும் மேகவண்ணக்கல்லுமாயுள்ளது. மிச்சமானபூமி பரும்பாயிருந்தாலும், மற்றது செழிப்புள்ளது. தானியவிளைவு அங்கே அபூர்வம். ஆனால் அத்திப்பழம், மாதளம்பழம்முதலிய கனிவர்க்





9 சேயீர்மலையில் இருக்கிற ஏதோமியருடைய தகப்
10 பனாகிய ஏசாவின் சந்ததிகளும், — ஏசாவின் குமாரரு
டைய நாமங்களுமாவன: ஏசாவின் மனைவியாகிய
ஆதாளுடைய குமாரனுக்கு எலிப்பாஸ் என்று பேர்;
ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்துடைய குமார
11 னுக்கு ரெகுவேல் என்று பேர். — எலீப்பாசின் குமா
ரர் தேமான், ஓமார், செப்போ, கத்தாம், கேனாஸ்
12 என்பவர்கள். — திம்னாள் ஏசாவின் குமாரனாகிய எலீப்
பாசுக்கு மறுமனையாட்டியாயிருந்து, எலீப்பாசுக்கு
[1]அமலேக்கைப் பெற்றாள்; இவர்களே ஏசாவின் மனை

[1] யாத். 17. 8, 11. எண். 24. 20. 1 சாமு. 15. 2.

கங்கள் மிகுதியாயுண்டு. தேசசுவாத்தியம் இன்பமுள்ளது. கோடைகால உஷ்டணம் குளிர்காற்றினால் ஆற்றப்படுத்தப்படும். சீதளகாலம் குளிர்ச்சியாயிருக்கும். அந்தநாட்டின் வடஎல்லை எபிரோனிலிருந்து ஐந்து அல்லது ஆறுகாதவழித் தூரமாய்மாத்திரம் இருந்ததால் அத்தேசத்துக்கு ஏசா இலகுவாய்க் குடிபோயிருக்கலாம்.

9. "ஏதோமியருடைய தகப்பனாகிய." எபிரெயுவில் "ஏதோமின் தகப்பன்" என்றிருக்கிறது. ஏசாவுக்கு வேறே பேர் ஏதோம். இங்கே அந்த வார்த்தை அவன் குடியேறினதேசத்தைக் குறிக்கும்.

11. "தேமான்." இதுமேயாவிலுள்ள ஒரு நாட்டுக்குத் தேமான் என்று பேர். அது ஞானத்துக்குப் பேர்போனது (எரே. 49: 7, 20. ஆமோ. 1: 12. ஆப. 3: 3.). யோபின் ஆகமத்தில் தேமானியனாகிய எலிப்பாசைக்குறித்து வாசிக்கிறோம். அவன் ஏசாவின் குமாரனாகிய எலிப்பாசின் குமாரன் தேமானுடைய வம்சத்தானாயிருக்கலாம்.

12. "அமலேக்கு." எலிப்பாசின் மறுமனையாட்டியின் புத்திரன். அமலேக்கியர் அவன் வம்சத்தாராயிருந்தார்கள். பூர்வீகத்தில் இந்த அமலேக்கியர் எகிப்தின் எல்லைகளிலிருக்கிற சூர்முதல் செழிப்பு அரபியாவிலிருக்கிற ஆவிலாவரைக்கும் பரம்பியிருந்தார்கள். ஓரியர் இவர்களுடன் கலந்துபோயிருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. 1 நாளா. 4: 42, 43ல் சிமியோன் புத்திரர் சேயீருக்குப் போய் அமலேக்கியரை மடங்கடித்ததாக வாசிக்கிறோம். அவர்கள் எப்போதும் இஸ்ரவேலருக்குச் சத்துருக்களாயிருந்தார்கள். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தகாலத்தில் அமலேக்கியர் அவர்கள்பேரில் விழுந்தபோது முறியடிக்கப்பட்டார்கள். பின்பு அவர்கள் மோவாபியர், மீதியானியர் என்பவர்களோடே சேர்ந்து இஸ்ரவேலரை ஒடுக்கினார்கள். ஏகூத், கிதியோன் என்பவர்கள் அவர்கள் கையினின்று இஸ்ரவேலரை மீட்டு இரட்சித்தார்கள் (நியா. 3, 8. அதி.). பிலேயாம் அவர்கள் என்றைக்கும் இராதபடிக்கு அழிந்துபோவார்கள் என்று தீர்க்கதரிசனம் உரைத்தான் (எண். 24: 20.). சவுல் அவர்களில் மிகுதியானபேர்களைச் சங்கரித்தான். தாவீது சவுலின் கைக்குத் தப்பினவர்களில் அநேகரைக் கொன்றுபோட்டான். ஏஸ்தர் காலத்

13 வியாகிய ஆதாளுடைய புத்திரர்.— ரெகுவேலுடைய
குமாரர், நகாத், செராகு, சம்மா, மீசா என்பவர்கள்;
இவர்களே ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின் புத்
14 திரர். — சிபியோனின் குமாரத்தியும் ஆனாகின் குமா
ரத்தியுமான அகோலிபாமாள் என்கிற ஏசாவின்
மனைவி எயூஷ், யாலாம், கோராகு என்னும் புத்திரரை
ஏசாவுக்குப் பெற்றாள்.

15 ஏசாவின் குமாரரில் தோன்றிய பிரபுக்களாவன:
ஏசாவுக்கு மூத்தமகனாகிய எலீப்பாசுடைய குமார
ரில் தேமான் பிரபு, ஓமார் பிரபு, செப்பே பிரபு,
16 கேனாஸ் பிரபு, — கோராகு பிரபு, கத்தாம் பிரபு,
அமலேக்கு பிரபு என்பவர்கள்; இவர்கள் ஏதோம்
தேசத்தில் எலீப்பாசின் சந்ததியும் ஆதாளின் குமா
ரருமாயிருந்த பிரபுக்கள்.

17 ஏசாவின் குமாரனாகிய ரெகுவேலின் புத்திரரில்
நகாத் பிரபு, செராகு பிரபு, சம்மா பிரபு, மீசா பிரபு
என்பவர்கள்; இவர்கள் ஏதோம் தேசத்தில் ரெகுவே
லின் சந்ததியும் ஏசாவின் மனைவியாகிய பஸ்மாத்தின்
குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

18 ஏசாவின் மனைவியாகிய அகோலிபாமாளின் குமா
ரர், எயூஷ் பிரபு, யாலாம் பிரபு, கோராகு பிரபு என்
பவர்கள்; இவர்கள் ஆனாகின் குமாரத்தியும் ஏசாவு
டைய மனைவியுமாகிய அகோலிபாமாளின் சந்ததி

தில் அவர்களில் மீந்திருந்தவர்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள். அப்புறம் அவர்களைக்குறித்து நாம் ஒன்றும் வாசிக்கிறதில்லை.

**15.** **"பிரபு."** ஒரு கோத்திரத்துக்குத் தலைவன். பிரபு என்பதற்குரிய மூலவார்த்தை ஆயிரம் என்றர்த்தங்கொள்ளும் வார்த்தையிலிருந்து பிறந்ததாம். (மீகா. 5: 2.)

**16.** **"கோராகு பிரபு."** இந்தப் பேர் சமாரிய பஞ்சாகமத்தில் விடப்பட்டிருக்கிறது.

**18.** **"எயூஷ் பிரபு, ஞ."** அகோலிபாமாளுடைய மூன்று குமாரரும் பிரபுக்களாயிருந்தார்கள். ஆனால் ஏசாவின் மற்ற மனைவிகளுடைய பிள்ளைகளல்ல, பிள்ளைகளின் பிள்ளைகள் பிரபுக்களாயிருந்ததாக வாசிக்கிறோம். அகோ





19 யாயிருந்த பிரபுக்கள். — இவர்களே ஏதோம் என்
னும் ஏசாவின் சந்ததி; இவர்களே அவர்களிலிருந்த
பிரபுக்கள்.

20 அந்தத் தேசத்தின் குடிகளாகிய [1]ஓரியனான சேயி
ரின் குமாரர், லோத்தான், சோபால், சிபியோன்,
21 ஆனாகு,— திஷோன், ஏத்சேர், திஷான் என்பவர்கள்;
இவர்களே ஏதோம் தேசத்தில் சேயீரின் புத்திரராகிய
22 ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள். — லோத்
தானுடைய குமாரர், ஓரி, ஏமாம் என்பவர்கள்; லோத்
23 தானின் சகோதரி திம்னாள் என்பவள்.— சோபாலின்
குமாரர், அல்வான், மானாகாத், ஏபால், செப்போ,
24 ஓனாம் என்பவர்கள்.— சிபியோனின் குமாரர், அயா,
ஆனாகு என்பவர்கள்; வனாந்தரத்திலே தன் தகப்பனா
கிய சிபெயோனின் கழுதைகளை மேய்க்கையில், [2]கோ
வேறு *கழுதைகளைக் கண்டுபிடித்த ஆனாகு இவன்
25 தான்.— ஆனாகின் பிள்ளைகள், திஷோன், அகோலிபா
மாள் என்பவர்கள்; இந்த அகோலிபாமாள் ஆனாகின்
26 குமாரத்தி.— திஷோனுடைய குமாரர், எம்தான், எஸ்
27 பான், இத்தரான், கெரான் என்பவர்கள்.— ஏத்சேரு
டைய குமாரர், பில்கான், சகவான், அக்கான் என்ப

[1] ஆதி. 14. 6. உபா. 2. 12, 21.
[2] லேவி. 19. 19.
* வெந்நீரூற்றுகளை.

லிபாமாள் ஒரு பிரபுவின் வம்சத்தாளாயிருந்தாள். அதினால் அவளுடைய பாத்தியத்தின்பேரில் அவள் பிள்ளைகளும் நாடுகளை ஆளும் பிரபுக்களானார்கள்.

**20.** **"ஓரியனான சேயீரின் குமாரர்."** ஏதோமியர் படையெழுச்சிக்கு முன் ஓரியர, சேயீரிலே பூர்வகுடிகளாகச் சஞ்சரித்துவந்தார்கள். 14: 6ல் சொல்லப்பட்ட ஓரியர் சுயாதீன சனங்களாயிருந்தார்கள். அவர்கள் ஏசாவாலும் அவன் சந்ததியாராலும் நிர்மூலமாக்கப்பட்டார்கள். (உபா. 2: 12, 21.)

**"லோத்தான்."** கல்அரபியாவிலுள்ள மூர்க்கவெறியுள்ள ஓர் சாதியார்.

**22.** **"ஏமாம்."** கல்அரபியாவுக்குத் தெற்கேயுள்ள ஓரிடம்.

**23.** **"அல்வான்."** அக்கபாவுக்கு வடக்கேயுள்ள சீர்கேடான அரபிய சாதியார்.

**24.** **"கோவேறு கழுதைகளைக் கண்டுபிடித்த ஆனாகு."** அந்தக் காலத்தில் பலஸ்தீனாவில் குதிரைகளில்லை. வெந்நீரூற்றுகள் பலவை ஏதோமிலிருந்தன. அவைகளில் விசேஷித்ததாகிய "அழகிய நீரோடை" என்றர்த்தங்கொள்ளும் காலிரோ என்பதை ஆனாகு கண்டுபிடித்திருக்கலாம். அது

28 வர்கள்.–திஷானுடைய குமாரர், ஊத்ஸ், அரான் என்
29 பவர்கள்.–ஓரியரின் சந்ததியில் தோன்றிய பிரபுக்கள்,
லோத்தான் பிரபு, சோபால் பிரபு, சிபியோன் பிரபு,
30 ஆனாகு பிரபு,— திஷோன் பிரபு, எத்சேர் பிரபு,
திஷான் பிரபு என்பவர்கள்; இவர்களே சேயீர் தேசத்
திலே தங்கள் தங்கள் இடங்களில் இருந்த ஓரியர் சந்
ததியான பிரபுக்கள்.

31 இஸ்ரவேல் புத்திரர்மேல் [1]ராஜாக்கள் அரசாளுகிற 1 1 நாளா. 1. 43.
தற்கு முன்னே, ஏதோம் தேசத்திலே ஆண்ட ராஜாக்க
32 ளாவன:–பேயோருடைய குமாரனாகிய பேலா ஏதோ
மிலே அரசாண்டான்; அவனுடைய பட்டணத்துக்
33 குத் தின்காபா என்று பேர்.—பேலா மரித்தபின், போ
ஸ்றா பட்டணத்தானாகிய சேராகுடைய குமாரனாகிய
34 யோபாப் அவன் பட்டத்திற்கு வந்தான்.—யோபாப்
மரித்தபின், தேமானிய தேசத்தானாகிய உஷாம் அவன்
35 பட்டத்திற்கு வந்தான்.—உஷாம் மரித்தபின், மோவா
பின் நாட்டிலே மீதியானியரை முறிய அடித்த பேதா
தின் குமாரனாகிய ஆதாத் அவன் பட்டத்திற்கு வந்
தான்; அவனுடைய பட்டணத்துக்கு ஆவீத் என்று
36 பேர். — ஆதாத் மரித்தபின், மஸ்ரேக்கா ஊரானாகிய

சர்க்காமாயோன் பள்ளத்தாக்கிலிருக்கிறது. "கோவேறுகழுதை" என்று திருப்பியிருக்கிற மூலபதம் ராட்சதர் என்றும் வெந்நீர் என்றும் திருப்பப்பட்டிருப்பதுண்டு.

**31.** "**ராஜாக்கள்.**" இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கண்ட போது ஏதோமில் பிரபுக்களிருந்ததாகப் பார்க்கலாம் (யாத். 15: 15.). இஸ்ரவேலர் கானான் எல்லைக்கு வந்தபின்பு ஏதோமில் இராசா இருந்ததாகச் சொல்லியிருக்கிறது (எண். 20: 14.). இங்கே காட்டப்பட்டிருக்கிற ஜாபிதாவில் குடும்பவரிசையாய் தகப்பன் மகன் பேரன்முறையே ஆண்டுவந்ததாகத் தோன்றுகிறதில்லை. அவர்கள் குருநிலமன்னராயிருந்திருக்கிறார்கள். பிரபுக்கள் ஆண்டகாலத்திலே ஓரியரும் ஏசாவின் சந்ததியாரைப்போல பற்பல நாடுகளை ஆண்டுவந்தார்கள்.

**33.** "**யோபாப்.**" சிலர் இவன் யோபு என்பார்கள். ஆனால் அதற்கு ஆதாரமில்லை.

"**போஸ்றா.**" இதுமேயாவில் இது பேர்போன பட்டணம். (ஏசா. 34: 6; 63: 1.)





37 சம்லா அவனுடைய பட்டத்திற்கு வந்தான்.—சம்லா
மரித்தபின் அங்கே இருக்கிற நதிக்குச் சமீபமான ரெ
கொபோத் என்னும் ஊரானாகிய சவுல் அவனுடைய
பட்டத்திற்கு வந்தான்.–சவுல் மரித்தபின், அக்போரு
டைய குமாரனாகிய பாகால்கானான் அவனுடைய பட்
39 டத்திற்கு வந்தான்.—அக்போருடைய குமாரனாகிய
பாகால்கானான் மரித்தபின், ஆதார் அவனுடைய பட்
டத்திற்கு வந்தான்; அவனுடைய பட்டணத்துக்குப்
பாகு என்று பேர்; அவன் மனைவியின் பேர் மெகேத
பேல்; அவள் மத்ரேத்துடைய குமாரத்தியும் மேச
காவின் *குமாரத்தியுமாய் இருந்தாள். * பேத்தி.

40 தங்கள் பற்பல வம்சங்களின்படியேயும் வாசஸ்த
லங்களின்படியேயும் நாமதேயங்களின்படியேயும் ஏசா
வின் சந்ததியில் தோன்றிய பிரபுக்களுடைய நாமங்க
ளாவன: திம்னா பிரபு, அல்வா பிரபு, எதேத் பிரபு,—
41 அகோலிபாமா பிரபு, ஏலா பிரபு, பினோன் பிரபு,—
42 கேனாஸ் பிரபு, தேமான் பிரபு, மிப்சார் பிரபு,—
43 மக்தியேல் பிரபு, ஈராம் பிரபு; இவர்களே தங்கள்
சொந்தமான தேசத்திலே பற்பல இடங்களில் குடி
யிருந்த ஏதோம் சந்ததிப் பிரபுக்கள்; இந்த ஏதோமி
யருக்குத் தகப்பன் ஏசா.

**37.** "**நதிக்குச் சமீபமான ரெகொபோத்.**" ஆதி. 10: 11ல் சொல்லப்பட்ட ரெகொபோத் இதல்ல. இந்த வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற நதி ஐபிராத்து என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படியானால் ரெகொபோத் பட்டணம் ஏதோம் தேசத்திலிருக்கமாட்டாது. சவுல் என்பவன் இதுமேயாவை ஜெயித்து அதைக் கட்டி ஆண்டிருக்கவேண்டும்.

**39.** "**ஆதார்.**" சமாரிய பஞ்சாகமத்திலும், 1 நாளா. 1: 50லும் ஆதாத் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். இந்த ஜாபிதா எழுதப்படுகையில் அவன் உயிரோடே இருந்திருக்கலாம். ஏனென்றால் அவன் மரணத்தைப்பற்றி இங்கே ஒன்றுஞ் சொல்லப்படவில்லை.

**40** "**பிரபுக்களுடைய நாமங்களாவன.**" இங்கே சொல்லப்பட்டிருக்கிற பிரபுக்கள் நாடுகளில் அதிகாரம் செலுத்திவந்தவர்கள். அவர்கள் பேரால் அவர்கள் ஆண்ட நாடுகள் அழைக்கப்பட்டன. கானான் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டு கோத்திரப் பிதாக்கள் பேரால் அழைக்கப்பட்டதுபோல கடைசியாக ஏதோமும் பதினொரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பிரபுக்களின்பேரால் அழைக்கப்பட்டது. இதற்கு

## 37. அதிகாரம்.

1. யோசேப்பு தன் சகோதரரால் பகைக்கப்பட்டது. 5. அவன் கண்ட இரண்டு சொப்பனங்களைச் சொல்லியது. 13. யாக்கோபு அவனைத் தன் சகோதரரண்டைக்கு அனுப்பினது. 18. அவன் சகோதரர் அவனைக் கொலைசெய்ய யோசித்தது. 21. ரூபன் அவனை இரட்சித்தது. 26. அவனை அவர்கள் இஸ்மவேலர் கையில் விற்றுப்போட்டது. 31. அவன் வஸ்திரத்தை இரத்தத்தில் தோய்த்து, யாக்கோபுக்குக் காட்டினபோது, அவன் புலம்பினது. 36. அவன் எகிப்தில் போத்திப்பாரிடத்தில் விற்கப்பட்டது.

1 யாக்கோபு [1]தன் தகப்பன் தங்கியிருந்த கானான்
தேசத்திலே குடியிருந்தான்.

[1] ஆதி. 17. 8: 23. 4: 28. 4. எபி. 11. 9—16.

முந்தி அது பதின்மூன்று பிரிவாக வகுக்கப்பட்டிருந்தது. ஏசாவின் குமாரரில் இரண்டுபேராகிய கேனாஸ் தேமான் என்பவர்கள் பராக்கிரமசாலிகளாயிருந்து குடும்ப பாரம்பரியமாய் அரசாண்டுவந்தார்கள்.

### படிப்பினை.

(1) உன்னிலே சாதிகளை உண்டாக்குவேன் என்று தேவன் ஆபிரகாமுக்கு அருளின வாக்குத்தத்தத்தின் உண்மையை ரூபிக்கவும், இரண்டு சாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது என்று ரெபெக்காளுக்கும் உன் பட்டயத்தினாலே நீ பிழைப்பாய் என்று ஏசாவுக்குஞ் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலைக் காட்டவும் ஆன நோக்கமாக இந்த அதிகாரம் எழுதப்பட்டது.

(2) இஸ்ரவேல் ஜனங்களுக்கும் இது அநேகவிஷயத்தில் பிரயோசனமானது, என்றாலும் இது வெறும் அட்டவணைதான். மேசியாவின் வழியிலுள்ள யாக்கோபின் சந்ததியாருடைய சரித்திரம்போல் விசேஷித்து எழுதப்படவில்லை.

(3) இஸ்ரவேலர் உபத்திரவத்தை அநுபவித்துக்கொண்டிருக்கையில் ஏசாவின் சந்ததியார் பிரபுக்களாய் அரசாண்டுவந்தார்கள் என்பதைக் கவனிக்கையில் புறம்பான தோற்றங்களைக்கொண்டுமாத்திரம் மனிதரை மதிப்பது நல்லதல்ல; துன்மார்க்கர் கொஞ்சக்காலஞ் செழித்து மறைந்துபோகிறார்கள். அவர்கள் பேர் மறக்கப்பட்டுப்போம். நீதிமான்கள் வருத்தத்தை அநுபவித்தாலும் நித்திய சேமத்தை அடைகிறவர்களாயிருக்கிறார்கள்.

(4) புறம்பான நன்மைகளைமாத்திரம் நாம் கருதாமல் நித்தியமாய் நிலைநிற்கும் நன்மைகளைத் தேடிக்கொள்வோமாக.

(5) ஒபதியா தீர்க்கதரிசியின் புத்தகம் இந்த அதிகாரத்துக்கடுத்த ஆகமமென்று சொல்லலாம். அதிலே, ஏசாவின் வம்சத்தார் நெடுங்காலமாய் மேன்மையடைந்து வாழ்ந்தபோதிலும் அவர்களுடைய மேன்மையும் முதன்மையும் இவ்வுலகத்துக்குரியதாதலால் கடைசியில் அது முற்றிலும் இல்லாமற்போகுமென்றுந் தேவனுடைய ஜனங்களோ உபத்திரவங்களை அநுபவித்துவந்தாலும் ராஜ்யம் கர்த்தருடையதாயிருக்கும் என்ற தீர்க்கதரிசனம் (ஒப. 21.) நிறைவேறவே ஆண்டவரோடு அரசாளுவார்களென்றும் வாசிக்கிறோம்.

### 37. அதிகாரம்.

1. "யாக்கோபு............குடியிருந்தான்." முப்பத்தைந்தாம் அதிகாரத்தோடே ஈசாக்கின் சரித்திரம் முடிகிறது. முப்பத்தாறும் அதிகாரத்தில் ஏசாவுடைய சந்ததியாரின் அட்டவணை காட்டப்பட்டிருக்கிறது. இந்த அதிகார





2 யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு: யோசேப்பு
பதினேழு வயதிலே தன் சகோதரருடனே ஆடுகளை
மேய்த்துக்கொண்டிருந்தான்; அந்த இளைஞன் பில்
காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனை
யாட்டிகளின் குமாரரோடே இருந்து, [1]அவர்களு
டைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்குச் சொல்லி
3 வருவான். — இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்
புத் தனக்குப் பிறந்ததினால், இஸ்ரவேல் தன் குமாரர்

[1] 1 சாமு. 2. 22, 24. 1 கொ. 1. 11.

முதல் கடைசி அதிகாரம்வரையும் யாக்கோபு கானான்தேசத்தில் சஞ்சரித்ததையும் அவன் எகிப்துக்குப் போனதையும் அவன் வம்சவரலாற்றையும் குறித்துச் சொல்லியிருக்கிறது.

2. "யாக்கோபுடைய சந்ததியின் வரலாறு." ஈசாக்கின் வம்சவரலாறு ஆபிரகாமின் மரணத்துக்குப்பின்பு துவக்கினது (ஆதி. 25: 19.). இடை வாக்கியங்களாக இஸ்மவேலைப்பற்றி சில வசனங்கள்மாத்திரம் ஊடே வருகின்றன (ஆதி. 25: 12–18.). அதேபிரகாரமாக ஈசாக்கின் மரணத்துக்குப்பின்பு யாக்கோபின் வம்சவரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டுக்கும் இடையில் முப்பத்தாறும் அதிகாரத்தில் ஏசாவின் சந்ததியாரைப்பற்றி சில காரியங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. முந்தின அதிகாரங்களில் யாக்கோபின் சரித்திரம் வந்தாலும் மேற்சொல்லிய சங்கதிக்குப் பின்புதான் யாக்கோபின் வம்சவரலாறு வருகின்றது. ஏனென்றால் ஈசாக்கின் மரணத்துக்குப்பின்பு அவன் தெரிந்துகொள்ளப்பட்ட சனத்துக்குத் தலைவனானான்.

"யோசேப்பு பதினேழு வயதிலே." யாக்கோபு ஆரானைவிட்டுப் புறப்படும்முன்னே யோசேப்புக்கு ஏறக்குறைய ஏழுவயது இருக்கலாம். யாக்கோபு தன் தகப்பனுக்குச் சமீபம் வந்துசேர இரண்டுவருஷமாவது சென்றிருக்கும். அப்படியாகில் யாக்கோபு ஈசாக்குக்குச் சமீபமாய் ஏழு அல்லது எட்டுவருஷம் குடியிருந்திருக்கவேண்டும். யோசேப்பு தன் சகோதரரால் அடிமையாக விற்கப்பட்டதற்குப் பின்பும் ஈசாக்கு பன்னிரண்டுவருஷம் உயிரோடே இருந்தான்.

**"அந்த இளைஞன் பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளின் குமாரரோடே இருந்து."** லேயாளுடைய பிள்ளைகள் முக்கியமாய் யோசேப்பை விற்கும்படியாக பிரயத்தனம் செய்ததைப் பார்க்கையில் அந்தப் பிள்ளைகள் யோசேப்பின்பேரில் மிகவும் வெறுப்புடையவர்களாயிருந்தார்கள். இதை யாக்கோபு அறிந்து யோசேப்பை அவன் தாய் ராகேலின் அடிமைப்பெண்ணாகிய பில்காளின் பிள்ளைகளோடே இருக்கும்படியாக ஏற்பாடுசெய்தான். அதுவுமல்லாமல் யாக்கோபின் மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கு யோசேப்பு நல்மாதிரியைக் கற்றுக்கொடுக்கும்படியாகவும் அவர்களோடே அவன் இருக்கும்படியாகவும் வைக்கப்பட்டான் என்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.

**3. "இஸ்ரவேலின் முதிர்வயதிலே யோசேப்புத் தனக்குப் பிறந்ததினால்."** யோசேப்பு பிறந்தபோது யாக்கோபுக்குத் தொண்ணூற்றொருவயது.

எல்லாரிலும் [1]அவனை அதிகமாய் நேசித்து, அவனுக்
குப் [2]பலவருணமான அங்கியைச் செய்வித்தான்.—
4 அவனுடைய சகோதரர் எல்லாரிலும் அவனைத் தங்கள்
தகப்பன் அதிகமாய் நேசிக்கிறதை அவன் சகோதரர்
கண்டபோது, அவனோடே பட்சமாய்ப் பேசாமல்
[3]அவனைப் பகைத்தார்கள்.
5 யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு, அதைத் தன்
சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை
6 இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்.— அவன் அவர்
களை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்

[1] ஆதி. 41. 2[illegible]
[2] நியா. 5. 30. 2 சாமு. 13. 18.
[3] ஆதி. 49. 23.

பென்யமீன் பிறந்தபோது அவனுக்கு 98 அல்லது 99 வயதிருக்கும். யாக்கோபு பதான் அரானில் இருபதுவருஷம் இருந்தான் என்று சாதாரணமாய்ச் சொல்லப்படுவது நிச்சயமானால் யாக்கோபின் மறுமனையாட்டிகளுடைய நாலு குமாரரும் ஏறக்குறைய யோசேப்பின் வயதுக்குச் சரியாயிருப்பார்கள். காரியத்தைப் பார்க்கையில் அவன் முதிர்வயதானபோது யோசேப்பைப் பெற்றான். அதினால் யாக்கோபு யோசேப்பை அதிகமாய் நேசித்தான். மேலும் யோசேப்பு நற்குணசாலியும், பொல்லாப்பை வெறுக்கிறவனுந் தேவபக்தியுள்ளவனுமாயிருந்தான்.

**"அவனுக்குப் பலவருணமான அங்கியைச் செய்வித்தான்."** பலவருண சாயந்தீர்ந்த துணியால் செய்யப்பட்ட நீண்ட அங்கியையாவது அல்லது பற்பல வருணமுள்ள துண்டுகள் ஒன்றாய்ச் சேர்த்துத் தைக்கப்பட்ட அங்கியையாவது குறிக்கலாம். பிந்தின அபிப்பிராயமும் சரியெனத் தோன்றுகிறது. எகிப்திய சின்னங்களில் இப்படிப்பட்ட அங்கி தரித்திருப்பவர்களை சித்திரித்திருப்பதைக் காணலாம்.

மூத்த குமாரனாகிய ரூபன் தவறிப்போனதினாலே ராகேலுக்கு மூத்தகுமாரனாய்ப் பிறந்த யோசேப்புக்கு முதற்பிறப்புச் சுதந்தரத்தைக் கொடுக்கும்படியாயும் குடும்பத்துக்கு அவனை ஆசாரியனாக்கும்படியாயும் பலவருண அங்கியை அவனுக்கு யாக்கோபு கொடுத்தான் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

**5. "யோசேப்பு ஒரு சொப்பனம் கண்டு."** தொல்லையின் திரட்சியினாலாவது மற்றக் காரணத்தினாலாவது சொப்பனம் உண்டாகலாம் (பிர. 5: 3.). ஆனால் தேவன் வேளாவேளைகளில் தமது திருவுளச்செயலை சொப்பனத்தின் மூலமாய் அறிவித்திருக்கிறார். ஆதலால் அப்படிப்பட்ட சொப்பனத்தை ஓர்வித தீர்க்கதரிசனம் என்று சொல்லுவார்கள் (எண். 12: 6–8. உபா. 13: 1. 1 சாமு. 28: 15.). யாக்கோபுக்குத் தேவன் அடிக்கடி நேருக்குநேரே வெளிப்படுத்தலை அருளியிருக்கிறார். அவனுக்குப்பின்பு மோசேயின் காலம்வரையும் அப்படிப்பட்ட வெளிப்படுத்தலில்லை. யோசேப்புக்குச் சொப்பனங்களினால்மாத்திரம் வெளிப்படுத்தல்கள் கிடைத்தன.





7 கள்:—நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்
டிருந்தோம்; அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு
நிமிர்ந்திருந்தது; உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்
8 கட்டைச் சுற்றி வணங்கி நின்றது என்றான். — அப்
பொழுது அவன் சகோதரர் அவனைப் பார்த்து: நீ எங்
கள்மேல் ராஜாத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களை
ஆளப்போகிறாயோ? என்று சொல்லி, அவனை அவன்
சொப்பனங்களின் நிமித்தமும், அவன் வார்த்தை
களின் நிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்
கள்.
9 அவன் வேறொரு சொப்பனம் கண்டு, தன் சகோ
தரரை நோக்கி: நான் இன்னும் ஒரு சொப்பனத்
தைக் கண்டேன்; [1]சூரியனும் சந்திரனும் பதினொரு
நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான்.—
10 இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்
கும் சொன்னபோது, அவன் தகப்பன் அவனைப்
பார்த்து: நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும்
உன் தாயாரும் உன் சகோதரரும் [2]தரைமட்டும் குனி
ந்து உன்னை வணங்க வருவோமோ? என்று அவனைக்

[1] ஆதி. 46. 29.
[2] ஆதி. 27. 29.

**7. "அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்."** இந்த வசனத்தால் யாக்கோபு மேய்ப்பனாயிருந்ததோடே பயிரிடுகிறவனாயுமிருந்தான் என்று அறியலாம்.

**9. "வேறொரு சொப்பனம் கண்டு."** ஒரே அர்த்தமுள்ள சொப்பனம் இரட்டித்துக் காணப்பட்டது. சொப்பனத்தின் பொருள் நிச்சயமாகவே நிறைவேறும் என்பதற்குக் குறிப்பு.

**10. "உன் தாய்."** யோசேப்புக்கு இப்போது பதினொரு சகோதரரிருந்ததால் ராகேல் இதற்குமுன்னே மரித்துப்போனாள். லேயாள் எபிரோனில் ஜீவித்துப்போனதால் (ஆதி. 49: 31.), அவளும் யோசேப்பை வணங்கவில்லை. ராகேல் மரித்தபின் பில்காள் யோசேப்புக்குத் தாயைப்போல இருந்திருக்கலாம். அவளும் சில்பாளும் யாக்கோபோடேகூட எகிப்துக்கு இறங்கிப்போயிருக்கவேண்டும். இங்கே குறிக்கப்பட்டிருக்கிற பொருள் யாக்கோபின் வம்சத்தைச்சேர்ந்த சிறியோர் பெரியோர் யாவரும் யோசேப்புக்குக் கனம் செலுத்துவார்கள் என்பதே.

**"அவனைக் கடிந்துகொண்டான்."** சூரியனும் சந்திரனும் தன்னை வணங்கும்படியாக யோசேப்பு கண்ட சொப்பனம், பிள்ளைகள் தாய்தகப்பன்மாருக்

11 கடிந்துகொண்டான். — அவன் சகோதரர் அவன்மேல்
[1]பொறாமைகொண்டார்கள்; அவன் தகப்பனோ அவன் [1] அப். 7. 9.
சொன்னதை [2]மனதிலே வைத்துக்கொண்டான். [2] தானி. 7. 28,
2. 19, 51.
12 பின்பு, அவன் சகோதரர் சீகேமிலே தங்கள் தக
13 பனுடைய ஆடுகளை மேய்க்கப் போனார்கள். — அ
பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி:
சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறா
அல்லவா? உன்னை அவர்களிடத்துக்கு அனுப்பப்
போகிறேன், வா என்றான். அவன்: இதோ, போகி
14 றேன் என்றான். — அப்பொழுது அவன்: நீ போய்,
உன் சகோதரருடைய க்ஷேமம் எப்படி என்றும், ஆடு
கள் எப்படி இருக்கிறது என்றும் பார்த்து, எனக்கு
மறுசெய்தி கொண்டுவா என்று அவனுக்குச் சொல்லி,
[3]எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப் [3] ஆதி. 35. 27.
பினான்; அந்தப்படியே அவன் சீகேமுக்குப் போ

குச் செய்யவேண்டிய மரியாதைக்கு விலக்காகத் தோன்றும். ஆனால் காரியம் யோசேப்பு தகப்பனுக்கும் தாய்க்கும் சகோதரருக்கும் மேற்பட்ட அதிகார கர்த்தனாயிருப்பான் என்பதைக் குறிக்கும். யோசேப்பு தன்னைக்குறித்து மேலானவண்ணமாக வீண் எண்ணங் கொள்ளுகிறான் என்று யாக்கோபு நினைத்து அவனைக் கடிந்துகொண்டான்.

**12. "சீகேமிலே."** யாக்கோபுடைய குமாரரில் சிலர் சீகேமிலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். சீகேமில் தாங்கள் சிறைபிடித்த வேலைக்காரரும் தாங்களும் அவ்விடங்களிலுள்ள சுதேசிகளுக்கு அஞ்சாதபடிக்கு நிலைநிற்கத்தக்கதான பலவான்களாயிருந்தார்கள். யாக்கோபு எபிரோனில் குடியிருந்தான். அவன் தன் குமாரரை ஆறுகாதவழித்தூரத்துக்கு அனுப்பியிருப்பதைப் பார்க்கையில், அவனுடைய ஐசுவரியம் திரட்சியாயும் அவனுடைய வல்லமை பெரிதாயும் இருந்ததென்று அறியலாம்.

**14. "உன் சகோதரருடைய க்ஷேமம் எப்படி?"** சுதேசிகள் ஒன்றுகூடி தன் குமாரருக்கு ஏதாவது தீங்குசெய்வார்கள் என்ற அச்சம் யாக்கோபுக்கு இருந்திருக்கலாம். ஆனால் அவன் குமாரருக்கு அப்படிப்பட்ட பயம் எவ்வளவேனும் இருந்ததில்லை.

**"எபிரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான்."** சீகேமியர் கொலைபுரியப்பட்டபின்பு யாக்கோபு தெற்கே பிரயாணம்செய்து பெத்தேலுக்கு வந்து அப்புறம் பெத்லகேமுக்குச் சென்று அதிலிருந்து ஏதேர் கோபுரத்துக்குப் போய்க் கடைசியாக எபிரோனுக்கு வந்து சேர்ந்தான். இந்த வாக்கியத்தைக் கவனிக்கையில் யாக்கோபு தன் தகப்பனுடைய மரணத்துக்குச்





15 றான். — அப்பொழுது ஒரு மனிதன் அவன் வெளி
யிலே வழிதப்பித் திரிகிறதைக் கண்டு, என்ன தேடு
16 கிறாய் என்று அவனைக் கேட்டான். — அதற்கு
அவன்: என் சகோதரரைத் தேடுகிறேன், [1]அவர்கள் [1] உன்னத. 1. 7.
எங்கே ஆடு மேய்க்கிறார்கள், சொல்லும் என்றான். —
17 அந்த மனிதன்: அவர்கள் இவ்விடத்திலிருந்து போய்
விட்டார்கள், [2]தோத்தானுக்குப் போவோம் என்று [2] 2 இரா. 6. 13.
அவர்கள் சொல்லக் கேட்டேன் என்றான்; அப்
பொழுது யோசேப்பு தன் சகோதரரைத் தொடர்ந்து
போய், அவர்களைத் தோத்தானிலே கண்டுபிடித்தான்.
18 அவர்கள் அவனைத் தூரத்தில் வரக் கண்டு, அவன்
தங்களுக்குச் சமீபமாய் வருமுன்னே, அவனைக்
19 கொலைசெய்யும்படி [3]சதியோசனைபண்ணி, — ஒருவரை [3] 1 சாமு. 19. 1. சங்.
ஒருவர் நோக்கி: இதோ, சொப்பனக்காரன் வருகி 31. 13. மத். 27.
20 றான், — நாம் அவனைக் [4]கொன்று, இந்தக் குழிகள் 1. யோ. 11. 53. அப். 23. 12. [4] நீதி. 1. 11, 16:
ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் 6. 17: 27. 4.
அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்
கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும்

சிலவருஷங்களுக்கு முந்தி வந்திருக்கவேண்டும். இப்போது யோசேப்பு கடைசிவிசையாகத் தன் தகப்பன் வீட்டைவிட்டுப் புறப்படுவதை அறியாதிருந்தான். யாக்கோபும் தன் நேசமகனைக் காணுனில் கடைசியாகக் காண்பதாக எண்ணவுமில்லை. தேவநடத்துதல் வெகு இரகசியமாயிருந்தது.

**17. "தோத்தான்."** இந்தப் பட்டணம் சீகேமுக்குப் பன்னிரண்டு மைலுக்கு வடக்கேயிருந்தது. இந்த இடத்தில் எலிசா சீரியருடைய சேனைக்குக் கண்மயக்கமுண்டாகும்படி செய்தான் (2 இரா. 6: 13–23.). சீகேமில் மேய்ச்சல் அற்றுப்போனபடியால் யாக்கோபின் குமாரர் செழிப்புள்ள பள்ளத்தாக்கிலிருந்த தோத்தானுக்குப் போனார்கள்.

**19. "சொப்பனக்காரன்."** எபிரெயுவில் "சொப்பனத்துக்கு ஆண்டவன்" என்றிருக்கிறது. இளப்பத்துக்குக் குறிப்பாக இப்படிச் சொன்னார்கள்.

**20. "குழிகள் ஒன்றிலே."** ஆடுமாடுகளுக்குப் பிரயோசனமாக மழைத் தண்ணீர் கட்டி நிற்கும்படியாக வெட்டப்பட்ட குழிகளைக் குறிக்கும். அவைகள் மிகவும் ஆழமாய் இருக்குமாதலால் அவைகளில் போடப்பட்ட மனுஷன் தப்பி வெளியேவருவது கூடாதகாரியம். கோடைகாலத்தில் அவைகளில் தண்ணீர் வற்றிப்போம். இந்தத் துரோகத்தில் முக்கியமாய்ச் சம்பந்தப்பட்டவன் சிமியோன் என்றும் அதினால் யோசேப்பு அவனைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்துவைத்தான் என்றும் யூதர்கள் சொல்லுகிறார்கள் (ஆதி. 42: 24.).

21 பார்ப்போம் என்றார்கள். — ரூபன் [1]அதைக் கேட்டு,
அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து, அவனை அவன்
தகப்பனிடத்துக்குத் திரும்பவும் கொண்டுபோகு மன
22 துள்ளவனாய், — அவர்களை நோக்கி: அவனைக் கொல்ல
வேண்டாம், நீங்கள் இரத்தம் சிந்தலாகாது; நீங்கள்
அவன்மேல் கைவையாமல், அவனை வனாந்தரத்தி
லுள்ள இந்தக் குழியிலே போட்டுவிடுங்கள் என்று
சொல்லி, இவ்விதமாய் ரூபன் அவனை அவர்கள்
கைக்குத் தப்புவித்தான்.

23 யோசேப்பு தன் சகோதரரிடத்தில் சேர்ந்தபோது,
யோசேப்பு உடுத்திக்கொண்டிருந்த பலவருண அங்
24 கியை அவர்கள் கழற்றி, — அவனை எடுத்து, அந்தக்
குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத

[1] ஆதி. 42. 22.

**22.** **"வனாந்தரத்திலுள்ள இந்தக் குழியிலே போட்டுவிடுங்கள்."** யோசேப்பின் சகோதரர் அவனைத் தங்கள் கையால் கொலைசெய்ய வகைதேடினார்கள். அப்போது தேவன் யோசேப்பை அவர்கள் கைக்குத் தப்புவிக்கும்படி ரூபனுடைய ஆலோசனைக்கு இணங்கச்செய்தார். அந்தக் குழியில் போடாதபடிக்கு யோசேப்பு கண்ணீரோடே கெஞ்சியும் வன்னெஞ்சரான அவன் சகோதரர் மனம் இளகாமற்போயிற்று. (ஆதி. 42: 21.)

யோசேப்பு கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறான். அவன் தன் தகப்பனால் அன்புகூரப்பட்டவனாய்த் தன் சகோதரரின் க்ஷேமத்தை விசாரித்து வரும்படியாக அனுப்பப்பட்டதிலும், அவர்கள் அவனுக்கு விரோதமாக ஆலோசனை செய்ததிலும், இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டதிலும், அவன் சிறுமையிலிருந்து உயர்ந்தபதவிக் கெழும்பி தனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தவர்களையும் உலகத்திலுள்ள திரளான சனங்களையும் இரட்சிக்கிற இரட்சகனானதிலும், அவன் சிறைச்சாலையில் வேறே இரண்டுபேரோடே போடப்பட்டதிலும் அவர்களிலொருவன் இரட்சிக்கப்பட்டதிலும் மற்றவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதிலும் கிறிஸ்துவுக்குமுன் அடையாளமாயிருந்தான்; அவன் குற்றமற்றவனாயிருந்தாலுந் திரும்பத்திரும்பக் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டான்; அப்படி தீர்க்கப்பட்ட ஒவ்வொருதருணமும் அவன் உயர்வுக்கு வழியாயிருந்தது. பெருந்தன்மை யுள்ளவர்கள் தாங்கள் அநுபவிக்கும் உபத்திரவங்களால் உலகத்துக்கு நன்மைகள் உண்டானால் தாங்கள் பட்ட பாடுகளை நினைக்கிறதில்லை. யோசேப்பு எகிப்துக்குப்போனது தேவனுடைய சனங்களைப் பாதுகாக்கமாத்திரமல்ல இஸ்ரவேலர் ஒரு சபையாகத் திரட்டப்படவும் அவசியமாயிருந்தது.

**23.** **"அங்கியை அவர்கள் கழற்றி."** யோசேப்பின் அங்கி இரண்டுதரம் பொல்லாதவர்களால் உரியப்பட்டது. ஒருதரம் அவன் தகப்பனை வஞ்சிக்க, இன்னொருதரம் அவன் எசமானை வஞ்சிக்கவே.





25 வெறுங்குழியாயிருந்தது. — பின்பு, [1]அவர்கள் போ
ஜனஞ்செய்யும்படி உட்கார்ந்தார்கள்; அவர்கள் தங்
கள் கண்களை ஏறெடுக்கும்போது, இதோ, கிலேயாத்
திலிருந்துவருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக்
கண்டார்கள்; அவர்கள் எகிப்துக்குக் கொண்டுபோ
கும்படி கந்தவர்க்கங்களையும் [2]பிசின் தைலத்தையும்
வெள்ளைப்போளத்தையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்
26 கொண்டு வந்தார்கள். — அப்பொழுது யூதா தன் சகோ
தரரை நோக்கி: நாம் நம்முடைய சகோதரனைக்
கொன்று, [3]அவன் இரத்தத்தை மறைப்பதினால் லாபம்
என்ன? — அவனை இந்த இஸ்மவேலருக்கு விற்றுப்
போடுவோம் வாருங்கள்; [4]நமது கை அவன்மேல்
படாதிருப்பதாக; அவன் நம்முடைய [5]சகோதரனும்

[1] நீதி. 30. 20. ஆமோஸ். 6. 6.
[2] எரே. 8. 22.
[3] ஆதி. 4. 10. யோபு. 16. 18.
[4] 1 சாமு. 18. 17.
[5] ஆதி. 42. 21: 29. 14.

**25.** **"இஸ்மவேலருடைய கூட்டத்தை."** தோத்தானானது; இந்தியா மேல் ஆசியாவின் விளைவுகள் எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்ட பெரும்பாதை மார்க்கத்திலிருந்தது. கானான்தேசத்துக்குக் கீழ்பாகம் அரபியா வனாந்தரமிருந்ததால் வர்த்தகப் பிரயாணிகள் வடமேல் திசையாய்ப் பிரயாணஞ்செய்து ஐப்பிராத்து நதியைக் கடந்து தத்மோர் வழியாய்க் கிலேயாத்துக்கு வந்து பைசானில் யோர்தானைக் கடந்து எகிப்துக்குத் தெற்குமுகமாய்ப் போவார்கள். இந்த இஸ்மவேலரை 28—ம் வாக்கியத்தில் மீதியானியர் என்றும் 36—ம் வசனத்தில் எபிரெயுவில் மேதானியர் என்றும் சொல்லியிருக்கிறது. இந்த மூவகைச் சாதியாரும் ஒருவருக்கொருவர் நெருங்கின இரத்தக்கலப்புள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களில் இஸ்மவேலர் முக்கியமானவர்களாயிருந்ததாலுந், திரள்சனமாயிருந்ததாலும் அவர்கள் பேர் பொதுவாக அவர்களோடே சேர்ந்து வியாபாரம்பண்ணின வியாபாரிகளுக்குங் கொடுக்கப்பட்டது. சிலர் யோசேப்பை வாங்கின வியாபாரிகள் கானானியரைச்சேர்ந்த ஒரு வகுப்பார் என்றும் அவர்கள் இஸ்மவேலராலும் மீதியானராலும் ஜெயிக்கப்பட்டு அவர்கள் அரசாட்சிக்குட்பட்டு அவர்கள்பேரால் அழைக்கப்பட்டவர்கள் என்றும் நினைக்கிறார்கள்.

**"கந்தவர்க்கங்களையும் பிசின் தைலத்தையும் வெள்ளைப்போளத்தையும்."** இவைகள் பலஸ்தீனாவிலுள்ள விளைவுகள். எகிப்தில் அவைகள் விலையடக்கமுள்ள சரக்குகளாய் எண்ணப்பட்டன. யாக்கோபு எகிப்திலுள்ள தேசாதிபதிக்கு இவைகளையும் வெகுமானமாகச் சேர்த்து அனுப்பினான். (ஆதி. 43: 11.)

**26.** **"யூதா தன் சகோதரரை நோக்கி, ஓ."** யோசேப்பு குழியில் கிடந்து மரிக்காதபடிக்கு யோசனை சொல்ல அவன் சகோதரர் நடுவிலே யூதாவை தேவன் எழுப்பி அவன் ஆலோசனைக்கு மற்றவர்கள் செவிகொடுக்கும்படி செய்தார். யாக்கோபின் மக்கள் லாபத்தை விரும்பினதில் யோசேப்பின் உயிர் பாதுகாக்கப்பட்டது.

நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானே என்றான்.
அவன் சகோதரர் அவன் சொல்லுக்கு இணங்கினார்
28 கள். — அந்த வர்த்தகரான [1]மீதியானியர் கடந்துபோ [1] நியா. 6. 3.
கிறபோது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலி
ருந்து தூக்கியெடுத்து, அவனை இஸ்மவேலர் கையில்
[2]இருபது வெள்ளிக்காசுக்கு [3]விற்றுப்போட்டார்கள். [2] மத். 27. 9.
அவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டுபோ [3] ஆதி. 45. 4, 5. சங். 105. 17. அப். 7. 9.
னார்கள்.
29 பின்பு, ரூபன் அந்தக் குழியினிடத்துக்குத் திரும்
பிப் போனபோது, யோசேப்பு குழியில் இல்லை
யென்று கண்டு, தன் [4]வஸ்திரங்களைக் கிழித்துக் [4] யோபு. 1. 20.
30 கொண்டு,— தன் சகோதரரிடத்துக்குத் திரும்பிவந்து:
[5]இளைஞன் இல்லையே, ஐயோ! நான் எங்கே போவேன் [5] ஆதி. 42. 13, 36. எரே. 31. 15.
என்றான்.
31 அவர்கள் யோசேப்பின் [6]அங்கியை எடுத்து, ஒரு [6] 23. வசனம்.
வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை
32 இரத்தத்திலே தோய்த்து, — பல வருணமான அந்த
அங்கியைத் தங்கள் தகப்பனிடத்துக்கு அனுப்பி:

**28. "இருபது வெள்ளிக்காசு."** இந்தத் தொகை ஏறக்குறைய இருபத்தைந்து ரூபாயாயிருக்கும். யூதருக்குள்ளே கர்த்தருக்கென்று தன்னைப் பொருத்தனையாக ஒப்புக்கொடுக்கிறவர்களில் இருபது வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளை மதிக்கப்படுங் கிரயமும் இருபது சேக்கல் வெள்ளிக்காசு. மீதியானியர் பிந்தியகாலத்தில் எகிப்துக்கு அதிகாரியாக இருக்கப்போகிறவனை வாங்குகிறோம் என்றெண்ணவில்லை. யோசேப்பின் சகோதரர் தங்களை இனிமேல் பாதுகாக்கப்போகிறவனை விற்கிறோம் என்று நினைக்கவுமில்லை.

**29. "ரூபன் அந்தக் குழியினிடத்துக்குத் திரும்பிப் போனபோது."** யோசேப்பு மீதியானியருக்கு விற்கப்பட்டபோது ரூபன் ஆஜராயிருக்கவில்லை. அவன் யோசேப்பைப் பாதுகாக்கும்படியான நோக்கத்தை உள்ளே வைத்துக்கொண்டு ஆடுகளைப் பார்க்கப்போகிறவன்போல காட்டி தன் சகோதரர் போஜனத்தில் உளுக்காரும்மட்டும் பொழுதுபோக்கிக்கொண்டிருந்து அப்புறம் போய்க் குழியைப் பார்த்தான். அவன் அங்கே இல்லாததைக் கண்டு மிகவும் மனவேதனைப்பட்டான்.

**31. "வெள்ளாட்டுக்கடாவை."** பாவம் போக்கும் பலியாக வெள்ளாட்டுக்கடா செலுத்தப்பட்டுவந்தது. கோத்திரப்பிதாக்கள் செய்த பெரிய பாவத்தை இஸ்ரவேலர் நினைவுகூரும்படியாக பாவம் போக்கும் பலியில் வெள்ளாட்டுக்கடா செலுத்தப்பட்டதாக ஒருவர் நினைக்கிறார்.





இதை நாங்கள் கண்டெடுத்தோம், இது உம்முடைய
குமாரன் அங்கியோ, அல்லவோ, பாரும் என்று
33 சொல்லச்சொன்னார்கள்.— யாக்கோபு அதைக் கண்டு,
இது என் குமாரனுடைய அங்கிதான், [1]ஒரு துஷ்ட [1] ஆதி. 44. 28.
மிருகம் அவனைப் பட்சித்துப்போட்டது, யோசேப்பு
34 பீறுண்டுபோனான் என்று புலம்பி,— தன் வஸ்தி
ரங்களைக் கிழித்து, தன் அரையில் இரட்டுக் கட்டிக்
கொண்டு, [2]அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித் [2] 2 சாமு. 3. 31. 2 இரா. 19. 1. ஏசா. 32. 11. யோனா. 3. 5.
35 துக்கொண்டிருந்தான். — [illegible] குமாரர் குமா
ரத்திகள் எல்லாரும் அவனுக்கு [3]ஆறுதல் சொல்ல [3] 2 சாமு. 12. 17.
வந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு
இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமா
ரனிடத்தில் பாதாளத்தில் [4]இறங்குவேன் என்றான். [4] ஆதி. 42. 38.
இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக
அழுதுகொண்டிருந்தான்.
36 அந்த மீதியானியர் யோசேப்பை எகிப்திலே பார்

**33. "யோசேப்பு பீறுண்டுபோனான் என்று புலம்பி."** எகிப்தில் ஜீவனோடேயிருக்கிற யோசேப்பு இறந்துபோனான் என்று யாக்கோபு புலம்புகிறான். அவன் தன் தகப்பன் ஈசாக்கை வஞ்சித்தான். இப்போதோ அவன் தன் குமாரரால் வஞ்சிக்கப்பட்டான்.

**34. "அநேகநாள்."** வழக்கத்துக்கு மிஞ்சியகாலமாய்த் துக்கித்துக்கொண்டிருந்தான். அவன் குமாரருங் குமாரத்திகளும் அவனுக்கு ஆறுதல் சொல்லியுங் கேட்க இடமில்லாமற்போயிற்று. யாக்கோபுக்குத் தீனாளைத்தவிர வேறே குமாரத்திகளும் இருந்தார்கள். (35. வச. 46: 7.)

**35. "பாதாளத்தில் இறங்குவேன்."** பாதாளம் என்பதற்குரிய எபிரெய பதம் "ஷேயோல்" கிரேக்கு வார்த்தை "ஆதேஸ்" மரித்தவர்களுடைய ஆவி போய்த் தங்கும் இடத்தை அது குறிக்கும். பாதாளம் என்பது இங்கே கல்லறையைக் குறியாது. யோசேப்பு மிருகங்களால் பட்சிக்கப்பட்டுப்போனதாக யாக்கோபு எண்ணினதால் அவன் சரீரம் அடக்கம் செய்யப்பட்டிராது என்று அவன் எண்ணுவது நிச்சயமே.

**36. "பிரதானியும்."** எபிரெயுவில் இந்த வார்த்தை அண்ணகனைக் குறிக்கும். பின்பு வரவர அரமனை உத்தியோகஸ்தனைக் குறிக்கிற பதமாகவும் வழங்கப்பட்டது. போத்திபார் என்பவன் அண்ணகர்களுக்கு அதிகாரியாக இருந்ததால் அவர்களோடே இவனும் இங்கே சேர்க்கப்பட்டிருக்கலாம்.

வோனின் பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியு
மாகிய போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள்.

"தலையாரிகளுக்கு அதிபதியும்." எபிரெயுவில் "கொல்லுகிறவர்களுக்குத் தலைவன்" என்றிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு போசனத்துக்காக ஆடுமாடுகளை அடிக்கிறவர்களுக்குத் தலைவனாயிருக்கவேண்டும் என்று எண்ணி கிரேக்கைத் திருப்புதலில் "சயம்பாகிகளுக்கு அதிபதி" என்று போட்டிருக்கிறது. மற்றப் பூர்வபாஷைகளில் "மெய்காவலாளருக்கு அதிபதி" என்று திருப்பியிருக்கிற இவ்வித உத்தியோகஸ்தர் கொலைக்குத் தீர்ப்புப்பெற்றவர்களுக்கு அத்தண்டனையைச் செலுத்துகிறவர்களாயிருந்தார்கள். 2 இரா. 25: 8ஐ இதோடே ஒத்துப்பார்க்கையில் நெபுகாத்நேச்சாருக்குக் கொடுக்கப்பட்ட காவல் சேனாபதி உத்தியோகமும் [illegible] கொடுக்கப்பட்டிருக்கிற உத்தியோகமும் ஒன்றாகவே [illegible] பின் சொல்லிய அர்த்தம் சரியாயிருக்கிறது என்றெண்ணலாம்.

"போத்திபார்." இந்தப் பேரைக்குறித்து மூன்று அர்த்தஞ் சொல்லப்படுவதுண்டு. முதலாவது "இராசாவின் தகப்பன்." அப்படியானால் இது மந்திரியைக் குறிக்கிற பட்டப்பேராகும். இரண்டாவது போத்திபார் என்பதும் ஆதி. 41: 50ல் சொல்லப்பட்டிருக்கிற போத்திபிரா என்பதும் ஒரே மனுஷனைக் குறிக்கும். அப்படியானால் "சூரிய தேவனாகிய ராவுக்குப் பிரதிஷ்டையாக்கப்பட்டவன்" என்றர்த்தமாகும். மூன்றாவது "அரமனையின் தகப்பன்" என்றர்த்தம். அப்படியானால் அதுவும் ஒரு பட்டப்பேரைக் குறிக்கும்.

## படிப்பினை.

### வச. 1—30.

(1) சீர்திருத்தலைப் பகைக்கிறவர்கள் கண்டிக்கப்படுதலையும் பகைப்பார்கள்.

(2) மனிதர் செய்யுங் குற்றங்களைப் பெரியோருக்கும் அதிகாரிகளுக்குந் தெரியப்படுத்துவது மிகுந்த பிரயோசனமாயிருக்கும் என்றாலும் வெகு விவேகத்தோடும் உண்மையோடும் அப்படிச் செய்யவேண்டும். பழிவாங்குங் குணத்தோடே அப்படிச் செய்யாமல் பாவத்தைப்பற்றிய வெறுப்பினாலும் பாவியின்பேரிலுள்ள அன்பினாலும் அப்படிச் செய்யவேண்டும்.

(3) வெவ்வேறான குணங்களையுடைய சகோதரருக்குள்ளே சண்டைகள் நேரிடுவது இயல்பு. ஆதலால் தாய்தந்தைகள் தங்கள் பிள்ளைகளை விவேகத்தோடே நடத்தவேண்டும். பட்சபாதங் காட்டுகிறதைப் பிள்ளைகள் காணும்போது அவர்களுக்குள்ளே எரிச்சலும் பொறாமையும் வளருகிறதற்கு அது ஏதுவாயிருக்கிறது. பொறாமை முற்றினால் கொலைபாதகத்தில் முடியும்; தன் சகோதரனைப் பகைக்கிறவன் கொலைபாதகனாயிருக்கிறான்.

(4) மனிதருடைய சீர்கேடு பலவகையாயுள்ளது. ஒருவகைப் பாவத்தைத் துணிந்து செய்கிறவன் இன்னொரு பாவத்தை வெறுக்கிறான்.

(5) கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்குத் துன்பத்தை அனுப்பும்போது அவர்களைக் கைவிட்டுவிட்டார் என்று எண்ணக்கூடாது. அவர்கள்மேல் வைத்த பட்சத்தினால் அப்படிச் செய்கிறார் என்று நினைக்கவேண்டும். மேன்மைக்கு முன்னானது தாழ்மை.





## 38. அதிகாரம்.

யூதா, ஏர் ஓனான் சேலா என்பவர்களைப் பெற்றது. 8. ஓனான் பொல்லாங்கு செய்தது. 11. தாமார் சேலாவுக்காகக் காத்திருந்தது, 13. யூதாவை வஞ்சித்தது. 27. அவள் பேரேஸ் சேரா என்னும் இரட்டைப்பிள்ளை பெற்றது.

1 அக்காலத்திலே யூதா தன் சகோதரரை விட்டு,

### வச. 31—36.

(6) தேவசெயலை நம்முடைய அற்பபுத்தியினாலே அளவிடக்கூடாது. நாம் அவிசுவாசம் அறிவீனத்தினாலே மனமடிந்து கலக்கப்படுகிற இருள்நிறைந்த இருக்குகிற அந்தகாரத்தில் அமிழ்ந்திருப்பதுண்டு. காரியங்களை நாம் தெளிவாய் அறிந்திருந்தால் நமது துக்கம் சந்தோஷமாய் மாறும். தற்காலத்தில் நமக்கு நடக்குஞ் சம்பவங்களினாலே சோர்ந்துபோகாமல் கர்த்தர்பேரில் நம்பிக்கை வைத்தால் சகலமும் நமக்கு நன்மையாகச் செய்யப்பட்டதென்பதை ஏற்றகாலத்தில் உணர்ந்து நன்றியறிதலைச் செலுத்துவோம்.

(7) தீமைசெய்யவேண்டும் என்று மனிதர் தங்களை ஒப்புவிக்கும்போது எந்தக் கபடுகள் வஞ்சனைகளையும் நடப்பிப்பார்கள். அவர்கள் தங்கள் பாவங்களை மறைக்கும்படி எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலுங் கடைசியில் தங்களுக்கு வெட்கமுண்டாகக் கண்டுபிடிக்கப்படுவார்கள்.

(8) நாம் எல்லாக்காலத்திலும் எல்லாவிஷயத்திலுங் கர்த்தராகிய இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவோமாக. அவர் பகைக்கப்பட்டார், துன்பப்படுத்தப்பட்டார், விற்கப்பட்டார், நமக்காகப் பாடுகளை அநுபவித்தார். இவைகளையெல்லாம் பொறுமையாய்ச் சகித்தார். நாமும் இப்படிப்பட்ட சிந்தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்வோமாக. நாம் அவருடைய சம்பூரணத்திலிருந்து நன்மைகளைப் பெற்றநுபவிக்கையில் அவருடைய ஆத்தும வியாகுலங்களை மறந்துபோகாமல், நம்முடைய பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப்பட்டு அவரிடத்தில் அன்புகூர்ந்து அவரையே சேவிப்போமாக. நம்முடைய துன்பத்திலும் அவமானத்திலும் அவரையே பின்பற்றுவோமாக. அப்படியானால் அவருடைய மகிமைக்கும் பங்காளிகளாவோம்.

## 38. அதிகாரம்.

யூதாவின் சரித்திரம் இங்கே இடையில் வருகிறது. சிரேஷ்ட புத்திரனுக்குரிய அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப்பட்டதாலும் விசேஷமாய் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவன் வம்சத்தில் பிறந்ததாலும் அவருடைய வம்ச அட்டவணையைப் பாதுகாக்கும்படி அது எழுதப்படவேண்டியது அவசியமாயிற்று.

1. "அக்காலத்தில்." இது யோசேப்பு விற்கப்பட்ட காலத்தைக் குறியாது. ஏனென்றால் மேற்படி சங்கதிக்கும் இஸ்ரவேல் எகிப்துக்குப் போனதற்கும் இடையில் இருபத்திரண்டு வருஷங்கள்மாத்திரமிருக்கிறது. இந்தக் காலத்திற்குள் இந்த அதிகாரத்தில் காட்டப்பட்டிருக்கிற சங்கதிகள் நடப்பது கூடாதகாரியமாயிருக்கிறது. சாதாரண கால அட்டவணைப்படி லேயாளின் நாலாம் குமாரன் யூதா என்பவன், யாக்கோபு பதான் அராமைவிட்டபோது எட்டுவயதாயிருக்கலாம். அதாவது யூதா யோசேப்புக்கு ஒருவயதுக்கு மூத்தவனாயிருந்தான். ஆனால் சரியான கால அட்டவணைப்படிக்கு யூதா என்பவன் யோசேப்புக்கு இருபது வயதுக்கு மூத்தவனாயிருக்கவேண்டும். இந்த அதி

அதுல்லாம் ஊரானாகிய ஈரா என்னும் ஒரு மனிதனி
2 டத்தில் போய்ச் சேர்ந்தான். — அங்கே யூதா, சூவா
என்னும் பேருள்ள ஒரு கானானியனுடைய குமாரத்
தியைக் கண்டு, அவளை விவாகம்பண்ணி, அவ
3 ளோடே சேர்ந்தான். — அவள் கர்ப்பவதியாகி ஒரு
குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு ஏர் என்று பேரிட
4 டான். — அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு
குமாரனைப் பெற்று, அவனுக்கு ஓனான் என்று பேரிட்
5 டாள். — அவள் மறுபடியும் கர்ப்பவதியாகி ஒரு
குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேலா என்று
பேரிட்டாள்; அவள் இவனைப் பெறுகிறபோது, அவன்
கெசீபிலே இருந்தான்.

6 யூதா தன் மூத்த மகனாகிய ஏர் என்பவனுக்குத்
தாமார் என்னும் பேருள்ள ஒரு பெண்ணைக் கொண்
7 டான். — யூதாவின் மூத்த மகனாகிய ஏர் என்பவன்
கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருந்தபடியி
8 னால், கர்த்தர் அவனை [1]அழித்துப்போட்டார். — அப் [1] 1 நாளா. 2. 3.
பொழுது யூதா ஓனானை நோக்கி: நீ உன் தமையன்
மனைவியைச் சேர்ந்து, [2]அவளை மைத்துனச் சுதந்தர [2] உபா. 25. 5. மத். 22. 21.
மாய்ப் படைத்து, உன் தமையனுக்குச் சந்ததியை

காரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சங்கதிகள் யாக்கோபு எத்தேர் கோபுரத்துக்கு வந்த துவக்கத்தில் சம்பவித்தது என்று எண்ணத்தகும்.

"அதுல்லாம்." அதுல்லாமின் கெபி தாவீது ராஜாவின் சரித்திரத்தோடே சம்பந்தப்பட்டிருக்கிறது (1 சாமு. 22: 1.). மேலும் (யோசு. 15: 35. 2 சாமு. 23: 13. 1 நாளா. 11: 15. 2 நாளா. 11: 7. மீகா. 1: 15ல் பார்க்க.), அது எபிரோனிலிருந்து பெலிஸ்தர் நாட்டுக்குச் செல்லும் பெரும்பாதையில் ஏலா என்ற பெரிய பள்ளத்தாக்கிலிருந்தது. யாக்கோபின் குமாரர் மேய்ச்சலுக்காக அந்த இடத்துக்குப் போனபோது யூதா என்பவன் ஈரா என்பவனோடே சிநேகம் பண்ணிக்கொண்டான்.

**2.** "கானானியனுடைய." இந்த வார்த்தை தர்கூம் என்ற புஸ்தகத்தில் வர்த்தகன் என்று திருப்பப்பட்டிருக்கிறது. தமிழிலும் நீதி. 31: 24லே அப்படியே அதைத் திருப்பியிருக்கிறது. சிமியோனும் ஒரு கானானிய ஸ்திரீயை விவாகம்பண்ணினான் (ஆதி. 46: 10.). ஆனால் அவ்வளவு பூர்வகாலத்தில் கானானியன் என்ற பதம் வர்த்தகனுக்குச் சரியான பதமாக உபயோகிக்கப்பட்டதென்பதைக் குறித்துச் சந்தேகமிருக்கிறது.

**5.** "கெசீபிலே." இது மீகா. 1: 14, 15ல் சொல்லப்பட்டிருக்கிற அக்சீபாயிருக்கலாம். அது அதுல்லாமுக்குச் சற்று வடக்கேயிருந்தது.

**8.** "உன் தமையனுக்குச் சந்ததியை உண்டாக்கு." இறந்துபோன சகோதரன் மனைவியை விவாகம் செய்வது மோசேயின்காலத்துக்கு முந்தின





9 உண்டாக்கு என்றான். — அந்தச் சந்ததி தன் [1]சந்ததி [1] உபா. 25. 6.
யாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே, அவன்
தன் தமையனுடைய மனைவியைச் சேரும்போது, தன்
தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் வித்
10 தைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான். — அவன்
செய்தது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்
ததினால், அவனையும் அவர் அழித்துப்போட்டார். —
அப்பொழுது யூதா, தன் குமாரனாகிய சேலாவும்
அவன் சகோதரர் செத்ததுபோலச் சாவான் என்று
அஞ்சி, தன் மருமகளாகிய தாமாரை நோக்கி: என்
குமாரனாகிய சேலா பெரியவனாகுமட்டும் நீ உன்
தகப்பன் வீட்டிலே [2]கைம்பெண்ணாய்த் தங்கியிரு [2] ரூத். 1. 13.
என்று சொன்னான்; அந்தப்படியே தாமார் போய்த்
[3]தன் தகப்பன் வீட்டிலே தங்கியிருந்தாள். [3] லேவி. 22. 13.

12 அநேகநாள் சென்றபின், சூவாவின் குமாரத்தியா
கிய யூதாவின் மனைவி மரித்தாள். யூதாவினுடைய
துக்கம் ஆறினபின், அவன் அதுல்லாம் ஊரானாகிய
தன் சிநேகிதன் ஈராவுடனே திம்னாவிலே தன் ஆடுகளை
13 மயிர்கத்தரிக்கிறவர்களிடத்திற்குப் போனான். — அப்
பொழுது: உன் மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர்
கத்தரிக்கத் [4]திம்னாவுக்குப் போகிறார் என்று தாமா [4] யோசு. 15. 10, 57. நியா. 14. 1.

வழக்கமாயிருந்தது. மோசே அந்த வழக்கத்தை ஸ்தாபித்துச் சட்டம் பிறப்பித்தான்.

**11.** **"சேலாவும் அவன் சகோதரர் செத்ததுபோலச் சாவான் என்று அஞ்சி."** யூதாவின் மக்கள் இருவரும் மரித்துப்போனதற்குக் காரணம் அவனுக்குத் தெரியாதிருக்கலாம். சேலாவும் அவர்களைப்போலவே மரித்துப்போவான் என்று அவன் அஞ்சினதினாலே தன் மருமகளாகிய தாமாரைப் பார்த்து, சேலா பெரியவனாகும் பரியந்தம் அவள் தன் தகப்பன்வீட்டில் விதவையாகப் போயிருக்கும்படி உத்தரவுபண்ணினான்.

**12.** "திம்னா." இந்தப் பேரையுடைய இடங்கள் இரண்டு இருந்தன (யோசு. 15: 10, 57.). ஒன்று பெத்லகேமுக்குச் சற்று மேற்கேயிருந்தது; மற்றது பெத்ஷிமேசுக்கு அப்பால் பெலிஸ்தருடைய எல்லையிலிருந்தது. இங்கே சொல்லப்பட்டிருக்கிற பட்டணம் பிந்தினதைக் குறிக்கும்.

**13.** "தம்முடைய ஆடுகளை." யூதாவுக்குச் சொந்தமாக ஆடுகளிருந்ததாக இதினால் அறிகிறோம்.

14 ருக்கு அறிவிக்கப்பட்டது. — சேலா பெரியவனாகியும்
தான் அவனுக்கு மனைவியாகக் கொடுக்கப்படவில்லை
என்று அவள் கண்டபடியால், தன் கைம்பெண்மைக்
குரிய வஸ்திரங்களைக் களைந்துபோட்டு, முக்காடிட்டுத்
தன்னை மூடிக்கொண்டு, திம்னாவுக்குப் போகிற
வழியிலிருக்கிற [1]நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந் [1] நீ. 7. 12.
15 தாள். — யூதா அவளைக் கண்டு, அவள் தன் முகத்தை
மூடியிருந்தபடியால், அவள் ஒரு வேசி என்று நினை
16 த்து, — அந்த வழியாய் அவளிடத்தில் போய், அவள்
தன் மருமகள் என்று அறியாமல்: நான் உன்னிடத்தில்
சேரும்படி வருவாயா என்றான். அதற்கு அவள்:
நீர் என்னிடத்தில் சேரும்படி, எனக்கு என்ன தரு
17 வீர் என்றாள். — அதற்கு அவன்: நான் மந்தையிலி
ருந்து [2]ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்புகிறேன் [2] எசே. 16. 33.
என்றான். அதற்கு அவள்: நீர் அதை அனுப்புமளவும்
18 ஒரு அடைமானம் கொடுப்பீரா என்றாள். — அப்
பொழுது அவன்: நான் உனக்கு அடைமானமாக
என்ன கொடுக்கவேண்டும் என்று கேட்டான். அத
ற்கு அவள்: உம்முடைய முத்திரைமோதிரமும் உம்

**14.** "நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்தாள்." எபிரெயுவில் "ஏனாயீமின் வாசலுக்கு முன்பாக" என்றிருக்கிறது. ஏனாயீம் என்பதற்கு "இரண்டு ஊற்றுகள்" என்றர்த்தம். 22-ம் வாக்கியத்திலே அந்த இடம் ஒரு ஊர் என்றும் அதில் தாமாரின் தகப்பனிருந்தான் என்றும் அறியலாம். அது யோசு. 15: 34ல் சொல்லிய ஏனாமாயிருக்கலாம். அது திம்னாவுக்கு ...ன்று மைலுக்குக் கிழக்கே அதுல்லாமிலிருந்து போகிற பூர்வீக பாதையி லிருந்தது.

**15.** "அவள் தன் முகத்தை மூடியிருந்தபடியால்." வேசிகள் தங்கள் முகத்தை மூடுகிறது வழக்கமல்லவென்று யூதவியாக்கியானிகள் எல்லாரும் ஒன்றுபடச் சொல்லுகிறார்கள். 21-ம் வசனத்தில் யூதா அவளைத் "தாசி" என்று அழைத்திருக்கிறான். "தாசி" என்பதற்கு "தேவ அடியாள்" அதாவது "தெய்வத்துக்குப் பிரதிஷ்டை...செப்பட்டவள்" என்று அர்த்தம். பெனிக் கேயருக்குள்ளும், பாபி...னியருக்குள்ளுந் தங்களைத் தெய்வங்களுக்குப் பிரதிஷ்டை யாக்கிக்கொ...ளும் ஸ்திரீகள் தங்களுடைய ஜீவகாலத்தில் ஒருதரம் பொருத்தனை நி...வேற்றுவார்களாம். தேவதைக்குப் பலிசெலுத்தும்படி பணயமாக ஒரு ஆட்டுக்குட்டி கொடுக்கப்படுமாம். தாமார் ஏர் என்பவனுடைய சுதந்த...த்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற வாஞ்சையும் நோக்கமு முடை...யவளாயிருந்தாள்.

**18.** "அடைமானமாக." தாமார் தனக்குப் பிந்தியகாலத்தில் அபாயம் நே...ராதபடிக்குத் தன்னிடத்தில் சாட்சியாக வைத்துக்கொள்ளும்படி அடைமானம் கேட்டாள்.





முடைய ஆரமும் உம்முடைய கைக்கோலும் கொடுக்க
வேண்டும் என்றாள். அவன் அவைகளை அவளுக்குக்
கொடுத்து, அவளிடத்தில் சேர்ந்தான்; அவள் அவ
19 னாலே கர்ப்பவதியாகி, — எழுந்துபோய், தன் முக்
காட்டைக் களைந்து, தன் கைம்பெண்மைக்குரிய வஸ்
20 திரங்களை உடுத்திக்கொண்டாள். — யூதா அந்த ஸ்தி
ரீயினிடத்தில் இருந்த அடைமானத்தை வாங்கிக்
கொண்டு வரும்படி அதுல்லாம் ஊரானாகிய தன்
சிநேகிதன் கையிலே ஒரு வெள்ளாட்டுக்குட்டியைக்
கொடுத்தனுப்பினான்; அவன் அவளைக் காணாமல், —
அவ்விடத்து மனிதரை நோக்கி: வழியண்டை நீரூற்று
...ள் அருகே இருந்த தாசி எங்கே என்று கேட்டான்;
அதற்கு அவர்கள்: இங்கே தாசி இல்லை என்றார்கள். —
22 அவன் யூதாவினிடத்தில் திரும்பிவந்து: அவளைக்
காணேன், அங்கே தாசி இல்லையென்று அவ்விடத்து
23 மனிதரும் சொல்லுகிறார்கள் என்றான். — அப்பொ
ழுது யூதா: இதோ, இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பி
னேன், நீ அவளைக் காணவில்லை; நமக்கு அவகீர்த்தி
வராதபடிக்கு, அவள் அதைக் கொண்டுபோனால்
...கட்டும் என்றான்.

24 ஏறக்குறைய மூன்றுமாதம் சென்றபின்பு: உன்
மருமகளாகிய தாமார் [1]வேசித்தனம்பண்ணினாள், [1] நியா. 19. 2. நூ. 3. 3.
அந்த வேசித்தனத்தினால் கர்ப்பவதியுமானாள் என்று
யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது யூதா:
அவளை வெளியே கொண்டுவாருங்கள், [2]அவள் சுட் [2] லேவி. 21. 9. உபா. 22. 21.

**21.** "தாசி எங்கே." எபிரெயுவில் "காதேசா" என்றிருக்கிறது. அதற்கு "பிரதிஷ்டையாக்கப்பட்டவள்" என்றர்த்தம்.

**23.** "நமக்கு அவகீர்த்தி வராதபடிக்கு." யூதா தான் செய்த காரியம் இலச்சை என்று அறிந்தான் என்பதை இதா... ...ிக்கலாம்.

**24.** "அவள் சுட்டெரிக்கப்படவேண்டும் என்...றான்." தாமார் என்பவள் நியாயப்படி சேலாவின் மனைவியாயிருந்தபடியால் யூதா குடும்ப அதிபதியாக விபசாரக் குற்றத்துக்கு அக்காலத்தோர் இடுந் தண்ட...யை அவள்பேரில் சுமத்தினான். பிந்தியகாலத்தில் அக்கினியில் தகிக்கும் ...ண்டனை ஒரு ஸ்திரீயையும் அவள் தாயையும் படைக்கிறவனுக்கும் (லேவி. 2... 14.), ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தனம் பண்ணினால் அவளுக்கும் (லேவி. 21: 9.) செலுத்தப்பட்டது. யூதா சொன்ன தீர்ப்பை வைத்துக்கொண்டு தாமார் ...ன் பவன் ஆசாரியகுலத்தைச் சேர்ந்தவர் என்று யூதவியாக்கியானிகள் சொல்லுகிறதுண்டு.

25 டெரிக்கப்படவேண்டும் என்றான்.—அவள் வெளியே
கொண்டுவரப்பட்டபோது, அவள் தன் மாமனிடத்
துக்கு அந்த அடைமானத்தை அனுப்பி: இந்தப்
பொருட்களை உடையவன் எவனோ அவனாலே நான்
கர்ப்பவதியானேன்; இந்த [1]முத்திரைமோதிரமும் இந்த
ஆரமும் இந்தக் கோலும் யாருடையவைகள் பாரும்
26 என்று சொல்லி அனுப்பினாள். — யூதா அவைகளைப்
பார்த்தறிந்து: [2]என்னிலும் அவள் நீதியுள்ளவள்;
அவளை என் குமாரனாகிய சேலாவுக்குக் கொடாமற்
போனேனே என்றான். [3]அப்புறம் அவன் அவளைச்
சேரவில்லை.

27 அவளுக்குப் பிரசவகாலம் வந்தபோது, அவள்
கர்ப்பத்தில் இரட்டைப் பிள்ளைகள் இருந்தன.—
28 அவள் பெறுகிறபோது, ஒரு பிள்ளை கையை நீட்டி
னது; அப்பொழுது மருத்துவச்சி அதின் கையைப்
பிடித்து, அதில் சிவப்புநூலைக் கட்டி, இது முதலாவது
29 வெளிப்பட்டது என்றாள். — அது தன் கையைத் திரு
ம்ப உள்ளே வாங்கிக்கொண்டபோது, அதின் சகோ
தரன் வெளிப்பட்டான். அப்பொழுது அவள்: நீ
மீறிவந்ததென்ன, இந்த மீறுதல் உன்மேல் நிற்கும்
என்றாள்; அதினாலே அவனுக்குப் [4]பாரேஸ் என்று
30 பேரிடப்பட்டது. — பிற்பாடு கையில் சிவப்பு நூல்
கட்டியிருந்த அவனுடைய தம்பி வெளிப்பட்டான்;
அவனுக்கு சேரா என்று பேரிடப்பட்டது.

[1] 18. வசை.
[2] 1 சாமு. 24. 17.
[3] யோபு. 31. 1. 32. சங். 13. 2. தீத். 2. 11, 12.
[4] எண். 26. 20. 1 நாளா. 2. 4. மத். 1. 3.

**25.** "**யாருடையவைகள் பாரும்.**" தாமார் தனக்குக் கொடுக்கப்பட்ட அடைமானத்தை யூதாவுக்கு அனுப்பினபோது அவன் தான் செய்யாமல் விட்டுவிட்ட குற்றத்தை அறிக்கையிட்டு அவளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடி பார்த்துக்கொண்டான்.

**29.** "**பாரேஸ்**" என்பதற்கு "தகர்ப்பு அல்லது மீறுதல்" என்றர்த்தம்.

**30.** "**சேரா**" என்பதற்கு "உதயமாகுதல்" என்றர்த்தம்.

படிப்பினை.

வச. 1—11.

(1) யாக்கோபுடைய குடும்பத்திலே அவன் பிள்ளைகளுக்குள் எவ்வளவு இழிவான காரியங்கள் நடந்திருக்கின்றன. யூதா தவறிப்போகிறான்; அவனுடைய மற்றப் பிள்ளைகளும் அப்படியே தவறினார்கள்.

(2) வாலிபர் தங்கள் தேக இச்சைகளை நிறைவேற்றும்படி உதவிசெய்கிற கள்ளச்சிநேகிதர் மிகுந்த இளப்பத்தையும் வருத்தத்தையும் அவர்களுக்கு உண்டாக்குகிறவர்களாயிருக்கிறார்கள்.





## 39. அதிகாரம்.

யோசேப்பு போத்திபாருடைய வீட்டிலே மேன்மைப்பட்டது. 7. போத்திபாருடைய மனைவியோடே விபசாரம்செய்யமாட்டேனென்று மறுத்தது. 13. அவள் அவன்மேல் பொய்யான குற்றம் சாட்டினது. 20. அவன் காவலில் வைக்கப்பட்டது. 21. தேவன் அங்கே அவனோடே இருந்தது.

யோசேப்பு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்
டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளு
க்கு அதிபதியுமாகிய [1]போத்திபார் என்னும் எகிப்து

[1] ஆதி. 37. 36. சங். 105. 17.

(3) வாலிபர் இளமையில் விவாகம்பண்ணுகிறது நல்லதென்றாலும், தேவசித்தத்துக்காக வேண்டி அப்படிச் செய்யவேண்டும்.

(4) தாய்தந்தைகள் தங்கள் பிள்ளைகளுடைய கெடுதலுக்குக் காரணமாயிருப்பதுமுண்டு.

(5) மனிதர் இரகசியத்தில் செய்கிற பாவங்களையுந் தேவன் கவனிக்கிறார். யாருடைய பாவங்கள் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்படாதிருக்கின்றனவோ அவர்கள் பாவங்கள் எல்லாம் உலகத்துக்குந் தேவதூதருக்கும் முன்பாக வெளியரங்கமாய் வாசிக்கப்படும்.

வச. 12—30.

(6) களியாட்டும் விருந்தும் ஆகாத உறவுகளுந் தேக இச்சைகளை நிறைவேற்றும்படி வகை கருவிகளாயிருக்கின்றன. அப்போது ஞானிகளுங்கூட சாதாரண புத்தியற்றவர்களாய்ப் போவதுண்டு. சோதனைக் குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணக்கடவோமாக.

(7) வரப்போகிற காரியம் இன்னதென்று அறியாமல் மோகத்துக்கு இடங்கொடுக்கிறவர்கள் தப்பாமல் வெட்கத்துக்குள்ளாவார்கள்.

(8) மற்றவர்களைப்பற்றிய அதர்மமான எண்ணங்கொள்வது சரியல்ல. அவர்கள் அந்த விஷயத்தில் நம்மைவிட யோக்கியராயிருக்கலாம்.

(9) யூதா தன் தகப்பனை வஞ்சிக்கக் கருவியாயிருந்தான். இப்போது அவன் தன் மருமகளால் வஞ்சிக்கப்பட்டான்.

(10) ஒரு பாவத்துக்குக் காரணமாயிருக்கிறவர்கள் அந்தப் பாவத்தை மற்றவர்களிடத்தில் கண்டுபிடிக்கையில் அவர்கள்பேரில் அதற்காக அதிகமான தண்டனையைக் கூறுகிறவர்களாயிருக்கிறார்கள்.

(11) நம்முடைய மீட்பர் தாமார்வழியாய்ப் பாரேசின் வம்சத்தில் பிறந்து மாசற்றவராயிருந்தார்.

கவனிப்பு:—இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட பாவங்களுக்குள் அகப்படாதபடிக்குக் கிறிஸ்தவர்கள் அனைவருந் தங்கள் சரீரங்களைப் பரிசுத்த ஆவியானவர் வாசஞ்செய்யும் ஆலயங்களென்றுணர்ந்து அவருக்கென்றே அவைகளைப் பிரதிஷ்டைசெய்து பரிசுத்தமாகப் பேணிக்கொள்ளவேண்டும். மாம்ச இச்சைகளுக்கு அடுத்த சோதனைகள் நேரிடும்பொழுதெல்லாம், "உங்கள் சரீரமானது பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்று அறியீர்களா" என்கிற வசனத்தைத் தியானிப்பது நல்லது.

39. அதிகாரம்.

**1.** "**போத்திபார்.....வாங்கினான்.**" ரூபன் சிமியோன் லேவி என்பவர்கள் தங்கள் பாவத்தினாலே சிரேஷ்ட புத்திரபாகத்தை இழந்துபோனதால், மேசியா வம்சம் யூதாவழியாய் வரும்படி நேரிட்டது. ஆகவே யூதாவின் தலை

சேர்த்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த
2 இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். — [1]கர்த்தர் [1] 1 சாமு. 16. 18. அப். 7. 10.
யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தி
உள்ளவனானான்; அவன் எகிப்தியனாகிய தன் எஜ
3 மானுடைய வீட்டிலே இருந்தான். — கர்த்தர் அவ
னோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவை
யும் கர்த்தர் [2]வாய்க்கப் பண்ணுகிறார் என்றும், அவன் [2] சங். 1. 7.
4 எஜமான் கண்டு; — யோசேப்பினிடத்தில் [3]தயவுவை [3] 1 சாமு. 16. 2.
த்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டு
க்கு [4]விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான [4] ஆதி. 24.
யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான். —
5 அவனைத் தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லா
வற்றிற்கும் விசாரணைக்காரனாக்கினது முதற்கொண்டு,
கர்த்தர் யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்

முறை அட்டவணையை மோசே எடுத்துக்காட்டினபின்பு யோசேப்பின் சரித்திரத்தை எழுதிக்கொண்டுபோகிறான். யோசேப்பின் நிமித்தமாய் இஸ்ரவேலர் எகிப்துக்குப் போனார்கள். யோசேப்பின் ஜீவகாலம் எகிப்தில் இரண்டு பாகமாயிருந்தது. முதல் பதின்மூன்று வருஷங்களில் அவன் அடிமையாக இருந்தான். பின்பு எழுபது வருஷங்களாக எகிப்துதேசம் அனைத்துக்கும் அதிகாரியான துரையாயிருந்தான். அவன் அடிமையாயிருந்தகாலத்தில் பொய்யாய்க் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைச்சாலையில் போடப்பட்டான். ஆனால் அதுவே அவன் உயர்வுக்குப் படியாக இருந்தது. அவன் சிறைச்சாலையிலிருந்தபோது பார்வோனுடைய இரண்டு அதிபதிகள் கண்ட சொப்பனங்களை விவரித்து அதற்கு இரண்டுவருஷமானபின்பு பானபாத்திரக்காரரின் தலைவனுடைய நற்சாட்சியின்பேரில் பார்வோன் முன்பாக வரவழைக்கப்பட்டான்.

2. **"கர்த்தர் யோசேப்போடே இருந்தார்."** யோசேப்பு சிறுவயது முதல் தன் தகப்பனுடைய உத்தமமாதிரியைப் பின்பற்றி கர்த்தருடைய பிள்ளைக்கேற்றவண்ணமாய் நடந்தான். அவன் தன் தகப்பன் இருந்த இடத்துக்கு வெகு தொலையில் இப்போது விற்கப்பட்டிருந்தபோதிலும் அங்கேயுந் தேவகரம் அவனை நடத்திக்கொண்டுவந்தது. அவன் எல்லாக்காரியங்களையும் உண்மையோடும், சுறுசுறுப்போடும் செய்யும்படிக்கேற்ற ஞானத்தையும் பெலனையுங் கர்த்தர் அனுக்கிரகஞ்செய்தார். சோதனையை வெல்லவும், உபத்திரவத்தைத் தாங்கவும் அவர் அவனுக்கு வரங்களைக் கொடுத்தார்.

4. **"அவனைத்....தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி."** போத்திபார் தன் வேலைக்காரரை நடத்தவும் அவன் பண்ணைக்காரியங்களை மேற்பார்க்கவும் யோசேப்பைப் பிரதான விசாரணைக் கர்த்தனாக்கினான். யோசேப்பு இப்படிப்பட்ட அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டதுமுதல் போத்திபாரின் வீடு மிகவும் விசேஷித்தவகையாய் ஆசீர்வாதம் பெற்றுவந்தது.





டை [1]ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவ [1] ஆதி. 30. 27.
னுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தரு
டைய ஆசீர்வாதம் இருந்தது. — ஆகையால், அவன்
தனக்கு உண்டானதெல்லாம் யோசேப்பின் கையிலே
ஒப்புக்கொடுத்துவிட்டு, தான் புசிக்கிற போசனம்
தவிர தன்னிடத்திலிருந்த மற்றொன்றைக்குறித்தும்
விசாரியாதிருந்தான். யோசேப்பு [2]அழகான ரூபமும் [2] 1 சாமு. 16. 12.
சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான்.
7 சிலகாலம் சென்றபின், அவனுடைய எஜமானின்
மனைவி யோசேப்பின்மேல் கண்போட்டு, [3]என்னோடே [3] 2 சாமு. 13. 11.
8 சயனி என்றாள். — அவனோ தன் எஜமானுடைய மனை
வியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி:
இதோ, வீட்டிலே என்னிடத்தில் இருக்கிறவைகளில்
யாதொன்றைக்குறித்தும் என் ஆண்டவன் விசாரியா
மல், தமக்கு உண்டான எல்லாவற்றையும் என்

6. **"போசனம் தவிர."** எபிரெயரால் சமைக்கப்படும் போஜனத்தை எகிப்தியர் சாப்பிடமாட்டார்கள். என்றாலும் இந்த வாக்கியத்தின் கருத்து என்னவென்றால் போத்திபார் என்பவன் அந்தவேளை தனக்கு வேண்டிய ஆகாரத்தைக்குறித்து விசாரிப்பானேயல்லாமல் தன் அன்றன்றுள்ள மற்றக் காரியங்களைப்பற்றி அவன் கவலைகொள்ளவில்லை என்பதே. யோசேப்பின் பேரில் அவனுக்கு அவ்வளவு பூரண நம்பிக்கை இருந்ததென்பதற்கு இது குறிப்பாயிருக்கிறது.

**"யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான்."** யோசேப்பின் தாய் ராகேலைப்பற்றியும் இப்படியே சொல்லியிருக்கிறது (ஆதி. 29: 17.). இப்படிப்பட்ட சரீர அழகு மோசே, தாவீது, தானியேல் முதலியவர்களுக்கும் இருந்தது. இந்த மகாத்துமாக்கள் மகா தேவபக்தராய் விளங்கிவந்தார்கள்.

7. **"அவனுடைய எஜமானின் மனைவி."** எகிப்திய ஸ்திரீகள் வீட்டில் அடைபட்டிருக்கிறவர்கள்போல இராமல் வெளியேறி நடமாடுகிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் வெளியே திரிகையில் முக்காடிட்டுக்கொண்டு போகிறதுமில்லை.

8. **"இணங்காமல்."** யோசேப்பு தன் சரீரத்தையும் ஆத்துமத்தையும் அசுசிப்படுத்த மனதில்லாமல் (நீதி. 6: 32. 1 தெச. 4: 3, 5.), தன் எஜமானுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்யாமலுந் தன் தேவனுக்கு விரோதமாய்ப் பாவத்தை நடப்பியாமலுமிருக்கும்படி மன திர்ணயமுள்ளவனாயிருந்தான். கர்த்தரும் தமது கிருபையால் அவனைப் பலப்படுத்திவந்தார்.

9 கையில் ஒப்பித்திருக்கிறார்.—இந்த வீட்டிலே என்
னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியா
யிருக்கிறபடியால் உன்னைத்தவிர வேறொன்றையும்
அவர் எனக்கு விலக்கிவைக்கவில்லை; இப்படியிருக்க,
நான் இத்தனை [1]பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, [1] லேவி. 20. 10. நீதி. 6. 29, 32.
தேவனுக்கு [2]விரோதமாய்ப் பாவம்செய்வது எப்படி [2] ஆதி 20. 6. லேவி. 6. 2. 2 சாமு. 12. 13. சங். 51. 4.
10 என்றான்.—அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே
இப்படிப் பேசிக்கொண்டுவந்தும், அவன் அவளுடனே
சயனிக்கவும் அவளுடனே இருக்கவும் சம்மதிக்க
11 வில்லை.—இப்படியிருக்கும்போது, ஒருநாள் அவன்
தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள் போனான்;
வீட்டு மனிதரில் ஒருவரும் வீட்டில் இல்லை.—
12 அப்பொழுது அவள் [3]அவனுடைய வஸ்திரத்தைப் [3] நீதி. 7. 13 மு.
பற்றிப் பிடித்து, என்னோடே சயனி என்றாள். அவ
ன் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளி
13 யே ஓடிப்போனான்.—அவன் தன் வஸ்திரத்தை அவள்
கையிலே விட்டு வெளியே ஓடிப்போனதை அவள்
14 கண்டபோது,—அவள் தன் வீட்டு மனிதரைக் கூப்
பிட்டு: பாருங்கள், எபிரெய மனுஷன் நம்மிடத்தில்
சரசம்பண்ணும்படிக்கு அவனை நமக்குள் கொண்டு
வந்தார், அவன் என்னோடே சயனிக்கும்படிக்கு

**10.** "நித்தம் நித்தம்." யோசேப்புக்கு நாடோறும் பலத்த சோதனைகள் நேரிட்டும் அவன் அதினின்று விசேஷித்தவனையாய்த் தப்புவிக்கப்பட்டான். அக்கினியின் மணம்முதலாய் அவனில் வீசவில்லை என்று சொல்லத்தக்கதாய் அச்சோதனைக்கு அவன் இடங்கொடுக்கவேயில்லை.

**11.** "தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள் போனான்." இந்தத் தருணத்தில் ஒரு உற்சவ மிருந்ததாகவும் அதற்கு வேலைக்காரர் போய்விட்டதாகவும் யோசேப்பு என்னுஞ் சரித்திரக்காரன் சொல்லுகிறான். ஆனால் பதினாலாம் வாக்கியத்திலே அவள் தன் வீட்டுமனிதரைக் கூப்பிட்டுச் சாட்சி வைத்தாள் என்று வாசிப்பதால் யோசேப்பு எழுதியிருப்பது சரியெனத் தோன்றுகிறதில்லை.

**14.** "அவனை நமக்குள் கொண்டுவந்தார்." போத்திப்பாரின் மனைவி தன் புருஷன்பேரில் குற்றஞ் சுமத்துகிறாள். தான் கெட்டவளாயிருக்க உத்தம இருதயத்தோடே இருந்த யோசேப்பையுந் தன் புருஷனையுங் குற்றவாளிகளாக்குகிறாள்.





என்னிடத்தில் வந்தான்; நான் மிகுந்த சத்தமிட்டுக்
15 கூப்பிட்டேன்.—நான் சத்தமிட்டுக் கூப்பிடுகிறதை
அவன் கேட்டு, தன் வஸ்திரத்தை என்னிடத்தில்
விட்டு, வெளியே ஓடிப்போய்விட்டான் என்று
16 சொன்னாள்.—அவனுடைய எஜமான் வீட்டுக்கு வரு
மளவும் அவனுடைய வஸ்திரத்தைத் தன்னிடத்தில்
17 வைத்திருந்து,—அவனை நோக்கி: [1]நீர் நம்மிடத்தில் [1] யாத். 23. 1. சங். 37. 14: 120. 3. நீதி. 12. 19.
கொண்டுவந்த அந்த எபிரெய வேலைக்காரன் சரசம்
18 பண்ணும்படிக்கு என்னிடத்தில் வந்தான்.—அப்
பொழுது நான் சத்தமிட்டுக் கூப்பிட்டேன், அவன்
தன் வஸ்திரத்தை என்னிடத்தில் விட்டு வெளியே
19 ஓடிப்போனான் என்றாள்.—உம்முடைய வேலைக்கா
ரன் எனக்கு இப்படிச் செய்தான் என்று தன் மனைவி
தன்னோடே சொன்ன வார்த்தைகளை அவனுடைய எஜ
மான் கேட்டபோது, [2]அவனுக்குக் கோபம் மூண் [2] நீதி. 6. 34, 35.
20 டது.—யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து
[3]ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர் [3] ஆதி. 41. 14. சங். 105. 18.
கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்
தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்.

**16.** "அவனுடைய வஸ்திரத்தைத் தன்னிடத்தில் வைத்திருந்து." யோசேப்பின் வஸ்திரம் இரண்டாவதாகப் பிடுங்கப்பட்டது. யோசேப்பு தன் மானத்தைக் குலைப்பதைவிட தன் வஸ்திரத்தைத் தன் சத்துருவின்கையில் விட்டுவிட்டு அதற்காக நேரிடும் எந்தத் தண்டனையையுஞ் சகிப்பதே நலமென்று எண்ணினான்.

**19.** "அவனுக்குக் கோபம் மூண்டது." போத்திபார் ஒருதலைப்பட்சமான வாக்குமூலத்தைக் கேட்டுத் தீர்ப்புச்செய்தான். அநேகர் தங்கள் மனைவிகளால் வஞ்சிக்கப்பட்டு நியாயமில்லாதகாரியங்களைச் செய்து அதற்காக மிகவுஞ் சங்கடங்களை அநுபவிப்பதுண்டு.

**20.** "சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான்." இந்தச் சிறைச்சாலையில் ராஜாவின் சிறைகள் வைக்கப்பட்டிருப்பார்கள். அங்கே போத்திபார் உத்தியோகமுறையாய்க் குடியிருக்கும்படிக்கான ஒரு இடமிருந்தது. அந்தச் சிறைச்சாலையை மேற்பார்க்கும்படி ஒரு உத்தியோகஸ்தனும் இருந்தான். யூத வியாக்கியானிகள், போத்திபார் என்பவன் யோசேப்பின் பேரில் சாட்டப்பட்ட குற்றத்தை நம்பவில்லை என்றும் அப்படி நம்பியிருந்தால் அவனைக் கொன்றுபோட்டிருப்பான் என்றுஞ் சொல்லுகிறார்கள். என்றாலும் சங். 105: 18ல் சொல்லியபடி யோசேப்பு சிறைச்சாலையில் போடப்

21 கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல்
கிருபைவைத்து, [1]சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு
22 அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார். — சிறைச்சா
லைத் தலைவன் சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவ
ரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான்; அங்கே
அவர்கள் செய்வதெல்லாவற்றையும் யோசேப்பு
23 செய்வித்தான். — கர்த்தர் அவனோடே இருந்தபடி
யினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்
தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமா
யிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத்
தலைவன் விசாரிக்கவில்லை.

[1] யாத். 12. 36. சங். 106. 46. நீதி. 16. 7. தானி. 1. 9. அப். 7. 10.

பட்ட ஸ்தலத்தில் கடினமாக நடத்தப்பட்டான். சிறைகளை விசாரிக்கும்படி போத்திபார் என்பவன் பிந்தி யோசேப்புக்கு உத்தரவு கொடுத்ததைக் கவனிக்கையில் யோசேப்பு குற்றமற்றவன் என்று அவன் எண்ணினதாகத் துலங்குகிறது.

### படிப்பினை.

வச. 1—10.

(1) சத்துருக்கள் நம்முடைய புறம்பான ஆடையாபரணங்களை எடுத்துக்கொண்டாலும், உள்ளான நம்முடைய வரங்களை அபகரித்துக்கொள்வது கூடாதகாரியம். அவர்கள் நம்மை நம்முடைய இனபந்துக்களைவிட்டு விலக்கலாம். ஆனால் கர்த்தரின் சமுகத்தைவிட்டு நம்மை விலக்குவது அவர்களால் ஏலாது. உலக நன்மைகளை நாம் அநுபவிக்கும்படிக்கும் நாம் சுயாதீனராயிராதபடிக்குஞ் சிறைச்சாலையில் அடைத்துவைக்கலாம். ஆனால் கிருபையின் ஆசனத்தினின்று நம்மை விலக்குவது அவர்களால் ஆகாது.

(2) தேவபக்தியுள்ளவன் உண்மையுஞ் சுறுசுறுப்பு முள்ளவனாய் விளங்குவான். கர்த்தர் யாரிடத்தில் பிரியமாயிருக்கிறாரோ அவர்கள் அந்நியர் நடுவிலிருந்தாலும் அங்கேயும் அவர்களுக்குப் பட்சம் பாராட்டும்படி அங்குள்ளவர்களின் மனதை இளக்குவார்.

(3) தாழ்ந்த ஸ்திதியிலே பொறுமையோடே இருந்து உத்தமமாய் நடந்துகொள்ளுகிறவன் ஏற்றகாலத்தில் முன்னுக்குவந்து நம்பிக்கைக் குரித்தானவனாவான்.

(4) இச்சை வளர்ந்தால் அது பாவத்தைக் கர்ப்பந்தரிக்கும். மற்றவர்களைப் பாவத்துக்கு இழுக்கிறவர்கள் அவர்களுடன் இசையாதவர்களுக்குக் கொடிய துன்பமாயிருப்பார்கள்.

(5) வாலிபன் வெளித்தனத்துக்கு விலகி நடக்கடவன். சோதனையான இடத்தைவிட்டு விலகுவது அவனுக்கு நன்மை.

வச. 11—23.

(6) சாத்தான் நம்மைப் பாவத்தில் விழத்தட்டக் கூடாதிருக்கையில் நம்மை வருத்தப்படுத்தும்படி பார்ப்பான்.

(7) நாம் தீமைசெய்து பாடனுபவிப்பதிலும் நன்மைசெய்து பாடனுபவிப்பதே நலம்.





## 40. அதிகாரம்.

பார்வோனுக்குப் பானங்கொடுக்கிறவனும் அப்பஞ்சுடுகிறவனும் காவலில் வைக்கப்பட்டது. 4. அங்கே யோசேப்பு அவர்களை விசாரணைசெய்தது. 5. அவன் அவர்கள் இருவருடைய சொப்பனங்களுக்கும் பயன்சொன்னது. 20. அவன் சொன்னபடி அவைகள் சம்பவித்தது. 23. பானங்கொடுக்கிறவன் நன்றியறியாமல் யோசேப்பை மறந்தது.

இந்த நடபடிகளுக்குப் பின்பு, எகிப்து ராஜாவுக்
குப் [1]பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் எகிப்து ரா
ஜாவாகிய தங்கள் ஆண்டவனுக்குக் குற்றம் செய்தார்

[1] நெகே. 1. 11.

(8) ஆனாலும் இக்காலத்திலே சுத்தமான மனச்சாட்சியுந் தேவசமுகமும் நம்மைத் தாங்குகிறவைகளாயிருக்கின்றன. தேவன் ஏற்றவேளையில் நம்முடைய நீதி பட்டப்பகலைப்போல் பிரகாசிக்கும்படி செய்வார்.

(9) உபத்திரவங்களை நாம் எத்தனைக்குப் பொறுமையாய்ச் சகிக்கிறோமோ அத்தனைக்கு அதன் கசப்பு நமக்குக் குறைவாய்க் காணப்படும்.

(10) உபத்திரவங்களைத் தேவன் தம்முடைய பிள்ளைகளின் மகிமைக்கு ஏதுக்களாக வைத்திருக்கிறார்.

(11) எல்லாவற்றிலும் முக்கியமாய் யோசேப்பு முன்னடையாளமாயிருந்த இயேசுவை நோக்கிப் பார்ப்போமாக. அவர் பாடுபட்டபோது பயமுறுத்தவில்லை. அவர் சிலுவையின் மரணத்தைச் சகித்து மகிமையில் பிரவேசித்தார். நாமும் அவருடைய திருமாதிரியைப் பின்பற்றி நடந்து அவருடைய மகிமையில் பிரவேசிப்போமாக.

## 40. அதிகாரம்.

1. "பானபாத்திரக்காரன்." பத்தாம் வாக்கியத்தினால் எகிப்தின் ராஜாக்கள் திராட்சரசஞ் சாப்பிட்டுவந்தார்கள் என்றறியலாம். "எகிப்தில் திராட்சச்செடி"யில்லாததால் எகிப்தியர் வாற்கோதுமையினால் செய்யப்பட்ட ஓர் வகைப் பானத்தை பருகிவந்தார்கள்" என்று எரோதோத்து என்னுஞ் சரித்திரக்காரன் சொல்லியிருப்பதை வைத்துக்கொண்டு சில நுட்பசாஸ்திரிகள் இவ்வாகமம் மோசேயினால் எழுதப்படவில்லை என்று சாதிப்பதுண்டு. ஆனால் மேற்படி சரித்திரக்காரன் "எகிப்தின் பூசாரிகளுக்குத் திராட்சரசம் கொடுக்கப்பட்டுவந்ததாகவும்" "பலியாகச் செலுத்தப்பட்ட மிருகத்தின்மேல் திராட்சரசம் வார்ப்பிக்கப்பட்டுவந்ததாகவும்" எழுதியிருக்கிறான். மேலும் யோசேப்பின்காலத்துக்கு முந்தியே பெனி—எசனிலுள்ள கல்லறைகளிலும் பிரமித் கோபுரங்களிலும் திராட்சச்செடிகள் படர்ந்துபோகிற பாவனையாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதை நாம் அறிகையில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற திராட்சரசத்தைப்பற்றிய சங்கதி உண்மையுள்ளதென்று சொல்லலாம்.

"சுயம்பாகி." தர்கூம் என்ற ஆகமத்தில் பானபாத்திரக்காரனும் சுயம்பாகியும் ஒன்றுகூடி ராஜாவின் போசனத்திலும் பானத்திலும் நஞ்சு கலக்கும்படி ஆலோசித்ததாகச் சொல்லியிருக்கிறது.

2 கள். — பார்வோன் [1]தன் பானபாத்திரக்காரரின் தலை — [1] நெ.16. 14: 19. 19.
வனும் சுயம்பாகிகளின் தலைவனும் ஆகிய இவ்வி
ரண்டு பிரதானிகள்மேலும் கடுங்கோபங்கொண்டு,—
3 அவர்களை யோசேப்பு வைக்கப்பட்டிருந்த இடமும்
தலையாரிகளின் அதிபதியின் வீடுமாகிய [2]சிறைச் — [2] ஆதி. 39.20,23.
சாலையிலே காவல்பண்ணுவித்தான்.

4 தலையாரிகளின் அதிபதி அவர்களை விசாரிக்கும்
படி யோசேப்பின் வசத்தில் ஒப்புவித்தான்; அவன்
அவர்களை விசாரித்துவந்தான்; அவர்கள் அநேகநாள்
காவலில் இருந்தார்கள்.

5 எகிப்து ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனும் சுயம்
பாகியுமாகிய அவ்விரண்டுபேரும் சிறைச்சாலையில்
இருக்கும்போது, ஒரே ராத்திரியிலே வெவ்வேறு
6 பொருள்கொண்ட [3]சொப்பனம் கண்டார்கள்.—கால — [3] யோபு. 33. 15, 16.
மே யோசேப்பு அவர்களிடத்தில் போய், அவர்களைப்
பார்க்கும்போது, அவர்கள் [4]கலங்கியிருந்தார்கள்.— [4] தானி. 4, 5.
7 அப்பொழுது அவன் தன் எஜமானுடைய வீட்டில்
தன்னோடே காவல் பண்ணப்பட்டிருந்த பார்வோனு
டைய பிரதானிகளை நோக்கி: உங்கள் முகங்கள் இன்று
[5]துக்கமாயிருக்கிறது என்ன என்று கேட்டான்.— [5] நெகே. 2.2.
8 அதற்கு அவர்கள்: சொப்பனம் கண்டோம், அதற்கு
அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை என்றார்
கள். அதற்கு யோசேப்பு: [6]சொப்பனத்துக்கு அர்த் — [6] ஆதி. 41. 16. தானி. 2.11, 28.
தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா? அவைகளை
என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்.

**3.** “தலையாரிகளின் அதிபதியின் வீடு.” இந்த அதிபதி போத்திப்பார் என்பவனே. பானபாத்திரக்காரனையும் சுயம்பாகியையும் விசாரிக்கும்படி அவன் யோசேப்பை ஏற்படுத்தினதைக் கவனிக்கையில், யோசேப்பு குற்றமற்றவனாயிருந்தானென்று அவன் அறிந்துகொண்டதாகத் துலங்குகிறது. பூர்வகாலத்தில் எகிப்திலுள்ள மனைவிகள் புருஷனுடைய ஆஸ்திகளுக்குச் சுதந்தரவாளிகளாயிருந்ததால் அஞ்சப்படத்தக்கவர்களாயிருந்தார்கள். ஆதலால் போத்திப்பார் தன் மனைவிக்கு விசனத்தை மூட்ட மனதில்லாதபடி இருந்தான் என்று நாம் எண்ணவேண்டியது.

**8.** “அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனும் இல்லை.” சொப்பனங்களை வியார்த்திசெய்யும்படி பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கு மந்திரவாதிகள் என்றும் சாஸ்திரிகள் என்றும் பேரிருந்தது (ஆதி. 41: 8.). பானபாத்திரக்காரனுஞ் சுயம்பாகியுஞ் சிறைச்சாலையில் அடைபட்டிருந்ததால் தங்கள் சொப்பனங்களின் பொருளை அறிய மேற்படியார்கள் அண்டைக்குப் போகக்கூடாத நிலைமையிலிருந்தார்கள். யோசேப்பு அவ்வகைக் கல்விப்பயிற்சி உள்ளபடி பிற





9 அப்பொழுது பானபாத்திரக்காரரின் தலைவன் யோ
சேப்பை நோக்கி: என் சொப்பனத்திலே [1]ஒரு — [1] [illegible] 7. 13.
திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்கக்கண்
10 டேன்.—அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கொடி
கள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதில்
பூக்கள் மலர்ந்திருந்தது; அதின் குலைகள் பழுத்த பழங்
11 களாயிருந்தது.—பார்வோனுடைய பாத்திரம் என்
கையிலே இருந்தது; நான் அந்தப் பழங்களைப் பறித்து,
அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து,
அந்தப் பாத்திரத்தைப் பார்வோனுடைய கையிலே
கொடுத்தேன் என்று, தன் சொப்பனத்தைச் சொன்
12 னான்.—[2]அதற்கு யோசேப்பு: அந்த மூன்று கொடிக — [2] ஆதி. 41. 12, 25. தானி. 2. 36.
13 ளும் மூன்று நாளாம்.—மூன்று நாளைக்குள்ளே [3]பார் — [3] 2 இரா. 25. 27. எரே. 52. 31.
வோன் உன் தலையை உயர்த்தி, உன்னை மறுபடியும்
உன் நிலையிலே நிறுத்துவார்; முன்னே அவருக்குப்
பானங்கொடுத்துவந்த வழக்கத்தின்படி பார்வோனின்
14 பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பாய்;—இது
தான் அதின் அர்த்தம் என்று சொன்னதும் அன்றி,
நீ வாழ்வடைந்திருக்கும்போது, [4]என்னை நினைத்து, — [4] 1 சாமு. 20. 14, 15. 1 இரா. 2. 7. லூக். 23. 42.
[5]என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார் — [5] யோசு. 2. 12.
வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை
15 விடுதலையாக்கவேண்டும்.—நான் எபிரெயருடைய

யோசனையுள்ளதல்ல, சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியது என்று விளங்கினான்.

**11.** “பாத்திரத்தில் பிழிந்து.” புளூற்றார்க் என்ற சரித்திரக்காரன், எகிப்தியர் இசம்மெத்திகூஸ் என்பவன் காலத்துக்கு முந்தி திராட்சரசங் குடித்ததுமில்லை; தேவர்களுக்கு அதைப் பானகாணிக்கையாய்ப் படைத்ததுமில்லை என்று எழுதியிருக்கிறான். ஆனால் அவன் பார்த்த ஒரு நாட்டின் வழக்கத்தைக்கொண்டு மற்றப்பாகத்திலும் அப்படியே நடந்துவந்ததென்று சாதிக்க இடமில்லை (1. வசனம் வியாக்கியானம் பார்க்க). பார்வோன் ராஜா திராட்சப்பழத்திலிருந்து உடனே பிழிந்த இரசத்தைச் சாப்பிட்டுவந்திருக்கலாம்.

**15** “எபிரெயருடைய தேசத்திலிருந்து.” யாக்கோபின் குடும்பத்தாருக்குக் கானானிலே எபிரோன், சீகேம், பெயெர்செபா முதலிய இடங்களில் குடியிருப்புகளிருந்தன. எபிரெயன் என்ற பேர் ஆபிரகாமின் காலத்திலும் வழங்கப்பட்டது. ஆபிரகாம் எகிப்துக்கு வந்ததினாலும் எகிப்தியரானவர்கள் எத்தியர் கானானியர்முதலிய கோத்திரத்தாரோடே வியாபாரமுதலியவற்றில் சம்பந்தப்பட்டிருந்ததாலும் எபிரெயன் என்கிற பேரை அவர்கள் ஏற்கெனவே அறிந்திருக்கலாம்.

தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்;
என்னை இந்தக் காவல்கிடங்கில் வைக்கும்படிக்கும்
நான் [1]இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை என்றும் [1] ஆதி. 39. 20. ஏசா. 59. 3, 4. தானி. 6. 22.
சொன்னான்.

16 அர்த்தம் நன்றாயிருக்கிறது என்று சுயம்பாகிகளின்
தலைவன் கண்டு, யோசேப்பை நோக்கி: நானும் என்
சொப்பனத்தில் மூன்று வெள்ளைக்கூடைகள் என் தலை
17 யின்மேல் இருக்கக்கண்டேன்; — மேற்கூடையிலே
பார்வோனுக்காக சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்
களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது; என் தலையின்
மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து
18 பட்சித்தது என்றான். — அதற்கு யோசேப்பு: அந்த
19 மூன்று கூடைகளும் மூன்று நாளாம். — இன்னும்
மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்
த்தி, உன்னை மரத்திலே தூக்கிப்போடுவார்; அப்பொ
ழுது பறவைகள் உன் மாம்சத்தைத் தின்னும், இது
தான் அதின் அர்த்தம் என்று சொன்னான்.

20 மூன்றாம்நாள் பார்வோனுடைய [2]ஜந்மநாளாயி [2] மத். 14. 6. மாற். 6. 21.
ருந்தது; அவன் தன் ஊழியக்காரர் எல்லாருக்கும்
விருந்து பண்ணி, பானபாத்திரக்காரருடைய தலை
வன் தலையையும் சுயம்பாகிகளுடைய தலைவன் தலை
யையும் தன் உத்தியோகஸ்தரின் நடுவே உயர்த்தி, —
21 பானபாத்திரக்காரரின் தலைவனைப் பானங்கொடுக்கிற
தன் உத்தியோகத்திலே மறுபடியும் வைத்தான்; அந்
தப்படியே அவன் பார்வோனுடைய கையிலே [3]பாத் [3] நெகே. 2. 1.

“களவாய்க் கொண்டுவரப்பட்டேன்.” யோசேப்பு தான் சுயாதீனன் என்பதையுங் கபடாய் தான் அடிமையாக விற்கப்பட்டிருக்கிறேன் என்பதையும் எகிப்தியருக்குக் குறித்து உரைத்துத் தனக்கு அநுகூலம் காட்டும்படி இப்படிச் சொன்னான். தன் சகோதரரால் விற்கப்பட்டதாக அவன் அறிவிக்கிறதாயிருந்தால் அது அவனுடைய விஷயத்திற்கு நன்றாயிருக்கமாட்டாது. மேலும் பெருந்தன்மையுடையவர்கள் தங்கள் இனபந்துக்களுக்குக் கனக்குறைச்சலான காரியங்களைக்குறித்து மற்றவர்களிடத்தில் சொல்லமாட்டார்கள்.

**20.** “ஜந்மநாளாயிருந்தது.” பார்வோனின் ஜந்மநாள் கொண்டாடப்பட்டபோது யோசேப்பு, வியார்த்திசெய்தபடி பானபாத்திரக்காரன் தன் உத்தியோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டான். சுயம்பாகியோ தூக்கிப்போடப்பட்டான். ஏரோதின் ஜந்மநாளில் யோவான்ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டான்.





22 திரத்தைக் கொடுத்தான். — சுயம்பாகிகளின் தலைவ
னையோ தூக்கிப்போட்டான்: யோசேப்பு அவர்க
ளுக்குச் சொன்ன அர்த்தத்தின்படியே சம்பவித்தது. —
23 ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்
பை நினையாமல் [1]அவனை மறந்துவிட்டான். [1] யோபு. 19. 14. சங். 31. 12. பிர. 9. 15, 16. ஆமோ. 6. 6.

## 41. அதிகாரம்.

1. பார்வோன் இரண்டு சொப்பனங்கண்டது. 25. யோசேப்பு அவைகளை வியாக்கியானம்பண்ணியது. 33. அவன் பார்வோனுக்கு யுக்தி சொல்லியது. 38. யோசேப்பு முன்னுக்கு வந்தது. 50. அவனுக்கு மனாசே எப்பிராயீம் என்னும் இரண்டு குமாரர் பிறந்தது. 53. பஞ்சம் தொடங்கினது.

1 இரண்டு வருஷம் சென்றபின்பு, பார்வோன் ஒரு
[2]சொப்பனங் கண்டான்; அது என்னவென்றால், அவன் [2] தானி. 2. 1.

**23.** “அவனை மறந்துவிட்டான்.” பானபாத்திரக்காரன் உயர்ந்த உத்தியோகஸ்தனாயிருந்ததால் அவன் தருணம்பார்த்துத் தன் சொற்சக்தியைப் பிரயோகித்து யோசேப்பைச் சிறைச்சாலையிலிருந்து வெளியேற்றவுங் கூடியவனாயிருந்தான். ஆனால் அவன் நன்றிகெட்டவனாயிருந்ததாய்த் தோன்றுகிறது.

### படிப்பினை.

(1) உன்னதமான ஸ்தலங்கள் சறுக்கலான இடங்களாம். ராஜாவின் சிநேகம் உயிருக்கு மோசம். தேவதயவோ நீடிய வாழ்வுக்குக் காரணம்.

(2) மனிதர் செய்யுங் காரியங்களிலே தேவதீர்மானங்கள் நிறைவேறுகிறவைகளாயிருக்கின்றன.

(3) உபத்திரவப்படுகிறவர்களுடன் அநுதாபப்பட்டு அவர்களை ஆறுதல்படுத்தும்படி பார்ப்பது உத்தமர் கடமை.

(4) தேவனுடைய பக்தர் இம்மைக்குரிய சௌக்கியங்களை அநுபவிக்க வெகுகாலங் காத்திருக்கவேண்டியதாயும் நேரிடுவதுண்டு.

(5) விசேஷித்தநாளைக் கொண்டாட நமக்கு இடங் கிடைக்கையில் தேவதயவை [illegible] நன்றியறிதலால் பொங்கி தேவனுக்குத் துதி தோத்திரங்களைச் செலுத்த [illegible]. [illegible] நாட்களைக் கொண்டாடுகையில் நடிக்கத்தொட்ட அப்படிச் செய்யவேண்டும்.

(6) நம்மிடத்தில் நன்மையைப் பெற்றுக்கொண்டவர்கள் நம்முடைய ஆபத்தில் நம்மை மறந்துவிட்டால் அதற்காக நாம் அதைரியப்பட்டுப் போகலாகாது.

(7) பானபாத்திரக்காரன் யோசேப்பை மறந்துபோனது நன்றிகேடானால் நாம் நமக்காகத் தமது ஜீவனை ஒப்புக்கொடுத்த இயேசுவை மறப்பது எத்தனைக்கு அதிகமான நன்றிகேடாகும்.

## 41. அதிகாரம்.

**1.** “பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான்.” இரண்டு வருஷங்களுக்குப்பின்பு யோசேப்பு உயர்த்தப்படவேண்டியகாலம் வந்தபோது, தேவன் தாம் செய்யப்போகிறதைப் பார்வோனுக்கு அறிவித்தார். சில நூற்றாண்டுகளுக்குப்பின்பு நேபுகாத்நேச்சாருக்கும் அப்படியே அவர் சொப்பனத்தின் மூலமாய்த் தமது திருவுளசித்தத்தைத் தெரியக்காட்டினார்.

2 நதியண்டையிலே நின்றுகொண்டிருந்தான்.—அப்பொ
ழுது அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலி
3 ருந்து ஏறிவந்து புல் மேய்ந்தது.—அவைகளின்பின்
அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்
கள் நதியிலிருந்து ஏறிவந்து, நதி ஓரத்தில் மற்றப் பசுக்
4 களண்டையிலே நின்றது.—அவலட்சணமும் கேவல
முமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்
களையும் பட்சித்துப்போட்டது; இப்படிப் பார்வோன்
5 கண்டு விழித்துக்கொண்டான்.—மறுபடியும் அவன்
நித்திரைசெய்து, இரண்டாம்விசை ஒரு சொப்பனம்
கண்டான்; நல்ல செழுமையான ஏழு கதிர்கள் ஒரே
6 தாளிலிருந்து ஓங்கிவளர்ந்தது.—பின்பு, சாவியான
தும் கீழ்காற்றினால் தீய்ந்ததுமான ஏழு கதிர்கள் முளை

"நதி." இது நீல்நதியைக் குறிக்கும். இதற்கு "ஹெப்பி" என்ற வைதிகப்பேரும் "ஊர்" என்ற லௌகிகப்பேரும் உண்டு. யோசேப்பு அதிகாரியாக இருந்தபோது அப்போபிஸ் ராஜன், எகிப்தின்மேல் செங்கோல் செலுத்தினான் என்று பொதுப்படச் சொல்லப்படுவதுண்டு. இந்த அப்போபிஸ் மேய்ப்ப ராஜாக்களில் மிகப் பேர்போனவனாயிருந்தான். ஆனால் கூக் என்ற சாஸ்திரியார் இங்கே சொல்லப்பட்டிருக்கிற ராஜன் பன்னிரண்டாவது ராஜகுடும்பத்தைச்சேர்ந்த மூன்றாம் அமிகெம்பா என்று தீர்மானிக்கிறார். இவன் எகிப்து முழுவதுக்கும் கடைசியான சுதேச ராஜாவாக ஆண்டுவந்தான்.

2. "பசுக்கள்." எகிப்தியர் பசுக்களை, பூமிக்கும் வேளாண்மைக்கும் அடையாளமாக எண்ணிவந்தார்கள். அவர்கள் ஏழு பசுக்களை ஐசிஸ் என்ற தேவதைக்குப் பிரதிஷ்டையாக்கியிருந்தார்கள்.

"புல்." இதற்குரிய மூலவார்த்தை (யோபு. 8: 11.) கோரைப்புல் என்று திருப்பியிருக்கிறது. இந்த இடத்திலும் அவ்வகைப் புல்லைக் குறிக்கலாம்.

5. "ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து." எகிப்தியர் கோதுமையையாவது வாற்கோதுமையையாவது போசனமாக உபயோகிக்கவில்லை என்று எரோடொத்து என்பவன் எழுதிவைத்திருப்பது அபத்தம் என்று ஆலயங்களில் காணப்படும் சித்திரங்களினால் அறியலாம். தேபே பட்டணத்தில் கோதுமை மிகுதியாய்ச் சாகுபடி செய்யப்பட்டதுமல்லாமல் அதுவே ஜனங்களுடைய சாதாரண போசனமாகவுமிருந்தது.

6. "கீழ்காற்றினால்." எகிப்தில் காற்று பொதுப்பட வடக்கே அல்லது தெற்கே இருந்து வீசும். ஆனால் தென்கிழக்கிலிருந்து வீசும் காற்று அரபியா வனாந்தரத்திலிருந்துவந்து பயிருக்கு அதிகமான சேதத்தை உண்டுபண்ணும்.





7 ந்தது.—சாவியான கதிர்கள் செழுமையும் நிறைமேனி
யுமான அந்த ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது;
அப்பொழுது பார்வோன் விழித்துக்கொண்டு, அது
சொப்பனம் என்று அறிந்தான்.

8 காலமே பார்வோனுடைய [1]மனம் கலக்கங்கொண் [1] தானி. 4. 5, 19: 7. 28: 8. 27.
டிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல
[2]மந்திரவாதிகளையும் சகல [3]சாஸ்திரிகளையும் அழைப் [2] யாத். 7. 11. ஏசா. 29. 14. தானி. 2. 2.
பித்து, அவர்களுக்குத் தன் சொப்பனத்தைச் சொன் [3] மத். 2. 1.
னான்; ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோ
9 னுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று.—அப்பொ
ழுது பானபாத்திரக்காரரின் தலைவன் பார்வோனை
நோக்கி: நான் செய்த குற்றம் இன்றுதான் என் நினை
10 வில் வந்தது.—பார்வோன் தம்முடைய ஊழியக்காரர்
மேல் [4]கடுங்கோபங்கொண்டு, என்னையும் சுயம்பாகி [4] ஆதி. 40. 2.
களின் தலைவனையும் தலையாரிகளின் அதிபதிவீடா
கிய சிறைச்சாலையிலே வைத்திருந்தகாலத்தில்,—
11 நானும் அவனும் ஒரே ராத்திரியிலே வெவ்வேறு
12 பொருள்கொண்ட [5]சொப்பனம் கண்டோம்.—அப் [5] ஆதி. 40. 5.
பொழுது தலையாரிகளின் அதிபதிக்கு வேலைக்காரனா
கிய எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே
எங்களோடே இருந்தான்; அவனிடத்தில் அவைக
ளைச் சொன்னோம், அவன் நாங்கள் கண்ட சொப்பனங்
களுக்குரிய வெவ்வேறு அர்த்தத்தின்படியே எங்கள்

எபிரெயுவில் விசேஷித்த நாலுதிசைக் காற்றுக்குமாத்திரம் பேர் இருந்தமையால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற காற்று தென்கீழ் காற்றைக் குறிக்கும் என்று அறியவேண்டியது.

8. "மந்திரவாதிகள்." இவர்கள் சித்திரபாஷிதங்களை எழுதவும் வாசித்து அவைகளின் பொருளை அறிவிக்கவுமான திறமையுடைய வேதபாரகராயிருந்தார்கள். பூர்வீகத்திலே தேவர்களையும் இயற்கை சாஸ்திரங்களையும்பற்றிய இரகசியங்களை அறிகிற அறிவுடையவர்களாக அவர்கள் எண்ணப்பட்டும் ஜனங்களால் மிகவும் கண்ணியமாய் மதிக்கப்பட்டும் வந்தார்கள்.

"சாஸ்திரிகள்." மந்திரவித்தை, ஜோஷியம், குறிசொல்லுதல்ஆகிய இப்படிப்பட்டவைகளைப் படித்துத் தங்களுக்கு கனத்தையும் ஐசுவரியத்தையும் சம்பாதித்துவந்தார்கள். இவ்வகையான கல்வியில் யதார்த்தமாவது உண்மையாவது இல்லை. இப்போது உலகத்திலிருக்கிற சாஸ்திரிகள் அவைகளை எல்லாம் வியர்த்தம் என்று முழுவதுமாய்த் தள்ளிப்போட்டார்கள்.

"ஒருவராலும் அதின் அர்த்தத்தைப் பார்வோனுக்குச் சொல்லக்கூடாமற்போயிற்று." அநேக சாஸ்திரிகள் சொப்பனத்தின் அர்த்தத்தைப்

13 சொப்பனத்தின் பயனைச் சொன்னார். — அவன் எங்
களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது;
என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத்
தூக்கிப்போடுவித்தார் என்றான்.

14 அப்பொழுது பார்வோன் யோசேப்பை [1]அழைப் [1] 1 சாமு. 2.8. சங். 105. 20.
பித்தான்; அவனைத் தீவிரமாய்க் காவல்கிடங்கிலிருந்து
கொண்டுவந்தார்கள். அவன் சவரம் பண்ணிக்கொ
ண்டு, வேறுவஸ்திரம் தரித்து, பார்வோனிடத்தில்
15 வந்தான். — பார்வோன் யோசேப்பை நோக்கி: ஒரு
சொப்பனம் கண்டேன்; அதின் அர்த்தத்தைச் சொல்ல
ஒருவரும் இல்லை; நீ ஒரு சொப்பனத்தைக் கேட்டால்,
அதின் அர்த்தத்தைச் சொல்லுவாய் என்று [2]உன்னைக் [2] ஆதி. 40.8. தானி. 2. 30. 2 கொ. 3. 5.
குறித்து நான் கேள்விப்பட்டேன் என்றான்.

16 அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதி
யுத்தரமாக: [3]நான் அல்ல, [4]தேவனே பார்வோனுக்கு [3] அப். 3. 12. [4] ஆதி. 40. 8. தானி. 2. 22. 1. 2.
சமாதானமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்.

---

பார்வோனுக்குச் சொல்லிக் கலங்கிக்கொண்டிருந்த அவன் மனதை அமைக்கும்படி பார்த்திருக்கலாம். ஆனால் பார்வோன் மனம் அவர்கள் வியாக்கியின்பேரில் நம்பிக்கை கொள்ளவில்லை.

**13.** "அவன் எங்களுக்குச் சொல்லிய அர்த்தத்தின்படியே நடந்தது." எகிப்திலுள்ள சாஸ்திரிகள் ஒருவராலும் பார்வோனின் சொப்பனத்தை வியாக்கிசெய்யக் கூடாததைப் பானபாத்திரக்காரன் கண்டபோது ராஜாவுக்கு மன ஆறுதலுண்டாகத்தக்கதாக தேவசெயலின் காரியங்களை எடுத்துக் காட்டவே பார்வோன் யோசேப்பைக் கொண்டுவரும்படி உத்தரவு பண்ணினான்.

**14.** "சவரம் பண்ணிக்கொண்டு." எகிப்தியர் துக்கநாட்களில் தங்களுடைய தலை முடியையுந் தாடி முடியையும் வளர்ப்பது வழக்கமாயிருந்தது. எகிப்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிற சின்னங்களில், சிறைகளும் இழிஞரும் தாடிமயிர் வளர்த்துவந்ததாகக் காட்டப்பட்டிருக்கிறது. சிறைச்சாலையிலே யோசேப்பு தன் தாடை முடியைச் சவரம்பண்ண ஏதுவில்லாதிருந்ததால் அதை வளர்த்துவந்தான். ராஜாவின் உத்தரவு வந்தபோது அதைச் சவரம் பண்ணவேண்டியதாயிற்று. யோசேப்புக்குண்டான ஒவ்வொரு உபத்திரவத்துக்கும் பிரதிபலன் கொடுக்கப்பட்டது. சொப்பனத்தினிமித்தம் அவன் விற்கப்பட்டான். சொப்பனத்தை வியாக்கிசெய்ததினிமித்தம் அவன் உயர்த்தப்பட்டான். பலவர்ண அங்கியை உரியக் கொடுத்தான். மெல்லிய வஸ்திரங்களால் உடுத்தப்பட்டு கழுத்தில் சரப்பணி தரிப்பிக்கப்பட்டான். குழியில் போடப்பட்டான். சிறைச்சாலையாகிய குழியிலிருந்து, பார்வோனால் பிரபுவாக உயர்த்தப்பட்டான். அடிமையாக விற்கப்பட்டவன் இப்போது ஆண்டவனாக ஏற்படுத்தப்பட்டான்.





17 பார்வோன் யோசேப்பை நோக்கி: என் சொப்
பனத்திலே, நான் நதி ஓரத்தில் நின்றுகொண்டிருந்
18 தேன். — அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதி
19 யிலிருந்து ஏறிவந்து புல்மேய்ந்தது. — அவைகளின்
பின் இளைத்ததும் மகா அவலட்சணமும் கேவலமு
மான வேறே ஏழு பசுக்கள் ஏறிவந்தது; இவைகளைப்
போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்
20 கும் நான் கண்டதில்லை. — கேவலமும் அவலட்சண
முமான பசுக்கள் கொழுமையான முந்தின ஏழுபசுக்
21 களையும் பட்சித்துப்போட்டது. — அவைகள் இவை
களின் வயிற்றுக்குள் போயும், வயிற்றுக்குள் போயிற்
றென்று தோன்றாமல், முன் இருந்ததுபோலவே அவ
லட்சணமாயிருந்தது; இப்படிக் கண்டு விழித்துக்
22 கொண்டேன். — பின்னும் நான் என் சொப்பனத்
திலே, நிறைமேனியுள்ள ஏழு நல்ல கதிர்கள் ஒரே
23 தாளிலிருந்து ஓங்கி வளரக்கண்டேன். — பின்பு சாவி
யானவைகளும் கீழ்காற்றினால் தீய்ந்து பதரானவை
24 களுமான ஏழு கதிர்கள் முளைத்தது. — சாவியான
கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப்
போட்டது. இதை [1]மந்திரவாதிகளிடத்தில் சொன் [1] தானி. 4. 7.
னேன்; இதின் பொருளை எனக்கு விளக்கினவன்
ஒருவனும் இல்லை என்றான்.

25 அப்பொழுது யோசேப்பு பார்வோனை நோக்கி:
பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான்; [2]தேவன் தாம் [2] தானி. 2. 28, 29, 45. வெளி. 4. 1.
செய்யப்போகிறதின்னதென்று பார்வோனுக்கு அறி
26 வித்திருக்கிறார். — அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு
வருஷமாம்; அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷ
27 மாம்; சொப்பனம் ஒன்றே. — அவைகளின் பின் ஏறி
வந்த கேவலமும் அவலட்சணமுமான ஏழு பசுக்க
ளும் ஏழுவருஷமாம்; கீழ்காற்றினால் தீய்ந்து சாவி
யான ஏழு கதிர்களும் ஏழு வருஷமாம்; இவைகள்
28 பஞ்சமுள்ள [3]ஏழு வருஷமாம். — பார்வோனுக்கு [3] 2 இரா. 8. 1.
நான் சொல்லவேண்டிய காரியம் இதுவே; தேவன்
தாம் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்
29 பித்திருக்கிறார். — எகிப்து தேசமெங்கும் பரிபூரண
மான விளைவு உண்டாயிருக்கும் ஏழு வருஷம்
30 வரும். — அதன்பின் பஞ்சமுண்டாயிருக்கும் ஏழு
வருஷம் வரும்; அப்பொழுது எகிப்துதேசத்தில் அந்
தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டுப்போம்; [4]அந் [4] ஆதி. 47. 13.

46

31 தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும்.—வரப்போகிற
மகா கொடுமையான பஞ்சத்தால் தேசத்தில் முன்னி
32 ருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்துபோம்.— இந்தக்
காரியம் தேவனால் [1]நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்ப [1] எண். 23. 19 ஏசா. 46. 10.
தையும், தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்
பதையும் குறிக்கும்பொருட்டு, இந்தச் சொப்பனம்
33 பார்வோனுக்கு இரட்டித்தது.— ஆகையால், விவே
கமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத் தேடி, அவனை
எகிப்துதேசத்துக்கு அதிகாரியாகப் பார்வோன் ஏற்
34 படுத்துவாராக.—இப்படிப் பார்வோன் செய்து, தேசத்
தின்மேல் விசாரணைக்காரரை வைத்து, [2]பரிபூரண [2] நீதி. 6. 6-8.
முள்ள ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்திலே விளை
யும் விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கை வாங்கும்படி
35 செய்வாராக.—அவர்கள் வரப்போகிற நல்ல வருஷங்
களில் விளையும் தானியங்களையெல்லாம் சேர்த்து,
பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு,
பார்வோனுடைய அதிகாரத்துக்குள்ளாகத் தானியங்
களைப் பத்திரப்படுத்தி வைத்துவைப்பார்களாக.—
36 தேசம் பஞ்சத்தினால் அழிந்துபோகாதபடிக்கு, அந்த
தானியம் இனி எகிப்துதேசத்தில் உண்டாகும் பஞ்ச
முள்ள ஏழு வருஷங்களுக்கும் தேசத்திற்கு ஒரு
வைப்பாயிருப்பதாக என்றான்.

37 இந்த வார்த்தை [3]பார்வோனுடைய பார்வைக்கும் [3] சங். 105. 22. அப். 7. 10.
அவன் ஊழியக்காரர் எல்லாருடைய பார்வைக்கும்
38 நன்றாய்க் கண்டது.—அப்பொழுது பார்வோன் தன் [4] எண். 27. 18.
ஊழியக்காரரை நோக்கி: [4]தேவ ஆவியைப் பெற்ற யோபு. 32. 8.
இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ நீதி. 2. 6. தானி. 4. 8, 18; 5. 11.

**34.** "ஐந்தில் ஒரு பங்கு." எகிப்தின் ராஜாக்கள் தீர்வைக்குத் தசம பாகம் வாங்குவது வழக்கமாயிருந்தது. ஆனால் செழிப்புள்ளகாலத்தில் விளைவிலே ஐந்தில் ஒருபங்கைப் பிரிப்பது ஜனங்களுக்கு வருத்தமாய்த் தோன்றாது. அது நன்மைக்காக நல் எண்ணத்தோடே செய்யப்பட்டதால் ஜனங்களும் அதற்குச் சம்மதித்தார்கள். பிந்தியகாலத்தில் ஐந்திலொருபங்கு தீர்வையாக ஏற்படுத்தப்பட்டுப்போயிற்று.

**38.** "தேவ ஆவியைப் பெற்ற." யோசேப்பு துவக்கமுதல் சொப்பனத்தின் அர்த்தம் சொல்ல தன்னால் ஏலாது, தேவன்மாத்திரம் பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்யக் கூடியவர் என்று சொல்லிவந்தான். பார்வோன், யோசேப்பின் வார்த்தைகளை நம்பினதோடே தேவன் வரங்களால் அவனை நிரப்பியிருந்ததைச் சதாவிலே பிரத்தியட்சமாய் அறிந்துகொண்டான். மேலும் யோசேப்பு சொப்பனத்தின் அர்த்தத்தைச் சொன்னதோடு ஞானமும் விவேக





39 என்றான்.—பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி:
தேவன் இவையெல்லாவற்றையும், உனக்கு வெளிப்
படுத்தி இருக்கிறபடியால், உன்னைப்போல் விவேக
மும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை.—
40 நீ [1]என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் [1] சங். 105. 21. அப். 7. 10.
வார்த்தையின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி
நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில்மாத்திரம் உன்னி
லும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்.—
41 பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி: பார்,
[2]எகிப்துதேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கி [2] தானி. 6. 3.
42 னேன் என்று சொல்லி,—பார்வோன் தன் கையில்
போட்டிருந்த தன் [3]முத்திரை மோதிரத்தைக் கழற்றி, [3] எஸ்தர். 3. 10; 8. 2, 8, 10.
அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய
வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, [4]பொன் சரப்ப [4] தானி. 5. 29.

மமான ஆலோசனையும் கொடுத்ததால் எகிப்தின்மேல் வரும் ஆபத்தான காலத்தில் அவனே ஜீவரட்சணைக்கு வேண்டிய வழிவகைகளை ஏற்படுத்தி நடத்தத்தகுந்தவன் என்று கண்டு அவனை எகிப்துக்கு அதிகாரியாக்கினான்.

**40.** "என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்." பூர்வகாலத்தில் அரமனை அதிகாரியாயிருந்தவன் ராஜாவுக்கு அடுத்தபடியில் சிரேஷ்ட அதிகாரமுடையவனாயிருந்தான். அப்படியே யோசேப்பு மேலான அதிகாரியாக ஏற்படுத்தப்பட்டான்.

"உன் வாக்கின்படியே என் ஜனங்கள்....அடங்கி." எகிப்தியர் எல்லாரும் யோசேப்பின் அதிகாரத்துக்குள் அடங்கி அவன் உத்தரவின்படி செய்யக் கட்டளை பிறந்தது.

**42.** "முத்திரை மோதிரம்." தீர்மானங்கள் சட்டங்களாக எண்ணப்படுவதற்கு ராஜமுத்திரை போடப்படவேண்டியதாயிருந்தபடியால் யோசேப்புக்கு மேலான அதிகாரங் கொடுக்கப்பட்டதற்கு அடையாளமாக ராஜா தன் முத்திரை மோதிரத்தை அவனுக்குக் கொடுத்தான்.

"மெல்லிய வஸ்திரங்களை." இது சணலால் செய்யப்பட்டது. லேவியரான ஆசாரியருடைய உடுப்புஞ் சணலால் செய்யப்பட்டன (யாத். 39; 28.). மெல்லிய சணல் உடுப்பு எகிப்திய ராஜாக்களாலும் பூசாரிகளாலுந் தரிக்கப்பட்டுவந்தன. பார்வோன் யோசேப்புக்கு அதைக் கொடுத்ததில் அவனை எகிப்தின் அதிகாரிகளுடைய வகுப்புக்களில் சேர்த்ததற்குக் குறிப்பாயிருந்தது. சணல் புடவை எகிப்திலிருந்து தீருவுக்கு ஏற்றுமதியாகக் கொண்டுபோகப்பட்டதுண்டு. (எசே. 27; 7.)

"பொன் சரப்பணியை." சித்திரங்களிலே சரப்பணியானது ராஜ சின்னங்களில் ஒன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது. பூர்வ எகிப்தியரின் சரப்பணி திருந்திய வேலைப்பாடுள்ளதாயிருக்கிறதால் அதின் மாதிரிப்படி பல இடங்களில் இப்போது செய்யப்பட்டுவருகின்றன.

43 ணியை அவன் கழுத்திலே தரித்து,—தன்னுடைய
இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏற்றி, *தெண்ட
னிட்டுப் பணியுங்கள் என்று அவனுக்கு முன்பாகக்
கூறுவித்து; [1]எகிப்துதேசம் முழுமைக்கும் அவனை
44 அதிகாரியாக்கினன்;—பின்னும் பார்வோன் யோ
சேப்பை நோக்கி: நான் பார்வோன்; ஆனாலும் எகிப்து
தேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லா
மல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்
45 கூடாது என்றான்.—மேலும், பார்வோன் யோசேப்
புக்கு †சாப்நாத்பன்னேயா என்கிற பெயரையிட்டு;
ஓன்பட்டணத்து ‡ஆசாரியனாகிய போத்திபிராவின்
குமாரத்தியாகிய ஆஸ்நாத்தை அவனுக்கு மனைவியா
கக் கொடுத்தான். யோசேப்பு எகிப்து தேசத்தைச்

* அப்ரேக் = கட்டியன்.
[1] ஆதி. 45. 8,26. அப். 7.10.
† இரகசியங்களை வெளிப்படுத்துகிறவன்.
‡ பிரபு. யாத். 2. 16; 21. 2 சாமு. 8. 18.

**43.** "இரண்டாம் இரதம்." யோசேப்பு எகிப்துக்கு அதிகாரியாக புதி தாய் நியமிக்கப்பட்டதை ஜனங்கள் அறியத்தக்கதாய் அவனை ராச்சியபாரத்துக்குரிய இரண்டாம் இரதத்தில் ஏற்றி பட்டணப்பிரவேசஞ் செய்யும்படி ராஜா பண்ணுவித்தான்.

"**தெண்டனிட்டுப் பணியுங்கள்.**" எபிரெயுவில் "அப்ரேக்" என்றிருக்கிறது. சிலர் அந்த வார்த்தையை "களிகூரு" என்று திருப்புவார்கள். அது ஒருமை ஏவலாயிருப்பதால் ஜனங்கள் யோசேப்பைப் பார்த்துச் சொல்லும் வார்த்தையாயிருக்கிறது என்று சிலர் அர்த்தப்படுத்துகிறார்கள். தெண்டனிடுதல் என்று அர்த்தங்கொள்ளும் "ஹாப்ரேக்" என்ற வார்த்தையின் உச்சரிப்பு அப்ரேக் என்றதற்குச் சம்பந்தமாயிருப்பதினால் திருப்புதல்களில் இந்தத் தப்பிதம் விழுந்திருக்கலாம்.

**45.** "**சாப்நாத்பன்னேயா.**" இது எகிப்திய வார்த்தை. அதற்கு அர்த்தம் "ஜீவ அப்பம்" அல்லது "ஜீவனுள்ளோரின் அப்பம்" சிலர் இந்த நாமத்துக்கு "உலகரட்சகன்" என்று அர்த்தஞ் சொல்லுவார்கள். "இரகசியங்களை வெளிப்படுத்துகிறவன்" என்று அர்த்தப்படுத்துவதற்கு ஆதாரமில்லை.

"**ஓன்பட்டணம்.**" ஓன் என்பதற்குச் "சூரியன்" என்றர்த்தம். இந்தப் பட்டணத்துக்குச் சூரியனின் வீடு என்றர்த்தங்கொள்ளும் பெத்ஷிமேசு என்று எபிரெயுவிலும் (எரே. 43: 13.), ஹெலியாப்போலிஸ் என்று கிரேக்கிலும் பேருண்டாயிற்று. அங்கே சூரியனாகிய "ரா" தேவனுக்கு ஒரு ஆலயமிருந்தது. அது பார்சியரால் அழிக்கப்பட்டது. அதின் அழிமேடு இந்நாள்வரைக்குமிருக்கிறது. அங்கே சித்திரப்பாஷிதத்தால் நிறைந்த ஒரு ஸ்தம்பம் நிற்கிறது. அது நீலநதியின் கிழக்கரையில் காயிரோவுக்கு ஆறுமைலுக்கு வடகிழக்காயிருக்கிறது.

"**போத்திபிரா.**" 37: 36. வியாக்கியானம் பார்க்க.

"**ஆஸ்நாத்து.**" என்பதற்கு நேது தேவதையின் காதலி என்றர்த்தம்.
போத்திப்பிரா தன் மகளை யோசேப்புக்கு மனைவியாகக் கொடுப்பானா? யோசேப்பு இந்த அஞ்ஞான ஸ்திரீயை விவாகம் பண்ணுவானா? என்ற கேள்





46 சுற்றிப்பார்க்கும்படி புறப்பட்டான்.—யோசேப்பு
எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்
கும்போது [1]முப்பது வயதாயிருந்தான்; யோசேப்பு
பார்வோனுடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, எகிப்து
47 தேசம் எங்கும் போய்ச் சுற்றிப்பார்த்தான்.—பரி
பூரணமுள்ள ஏழு வருஷங்களிலும் பூமி மிகுதியான
48 பலனைக் கொடுத்தது.—அவ்வேழு வருஷங்களில்
எகிப்துதேசத்தில் விளைந்த தானியங்களையெல்லாம்
அவன் சேர்த்து, அந்தந்த தானியங்களைப் பட்டணங்
களில் கட்டிவைத்தான்; அந்தந்தப் பட்டணத்தில்
அதினதின் சுற்றுப்புறத்துத் தானியங்களைக் கட்டி
49 வைத்தான்.—இப்படி யோசேப்பு அளவிறந்ததாகக்
கடற்கரை மணலைப்போல மிகுதியாக [2]தானியத்தைச்
சேர்த்துவைத்தான்; அது அளவுக்கு அடங்காததாயி
ருந்தது.

50 பஞ்சமுள்ள வருஷங்கள் வருவதற்கு முன்னே
யோசேப்புக்கு இரண்டு [3]குமாரர் பிறந்தார்கள்; அவர்
களை ஓன் பட்டணத்து *ஆசாரியனாகிய போத்திபிரா
வின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்து அவனுக்குப் பெற்
51 றாள்.—யோசேப்பு: என் வருத்தம் யாவையும் என்
தகப்பனுடைய குடும்பம் அனைத்தையும் நான் மறக்
கும்படி தேவன் பண்ணினார் என்று சொல்லி, மூத்த
52 வனுக்கு †மனாசே என்று பேரிட்டான்.—நான் சிறு

[1] 1 சாமு. 16. 21. தானி. 1. 19. ஆதி. 21. 36.
[2] ஆதி. 22. 17. நியா. 7. 12. 1 சாமு. 13. 5. சங் 78. 27.
[3] ஆதி. 46. 20. 48. 5.
* பிரபு.
† மறதி.

விசன் வரலாம்: சேமின் சந்ததியார் எகிப்தில் கண்ணியமாய் எண்ணப்பட்டு வந்ததாலும் யோசேப்பு பிரதான மந்திரியாயிருந்ததாலும் போத்திப்பிரா தன் மகளைக் கலியாணஞ் செய்துகொடுக்கத் தடையிருக்கமாட்டாது. ஆபிரகாம் எகிப்து தேசத்தாளான ஆகாரை மனைவியாகப் படைத்ததை யோசேப்பு அறிந்திருந்தபடியால், அவன் ஆஸ்நாத்தை விவாகஞ்செய்ய பிரியமற்றவனாயிருக்கவுமாட்டான். யோசேப்பு தன் மனைவிக்கு மெய்த்தேவனைப்பற்றி நன்றாய்ப் போதித்திருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை.

**48.** "**தானியங்களையெல்லாம் அவன் சேர்த்து...கட்டிவைத்தான்.**" ராஜாவுக்கு வரும்படியான ஐந்திலொருபாக தானியங்களை யோசேப்பு களஞ்சியங்களில் கட்டிவைத்ததோடே கிரயத்துக்கும் வாங்கி களஞ்சியங்களில் வைத்திருக்கலாம்.

**51.** "**மனாசே**" என்பதற்கு "மறதி" என்றர்த்தம். இதினால் யோசேப்புக்கு அவன் தகப்பன்பேரிலிருந்த பாசம் அற்றுப்போயிற்றென்று சொல்லவில்லை. தகப்பன் வீட்டைப்பற்றிய அவாவு ஒருவாறு தணிந்தது என்றே அர்த்தங்கொள்ளவேண்டும்.

மைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப்
பண்ணினார் என்று சொல்லி, இளையவனுக்கு *எப்பி
ராயீம் என்று பேரிட்டான்.

* கனிபெருக்கம். ஆதி. 49. 22.

53 எகிப்துதேசத்தில் வந்த பரிபூரணமுள்ள ஏழு
54 வருஷங்களும் முடிந்தபின்,—யோசேப்பு சொல்லிய
படி [1]ஏழுவருஷ பஞ்சம் தொடங்கினது; சகல தேசங்
களிலும் பஞ்சம் உண்டாயிற்று; ஆனாலும் எகிப்து
55 தேசமெங்கும் ஆகாரம் இருந்தது.—எகிப்துதேச
மெங்கும் பஞ்சம் உண்டானபோது, ஜனங்கள் உண
வுக்காகப் பார்வோனை நோக்கி ஓலமிட்டார்கள்; அதற்
குப் பார்வோன்: நீங்கள் யோசேப்பினிடத்துக்குப்
போய், அவன் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்
யுங்கள் என்று எகிப்தியர் எல்லாருக்கும் சொன்
56 னான்.—தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால்,
யோசேப்பு களஞ்சியங்களையெல்லாம் திறந்து, எகிப்
தியருக்கு விற்றான்; பஞ்சம் எகிப்துதேசத்தில் வர
57 வரக் கொடிதாயிற்று.—சகல தேசங்களிலும் பஞ்சம்
கொடிதாயிருந்தபடியால், சகல தேசத்தார்களும் யோ
சேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்
துக்கு வந்தார்கள்.

[1] சங். 105. 16. அப். 7. 11.

52. "எப்பிராயீம்" என்பதற்குக் "கனிபெருக்கம்" என்றர்த்தம்.

**54. "சகல தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிற்று."** இந்தப் பஞ்சம் அரபியா, பலஸ்தீனா, எத்தியோப்பியா, சிரியாமுதலிய தேசங்களிலும் உண்டானது.

### படிப்பினை.

(1) தேவன் தமக்குப் பிரியமான காலத்திலே தம்முடைய பிள்ளைகளைத் துன்பத்தினின்று வெளியாக்குகிறவராயிருக்கிறார். பெரிய சோதனைக்குப்பின்பு பெரிய மகிமை சூழ்வதுண்டு. மேன்மைக்கு முன்னானது தாழ்மை. குப்பைமேட்டிலிருந்து தேவன் சிலரை உயர்த்தி மகிமையின் சிகரத்தை அடையச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

(2) தேவன் தம்மைக் கனம்பண்ணுகிறவர்களைக் கனஞ் செய்யும்படி ஞானிகளுடைய ஞானத்தைப் பயித்தியமாக்குகிறார்.

(3) உலக சந்தோஷங்களெல்லாம் மாய்கைபோல சீக்கிரத்துக்குள்ளாக நீங்கிப்போம். பொல்லாங்கு துன்மார்க்கனைப் பின்தொடர்ந்து பிடிக்கும்.

(4) பிறர் ஜனத்துக்கு நன்மைசெய்தல் தேவனாலே ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனாலே ஆகக்கூடியது.

(5) உலககாரியங்களில் முன்புத்தி நல்லதுதான். ஆனால் மறுமையைப்பற்றிய அறிவோ இன்பமும் பிரயோசனமுமுள்ளது. நித்தியகாலம்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்துக்காகப் பிரயாசத்தைச் செலுத்துவோமாக.





## 42. அதிகாரம்.

1. யாக்கோபு தன் பத்துக் குமாரர்களை தானியம் கொள்ள எகிப்துக்கு அனுப்பினது. [illegible] யோசேப்பு அவர்களை வேவுகாரரென்று காவலிலே வைத்தது. 18. பென்யமீனைக் கொண்டுவருகிறோமென்கிற உடன்படிக்கையினால் அவர்களை விட்டுவிட்டது. 21. யோசேப்புக்குச் செய்த குற்றத்துக்காக அவர்கள் துக்கித்தது. 24. சிமியோனை கட்டி வைத்தது. 25. அவர்கள் தானியத்தோடும் பணத்தோடும் திரும்பியது. 29. தங்களுக்குச் சம்பவித்ததை அவர்கள் யாக்கோபுக்கு அறிவித்தது. 36. யாக்கோபு பென்யமீனை அனுப்ப மனதில்லாதிருந்தது.

எகிப்திலே தானியம் உண்டென்று [1]யாக்கோபு அறி
ந்து, தன் குமாரரை நோக்கி: நீங்கள் ஒருவர் முக
த்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறது என்ன?—
2 எகிப்திலே தானியம் உண்டென்று கேள்விப்படுகி
றேன்; [2]நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படி நீங்கள்
அவ்விடத்துக்குப் போய், நமக்காகத் தானியம் கொள்
3 ளுங்கள் என்றான்.—யோசேப்பின் சகோதரர் பத்துப்
பேர் தானியங்கொள்ள எகிப்துக்குப் போனார்கள்.—

[1] அப். 7. 12.
[2] ஆதி. 43. 8. சங் 118. 17.

(6) உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கேறி உன்னதமானவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிற நம்முடைய அதிபதி உலகத்தாருக்கு இரட்சகராயிருந்து எல்லா உபத்திரவங்களினின்றும் தமது ஜனங்களை விடுவிக்கிற கர்த்தராக இக்காலத்திலும் மேன்மை அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டுவருகிறதை நாம் மறந்துபோகாமல் அவருடைய தயவை நாடித் தேடுவோமாக.

### 42. அதிகாரம்.

**1. "யாக்கோபு அறிந்து."** எகிப்துக்கும் பலஸ்தீனாவுக்கும் போக்குவரத்தான வியாபாரக் கூட்டத்தாரிருந்ததால் எகிப்தில் தானியம் வாங்கலாம் என்று அவர்கள் மூலமாய் யாக்கோபு அறிந்திருக்கலாம். (5. வசனம்.)

**"ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்கிறதென்ன."** இரண்டாம் வருஷ மழைத்தாழ்ச்சியினால் யாக்கோபும் அவன் வீட்டாரும் ஆடுமாடுகளுஞ் சங்கடங்களை அனுபவிக்கவே பஞ்சத்தினால் உண்டாகிய கொடிய வருத்தங்களை அவர்கள் தாங்கக்கூடாததாயிருந்தது. இத்தருணத்தில் யாக்கோபு தன் குமாரரை எகிப்துக்குப் போகும்படி ஏவினான்.

**3. "யோசேப்பின் சகோதரர் பத்துப்பேர்."** பத்துப்பேரும் அவர்கள் வேலைக்காரரில் சிலரையுங் கூட்டிக்கொண்டுபோயிருக்கவேண்டும். ஏனென்றால் யாக்கோபின் வீட்டைச் சேர்ந்தவர்கள் அநேகர் இருந்தார்கள்: (ஆதி. 46: 5. வியாக்கியானம் பார்க்க.) அவர்களையும் அவன் சம்ரட்சணை செய்ய வேண்டியதாயிருந்தது. இந்தப் பஞ்சகாலத்தில் பால் முதலியவைகளையும் அவர்கள் அதிகமாய் உபயோகப்படுத்தியிருக்கலாம்.

**"தானியங்கொள்ள எகிப்துக்குப் போனார்கள்."** யோசேப்பின் பத்து சகோதரரும் அவர்களுடைய வேலைக்காரரும் அவர்களுடன் பின்னும்

4 யோசேப்பின் தம்பியாகிய பென்யமீனுக்கு ஏதோ
மோசம் வரும் என்று சொல்லி, யாக்கோபு அவனை
அவன் சகோதரரோடே அனுப்பவில்லை.

5 கானான்தேசத்திலே [1]பஞ்சம் உண்டாயிருந்தபடி [1] அப். 7. 11.
யால், தானியம் கொள்ளப்போகிறவர்களுடனேகூட
6 இஸ்ரவேலின் குமாரரும் போனார்கள்.—யோசேப்பு
அத்தேசத்துக்கு [2]அதிபதியாயிருந்து, தேசத்தின் ஜன [2] ஆதி. 41. 41.
ங்கள் யாவருக்கும் விற்றான். யோசேப்பின் சகோ
தரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து [3] ஆதி. 37. 7.
7 அவனை வணங்கினார்கள்.—யோசேப்பு அவர்களைப்
பார்த்து, தன் சகோதரர் என்று அறிந்துகொண்டான்;
அறிந்தும் அறியாதவன்போலக் கடினமாய் அவர்க
ளோடே பேசி: நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள்
என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: கானான் தே
சத்திலிருந்து தானியம் கொள்ள வந்தோம் என்றார்

அநேகரும் (5. வசனம்.) தானியம் வாங்கும்படி கூட்டமாய் எகிப்துக்குப் போனார்கள். திரள் கூட்டத்தார் அதிகமான தானியத்தை வாங்கும்படி வந்தால் தேசத்து அதிபதி அவர்களைப் பரிசோதனைசெய்து அதின்பேரில் தானியங் கொடுக்கும்படி உத்தரவுசெய்வான். (9. வசனம் வியாக்கியானம் பார்க்க.)

6. "அவனை வணங்கினார்கள்." யோசேப்பு கண்ட சொப்பனம் நிறைவேற ஆரம்பிக்கிறது. பத்துச் சகோதரரும் யோசேப்பு தங்கள் சகோதரன் என்றறியாதபடிக்கு இப்போது வணங்கினார்கள். ஆனால் பிந்தி அறிந்தும் அப்படியே செய்தார்கள்.

7. "தன் சகோதரர் என்று அறிந்துகொண்டான்." யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டபோது அவன் சகோதரர் பிராயமுள்ளவர்களாயிருந்தார்கள். அதோடே அவர்கள் நடை உடை பாஷை முதலியவை அவர்கள் இன்னார் என்பதை யோசேப்புக்குத் தெளிவாய்க் காண்பித்தது.

"கடினமாய் அவர்களோடே பேசி." யோசேப்பு பழிவாங்கவேண்டும் என்றாவது பதில் செய்யவேண்டும் என்றாவது தன் சகோதரரோடே கடினமாய்ப் பேசவில்லை என்பது பிரத்தியட்சமான காரியமாயிருக்கிறது. அவர்கள் தன்னை இன்னமும் அறியாதபடிக்குப் பிரயாசப்பட்டான். தன்னை வெகுவாய் அடக்கிக்கொண்டிருந்தான். தன் தகப்பனைச் சஞ்சலப்படுத்தவும் அவனுக்கு மனமில்லை. என்றாலுஞ் சகோதரர் செய்த அநியாயத்தை அவர்களுக்கு உணர்த்தவும் அவர்களுடைய பெருமையையும் மனக்கடினத்தையும் அடக்கவுந்தக்கதாகக் கடினமாய்ப் பேசினான்.





8 கள்.—யோசேப்பு அவர்களைத் தன் சகோதரர் என்று
9 அறிந்தும், அவர்கள் அவனை அறியவில்லை.—யோ
சேப்பு அவர்களைக்குறித்துத் [1]தான் கண்ட சொப்ப [1] ஆதி. 37. 5, 9.
னங்களை நினைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் வேவு
காரர், தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்
10 கவந்தீர்கள் என்றான்.—அதற்கு அவர்கள்: அப்படி
யல்ல, ஆண்டவனே, உமது அடியாராகிய நாங்கள்
11 தானியம்கொள்ள வந்தோம்.—நாங்கள் எல்லாரும்
ஒரு தகப்பனுடைய பிள்ளைகள்; நாங்கள் நிசஸ்தர்;
12 உமது அடியார் வேவுகாரர் அல்ல என்றார்கள்.—அதற்கு
அவன்: அப்படியல்ல, தேசம் எங்கே திறந்துகிடக்கி
13 றது என்று பார்க்கவே வந்தீர்கள் என்றான்.—அப்பொ
ழுது அவர்கள்: உமது அடியாராகிய நாங்கள் பன்னி
ரண்டு சகோதரர்; கானான்தேசத்தில் இருக்கிற ஒரு
தகப்பன் புத்திரர்; இளையவன் இப்பொழுது எங்

8. "அவர்கள் அவனை அறியவில்லை." அவர்கள் யோசேப்பை விற்றபோது அவனுக்குப் பதினேழுவயது. அது நடந்து இப்போது இருபது வருஷமாகிறது. அவன் உடை, ஸ்திதி, பாஷை எல்லாஞ் சகோதரருக்கு அந்நியமாக இருந்ததாலும், அடிமையாக விற்கப்பட்டவன் இவ்வளவு உன்னதமான பதவிக்கு வந்தெட்டுவது கூடாதகாரியம் என்று அவர்களுக்கு இயற்கையாய் எண்ணமிருந்ததாலும் யோசேப்பை இன்னம் அறியாதிருந்தார்கள்.

9. "நீங்கள் வேவுகாரர்." எகிப்துக்குக் கிழக்கிலும் வடகிழக்கிலுமுள்ள ஜனங்கள் அடிக்கடி அதின்பேரில் யுத்தஞ்செய்ய வந்ததுண்டு. அரபியர், கானானியர், முக்கியமாய் ஏத்தியர் இவர்களால் எகிப்துக்கு வருத்தங்கள் நேரிட்டதுண்டு. அதோடே ஸைத்சோ ஜாதியாரும் எகிப்தின்மேல் படையெடுக்க எப்போதும் ஆயத்தமாயிருந்தார்கள். ஆகவே யோசேப்பு அவன் சகோதரரைப்பார்த்து இப்படிக் கடினமாய்ப் பேசினபோது, மற்றவர்களுக்கு அது விகற்பமாய்த் தோன்றவில்லை.

"தேசம் எங்கே திறந்துகிடக்கிறது என்று பார்க்க." தேசத்தில் எந்தப் பாகம் பெலவீனமாயிருக்கிறது; தேசத்துக்குட் பிரவேசிப்பதற்கு எது தகுதியான இடம் என்று சோதிக்க என்பதே அதின் கருத்து.

11. "நாங்கள் எல்லாரும் ஒரு தகப்பனுடைய பிள்ளைகள்." யோசேப்பின் சகோதரர் சொன்ன இந்த நியாயம் மிகவும் பலமுள்ளது. ஒரு ஜாதியார் வேவுபார்க்க ஆட்களை அனுப்பினால், ஒரே குடும்பத்திலிருந்து தகப்பன் தன் பிள்ளைகளில் பத்துப்பேரை ஒருக்காலும் அனுப்பமாட்டான் என்பதை யாரும் இலகுவாய் அறிந்துகொள்வார்கள்.

கள் தகப்பனிடத்தில் இருக்கிறான்; [1]ஒருவன் கா [1] ஆதி. 37. 30. புலம்பல். 5. 7.
14 ணாமற்போனான் என்றார்கள்.—யோசேப்பு அவர்களை
நோக்கி: உங்களை வேவுகாரர் என்று நான் சொன்னது
15 சரி.—உங்கள் இளைய சகோதரன் இங்கே வந்தாலொ
ழிய நீங்கள் இங்கேயிருந்து புறப்படுவது இல்லை என்று
பார்வோனின் ஜீவனைக்கொண்டு [2]ஆணையிட்டுச் சொல் [2] உபா. 6. 13. 1 சாமு. 1. 26; 17. 55.
16 லுகிறேன்.—இதினாலே நீங்கள் சோதிக்கப்படுவீர்கள்;
உங்கள் சகோதரனை அழைத்துவரும்படி உங்களில்
ஒருவனை அனுப்புங்கள்; உங்களிடத்தில் உண்மை
உண்டோ இல்லையோ என்று உங்கள் வார்த்தைகள்
சோதிக்கப்படுமளவும், நீங்கள் காவலில் இருக்கவேண்
டும்; இல்லாவிட்டால், நீங்கள் வேவுகாரர்தான் என்று
பார்வோனின் ஜீவனைக்கொண்டு ஆணையிட்டுச் சொல்
17 லுகிறேன் என்று சொல்லி,—அவர்கள் எல்லாரையும்
18 மூன்றுநாள் காவலிலே வைத்தான்.—மூன்றாம் நா
ளிலே யோசேப்பு அவர்களை நோக்கி: [3]நான் தேவனுக் [3] லேவி. 25. 43. நெகே. 5. 15 லூக். 18. 2, 4.
குப் பயப்படுகிறவன்; நீங்கள் உயிரோடே இருக்கும்

**14.** "நான் சொன்னது சரி." யோசேப்பு தான் சாட்டின குற்றத்தை மறுபடியும் உறுதிப்படுத்துகிறான். தன் சகோதரன் பென்யமீனையும் தகப்பனையும்பற்றித் தான் விரும்பின காரியங்களை அறியும்படியான நோக்கத்தோடே இப்படிச் செய்தானேயல்லாமல் அவர்களுக்குத் தீமைசெய்யவேண்டும் என்ற எண்ணத்தினாலே செய்யவில்லை.

**15.** "பார்வோனின் ஜீவனைக்கொண்டு." பூர்வத்தில் ராஜாக்களின் ஜீவனைக்கொண்டும், (1 சாமு. 17: 55. 2 சாமு. 14: 19.) கர்த்தரின் ஜீவனைக்கொண்டும் (2 சாமு. 15: 21. 2 இரா. 2: 2, 4, 6.) ஆணையிடுவது வழக்கமாயிருந்தது. புதிய ஏற்பாட்டில் அப்படிப்பட்ட ஆணைகள் விலக்கப்பட்டிருக்கிறது. (மத். 5: 33–37.)

**17.** "எல்லாரையும் மூன்றுநாள் காவலிலே வைத்தான்." [illegible]ரும் தங்கள் குற்றத்தை உணர்ந்து மனஸ்தாபப்படும்படியான நோக்கத்தோடே யோசேப்பு அவர்களைக் காவலிலே வைத்தான். அவன் நோக்கம் சரியானபடி சித்திபெற்றதைக் கண்டுகொண்டானென்று பின்னான வாக்கியங்களினால் அறிகிறோம்.

**18.** "நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்." யோசேப்பு தனக்கு நடப்பிக்கப்பட்ட அநியாயத்துக்குத் தக்கதாக தன் சகோதரருக்குச் செய்ய மனதில்லாமல் தேவனுக்கு அஞ்சி தன் சகோதரருக்கு நன்மைசெய்யக் கருதினான்.





19 படிக்கு ஒன்று செய்யுங்கள்;—நீங்கள் நிஜஸ்தரானால்,
சகோதரராகிய உங்களில் ஒருவன் காவற்கூடத்தில்
கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்
சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானி
20 யங் கொண்டுபோய்க் கொடுத்து,—உங்கள் [1]இளைய [1] ஆதி. 43. 5; 44. 23.
சகோதரனை என்னிடத்துக்கு அழைத்துக்கொண்டு
வாருங்கள்; அப்பொழுது உங்கள் வார்த்தைகள் மெய்
யென்று விளங்கும்; நீங்கள் சாவதில்லை என்றான்.
21 அவர்கள் அப்படிச் செய்கிறதற்கு இசைந்து:—நம்மு
டைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் [2]நம்மேல் [2] எண். 32. 23. 1 இரா. 17. 18. யோபு. 36. 8, 9. நீதி. 5. 15.
சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்ட
போது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்
டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகை
யால், [3]இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒரு [3] நீதி. 21. 13. மத். 7. 2.
வரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள்:—
22 அப்பொழுதுரூபன் அவர்களைப் பார்த்து: [4]இளைஞனுக் [4] ஆதி. 37. 21.
கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான்
உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்
போனீர்கள்; இப்பொழுது, இதோ, [5]அவன் இரத்தப் [5] ஆதி. 9. 5. 1 இரா. 2. 32. சங். 9. 12. லூக். 11. 50, 51.
23 பழி நம்மிடத்திலே வாங்கப்படுகிறது என்றான்.—யோ
சேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசி

**20.** "உங்கள் இளைய சகோதரனை என்னிடத்துக்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்." பென்யமீன் எகிப்துக்கு வந்தால் தன் தகப்பன் யாக்கோபு தன்னண்டை வருவதற்கு ஏதுவாயிருக்கும் என்று எண்ணி இந்தக் கட்டளையைக் கொடுத்தான். அதை நிறைவேற்றுவதில் யாக்கோபையும் அவன் சந்ததியாரையுங்குறித்த தேவதீர்மானங்கள் எல்லாம் நிறைவேறுவதாயிருந்தது.

**21.** "நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது." வேவுகாரர் என்று பத்து[illegible]யும்பற்றிச் சொல்லப்பட்ட குற்றமானது அவர்கள் [illegible] வியாயத்[illegible]லே முற்றிலும் நீங்கிப்போகவேண்டியது. அப்படியிருக்க அவர்கள் மூன்றுநாள்பரியந்தங் காவலில் வைக்கப்பட்டதையும், பின்பு ஒருவன் காவல்கூடத்தில் கைதியாயிருக்கவும், மற்றவர்கள் வீட்டுக்குப்போய்த் திரும்பிவருகையில் பென்யமீனைக் கொண்டுவரும்படி கட்டளையிடப்பட்டதையும், அவர்கள் பார்த்தபோது அவர்கள் மனதில் வேறே நியாயந் தோன்றுகிறதால் தா[illegible]ன் தங்கள் சகோதரனுக்குச் செய்த துரோகத்துக்கு இப்போது தண்டனை வ[illegible]ருப்பதாக எண்ணினார்கள்.

னபடியால், தாங்கள் சொன்னது அவனுக்குத் தெரி
24 யும் என்று அறியாதிருந்தார்கள்.—அவன் அவர்களை
விட்டு அப்புறம்போய் அழுது, திரும்ப அவர்களி
டத்தில் வந்து, அவர்களோடே பேசி, அவர்களில்
சிமியோனைப் பிடித்து, அவர்கள் கண்களுக்கு முன்
பாகக் கட்டுவித்தான்.

25 பின்பு, அவர்கள் சாக்குகளைத் தானியத்தால் நிரப்
பவும், அவர்கள் பணத்தைத் திரும்ப அவனவன் சாக்
கிலே போடவும், வழிக்கு வேண்டிய ஆகாரத்தைக்
கொடுக்கவும் யோசேப்பு கட்டளையிட்டான்; [1]அப்ப
26 டியே அவர்களுக்குச் செய்யப்பட்டது. அவர்கள்
அந்தத் தானியத்தைத் தங்கள் கழுதைகள்மேல் ஏற்
றிக்கொண்டு, அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் போனார்
27 கள்.—தங்குகிற இடத்திலே அவர்களில் [2]ஒருவன்

[1] மத். 5. 44. ரோ. 12. 17, 20, 21.
[2] அதி. 43. 21.

**24.** "அவன் அவர்களை விட்டு அப்புறம்போய் அழுது." தன் சகோதரர் மனஸ்தாபப்பட்டதைக் கண்டவுடனே யோசேப்பின் உள்ளம் பொங்கி விட்டது. ஆனாலும் பென்யமீனைக் காண ஆசையுள்ளவனாய் அவர்களில் ஒருவனாகிய சிமியோனை அவர்கள் முன்பாகக் கட்டுவித்தான். இவன் மெத்தக் குரூரன். யோசேப்புக்கு மிகுந்த வியாகுலத்தை உண்டுபண்ணினவன், சீகேமியரைக் கொன்றவிஷயத்தில் இவன் கொடியன் என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. சகோதரர் கானானுக்குத் திரும்பினபின்பு யோசேப்பு சிமியோனை இலகுவாய் நடத்தியிருப்பான்.

**25.** "அவர்கள் பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும்." ஒவ்வொருவரும் தான் தன் குடும்பத்துக்காகத் தானியம் வாங்கினதாகத் தோன்றுகிறது. ஒன்பது சாக்குத் தானியம் யாக்கோபின் பெரிய குடும்பத்துக்கு எம்மாத்திரம்! ஆதலால் அவர்கள் சிலகாலத்துக்குப் போதுமானபடி தானியங்கொள்ள வந்திருக்கவேண்டியது. அவனவன் பணத்தை அவனவன் சாக்கிலே போடும்படியாக யோசேப்பு உத்தரவு கொடுத்தது, அவர்கள் திரும்பி வராதபடி அவர்களை நிறுத்திவைத்துக்கொள்வதற்குக் காரணமாயிருக்கும்படியாக அல்ல; அந்த நோக்கமிருந்தால் பென்யமீனை அவர்கள் கூட்டிக்கொண்டு வருவதற்குத் தடையிருக்குமே. யோசேப்பு அன்பான மனதோடே அப்படிச் செய்தான்.

**27.** "தங்குகிற இடத்திலே." திரளான ஜனங்கள் வியாபாரமார்க்கமாய்ப் போய் வந்துகொண்டிருந்ததினாலே வசதியான விடுதிகள் ஒரோரிடத்திலிருக்கலாம். அங்கே ஒருவன் கழுதைக்குத் தீனம்போட சாக்கைத் திறந்தபோது தான் கொடுத்த பணம் சாக்கிலே இருக்கிறதைக் கண்டான். பாரம்பரியத்தில் இது லேவி என்று சொல்லியிருக்கிறது. மற்றவர்கள் இடைவழியிலே





தன் கழுதைக்குத் தீவனம்போடத் தன் சாக்கைத் திற
ந்தபோது, சாக்கின் வாயிலே தன் பணம் இருக்கிற
28 தைக் கண்டு,—தன் சகோதரரைப்பார்த்து, என் பணம்
திரும்ப வந்திருக்கிறது; இதோ, அது என் சாக்கிலே
இருக்கிறது என்றான். அப்பொழுது அவர்களுடைய
இருதயம் சோர்ந்துபோய், அவர்கள் பயந்து, ஒரு
வரை ஒருவர் பார்த்து, தேவன் நமக்கு இப்படிச்
செய்தது என்ன என்றார்கள்.

29 அவர்கள் கானான்தேசத்திலுள்ள தங்கள் தகப்பனா
கிய யாக்கோபினிடத்தில் வந்து, தங்களுக்குச் சம்ப
30 வித்தவைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்தது:—தே
சத்துக்கு அதிபதியாயிருக்கிறவன் எங்களைத் தேசத்
தை வேவுபார்க்கவந்தவர்கள் என்று எண்ணி எங்க
31 ளோடே கடினமாய்ப் பேசினான். — நாங்களோ
அவனை நோக்கி: நாங்கள் நிஜஸ்தர், வேவுகாரர் அல்ல.—
32 நாங்கள் பன்னிரண்டு சகோதரர், ஒரு தகப்பன் புத்
திரர், ஒருவன் காணாமற்போனான், இளையவன் இப்
பொழுது கானான்தேசத்தில் எங்கள் தகப்பனிடத்தில்
33 இருக்கிறான் என்றோம்.—அப்பொழுது தேசத்தின்
அதிபதியானவன்: நீங்கள் நிஜஸ்தர் என்பதை நான்
அறியும்படி உங்கள் சகோதரரில் ஒருவனை நீங்கள்
என்னிடத்தில் விட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்
கள் குடும்பத்துக்குத் தானியம் வாங்கிக்கொண்டு
34 போய்க் கொடுத்து,—உங்கள் இளைய சகோதரனை என்
னிடத்தில் அழைத்துக்கொண்டுவாருங்கள்; அதினாலே
நீங்கள் வேவுகாரர் அல்ல, நிஜஸ்தர் என்பதை நான்

தங்கள் பணத்தைக் காணவில்லை. வீட்டுக்குவந்து தானியத்தைக் கட்டினபோதுமாத்திரம் கண்டார்கள்.

**28.** "சோர்ந்துபோய்." தானியங் கொள்ளவந்த சமயத்தில் எவ்வளவோ உண்மையுள்ளவர்களாய் நடந்துகொண்டிருக்க, தாங்கள் மூன்று நாள் காவலில் வைக்கப்பட்டதும், சிமியோன் கட்டுண்டிருப்பதும், பணம் திரும்ப வைக்கப்பட்டிருப்பதும், பென்யமீன் திரும்பக் கூட்டிக்கொண்டுவரவேண்டும் என்று உத்தரவிருப்பதும் அவர்களுக்கு [illegible] விளங்காமல் மனம் சோர்ந்துபோய்ப் பிரலாபித்தார்கள்.

**33.** "உங்கள் சகோதரரில் ஒருவனை நீங்கள் என்னிடத்தில் விட்டு." எகிப்தின் ஆண்டவன் தங்களோடே கடினமாய்ப் பேசினதைத் தங்கள் தகப்பனிடத்தில் அறிவித்தபோதிலும், தங்களுக்கு நேரிட்ட ஆபத்தைக் குறித்து அவனுக்கு உடனே சொல்லவில்லை.

அறிந்துகொண்டு, உங்கள் சகோதரனை விடுதலைசெய்
வேன்; நீங்கள் இந்தத் தேசத்திலே [1]வியாபாரமும் [1] ஆதி. 34. 10.
பண்ணலாம் என்றான் என்று சொன்னார்கள்.
35 அவர்கள் தங்கள் சாக்குகளிலுள்ள தானியத்தைக்
கொட்டுகையில், இதோ, அவனவன் சாக்கிலே [2]அவ [2] ஆதி. 43. 21.
னவன் பணமுடிப்பு இருந்தது; அந்தப் பணமுடிப்பு
களை அவர்களும் அவர்கள் தகப்பனும் கண்டு பயந்தார்
36 கள்.—அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களை
நோக்கி: [3]என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; [3] ஆதி. 43. 11.
யோசேப்பும் இல்லை, சிமியோனும் இல்லை; பென்யமீ
னையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்கள்; இதெல்லாம்
37 எனக்கு விரோதமாய் நேரிடுகிறது என்றான்.—அப்
பொழுது ரூபன் தன் தகப்பனைப் பார்த்து, அவனை
என் கையில் ஒப்புவியும், நான் அவனைத் திரும்ப
உம்மிடத்தில் கொண்டுவருவேன்; அவனைக் கொண்டு
வராவிட்டால், என் இரண்டு குமாரரையும் கொன்று
38 போடும் என்று சொன்னான்.—அதற்கு அவன்: என்
மகன் உங்களோடேகூடப் போவதில்லை; அவன்
[4]தமையன் இறந்துபோனான், இவன் ஒருவன் மீதியா [4] ஆதி. 37. 33. 44. 28, 29, 31.
யிருக்கிறான்; நீங்கள் போகும் வழியில் இவனுக்கு

**36.** "இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது." இதெல்லாம் சுமைபோல் என்மேலிருக்கிறது என்று அங்கலாய்த்தான். யாக்கோபு தனக்கு விரோதமாயிருக்கிறது என்று சொன்ன காரியமே அவனுக்கு அநுகூலமாயிருந்தது.

**37.** "என் இரண்டு குமாரரையும் கொன்றுபோடும்." யாக்கோபு தன் பேரப்பிள்ளைகளைக் கொன்றுபோடுவானென்று ரூபன் எண்ணவில்லை; பென்யமீனைத் திரும்பக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு உறுதிப்பாடாக இப்படிச் சொன்னான்.

**38.** "வழியில் இவனுக்கு மோசம் நேரிட்டால்." தன் சகோதரரைத் தேடிப்போன வழியில் யோசேப்புக்கு மோசம் நேரிட்டதாக யாக்கோபு எண்ணினான். பென்யமீனுக்கும் அப்படிச் சேதம் நேரிட்டால் அது யாக்கோபுக்கு மிஞ்சிய வியாகுலத்தைக் கொடுக்கும். பென்யமீன்விஷயத்தில் பத்துச் சகோதரரும் எரிச்சலைக் காட்டினதாக நாம் வாசிக்கிறதில்லை. தகப்பனிமித்தம் அவன்பேரில் எல்லாரும் பாசம் காட்டினார்கள். (ஆதி. 44: 18–34.)





மோசம் நேரிட்டால், நீங்கள் என் நரைமயிரைச் சஞ்
சலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள்
என்றான்.

## படிப்பினை.

### வச. 1—20.

(1) பாவத்தினிமித்தம் தேவன் செழிப்புள்ள ஒரு தேசத்தை வறட்சியாக்கினாலும் அதைச் சமூலமாகப் பாழாக்கிப்போடுகிறதில்லை. அதிகமான நிர்ப்பந்தங்களை அநுபவிக்கவேண்டியதாயிருந்தாலும் விட்டாற்றியும் சகாயமும் நேரிடுவதுண்டு. ஒரு தேசம் இன்னொரு தேசத்துக்கு வேண்டியபொருளைக் கொடுக்கலாம். இன்பமும் துன்பமும் இங்கே கலந்துவருவதைக் காணலாம். பரம கானானிலோ பஞ்சம் என்றபேர் முதலாய் இராது. நரகத்தில் விட்டாற்றியும் கிடையாது.

(2) ஆபத்துக்காலத்திலே நாம் செய்யவேண்டிய பிரயத்தனங்களை எல்லாஞ் செய்யவேண்டும். முக்கியமாய் ஆத்துமவிஷயத்திலே கிறிஸ்துவுக்குள் நமக்கு வைக்கப்பட்டிருக்கிற ஆகாரத்தைப் பெற்றநுபவிக்க ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நம்மை நாமே வெறுத்துச் சிலுவை எடுத்துக்கொண்டும் இதைப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

(3) வீட்டைவிட்டு வழிப்பிரயாணஞ் செய்யப்போகையில் நம்மைத் தெய்வீக ஆதரவுக்கு ஒப்புக்கொடுத்துத் திரும்பச் சுகத்தோடே வீடுவந்து சேருகையில் நன்றியறிதலை அவருக்குச் செலுத்தவேண்டும்.

(4) கர்த்தருடைய தீர்மானங்கள் நிறைவேறுதபடிக்குத் தடையாயிருக்கிற சத்துருக்களே அவைகள் நிறைவேறுவதற்குக் கருவிகளாகவும் விளங்குவதைக் காணலாம்.

(5) நாம் செய்த பாவமானது வெகு காலப்பட்டபின்பும் நீங்கிப்போகிறதில்லை. இந்த ஜீவகாலத்திலும் அது வேதனையை வருவிக்கத்தக்கதாயிருக்கிறது. மறுமையிலோ அது சொல்லமுடியாத வியாகுலத்தை உண்டுபண்ணும்.

(6) பிறருக்கு நன்மைசெய்யவேண்டுமென்றிருக்கிறவர்கள் அவர்களுடைய பாவத்தை உணரும்படிக்கேற்ற வகையை முதலாவது பிரயோகிப்பது உத்தமம்.

### வச. 21—38.

(7) மனச்சாட்சி விழித்துக்கொள்ளுகையில் இன்னொருவர் நம்மேல் குற்றஞ்சாட்டவேண்டியது அவசியமிராது.

(8) நீதிமான்களுக்கு வரும் உபத்திரவங்கள் அநேகமாய் இருக்கும். ஆனால் அவைகள் எல்லாவற்றிலுமிருந்து தேவன் அவர்களை நீங்கலாக்கி இரட்சிப்பார். அவர்கள் தங்களுக்கு விரோதமாயிருக்கிறதென்று எண்ணுகிறவைகளே அவர்களுக்கு அநுகூலமாய் முடிவதுமுண்டு.

(9) நீதிமான்களுடைய கடைசி முடிவு சமாதானம். நம்முடைய எல்லா இக்கட்டுக்காலங்களிலும் இயேசுவையே நோக்கிப் பார்ப்போமாக. அவர் விருதாவிலே மனுப்புத்திரரைச் சஞ்சலப்படுத்துகிறவரல்ல. அவர் செய்கிறவைகள் இருளைப்போலக் காணப்படலாம். ஆனால் நாம் அப்படித் தகாத எண்ணங்கொள்வதை முழுவதுமாய் விட்டுவிட்டு, ஆபத்திலும் அவரைத் தஞ்சமாக்கிக்கொள்வோமாக.

## 43. அதிகாரம்.

1. யாக்கோபு பென்யமீனைப் போகவிட்டது. 15. யோசேப்பு தன் சகோதரரை ஏற்றுக்கொண்டது. 31. அவன் அவர்களுக்கு ஒரு விருந்து செய்தது.

1,2 தேசத்திலே [1]பஞ்சம் கொடிதாயிருந்தது.—எகிப் [1] ஆதி. 41. 54 57. புலம்பல். 5 10.
திலிருந்து அவர்கள் கொண்டுவந்த தானியம் செலவ
ழிந்தபோது, அவர்கள் தகப்பன் அவர்களை நோக்கி:
நீங்கள் திரும்பப் போய், நமக்குக் கொஞ்சம் தானியம்
3 வாங்கிக்கொண்டு வாருங்கள் என்றான்.—அதற்கு
யூதா: [2]உங்கள் சகோதரன் உங்களோடேகூட வரா [2] ஆதி. 42. 20
விட்டால், நீங்கள் என் முகத்தைக் காண்பதில்லை
என்று அந்த மனிதன் எங்களுக்குச் சத்தியமாய்ச்
4 சொன்னான்.—எங்கள் சகோதரனை நீர் எங்களோடே
கூட அனுப்பினால், நாங்கள் போய், உமக்குத் தானி
5 யம் வாங்கிக்கொண்டுவருவோம்.—அனுப்பாவிட்டால்,
நாங்கள் போகமாட்டோம்; உங்கள் சகோதரன் உங்க
ளோடேகூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைக்
காண்பதில்லை என்று அந்த மனிதன் எங்களோடே
சொல்லியிருக்கிறான் என்றான்.

6 அதற்கு இஸ்ரவேல்: உங்களுக்கு இன்னும் ஒரு
சகோதரன் உண்டென்று நீங்கள் அந்த மனிதனுக்குச்
சொல்லி, ஏன் எனக்கு இந்தத் துன்பத்தை வருவித்தீர்
7 கள் என்றான்.—அதற்கு அவர்கள்: அந்த மனிதன்,
உங்கள் தகப்பன் இன்னும் உயிரோடிருக்கிறாரா? உங்
களுக்கு இன்னும் ஒரு சகோதரன் உண்டா? என்று
எங்களையும் எங்கள் வம்சத்தையும் குறித்து விப
மாய் விசாரித்தான்; அந்தக் கேள்விகளுக்குத்தக்கதாக
உள்ளபடி அவனுக்குச் சொன்னோம்; உங்கள் சகோத
ரனை உங்களோடேகூட இங்கே கொண்டுவாருங்கள்
என்று அவன் சொல்லுவான் என்பதை நாங்கள் அறிந்
திருந்தோமா என்றார்கள்.

8 பின்னும், யூதா தன் தகப்பனாகிய இஸ்ரவேலை
நோக்கி: நீரும் நாங்களும் எங்கள் குழந்தைகளும்
சாகாமல் உயிரோடிருக்கும்படி, நாங்கள் புறப்பட்டுப்
போகிறோம், பிள்ளையாண்டானை என்னோடே அனுப்
9 பும்.—அவனுக்காக [1]நான் உத்தரவாதம்பண்ணுவேன்; [1] ஆதி. 44. 32. பிலேமோன். 18, 19.
அவனை என்னிடத்திலே கேளும், நான் அவனை உம்
மிடத்தில் கொண்டுவந்து, உமக்கு முன்பாக நிறுத்தா
மற்போனால், எந்நாளும் அந்தக் குற்றம் என்மேல்
10 இருப்பதாக.—நாங்கள் தாமதியாதிருந்தோமானால்,
இதற்குள்ளே இரண்டாந்தரம் போய்த் திரும்பிவந்தி
11 ருப்போமே என்றான்.—அதற்கு அவர்கள் தகப்பனா
கிய இஸ்ரவேல்: அப்படியானால், ஒன்று செய்யுங்கள்;
இந்தத் தேசத்தின் உச்சிதமான வஸ்துக்களில் கொஞ்
சம் பிசின் தைலமும், கொஞ்சம் தேனும், கந்தவர்க்
கங்களும், வெள்ளைப்போளமும், தொபிந்து கொட்
டைகளும், வாதுமைக்கொட்டைகளும் உங்கள் சாக்
குகளில் போட்டு, அந்த மனிதனுக்குக் [2]காணிக்கை [2] ஆதி. 32. 20: 37. 25. எசே. 27. 17. ஓசி. 18. 16. எரே. 8. 22.

---

43. அதிகாரம்.

**7. "விபரமாய் விசாரித்தான்."** ஆதி. 42: 13. வசனத்தைப் பார்க்கையில் யோசேப்பின் சகோதரர் தங்கள் குடும்பகாரியத்தைக்குறித்து மற்றவர்கள் கேளாமல் சுதாவாய்ச் சொன்னதுபோல தோன்றும். இங்கே சொல்லப்பட்டிருக்கிற சங்கதி விசாரணையிலே நடந்திருக்கவேண்டியது. யோசேப்பு இயற்கையாய்த் தன் தகப்பனையும் சகோதரனையும் குறித்த செய்திகளை அறிய வாஞ்சையுள்ளவனாய்க் குடும்பத்துக்கு அடுத்த பற்பல கேள்விகளைக் கேட்டான்.

**8. "பிள்ளையாண்டான்."** பென்யமீன் இப்போது இருபதுக்கும் முப்பதுக்கும் இடையுள்ள வயதாயிருக்கலாம். யூதா, பென்யமீன்பேரில் வைத்த பாசத்தினாலும் அநேகவருஷங்களுக்கு அவனுக்கு மூத்திருந்ததினாலும் இப்படிப்பட்ட வாசகத்தை உபயோகித்தான்.

**9. "எந்நாளும் அந்தக் குற்றம் என்மேல் இருப்பதாக."** இது கன்னியமுள்ள மனுஷன் சொல்லும் உத்தம வார்த்தையாயிருக்கிறது. தகப்பனுக்கு முன்பாக எந்நாளும் குற்றவாளியாகக் காணப்படுவது பெருந் துரோகம் என்பது யூதாவின் மனதிலே ஆழமாய்ப் பதிந்திருந்தது.

**11. "தேசத்தின் உச்சிதமான வஸ்துக்களில்."** எபிரெயுவில் "தேசத்தின் பாட்டுகளில்" என்றிருக்கிறது. அதாவது கவிகளில் சிறந்து பாடப்பட்டிருக்கிற உச்சிதமான விளைவுகள் என்றர்த்தம். இங்கே சொல்லப்பட்டிருக்கிற காணிக்கைகளைப் பார்க்கையில் தானியங்கள் விளைவதற்குப் போதுமான மழை பலஸ்தீனாவில் பெய்யவில்லை என்றாலும் விருக்ஷங்கள் முழுவதுமாய்ப் பட்டுப்போகாதபடிக்கு அற்ப சொற்பமாய்ப் பெய்தது என்றறியவேண்டும்.

12 யாகக் கொண்டுபோய்க் கொடுங்கள். — பணத்தை
இரட்டிப்பாய் உங்கள் கைகளில் கொண்டுபோங்கள்,
[1]சாக்குகளின் வாயிலே திரும்பக் கொண்டுவந்த பணத் [1] ஆதி. 42. 25, 35.
தையும் கொண்டுபோங்கள்; அது கைப்பிசகாய் வந்தி
13 ருக்கும். — உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொண்டு,
அந்த மனிதனிடத்துக்கு மறுபடியும் போங்கள். —
14 அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோத
ரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்
படிக்கு, [2]சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத் [2] நெகே. 1. 11. சங். 37. 5.
தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக;
[3]நானோ பிள்ளையற்றுப்போனவனைப்போல் இருப் [3] எஸ்தர்.
பேன் என்றான்.

15 அப்பொழுது அவர்கள் காணிக்கையையும் தங்கள்
கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்துக்
கொண்டு, பென்யமீனையும் கூட்டிக்கொண்டு, பிரயா
ணப்பட்டு, எகிப்துக்குப் போய், யோசேப்பின் சமு
16 கத்தில் வந்து நின்றார்கள். — பென்யமீன் அவர்களோ
டேகூட வந்திருக்கிறதை யோசேப்பு கண்டு, தன்
வீட்டு [4]விசாரணைக்காரனை நோக்கி: நீ இந்த மனிதரை [4] ஆதி. 44. 1.
வீட்டுக்கு அழைத்துப்போய், சாப்பாட்டுக்கு வேண்
டியவைகளை அடித்து, ஆயத்தம்பண்ணு, மத்தியானத்
திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்கள் என்

**12.** "பணத்தை இரட்டிப்பாய்." (அதி. 22: 23.) வாக்கியங்களைக் கவனிக்கையில் முன் வாங்கின தானியத்துக்குரிய கிரயத்தையும் பின்னும் வாங்கப்போகிற தானியத்துக்குரிய ரொக்கத்தையும் என்றாகும்.

**14.** "சர்வவல்லமையுள்ள தேவன்." யாக்கோபு இங்கே தேவநாமத்தை எடுத்துச் சொல்லுகையில் அவர் ஆபிரகாமுக்குத் தம்மை வெளிப்படுத்தினபேரை எடுத்துக்காட்டுகிறான். அந்தப் பேராலே அவர் ஆபிரகாமோடே செய்த உடம்படிக்கையை யாக்கோபுக்கு உறுதிப்படுத்தினார். இப்போது தன்னையுந் தன் குடும்பத்தையும் அவருடைய பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுக்கிறான்.

"நானோ பிள்ளையற்றுப்போனவனைப்போல் இருப்பேன்." இது அவிசுவாசத்துக்குக் குறிப்பாயிருப்பதுபோல தேவசித்தத்துக்குக் கீழமைந்திருப்பதற்குங் குறிப்பாயிருக்கிறது.

**16.** "அடித்து." எகிப்திலே உயர்குலத்தோரும் முக்கியமாய் பூசாரிகளும் மாம்சபக்ஷணம் பண்ணமாட்டார்கள் என்று எண்ணுவது வியர்த்தம் என்பதை உற்சவசித்திரங்களைக் கவனிக்கிறதினால் அறியலாம். அந்தக்காலத்தில் எகிப்திலே மாம்சபக்ஷணஞ் செய்வது வழக்கம். ஒரு நாட்டில் பரிசுத்தமுள்ளதாக





றான். — அவன் தனக்கு யோசேப்பு சொன்னபடியே
செய்து, அந்த மனிதரை யோசேப்பின் வீட்டுக்கு
அழைத்துக்கொண்டுபோனான்.

18 தாங்கள் யோசேப்பின் வீட்டுக்குக் கொண்டுபோ
சப்படுகிறதை அவர்கள் கண்டு பயந்து, முன்னே நம்
முடைய சாக்குகளில் இருந்த பணத்தினிமித்தம் நம்
மேல் [1]குற்றம் சுமத்தி, நம்மைப் பிடித்துச் சிறைக [1] யோபு. 30. 14.
ளாக்கி, நம்முடைய கழுதைகளை எடுத்துக்கொள்ளும்
படி நம்மைக் கொண்டுபோகிறார்கள் என்று சொல்லி,—
19 யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனண்டையில்
சேர்ந்து, வீட்டு வாசற்படியிலே அவனோடே பேசி:—
20 ஆண்டவனே, நாங்கள் தானியம் கொள்ளும்படி [2]முன் [2] ஆதி. 42. 3. 10, 27, 35.
21 னே வந்து போனோமே; — நாங்கள் தங்கும் இடத்தில்
போய் எங்கள் சாக்குகளைத் திறந்தபோது, நாங்கள்
நிறுத்துக்கொடுத்த நிறையின்படியே அவனவன் பணம்
அவனவன் சாக்கின் வாயிலே இருக்கக்கண்டோம்;
அதை நாங்கள் திரும்பவும் எங்கள் கையிலே கொண்
22 டுவந்திருக்கிறோம். — மேலும், தானியம் கொள்ளும்படி
வேறே பணமும் எங்கள் கையில் கொண்டுவந்திருக்
கிறோம்; நாங்கள் முன் கொடுத்த பணத்தை எங்கள்
சாக்குகளில் போட்டது இன்னார் என்று அறியோம்
23 என்றார்கள். — அதற்கு அவன்: உங்களுக்குச் [3]சமா [3] நியா. 6. 23. 1 சாமு. 25. 6. லூக். 24. 36.
தானம்; பயப்படவேண்டாம்; உங்கள் தேவனும் உங்
கள் தகப்பனுடைய தேவனுமாயிருக்கிறவர் உங்கள்
சாக்குகளில் அதை உங்களுக்குப் புதையலாகக் கட்

என்னப்பட்ட மிருகம் இன்னொரு நாட்டில் தாராளமாய்ப் புசிப்புக்காக உபயோகிக்கப்பட்டுவந்தது. பொதுப்படப் பூசாரிகள் காளை மாம்சத்தைச் சாப்பிட்டுவந்தார்கள். ஆனால் ஆடு, பன்றி, மீன் இவைகளைச் சாப்பிடமாட்டார்கள்.

**19.** "வீட்டு வாசற்படியிலே." தேசாதிபதியின் வீட்டுக்குக் கொண்டுபோகப்படுவதைக் கண்டபோது தங்களுக்கு மோசம் நேரிடப்போகிறதென்று பயந்தார்கள். யோசேப்பின் ஊழியக்காரனை [illegible] அவன் அண்டைக்குக் கொண்டுவந்துவிட்டு அவர்களை வீட்டுக்குள்ளே அழைத்துக்கொண்டுபோனான்.

**23.** "உங்கள் தேவனும், ௸." யோசேப்பு தன் உக்கிராணக்காரனுக்கு இப்படித் தன் சகோதரரோடே பேசவேண்டும் என்று உத்தரவுபண்ணியிருக்கவேண்டும். அல்லவென்றால் அவன் சத்தியமார்க்கத்தைத் தன் எஜமானுக்குப் போதித்திருக்கவேண்டும்.

டனேயிட்டார்; நீங்கள் கொடுத்த பணம் என்னிடத்
தில் வந்து சேர்ந்தது என்று சொல்லி, சிமியோனை
வெளியே அழைத்துவந்து, அவர்களிடத்தில் விட்
டான்.

24 மேலும், அந்த மனிதன் அவர்களை யோசேப்பின்
வீட்டுக்குள்ளே கூட்டிக்கொண்டுபோய், அவர்கள்
தங்கள் [1]கால்களைக் கழுவும்படி தண்ணீர் கொடுத்து, [1] ஆதி. 18. 4; 24. 32.
அவர்களுடைய கழுதைகளுக்குத் தீவனம்போட்
25 டான்.—தாங்கள் அங்கே போஜனம் செய்யப்போகிற
தை அவர்கள் கேள்விப்பட்டபடியால், மத்தியானத்
தில் யோசேப்பு வருமளவும் காணிக்கையை ஆயத்த
26 மாய் வைத்துக் காத்துக்கொண்டிருந்தார்கள்.—யோ
சேப்பு வீட்டுக்கு வந்தபோது, அவர்கள் தங்கள்
கையில் இருந்த காணிக்கையை வீட்டுக்குள் அவனி
டத்தில் கொண்டுபோய் வைத்து, [2]தரைமட்டும் [2] ஆதி. [illegible] 10.
27 குனிந்து, அவனை வணங்கினார்கள்.—அப்பொழுது
அவன்: அவர்கள் [3]சுகசெய்தியை விசாரித்து, நீங்கள் [3] ஆதி. 37. 14: 42. 11, 13.
சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயி
ருக்கிறாரா? அவர் இன்னும் உயிரோடிருக்கிறாரா?
28 என்று அவர்களிடத்தில் விசாரித்தான்.—அதற்கு
அவர்கள்: எங்கள் தகப்பனாகிய உமது அடியான்
சுகமாயிருக்கிறார், இன்னும் உயிரோடிருக்கிறார் என்று
29 சொல்லி, [4]குனிந்து வணங்கினார்கள்.—அவன் தன் [4] ஆதி. 37. 7, 10.
கண்களை ஏறெடுத்து, [5]தன் தாய் பெற்ற குமாரனாகிய [5] ஆதி. 35. 17, 18: 42. 13.
தன் சகோதரன் பென்யமீனைக் கண்டு, நீங்கள் எனக்
குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா

**25.** "அவர்கள் கேள்விப்பட்டபடியால்." யோசேப்பு எகிப்திய பா ஷையில் அவர்களுக்கு விருந்துசெய்யும்படி தன் பணிவிடைக்காரனுக்கு உத்தரவுபண்ணினதால் அவர்கள் உடனே அதை அறிந்துகொள்ள ஏதுவில்லா மற்போயிற்று. உக்கிராணக்காரன் இப்போது வீட்டுக்கு அவர்களைக் கொண் டுவந்த நோக்கத்தைச் சொன்னான்.

**28.** "குனிந்து வணங்கினார்கள்." யோசேப்பு பதினொரு அரிக்கட்டுகள் தன்னை வணங்கினதாகக் கண்ட சொப்பனம் இப்போது நிறைவேறிற்று. சகோதரர் தானியம் வாங்கவந்ததில் சொப்பனம் நிறைவேறுதலுக்கு எவ்வளவு நெருங்கிய சம்பந்தமிருக்கிறது.

**29.** "உங்கள் இளைய சகோதரன் இவன்தானா?" யோசேப்பு விற்கப் பட்டபோது பென்யமீன் ஏழு அல்லது எட்டுவயதாயிருந்தான். இப்போது முப்பது பிராயமுள்ளவனாயிருந்திருக்கலாம்.





என்று கேட்டு, [1]மகனே, தேவன் உனக்குக் கிருபை [1] யோசு. 7. 19. மத். 9. 2.
செய்யக்கடவர் என்றான்.

30 யோசேப்பின் [2]உள்ளம் தன் சகோதரனுக்காகப் [2] 1 இரா. 3. 26. எரே. 31. 18. பிலி. 1. 8. கொ லோ. 3. 12.
பொங்கினபடியால், அவன் அழுகிறதற்கு இடம்
தேடி, தீவிரமாய் அறைக்குள்ளே போய், [3]அங்கே [3] ஆதி. 42. 24.
அழுதான்.—பின்பு, அவன் தன் முகத்தைக் கழுவி
வெளியே வந்து, தன்னை அடக்கிக்கொண்டு, போஜ
32 னம் வையுங்கள் என்றான்.—எகிப்தியர் எபிரெயரோ
டே சாப்பிடமாட்டார்கள்; [4]அப்படிச் செய்வது எகிப் [4] ஆதி. 46. 34. யாத். 8. 26.
தியருக்கு அருவருப்பாயிருக்கும்; ஆகையால், அவ
னுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும்,
அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் தனிப்பட
33 வும் வைத்தார்கள்.—அவனுக்கு முன்பாக, மூத்தவன்
முதல் இளையவன்வரைக்கும் அவனவன் வயதின்படி
யே அவர்களை உட்காரவைத்தார்கள்; அதற்காக
அவர்கள், ஒருவரை ஒருவர் பார்த்து ஆச்சரியப்பட்
34 டார்கள்.—அவன் தனக்கு முன்வைக்கப்பட்டிருந்த
போஜனத்தில் அவர்களுக்குப் பங்கிட்டு அனுப்பி
னான்; அவர்கள் எல்லாருடைய பங்குகளைப்பார்க்கி
லும் பென்யமீனுடைய பங்கு [5]ஐந்து மடங்கு அதிக [5] ஆதி. 45. 22.
மாயிருந்தது; அவர்கள் பானம்பண்ணி, அவனுடனே [6] பிர. 9. 7. மத். 11. 19. யோவா. 2. 10.
[6]சந்தோஷமாயிருந்தார்கள்.

"மகனே." யோசேப்பு பென்யமீனுக்கு வயதுக்கு மூத்தவனானதால் மாத் திரமல்ல தேசாதிபதியாகவும் இப்படிச் சொன்னான்.

**32.** "அவனுக்குத் தனிப்படவும், ௸" பூர்வீகத்தில் ஜாதிவேற்றுமை எகிப் தில் மிகுதியாய் பார்க்கப்பட்டது. எகிப்தியருக்கு மனவருத்த முண்டாக்க யோசேப்புக்கு எவ்வளவும் மனமில்லை. ஆதலால் அவர்களுக்குப் பிரத்தியே கமாய்ப் போசனம் வைத்தான்.

**33.** "ஆச்சரியப்பட்டார்கள்." யோசேப்பு தன் சகோதரரை அவர்கள் வயதின்படியே வரிசையாய் வைத்ததைக் கண்டபோது அவன் விசேஷித்த வரம் பெற்றவனென்று எண்ணியிருக்[illegible]

**34.** "ஐந்து மடங்கு." பென்யமீன்பேரில் [illegible] காட்டும்படி யோசேப்பு ஐந்துமடங்காகப் போசனத்தை அனுப்பினான். அதோடே சகோ தரர் அதினிமித்தம் பென்யமீன்பேரில் எரிச்சலடைகிறார்களா என்று பார்க்க வும் அப்படிச் செய்தான் என்று நினைக்கலாம்.

"பானம்பண்ணி அவனுடனே சந்தோஷமாயிருந்தார்கள்." யோ சேப்பைப்பற்றிய பயமான எண்ணம் நீங்கிப்போக அவனுடனே களிப் பாய்ப் பேசி உல்லாசமாயிருந்தார்கள்.

## 44. அதிகாரம்.

1. யோசேப்பு தன் சகோதரனை நிறுத்த உபாயம்பண்ணினது. 14. யூதா யோசேப்பை நோக்கி வணக்கமாய் மன்றாடினது.

1 பின்பு, அவன் தன் வீட்டு விசாரணைக்காரனை
நோக்கி: நீ இந்த மனிதருடைய சாக்குகளை அவர்கள்
ஏற்றிக்கொண்டுபோகத்தக்க பாரமாய்த் தானியத்தினா
லே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவன் சாக்
2 கின் வாயிலே போட்டு,—இளையவனுடைய சாக்கின்
வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என் பானபாத்திரத்
தையும் தானியத்துக்கு அவன் கொடுத்த பணத்தை

### படிப்பினை.

#### வச. 1—14.

(1) பின்னான காரியங்களைக்குறித்துத் தீர்மானஞ் செய்வதில் வெகு எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சேவகனுத்தில் சம்பவிக்கும் காரியங்கள் நாம் செய்ததினைத்தின்படி நடக்க எட்டாதிருக்கலாம். அந்தந்தக் காலத்தச் சம்பவங்களுக்குத் தக்கதாக கர்த்தருக்குள் நம்முடைய கடமைகளை நிறைவேற்றுவது உத்தமம். அதிக்காய் ஒரு தீர்மானஞ் செய்து அதை நிறைவேற்றக் கூடாதபட்சத்தில் நம்முடைய குற்றத்தை அறிக்கையிடுவது நல்லது. தீர்மானஞ் செய்வதில் உறுதி புகழப்படத்தக்கதென்றாலும் அனிகாத்தோடே பிடிவாதமாய் அதில் நிலைநிற்கும்படி பார்ப்பது நல்லதல்ல.

(2) புறம்பான நன்மைகளுக்காக நாம் பண்ணுகிற ஜெபங்கள் எல்லாம் "உம்முடைய சித்தஞ் செய்யப்படுவதாக" என்று முடியவேண்டும்.

(3) வெள்ளியும் பொன்னும் பஞ்ச வேளையில் உதவவில்லையே. கோபாக்கினையின் நாளில் அவைகள் என்னத்துக்குதவும்.

#### வச. 15—34.

(4) பயம் ஒருதரம் நம்மைப் பிடிக்கையில் சம்பவிக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் அது நம்மைத் தாக்குவதாயிருக்கிறது. ஆகுல் உத்தமருணம் தைரியத்தை உண்டுபண்ணும்.

(5) ஞானியோடு வாசஞ்செய்கிறவன் ஞானியாவான், நல்ல சம்பாஷணை எப்போதும் பிரயோஜனமுள்ளது.

(6) நமக்குச் சொந்தமல்லாததை யாதாமொருவர் நமக்குத் தருகையில் அதைச் சொந்தக்காரரிடத்தில் ஒப்புவிப்பது நம்முடைய கடமை.

(7) [illegible] நமக்கு வரும் பயம் தேவ சவாக நமக்கு அருளப்படுகிறதாம்.

(8) நமது இரட்சகராகிய நீதக வானத்துக்கும் பூமிக்கும் அதிகாரக்கர்த்தராயிருக்கையில் [illegible] அஞ்சவேண்டியதில்லை. நாம் அவருடைய இராச்சியத்திலே அவரோடேகூடப் போஜனபானஞ் செய்யும்படியான சலாக்கியத்தைப் பெற்று வாழலாம்.

### 44. அதிகாரம்.

2. **"வெள்ளிப் பாத்திரமாகிய, ஓ."** பென்யமீனைத் தன்னண்டையில் நிறுத்திவைத்துக்கொள்ளவேண்டும் என்பதே யோசேப்பின் நோக்கமாயிருந்தது. ஆனால் யூதா எடுத்துக்காட்டின நியாயங்களினால்யோசேப்பின் மனம்





யும் போடு என்று கட்டளையிட்டான், யோசேப்பு
சொன்னபடியே அவன் செய்தான்.
3 அதிகாலையிலே அந்த மனிதர்கள் தங்கள் கழுதை
களை ஓட்டிக்கொண்டு போகும்படி அனுப்பிவிடப்பட்
4 டார்கள்.—அவர்கள் பட்டணத்தை விட்டுப் புறப்
பட்டு, வெகுதூரம் போவதற்குமுன்னே, யோசேப்பு
தன் வீட்டு விசாரணைக்காரனை நோக்கி: நீ புறப்பட்டுப்
போய், அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைப்
பிடித்து: [1]நீங்கள் நன்மைக்குத் தீமை செய்தது
என்ன?—அது என் எஜமான் பானம்பண்ணுகிற
பாத்திரம் அல்லவா? *அது போனவகை ஞானதிருஷ்
டியால் அவருக்குத் தெரியாதா? நீங்கள் செய்தது தகா
தகாரியம் என்று அவர்களோடே சொல் என்றான்.—
6 அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து, தன்னிடத்
தில் சொல்லியிருந்த வார்த்தைகளை அவர்களுக்குச்
7 சொன்னான்.—அதற்கு அவர்கள்: எங்கள் ஆண்டவன்
இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறது என்ன?
[2]இப்படிப்பட்ட காரியத்துக்கு உம்முடைய அடியா
8 ராகிய எங்களுக்கும் வெகுதூரம். இதோ, எங்கள் சாக்குக

[1] நீதி. 17. 13.

* அவர் குறிபார்க்கிறது அதினாலே அல்லவோ?

[2] யோசு. 22. 22. 2 இரா. 8. 13.

பொங்கினதால் தன் தகப்பனை வருத்தப்படுத்த எவ்வளவும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. தன் சகோதரரும்முன் தன்பேரில் பொறாமையாயிருந்ததுபோல பென்யமீன்பேரில் பொறாமையாய் இராமல் மிகப் பாசமாயிருக்கிறார்கள் என்றும் அறிந்துகொண்டான்.

5. **"ஞானதிருஷ்டியால் அவருக்குத் தெரியாதா?"** "அவர் குறிபார்க்கிறது அதினால் அல்லவா?" என்றிருப்பது சரியாயிருக்கும். இந்த வார்த்தைகள் யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரன் சொன்னவைகளாயிருக்கின்றன. எகிப்தியருக்குள்ளே வட்டில் குறிபார்ப்பது வழக்கமாயிருந்தது. [illegible] திரம் நிறைய தண்ணீரை வார்த்து அதிலே பொன், வெள்ளி முதலியவைகளைப் போட்டு தண்ணீர் கவிழுதல் குமிழி எழும்புதல் இவைகளைப் பார்த்துக் குறிசொல்லுவார்கள். அல்லது தண்ணீர் நிறைந்த பாத்திரத்தில் ஒரு பாகத்தைக் கண்சலிக்குமட்டும் உற்றுப் பார்த்துக்கொண்டேயிருக்க மனதில் ஓர்வித மயக்கம் உண்டாகி சொப்பன நிலைமைக்கு வரவே குறிசொல்லுவார்கள். யோசேப்பு தெய்வீக வரம்பெற்று இரண்டு பிரதானிகளின் சொப்பனங்களையும் பார்வோனுடைய சொப்பனங்களையுஞ் சரியானபடி வியார்த்திசெய்து அந்த வியார்த்தியின்படியே காரியங்களுஞ் சம்பவித்ததால் யோசேப்புக்குக் குறிசொல்லுஞ் சக்தியிருந்ததாக எகிப்தியர் எண்ணுவது இயல்பு.

ளின் வாயிலே நாங்கள் கண்ட [1] பணத்தைக் கானான் | [1] ஆதி. 43. 21.
தேசத்திலிருந்து திரும்ப உம்மிடத்துக்குக் கொண்டு
வந்தோமே; நாங்கள் உம்முடைய எஜமானின் வீட்டி
லிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திரு
9 டிக்கொண்டு போவோமா?—உம்முடைய அடியாருக்
குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ [2] அவன் | [2] ஆதி. 31. 32.
கொலையுண்ணக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்ட
10 வனுக்கு அடிமைகளாவோம் என்றார்கள்.—அதற்கு
அவன்: நீங்கள் சொன்னபடியே ஆகட்டும்; எவனிடத்
தில் அது காணப்படுமோ, [3] அவன் எனக்கு அடிமை | [3] யாத். 22. 3.
யாவான்; நீங்கள் குற்றமற்றிருப்பீர்கள் என்றான்.—
11 அப்பொழுது அவர்கள் தீவிரமாய் அவனவன் தன்
தன் சாக்கைத் தரையிலே இறக்கி, தங்கள் சாக்கு
12 களைத் திறந்துவைத்தார்கள்.—மூத்தவன் சாக்குமுதல்
இளையவன் சாக்குமட்டும் அவன் சோதிக்கும்போது,
அந்தப் பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டு
பிடிக்கப்பட்டது.

13 அப்பொழுது அவர்கள் தங்கள் [4] வஸ்திரங்களைக் | [4] ஆதி. 37. 29. 34. எண். 14. 6. 2 சாமு. 1. 11.
கிழித்துக்கொண்டு, அவனவன் தன் கழுதையின்மேல்
பொதியை ஏற்றிக்கொண்டு, பட்டணத்திற்குத் திரும்
14 பினார்கள்.—யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்

9. "அவன் கொலையுண்ணக்கடவன்." யோசேப்பின் சகோதரர் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று தெளிவாய் அறிந்துகொண்டவர்களாய்த் தாங்கள் களவு செய்திருப்பதில்லை என்று சொன்னதோடே திடீரென யோசியாமல் தங்களுக்குள்மாத்திரம் யாரிடத்தில் கண்டுபிடிக்கப்படுமோ அவன் கொலையுண்ணப்படக்கடவன் என்றும் மற்றவர்கள் அடிமைகளாவார்கள் என்றுந் தண்டனையைத் [illegible] யாக்கோபும் லாபானுடைய தெராபீம் காரியத்தில் ஆராயாதபடி இப்படியே தீர்த்தான். எல்லாருஞ் சுமையை இறக்கி வைக்க உக்கிராணக்காரன் ரூபின் சாக்கைச் சோதித்தான். அங்கே பணமிருந்தது, ஆனால் பாத்திரமில்லை. மற்றவர்களுடைய சாக்கிலும் பணத்தைக் கண்டுபிடித்தான். ஆனால் அதைக் கண்சாடையாய் விட்டுவிட்டான். கடைசியில் பென்யமீனுடைய சாக்கைப் பரிசோதிக்கையில் அங்கே பாத்திரமிருந்தது. ஒவ்வொருவனுக்குந் தான் நினையாதவண்ணம் பணம் இருந்ததையும் பென்யமீன் சாக்கில் வெள்ளிப்பாத்திரம் இருந்ததையும் கண்டபோது திகிலடைந்து கலக்கமுள்ளவர்களாகி சொல்லமுடியாவண்ணம் துக்கசாகரத்தில் அமிழ்ந்தினார்கள்.





பின் வீட்டுக்குப் போனார்கள். யோசேப்பு அது
வரையும் அங்கே இருந்தான்; [1] அவனுக்கு முன்பாகத் | [1] ஆதி. 37. 7.
தரையிலே விழுந்தார்கள்.—யோசேப்பு அவர்களை
நோக்கி: நீங்கள் செய்த இந்தக் காரியம் செய்தீர்கள்? [2] என் | [2] 5 வசனம்.
னைப்போலொத்த மனிதனுக்கு ஞானதிருஷ்டியினால்
காரியம் தெரியவரும் என்று அறியாமல் போனீர்களா
16 என்றான்.—அதற்கு யூதா: என் ஆண்டவனாகிய உம்
மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்
தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்
கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிர
மத்தைத் தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை
வைத்திருந்தவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு
17 அடிமைகள் என்றான்.—அதற்கு அவன்: [3] அப்படிப் | [3] ஆதி. 17. 15.
பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக; எவன்

15. "என்னைப்போலொத்த மனிதனுக்கு ஞானதிருஷ்டியினால்." மற்றப்பிரதிகளில் "என்னைப்போன்றவன் நிச்சயமாய்க் குறிபார்க்க கூடுமென்பதை அறிவீர்களாக" என்றிருக்கிறது. யோசேப்பு குறிசாஸ்திரத்தைப் பிரயோகித்தான் என்று நாம் எண்ணக்கூடாது. ஏனென்றால் அவன் பார்வோனிடத்தில் சொன்னதைக் கவனிக்கையில் இனிவரும் காரியங்களைத் தெரிவிப்பது தேவனுக்குமாத்திரம் உரியது என்று அவன் தெளிவாய் அறிந்திருந்தான் என்று பார்க்கிறோம். இங்கே அவன் தன் சகோதரரிடத்தில் இருந்த வண்ணத்துக்குத் தக்கதாகப் பேசியிருக்கிறான். யோசேப்பு தன் சகோதரருக்கு இப்படி மாரீசம் காட்டினது சரியா? தனக்குக் குறிசொல்லத் தெரியாதிருக்க தனக்கு அது தெரியும் என்று தன் சகோதரர் எண்ணும்படி செய்தது தப்பிதமல்லவா? என்று நாம் கேட்கலாம். யோசேப்பு விசேஷித்த பக்திமானும் சுத்தனும் உண்மையுமுள்ளவனுமாயிருந்தது மெய். என்றாலும் அவன் நமக்குப் பூரணமாதிரியல்ல. அவன் தவறினதுண்டானால் அவனுடைய தவறுகளையல்ல அவனுடைய நற்கிரியைகளையே நாம் பின்பற்றவேண்டும்.

17. "அப்படிப்பட்ட செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக." யோசேப்பு பணத்தைக்குறித்து யாதொன்றும் சொல்லவில்லை. பென்யமீனைத் தன்னிடத்தில் வைத்துக்கொள்ளும்படி தீர்மானித்து மற்றவர்களைத் தன் தகப்பன்வீட்டுக்குச் சமாதானத்தோடே போகும்படி சொன்னான். அவர்கள் முன் யோசேப்பை அடிமையாக விற்றபோது கடின இருதயமுடையவர்களாயிருந்ததுபோல இப்போதும் இரக்கமில்லாதவர்களாய் இருந்தால் பென்யமீனை வருத்தத்துக்குள் தனிமையாய் விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். ஆனால் அவர்கள் இருதயம் இப்போது மாறுதலடைந்திருந்தால் பென்யமீனை மீட்பது கூடாத காரியமாக அவர்களுக்குத் தோன்றினாலும் எப்படியாவது அவனைக் காப்பாற்ற வேண்டும் என்று அருமுயற்சி செய்தார்கள். பென்யமீன் குற்றவாளியல்ல

வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே
எனக்கு அடிமையாயிருப்பான்; நீங்களோ சமாதா
னத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள்
என்றான்.
18 அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து:
ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய
செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்
பீராக; [1]அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்ப — [1] ஆதி. 18. 30, 32. யாத. 32. 22.
19 தாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர்.—உங்க
ளுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று
என் ஆண்டவன் உம்முடைய அடியாரிடத்தில் கேட்
20 டீர்.—அதற்கு நாங்கள்: எங்களுக்கு முதிர்வயதுள்ள
தகப்பனாரும், [2]அவருக்கு முதிர்வயதிலே பிறந்த ஒரு — [2] ஆதி. 37. 3.
இளைஞனும் உண்டு என்றும், அவனுடைய தமையன்
இறந்துபோனான் என்றும், அவன் ஒருவன்மாத்திர
மே அவனைப் பெற்ற தாயாருக்கு இருப்பதினால் தகப்
பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறார் என்றும் என்
21 ஆண்டவனுக்குச் சொன்னோம்.—அப்பொழுது நீர்
அவனை [3]என்னிடத்துக்குக் கொண்டுவாருங்கள்; என் — [3] ஆதி. 42. 15, 20.

என்பது அவர்களுக்குத் திட்டமாய்த் தெரியும். முந்தின நாளில் தேசாதிபதி அவனுக்கு மிகுந்த தயவைப் பாராட்டினதை வைத்துக்கொண்டு, தன் வேலைகளில் அவனை வைத்துக்கொள்ளும் நோக்கமாய் யோசேப்பு உபாய சூழ்ச்சி செய்திருப்பான் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம். எப்படியும் அவனைத் தங்களோடே திரும்பக் கூட்டிக்கொண்டு போகத்தக்கதாய் நியாயங்களைச் சொன்னார்கள்.

**18.** "யூதா அவனண்டையிலே சேர்ந்து." யூதா வணக்கமாய் யோசேப்பு முன்பாக [illegible] ருக்கேற்றதாக சங்கதியை உள்ளபடி எடுத்துக் காட்டினான். அப்படி எடுத்துக் காட்டினபோது யோசேப்பின்பேரில் அணுவளவு குற்றஞ் சுமத்தாதபடி பார்த்துக்கொண்டான். முடிவிலே தன் தகப்பனுக்காக வேண்டி மாட்சிமையான அபிமானத்தைப் பாராட்டினான். தன் தகப்பன் மிகுந்த துக்கத்தால் வியாகுலப்பட்டு அகால மரணமாய் மரித்துப் போகாதபடிக்குப் பென்யமீனுக்காகத் தான் அடிமையாயிருக்கச் சம்மதித்தான். யோசேப்பு யூதாவின் பேச்சைக் கவனித்தபோது, பென்யமீனைத் தற்காலத்துக்கென்று தகப்பனைவிட்டுப் பிரிப்பதும் மோசமாயிருக்கும் என்று பயந்ததோடே தன் சகோதரருக்கும் மன்னிப்புக்கொடுத்து அவர்களை அன்பாய் நடத்தவேண்டும் என்றுந் தீர்மானித்துக்கொண்டான்.





கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும் என்று உமது
22 அடியாருக்குச் சொன்னீர்.—நாங்கள் ஆண்டவனை
நோக்கி: [1]அந்த இளைஞன் தன் தகப்பனை விட்டுப் — [1] ஆதி. 42. 3, 5.
பிரியக்கூடாது, பிரிந்தால் அவர் இறந்துபோவார்
23 என்று சொன்னோம்.—அதற்கு நீர்: உங்கள் இளைய
சகோதரனைக் கொண்டுவாராவிட்டால், நீங்கள் இனி
என் முகத்தைக் காண்பதில்லை என்று உமது அடியா
24 ருக்குச் சொன்னீர்.—நாங்கள் உமது அடியானாகிய
என் தகப்பனிடத்துக்குப் போனபோது, என் ஆண்
டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம்.
25 எங்கள் தகப்பன் எங்களை நோக்கி: [2]நீங்கள் திரும் — [2] ஆதி. 43. 2.
பப் போய், நமக்குக் கொஞ்சம் தானியம் கொள்ளுங்
26 கள் என்று சொன்னார்.—அதற்கு: [3]நாங்கள் போகக் — [3] [illegible] 11. 7.
கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே
வந்தால் போவோம்; எங்கள் இளைய சகோதரன் எங்
களோடே வராவிட்டால், நாங்கள் அந்தப் புருஷனு
27 டைய முகத்தைக் காணக்கூடாது என்றோம்.—அப்
பொழுது உம்முடைய அடியானாகிய என் தகப்பனார்:
[4]என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற் — [4] ஆதி. 30. 23; [illegible] 19.
28 றாள்;—அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து
போய்விட்டான், [5]அவன் பீறுண்டுபோயிருப்பான் — [5] ஆதி. 37. 33.

**28.** "அவன் பீறுண்டுபோயிருப்பான்." யூதாவின் பேச்சில் ராகேலைப் பற்றி வந்ததை யோசேப்பு எவ்வளவு கனிவோடே கேட்டிருப்பான். தன் [illegible] தாயை இழந்தது அவன் மனதுக்கு மிகுந்த வருத்தத்தை உண்டுபண்ணியிருக்கும். மேலும் யோசேப்பு பீறுண்டுபோனான் என்று யாக்கோபு எண்ணிக்கொண்டிருந்தது இப்போதுதான் முதல்முதலாக யோசேப்புக்குத் தெரியவந்தது. இந்தக் காரியங்கள் எல்லாம் யோசேப்பின் மனதில் ஆழமாய்ப்பட, தன்னை அடக்க அவனுக்குக் கூடாமற்போயிற்று.

படிப்பினை.

வச. 1—17.

(1) [illegible] வஞ்சனை செய்கிறவர்கள் தங்களால் கெடுக்கப்பட்டவர்களால் [illegible] படுவார்கள் [illegible] பரீட்சிக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் தங்கள் [illegible] ஒத்துக்கொள்வார்கள். பரீட்சையில் அவர்கள் உண்மையுள்ளவர்களாக விளங்கினால் அங்கீகாரத்துக்குரியவர்களாவார்கள்.

என்றிருந்தேன், இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்
கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.
29 நீங்கள் இவனையும் [1]என்னைவிட்டுப் பிரித்து அனுப்பித்
தப்போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால்,
என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில்
30 இறங்கப்பண்ணுவீர்கள் என்றார். — ஆகையால் இளை
யவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமது அடியா
ரிடத்துக்குப் போனால், [2]அவருடைய ஜீவன் இவனு
டைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிற
31 படியினால், — அவர் இளையவன் வரவில்லை என்று
அறிந்த மாத்திரத்தில் இறந்துபோவார்; இப்படி உமது
அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள்
தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதா
32 ளத்தில் இறங்கப்பண்ணுவோம். — இந்த இளையவனுக்
காக உமது அடியானாகிய நான் என் தகப்பனுக்கு [3]உத்
தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்துக்குக்
கொண்டுவராவிட்டால், நான் எந்நாளும் உமக்கு முன்
பாகக் குற்றவாளியாயிருப்பேன் என்று அவருக்குச்
சொல்லியிருக்கிறேன். — இப்படியிருக்க, இளையவன்
தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடு
கிறேன்; [4]உம்முடைய அடியானாகிய நான் இளையவ
னுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமை
34 யாயிருக்கிறேன். — இளையவனை விட்டு, எப்படி என்
தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்
பனுக்கு நேரிடும் [5]தீங்கை நான் எப்படிக் காண்பேன்
என்றான்.

[1] ஆதி. 42. 36.
[2] 1 சாமு. 18. 1.
[3] ஆதி. 43. 9.
[4] யாத். 32. 32.
[5] யாத் 18. 8 யோபு 31. 29. சங். 116. 3; 119. 143.

(2) காரியங்களை நேராயும் உத்தம வகையாயும் நடத்துவது எப்போதும் நன்மை.

(3) நன்மைக்குத் தீமை செய்வது இழிவான குணம். நாம் தேவனிடத்தில் எண்ணிறந்த நன்மைகளைப் பெற்றனுபவிக்க அவருக்கு நன்றிகெட்ட குணத்தைக் காட்டினால், அவருடைய [illegible] முன்பாக எப்படி நிற்கக்கூடும்?

(4) குற்றவாளிகள் என்று தங்களைக் குறித்துச்சொல்ல மனிதர் வெறுப்படைகிறார்கள். உள்ளத்தைப் பார்த்தாலோ அப்படி வெறுப்படையத்தக்க முகாந்தரத்தைக் காணமாட்டார்கள்.

(5) நாம் குற்றமற்றவர்களானாலும் பரிசோதனைக்குப் பயப்படவேண்டியதாய் நேரிடாது.

(6) குற்றவாளிகளுடைய உள்ளத்திலிருப்பது நமக்குத் தெரியாது; [illegible] அவர்களுக்காக நாம் உத்தரவு சொல்வதில் வெகு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(7) கபடிக்கிறவன் வாய் சீக்கிரத்துக்குள்ளாக அடைபடும்.





## 45. அதிகாரம்.

1. யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினது. 5. அவன் அவர்களுக்குத் தேறுதல் சொல்லியது. 9. அவன் தன் தகப்பனை அழைத்தனுப்பினது. 16. பார்வோன் அதை உறுதிபண்ணினது. 21. யோசேப்பு அவர்களுடைய பிரயாணத்துக்கு வேண்டியவைகளைச் சவதரித்துக்கொடுத்து, அவர்கள் ஒருமித்திருக்கும்படி புத்திசொல்லியது. 25. யாக்கோபு திடன்கொண்டது.

1 அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்
லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக்கொண்டிருக்
கக்கூடாமல்; யாவரையும் என்னைவிட்டு வெளியே

(8) உலக அதிகாரியின் பாதத்தில் இரக்கத்துக்காகக் கெஞ்சுவது நல்ல விவேகமானால் நீதியுள்ள தேவனுக்கு முன்பாக நின்று இரக்கத்துக்காகக் கெஞ்சி மன்றாடுவது எவ்வளவு உத்தமம்.

### வச. 18—34.

(9) அநேக விஷயங்களில் சங்கதியை உள்ளபடி சொல்வதே நியாயம் பெறுவதற்கு [illegible] அனுகூலமாயிருக்கும்.

(10) பிள்ளைகள் தங்கள் தாய்தகப்பன்மாருடைய முதுமைப்பிராயத்திலே அவர்களுக்கு அகாலமரணம் நேரிடாதபடி அவர்களுக்குத் துயருண்டாக்கக்கூடிய [illegible] யாவற்றுக்கும் விலகிக்கொள்ளவேண்டும்.

(11) உள்ளபடி குணப்பட்டவர்கள் அதைத் தங்கள் நடக்கையிலும் சம்பாஷணையிலும் காண்பிப்பார்கள். அதால் அவர்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று விளக்குகிறவர்களாயிருக்கிறார்கள்.

(12) நம்முடைய இரட்சகர் நம்முடைய கண்ணீரின் [illegible] அன்பை ருசிபார்த்த பின்பும் அவர் எப்போதும் பாவத்துக்கு எச்சரிக்கையாயிருக்கத்தக்கதாக அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார்.

(13) அவர் தமது முகத்தை அவர்களுக்குக் காட்டுகையில் அவர் உள்ளம் அவர்களுக்காகப் பொங்குகிறது. அவர் தமது ஜனங்களை [illegible] கிட்டக்குமிடத்தில் அவர்களை மகிமைக்கு யோக்கியராய் வளரும்படி செய்கிறார்.

## 45. அதிகாரம்.

1. "தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல்." இதுவரையும் யோசேப்பு தன்னை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டது அவன் மனவுறுதியைக் காட்டுகிறது. இப்போதோ பென்யமீன்பேரில் யாக்கோபு வைத்திருந்த அன்பு இவ்வளவென்றும் பென்யமீனைக் காணாவிட்டால் தகப்பன் வியாகுலத்தினால் மரித்துப்போவான் என்றும் யூதா சொன்னதையும் தான் பென்யமீனுக்குப் பதிலாக அடிமையாயிருக்க அவன் மனதாரச் சம்மதித்ததையும் தன் சகோதரர் தன்முன் துக்கத்தோடே நிற்பதையும் யோசேப்பு கண்டபோது அவன் உள்ளம் பொங்கினது. தன் சகோதரரைத்தவிர மற்ற யாவரையும் வெளியே போகப் [illegible]புறம் தான் இன்னான் என்று அவர்களுக்குச் சொன்னான்.

"வெளியே போகப்பண்ணுங்கள்." யோசேப்பு தன்னை தன் சகோதரருக்கு வெளிப்படுத்துகையில் அவர்கள் தன்னை விற்ற காரியத்தை நினைப்பூட்ட

போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோ
சேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்து
கையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை.—
2 அவன் சத்தமிட்டு [1]அழுதான்; அதை எகிப்தியர் [1] எஸ். 11. 1.
கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்
3 கள்.—யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: [2]நான் [2] அப். 7. 13.
யோசேப்பு; என் தகப்பனார் இன்னும் உயிரோடே
இருக்கிறாரா என்றான். அவனுடைய சகோதரர் அவ
னுக்கு முன்பாகக் [3]கலக்கமுற்றிருந்ததினாலே, அவ [3] யோபு. 4. 5. 23. 15. மத். 14. 26.
னுக்கு உத்தரம் சொல்லக்கூடாமல் இருந்தார்கள்.—
4 அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரை நோக்கி:
என் கிட்ட வாருங்கள் என்றான். அவர்கள் கிட்டப்
போனார்கள்; அப்பொழுது அவன்: [4]நீங்கள் எகிப்துக் [4] ஆதி. 37. 28.
குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள்

வேண்டியது அவசியமாயிருந்தது. மற்றவர்கள் இதைக் கேள்விப்பட்டால் அவர்களைப் பெருந் துரோகிகள் என்று எண்ணுவார்கள். அப்படிப்பட்ட எண்ணம் தன் சகோதரரைப்பற்றி மற்றவர்கள் மனதில் உண்டாக யோசேப்புக்குப் பிரியமில்லாதிருந்தது.

2. "அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்." யோசேப்பின் அழுகை சத்தத்தையல்ல, அவன் சகோதரர் வந்த செய்தியைக் கேள்விப்பட்டார்கள். (பதினாறும் வாக்கியத்தினால் அது துலங்குகிறது.)

3. "நான் யோசேப்பு." யோசேப்பு எகிப்திலே எகிப்திய பெயரால் அல்லது உத்தியோகப்பெயரால் அழைக்கப்பட்டுவந்தான். யோசேப்பு என்ற நாமத்தை அவன் சகோதரர் எகிப்திலே கேள்விப்பட்டிருக்கவுமாட்டார்கள்.

4. "என் கிட்ட வாருங்கள்." தான் சொல்லப்போகிற காரியத்தை மற்றவர்கள் அறியக்கூடாதபடி மெதுவாய்ச் சொல்லும்படி தனக்குச் சமீபமாய் வரச்சொன்னான். அதுவுமல்லாமல் தனக்குப் பயந்திராமல் தன்னோடே ஐக்கியப்பட வரவழைத்தான்.

"எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரன்." நான் இன்னான் என்று யோசேப்பு சொன்னபோது அவன் சகோதரர் கலக்கமுற்றிருந்தார்கள். அவர்கள் இன்னம் அவனைக்குறித்துத் தெளிவாய் அறியும்பொருட்டு "எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் நீங்கள் விற்றுப்போட்ட உங்கள் சகோதரன்" என்று சொன்னான். உங்கள் சகோதரன் என்று யோசேப்பு சொன்னபோது தான் ஒரு பெரிய இராச்சியத்துக்கு அதிபதியாயிருந்தபோதிலும் தன்னிடத்திலே சகோதரபாசம் பெருகியிருப்பதாக அவர்கள் அறியும்பொருட்டு அப்படிச் சொன்னான்.





5 சகோதரனாகிய யோசேப்பு நான்தான். என்னை இவ்
விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள்
சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமா [1] ஏசா. 40. 2. 2 கொரி. 2. 7.
யிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்
குத் தேவன் [2]என்னை உங்களுக்கு முன்னே அனுப்பி [2] ஆதி. 50. 20. சங். 105. 16, 17. அப். 4. 27, 28.
6 னார்.—தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப்
பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்துவருஷம்
உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும்.—
7 பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை
ஆதரிக்கிறதற்காகவும், [3]பெரிய இரட்சிப்பினால் உங் [3] 1 சாமு. 11. 14. சங். 18. 50.
களை உயிரோடே காப்பதற்காகவும், தேவன் என்னை
உங்களுக்கு முன்னே அனுப்பினார்.—ஆதலால் நீங்
கள் அல்ல, [4]தேவனே என்னை இவ்விடத்துக்கு [4] யோபு. 19. 11.
அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் [5]தகப்பனாகவும், [5] ஆதி. 41. 43. நியா. 17. 10. யோபு. 29. 16.
அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்
துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்.—
9 நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தே
வன் என்னை எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாக
வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்கவேண்
10 டாம்; நீரும் உம்முடைய பிள்ளைகளும், அவர்களு
டைய பிள்ளைகளும், உம்முடைய ஆடுமாடுகளோடும்
உமக்கு உண்டாயிருக்கிற யாவற்றோடும் [6]கோசேன் [6] ஆதி. 47. 1, 4. யாத். 8. 22.
நாட்டில் வாசம்பண்ணி என் சமீபத்தில் இருக்கலாம்.—

5 "ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன்......அனுப்பினார்." சகோதரர் தன்னை விற்றுப்போட்டதற்காக மனஸ்தாபப்படாதபடிக்குத் தேவன் தன்னை எகிப்துக்கு அனுப்பினார் என்றுந் திரள் சனங்களை உயிரோடே பாதுகாக்கும்பொருட்டு அப்படிச் செய்தார் என்றும் அவர்களுக்கு உணர்த்தினான்.

8. "தேவனே." தேவன் என்கிற வார்த்தையோடே மூலத்தில் சுட்டுச்சொல் சேர்ந்திருக்கிறது. இங்கே தமிழ் நடைக்கு இசைய தேற்றேகாரமாய்ப் போடப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களை நடத்திக்கொண்டுவந்த அந்த தேவன் தன்னையும் நடத்திக்கொண்டுவந்தார் என்று தெரியக்காட்டும் நோக்கமாய் அப்படிச் சொல்லியிருக்கிறது.

"பார்வோனுக்குத் தகப்பனாகவும்." இராசாக்களுடைய பிரதமமந்திரிகளுக்கு இப்படிப்பட்டப்பேர் கொடுக்கப்படுவது சாதாரண வழக்கமாயிருந்தது.

"கோசேன் நாட்டில்." (ஆதி. 47: 11.) அது ராமசேஸ் நாடு என்று சொல்லப்படுகிறது. அது நீலநதிக்குக் கிழக்கேயிருந்தது. அது மெம்பிஸ் பட்டணத்துக்குச் சற்று வடக்கே துவக்கி மெடித்திரானியாக் கடல்வரை

11 உம்முடைய குடும்பத்தாருக்கும் உமக்கு
இருக்கிற யாவற்றிற்கும் வறுமை வராதபடிக்கு அங்
கே உம்மைப் பராமரிப்பேன்; இன்னும் ஐந்து வரு
ஷம் பஞ்சம் இருக்கும் என்று, உம்முடைய குமாரனா
கிய யோசேப்பு சொல்லச்சொன்னான் என்று சொல்
12 லுங்கள்.—இதோ, உங்களோடே பேசுகிற வாய் என்
வாய்தான் என்பதை உங்கள் [1]கண்களும் என் தம்பி
யாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே.—
13 எகிப்திலே எனக்கு உண்டாயிருக்கிற சகல மகிமை
யையும், நீங்கள் கண்ட யாவையும் என் தகப்பனுக்கு
அறிவித்து, [2]அவர் சீக்கிரமாய் இவ்விடத்துக்கு வரும்
14 படி செய்யுங்கள் என்று சொல்லி;—தன் தம்பியாகிய
பென்யமீனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான்;
பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழு
15 தான்.—பின்பு தன் சகோதரர் யாவரையும் முத்தஞ்
செய்து, அவர்களையும் கட்டிக்கொண்டு அழுதான்.
அதற்குப்பின் அவன் சகோதரர் அவனோடே சம்பா
ஷித்தார்கள்.

[1] லூ. 24. 39.
[2] அப். 7. 14.

---

பெலிஸ்தரின் எல்லைமட்டும் எட்டினது (சங். 78: 12, 43.). அது சோவான் வெளி என்றழைக்கப்படுகிறது. அது ஒருவேளை குடியேறாத இடமாயும் ஆடு மாடுகளுக்கு மேய்ச்சலுள்ள இடமாயுமிருந்தது.

**11.** "உம்முடைய குடும்பத்தாருக்கும்." தேசத்தில் பஞ்சமுண்டாகி இரண்டுவருஷம்மாத்திரம் ஆயிற்று. இன்னும் ஐந்துவருஷம் அது நீடிக்கப் போகிறது. யாக்கோபு கானானிலிருந்தால் அவன் அதிகமான பொருள்நஷ்டம் அடையவேண்டியதாய் நேரிடும். அப்படி நஷ்டம் நேரிடாதபடிக்கு யாக்கோபு தன் குடும்பத்தார் எல்லாரோடுங்கூட அவ்விடத்துக்கு வரும்படியாக யோசேப்பு கேட்டுக்கொண்டான்.

**14.** "கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான்." இது, யோசேப்புக்கு அவன் சகோதரர்பேரில் மிஞ்சிய பாசம் இருந்ததற்குக் குறிப்பு. இருபது வருஷங்களுக்குப் பின்பு தன் சகோதரனைக் கண்டதும் அவர்கள் மனஞ் சீரடைந்திருந்ததைப் பார்த்ததும் அவனுக்குச் சந்தோஷமாயிருந்ததால் அவர்கள் கழுத்தின்மேல் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தான்.

**15.** "அவன் சகோதரர் அவனோடே சம்பாஷித்தார்கள்." யோசேப்பு உள்ளபடி தங்களிடத்தில் அன்புகூர்ந்து மன்னிப்புக்கு அடையாளமாக அவர்களுக்கு முத்தம் கொடுத்ததைக் கண்டபோது அவர்களுடைய கலக்கமும் பயமும் நீங்க அவனோடே சம்பாஷித்தார்கள். யூதாவுக்கு எவ்வளவு ஆனந்தமிருக்கும். பென்யமீனுக்கு எவ்வளவு மனமகிழ்ச்சி இருக்கும்.





16 யோசேப்பின் சகோதரர் வந்தார்கள் என்கிற சமா
சாரம் பார்வோன் அரமனையில் பிரசித்தமானபோது,
[1]பார்வோனும் அவனுடைய ஊழியக்காரரும் சந்தோ
17 ஷம் அடைந்தார்கள்.—பார்வோன் யோசேப்பை
நோக்கி: நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியது
என்னவென்றால்: உங்கள் கழுதைகளின்மேல் பொதி
யேற்றிக்கொண்டு புறப்பட்டு, கானான் தேசத்துக்குப்
18 போய்,—உங்கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தா
ரையும் கூட்டிக்கொண்டு, என்னிடத்தில் வாருங்கள்,
நான் உங்களுக்கு எகிப்துதேசத்தின் நன்மையைத்
தருவேன்; [2]தேசத்தின் கொழுமையையும் சாப்பிடுவீர்
19 கள்.—நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள்
மனைவிகளுக்காகவும் வண்டிகளை எகிப்துதேசத்திலி
ருந்து கொண்டுபோய், அவர்களையும் உங்கள் தகப்பனு
20 டனே ஏற்றிக்கொண்டுவாருங்கள்.—உங்கள் தட்டு
முட்டுகளைக்குறித்துக் கவலைப்படவேண்டாம்; எகிப்து
தேசமெங்குமுள்ள நன்மை உங்களுடையதாயிருக்
கும் என்று சொல்லச்சொல்லி, உனக்கு நான் இட்ட
கட்டளைப்படியே செய் என்றான்.
21 இஸ்ரவேலின் குமாரர் அப்படியே செய்தார்கள்.
யோசேப்பு [3]பார்வோனுடைய கட்டளையின்படியே
அவர்களுக்கு வண்டிகளைக் கொடுத்ததுமன்றி, வழிக்கு

[1] ஆதி. 41. 37.
[2] ஆதி. 27. 28. எண். 18. 12, 29. உபா. 32. 14.
[3] ஏசா. 3. 16.

---

**16.** "யோசேப்பின் சகோதரர் வந்தார்கள்......பார்வோனும் அவனுடைய ஊழியக்காரரும் சந்தோஷம் அடைந்தார்கள்." ஒரு சகோதரனால் எகிப்துக்கு இவ்வளவு பெரிய இரட்சிப்பு கிடைத்ததானால் மற்றொரு சகோதரராலும் தேசத்துக்கு வெகு நன்மையிருக்கும் என்று எண்ணி பார்வோனும் அவன் ஊழியக்காரருஞ் சந்தோஷப்பட்டு, யோசேப்பு தன் தகப்பனையுந் தகப்பனுடைய வீட்டார் அனைவரையும் வரவழைக்கும்படியாக இராசா உத்தரவு அருளினான்.

**19.** "உங்கள் குழந்தைகள்." வியாக்கியானம் (ஆதி. 34: 29.) பார்க்க.

"வண்டிகள்." எகிப்துதேசம் சமபூமியாயிருந்ததாலும் சாகுபடி அதிகமாய்ச் செய்யப்பட்டதாலும் வண்டிகள் அங்கே ஆதிகாலந்தொடுத்து உபயோகிக்கப்பட்டுவந்தன. சின்னங்களில் இரட்டை உருளை வண்டிகள் மாடுகளால் இழுக்கப்படும்வண்ணமாய்ச் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பார்வோன், யோசேப்பு முதலியவர்கள் பிரயோகித்த இரதங்களில்

22 ஆகாரத்தையும் [illegible] அவர்களில் ஒவ்வொருவனுக்கும்
மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தான்; பென்யமீனுக்
கோ முந்நூறு வெள்ளிக்காசையும் [1]ஐந்து மாற்று வஸ் [1] ஆதி. 43. 34.
23 திரங்களையும் கொடுத்தான்.—அப்படியே தன் தகப்
பனுக்குப் பத்துக் கழுதைகளின்மேல் எகிப்தின் உச்சி
தமான பதார்த்தங்களும், பத்துக் கோளிகைக் கழு
தைகளின்மேல் தன் தகப்பனுக்காக வழிக்குத் தானிய
மும் அப்பமும் மற்றத் தின்பண்டங்களும் ஏற்றி
24 அனுப்பினான்.—மேலும், நீங்கள் போகும் வழியிலே
சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள் என்று அவன்
தன் சகோதரருக்குச் சொல்லி அனுப்பினான். அவர்
கள் புறப்பட்டுப் போனார்கள்.

25 அவர்கள் எகிப்திலிருந்து போய், கானான்தேசத்தி
லே தங்கள் தகப்பனாகிய யாக்கோபினிடத்தில் வந்து:-

குதிரைகள் பூட்டப்பட்டிருக்கலாம். குதிரைகள் இந்தக் காலத்துக்கு முந்தியே எகிப்திற்குக் கொண்டுவரப்பட்டும் உபயோகிக்கப்பட்டும் வந்தன.

22. "மாற்று வஸ்திரங்கள்." விசேஷித்த தயவுக்குக் குறிப்பாக [illegible] வஸ்திரங்களைக் கொடுக்கும் வழக்கம் பூர்வீகத்திலிருந்துவந்தது. யோசேப்பின் சகோதரர் தரித்துக்கொண்டுபோன உடையால் அவர்கள் எகிப்தில் உபசரிக்கப்பட்டார்கள் என்பது மற்றவர்களுக்குப் பிரத்தியட்சமாகும்.

23. "தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும்......அனுப்பினான்." யோசேப்பு தன் தகப்பன்பேரில் மிகுந்த [illegible] வைத்தபடியால் வழியில் அவனுக்குப் போஜனத்துக்குரிய வகையில் யாதொரு குறைவும் நேரிடாதபடி தன் அந்தஸ்துக்கேற்றபடி தானியமும் அப்பமும் உச்சிதமான பண்டங்களும் அனுப்பினான்.

24. "வழியிலே சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள்." தகப்பனுக்கு நற்செய்தியை அறிவிக்கும்படியாக போகும் சகோதரர் இடைவழியில், யோசேப்பைப்பற்றிய முந்திய காலசம்பவங்களைப் பேசிக்கொள்வது இயற்கை. அப்போது மனஸ்தாபங்களும் கோபமும் இலகுவாய் வரக்கூடியதாயிருக்கும். நீதான் முதலாவது யோசேப்புக்குத் தீங்கு செய்ய எவிவிட்டது. நீதான் அவனைக் குழியில் போட்டது, நீதான் அவன் அங்கியைக் கழற்றினது, நீதான் அவனை அடித்தது, நீதான் அவனை விற்றுப் பணம் வாங்கினது. நான்தான் இளைஞனுக்குத் தீங்குசெய்யவேண்டாம் என்று சொன்னேன் என்று ஒருவருக்கொருவர் பேசுகையில் மனவருத்தங்கள் நேரிட சண்டை இலகுவில் உண்டாகலாம். இதை அறிந்த ஞானமுள்ள யோசேப்பு நீங்கள் போகும் வழியில் சண்டைபண்ணிக்கொள்ளாதிருங்கள் என்றான். வழியில் சகோதரரும் அவன் ஆலோசனையின்படியே நடந்துகொண்டார்கள். ஒருவேளை யோ





26 யோசேப்பு உயிரோடிருக்கிறான், அவன் எகிப்து
தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறான் என்று
அவனுக்கு அறிவித்தார்கள். [1]அவன் இருதயம் மூர்ச் [1] யோபு 9. 16; 29
சை அடைந்தது; அவன் அவர்களை நம்பவில்லை.— 24. சங். 126. 1
27 அவர்கள் யோசேப்பு தங்களுடனே சொன்ன வார்த் லூக். 24. 11, 41.
தைகள் யாவையும் அவனுக்குச் சொன்னபோதும்,
தன்னை ஏற்றிக்கொண்டு போகும்படி யோசேப்பு
அனுப்பின வண்டிகளை அவன் கண்டபோதும், அவர்க
ளுடைய தகப்பனாகிய யாக்கோபின் [2]ஆவி உயிர்த் [2] சங். 85. 6.
28 தது.—அப்பொழுது இஸ்ரவேல்: என் குமாரனாகிய
யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே, இது
போதும்; நான் மரணமடையுமுன்னே போய் அவ
னைப் பார்ப்பேன் என்றான்.

சேப்பைப்பற்றிய அச்சத்தால் அவர்கள் சமாதானத்தைப் பேணிக்கொண்டார்கள் என்று எண்ணலாம்.

26. "அவன் இருதயம் மூர்ச்சை அடைந்தது." இருபத்திரண்டு வருஷமாய் இறந்துபோனான் என்று எண்ணப்பட்ட மகன் இன்னும் உயிரோடே இருக்கிறான் என்று திடீரென யாக்கோபு கேள்விப்பட்டது, நம்பிக்கைக்கு விரோதமாயிருந்ததாலும் அந்தச் செய்தி அவன் வயதுகாலத்திலே தாங்கக்கூடியதற்கு மிஞ்சின நற்செய்தியாயிருந்ததாலும் நினைவு மயங்கிப்போனான்.

27. "யாக்கோபின் ஆவி உயிர்த்தது." யாக்கோபின் மக்கள் தங்களிடத்தில் யோசேப்பு சொன்னவைகளை விபரமாய் அறிவித்தபோதும் அவனை ஏற்றிக்கொண்டு போகும்படி யோசேப்பு அனுப்பின வண்டிகளைக் கண்டபோதும் வாகை அவன் மூர்ச்சை தெளிந்தான்.

28. "யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானே இது போதும்." யோசேப்பு எகிப்து முழுவதுக்கும் ஆண்டவனாயிருப்பதை யாக்கோபு கேள்விப்பட்டும் அவன் உயர்ந்த உத்தியோகஸ்தனாயிருக்கிறானே அது எனக்குப் போதும் என்று சொல்லாமல் அவன் உயிரோடே இருப்பதே பெரியகாரியம் என்று எண்ணி போதும் என்றான். பென்யமீனுக்காகக் கவலையாயிருந்த யாக்கோபுக்கு யோசேப்பைப் பற்றியிருந்த விசாரமும் இப்போது நீங்கிப்போயிற்று.

"அவனைப் பார்ப்பேன்." இவ்வுலகத்திலே பெந்துக்கள் ஒருவரை ஒருவர் கண்டு சந்திப்பது அவ்வளவு சிரேஷ்டமான காரியமானால் நித்திய பாக்கியமுள்ள உலகில் ஒருவரை ஒருவர் கண்டுகொள்வது எவ்வளவு கொண்டாட்டமாயிருக்கும்.

படிப்பினை.

வச. 1—8.

மனிதர் தங்கள் குற்றங்களை உணரும்படி நாம் எத்தனங்களைப் பிரயோகிக்கையில் அநுவசியமானவைகளாய் நியாயத்துக்கு மிஞ்சி ஒன்றையும் அவர்களுக்குச் செய்யக்கூடாது.

# 46. அதிகாரம்.

1. யாக்கோபு பெயெர்செபாவிலே தேவனால் தேறுதல் அடைந்தது. 5. அங்கேயிருந்து அவன் தன் கூட்டத்தாரோடே எகிப்திற்குப் போனது. 8. எகிப்துக்குப் போன அவன் குடும்பத்தின் தொகை. 28. யோசேப்பு யாக்கோபைச் சந்தித்தது. 31. பார்வோனுக்குப் பதில் உத்தரவு கொடுக்க அவன் தன் சகோதரருக்குக் கற்பித்தது.

1 இஸ்ரவேல் தனக்கு உண்டான யாவையும் சேர்த்துக்

(2) ஆசாபாசங்களை அடக்கி, நற்காரியங்களில் விவேகத்தைச் செலுத்துவது பிரயோசனத்துக் கேதுவாகிறது.

(3) ஆத்தும இரட்சிப்பைக்குறித்து மனிதரோடே பேசுகையில் நாம் இரண்டு விஷயங்களைக்குறித்து உணர்த்தும் நோக்கமுடையவர்களாயிருக்கவேண்டும். முதலாவது பாவத்தைப்பற்றிய உணர்வையுண்டாக்கி அதால் வரும் மோசத்தையும், இரண்டாவது உத்தமமாய்க் குணப்படுகிறவர்களுக்குப் பாவமன்னிப்புஞ் சமாதானமுங் கிடைக்கும் என்பதையும் எடுத்துக்காட்டவேண்டும்.

(4) பொல்லாத மனிதர் செய்யுந் துரோகங்களிலிருந்து தேவன் தமது காருண்யத்தால் நன்மைகளை வரும்படி செய்வதை முக்கியமாய் நம்முடைய ஜீவிய சரித்திரத்திலே கவனித்துக்கொண்டுவருவது மனதுக்கு எழுப்புதலையும் ஆறுதலையும் உண்டுபண்ணும்.

வச. 9—28.

(5) நமக்குத் தீமைசெய்தவர்களுக்கு சகோதர அன்பைப் பாராட்டி நன்மை செய்யக்கடவோம். இப்படிச் செய்வதினால் அவர்களுடைய நிலைமை அடைவதற்குக் காரணமாயிருப்போம்.

(6) தந்தை தாயாருக்கு சந்தோஷமுண்டாகத்தக்கதாய் நடக்கும் பிள்ளைகள் பாக்கியவான்கள். தாங்கள் நல்ல ஸ்திதியிலிருக்கையில் அவர்களுக்குச் செய்யவேண்டிய உதவியைச் செய்வது அவர்கள்பேரில் விழுந்த கடமை. பெருமையினாலும் பொருளாசையினாலும் நிறைந்து தங்கள் இனபெந்துக்களை மதியாமல் அசட்டைசெய்வது வெட்கமானகாரியமே.

(7) மனிதர் தங்களுக்கு இஷ்டமானபேர்களுக்குத் தயவுகளைப் பாராட்ட அறிந்திருக்கும்போது நீதியுள்ள தேவன் தாம் எவன்மேலிரங்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் பேரில் இரக்கம்வைக்கிறது அதிக நிச்சயமல்லவா? அப்படிப்பட்டவன்பேரில் யார் குற்றஞ் சாட்டலாம்.

(8) தேவஞானம், அன்பு, உண்மை இவைகளை நாம் அறியும்போது நமக்கு விரோதமாய்ச் சம்பவித்த காரியங்களும் நம்மை முன்னுக்குக் கொண்டுவர வழியாயிருந்ததென்று அறியலாம்.

(9) நம்முடைய இரட்சகர் தம்மைப் பகைத்து அசட்டைசெய்தவர்கள் குணப்படுகையில் அவர்களுக்குச் சகோதர அன்பைப் பாராட்டிவருகிறார் என்பதைப் பிரத்தியட்சமாய்ப் பார்த்துவருகிறோம். அவர் அப்படிப்பட்டவர்களுக்குச் சிலுவையின் உபதேசத்தைத் தெரியக்காட்டி, அவர் பாடுகளினால் உண்டான நன்மைகளை எடுத்துரைத்து அவர்களுக்குள்ளிருக்கிற கலக்கத்தை நீக்கி, பகைகள் விரோதங்களை மனதில் பேணிவையாமல் எல்லா மனிதரோடும் அன்பாயிருக்கும்படி போதிக்கிறார். மேலும் இம்மையில் அவர் அவர்களுக்கு வேண்டிய ஆத்துமபோஷணத்தையும் அருளி தம்மோடேகூட அவர்கள் என்றுஞ் சுகித்திருக்கும்படியாக அவர்களை நடத்திக்கொண்டுவருகிறார்.

## 46. அதிகாரம்.

1. "இஸ்ரவேல்.....பெயெர்செபாவுக்குப் போய்.....தேவனுக்குப் பலியிட்டான்." யாக்கோபு யோசேப்பைப்பற்றிய செய்தியைக் கேள்விப்





கொண்டு புறப்பட்டுப் [1]பெயெர்செபாவுக்குப்போய்,
தன் தகப்பனாகிய ஈசாக்குடைய [2]தேவனுக்குப் பலி
2 யிட்டான். — அன்று இராவிலே தேவன் இஸ்ரவேலுக்
குத் [3]தரிசனமாகி: யாக்கோபே, யாக்கோபே என்று
கூப்பிட்டார்; அவன் இதோ, அடியேன் என்றான். —
3 அப்பொழுது அவர்: நான் தேவன், நான் உன் தகப்பனு
டைய தேவன்; நீ எகிப்து தேசத்துக்குப் போகப் பயப்
படவேண்டாம்; [4]அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்
குவேன். — நான் [5]உன்னுடனே எகிப்துக்கு வருவேன்;
[6]நான் உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன்; யோ
சேப்பு தன் கையால் உன் கண்களை [7]மூடுவான் என்று

[1] ஆதி. 21. 33: 28. 10.
[2] ஆதி. 31. 42,48.
[3] ஆதி. 15. 1. யோபு. 33. 15.
[4] ஆதி. 12. 2. உபா. 26. 5.
[5] ஆதி. 15. 16. யாத். 3. 8.
[6] ஆதி. 50. 1.
[7] அப். 7. 15.

பட்ட துவக்கத்தில் சந்தோஷத்தினாலே எகிப்துக்குப் போகும்படியாகத் தீர்மானம் பண்ணினான். ஆனால் பிந்தியகாரியங்களைத் தீர்க்கமாய் ஆலோசித்த போது அவன் சற்று தாமதம் பண்ணினதாகத் தோன்றுகிறது. ஆதி. 15: 13ல் சொல்லிய தீர்க்கதரிசனத்தில் ஆபிரகாமின் வித்தார் தங்களுடையதல்லாத தேசத்தில் 400 வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், கானான்தேசத்தை விட்டுப்போவதினால் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட உடம்படிக்கையை இழந்துபோவதற்கு ஏதுவாயிருக்கும் என்றும், ஈசாக்கு கானான்தேசத்தை விட்டுப் போகக்கூடாதென்று ஆபிரகாம் கட்டளைகொடுத்ததும் ஈசாக்கு எகிப்துக்கு இறங்கிப்போகக்கூடாதென்று கர்த்தர் தடுத்து, பலஸ்தீனாவில் இருக்கும்படி சொன்னதும் அவன் மனதில் கிளம்பவே, அவன் அச்சமுடையவனாய்த் தான் எகிப்துக்குப்போகும்முன்னே கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்கும்படி பெயெர்செபாவுக்குப் போனான் என்று நினைப்பதற்கு இடமுண்டு. அங்கே ஆபிரகாமும் ஈசாக்கும் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனை ஆராதித்துவந்திருந்தார்கள். மேலும் அது எபிரோனிலிருந்து எகிப்துக்குப் போகிற வழியிலிருந்தது.

3. **"நான் தேவன், நான் உன் தகப்பனுடைய தேவன்."** இதுதான் யாக்கோபுக்கு அருளப்பட்ட கடைசியான வெளிப்படுத்துதல். இதற்குப்பின்பு தேவன் முட்செடியில் மோசேக்குத் தரிசனமானதுவரையும் வேறே வெளிப்படுத்தல் அருளப்பட்டதாக நாம் வாசிக்கிறதில்லை. இந்த வெளிப்படுத்தல் சுருக்கமும், தெளிவும், விசேஷித்ததுமாயிருக்கிறது. அதில் யாக்கோபு எகிப்துக்குப் போகவும் அங்கே அவன் சந்ததியார் ஒரு சாதியாராகப் பெருகிப்போவார்கள் என்றும், அவர்கள் அங்கே நெடுங்காலம் இருப்பார்கள் என்றும், தேவன் அவர்களோடேகூடவே இருந்து அவர்களை ஆசீர்வதித்து அவர்களைத் திரும்பவும் கானானுக்குக் கொண்டுவருவார் என்றும், யாக்கோபு மரணப்படுக்கையில் யோசேப்பு கூடவே இருப்பான் என்றும் உத்தரவு அருளப்பட்டது.

**"நீ எகிப்துதேசத்துக்குப் போகப் பயப்படவேண்டாம்."** முதலாம் [illegible] வியாக்கியானத்தைப் பார்க்க.

**"யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவான்."** நெருங்கின பந்துக்கள் மரிக்கிறவர்களின் கண்ணை மூடுவது வழக்கம். யாக்கோபு சமாதா

5 சொன்னார். — அதற்குப்பின்பு, யாக்கோபு பெயர்
செபாவிலிருந்து பிரயாணம் புறப்பட்டான். இஸ்ர
வேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபை
யும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் மனைவிகளையும்
பார்வோன் அனுப்பின [1]வண்டிகளின்மேல் ஏற்றிக்
6 கொண்டு,—தங்கள் ஆடுமாடுகளையும், தாங்கள் கானான்
தேசத்தில் சம்பாதித்த தங்கள் பொருட்களையும் சேர்த்
துக்கொண்டு, [2]யாக்கோபும் அவன் சந்ததியார் யாவ
7 ரும் எகிப்துக்குப் போனார்கள்.—அவன் தன் குமா
ரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்
திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன்
சந்ததியார் அனைவரையும் எகிப்துக்குத் தன்னோடே
அழைத்துக்கொண்டுபோனான்.

8 எகிப்துக்கு வந்த இஸ்ரவேலரின் [3]நாமங்களாவன:
யாக்கோபும் அவனுடைய குமாரரும்; யாக்கோபு
9 டைய மூத்த குமாரனான ரூபன்.—ரூபனுடைய குமா
ரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ என்பவர்கள்.—
10 சிமியோனுடைய குமாரர் எமுவேல், யாமின், ஓகாத்,
யாகீன், சொகார், கானானிய ஸ்திரீயின் குமாரனாகிய

[1] அதி. 45. 19.
[2] யோ. 26. 5. யோசு. 24. 4. சங். 105. 23. ஏசா. 52. 4.
[3] யாத். 1. 1; 6. 14.

னீத்தோடே மரிப்பதை அவனுக்கு விளக்கும்படி யோசேப்பு உன் கண்ணை மூடுவான் என்று கர்த்தர் உரைத்தார். இதின் நிறைவேறுதல் அதி. 50–1ல் சொல்லியிருக்கிறது.

**7.** **"தன் குமாரத்திகளையும்."** அதி. 37: 35–ம் வியாக்கியானம் பார்க்க.

**8.** **"எகிப்துக்கு வந்த இஸ்ரவேலரின் நாமங்களாவன."** பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களைக் குறித்த அட்டவணை வேதத்திலே இங்கேயும், எண்ணாகமம் 26–ம் அதிகாரத்திலும், 1 நாளா. 1–8 அதிகாரங்களிலும் வருகின்றன.

**9.** **"ரூபனுடைய குமாரர்."** நாலு குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ என்பவர்களே. மூன்று அட்டவணைகளும் இவர்களை ஒன்றுபோலவே காட்டுகின்றன.

**10.** **"சிமியோனுடைய குமாரர்."** ஆறு குமாரர்.

| | எண். 26: 12, 13. | 1 நாளா. 4: 24. |
|---|---|---|
| எமுவேல் | நேமுவேல் | நெமுவேல். |
| யாமின் | யாமின் | யாமின். |
| ஓகாத் | விடப்பட்டிருக்கிறது. | விடப்பட்டிருக்கிறது. |
| யாகீன் | யாகீன் | யாரீப். |
| சொகார் | சேராகு | சேரா. |
| சவுல் | சவுல் | சவுல். |





1 சவுல் என்பவர்கள். — லேவியினுடைய குமாரர் கெர்
2 சோன், கோகாத், மெராரி என்பவர்கள்.—யூதாவினு
டைய குமாரர் ஏர், ஓனான், சேலா, பாரேஸ், சேரா
என்பவர்கள்; அவர்களில் ஏரும் ஓனானும் கானான்
தேசத்தில் இறந்துபோனார்கள்; பாரேசுடைய குமாரர்
3 எஸ்ரோன், ஆமூல் என்பவர்கள்.—இசக்காருடைய
குமாரர் தோலா, பூவா, யோபு, சிம்ரோன் என்பவர்
கள்.—செபுலோனுடைய குமாரர் செரேத், ஏலோன்,

**11.** **"லேவியினுடைய குமாரர்."** மூன்று குமாரர். கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களே.

**12.** **"யூதாவினுடைய குமாரர்."** ஐந்து குமாரர். அவர்களில் இரண்டுபேராகிய ஏர், ஓனான் என்பவர்கள் அகால மரணமடைந்தார்கள். மற்ற மூவருடைய நாமங்களாவன: சேலா, பாரேஸ், சேரா என்பவர்களே. 1 நாளா. 4: 1ல் யூதாவுக்கு பாரேஸ், எஸ்ரோன், கர்மீ, ஊர், சோபால் என ஐந்து குமாரர் இருந்ததாகச் சொல்லியிருக்கிறது. 1 நாளா. 4: 21ல் சேலாகு என்ற இன்னொரு குமாரனைப்பற்றியும் காட்டியிருக்கிறது.

**"பாரேசுடைய குமாரர் எஸ்ரோன், ஆமூல்."** இந்த அட்டவணையில் யூதாவுடைய பேரப்பிள்ளைகள் இருவரையும் ஆசேருடைய பேரப்பிள்ளைகள் இருவரையுங்குறித்து நேராய்ச் சொல்லியிருக்கிறது. பென்யமீனுக்குப் பத்துப் பிள்ளைகளிருந்ததாக இங்கே காட்டப்பட்டிருக்கிறது. அவர்களில் ஐந்து பேர் அவனுடைய பேரப்பிள்ளைகள் என்று மற்ற இடங்களில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பேரப்பிள்ளைகள் எகிப்துக்குப் போகும்முன் பிறந்திருக்கக்கூடாது என்று சிலர் ஆட்சேபிப்பதுண்டு. யாக்கோபுடைய பௌத்திரர், பிரபௌத்திரப் பிள்ளைகள் அவன் ஜீவகாலத்தில் பிறந்தார்கள். ஆகவே அவன் ஜீவநாட்களில் இஸ்ரவேலர் பெருகின தொகையைக் காட்டும் நோக்கமாய் அவர்களை அட்டவணையில் சேர்த்திருக்கிறது.

**13.** **"இசக்காருடைய குமாரர்."** நாலுபேர்.

| | எண். 26: 23, 24. | 1 நாளா. 7: 1. |
|---|---|---|
| தோலா | தோலா | தோலா. |
| பூவா | பூவா | பூவா. |
| யோபு | யாசூப் | யசூப். |
| சிம்ரோன் | சிம்ரோன் | சிம்ரோன். |

**"செபுலோனுடைய குமாரர்."** மூன்றுபேர்.

| | எண். 26: 26. |
|---|---|
| சேரேத் | சேரேத். |
| ஏலோன் | ஏலோன். |
| யக்லேல் | யாலேயேல். |

செபுலோனுடைய தலைமுறை அட்டவணை நாளாகமத்தில் காட்டப்படவில்லை.

15 யக்லேல் என்பவர்கள்.—இவர்கள் லேயாளின் சந்ததி
யார்; அவள் இவர்களையும் தீனாள் என்னும் ஒரு குமா
ரத்தியையும் பதான்அராமிலே யாக்கோபுக்குப் பெற்
றாள்; அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய
எல்லாரும் முப்பத்துமூன்றுபேர்.
16 காத்துடைய குமாரர் சிப்பியோன், அகி, சூனி,
எஸ்போன், ஏரி, அரோதி, அரேலி என்பவர்கள்.—
17 ஆசேருடைய குமாரர் இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரி
யா என்பவர்கள்; இவர்களுடைய சகோதரி செராக்கு
என்பவள்; பெரீயாவின் குமாரர் ஏபேர், மல்கியேல்

**15. "எல்லாரும் முப்பத்துமூன்றுபேர்."** யாக்கோபின் குமாரர் 6, பேரப்பிள்ளைகள் 23, பிரபௌத்திரர் 2. ஆக இந்த மூன்று தொகைகளுஞ் சேர்ந்து முப்பத்தொன்றாகும். தீனாளையும் யாக்கோபையுங்கூட சேர்த்தால் முப்பத்து மூன்றாகும். யூதருக்குள் விவாகம் பண்ணப்பட்ட குமாரத்திகளை அட்டவணையில் சேர்க்கிறதில்லை. தீனாள் விவாகம் பண்ணப்படாதிருந்ததாக யூதர் சொல்லுகிறார்கள்.

**16. "காத்துடைய குமாரர்."** ஏழுபேர்.

| | எண். 26: 15–17. |
|---|---|
| சிப்பியோன் | சிப்போன். |
| அகி | ஆகி. |
| சூனி | சூனி. |
| எஸ்போன் | ஒஸ்னி. |
| ஏரி | ஏரி. |
| அரோதி | ஆரோதி. |
| அரேலி | அரேலி. |

1 நாளா. 5: 11–15. காத் புத்திரர் யோதாம் இராசாவின்காலத்தில் தங்கள் வம்சத்து அட்டவணைப்படி தொகை யேற்றப்பட்டதாகச் சொல்லியிருக்கிறது.

**17. "ஆசேருடைய குமாரர்."** நாலுபேர்.

| | எண். 2[illegible]; 44, 45. | 1 நாளா. 7: 30. |
|---|---|---|
| இம்னா | இம்னா | இம்னா. |
| இஸ்வா | விடப்பட்டிருக்கிறது | இஸ்வா. |
| இஸ்வி | இஸ்வி | இஸ்வி. |
| பெரீயா | பெரீயா | பெரீயா. |

மூன்று சாதனங்களிலும் பெரீயாவின் குமாரர் ஏபேல், மல்கியேல் என்பவர்களைச் சரியாய்ப் போட்டிருக்கிறது. ஆசேருடைய குமாரத்தியின் பேர் இங்கே செராக்கு என்றும் எண்ணாகமத்தில் சாராள் என்றுஞ் சொல்லியிருக்கிறது.





18 என்பவர்கள்.—இவர்கள் லாபான் தன் குமாரத்தியா
கிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பிள்ளை
கள்; அவள் இந்தப் பதினாறுபேரையும் யாக்கோபுக்
குப் பெற்றாள்.
19 யாக்கோபின் மனைவியாகிய ராகேலுடைய குமாரர்
20 யோசேப்பு பென்யமீன் என்பவர்கள்.—யோசேப்புக்கு
எகிப்துதேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்
தார்கள்; அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய
போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத் அவனுக்
21 குப் பெற்றாள்.—பென்யமீனுடைய குமாரர் பேலா,
பெகேர், அஸ்பேல், கேரா, நாகமான், ஏகி, ரோஷ்,
22 முப்பிம், உப்பிம், ஆர்து என்பவர்கள்.—ராகேல் யாக்

**18. "பதினாறுபேரையும்."** காத்தும் அவன் குமாரருமாக எட்டு. ஆசேரும் அவன் குமாரருமாக ஐந்து. ஆசேருடைய குமாரத்தி ஒன்று. அவனுடைய பேரப்பிள்ளைகள் இரண்டு. ஆக தொகை பதினாறு.

**20. "மனாசேயும் எப்பிராயீமும்."** எல்லாச் சாதனங்களிலும் இந்தப் பேர்கள் சரியாய்ப் போடப்பட்டிருக்கின்றன.

**21. "பென்யமீனுடைய."** பத்துக் குமாரர்.

| | எண். 26: 38–10. | 1 நாளா. 8: 1–5. |
|---|---|---|
| பேலா | பேலா | பேலா. |
| பெகேர் | விடப்பட்டிருக்கிறது | விடப்பட்டிருக்கிறது. |
| அஸ்பேல் | அஸ்பேல் | அஸ்பால். |
| கேரா | விடப்பட்டிருக்கிறது | பேரப்பிள்ளை. |
| நாகமான் | பேரப்பிள்ளை.(40. வச.) | ,, |
| ஏகி | அகிராம் | அகராக். |
| ரோஷ் | விடப்பட்டிருக்கிறது | ரப்பா. |
| முப்பிம் | சுப்பாம் | பேரப்பிள்ளை. |
| உப்பிம் | உப்பாம் | ,, |
| ஆர்து | பேரப்பிள்ளை (40. வச.) | ,, |

எண்ணாகமத்தில் பென்யமீனுக்கு ஐந்து குமாரர் இருந்ததாகக் காட்டியிருக்கிறது. ஆனால் நாகமானும் ஆர்தும் குடும்பத்தலைவர்களாகப் பேலாவின் குமாரர் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். நாளாகமத்தில் (1 நாளா. 7: 6.) பென்யமீனுக்கு மூன்று குமாரிருந்ததாகக் காட்டப்பட்டிருக்கிறது. அவர்களில் பேகேர் சந்ததி பெருக்கமுறையவன். பிந்தியிருக்கிற சாதனத்தில் (1 நாளா. 8; 1, 2.) பென்யமீனுக்கு ஐந்து குமாரர் இருந்ததாகக் காட்டியிருக்கிறது. அவர்களில் கோசா என்பவனைப்பற்றி மற்றச் சாதனங்களில் சொல்லப்படவேயில்லை. பேலா என்பவன் கேரா, நாமான், மூப்பிம் (அதாவது செப்புப்பான்), உப்பீம் (அதாவது [illegible]ராம்), ஆர்து (அதாவது ஆதார்) என்பவர்களுக்கும் அபியூத், அபிசுவா, அ[illegible]ாவா, இன்னொரு கேராஆகிய இவர்களுக்கும் தகப்பனாகச் சொல்லப்பட்டிருக்கிறான்.

கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்கள் எல்லாரும்
பதினாறுபேர்.
23,24 தாணுடைய குமாரன் உசீம் என்பவன்.—நப்
தலியின் குமாரர் யாத்சியேல், கூனி, எத்செர், சில்
25 லேம் என்பவர்கள்.—இவர்கள் லாபான் தன் குமாரத்
தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்
குப் பெற்றவர்கள்; இவர்கள் எல்லாரும் ஏழுபேர்.
26 யாக்கோபுடைய குமாரரின் மனைவிகளைத்தவிர,
அவனுடைய கர்ப்பப் பிறப்பாயிருந்து அவனோடே கூட
எகிப்திலே வந்தவர்கள் எல்லாரும் [1]அறுபத்தாறு [1] யாத். 1. 5.

**22.** **"பதினாறுபேர்."** யோசேப்பும் அவன் இரண்டுகுமாரரும் பென்ய மீனும் அவன் பத்துக்குமாரருமாகப் பதினாறுபேராகிறது.

**23.** **"தாண்."** குமாரன் பேர் உசீம். இவன் (எண். 26: 42.) சூகாம் என்றழைக்கப்படுகிறான். நாளாகமத்தில் அவனுடைய அட்டவணை சொல்லப்படவில்லை.

**24.** **"நப்தலியின் குமாரர்."** நாலுபேர்.

| | எண். 26: 48, 49. | 1 நாளா. 7: 13. |
|---|---|---|
| யாத்சியேல் ............... | யாத்சியேல் ............... | யாத்சியேல். |
| கூனி ............... | கூனி ............... | கூனி. |
| எத்செர் ............... | எத்செர் ............... | எத்செர். |
| சில்லேம் ............... | சில்லேம் ............... | சல்லூம். |

**25.** **"ஏழுபேர்."** தாண் அவன் குமாரனும் நப்தலி அவன் குமாரர் நாலுபேரும் ஆக தொகை ஏழு.

இந்த அட்டவணையில் சிலபேர்கள் வெவ்வேறே வகையாய் எழுத்துக் கூட்டப்பட்டிருக்கிறது. சிலபேர்கள் விடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்குச் சந்தானமில்லாதிருந்ததால் விடப்பட்டிருக்கலாம். தாண் புத்திரர் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்தபோது தங்களுடைய அட்டவணையைக் காட்ட ஏதுவில்லாததால் அவர்களுடையது நாளாகமத்தில் விடப்பட்டிருக்கிறது. பென்யமீனுடைய அட்டவணையில் உண்டாயிருக்கிற குழப்பங்கள் நியா. 20: 21–ம் அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கிற யுத்தத்தினால் நேரிடக்கூடியது. 1 நாளா. 8–ம் அதிகாரத்தில் சொல்லிய அட்டவணை சவுல் இராசாவைப்பற்றியது.

**26.** **"அறுபத்தாறுபேர்."** யாக்கோபு யோசேப்பு அவன் குமாரர் இருவர் நீங்கலாக அறுபத்தாறுபேர். கிரேக்கைத் திருப்புதலில் 20 வசனத்தோடே யோசேப்புடைய ஐந்து பேரப்பிள்ளைகளைச் சேர்த்திருக்கிறது. ஸ்தேவான் (அப். 7: 14.) சொன்ன 75 பேர் அதினால் சரிப்படுகிறது. வேறுசிலர் யாக்கோபோடேகூட எகிப்துக்குப் போனவர், அவனுடைய கர்ப்பப்பிறப்பானவர்கள் 66, அவனுடைய குமாரரின் மனைவிகள் 9; ஆக 75 பேர் என்று சொல்லுவார்கள். ஆனால் முன் சொல்லியபடி விவாகஞ்செய்த ஸ்திரீகளை தலைமுறை அட்டவணையில் சேர்ப்பது யூதவழக்கமல்லாததால், இந்த நியாயம் சரியென்று சொல்லக்கூடாது.





27 பேர்.—யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர்
இரண்டுபேர்; ஆக எகிப்துக்குப் போன யாக்கோபின்
குடும்பத்தார் [1]எழுபதுபேர். [1] உபா. 10. 22. அப். 7. 14.
கோசேன் நாட்டிலே தன்னை யோசேப்பு சந்திக்க
வரும்படி சொல்ல, யூதாவைத் தனக்கு முன்னாக அவ
னிடத்தில் யாக்கோபு அனுப்பினான்; அவர்கள் கோசே
29 னிலே சேர்ந்தார்கள்.—யோசேப்பு தன் இரதத்தை
ஆயத்தப்படுத்தி, அதின்மேல் ஏறி, தன் தகப்பனாகிய
இஸ்ரவேலைச் சந்திக்கும்படி போய், அவனைக் கண்டு,
[2]அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, வெகுநே [2] ஆதி. 45. 14.
30 ரம் அவன் கழுத்தை விடாமல் அழுதான்.—அப்பொ
ழுது இஸ்ரவேல் யோசேப்பைப் பார்த்து: நீ இன்னும்
உயிரோடிருக்கிறாயே, நான் உன் முகத்தைக் கண்
டேன், [3]எனக்கு இப்போது மரணம் வந்தாலும் வாட் [3] லூக். 2. 29, 30.
31 டும் என்றான்.—பின்பு, யோசேப்பு தன் சகோதரரை
யும் தன் தகப்பனுடைய குடும்பத்தாரையும் நோக்கி:
நான் பார்வோனிடத்துக்குப் போய், கானான்தேசத்தி
லிருந்து என் சகோதரரும் என் தகப்பன் குடும்பத்தா

**28.** **"கோசேன் நாட்டிலே தன்னை யோசேப்பு சந்திக்கவரும்படி."** இஸ்ரவேலர் பிரத்தியேகமாய்க் குடியிருப்பதற்கு ஏதுவாய்க் கோசேன் நாட்டை யோசேப்பு அவர்களுக்குத் தெரிந்துகொடுத்தான். அங்கே அவர்கள் எகிப்தியருடைய மார்க்கத்துக்குச் சம்பந்தப்படாமல் மெய்த்தேவனை ஆராதித்துக்கொண்டுமிருக்கலாம். யாக்கோபு கோசேனுக்குப் போயிறங்கினவுடனே யோசேப்பைச் சந்திக்கவும் இஸ்ரவேலர் நடந்துகொள்ளவேண்டிய விதத்துக்கு அவ்விடத்தில் ஆலோசனை கேட்கவுந் தக்கதாக யூதாவை முந்தியே யோசேப்பண்டைக்கு அனுப்பினான். யாக்கோபின் பிள்ளைகளில் யோசேப்புக்குப் பின்பு யூதா என்பவனே வாக்குவல்லபமுள்ளவனும் காரிய சமர்த்தனுமிருந்தான்.

**29.** **"வெகுநேரம் அவன் கழுத்தை விடாமல் அழுதான்."** யோசேப்பு தன் சகோதரரைக் கண்டபோது இருதயம் பொங்கி அழுதான். பின்பு அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தினபோது அவர்கள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரிந்தான். இப்போது தன்னை நேசித்த தன் அருமையான தகப்பனை 22 வருஷங்களுக்குப்பின்பு கண்டதினால் உள்ளம் பொங்கி தகப்பனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு வெகுநேரம் அழுதான். சிலர் மகன் தகப்பனுடைய கழுத்தைக் கட்டத் துணியமாட்டான். தகப்பனே மகன் கழுத்தைக் கட்டி வெகுநேரம் அழுதான் என்று சொல்லுவார்கள்.

**30.** **"இப்போது மரணம் வந்தாலும் வாட்டும்."** யோசேப்பின் முகத்தைப் பார்க்கும்படியாக யாக்கோபு அடைந்த காரியம் இப்போது முற்றுப்பெற்றதால், சமாதானத்தோடே மறுமைக்குச் செல்ல அவன் ஆயத்தமாயிருந்ததை இதினால் அறிகிறோம்.

32 ரும் என்னிடத்தில் வந்திருக்கிறார்கள்.—அவர்கள்
மேய்ப்பர்கள், ஆடுமாடுகளை மேய்க்கிறது அவர்கள்
தொழில்; அவர்கள் தங்கள் ஆடுமாடுகளையும் தங்க
ளுக்கு உண்டான எல்லாவற்றையும் கொண்டுவந்தார்
33 கள் என்று அவருக்குச் சொல்லுகிறேன்.—பார்வோன்
உங்களை அழைத்து, உங்கள் தொழில் என்ன என்று
34 கேட்டால்,—நீங்கள், கோசேன் நாட்டிலே குடியிருக்
கும்படி, அவனை நோக்கி: எங்கள் பிதாக்களைப்போல,
உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயது
முதல் இதுவரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம்
என்று சொல்லுங்கள்; மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்
தியருக்கு [1]அருவருப்பாயிருக்கிறார்கள் என்றான்.

[1] யாத். 8. 26.

**32. "அவர்கள் மேய்ப்பர்கள்."** கோசேனில் தன் சகோதரரைப் பிரத்தியேகமாய் வைக்கவேண்டும் என்பது யோசேப்பின் நோக்கமாயிருந்ததால் பார்வோனிடத்தில் தங்கள் தொழிலை மறைக்காமல் அதை உண்மையாய்ச் சொல்ல ஆலோசனை சொன்னான். பார்வோன் அவர்கள் மேய்ப்பர்கள் என்று அறியும்போது எகிப்தியர் நடுவில் அவர்கள் வாசஞ்செய்யாமல் அலாதியாயிருக்கும்படி உத்தரவு கொடுப்பான் என்று அறிந்து இப்படிச் சொல்லச்சொன்னான்.

**34. "மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள்."** மேய்ப்பர்கள் எகிப்தியர் சின்னங்களில் சவரம்பண்ணாதவர்களாகவுங் கேவலமாய் உடுத்தியிருக்கிறவர்களாகவுஞ் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள். எகிப்தியருக்கு ஆடுமாடுகளிருந்தன (அதி. 47: 16, 17.). பார்வோன் இராசாவுக்கும் அவைகள் இருந்தன (அதி. 47: 6.). ஆனால் அவைகளை ஸ்திரீகளும் சிறுவரும் அடிமைகளும் மேய்த்துவந்தார்கள். ஆண்பிள்ளைகளோ விவசாய ஜீவனம் பண்ணிவந்தார்கள். மேய்ப்பர் எகிப்தியருக்கு அருவருப்பாயிருந்ததற்கு முகாந்தரங்களுண்டு. முதலாவது மேய்ப்பருடைய மார்க்கமானது எகிப்தியருக்கு வித்தியாசமானதாயிருந்தது. எகிப்தியர் தங்கள் தேசத்திலே பல நாடுகளிலும் வணங்கிவந்த மிருகங்களை மேய்ப்பர்கள் அடித்துப் பொசிப்பார்கள். இரண்டாவது மேய்ப்பருடைய ஜீவனம் ஓரேஇடத்தில் குடியிருப்பாயிருந்த எகிப்தியருடைய ஜீவனத்துக்கு விகற்பமாயிருந்தது. குடிபெயர்ந்து அலைந்து திரிகிற மேய்ப்பர்களுடைய மந்தைகள் எகிப்தியருடைய பயிர்களில் விழுந்து சேதஞ் செய்கிறவைகளாயிருந்தன (வியா. 4: 8. பார்க்க.). மேலும் மேய்ப்பர்கள் நாகரீகத்தில் குறைவுள்ளவர்களாயும் மிலேச்சத்தனமுள்ளவர்களாயுமிருப்பார்கள். மேய்ப்பரான [illegible]க்சோ சாதியாருடைய படையெழுச்சி யோசேப்புக்குப் பிந்தியகாலத்தில் சம்பவித்தபோதிலும் எகிப்தியருக்கு அவர்களால் மேய்ப்பர்கள் என்று எண்ணப்பட்ட எத்தியருக்கும் ஓயாத யுத்தமிருந்தது. அதோடே சேமியரான மற்றச் சாதியாரும் [illegible] கிழக்காமேயாரத்தில் வளம்பொருந்திய இடங்களிலே பிரவேசித்து மாடுகளைக் கொள்ளையடித்துக் கொண்டுபோனதினாலும் எகிப்தியர் மேய்ப்பர்களை ஒரு சாதியாராக அருவருப்பாய் எண்ணினார்கள் என்று அறியவேண்டியது.





## 47. அதிகாரம்.

யோசேப்பு தன் சகோதரரில் ஐந்துபேரையும், 7. தன் தகப்பனையும் பார்வோனுக்கு முன்பாகக் கொண்டுபோனது. 11. அவன் அவர்களுக்கு வாசஸ்தலத்தையும் ஜீவனத்தையும் கொடுத்தது. 13. அவன் எல்லா எகிப்தியருடைய பணத்தையும், 16. அவர்களுடைய மிருகஜீவன்களையும், 18. அவர்களுடைய நிலங்களையும் பார்வோனுக்கு வாங்கிக்கொடுத்தது. 22. ஆசாரியருடைய நிலம் கொள்ளப்படாதிருந்தது. 23. நிலம் ஐந்தில் ஒரு பங்குக்கு விடப்பட்டது. 28. யாக்கோபினுடைய ஆயுசு. 29. அவன் தன் பிதாக்களுடனே தன்னையும் அடக்கம்பண்ண யோசேப்பை ஆணையிடச் செய்தது.

1 யோசேப்பு பார்வோனிடத்தில் போய்: என் தகப்ப
னும் என் சகோதரரும், தங்கள் ஆடுமாடுகளோடும்
தங்களுக்கு உண்டான எல்லாவற்றோடுங்கூடக் கா
னான்தேசத்திலிருந்து வந்தார்கள்; இப்பொழுது கோ
சேன் நாட்டில் இருக்கிறார்கள் என்று சொல்லி;—

அதி. 46.31.

படிப்பினை.

(1) சந்தோஷமான காரியத்தினுந் துக்கம் கலந்திருக்கும். ஆகையால் நமக்குத் தடனே களிகூரக்கடவோம். தேவன் ஏற்படுத்திய எத்தனங்களைச் சரியானபடி கையாடிவருவதால் அவருடைய சமுகம் நம்மோடே இருந்தால் நாம் அவருடைய சமுகம் வைக்கும் நிலைமையிலே பொறுமையோடே இருப்போமாக. என்ன வந்தாலும் வரட்டும்; துன்பங்களின் நடுவிலும் அவர் நம்மோடே இருக்கிறார்.

(2) நாம் என்றைக்காவது இவ்வுலகத்தைவிட்டுப் போகிறவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. மரணவேளையில் பெந்துக்களால் சூழப்பட்டிருப்பது விரும்பப்படத்தக்கதென்றாலும் நாம் மரணநிழலின் பள்ளத்தாக்கை ஊடுருவச் செல்லுகையில் நம்முடைய ஆத்துமாவை ஏற்றுக்கொள்வதற்கு இயேசுவின் சமுகம் நமக்குத் தீராத அவசியமாயிருக்கிறது.

(3) நம்முடைய குடும்பம் எவ்வளவு பெருக்கமாயிருந்தாலுங் கர்த்தர் அவர்களை விசாரிப்பார். பாவிகள் எத்தனைகோடிப்பேராய்க் குணப்பட்டாலும் அத்தனைபேருக்கும் போதுமான இடம் பரலோகத்திலுண்டு.

(4) நமக்கு உதாரமுள்ள சிநேகிதர் அநேகர் இருந்தாலும் அவர்களுக்கு அநாவசியமான வருத்தத்தை நாம் கொடுக்கக்கூடாது.

(5) நாம் இராச அரமனைக்குத் தூரமாயுங் காடுகளுக்குச் சமீபமாயுமிருப்பது நம்முடைய ஆத்துமாவுக்குப் பிரயோசனமாயிருந்தால் நாம் எவ்வளவாய் அரட்டைபண்ணப்பட்டவர்களாயினுந் தேவனுக்கு நன்றியறிதலுள்ளவர்களாயிருப்போமாக.

(6) நம்முடைய ஜீவன் கர்த்தருடைய [illegible]யிலிருக்கிறது. நாம் எதைச்செய்தாலும் அவருடைய காலத்துக்காகக் காத்திருப்போமாக. அதற்கு இடையில் உலகத்தார் நம்மை வெறுத்து நம்மைவிட்டுத் தங்களை [illegible]த்தியேகமாக்கிக்கொண்டால் அதற்காகச் சந்தோஷப்பட்டுக் களிகூரக்கடவோம்.

## 47. அதிகாரம்.

**1. "இப்பொழுது கோசேன் நாட்டில் இருக்கிறார்கள்."** கோசேனில் தன் சகோதரரைக் குடியேற்றும்படி யோசேப்புக்கு எப்போதும் மனதிருக்

2 தன் சகோதரரில் ஐந்துபேரைப் பார்வோனுக்கு முன்
3 பாகக் கொண்டுபோய் [1]நிறுத்தினான். — பார்வோன் [1] அப். 7. 13.
அவனுடைய சகோதரரை நோக்கி: உங்கள் [2]தொழில் [2] யோனா. 1. 8.
என்ன என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: உமது
அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் [3]மந்தை [3] ஆமோ. 7. 14.
மேய்க்கிறவர்கள் என்று பார்வோனிடத்தில் சொன்ன
4 துமன்றி, — கானான்தேசத்திலே பஞ்சம் கொடிதாயி
ருக்கிறது; உமது அடியாரின் மந்தைகளுக்கு மேய்ச்
சல் இல்லாமையால், இத்தேசத்திலே [4]தங்கவந்தோம்; [4] உபா. 26. 5. சங். 105. 23. ஏசா. 52.
உமது அடியாராகிய நாங்கள் கோசேன் நாட்டிலே
குடியிருக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்றுவேண்
டிக்கொண்டார்கள்.

5 அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி:
உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னிடத்தில் வந்
6 திருக்கிறார்களே.—எகிப்துதேசம் உனக்கு முன்பாக
இருக்கிறது; தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன்

தது. ஆனால் இப்போது பார்வோனிடத்தில், அவன், அவர்கள் கோசேனில் வந்திறங்கியிருக்கிறதாக [illegible]ன். 4-ம் வாக்கியத்தில் அவர்கள் அவ்விடத்திலிருக்கும்படியாக இராசனிடத்தில் உத்தரவு கேட்டார்கள் என்று பார்க்கிறோம்.

**2. "ஐந்துபேரை."** ஐந்து என்ற தொகை, 43:34லும், 45: 22லும் இங்கேயும் வருகிறது. இஸ்ரவேலருக்குள் ஏழு என்ற இலக்கம் எப்படி விசேஷித்ததாக எண்ணப்பட்டதோ, அப்படி ஐந்து என்கிற இலக்கமும் எகிப்தியருக்குள்ளே விசேஷித்ததாய் எண்ணப்பட்டதென்று தோன்றுகிறது.

**3. "எங்கள் பிதாக்களும்."** எகிப்தியருக்குள்ளே தொன்றுதொட்டு பாரம்பரியமாய் தகப்பன் தொழிலை பிள்ளைகள் செய்துகொண்டுவந்த வழக்கமிருந்தது. இதை அறிந்த யோசேப்பு எங்கள் பிதாக்களைப்போல நாங்களும் மேய்ப்பர்கள் என்று பார்வோனுக்குச் சொல்லும்படி தன் சகோதரருக்குப் போதனை செய்திருந்தான் (ஆதி. 46: 34.). இராசா இதைக் கேள்விப்படுகையில் அவர்களை வேறே தொழில் செய்யும்படி ஏவுவது கூடாதகாரியமாயிருக்கும் என்று எண்ணுவான்.

**4. "தங்கவந்தோம்."** யோசேப்பின் சகோதரர் தற்காலத்துக்கென்று எகிப்தில் வாசஞ்செய்ய பிரியமாயிருந்தார்கள் என்று இதினால் அறியலாம். ஆனால் இராசா அவர்களுக்குக் காட்டின பட்சத்தினாலே அவர்கள் நெடுங்காலம் அங்கே இருந்துவிட்டார்கள். கோசேனில் ஆடுமாடுகளுக்கு மேய்ச்சலிருந்ததால், அதை யோசேப்பின் சகோதரர் விரும்புவதற்கு ஒரு காரணமாயிருந்தது.

**6. "தேசத்திலுள்ள நல்ல இடத்திலே."** பார்வோன் யோசேப்பின் பேரில் வைத்த அன்பினாலே இப்படிச் சொன்னான். தற்காலத்தில் எல-ஷர்





தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி
செய்; அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்க
லாம்; அவர்களுக்குள்ளே திறமையுள்ளவர்கள் உண்
டென்று உனக்குத் தெரிந்திருந்தால், அவர்களை என்
ஆடுமாடுகளை விசாரிக்கிறதற்குத் [1]தலைவராக வைக்க [1] 1 நாளா. 27. 29. நீதி. 22. 29.
லாம் என்றான்.

7 பின்பு, யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபை
அழைத்துக்கொண்டுவந்து, அவனைப் பார்வோனுக்கு
முன்பாக நிறுத்தினான். யாக்கோபு பார்வோனை [2]ஆசீர் [2] 1 சாமு. 15. 30.
8 வதித்தான்.—பார்வோன் யாக்கோபை நோக்கி: உமக்கு 1 நாளா. 29. 20. 1 பே. 2. 17.
9 வயது என்ன என்று கேட்டான்.—அதற்கு யாக்
கோபு: [3]நான் பரதேசியாய்ச் சஞ்சரித்த நாட்கள் நூற்று [3] சங். 39. 12. எபி. 11. 9, 13.
முப்பது வருஷம்; என் [4]ஆயுசுநாட்கள் கொஞ்சமும் [4] யோபு. 14. 1.
சஞ்சலமுள்ளதுமாயிருக்கிறது; அவைகள் பரதேசிக

ரியா என்றழைக்கப்படுகிற நாடு கோசேன் சீமையிலிருக்கலாம். அதில் அதிகமான தீர்வை தற்காலத்தில் வசூல்செய்யப்படுகிறதாய்ச் சொல்லுகிறார்கள்.

**7. "யாக்கோபு பார்வோனை [illegible]."** பார்வோன் முன்பாக யோசேப்பின் சகோதரர் நிறுத்தப்பட்டதைவிட யாக்கோபு அவன் முன்பு நிறுத்தப்பட்டது மிகவும் விசேஷித்ததாயிருக்கிறது. பார்வோன் யோசேப்பின் சகோதரரைத் தன் பிரதமமந்திரியின் உடன் பிறந்தவர்கள் என்று மதித்துக் கோசேனில் தங்கும்படி உத்தரவுபண்ணினான். யாக்கோபு மிகவும் வயது சென்றவனாயிருந்ததால், பார்வோன் அவனை கனத்துக்குரியவனாக எண்ணினான். எகிப்தியருக்குள்ளே 120 வயதுக்கு மிஞ்சிய ஆயுசுடையவர்களைக் காண்பது அரிதாயிருந்தது. யாக்கோபு அப்போது 130 வயசாயிருந்தான். ஆகவே பார்வோன் அவனைக் கண்ணியமாய் ஏற்றுக்கொண்டு, இரண்டுதரம் அவனுடைய ஆசீர்வாதத்தை அங்கீகாரஞ் செய்தான். (10. வச.)

**9. "பரதேசியாய்."** யாக்கோபு மேய்ப்பனாயிருந்ததால் தனக்குச் சொந்தமல்லாத தேசத்திலே இடம்விட்டு இடம் பெயர்ந்துபோனதை மனதில் வைத்துப் பேசினான். அதோடே அவன் மோட்சநாட்டை நாடி தன் ஜீவகாலத்தைப் பின்னிட்டதால், இப்படிச் சொல்லும்படியாக ஏவப்பட்டான். (எபி. 11:9,13.)

**"கொஞ்சமும் சஞ்சலமுள்ளதும்."** யாக்கோபு தன் தகப்பனை வஞ்சித்த காலமுதல் அவன் ஜீவநாட்கள், அருங்கவலைகளாலுந் துக்கங்களாலும் நிறைந்தவைகளாயிருந்தன. ஆரானில் அவன் ஆஸ்தியைச் சம்பாதித்தபோது அரும் பிரயாசத்தைச் செலுத்தவேண்டியதாயிருந்தது. லாபான் அவனுக்குப் பல அநியாயங்களையுஞ் செய்தான். அவன் கானானுக்குத் திரும்பினபோது, பின்னே லாபானையும் முன்னே ஏசாவையும்பற்றிய பயங்கரம் அவனைச் சூழ்ந்தது. சுளுக்குவியாதி தீரும்படி சுக்கோத்தில் வெகுநாளிருக்கவேண்டியதாய் நேரிட்டது. தீனாளால் அவனுக்குக் கனக்குறைச்சலும், அவன் சகோதரரால் மனப்பயமுந் துக்கமுஞ் சம்பவித்தது. தன் தகப்பன் வீட்டுக்குச் சமீ

ளாய்ச் சஞ்சரித்த என் பிதாக்களுடைய [1]ஆயுசுநாட்க | [1] ஆதி. 25.7: 35. 28.
ளுக்கு வந்து எட்டவில்லை என்று பார்வோனுடனே
10 சொன்னான்.—பின்னும் யாக்கோபு பார்வோனை ஆசீர்
வதித்து, அவன் சமுகத்தினின்று புறப்பட்டுப் போ
னான்.

11 பார்வோன் கட்டளையிட்டபடியே, யோசேப்பு தன்
தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்துதேசத்தி
லே நல்ல நாடாகிய [2]ராமசேஸ் என்னும் நாட்டிலே | [2] யாத். 1. 11.
சுதந்தரம் கொடுத்து; அவர்களைக் குடியேற்றினான்.

12 யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும்
தன் தகப்பனுடைய குடும்பத்தார் அனைவரையும்,
அவரவர்கள் குடும்பத்திற்குத்தக்கதாய் ஆகாரம் கொ
டுத்து ஆதரித்துவந்தான்.

பமாய் வரும்போது, தன் நேசமனைவி ராகேலைச் சாகக்கொடுத்தான். தகப்பனோடேகூட ஏசா வாசஞ்செய்ததுமன்றி, பின்பு விசேஷமாய்ச் சற்று தொலையில் குடியிருக்கும்படி நேரிட்டது. தகப்பன் மரிக்க, ஏசா வேறே இடத்துக்குப் போய்விட்டான். ஈசாக்கின் மரணத்துக்கும் இஸ்ரவேலர் எகிப்துக்குப் போனதற்கும் இடையிலுள்ள 10 வருஷக்காலத்தில், யாக்கோபு, யோசேப்புக்காகத் துக்கங்கொண்டிருக்கும்படியாயிற்று. இந்தத் தீங்குகள் அவனைச் சஞ்சலப்படுத்தினது. அவன் தன் ஆயுசுநாட்களைத் தன் பிதாக்களுடைய வயதுக்கு ஒப்பிட்டுப் பார்த்தபோது, தன்னுடைய வயசு கொஞ்சமாயிருந்தது. பார்வோன், யாக்கோபு மிஞ்சிய ஆயுசுக்கு இருந்ததாக எண்ணினான். யாக்கோபு தான் கொஞ்சவயசில் முதிர்வயதுள்ளவனானதாகச் சொல்லுகிறான். யாக்கோபு இதற்குப் பின்பு 17 வருஷம் உயிரோடே இருந்து சமாதானத்தோடே மறுமைக்குட் பிரவேசித்தான்.

**11.** **"ராமசேஸ் என்னும் நாட்டிலே."** ராமசேஸ், கோசேன் சீமையிலுள்ள ஒரு நாடாயிருந்தது. ராமசேஸ் என்ற பட்டணத்தை இஸ்ரவேலர் கட்டினதாக (யாத். 1: 11.) வாசிக்கிறோம். அந்தப் பட்டணத்துப் பேர் அந்த நாட்டின்பேராலுண்டானதோ இல்லையோ என்பதை அறியோம். இஸ்ரவேலர் அந்தப் பட்டணத்தைக் கட்டுமுன்னதாக, அது இருந்ததானால், அது சிறிய ஊராயிருக்கலாம். வெகுகாலத்துக்குப்பின்பு, பத்தொன்பதாம் இராசகுடும்பத்தைச்சேர்ந்த இரண்டாம் இராமசேஸ் ராஜாவின்காலத்தில் அந்தப் பட்டணம் மிகவும் பேர்போனதாயும் செழிப்பானதாயுமிருந்தது.

**12.** **"யோசேப்பு தன் தகப்பனையும்......ஆதரித்துவந்தான்."** ஐந்தாம் கற்பனைப்படி பிள்ளையானது தன் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றினான். அந்தக் கற்பனையில் அடங்கிய ஆசீர்வாதத்தையும் யோசேப்பு பெற்று நீடிய ஆயுசுக்கு வாழ்ந்தான்.





13 பஞ்சம் மிகவும் கொடிதாயிருந்தது; தேசமெங்
கும் ஆகாரம் கிடையாமற்போயிற்று; எகிப்துதேச | [1] ஆதி. 41.30, 31. அப். 7. 11.
மும் கானான் தேசமும் பஞ்சத்தினாலே மெலிந்துபோ
14 யிற்று.—யோசேப்பு எகிப்துதேசத்திலும் கானான்தே
சத்திலுமுள்ள [2]பணத்தையெல்லாம் தானியம் கொண் | [2] ஆதி. 41. 56.
டவர்களிடத்தில் வாங்கி, அதைப்பார்வோன் அரமனை
15 யிலே கொண்டுபோய்ச் சேர்த்தான்.—எகிப்துதேசத்
திலும் கானான்தேசத்திலுமுள்ள பணம் செலவழிந்த
போது, எகிப்தியர் எல்லாரும் யோசேப்பினிடத்தில்
வந்து: எங்களுக்கு ஆகாரம் தாரும்; பணம் இல்லை,
அதினால் நாங்கள் உமது சமுகத்தில் சாகவேண்டுமோ
16 என்றார்கள்.—அதற்கு யோசேப்பு: உங்களிடத்தில்
பணம் இல்லாமற்போனால், உங்கள் ஆடுமாடுகளைக்
கொடுங்கள்; அவைகளுக்குப் பதிலாக உங்களுக்குத்
17 தானியம் கொடுக்கிறேன் என்றான்.—அவர்கள் தங்கள்
ஆடுமாடு முதலானவைகளை யோசேப்பினிடத்தில்
கொண்டுவந்தார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடு
களையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங்கிக்

**13.** **"எகிப்துதேசமும் கானான்தேசமும் பஞ்சத்தினாலே மெலிந்துபோயிற்று."** பஞ்சகாலத்தில் ஆகாரக் குறைவினால் ஜனங்களுக்குள் மெலிவு காணப்படுவது இயல்பே. பஞ்சங் கொடியதாயிருந்தாலுந் தேசத்தில் கலகம் உண்டாகாமல் சமாதானம் நிலைபெற்றுக்கொண்டுவந்தது. யோசேப்பு அவ்வளவு யுக்தியாய்க் காரியங்களை நடத்திக்கொண்டுவந்தான்.

**16.** **"உங்கள் ஆடுமாடுகளைக் கொடுங்கள்."** நீலநதி பெருக்கெடுத்துத் தேசத்தைச் செழிப்பாக்காததால், ஆடுமாடுகளை யுடையவர்கள் சங்கடங்களை அனுபவித்தார்கள். யோசேப்பு தானியத்துக்காக ஆடுமாடு முதலியவற்றைக் கொடுக்கும்படியாகச் சொன்னதில், எகிப்தியருக்கு ஓர்வகைப் பாரமும் அதால் நீங்கிப்போயிற்று. பஞ்சகாலத்தில் ஆடுமாடுகளை வளர்ப்பது மிகவும் வருத்தமுங் கவலையுமாய் இருக்கும். ஆதலால், பார்வோன் யோசேப்பின் சகோதரரில் திறமுடையவர்களை மேற்பார்க்கும்படி உத்தரவுபண்ணினது நல்ல யுக்தியாயிருந்தது.

**17.** **"குதிரைகளையும் ஆடுகளையும் மாடுகளையும் கழுதைகளையும்."** குதிரைகளைக்குறித்து வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிற முதலிடம் இதுவே. ஹைக்சோ இராசாக்கள், குதிரைகளை முதலாவதாக எகிப்துக்குக் கொண்டுவந்தார்கள் என்று சிலர் சொல்லியதை வைத்துக்கொண்டு மேய்ப்ப இராசாக்கள் யோசேப்பின்காலத்துக்கு முந்தியே அரசாண்டுவந்தார்கள் என்றும், அவர்கள் மிகக் கடூரமாய் நடத்தினதால் எகிப்தியர் அந்த அரசாட்சியை மிகவும்

கொண்டு, அந்த வருஷம் அவர்களுடைய ஆடுமாடு
முதலான எல்லாவற்றிற்கும் பதிலாக அவர்களுக்கு
ஆகாரம் கொடுத்து, அவர்களை ஆதரித்தான்.

18 அந்த வருஷம் முடிந்தபின், மறுவருஷத்திலே அவர்
கள் அவனிடத்தில் வந்து: பணமும் செலவழிந்து
போயிற்று; எங்கள் ஆடுமாடு முதலானவைகளும்
எங்கள் ஆண்டவனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும்
எங்கள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக்கு
முன்பாக மீதியானது ஒன்றும் இல்லை; இது எங்கள்
19 ஆண்டவனுக்குத் தெரியாதகாரியம் அல்ல.—நாங்களும்
எங்கள் நிலங்களும் உம்முடைய கண்களுக்கு முன்
பாக அழிந்துபோகலாமா? நீர் எங்களையும் எங்கள்
நிலங்களையும் வாங்கிக்கொண்டு, ஆகாரம் கொடுக்க
வேண்டும்; நாங்களும் எங்கள் நிலங்களும் பார்வோ
னுக்கு ஆதீனமாயிருப்போம்; நாங்கள் சாகாமல் உயி
ரோடிருக்கவும், நிலங்கள் பாழாய்ப்போகாமலிருக்க
வும், எங்களுக்கு விதைத் தானியத்தைத் தாரும் என்
20 றார்கள்.—அப்படியே எகிப்தியர் பஞ்சம் மேலிட்டபடியால் அவரவர் தங்கள் தங்கள் வயல்
நிலங்களை விற்றார்கள்; யோசேப்பு எகிப்தின் நிலங்
கள் யாவையும் பார்வோனுக்காகக் கொண்டான்; இவ்
விதமாய் அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று.—

வெறுத்தார்கள் என்றும் இதையிட்டே மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருந்தார்கள் என்றும் எழுதியிருக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால் குதிரைகளை எகிப்தியர் சுயப்பிரயோசனத்துக்காக உபயோகப்படுத்திவந்தார்கள். யுத்தத்துக்கடுத்த விஷயங்களில் அவைகளைப் பிந்திய காலத்தில் பிரயோனசப்படுத்தினார்களென்று அறியவேண்டும்.

செம்மறியாடுகள், கழுதைகள் எகிப்துதேசத்துப் பிறவிகளாயிருந்தன.

**18.** **"மறுவருஷம்."** இது பஞ்சமுண்டான இரண்டாம் வருஷத்தைக் குறியாமல் ஆடுமாடுகளைத் தானியத்துக்காகக் கொடுத்ததற்குப் பின்வந்த இரண்டாம் வருஷத்தைக் குறிக்கும்.

**20.** **"அந்தப் பூமி பார்வோனுடையதாயிற்று."** சுயாதீன ஜனங்களாயிருந்த எகிப்தியரை அடிமைகளாக்க யோசேப்பு இந்த ஏற்பாட்டைச் செய்தான் என்று அவர்பேரில் குற்றஞ் சுமத்துவாருண்டு. அவன் இராசாவுடைய அதிகாரத்தை மிகவும் முக்கியப்படுத்தினான் என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. எகிப்தியர் தங்கள் சிற்றரசர்களுக்கும் மனைவிகளுக்கும் பூசாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் அடிமைப்பட்டவர்கள்போலிருந்தார்கள். இராசாவின் அதிகாரத்தைச் சிரேஷ்டப்படுத்தினதில் ஜனங்களுடைய பாரம் வெகுதூரம் நீங்





21 மேலும் அவன் எகிப்தின் ஒரு எல்லைமுதல் மறு
எல்லைவரைக்குமுள்ள ஜனங்களை அந்தந்தப் பட்ட
22 ணங்களில் குடிமாறிப் போகப்பண்ணினான்.—ஆசா
ரியருடைய நிலத்தைமாத்திரம் அவன் கொள்ள
வில்லை; அது பார்வோனாலே ஆசாரியருக்கு மானிய
மாகக் கொடுக்கப்பட்டிருந்ததினாலும், பார்வோன்
அவர்களுக்குக் கொடுத்த மானியத்தினாலே அவர்கள்
ஜீவனம்பண்ணிவந்ததினாலும், அவர்கள் தங்கள் நிலத்
23 தை விற்கவில்லை.—பின்னும் யோசேப்பு ஜனங்களை
நோக்கி: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்
களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்;
இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத்
24 தானியம், இதை நிலத்தில் விதையுங்கள்.—விளைவில்
ஐந்தில் ஒரு பங்கைப் பார்வோனுக்குக் கொடுக்க
வேண்டும்; மற்ற நாலுபங்கும் வயலுக்கு விதையாக

கிப்போவதற்கு அதினால் அனுகூலமுண்டாயிற்று. எகிப்தில் நடந்த இந்தச் சங்கதிகள் மெய் என்பதை எரோடோத்து என்பவனும் மற்றும் கிரேக்குச் சரித்திரக்காரரும் எழுதியிருப்பதால் அறியலாம்.

**21.** **"ஜனங்களை அந்தந்தப் பட்டணங்களில் குடிமாறிப் போகப்பண்ணினான்."** யோசேப்பு ஜனங்கள்பேரில் [illegible] இரக்கத்தினாலே இப்படிச் செய்தான். தானியங்கள் பட்டணங்களில்மாத்திரங் கட்டிவைக்கப்பட்டிருந்ததால், அந்தந்தப் பட்டணங்களுக்குச் சமீபமாயிருந்தால் இலகுவாய் ஜனங்கள் தானியங்களை வாங்கிக்கொள்ள ஏதுவாயிருக்குமாதலால் இந்த ஏற்பாட்டைச் செய்தான்.

**22.** **"ஆசாரியருடைய நிலத்தைமாத்திரம் அவன் கொள்ளவில்லை."** எகிப்திலுள்ள ஆசாரியருக்கு இராசாங்கத்திலிருந்து அநுதினமும் படி கொடுக்கப்பட்டுவந்ததினால், அவர்கள் தங்கள் நிலங்களை விற்க அவசியம் நேரிடவில்லை. எகிப்தின் நிலம் இராசாவுக்கும் பூசாரிகளுக்கும் யுத்தவீரருக்கும் உரித்தானதாயிருந்தது. ஆனால் யுத்தவீரருக்கு இராசா தமது இஷ்டப்படி கொடுத்து தமது இஷ்டப்படி திரும்ப எடுத்துக்கொள்ளுகிறதுண்டு. யுத்தவீரர் நிலங்களை அனுபவிக்கும் வழக்கம் யோசேப்புக்குப் பிந்தியகாலத்திலுண்டாயிருந்தது.

**23.** **"இதோ உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத்தானியம்."** பஞ்சமுண்டான ஏழாம் வருஷக் கடைசியில், யோசேப்பு நிலத்தைச் சாகுபடி செய்யும்படி ஜனங்களுக்கு விதை கொடுத்தான். அதோடே நிலத்தை உழும்படி மாடுகளையுங் கொடுத்திருக்கவேண்டும். யோசேப்பின் வியார்த்திப்படி சகலமும் நடந்தேறினதையும், அவன் பார்வோனுக்குச் சொன்ன ஆலோசனைகள் முதற்றரமானதென்பதையும், ஜனங்கள் அறிந்துகொண்டு இந்தக் கொடிய வருஷங்களில் அவனைத் தங்கள் பிராணநாயகனாகப் போற்றினார்கள்.

வும் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் உங்
கள் குழந்தைகளுக்கும் ஆகாரமாகவும் உங்களுடை
25 யதாயிருக்கட்டும் என்றான்.—அப்பொழுது அவர்கள்:
நீர் எங்கள் பிராணனைக் காப்பாற்றினீர்; எங்கள் ஆண்
டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவு கிடைக்க
வேண்டும்; நாங்கள் பார்வோனுக்கு அடிமைகளா
26 யிருக்கிறோம் என்றார்கள்.—ஐந்தில் [1]ஒன்று பார்வோ　[1] லேவி. 7. 24.
னுக்குச் சேரும் வாரம் என்று யோசேப்பு இட்ட கட்
டளைப்படி எகிப்துதேசத்திலே இந்நாள்வரைக்கும்
நடந்துவருகிறது; ஆசாரியரின் நிலமாத்திரம் பார்
வோனைச் சேராமல் நீங்கலாயிருந்தது.

27 இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலுள்ள கோசேன்நாட்
டிலே குடியிருந்தார்கள்; அங்கே நிலங்களைக் கை
யாட்சிசெய்து, [2]மிகவும் பலுகிப் பெருகினார்கள்.—　[2] யாத். 1. 7, 12 உபா. 10. 22 வெளி. 9. 23.
28 யாக்கோபு எகிப்துதேசத்திலே பதினேழு வருஷம்
இருந்தான்; யாக்கோபுடைய ஆயுசுநாட்கள் நூற்று
29 நாற்பத்தேழு வருஷமாயின. இஸ்ரவேல் [3]மரணமடையும்　[3] உபா. 31. 14. 1 இரா. 2[illegible].
காலம் சமீபித்தது. அப்பொழுது அவன் தன் குமார
னாகிய யோசேப்பை வரவழைத்து, அவனை நோக்கி:

**26.** "யோசேப்பு இட்ட கட்டளைப்படி." நிலம் எல்லாம் இராசாங்கத்தைச் சேர்ந்துபோனதாலும், விதையும் மாடுகளும் இராசாங்கத்திலிருந்து கொடுக்கப்பட்டதாலும், ஐந்திலொருவாரம் வாங்குவது நியாயமானதாயிருந்தது. பூர்வீகத்தில் நம்முடைய தேசத்திலும் இப்படிப்பட்ட வாரம் ஏற்பட்டிருந்தது. இந்த வரும்படியிலிருந்து இராசாங்கச்செலவுஞ், குளம் கால்வாய்களைச் செப்பனிடுதலுஞ் செய்யப்பட்டிருக்கவேண்டியது.

**27.** "மிகவும் பலுகிப் பெருகினார்கள்." தேவன் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் இங்கே நிறைவேறத் துவங்கினது.

**29.** "இஸ்ரவேல் மரணமடையும் காலம் சமீபித்தது." யாக்கோபு 17 வருஷம் எகிப்திலிருந்து, தன் வம்சத்தார் செழித்தோங்கிக்கொண்டு வந்ததைப் பார்த்தான். அப்பால் தன் மரணம் கிட்டியிருக்கிறதென்று அறிந்து யோசேப்புக்குச் செய்தி அனுப்பி, அவனை வரவழைத்துத் தான் ஆசித்தபடி தன்னை மக்பேலா கெபியிலே அடக்கஞ் செய்யும்படி ஆணையிடச்செய்தான். அங்கே யாக்கோபின் பாட்டனாகிய ஆபிரகாமும், அவன் தகப்பனாகிய ஈசாக்கும், அவன் தாய் ரெபெக்காளும், அவன் மனைவி லேயாளும் அடக்கஞ் செய்யப்பட்டிருந்தார்கள்.





என்மேல் உனக்குத் தயவுண்டானால், உன் கையை
[1]என் தொடையின்கீழ் வைத்து என்மேல் பட்சமும்　[1] ஆதி. 24. 4.
உண்மையுமுள்ளவனாயிரு; என்னை எகிப்திலே அடக்
30 கம்பண்ணாதிருப்பாயாக.—நான் என் பிதாக்களோடே
[2]படுத்துக்கொள்ளவேண்டும்; ஆகையால், நீ என்னை　[2] ஆதி. 50. 5-13. எபி. 11. 22.
எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்களை
அடக்கம்பண்ணியிருக்கிற நிலத்திலே என்னையும்
அடக்கம்பண்ணு என்றான். அதற்கு அவன்: உமது
31 சொற்படி செய்வேன் என்றான்.—அப்பொழுது அவன்:
எனக்கு ஆணையிட்டுக்கொடு என்றான்; அவனுக்கு
ஆணையிட்டுக் கொடுத்தான். அப்பொழுது இஸ்ரவேல்
கட்டிலின் தலைமாட்டிலே [3]சாய்ந்து தொழுதுகொண்　[3] 1 இரா. 1. 47. எபி. 11. 21.
டான்.

"உன் கையை என் தொடையின்கீழ் வைத்து." வியாக்கியானம் 24: 4. பார்க்க.

**31.** "இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து தொழுது கொண்டான்." கிரேக்குத் திருப்புதலிலும் [illegible] திருப்புதலிலும் எபி. 11: 21ல் சொல்லியபடி "தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுது கொண்டான்" என்றிருக்கிறது. எபிரெய வார்த்தை உயிரெழுத்தின்றி "கட்டில்" அல்லது "கோல்" என்று இருப்பலாம். உயிரெழுத்தைக்காட்டும் குறிகள் பிந்தியகாலத்தில் வழங்கப்பட்டது. சிலர் யாக்கோபு வயதுசென்ற கிழவனாயிருந்ததால் யோசேப்பு ஆணையிட்டவுடனே தான் விரும்பினகாரியம் நிறைவேறும் என்று உறுதியாய் நம்பி தன் கட்டிலில் சாய்ந்து படுத்துக் கர்த்தரைத் தொழுதுகொண்டான் என்று வியாக்கியானஞ் செய்கிறார்கள். சிலர் தேவஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் கோலில் சாய்ந்து தொழுது கொண்டான் என்று சொல்லியிருப்பதாலும், ஆதி. 48: 1, 2, 12ல் பார்க்கிறபடி இதைவிட அதிக வருத்தமாயிருந்தகாலத்தில் யோசேப்பு வருகிறான் என்ற செய்தியை அறிந்து தன்னைத் திடப்படுத்திக்கொண்டு கட்டிலின்மேல் உட்கார்ந்தான் என்று சொல்லியிருப்பதாலும் அவன் தான் வெகுவருஷங்களாய் வைத்திருந்ததுங் கட்டிலிலிருந்து இறங்கி நடப்பதற்கு உதவியாக கையில் வைத்திருந்ததுமான கோலின் நுனியில் சாய்ந்து கர்த்தரைத் தொழுதுகொண்டான் என்று வியாக்கியானஞ் செய்கிறார்கள்.

படிப்பினை.

வச. 1—10.

(1) உதாரமுள்ளவர்கள் தங்களைச் சுற்றிலும் இருக்கிற பெந்துக்களை உபசரிக்கிறதில் அவரவருக்குத் தக்கதாகச் செய்வது நல்லது. யோசேப்பு தன் சகோதரர் பதினொருபேரில் ஐந்துபேரைமாத்திரங் கூட்டிக்கொண்டு பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினதற்கு முகாந்தரஞ் சொல்லவில்லை. நம்முடைய இரட்சகருந் தமது பூரண ஞானத்

இப்படியே சிலருக்கு விசேஷித்த ஈவுகளை அருளி பிதாவின் ஆசனத்துக்கு முன்பாக நிறுத்துகிறார்.

(2) யோசேப்பு தன் உயர்ந்த ஸ்திதியிலும் தன் சகோதரரைச் சகோதரர் என்றழைக்க வெட்கப்படவில்லை. கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகார ஆண்டவராயிருக்க நம்மைத் தம்முடைய சகோதரர் என்றழைக்க வெட்கப்படுகிறதுமில்லை.

(3) நாம் மரியாதையான எந்த வேலையுஞ் செய்து, அதில் சுறுசுறுப்புள்ளவர்களாய் விளங்குவோமாக.

(4) நம்முடைய ஆயுசு ஒரு பிரயாணத்துக்குச் சமானம். நமது ஆயுசுகாலங்கள் கொஞ்சமுஞ் சஞ்சலமுமுள்ளதாயிருக்கிறது. இப்படியிருக்க லௌகிக கவலைகளினாலே நம்முடைய இருதயங்கள் பாரமடையாதபடி பார்ப்போமாக. மரணத்தோடே அற்றுப்போகிற பொருட்களையும் மேன்மையையுந் தேடாமல் போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம் என்று எண்ணி நடக்கக்கடவோம். நாம் உலகத்தில் ஒன்றுங் கொண்டுவந்ததும் இல்லை, இதிலிருந்து நாம் ஒன்றுங் கொண்டுபோகவுங் கூடாதென்பது நிச்சயம். ஒவ்வொரு நாளையுந் தேவமகிமைக்கென்று பிரயோகிப்போமாக. ஆயுசுநாட்களைப் பின்னிட்டுப் பார்க்கிறதில் சந்தோஷமுண்டாகாது. செய்த பாவங்கள், புத்தியீன கிரியைகள், நேரிட்ட சோதனைகள், துன்பங்கள் இவைகள் சஞ்சலத்தையே உண்டாக்கும். ஆகையால் நம்முடைய அழைப்பையுந் தெரிந்துகொள்ளுதலையும் நிச்சயப்படுத்தும்படிக் கவலைப்படவேண்டும். நாட்கள் பொல்லாங்குஞ் சுருக்கமுமாயிருப்பதால் அவைகளை ஆதாயப்படுத்திக்கொள்ளக்கடவோம்.

(5) நீதியின் வழியில் உண்டாகும் நரைமயிரானது மகிமையான கிரீடம்.

(6) நாம் மனிதர் முன்பாக நமது இரட்சகரை அறிக்கையிட வெட்கப்படக் கூடாது.

வச. 11—அரட

(7) உயர்ந்த உத்தியோகமும் கண்ணியமும் உண்டாகும்போது பழைய தோழரை அசட்டைசெய்யக்கூடாது. அப்படி அசட்டை செய்வது கெட்ட புத்திக்கு அடையாளம்; நற்புத்தியுடைய யோசேப்பு அப்படி எண்ணவில்லை.

(8) தேவன் நமக்குக் கனவான்களான சிநேகிதரை எழுப்பினால் அதற்காக நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டியது.

(9) நாம் பிரயோசனமுள்ளவர்களாயிருக்கவேண்டுமானால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கடமைகளைச் சுறுசுறுப்போடுந் திறமையோடுஞ் சலிப்பில்லாமல் மன உற்சாகமுள்ளவர்களாய் நடத்தவேண்டும்.

(10) உயர்ந்த ஸ்திதியிலிருக்கிறவர்கள், தேவனுக்கும் இராசாக்களுக்குஞ் சனங்களுக்குஞ் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்ற போதுமான கிருபையைப் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்.

(11) மழைத்தாழ்ச்சி தேசத்தாரை மெலிவடையச் செய்தால், கர்த்தரை மறக்கிறவர்களாகிய நாம் எவ்வளவாய் அவர்பேரில் சார்ந்துகொள்ளவேண்டும்.

(12) எகிப்தியர் தங்கள் ஜீவனைப் பாதுகாக்கத் தங்களுக்குண்டான செல்வ வற்றையுந் தங்கள் சுயாதீனத்தையுங்கூட கொடுத்துவிட்டார்களே; நாம் நமது ஆத்துமா இரட்சிக்கப்படும்படி சகலத்தையுங் குப்பையைப்போலெண்ணி கிறிஸ்துக்கு நம்மை அடிமைகளாக ஒப்புக்கொடுப்போமாக. எகிப்தியர் யோசேப்பைப் பார்த்து நீர் எங்களைக் காப்பாற்றினீர் என்று அறிக்கையிட்டார்கள். கடைசிநாளில் கோடாகோடிப்பேர் இயேசுவே நீர் எங்களைக் காப்பாற்றினீர், எங்கள் பிராணநாயகர் நீரே என்று அறிக்கைசெய்வார்கள்.

(13) யோசேப்பின் போஜனத்தைச் சாப்பிட்டவர்கள் மரித்தார்கள். இயேசு கொடுக்கிற அப்பத்தைச் சாப்பிடுகிறவர்கள் மரிப்பதேயில்லை.

(14) மரணநேரத்தில் ஜீவகாலமுழுவதும் நம்மை நடத்திவந்த கர்த்தரிடத்தில் நமது ஆவியை ஒப்புவிப்போமாக.





# 48. அதிகாரம்.

வியாதியாயிருந்த யாக்கோபை யோசேப்பும் அவன் குமாரரும் பார்க்கப்போனது. 2. யாக்கோபு அவர்களை ஆசீர்வதிக்கத் தன்னைத் திடப்படுத்திக்கொண்டது. 3. தேவன் அவனுக்குச் செய்த வாக்குத்தத்தத்தைத் தெரியப்படுத்தினது. 5. அவன் எப்பிராயீமையும் மனாசேயையுந் தன் பிள்ளைகளாக எடுத்துக்கொண்டது. 7. அவன் யோசேப்புக்கு அவன் தாயாரின் கல்லறையைக்குறித்துச் சொன்னது. 9. அவன் எப்பிராயீமையும் மனாசேயையும் ஆசீர்வதித்தது 17. அவன் மூத்தவனைப்பார்க்கிலும் இளையவனைச் சிலாக்கியப்படுத்தினது. 21. அவர்கள் கானான்தேசத்திற்குத் திரும்பிவருவதை முன்னறிவித்தது.

அதற்குப்பின்பு, உம்முடைய தகப்பனுக்கு வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்புக்குச் சொல்லப்
பட்டது. அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடே
2 கூடக் கொண்டுபோனான். — இதோ, உம்முடைய
குமாரனாகிய யோசேப்பு உம்மிடத்தில் வந்திருக்கிறார்
என்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொ
ழுது இஸ்ரவேல் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு,
3 கட்டிலின்மேல் உட்கார்ந்தான். — யாக்கோபு யோ
சேப்பை நோக்கி: [1]சர்வவல்லமையுள்ள தேவன்

[1] ஆதி. 28. 13, 19: 35. 6. ஞ.

## 48. அதிகாரம்.

1. "தன் இரண்டு குமாரர்." யாக்கோபு, இஸ்ரவேலருக்குந் தகப்பனும் அவர்களுடைய சுதந்தர பாத்தியத்தையே உறுதிப்படுத்தும் அதிகார கர்த்தனுமிருந்தான். அவன் ராகேலின்மேல் வைத்த பிரியத்தினாலும் யோசேப்பின் உயர்ந்த ஸ்திதியினாலுந் தீர்க்கதரிசன ஆவியினாலும் ஏவப்பட்டு தன் குமாரருக்குள்ளே, யோசேப்புக்கு இரட்டைச் சுதந்தரத்தைக் கொடுத்தான். இந்தப்படியே பிற்றியகாலத்தில் நிறைவேறினது. யோசேப்பின் குமாரர் இருவரும் கோத்திரப் பிதாக்களோடே எண்ணப்பட்டு, கானானில் இரண்டு பங்கைப் பெற்றார்கள். யாக்கோபுக்கு வியாதி வருத்தமாயிருக்கிறது என்று யோசேப்பு கேள்விப்பட்டவுடனே, தன் தகப்பனைப் பார்க்கவும் அவனால் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவுமாக அவன் தன் இரண்டு குமாரரையுங் கூட்டிக்கொண்டுபோனான். அவர்களுக்குப் பதினெட்டு அல்லது இருபது வயதிருக்கும்.

2. "இஸ்ரவேல் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு." யோசேப்பின் உயர்ந்த அந்தஸ்துக்குத் தக்கதாக அவனை ஏற்றுக்கொண்டு உபசரிக்கமாத்திரமல்ல, தேவஆவியானவரின் ஏவுதலால் இப்போது பரிசுத்த கடமையை நிறைவேற்றப்போவதால் அப்படி யாக்கோபு தன்னை ஆயத்தப்படுத்தினான்.

3. "சர்வவல்லமையுள்ள தேவன்." எபிரெயுவில் "எல்–சாடாய்" என்றிருக்கிறது. இங்கே யாக்கோபு பதான் அராமிலிருந்து கானானுக்குத்

கானான்தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில்
4 எனக்குத் தரிசனமாகி, என்னை ஆசீர்வதித்து:—நான்
உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி, உன்னைப் பல
ஜனக்கூட்டமாக்கி, உனக்குப் பின்வரும் உன் சந்த
திக்கு இந்தத் தேசத்தை [1]நித்திய சுதந்தரமாகக் கொ [1] ஆதி. 17. 8. உபா. 32. 8. ஆமோ. 9. 14, 15.
5 டுப்பேன் என்று என்னோடே சொன்னார்.—நான் உன்
னிடத்தில் எகிப்துக்கு வருமுன்னே உனக்கு [2]எகிப்து [2] யோசு. 13. 7.
தேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரரும் என்னு
டைய குமாரர்; ரூபன் சிமியோன் என்பவர்களைப்
போல, எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்
6 கள்.—இவர்களுக்குப்பின், நீ பெறும் பிள்ளைகள் உன்
னுடையவர்கள்; அவர்கள் தங்கள் தங்கள் சகோதரரு
டைய பேரால் அழைக்கப்பட்டு அவர்களுக்குரிய
7 சுதந்தரத்தில் பங்கு பெறுவார்கள்.—நான் பதானை
விட்டு வருகையில், கானான்தேசத்தில் எப்பிராத்தா
வுக்குக் கொஞ்சம் தூரம் இருக்கும்போது, வழி [3] ஆதி. 35. 9, 16, 19.
யிலே [3]ராகேல் என்னண்டையில் மரணமடைந்தாள்;

திரும்பிவந்தபின்பு, பெத்தேலில் தேவன் தனக்கு வாக்கு அருளின சங்கதியைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறான். (அதி. 35: 11.)

"லூஸ்." (வியா. 28: [illegible] பார்க்க.) லூசுக்கு யாக்கோபு பெத்தேல் என்று பேரிட்டிருந்தும், பழைய பேரை வழங்குகிறான். சீரியரும் ரோமரும் பலஸ்தீனவில் சில பட்டணங்களுக்குச் சிறப்பான பேர்களைக் கொடுத்திருந்தாலும் அங்குள்ள சுதேசிகள் இந்நாள்வரையும் பழைய பேர்களையே வழங்கிவருகிறார்கள்.

4. **"பல ஜனக்கூட்டமாக்கி."** (வியா. 35: 11. பார்க்க.)

5. **"ரூபன் சிமியோன் என்பவர்களைப்போல, எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்கள்."** எப்பிராயீம் என்னுடைய மூத்தமகனாயும் மனாசே என்னுடைய இரண்டாம் மகனாயும் எண்ணப்படுவார்கள். யூதா தன் சகோதரருக்குள்ளே பிரதானமானவனாயிருந்தபோதிலும் சிரேஷ்ட புத்திரபாகம் யோசேப்புக்குக் கொடுக்கப்பட்டது. 1 நாளா. 5: 1ல் இதைக் காணலாம். சிரேஷ்ட புத்திரனுக்கு இரட்டைச் சுதந்தரமும், மற்றக் குமாரருக்கு ஆளுக்கு ஒரு சுதந்தரமுமுண்டு. சிரேஷ்ட புத்திரனுக்குரிய அதிகாரம் யூதாவுக்கும் ஆசாரியத்துவம் லேவிக்கும் அளிக்கப்பட்டது.

6. **"இவர்களுக்குப்பின் நீ பெறும் பிள்ளைகள் உன்னுடையவர்கள்."** யோசேப்புக்கு எப்பிராயீம், மனாசே என்பவர்களைத்தவிர வேறே பிள்ளைகள் இருந்ததாய் நாம் வாசிக்கிறதில்லை. (அதி. 50: 23.)

7. **"ராகேல் என்னண்டையில் மரணமடைந்தாள்."** யோசேப்புக்கு இரட்டைச் சுதந்தரம் கொடுத்ததோடு இந்தச் சங்கதியை யாக்கோபு சேர்த்துச் சொல்லுகிறான். ராகேல் யாக்கோபின் நேசமுள்ள மனைவியாயிருந்ததினாலல்ல,





அவளை அங்கே பெத்லெகேம் என்னும் எப்பிராத்தா
ஊருக்குப் போகிற வழியிலே அடக்கம்பண்ணினேன்
என்றான்.

8 இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைப் பார்த்து:
9 இவர்கள் யார் என்று கேட்டான்.—யோசேப்பு தன்
தகப்பனை நோக்கி: இவர்கள் இவ்விடத்தில் தேவன்
எனக்கு அருளின குமாரர் என்றான். அப்பொழுது
அவன்: நான் அவர்களை [1]ஆசீர்வதிக்கும்படி அவர்களை [1] ஆதி. 27. 4. எபி. 11. 21.
10 என் கிட்டக் கொண்டுவா என்றான்.—முதிர்வயதினால்
இஸ்ரவேலின் கண்கள் [2]மங்கலாயிருந்தபடியால், அ [2] சா. 6. 10; 59. 1.
வன் நன்றாய்ப் பார்க்கக்கூடாதிருந்தது. அவர்களை
அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது
அவன் அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்
11 டான்.—இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: [3]உன் [3] ஆதி. 45. 26.
முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை;
ஆனாலும், இதோ, உன் சந்ததியையும் காணும்படி

அவளுடைய அகால மரணத்தினால் இன்னம் வேறே குமாரரைப் பெறுதபடிக்கு மரித்துப்போனதையே முகாந்தரமாகக் காட்டுகிறான் என்று அபிப்பிராயப்படுவாருண்டு. லேயாளுக்கு லேவியைத் தவிர்த்தால் ஆறு கோத்திரமும் இரண்டு மறுமனையாட்டிகளுக்கும் ஆளுக்கு இரண்டு கோத்திரமும் ராகேலுக்கு மூன்று கோத்திரமும் கிடைத்தன.

"பெத்லெகேம்." தாவீது இராசா பிறந்தபிற்பாடு இந்தப் பேர் இங்கே எழுதப்பட்டிருக்கலாம். அங்கே தானியஞ் சாகுபடியாகும்.

8. **"இவர்கள் யார்."** யாக்கோபுக்கு முதிர்வயதினால் கண் மங்கலாயிருந்தது. அவன் யோசேப்பின் மக்களை ஆசீர்வதிக்கத் தீர்மானித்திருந்தான். ஆகவே மனாசேயும் எப்பிராயீமும் யோசேப்போடேகூட நிற்கிறதை ஆசுவாய்க் கண்டு, அவர்கள் யோசேப்பின் பிள்ளைகள்தானோ என்ற நிச்சயத்தை அறியும்பொருட்டு இந்தக் கேள்வியைக் கேட்டான்.

9. **"தேவன் எனக்கு அருளின குமாரர்."** சம்பாஷணையிலும் யோசேப்பு தேவனை மகிமைப்படுத்துகிறான். சாப்பக்தினி தேவனால் கொடுக்கப்படுகிற சுதந்தரம்.

**"நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படி."** யாக்கோபு தேவபக்தன் என்றும், தேவதரிசனங்களை அடைந்தவனென்றும், தேவஆவியானவரால் அவன் ஏவப்பட்டு கொடுக்கும் ஆசீர்வாதம் நிலைவரப்படும் என்றும், யோசேப்பு அறிந்து தன் பிள்ளைகளைத் தகப்பனுக்குமுன்பாக நிறுத்தினான்.

11. **"உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை."** யோசேப்பு பீறுண்டு போனான் என்றே இருபத்திரண்டு வருஷமாய் யாக்கோபு எண்ணியிருந்தான். இப்போது யாக்கோபு யோசேப்பின் பிள்ளைகளையும்

12 தேவன் எனக்கு அருள்செய்தார் என்றான்.—அப்
பொழுது அவனுடைய முழங்கால்கள் நடுவே இருந்த
பிள்ளைகளை யோசேப்பு பின்னிடப்பண்ணி, அவனு
டைய முகத்துக்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து
13 வணங்கினான்.—பின்பு, யோசேப்பு அவ்விருவரையும்
கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையி
னாலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும், மனா
சேயைத் தன் இடதுகையினாலே இஸ்ரவேலின் வலது
14 கைக்கு நேராகவும் விட்டான்.—அப்பொழுது இஸ்ர
வேல், மனமறிய, தன் வலதுகையை நீட்டி, இளைய
வனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும், மனாசே
மூத்தவனாயிருந்தும், தன் இடதுகையை மனாசேயு
டைய தலையின்மேலும் வைத்தான்.

15 அவன் யோசேப்பை [1]ஆசீர்வதித்து: என் பிதாக்
களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்
கிய தேவனும், நான் பிறந்தநாள்முதல் இந்நாள்வரைக்
16 கும் என்னை ஆதரித்துவந்த தேவனும்,—எல்லாத்

[1] எபி. 11. 21.

பார்க்கும்படியான சலாக்கியம் பெற்றதற்காகத் தேவனுக்கு மிகுந்த நன்றியறி தலைக் காட்டினான்.

**12.** "தரைமட்டும் குனிந்து வணங்கினான்." கர்த்தர் யோசேப்புக்கு அருளின இரக்கத்தை யாக்கோபு நன்றியறிதலோடே எண்ணினதையும், அவனுக்குச் சிரேஷ்ட புத்திரபாகத்தைக் கொடுக்கத் தீர்மானித்திருப்பதையும் யோசேப்பு கண்டு தன் இராசமேன்மையை எண்ணாமல் தன் தகப்பனுக்குச் செய்யவேண்டிய மரியாதையான உபசாரத்தைச் செய்தான்.

**14.** "மனமறிய தன் வலதுகையை நீட்டி, ஓ." யாக்கோபு தேவாவியின் ஏவுதலின்பேரில் வேண்டுமென்று தன் கைகளைக் குறுக்காய் நீட்டி தன் வலதுகையை எப்பிராயீமின் தலைமேலும் இடதுகையை மனாசேயின் தலைமேலும் வைத்தான். (19. வச.)

**15, 16.** "அவன் யோசேப்பை ஆசீர்வதித்து." யாக்கோபுடைய இந்த ஆசீர்வாதத்தில் கடவுளுடைய பேர் மூவகையாய் வருகிறது. முதலாவது யாக்கோபின் பிதாக்கள் வழிபட்டு வணங்கிய தேவன். இரண்டாவது அவனை ஆதரித்துவந்த தேவன். மூன்றாவது அவனை எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி மீட்ட தூதன். யோசேப்பின் குமாரருக்குக் கொடுத்த ஆசீர்வாதத்திலும் மூன்று காரியங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது இந்த ஆசீர்வாதம் பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாவது எப்பிராயீமும் மனாசேயும் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுக்குப் பிறதிஆட்களா





தீமைக்கும் [1]நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமான
வர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, [2]என்
பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்
பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது;
பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள்
என்றான்.

17 தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய
தலையின்மேல் வைத்ததை யோசேப்பு கண்டு, அது
தனக்குப் பிரியமில்லாதபடியால், எப்பிராயீமுடைய
தலையின்மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை
மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு
18 எடுத்து:—என் தகப்பனே, அப்படியல்ல, இவன்
மூத்தவன், இவனுடைய தலையின்மேல் உம்முடைய
19 வலதுகையை வைக்கவேண்டும் என்றான்.—அவன்
தகப்பனோ தடுத்து: அது எனக்குத் தெரியும், என்
மகனே, எனக்குத் தெரியும்; இவனும் ஒரு ஜனக்
கூட்டமாவான், இவனும் பெருகுவான்; [3]இவனுடைய
தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்;

[1] ஆதி. 28. 15. சங். 31. 22.
[2] ஆமோ. 9. 12. அப். 15. 17.
[3] எண். 1. 33. உபா. 33. 17. வெளி. 7. 6, 8.

யிருந்து அவர்கள்பேரால் அழைக்கப்படுவார்கள். மூன்றாவது அவர்கள் மிகுதியான சந்ததி பெருக்கமுடையவர்களாயிருப்பார்கள்.

தேவன் என்பதற்கு எபிரெய வார்த்தை எலோயீம் என்பது, இது பன்மைச் சொல். ஆசீர்வதிப்பாராக என்பதற்குரிய எபிரெயப்பதம் ஒருமையாயிருக்கிறது. தேவநாமம் மூன்றுதரம் பன்மையாக வர வினைமுற்று ஒருமையாயிருப்பதைக் கவனிக்கையில் தேவத்துவத்திலே திரித்துவத்தில் ஏகத்துவமுண்டென்பதை அறியலாம்.

மீட்பர் (கோயேல்) என்கிற வார்த்தை முதலாவது வருகிற இடம் இதுவே. இந்தப் பதம் பிறபாடுபழிக்குப்பழி வாங்குகிறவனும் விற்கப்பட்ட தன் ஜனத்தையும் நிலத்தையும் மீட்டுக்கொள்ளுகிறவனும் ஆன நெருங்கின இனத்தைக் குறிக்கிறதாயிருந்தது. இங்கே மீட்டு இரட்சிக்கிறவரைக் குறிக்கிறது. பெனியேலில் யாக்கோபு போராடின தூதனானவர் மீட்பராகத் தம்மைக் காட்டவில்லை.

**19.** "இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான்." மோவாபின் சமபூமியில் இஸ்ரவேலர் தொகையிடப்பட்டபோது, எப்பிராயீமியரைவிட மனாசேயர் அதிகப்பேராயிருந்தார்கள். ஆனால் சொற்பகாலத்துக்குள்ளே மோசேயின் ஆசீர்வாதத்தில் "எப்பிராயீமின் பதினாயிரங்களும் மனாசேயின் ஆயிரங்களும்" என்று சொல்லியிருக்கிறான். மேலும் எப்பிராயீம் கோத்திரத்தார் பலவான்களாய் இராச்சியபாரத்துக்குரிய காரியங்களிலே முன்னுக்கு நின்றார்கள். பத்துக் கோத்திரத்தார் எப்பிராயீம் என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலரைக் கானானுக்குள் பிரவேசிக்கச்

அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள்
20 என்றான். — இவ்விதமாக அவன் அன்றைத்தினம்
அவர்களை ஆசீர்வதித்து: தேவன் உன்னை எப்பிராயீ
மைப்போலவும் மனாசேயைப்போலவும் ஆக்குவா
ராக என்று [1]இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்
துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்கு
முன்னே வைத்தான்.
21 பின்பு, இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: இதோ,
நான் மரணமடையப்போகிறேன்; [2]தேவன் உங்க
ளோடே இருப்பார்; அவர் உங்கள் பிதாக்களின்
தேசத்துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்ணு
22 வார் என்றும், — உன் [3]சகோதரருக்குக் கொடுத்ததைப்
பார்க்கிலும், நான் என் பட்டயத்தாலும் என் வில்லி
னாலும், [4]எமோரியர் கையிலிருந்து சம்பாதித்த ஒரு
நிலத்தை உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்தேன்
என்றும் சொன்னான்.

[1] ரூத். 4. 11. 12.
[2] ஆதி. 50. 24.
[3] யோசு. 24. 32. யோ. 4. 5.
[4] யோசு. 17. 14-ம்.

செய்தவன் இந்தக் கோத்திரத்தான். பத்துக் கோத்திரத்தாருக்கு முதல் இராச னும் இந்தக் கோத்திரத்தான்.

20. "இஸ்ரவேலர் உன்னை முன்னிட்டு வாழ்த்துவார்கள்." யூதர் இக்காலிலுந் தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்கையில் இந்த முறைமையைச் சொல்லி ஆசீர்வதித்துவருகிறார்கள்.

22. "ஒரு நிலத்தை." எபிரெயுவில் "ஒரு சீகேமை" என்றும், இங்கிலீஷில் ஒரு பங்கை என்றும் யாழ்ப்பாண திருப்புதலில் "பங்கை" என்றுமிருக்கிறது. சீகேமில் ஒரு பாகநிலத்தை யாக்கோபு 100 வெள்ளிக்காசுக்கு வாங்கியிருந்தான். யோசேப்பின் சரீரம் அங்கே பிந்தியகாலத்தில் சேமிக்கப்பட்டது (யோசு. 24: 32.). யாக்கோபு யோசேப்புக்குக் கொடுத்த இடம் சமாரியாவுக்கு அருகே இருந்த சீகாரிலிருந்தது (யோவா. 4: 5.). இந்தக் காரியங்களை வைத்துக்கொண்டு யோசேப்புக்கு யாக்கோபு கொடுத்த நிலம் சீகேம் என்று சிலர் சொல்லுகிறார்கள். சிலர் இது சீகேமைத்தான் குறிக்கும், ஆனால் ஒரு பட்டணத்தின்பேரைச் சொல்லுகையில் அந்தப் பேரோடே ஒரு என்ற வார்த்தையை (இருவ்ஷ. ஒரு சீகேம்) கூட்டுவது வழக்கமில்லை. சீகேம் என்பதற்குத் தோள் என்றர்த்தம். எபிரெயரும் அரபியரும் உயர்ந்த பூமிக்கு இந்தப் பெயரைக் கொடுப்பது வழக்கம். சீகேம் பட்டணம் மேட்டுப்புறமான இடமாயிருந்ததால், இங்கே எபிரெயுவில் சீகேம் என்று சொல்லியிருக்கிறது. ஆதலால் ஒரு நிலத்தை என்று திருப்புவது சரியாயிருக்கும் என்கிறார்கள். சிலர் "உன் சகோதரருக்குக் கொடுத்ததைப்பார்க்கிலும்" என்பதை வைத்துக்கொண்டு இது யோசேப்புக்குக் கொடுக்கப்பட்ட இரட்டைப் பங்கைக் குறிக்கும் என்று சொல்லிய வாக்கியத்தின் பின்பங்கை "என் சந்ததியார் தங்கள் பட்டயத்தினாலும் வில்லினாலும் இனிமேல் எமோரியருடைய கையி





லிருந்து பறித்துக்கொள்ளும் நிலம்" என்று அர்த்தப்படுத்துவார்கள்; ஆனால் இந்த நியாயஞ்செல்லத்தக்கதல்ல. அப்படியானால் "நான் என் பட்டயத்தினாலும் வில்லினாலும் எமோரியர் கையிலிருந்து பறித்துக்கொண்ட பங்கு" என்பதின் கருத்தென்ன? இது சிமியோனும்லேவியும் தங்கள் உக்கிரத்திலே கொன்றுபோட்ட சீகேமியரின் கொலையைக் குறியாதா என்று கேட்டால் அப்படிக் குறிக்கும் என்பதற்கும் நியாயமில்லை. ஏனென்றால் யாக்கோபு அவர்கள் செய்த கிரியையை மிகவுங் கண்டித்திருக்கிறான் (ஆதி. 49: 5—7.). சீகேமியரை யாக்கோபின் மக்கள் கொலைசெய்தபின்பு யாக்கோபு சீகேமை விட்டு பெத்தேலுக்குப் போனதாலும் வெளியர் சங்கரிக்கப்பட்டுப்போனதாலும் எமோரியர் சீகேமைத் தங்களுக்கு உரித்தாக்கிக்கொண்டிருக்கலாம். யாக்கோபு எபிரோனிலிருந்தபோது அவன் குமாரர் சீகேமில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இவர்களுக்கும் எமோரியருக்கும் மனஸ்தாபமுண்டாயிருக்கலாம். யாக்கோபு இதை அறிந்து ஆட்களைத் திரட்டி எமோரியரைச் சீகேமிலிருந்து துரத்தி அந்தப் பட்டணத்தைத்தன் சொந்தமாக்கியிருக்கவேண்டும்.

## படிப்பினை.

### வச. 1—8.

(1) பேர்போன விசுவாசிகளுடைய மரணப்படுக்கை அருமையான போதனைகளைத் தரத்தக்கதாயிருக்கிறது. மரணப்படுக்கையில் அவர்கள் செய்யும் ஜெபங்களும், ஆலோசனைகளும் பாவிகளுக்கும் உல்லாசக்காரருக்கும் மற்றவர்களுக்குஞ் சிறந்த போதனைகளைக் கொடுக்கும், அப்படிப்பட்ட சமயங்களில் நம்முடைய பிள்ளைகளை விசுவாசத்தோடே கூட்டிக்கொண்டுபோவது அவர்களுக்குப் பிரயோசனத்தை உண்டுபண்ணும். அப்படிப்பட்ட தருணங்களில் மரிக்கப்போகிற விசுவாசியானவன் தேவனுடைய உண்மை, அவருடைய வழிகளின் இன்பம் முதலியவைகளைப்பற்றி தன் அநுபோகத்தில் அறிந்தவைகளைச் சாட்சியாக அறிக்கையிடுவது, பிறருக்குள் நன்மையை உண்டுபண்ணும். ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்கள் மரித்தபோது பேசினவைகள் எழுதப்படவில்லை. யாக்கோபு சொன்னவைகள் விபரமாய் எழுதிவைக்கப்பட்டிருக்கிறது.

(2) எல்லா விசுவாசிகளுந் தங்கள் மரணத்தில் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான். ஆனாலும் எல்லாரும் ஒரேஅளவான ஆறுதலோடே இவ்வுலகத்தைவிட்டுப் பிரிகிறதில்லை. அவர்களுடைய கடைசியானவேளை மற்றவர்களுக்கு ஒரேஅளவான ஆறுதலைக் கொடுக்கிறதுமில்லை. உலகத்திலுள்ள எல்லா இராச்சியங்களையுஞ் சுதந்தரிப்பதைவிட மெய்யான இஸ்ரவேலரோடே வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெறுக்கொள்வதே சிறந்தது. நாம் தேவனுடைய பிள்ளைகளாய் அவருடைய இராச்சியத்தில் பங்கைப் பெற்றுக்கொள்ளும்படி இங்கே அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வோமாக.

(3) அநேக தாய்தகப்பன்மார் யோசேப்பு செய்ததற்கு நேர் எதிரிடையாய் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை மறந்து கடந்துபோகிற இவ்வுலகத்துக்குரிய நன்மைகளைச் சேர்த்துவைக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

### வச. 9—22.

(4) விசுவாசியின் மரணநேரத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப்போல அவனுக்கு ஆறுதலைக் கொடுக்கத்தக்கது வேறொன்றுமில்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்களும் அவைகள் தன்னிடத்திலே எவ்விதமாய் நிறைவேறினது என்பதையும் தியானித்துப் பேசுவதும், தன்னுடைய பெத்தேல்களையும் பெனியேல்களையுங்குறித்து நினைவாயிருப்பதும் தனக்கு நேரிட்ட துன்பங்கு சோதனைகளெல்லாந் தேவனுடைய ஞானத்

## 49. அதிகாரம்.

1. யாக்கோபு தன்னுடைய குமாரர்களை ஆசீர்வதிக்க அழைப்பித்தது. 3. அவர்கள் தனித்தனியே பெற்ற ஆசீர்வாதம். 29. அவன் அவர்களுக்குத் தன்னை அடக்கம்பண்ணுவதைக்குறித்துக் கற்பித்தது. 33. அவன் மரணமடைந்தது.

1 யாக்கோபு தன் குமாரரை அழைத்து: நீங்கள் கூடி வாருங்கள், [1]கடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடுங் காரியங்களை அறிவிப்பேன். [1]எண். 24. 14. உபா. 4. 30: 33. 1. ஏசா. 2. 2. எரே. 23. 20.

இறைவன் தயாளத்தினாலும் நடத்தப்பட்டதென்று ஆச்சரியப்படும் அவனுக்கு ஆறுதலையும் அவனைச் சூழ நிற்பவர்களுக்கு எழுப்புதலையுந் தோன்றச்செய்தது. என்னை இதுவரையும் மீட்டுக்கொண்டேன் என்று ஒரு மகாத்துமா மரணத்தறுவாயில் சொல்லுகிறதில் அவன் பாவம் மன்னிக்கப்பட்டதையும், சோதனைகள், பிரயாசங்கள், துக்கங்கள், போராட்டங்கள் முதலியவை முடிந்தன என்பதையும் உணருவதால் மரணப் பள்ளத்தாக்கை அவன் கடந்துவருகையில் நிறைந்த ஆறுதலுள்ளவனாயிருப்பான்.

(5) நாம் இப்படி நீதிமான்களின் மரணமாய் மரிக்கவேண்டுமானால் நீதிமான்களாய் நாம் நடந்துகொள்ளவேண்டும்.

(6) ஒருவனுக்கு எவ்வளவு ஐசுவரியமிருந்தாலும் கடைசியில் ஒன்றான குழி மாத்திரம் அவன் தங்கும் இடமாகும். நமக்கு எவ்வளவு தரித்திரம் இருந்தாலும் கர்த்தரை நமக்குப் பங்குஞ் சுதந்தரமுமாக்கிக்கொண்டால் அதுவே பொன்னுலகில் நாம் பங்கடைய போதுமானது.

## 49. அதிகாரம்.

1. "இடைசி நாட்களில் உங்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவிப்பேன்." யாக்கோபுடைய மரணப்பாட்டு, தேவ ஆவியானவரின் ஏவுதலினால் கோத்திரப் பிதாக்களைப்பற்றி தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதென்று யூதரும் கிறிஸ்தவர்களும் எண்ணுகிறார்கள். தற்காலத்தில் சில வியாக்கியானிகள் அது, மரணப்படுக்கையில் இருந்த ஒரு மனிதன் உண்டாக்கக்கூடிய பாட்டல்ல என்றும், யூதாவைப்பற்றிச் சொல்லியது தாவீது சிங்காசனம் ஏறினதைக் குறிக்கிறதென்றும் எடுத்துக்காட்டி, அது தாவீதின் காலத்தில் உண்டு பண்ணப்பட்டதென்றும் நாத்தான் தீர்க்கதரிசி அதைச் செய்தான் என்றும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அது தாவீதின் காலத்தில் செய்யப்பட்டிருக்கு மானால் அதைச் செய்தவனுக்கு தாவீதின் காலத்திலுள்ள நடபடிகளெல்லாந் தெரிந்திருக்குமே. தாவீதின் காலத்தில் தேவாராதனைக்கு லேவியர் ஒழுங்குப்படுத்தப்பட்டார்களே அதுவிஷயத்தைக்குறித்து ஒரு வார்த்தையாவது சாடையாய் வருவதைக் காணோமே. மேலும் இஸ்ரவேலர் கானானைச் சுதந்தரித்துக்கொண்டபோது, செபுலோன் கோத்திரத்தார் கடல்துறை அருகே குடியிருக்கவில்லை. அவர்கள் உள்நாட்டில் குடியிருந்தார்கள். இந்தப் பாட்டிலோ "செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்" என்று சொல்லியிருக்கிறது. இதுகாரியங்களைப் பார்க்கையில் அந்தப் பாட்டு பிந்தியகாலத்தில் இயற்றப்படாமல் அது இயற்றப்பட்டதாக இங்கே சொல்லப்படுங்காலத்திலேயே செய்யப்பட்டதென்று அறியவேண்டும்.





2 யாக்கோபின் குமாரரே, கூடிவந்து கேளுங்கள்; உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலுக்குச் செவிகொடுங்கள்.

3 ரூபனே, நீ என் ஜேஷ்டபுத்திரன், நீ என் சத்துவமும், என் [1]முதற்பெலனுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன். [1]உபா. 21. 17.

4 தண்ணீரைப்போல [2]தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; [3]உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே. [2]யாக். 1. 6 [?] [3]ஆதி. 35. 22. உபா. 27. 20.

5 சிமியோனும், [4]லேவியும் ஏகசகோதரர்; அவர்களு [4]ஆதி. 29. 33, 34. எஸ். 18. 9.

"கடைசி நாட்கள்." என்பது இஸ்ரவேலர் கானானைக் கட்டிக்கொண்டது முதல் கிறிஸ்துவின் வருகைவரைக்குமுள்ள காலத்தைக் குறிக்கும்.

3. "ரூபனே, ......என் முதற்பெலனுமானவன்." லத்தீன்முதலிய சில திருப்புதல்களில் "என் துக்கத்திற்குத் துவக்கமானவன்" என்று திருப்பியிருக்கிறது. ஆனால் அது பிந்திவரும் பாவனைக்கு ஒத்துவராததால் சரியெனத் தோன்றவில்லை. இங்கே திருப்பப்பட்டிருப்பதே சரியாயிருக்கிறது. (உபா. 21: 17. யோபு. 40: 16. சங். 78: 51; 105: 36 முதலிய இடங்களில் இந்தப்படியே மூலவார்த்தை திருப்பப்பட்டிருக்கிறது.)

"நீ மேன்மையில், ஐ." ரூபன் சேஷ்டபுத்திரனாக மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமும் ஆசாரியத்துவ தனமும் ராஜ அதிகார வல்லமையும் அவனுக்குரியதாயிருக்கவேண்டியது. ஆனால் அவன் அவைகளைத் தன் பாவத்தினாலே இழந்துபோனான். அவன் கோத்திரத்திலிருந்து ஒரு நியாயாதிபதியாவது ராஜாவாவது தீர்க்கதரிசியாவது எழும்பினதில்லை.

4. "தண்ணீரைப்போல தளம்பினவனே." தளம்புதல் என்ற வார்த்தை கரை புரளுதல், நிலையின்மை என்ற அர்த்தமுள்ளது. முதல் அர்த்தப்படி பார்த்தால் அது ரூபனுடைய எடுப்பும் ஆங்காரமும் காமதாரமுமான சிந்தையைக் குறிக்கும். இரண்டாம் அர்த்தப்படி பார்த்தால் இவன் நம்பப்படத்தக்கவனல்ல, காற்றினால் அடிக்கப்படுகிற தண்ணீரானது காற்று மாறுகிறதற்குத் தக்கதாகத் தளம்புகிறதுபோல எந்தவகைச்சோதனை வந்தாலும் அதின் போக்கிலே கொண்டுபோகப்படுகிறவன் என்பதைக் குறிக்கும்.

"நீ மேன்மை அடையமாட்டாய்." முதற்பிறப்புச் சுதந்தரத்துக்குரிய நன்மைகள் உனக்குக் கிடைக்கமாட்டாது. ரூபனுடைய வம்சத்தாரான தாத்தான், அபிராம், ஓன் என்பவர்கள் பிந்தியகாலத்தில் மேன்மைக்காக வழக்காடினபோது அதை அடையாமற்போனதுமல்லாமல் தேவனால் பயங்கரமானவிதமாய்த் தண்டிக்கப்படவும் நேரிட்டது.

5. "சிமியோனும், லேவியும் ஏகசகோதரர்." இருவரும் ஒரேதாயின் பிள்ளைகள், குணத்தில் ஒன்றுபோல மூர்க்கரும், வஞ்சனைக்காரருமாயிருந்தார்

6 டைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகள்.—என்
ஆத்துமாவே, [1]அவர்களுடைய இரகசிய ஆலோசனை
க்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள்
கூட்டத்தில் நீ சேராதே; அவர்கள் தங்கள் கோபத்
தினாலே ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் அகங்காரத்
7 தினாலே அரண்களை நிர்மூலமாக்கினார்களே.—உக்கிர
மான அவர்கள் கோபமும் கொடுமையான அவர்கள்
மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; யாக்கோபிலே
[2]அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச்
சிதறவும் பண்ணுவேன்.

[1] சங். 26. 9. நீதி. 1. 15, 16. எபே. 5. 11.
[2] யோசு. 21. 3.

"கொடுமையின் கருவிகள்." சீகேம் பட்டணத்தாரைச் சங்கரித்ததை இது குறிக்கிறது.

**6.** **"இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே."** இரகசியம் என்ற வார்த்தையின் மூலபதம் சிறு சமூகாரத்தைக் குறிக்கும். இருவர் ஒரே சமூகாரத்தில் உளுக்கார்ந்திருப்பது இருவருக்குமுள்ள நெருங்கிய ஐக்கியத்தைக் காட்டும்.

**"என் மேன்மையே."** ஆத்துமாவுக்கு எதுகையாக மேன்மை என்று வழங்கப்பட்டிருக்கிறது (சங். 16: 9; 57: 8.). சீகேமியரைச் சங்கரித்ததில் யாக்கோபு எவ்வளவேனுஞ் சம்பந்தப்படவேயில்லை என்பது இதால் விளங்குகிறது.

**"அரண்களை நிர்மூலமாக்கினார்களே."** இது, ஒரு எருதைத் தொண்டித்தார்களே என்றும் இருப்பலாம். பூர்வகாலத்தில் எருது, ரிஷபம் என்றவைகள் மகத்துவத்துக்கு அடையாளமாகச் சொல்லப்பட்டதுண்டு. அப்படியே (சங். 22: 12; 68: 30.), பிரபுக்களுக்குப் பதிலாக எருதுகள், ரிஷபங்கள் என்ற வார்த்தைகள் போட்டிருக்கின்றன. இப்படியாகில் இது சிமியோனும் லேவியுந் தங்கள் சகோதரிக்குச் செய்யப்பட்ட அவமானத்துக்காக சீகேமின் பிரபுவாகிய எமோரையும் அவன் ஜனங்களையுங் கொன்றுபோட்டதையுங் குறிக்கும்.

**7.** **"சபிக்கப்படக்கடவது."** சாகப்போகிற தருணத்தில் தன் பிள்ளைகளைச் சபிக்க யாக்கோபுக்கு மனம் வந்ததா? அவன் சுயமாய்ப் பேசாமல் தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு இப்படிப் பேசினான்.

**"யாக்கோபிலே அவர்களைப் பிரியவும் இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும் பண்ணுவேன்."** அனந்தரத்துக்குரிய அதிகாரம் இந்த கோத்திரங்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் பின்னடியார் அதிகாரமற்றவர்களாயிருந்தார்கள். சிமியோன் கோத்திரத்திலே 59,300 யுத்தவீரரிருந்தவில் வனாந்தரத்திலே அவர்களில் அநேகர் இறந்துபோக 22,200 பேர்மாத்திரம் மீந்திருந்தார்கள் (எண். 1: 23; 26: 14.) இஸ்ரவேலர் கானானைக் கட்டிக்கொண்டபோது அவர்களுக்கு யூதாக்கோத்திரத்தாருக்குள் 15 பட்டணம் மாத்திரங் கொடுக்கப்பட்டன. அங்கே அவர்கள் நெருக்கப்பட்டதால், ஒரு பங்குப்பேர் குடிவாங்கிப் பாரான் வனாந்தரத்தில் மந்தை மேய்க்கிறவர்களாகத் திரிந்தார்கள் (1 நாளா. 4: 39–42.). மேலும், அவர்களில் அநேகர் தங்கள் ஜீவ





8 யூதாவே, [1]சகோதரரால் புகழப்படுபவன் நீயே;
உன் கரம் உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல்
இருக்கும்; உன் தகப்பனுடைய புத்திரர் உன் முன்
9 [2]பணிவார்கள்.—யூதா [3]பாலசிங்கம், நீ இரை கவர்ந்து
கொண்டு ஏறிப்போனாய், என் மகனே; சிங்கம்போ
லும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப்படுத்தான்; அவனை

[1] ஆதி. 29. 35. சங். 76. 1.
[2] 1 நாளா. 5. 2. வெளி. 3. 9.
[3] ஓசி. 5. 14. வெளி. 5. 5.

னார்த்தத்துக்கு வகையில்லாமல் உவாத்திமைத்தொழில் செய்து காலங்கழிக்கும்படி மற்றக் கோத்திரங்களுக்குள்ளே சிதறிப்போனார்கள் என்று பாரம்பரியஞ் சொல்லுகிறது.

லேவிக் கோத்திரத்தாரும் இஸ்ரவேல் எங்குஞ் சிதறடிக்கப்பட்டார்கள். என்றாலும் அவர்கள் கன்றுக்குட்டி விக்கிரகாராதனை செய்தவர்களை மக்கள், மனுஷர் என்றெண்ணாமல் 3,000 பேரைச் சங்கரித்ததினாலே, அவர்களுக்கு இடப்பட்ட சாபம் மாற ஆசீர்வாதம் பெற்றார்கள். தேவனுக்காக வைராக்கியம் பாராட்டின அவர்களைத் தேவன் தமது ஊழியத்துக்கென்று தெரிந்துகொண்டு ஏற்படுத்தினார் (யாத். 32: 26–28.). மோசே எல்லாக் கோத்திரத்தாரையும் ஆசீர்வதித்தபோது சிமியோன் கோத்திரத்தை முற்றிலும் விட்டுவிட்டான். பாகால் பேயோரின் விஷயத்தில் அவர்கள் அவனுக்கு முன்பாகக் குற்றவாளிகளாயிருந்தார்கள்.

**8.** **"யூதாவே, சகோதரரால் புகழப்படுபவன் நீயே."** யூதா பிறந்தபோது அவன் தாய் கர்த்தருக்குத் துதி செலுத்தினாள். யூதா என்பதற்கு "துதி" என்றர்த்தம். அவன், பென்யமீனுக்காக யோசேப்பின் முன்பாகப் புகழப்படத்தக்கதான வண்ணமாய் நியாயங்களை எடுத்துரைத்தான். அவன் கோத்திரத்தார் முக்கிய கனத்தையும் மேன்மையையும் பெற்றுக்கொண்டார்கள். வனாந்தரத்தில் பாளையம் இறங்கினதில் சிறந்த இடம் இவர்களுக்குக் கிடைத்தது. ஆசரிப்புக் கூடாரத்தில் காணிக்கையை முதலாவது இவர்கள் செலுத்தினார்கள். கானான்தேசம் பங்கிடப்பட்டபோது முதற்சீட்டு இவர்களுக்கு விழுந்தது. முதல் நியாயாதிபதி இந்தக் கோத்திரத்தான்.

**"உன் தகப்பனுடைய புத்திரர் உன்முன் பணிவார்கள்."** இராசாங்கம் இந்தக் கோத்திரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதிலே இது நிறைவேறிற்று. விசேஷித்தவகையில் கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக சகலரும் பணிந்து வணங்குவதை இது குறிக்கும்.

**9.** **"யூதா பாலசிங்கம்."** யூதாக் கோத்திரத்தார் சிங்கரூபத்தைத் தங்களுக்குச் சின்னமாக வைத்திருக்கலாம். பாலசிங்கமானது சுறுசுறுப்பும் வீரியமுமுள்ளதாயிருப்பதுபோல யூதாக் கோத்திரத்தாரும் பராக்கிரமச் செய்கைகளை நடப்பித்துவந்தார்கள். (நியா. 1: 3, 4.)

**"கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்."** யூதாக் கோத்திரத்தார் யுத்தான தன்மையுடையவர்களாயிருந்து வாழ்வதைக் குறிக்கும்.

10 எழும்புகிறவன் யார்? — *சமாதான கர்த்தர் வருமள
வும் [1]செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை,
[2]நியாயப்பிரமாணிக்கன் [3]அவன் பாதங்களை விட்டு
ஒழிவதும் இல்லை; [4]ஜனங்கள் அவரிடத்தில் சேரு

* ஷலோ. சங். 72. 5. ஏசா. 9. 6, 7: 11. 1, 5. எசேக். 21. 27. தானி. 9. 25. லூக். 1. 32, 33. எபே. 2. 17. மத். 21. 9. [1] எண். 24. 17. எரே. 30. 21. [2] சங். 60. 7. ஏசா. 33. 22. [3] உபா. 28. 56. [4] யோ. 11. 52: 12. 32. லூ. 2. 30, 32.

**10.** **“சமாதான கர்த்தர்.”** இதற்கு மூலவார்த்தை “ஷிலோ” என்பது; இந்த வார்த்தையை “அனுப்பப்படுபவர்” என்றும் “சமாதான கர்த்தர்” என்றுஞ் சிலர் தாற்பரியப்படுத்துவதுண்டு. வேறே சிலர் அதற்கு வேறே அர்த்தஞ் சொல்லுகிறார்கள்.

மூலவார்த்தையின் கருத்தை எப்படி அர்த்தப்படுத்தினாலும் அது மேசியாவைக் குறிக்கும் என்று கிறிஸ்தவர்களும் பூர்வ யூதரும் ஒன்றுபட நிச்சயித்திருக்கிறார்கள். ஆனால் நவீனகாலத்தில் சிலர், பூர்வ பிதாக்களுக்கு மேசியாவைப்பற்றிய எண்ணமிருக்கவில்லை என்று ஆட்சேபிக்கிறார்கள். தீர்க்கதரிசனங்களின்பேரில் விசுவாசமுள்ளவர்கள் அந்த ஆட்சேபனை நிராதாரமுள்ளதென்று உடனே கண்டுகொள்வார்கள். “உன் வித்தில் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்” என்று ஆபிரகாமுக்கு வாக்குரைக்கப்பட்டு யாக்கோபுக்கு உறுதிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனமானது மேசியாவைக் குறிக்கும் என்பதை யாவரும் இலகுவாய் அறிந்து விசுவாசிக்கத்தக்கது.

**“செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை.”** மேசியா வருமட்டும் யூதாக்கோத்திரத்தார் அரசாட்சிசெய்யுஞ் ஜனங்களாக விளங்குவார்கள் என்பதை இது காட்டுகிறது. நவீன யூதர் இயேசுவை மேசியா என்று ஒப்புக்கொள்ள மனதில்லாமல் செங்கோல் என்பதை வேறு விதமாய்க் கருத்துப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் இது அதிகாரத்தைக் குறிக்கிற கோலையல்ல, விராமல் தண்டிக்கிற கோலைக் குறிக்கும் என்கிறார்கள். இந்த இடத்தில் யூதாவைக்குறித்துக் காரியம் புகழ்ச்சியாய்ச் சொல்லப்படுவதால் நவீன யூதர் சொல்லிய அர்த்தம் சரியல்ல. இயேசு பிறந்த பத்து வருஷங்களுக்குப் பின்பு யூதரை ஆண்ட அருகேலா, ரோம இராயனால் தள்ளிப்போடப்பட்டான். அதுமுதல் யூதர்களுக்கு எவ்வளவும் தேசஆளுகை யில்லாமல் நீங்கிப்போயிற்று. கி. பி. 70. தீத்துஸ் எருசலேமை அழித்து யூதரைச் சிறைகளாக விற்றான். இப்போது அவர்கள் உலகத்தில் காணும் இடங்களிலுஞ் சிறைகளாக இருக்கிறார்கள்.

**“நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை.”** நியாயப்பிரமாணிக்கன் என்ற வார்த்தையைச் சில கல்விமான்கள் “அதிகாரக்கோல்” என்று திருப்புகிறார்கள். இது எதுகைக்குச் சரியாய் வந்தாலும் பூர்வ திருப்புதல்களுக்கு ஒத்துவருகிறதில்லை. இங்கே நியாயப்பிரமாணிக்கன் என்பது நியாயப்பிரமாணத்தின்படி ஆளுகையைச் செலுத்துகிற அதிகாரியைக் குறிக்கும். சமாதான கர்த்தர் வருமட்டும் யூதாக்கோத்திரத்தை விட்டு அதிகாரம் நீங்குவதில்லை என்பதே அதின் தாற்பரியம்.

**“ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்.”** சேருவார்கள் என்று திருப்பியிருக்கிற மூலவார்த்தையைக் “கீழ்ப்படிவார்கள்” என்று திருப்பலாம். அப்படி





11 வார்கள். — அவன் தன் கழுதைக்குட்டியைத் [1]திராட்
சச்செடியிலும், தன் கோளிகைக் கழுதையின் குட்
டியை நற்குல திராட்சச்செடியிலும் கட்டுவான்; திராட்
சரசத்திலே தன் வஸ்திரத்தையும், திராட்சப்பழங்க
ளின் இரத்தத்திலே தன் அங்கியையும் தோய்ப்பான்.—
12 அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும்,
அவன் பற்கள் பாலினால் வெண்மையாயும் இருக்
கும்.

[1] 2 இரா. 18. 32. ஏசா. 63. 1, 3.

யாகில் “ஜனங்கள் அவருக்குக் கீழ்ப்படிவார்கள்” என்றிருக்கவேண்டும்: கிறிஸ்துமார்க்கம் பிரபல்லியப்பட்டுவருவதில் பற்பல ஜாதியார் சுவிசேஷ அநுசனத்துக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்துவைச் சேருவதை இது குறிக்கிறதாயிருக்கிறது.

**11.** **“அவன் தன் கழுதைக்குட்டியைத் திராட்சச்செடியிலும்.”** யாக்கோபு இதுவரையும் யூதாவுடைய வைதீககாரியத்தை எடுத்துக்காட்டி, இப்போது அவனுக்குண்டாகும் இப்பூமிக்குரிய சலாக்கியங்களை எடுத்துக் காட்டுகிறான். யூதாவுக்குக் கிடைத்த பாகங் கானான்தேசத்தின் தென்பாகமே. அது மலைத்தேசமாயிருந்தது. அது பாலுந் தேனும் ஓடுகிற பூமியாயுந் திராட்சச்செடி மிகுந்த நாடாயுமிருந்தது. திராட்சச்செடி அவ்வளவு திரளாயிருந்ததினால் யூதாக் கோத்திரத்தார் தங்கள் கழுதைகளை அந்தச் செடிகளில் கட்டிவைப்பார்களாம்.

**“நற்குல திராட்சச்செடி.”** உள்ளபடி “சோராக்கின் திராட்சச்செடி” இந்தச் செடி இந்திரநீலமுள்ள மிக மதுரமான கனிகளைக் கொடுக்கும். அவைகளில் வித்திராது.

**“திராட்சப்பழங்களின் இரத்தத்திலே.”** அத்தேசத்தார் வெள்ளைத் திராட்சப்பழங்களைவிட சிவப்புத் திராட்சப்பழங்களை விரும்புவார்கள். சிவப்புப் பழங்களைப் பிழிகையில் அதின் நிறம் இரத்தம்போல சிவப்பாயிருக்கும்.

**12.** **“அவன் கண்கள் திராட்சரசத்தினால் சிவப்பாயும், ௸.”** யூதாக் கோத்திரத்தார் இம்மைக்குரிய விஷயத்திலுஞ் செழித்தோங்கியிருப்பார்கள் என்பதே இந்த வாக்கியத்தின் கருத்து.

இந்த வாக்கியம் புதிய ஏற்பாட்டில் மேசியாவைக் குறிக்கிற வசனமாக எடுத்து உரைக்கப்படவில்லை என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் இந்த தீர்க்கதரிசனம் எருசலேமின் அழிவோடே பூரணமாய் நிறைவேறி யூதருடைய சனுதரிம் என்னப்பட்ட சங்கத்தை விட்டு அதிகாரம் முற்றிலும் நீங்கினது. அப்பால் ஜனசதனங்கள் இயேசு மேசியாவின் பிரமாணத்துக்கு அமைந்து நடக்க ஏதுவாயிற்று. யூதர் இன்னமுந் தங்கள் சயாதீனத்துக்காக முயற்சிசெய்து போராடிக்கொண்டிருக்கையில், இந்தத் தீர்க்கதரிசனத்தை எடுத்துக் காட்டவேண்டியது, அப்போஸ்தலன்மாருக்கு அப்போது அவசியமாகத்தோன்றவில்லை.

13 செபுலோன் [1]கடல்துறை அருகே குடியிருப்பான்;
அவன் கப்பல்துறைமுகமாய் இருப்பான்; அவன்
எல்லை சீதோன்வரைக்கும் இருக்கும்.

14 இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்
15 கொண்டிருக்கிற பலத்த கழுதை.—அவன், இளைப்
பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும்
கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதி
கட்டுகிறவனானான்.

[1] யோசு. 19. 10.

**13.** "செபுலோன்." கடல் என்ற வார்த்தை மூலத்தில் பன்மையிலே போட்டிருக்கிறது. செபுலோனுடைய குடியிருப்பு கலிலேயாக் கடல் அருகே துவக்கி மெதித்திரானியாக் கடலுக்குச் சமீபம்மட்டும் எட்டினது. மோசே அவன் கடல்களின் சம்பூரணத்தை அனுபவிப்பான் என்று ஆசீர்வதித்தான். செபுலோனியர் பெனிக்கேயருக்குச் சமீபமாய் வாசஞ்செய்ததால் கப்பலோட்டிகளான அவர்களுடன் வியாபாரவிஷயத்தில் சம்பந்தப்பட்டுவந்தார்கள். தீருப்பட்டணஞ் செபுலோனுக்குச் சமீபமாயிருந்தாலும் அதைப்பற்றி இங்கே சொல்லாமல் சற்று தொலையிலிருந்த சீதோனைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. தீரு இன்னமுங் கட்டப்படவில்லை என்று சரித்திரக்காரர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

செபுலோன், இசக்காருக்கு இளையவனாயிருந்தும் யாக்கோபு அவனை முந்தி ஆசீர்வதிக்கிறான். கானான் பங்கிடப்பட்டபோது செபுலோனுக்கு இசக்காருக்குமுந்தி சுதந்தரங் கிடைத்தது. (யோசு. 19: 10–17.)

**14.** "இசக்கார்." இசக்காருடைய கோத்திர அடையாளங் கழுதைச்சாயல். அத்தேசத்துக் கழுதையானது சுறுசுறுப்பும், வேகமும், பொறுதியுஞ், சிறந்த தன்மையுமுடையது. இஸ்மவேல், சுயாதீனத்தை நாடுகிற காட்டுக் கழுதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறான் (ஆதி. 16: 12.). ஆனால் பொதுப்பட கழுதையானது மந்தமுஞ், சோம்பலும் சாதாரண இலட்சணமுமுள்ளது. யாக்கோபு இசக்காரை ஒரு பலத்த கழுதைக்கு ஒப்பிட்டிருக்கிறான். இசக்கார் கோத்திரத்தார் பொறுமையாய் வேலைசெய்துமுறைப்பாடில்லாமல் தீர்வைகளைச் செலுத்திவந்தார்கள்.

"பொதி" என்பதற்குரிய மூலவார்த்தையை (நியா. 5: 16.) "தொழுவங்கள்" என்று திருப்பியிருக்கிறது. இது அவர்கள் வேளாண்மையில் பிரியப்படுகிறவர்கள் என்று காட்டுகிறதாயிருக்கிறது.

"பகுதி கட்டுகிறவனானான்." எபிரெயுவில் "கட்டளையிட்ட வேலை" என்றிருக்கிறது. அது செய்த வேலைக்குரிய சம்பளத்தைக் குறிக்கும். சாலொமோன் கானானியரிடத்தில் வேலைகொண்டு சம்பளங் கொடுத்தவிஷயத்தைப் போலுள்ளது. "பகுதிகட்டுகிறவனானான்" என்ற வாசகம் 1 இரா. 9: 21. "அமஞ்சிவேலை செய்ய அடிமைப்படுத்திக்கொண்டான்" என்றும், 2 நாளா. 8: 8. "பகுதி கட்டச்செய்தான்" என்றுந் திருப்பப்பட்டிருக்கிறது. கடினத்தில் அது வேலைக்குக் கூலி கொடாமல் சும்மா வேலைகொண்டதைக் குறித்தது.





16 தாண் [1]இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திர
17 மாகி, தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான்.—தாண்,
குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்
படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில்
கிடக்கிற சர்ப்பத்தைப்போலவும், பாதையில் இருக்
கிற விரியனைப்போலவும் இருப்பான்.

18 கர்த்தாவே, [2]உம்முடைய இரட்சிப்புக்குக் காத்
திருக்கிறேன்.

19 காத் [3]என்பவன்மேல் இராணுவக்கூட்டம் பாய்ந்து

[1] நியா. 18. 1.
[2] சங். 25. 5: 40. 1. ஏசா. 25. 9: 26. 8.
[3] உபா. 33. 20. 1 நாளா. 5. 18.

ரே. 22: 14. பகுதி கட்டுகிறவனானான் என்பதின் கருத்து என்னவென்றால் சாருபடிக்கேற்ற நல்ல வளம்பொருந்திய இடத்தில் குடியிருந்து எந்தவிதத் தீர்வையையுங் கொடுப்பான் என்பதாம்.

**16.** "தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாகி." மறுமனையாட்டிகளின் பிள்ளைகளும், ராகேல் லேயாள் என்பவர்களின் பிள்ளைகளைப்போல் சுதந்தரபாத்தியம் அடைவார்கள் என்பதை யாக்கோபு அறிவிக்கிறான்.

"தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான்." கோத்திரத்துக்குரிய சுயாதீனத்தை இது குறிக்கிறதுடன் ஆளுகையையுங் குறிக்கும். நியாயாதிபதியாகிய சிம்சோன் இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

**17.** "தாண்......விரியனைப்போலவும் இருப்பான்." விரியன் என்பது மூலத்தில் அம்புச்சர்ப்பம் என்றிருக்கிறது. தாண் கோத்திரத்தார் யுத்தத்தில் முன்னணியில் இல்லாதிருந்தாலும் யுத்தாப்பியாசமுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் தந்திரமானவகையாய்ச் சத்துருக்களை மேற்கொண்டார்கள். சிம்சோன் அதற்கு நல்ல திருஷ்டாந்தமாயிருக்கிறான். நியா. 14. அதி. முதல் 18. அதி. முடிய அடங்கிய சங்கதிகள் தாணைக்குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறதென்று சொல்லலாம்.

**18.** "கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்." யாக்கோபு தான் முன்னறிவித்த ஜெய அபஜெயங்களைக்குறித்து ஜெபித்தான் என்று சிலர் அர்த்தம் பண்ணுகிறார்கள். வேறுசிலர் இவ்வளவு நேரமாய்த் தன் மக்களைப் பார்த்துப் பேசினதில் இளைப்படைந்ததினாலே மறுமையைப்பற்றிய நம்பிக்கையினாலே தன்னைத் தேற்றிக்கொள்ளும்வகையாய் இந்தச் சுருக்க ஜெபத்தைச் செய்தான் என்கிறார்கள். குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியிலே கிடக்கிற சர்ப்பத்தைப்பற்றி யாக்கோபு சொன்னபோது, மனிதன் பாவத்தில் விழுந்ததும் அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமும் அவன் மனதில் வரவே மேசியாவினால் வரும் மீட்பை நினைத்து ரக்ஷணியம் அதிசீக்கிரம் வருவதாக என்பதுபோல் இப்படி ஜெபித்தான் என்று நினைக்கத்தக்கது.

**19.** "காத்." இந்தக் கோத்திரத்தாருடைய லாப நஷ்டங்கள் இங்கே முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சுதந்தரஞ் சீரியருக்கும், அரபிய

விழும்; அவனே முடிவிலே அதின்மேல் பாய்ந்துவிழு
வான்.
20 ஆசேருடைய [1]ஆகாரம் கொழுமையாயிருக்கும்; [1] உபா. 33. 24. யோசு. 19. 24.
ராஜாக்களுக்கு வேண்டிய ருசிவர்க்கங்களை அவன் தரு
வான்.
21 நப்தலி [2]விடுதலைபெற்ற பெண்மான்; இன்பமான [2] உபா. 33. 23.
வசனங்களை வசனிப்பான்.
22 யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்

ருக்கும், அம்மோனியருக்குஞ் சமீபமாயிருந்தபடியால் அவர்கள் அடிக்கடி அந்தச் சத்துருக்களால் நெருக்கப்பட்டார்கள். பின்பு எப்தாவின் காலத்திலுங், தாவீதின் காலத்திலும், மற்ற இராசாக்கள் காலத்திலுங் காத்தியர் தங்கள் சத்துருக்களை மேற்கொண்டார்கள். அவர்கள் பராக்கிரமமென்று புகழ்பெற்றுமிருக்கிறார்கள். (1 நாளா. 5: 18–22; 12. 8.)

**20.** "**ஆசேர்.**" இந்தக் கோத்திரத்தாருடைய சுதந்தரங் கடலோரமாய்க் கர்மேல் பர்வதமுதல் லீபனோன் மலைவரைக்கும் எட்டினது. அது மிகவுஞ் செழிப்புள்ள நாடாயிருந்தது. வியாபாரிகளான செபுலோன் கோத்திரத்தார் இவர்கள் நாட்டின்வழியாய்ப் போக்குவரத்துச் செய்யவேண்டியதாயிருந்தது. (யோசு. 19: 24–25. ஏசா. 35: 2.)

**21.** "**நப்தலி.**" விடுதலைப்பெற்ற பெண்மான் என்பது சரியானபடி "அனுப்பப்பட்ட பெண்மான் என்றிருக்கவேண்டும். அதாவது நப்தலிக் கோத்திரத்தார் வேவுகாரரை அல்லது சேனையின் முன்தண்டைப்போல மெத்த சுறுசுறுப்புள்ளவர்களாயிருப்பார்கள். யோசேப்பு உயிரோடே இருக்கிறான் என்று யாக்கோபுக்கு முதலாவது செய்தி அறிவித்தவன் நப்தலி என்று தர்கூமில் சொல்லியிருக்கிறது.

"**இன்பமான வசனங்களை வசனிப்பான்.**" சேனைகளை நடத்திக் கொண்டு போவதற்கு உண்மையான யதார்த்த காரியங்களைச் சொல்லுவான். நப்தலிக்கோத்திரங் கலிலேயாநாட்டில் ஒரு பாகமாயிருந்ததால் சிலர் இது அந்த நாட்டிலிருந்து பிற்பியகாலத்தில் எழும்பி சுகிர்த வசனமாகிய சுவிசேஷத்தைப் போதித்த அப்போஸ்தலரைக்குறித்த தீர்க்கதரிசனம் என்பார்கள். "நப்தலி, நற்கிளைகளை விட்டுப் படர்ந்து விரிகிற மரத்தைப்போலிருப்பான்" என்று சிலர் திருப்புவதுண்டு.

**22-26.** "**யோசேப்பு.**" யோசேப்புக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் அநேக விஷயங்களில் விசேஷித்ததாயிருக்கிறது. அவன் யாக்கோபுக்கு மிக நேசமுள்ள குமாரன். யாக்கோபால் நேசிக்கப்பட்ட மனைவியாகிய ராகேலுடைய மகன். யூதர், இஸ்ரவேலை ஆதரித்தவனும் எகிப்துக்கெல்லாம் அதிபதியுமாயிருந்தான். யாக்கோபு அவனுக்கு இரட்டைச் சுதந்தரங் கொடுத்தான். என்றாலும் இராசரீகத்தை அவனுக்குக் கொடுக்கவில்லை. அது யூதாவுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த ஆசீர்வாதத்தில் யோசேப்புக்கு உண்டான





டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவ
23 ரின்மேல் படரும்.—வில்வீரர் [1]அவனை மனமடிவா [1] ஆதி. 37. 1-4. 118. 13.
க்கி, அவன்மேல் எய்து, அவனைப் பகைத்தார்கள்.—
24 ஆனாலும், அவனுடைய [2]வில் உறுதியாய் நின்றது; [2] யோபு. 29. 20. சங். 37. 11,15.
[3]அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங் [3] சங். 18. 32-34.
களால் பலத்தன; இதினால் அவன் [4]மேய்ப்பனும் இஸ்ர [4] சங். 80. 1.

உபத்திரவங்களையும் அந்த உபத்திரவங்களில் அவன் தளராமல் நிலைநின்றதையும் எடுத்துக்காட்டி அவன் வித்தார் திரள் ஜனங்களாய்ப் பெருகி பூமியின் நன்மைகளை அனுபவிப்பார்கள் என்று காட்டியிருக்கிறது.

**22.** "**கனிதரும் செடி.**" மூலத்தில் "யோசேப்பு கனிதரும் விருக்ஷத்தின் மகன், நீரூற்றண்டையிலுள்ள கனிதரும் விருக்ஷத்தின் மகன், புத்திரிகள் சுவரின்மேல் விரிந்து நிற்பார்கள்" என்றிருக்கிறது. அதாவது யோசேப்பு நீரூற்றண்டையில் நாட்டப்பட்டு கனிகளைக் கொடுத்து மதில்களுக்கு மேலாக வளர்ந்து விரிந்துநிற்கிற விருக்ஷத்துக்கு ஒப்பாயிருப்பான் என்பதும் இதால் யோசேப்பின் சந்ததியார் வெகு திரளாய்ப் பெருகிப்போவார்கள் என்பதுங் குறிக்கப்பட்ட பொருளாயிருக்கிறது. இஸ்ரவேலர் முதல்விசை தொகையிடப்பட்டபோது யோசேப்பின் சந்ததியார் 72,200 பேர். யூதாவின் சந்ததியார் 74,600 பேர். இரண்டாம்விசை தொகையிடப்பட்டபோது யோசேப்பின் சந்ததியார் யூதாவின் சந்ததியாரைவிட 8,700 பேருக்கு அதிகமாயிருந்தார்கள்.

**23.** "**வில்வீரர்.**" இது யோசேப்பின் சகோதரரையும், போத்திப்பாரின் மனைவியையும், போத்திப்பாரையுங் குறிக்கும். "அவனைப் பகைத்தார்கள்" என்பதை "அவனுக்குக் கண்ணிகளை வைத்தார்கள்" என்று திருப்பினால் நலம். 37. அதி. 39. அதி. 42: 21. சங். 64: 3; 118: 13.

**24.** "**அவனுடைய வில் உறுதியாய் நின்றது.**" சத்துருக்களுடைய சதி சற்பனைகள் எவ்வளவாயிருந்தபோதிலும் அவன் தனக்கு அளிக்கப்பட்ட கிருபையினாலும் விசுவாசத்தினாலுந் தளர்ச்சியடையாமல் விடாமுயற்சியுந் தைரியமும் நிர்ணயமுமுள்ளவனாய் விளங்கினான். அநேக ஆபத்துக்கள் அவனுக்கு உண்டாகியும் அவன் ஜீவனுக்கு மோசம் வரவுமில்லை. அவன் கீர்த்திக்கும் உண்மைக்கும் பின்னம் உண்டாகவுமில்லை.

"**இதினால் அவன் மேய்ப்பனும்.**" தன் தகப்பனையுஞ் சகோதரரையும் அவர்கள் மந்தைகளையும் பராமரித்தான் என்றும்;

"**இஸ்ரவேலின் கன்மலை.**" தேவநடத்துதலினாலே இஸ்ரவேலருடைய பாக்கியத்துக்கும் பாதுகாப்புக்கும் அவன் காரணனாயிருந்தான் என்றும் வியாக்கியானப்படுத்தலாம்.

**கவனிப்பு.** இவ்வசனத்தில் சொல்லப்பட்ட மேய்ப்பனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் வரப்போகிற மேசியாவென்று சொல்வாருண்டு. விசேஷமாய் யூத வியாக்கியானிகள் மேசியா என்று சொல்லப்படத்தக்கவர் ஒருவர் மாத்திரமல்ல இரண்டுபேருண்டென்றும் அவர்களில் ஒருவர் யோசேப்

25 வேலின் [1]கன்மலேயும் ஆனுன். — உன் தகப்பனுடைய
தேவனுலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணை
யாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று,
[2]அவர் உயர வானத்திலிருந்துஉண்டாகும் ஆசீர்வா
தங்களினுலும், கீழே ஆழத்திலேஉண்டாகும் ஆசீர்
வாதங்களினுலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்
கும் உரிய ஆசீர்வாதங்களினுலும் உன்னை ஆசீர்வதிப்
26 பார். — உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என்
பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதா
யிருந்து, [3]நித்திய பர்வதங்களின் முடிவுமட்டும் எட்டு
கின்றன. அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலும்,
தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலை
யின்மேலும் வருவதாக.

[1] ஏசா. 28. 16.
[2] உபா. 33. 13.
[3] உபா. 33. 15, 16. ஆப. 3. 6.

பின் வம்சத்தில் பிறந்து தம்முடைய ஜனங்களுக்காகப் பலபாடுகளைப் படுவாரென்றும் பின்னொருவர் யூதாகோத்திரத்தில் சர்வமகிமையுடையவராய் உதித்துச் சொல்லிமுடியாத கீர்த்தியோடுஞ் ஜோதியோடும் அரசாளுவாரென்றும் மூந்திய மேசியா இந்த வாக்கியத்தில் சொல்லப்படுகிருரென்றுஞ் சாதிப்பார்கள்.

ஆனுல் "கரங்களுல்" என்பதற்கு "இதினுல்" என்பது எதுகையாயிருப்பதால் இந்த வாக்கியத்தை, "அவன் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களால் பலத்தன; மேய்ப்பரும் இஸ்ரவேலின் கன்மலேயுமானவர் வாசம் பண்ணுகிற இடத்திலிருந்தே அப்படியாயின" என்று திருப்பலாம். அதாவது யோசேப்புக்குண்டான வெற்றிசிறப்பு, மேய்ப்பரும் இஸ்ரவேலின் கன்மலேயுமான தேவனிடத்திலிருந்து உண்டானது என்பதே கருத்து.

**25.** "உயர வானத்திலிருந்து, ௸." பருவத்துக்கேற்ற மழையும் பனியும்.

"கீழே ஆழத்தில், ௸." ஏரிகளும், நதிகளும், ஊற்றுக்களும்;

"கர்ப்பங்களுக்கும் உரிய." சந்தான பெருக்கமும், ஆடுமாடுகளின் திரட்சியுமாகிய நன்மைகளைக் குறிக்கிறது. இவைகளுக்கு எதிரிடையான சாபம் (ஓசி. 9: 14.) வருகிறது.

**26.** "உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள், ௸." யாக்கோபு, யோசேப்புக்குக் கொடுத்த ஆசீர்வாதம் யாக்கோபுடைய பிதாக்களுக்கு அருளப்பட்ட ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதென்று இந்த வாக்கியத்தால் குறிக்கப்படுகிறது சரியல்ல; ஏனென்றுல் பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதம் யோசேப்புக்குக் கொடுக்கப்படாமல் யூதாவுக்கு அருளப்பட்டிருக்கிறதே என்றுசொல்லி இந்த வாக்கியத்தைக் சமாரியப் பஞ்சாகமத்துக்கு இசைவாய்ச் சிலர் திருப்புகின்றனர். அதெப்படியென்றுல் "உன் பிதாவின் ஆசீர்வாதங்கள் பூர்வ மலைகளின் ஆசீர்வாதங்களுக்கும் நித்திய பர்வதங்களின் ஆசீர்வாதங்களுக்கும் மேற்பட்டது" என்பதே. ஆனுல் முந்தின வாக்கியங்களைக்





27 பென்யமீன் [1]பீறுகிற ஓநாய்; காலையில் தன் இரை
யைப் பட்சிப்பான், [2]மாலையில் தான் கொள்ளையிட்ட
தைப் பங்கிடுவான் என்றுன்.

28 இவர்கள் எல்லாரும் இஸ்ரவேலின் பன்னிரண்டு
கோத்திரத்தார்; அவர்களுடைய தகப்பன் அவர்களை
ஆசீர்வதிக்கையில், அவர்களுக்குச் சொன்னது இது
தான்; [3]அவனவனுக்குரிய ஆசீர்வாதம் சொல்லி அவ
னவனை ஆசீர்வதித்தான்.

29 பின்னும் அவன் அவர்களை நோக்கி: நான் என்
ஜனத்தாரோடே சேர்க்கப்படப்போகிறேன்; ஏத்திய
னுன எப்பெரோனின் நிலத்திலுள்ள குகையிலே
என்னை என் [4]பிதாக்களண்டையிலே அடக்கம்பண்

[1] நியா. 20. 21, 25. எசே. 22. 25, 27.
[2] எசே. 39. 9, 10.
[3] சே. 12. 6. ௸.
[4] ஆதி. 47. 30. 2 சாமு. 19. 37.

கவனிக்கையில் யாக்கோபு, யோசேப்புக்குக் கொடுத்த ஆசீர்வாதங்கள் இப்பூமிக்குரியவைகளென்று அறியலாம். இவ்வகையான ஆசீர்வாதங்கள் யாக்கோபின் பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களைவிட யோசேப்புக்கும் அவன் வித்தாருக்கும் விசேஷித்தவகையாய்க் கிடைத்தது என்றறிய வேண்டியது.

"சகோதரரில் விசேஷித்தவன்." யோசேப்பு விசேஷித்தவகையாய் தகப்பனுலும், எஜமானுலும், ராஜனுலும் மதிக்கப்பட்டிருந்தான். அவன் சகோதரரும் பிற்காலத்தில் அவனை அப்படியே எண்ணிவந்தார்கள். யோசேப்பின் சந்ததியாரான எப்பிராயீமர் இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள்ளே விசேஷித்தவர்களாக எண்ணப்பட்டுவந்தார்கள். சில தருணங்களில் பத்துக் கோத்திரத்தாரும் எப்பிராயீம் என்று அழைக்கப்பட்டிருக்கிறுர்கள்.

**27.** "பென்யமீன் பீறுகிற ஓநாய்." பென்யமீனர் கொடிய மூர்க்க குணமுள்ளவர்களாயிருந்தார்கள். லேவியனுடைய மறுமனையாட்டி சங்கதியில் இது விளங்குகிறது. அவர்கள் ஒரு கோத்திரத்தாராகத் துவக்கத்தில் யுத்தப்பிரியராயிருந்து பிற்காலங்களில் யூதாக் கோத்திரத்தாரோடே இசைந்து வாழ்ந்துவந்தார்கள்.

**28.** "அவனவனை ஆசீர்வதித்தான்." யாக்கோபின் பிள்ளைகளில் சிலர் கண்டிக்கப்பட்டிருந்தாலும் ஒருவனுவது சுதந்தரத்துக்கு அப்புறப்படுத்தப்படாமல் கானுனில் பங்குபெற்று வாழ்ந்தார்கள்.

**29.** "என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம் பண்ணுங்கள்." யாக்கோபு தன்னை அடக்கஞ் செய்யவேண்டியதைக்குறித்து முன்னே யோசேப்புக்குக் கட்டளை கொடுத்திருந்தான். இப்போது தன் பிள்ளைகள் எல்லாருக்கும் அந்தக் கட்டளையைக் கொடுத்தான். இதினுல் தன் குமாரர் எகிப்தின்மேல் நாட்டம் வையாமல் வாக்குத்தத்தத்தின் தேசத்தின்மேல் ஆசை வைக்கும்படியாக அவர்களை எழுப்பிவிட்டான் என்று அறியலாம்.

30 னுங்கள் என்று கட்டளையிட்டு;—அந்தக் குகை
கானான்தேசத்திலே மம்ரேக்கு எதிராக மக்பேலா என்
னப்பட்ட நிலத்திலிருக்கிறது; அதை நமக்குச்
சொந்தக் கல்லறை பூமியாயிருக்கும்படி, [1]ஆபிரகாம்
ஏத்தியனுகிய எப்பெரோன் கையில் அதற்குரிய நிலத்
31 துடனே வாங்கினார்.—அங்கே ஆபிரகாமையும் அவர்
மனைவியாகிய சாராளையும் அடக்கம்பண்ணினார்கள்;
அங்கே ஈசாக்கையும் அவர் மனைவியாகிய ரெபெக்
காளையும் அடக்கம்பண்ணினார்கள்; அங்கே லேயாளை
32 யும் அடக்கம்பண்ணினேன்.—அந்த நிலமும் அதில்
இருக்கிற குகையும் ஏத்தின் புத்திரர் கையில் கொள்
ளப்பட்டது என்றான்.
33 யாக்கோபு தன் குமாரருக்குக் கட்டளையிட்டு முடி
ந்தபின்பு, அவன் தன் கால்களைக் கட்டிலின்மேல்
மடக்கிக்கொண்டு [2]ஜீவித்துப்போய், தன் ஜனத்தாரோ
டே சேர்க்கப்பட்டான்.

[1] ஆதி. 23. 16.
[2] யோபு. 14. 10.

**33.** "தன் கால்களைக் கட்டிலின்மேல் மடக்கிக்கொண்டு." தன் குமாரரை ஆசீர்வதிக்கும்படி இதுவரையுங் கட்டிலில் உளுக்கார்ந்திருந்தான். ஆசீர்வதித்து முடிந்தது. கட்டளையுங் கொடுத்தாயிற்று. அப்புறம் தன் வேளை வந்ததென்று அறிந்து கால்களைக் கட்டிலின்மேல் மடக்கிக்கொண்டு ஜீவனைக் கர்த்தரிடத்தில் ஒப்புவித்தான்.

படிப்பினை.

வச. 1—7.

(1) பரிசுத்த ஆவியானவருடைய உதவியும் ஆறுதலும், மனிதரை அவர்களுடைய நோவை மறக்கப்பண்ணி பலட்சயப்பட்ட அவர்கள் சரீரத்தை திடப்படுத்தி மரணநேரத்தில் மற்றவர்களுக்குப் பிரயோசனமான வசனங்களைச் சொல்லும்படி ஏவுகிறதாயிருக்கிறது.

(2) வெகுகாலத்துக்குமுன் செய்யப்பட்ட பாவங்களுங் கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படாவிடில் நமக்கு விரோதமாய் எழும்பி ஆக்கினைக்குள்ளாக நம்மைத் தீர்க்கும்.

(3) நம்முடைய பாவங்கள் நமக்கு நினைப்பூட்டப்படுகையில் அவைகளைச் சாந்தத்தோடும் பொறுமையோடும் சகிக்கவேண்டும். நாம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறினவர்களாயிருந்தும் தேவன் தமது இரக்கத்தினலே நமது மீறுதல்களை மன்னித்துப் பரம இராச்சியத்திற்குப் பங்குள்ளவர்களாக்கினுல் நன்றியறிதலாயிருப்போமாக.

(4) மார்க்கானுசாரிகளான பெரியோர்கள், மார்க்கத்தில் அமைந்த துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி வருபவர்களைக் கண்டித்து உணர்த்தவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.





## 50. அதிகாரம்.

யாக்கோபுக்காகத் துக்கங்கொண்டாடினது. 4. யோசேப்பு அவனை அடக்கம்பண்ண பார்வோனிடத்தில் உத்தரம் பெற்று மரணச் சடங்கு செய்தது. 15. மன்னிப்புக் கேட்டுக்கொண்ட தன் சகோதரர்களை யோசேப்பு தேற்றினது. 22. யோசேப்புடைய ஆயுசு. 23. அவன் தன் குமாரரில் மூன்றாந் தலைமுறையைக் கண்டது. 24. அவன் தன் சகோதரர் கானான்தேசத்துக்குத் திரும்புவதை முன்னறிவித்தது. 25. அவன் தன் எலும்புகளைக்குறித்து அவர்களிடத்தில் ஆணையிடுவித்துக்கொண்டது. 26. அவன் மரித்து, பெட்டியிலே வைக்கப்பட்டது.

1 அப்பொழுது யோசேப்பு தன் தகப்பனுடைய முக
த்தின்மேல் விழுந்து, அழுது, [1]அவனை முத்தஞ்செய்
2 தான்.—பின்பு, தன் தகப்பனுக்குச் [2]சுகந்தவர்க்கமிடும்

[1] 2 இரா. 13. 14.
[2] நாளா. 16. 14. மத். 26. 12. மாற். 14. 8: 16. 1. யோ. 12. 7.

(5) மாம்ச இச்சையுங் கொலைபாதகமும் தற்காலத்துக்கு இனிமையாய்க் காணப்பட்டாலும், அவைகள் எப்போதுங் கொட்டிக்கொண்டிருக்கிற விஷஜெந்தின் கொடுக்கப்போலிருக்கிறது. அகங்காரிகளும் மேட்டிமைச் சிந்தையுள்ளவர்களும் உலகத்திலாவது சபையிலாவது பேரெடுப்பாய் விளங்கமாட்டார்கள்.

வச. 8—33.

(6) மற்றவர்களுடைய பாதகத்தை எடுத்துக்காட்டுகையில் குடும்பமுழுவதையும் பழிக்கவுங் கூடாது. பாதகத்தை மிகமிஞ்சிப் பாராட்டவுங் கூடாது. சிறுக்குப் பல குறைவுகள் இருந்தாலும் நாம் அவர்களை மெச்சிக்கொள்ளத் தகுமான காரியங்களும் அவர்களிடத்தில் இருக்கலாம்.

(7) யூதாக்கோத்திரச் சிங்கமானவர் நம்முடைய சத்துருக்களிடத்தில் பழிவாங்குகிறவராயுந் தேவாட்டுக்குட்டியாகிய அவர் நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிறவராயுமிருக்கிறார். அவர் தமது செங்கோலை நீட்டி பாவிகளைத் தம்மண்டைக்கு வரவழைக்கிறார்; அவர் கோபம் நம்முடையமேல் கிழலிடாதபடி எச்சரிக்கையாய் நடப்போமாக.

(8) அவருடைய வல்லபத்தால் நாம் நம்முடைய சத்துருக்களை மேற்கொண்டு ஜெயகம்பீரமடையலாம். நமக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் பலியாதேபோம்.

(9) நாம் அவர்பேரில் சார்ந்து அவருடைய இரட்சிப்புக்காகக் காத்திருந்து கடைசியாக நம்முடைய ஆவியை அவர் கரத்தில் ஒப்புவித்தால் மெய்யாய்ப் பாக்கியவான்களாயிருப்போம்.

## 50. அதிகாரம்.

**"யோசேப்பு தன் தகப்பனுடைய முகத்தின்மேல் விழுந்து, அழுது."** யாக்கோபு பூரண ஆயுசில் மரித்தபோதிலும், அவன் சென்றுபோனது யோசேப்புக்கு மிகவும் துக்கமாயிருந்தது. தன் அன்பையும், பாசத்தையும் காட்டும்படியாக அவன் யாக்கோபின் பிரேதத்தின்மேல் விழுந்து அழுது அவன் முகத்தை முத்தமிட்டான்.

**2. "தன் தகப்பனுக்குச் சுகந்தவர்க்கமிடும்படி............வைத்தியருக்குக் கட்டளையிட்டான்."** பிரேதங்கள் அழுகிக் கெட்டுப்போகாதபடிக்குச் சுகந்தவர்க்கமிட்டுப் பத்திரம் பண்ணுவதில் எகிப்தியர் பேர்போனவர்களா

படி. யோசேப்பு தன் ஊழியக்காரராகிய வைத்தியருக்
குக் கட்டளையிட்டான்; அப்படியே வைத்தியர் இஸ்ர
3 வேலுக்குச் சுகந்தவர்க்கமிட்டார்கள்.—சுகந்தவர்க்க
மிட நாற்பதுநாள் செல்லும்; அப்படியே அந்த நாட்
கள் நிறைவேறின. எகிப்தியர் அவனுக்காக [1]எழு — [1] எண். 20. 29. உபா. 34. 8.
4 பதுநாள் துக்கங்கொண்டாடினார்கள்.—துக்கங்கொண்
டாடும் நாட்கள் முடிந்தபின், யோசேப்பு பார்வோ
னின் குடும்பத்தாரை நோக்கி: உங்கள் கண்களில்
எனக்குத் தயவுகிடைத்ததானால், நீங்கள் பார்வோனு
டைய காது கேட்க அவருக்கு அறிவிக்கவேண்டியது
5 என்னவென்றால், — என் தகப்பனார் என்னை நோக்கி:
[2]இதோ, நான் மரணமடையப்போகிறேன்; கானான் — [2] ஆதி. 47. 29.
தேசத்திலே நான் [3]எனக்காக வெட்டிவைத்திருக்கிற — [3] சங். 22. 16. மத். 27. 60.
கல்லறையிலே என்னை அடக்கம்பண்ணுவாயாக

யிருந்தார்கள். இப்படிப் பத்திரம் பண்ணப்பட்ட பிரேதத்துக்கு மம்மிகள் என்று பேர். கி. மு. 2000 வருஷங்களுக்கும் கி. பி. 700 வருஷங்களுக்கும் இடையே இப்படிச் சுகந்தவர்க்கம் இடப்பட்ட மம்மிகள் 42 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சுகந்தவர்க்கம் இடுவதற்கு அதிகமான செலவு பிடிக்கும். சுகந்தவர்க்கம் இடுகிறவர்களுக்கு வைத்தியர்கள் என்ற பொதுவான பேர் இருந்தது. யாக்கோபைத் தொலையில் கொண்டுபோய் அடக்கஞ் செய்யவேண்டியதாயிருந்ததால் அவனுக்குச் சுகந்தவர்க்கம் இடவேண்டியது அவசியமாயிருந்தது.

3 **"நாற்பதுநாள் செல்லும்."** ஹெரொடோத்து என்னுஞ் சரித்திரக்காரன் பிரேதத்துக்குச் சுகந்தவர்க்கமிட எழுபதுநாள் செல்லும் என்று எழுதியிருக்கிறான். அவன் தேபேப் பட்டணத்தில் கண்டதை வைத்து எழுதியிருக்கிறான். யோசேப்பின் காலத்தில் மெம்பிஸ் பட்டணம் எகிப்துக்குத் தலைநகராயிருந்தது. தேபேப் பட்டணத்து மம்மிகள் மெம்பிஸ் பட்டணத்து மம்மிகளை விட பூரணமாய்ப் பதுகாக்கப்பட்டிருக்கிறதாகச் சரித்திரத்தால் அறிகிறோம். தியோடொரு என்பவன் சொல்லிய காலக்கணக்கு இங்கே சொல்லப்பட்டிருப்பதற்கு ஒத்திருக்கிறது. அவன் ராஜாவின் பிரேதத்துக்குச் சுகந்தவர்க்கம் இட முப்பதுநாள் செல்லும் என்றும், துக்கங் கொண்டாட எழுபத்திரண்டு நாள் செல்லும் என்றும் எழுதியிருக்கிறான். இஸ்ரவேலர் முப்பதுநாள் துக்கங் கொண்டாடுவார்கள் (எண். 20: 29. உபா. 34: 8.). எகிப்தியர் யாக்கோபுக்காக எழுபதுநாள் துக்கங் கொண்டாடினார்கள் என்பதில் அவன் பிரேதத்துக்குச் சுகந்தவர்க்கமிட்ட நாற்பதுநாளும் எழுபது நாட்களோடே சேர்ந்திருக்கலாம்.

4. **"நீங்கள் பார்வோனுடைய காது கேட்க அவருக்கு அறிவிக்கவேண்டியது."** யோசேப்பு மத்தியஸ்தர்மூலமாய் பார்வோனோடே பேசினது முதலில் விபரீதமாய்க் காணப்படலாம். ஆனால் துக்கவஸ்திரந் தரித்தவர்கள் ராஜசமுகத்தண்டை வராதபடிக்கு விலக்கப்பட்டிருக்கலாமே (எஸ். 4: 2.). மேலும் அவன் சவரம் பண்ணாமலுமிருக்கலாம். ஆகவே துக்க உடை தரித்





என்று என்னிடத்தில் சொல்லி, ஆணையிடுவித்துக்
கொண்டார்; நான் அங்கே போய், என் தகப்பனை
அடக்கம்பண்ணி வருவதற்கு உத்தரவு கொடுக்க வே
ண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள் என்
6 றான்.—அதற்குப் பார்வோன்: உன் தகப்பன் உன்னி
டத்தில் ஆணையிடுவித்தபடியே, நீ போய், அவரை
அடக்கம்பண்ணிவா என்றான்.

அப்படியே யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்
பண்ணப் போனான். பார்வோனுடைய அரமனையி
லிருந்த பெரியவர்களாகிய அவனுடைய சகல உத்தி
யோகஸ்தரும் எகிப்துதேசத்திலுள்ள சகல பெரியோ
ரும்,—யோசேப்பின் வீட்டார் யாவரும், அவன்
சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரும் அவனோ
டேகூடப் போனார்கள். தங்கள் குழந்தைகளையும்,
தங்கள் ஆடுமாடுகளையும்மாத்திரம் கோசேன்நாட்
டிலே விட்டுப்போனார்கள். — இரதங்களும் குதிரை
வீரரும் அவனோடே போனதினால், பரிவாரக்கூட்
டம் மிகவும் அதிகமாயிருந்தது.—அவர்கள் யோர்
தானுக்கு அக்கரையில் இருக்கிற ஆத்தாத்தின் போர்க்

இருந்த அவன் வீடுமட்டாயிருந்து மற்றவர்கள் மூலமாய் பார்வோனிடத்தில் உத்தரவு கேட்கவேண்டியதாயிருந்தது.

8. **"குழந்தைகள்."** என்று திருப்பியிருக்கிற வார்த்தை வேலைக்காரரையுங் குறிக்கலாம்.

9. **"பரிவாரக்கூட்டம் மிகவும் அதிகமாயிருந்தது."** எகிப்தின் அராச்சியத்திலுள்ள விசேஷித்த உத்தியோகஸ்தரில் அநேகரும் யாக்கோபின் பிள்ளைகளும் அவர்களோடே திரள்கூட்டத்தாரும் ரதங்களோடே குதிரைவீரரோடும் யாக்கோபை அடக்கஞ்செய்வதற்குக் கானானுக்கு எகினார்கள். பூர்வீகத்திலேயாவது நாளதிலேயாவது இவ்வளவு பரிவாரத்தோடே யாராவது அடக்கம் பண்ணப்பட்டிருப்பதைக் காண்பதும் கேட்பதும் அரிது. மேய்ப்பனாயிருந்த யாக்கோபுக்கு இந்த ஆடம்பரம் யோசேப்பினிமித்தங் கிடைத்தது. இதினாலே யோசேப்பு மிகவுங் கண்ணியமாய் மதிக்கப்பட்டிருந்தான் என்று அறியலாம்.

10. **"யோர்தானுக்கு அக்கரையில்."** மோசேயின் ஆகமங்களில் யோர்தானுக்கு அக்கரையில் என்று வருவது யோர்தானின் மேல்கரையைக் குறிக்கும். மற்ற ஆகமங்களில் அப்படி வருவது பொதுவாய்க் கீழ்கரையைக் குறிக்கும்.

**"ஆத்தாத்தின் போர்க்களம்."** ஆத்தாத் என்பதற்கு "முட்செடி" என்றர்த்தம். கானானில் அப்போது சாகுபடி ஆரம்பித்துக்கொண்டுவந்ததால் அந்தக் களம் யாவருக்கும் பொதுவானதாயிருக்கலாம். ஒருவேளை அதற்குச் சமீபமாய் ஒரு ஊரும் இருக்கலாம்.

களத்தில் வந்தபோது, அவ்விடத்திலே பெரும் புலம்
பலாகப் [1]புலம்பினார்கள். அங்கே தன் தகப்பனுக்காக [1] ... 17. யோபு 2. 13. அப். 8. 2.
11 ஏழுநாள் துக்கங்கொண்டாடினான். — ஆத்தாத்தின்
களத்திலே துக்கங்கொண்டாடுகிறதை அந்தேசத்தின்
குடிகளாகிய கானானியர் கண்டு, இது எகிப்தியருக்
குப் பெரிய துக்கங்கொண்டாடல் என்றார்கள். ஆதி
னால் யோர்தானுக்கு அப்பால் இருக்கிற அந்த ஸ்த
லத்திற்கு *ஆபேல் மிஸ்ராயீம் என்னும் பேர் உண்டா * எகிப்தியரின் துக்கம்.
12 யிற்று.-யாக்கோபின் குமாரர், தங்களுக்குக் கட்டளை
13 யிட்டிருந்தபடியே, — அவனைக் [2]கானான் தேசத்துக் [2] ஆதி. 23. 16: 49. 29. அப். 7. 16.
குக் கொண்டுபோய், ஆபிரகாம் மம்ரேக்கு எதிரே
இருக்கிற மக்பேலா என்னும் நிலத்திலே தனக்குச்
சொந்தக் கல்லறை பூமியாக ஏத்தியனாகிய எப்பெ
ரோனிடத்தில் வாங்கின நிலத்திலுள்ள குகையிலே
14 அவனை அடக்கம்பண்ணினார்கள்.—யோசேப்பு தன்
தகப்பனை அடக்கம்பண்ணினபின்பு, அவனும் அவன்
சகோதரரும், அவனுடைய தகப்பனை அடக்கம்பண்
ணுவதற்கு அவனோடே கூடப் போனவர்கள் யாவரும்
எகிப்துக்குத் திரும்பினார்கள்.

15 தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின்
சகோதரர் கண்டு: ஒருவேளை யோசேப்பு [3]நம்மைப் [3] யோபு. 15. 21, 22.
பகைத்து, நாம் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்
லாங்குக்காகவும் நமக்குச் சரிக்குச் சரிகட்டுவான்
என்று சொல்லி, யோசேப்பினிடத்தில் ஆள் அனுப்
16 பி: உம்முடைய சகோதரர் உமக்குப் [4]பொல்லாங்கு [4] நீதி. 28. 13.
செய்திருந்தும். அவர்கள் செய்த துரோகத்தையும்
பாதகத்தையும் நீர் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்
என்று உம்முடைய தகப்பனார் மரணமடையு
முன்னே, உமக்குச் சொல்லும்படி கட்டளையிட்டார்.-
17 ஆகையால், [5]உம்முடைய தகப்பனுடைய தேவ [5] ஆதி. 49. 25.
னுக்கு ஊழியக்காரராகிய நாங்கள் செய்த துரோ
கத்தை மன்னிக்கவேண்டும் என்று அவனுக்குச் சொல்

**11.** "ஆபேல் மிஸ்ராயீம்." என்பதற்கு "எகிப்தியரின் துக்கங் கொண்டாடல்" என்றர்த்தம்.

**15.** "ஒருவேளை யோசேப்பு." யோசேப்பின் குணத்தில் வேற்றுமையான மாறுதலைக் காணாதிருந்தும் அவன் சகோதரர் வீண்பயத்துக்கு இடங்கொடுத்துத் தாங்கள் அவனுக்குச் செய்த துரோகத்தையும் பாதகத்தையும் மன்னிக்கும்படி கேட்டார்கள்.





லச் சொன்னார்கள். அவர்கள் அதை யோசேப்புக்குச்
18 சொன்னபோது, அவன் அழுதான்.—பின்பு, அவனு
டைய சகோதரரும் போய், அவனுக்கு முன்பாகத்
தாழ [1]விழுந்து: இதோ, நாங்கள் உமக்கு அடிமைகள் [1] ஆதி. 37. 7, 10.
19 என்றார்கள்.—யோசேப்பு அவர்களை நோக்கி: [2]பயப் [2] ஆதி. 45. 5.
20 படாதிருங்கள்; [3]நான் தேவனோ; — நீங்கள் எனக்குத் [3] உபா. 32. 35. 2இரா. 5. 7. ரோ. 12. 19. எபி. 10. 30.
[4]தீமைசெய்ய நினைத்தீர்கள்; [5]தேவனோ, இப்பொழுது
நடந்துவருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே
காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணி [4] சங். 56. 5. ஏசா. 10. 7.
21 னார்.—ஆதலால், பயப்படாதிருங்கள்; [6]நான் உங்களை [5] ஆதி. 45. 5, 7. ... 3. 13-15.
யும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று, [6] மத். 5. 44.
அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களோடே
பட்சமாய்ப் பேசினான்.

22 யோசேப்பும் அவன் தகப்பன் குடும்பத்தாரும்
எகிப்திலே குடியிருந்தார்கள். யோசேப்பு நூற்றுப்
பத்து வருஷம் உயிரோடிருந்தான்.—யோசேப்பு எப்
பிராயீமுக்குப் பிறந்த [7]மூன்றாம் தலைமுறைப் பிள்ளை [7] யோபு. 42. 16.
களையும் கண்டான்; மனாசேயின் குமாரனாகிய [8]மாகீ [8] எண். 32. 39.
ரின் பிள்ளைகளும் யோசேப்பின் மடியிலே வளர்க்கப்
பட்டார்கள்.

24 யோசேப்பு தன் சகோதரரை நோக்கி: நான் மரண
மடையப்போகிறேன்; ஆனாலும் தேவன் உங்களை நிச்
சயமாய்ச் *சந்தித்து, உங்களை இந்தத் தேசத்தை விட்டு, * ... யாத். 3. 16. எபி. 11. 22.
தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும்
ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்

**17.** "அவன் அழுதான்." யோசேப்பின் சகோதரர் தன்னைக்குறித்து வீண் எண்ணங் கொண்டதை அறிந்து தகப்பனை நினைத்துக் கண்ணீர் சொரிந்தான்.

**18.** "தாழ விழுந்து." யோசேப்பின் சகோதரர் இப்போது மனதார அவனுக்கு முன்பாக விழுந்து வணங்கினார்கள். அவன் சொப்பனம் எவ்வளவு திட்டமாய் நிறைவேறி இருக்கிறது.

**21.** "அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்." யோசேப்பு தன் சகோதரரின் பயத்தை நீக்கும்படி ஆறுதலான வார்த்தை சொன்னதுடன் அருமையான வாக்குத்தத்தங்களையுஞ் செய்தான்.

**23.** "மூன்றாம் தலைமுறை." யாக்கோபு மரித்தபின் யோசேப்பு ஐம்பத்துநாலு வருஷம் உயிரோடே இருந்தான். அவன் தன் பிரபௌத்திரனைக் கண்டான். எப்பிராயீம் மகன் சுத்தெலாகின் குமாரன் ஏரான் யோசேப்பின் காலத்தில் பிறந்திருக்கவேண்டும். (எண். 26: 35, 36.)

**24.** "ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார்." யோசேப்பின் விசுவாசத்துக்கு இது ஒரு அத்தாட்சி. இதைப்பற்றி

25 பண்ணுவார் என்று சொன்னதுமன்றி;—தேவன் உங்
களைச் சந்திக்கும்போது, என் எலும்புகளை இவ்விடத்
திலிருந்து கொண்டுபோவீர்களாக என்றும் சொல்லி;
யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் [1]ஆணையிடு
26 வித்துக்கொண்டான்.—யோசேப்பு நூற்றுப்பத்துவய
துள்ளவனாய் மரித்தான். அவனுக்குச் சுகந்தவர்க்க
மிட்டு, எகிப்துதேசத்தில் அவனை ஒரு பெட்டியிலே
வைத்துவைத்தார்கள்.

[1] யாத். 13. 19. யோசு. 24. 32. அப். 7. 16. எபி. 11. 22.

எபி. 11: 22. மெச்சிச் சொல்லியிருக்கிறது. யோசேப்பின் விசுவாசம் இந்த ஆகமத்தையும் அடுத்த ஆகமத்தையும் இணைக்கிறதாயிருக்கிறது.

**26.** "ஒரு பெட்டியிலே வைத்துவைத்தார்கள்." உலகத்துக்கு நன்மை செய்த பெரியமனுஷன் இல்லாமல்போனான். இம்மையின் தொல்லையில்லாத இடத்துக்கு இளைப்பாறச் சென்றான். அவனை அடக்கஞ்செய்ய எபிரோனுக்குக் கொண்டுபோகத்தக்கதாய்ப் பரிவாரமில்லை. அவனின் பிரேதம் சுகந்தவர்க்கம் இடப்பட்டு ஒரு பெட்டியில் பத்திரமாய்க் கோசேனில் வைத்துவைக்கப்பட்டது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படும்போது தன் எலும்புகளைக் கூடக் கொண்டுபோகும்படி அவன் ஆணையிடும்படி செய்வித்தான். மோசே அவன் எலும்புகளைக் கூடவே எடுத்துக்கொண்டுபோனான். யோசுவா அவைகளைச் சீகேமில் அடக்கஞ்செய்தான். (யாத். 13: 19. யோசு. 24: 32.)

### படிப்பினை.

#### வச. 1—14.

தேவகிருபையானது இரட்சணியத்தின்பேரிலுள்ள இயல்பான பாசத்தை அழிக்கிறதில்லை. உத்தமன் மரிக்கையில் நெருங்கின இனத்தார்போலவே அயலகத்தாரும் கண்ணீர் சொரிவார்கள். ஆனால் ஒன்று வியாகுலக்கண்ணீர், மற்றது பரிதாபக்கண்ணீர். ஒன்று விசாரக்கண்ணீர், மற்றது உபசாரக்கண்ணீர். மரித்தோரைக் கண்ணியமாய் அடக்கஞ் செய்வது அவர்களுக்கு நாம் செய்யுங் கடைசி மரியாதை. ஆத்துமா சரீரத்தைவிட்டுப் போனாலும் இரண்டும் உயிர்த்தெழும்பும் நாளிலே ஒன்றுசேரும். தேகத்தை விட்டுப்பிரிந்த விசுவாசி இடம்பெயர்ந்து ஜீவிக்கிறான்.

#### வச. 15—26.

யோசேப்பின் விசுவாசத்தைப் பின்பற்றி நாமும் நம்முடைய அந்தியகாலத்தில் நம்முடைய எலும்புகளைக்குறித்து கட்டளை கொடுக்கிறவர்கள்போல நடந்துகொள்ளவேண்டும். உலகமாகிய எகிப்தில் நமது உயிரை விடும்போது நாம் நமது சகோதரரை நோக்கி நான் மரணமடையப்போகிறேன். ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து நீங்கள் இந்த தேசத்தைவிட்டு தாம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப் போகப்பண்ணுவார். ஆகையால் என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோய் கடைசி எக்காளந் தொனிக்கும்மட்டும் அதை மண்ணறைப் பெட்டியிலே வைத்துவையுங்கள் என்று சொல்லி சாங்களை மடக்கிக்கொண்டு நித்திரையடையவேண்டும். நாம் மரணநித்திரை அடையும்போது நமது ஆத்துமாவையுஞ் சரீரத்தையுங் கிறிஸ்துநாதர் கையிலே ஒப்புவிப்போமாக. நாம் அவரிடத்தில் ஒப்புக்கொடுப்பதை அவர் அந்தநாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார். நமது ஜீவனாகிய அவர் வெளிப்படும்போது நாமும் அவரோடே கூட ஜோதியாய் வெளிப்படுவோம்.



# அநுபந்தம் A.

## 1. வம்ச வரலாறு.

ஆதியாகமத்தைச் சற்று கவனமாய் வாசிக்கிறவனும் வம்ச வரலாற்றைப் பற்றிச் சொல்லியிருப்பதை இலகுவாய் அறிவான். இவ்வாகமத்தில் பத்து வம்ச வரலாறுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆதி. | 2. | 4. | முதல் | 4. | 25. | வானம் பூமியின் வரலாறு. |
| ,, | 5. | 1. | ,, | 6. | 8. | ஆதாமின் வரலாறு. |
| ,, | 6. | 9. | ,, | 9. | 29. | நோவாவின் வரலாறு. |
| ,, | 10. | 1. | ,, | 11. | 9. | நோவாவின் குமாரருடைய வரலாறு. |
| ,, | 11. | 10. | ,, | 11. | 26. | சேமின் வரலாறு. |
| ,, | 11. | 27. | ,, | 25. | 11. | தேராகின் வரலாறு. |
| ,, | 25. | 12. | ,, | 25. | 18. | இஸ்மவேலின் வரலாறு. |
| ,, | 25. | 19. | ,, | 35. | 29. | ஈசாக்கின் வரலாறு. |
| ,, | 36. | 1. | ,, | 37. | 1. | ஏசாவின் வரலாறு. |
| ,, | 37. | 2. | ,, | 50. | 26. | யாக்கோபின் வரலாறு. |

மூற்பிதாக்கள் வாசிக்க எழுதப் பழகியிருந்தால் அவர்கள் அப்போதப்போதுள்ள சரித்திரத்தை எழுதியிருக்கலாம். ஏனோக்கு, நோவா, சேம், ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு என்பவர்கள் விசேஷித்த வரம்பெற்றவர்களாயும் இருந்தார்கள். தங்கள் காலத்துச் சரித்திரம் மங்கிப்போகாதபடி அவர்கள் எழுதிவைத்திருக்கலாம். அல்லவென்றால், தங்கள் பூர்வோத்தர விசேஷங்களை அவர்கள் புத்திரபௌத்திரர்களுக்கு வாயினால் சொல்ல, அவைகள் பாரம்பரையாய் மோசேயின் காலத்துக்கு வந்திருக்கலாம். சிருஷ்டிப்பின் சரித்திரமாத்திரம் வெளிப்படுத்தலால் அருளப்பட்டிருக்கவேண்டியது. மோசே தனக்கு முன்னுள்ள சாதனங்களை வைத்துக்கொண்டு இந்த ஆகமத்தை எழுதினான் என்று எண்ணத்தக்கதாயிருக்கிறது.

## 2. ஆதாம் பரதீசில் இருந்த காலம்.

சிலர் ஆதாமும் ஏவாளும் பாவமில்லாத நிலைமையில் ஆறுமணி நேரம்மாத்திரம் இருந்தார்கள் என்றும், வேறுசிலர் இருபத்துநாலுமணி நேரம் இருந்தார்கள் என்றும் சொல்வதுண்டு.

இரண்டாம் அதிகாரம் ஆறாம் வாக்கியத்தில் மூடுபனி பூமியையெல்லாம் நனைத்தது என்று பார்க்கிறோம். மூடுபனியானது ஆறுகள் ஜலப்பிரவாகமாய் ஓடும்படி செய்யக்கூடாதது. திகிரிஸ், ஐப்பிராத்து நதிகள் ஏதேன் வழியாய் ஓடினகாலையில் மூடுபனியுஞ், பாயக்காரத்தில் மழையும் பெய்வதினும் நீரோடைகள் உண்டாகிப் பின்பு ஆறுகளாக விரியும்படி எவ்வளவோகாலஞ் செல்லவேண்டியது.

கர்த்தர் ஏதேன் தோட்டத்தை உண்டாக்கி விருக்ஷங்களை முளைக்கப்பண்ணினார் (ஆதி. 2: 9.). ஆதாம் அந்தத் தோட்டத்தைப் பண்படுத்தவுங் காக்கவும் அதிலே வைக்கப்பட்டான் (ஆதி. 2: 15.). ஆதாம் பரதீசில் சில மணிநேரம் மாத்திரம் வைக்கப்பட்டிருந்தால் தேவஆவியின் ஏவுதலால் இந்த ஆகமத்தை எழுதினவன் இப்படியெல்லாஞ் சொல்லியிருக்கமாட்டான். ஆதாம் மிருகங்களுக்குப் பேரிட்டான். அந்தந்த மிருகங்களின் தன்மையை அநுபோகத்தால் அறிய கொஞ்சக்காலமாவது செல்லவேண்டுமே. ஏவாள் சர்ப்பத்தின் தன்மையை அறிந்தவள்போல பேசினாள். ஆகவே அவர்கள் இருவரும் பாவஞ்செய்யுமுன் சிலகாலம் பரதீசிலிருந்திருக்கவேண்டியது.

## 3. ஏகோவாவின் தூதனானவர். (ஆதி. 16.)

ஏகோவாவின் தூதனானவரைப்பற்றி முதலாவதாக 16-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அங்கே ஏகோவாவும் ஏகோவாவின் தூதனானவரும் ஒருவர்தான் என்று காணப்படும். தேவன் தம்முடைய தன்மையில் மனிதருடைய புத்திக்கு எட்டாதவராயிருக்கிறார். ஒருவனும் ஒருக்காலுந் தேவனைக் கண்டதில்லை (யோவா. 6: 46.). அவர் அதரிசனமான ராஜா, ஒருவருஞ் சேரக்கூடாத ஒளியில் வாசஞ்செய்கிறவர் (1 தீமோ. 1: 17; 6: 16.). கிறிஸ்துவானவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமாய்மாத்திரம் இராமல், அவருடைய தன்மையின் சொரூபமாயும் இருக்கிறார் (எபி. 1: 3.). தேவன் அகோசரமானவராயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் அவர் தம்மைத் தெரியக்காட்டியிருக்கிறார். அதினால் அவரிடத்தில் நாம் அன்புகூரவும் அவரை வணங்கவுஞ் செய்கிறோம்.

சில புருஷருக்குக் காணப்பட்டது தேவதூதன், பேசினது தேவன் என்பார்கள். ஆனால் வேதவாக்கியங்களைக் கூர்மையாய் ஆராய்கையில் அப்படித் தோன்றாது. மம்ரேயில் மூன்று புருஷர் ஆபிரகாமுக்குக் காணப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் ஏகோவாவானவர் என்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. ஆதி. 18: 1ல் கர்த்தர் அவனுக்குத் தரிசனமானார் என்றும் 13, 17, 20, 22-ம் வசனங்களில் அந்தத் தூதனானவர் கர்த்தர் என்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறார். ஆபிரகாம் சோதோமியருக்காக அவரை நோக்கிப் பரிந்து விண்ணப்பஞ்செய்து மிருக்கிறான். ஆகார் (ஆதி. 16: 13.) தன்னுடனே பேசினவர் கர்த்தர் என்றும் அவருக்கு "நீர் என்னைக் காண்கிற தேவன்" என்றும் பேரிட்டாள். யாக்கோபு ஒரு புருஷனோடே போராடினபோது தான் தேவனை முகமுகமாய்க் கண்டேன் என்று சொல்லி அந்த இடத்துக்குப் பெனியேல் என்று பேரிட்டான் (ஆதி. 32: 30.). மனோவா தன் மனைவியைப்பார்த்து "நாம் தேவனைக் கண்





டோம்" என்று சொல்லியிருக்கிறான் (நியா. 13: 22.). ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கை பலியாகச் செலுத்தப் போனபோது ஏகோவாவின் தூதனானவர் வானத்திலிருந்து அவனைக் கூப்பிட்டார். யோசுவாவுக்கு அவர் மனிதசாயலாகக் காணப்பட்டு தம்மைக் கர்த்தருடைய சேனையின் அதிபதி என்று சொன்னார். (யோசு. 5: 13–15.)

பழைய ஏற்பாட்டின்காலத்தில் தேவன் தமது சித்தத்தை தேவதூதர் மூலமாய் வெளிப்படுத்தினாலுஞ் சில தருணங்களில் விசேஷித்தவகையாய் அவரே வெளிப்படையாக தமது சித்தத்தை நேராக அருளியும் இருக்கிறார். தேவனுடைய வெளிப்படுத்தல்களெல்லாம் குமாரன் மூலமாய்க் கொடுக்கப்பட்டிருப்பதால் (யோவா. 1: 18.), ஏகோவாவின் தூதனானவர் உடம்படிக்கையின் தூதனாகிய (மல். 3: 1.) கிறிஸ்துவானவரே என்று தைரியமாய்ச் சொல்லலாம். அவர் காணப்பட்ட தன்மை இன்னபடி என்பதை நாம் ஆராயப்போவது துணிகரமாயிருக்கும். சடப்பொருளும் ஆவிப்பொருளும் ஒன்றாய்ச் சேர்ந்திருப்பது நமது புத்திக்கு எட்டாத இரகசியமாயிருக்கிறதே. தேவன் அந்த ஆவியாயிருக்கையில் அந்த ரகசியம் எத்தனைக்கு அதிகம்.

## 4. யாக்கோபின் ஜீவிய சரித்திர அட்டவணை.

யாக்கோபு ஆரானுக்குப் புறப்பட்டுப் போனபோது அவனுக்கு 77 வயது என்று பூர்வகிறிஸ்தவ வியாக்கியானிகள் சொல்லுகிறார்கள். ஆனால் வேதாகம சரித்திரங்களை ஆராய்கையில் அவர்கள் பிசகியிருக்கிறார்கள் என்று தெரிய வரும். சில கணிதத்தைப்பற்றி எவ்வளவுஞ் சமுசயமில்லாததால் அப்படிப்பட்டவைகளை வைத்துக்கொண்டு காரியங்களைக் கவனித்தால் அதைச் சரிப்படுத்தலாம்.

யாக்கோபு எகிப்துக்குப் போனபோது 130 வயசாயிருந்தான் (ஆதி. 47: 9.). யோசேப்பு பார்வோன் முன்பாக நின்றபோது 30 வயசு (ஆதி. 41: 46.). அவன் அதிகாரத்துக்கு வந்த முதல் ஏழுவருஷங்களுஞ் செழிப்புள்ளகாலம். பஞ்சம் வந்த இரண்டு வருஷங்களுக்குப்பின்பு அவன் தன்னை தன் சகோதரருக்கு வெளிப்படுத்தினான். அப்படியாகில் யாக்கோபு எகிப்துக்குப் போனபோது யோசேப்புக்கு வயது 40. அவன் 17 வயதில் எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டான் (ஆதி. 37: 2.). லாபான் யாக்கோபுக்குப் புள்ளி ஆடுகளைச் சம்பளமாக ஒப்பந்தஞ் செய்யுமுன் யோசேப்பு பிறந்தான் (ஆதி. 30: 25.). யாக்கோபு சம்பளத்துக்காக ஆறுவருஷம் உழைத்தான் (ஆதி. 31: 41.). ஆகவே யாக்கோபு கானானுக்குத் திரும்பினபோது யோசேப்புக்கு ஏழுவயது. இதைப் பார்க்கையில் யோசேப்பு பிறக்கையில் யாக்கோபு 91 வயசாயிருந்தான். சாதாரண காலக்கணக்கின்படி யாக்கோபு இருபது வருஷம் ஆரானிலிருந்தான். இதிலிருந்து அவன் விவாகத்துக்கு முந்தி லாபானுக்கு ஊழியஞ்செய்த ஏழு வருஷத்தையும், யோசேப்பின் வயது ஏழையும் ஆக பதினாலு வருஷங்களையும் கழித்தால் மீதி ஆறுவருஷமிருக்கும். இந்த ஆறுவருஷங்களுக்குள் லேயாள் முதல் நாலு பிள்ளைகளையும் பின்பு பேறு நின்றுபோய் அதற்கப்பால் இரண்டு

பிள்ளைகளையும் பெற்றிருக்க வேண்டியதாகும். இது கூடிய காரியமல்ல. மேலும் அதி. 30: 14. பார்க்கையில் லேயாள் தன் ஐந்தாம் ஆறாங் குமாரனைப் பெறுமுன் அவன் மூத்தமகனாகிய ரூபன் வயல்வெளியிலே போகவுந் தூதாயீம் கனிகளை கண்டெடுக்கவுந்தக்க வாலிபனாயிருந்தான் என்று தெரிகிறது. சாதாரணக் கணக்கின்படி ரூபனுக்கு அப்போது மூன்று அல்லது நாலு வயது மாத்திரம் இருக்கக்கூடியது. இப்படிப்பட்ட பையன் வயல்வெளியில் போகவுங் கனிகளைத்தேடி எடுக்கவுங் கூடிய காரியமல்லவே. பின்னும் யூதஸ்திரீகள் இரண்டுவருஷம் பிள்ளைகளுக்குப் பால்கொடுப்பதும் வழக்கமாயிருந்தது.

தீனாள் லேயாளுடைய ஏழாவது பிள்ளை. யாக்கோபு ஆரானில் இருபது வருஷம்மாத்திரம் இருந்தால், அவன் கானானுக்குத் திரும்பினபோது தீனாளுக்கு இரண்டு அல்லது மூன்று வயதுமாத்திரம் இருக்கும். யாக்கோபு கானானுக்கு வந்ததற்கும் யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டதற்கும் இடையில் பத்துவருஷங்களிருக்கின்றன. இந்தக் காலத்தில் யாக்கோபு முதலாவது சீகேமிலும் பின்பு பெத்தேலிலுங் கடைசியாக எபிரோனிலுங் குடியிருந்தான். அவன் சீகேமில் இருந்தபோது தீனாள் விவாகப் பருவமுள்ளவளாயிருந்ததாகத் தெரிகிறது. அப்போது தீனாளுடைய சகோதரரான சிமியோனும் லேவியுஞ் சாதாரணக் கணக்கின்படி பத்துப் பதினொரு வயதுள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த வயதுள்ள பாலியர் சீகேம் பட்டணத்தாரை அழிக்கக்கூடியதாயிருக்குமா? (அதி. 34: 25.) அவர்களுடைய கொலைபாதகத்துக்காக யாக்கோபு அவர்களோடே கண்டிப்பாய்ப் பேசினபோது அவர்கள் கோபதாபமுள்ளவர்களாய் முரண்டுத்தனமான பதில் சொன்னார்கள் (அதி. 34: 13.). இவைகளைப் பார்த்தால் யாக்கோபின் குமாரர் மனித பிராயமுள்ளவர்களாயிருந்தார்கள் எனத் தெரியவருகிறது. சங்கார காரியத்தையுந் தாங்களே முன்னின்று நடப்பித்தார்கள்.

மேலும் யாக்கோபு ஆரானை விட்டுப் புறப்பட்டபோது யோசேப்புக்கு வயது ஏழு. யாக்கோபு அந்த இடத்துக்குப் போன எட்டாம் வருஷத்தில் ரூபன் பிறந்தான். அப்படியானால் சாதாரண கணக்கின்படி ரூபன், யோசேப்புக்கு ஐந்து வயதுக்குமாத்திரம் மூத்தவனாயிருந்தான் என்று சொல்லவேண்டும். ரூபன் (அதி. 37: 30.) யோசேப்பை "இளைஞன்" என்று சொல்லியிருக்கிறான். மேலும் லேயாளுடைய நாலாங் குமாரன் யூதா, சாதாரண கணக்கின்படி யோசேப்புக்கு நாலுவயதுக்குமாத்திரம் மூத்திருக்கவேண்டும். அவன் திம்னாத்துக்குப் போய் விவாகஞ்செய்து மூன்று குமாரரைப் பெற்றான் (அதி. 38: 3–5.). மூத்தகுமாரன் ஏர் என்பவனுக்கே யூதா அவனுக்கு தாமார் என்ற ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்வித்தான். அவன் பொல்லாதவனாயிருந்ததால் கர்த்தர் அவனை அழித்துப்போட்டார். தாமார் இரண்டாம் மகனுக்குக் கொடுக்கப்பட்டாள், அவனும் அகால மரணமாய் மரித்தான். அப்புறம் யூதா தாமாரை அவள் தகப்பன் வீட்டுக்கு அனுப்பிவிட்டான். அவள் தகப்பன் வீட்டிலிருக்கையில் யூதாவின் மனைவி மரித்துப்போனாள். அநேக நாட்கள் நிறைவேறினபின்பு, தாமார் யூதாவினால் இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள். யோசேப்பு விற்கப்பட்டதற்கும் இஸ்ரவேலர் எகிப்துக்குப் போனதற்கும் இடையே இருபத்துமூன்று வருஷங்கள் இருக்கின்றன. யோசேப்பு விற்கப்பட்டபோது யூதா இருபத்தொருவயதாய்மாத்திரம் இருந்தால் மேற்படி காரியங்கள் எல்லாம் நிறைவேற காலம் போதாது. யாக்கோபு ஆரானிலி





ருந்து கானானுக்கு வந்த துவக்கத்தில் கலியாணஞ் செய்திருக்கவேண்டும். ஆனால் சாதாரண கணக்கின்படி அவன் அப்போது பதினொருவயசுயிருக்க வேண்டியது. ஆதலால் சாதாரண கணக்குப் பிசகு என்றறியலாம்.

ஆகவே யாக்கோபு பதான்அராமில் இருபது வருஷத்துக்கு அதிகமாயிருந்திருக்கவேண்டும். அதி. 31: 38, 41. வாக்கியங்களை வேறேவிதமாய் மூலத்திலிருந்து திருப்பினால் இந்த விகற்பங்கள் நிவிர்த்தியாகும். தமிழ் திருப்புதலில் இருபது வருஷங்களான இரண்டு காலங்களும் ஒன்றாகக் காட்டப்பட்டிருக்கிறது. இரண்டாவது சொல்லிய இருபதுவருஷம் முதலாவது சொல்லிய இருபது வருஷத்துக்கு வியாத்திபோல் காணப்படுகிறது. ஆனால் எபிரெயுவில் இரண்டு காலங்களையும் பிரத்தியேகமானதாய் வித்தியாசப்படுத்தியிருக்கிறது. 38-ம் வசனத்தை "இந்த இருபதுவருஷகாலமாய் நான் உம்மிடத்திலிருந்தேன்." உம்முடைய செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் சினையழியவில்லை என்றும், 41-ம் வசனத்தை "இந்த இருபதுவருஷக்காலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்" என்றும் திருப்பியிருக்கின்றன. 38-ம் வசனத்தில் இந்த என்பதற்குரிய மூலவார்த்தை "ஒரு" என்று திருப்பலாம். அதாவது ஒரு இருபதுவருஷக்காலமாய் என்றிருக்கும். 41-ம் வசனத்தில் இந்த என்பதற்குரிய மூலவார்த்தை "மற்ற" என்று திருப்பலாம். அதாவது மற்ற இருபதுவருஷக்காலமாய் என்றிருக்கும். அல்லது 38-ம் வசனத்தில் "இந்த" என்ற வார்த்தையை வைத்துக்கொண்டு 41-ம் வசனத்தில் வருகிற இந்த என்பதற்குப் பதிலாக "அந்த" என்று திருப்பவேண்டும்.

யாக்கோபு முதலாவது பதினாலுவருஷந் தன் மனைவிகளுக்காக வேலை செய்து பின்பு இருபதுவருஷம் ஆடை, போஜனத்துக்காக ஊழியத்தை நடப்பித்து அப்பால் ஆறுவருஷஞ் சம்பளத்துக்காகச் சேவித்தான் என்று டாக்டர் கென்னிகட் என்பவர் சொல்லுவது யதார்த்தமாயிருக்கிறது என்றறியலாம்.

## 5. யாக்கோபின் வயது.

வருஷம்.

0. யாக்கோபும் ஏசாவும் பிறந்தது.

40. ஏசா ஏத்தியரான இரண்டு மனைவிகளை விவாகம் பண்ணினது. (அதி. 26: 34.)

57. யாக்கோபு பதான்அராமுக்குப் போனது.

58. ஏசா, இஸ்மவேலின் குமாரத்தியை விவாகம் பண்ணினது. (அதி. 28: 9.)

63. இஸ்மவேல் 137 வயதுள்ளவனாய் மரித்தது. (அதி. 25: 17.)

64. யாக்கோபு, லேயாளை விவாகம் செய்தது. (அதி. 29: 20, 21.) ரூபன், சிமியோன், லேவி, யூதா என்பவர்கள் பிறந்தது. தாண், நப்தலி பிறந்தது.

வருஷம்.

71. பதினாலுவருஷ வேலையின் முடிவு.

72. (ஆதி. 31: 38.) காட்டியபடியான இருபது வருஷத் துவக்கம். காத், ஆசேர், இசக்கார், செபுலோன், தீனாள் பிறந்தது.

91. யோசேப்பு பிறந்தது.

92. உடம்படிக்கை செய்யப்பட்டது.

97. பதான்அராமைவிட்டு ஓடிப்போனது.

98. பென்யமீன் பிறந்தது.

108. யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டது. (ஆதி. 37: 2.)

120. ஈசாக்கு மரித்தது. (ஆதி. 35: 28.)

121. யோசேப்பு முப்பது வயதில் எகிப்துக்கு மந்திரியானது.

130. யாக்கோபு எகிப்துக்குப் போனது.

147. யாக்கோபு எகிப்தில் மரித்தது.

தாணும், நப்தலியும் யாக்கோபு கலியாணம்பண்ணின ஏழு வருஷங்களுக்குள் பிறந்திருக்கமாட்டார்கள்; ராகேல் தான் மலடியாயிருப்பதையும், தன் சகோதரி பிள்ளைத்தாய்ச்சியாயிருப்பதையும் கண்டு மனமடிவுள்ளவளாகி பில்காளை மறுமனையாட்டியாகக் கொடுத்தது, யாக்கோபு இருபது வருஷம் லாபானுக்காக உழைத்தபோது சம்பவித்திருக்கலாம்.

பென்யமீன் யாக்கோபு பதான்அராமிலிருந்து திரும்பின முதல் வருஷத்தில் பிறந்திருக்கமாட்டான். யாக்கோபு ஏசாவைச் சந்தித்தபின்பு சுக்கோத்துக்குப் போய், அங்கேயிருந்து சீகேமுக்குச் சென்று அங்கே ஒரு நிலத்தை வாங்கினான். சீகேமிலிருந்து யாக்கோபு பெத்தேலுக்குப் போனான். அதிலிருந்து தெற்கே பிரயாணம்பண்ணி தகப்பன் வீட்டுக்கு நேராகச் சென்றான். அவன் பெத்லெகேமுக்குச் சமீபமாய் வந்தபோது பென்யமீன் பிறந்தான்.



# அநுபந்தம் B.

பரிசுத்த வேதாகமம் நமக்கு தேவனால் அருளப்பட்ட வெளிப்படுத்தல். அது தேவனையும் மனிதனையும் இரட்சிப்பையும் விளக்கிக் காட்டுகிற சிறந்த தன்மையுள்ளது. ஆதலால் அதை வாசிக்கையில் தேவனைப்பற்றிய விஷயத்தில் அவருடைய தன்மையையுஞ், சம்பூரண இலட்சணங்களையும், ஆளுகையையும், மனிதனைப்பற்றிய விஷயத்தில் அவன் நிலைமையையுங், கடமைகளையுஞ், சலாக்கியங்களையும், முடிவையும், இரட்சிப்பைப்பற்றிய விஷயத்தில் திரித்துவத்தையும், அவருடைய உத்தியோகங்கள், கிரியைகளைப்பற்றிய கருத்தை செலுத்தவேண்டும். இந்த மூன்று காரியங்களையாவது அல்லது அவைகளில் ஒன்றையாவது ஒவ்வொரு அதிகாரத்திலுங் காணலாம். ஆதியாகமத்தை வாசிக்கையில் தேவன் மனிதனைப் பரிசுத்தனாக உண்டாக்கி, அவன் பலுகிப்பெருகித் தம்மைப்பற்றிய அறிவிலே அவன் வளர்ந்தோங்க ஆசீர்வாதம் அருளினார். ஆனால் அந்த நோக்கம் பாவத்தினால் தடைபட்டுப்போயிற்று; அவன் உடன்படிக்கையை மீறி, பாவத்திற்குள்ளானான்; அக்கிரமம் உலகத்தில் பெருகிற்று. அதால் தேவன் தமது நீதியை விளக்கி, ஜலப்பிரளயத்தைப் பூமியின்மேல் வரவழைத்து, அதை அழித்தார். நீதிமானாகிய நோவாவும் அவன் குடும்பத்தார் எட்டுப்பேருமாத்திரம் இரட்சிக்கப்பட்டார்கள்.

தேவன் நோவாவோடே சகலருக்குமுரிய பொதுவான உடன்படிக்கையை விசேஷித்தவகையாய்ச் செய்தருளி, தமது ஆசீர்வாதத்தைத் திரும்பவும் புதுப்பித்தார். ஆனால் மனிதன் மறுபடியும் அக்கிரமத்தில் வளர்ந்து பாபேலின் கோபுரத்தைக் கட்டி தேவநோக்கத்தை அவமாக்கப்பார்த்தான்.

அப்பால் தேவன் உலகத்தாருக்குப் பொதுவாகத் தமது ஆசீர்வாதத்தை அருளாமல், தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சாதியாருக்கு அதை அருளச் சித்தமாகி, ஆபிரகாமைத் தெரிந்தெடுத்து அவனோடே தமது உடன்படிக்கையை ஏற்படுத்தினார். ஆபிரகாமின் விசுவாசத்தினால் அது அவனுக்கு உறுதிப்படுத்தப்பட்டது (ஆதி. 22: 16–18; 26: 1–5.). இந்த உடன்படிக்கையில் ஆபிரகாம் மேசியாவைப்பற்றிய விருத்தாந்தத்தைக் கண்டறிந்தான். (அப். 3: 25, 26. கலா. 3. 8.). இந்த வாக்குத்தத்தம் அடிக்கடி கொடுக்கப்பட்டது. விசுவாசத்தினாலே நீதிமானாகிற காரியத்தை அது சுட்டிக்காட்டுகிறது. மேசியா வருவாரென்ற எண்ணத்தினாலே, முதற்பிறப்புரிமையின் அருமையையும் தலைமுறை அட்டவணை பாதுகாக்கப்பட்ட நோக்கத்தையும் அறியலாம்.

# மேசியாவின் வருகை கிரியைகளைக் காட்டிய சம்பவங்களும் சாதாரண சங்கதிகளும்.

## I. உலக ஆரம்பம்.

| காலமும் இடமும். | | |
|---|---|---|
| | சிருஷ்டிப்பு | ஆதி. 1, 2: 4—7. |
| | ஓய்வுநாள் நியமம் | 2: 1—3. |
| | ஆதாம் ஏவாள் என்பவர்கள் சிருஷ்டிக்கப்பட்டதைக்குறித்து முதலாம் அதிகாரத்தில் சுருக்கிச் சொல்லியிருப்பதை விவரித்து திரும்பக் கூறியது | 2: 8—25. |

## II. ஜலப்பிரளயத்துக்கு முந்தின உலக சரித்திரம்.

| | | |
|---|---|---|
| ஏதேன். | மனிதன் பாவத்தில் விழுந்தது | 3: 1—13. |
| | இரட்சகனைக்குறித்து முதல் வாக்குத்தத்தம். ஆதி மனிதர் ஏதேனை விட்டுத் துரத்தப்பட்டது | 3: 14—24. |
| ஏதேனுக்குக் கிழக்கில். | காயீன் ஆபேல் என்பவர்கள் பிறந்தது | 4: 1, 2. |
| | எழுதப்பட்டிருக்கிற முதல் பலி. ஆபேலின் பலி அங்கிகரிக்கப்பட்டது | 4: 3—7. |
| | காயீனுடைய பாதகம், அவனுக்குண்டான சாபம் | 4: 8—15. |
| | காயீன் ஏனோக்கைக் கட்டினது, அவன் சந்ததியார், லாமேக்கின் வசனிப்பு | 4: 16—21. |
| | சேத்து, ஏனோஸ் என்பவர்கள் பிறந்தது. சபை உலகத்தாரினின்று பிரத்தியேகமானது | 4: 25—26. |
| | மேசியாவின் வம்ச வரிசை ஆதாம்முதல் நோவா வரைக்கும் | 5. அதி. |
| | உலகத்தில் அக்கிரமம் வளர்ந்தது. 120 வருஷங்களுக்குப் பின்பு தேவன் அதை அழிக்கத் தீர்மானித்தது. (2 பேது. 2. 5.) | 6. அதி. |
| | நோவாவோடே உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. தேவ உத்தரவின்படி நோவா பேழையை உண்டுபண்ணினது | 6: 18. |
| | நோவா பேழைக்குட் பிரவேசித்தது, ஜலப்பிரளயம் வந்தது | 7. அதி. |

## III. ஜலப்பிரளயத்துக்குப் பின்னுள்ள உலகப் பொதுச் சரித்திரம்.

| | | |
|---|---|---|
| | நோவா பேழையைவிட்டு வெளியே வந்தது | 8. அதி. |
| அர்மீனியா. | தேவன் நோவாவோடே திரும்பவும் உடன்படிக்கை செய்தது | 9: 1—17. |





| | | |
|---|---|---|
| | நோவாவின் குமாரர், அவர்களைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் | 9: 18—27. |
| | பாபேல் கட்டப்பட்டது, பாஷை தாறுமாறானது, சனங்கள் சிதறடிக்கப்பட்டது | 11: 1—9. |
| | நோவாவின் குமாரருடையதலைமுறைஅட்டவணை, நிம்ரோத்து பாபிலோன் அல்லது அசீரிய இராச்சியத்தை ஸ்தாபித்தது | 10. அதி. |
| | மேசியாவின் வம்சவரிசை, சேமிலிருந்து தேராகுவரைக்கும் | 11: 10—26. |
| | நோவாவின் மரணம் | 9: 28, 29. |
| 1996. ஊர். | ஆபிராம் பிறந்தது, சாராயை விவாகஞ் செய்தது, ஊர் என்ற தேசத்தையும், விக்கிரகாராதனைக்காரரான தன் இனசனத்தையும் விட்டுப்போனது, தேராகின் மரணம். (யோசு. 24: 2.) | 11: 27—32. |

## IV முற்பிதாக்களுடைய சரித்திரம்.

| | | |
|---|---|---|
| 1921. | ஆபிராம் தேவ உத்தரவின்பேரில் சாராயையும் லோத்தையுங் கூட்டிக்கொண்டு ஆரானைவிட்டது | 12: 1—9. |
| சீகேம். | ஆபிராமுக்குப் பெரிதான ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தஞ் செய்யப்பட்டது. (அப். 3: 25. ரோ. 4. அதி. கலா. 3: 16.) | 12: 1-9. |
| 1920. | ஆபிராம் எகிப்துக்குப் போனது, அங்கே மாயம் பண்ணினது | 12: 10—20. |
| 1918. | ஆபிராம் கானானுக்குத் திரும்பினது, லோத்து சோதோமுக்குப் போனது | 13: 1—13. |
| 1917. | வாக்குத்தத்தங்கள் புதுப்பிக்கப்பட்டது, மம்ரேக்குப்போனது | 13: 14—18. |
| எபிரோன். 1913. | கெதர்லாகோமேர், லோத்து சிறையாக்கப்பட்டதும் மீட்கப்பட்டதும் | 14. 1—17. |
| | மெல்கிசேதேக்கு ஆபிராமை ஆசீர்வதித்தது | 14. 17-21. |
| 1912. | ஆபிராமோடே தேவன் உடன்படிக்கை செய்தது | 15. அதி. |
| எபிரோன். | ஆகார், இஸ்மவேல் பிறந்தது | 16. அதி. |
| 1910. | உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. நாமங்கள் மாற்றப்பட்டது [illegible] சேதன ஏற்பாடு | 17. அதி. |
| 1898. | ஆபிரகாம் தேவதூதர்களை உபசரித்தது, அவர்களில் ஒருவர் உடம்படிக்கையின் தூதனானவர், சோதோமின் நாசம், லோத்தின் மனைவி [illegible] முறைகேடான பாவம் | 18. அதி; 19: 1—36 |
| 1897. கேரார். | ஆபிரகாம் எபிரோனைவிட்டுப் போனது, அபிமெலேக்கிடத்தில் மாயம்பண்ணினது | 20. அதி. |

| | | |
|---|---|---|
| | மோவாபும் பென்அம்மியும் பிறந்தது | 19: 37, 38. |
| 1896. | ஈசாக்கு பிறந்தது, இஸ்மவேல் அனுப்பிவிடப்பட்டது, அபிமெலேக்கோடே உடன்படிக்கை | 21: 1—34. |
| மோரியா. | ஆபிரகாமுக்குண்டான சோதனை | 22: 1—19. |
| மக்பேலா. | சாராளின் மரணமும், அடக்கமும் | 23. அதி. |
| எபிரோன். | நாகோரின் குடும்ப வரலாறு | 22: 20—24. |
| 1856. | ஆபிரகாம் ஆராமுக்குத் தன் வேலைக்காரனை அனுப்பினது, லாபான் அவனை அங்கீகரித்தது, ஈசாக்கின் விவாகம் | 24. அதி. |
| பெயெர்செபா. 1850. | ஆபிரகாம் கேத்தூராளை விவாகஞ் செய்தது, அவனுக்குப் பிறந்த பிள்ளைகள் | 25: 1—6. |
| 1836. லகாய்ரோயீ. | ஏசா யாக்கோபு என்பவர்கள் பிறந்தது, அவர்கள் குணகுணங்கள் | 25: 1—28. |
| 1821. பெயெர்செபா | ஆபிரகாமின் மரணம், ஈசாக்கும் இஸ்மவேலும் அவனை அடக்கம்பண்ணினது | 25: 7—11. |
| 1804. | ஏசா தன் முதற்பிறப்புச் சுதந்தரத்தை விற்றது | 25: 29—35. |
| லகாய்ரோயீ. 1804. | கேராரில் ஈசாக்குக்கு உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது | 26: 1—5. |
| 1804. | ஈசாக்கு மாயம்பண்ணினது, அவன் அபிமெலேக்கோடே உடன்படிக்கைசெய்தது | 26: 6—33. |
| பெயெர்செபா. 1796. | ஏசா ஏத்தியரான இரண்டு ஸ்திரீகளை விவாகஞ் செய்தது | 26: 34, 35. |
| 1773. | இஸ்மவேலின் மரணம், அவன் சந்ததியாரின் வரலாறு | 25: 12—18. |
| 1760. | யாக்கோபு தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டது, அவன் ஏசாவைவிட்டு ஓடிப்போனது | 27. அதி; 28: 1—5 |
| பெயெர்செபா. 1760. | லூஸ் என்ற இடத்தில் யாக்கோபுக்கு உண்டான தரிசனம், "வாக்குத்தத்தங்கள்." அவன் லாபானோடே வாசம்பண்ணினது | 28. 10-22; 29: 1-1 |
| 1760. ஆரான். | ஏசா இஸ்மவேலின் குமாரத்தியை விவாகம்பண்ணினது | 28: 6—9. |
| 1753. | யாக்கோபு லேயாளையும் ராகேலையும் விவாகஞ் செய்தது | 29: 15—30. |
| 1752-1745. | யாக்கோபின் பிள்ளைகள் லேயாளால்; ரூபன், சிமியோன், லேவி, யூதா. பில்காளால்; தாண், நப்தலி. சில்பாளால்; காத், ஆசேர். லேயாளால்; இசக்கார், செபுலோன், தீனாள். ராகேலால்; யோசேப்பு | 29: 31—35. |





| | | |
|---|---|---|
| 1745. | யாக்கோபு லாபானோடே செய்த ஒப்பந்தம், அவன் ஐசுவரியவானானது | 30: 25—43. |
| 1739. கலெயெத். | யாக்கோபு கானானுக்குத் திரும்பினது, லாபான் அவனைப் பின்தொடர்ந்தது, அவனோடே உடன்படிக்கை | 31. அதி. |
| 1739. | மகனாயீமில் யாக்கோபுக்கு உண்டான தரிசனம், பெனியேலில் அவன் தூதனோடே போராடினது, ஏசாவோடே ஒப்புரவானது, சுக்கோத்தில் குடியிருந்தது | 32. அதி; 33: 1—17. |
| 1736. | யாக்கோபு சீகேமுக்கு வந்தது | 33: 18—20. |
| | யூதாவுக்குப் பிள்ளைகள் பிறந்தது | 38: 1—5. |
| சீகேம். 1732. | சீகேமால் தீனாள் கற்பழிக்கப்பட்டது, சிமியோனும் லேவியுஞ் சீகேமியரைக் கொன்றது | 34. அதி. |
| பெத்தேல். | யாக்கோபு தன்வீட்டாரைச் சுத்திகரித்துப் பெத்தேலுக்குப் போனது, வாக்குத்தத்தங்கள் அவனுக்குப் புதுப்பிக்கப்பட்டது, அவன் பேர் இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டது | 35: 1—15. |
| | பென்யமீன் பிறக்கையில் ராகேல் மரித்தது | 35: 16—20. |
| 1729. | ரூபனின் பாவம், யாக்கோபு ஈசாக்கோடே வாசம்பண்ணினது | 35: 21—27. |
| 1729. | ஏசாவின் வம்ச வரலாறு | 36. அதி. |
| 1728. தோத்தான். | யோசேப்பின் இரண்டு சொப்பனங்கள், அவன் தன் சகோதரரால் பகைக்கப்பட்டது, இஸ்மவேலர் அவனை கிரயத்துக்கு வாங்கி எகிப்திலுள்ள போத்திப்பாருக்கு விற்றது | 37. அதி. |
| 1728. திம்னாத். | ஏர், ஓனான் என்பவர்கள் அழிக்கப்பட்டது, யூதா தாமார் என்பவர்களுடைய முறைகேடான பாவம், மேசியாவின் முற்பிதாவாகிய பாரேஸ் பிறந்தது | 38: 6—30. |
| 1718. எகிப்து. | யோசேப்பு முன்னுக்கு வந்தது, அவனுக்குண்டான சோதனை, பொய்யாய் குற்றம் சாட்டப்பட்டுச் சிறைச்சாலையில் போடப்பட்டது | 39. அதி. |
| 1718. | பார்வோனின் சுயம்பாகியும் பானபாத்திரக்காரனுஞ் சிறைச்சாலையில் போடப்பட்டது, யோசேப்பு அவர்கள் சொப்பனங்களுக்கு வியாக்கியானஞ் சொன்னது | 40. அதி. |
| 1716. | மம்ரேயில் ஈசாக்கு மரணமடைந்தது | 35: 28—29. |
| 1715. | யோசேப்பு பார்வோனுடைய சொப்பனங்களை வியார்த்திசெய்தது, அவன் உயர்த்தப்பட்டது | 41: 1—19. |
| 1712, 1711. | மனாசே எப்பிராயீம் என்பவர்கள் யோசேப்புக்குப் பிறந்தது | 41: 50—52. |

| | | |
|---|---|---|
| 1708. | எழுவருஷப் பஞ்சத்தின் துவக்கம் ......... | 41: 53—57. |
| 1707. | யோசேப்பின் 10 சகோதரர் தானியம் வாங்க வந்தது, சிமியோன் சிறையாக வைக்கப்பட்டது ......... | 42. அதி. |
| 1706. | அவர்கள் மறுபடியும் தானியம் வாங்க வந்தது, யோசேப்பு அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தினது, தகப்பன் வரும்படி செய்திருந்தது ......... | 43—45. அதி. |
| 1706. | யாக்கோபும் அவன் குடும்பத்தாரும் எகிப்துக்கு வந்தது, கோசேனில் அவர்கள் குடியேற்றப்பட்டது, யாக்கோபு பார்வோனைத் தரிசித்தது ......... | 46: 8-25; 47: 1-12. |
| 1704-1701. | யோசேப்பு எகிப்தியருக்குத் தானியம் விற்றதில் பார்வோனை ஐசுவரியவானாக்கினது ......... | 47: 13—26. |
| 1689. | யாக்கோபு, எப்பிராயீம் மனாசே என்பவர்களை ஆசீர்வதித்தது ......... | 47: 24-31; 48. அதி. |
| 1689. | யாக்கோபு தன் பிள்ளைகளையும் யூதாவையும் பற்றிச் சொன்ன தீர்க்கதரிசனங்கள். அவன் மரணம் ......... | 49. அதி. |
| மகபேலா. | யோசேப்பும் அவன் சகோதரரும் தங்கள் தகப்பனை அடக்கம்பண்ணினது ......... | 50: 1—13. |
| 16[illegible] | யோசேப்பு தன் சகோதரருக்குப் பட்சம் பாராட்டினது ......... | 50. 14—21. |
| 1635. | இஸ்ரவேல் கானானுக்குத் திரும்புவதைப்பற்றி யோசேப்பு முன்னுரைத்து தன் எலும்புகளை எடுத்துக்கொண்டுபோகும்படி கட்டளையிட்டது, அவன் மரணம் ......... | 50: 22—26. |

ARCHIVES LIBRARY
5590

# அநுபந்தம் C.

## ஆதியாகமத்தில் காட்டியபடி மேசியாவைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள்.

### I. மேசியா வரவேண்டியது.

ஆதி. 3: 15. அவர் (ஸ்திரீயின் வித்தானவர்) உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்.

நிறைவேறுதல். காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும், [illegible] தம்முடைய குமாரனை அனுப்பினார். கலா. 4: 5.

சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார். ரோ. 16: 20.

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். 1 யோவா. 3: 8.

### II. மேசியா வரவேண்டியகாலம்.

ஆதி. 49: 10. சமாதானக் கர்த்தர் வருமளவுஞ் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களைவிட்டு ஒழிவதுமில்லை.

மேசியா உலகமெங்குஞ் சமாதானம் இருக்கும் காலத்திலும், அவரைக் குறித்து எல்லாரும் எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் காலத்திலும் எருசலேம் திரும்பக் கட்டப்பட்டபின்பு இரண்டாம் தேவாலயம் நிற்கையிலும் வரவேண்டியது.

நிறைவேறுதல். மேசியா வந்தபோது செங்கோல் யூதாவைவிட்டு நீங்கியிருந்தது. யூதர் தங்கள் சுய அதிகாரிகளால் ஆளப்பட்டபோதிலும் ரோமருக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். ரோமருடைய குடிமதிப்புக்குள் அடங்கியிருந்து இராயனுக்குக் கப்பங்கட்டினார்கள். மரணாக்கினைசெய்யும் அதிகாரம் அவர்களுக்கில்லாதிருந்தது (லூக். 2: 1-5. மத். 22: 21. யோவா. 18: 31.). இயேசுவானவர் உலகத்தில் பிறந்தபோது ரோமருக்குள் யுத்தமில்லாதிருந்தது. சமாதானத்துக்கு அடையாளமாக ரோமபுரியிலிருந்த ஜேனசுடைய ஆலயம் அடைக்கப்பட்டிருந்தது. ரோம இராச்சியம் எங்கும் சமாதானம் நிலைபெற்றிருந்தது. யூதரும் புறச்சாதியாரும் ஒரு விசேஷித்தவருடைய வருகைக்காக எதிர்நோக்கியிருந்தார்கள் (மத். 2: 1-10. மாற். 15: 43. லூக். 2: 25, 38. யோவா. 1: 19-45.). இந்த வாக்கியங்கள் யூதருடைய எண்ணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. ரோமசரித்திரக்காரராகிய சுவீற்றோனியஸ், தாசித்து என்பவர்கள் புறச்சாதியார் அப்படியே எதிர்நோக்கியிருந்தார்கள் என்று எழுதியிருக்கிறார்கள்.

## 111. மேசியா யாருடைய சந்ததியில் பிறக்கவேண்டியது.

1. முதல் ஸ்திரீயின் சந்ததியில். ஆதி. 3: 15.
2. ஆபிரகாமின் சந்ததியில். 12: 3; 18: 17; 22: 18.
3. ஈசாக்கின் சந்ததியில். 26: 5.
4. யாக்கோபின் சந்ததியில். 28: 14.
5. யூதாவின் சந்ததியில். 49: 10.

நிறைவேறுதல். காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தார். கலா. 4: 5. உன் சந்ததியிலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னதின்படி நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் (அப். 3: 25; மத். 1: 1. கலா. 3: 16.), நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினார் என்பது பிரசித்தமாயிருக்கிறது. எபி. 7: 14.

### ஆதியாகமத்திலிருந்து புதிய ஏற்பாட்டில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிற வாக்கியங்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆதி. | 1: | 1. | எபி. | 11: | 3. | | |
| ,, | 1: | 27. | மாற். | 10: | 6. | எபே. | 4: 24. |
| ,, | 2: | 3. | எபி. | 4: | 4. | | |
| ,, | 2: | 7. | 1 கொரி. | 15: | 45. | | |
| ,, | 3: | 4. | 2 கொரி. | 11: | 3. | | |
| ,, | 3: | 6. | 1 தீமோ. | 2: | 14. | | |
| ,, | 3: | 15. | யோவா. | 8: | 44. | 1 யோவா. | |
| ,, | 4: | 4. | எபி. | 11: | 4. | | |
| ,, | 4: | 8. | 1 யோவா. | 3: | 12. | | |
| ,, | 5: | 24. | எபி. | 11: | 5. | | |
| ,, | 6: | 8, 14. | எபி. | 11: | 7. | | |
| ,, | 7: | 7. | மத். | 24: | 38. | | |
| ,, | 12: | 1. | அப். | 7. | 3. | எபி. | 11: |
| ,, | 12: | 3. | கலா. | 3: | 8. | | |
| ,, | 14: | 18. | எபி. | 7: | 1. | | |
| ,, | 15: | 5. | ரோ. | 4: | 18. | | |
| ,, | 15: | 6. | ரோ. | 4: | 3. | யாக். | 2: |
| ,, | 15: | 13, 14. | அப். | 7: | 6, 7. | | |
| ,, | 16: | 15. | கலா. | 4: | 22. | | |
| ,, | 17: | 5. | ரோ. | 4: | 17. | | |
| ,, | 18: | 10. | ரோ. | 9: | 9. | | |
| ,, | 18: | 12. | 1 பேது. | 3: | 6. | | |
| ,, | 19: | 26. | 2 பேது. | 2: | 6. | | |
| ,, | 19: | 26. | லூக். | 17: | 32. | | |
| ,, | 21: | 10. | கலா. | 4: | 30. | | |
| ,, | 21: | 12. | ரோ. | 9: | 7. | | |
| ,, | 22: | 1—10. | எபி. | 11: | 17. | யாக். | 2. |
| ,, | 22: | 16, 17. | எபி. | 6: | 13, 14. | | |
| ,, | 22: | 18. | அப். | 3: | 25. | கலா. | 3: |
| ,, | 25: | 23. | ரோ. | 9: | 12. | | |
| ,, | 25: | 31, 33. | எபி. | 12: | 16. | | |
| ,, | 46: | 27. | அப். | 7: | 14. | | |
| ,, | 48. | 15—18. | எபி. | 11: | 21. | | |
| ,, | 50: | 24, 25. | எபி. | 11: | 22. | | |

S. P. C. K. Press, Vepery, Madras.—1893.